ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

கம்பநாட்டாழ்வாரருளிச்செய்த

ஸ்ரீமத்கம்பராமாயணத்தில்

ஐந்தாவது

சுந்தரகாண்டமூலம்.

இதற்கு

திரிசிரபுரம் மஹாவித்வான்

வி. கோவிந்தபிள்ளையவர்கள்

கருத்துத்தோன்ற எழுதினபதவுரையை

இஃது,

கோமளபுரம்.

இராஜகோபால்பிள்ளையவர்கள்

மாணுக்கரிலொருவராகிய

இராமாநுஜப்பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

[இதன் விலை ரூபா 3–8.]

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

Rigistered Copy Right.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

ஐந்தாவது,

சுந்தரகாண்டம் - மூலமும்உரையும்.

முதலாவது,

கடல்தாவுபடலம்.

காப்பு.

அலங்கலிற்றோன்றும்பொய்ம்மையரவெனப்பூதமைந்தும்
விலங்கியவிகாரப்பாட்டின்வேறுபாடுற்றவீக்கம்
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பர்கைவிலேந்தி
இலங்கையிற்பொருதாரன்றேமறைகளுக்கிறுதியாவார்.

(இதனதுபதப்பொருள்.) அலங்கலில் - மாலையிலே, தோன்றும் - உண்டாகுகின்ற, பொய்ம்மை அரவென - பொய்ப்பாம்புபோல, பூதமைந்தும் - ஐம்பூதங்களும்—விலங்கிய (தந்நிலையினின்றும்) பௌதிகமென்று விலகுதலான, விகாரப்பாட்டின் -* அறுவகை விகாரப்படுதலையுடைய, வேறுபாடு - (தேவமனுஷ்யதிரியக்ஸ்தாவரமென) வேறுபாட்டை, உற்ற - உறுதலான, வீக்கம் - பிறப்பின்மிகுதி—கலங்குவது - அஞ்சித்தீர்வது, எவரைக்கண்டால் - யாரைக்கண்டால், எனவே (மறைகளுக்கிறுதியாவாரைக்கண்டால் வேறுபாடுற்றவீக்கம் கலங்குமென்றபடி.) மறைகளுக்கு- வேதங்களுக்கு, இறுதியாவார் - முடிவுபொருளானவர், கை - இடக்கையிலே, விலலேந்தி - வில்லைக்கொண்டு, இலங்கையில் - இலங்காபுரியிலே, பொருதாரன்றே - யுத்தஞ்செய்தவரல்லவோ, அவர் - அவரை, என்பர் - வான்மீகிமுதலியோர், எழுவாய்-அவரை, மறைகளுக்கிறுதியாவாரென்று சொல்லுவர் - பயனிலை—எ-று.

அலங்கலில் - (காற்றாற்பழுதை) அசைதலினாலே சர்ப்பப்பிராந்தி யுண்டாமெனவுமாம்—மாலை - பழுதைபோல்வன - பூதங்கள்-ஈசுவரச்செய்கையாலே பௌதிக

சரீரங்களாய்த் தேவமனுஷ்ய வேறுபாடு - சர்ப்பப்பிராந்தி, இந்தப்பிராந்தி தெளிவது மறைகளுக் கிறுதியாவாரைச் சாக்ஷாத்கரித்தால் என்றபடி "உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துருவியந்த வின்னிலைமை - உணர்ந்துணர்ந்துணரிலு மிறைநிலை யுணர்வரிதுயிர்காள் - உணர்ந்துணர்ந்துரைத் துரைத்தரியயன ரனென்னு மிவரை- உணர்ந்துணர்ந்துரைத்துரைத் திறைஞ்சுமின்மனப்பட்டதொன்றே" என்கிறபடியே தத்துவதரிசனஞ்செய்தால் வேறுபாடற்ற பிறப்பறுமென்கிறது.

* ஊறுபடவொன்றிலேபிறத்தல் க		வளர்ந்தயலொன்றாய்விளைந்தமைதல்	ச
பிறந்துளவாதல்	உ	மாறுபடத்தேய்தல்	ரு
வேறுபடவளர்தல்	௩	அறமாய்தல்	சு

இனிவருஞ் செய்யுள்முதல் - ௩அ - செய்யுளும் மயேந்திரகிரியினின்று ஸ்ரீ ஆஞ்சனேயர் கடல்தாண்டுவதையே சொல்லும். (க)

நூல்.

ஆண்டகையாண்டவ்வானோர் துறக்கநாடருகர்கண்டான்
ஈண்டிதுதான்கொல்வேலையிலங்கையென்றையமெய்தா
வேண்டருவிண்ணாடென்னுமெய்ம்மைகண்டுள்ளமீட்டான்
காண்டகுதோகையும்பரில்லெனக்கருத்துட்கொண்டான்.

இ-ள். ஆண்டகை-ஆண்மையிற்சிறந்தவரான, ஸ்ரீ ஆஞ்சனேயர்-எழு,ஆண்டு- அந்தமயேந்திரகிரியினின்று, அவ்வானோர் - அந்தத்தேவர்களுடைய, துறக்கநாடு- சுவர்க்கலோகத்தை, அருகர் - சமீபமாக, கண்டான் - கண்டஅளவிலே, ஈண்டு- இங்கேதோன்றுகின்ற, இதுதான்கொல் - இதுதானோ, வேலை - கடலுக்குள்ளான, இலங்கையென்று - இலங்காபுரியென்று, ஐயமெய்தா - சந்தேகங்கொண்டு பின்பு, வேண்டு - (எல்லாரும்அடைய) வேண்டுகிற, அரு - (பார்த்தற்கு) அருமையான, விண்ணாடு - தேவருலகம், என்னும் - என்பதான, மெய்மை - உண்மையை, கண்டு- (தேவர்கள்சஞ்சரிப்பதனாலே) தெரிந்து, உள்ளம்-தமதுமனத்தை, மீட்டான் - (சந்தேகத்தினின்றும்) திருப்பினவராய், காண்தகு - தாம்கண்டுபேசத்தக்க, தோகை- (மயிற்சாயலையுடைய) சீதாபிராட்டி, உம்பர் - அந்தத்தேவருலகிலே, இல்லென -இல்லையென்று, கருத்துள் - மனத்திலே, கொண்டான் - தெளிவுகொண்டார் பயனிலை—எ-று.

இப்பாட்டால் தேவருலகளவு உயரமும் அவ்வுலகுமுழுதும் பார்க்கும்பார்வையுமுடையரானார் சிறியதிருவடி என்க—சிறியதிருவடியெனினும் ஆஞ்சனேயரெனினும் அனுமாரெனினும் ஒக்கும். (உ)

கண்டனனிலங்கைமூதூர்க்கடிபொழிற்கனகநாஞ்சில்
மண்டலமதிலுங்கொற்றவாயிலுமணியிற்செய்த
வெண்டளக்கனகமாடவீதியும்பிறவுமெல்லாம்
அண்டமுந்திசைகளெட்டுநடுங்கத்தோள்கொட்டியார்த்தான்.

இ-ள். இலங்கைமூதூர் - இலங்காபுரியென்னும் பழையவூரைச்சூழ்ந்த, கடிபொழில்-மணத்தைக்கொண்டசோலையையும், கனகநாஞ்சில்-சுவர்ணகசிதமானமதிலுறுப்புகளையும்கொண்ட, மண்டலம் - வட்டமான, மதிலும்-மதிலையும், கொற்றம்- வெற்றியுள்ளதான, வாயிலும் - கோட்டைவாசலையும், மணியிற்செய்த - முத்துச்

சுண்ணும்பிஞலே பண்ணின, வெண் - வெண்மையான, தளம் - சாந்துபூசினவாக, கனகம் - (மற்றும்) சுவர்ணகசிதமான, மாடம் - உபரிகைகளேயுடைய, வீதியும் - தெருக்களேயும், பிறவும் - மற்றுமுள்ளவைகளேயும், எல்லாம் - முழுதும், கண்டனன்- (இந்தமலேயினின்றே,) பார்த்தான் - பார்த்தஅளவிலே, அண்டமும் - ஆகாயமும், திசைகளெட்டும் - எட்டுத்திக்கும், நடுங்க - அஞ்ச, தோள்கொட்டி - புஜத்தைத் தட்டி, ஆர்த்தான் - கர்ச்சித்தார்—எ-று. தாம் காணப்போகிறவூரை அந்தமலேயினின்றே கண்டதனுலே சந்தோஷித்துக் கர்ச்சித்தாரென்க. (ங)

வன்றந்தவரிகொணுகம்வயங்கனலுமிழும்வாய
பொன்றந்தமுழைகடோறும்புறத்துராய்ப்புரண்டுபோவ
நின்றந்தமில்லானூன்றநெரிந்துகீழழுந்திநீலக்
குன்றந்தன்வயிறுகீறிப்பிதுங்கினகுடர்கண்மான.

இ-ள். வன் தந்தம்-வலியபற்களேயுடையனவாய், வரிகொள்-வரிகளேக்கொண்ட, நாகம் - பாம்புகள் எழு, வயங்கு - விளங்குகின்ற, அனல் - விஷாக்கினியை, உமிழும் - கக்குகின்ற, வாய - வாய்களேயுடையனவாய், பொன் - பொன்மணலே, தந்த-தருதலான, முழைகள்தோறும்-குகைகளெல்லாவற்றிலுநின்று, புறத்து-வெளியிடங்களில், உராய் - உரசிக்கொண்டு, புரண்டு - நெளிந்து, நின்று-அந்தமலேமேனின்று, அந்தமில்லான் - அளவுபடாதசிறியதிருவடி, ஊன்ற - அழுத்த, நெரிந்து-நெரிதலாகி, கீழ் - மண்ணிலே, அழுந்தி - பதிந்து, நீலக்குன்றம் - அந்தக்கறுத்த மலேயாகிய, தன்வயிறு - அதனுதரம், கீறி - கிழிந்து, பிதுங்கின - சரிந்துநீளுகிற, குடர்கள் - குடல்களே, மான - ஒப்பாக, போவ - செல்லலாயின பயனிலே—எ-று. முழைகள் அந்தமலேயிலுள்ளபிலத்துவாரங்கள். (ச)

புகலருமுழையுட்டுஞ்சும்பொங்குளேச்சீயம்பொன்றி
உகலருங்குருதிகக்கியுள்ளுறநெரிந்தவூழின்
அகலிரும்பரவைநாணவரற்றுறுகுரலவாகிப்
பகலொலிகரப்பவானேமறைத்தனபறவையெல்லாம்.

இ-ள். புகல்அரும்-நுழைதற்கரிய, முழையுள்-குகைகளிலே, துஞ்சும் - தூங்குகின்ற, பொங்கு - மிகுந்த, உளே - உரோமங்களேயுடைய, சீயம் - எழுசிங்கங்கள், பொன்றி - இறந்து, உகல்அரும் - சிந்துதலில்லாத, குருதி - இரத்தத்தை, கக்கி-சிந்தி, உள்ளுற - அந்தக்குகைகளுக்குள்ளேதானே, நெரிந்த - நசுங்கின பய, ஊழின் - குகைவரிசைகளெல்லாம், அகல் - அகன்ற, இரும் - பெரியதான, பரவை-கடலும், நாண - வெட்க, அரற்றுறு - கத்துகின்ற, குரலவாகி - சத்தங்களேயுடையனவாய், பகல்ஒளி - சூரியப்பிரகாசம், கரப்ப - மறைய, வானே - ஆகாயத்தையெல்லாம், மறைத்தன - மூடலாயின பய, பறவை - அந்தமலேயிலுள்ள, பக்ஷிசாலங்கள்-எழுவாய்—எ-று. (ரு)

மொய்யுறுசெவிகடாவிமுதுகுறமுறைகாறள்ள
மையுறுவிசும்பினூடுநிமிர்ந்தவாலதியமஞ்சின்
மெய்யுறத்தழீஇயமெல்லென்பிடியொடும்வெருவலோடும்
கையுறமரங்கள்சுற்றிப்பிளிறினகளிநல்யானே.

இ-ள். மொய்யுறு (துவாரத்தருகே) உரோமங்கள்மொய்த்திருக்கிற, செவி-காதுகளே, கடாவி - வீசி, முதுகுற - முதுகளவுஞ்செல்ல, முறை - (வீசுந்தோறும்) கிரமகிரமமாக, கால் - காற்று, தள்ள - நேரேமோதவும், மையுறு - மேகங்களுலா

வுவதான, விசும்பினூடு - ஆகாயத்தளவும், நிமிர்ந்த - நீண்டுள்ள, வாலதிய - வால்களையுடையனவாய், மஞ்சின் - கருமேகம்போன்ற, மெய்யுற - தம்உடம்பைப்பொருந்த, தழீஇய - அணைந்துநிற்கிற, மெல்லென் - (தம்மில்அதிக) மிருதுஸ்வபாவமுடையதென்பதான, பிடியொடு - பெண்யானையுடனே, வெருவலோடு - பயத்துடனேகூடி, கையுற - துதிக்கையிலேசேர, மரங்கள் - (பெரிய) மரங்களை, சுற்றி-சூழ்ந்துபற்றிக்கொண்டு, பிளிறின் - குமுறலாயின பய, களி - மதமயக்கமாகிற, நல்-சுகத்தையுடைய, யானை - ஆண்யானைகள், எ-ழு—எ-று. நலம் சுகம். (சு)

பொன்பிறழ்சிமயக்கோடுபொடியுறப்பொறியுஞ்சிந்த
மின்பிறழ்குடுமிக்குன்றம்வெரிநுறவிரியும்வேலை
புன்புறமயிரும்பூவாக்கட்புலம்புறத்துநாறு
வன்பறழ்வாயிற்கவ்விவல்லியமிரிந்தமாதோ.

இ-ள். பொன் - பொன்னொளி, பிறழ் - விளங்குகின்ற, சிமையம்-உச்சியையுடைய, கோடு - அந்தமலைச்சிகரம், பொடியுற - தூளாகவும், பொறியும் - (கற்றூளாகலால்) நெருப்புப்பொறிகளும், சிந்த - பறக்க, மின் - (அதனாலேஎங்கும்) மின்னுதல், பிறழ் - தோன்றுதலான, குடுமி - உச்சியையுடைய, குன்றம் - அந்தமலையானது, வெரிநுற - முதுகின்புறமாக, விரியும்வேலை - நகழும்போது, புன் - மிகவுநுண்ணிதான, புறமயிரும்-மேலுரோமங்களும், பூவா - முளையாமல் மயிர்முளையாத, கட்புலம் - கண்ணொளியும், புறத்து - வெளியே, நாறு - தோன்றாத கண்திறவாத, வன்பறழ் - வலியகுட்டிகளை, வாயிற்கவ்வி - வாயிலேகவ்விக்கொண்டு, வல்லியம்-புலிகள் எ-ழு, இரிந்த - ஓடின பய, மாதுஓ அசைகள் - விரிதல் அகலுதலாய் நகழுதலாயிற்று—எ-று. இரிதலென்று லோடலென்றும் - அந்தமலையின்முதுகு பிளக்கும்போதென்னவுமாம். (எ)

தேக்குறுசிகரக்குன்றந்திரிந்துமெய்ந்நெரிந்துசிந்தத்
தூக்குறுதோலர்வாளர்துரிதத்தினெழுந்ததோற்றம்
தாக்குறுசெருவினேரார்தாளறவீசத்தாவி
மேக்குறவிசைத்தாரென்னப்பொலிந்தனர்விஞ்சைவேந்தர்.

இ-ள். தேக்குறு - தேக்கமரங்கள்பொருந்தின, சிகரக்குன்றம் - சிகரத்தையுடைய அந்தமலை, திரிந்து - சுழன்று, மெய் - அதனுருவமெல்லாம், நெரிந்து-தகர்தலாய், சிந்த - சிதறுதலாக அப்போது, தூக்குறு - கைகளிலே தூக்கிக்கொண்ட, தோலர் - கேடகத்தையுடையராயும், வாளர் - கத்தியையுடையராயும், துரிதத்தின்-மிக்கவேகத்துடனே, எழுந்த - மேலெழுந்துசெல்லுகிற, தோற்றம் - காக்ஷி எப்படியென்னில், தாக்குறு - மோதுவதான, செருவில் - யுத்தத்திலே, நேரார் - சத்துருக்கள், தாளற - கால்களறும்படி, வீச - வெட்டிவிட, தாவி - அப்போதுதைந்தெழுந்து, மேக்குற - மேலாக, விசைத்தார்-வேகங்கொண்டு செல்லுகிறார்கள், என்ன-என்பதாக, பொலிந்தனர்-(ஆகாயமெல்லாம்) நிறைந்தார்கள் பய, விஞ்சைவேந்தர்-அந்தமலைமேலே வாசஞ்செய்கிறவித்தியாதரர்கள், எ-ழு—எ-று. (அ)

தாரகைசு..ர்கள்மேகமென்றிவைதவிரத்தாழ்ந்து
பாரிடையழுந்துகின்றபடர்நெடும்பனிமாக்குன்றம்
கூருகிர்க்குவவுத்தோளான்கூம்பெனக்குமிழிபொங்க
ஆர்கலியழுவத்தாழுங்கலமெனலாயிற்றன்றே.

இ-ள். தாரகை - (மேலேதவழுகிற) நக்ஷத்திரங்கள், சுடர்கள்-சந்திரசூரியர்கள், மேகம் - மேகங்கள், என்று - என்று சொல்வனவான, இவை - இவைகளெல்

லாம், தவிர - நீங்கலாக, தாழ்ந்து - உயர்வு குறைதலாய், பாரிடை - பூமியிலே, அழுந்துகின்ற - பதிவதாகிற, படர் - பரவுதலுள்ள, நெடும் - நீளமாகிய, பனி - குளிர்ச்சியையுடைய, மா - பெரிதான, குன்றம் - அந்த மலையானது எழு, கூர் - கூரிய, உகிர் - நகத்தைக்கொண்ட, குவவு - உருண்ட, தோளான் - தோள்களையுடைய சிறியதிருவடி, கூம்பென - பாய்மர மென்னவும், குமிழி - குமிழிகள், பொங்க - மேலே கிளர, ஆர்கலி - கடலின், அழுவத்து - சேற்றிலே, ஆழும் - அழுந்துகின்ற, கலம் - கப்பல், எனலாயிற்று - என்று சொல்லலாயிற்று, பய—எ-று. ஏ அசைகள். (கூ)

தாதுகுநறுமென்சந்தங்குங்குமங்குலிகந்தண்ணென்
போதுகுபொலன்றுதென்றித்தொடக்கத்தயாவும்பூசி
மீதுறுசுனைநீராடியருவியோடுலகின்வீழ்வ
ஓதியகுன்றங்கீண்டுகுருதிநீர்சொரிந்தாலொத்த.

இ-ள். தாது உகு - உகுகின்றதாது, நறு - வாசனையையுடைய, மென் - மென்மையாகிய, சந்தம்—சந்தனமரத்தினின்றும் உகுகின்றதாதும், குங்குமம் - குங்குமமரத்தினின்றும் உதிர்கின்றதாதும், குலிகம் - சாதிலிங்கத்தினது தாதும், தண்ணென் - குளிர்ச்சி யென்கின்ற, போது - புட்பங்களினின்றும், உகு - உதிர்கிற, பொலன் - பொன்னிறமான, தாது - பராகங்களும், என்று - என்று சொல்வதான, இத்தொடக்கத்த - இவைபோல்வன, யாவும் - எல்லாம், பூசி - (மலைகுலுங்குதலாலே) அளைவதாய், மீதுறு - (அந்தமலை) மேலுள்ள, சுனைநீர் - சுனைகளி னீரானவை எழு, ஆடி - அலம்பி, அருவியோடு - அருவிகளுடனே கூடி, உலகின் - அந்தமலையினடிவாரத்திலே, வீழ்வ - விழுவன் எப்படியென்னில், ஓதிய - முன்னே மயேந்திரமென்றுசொன்ன, குன்றம் - மலையானது, கீண்டு - வறுயிகிழிந்து, குருதிநீர் - ரக்தஜலத்தை, சொரிந்தால் ஒத்த - சிந்தினாற்போலாயின, பய—எ-று. தாதுபராகம் என்பன. தாள் - என்று இத்தொடக்கத்த என்பது என்று தொடங்குதல் எனமுடியும். (க0)

கடலுறுமத்திதென்னக்கருவரைதிரியுங்காலை
மிடலுறுபுலன்கள்வென்றமெய்த்தவர்விசும்பினுற்றார்
திடலுறுகிரியிற்றாந்தஞ்செய்வினைமுற்றிமுற்றா
துடலுறுபாசம்வீசாதும்பர்செல்வாருமொத்தார்.

இ-ள். கடல் - பாற்கடலிலே, உறு - பொருந்தின, மத்து - மந்தரகிரியென்னுமத்து, இதென்ன - இதுவேயென்னும்படி, கருவரை - அந்தக் கருத்தமலையானது, திரியுங்காலை - சுழலும்போது, மிடல் உறு - வலியால்மிக்க, புலன்கள் - விடயவாசனைகளை, வென்ற - ஜயித்த, மெய் - மெய்யான, தவர் - தவயோகிகள் எழு, விசும்பின் - ஆகாயத்திலே, உற்றார் - (பயந்து) செல்லலானார்கள், திடல் உறு - மேடாகவுறுகின்ற, கிரியில் - (அந்த) மலையிலே, தாம் - தாங்கள், தம்செய்வினை - தம்முடைய செய்யுங்கிரியைகளை, முற்றிமுற்றாது - முடித்துப்போகாமல், உடல் உறு - உடம்பாகவிருக்கிற, பாசம் - அன்பை (நேயமுள்ளதை,) வீசாது - கீழேகிடக்கச்செய்யாமல், உம்பர் - மேலுலகத்துக்கு, செல்வாரும் - செல்லுகிறவர்களையும், ஒத்தார் - ஒப்பாயினார்கள், பய - எ-று. செய்வினைமுற்றிச்செல்லுதல் உடம்பைவிட்டுச்செல்லுதல். செல்வாருமென்றதிலும்மை உடம்பொடுசெல்லுதலருமையென்பதைக்குறிக்கின்றது. (கக)

வெயிலியற்குன்றங்கீண்டுவெடித்தலுநடுக்கமெய்தி
மயிலியற்றேவிமார்கடழீஇக்கொளப்பொலிந்தவானோர்
அயிலெயிற்றரக்கனள்ளத்திரிந்தநாளணங்குபுல்லக்
கயிலையினிருந்ததேவைத்தனித்தனிக்கடுத்தல்செய்தார்.

இ-ள். வெயிலியல் - சூரியகிரணம் படுதலான, குன்றம் - அந்த மலையானது, கீண்டு - வயிறுகிழிந்து, வெடித்தலும் - உச்சி பிளக்குமளவில், நடுக்கம் எய்தி - நடுங்குதலாகி, மயிலியல் - மயிற்சாயலையுடைய, தேவிமார்கள் - மனைவிகள், தழீஇக்கொள - அணைப்பதாக, பொலிந்த - விளங்குகின்ற, வானோர் - (அந்தமலையிலுள்ள), தேவர்கள் - எழு, அயில் எயிற்று-கூறியபற்களையுடைய, அரக்கன்-(இராவணனென,) ராக்ஷதன் அள்ள - அசைத்துப்பிடுங்க அதனாலே, திரிந்தநாள் - (வெள்ளிமலை) சுழன்றபோது, அணங்கு - பார்வதிதேவி, புல்ல - (பயந்து) அணைக்க, கயிலையில் - அந்த வெள்ளிமலையிலே, இருந்ததேவை - அசையாதிருந்த கடவுளை, தனித்தனி - ஒவ்வொருவரும், கடுத்தல்செய்தார் - ஒப்பதானார்கள், பயனிலை—எ-று. (கஉ)

ஊறியநறவுமுற்றகுற்றமுமுணர்வையுண்ணச்
சீறியமனத்தர்தெய்வமடந்தையருடறீர்வுற்ற
ராறினரஞ்சுகின்றாரன்பரைத்தழீஇயும்பர்
ஏறினரிட்டுநீத்தபைங்கிளிக்கிரங்குகின்றார்.

இ-ள். ஊறிய - பாளைமுதலியவற்றி லூறுகின்ற, நறவும்—கள்ளும், உற்ற - (புருஷனு) லான, குற்றமும் - குற்றத்தையும், உணர்வை - தங்களறிவை, உண்ண - மழுக்க கெடுக்க அதனாலே, சீறிய - வெறுப்புண்டான, மனத்தர் - மனத்தையுடையரான, தெய்வமடந்தையர் - தெய்வப்பெண்கள் எழு, ஊடல் - அந்த வெறுப்பு, தீர்வுற்று - நீங்குதலாய், ஆறினர் - சாந்தகுணத்தினர்களாய், அஞ்சுகின்றார் - பயந்தவர்களுமாகி, அன்பரை - நாயகர்களை, தழுவி - அணைத்துக்கொண்டு, உம்பர் - ஆகாயகதியிலே, ஏறினர் - சென்றார்கள் (செல்லச்செய்தே,) இட்டு - கூட்டிலே வைத்து, நீத்த - (எடுத்துவராமல்) விட்டுவந்த, பைங்கிளிக்கு - பச்சைக்கிளிக்கு, இரங்குகின்றார் - அழுகிறதானார்கள், பயனிலை—எ-று. (கரு)

இத்திறநிகழும்வேலையிமையவர்முனிவர்மற்றை
முத்திறத்துலகத்தாருமுறைமுறைவிரைவின்மொய்த்தார்
தொத்துறுமலருஞ்சாந்துஞ்சுண்ணமிமணியுந்தூவி
வித்தகசேறியென்றார்வீரனும்விரைவதானான்.

இ-ள். இத்திறம் - இவ்வகைச் செய்கைகள், நிகழும்வேலை - நடக்கும்போது, இமையவர்முனிவர் - தேவரும் ருஷிகளும், மற்றை - (இந்தமலையை) அல்லாத, முத்திறத்து உலகத்தாரும் - மூவகை பிரம ருத்திரேந்திராதி உலகங்களிலுள்ளவர்களும், முறை முறை - வரிசை வரிசையாக, விரைவில் - அதிசீக்கிரத்திலே, மொய்த்தார் - கூடிநெருங்கினவர்களாய், தொத்துறு - கொத்துகளிலேயுள்ள, மலரும் - புட்பங்களையும், சாந்தும் - சந்தனங்களையும், சுண்ணமும்-கந்தபொடிகளையும், மணியும்-முத்தக்ஷதைகளையும், தூவி - திருவடிமேலே சிந்தி, வித்தக-வியாகரணபண்டிதரே, சேறி - செல்லக்கடவை, என்றார் - என்றார்கள், வீரனும் - சிறியதிருவடியும், விரைவதானான் - மிகவும்வேகங்கொண்டார்—எ-று. (கச)

குறுமுனிகுடித்தவேலைகுப்புறுங்கொள்கைத்தாதல்
வெறுவிதுவிசயம்வைகும்விலங்கற்றோளலங்கல்வீர

சிறிதிதென்றிகழற்பாலையல்லைநீசேறியென்ன
உறுவலித்துணைவர்சொன்னுரொருப்பட்டான்பொருப்பையொப்பான்.

இ-ள். குறுமுனி - அகத்தியர், குடித்த - பானம்பண்ணின, வேலை - கடலை (நீர்போகிறகாரியம்) குப்புறும் - தாண்டுவதான, கொள்கைத்து - துணிவையுடையது, ஆதல் - ஆகுதல் ஆகியகடலைத்தாண்டுவது, வெறுவிது - வியர்த்தமாக, விசையம் - சாமர்த்தியம், வைகும் - தங்குவனவாய், விலங்கல் - பருபதாகிருதிகளான, தோள் - புஜங்களும், அலங்கல் - வெற்றிமாலையுமுள்ள, வீர - வீரனே, இதுசிறிதென்று - இதை அல்பமென்று, இகழற்பாலை - இகழத்தக்கவன், அல்லைநீ - அல்லன்நீ நீஇகழாதவனுக, சேறியென்ன - செல்லக்கடவையென்று, உறுவலி - மிகவும்பலாட்டியர்களான, துணைவர் - சகாயரான வானராதிபர்கள், சொன்னுர் - விடைதந்தார்கள், பொருப்பை - (அந்தமலைக்குமேலொரு) மலையை, ஒப்பான் - ஒத்ததிருவடி, ஒருப்பட்டான் - உத்தியோகித்தார், சம்மதங்சொண்டெழலானுர் - செல்லுகையிலொருமித்தார்—எ-று. (கரு)

இலங்கையினளவிற்றன்ருலிவ்வுருவெடுத்ததோற்றம்
விலங்கவுமுளதன்றென்றுவிண்ணவர்வியந்துநோக்க
அலங்கருழ்மார்பன்முன்ருழ்ந்தடித்துணையழுத்தலோடும்
பொலன்கெழுமலையுந்தாளும்பூதலம்புக்கமாதோ.

இ-ள். இலங்கையின் - இலங்காபுரிக்கே, அளவிற்று - செல்லுமளவுள்ளது, அன்று - அல்லதாம், இவ்வுரு - இந்தமஹாவடிவு, எடுத்ததோற்றம் - கொண்டகொள்கையைக்குறித்தால், விலங்கவும் - அப்பாற்செல்லவும், உளது - உள்ளதாயிருக்கின்றது போதுமானதாயிருக்கிறது என்றும், அன்று என்று - இலங்கைக்கேசெல்லக்கொண்டதென்றும், விண்ணவர் - தேவர்கள், வியந்து - அதிசயித்து, நோக்க-பார்க்க, அலங்கல் - வெற்றிமாலை, தாழ் - தங்குவதான, மார்பன் - மார்பையுடைய திருவடி, முன் - எதிர்முகமாக, தாழ்ந்து - சாய்ந்து, அடித்துணை - கால்களிரண்டையும், அழுத்தலோடும் - அழுத்துமளவில், பொலன்கெழு - பொன்னிறம்பொருந்தின, மலையும் - அந்தமலையும், தாளும் (திருவடி) கால்களும் - எழு, பூதலம்-பூமிக்குள்ளே, புக்க - புதைந்துபோயின, பயனிலை—எ-று. ஆல் - அதிசயக்குறிப்புமாது. ஓ அசைகள் இலங்கையின் என்பதில் இன் சாரியை. (கசு)

வால்விசைத்தெடுத்துவன்ருண்மடக்கிமார்பொடுக்கிமானத்
தோல்விசைத்துணைகள்பொங்கக்கழுத்தினைச்சுருக்கித்தூண்டும்
கால்விசைத்தடக்கைநீட்டிக்கட்புலன்கதுவாவண்ணம்
மேல்விசைத்தெழுந்தானுச்சிவிரிஞ்சனுடுரிஞ்சவீரன்.

இ-ள். வால் - வாலை, விசைத்து - வேகங்கொண்டுதெறி, எடுத்து - மேலேநிமிர்த்து, வன்தாள் - வலியகால்களை, மடக்கி - மேலேமடக்கிக்கொண்டு, மார்பு - மார்பை, ஒடுக்கி - ஒடுங்குவதாக்கி, மானத்தோல்-இலச்சையைச்செய்கிற தோல்களான, விசை - வேகமுடைய, துணைகள் - இரண்டுருக்களும், பொங்க (அடியிலே) பருமிதங்காட்ட பீசங்களிரண்டுந்தோன்ற, கழுத்தினை - கழுத்தை, சுருக்கி - குறுகலாக்கி, தூண்டும் - செலுத்துகின்ற, கால்விசை - வாயுவேகத்தையுடைய, தடக்கை - நீண்டகைகளை, நீட்டி - முன்னே நீளக்கொண்டு, கட்புலம் - பிறர்கண்ணறிவுக்கு, கதுவாவண்ணம் - தோன்ருதபடி, மேல் - (கடலுக்கு) மேலே, விசைத்து - வேகங்கொண்டு, எழுந்தான் - எழுந்துசென்ருன் பயனிலை; உச்சி - தலையிலே, விரிஞ்சனுடு-

பிரமலோகம், உரிஞ்ச - உரசும்படி, வீரன் - மகாவீரனான அநுமன், எழுவாய் எ-று. மானத்தோளென்றுபாடமானால் பெரியதோள்களென்க - தோலுக்குவேக மாவது தோல்வடிவாகிய இரண்டும் அசைந்தாடுதல். (கஎ)

ஆயவனெழுதலோடுமெரும்பணைமரங்கடாமும்
வேயுயர்குன்றும்வென்றிவேழமும்பிறவுமெல்லாம்
நாயகன்பணியிதென்னுநளிர்கடலிலங்கைதாமும்
பாய்வனவென்னவானம்படர்ந்தனவெழுவமான.

இ-ள். ஆயவன் - அந்தமலையினின்றும் அந்த அநுமன், எழுதலோடும் - மேலே கிளம்பினவளவில், அரும் - எட்டுதற்கரிய, பணை - கிளைகளையுடைய, மரங்களும் - விருக்ஷங்களும், வேய் - மூங்கில்களுடனே, உயர் - உயர்ந்த, குன்றும் - மலையும்-வென்றிவேழமும் - அதிலுள்ள ஜயம்பொருந்தின யானைகளும், பிறவும் - மற்றவைகளும், எல்லாம் - முழுதும் எழு, நாயகன் - சர்வலோக சரணியனுடைய, பணி-காரியம், இதென்னு - இதுவென்று, நளிர் - பெரிதான, கடல் - கடல்சூழ்ந்த, இலங்கை - இலங்காபுரிக்குச்செல்ல, தாமும் - தாங்களும், பாய்வன வென்ன - கடல் தாவுமவைகளென்ன, வானம் - ஆகாயத்திலே, படர்ந்தன - பயபரவினவாய், எழுவ-எழுந்து செல்லுமவற்றை, மான - ஒப்பாகத்தொடர—எ-று. எல்லாம் தொடர-தாம் சாரியை. (கஅ)

இசையுடையண்ணல்சென்றவேகத்தாலெழுந்தகுன்றும்
பசையுடைமரனுமாவும்பல்லுயிர்க்குலமும்வல்லே
திசையுறச்சென்றுசென்றுசெறிகடலிலங்கைசேரும்
விசையிலவாகத்தள்ளிவீழ்ந்தனவென்னவீழ்ந்த.

இ-ள். இசையுடை - கீர்த்தியையுடைய, அண்ணல் - பெருமைகொண்ட திருவடியானவர், சென்ற - கிளர்ந்தெழுந்த, வேகத்தால் - வேகத்தினாலே, எழுந்த-கூடவேகிளம்பின, குன்றும் - அந்தமலையும், பசையுடை - ஈரமுள்ள, மரனும் - மரங்களும், மாவும் - மிருகங்களும், பல் - பலவகைகளான, உயிர்க்குலமும் - ஜீவகூட்டமும் எழு, வல்லே - விரைவிலே, திசை - தென்றிசைக்கு, உற - போவனவாக, சென்று சென்று - (போமளவும்) போய்ப்போய், செறி - (அலைக) ணெருங்கின, கடல்-கடலுக்குள்ளான, இலங்கை - இலங்காபுரிக்கு, சேரும் - (சென்று) சேரத்தக்க, விசையிலவாக - வேகம்போதாவாக, தள்ளி - தமோறி, வீழ்வனவென்ன - விழுவன போல, (வீழ்ந்தகடலில்) விழுந்தன, பய—எ-று. (கக)

மாவொடுமரனுங்கல்லும்வல்லியும்யாவுமற்றும்
போவதுபுரிந்தவீரன்விசையினுற்புணரிபொங்கத்
தூவினகீழுமேலுந்தூர்த்தனசுருதியன்ன
சேவகன்சீருமுன்னஞ்சேதுவுந்தெரிந்தமாதோ.

இ-ள். மாவொடு - மிருகங்களுடனே, மரனும் - விருக்ஷங்களும், கல்லும்-மலைகளும் கற்களும், வல்லியும் - கொடிகளும், யாவும் மற்றும் - மற்றுமுள்ளன எல்லாமும், போவது புரிந்த - (இலங்கைக்குப்) போவதாகச்செய்த, வீரன் - அநுமாருடைய, விசையினல் - வேகத்தினலே, புணரி - அந்தக்கடல், பொங்க - நிரம்ப, தூவின - சிந்துதலாயின, கீழும் - (கடலுக்குக்) கீழும், மேலும் - கடலுக்குமேலும், தூர்த்தன - மேடாகத்தூர்க்கப்பட்டன ஆகையினலே, சுருதியன்ன - வேதவிரிவையொத்த, சேவகன் - வீரத்தன்மையையுடைய சுருதி செய்யாமொழியான பெரய்யா

மொழியாகலால் அதுபோற்பொய்யாதவீரமெனவுமாம், சேவகன்-ஸ்ரீராமன்வந்து, சீறா - கோபியாமல், முன்னம் - முன்னேதானே, சேதுவும் - கரையும், தெரிந்த-தாமேதோன்றலாயின—எ-று. மாது ஓ அசைகள். (௨௰)

கீண்டதுவேலைநன்னீர்கீழுறக்கிடந்தநாகர்
வேண்டியவுலகமெங்கும்வெளிப்படமணிகண்மின்ன
ஆண்டகையதனைநோக்கியரவினுக்கரசர்வாழ்வும்
காண்டகுதவத்தனானேன்யானெனக்கருத்துட்கொண்டான்.

இ-ள். வேலைநன்னீர் - கடலினது நல்லஸ்வபாவமானது, கீழுற கீண்டது-அடித்தரைதோன்றக்கிழிதலாயிற்று, கீழுறக்கிடந்த - (அந்தஅடித்தரையின்) கீழாகக்கிடந்துகொண்டிராநின்ற, நாகர் - நாகலோகத்தார் பாதாளவாசிகள், வேண்டிய-விரும்புவதான, உலகமெங்கும் - இடமுழுதும், வெளிப்பட - பிரசித்தமாக தெரிய அவ்வழி, மணிகள் - அந்தநாகருடைய சிரோரத்நங்கள், மின்ன - பளீரெனத்தோன்ற, ஆண்டகை - வீரசிரேஷ்டரான திருவடி, எழு - அதனை அவ்வொளியை, நோக்கி - பார்த்து, அரவினுக்கு அரசர் - நாகாதிபர்கள், வாழ்வும் - வாழுமிடமும், காண்டகு - காணத்தக்க, தவத்தனானேன் - தவஞ்செய்தேனானேன், யானென - நானென்று, கருத்துட்கொண்டான் - மனோரதித்தான், பய—எ-று. கடலுக்கு நன்னீர்மையாவது ஆறுபோல் வற்றா திருத்தல். (௨௧)

வெய்தின்வான்சிறையினானீர்வேலையைக்கிழியவீசி
நொய்தினாரமுதங்கொண்டநோன்மையேநுவலுநாகர்
உய்துநாமென்பதென்னேயுறுவலிக்கலுழனூழின்
எய்தினானென்றஞ்சிமறுக்கமுற்றிரியல்போனார்.

இ-ள். வெய்தின் (வேக) - வெம்மையுடனே, வான் - பெரிய, சிறையினால்-இறகுகளினாலே, நீர்வேலையை - ஜலரூபமான கடலை, கிழிய - இருபிளவாக, வீசி-மோதி, நொய்தின் - (அதிக) விரைவிலே, ஆர் அமுதம் - அரிதான அமிர்தத்தை, கொண்ட - கொண்டுவந்த, நோன்மையே - சாமர்த்தியத்தையே, நுவலும் - மெய்ச்சிக்கொண்டிருக்கிற, நாகர் - அந்தப்பாம்புகள் இப்போது, உய்தும் நாம் என்பது-நாம் தப்பிப்பிழைப்போமென்கிறது, என் ஏ - எவ்வகையாலே ஏவினா, உறுவலி-மிக்கபலத்தையுடைய கலுழன் (அமுதங்கொண்ட) கருடன், ஊழின் - முன்முறையே, எய்தினான் - வந்தான் இதற்கு, ஆமென்று - சந்தேகமில்லையென்று, அஞ்சி-பயந்து, மறுக்கம் உற்று - மயக்கங்கொண்டு, இரியல்போனார் - ஓடிப்போனார்கள், பயனிலை—எ-று. நாகர் எழுவாய். (௨௨)

துள்ளியமகரமீன்கடுடிப்பறச்சுறவுதூங்க
ஒள்ளியபனைமீன்றுஞ்சுந்திவலையவூழிக்காலின்
வள்ளுகிர்வீரன்செல்லும்விசைபொறாமறுகிவாரி
தள்ளியதிரைகண்முந்துற்றிலங்கைமேற்றவழ்ந்தமாதோ.

இ-ள். துள்ளிய - (முன்பு) துள்ளுதற்குரிய, மகரமீன்கள்-மகரமச்சியங்கள், துடிப்பு - அத்துள்ளுதல், அற - இல்லையாகவும், சுறவு - சுறாமீன்கள், தூங்க - ஒருநிலையிலே நிற்கவும், ஒள்ளிய - ஒளியையுடைய, பனைமீன் - பனைமீன்களும், துஞ்சும் - தூங்குவதான மூச்சினாலே, திவலைய - சிதறுந்துளிகளையுடைய, வாரி - கடலானது, ஊழிக்காலின் - பிரசண்டமாருதம்போல உகாந்தக்காற்றைப்போல், வள்-

கூரிய, உகிர் - நகங்களையுடைய, வீரன் - சிறியதிருவடி, செல்லும்-போகிற, விசை-வேகத்தை, பொறா - தாங்கமாட்டாமல், மறுகி - கலங்கி, (வாரியானது) தள்ளிய-வீசின எறிந்த, திரைகள் - அலைகளானவை எழு, முந்துற்று - திருவடிக்குமுன்னே போய், இலங்கைமேல்-இலங்கைமதிளின்மேலே, தவழ்ந்த-பரவலாயின, பய-எ-று.

இடுக்குறுபொருள்களென்னுமெண்டிசைசுமந்தயானை
நடுக்குறவிசையிற்செல்லுநாயகன்றூதனாகம்
எடுக்குறுகாலவன்காற்றிடியொடுமொடியவந்நாள்
முடுக்குறக்கடலிற்செல்லுமுத்தலைக்கிரியுமொத்தான்.

இ-ள். இடுக்குறு - திக்குகளினிடைகளிலேயுள்ள, பொருள்கள் - சராசர வஸ்துகள், என் ஆம் - என்னபாடுபடும் அவைசொல்லிமுடியா, எண்திசை-எட்டுத் திக்குகளையும், சுமந்த - தாங்குகின்ற, யானை - யானைகளெல்லாம், நடுக்குற - நடுங்குவனவாக, விசையில் - வேகங்கொண்டு, செல்லும் - போவதான, நாயகன் - சக்கிரவர்த்தித்திருமகனாருடைய, தூதன் - தூதனான திருவடி, நாகம் - மலையை ஆதிசேடன்தலையை, எடுக்குறு - கிளப்பத்தக்கதான, காலம் - உகாந்தகாலத்திலே, வன்காற்று - பிரபலமாகிறவாயு, இடியொடும் - தன்மோதுதலினாலே, ஒடிய - ஒடிவனவாக்கி, அந்நாள் - அப்பொழுதே, முடுக்குற - மேருமலையினின்றுந் துரத்திவிட, கடலில் - (அந்தவாயுவேகத்தினாலே) கடல்மேலே, செல்லும் - போகின்ற, முத்தலை-மூன்றுசிகரத்திலொன்றான, கிரியும் - மலையையும், ஒத்தான் - ஒப்பானான்-எ-று. முத்தலைக்கிரி - திருவடிதோள்களிரண்டும் தலைஒன்றுங்கூட மூன்று சிகரத்தையுடைய ஒருமலையையும் ஒத்தானெனவுமாம். (உச)

கொட்புறுபுரவித்தெய்வக்கூர்நுதிக்குலிசத்தாற்கும்
கட்புலங்கதுவலாகாவேகத்தாற்கடலுமண்ணும்
உட்பதங்கூட்டியண்டமுறவுளசெலவினொற்றைப்
புட்பகவிமானந்தானவ்விலங்கைமேற்போவதொத்த.

இ-ள். கடலுமண்ணும் - கடற்பரப்பும் மண்பரப்பும், கொட்புறு - சுழன்று வருவதான, புரவித்தெய்வம் - தெய்வ அசுவமான உச்சைச் சிரவத்தையுடையனாய், கூர்நுதி - கூர்ம்பல்லென்கிற கூரியநுனியையுடைய, குலிசத்தாற்கும் - வச்சிராயுதபாணியான இந்திரனுக்கும், கட்புலம் - அவன்கண்களுக்கு விஷயமாக, கதுவலாகா-தோன்றுதலில்லாத, வேகத்தால் - வேகத்துடனே, உட்பதம்கூட்டி - உள்ளங்கால்களை ஒருசேரக்கொண்டு, அண்டம்உற - ஆகாயத்தை அளாவுவதாய், உள - உள்ள, செலவின் - செல்லுகையினாலே, ஒற்றை - குபேரனுக்கும் இராவணனுக்கும் ஒன்றேயான புட்பகவிமானம், தான் - தானே, அவ் இலங்கைமேல்-அந்த இலங்காபுரியைக்குறித்து, போவது - செல்லுவதை, ஒத்த-ஒத்தது, துவ்விகுதிகடைக்குறையாயிருக்கிறது - கடலேனும் மண்ணேனும் தன்உட்புறத்தேகொண்டு ஆகாயத்தை அளாவிச்செல்லுகை புட்பகவிமானத்துக் குண்மைகருதி கடலுமண்ணுஞ்சுழன்று வருவதான வேகமுள்ள குதிரைமேலேறிப் பறக்கும்வரையிற் கரியுஞ்சவுரியவானான இந்திரன் கண்களாயிரத்தாலுங் காணப்படாத வேகமென்றும் அண்டமுறவென்றுங் கூறினார்—எ-று. (உரு)

விண்ணவரேத்தவேதமுனிவர்வியந்துவாழ்த்த
மண்ணவரிறைஞ்சச்செல்லுமாருதிமறமுட்கூர

அண்ணல்வாளரக்கன்றன்னையமுக்குவாமின்னமென்னக்
கண்ணுதலொழியச்செல்லுங்கைலேயங்கிரியுமொத்தான்.

இ-ள். விண்ணவர் - தேவர்கள், ஏத்த - துதிக்கவும், வேதம் - வேதார்த்தங்களை, முனிவரர் - மனனம்பண்ணுவதில் சிரேஷ்டரானவர்கள், வியந்து - அதிசயித்து, வாழ்த்த - ஆசீர்வதிக்கவும், மண்ணவர் - மண்ணுலகிலுள்ள வானராதிபர்கள், இறைஞ்ச - வணங்கவும், செல்லும் - போகின்ற, மாருதி - அனுமார் எழு, மறம்-கோபம், உள்கூர - உள்ளேமிகுவதாகி, அண்ணல் - (தன்னைத்தூக்கின) பெருமைகொண்ட, வாள் - வாளாயுதமுடைய, அரக்கன் றன்னை - ராவணராக்ஷஸனை, அமுக்குவாம் இன்னம் - (முன்போல்) இன்னமும் அமிழ்த்தக்கடவோம், என்ன - என்னகொண்டு, கண்ணுதல் ஒழிய - (சிவன்) இல்லையாகவிடுத்து, செல்லும் - போகிற, கைலேயங்கிரியும் - வெள்ளிமலையையும், ஒத்தான் - ஒப்பாயினர், பய—எ-று. வெள்ளிமலே - நிறத்தாலொப்பு. (உசு)

மாணியாம்வேடந்தாங்கிமலரயற்கறிவுமாண்டோர்
ஆணியாயுலகுக்கெல்லாமறம்பொருணிரப்புமண்ணல்
சேணுயர்நெடுநாடீர்ந்ததிரிதலேச்சிறுவன்றன்னைக்
காணியவிரைவிற்செல்லுங்கனகமால்வரையுமொத்தான்.

இ-ள். மாணியாம் - பிரமசாரியான, வேடம்தாங்கி - கோலங்கொண்டு, மலர்-உந்திக்கமலத்திற்றோன்றின, அயற்கு - பிரமனைக்காட்டிலும், அறிவுமாண்டு - ஞானவிசேஷராய், உலகுக்கெல்லாம் - எல்லாவுலகங்களுக்கும், ஓராணியாய் - ஒரு ஆதாரபூதருமான, அறம்பொருள் - தர்மார்த்தங்களை, நிரப்பும் - நிரம்பச்செய்கிற, அண்ணல் - பெருமையிற்சிறந்த, சிறியதிருவடி - எழு, சேண் உயர் - மிகவும் உயர்கின்ற, நெடுநாள் - நெடுங்காலம், தீர்ந்த - பிரிந்திருக்கிற, திரிதலே - முத்தலேயுடைய, சிறுவன்றன்னை - ஒருபுத்திரனை, காணிய - காணுதற்கு, விரைவில் - சீக்கிரங்கொண்டு, செல்லும் - போவதான, கனகமால்வரையும் - சுவர்ணமயமாய்ப் பெரிதானமேருவையும், ஒத்தான் - விசுவரூபத்தாலே ஒப்பதானர், பய—எ-று. சுவாமிகாரியஞ்செய்யவல்லரானவரென்பதுதோன்ற உலகுக்கெல்லாம் ஆணியென்றும், இராவணனலே தர்மார்த்தங்கள் நிரம்பாதிருத்தலி னிரப்புமென்றுங் கூறினர். (உஎ)

மழைகிழித்துதிரமீன்கண்மறிகடல்பாயவானம்
குழைவுறத்திசைகள்கீறமேருவுங்குலுங்கக்கோட்டின்
முழையுடைக்கிரிகண்முற்றமுடுக்குவான்முடிவுக்காலத்
தழிவுறக்கடுக்கும்வேகத்தாதையுமனையனானன்.

இ-ள். மழை - மேகங்களை, கிழித்து - பொத்துக்கொண்டு, மீன்கள் - நக்ஷத்திரங்கள், உதிர - உதிரவும், மறி - (அலைகள்) மடங்குகின்ற, கடல் - கடலானது, பாய - மேலேதாவவும் அதனலே, வானம் - ஆகாயமெல்லாம் மேலுலகங்களெல்லாம், குழைவுற - நோவுபடவும், திசைகள் - திக்குகள், கீற - பிளக்கவும், மேருவும்-மேருமலையும், குலுங்க - நடுங்கவும், கோட்டின் - சிகரங்களிலே, முழையுடை - குகைகளைக்கொண்ட, கிரிகள்முற்ற - மலைகளடங்க, முடுக்குவான் - ஓட்டுதற்கு, முடிவுகாலத்து - யுகமுடிவிலே, அழிவுற - (எல்லாம்) அழிவனவாக, கடுக்கும் - விரையச்செய்கிற, வேகம் - வேகமுள்ள, தாதையும் - தனதுபிதாவான வாயுவையும், அனையன் - ஒத்தவன், ஆனன் - ஆயினன்—எ-று. திருவடி - எழு, ஆனன் - பய. (உஅ)

தடக்கைநாலைந்துபத்துத்தலைகளுமுடையான்றானே
அடக்கியைம்புலன்கள்வென்றதவப்பயனறுதலோடும்
கெடக்குறியாகமாகங்கிழக்கெழுவழக்குநீங்கி
வடக்கெழுந்திலங்கைசெல்லும்பரிதிவானவனுமொத்தான்.

இ-ள். தடக்கை - நீண்டகைகளோ, நாலைந்து - இருபதும், பத்துத்தலைகளும் உடையான்தானே - உடையவனான ராவணன், அடக்கி ஐம்புலன்கள் - ஐந்து விஷயவாசனைகளையும் அடங்கக்கொண்டு, வென்ற - இந்திரியநிக்கிரகம்பண்ணியிருந்த, தவப்பயன் - தபோபலம், அறுதலோடும் - முடிவுறுதலைக்கண்டு, கெட - அவன் அழிகிறதற்கு, குறியாக - உற்பாதமாக, மாகம் - ஆகாயத்திலே, கிழக்கு - கீழ்த்திக்கில், எழு - உதயமாகிற, வழக்குநீங்கி - வழக்கத்தைவிட்டு, வடக்கு - வடதிசையில், எழுந்து - உதயமாகி, இலங்கைசெல்லும் - இலங்கைக்குச்செல்லுகின்ற, பரிதிவானவனும் - சூரியபகவானையும், ஒத்தான் - திருவடி ஒப்பாயினார்—எ-று. (௨௯)

புறத்துறைவஞ்சிவேறோரரணம்புக்குறைதல்போக்கி
மறத்தொழிலரக்கர்வாழுமாநகர்மனுவின்வந்த
திறத்தகையிராமனென்னுஞ்சேவகற்பற்றிச்செல்லும்
அறத்தகையரசன்றிண்போராழியுமனையனானான்.

இ-ள். புறத்துஉறை - ஸ்ரீராமன்பக்கத்தேயிருக்கிற, வஞ்சி - கொடிபோன்ற சீதாபிராட்டி, வேறோர் - வேறான ஒரு, அரணம்-இலங்கைக்கோட்டைக்குள்ளே, புக்குறைதல் - போயிருத்தலுக்கு தெரியாமல், போக்கி - விடுத்தல்செய்து, மறத்தொழில் - பாபச்செய்கைகளையுடைய, அரக்கர்வாழும் - ராக்ஷஸர்கள் வர்த்திக்கிற, மாநகர் - பெரியவூருக்குச்செல்லுவதாக, மனுவின்வந்த - மனுகுலத்திலேபிறந்த, திறத்தகை - தகுதியான திறத்தையுடைய, இராமனென்னும் சேவகன் பற்றிச்செல்லும் - சக்கிரவர்த்தித்திருமகனைப் பற்றிச்செல்லுவதான அவனுக்காகச் செல்லுவதான, அறத்தகை - தருமபரிபாலனத்திலே தகுதியுள்ள, அரசன் - அந்தத் தசரத மகாராஜனுடைய, திண்போர் - மிக்கவலிகொண்ட, ஆழியும் - ஆக்ஞாசக்கரத்தையும், அனையன் - ஒத்தவன், ஆனான் - திருவடி ஆயினார்—எ-று. புறத்துறலஞ்சியென்றுபாடமானால் சேவகனைத்தொடர்ந்து பக்கத்தே நிற்கிறதற்கு ஆழியஞ்சி எனவும் வேறோரரணம்புக்குறைதலுக்குப் பிராட்டியைப்போகவிட்டென்றுங்கூறுக, போகவிடுதலும் அஞ்சுதலும் ஆழியின்செய்கை. (௩௦)

கேழுலாமுழுநிலாவிற்கிளரொளியிருளைக்கீறப்
பாழிமாமேருநாணவிசும்புறப்படர்ந்ததோளான்
ஆழிசூழுலகமெல்லாமருங்கனன்முருங்கவுண்ணும்
ஊழிநாள்வடபாற்றோன்றுமுவாமுழுமதியுமொத்தான்.

இ-ள். கேழ் உலா - ஒளி நிரம்பின, முழு நிலாவில் - பூரணசந்திரன்போல், கிளர் - விளங்குகிற, ஒளி - தமதுடம்பின் ஒளியானது, இருளை - (செல்லுந்திசையிலுள்ள) இருட்டை, கீற - பிளந்தோட்டவும், பாழிமா - மிகப்பெரிதான, மேரு - மேருமலையும், நாண - தலைகுனியவும், விசும்பு - ஆகாயமெல்லாம், உற - பொருந்துவதாக, படர்ந்த - விசாலித்த, தோளான் - புஜங்களையுடைய, திருவடியானவர் - எழு, ஆழிசூழ் - கடல்சூழ்ந்த, உலகமெல்லாம் - உலகமுழுதும், அரு - சொல்லுதற்கரிதான, கனல் - நெருப்பானது, முருங்க - அழிவதாக, உண்ணும் - எரிக்கப்படுகிற, ஊழிநாள் - ஊழிக்காலத்திலே, வடபால்-வடதிசையில், தோன்றும் - உதயமாகிற, உவா,

பருவகாலத்து, முழுமதியும் - பூரணசந்திரனையும், ஒத்தான் - நிறத்தால் ஒப்பதா னார், பய—எ-று. உலகமெல்லாமுருங்கவெனக் கூட்டுக. (௩௧)

அடலெலாந்திகிரிமாயற்கமைந்தனனாற்றல்காட்டக்
குடலெலாமவுணர்சிந்தக்குன்றெனக்குறித்துநின்ற
திடலெலாந்தொடர்ந்துசெல்லச்சேண்விசும்பொதுங்கத்தெய்வக்
கடலெலாங்கலங்கத்தாவுங்கலுழனுமனையனானன்.

இ-ள். அடல்எலாம் - எல்லாப்பொருள்களையும், அடுதெலில்வல்ல - கொல்ல வல்ல, திகிரி-சக்கரத்தையுடைய, மாயற்கு - திருமாலுக்கு, அமைந்தனன் - வாக னமாயமைந்த தனது, ஆற்றல் - சாமர்த்தியத்தை, காட்ட - (எல்லாருக்கும்) தெரி விப்பதாக, குடலெலாம்அவுணர் - அசுரர்கள் தங்கள்குடலெல்லாம், சிந்த - பிதுங்க வும், குன்றென - மலைகளென்னும்படி, குறித்து - ஒவ்வொருபெயர்களைக்கொண்டு, நின்ற - நிற்பனவான, திடலெலாம் - மேடுகளெல்லாம், தொடர்ந்து - வேர்பறிந்து பின்பற்றி, செல்ல - செல்லவும், சேண் - நீளமுள்ள, விசும்பு - ஆகாயத்தில்மேகங் கள், ஒதுங்க - குலைந்துபோகவும், தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள, கடலெலாம்- கடல்முழுதும், கலங்க - குழம்பவும், தாவும் - தாண்டின, கலுழனும் - கருடனை பெரியதிருவடியையும், அனையன் - ஒப்பானவர், ஆனான் - (சிறியதிருவடி) ஆயினார் எ-று. அடலெலாம் தனதுசாமர்த்தியமுழுதும் மாயற்கமைந்தனனாகி ஆற்றல் செய் தலைஎனவுமாம். (௩௨)

நாவினோடுலகமூன்றுநடுக்குறவடுக்கிநாகர்
மேலின்மேனின்றகாறுஞ்சென்றசூலத்தின்விண்டு
காலினாலளந்தவானமுகட்டையுங்கடக்கக்கால
வாலினாலளந்தானென்றுவானவர்மருளச்சென்றான்.

இ-ள். நாவினோடுமூன்றும்-நாலுடனேமூன்றுகூட்ட ஏழென்னலான, உல கம் - உலகங்களெல்லாம், நடுக்குற - அஞ்சுவதாக, அடுக்கி - (அப்படிஏழுவகையாக) அடுக்கப்பட்டு, நாகர் - தேவர்களுடைய, மேலின்மேல் - மேலுலகங்களென்பவைக ளுக்குமேலே, நின்றகாறும் - உள்ள ஆகாயவரையும், சென்ற - நீண்டுபோயிருக்கிற, சூலத்தின் - வாலினாலே (கண்டதேவர்கள்), விண்டு - திருமால், காலினால் - பாதத் தாலே, அளந்த - அளவிட்ட, வானமுகட்டையும் - ஆகாயமுகட்டையும், கடக்க- கடந்துசெல்லுவதாக, காலவாலினால் - காலபாசத்தையொத்த வாலினாலே, அளந்தா னென்று - அளவிட்டானென்று, வானவர் - கண்டதேவர்கள், மருள - மயங்கும் படி, சென்றான் - செல்லலானார் பய, திருவடி - எழு—எ-று. காலபாசத்தைக் கால னென்றதாகுபெயர், சூலத்தினாலே வானவர்மருளஎன்க. (௩௩)

விளித்துப்பின்வேலைதாவும்வீரன்வால்வேதமெய்க்கும்
அளித்துப்பினநுமனென்னுமறந்துணைபெற்றதாயும்
களித்துப்புன்றொழின்மேனின்றவரக்கர்கண்ணுறுவராமென்
றொளித்துப்பின்செல்லுங்காலபாசத்தையொத்ததன்றே.

இ-ள். விளித்து - (தோள்கொட்டி) ஆர்த்து, பின் - பின்பு, வேலை - கடலை, தாவும் - தாண்டுகிற, வீரன் - அனுமாருடைய, வால் - வாலானது எழு, வேதம்- வேதங்களெல்லாம், மெய்க்கும் - மெய்யேபுகழுவதான, அளி - ஸ்ரீராமனதனுக்கிரக மாகிய, துப்பின் - பலத்தையுடைய, அனுமனென்னும் - சிறிய திருவடியென்கிற, அறம் - தருமத்தையே, துணை - (தனக்குத்) துணையாக, பெற்றதாயும் - கொண்ட

தாயிருந்தும், களித்து - கள்ளுண்டு, புன்றொழில்மேல் - ஈனமானசெய்கைகளிலே யே, நின்ற - நிலைகொண்டுள்ள, அரக்கர் - ராக்ஷஸர்கள், கண்ணுறுவர் என்று - கண்டுகொள்ளுவார்களென்று, ஒளித்து - மறைந்து, பின் - திருவடிக்குப்பின்னே, செல்லும் - போவதான, காலபாசத்தை ஒத்தது - ஒப்பாயிற்று, பய—எ-று. ஆம்- சாரியை. (௩௪)

மேருவைமுழுதுஞ்சூழ்ந்துமீதுற்றவேகநாகம்
கார்நிறத்தண்ணலேவக்கலுழன்வந்துற்றகாலை
சோர்வுறுமனத்ததாகிச்சுற்றியசுற்றுநீங்கிப்
பேர்வுறுகின்றவாறுமொத்ததப்பிறங்குபேர்வால்.

இ-ள். மேருவை - மேருமலையை, முழுதுஞ்சூழ்ந்து - முழுதுஞ்சுற்றிக்கொண்டு, மீதுற்ற - மேலான அதிகமான, வேகம் - வேகத்தையுடைய, நாகம் - ஆதிசேடனாகிய பாம்பு, கார்நிறத்து - மேகவண்ணத்தையுடைய, அண்ணல் - எப்பொருட்கும் இறைவனான திருமால், ஏவ - அனுப்ப, கலுழன் - கருடபகவான்,வந்துற்ற காலை - அங்குவந்துகூடினபோது, சோர்வுறும் - தளர்ச்சியுற்ற, மனத்தது ஆகி- மனத்தையுடையதுவாய், சுற்றிய - அந்தமேருவைச் சூழ்ந்திருந்த, சுற்றுநீங்கி - சூழ்வைவிட்டு, பேர்வுறுகின்ற ஆறும் - பெயர்ந்துபோகிறபடியையும், ஒத்தது - ஒப்பாயிற்று பய, அ - அந்த, பிறங்கு - நீண்டுதோற்றுகிற, பேர்வால் - பெரியவால், எழு—எ-று. (௩௫)

குன்றொடுகுணிக்குங்கொற்றக்குவவுத்தோட்குரக்குச்சீயம்
சென்றுறுவேகத்திண்காலெறிதரத்தேவர்வைகும்
மின்றொடர்வானத்தானவிமானங்கள்விசையிற்றம்மின்
ஒன்றொடொன்றுடையத்தாக்கிமாக்கடலுற்றமாதோ.

இ-ள். குன்றொடு - மலைகளுடனே, குணிக்கும் - ஒப்பளவுள்ள, கொற்றம்- வெற்றிபொருந்தின, குவவு - உருண்ட, தோள் - புஜங்களையுடைய, குரக்குச்சீயம்- வானரசிரேஷ்டரானவர், சென்றுறு - செல்லுதலாலுண்டான, வேகம்-வேகத்தையுடைய, திண்கால் - பலமுள்ளகாற்று, எறிதர - வீச, தேவர்வைகும் - தேவர்கள் தங்குகின்ற, மின்தொடர் - மின்னுதலைக்கொண்ட, வானத்துஆன - ஆகாயத்திலே செல்லுவனவாகிய, விமானங்கள் - பல்லக்குமுதலியவைகள் எழு, விசையில் - (தாங்கள்செல்லும்) வேகத்தினாலே, தம்மில் - தங்களிலே, ஒன்றொடொன்று - ஒன்றுடனேமற்றொன்று, உடைய - தகர்வனவாக, தாக்கி - மோதிக்கொண்டு,மாக்கடல்- பெரியகடலில், உற்ற - விழுதலாயின, பய—எ-று. (௩௬)

வலங்கையின்வயிரவேதிவைத்தவன்வைகுநாடும்
கலங்குவதேகுவான்றன்கருத்தென்கொலென்னுங்கற்பான்
விலங்கயிலெயிற்றுவீரன்முடுக்கியவேகம்வெய்யோர்
இலங்கையினளவென்றென்னுவிம்பர்நாடிரிந்ததிப்பால்.

இ-ள். வலங்கையின் - வலக்கையிலே, வயிரம் - வச்சிரமான, ஏதி-ஆயுதத்தை, வைத்தவன் - கொண்டவனான இந்திரனுடைய, வைகும் - தங்குவதான, நாடும் - விண்ணுலகமும், கலங்குவது - கலங்குதலாயிருக்கிறது என்னென்றால், ஏகுவான்றன் - செல்லுகிற அனுமாருடைய, கருத்து - நினைவு, என்கொல்-எப்படியோ, என்னும் - என்பதான, கற்பு ஆல் - தெளிவினாலே, விலங்கு-நீண்டுவளைந்த,

அயில் - கூர்மையுள்ள, எயிற்று - பற்களையுடைய, வீரன் - அனுமார், மூடுக்கிய- விரைவுசெய்கிற, வேகம் - வேகமானது, வெய்யோர் - வெவ்விய அரக்கர்களுடைய, இலங்கையின் - இலங்காபுரியினது, அளவு - தூர அளவுக்குமாத்திரம், அன்று- அல்ல, என்னு - இலங்கைக் கப்பாலுஞ் செல்லுகிறதா யிருக்கிறதென்று, இம்பர் நாடு - இலங்கைக்கப்பாலுள்ள, நாடுகளெல்லாம் எழு, இப்பால் இரிந்தது - தங்கள் நாட்டுக்கப்பால் ஓடலாயிற்று, பய—எ-று. (௩எ)

ஓசனையுலப்பிலாதவுடம்பமைந்துடையவென்னத்
தேசமுநூலுஞ்சொல்லுந்திமிங்கிலகிலங்களோடும்
ஆசையையுற்றவேலைகலங்கவன்றண்ணல்யாக்கை
வீசியகாலின்வீந்துமிதந்தனமீன்களெல்லாம்.

இ-ள். உலப்பிலாத ஓசனை - அளவில்லாதயோசனைதூரம், உடம்பு - சரீரங் களை, அமைந்து உடைய என்ன - கொண்டுள்ளவைகளென்று, தேசமும் - உலகங் களும், நூலும் - சாஸ்திரங்களும், சொல்லும்-சொல்லப்படுவனவாகிய, திமிங்கிலம்- மீனுன திமிங்கிலமும் அதிற்பெரிய, கிலங்களோடு - திமிங்கிலகிலத்துடனேகூட, ஆசையை - வடகடலெல்லையை, உற்ற - பயந்துபோய்ச்சேர்ந்தன பய, வேலைகலங்க- அப்படிக்கடல்கலங்கும்படி, அன்று - அப்போது, அண்ணல் (அனுமாருடைய) பெ ரிதான, யாக்கை - சரீரத்தினின்றும், வீசிய-வீசப்படுகிற, காற்றின்-காற்றினுலே, வீந்து - இறந்து, மீன்களெல்லாம் - எழு மிதந்தன, பய—எ-று. (௩அ)

பொருவருமுருவத்தன்னுன்போகின்றபொழுதுவேகம்
தருவனதடக்கைதள்ளாநிமிர்ச்சியதம்முளொப்ப
ஒருவருங்குணத்துவள்ளலோருயிர்த்தம்பியோடும்
இருவருமுன்னர்ச்சென்றுலொத்தவவ்விரண்டுபாலும்.

இ-ள். பொருவரும் - ஒப்பரிதான, உருவத்து - சரீரத்தையுடைய, அன் ஞன் - அந்த அனுமார், போகின்றபொழுது - போகிறபோது, வேகம் - விரைவை, தருவன - கொடுப்பனவாகிய, தடக்கை - நீண்டகைகள், தள்ளா - தளராத, நிமிர்ச் சிய - நிமிர்தலுடையனவாய், தம்முள் - தாமிரண்டும், ஒப்ப - சரியாய்ச்செல்லுகின் றன, எழு - அடியாரை, ஒருவு அரு - விடுதலில்லாத, குணத்து - சுவாமித்தகுணத் தையுடைய, வள்ளல் - பரமோதாரரானபெருமாள், ஓர் - ஒப்பற்ற, உயிர்-தம்முயி ரையொத்த, தம்பியோடும் - இளையபெருமாளோடுகூட, இருவரும்-அவ்விருவரும், முன்னர் - திருவடிக்குமுன்னே, சென்றால் ஒத்த - செல்லுவதானுல் அதை ஒப்பா யிருந்தன பய, அவ்விரண்டுபாலும் - அனுமாரிருபுறத்திலும்—எ-று. (௩௯)

[இனிவருஞ்செய்யுள்முதல் - கஉ - செய்யுளும் மைந்நாகமலை கடலிலிருந் தெழுந்ததைச் சொல்லும்.]

வேறு.

இந்நாகமன்னுனெறிகாலெனவேகும்வேலை
திந்நாகமாவிற்செறிகிட்டிசைக்காவல்செய்யும்
மைந்நாகமந்நாள்கடல்வந்ததொர்காட்சிதோன்ற
மைந்நாகமென்னுமலைவானுறவந்ததன்றே.

இ-ள். இந்நாகம் அன்னுன் - இந்தமலைபோன்ற திருவடி, எறிகால் என- மோதுகிற வாயுப்போல, ஏகும்வேலை - போகும்போது, திந்நாகமாவில் - திக்கஜங்க

ளில், செறி - கனம்பொருந்தின, கீட்டிசை - கீழைத்திக்கை, காவல்செய்யும் - சுமந்துநிற்பதான பாலனஞ்செய்வதான, கைந்நாகம் - துதிக்கையையுடைய ஐராவதமானது, அந்நாள் - கடைந்த அப்போது, கடல் - கடலிலிருந்து, வந்தது - எழுந்ததான, ஓர்காட்சி - ஒருதோற்றம், தோன்ற-அனுமாருக்குத்தெரிய, மைந்நாகமென்னுமலை எழு, வான் உற - ஆகாயத்தைத்தொடுவதாக, வந்தது-கிளர்ந்தது எழுந்தது; பய—எ-று. அரிமா ஆண்சிங்கம் - நாகமா ஆண்யானை - திக்குநாகம் திந்நாகம் எனக் கடைக்குறையாய் மரீஇயது தொகுத்தலெனவுமாம். (௪௰)

மீயோங்குசெம்பொன்முடியாயிரமின்னிமைப்ப
ஓயாவருவித்திரளுத்தரியத்தையொத்த
தீயோருளராகியதாலவர்தீமைதீர்ப்பான்
மாயோன்மகரக்கடனின்றெழுமாண்பதாகி.

இ-ள். மீ ஓங்கு - மேலே உயர்ந்த, செம் பொன்முடி - சிவந்தபொன்னிறச் சிகரங்கள், ஆயிரம் - பத்துநூறும், மின் இமைப்ப - ஒளிகொண்டொளிர, ஓயா-விடாதொழுகுகிற, அருவித்திரள் - அருவியினது திரட்சி, எழு - உத்தரியத்தை பீதாம்பரமான அங்கவத்திரத்தை, ஒத்த-ஒப்பாயின, பய - தீயோர் கொடியவர்கள், ஊர் ஆகியதால் - உண்டாயிருத்தலாலே, அவர் - அந்தக் கொடியவர்களுடைய, தீமை - கொடுமையை, தீர்ப்பான் - தொலைப்பதற்காக, மாயோன் - ஆச்சரியகுணசேஷ்டிதனான எம்பெருமான், மகரம் - மகரமீன்களையுடைய, கடல் நின்று - கடலிலிருந்து, எழு - ஆயிரந்தலைகளுடனே எழுந்த, மாண்பது ஆகி - பெருமை யுள்ளதுவாய் மைந்நாகமென்னு மலைவான் உறவந்தது—எ-று. (௪௧)

நூலேந்துகேள்விநுகராப்புலனோக்கலுற்றூர்
போலேந்திநின்றவனியாண்மெய்பொறாதுநீங்கக்
காலாந்தழுந்திக்கடல்புக்குழிக்கச்சமாகி
மாலேந்தவோங்குநெடிமந்தரமேயுவான.

இ-ள். நூலேந்து - ஞான நூல்கள்கொண்ட, கேள்வி-பொருட்கேள்விகளை, நுகரா - அனுபவியாமல் கேளாமல், புலன் - விஷயங்களை வேடிக்கைகளை, நோக்கலுற்றூர்போல் - பார்க்கப்போகிற சிறுபிள்ளைகளைப்போல், ஏந்திநின்று - முன்னே தாங்கிநின்று பின், அவனியாள் - பூமிதேவியானவள், மெய்பொறாது - உடம்புதாங்கமாட்டாமல், நீங்க - விலகிப்போக அவ்வளவில், கால் - (சந்திரனாகிய) தூணும், ஆழ்ந்து - அமிழ்ந்து, அழுந்தி - (மத்தாகியமலையும்) அமிழ்ந்து, கடல் - கடலும், புக்குழி - கீழேபோனபோது, கச்சம்ஆதி - ஆமைவடிவுகொண்டு, மால் - திருமாலானவர், ஏந்த - கீழேசென்றுதாங்க, ஓங்கு - அப்போதுயர்ந்த, நெடு - நீண்ட, மந்தரமேயும் - மந்தரகிரியைச்சொன்னாலும், மான - ஒப்பாக வானுறவந்தது—எ-று. கச்சபம் கச்சமெனத் தொகுத்துநிற்கிறது. (௪௨)

தள்ளற்கருநற்சிறைமாடுதழைப்பொடோங்க
எள்ளற்கருநன்னிறமெல்லையிலாதபுல்ல
வள்ளற்கடலைக்கெடநீக்கிமருந்துவவ்வி
உள்ளூற்றெழுமோருவணத்தரசேயுமொத்த.

இ-ள். தள்ளற்குஅரு - (இந்திரனாலே) வெட்டுதற்குக்கூடாத, நற்சிறை-நல்லசிறகுகள், மாடு - இருபுறத்திலும், தழைப்பொடு-அடிக்கொள்ளுதலுடனே, ஓங்க-

உயர்ந்துதோற்ற, எள்ளற்குஅரு - பழித்தற்குக்கூடாத, நன்னிறம் - நல்லநிறமானவை, எல்லையிலாத - அளவில்லாதவை, புல்ல - பொருந்த, வள்ளல் - கொடுத்தலையுடைய, கடலை - சமுத்திரராஜனை, கெடநீக்கி - தோற்கச்செய்துபின்பு, மருந்து-அமுதகலசத்தை, வவ்வி - எடுத்துக்கொண்டு, உள்ளூற்று-கடலுள்ளிருந்து, எழும்-எழுவதான, ஓர் - ஒப்பில்லாத, உவணத்து - பக்ஷிகளுக்கு, அரசேயும் - அரசனான கருடனைச்சொன்னாலும், ஒத்தது - மலையெழுந்தது ஒத்ததாயிற்று—எ-று. (௬௩)

ஆன்றுநெடுநீரிடையாதியோடந்தமாகித்
தோன்றாதுநின்றானருடோன்றிடமுந்துதோன்று
மூன்றுமுலகத்திடைமுற்றுயிராயமற்றும்
ஈன்றானையீன்றசுவணத்தனியண்டமென்ன.

இ-ள். ஆன்று ஆம் - அகன்றிருப்பதாகிய, நெடுநீரிடை - கடலிலே, ஆதியோடு - முதலாதலுடனே, அந்தமாகி - முடிவுமாகி, தோன்றாது - கண்ணுக்குத் தோற்றாமல், நின்றான் - இருப்பவனான திருமாலினது, அருள்தோன்றிட - காருண்ணியமுண்டாக, முந்துதோன்றி - (எல்லாருக்கு) முன்னேபிறந்து, மூன்றும்-மூவகையான, உலகத்திடை - உலகத்திலே, முற்று - முழுதும், உயிராய - உயிராகியவைகளையும், மற்றும் - உயிரில்லாதவைகளையும், ஈன்றானை-பெற்றநான்முகனை, ஈன்ற - பெற்ற, சுவணத்தனி அண்டமென்ன - இரணியகருப்பமான ஒப்பில்லாத அண்டம்போலவும் வானுறவந்தது—எ-று. (௬௪)

இந்நீரினென்னைத்தருமெந்தையையெய்தியன்றிச்
செய்ந்நீர்மைசெய்யேனெனச்சிந்தனைசெய்துநொய்தின்
அந்நீரில்வந்துமுதலந்தணனாதிநாளம்
முந்நீரின்மூழ்கித்தவமுற்றிமுளைத்தவாபோல்.

இ-ள். இந்நீரில் - இந்த மகோததியிலே, என்னைத்தரும் - என்னைத்தருவதான பெற்ற, எந்தையை - எனது தந்தையை, எய்தியன்றி-யான்கண்டாலல்லது, செய்ந்நீர்மை - செய்யுங் காரியங்களை, செய்யேனென - செய்யமாட்டேனென்று, சிந்தனைசெய்து - பகவானைத் தியானித்துக்கொண்டு, நொய்தில் - விரைவில், அந்நீரில் - அந்தமகார்ணவத்திலே, வந்து - புகுந்து, முதலந்தணன் - ஆதிவேதியனான நான்முகன், ஆதிநாள் - உலகந்தோன்றுங்காலத்திலே, அ - அந்த, முந்நீரில் - கடலிலே, மூழ்கி - முழுகி, தவமுற்றி - தவத்தைமுடித்து, முளைத்தவாபோல்-மேலே கிளர்ந்தாற்போலவும் வந்தது—எ-று. செந்நீர்மை என்றால் - செவ்வையான குணச்செய்கைகளையென்க அந்நீரில் - தானினைத்த அப்படியே - என்றுமாம். (௬௫)

பூவாலிடையூறுபுகுந்துபொறாதநெஞ்சின்
கோவாமுனிசீறிடவாரிகுளித்தவெல்லாம்
மூவாமுதனாயகன்மீளமுயன்றவந்நாள்
தேவாசுரர்வேலையில்வந்தெழுதிங்களென்ன.

இ-ள். பூவால் - லட்சுமிதேவி யணிந்திருந்த பூமாலையாலே, இடை - இந்திரன்பவனிவரும்போது, ஊறுபுகுந்து - துன்பந்தோன்றி, பொறாத - அதுபொறுக்காத, நெஞ்சின் - மனத்துடனே, கோவாமுனி - சிரேஷ்டரான துறுவாசமுனிவர், சீறிட - கோபங்கொண்டு சபிக்க அதனாலே, வாரி - கடலிலே, குளித்தவெல்லாம்-போனபொருள்களெல்லாம், மூவா - அழியாத, முதல் நாயகன் - முதற்கடவுளான

திருமால், மீள - திரும்பும்படி, முயன்ற - முயற்சிபண்ணின, அந்நாள் - அப்பொழுது, தேவாசுரர் - தேவர்களும் அசுரர்களும் கூடிநிற்கிற, வேலையில் - கடலிலே, வந்தெழு - வந்தெழுந்த, திங்களென்ன - சந்திரன்போலவும்வந்தது, கோவாமுனி-தேவருடனேசேராதமுனி கூடாதமுனி எனவுமாம்—எ-று. (சசு)

நிறங்குங்குமமொப்பனநீனிறம்வாய்த்தநீரின்
இறங்கும்பவளக்கொடிசுற்றினசெம்பொனேய்ந்த
பிறங்குஞ்சிகரப்படர்முன்றிறொறும்பிணவோ
டுறங்கும்மகரங்களுயிர்ப்பொடுணர்ந்துலாவ.

இ-ள். நிறம் - நிறமானது ஒருபுறத்திலே, குங்குமம் - குங்குமத்தை, ஒப்பன - ஒப்பனவாகியும், நீலநிறம் - ஒருபுறத்திலே கரியநிறத்தை, வாய்த்த-பொருந்தினவாகியும், நீரில் - ஜலத்திலே, இறங்கும்-வேர்வீழ்த்தியிருக்கிற, பவளக்கொடி-ஒருபுறம் பவளக்கொடிகள், சுற்றின - சூழ்ந்தனவாகியும், செம்பொன் - ஒரு புறம் சிவந்தபொன்னிறத்தை, ஏய்ந்த - பொருந்தினவாகியும், பிறங்கும் - விளங்குகின்ற, சிகரம் - அந்தமலைச்சிகரங்களான, படர் - பரவுதலாகிய, முன்றில்தொறும் - வெறுநிலங்களெல்லாம், பிணவொடு - பெண்மீன்களுடனே, உறங்கும்- தூங்குவனவான, மகரங்கள் - மகரமீன்கள், உயிர்ப்பொடு - சுவாசம்விடுதலுடனே, உணர்ந்து-நித்திரைதெளிந்து, உலாவ - மேலெல்லாஞ்சஞ்சரிக்க வானுறவந்தது—எ-று. (சஎ)

கூன்சூன்முதிரிப்பிகுரைக்கநிரைத்தபாசி
வான்சூழ்மழையொப்பவயங்குபளிங்குமுன்றி
றூன்சூலநாளிற்றகைமுத்தமுயிர்த்தசங்கம்
மீன்சூழ்வருமம்முழுவெண்மதிவீறுகீற.

இ-ள். கூன் - வளைவானவைகளாய், சூல் முதிர் - கருப்பமுதிர்வையுடைய, இப்பி - இப்பிகள், குரைக்க - ஒலிக்க, நிரைத்த - அவைகள் பதிதலான, பாசி-பாசிகள், வான்சூழ் - ஆகாயத்திலே சஞ்சரிக்கிற, மழை - மேகங்களை, ஒப்ப - நிகராக, வயங்கு - விளங்குகின்ற, பளிங்கு - பளிங்குப்பாறையான, முன்றில் - வெறு நிலங்களிலே, சூல - கருப்பத்தைப்பெறுகிற, நாளில் - காலத்திலே, தகை - பெருமைகொண்ட, முத்தம் - முத்துக்களை, உயிர்த்த - பெற்ற, சங்கம் தான் - சங்கானது, மீன்சூழ்வரும் - நக்ஷத்திரங்கள்சூழ்வதாகவருகிற, அ - அந்த, முழுவெண்மதி - வெள்ளிய பூரணச்சந்திரனது, வீறுகீற - பெருமையைக் குலைக்கவும்வந்தது—எ-று. இப்பிகுரைத்தலே மேககர்ச்சிதமாகவும் பாசியேமேகமாகவும் பளிங்குப்பாறையே நிலாப்பரவின ஆகாயமாகவும், முத்துகளே - நக்ஷத்திரங்களாகவும், சங்கே-பூரணச்சந்திரனாகவும், சுக்கிலபக்ஷத்தாகாயம்போல் மலைவந்ததென்க. (சஅ)

பல்லாயிரமாயிரங்காசினம்பாடிமைக்கும்
கல்லார்சிமயத்தடங்கைத்தலநீண்டுகாட்டத்
தொல்லார்கலியுட்புகமூழ்கிவயங்குதோற்றத்
தெல்லாமணியீட்டமுகந்தெழுகின்றதென்ன.

இ-ள். பல்லாயிரமாயிரம் - அசங்கியேயங்களான, காசினம் - ரத்நவகைகள், பாடு - பக்கங்களெல்லாம், இமைக்கும் - மின்னுகின்ற, கல் ஆர் - அந்தமலையினது, சிமையம் - சிகரமாகிய, தடம் - நெடிய, கைத்தலம் - கையானது, நீண்டு காட்ட-நீண்டுதோன்ற, தொல் - பழையதான, ஆர்கலியுள் - கடலிலே, புகமூழ்கி - அழுந்த

முழுகி, வயங்கு - அங்கேவிளங்குகின்ற, தோற்றத்து - ஒளியையுடைய, எல்லாமணியீட்டம் - மணியீட்டமெல்லாம் நவரத்நவகைகளெல்லாம், முகந்து-வாரிக்கொண்டு, எழுகின்றதென்ன - முத்துக்குளித் தெடுக்கமுழுகினவன் எழுகிறதுபோலவும் வந்தது—எ-று. மலைச்சிகரமே முழுகி எழுகிறவன் நீட்டுங்கையாகவும், சிகரத்திலுள்ள ரத்நங்களே அவன்வாரிவருகிற ரத்நங்களாகவும், அம்மலையே முழுகினவனாகவுங் கொள்க. (சுகூ)

மனையிற்பொலிமாகநெடுங்கொடிமாலையேய்ப்ப
வினையிற்றிரள்வெள்ளருவித்திரடூங்கிவீழ
நினைவிற்கட லூடெழலோடுமுணர்ந்துநீங்காச்
சுனையிற்பனைமீன் றிமிலோடுதொடர்ந்துள்ள.

இ-ள். மனையில் - வீடுகளிலே, பொலி - நிரம்பிநிற்கிற, மாகம்-ஆகாயத்தளவும், நெடும் - நீண்டுதொங்குகிற, கொடிமாலை - கொடிவரிசைகளை, ஏய்ப்ப - ஒப்பாக, வினையில் - புண்ணியச்செய்கைபோல், திரள்-திரண்டுவிழுகிற, வெள்-வெண்மையான, அருவித்திரள் - அருவிமாலைகள், தூங்கி - நிலைகொண்டு, வீழ - இறங்கவும், நினைவில் - திருவடியைக்காணவேணுமென்கிற நினைவுகொண்டு, கடலூடு-கடலுக்குள்ளிருந்து, எழலோடும் - அம்மலைஎழுமளவில், உணர்ந்தும்-நித்திரைதெளிந்தும், நீங்கா - அந்நிலையினின்று நீங்காமல், சுனையில் - அந்தமலையிலுள்ள சுனைகளிலே, பனைமீன் - பனைமீன்கள், திமிலோடு - திமிலென்னுமீன்களுடனே, தொடர்ந்து - கூடி, துள்ள - புரண்டுவிழவும்வந்தது—எ-று. (ருo)

கொடுநாலொடிரண்டுகுலப்பகைகுற்றமூன்றும்
சுடுஞானம்வெளிப்படவுய்த்ததுயக்கிலார்போல்
விடநாகமுழைத்தலைவிம்மலுழன்றுநீங்க
நெடுநாள்பொறையுற்றவுயிர்ப்புநிமிர்ந்துநிற்ப.

இ-ள். கொடு - கொடுமைசெய்கிற, நாலொடிரண்டுகுலம்-ஷட்வர்க்கங்களானகாமாதி, பகை - விரோதங்களையும், குற்றமூன்றும் - ஆணவகாமியமாயைகளான மும்மலங்களையும், சுடு - தகிப்பதான, ஞானம் - மெய்யறிவு, வெளிப்பட-தோன்ற, உய்த்த - முன்னேகொண்டிருந்த, துயக்கு - சந்தேகம், இலார்போல் - தீர்ந்தவர்களைப்போல், விடம் - நஞ்சையுடைய, நாகம் - பாம்புகள், முழைத்தலை - புற்றிலேகிடந்து, விம்மல் - நெருக்கத்தினாலே, உழன்று - வருந்தி, நீங்க-அவைதீர்ந்துசெல்வனவாக, நெடுநாள் - நெடுங்காலமும், பொறையுற்ற - பொறுத்திருந்த, உயிர்ப்பு-சுவாசம், நிமிர்ந்து - நீளவிடுதலாகி, நிற்ப - திருவடிக்குமுன்னே வானுறவெழுந்து நிற்க—எ-று. பகையாவன, காமக் குரோத லோப மோக மதமாச்சாரியங்கள், குற்றமாவன - ஐயம்திரிபு அறியாமை எனவுமாம். (ருக)

எழுந்தோங்கிவிண்ணோடுமண்ணொக்கவிலங்குமாடி
உழுந்தோடுகாலத்திடையும்பரினிம்பரெங்கும்
கொழுந்தோடிநின்றகொழுங்குன்றைவியந்துநோக்கி
அழுங்காமனத்தண்ணலிதென்கொலெனாவயிர்த்தான்.

இ-ள். எழுந்து - அப்படிநிமிர்ந்து, ஓங்கி - உயர்ந்து, விண்ணோடு - ஆகாயமும், மண் - பூமியும், ஒக்க - ஒருசரியாக, இலங்கும் - விளங்குவதான, ஆடி - கண்ணாடியிலே, உழுந்து - இட்டவுழுந்து, ஓடுகாலத்திடை - உருண்டு நிற்குமளவில்,

உம்பரின் - மேலும், இம்பர் - கீழும், எங்கும் - நாலுபக்கமும், கொழுந்து - முடிக்கொழுந்தும் வேர்க்கொழுந்தும், ஓடி - நீண்டு, நின்ற - நிற்கிற, கொழும் - செழுமையான, குன்றை - மைந்நாகமலையை, வியந்து - அதிசயித்து, நோக்கி - பார்த்து, அழுங்கா - எதற்கும்சலியாத, மனத்து - மனத்தையுடைய, அண்ணல் - அனுமார், இது என்கொலெனு - இதுயாதோ என்று, அயிர்த்தான் - சந்தேகித்தார்—எ-று.

நீர்மேற்படராநெடுங்குன்றுநிமிர்ந்துநிற்றல்
சீர்மேற்படராதெனச்சிந்தையுணர்ந்துசெல்வான்
வேர்மேற்படவன்றலைகீழ்ப்படநூக்கிவிண்ணோர்
ஊர்மேற்படரக்கடிதும்பரின்மீதுயர்ந்தான்.

இ-ள். செல்வான் - நீர்மேற்செல்லுகின்றஅனுமார், நீர்மேல் - இந்தஜலத்தின்மேல், படர்ஆ - நான்செல்லாமல், நெடுங்குன்று - இந்தநெடியமலை, நிமிர்ந்து-உயர்ந்து, நிற்றல் - நிற்கிறதினாலே, மேல் - இனி, சீர் - நமதுசெல்லுஞ்செய்கை, படராதுஎன - செல்லாதென்று, சிந்தை - மனத்திலே, உணர்ந்து-தெரிந்து, வேர்-அந்தமலையினடியானது, மேற்பட - மேலாகவும், வன்தலை - அதனதுவலியமுடியானது, கீழ்ப்பட - கீழாகவும், நூக்கி - புரளத்தள்ளி, விண்ணோர் - தேவர்களுடைய, ஊர்மேல் - சுவர்க்கலோகத்துக்குமேலே, படர - செல்வதாக, கடிது - விரைவிலே, உம்பரின்மீது - ஆகாயத்தின்மேல், உயர்ந்தான் - கிளம்பினார்—எ-று. பய. (ருங)

உந்தாமுனுலைந்துயர்வேலையொளித்தகுன்றம்
சிந்தாகுலமுற்றதுபின்னருந்தீர்விலன்பால்
வந்தோங்கியாண்டோர்சிறுமானிடவேடமாகி
எந்தாயிதுகேளெனவின்னவிசைத்ததன்றே.

இ-ள். உந்தாமுன் - அப்படித்தள்ளுமுன்னே, உலைந்து - வருந்தி, உயர்வு உலைந்து - தன்உயர்ச்சிகுறைந்து, உயர்வேலை - அலைகளுயருகிறகடலிலே, ஒளித்த-நெடுங்காலம்ஒளிந்திருந்த, குன்றம் - மலையானது, சிந்தாகுலம் - மனோதுக்கம், உற்றது - உள்ளதாகி, பின்னரும் - பின்னும், தீர்வுஇல் - விடுதலில்லாத, அன்பால்-பிரீதியிருத்தலாலே, வந்து-எழுந்து, ஓங்கி - (அனுமார்செல்லுமுயரத்தளவும்) உயர்ந்து, ஆண்டு - அவ்விடத்தே, ஓர் - ஒரு, சிறுமானிடவேடமாகி - சிறியமனிதவடிவுகொண்டு, எந்தாய் - என்அப்பனே, இது - இந்தவார்த்தையை, கேளென - கேட்டியென்று, இன்ன-இனிச்சொல்லுமவைகளை, இசைத்தது - சொல்லிற்று, பய-எ-று. குன்று - எழு. (ருச)

வேற்றுப்புலத்தோனெனலைவிலங்கலெல்லாம்
மாற்றுச்சிறையென்றரிவச்சிரமாணவோச்ச
வீற்றுப்படநூறியவேலையின்வேலையுய்த்துக்
காற்றுக்கிறைவனெனைக்காத்தனனன்புகாக்க.

இ-ள். ஐய - அப்பனே, வேற்றுப்புலத்தோன்-என்னைசத்துருவைச்சேர்ந்தவன், எனல்-என்றுகொள்ளாதி, விலங்களெல்லாம்-மலைகளையெல்லாம், சிறைமாற்றுஎன்று - சிறகுவெட்டென்று தேவர்சொல்ல, அரி - இந்திரனானவன், வச்சிரம்-தன்வச்சிராயுதத்தை, மாண - தனதுபெருமைதோன்ற, ஓச்ச-வெட்டுமளவில், வீற்றுப்பட - இறகுகள் வேறுவேறாக, நூறியவேலையில்-வெட்டுகிறபோது, எனைவேலை உய்த்து - என்னை இந்தக்கடலிலே கொண்டுவந்துதள்ளி, காற்றுக்கு இறைவன்-

வாயுபகவான் எழு, காத்தனன் - ரக்ஷித்தான் பய, அன்புகாக்க - அவனிடத்தில் நான் விசுவசித்திருக்க—எ-று. (ருரு)

அன்னுனருங்காதலனுதலினன்புதூண்ட
என்னுலுனக்கீண்டுசெயற்கரிதாயதின்மை
பொன்னுர்சிகரத்திடையாறிபோதியேனும்
உன்னுலுயர்ந்தேனுயர்விற்குமுயர்ந்ததோளாய்.

இ-ள். அன்னுன் - அந்தவாயுபகவானுக்கு, அரும் காதலன் - அருமைக்குமாரன், ஆதலின் - நீர் ஆசையாலே, அன்புதூண்ட - அந்தப்பிரீதிநிரம்பிநீள, என்னுல் உனக்கு - என்னுலே உமக்கு, ஈண்டு - இவ்விடத்திருந்து, செயற்கரிதாயது - செய்தற்கு அருமையான உபசாரம், இன்மையேனும் - இல்லை ஆனுலும், பொன் ஆர்-பொன்னெளிநிரம்பின, சிகரத்திடை - எனது தலைமேலேநின்று, ஆறினை - இளைப்புத்தீர்ந்தீராகி, போதி போம் - போவீரென்று, உன்னுல் - உமது நிமித்தமாகவே, உயர்ந்தேன் - மேலெழுந்தேன், உயர்விற்கும் - என் உயர்வைக்காட்டிலும், உயர்ந்த-உயர்தலான, தோளாய் - புஜங்களையுடையவரே, உன்னுவுயர்ந்தேனென்றும்பாடம் நினைத்துவந்தேன் என்க—எ-று. இச்செய்யுள்போல்வன எல்லாம்தொடர்நிலைகள்-பயனிலைகளை ஆங்காங்குக் காண்க. (ருசு)

கார்மேகவண்ணன்பணிபூண்டருங்காலின்மைந்தன்
தேர்வான்வருகின்றதுசீதைதைத்தேவருய்யப்
பேர்வானயல்சேறியிதிற்பெறும்பேரிலென்ன
நீர்வேலையுமென்னையுரைத்ததுநீதிநின்றுய்.

இ-ள். கார்மேகவண்ணன் - நீலமேகவண்ணனுன ஸ்ரீராமனுடைய, பணி பூண்டு - உத்தரவினுலே, அரும் - அரிதான வருத்தங்கொண்டு, காலின் மைந்தன் - வாயுபுத்திரன், வருகின்றது - வருகிறகாரியம், சீதையை-சீதை இருக்குமிடம், தேர் வான் - தெரிகிறதற்கு, தேவர்உய்ய - அக்காரியமோ தேவர்கள் உஜ்ஜீவிக்க, பேர் வான் - செல்லுகிற, அனுமாருக்கு அயல் - இளைப்புத்தீரும் இடமாகநேரே, சேறி-செல்லு, இதில் - இதைஅன்றி, பெறும்பேறு - பெறுவதாகியபலன், இல்லென்ன-வேறில்லையென்று, நீர் - ஜலரூபமான, வேலையும் - கடற்றெய்வமும், என்னை - எனக்கு, உரைத்தது - சொல்லிற்று, நீதி - நல்லநீதிநூல்வழியிலே, நின்றுய் - நிலைகொண்டுள்ளவரே—எ-று. (ருஎ)

நற்றுயினுநல்லனெனக்கிவனென்றுநாடி
இற்றேயிறையெய்தினையேய்ந்ததுகோடியென்னுல்
பொற்றுரகன்மார்பதம்மில்லுழைவந்தபோதே
உற்றுர்செயன்மற்றுமுண்டோவெனவுற்றுரைத்தான்.

இ-ள். இவன் - இப்படிச்சொல்லுகிறவன், எனக்கு - செல்லுகிறநமக்கு, நற்றுயினும் - நல்லதாயைப்பார்க்கிலும், நல்லன் என்றுநாடி - நல்லவனென்றுகொண்டு, இற்றே - இப்படியே, இறை எய்தினை - கொஞ்சம்வந்திருந்து, என்னுலேய்ந்து-என்னுலேசெய்யத்தக்கதை, கோடி - அங்கீகரியும், பொன்தார் - பொன்மாலையணிவதான, அகல் - அகன்ற, மார்பு - மார்பையுடையவரே, தம் - தமக்குரியதான, இல்லுழை - வீட்டிற்கு ஒருவர், வந்தபோதே - வந்தால், உற்றுர் - அவருக்குறவானவர், செயல் - செய்யத்தக்கது, உபசாரமும் - விருந்தும் அல்லாமல், மற்றும் உண்டோ-

வேறுவகைகளும் உளவோ, என - என்று, உற்று - நெருங்கிநின்று, உரைத்தான் - சொன்னான் மைநாகன்—எ-று. (ருஅ)

உரைத்தானுரையாலிவனூறிலனென்பதுன்னி
விரைத்தாமரைவாண்முகம்விட்டுவிளங்குவீரன்
சிரித்தானளவேசிரித்தத்திசைசெல்லநோக்க
வரைத்தாணெடும்பொற்குடுமித்தலைமாடுகண்டான்.

இ-ள். உரைத்தானுரையால் - அப்படிச்சொன்னவன்சொற்களாலே, இவன் - இப்படிச்சொல்லுகிறவன், ஊறிலன் - தோஷமில்லாதவன், என்பதுன்னி-என்பது தெரிந்து, விரை - மணம்பொருந்தின, தாமரை - கமல மலர்போன்ற, வாள் - ஒளி பொருந்தின, முகம் - தமதுமுகமானது, விட்டு - விகசிதமாய், விளங்குவீரன் - விளங்குகிற அனுமார், சிரித்தான் அளவே - சந்தோஷித்தவராய் அப்போதே, சிரித்து - மந்தகாசத்துடனே, அத்திசைசெல்ல - அவன்சொன்ன இடத்திற்குப்போக, நோக்க - உத்தேசிக்க அப்போது, வரைதாள் - அடிக்கொண்டுநிற்கிற அந்தமலையினது, நெடும் - நீண்ட, பொன் - பொன்மயமான, குடுமி - சிகரமாகிய, தலை-முடியை, மாடு - தமதுபக்கத்தோன்ற, கண்டான் - பார்த்தார் - பய—எ-று. (ருகூ)

வருந்தேனதுவென்றுணைவானவன்வைத்தகாதல்
அருந்தேனினியாதுமென்னாசைநிரப்பினல்லால்
பெருந்தேன்பொழிசாரனின்னன்புபிணித்தபோதே
இருந்தேனுகர்ந்தேனிதினூஉங்கினியீவதுண்டே.

இ-ள். வருந்தேன் - நான்எப்போதும் வருத்தமடையேன், அது - அப்படி நான் வருந்ாதிருப்பது, என்துணை-எனக்குத்துணையான, வானவன்-தெய்வமாகிய ஸ்ரீராமன் வைத்த - என்னிடத்துச் செய்துவைத்திருக்கிற, காதல் - தயவினாலே, இனி - இனிமேல், என்ஆசை - எனதுவேண்டுகோளை, நிரப்பின அல்லால் - அத்தெய்வம்முடித்தாலல்லது, யாதும்அருந்தேன் - எதையும்புசியேன், பெருந்தேன் - மிகுதியாகத்தேனை, பொழி - சிந்துகின்ற, சாரல் - பக்கங்களையுடைய, நின்அன்பு - உம்முடையபிரீதியினாலே, பிணித்தபோதே - என்னைப் பற்றிக்கொண்டபோதே, இருந்தேன் - இதோஉம்மிடத்தேதங்கினேன், நுகர்ந்தேன் - விருந்தும்புசித்தேன், இதின்ஊங்கு - இந்தஅன்பின்மிக்கதாய், இனி - இன்னமும், ஈவது - கொடுப்பதும் செய்வதும், உண்டே - உண்டா—எ-று. (சுo)

முன்பிற்சிறந்தாரிடையுள்ளவர்காதன்முற்றப்
பின்பிற்சிறந்தார்குணநன்றிதுபெற்றயாக்கைக்
கென்பிற்சிறந்தாயதோரூற்றமுண்டென்னலாமே
அன்பிற்சிறந்தாயதொர்பூசனையார்கணுண்டே.

இ-ள். காதல்முற்ற - ஆசைநிரம்ப கொடுப்பதில், முன்பில் - முற்காலத்திலே, சிறந்தார் - சிறந்தமுதல்வள்ளல்களும், இடை உள்ளவர் - நடுவிலுள்ள நடுவள்ளல்களும், பின்பிற்சிறந்தார் - பின்புள்ளகடைவள்ளல்களும், குணம் - கொண்ட குணமே, நன்று - மிகவு நல்லது, இதுபெற்ற - இக்குணத்தைக்கொண்ட, யாக்கைக்கு - உடம்புக்கு, என்பில் - ததீசிமகாமுனிகொடுத்த முதுகெலும்பிலும், சிறந்தாயது - சிறந்துள்ளதான, ஓர் ஊற்றம் - ஒருறுதிப்பொருள், உண்டு - உளது, என்னலாமே - என்று சொல்லக்கூடுமோ, அன்பில்-அப்படி எலும்பைக்கொடுப்பதும் அன்

பினுலே ஆதலால், சிறந்தாயது - சிறந்துள்ளதான அவ்வன்பிலும், ஓர் பூசனை - ஒரு உபசாரம், யார்கண் உண்டு - யாரிடத்தே உள்ளதாம்—எ-று. ஏ-அசை, இல்லையென்னுமற்கொடுப்பவர் - முதல்வள்ளல்கள், வேண்டக்கொடுப்பவர் - இடைவள்ளல்கள், புகழக்கொடுப்பவர் - கடைவள்ளல்கள், ஆதலால் உமதன்பை அல்லது மற்றொன்றும் வேண்டியதில்லையென்று கருத்து. (௬௧)

ஈண்டியான்கடிதேகியிலங்கைவிலங்கலெய்தி
ஆண்டானடிமைத்தொழிலாற்றலினுற்றலுண்டேல்
மீண்டியானுகர்வென்னல்விருந்தெனவேண்டிமெய்ம்மை
பூண்டானவன்கட்புலம்பிற்படமுந்துபோனுன்.

இ-ள். ஈண்டு - இங்குநின்றும், யான் - நான், கடிது - விரைவிலே, ஏகி-சென்று, இலங்கை – இலங்காபுரியாகிய, விலங்கல் - மலைக்கு, எய்தி - போய், ஆண்டான் - ஸ்ரீராமனுகியஆண்டவனுக்கு, அடிமைத்தொழில்-அடிமையானசெய்கையை, ஆற்றலின் - செய்வதிலே, ஆற்றல் - சக்தி, உண்டேல் - மெய்யே உள்ளதானுல், மீண்டு - திரும்பிவந்து, யான் - நான், நுகர்வென் - புசிப்பேன், நல்விருந்தென-நீர் செய்யுநல்லவிருந்தையென்று, வேண்டி - தம்மைவிரும்பி, மெய்ம்மை - மெய்யான அன்பு, பூண்டான் - கொண்டவனை, அவன் - அந்தமைந்நாகனுடைய, கட்புலம்-கண்ணறிவு, பிற்பட - பின்னேதொடர, முந்து - முன்னேநோக்கி, போனுன்-சென்ருர்அனுமார்—எ-று. (௬௨)

செவ்வான்கதிருங்குளிர்திங்களுந்தேவர்வைகும்
வெவ்வேறுவிமானமுமீனெடுமேகமற்றும்
எவ்வாயுலகத்தவுமீண்டியிருந்ததம்மின்
ஒவ்வாதனவொத்திடவூழிவெங்காலுமொத்தான்.

இ-ள். செவ்வான்கதிரும்-சிவந்தபெரிதானசூரியனும், குளிர்திங்களும்-குளிர்ந்தசந்திரனும், தேவர் - தேவர்கள், வைகும் - தங்குவதான, வெவ்வேறு - பலவேறுவகையான, விமானமும் - விமானங்களும், மீனெடு - நக்ஷத்திரங்களும், மேகம் - மேகங்களும், மற்றும் - இன்னமுள்ளவைகளும், எவ்வாய் - எந்தஎந்த இடங்களிலுள்ள, உலகத்தவும் - உலகங்களிலுண்டானயாவும், ஈண்டியிருந்த - கூடியிருந்தவகைகள், தம்மின் - தம்முள்ளே, ஒவ்வாதன - ஒன்ருேடொன்று சேராதவைகளெல்லாம், ஒத்திட - ஒருசேர்க்கையாகும்படி, வெம்-வெவ்விதான, ஊழிக்காலும்-ஊழிக்காற்றையும், ஒத்தான் - ஒப்பதானுர்திருவடி—எ-று. ஈண்டியிருத்தலாவது-தனித்தனியே ஒரிடத்திற்கூடியிருத்தல், முன் சூரியனுக்கோரிடம் - சந்திரனுக்கோரிடம் - மற்றைக்கிரகங்களுக்கும் வெவ்வேறிடம், இப்போது எல்லாம் ஓரிடத்தைச்சேர்தலாயின அனுமார்செல்லும்வேகத்தால் என்க. (௬௩)

நீர்மாக்கடன்மேனிமிர்கின்றநிமிர்ச்சிநோக்காப்
பார்மேற்றவழ்சேவடிபாய்நடவாப்பதத்தே
தேர்மேற்குதிகொண்டவனித்திறன்சிந்தைசெய்தான்
ஆர்மேற்கொலென்றெண்ணியருக்கனுமையமுற்ருன்.

இ-ள். நீர் மூவகைநீரையுடைய, மாக்கடல்மேல் – அந்தப் பெரியகடலுக்குமேலே, நிமிர்கின்ற - உயர்ந்துசெல்லுகின்ற, நிமிர்ச்சி - உயர்வை, நோக்கா - பார்த்து, பார்மேல் - மண்மேல், தவழ் - செல்லுவனவான, சேவடி - சிவந்தகால்கள்,

பாய்நடவா - பரவிநடக்கப்படாத, பதத்தே - இடமான ஆகாயத்திலே செல்லுகிற, தேர்மேல் - தேரின்மேலே, குதிகொண்டவன் - நிலைகொண்டிருப்பவனான அருணன் நடவாதவாசல்களுடனே தேர்மேற்குதிகொண்டவன், இத்திறன் - இந்தவேகவலியை, சிந்தைசெய்தான் - ஆலோசித்தான், ஆர்மேல் என்று - யார்மேலேசெல்லுகிறதென்றுசிந்தைசெய்தான், எண்ணி - அப்படியேநினைத்து, அருக்கனும் - சூரியனும், ஐயமுற்றான் - சந்தேகங்கொண்டான்—எ-று. கொல் - அசை, அருணனும் சூரியனும் ஓரிடத்தேநில்லாது செல்லுகிறவர்களாகையால் ஐயமுற்றாரென்க. ஊற்றுநீர் - ஆற்றுநீர் - மேகநீர் - ஆகமுந்நீர் என்க. (௬௪)

வாளொத்தொளிர்வாலெயிறூழின்மருங்கிமைப்ப
நீளொத்துயர்வாலின்விசும்புநிரம்புமெய்யன்
கோளொத்தவன்மேனிவிசும்பிருகூறுசெய்த
நாளொத்ததுமேலொளிகீழிருளுற்றஞாலம்.

இ-ள். வாள் - வாளாயுதத்தை, ஒத்து - ஒப்பாய், ஒளிர் - விளங்குகின்ற, வால்எயிறு - வெள்ளைப்பற்கள், ஊழின் - வரிசையாக, மருங்கு-வாயிருபுறத்திலும், இமைப்ப - விளங்க, அதனாலே - மேலெல்லாம் வெளிச்சமாயிருந்தன, நீள் - சூரியமண்டலத்தளவுநீளம், ஒத்து - சரியாய், உயர் - உயர்ந்த, வாலின் - வாலாலே இராகுபோல, விசும்பு - ஆகாயமெல்லாம், நிரம்பு - நிறையும் ஒளியுள்ள, மெய்யன் - மண்டலாகிருதியானசூரியனை, கோள்ஒத்து - விழுங்கப்போதலை ஒப்பாய், அவன்-அந்த அனுமாருடைய, மேனி-சரீரநீளத்தாலும் பருமனாலும் நடுவேமறைவாதலால், விசும்பு - ஆகாயத்தை, இருகூறுசெய்த - இரண்டுபிரிவுபண்ணின, நாள்ஒத்தது - காலத்தைஒப்பாயிற்று அதனாலே கீழெல்லாம் இருண்டிருந்தன, ஞாலமேல்-உலகத்துக்குமேலே, ஒளியுற்ற - பற்களாலொளிவிளங்கின, ஞாலக்கீழ் - உலகின்கீழ் சரீரமறைவாலே, இருளுற்ற - இருண்டிருந்தன—எ-று. (௬௫)

மூன்றுற்றதலத்திடைமுற்றியதுன்பம்வீப்பான்
ஏன்றுற்றுவந்தான்வலிமெய்ம்மையுணர்த்துநீயென்
றான்றுற்றவானோர்குறைநேரவரக்கியாகித்
தோன்றுற்றுநின்றாள்சுரசைப்பெயர்ச்சிந்தைதூயாள்.

இ-ள். மூன்றுற்ற - மூவகையாயிருக்கிற, தலத்திடை-உலகத்தில், முற்றிய-நிரம்புதலான, துன்பம் - துன்பங்களை, வீப்பான் - போக்குதற்காக, ஏன்றுற்று-உடன்பாடாகி, வந்தான் - வந்த அனுமாருடைய, வலிமெய்ம்மை - மெய்யானசக்தியை, நீ - நீபோய், உணர்த்தென்று - தெரியச்செய்கென்று, ஆன்றுற்ற - ஆகாயத்திற்கூடிநிற்கிறவானோர் - தேவர்கள், குறை - (தங்களுக்குள்ள) குறைவைச்சொல்லி, நேர - வேண்ட அவர்களுக்காக, அரக்கியாகி - ராக்ஷஸியாகி, தோன்றுற்று-(அனுமாருக்குமுன்னே) தெரிவதாகி, நின்றாள் - நிற்றலானாள், பய, சுரசை – சுரசையென்கிற, பெயர் - பெயரைக்கொண்டு, சிந்தை - மனசும், தூயாள்-பரிசுத்தையானவள்—எ-று. (௬௬)

பேழ்வாயொரரக்கியுருக்கொடுபெட்ப்பினோங்கிக்
கோழ்வாயரியின்குலத்தாய்கொடுங்கூற்றுமுட்க
வாழ்வாயெனக்காமுணவாய்வருவாய்கொலென்னா
நீழ்வாய்விசும்பிற்றனதுச்சிநெருங்கநின்றாள்.

இ-ள். பேழ்வாய் - அகன்றவாயையுடைய, ஓரரக்கி - ஒருராக்ஷஸி, உருக்கொடு - வடிவைக்கொண்டு, பெட்பின் - (அனுமாரைத்தின்ன) ஆசையுடனே, ஓங்கி - உயர்ந்து, கோழ்வாய் - கொழுப்புக்கொண்ட, அரியின்குலத்தாய் - வானரகுலத்தையுடையவனே, கொடுங்கூற்றும் - கொடியயமனும், உட்க - அஞ்சும்படி, வாழ்வாய் - வாழுமவனே, எனக்கு - ஆமுணவாய் நல்லதான உண்டியாக, வருவாய்கொல் - (என்வாய்க்குள்) வருவாயோ, என்னு - என்று, நீள்வாய் - நெடுமைகொண்ட, விசும்பில் - ஆகாயத்திலே, தனது உச்சி - தன்தலையானது, நெருங்கி - நெருங்குவதாகி, நின்றாள்—எ-று. ஆமிடமாயென்றுபாடமானாலும் பொருள் அதுவே, உணவையிடமென்பதிலக்கணை எனக்கு உணவாதற்கிடமாயென்க. நீள் - நீழ், என்பதினவெதுகை. (சூஎ)

தீயேயெனலாயபசிப்பிணிதீர்த்தல்செய்வாய்
ஆயேவிரைவுற்றெனையண்மினைவண்மையாள
நீயேயினிவந்தெனிணங்கொள்பிணங்கெயிற்றின்
வாயேபுகுவாய்வழிமற்றிலைவானிலென்றாள்.

இ-ள். தீயேயெனலாய - உதராக்கினியென்பதான, பசிப்பிணி - எனதுபசிநோயை, தீர்த்தல் - நீக்குதல், செய்வாயாயே - செய்யுமவனாகியே, விரைவுற்று - அதிகவிரைவுகொண்டு, எனை அண்மினை - என்னைக்கிட்டினை, வண்மையாள - ஓகொடையாளியே, நீயே இனி - இனிநீதானே, வந்து - என் எனது, நிணங்கொள் - மாமிசம்புகுந்துகொண்டிருக்கிற, பிணங்கு - வளைவுள்ள, எயிற்றின் - பற்களையுடைய, வாயே - வாய்க்குள்ளேபுகுவாய் நுழைவாயாக, மற்றுவழியிலை - வேறேவழியில்லை, வானில் - ஆகாயத்திலே, என்றாள் - என்றுசொன்னாள்—எ-று. அதற்கு அனுமார் சொல்லுகிறது வருங்கவி. (சூஅ)

பெண்பாலொருநீபசிப்பீழையொறுக்கநொந்தாய்
உண்பாயெனதாக்கையையானுதவற்குநேர்வல்
விண்பாலவர்நாயகனேவலிழைத்துமீண்டால்
நண்பாலெனச்சொல்லியநல்லறிவாளனக்கான்.

இ-ள். பெண்பால் ஒருநீ - ஒருபெண்ணுருவாகியநீ, பசிப்பீழை - பசியென்கிறதுன்பம், ஒறுக்க - உன்னைவருத்த அதனாலே, நொந்தாய் - வருந்தினாய் சரியே, எனதாக்கையை - என்சரீரத்தை, உண்பாய் - உண்ணக்கடவை, யான் - நான், உதவற்கு - (உனக்குக்) கொடுத்தற்கே, நேர்வல் - சம்மதிப்பேன், விண்பாலவர் - ஆகாயவாசிகளுக்கெல்லாம், நாயகன் - சுவாமியான ஸ்ரீராமன், ஏவல் - அனுப்பினகாரியத்தை, இழைத்து - செய்துமுடித்து, மீண்டால் - திரும்பினேனேயானால், நண்பால் - உனக்குவிகிதமாகவே உதவற்கு நேர்வேன், எனச்சொல்லிய - என்றுசொன்ன, நல்லறிவாளன் - நன்ஞானமுள்ள சிறியதிருவடி, நக்கான் - சிரித்தார்—எ-று. அதற்குச்சுரசைசொல்லுகிறது வருங்கவியில். (சூகூ)

காய்ந்தேழுலகங்களுங்காணநின்யாக்கைதன்னை
ஆய்ந்தேபசிதீர்வெனின்னாணையென்றன்னள்சொன்னாள்
ஓர்ந்தானுமிகழ்ந்தொருவேனினதாழில்பேழ்வாய்
சேர்ந்தேகுகின்றேன்வலையாமெனிற்றின்னியென்றான்.

இ-ள். காய்ந்து - உன்னைக்கொன்று, ஏழுலகங்களும் - இந்தச்சப்தலோகங்களும், காண - பார்க்க, நின்யாக்கைதன்னை - உன்சரீரத்தைத் தின்று, ஆய்ந்தே - ருசிபார்த்தே, பசிதீர்வன் - எனது பசிதணிவேன் இதற்கு, நின் ஆணையென்று-

உன் - உத்தரவுதான்வேணுமென்று, அன்னள் - அந்தச்சுரசையென்பவள், சொன்னுள் - விகடமாகச்சொன்னுள் அதற்கு, ஓர்ந்தானும் - அவள்கருத்துணர்ந்த இவர், இகழ்ந்து ஒருவேன் - உன்னை அவமதித்துச்சொல்லேன் இதோ, நினது - உன்னுடைய, ஊழில் - கிரமமில்லாத கோரமான என்றபடி, பேழ்வாய் - அகன்றவாய்க்குள்ளே, சேர்ந்து - புகுந்து, ஏகுகின்றேன் - போகிறேன், வலையாமெனில் - நீவல்லவளானுல், தின்னியென்ருன் - தின் என்றுசொன்னுர் அனுமார்—எ-று. ஆம் சாரியை. (எ0)

அக்காலையரக்கியுமண்டமனந்தமாகப்
புக்கானிறையாதபுழைப்பெருவாய்திறந்து
விக்காதுவிழுங்கநின்ருளதுநோக்கிவீரன்
திக்காரவள்வாய்சிறிதாம்வகைசேணினீண்டான்.

இ-ள். அக்காலை - அப்போது, அரக்கியும் - அந்தராக்ஷஸியானவள், அண்டம் - இந்த அண்டம், அனந்தம் ஆக - அநேகங்கள் ஒருசேர, புக்கால் - புகுந்தாலும், நிறையாத - நிரம்பலாகாத, புழை - குகைபோன்ற, பெருவாய் - பெரியவாயை திறந்து ஆஎன்று, விக்காது - விக்காமல் தடையில்லாமல், விழுங்க - விழுங்குவதாக, நின்ருள் - அது அதை, நோக்கி - பார்த்து, வீரன் - அனுமாரானவர் எழு, திக்குதாம்செல்லுந்திசைமுழுதும், ஆர் - நிரம்புதலாய்நிற்கிற, அவள் - அந்தச்சுரசையினுடைய, வாய் - வாயானது, சிறிதாம்வகை - தம்முருவுக்குச்சிறிதாகும்படி, சேணில்- அகலத்துடனே, நீண்டான் - நீண்டுவளர்ந்தார்—எ-று. பயனிலை. (எக)

நீண்டானுடனேசுருங்காநிமிர்வாள்வயிற்றின்
ஊண்டானெனவுற்றொருயிர்ப்புயிராதமுன்னர்
மீண்டானதுகண்டனர்விண்ணுறைவோர்களெம்மை
ஆண்டான்வலனென்றலர்தூஉய்நெடிதாசிசொன்னுர்.

இ-ள். நீண்டான் - அப்படிநீண்டுவளர்ந்தவர், உடனே - அப்போதே, சுருங்கா - உடலைச்சுருக்காமல், நிமிர்வாள் - உயர்ந்துநிற்கிறவள், வயிற்றின் - வயிற்றுக்கு, ஊண்தானென - உணவே என்னும்படி, உற்று - புகுந்து, ஒருயிர்ப்பு - ஒருசுவாசம், உயிராதமுன்னர் - விடாத அளவுக்குமுன்னே விடுமுன்னேயென்றபடி, மீண்டான் - (அவள்மார்பைப்பிளந்துகொண்டு) வெளியேவந்தார், அதுகண்டனர் - அதைப்பார்த்தார்கள், விண் உறையோர்கள் - ஆகாயவாசிகள்—எழு, எம்மை - எங்களை, ஆண்டான் - அடிமைகொண்டவரான அனுமார், வலன் என்று - சமர்த்தரென்று, அலர் - புட்பங்களை, தூய் - தூவி, நெடிது - அதிகமான, ஆசி - ஆசீர்வாதங்களை, சொன்னுர் - சொல்லித்துதித்தார்கள், பய—எ-று. சுருங்கா-என்பதனுனே- அவள்வயிற்றுள்ளிருந்து - பருத்தபோது இவருக்கு இடம்போதாமல் அவள்நெஞ்சவும் வயிறுகிழிந்து வெளியேவந்தாரெனக் கொள்க. (எஉ)

மின்மேற்படர்நோன்மையனுயுடல்வீங்கிநீங்கத்
தன்மேனியளாயவடாயினுமன்புதாழ
என்மேன்முடியாதனவென் றினிதேத்திநின்ருள்
பொன்மேனியனுநெடிதாசிபுனைந்துபோனுன்.

இ-ள். மேல்படர்மின் - மேகத்தின்மேலே படருகிறமின்போலும், நோன்மையனுய் - சக்தியுள்ளவனுய், உடல்வீங்கி - உடம்பானது அவள் வேயிற்றுள்ள

பருத்து, நீங்க - (அவள்மார்பே மேகமாக தாம்மின்போல்) வெளிப்படுமளவில், தன் மேனியளாய் - (அப்போது) தன்வடிவுகொண்டவளாகி, அவள் - அந்தச்சுரசை, தாயினும் - தாயைப்பார்க்கிலும், அன்புதாழ - அன்புதங்கிநின்று, மேல் - இனி (உமக்கு), முடியாதன - முடியாதகாரியங்கள், என் - என்று, யாவுள என்று - ஒன்றுமில்லையென்று, இனிது - சந்தோஷமாக, எத்தி - துதித்துக்கொண்டு, நின்றுள்- நிற்பதானுள், பொன்மேனியனும் - அழகானவடிவுள்ள அனுமாரும் எழு, நெடிது- மிகவும், ஆசி - அவள் ஆசீர்வதித்ததை, புனைந்து - கொண்டு, போனுன் - சென்றார், பய—எ-று. (எ௩)

கீதங்களிசைத்தனர்கின்னரர்கீதநின்ற
பேதங்களியம்பினர்பேதையராடல்பின்னர்ப்
பூதங்கடொடர்ந்துபுகழ்ந்தனபூசுரேசர்
வேதங்களியம்பினர்தென்றல்விருந்துசெய்த.

இ-ள். கீதங்கள் - பாட்டுகளை, கின்னரர் இசைத்தனர் - கின்னரர்கள்பாடினுர்கள், கீதம்நின்ற - அப்பாட்டுகளுக்குள்ள, பேதங்கள் - இங்கித வேறுபாடுகளை, பேதையர் - தெய்வரம்பைகள், ஆடல் - ஆடுதலுடனே, இயம்பினர் - குறிப்பித்தார்கள், பின்னர் - பின்னும், பூதங்கள் - சகலபிராணிகளும், தொடர்ந்து - பாடுகிறவரோடுகூடி, புகழ்ந்தன - கொண்டாடலாயின, பூசுரேசர் - பிராமணுேத்தமர்கள், வேதங்கள் - வேதங்களை, இயம்பினர் - சொன்னுர்கள், தென்றல் - தென்றற்காற்று, விருந்துசெய்த - புதுமையைவிளைத்தன, புதுமைசெய்தலாவது, இப்படிப்பட்டகாற்றை நாம் எக்காலத்திலும் கண்டதில்லை யென்னும்படி அனுமாருக்கு வீசுதலாயின எ-று. (எ௪)

மந்தாரமுந்துமகரந்தமணந்தவாடை
செந்தாமரைவாண்முகத்திற்செறிவேர்சிதைப்பத்
தந்தாமுலகத்திடைவிஞ்சையர்பாணிதள்ளும்
கந்தாரவீணைக்களிசெஞ்செவிக்காதுநங்க.

இ-ள். மந்தாரம் - மந்தாரப்பூமணத்தை, உந்து - வீசுவதான, மகரந்தம் - பராகங்கள், மணந்த - கூடின, வாடை - வடகாற்ருனது, செந்தாமரை - சிவந்த தாமரைமலர்போலும், வாள் - ஒளிபொருந்தின, முகத்தில் - திருமுகத்திலே, செறி- பொருந்தின, வேர் - வேர்வையை, சிதைப்ப - போக்கவும், தந்தாம் - தங்கள் தங்கள், உலகத்திடை - உலகங்களிலிருந்து, விஞ்சையர் - வித்தியாதரர்கள், பாணி தள்ளும் - கைவிரல்களாலே தள்ளிக்கொண்டுவருவதான, வீணைக்கந்தாரம் - வீணையினிசைப்பாட்டாகிய, களி - தேன் குழம்பை, செஞ் செவி - செவ்வையான - அழகுள்ள, காது - அனுமார்காதுகள், நங்க - பருகவும் செல்லுமளவில்—எ-று. (எரு)

வேறு.

வெங்கார்நிறப்புணரிவேறேயுமொன்றைப்
பொங்கார்கலிப்புனலரப்பொலிவதேபோல்
இங்கார்கடத்திரேனையென்றுவெழுந்தாள்
அங்காரதாரைபெரிதாலாலமன்னுள்.

இ-ள். பொங்கு - அலைகள்கிளருகின்ற, ஆர்கலிப்புனல் - சமுத்திரஜலமானது, வேறேயும் - தனக்கு வேருகவும், வெம் - வெவ்விதான, கார் நிறம் - கறுத்தநிற

மூள்ள, புணரி ஒன்றை - ஒருகடலை, தர - பெற்றுவிட, பொலிவதேபோல் - அக்கடலுக்குமேலே ஒருகடல்தோன்றுகிறதுபோல், இங்கு - இக்கடல்மேலே, ஆர் - யாவர், எனைக்கடத்திரென்று - என்னைக்கடந்துசெல்லுகிரீர்களென்று, எழுந்தாள்-எழுந்து நின்றாள் பய, அங்காரதாரை - இந்தப்பெயரையுடையவளான, பெரிது - மிகவும், ஆலாலம் - விடத்தை, அன்னாள் - ஒத்தவள் எ-ழு—எ-று. கடத்திர் என என்னுபாடமானால் என என்னகாரணத்தினாலே கடத்திரென்று கடந்துசெல்லுகிரீர்களென்றெழுந்தாளென்க. (எசு)

காதக்கடுங்குறிகணக்கிறுதிகண்ணாள்
பாதச்சிலம்பினொலிவேலையொலிபம்ப
வேதக்கொழுஞ்சுடரைநாடிநெறிமேனாள்
ஓதத்தின்மேவுமதுகைடவரையொத்தாள்.

இ-ள். காதம் - காதவழி, கடுமை வேகம் - தூரத்தை, குறிதெரிகின்ற - தெரிந்தறிகிற, கணக்கு - அளவே, இறுதி - முடிவாகப்பெற்ற, கண்ணாள் - கண்களையுடைய, அங்காரதாரை - எழு, பாதம் - காலிலணிந்த, சிலம்பினொலி - சிலம்போசையும், வேலையொலி - கடலோசையும் சிலம்போசைபோற் கடலோசை, பம்ப - ஒலிக்க, வேதம் - வேதத்தால் விளங்குகின்ற, கொழுஞ்சுடரை - பரஞ்சோதியான திருமாலைக்காண, நெறிநாடி - வழிதேடி, மேனாள் - முன்னாளிலே, ஓதத்தில் - கடல்மேலே, மேவும் - செல்லுகின்ற, மதுகைடவரை - மதுவையுங்கைடவனையும், ஒத்தாள்-நிகரானாள், பய—எ-று. மதுவையும் ஒப்பாள் கைடவனையும் ஒப்பான் என்க. காதவழிதூரத்துள்ள எப்பொருளாயினும் அப்பொருளினிழலையிழுக்கும் அளவுமுடிவுள்ள கண்ணுளென்பதனாலே சாயாக்கிராஹி - நிழலையிழுக்கிறவள் என்றும் அவளுக்கொருபெயரென்க. (எஎ)

துண்டப்பிறைத்துணையெனச்சுடரெயிற்றாள்
கண்டத்திடைக்கறையுடைக்கடவுள்கைம்மா
முண்டத்துரித்தவுரியாண்முளரிவந்தான்
அண்டத்தினுக்குறையமைத்தபிலவாயாள்.

இ-ள். துணைப்பிறைத்துண்டம்என - இரண்டுசந்திரதுண்டம்போல், சுடர்-விளங்குகின்ற, எயிற்றாள் - பற்களையுடையவள் வக்கிரதந்தங்களுள்ளவள், கண்டத்திடை - கழுத்திலே, கறையுடை - விஷத்தையுடைய, கடவுள் - பரமசிவன்போல், கைமா - துதிக்கையையுடையயானையினது, முண்டத்து - தலையிலிருந்து, உரித்த-உரித்துப்போர்த்தின, உரியாள் - தோலையுடையவள், முளரிவந்தான் - திருவுந்திமலரில்வந்தவன்தந்த, அண்டத்தினுக்கு - பிரமாண்டத்துக்கு, உரை - உறையாகிய பையை, அமைத்த - அமைத்துவைத்தாற்போலும் அகலமும், பிலம் - குகைபோலுளைமுமுள்ள, வாயாள் - வாயையுடையவள்—எ-று. (எஅ)

நின்றாணிமிர்ந்தலைநெடுங்கடலினீர்தன்
வன்றாளலம்பமுடிவான்முகடுவவ்வ
அன்றாய்திறத்தவனறத்தையறுளோடும்
தின்றாளொருத்தியிவளென்பதுதெரிந்தான்.

இ-ள். நிமிர்ந்துநின்றாள் - அந்த மைநாகமலைபோலவே முன்னே உயர்ந்து நின்றாள், அலைநெடுங்கடலினீர் - சலிக்கின்ற நெடுமையுள்ள கடலில் நீரானது, தன்வன்தாள் - தனதுவலியகால்களிலே, அலம்ப - மோத நின்றாள், முடி - அவள்தலை,

யானது, வான்முகடு - ஆகாயமுகட்டை, வவ்வ - அளாவநிமிர்ந்துநின்றாள், அன்று - அப்போது, ஆய்திறத்தவன் - ஆராய்ந்தறியும் சக்தியுள்ளசிறியதிருவடியானவர், அறத்தை - தருமத்தை, அருளோடும் - இரக்கத்துடனே கூட்டிஇரண்டையும், தின்றாள் - கெடுத்தவள் உண்டவளான, ஒருத்திஇவள் - இவளும் ஒருபெண்மகளே, என்பது - என்பதை, தெரிந்தான் - அறிந்தார், பய—எ-று. (எகூ)

பேழ்வாயகத்தலதுபேருலகமூடும்
நீழ்வானகத்தினிடையேகுநெறிநேரா
வாழ்வானணுக்கனவளாழ்பிலவயிற்றைப்
போழ்வானினைத்தினையவாய்மொழிபுகன்றான்.

இ-ள். பேழ்வாய் அகத்து - (அவளுடைய) அகன்றவாய்க்குள்ளேசென்றால், அலது - அல்லாமல், பேருலகை - பெரியவுலகத்தை, மூடும் - மூடுவதான நீள்வானகத்தின்இடை, நீண்ட - ஆகாயமார்க்கத்திலே, ஏகுநெறி - போகும்வழி, நேராகாணாமல், ஆழ்வான் - அழுந்தினவராய் கீழேதாழ்ந்தவராகி, அணுக்கன் - வருத்தம் உற்றவருமாய், அவள் - அந்தராக்ஷஸியினுடைய, ஆழ் - ஆழமான, பிலம் - குகை போன்ற, வயிற்றை - உதரத்தை, போழ்வான் - பிளத்தற்கு, நினைத்து - எண்ணி, இனையவாய்மொழி - இந்தவார்த்தைகளை, புகன்றான் - சொன்னார், அணுக்கன் என்பதனாலே கடல்மேலேசெல்லுகிறவரைத்தன்கண்களாலேநோக்கி, அவர் நிழலோடவரை யிழுத்தாள் அதனால் அவள்சமீபத்தில் அணுகினவரெனவுமாம்—எ-று. (அ0)

சாயாவரந்தழுவினாய்தழியபின்னும்
ஓயாதுவந்தவிசைகண்டுணரகில்லாய்
வாயாலளந்துநெடுவான்வழியடைத்தாய்
நீயாரையென்னையிவணின்றநிலையென்றான்.

இ-ள். சாயா (ஏடிசாயாக்கிராஹிநீபெற்ற) வரம் - அழியாதவரத்தினாலே, தழுவினாய் - என்னை உன் அணுகனாகச்செய்தாய் உன் அருகுவரச்செய்தாய், தழியபின்னும் - அருகுவரச்செய்தபின்னாவது, ஓயாது - நான்ஓய்வில்லாமல், வந்த - வரலான, விசைகண்டு - வேகத்தைக்கண்டு ஏதோசெல்வதவசரகாரியமென்று, உணரகில்லாய் - நீயேதெரிந்துகொள்கலை, வாயால் - உன்வாயினாலே, அளந்து - நெடுவான், நீண்ட - ஆகாயத்தை அளவுசெய்து, வழிஅடைத்தாய் - செல்லவழியில்லாது செய்தாய் ஆதலால், நீயாரை - நீஆர், இவண் - இங்கே, நின்றநிலை - நிற்கிறகாரியம், என்ன என்றான் - யாதுவேண்டியென்றார்—எ-று. வானை அளத்தலாவது ஆகாயமெவ்வளவோ அவ்வளவும் வாயைத்திறந்துகொண்டு நிற்றல். (அக)

பெண்பாலெனக்கருதுபெற்றியொழியுற்றால்
விண்பாலவர்க்குமுயிர்வீடுறுதன்மெய்யே
கண்பாலடுத்தவுயிர்காலன்வருமேனும்
உண்பானருத்தியிதொழிப்பரியதென்றாள்.

இ-ள். பெண்பாலென - என்னைப்பெண்மகளென்று, கருதுபெற்றி - நினைக்குநினைவை, ஒழி - விட்டுவிடு, உற்றால் - என் அருகேவந்தால், விண்பாலவர்க்கும் - விண்ணுலகத்தாருக்கும், உயிர்வீடுறுதல் - உயிர்விடும்படியாகுதல் - சாதல், மெய்யே - சத்தியமே, கண்பால் - என்கண்முன்னே, அடுத்தஉயிர் - கிட்டின ஜீவர்களில், காலன் - யமனேனும், வரும்எனும் - வருவானேயானாலும், உண்பான் - நான்

சாப்பிடுதற்கே, அருத்தி - மிகவும் பிரியம், இது - இப்படிநான்சாப்பிடுகிறது, ஒழிப்பு அரியது - யாராலும் தடுக்கப்படாதது, என்றாள் - என்றுசொன்னாள்—எ-று. இவள் இராவணனுக்குக் கடலரணிலே ஓர்காவலாயிருக்கிறவள் இவளிருக்கிற இடத்துக்குச் சுற்றும் ஒருகாதவழி தூரத்துக்குள் ஒருவரும் வரக்கூடாது என்றுணர்க. ()

திறந்தாளெயிற்றையவளண்ணலிடைசென்றான்
அறந்தானரற்றியதயர்த்தமரரெய்த்தார்
இறந்தானெனக்கொடோரிமைப்பதனின்முன்னம்
பிறந்தானெனப்பெரியகோளரிபெயர்ந்தான்.

இ-ள். அவள் - இப்படிச் சொன்னவள், எயிற்றை - பற்களுள்ளவாயைத், திறந்தாள் - திறந்துகொண்டுநின்றாள், அண்ணல் - அனுமார், இடை - அந்தவாயினிடத்தே, சென்றான் - புகுந்தார் அப்போது, இறந்தானெனக்கொடு - இறந்துபோவாரென்றுநினைத்து, அறந்தான் - தருமதேவதைதானே, அரற்றியது - பிரலாபிக்கலாயது, அயர்த்து - அயர்ந்து சோர்ந்து, அமரர் - தேவர்கள், எய்த்தார் - இளைத்தார், ஓரிமைப்பதனின் முன்னம் - ஒரு இமைப்பொழுதிற்கு முன்னே, பிறந்தானென - அவள்வயிற்றிலிருந்து அப்போதுதான் பிறந்தாரென்னும்படி, பெரிய-பெரிதான, கோளரி - நரசிங்கம்போல் பெயர்ந்தான் வெளியாயினார்—எ-று. (௮௩)

கள்வாயரக்கிகதறக்குடர்கணத்தில்
கொள்வார்தடக்கையின்விசும்பைமிசைகொண்டான்
முள்வாழ்பொருப்பின்முழையெய்திமிகநொய்தின்
உள்வாளரக்கொடெழுதிண்கலுழனொத்தான்.

இ-ள். கள் - கள்ஒழுகுகின்ற, வாய் - வாயையுடைய, அரக்கி - அந்த ராக்ஷஸியானவள், கதற - கத்த, கணத்தில் - ஒருக்ஷணஅளவிலே, குடர்கொள் - அவள் குடலைப்பிடுங்கிக்கொண்ட, வார் - நீண்ட, தடம் - பருமனான, கையின் - கையுடனே, விசும்பைமிசை - ஆகாயத்தின்மேலே இது உருபுமயக்கம், கொண்டான் - செல்வதானார், முள்வாழ் - முட்கள்மிகவுமுள்ள முட்செடிகள் முளைத்திருக்கிற, பொருப்பின்முழை - மலைக்குகைக்குள்ளே, எய்தி - போய்என்றால் அவளுடைய பற்களுள்ள வாய்வழியேபுகுந்து, மிகநொய்தின் - மிக்கவிரைவிலே, உள்வாழ் - அக்குகைக்குள்ளேவாழ்கின்ற, அரக்கொடு - பாம்பைக்கொண்டு அவள்குடலைப்பிடுங்கிக்கொண்டு, எழு - மேலெழுந்துசெல்லுகிற, திண்கலுழன் - திடமுள்ளகருடனை, ஒத்தான் - ஒப்பதானார்—எ-று. கள்வாய் - கள்ளை ஒழுகவிடுகிற வாய்என உருபும் முடிக்குஞ்சொல்லுந் தொக்கதொகை, இவ்வாறுள்ள பிரதிபதங்களையெல்லாம் அமைத்துக்கொள்க. (௮௪)

சாகாவரத்தலைவரிற்றிலகமன்னான்
ஏகாவரக்கிகுடர்கொண்டுடனெழுந்தான்
மாகாலசைப்பவடமண்ணினுறவாலோ
டாகாயமுற்றகதலிக்குவமையானான்.

இ-ள். சாகா - சாவாத, வரம் - வரம்பெற்ற, தலைவரில் - சிரஞ்சீவிகளிலே, திலகம் - அவர்களுக்கு நெற்றித்திலதத்தை, அன்னான் - ஒத்தஅனுமார், எழு-ஏகா அவள்வாய்க்குள்ளேபோய், அரக்கிகுடர் - அந்தராக்ஷஸிகுடலை, கொண்டு உடன்-பிடுங்கிக்கொண்டு அப்போதே, எழுந்தான் - மேலெழுந்துசெல்லலானார் செல்லும்

போது, மாகால் - பிரசண்டவாயு, அசைப்ப - வீச, வடம் - கயிறு, மண்ணிலுற- மண்ணிலிருந்துமேலுநீள, வாலோடு - வாலுடனே, ஆகாயம் - ஆகாயத்திலே,உற்ற- பறக்கிற, கதலிக்கு - பட்டத்துக்கு காற்றாடிக்கு, உவமையானுன் - ஒப்பானுர், பய- எ-று. அவள்வயிற்றிலிருந்து குடலைக்கொண்டெழுவதே கயிற்றுடனே பட்டம்பற க்கிறதாகவும் அவர்வாலே பட்டத்துக்குள்ள வாலாகவுங்கொள்க. (அரு)

ஆர்த்தனர்கள்வானவர்கடானவரழுங்கா
வேர்த்தனர்விரிஞ்சனும்வியந்துமலர்வெள்ளம்
தூர்த்தனனகன்கைலையிற்ருலைவிலோனும்
பார்த்தனன்முனித்தலைவராசிகள்பகர்ந்தார்.

இ-ள். வானவர்கள் - தேவர்கள் அப்போது, ஆர்த்தனர்கள் - கர்ச்சித்தார் கள், தானவர் - அசுரரெல்லாம், அழுங்கா - வருந்தி பயந்து, வேர்த்தனர் - உடம்பு புழுங்கினுர்கள், விரிஞ்சனும் - பிரமாவும், வியந்து - அதிசயித்து, மலர் வெள்ளம்- புஷ்பமாரியை, தூர்த்தனன் - கொட்டினுன், அகன் - அகன்ற, கயிலையில் - வெள் ளிமலையிலிருக்கிற, தொலைவு இல்லோனும் - அழிவு இல்லாத பரமசிவனும், பார்த் தனன் - வியந்துபார்த்தான், முனித்தலைவர் - ருஷிசிரேஷ்டர்கள், ஆசிகள் - ஆசீர் வாதங்களை, பகர்ந்தார் - சொன்னுர்கள்—எ-று. (அசு)

மாண்டாளரக்கியவள்வாய்வயிறுகாறும்
கீண்டானிமைப்பினிடைமேருகிரிகீழா
நீண்டான்வயக்கதிநினைப்பினெடிதென்னுப்
பூண்டானருக்கனுயர்வானின்வழிபோனுன்.

இ-ள். அரக்கி - அந்தராக்ஷஸி, மாண்டாள் - இறந்தாள், அவள் - அவளு டைய, வாய் - வாயிலிருந்து, வயிறுகாறும் - வயிறுவரையிலும், கீண்டான் - கிழித்த அனுமார், இமைப்பினிடை - ஒரு இமையளவில், மேருகிரி - மேருமலையும், கீழா- கீழாக, நீண்டான் - உயர்ந்தார் அவரது, வயக்கதி - வெற்றிகொண்டவேகம், நினைப் பில் - மனுேவேகத்திலும், நெடிதென்ன - பெரிதென்று, பூண்டான் அருக்கன்- சூரியன் எண்ணினுன், உயர் - உயர்ந்த, வானின் வழி - ஆகாயமார்க்கத்தே, போனு ன் - சென்ருர் அனுமார், பூணல் - அவரது புகழைத் தனக்கு ஆபரணமாகச் சூரிய ன்கொள்ளுதல்—எ-று. (அஎ)

சொற்ருர்கள்சொற்றதொகையல்லதுணையொன்ருே
முற்ருமுடிந்தநெடுவானினிடைமுந்நீர்
இற்ருவியெற்றெனினும்யானினியிலங்கை
உற்ருல்விலங்குமிடையூறெனவுணர்ந்தான்.

இ-ள். சொற்ருர்கள் - (கடலுக்களவு) சொன்னவர்கள், சொற்ற - சொன் ன, தொகை - அளவு, அல்ல - உள்ளதன்று அளவு அதிகமாயிருக்குமென்றபடி, துணை - ஆனுல் அளவு, ஒன்ருே - ஒருவகையோ பல்வகையோ, முற்ரு - ஓரளவில் முடிவுருமல் முடிந்த எவ்வளவாகவோ முடிவுகொண்ட, நெடு - நீண்ட, வானினி டை - ஆகாயமார்க்கத்திலேசெல்லும்போது, முந்நீர் - கடலிலே, இற்று - இத்தன் மையாயிருக்கின்றது, ஆவி - பிராணிசரீரம், எற்று - இன்னம் எத்தன்மையுள்ளது, எனினும் - என்ருலும், யான் - நான், இனி - இலங்கையுற்ருல் இலங்கை போய்ச் சேர்ந்தால், விலங்கும் இடையூறு-துன்பந்தீரும், எனவுணர்ந்தான் - என்றெண்ணி

ஞர், துணை ஒன்றே - என்பதனுல் இடையே, தடைகள் உளவாகலாலே கடல் இன்னம் எவ்வளவோ என்றும், இந்தராக்ஷஸிபோலின்னம் எத்தனைபேருண்டோ என்று நினைக்கலானுர்—ஏ-று. (௮௮)

ஊறுகடிதூறுவனவூறிலறமுன்னுத்
தேறிலியரக்கர்புரிதீமையவைதீர
வேறுவகையாண்டையவிராமனெனவெல்லாம்
மாறுமதின்மாறுபிறிதில்லெனவலித்தான்.

இ-ள். ஊறுகடிது - கடுமையான துன்பங்கள், ஊறுவன - இடையே உண்டாகுகின்றன ஆதலால், ஊறு இல் - கெடுதலில்லாத, அறம் - தருமத்தை, உன்னுகினையாததேறிலி - தெளிவில்லாமையால், அரக்கர் - ராக்ஷஸர்கள், புரி - செய்கிற, தீமை - தீயவைகளான, அவை - அவையெல்லாம், தீர - போக, வேறுவகை-வேறே ஒருவகை உபாயம், யாண்டுள - எங்குண்டாகும்வேறேஉபாயமில்லை, இராமன்என-ஸ்ரீராமனேயென்றுநினைத்தால், எல்லாம் - எவ்வகையிடையூறும், மாறும் - தீர்ந்துபோம், அதின் - அந்தராமபஜனையையல்லது, மாறுபிறிது - வேறே ஒரு துன்பத்துக்குவிரோதி, இல்லென - இல்லையென்று, மதித்தான் - ராமநாமஸ்மரணம்பண்ணிஞர்—எ-று. துன்பத்துக்குவிரோதி ராமபஜனையே என்பதாம். (௮௯)

வேறு.

தசும்புடைக்கனகநாஞ்சிற்கடிமதிறரித்துநோக்கான்
அசும்புடைப்பிரசத்தெய்வக்கற்பகநாட்டடையண்மி
விசும்பிடைச்செல்லும்வீரன்விலங்கிவேறிலங்கைமூதூர்ப்
பசுஞ்சுடர்ச்சோலைத்தாங்கோர்பவளமால்வரையிற்பாய்ந்தான்.

இ-ள். கனகத்தசும்பு - சுவர்ணக்குடங்களும், கனக நாஞ்சில் - சுவர்ண மயமான பிறவுறுப்புகளும், உடை - உடையதாய், கடி - காவலாயிருக்கிற, மதில் - இலங்கைமதில்மேலேபோய், தரித்து-தங்கி, நோக்கான்-பாராதவனுய், அசும்புஉடை-ஊறுதலையுடைய, பிரசம் - தேன்பொருந்தின, தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள, கற்பகம் - கற்பகவிருட்சத்தையுடையதான, நாட்டை - தேவருலகத்தை, அண்மி-அடுத்து, விசும்பிடை - ஆகாயமார்க்கத்திலே, செல்லும் - போவதான, வீரன் - சாமர்த்தியமுடைய அனுமார்எழு, இலங்கைமூதூர் - இலங்காபுரியை, விலங்கி-விட்டு, வேறு - வேறே, பசுஞ் சுடர் - பசிய காந்தியையுடைய, சோலைத்து - சோலைகளைக்கொண்டுள்ள, ஆங்கு - அவ்விடத்தில், ஓர் - ஒரு, பவளமால்வரையில் - பவளமால்வரைமேலே, பாய்ந்தான் - போய்க்குதித்தார்—எ-று. பயனிலை. (௯௦)

மேக்குறச்செல்வோன்பாயவிலங்கிநீரிலங்கைவெற்பு
நூக்குறுத்தங்குமிங்குந்தள்ளுறநுடங்குநோன்மை
போக்கினுக்கிடையூராகபபுயலொடுபொதிந்தவாடை
தாக்குறத்தளர்ந்துசிந்துங்கலமெனத்தக்கதன்றே.

இ-ள். மேக்குற - மேலாக, செல்வோன்விலங்கி - போகிற அனுமார்விலகி, பாய - தாவிக்குதிக்க அதனுலே, நீர் - கடனீர்சூழ்ந்த, இலங்கை - இலங்கையைச்சேர்ந்த, வெற்பு - அந்தப்பவளமால்வரையானது, எழு நூக்குறுத்து - அசைவுண்டாகி, அங்கும் இங்கும் - அவ்விடத்தும் இவ்விடத்தும் அப்படியும் இப்படியுமாக, தள்ளுற - தள்ளாடிதளர்தலாகி, நுடங்கும் - அசைந்துஆடுகிற, நோன்மை - பொறு

மை - அவரைத்தாங்குதல் எப்படியிருக்கிறதென்னில், போக்கினுக்கு - பாய்மரத்துடனே நீர்மேற்) செல்லுதலுக்கு, இடையூருக - விக்கினமாக, புயலொடு - மழையுடனே, பொதிந்த - கலந்த, வாடை - வடகாற்ருனது, தாக்குற - விசைகொண்டு மோத அதனுலே, தளர்ந்து (பொருத்துகளெல்லாம்) கலேதலாய், சிந்தும் - (குலுங்கித் தன்னிடத்துள்ள பொருள்களேயுஞ்) சிதறுவதான, கலம் - கப்பல், எனத்தக்கது - என்றுசொல்லத்தக்கதாயிற்று பயனிலே, அவரைத்தாங்குதலுடனே நுடங்குகிற, வெற்பெனக்கூட்டுக—எ-று. அம்மலேயிலுள்ள பொருள்களும் சிந்துதலாயின என்க. (கூக)

மண்ணடியுற்றுமீதுவானுறவரம்பின்றன்மை
எண்ணடியுற்றகுன்றத்தலத்துநின்றெய்தநோக்கி
விண்ணிடையுலகமென்னுமெல்லியன்மேனிநோக்கக்
கண்ணடிவைத்தன்னவிலங்கையைத்தெரியக்கண்டான்.

இ-ள். மண் - கீழே மண்ணுள்ள அளவும், அடியுற்று - வேரூன்றி, மீது - மேலே, வான் - ஆகாயத்தினது, வரம்பின்றன்மை - அளவின்படியை, உற - தெரிவதாக, எண் - எண்ணுகின்ற எண்ணிநீண்டிருக்கிற, குன்றத்தலத்து - அந்தமலேயினிடத்திலே, அடியுற்ற - இலங்கைக்கு முன்னடியிலுள்ள, குன்றத்தலத்து - மலேயினிடத்திலே, நின்று - இருந்து, எய்த - ஊர்க்குள்ளேபோக, நோக்கி - உத்தேசித்து, விண்ணிடை - ஆகாயத்துள்ள, உலகமென்னும் - உலகமென்கிற, மெல்லியல் - மிருதுஸ்வபாவமுள்ளபெண், மேனி - தன்வடிவழகை, நோக்க - பார்க்க, கண்ணடி - நிலேக்கண்ணுடி, வைத்தன்ன - வைத்தாற்போலிருக்கிற, இலங்கையை - இலங்காபுரியை, தெரிய - அதன்வகையெல்லாந்தோன்ற, கண்டான் - பார்த்தார் அனுமார், எ-று. எண் - வினைத்தொகை அடியுற்ற பெயரெச்சம் ஆக இவ்விரண்டும் அடுக்கி குன்றமென்னும் ஒருபெயர் முடிபுகொண்டன தேவருலகமான ஒருபெண் தனது பிரதிபிம்பத்தைக் காண்பதான கண்ணுடிபோல்விளங்குகிற திலங்கையென்க. (கூஉ)

நன்னகரதனைநோக்கிநளினக்கைமறித்துநாகர்
பொன்னகரிதனையொக்குமென்பதுபுல்லிதம்மா
அந்நகரிதனினன்றேயண்டத்தைமுழுதுமாள்வான்
இந்நகரிருந்துவாழ்வானிதுவதற்கேதுவென்றான்.

இ-ள். நல் நகரதனை - நல்லஊரான அதை, நோக்கி - பார்த்து, நளினம் - தாமரை மலர்போன்ற, கை - கையாலே, மறித்து - தடுத்து, நாகர் - தேவருடைய, பொன்னகர் - பொன்மயமானஊர், இதனை - இவ்வூரை, ஒக்குமென்பது - நிகராமென்கிறது, புல்லிது - புல்லறிவாண்மையே ஒவ்வாதென்றுகைமறித்து, அந்நகர் - அந்தத்தேவரூர், இதனில் - இவ்வூரிலும், நன்றே - அழகுள்ளதா அன்று, அண்டத்தை - பிரமாண்டத்தை, முழுதும் - முழுதும்தானே, ஆள்வான் - ஆளவல்ல ராவணன், இந்நகர்இருந்து - இவ்வூரிலேநிலேகொண்டு, வாழ்வான் - வாழ்வானுயினுன், இது - இவ்வூரிலே அவனிருக்கிறதே, அதற்கு - அவ்வூர் நிகராகாதென்பதற்கு, ஏது - காரணம், என்ருன் - என்றுநினைத்தார்—எ-று. இவ்வூரிலும் அவ்வூர் நல்லதானுல் அவ்வூர்க்கேபோய் அரசாள்வான் என்பதுகருத்து அம்மா அசை அம்மா அதிசயக்குறிப்பு ஆவதோரிடைச்சொல். (கூங)

மாண்டதோர்நலத்திற்றுமென்றுணர்த்துதல்வாய்மைத்தன்றால்
வேண்டியவேண்டினெய்திவெறுப்பின்றிவிழைந்ததுய்க்கும்

ஈண்டரும்போகவின்பமீறிலதியாண்டுக்கண்டாம்
ஆண்டதுதுறக்கமஃதேயருமறைத்துணிவுமம்மா.

இ-ள். மாண்டது (சுவர்க்கலோகம்) மிகப்பெரிதான, ஓர் - ஒப்பில்லாத, நலத்திற்று - நன்மைகளையுடையது, ஆமென்று - ஆகுமென்று, உணர்த்துதல்-சொல்லுகிறது, வாய்மைத்து - நிஜமானது, அன்றுவேண்டிய - வேண்டத்தக்கவைகளை, வேண்டின் - வேண்டினால், எய்தி - அடைந்து, வெறுப்புஇன்றி - போதும் என்பதில்லாமல், விழைந்த - விரும்பியவைகளையெல்லாம், துய்க்கும் - அனுபவிப்பதான, ஈண்ட அரும் - கிடைக்கஅரிதான, போகஇன்பம் - போகசுகம், ஈறுஇலது - அழிவில்லதாக, யாண்டு - எவ்விடத்தே, கண்டாம் - நாம்கண்டோம் எனவே இவ்வூரிலேதான் கண்டோமென்றாயிற்று, ஆண்டு - அப்படிப்பட்ட போகஇன்பமுள்ள அவ்வூராகிய, அது - அவ்விடமே, துறக்கம் - சுவர்க்கலோகம், அரு - பொருளறிதற்கருமையான, மறைத்துணிவும் - வேதநிச்சயமும், அஃதே - ஈறிலதானபோக இன்பமுள்ளஇடமே சுவர்க்கமென்பதாம், ஆகையாலிவ்வூரே-சுவர்க்கமென்றுநினைத்தார்-எ-று. ஈண்ட - என்பது தொகுத்தலாம், ஈண்டென்றால் - முதனிலைத்தொழிற்பெயர், ஈண்டுதல் - கிட்டுதல். (கச)

உட்புலனெழுநூறென்பர்யோசனையுலகமூன்றில்
தெட்புறுபொருள்களெல்லாமிதனுழைச்செறிந்தவென்றால்
நுட்புலனுணங்குகேள்விநுழைவிலரெனினுநோக்கும்
கட்புலன்வரம்பிற்றாமேகாட்சியுங்கரையிற்றாமே.

இ-ள். உட்புலன் (இந்தஇலங்கையின்) உள்ளிடத்தளவு, யோசனை எழுநூறு - எழுநூறுயோசனை, என்பர் - என்றுசொல்லுவர்புலவர்கள், உலகமூன்றில்-மூன்றுலகத்திலும், தெட்புறு - முதிர்ச்சியுற்ற உயர்ந்த, பொருள்களெல்லாம் - வஸ்துகளெல்லாம், இதன்உழை - இவ்வூரில், செறிந்த - பொருந்தியிருக்கின்றன, என்றால் - என்று எழுநூறுயோசனை யென்பவர்களே சொல்லலானால், நுட்புலன் - தங்கள் நுண்ணறிவினாலே, நுணங்கு - துவளுவதான, கேள்வி - கேள்வி அறிவேஅன்றி, நுழைவு - இவ்வூருட்புகுந்து பார்த்துச்சொல்லுகிறது, இலர் - இல்லையானவர்களென்னல்வேண்டும், எனினும் - கேள்வி அறிவுடனேபுகுந்துகண்டஅறிவும் உளராலும் நோக்கும், இவ்வூர்முழுவதும் - பார்க்கத்தக்க, கட்புலன் - கண்ணறிவுதான், வரம்பிற்று - ஓரளவுடையது, ஆமே - ஆகுமா ஆகாது, காட்சியும் - காணும்பொருள்களும், கரையிற்று - ஓரளவுடையது, ஆமே - ஆகுமா ஆகாது, என்றால் இவ்வூரளவு காணுதற்குக்கண்கள் அநேகம்வேணும் அக்கண்களாற் காணப்படுகிற பொருள்களுக்கோ ரளவில்லையாயிருக்கிறதினாலே எழுநூறியோசனை யென்றொருவர் சொல்லக்கேட்டுச் சொல்லுகிறதேயல்லது முழுதுங்கண்டு சொல்லுவோரில்லையென்று கருத்தாகலால் காட்சிக்கு அளவின்மையினாலே ஊரளவிற்கும் எழுநூறியோசனை யென்பது சரியானதன்று என்று நினைத்தாரென்க—எ-று. (கரு)

கடல்தாவுபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கரு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

இரண்டாவது,

ஊர்தேடுபடலம்.

வேறு.

பொன்கொண்டிழைத்துமணியைக்கொடுபொதிந்த
மின்கொண்டமைத்தவெயிலைக்கொடுசமைத்த
என்கொண்டியற்றியவெனத்தெரிகிலாத
வன்கொண்டல்விட்டுமதிமுட்டுவனமாடம்.

இ-ள். வன் - வலிதான, கொண்டல் - மேகமண்டலத்தை, விட்டு - கடந்து, மதி - சந்திரமண்டலத்தை, முட்டுவன - தொடுவனவான, மாடம் - (அவ்வூரிலுள்ள) வீடுகள், எழு மின்கொண்டு - மின்னலைக்கொண்டு, அமைத்த - செய்தாற்போல், பொன்கொண்டு - சுவர்ணத்தைக்கொண்டு, இழைத்து - செய்து, வெயிலைக்கொடு- (உதயகாலத்துச்சூரிய) பிம்பத்தைக்கொண்டு, சமைத்த-செய்தாற்போல், மணியைக் கொடு - மாணிக்கங்களைக்கொண்டு, பொதிந்த-(அப்பொன்மேல்) அழுத்தியிருக்கின் றன, (என்பதன்றி) கொண்டு - வீடுகள்அமைவனவாகக்கொண்டு, இயற்றிய-செய்த பொருள்கள், என் - யாவை, என-என் றுநினைக்கும்படி, தெரிகிலாத (மின்னும் வெ யிலுமாகத் தோன்றுவனவேயன்றிப்), பொன்னுமணியுமென்று சொல்லத்தெரி யாதவைகளாயிருக்கின்றன, பய—எ-று. என்றனன். (க)

நாகாலயங்களொடுநாகருலகுந்தம்
பாகார்மருங்குதுயில்வென்னவுயர்பண்ப
ஆகாயமஞ்சவகன்மேருவையனுக்கும்
மாகால்வழங்குசிறுதென்றல்வரநின்ற.

இ-ள். நாகாலயங்களொடு - தேவர்கள்கோயில்களுடனே, நாகருலகும் - தே வருலகமும், தம் - தமது அவ்வீடுகளின், பாகு - ஒருபங்காக, ஆர் - பொருந்தின, மருங்கு - இடத்திலே, துயில்வு - தூங்கத்தக்கவைகள், என்ன - என்றுசொல்லும் படி வீடுகள், உயர் - உயர்ந்த நாகருலகுக்குமேலான, பண்ப-தன்மையையுடையன ஆனல், ஆகாயம் - ஆகாயத்தின் உயர்வளவு, அஞ்ச - அஞ்சுவதாக, அகல் - உயர் ந்துசெல்கிற, மேருவை-மேருமலையையும், அனுக்கும்-வருந்தச்செய்வதான, மாகால், பெருங்காற்று, வழங்கு - இனிதாகவழங்குகிற, சிறுதென்றல்வர-மெதுவானதென் றற்காற்றுப்போல்வதாகவரும்படி, நின்ற - சலிப்பின்றி நிலைகொண் டிருக்கின்றன என்றனன், பய—எ-று. பாகு - ஆர்மருங்கு-சுண்ணச்சாந்தின்குழம்பால் நிரம்பின மருங்கெனவுமாம், மூன்றடிக்கு ஐந்தடிக்கு மெத்தைகளில் கீழுள்ள ஒரடிக்கென்ப தற்கு பாகார்மருங்கென்ருர் அது ஒரடிக்கிற்குள்ள நிலாமுற்றமென்க. (உ)

மாகாரின்மின்கொடிமடக்கினரடக்கி
மீகாரமெங்கணுநதுந்துகள்விளக்கி
ஆகாயகங்கையிணையங்கையினினள்ளிப்
பாகாயசெஞ்சொலவர்வீசுபடகோரம்.

இ-ள். மா - கறுத்த, காரின் - மேகங்களிலுள்ள, மின்கொடி - கொடிபோன்றமின்னல்களை, மடக்கினர் அகிக்கி - ஒடித்தொடித்துச்சேர்த்துத் தொடைப்பமாகக்கொண்டு, மீகாரம் - மேலிடங்களான, எங்கணும் - எவ்விடங்களிலும், நறுந்துகள் - கந்தபொடிகளை, விளக்கி - கூட்டி ஒதுக்கி, ஆகாயகங்கையினை - வான்யாற்றுநீரை, அங் கையினின் - தங்களழகிய கைகளாலே, அள்ளி - முகந்து, பாகு- சர்க்கரைக்குழம்புக்கு, ஆய் - ஒப்பான, செஞ்சொலவர் - செவ்வையான சொற்களையுடைய சிலதிகள், வீசு - தெளிக்கிற, படிகார் - தெளிநீர் என்றனன், மீ ஆகாரம்-காரம் எனத் தலைக்குறையாகவும் தொடையல் என்பதில் வருமொழி நோக்காது அல் என்னும் சாரியை புணர்ந்தாற்போல் - படிகார் என்பதில் அம்முச்சாரியை-புணர்ந்ததென் றுங்கொண்டு-சஉ-ம்பாட்டில் என்றனன் என்கிறதை - சக-பாட்டுக்கும் கூட்டிக்கொள்க, இன்னும் அம் என்னும் பண்புப்பெயரில் இகரச்சாரியையும் துவ்விகுதியுங்கூட்டி படிகார் தெளிநீர் அழகிது எனவுமாம்—எ-று. (ங)

வேறு.

பஞ்சியூட்டியபாட்டிசைக்கிண்கிணிப்பதுமச்
செஞ்செவிச்செழும்பவளத்தின்கொழுஞ்சுடர்சிதறி
மஞ்சினஞ்சனநிறமறைத்தரக்கியர்வடித்த
அஞ்சிலோதியோடுவமையவர்க்குறுமுவமை.

இ-ள். பஞ்சி - செம்பஞ்சுக்குழம்பு, ஊட்டிய - பூசின, பாட்டு இசை - இசைப்பாட்டுக்குத்தக்க, கிண்கிணி - சதங்கைகளணிந்த, பதுமம் - தாமரை மலரினது, செஞ்செவி - செவ்வையான அழகையுடைய, செழும்பவளத்தின் - செம்பவளநிறத்தைக்கொண்ட கால்களின், கொழுஞ்சுடர் - செழிப்புள்ள காந்தியானது, சிதறி - மேலேசிதறுதலாகி, மஞ்சின் - மேகங்களினது, அஞ்சனநிறம் - கரியநிறத்தை, மறைத்து - போக்கி மறைக்கப்பட்டு, அரக்கியர் - அப்படிப்பட்ட கால்களையுடைய ராக்ஷஸிகளினது வடித்த சீவிவிட்ட, அம் - அழகிதான, சில் - சடைப்பிலலைத்தரித்த, ஓதியோடு - செம்மயிருடனே, உவமைய - ஒப்பாயின, பய அவர்க்கு - அந்தராக்ஷஸிகள்மேனிக்கு, உறும் - பொருந்துவனவான, உவமை - ஒப்பமைந்தமேகங்கள், எழு - என்றனன்—எ-று. மேகங்கள் கறுத்திருக்கிறபோது அவர்கள் நிறத்துக்கொப்பாய் அவர்கள்காலின் செம்பஞ்சுக் குழம்பாலே சிவந்து செம்மயிருக் கொப்பாயின என்க. (ச)

நாறநாண்மலர்க்கற்பகநறுவிரைநாறப்
பானம்வாயுறவெறுத்ததாளாறுடைப்பறவை
தேனவாவிரைச்செழுங்கழுநீர்த்துயில்செய்ய
வானயாறுதம்மரமியத்தலந்தொறுமடுத்த.

இ-ள். நாறம் - கஸ்தூரிவாசமுள்ள, நாள் - தினம்மலர்தலையுடைய, மலர் - புட்பங்களைக்கொண்ட, கற்பகம் - கற்பகத்தினது, நறுவிரை - நல்லபரிமளம் நாற - பரிமளிக்கவும், பானம் - குடித்த கற்பகத்தேனும், வாயுற - வாயிலே ஒழுகுவதாக, வெறுத்த - (அந்தத்தேனிலே) வெறுப்புண்டாகிய, தாள் ஆறுடை - ஆறுகால்களையுடைய, பறவை - பக்ஷியானவண்டு, தேன் - நீர்ப்பூவிற்றேனிலுள்ள, அவா - ஆசையாலே, விரை - வாசனையுள்ள, செழுங்கழுநீர் - செங்கழுநீர்ப்பூவிலேபோய், துயில் செய்ய - (தேனைப்பருகி அம்மயக்கத்தினாலே) நித்திரைசெய்துகொண்டிருக்க, வானயாறு - அம்மலரைப்பூத்திருக்கிற ஆகாயகங்கையானது, தம் - தங்களுடைய, அரமி

யத்தலந்தொறும் - நிலாமுற்றங்களெல்லாம், மடுத்த—எ-று. பாய்ந்துகொண்டிருக்கின்றன என்றனன். (௫)

குழலும்வீணையும்யாழுமென்றினையனகுழைய
மழலைமென்மொழிகிளிக்கிருந்தளிக்கின்றமகளிர்
சுழலுநன்னெடுந்தடமணிச்சுவர்தொறுந்துவன்றும்
நிழலுந்தம்மையுமெய்ம்மைகண்டறிவருநிலைய.

இ-ள். குழலும் - பொல்லாங்குழலும், வீணையும் - மகர வீணையும், யாழும்-தம்புரும், என்று - என்றுசொல்லப்படுகிற, இனையன-இவைகள், குழைய-தோற்க, மழலை - இளமையான, மென்மொழி - மிருதுவானசொற்களை, கிளிக்கு - கிளிப்பிள்ளைக்கு, இருந்து - (அதனருகி)லிருந்து, அளிக்கின்ற - கற்றுக்கொடுக்கிற, மகளிர்-பெண்களுடைய, சுழலும் - சூழ்ந்துள்ளதான, நல் - நல்ல, நெடும் தடம் - நீண்ட விசாலமுள்ள, மணி - பளிங்கினாற்செய்த, சுவர்தொறும் - சுவர்களெல்லாம், துவன்றும் - பதிந்துதோன்றுகிற, நிழலும் - பிரதிபிம்பத்தையும், தம்மையும் - அப்பெண்களையும், மெய்ம்மை - நிஜம், கண்டு - தெரிந்து பார்த்து, அறிவு - அறிதற்கு, அரு-அரிதான, நிலைய - நிலையையுடையன, பளிங்குமாடங்கள் எழு - நிலைய, பய என்றனன்—எ-று. (௬)

இனையமாடங்களிந்திரற்கமைவரவெடுத்த
மனையின்மாட்சியவென்னினச்சொல்லுமாசுண்ணும்
அனையதாமெனினரக்கர்தந்திருவுக்குமளவை
நினையலாமன்றியுவமையுமன்னதாநிற்கும்.

இ-ள். இனைய - இப்படிப்பட்ட, மாடங்கள் - வீடுகள், இந்திரற்கு - தேவராஜனுக்கு, அமைவர - பொருந்துவதாக, எடுத்த - உயர்த்துக்கட்டின, மனையின்-வீடுபோல், மாட்சிய - பெருமையையுடையன, என்னில் - என்று சொல்லலானால், அச்சொல்லும் - அப்படிச்சொல்லுகிறசொல்லும், மாசுண்ணும் - குற்றப்படும், அனையது-அப்படிச்சொல்லுகிறது, ஆமெனில் - சரிதானென்றால், அரக்கர்தம்-ராக்ஷஸர்களுடைய திருவுக்கும் செல்வத்துக்கும், அளவை - ஓரளவை, நினையலாம் - எண்ணலாகும், அன்றி - திருவுக்கு அளவுநினையலாவதேயல்லாமல், உவமையும் - ஒப்புச்சொன்னதும், அன்னதாய் - அத்தன்மையாகவே, நிற்கும் - நிலைபெறுவதாம் என்றால், அரக்கர்தந்திருவுக்கு அளவின்மையாலே, அவர்கள்வீட்டிற்கும் ஒப்பில்லையென்றாயிற்று, தோஷமில்லாதசொற்களைத் தோஷமுள்ளபொருள்மேலாரோபிக்கலாகாதென்பார் சொல்லுமாசுண்ணுமென்றார்—எ-று. (எ)

மணிகளெத்துணைபெரியவுமாதிருமார்பின்
அணியுங்காசினுக்ககன்றனவுளவெனலரிதால்
திணியுநன்னகர்த்திருமனைதெய்வமாத்தச்சன்
துணிவின்வந்தனன்றெட்டமுகிழைத்தவத்தொழில்கள்.

இ-ள். மணிகள் எத்துணைபெரியவும்-எவ்வளவுபெரியரத்நங்களும், மால்-திருமாலுடைய திருமார்பில் திருமார்பிலே, அணியும் - தரிப்பதான, காசினுக்கு - பதுமராகரத்நத்துக்கு, அகன்றன - அதிகமானவைகளாக, உள - சில உள்ளன, எனல் - என்றுசொல்லுதல், அரிது - இல்லை, திணியும்நன்னகர்-இந்த நல்லவூரிலே நெருங்குவனவான், திருமனை - சிறந்தவீடுகளுக்கு, தெய்வமாத்தச்சன் - தெய்வத்தன்

மையான பெருமையையுடையதச்சனானவன், துணிவின் (விசேஷமாய்ச் செய்யவேணுமென்கிற) துணிவுகொண்டு, வந்தனன் - வந்தானாய், தொட்டு - (தன்கையாலே) தொட்டு, அழகு இழைத்த - அழகுபண்ணின, அத்தொழில்கள் - அந்தவிசித்திரவேலைகளாலே, மால் - திருமார்பின்மணிக்கும் அகன்றன உளவெனலாயிருக்கின்றன என்பது போதர அரிதென்றார் இதனாலே தொழிலினருமைவிளங்குகிறது என்றனன்—எ-று. (அ)

வாழுமன்னுயிர்யாவையுமொருவழிவாழ
ஊழிநாயகன்றிருவயிறொத்துளதிவ்வூர்
ஆழியண்டத்தினருக்கன்றனலங்குதேர்ப்புரவி
ஏழுமல்லனவீண்டுளகுதிரையுமெல்லாம்.

இ-ள். மன்னுயிர்யாவையும் - (உலகத்திலே) நிலைபெறுதலையுடையசகலபிராணிகளும், ஒருவழி வாழும் - இந்த ஓரிடத்திலேதானே அடங்கி வாழ்வையடையும், வாழ-இப்படிவாழ்தற்கிடமாதலாலே, இவ்வூர் - இந்த ஊரானது, ஊழிநாயகன் - அழியாமுதல்வனாகிய திருமால், திருவயிறு - திருவயிற்றை, ஒத்துளது - ஒத்திருக்கின்றது, ஆழி - சக்கராகிருதியான, அண்டத்தின் - ஆகாயத்திலே, அருக்கன்றன் - சூரியனுடைய, அலங்கு - அசைதலைக்கொண்ட, தேர்ப்புரவி - தேர்க்குதிரைகள், ஏழும் அல்லன - ஏழும்அல்லவாயிருக்கின்றன, ஈண்டுள - இங்கேயிருக்கிற, குதிரையுமெல்லாம் - எல்லாக்குதிரைகளும், என்றால் - சூரியன்குதிரைகளோ என்றுநினைத்து ஆகாயத்திலே சூரியன் செல்லுதலாலே அவைகளல்ல என்றனன் எல்லாஞ்சூரியன் குதிரைகள்போல்வன என்பதுகருத்து—எ-று. (௯)

மரமடங்கலுங்கற்பகமனையெலாங்கனகம்
அரமடந்தையர்சிலதியரரக்கியர்க்கமரர்
உரமடங்கிவந்துழையராயுழல்பவரொருவர்
தரமடங்குவதன்றிதுதவஞ்செய்ததவமால்.

இ-ள். மரமடங்கலும் - மரங்களெல்லாம், கற்பகம் - அவர்களெண்ணினபடி தருதலாலே கற்பகவிருக்ஷங்களேயாம், மனையெலாம் - வீடுகளெல்லாம், கனகம் - சுவர்ணமேயாம், அரக்கியர்க்கு - ராக்ஷஸிகளுக்கு, அரமடந்தையர் - தேவரம்பைகளெல்லாம், சிலதியர் - ஊழியகாரிகள், உரம் - தங்கள் சக்திகளெல்லாம், அடங்கிவந்து - அடங்குதலாய்வந்து, உழையராய் உழல்பவர் - ஊழியகாரராய் வருந்துகிறவர்கள், அமரர் - தேவர்கள்ஆகையால், ஒருவர்தரம் - ஒருவர்வசமாகஇவ்வளவும், அடங்குவது - கூடியிருப்பது, அன்று - அல்ல, இது - இப்படிப்பட்ட ஐசுவரியம் உளதானது, தவஞ்செய்த - தவமானது பண்ணின, தவம் - தவப்பலனாலேயாம்என்றனன்—எ-று.

போரியைந்தனதோற்றவென்றிகழ்தலிற்புறம்போய்
நேரியன்றவன்றிசைதொறுநின்றமாநிற்க
ஆரியந்தனியைங்கரக்களிறுமோராழிச்
சூரியன்றனித்தேருமேயிந்நகர்தொகாத.

இ-ள். போர் - சண்டைக்கு, இயன்றன - முன்னே உடம்பாடாயினவைகளாய், தோற்றஎன்று - பின்புதோற்றனஎன்று, இகழ்தலில் - இராவணன்இகழ்ந்துவிட்டதனாலே, புறம்போய் - தூரத்தேபோய், நேர் இயன்ற - தங்களுக்குச்சரியாயமைந்த, வன் - பலமுள்ள, திசைதொறும் - எட்டுத்திக்கிலும், நின்றமா - நின்றயானைகள், நிற்க - அப்படியேநிற்பனவாக, ஆரியம் - அழகும், தனி - ஒப்பின்மையுமுள்

ள, ஐங்கரக்களிறும் - கணபதியாகிய ஐந்துகைகளுள்ளயானையும், ஓராழி - ஒற்றை உருளையையுடைய, தனி - ஒப்பில்லாத, சூரியன்தேருமே - சூரியன் இரதமொன்றுமே, இந்நகர் - இவ்வூரில், தொகாத-சேராதவைகள் என்றனன், என்றால்-மற்ற எல்லாருடையயானைகளும் தேர்களும் அரக்கராலேகொள்ளப்பட்டிருக்கின்றன—எ-று.

தேவரென்பவர்யாருமித்திருநகர்க்கிறைவற்
கேவல்செய்கிலாரேவரேயெண்வகையுருவின்
மூவர்தம்மினுமதிகனென்றாலவன்முயலும்
தாவின்மாதவமல்லதுபிறிதொன்றுதருமோ.

இ-ள். தேவரென்பவர்யாரும் - தேவரென்றுசொல்லப்படுகிறவர்கள் எல்லாரும், இத்திருநகர்க்கு - இந்தச்சிறப்புள்ளவூருக்கு, இறைவற்கு - தலைவனான ராவணனுக்கு, ஏவல் - ஏவல்செய்கிறவர்களே, செய்கிலார் - ஊழியஞ் செய்யாதவர்கள், ஏவர் - யாவர், எண்வகைஉருவின் - எட்டுவகையானவடிவுள்ள, மூவர்தம்மினும் - மும்மூர்த்திகளிலும், அதிகன் - இராவணன்சிறந்தவன், என்றால் - என்றுசொல்லலானால், அவன் - அந்தராவணன், முயலும் - செய்வதான, தா - கெடுதல், இல் - இல்லாத, மா - பெரிய, தவம் - தவத்தை, அல்லது - அல்லாமல், பிறிதொன்று - வேறொன்று, தருமோ - ஏவல்கொள்ளத்தக்கசக்தியைத் தரவல்லதாமோ, இதனால் இராவணன்செய்ததவமே தவமென்றதாயிற்று - என்றனன்—எ-று. மூவரும்தேவரையேவல்கொள்வாராயினும் இவன்போன வியாரென்பது தோன்ற அதிகனென்றது.

தழங்குபேரியினார்கலிதகைநெடுங்களிறு
முழங்குமோதையுமூரிநீர்முழக்கொடுமுழங்கும்
கொழுங்குழற்புதுக்குதலையர் நூபுரக்குரலின்
வழங்குமப்பெருந்துழனிகள்வயின்றொறுமறையும்.

இ-ள். தழங்கு - (எப்போதும்) ஒலிக்கின்ற, பேரியின் - டம்மானையில்,ஆர்- நிரம்புதலான, கலி - சத்தமானது, மூரிநீர்முழக்கொடு - முழங்கும் அதுவேயன்றி, தகை - பெருமையும், நெடு - உயர்வுமுள்ள, களிறு - யானைகள், முழங்கும்-முழங்குகின்ற, ஓதையும் - சத்தமும், மூரிநீர் - கடலினது, முழக்கொடு - சத்தத்துடனே முரணி, முழங்கும் - ஒலிக்கும், கொழும் - செழுமையான, குழல் - பொல்லாங்குழலிசைபோல், புது - புதுமையைச்செய்கிற, குதலையர் - மழலைச்சொற்களை யுடையவர்களுடைய, நூபுரக்குரலின் - சிலம்போசையினாலே, வழங்கும் - கீழேசொல்லுவனவான, அ - அந்தயானைகளின், பெருந்துழனிகள் - பெரிய ஓசைகள், வயின்றொறும் - இடங்களெல்லாம், மறையும் - அடங்கிப்போம்—எ-று. என்றனன். (௧௩)

மரகதத்தினுமற்றுளமணியினும்வனைந்த
குரகதத்தடந்தேரினமவைபயில்கொட்டில்
இரவிவெள்கநின்றிமைக்கின்றவியற்கையவென்றால்
கரகமொக்குமானன்னெடுத்துறக்கமிந்நகர்க்கு.

இ-ள். மரகதத்தினும் - மரகதரத்நங்களாலும், மற்றுள - இன்னுமுண்டான, மணியினும் - ரத்நங்களாலும், வனைந்த - செய்திருக்கிற, குரகதம் - குதிரைகள் கட்டுவனவான, தடம் - பெரிய, தேரினம் - தேர்க்கூட்டங்களாகிய, அவை - அவைகளெல்லாம், பயில் - பொருந்துகின்ற, கொட்டில் - சாலைகள் காடிகானு, இரவி- சூரியன், வெள்க - நாண, நின்று - நிலைகொண்டு, இமைக்கின்ற - விளங்குகிற, இய

ற்கைய - ஸ்வபாவத்தையுடையன, என்ருல் - என் றுசொல்லலானுல், இந்நகர்க்கு- இந்தஊருக்கு, நல் - நல்லசுகம், நெடு - நீளுவதான, துறக்கம் - சுவர்க்கலோகமா னது, நரகம் - நரகலோகத்தை, ஒக்கும் - நேராகும் என்ருல், இவ்வூரே சுவர்க்கம் போல்வதாம்—எ-று. (௧௪)

திருகுறுஞ்சினத்தரக்கருங்கருநிறந்தீர்ந்தார்
அருகுபோகின்றதிங்களுமறுவற்றதழகைப்
பருகுமிந்நகர்த்துன்னொளிபாய்தலிற்பசும்பொன்
உருகுகின்றதுபோன்றுளதுலகுசூழுவரி.

இ-ள். இந்நகர்த்துன்னொளிபாய்தலில் திருகுறும் - கோணிதலான, சினத்து - கோபத்தையுடைய, அரக்கரும் - ராக்ஷஸர்களும், கருநிறம் - தங்கள்கரியநிறம், தீர்ந்தார் - நீங்குதலாயிருக்கிருர்கள், அருகு - சமீபத்திலே, போகின்ற - செல்லுகி ற, திங்களும் - சந்திரனும், மறுஅற்றது - களங்கநீங்கியிருக்கின்றது, அழகை - இவ் வூரழகை, பருகும் - அனுபவிக்கிறதுமாகிருன் சந்திரன், இந்நகர் - இந்தஊரில், துன் - பொருந்தின, ஒளிபாய்தலில் - ஒளிபடிதலாலே, பசும்பொன் - கிளிச்சிறைப் பொன், உருகுகின்றது - உருகுகிறதை, போன்றுளது - ஒத்திருக்கின்றது, உலகு சூழ் - இவ்வூரைச்சூழ்ந்த, உவரி - உவர்க்கடல், என்றனன்—எ-று. (௧௫)

அண்டமுற்றவும்வீங்கிருளகற்றுநின்றலரி
கண்டவாற்றினிக்கடிநகர்நெடுமனைக்கதிர்கள்
உண்டவாற்றினென்றுரைப்பரிதொப்பிடிற்றன்முன்
விண்டவாய்ச்சிறுமின்மினியென்னவும்விளங்கா.

இ-ள். அண்டமுற்றவும் - ஆகாயமுழுதும் எங்கும், வீங்கு - நிரம்புதலாகிற, இருள் - இருளை, அகற்றும் - ஒதுங்கச்செய்வான், நின்று - எங்குந்தோன்றி, அலரி- சூரியன் இருளகற்றும், கண்டஆற்றின் - அப்படிச்சூரியன் செய்கிறமுறையை, இக் கடிநகர் - இக்காவல்பெற்ற ஊரிலுள்ள, நெடுமனை - நீண்டஉயர்ந்தவீடுகளின், கதிர் கள் - ஒளிகள், உண்ட ஆற்றின் - இருளை உண்டுபோகச்செய்கிற முறையில், ஒன் று - ஒருபடியாகவும், உரைப்பு - சொல்லுதற்கு, அரிது - கூடாது, ஒப்புஇடில் - சரி சொல்வதானுல், தன்முன் - சூரியனுகிய தனக்குமுன்னே, விண்ட - ஒளியைவிடுவ தான, வாய் - வாயையுடைய, சிறுமின்மினி - சிறியமின்மினி, என்னவும் - என்று சொல்லவும், விளங்கா - இவ்வூரினொளிக்குச் சூரியனொளிவிளங்குதலில்லை, இவ்வூர் சூரியன் சூரியன்மின்மினி, என ஒப்பிட்டாலும் சரிபோதா என்றனன்—எ-று. ()

தேனுஞ்சாந்தமுமான்மதஞ்செறிநறுஞ்சேறும்
வானநாண்மலர்க்கற்பகமலர்களும்வயமாத்
தானவாரியுநீரொடுமடுத்தலிற்றழீஇய
மீனுந்தானுமோர்வெறிமணங்கமழுமாம்வேலை.

இ-ள். தேனும் - அத்தரும், சாந்தமும் - சந்தனமும், மான்மதம் - கத்தூரி யினதுசெறி களிப்புள்ள, நறுஞ்சேறும் - நல்லகுழம்பும், வானம் - ஆகாயத்துள்ள, நாண்மலர் - நாட்பூக்களையுடைய கற்பகமலர்களும், வயமா - ஜயமுள்ளயானைகளின், தானவாரியும் - மதவெள்ளமும், நீரொடு - ஜலதாரைநீரோடுகூடி, மடுத்தலில்-பாய் தலாலே, தழீஇய - தன்னிலேபிறந்துள்ள, மீனும் - மீன்களும், தானும் - அம்மீன் களைப்பெற்றதானும், வேலைஆம் - கடலினீர், ஓர் - ஒப்பில்லாத, வெறிமணம் - பரி மளகந்தம், கமழும் - நாறுவதாம், என்றனன்—எ-று. (௧௭)

தெய்வத்தச்சனைபுகழ்துமோசெங்கண்வாளரக்கன்
மெய்யொத்தாற்றியதவத்தையேவியத்துமோவிரிஞ்சன்
ஐயப்பாடிலாவரத்தையேமதித்துமோவறியாத்
தொய்யற்சிந்தையாம்யாவரையாதென்றுதுதிப்பாம்.

இ-ள். தெய்வத்தச்சனை - தெய்வப்புலமையுள்ள மயனை, புகழ்துமோ - புகழ்ந்துசொல்லலாமா, செங்கண் - சிவந்தகண்களையுடைய, வாளரக்கன் - வாள்வல்லவனை ராவணன், மெய் ஒத்து - உண்மைசரியாய், ஆற்றிய - செய்த, தவத்தையே - தவச்சிறப்பையே, வியத்துமோ - வியந்துசொல்லுவோமோ, விரிஞ்சன் - பிரமன் கொடுத்த, ஐயப்பாடு - சந்தேகப்படுதல், இலா - இல்லாத, வரத்தையே - வரபலத்தையே, மதித்துமோ - கொண்டாடுவோமா, அறியா - விவேகமில்லாத, தொய்யல் - நைதலை உடைய, சிந்தை - மனசைக்கொண்ட, யாம் - நாம், யாவரை - தச்சன் இராவணன் பிரமன் ஆகியமூவரில் எவரை, யாதென்று - எந்த உவமையைக்கொண்டு, துதிப்பாம் - துத்தியஞ்செய்வாம், என்றனன் —எ-று. (கஅ)

வேறு.

வானுந்நிலனும்பெறுமாறினிமற்றுமுண்டோ
கானும்பொழிலும்மிவைசெங்கனகத்தினாலும்
ஏனம்மணியாலுமியற்றியவேனும்யாவும்
தேனும்மலருங்கனியுந்தரச்செய்தசெய்கை.

இ-ள். வானும் - சுவர்க்கலோகமும், நிலனும் - பூலோகமும் ராவணன்போல், பெறும் ஆறு - ஒருவன்பெறும்படியாகிறது, இனி - இனி ஒருகாலத்திலே, மற்றும் உண்டோ - வேறோர் வகை உளதாகுமோ இல்லை ஆனாலும், கானும் - காடுகளும், பொழிலும் - சோலைகளும் ஆகிய, இவை - இவைகளை, செங்கனகத்தினாலும் - செம்பொன்னாலும், ஏனை - பொன்னல்லாத, மணியாலும் - ரத்நங்களாலும், இயற்றிய - இவ்வூரில் அமைக்கப்பட்டிருக்கின்றன, ஏனும் - (இனியொருகாலத்திலிப்படி) அமைக்கப்படுமே ஆனாலும், யாவும் - கானிலும் பொழிலிலுமுள்ள மரங்களெல்லாம், தேனும் - தேனையும், மலரும் - புட்பங்களையும், கனியும் - பலங்களையும், தர - தருவனவாக, செய்தசெய்கை - அமைத்திருக்கிறவிசித்திரம், உண்டோ - உளதாகுமோ உளதாகா, இனி இந்தராவணன்போல் தவத்தாற்சிறந்த ஒருவன் உண்டாகி அவனுக்காக மரங்களெல்லாம் பொன்னாலும் ரத்நங்களாலும் அமைந்தாலும் அம்மரங்கள் தேன் மலர் கனிகளைத்தருவனவாகா இவனுக்குத் தருவனவாயிருக்கின்றன என்றபடி ஆகலால் மற்றும் உண்டோ என்றனன் —எ-று. (கக)

வேறு.

நீரும்வையமுநெருப்புமேனிமிர்நெடுங்காலும்
வாரிவானமும்வழங்கலவாகுந்தம்வளர்ச்சி
ஊரினிந்நெடுங்கோபுரத்துயர்ச்சிகண்டுணர்ந்தால்
மேருவெங்ஙனம்விளர்க்குமோமுழுமுற்றும்வெள்கி.

இ-ள். நீரும் - அப்பும், வையமும் - பிருதிவும், நெருப்பும் - தேயுவும், மேல் - மேலே, நிமிர் - உலாவுகிற, நெடுங்காலும் - நெடிதானவாயுவும், வாரி - இந்தநான்கு பூதங்களும் வருதற்கிடமான, வானமும் - ஆகாயமும், தம்வளர்ச்சி - தந்தம் உயர்வுகள், வழங்கல ஆகும் - பிரசித்தப்படுவன அல்லவா யிருக்கின்றன ஆகலால் இப்பூத

ங்கள் கோபுரத்துக்கொப்பாகா, ஊரில்-இவ்வூரிலுள்ள, இந்நெடுங்கோபுரத்துயர்ச்சி- இந்த நீண்டகோபுரத்தின் உயர்வை, கண்டு - பார்த்து அத்தன் உயர்வையும், உணர்ந்தால் - தன் உயர்வையும் யோசித்தால், மேரு - மேருமலையானது, எங்ஙனம் - எப்படி, விளர்க்குமோ - வெளுத்துப்போமோ தெரியவில்லை, முழுமுற்றும் வெள்கி- நாணித் தன் உடம்பெல்லாம் எங்ஙனம் விளர்க்குமோஎன்றனன்—எ-று. ஒருவருக்கு நாணமுண்டானால் உடம்பெல்லாம்விளக்குமென்பதுகொள்க. (உ0)

முன்னம்யாவருமிராவணன்முனியுமென்றெண்ணிப்
பொன்னின்மானகர்மீச்செலான்கதிரெனப்புகல்வார்
கன்னியாரையினொளியினிற்கண்வழுக்குறுதல்
உன்னிநாடொறும்விலங்கினன்போதலையுணரா.

இ-ள். கன்னி - அழியாத, ஆரையின் - இவ்வூர்மதிலின், ஒளியினில் - ஒளியினாலே, கண்வழுக்குறுதல் - கண்கூசுதலை, உன்னி - நினைத்து, நாள்தொறும்- தினந்தோறும், விலங்கினன் - விலகினவனாகி, போதலை-போகுதலை, உணரா-தெரியாமல், முன்னம் - முற்காலந்தொடங்கி, யாவரும் - எல்லாரும், இராவணன்-தசக்கிரீவன், முனியுமென்று - கோபிப்பானென்று, எண்ணி - நினைத்து, பொன்னின்- பொன்னாலாகிய, மா - பெரிதான, நகர்மீ - இவ்வூரின்மேலே, கதிர் - சூரியன், செலானென - போகானென்று, புகல்வார் - சொல்லுவார்கள், என்றனன்-உணர்ந்தவர் மதிலினொளிக்குக் கண்கூசி விலகிப்போகிறான் சூரியன் என்பாரென்பதினாலே மதிலினொளியை விசேடித்ததாயிற்று—எ-று. (உக)

தீயசெய்குநர்தேவராலனையவர்சேரும்
வாயிலல்லதோர்வரம்பமைக்குவனெனமதியாக்
காயமென்னுமக்கணக்கறுபதத்தையுங்கடக்க
ஏயுநன்மதிலிட்டனன்கைலையையெடுத்தான்.

இ-ள். தீய - தீமையானவைகளை, செய்குநர் - தனக்குச் செய்கிறவர்கள், தேவர் ஆல் - தேவர்களாகையாலே, அனையவர் - அந்தத்தேவர்கள், சேரும்-வருவதான, வாயில் - கோட்டைவாயிலை, அல்லது - அல்லாமல் வேறுவழியில்லாமல், ஓர் வரம்பு - ஒரு அளவை, அமைக்குவனென - செய்கிறேனென்று, மதியா - ஆலோசித்து, காயமென்னும் - ஆகாயமென்கிற, அ - அந்த, கணக்கு அறு - அளவற்ற, பதத்தையும் - இடத்தையும், கடக்க - கடந்துமேலாக, ஏயும்-பொருந்துவதான, நன்மதில் - நல்ல மதிலை, இட்டனன் செய்துகொண்டிருக்கிறான், கைலையை-வெள்ளிமலையை, எடுத்தான் - அசைத்துப்பிடுங்கின ராவணன்—எ-று. என்றனன் தேவர்கள் ஆகாயவாசிகளானாலும் அவர்களுலகத்துக்குமேலே கணக்கற்றதூரம்உயர்ந்திருக்கின்றதுமதில் எனக்கொள்க அத்தேவர்களும் கோட்டைவாயில் வழிதான் வரவேணும் என்பது கருத்து. (உஉ)

கறங்குகால்புகாகதிரவனொளிபுகாமறலி
மறம்புகாதினிவானவர்புகாரென்கைவம்பே
திறம்புகாலத்துள்யாவையுஞ்சிதையினுஞ்சிதையா
அறம்புகாதிந்தவணிமதிட்கிடக்கைநின்றகத்தின்.

இ-ள். கறங்குகால் - சுழல்காற்றும், புகா - நுழையாது, கதிரவன்-சூரியனுடைய, ஒளி - வெயிலும், புகா - செல்லாது, மறலி - யமனுடைய, மறம்-வீரச்செய்

கையும், புகாது - அவ்வூரிற்செல்லாது என்ருல், இனி - இன்னமும், வானவர்-தேவர்களும், புகாரென்கை - செல்லாரென்னுதல், வம்பே - வியர்த்தமே, திறம்புகாலத்துள் - அழியுங்காலத்தில், யாவையும் - எல்லாம், சிதையினும் - அழிந்தாலும், சிதையா - அழியாத, அறம் - தருமமும், புகாது - செல்லாது, இந்த அணி - அழகிதான, மதிட்கிடக்கைநின்று - மதிலிருப்பினின்றும், அகத்தில் - உள்ளே, அறம்புகாதிருத்தலால் - இனி இவ்வூரழிந்துபோம் என்றனன்—எ-று. (உங)

கொண்டவான்றிரைக்குரைகடலிடையதாய்க்குடுமி
எண்டவாவிசும்பெட்டநின்றிமைக்கின்றவெழிலால்
பண்டைநாகணைப்பள்ளியானுந்தியிற்பயந்த
அண்டமேயுமொத்திருந்ததிவ்வகனகரமைதி.

இ-ள். கொண்டவான் திரை - பெரிதான அலைகளைக்கொண்ட, குரைகடல்-சத்தியாநிற்கிற கடலின், இடையதாய் - நடுவேஉள்ளதாகி, குடுமி-இவ்வூர்ச்சிகரம், எண்டவா - அளவுள் அடங்காத, விசும்பு - ஆகாயத்தை, எட்டநின்று - தொடுவதாகநின்று, இமைக்கின்ற - பிரகாசிக்கின்ற, இயல்பால் - இலக்கணத்தினுலே, பண்டை - முன்னே, நாகணை - சர்ப்ப சயனத்திலே, பள்ளியான் - நித்திரைசெய்கிறவன்தனது, உந்தியில் - திருஉந்தியினுலே, பயந்த - பெறுவதான, அண்டமேயும்-பிரமாண்டமேயென்ருலும், ஒத்திருந்தது - சரியாகவேயிருக்கின்றது, இ-இந்த, அகல்-அகன்ற, நகரமைதி - ஊரினமைவு என்றனன்—எ-று. பிரமாண்டமுங் கடலினடுவேதோன்றி உயர்ந்திருக்கின்றது இவ்வூருங்கடலினடுவே தோன்றுதலாய் உயர்ந்திருக்கிறது ஆகலால் ஒத்திருந்தது என்பதாயிற்று. (உச)

பாடுவார்பலரென்னின்மற்றவரினும்பலரால்
ஆடுவார்கண்மற்றவரினும்பலருளரமைதி
கூடுவாரிடையின்னியங்கொட்டுவார்முட்டில்
வீடுகொண்குறுந்தேவரால்விழுநடங்காண்பார்.

இ-ள். பாடுவார் - பாடகர்களோ, பலர் - அநேகர், என்னில்-என்ருல், மற்றவரினும் - பாடுகிற அவர்களிலும், பலர் - அநேகர், ஆடுவார்கள் - ஆடுகிறவர்கள், மற்றவரினும் - ஆடுகிற அவர்களிலும், அமைதி - சமயமுளதாகி, கூடுவாரிடை-கூடினவர்கள்நடுவே, இன் இயம் - இனியவாத்தியங்கள், கொட்டுவார் - சேவிக்கிறவர்கள், பலருளர்-அநேகராயிருக்கிருர்கள், முட்டில்-குறைவில்லாத, வீடுகொண்குறும்-வீடுதலைப்பெற்றிருக்கிற, தேவர் ஆல் - தேவர்களேவியந்தவர்களாய், விழு - சிறந்த, நடம் - நடனத்தை, காண்பார் - பார்க்கிறவர்கள் என்றனன் என்ருல், பாடல் ஆடல் இயங்கொட்டல் ஆகிய இவற்றில் வல்லவர்கள் அரக்கர்களே இவைகளெல்லாம் வியந்துபார்க்கிறவர்கள் தேவர்களே என்பது கருத்து, அமைதிகூடலாவது - கல்யாணம் உற்சவங்கள் முதலானவை நடக்கிற இடங்களில் ஒருசேரக் கூடுதல் ராஜகாரியங்களைவிட்டுத் தாங்கள் சந்தோஷிக்க நேரிடுகிறகாலத்தை அமைதி என்ருர். ராக்ஷதர்களுக்கு ஊழியஞ்செய்கிறதைவிடுதல் வேண்டினதேவர்கள் முட்டில் வீடு ஆவது ஊழியஞ்செய்தலில் எவ்வளவுங்குறைதலில்லாமற் செய்துவிடுதல் என்க, எனவே அவ்வரக்கர்களுடைய பாடலாடல் கொட்டல்கள் தேவர்கள் அதிசயிக்கத்தக்கன என்பது கருத்து—எ-று. (உரு)

வானமாதரோடிகலுவர்விஞ்சையர்மகளிர்
ஆனமாதரோடாடுவரியக்கியரவரைச்

சோணைவார்குழலரக்கியர்தொடர்குவர்தொடர்ந்தால்
ஏனைநாடியராருநடக்கிரியையாய்ந்திருப்பார்.

இ-ள். வானமாதரோடு - தெய்வப்பெண்களுடனே, இகலுவர் - விரோதித்தாடுவோர்கள், விஞ்சையர்மகளிர் - வித்தியாதரப்பெண்கள், ஆனமாதரோடு-அப்படியாடலான பெண்களுடனே, ஆடுவர் - இகலி ஆடுவோர்கள், இயக்கியர் - யக்ஷகன்னிகள், அவரை - அந்தயக்ஷகன்னிகளுடைய, சோனை - மேகம்போன்ற, வார்-நீண்ட, குழல்தொடர்குவர் - கூந்தலைப்பற்றி ஆடத்தொடருவார்கள், அரக்கியர் - ராக்ஷதப்பெண்கள், தொடர்ந்தால் - இந்தராக்ஷதப்பெண்களே வல்லவராய்த்தொடர்வதானால், ஏனைநாடியர் - எந்தநாட்டுப்பெண்கள், அரு - அருமையான, நடக்கிரியை-நடன உல்லாசமான செய்கைகளை, ஆய்ந்திருப்பார் - பார்த்துமதித்து மகிழுமவர்கள், என்றால் - ஊழியஞ்செய்தற்குரிய தெய்வப்பெண்களே பார்த்து மகிழுமவர்களென்றாயிற்று, ஏனை என்பது வினாப்பொருளைக் கருதியதாகக்கொள்க என்றனன்—எ-று.()

இழையுமாலையுமாடையுஞ்சாந்தமுமேந்தி
உழையரென்னநின்றுதவுவநிதியங்களொருவர்
விழையும்போகமேயிங்கிதுவாய்கொண்டுவிளம்பிற்
குழையுநெஞ்சினானினையினுமாசென்றுகொள்ளும்.

இ-ள். இழையும் - ஆபரணங்களும், மாலையும் - பூமாலைகளும், ஆடையும்-வத்திரங்களும், சாந்தமும் - சந்தனமும், ஏந்தி - தம் கைகளிலேகொண்டு, உழையரென்ன நின்று - அருகிலுள்ளபரிசாரகர்போலநின்று, நிதியங்கள்உதவுவ - நவநிதிகளுமே கொடுக்கலாயின ஆனால், ஒருவர் - யாரேனுமொருவர், விழையும் - வேண்டுவதான, போகமே - சுகமா அன்று தவத்தாற்சிறந் தனுபவிக்கிற போகத்தை அத்தவமில்லாதார்வேண்டினால் கிடைப்பதொன்றோ என்பது கருத்து, இங்கு-இவ்வூரிலுள்ள, இது - இவ்வகையான போகங்களை, வாய்கொண்டு - வாயால், விளம்பில்-சொன்னால், குழையும் - அந்தவாய்குழைந்துபோம், நெஞ்சினால் - மனத்தால், நினையினும் - நினைத்தாலும், மாசு என்று - அந்த நெஞ்சுதனக்குத்தோஷம் உண்டாமென்று, கொள்ளும் - கொள்ளுதலாகும் என்றனன்—எ-று. வாய்குழைதலாவது பலகாற்சொல்லியுமுடிவுபெறாது குழைதல் மனத்துக்கும் அப்படியே என்க. (௨௭)

பொன்னின்மால்வரைமேன்மணிபொழிந்தனன்பொருத்தி
உன்னுநான்முகத்தொருவனின்றூழ்முறையுரைக்கப்
பன்னிநாள்பலபணியுழன்றரிதினிற்படைத்தான்
சொன்னவானவர்தச்சனுமின்னகர்துதிப்பான்.

இ-ள். பொன்னின்மால்வரைமேல் - பொன்னாலாகிய உயர்ந்த ஒருமலைமேலே, மணி - மாணிக்கங்களை, பொழிந்தனன் - கொட்டினவனாகி, பொருத்தி - அம்மணிகளைப் பொருந்தப்பதித்து, உன்னும் - இன்னபடி அமையவேணுமென்றுநினைக்கிற, நான் முகத்து - நான்குமுகங்களையுடைய, ஒருவன் - ஒப்பில்லாத பிரமன், நின்று - அருகிலேநின்று, ஊழ்முறை - வரிசைக்கிரமங்களை, உரைக்க - சொல்லிக்கொண்டுவர, பன்னி - இராவணனாலே சொல்லுதலாகி ஏவுதலாய், நாள்பல-அநேககாலம், பணி - இந்தவேலைகளிலே, உழன்று - வருந்துதலாய், அரிதினில் - அருமைதோன்றுதலாலே, நாம் - நாமெல்லாம், இந்நகர் - இந்த ஊரை, துதிப்பான்-புகழும்படி, சொன்ன - வேலையிற்சிறந்தவனென்றுசொல்லலான, வானவர்தச்சன்-தேவர்களுடையதச்சனே, படைத்தான் - உளதாகச்செய்தான் என்றனன்—எ-று

மகரவீணையின்மந்திரகீதத்தின்மறைந்த
சகரவேலையினார்கலிதிசைமுகன்றடவும்
சிகரமாளிகைத்தலந்தொறுந்தெரிவையர்நிவந்த
அகருதூபத்தினழுந்தினமுகிற்குலமனைத்தும்.

இ-ள். சகரவேலையின் - சகரர்தோண்டின கடலினது, ஆர் - நிரம்பிய, கலி-ஓசையானது, மகரவீணையின் - மகரவீணையினொலியாலும், மந்திரகீதத்தின் - வேதகானங்களாலும், மறைந்தது - அடங்கலானது, திசைமுகன் - பிரமனுலகத்தை, தடவும் - அளாவுவனவான, சிகரம் - சிகரங்களையுடைய, மாளிகைத்தலந்தொறும்-வீடுகளிலெல்லாமுள்ள, தெரிவையர்நிவந்த - பெண்களாலுயருகிற, அகருதூபத்தின் - அகிற்புகைகளிலே, முகிற்குலம் அனைத்தும் - மேககூட்டங்களெல்லாம், அழுந்தின - அமிழ்தலாயின, என்றனன்—எ-று. (௨௯)

பளிக்குமாளிகைத்தலந்தொறுமிடந்தொறும்பசுந்தேன்
துளிக்குங்கற்பகத்தண்ணறுஞ்சோலைகடோறும்
அளிக்குந்தேறலுண்டாடுநர்பாடுநராகிக்
களிக்கின்றாரலாற்கவல்கின்றாரொருவரைக்காணேன்.

இ-ள். பளிங்கு - பளிங்குக் கல்லாற்செய்த, மாளிகைத்தலந்தொறும் இடந்தொறும் - மற்ற இடங்களிலும், பசுந்தேன் - பசியதேனை, துளிக்கும் - சிந்துவனவான, தண் - குளிர்ந்த, நறும் - மணம்வீசுகிற, கற்பகச்சோலைகள்தோறும் - கற்பகச்சோலைகளிலும், அளிக்கும் - உழையர்கொடுப்பதான, தேறல் - கள்ளை, உண்டு-குடித்து, ஆடுநர் - ஆடுகிறவர்களும், பாடுநர் - பாடுகிறவர்களும், ஆகி - ஆக, களிக்கின்றார் - சந்தோஷிக்கின்றவர்களே, அலால் - அல்லாமல், கவல்கின்றார் - விசனப்படுகிறவர்கள், ஒருவரை - ஒருவரையும், காணேன் - காணக்கிடையேன், என்றனன்—எ-று. (௩௰)

தேறன்மாந்தினர்தேனிசைமாந்தினர்செவ்வாய்
ஊறன்மாந்தினரின்னுரைமாந்தினரூடல்
கூறன்மாந்தினரனையவர்தொழுதெழுகோபத்
தாறன்மாந்தினரரக்கியர்க்குயிரன்னவரக்கர்.

இ-ள். தேறல் - கள்ளை, மாந்தினர் - குடித்தார்கள், தேன் - தேன்போன்ற, இசை - இசைப்பாட்டையும், மாந்தினர் - கேட்டார்கள், செவ்வாய்ஊறல் - அரக்கியரது சிவந்த அதரபானத்தையும், மாந்தினர் - உண்டார்கள், இன்உரை - அப்பெண்களதின்சொல்லையும், மாந்தினர் - கேட்டார்கள், ஊடல் கூறல் - அப்பெண்கள் பிணங்குதலாலே பேசுகிறதையும், மாந்தினர் - கேட்டார்கள், அனையவர் - அப்பெண்களை, தொழுது - ஊடல்தீரவணங்கி, எழு - அவருக்கு எழுகின்ற, கோபத்து-கோபத்தினது, ஆறல் - ஆறுதலையும், மாந்தினர் - அனுபவித்தார்கள், அரக்கியர்க்கு - அந்தராக்ஷஸிகளுக்கு, உயிர் அன்ன - உயிர்போன்ற, அரக்கர் - ராக்ஷதர்கள், என்றனன்—எ-று. (௩௧)

எறித்தகுங்குமத்திளமுலையெழுதியதொழில்கள்
கறுத்தமேனியிற்பொலிந்தனரூடலிற்கனன்று
மறித்துநோக்கியர்மலரடிமஞ்சுளப்பஞ்சி
குறித்தகோலங்கள்பொலிந்தனவரக்கர்தங்குஞ்சி.

இ-ள். எறித்த - சிவந்துதோற்றுகிற, குங்குமத்து - குங்குமங்களாலே, இள முலை - இளமையுள்ள கொங்கைகளிலே, எழுதிய - எழுதின, தொழில்கள் - சித்திரங்கள், கறுத்தகறுப்பான - அரக்கர்தங்கள், மேனியில் - தேகத்திலே மார்பிலே, பொலிந்தனர் - நிறைவுறுதலானுர்கள் பதிதலானுர்கள், ஊடலில் - அதுகண்டு பிணங்குதலாலே, கனன்று - கோபித்து, மறித்து - வேறுபாடாய், நோக்கியர்-பார்க்கிறவர்களுடைய, மலர் - தாமரைமலர்போன்ற, அடி - கால்களிற்பூசியிருக்கிற, மஞ்சுளம் - அழகான, பஞ்சி - செம்பஞ்சுக்குழம்பு, குறித்த - பட்ட, கோலங்கள்-குறிகள், பொலிந்தன - விளங்கலாயின, அரக்கர்தம் - அந்த ராக்ஷதர்களுடைய, குஞ்சி - தலையிலுள்ளரோமங்கள், என்றனன்—எ-று. மறித்து மான்போல்வனவான கண்களெனவுமாம். (கூ உ)

விளரிச்சொல்லியர்வாயினல்வேலையுண்மிடைந்த
பவளக்காடெனப்பொலிந்ததுபடைநெடுங்கண்ணுற்
குவளைக்கோட்டகங்கடுத்ததுகுளிர்முகக்குழுவான்
முளரிக்கானமுமானதுமுழங்குநீரிலங்கை.

இ-ள். விளரி - விளரிப்பண்போலும், சொல்லியர் - சொல்லையுடையபெண்கள், வாயினல் - வாய்ச்செவப்புகளாலே, வேலையுள் - கடலிலே, மிடைந்த - நெருங்கலான, பவளக்காடென - பவளக்காடுகள்போலவும், பொலிந்தது - இலங்கைவிளங்கலாயிற்று, படை - வாளாயுதம்போன்ற, நெடுங்கண்ணுல் - நீண்டகண்களின் கறுப்புகளாலே, குவளைக்கோட்டகம் - நீலோற்பலம் பூத்தகுளத்தை, கடுத்தது - ஒப்பாயிற்று இலங்கை, குளிர் - குளிர்ந்த, முகக்குழுவால் - அப்பெண்கள் முகராசிகளாலே, முளரிக்கானமும் - தாமரைக்காடும், ஆனது - ஆயிற்று, முழங்கு - சத்தியாநின்ற, நீர் - நீர்சூழ்ந்த, இலங்கை - இலங்காபுரி என்றனன்—எ-று. (கூ ங)

வேறு.

எழுந்தனர்திரிந்துவைகுமிடத்ததாயின்றுகாறும்
கிழிந்திலதண்டமென்னுமிதனையேகிளப்பதல்லால்
அழுந்திநின்றுவதென்னேயலருளோனுதியாக
ஒழிந்தபேருயிர்களெல்லாமரக்கருக்குறையும்போதா.

இ-ள். எழுந்தனர் - எழுந்தவர்களாய், திரிந்து - உலாவி, வைகும் - தங்குவதுமான, இடத்ததாய் - இடமானதுமாய், இன்றுகாறும் - இன்றளவும், கிழிந்திலது - உடைந்துதகராதிருக்கின்றது, அண்டம் - வானுலகம், என்னும் - என்பதான, இதனையே - இந்தவலியுடைமையையே, கிளப்பது - சொல்லுகிறதை, அல்லால் - அல்லாமல், அழுந்திநின்று - அழுந்துதலாகிநின்று ஆலோசிப்பதனாலே, ஆவது-உண்டாகிறது, என்னே - யாதாம் ஒருபயனுமில்லை, அலருளோன் - பிரமனே, ஆதியாக - முதலாக, ஒழிந்த - மற்ற, பேர் - பெரியனவான உயிர்களெல்லாம், அரக்கருக்கு - இந்தராக்ஷதரளவுக்கு, உறையும் - உறையிடவும், போதா - பற்றா என்றனன்—எ-று. (கூ ச)

காயத்தாற்பெரியர்வீரங்கணக்கிலருலகங்கல்லும்
ஆயத்தார்வரத்தின்றன்மையளவற்றாரறிதறேற்றும்
மாயத்தார்நகர்க்கெங்கேனும்வரம்புமுண்டாமேமற்றோர்
தேயத்தார்தேயஞ்சேறல்தெருவிலோர்தெருவின்சேறல்.

இ-ள். காயத்தால் - தேகத்தாலும், பெரியர் - பெருமையுள்ளவர்களே, வீரம் - இவர்கள் வீரத்தினாலும், கணக்கிலர் - அளவில்லாதவர்களே, உலகம்-உலகமெல்லாம், கல்லும் - தோண்டியெடுப்பதான, ஆயத்தார் - நீளத்தையுடையவர்களே உயர்வையுடையவர்களே, வரத்தின் றன்மை - வரபலத்தின்விசேஷத்தினாலும், அளவற்றார் - அளவில்லாதவர்களே, அறிதல்தேற்றா - எவருந்தெரிந்துகொள்ளக்கூடாத, மாயத்தார் - மாயைகற்றவர்களே, நகர்க்கு - இப்படிப்பட்ட இவர்களூருக்கு, எங்கேனும் - எவ்வகையாலாயினும், வரம்பும் - அளவும், உண்டாமே - உண்டாவதுண்டா ஆனால், ஓர்தெருவின்சேறல் - இவ்வூரிலொருதெருவுமுழுதும்போய் வருதலுக்களவு, மற்றோர்தேயத்தார் - வேறொருதேசத்துள்ளவர்கள், தேயம் - மற்றொருதேசத்துக்கு, சேறல் - செல்லுதலாகிய அளவேயாம் என்றனன்—எ-று. (ருரு)

கழலிலாக்காலுங்காலவயிலிலாக்கையுங்காந்தும்
அழலிலாக்கண்ணுமில்லாவாடவரில்லையன்னார்
குழலுலாங்களிவண்டார்க்குங்குஞ்சியாற்பஞ்சிகுன்றா
மழலையாழ்க்குதலைச்செவ்வாய்மாதருமில்லைமாதோ.

இ-ள். கழலிலா - வீரக்கழல்கள் அணியாத, காலும் - கால்களும், காலன்-யமனுக்கொப்பான, அயில் இலா - வேலாயுதம்பிடியாத, கையும்-கைகளும், காந்தும்-கொதிப்பதான, அழல் இலா - நெருப்பில்லாத, கண்ணும் - கண்களும், இல்லா-இல்லாத, ஆடவர்இல்லை - புருஷர்களில்லை, அன்னார் - அந்தப்பெண்களுடைய, குழல்-கூந்தலிலே, உலாம் - மொய்த்துத்திரிவனவான, களிவண்டு-களிப்பையுடையவண்டுகள், ஆர்க்கும் - சத்திப்பதான, குஞ்சியால் - சிகைகளாலே, பஞ்சி - காலிற்செம்பஞ்சுக்குழம்பு, குன்றா - குலைவாகாத, மழலை-மென்மையான, யாழ் - வீணாகானம்போலவும், குதலை - மழலைச்சொற்போலவும் வசனங்களையுடைய, செவ்வாய் - சிவந்தவாயினரானமாதரும், இல்லை - பெண்களுமில்லை என்றனன்—எ-று. (ருசு)

கள்ளூறக்கனிந்தபங்கியரக்கரைக்கடுத்தகாதல்
புள்ளூறத்தொடர்வமேனிபுலாலுறக்கடிதுபோவ
வெள்ளூறுப்பெயிற்றசெய்யதலையனகரியமெய்ய
உள்ளூறக்களித்தகுன்றினுயர்ச்சியவோடையானை.

இ-ள். கள்உற - தேன்ஒழுகுவதாக, கனிந்த-சிவந்த, பங்கி - உரோமங்களையுடைய, அரக்கரை - அந்தராக்ஷதர்களையே, கடுத்த - ஒப்பாயின, பய காதல் - மதமுண்கிறஆசையையுடைய, புள் - வண்டுகள், உற - மிகவும், தொடர்வ - தொடர்தலையுடையன, மேனி-உடம்பெல்லாம், புலால்உற - மதநாற்றம்வீச, கடிது - விரைவிலே, போவ-செல்லுதலையுடையன, வெள்-வெண்மைபொருந்திய, உறுப்பு - நீட்சியுள்ள, எயிற்ற - தந்தங்களையுடையன, செய்ய - சிவந்த, தலையன - தலையையுமுடையன, கரிய-கறுத்த, மெய்ய - சரீரத்தையுமுடையன, உள்உற - மனத்துள்ளே மிகவும், களித்த - மயங்கியிருத்தலையுமுடையன, குன்றின் - மலைபோலும், உயர்ச்சிய - உயர்வையுமுடையன, ஓடை - முகபடாங்கொண்ட, யானை-யானைகள் என்றனன், எழு—எ-று. அரக்கர்களிடத்து-காதற்புள் தலைவிஆசையைச்சொல்லச்செல்லுகிற கிளிமுதலிய பக்ஷிகள்உடம்பெல்லாம் புலால்நாற விரைந்துசெல்லுதல்வெண்மையான வளைந்தபற்கள் செம்மயிர் கறுத்தஉடம்பு மதுபானம்பண்ணிக் கறுத்த மலைபோலுயர்ந்திருத்தல் நெற்றிப்பட்ட முடையராயிருத்தல்பற்றி யானைகள் அரக்கரையே ஒப்பாயின என்க. (ருஎ)

வள்ளிநுண்மருங்குலன்னவானவர்மகளிருள்ளம்
தள்ளுறப்பாணிதள்ளாநடம்புரிதடங்கண்மாதர்
வெள்ளிவெண்முறுவறோன்றமடந்தையர்வெள்குகின்றார்
கள்ளிசையரக்கர்மாதர்களியிடுகுரவைகாண்பார்.

இ-ள். வள்ளி - கொடிபோலும், நுண் - நுண்ணிதான, மருங்குல்அன்ன- இடைபோல, வானவர்மகளிர்-தெய்வப்பெண்கள் எழு, உள்ளம் - மனம், தள்ளுற- துவளுதலாக, பாணி-இசைப்பாட்டுக்கு, தள்ளா - தவறுதலாகாமல், நடம் - ராக்ஷஸிகளாடுதலைப்பார்க்க, புரி-விரும்புகின்ற, தடங்கண் - விசாலமானகண்களும், மாதர் - அழகிதான, வெள்ளி - வெள்ளிபோல், வெள் - வெண்மைபொருந்தின, முறுவல்-பல்வரிசைகளும், தோன்ற-தெரிய, மடந்தையர்-மூடத்தன்மையுள்ளவர்களாய், வெள்குகின்றார் - நாணுகின்றவர்களுமாய், கள்-பொய்வார்த்தைகளை, இசை - சொல்லுகின்ற, அரக்கர் - ராக்ஷதர்களுடைய, மாதர்-பெண்கள், களி - களிப்பினாலே, இடு - செய்கின்ற, குரவை - கைகோத்தாடுதலையே, காண்பார் - பார்ப்பார்கள் பய, என்றனன்—எ-று. நாணமுண்டானால் கண்கூசுதலும் பல்தோன்றுதலுமாம், தாங்கள் ராக்ஷஸிகள்போற் குரவைக்கூத்தாடத் தெரியாமையால் மடந்தையராய் அவர்கள் குரவையையே பார்ப்பார்களென்பதாம், மடம் அறியாமைஆகலால்மடைந்தையரென்றது தற்குறிப்பு. (௰அ)

ஒருத்தலோநிற்கமற்றெம்முயர்படைக்கொருங்கிவ்வூர்வந்
திறுத்தலுமெளிதாமற்றும்யாவர்க்குமியக்கமுண்டே
கறுத்தவாளரக்கிமாருமரக்கருங்கழித்துவீசி
வெறுத்தபூண்வெறுக்கையாலேதூருமிவ்வீதியெல்லாம்.

இ-ள். ஒருத்தலோ (நாம் இவ்வரக்கரைக்) கொல்லுகிறதோ, நிற்க - அரிதாகவேயிருக்க, மற்று - அக்கொல்லுதலையல்லாமல், எம் - நம்முடைய, உயர்-அதிகமான, படைக்கு - சேனைகளுக்கு, ஒருங்கு - முழுதும், இவ்வூர் - இந்தவூருக்குச்சமீபமாய், வந்துஇறுத்தலும் - வந்துஇறங்குதல்தானென்ன அரிதே, எளிதா-சுலபமா, மற்றும்-இன்னமும், யாவர்க்கும் - எப்படிப்பட்டவர்களுக்கானாலும், இயக்கம் - இங்குச்சஞ்சரித்தலாவது, உண்டே - உண்டா இல்லை, கறுத்த - கருநிறத்தையுடைய, வாள் - ஒளிபொருந்தின, அரக்கிமாரும் - ராக்ஷதப்பெண்களும், அரக்கரும் - ராக்ஷதர்களும், கழித்து-வேண்டாவென்றுபூண்டு கழித்து, வீசி-எறிந்து, வெறுத்த - வெறுத்துவிட்ட, பூண்-ஆபரணங்கள்முதலான, வெறுக்கையாலே - சுவர்ணங்களாலே, தூரும்-குப்பையாய்க்கிடக்கிறது, இவ்வீதியெல்லாம் - இவ்வீதிகளெல்லாம், வெறுக்கையாலே தூரும் என்றனன்-வெறுக்கையாலே குப்பையாய்க்கிடக்கிற எந்தவீதிகளிலாவது யாவர்க்கு மியக்கம் உண்டே எனவுமாம்—எ-று. (௰௧)

வடங்களுங்குழையும்பூணுமாலையுஞ்சாந்தும்யானைக்
கடங்களுங்கலினமாவிலாழியுங்கணக்கிலாத
இடங்களுமிடங்கடோறும்யாற்றெடுமெடுத்தவெல்லாம்
அடங்கியதென்னிலென்னேயாழியினாழ்ந்ததுண்டோ.

இ-ள். வடங்களும் - வெறுத்துவீசின முத்துமாலைமுதலியவைகளும், குழையும் - குண்டலங்களும், பூணும் - மற்றைஆபரணங்களும், மாலையும் - பூமாலைகளும், சாந்தும் - சந்தனமும், யானைக்கடங்களும் - யானைமதங்களும், கலினம் - கடிவாளம் பூண்ட, மா-குதிரைகளின், விலாழியும் - வாய்நுரையும், கணக்கிலாத-அளவில்லாத,

வைகளாயிருக்கின்றன, பய இடங்களும் - எந்தவீதியி னிடங்களும் கணக்கில்லாத, என்க, இடங்கள்தோறும்-அப்படி எல்லாஇடங்களிலும் உளவாகுகின்ற, யாற்றொடும் - யானைமதங்கலப்பதானயாற்றுடனே, எடுத்த எல்லாம் - அலைகள்கொண்டு போன எல்லாப்பொருள்களும்கடலில், அடங்கியது - அடங்கியிருக்கின்றது, என்னில் - என்றுசொல்லலானால், என்னே - அப்படிச்சொல்லுதற்குக்குறை என்ன குறையில்லை, ஆழியின் - கடலிலும், ஆழ்ந்தது - பள்ளமானது, உண்டோ - வேறே உண்டா இல்லைஆதலால் இவ்வூர்க் குப்பைகொட்டும்பள்ளம் கடலே என்றனன் எ-று. (சo)

விற்படைபெரிதென்கோயான்வேற்படைமிகுமென்கோயான்
மற்படையுளதென்கோயான்வாட்படைவலிதென்கோயான்
கற்பணந்தண்டுபிண்டிபாலமென்றினையகாந்தும்
நற்படையுடைத்தென்கோயான்நாயகற்குரைக்குநாளில்.

இ-ள். விற்படை - வில்லாளிகளானசேனை, பெரிது - அதிகம், என்கோ-என்னவோ, யான் - நான், வேற்படை - வேல்வீரர்களானசேனைகள், மிகும் - அதிலும்அதிகம், என்கோ-என்னவோ, யான் மற்படை - மல்லயுத்தஞ்செய்கிற சேனை மிகவுமிருக்கின்றது, என்கோ - என்னவோ, யான் வாள்படை - வாள்வீரரான சேனைகள், வலிது - வலிதாயிருக்கின்றது, என்கோ - என்னவோ, யான் - கற்பணம் தண்டு - பிண்டிபாலம், என்று - என்றுசொல்லப்படுகிற, இனைய இவ்வகைஆயுதங்களுடனே, காந்தும் - கொதிப்பதான, நல்படை - பின்வாங்காதசேனையை, உடைத்து - இலங்கை யுடையதாயிருக்கின்றது, என்கோ - என்னவோ, யான் - நான் போய், நாயகற்கு - ஸ்ரீராமனுக்கு, உரைக்குநாளில் - சொல்லும்போது விற்படை பெரிதென்கோயா னென்றுகூட்டுக—எ-று. நானொருவன் சொல்லப்போதாதென்பதுதோன்ற - நான்வந்ததென்க. (சக)

என்றனனிலங்கைநோக்கியினையனபலவுமெண்ணி
நின்றவாளரக்கர்வந்துநேரினுநேர்வரென்னாத்
தன்றகையனையமேனிசுருக்கியச்சரளச்சாரர்
குன்றிடையிருந்தான்வெய்யோன்குரைகடல்குளிப்பதானான்.

இ-ள். என்றனன்-என்றுநினைத்தவராய், இலங்கை - அந்தஊரை, நோக்கி-பார்த்து, இனையன - இவைபோல்வது, பலவும்-பலவகைகளையும்பின்னும், எண்ணி-நினைத்து, நின்ற - இவ்வூரிலே நிலைகொண்டுள்ள, வாள் அரக்கர் - வாளாயுதங்களை யுடையராக்ஷதர்கள், வந்து - தெரிந்துவந்து, நேரினும் - சண்டைசெய்தாலும், நேர்வர்என்னா - செய்வார்களென்று, தன் - தமது, தகை - பெருமைக்கு, அனைய - ஒப்பான, மேனி - உருவத்தை, சுருக்கி - ஒடுக்கிக்கொண்டு, அ - அந்த, சரளம் - மரவரிசைகளையுடைய, சாரல் - பக்கங்களைக்கொண்ட, குன்றிடை - அந்தப்பவளமால்வரையிலே, இருந்தான் - மறைந்திருந்தார், வெய்யோன் - சூரியன், குரை - சத்தியாநின்ற, கடல் - மேலைக்கடலிலேபோய், குளிப்பதானான் - முழுகுகிறதாயினான் எ-று. (சஉ)

வேறு.

எய்வினையிறுதியிற்செல்வமெய்தினான்
ஆய்வினைமனத்திலானறிஞர்சொற்கொளான்

வீவினைநினைக்கிலானொருவன்மெய்யிலான்
தீவினையெனவிருள்செறிந்ததெங்குமே.

இ-ள். ஏய் - தனக்குண்டான, வினை இறுதியில் - செய்கைக்கேட்டினாலே, செல்வம் எய்தினான் - ஐசுவரியத்தையடைந்தவன் ஆகலால், ஆய்வினை - ஆராயுஞ் செய்கையை, மனத்து - மனத்திலே, இலான் - இல்லாதவனாகி, அறிஞர் - (செய்யுஞ்செய்கை) தெரிந்தவர்கள், சொல் - சொல்லையும், கொளான்-கொள்ளாதவனாய், வீ வினை - (தனக்குவரும்) கெடுதலையும், நினைக்கிலான் - எண்ணாதவனாய், ஒருவன் மெய்யிலான் - யதார்த்தகியானமுமில்லாத ஒருவனுடைய, தீவினையென - பாவஞ் செறிந்தாற்போல், எங்கும் - எவ்விடத்தும், இருள்செறிந்தது - இருள்நெருங்குதலாயிற்று—எ-று. அனுமார்கண்ணுக்கு அவ்விருள்தோன்றுதல் ராவணன்பாவம் போலிருந்ததென்க, வினையிறுதியிற் செல்வமெய்துதல் அநியாயமாய்ப் பொருள் சம்பாதித்தல், இறுதி - கெடுதல். (௪௩)

கரித்தமூன்றெயிலுடைக்கணிச்சிவானவன்
எரித்தலையந்தணரிழைத்தயானையை
உரித்தபேருரிவையாலுலகுக்கோருறை
புரித்தனனாமெனப்பொலியும்பொற்பதே.

இ-ள். மூன்று எயில் - திரிபுரத்தை, கரித்த - தீய்த்த, உடை - சிரிப்பையுடைய, கணிச்சிவானவன் - சூலபாணியான பரமசிவன், எரித்தலை-வேள்வியினிடமாய், அந்தணர் - தாருகாவனத்து முனிவர்கள், இழைத்த யானையை - உண்டாக்கியனுப்பினயானையை, உரித்த - உரித்தல்செய்த, பேர் - பெரிதான, உரிவையால்- தோலாலே, உலகுக்கு - இந்த உலகத்துக்கெல்லாம், ஓர் உறை - ஒருபோர்வைப் பையை, புரிந்தனன் - பிரமன்செய்தான், ஆமென - போலுமென்ன, பொலியும்- (அவ்விருள் எங்கும்) நிறைவதான, பொற்பது - மிகுதியையுடைய தாயிற்று, பய- இருள், எழு—எ-று. புரித்தல் என்பது வலித்தல் விகாரம். (௪௪)

அணங்கரவரசர்கோனளவிலாண்டெலாம்
பணங்களின்றலைதொறுமுயிர்த்தபாய்விடம்
உணங்கலிலுலகெலாமுறையினுண்டுவந்
திணங்கெரிபுகையொடுமெழுந்ததென்னவே.

இ-ள். அணங்கு - வருத்தத்தைச் செய்கின்ற, அரவு-பாம்புகளுக்கு, அரசர்- ராஜாக்களான அஷ்டமா நாகங்களும், கோன் - அரசனான ஆதிசேடன், அளவில்- கணக்கில்லாத, ஆண்டெலாம் - வ்ருஷகாலங்களெல்லாம், பணங்களின் - படங்களையுடைய, தலைதொறும் - ஆயிரந்தலைகளினின்றும், உயிர்த்த - பெறுதலான, பாய்- பரவுகின்ற, விடம் - நஞ்சானது, உணங்கலில்-அழிதலில்லாதிருக்கிற, உயிரெலாம்- உயிர்களையெல்லாம், முறையின் - கிரமகிரமமாய், உண்டு - சாப்பிட்டு, உவந்து - சந்தோஷித்து, இணங்கு - தன்னோடுகூடின, எரி - நெருப்பு, புகையொடும் - புகையுடனே, எழுந்ததென்ன - எழுந்தாற்போல் இருள்செறிந்தது—எ-று. இங்கு எரியென்றது - செவ்வானத்தை விஷாக்கினியென்பதனாலே புகையுங்கூட்டினார். எங்குஞ்செறிகிற இருளுக்கு புகையை உவமையாகச்சொன்னார். (௪௫)

வண்மைநீங்காநெடுமரபின்வந்தவன்
பெண்மைநீங்காதகற்புடையபேதையைத்

திண்மைநீங்காதவன்சிறைவைத்தானெனும்
வெண்மைநீங்கியபுகழ்விரிந்ததென்னவே.

இ-ள். வண்மை - ஔதாரியகுணம், நீங்கா - நீங்காதிருக்கிற, நெடுமரபில்- நெடிதான சூரியகுலத்திலே, வந்தவன் - அவதரித்த ஸ்ரீராமனுடைய, பெண்மை- பெண்மைக் குணங்களில், நீங்காத - தவறுதலில்லாத, கற்புடைய - கற்புள்ள, பேதையை - சீதாபிராட்டியை, திண்மை - வரபலம், நீங்காதவன் - தவறுதிருக்கிற ராவணன், சிறைவைத்தான் - காவலிலேயிருக்கச்செய்தான், எனும் - என்கிற, வெண்மைநீங்கிய - விளங்குதலில்லாத, புகழ் - பழி, விரிந்ததென்ன - விரிந்ததுபோலுமென்ன இருள்செறிந்தது—எ-று. கருமைநீங்காதபழி என்பதற்கு வெண்மை நீங்கிய புகழென்றார் - இந்த நான்குசெய்யுளு மொருதொடர். (சசு)

அவ்வழியவ்விருள்பரந்தவாயிடை
எவ்வழிமருங்கினுமரக்கரேகினர்
செவ்வழிமந்திரத்திசையராயினும்
வெவ்வழியிருடரமிதித்துமீச்செல்வார்.

இ-ள். அவ்வழி - அவ்வூரிலே, அவ்விருள் - அப்படிப்பட்ட இருள், பரந்த- பரவுதலான, ஆயிடை - அப்போது, எவ்வழிமருங்கினும் - எந்தவழிமார்க்கங்களிலும், அரக்கர் - ராக்ஷதர்கள், ஏகினர் - சென்றார்கள், செவ்வழி - செந்நெறி,மந்திரம்- மறைந்துசெல்லத்தக்க, திசையர் - திக்குக்குமறைந்து செல்லுகிறவர்கள், ஆயினும்- எங்குச் (செல்லுகிறார்களென்று) ஆய்ந்துநோக்கினாலும், வெவ்வழி - (அவர்கள்செல்லுவது) வெவ்வியநெறியே, இருள்தர - (அதுவும்) இருண்டுபோக, மிதித்து - தங்கள்நிறத்தாலே இருளைவென்று, மீச்செல்வார் - ஆகாயமார்க்கமாகச் செல்லலானார்கள்—எ-று. காலால்மிதித்தென்றாலும் இருளைவெல்லுதலேயாம், பாராதிருந்தாலும் அவர்கள்நிறக்கருமையால் தெரியாதிருத்தலால் உம்மை இழிவுசிறப்புவெவ்வழியாரும்நடவாதகொடிவழி கொடியவழி என்க. (சஎ)

இந்திரன்வளநகர்க்கேகுவாரிகற்
சந்திரனுலகினைச்சார்குவார்கலித்
தந்தகனுறையுளையணுகுவாரியல்
வெந்தொழிலரக்கனதேவன்மேயினர்.

இ-ள். இந்திரன் - தேவராஜனுடைய, வளம் - அழகிதான, நகர்க்கு - ஊருக்கு, ஏகுவார் - சிலர்செல்லுகிறார்கள், இகல் - (தங்களுக்கு) விரோதியான, சந்திரன் - சந்திரனுடைய, உலகினை - உலகத்துக்கு, சார்குவார் - சிலர்செல்லுவார்கள், கலித்து - கர்ச்சித்துக்கொண்டு, அந்தகன் - யமனுடைய, உறையுளை - உலகத்தை, அணுகுவார் - சிலர்சேருவார்கள், வெந்தொழிலியல் - கொடுஞ்செய்கைகளைச் செய்கிற, அரக்கனது - ராக்ஷதனான ராவணனுடைய, ஏவல்மேயினர் - ஏவுதலைக்கொண்டவர்கள் ஆகிய இவர்களிற்சிலர் இந்திரன்வளநகர்க்கேகுவாரென்றுகூட்டுக—எ-று.

பொன்னகர்மடந்தையர்விஞ்சைப்பூவையர்
பன்னகவனிதையரியக்கர்பாவையர்
முன்னினபணிமுறைமாறமுந்துவார்
மின்னினமிடைந்தெனவிசும்பின்மீச்செல்வார்.

இ-ள். பொன்னகர் - தேவருலகிலுள்ள, மடந்தையர் - அரம்பாஸ்திரீகளும், விஞ்சைப்பூவையர் - வித்தியாதரப் பெண்களும், பன்னகவனிதையர் - நாககன்னி

களும், இயக்கர்பாவையர் - யக்ஷகன்னிகளும், முன்னின - தங்களுக்கு நியமித்தலான, பணி - வேலைகளுக்குள்ள, முறைமாற - நியதியைமாறிச்செய்ய, முந்துவார் - ஒருவரில் ஒருவர் முந்திச்செல்லுகிறார்கள், மின்னினம் - மின்னலினதுகூட்டம், மிடைந்தென - நெருங்கினாற்போல், விசும்பின்மீ - ஆகாயத்தின்மேலே இலங்கைக்கு, செல்வார் - செல்லுவார்கள்—எ-று. (சுகூ)

தேவருமவுணருஞ்செங்கணாகரும்
மேவருமியக்கரும்விஞ்சைவேந்தரும்
யாவரும்விசும்பிருளிரியவீண்டினார்
தாவரும்பணிமுறைதழுவுந்தன்மையார்.

இ-ள். தேவரும் - தேவர்களும், அவுணரும் - அசுரர்களும், செங்கண் - சிவந்தகண்களையுடைய, நாகரும் - உரகர்களும், மேவரும் (ஓரிடமும்) செல்லுதலரிதான, இயக்கரும் - யக்ஷர்களும், விஞ்சைவேந்தரும் - வித்தியாதரர்களும், யாவரும் (இவ்வகையான) எல்லாரும், விசும்பு - ஆகாயத்திலேயுள்ள, இருள்இரிய - (தங்கள் ஒளியாலே) இருள்ஓட, ஈண்டினார் - வந்துகூடுகிறார்கள், தாஅரும் - கெடுதலில்லாத, பணி - வேலைகளை, முறை - முறைப்படி, தழுவு - மாற்றிக்கொண்டுசெய்யும், தன்மையார் - சுவபாவத்தையுடையவர்கள் ஈண்டினாரென்க—எ-று. (டுo)

சித்திரப்பத்தியிற்றேவர்சென்றனர்
இத்துணைதாழ்ந்தனமுனியுமென்றுதம்
முத்தினாரங்களுமுடியின்மாலையும்
உத்தரீயங்களுமிரியவோடுவார்.

இ-ள். சித்திரப்பத்தியில் - சித்திரவரிசைகள்போல், தேவர்சென்றனர்-செல்லலானவர்களானதேவர்கள், இத்துணை - இவ்வளவுநேரம், தாழ்ந்தனம் - தாமதமானோம், முனியும்என்று - (இராவணன்) கோபிப்பானென்று, தம் - தங்களுடைய, முத்தினாரங்களும் - முத்துமாலைகளும், முடியில் - தலையிலணிந்த, மாலையும் - மாலைகளும், உத்தரீயங்களும் - அங்கவஸ்திரங்களும், இரிய - கூடத்தொடர்ந்துவர, ஓடுவார் - ஓடுகிறார்கள்—எ-று. கண்இமையாமையால் சித்திரப்பத்தி என்றார். (டுக)

தீண்டருந்தீவினைதீக்கத்தீந்துபோய்
மாண்டறவுலர்ந்ததுமாருதிப்பெயர்
ஆண்டகைமாரிவந்தளிக்கவாயிடை
ஈண்டறமுளைத்தெனமுளைத்ததிந்துவே.

இ-ள். தீண்டரும் - தொடுதற்கரிதான, தீவினை - பாபராசிகள்கூடி, தீக்க - கரிவதாக்க, தீந்து - கரிந்து, போய் - போவதாகி, மாண்டு - அழிந்து, அற - மிகவும், உலர்ந்தது - காய்ந்ததானபயிர்ஆகிய, மாருதிப்பெயர் - வாயுபுத்திரனென்கிற பெயரையுடைய, ஆண்தகை - ஆண்மையிற்சிறந்தஅனுமாராகிய, மாரிவந்து - மேகந்தோன்றி, அளிக்க - ரக்ஷிக்க, ஆயிடை - அவ்வூரிலே, ஈண்டு - நல்லோர்சேரத்தக்க, அறம் - தருமமானது, முளைத்தென - முளைத்தாற்போல், இந்து - சந்திரன், முளைத்தது - உதயமாயிற்று—எ-று. பாவத்தையும் பழியையும் கறுப்பாகவும்புண்ணியத்தையும் புகழையும் வெண்மையாகவும் சொல்வதுலகவழக்கு. (டுஉ)

வந்தனனிராகவன்றூதன்வாழ்ந்தனன்
எந்தையேயிந்திரனுமென்றேமுறு

அந்தமில்கீட்டிசை யளகவா ணுதற்
சுந்தரிமுகமெனப்பொலிந்துதோன்றிற்றே.

இ-ள். இராகவன் தூதன் - ஸ்ரீராமதூதனை அநுமார், வந்தனன் - வந்தார், எந்தையே - என துசுவாமியேயாகிய, இந்திரன் - தேவேந்திரன், வாழ்ந்தனன் ஆமென்று - வாழ்வைப் பெற்றவனுவானென்று, ஏமுறு - சந்தோஷமாகி, அந்தம் இல்- அழிதலில்லாத, கீட்டிசை - கிழக்குத்திசையாகிய, அளகம் - கரியகூந்தலும், வாள் நுதல் - ஒளிபொருந்திய நெற்றியுமுடைய, சுந்தரிமுகமென - இந்திராணிமுகம் போல் அச்சந்திரன், எழு - பொலிந்து நிறைந்து, தோன்றிற்று-விளங்குதலாயிற்று பய—எ-று. (௫௩)

கற்றைவெண்கவரிபோற்கடலின்வெண்டிரை
சுற்றுநின்றலமரப்பொலிந்துதோன்றிற்ருல்
இற்றதெம்பகையெனவெழுந்தவிந்திரன்
கொற்றவெண்குடையெனக்குளிர்வெண்டிங்களே.

இ-ள். கற்றை - திரட்சியான, வெண்கவரிபோல் - வெண்சாமரம்போல், கடலின் - சமுத்திரத்தினது, வெண்திரை - வெள்ளியஅலைகள், சுற்றும்நின்று- சுற்றிலுநின்று, அலமர - சுழன்றுவிழ, பொலிந்து - கிரணங்கள்நிறைதலாய், தோன்றிற்று - தோன்றலாயிற்று, இற்றது - முடிந்துபோயிற்று, எம்பகையென - எங்கள்பகையென்று, எழுந்த - சந்தோஷித்தெழுந்த, இந்திரன்-இந்திரனுடைய, கொற்றம் - வெற்றிபொருந்திய, வெண்குடையென - வெள்ளைக் குடையைப்போல், குளிர் - குளிர்ந்த, வெண் திங்கள் - வெள்ளைச்சந்திரன்பொலிந்து தோன்றிற்றென்க—எ-று. (௫௪)

தெரிந்தொளிர்திங்கள்வெண்குடத்தினற்றிரை
முரிந்துயர்பாற்கடன்முகந்துமூரிவான்
சொரிந்ததேயாமெனத்துள்ளிமீனெடும்
விரிந்ததுவெண்ணிலாமேலுங்கீழுமே.

இ-ள். தெரிந்து - எங்குந்தெரிவதாய், ஒளிர் - விளங்குகின்ற, திங்கள் - சந்திரனுகிய, வெண்குடத்தினல் - வெள்ளிக்குடத்தினுலே, திரைமுரிந்து - அலைகள் மடங்கி, உயர் - உயருகின்ற, பாற்கடல் - திருப்பாற்கடலிலே, முகந்து - பாலை மொண்டு, மூரிவான் - பெரியஆகாயமெல்லாம், சொரிந்ததே - சிந்தினதே, ஆமென - நிகரென்னும்படி, துள்ளி - சிந்தினவற்றிலேதங்கின துளிகளாகிய, மீனெடும்- நக்ஷத்திரங்களுடனே, வெண்ணிலா - வெண்மையானசந்திரிகை, மேலும் - ஆகாசத்தின்மேலும், கீழும் - பூமியிலும், விரிந்தது - விரிதலாயிற்று, இராக்காலமான ஒருவன் சொரிந்ததே யாமென்பதேயன்றி ஆகாயமான ஒருவன் சொரிந்த தெனவுமாம்—எ-று. (௫௫)

அருந்தவன்சுரபியேயாதிவானமா
விரிந்தபேருதயமேமடிவெண்டிங்களா
வருந்தலின்முலேகதிர்வழங்குதாரையாச்
சொரிந்தபாலொத்ததுநிலவின்றோற்றமே.

இ-ள். அருந்தவன் - அருமையான தவத்தையுடைய வசிட்டரது, சுரபியே- காமதேனுவே, ஆதிவானம்ஆ - முதலான ஆகாயமாகவும், விரிந்த-கிரணங்கள் விரி

தலான, பேர் - பெரிய, உதயமே - உதயமான இடமே, மடி - அக்காமதேனுவின் பானுள்ள மடியாகவும், வருந்தல் இல் - வருத்தப்பட்டுக்கறத்தல்வேண்டாத, மூலை - பால்மூலை, வெண்திங்களா - வெள்ளியசந்திரனாகவும், கதிர் - அந்தச்சந்திரகிரணங் களே, வழங்கு - பாலைக்கொடுக்கிற, தாரையா - தாரையாகவும், சொரிந்த - பாத்தி ரத்திலேபெய்து நிரம்பின, பால் - பாலை, ஒத்தது-ஒப்பாயிற்று, நிலவின்றோற்றம்- அன்றுசந்திரோதயமானது—எ-று. மேலுங்கீழு நிரம்பின சந்திரிகை பாத்திரத்தில் நிரம்பினபால்போலாயிற்றென்க. (௫௬)

எண்ணுடையனுமன்மேலிழிந்தபூமழை
மண்ணிடைவீழ்கிலமறித்தும்போகில
அண்ணல்வாளரக்கனையஞ்சியாய்கதிர்
விண்ணிடைத்தங்கினபோன்றமீனெலாம்.

இ-ள். எண்ணுடை - இப்படியாக இருளையும் நிலவையுங்கண்டு ஆலோசித் துக்கொண்டிருத்தலையுடைய, அனுமன்மேல் - அனுமார்மேலே, இழிந்த - தேவர் கள் சிந்த இறங்கின, பூமழை - புட்பமாரியானது, மண்ணிடை-பூமியிலே, வீழ்கில- விழாதனவும் ஆகி, மறித்தும் - திரும்பவும், போகில - மேலேசெல்லாதனவுமாகி, அண்ணல் - பெருமைகொண்ட, வாள் - வாளாயுதத்தையுடைய, அரக்கனை-இராவ ணனுக்கு, அஞ்சி - பயந்து, ஆய் - எங்கும்பரவுதலாயிருக்கிற, கதிர் - சந்திரப்பிர பையைக்கொண்ட - விண்ணிடை - ஆகாயத்திலேதானே, தங்கினபோன்ற-நிற்பன போலிருந்தனபய, மீனெல்லாம் - நக்ஷத்திரங்கள் எல்லாம், எழு—எ-று. கீழ்வீழ் கிலமேற் போகில ஆய்தங்கின போன்ற மீனெலாமென்க. (௫௭)

எல்லியினிமிரிருட்குறையுமவ்விருள்
கல்வியநிலவின்வெண்முறியுங்கள்வன
புல்லியபகையெனப்பொருவபோன்றன
மல்லிகைமலர்தொறும்பொதிந்தவண்டெலாம்.

இ-ள். எல்லியின் - அந்தராத்திரியிலே, நிமிர் - நிமிர்வனவான, இருட்கு றையும் - இருளின் துண்டங்களும், அவ்விருள் - அந்த இருளை, கவ்விய - போக்கின, நிலவின் - சந்திரனுடைய, வெண் - வெண்மைபொருந்தின, முறியும் - துண்டுக ளும், கள்வன - திருட்டுருவு கொண்டன ஆகி, புல்லிய - தங்களுக்கு அடுத்த, பகை யென - சத்துருவென்று, பொருவ - சண்டைபண்ணுகிறதை, போன்றன - ஒப்பா யிருந்தன, மல்லிகைமலர் - மல்லிகைப் பூக்கள், தொறும் - எல்லாம், பொதிந்த- நெருங்கின, வண்டெலாம் - வண்டுகளெல்லாம்—எ-று. மல்லிகைமலர்கள்-நிலவின் றுண்டம், வண்டுகள் - இருளின் றுண்டம், இவ்விரண்டுங் கூடியிருத்தல் பொருவன போலுதலென்க. (௫௮)

வீசுறுபசுங்கதிர்க்கற்றைவெண்ணிலா
ஆசுறவெங்கணுநுழைந்தளாயது
காசுறுகடிமதிலிலங்கைக்காவலூர்த்
தூசுறையிட்டதுபோன்றுதோன்றிற்றே.

இ-ள். வீசுறு - வீசுதலையுடைய, பசுங்கதிர் - சந்திரனது, கற்றை - திரட்சி யைக்கொண்ட, வெண்நிலா - வெள்ளிய சந்திரிகைகள், ஆசு உற - (இருளுக்குத்) தோஷமுண்டாக, எங்கணும் - எவ்விடத்தும், நுழைந்து - புகுந்து, அளாயது-கலந்

தது எப்படியிருக்கின்றதென்றால், காசு - ரத்நங்கள், உறு - பதித்தலைக் கொண்ட, கடி - காவலான, மதில் - மதில்சூழ்ந்த, இலங்கை - இலங்கையாகிய, காவல் - இரா வணன்காத்தலுக்குரிய, ஊர் - அவ்வூருக்கு, தூசு - வெள்ளைவஸ்திரமாகிய, உறை யிட்டதுபோன்று - உறையால்மூடினாற்போல், தோன்றிற்று - விளங்கியது—எ-று.

இகழ்வரும்பெருங்குணத்திராமனெய்ததோர்
பகழியின்செலவெனவநுமன்பற்றினால்
அகழ்புகுந்தரண்புகுந்திலங்கையன்னவன்
புகழ்புகுந்துலாயதோர்பொலிவும்போன்றதே.

இ-ள். இகழ்வு அரும் - இகழ்ச்சியில்லாத, பெருங்குணத்து - பெரிதான குணங்களையுடைய, இராமன் - ஸ்ரீராமனானவர், எய்தது - பிரயோகித்ததான, ஓர்- ஒப்பில்லாத, பகழியின் - அம்பினது, செலவென - செல்லுகைபோல, அநுமன்- அநுமாருடைய, பற்றினால் - தொடர்தலினாலே, அன்னவன் - அந்த ஸ்ரீராமனுடைய, புகழ்புகுந்து - கீர்த்தியானதுவந்து, இலங்கை - இலங்கையின், அகழ்புகுந்து- அகழிலும்புகுந்து, அரண்புகுந்து - கோட்டைக்குள்ளும்புகுந்து, உலாயது - எங்கும் உலாவியதான, ஓர் - ஒரு, பொலிவும்போன்றது - நிறைவையும் ஒத்திருந்தது சந் திரப்பிரகாசம்என்க—எ-று. (சுo)

அவ்வழியநுமனுமணுகலாம்வகை
எவ்வழியென்பதையுணர்வினெண்ணினான்
செவ்வழியொதுக்கினன்றேவரேத்தப்போய்
வெவ்வழியரக்கரூர்மேவன்மேயினான்.

இ-ள். அவ்வழி - அப்போது, அநுமனும் - அநுமாரானவர், அணுகலாம்வகை - இனி இவ்வூர்க்குள்செல்லுவதானவகை, எவ்வழி - எப்படி எந்தவழியாலே, என்பதை - என்கிறதுணிவை, உணர்வின் - தமதுபுத்தியினாலே, எண்ணினான்- யோசித்தார், செவ்வழி - செவ்வையாகச்செல்லுநெறியை, ஒதுக்கினன் - விலக்கின வராகி, தேவர் - தேவர்களெல்லாம், ஏத்த - துதிப்பதாக, போய் - சென்று, வெவ் வழி - யாவருஞ்செல்லப்படாத கொடியவழியாக, அரக்கர்ஊர் - இலங்காபுரிக்குள் ளே, மேவல்மேயினான் - போகத்தொடங்கினார்—எ-று. (சுக)

வேறு.

ஆழியகழாகவரிதாயமரர்வாழும்
ஏழுலகின்மேலைவெளிகாறுமுகடேறிக்
கேழரியபொன்கொடுசமைத்தகிளர்வெள்ளத்
தூழிதிரிநாளுமுலையாமதிலையுற்றான்.

இ-ள். ஆழி - கடலிலே, அகழ்ஆக - அகழ்க்கிடங்காக, அரிதாய் - (யார்க்குஞ்செல்லுதற்கு) அருமையுள்ளதாக, அமரர் - தேவர்கள், வாழும் - வாழ்வதான, ஏழுலகின் - மேலேழுலோகத்துக்கும், மேலை - மேலானதான, வெளிமுகடுகாறும்- ஆகாயமுகட்டினளவும், ஏறி - சென்றுமோதி உயர்ந்து, கேழ் - நிறத்தால், அரிய- அருமையான, பொன்கொடு - பொன்னாலே, சமைத்த - செய்யலான, கிளர் - பொங்குகின்ற, வெள்ளத்து - பிரவாகத்தினாலே, ஊழி - உகாந்தகாலம், திரிநாளும்- வரும்போதும், உலையா - கெடாத, மதிலை - இலங்கைமதிலை, உற்றான் - அடுத்தார்—எ-று. சமைத்த உலையாதமதிலென்க. (சுஉ)

கலங்கலில்கடுங்கதிர்கண்மீதுகடிதேகா
அலங்கலயில்வஞ்சகனையஞ்சியெனினன்றால்
இலங்கைமதிலிங்கிதனையேறலரிதென்றே
விலங்கியகல்கின்றனன்விரைந்தெனவியந்தான்.

இ-ள். கலங்கல்இல் - கலங்குதலில்லாத மங்குதலில்லாத, கடும் - கடுமையான, கதிர் - சூரியனுடைய, கண் - பார்வைகள், மீது - அவ்வூரின்மேலே, கடிது - விரைவதாய், ஏகா - செல்லாது, அலங்கல் - வெற்றிமாலையணிந்த, அயில் - வேலைக்கொண்ட, வன்சகனை - சீதாபிராட்டியை வஞ்சித்துக்கொண்டுவந்த இராவணனுக்கு, அஞ்சியெனில் - பயந்துஎன்றுசொல்லலாஞல், அன்று - அந்தநிமித்தம்அன்று, இலங்கைமதில் - இலங்கைமதிலாகிய, இங்கிதனை - இங்கேதோன்றுகிறஇதை, ஏறல் - கடந்துமேலேசெல்லுதல், அரிதென்று - அருமையென்று, விலங்கி - ஒதுங்கி, விரைந்து அகல்கின்றனன் - சீக்கிரத்திலே நீங்கிப்போகின்ருன், எனவியந்தான் - என்று அதிசயித்தார்—எ-று. (சுஙு)

தெவ்வளவிலாதவிறைசேறலுளதென்றால்
அவ்வளவதன்றரணமண்டமிடையாக
எவ்வளவிலுண்டுவெளியீறுமதுவென்னு
வெவ்வளவரக்கனைமனக்கொளவியந்தான்.

இ-ள். தெவ் - பகைகள், அளவுஇலாத - கணக்கில்லாதவைகள் கூடிஞல், இறைகொஞ்சம் - இந்தமதில்மேல், சேறல் - செல்லுதல், உளது - உண்டு, என்ருல் - என்றுசொல்லுவதாஞல், அவ்அளவது - அப்படிச்செல்லுவதான கொஞ்சஅளவையுடையது, அன்று - அல்லதேயாம், அரணம் - இந்தமதில், அண்டம் - தேவருலகம், இடையாக - அதற்குநடுஅளவிலேநிற்க, எவ்அளவது - எந்தஉயர்வான அளவையுடையதாக, உண்டு - உளதாயிருக்கிறதுமதில், வெளியீறும் - ஆகாயமுகடும், அது - அந்த அளவையுடையதே ஆம், என்னு - என்று, வெவ்வளம் - கொடிதான சம்பத்தையுடைய, அரக்கனை - ராவணனை, மனக்கொள - தமதுமனத்திலேதோன்ற, வியந்தான் அதிசயத்தையடைந்தார்—எ-று. மதிலுயர்வினளவே ஆகாயத்தின் உயர்வினளவும் ஆகலால் பகைவர் அநேகர்கூடிஞலும் மதிலேறியுட்புகுதல் கூடாதென்றபடி. (சுச)

மடங்கலரியேறுமதமால்களிறுநாண
நடந்துதனியேபுகுதுநம்பிநனிமூதூர்
அடங்கரியதானையயிலந்தகனதாணைக்
கடுந்திறலின்வாயனையவாயிலெதிர்கண்டான்.

இ-ள். மடங்கல் - மடங்கலென்கிற, அரிஏறும் - ஆண்சிங்கமும், மதம் - மதத்தையுடைய, மால் - உயர்ந்த, களிறும் - யானையும், நாண - வெட்கத்தை யடையும்படி, தனியே - தாமொருவராகவே, நடந்து - சென்று, புகுதும் - மதிலருகேசேருகிற, நம்பி - புருஷசிரேஷ்டரான அனுமார், நனிமூதூர் - மிகப்பெரியதான அவ்வூரினது, அடங்கரிய - அடங்குதலில்லாத, தானை - சேனைகளையுடையதாய், அயில் - சூலத்தைக்கொண்ட, அந்தகனது - யமனுடைய, ஆணை - ஆக்ஞைபெற்ற, வாய் - இடத்தை, கடும் - கடுமையான, திறலின் - பலத்தைக்கொண்ட, வாய் - வாயை, அனைய - ஒப்பான, வாயில் - அந்தக்கோட்டைவாயிலை, எதிர்கண்டான் - முன்னே தெரியப்பார்த்தார்—எ-று. (சுரு)

மேருவைநிறுத்திவெளிசெய்ததுகொல்விண்ணோர்
ஊர்புகவமைத்தபடிகால்கொலுலகேழும்
சோர்விலநிலைக்கநடுவிட்டதொருதூணோ
நீர்புகுகடற்குவழியோவெனநினைந்தான்.

இ-ள். மேருவை - மேருமலையை, நிறுத்தி - ஊன்றி, வெளி - (அதிலே) துவாரமுளதாக, செய்ததுகொல் - செய்திருக்கின்றதோ, விண்ணோர் - தேவர்களுடைய, ஊர்புக - ஊர்க்குச்செல்லுவதாக, அமைத்த - உண்டாக்கின, படி - வாசற்படியும், கால்கொல் - நிலைகாலுமோ, உலகேழும் - எழுலகமும், சோர்வில - தளர்வில்லாமல் ஜலப்பிரளயகாலத்திலே, நிலைக்க - (இந்தஊர்க்குள்ளே) நிலைகொண்டிருப்பதாக, நடு - நடுவிலே துவாரமுளதாக, இட்டது - செய்துநிறுத்தினது, ஒரு- ஆகியவொரு, தூணோ - தூண்தானோ, கடற்கு - இந்தக்கடலுக்கு, நீர்புகு - ஆற்றுநீரெல்லாஞ் சேர்ந்துவருவதான, வழியோ என, மதகுதானோ என்று நினைந்தான்- எண்ணினர்—எ-று. (௬௬)

எழுலகின்வாழுமுயிர்யாவையுமெதிர்ந்தால்
ஊழின்முறையன்றியுடனேபுகுதலுண்டே
வாழியரியங்குவழியீதெனவகுத்தால்
ஆழியுளவேழினளவன்றுபகையென்றான்.

இ-ள். எழுலகின் - இந்த எழுலகங்களிலும், வாழும் - தங்குவன ஆன, உயிர் யாவையும் - எல்லா உயிர்களும், எதிர்ந்தால் - ஒருசேரத்திரண்டுவந்தாலும், ஊழின் முறை - கிரமகிரமமாக, அன்றி - செல்லுவதையல்லாமல், உடனே - எல்லா உயிர்களும் ஒருசேர, புகுதல் - நுழைந்துசெல்லுதற்கு, உண்டே - (வாயில்) அகலமுடையதாயிருக்கிறதே இதுபோலகலமுள்ள தெங்குமில்லையென்றபடி, வாழியர் - இவ்வூர்க்குள்ளே வாழுமவர்கள், இயங்கு - சாதாரணமாகச் செல்லுவதும் வருவதுமான, வழி ஈது என வகுத்தால் - வாயில்வழி இப்படிப்பட்டதாக அமைத்திருந்தால், பகை - இதிலுள்ளபகைவருக்கு அளவு, ஆழி - கடல்களாக, உள - உண்டான, ஏழினளவு - ஏழினளவும், அன்று - போதாது, என்றான் - என்றுநினைத்தார்—எ-று.

வெள்ளமொருநூறொடொருநூறுமுடைவீரக்
கள்ளவினைவெவ்வலியரக்கரிருகையும்
முள்ளெயிறும்வாளுமுறமுன்னமுறைநின்றார்
எள்ளரியகாவலினையண்ணலுமெதிர்ந்தான்.

இ-ள். வெள்ளம் ஒரு நூறொடொருநூறும் - இருநூறுவெள்ளம் என்னும் அளவை, உடை - உடைய, வீரம் - வீரமும், கள்ளவினை - திருட்டுச் செய்கையும், வெவ்வலி - கொடிதான சாமர்த்தியமுமுள்ள, அரக்கர் - ராக்ஷதர்கள், இருகையும்- இருபுறத்திலும், முள் - முள்ளுப்போன்ற, எயிறும் - வக்கிரதந்தங்களும், வாளும்- கையில்வாளாயுதங்களும், உற - தோன்ற, முன்னம் - முன்னே, முறை - காவலாக நிற்கும்படியே, நின்றார் - நின்றார்கள், எள்ளரிய - அசட்டைபண்ணக்கூடாத, காவலினை - அப்படிநிற்கிற காவற்படைகளை, அண்ணலும் - அனுமாரும், எதிர்ந்தான்- கண்டார்—எ-று. (௬௮)

சூலமழுவாளொடயிலோடுமரமுலக்கை
கால்வரிவிற்பகழிகற்பணமுசுண்டி

கோல்கணையநேமிகுலிசஞ்சுரிகைகுந்தம்
வாலமுதலாயுதம்வலித்தனர்வலத்தார்.

இ-ள். சூலம் – சூலாயுதங்களும், மழு – மழுவாயுதங்களும், வாள் ஒடு – வாளாயுதங்களுடனே, அயில் – வேலாயுதங்களும், தோமரம் – தோமரங்களும், உலக்கை – இருப்புலக்கைகளும், காலன் – யமனுக்கொப்பான, வரி – வரிந்த, வில் – விற்களும், பகழி – அம்புகளும், கப்பணம் - கப்பணங்களும், முசுண்டி - முசுண்டிகளும், கோல் – தடிகளும், கணையம் – வளைதடிகளும், நேமி – சக்கராயுதங்களும், குலிசம்- வச்சிராயுதங்களும், சுரிகை – சிற்றறுவாளும், குந்தம் - கைவேல்களும், வாலம்-பிண்டிபாலங்களும், முதல் – முதலான, ஆயுதம் – ஆயுதவகைகளிலே, வலித்தனர் – சாமர்த்தியர்களான, வலத்தார் – பலசாலிகள்—எ-று. (சுகூ)

அங்குசநெடுங்கவணயிற்சிலைவழங்கும்
வெங்குசையபாசமுதல்வெய்யபயில்கையார்
செங்குருதியன்னசெறிகுஞ்சியர்சினத்தோர்
பங்குனிமலர்ந்தொளிர்பலாசவனமொப்பார்.

இ-ள். அங்குசம் – அங்குசமும் யானைத்தோட்டியும், நெடுங்கவண் – நீண்ட கவண்களும், அயில் – கலப்பைகளும், சிலை – ஒலியை, வழங்கும் – தருவதான, வெம் - வெவ்விய, குசைய் – கடிவாளத்தையுடைய, பாசம் – கயிறு, முதல் – முதலான, வெய்ய - கொடிய ஆயுதங்கள், பயில் - பழகுகின்ற, கையார் - கைகளையுடையவர்கள், செங்குருதி – சிவந்தரத்தத்தை, அன்ன – ஒப்பான, செறி – நெருங்கின, குஞ்சியர்- உரோமங்களுள்ளவர்கள், சினத்தோர் - கோபத்தின்மிகுத்தவர்கள், பங்குனி - பங்குனிமாதத்திலே, மலர்ந்து - விரிந்து, ஒளிர் - விளங்குகின்ற, பலாசவனம் - செம்முருக்கவனத்தை, ஒப்பார் - செம்மயிரினாலே ஒத்தவராய்நிற்கிறார்கள்—எ-று.(எ0)

அளக்கவரிதாகியகணக்கொடயனிற்கும்
விளக்கினமிருட்டனைவிழுங்கிவெளிகால
உளக்கடியகாலன்மனமுட்குமணிவாயில்
இளக்கமில்கடற்படையிருக்கையையெதிர்ந்தான்.

இ-ள். அளக்க அரிதாகிய - அளவுசெய்யக்கூடாத, கணக்கொடு - கணக்குடனே, அயல் - இருபுறத்திலும், நிற்கும் - நிற்கிற, விளக்கினம் - விளக்கின்வரிசைகள், இருள்தனை – இருட்டை, விழுங்கி - கபளீகரித்து, வெளி - வெளிச்சத்தை, கால - விட, உளக்கடிய - கடினசித்தனான, காலன் - யமனும், மனம்உட்கும் - மனம் அஞ்சுவதான, மணி - அழகிதான, வாயில் - கோட்டைவாயிலில், இளக்கம் இல்-விலகுதலில்லாத, கடல் - கடல்போன்ற, படையிருக்கையை - சேனைகளிருப்பை, எதிர்ந்தான் - கண்டார்—எ-று. (எக)

எவ்வமரரெவ்வவுணரெவ்வருளரென்னே
கவ்வைமுதுவாயிலினெடுங்கடைகடப்பார்
தெவ்வரிவர்சேமமிதுசேவகனும்யாமும்
வெவ்வமர்தொடங்கிடினெனுய்விளையுமென்றான்.

இ-ள். கவ்வைமுது - சத்தமிகுந்துள்ள, வாயிலின்நெடுங்கடை - இந்தநீண்டகடைவாயிலை, கடப்பார் - கடந்துசெல்லத்தக்கவர்கள், எவ்அமரர்உளர் - தேவரில்

யாரிருக்கிறார்கள், எவ்அவுணர்உளர்-அசுரரில்யாரிருக்கிறார்கள், எவ்வர்உளர்-இன்னம் வலியரில் யாரிருக்கிறார்கள், என்னே - இது என்னஆச்சரியம், தெவ்வர்-நமக்குப்பகையானவர்கள், இவர் - இத்தன்மையர்கள், சேமம் - காவலோ, இது - இப்படிப்பட்டது, சேவகனும் - ஸ்ரீராமனும், யாமும்-வானரர்களான நாமும்வந்து, வெவ்அமர் - கொடிதானசண்டையை, தொடங்கிடின் - ஆரம்பஞ்செய்தால், என்னாய-எப்படியாக, விளையும் - முடியும், என்றான் - என்றுநினைத்தார்—எ-று. எவ்வமரரெவ்வருளரென்பதை எந்தத்தேவரில் யாரிருக்கிறார்கள் எந்த அசுரரில் யாரிருக்கிறார்களென்னவுமாம், எவர் எவ்வரென விரித்தல்விகாரம். (எஉ)

கருங்கடல்கடப்பதரிதன்றுநகர்காவற்
பெருங்கடல்கடப்பதரிதெண்ணமிறைபேசின்
அருங்கடன்முடிப்பதரிதாமமர்கிடைக்கின்
நெருங்கமர்கிடக்குநெடுநாளெனநினைந்தான்.

இ-ள். கருங்கடல் - இந்தக்கரியகடலை, கடப்பது - கடந்துவருகிறது, அரிது அன்று - அருமையுள்ளதல்ல, நகர் - இந்தஊருக்கு, காவல் - காவலான, பெருங்கடல் - சேனைப்பெருங்கடலை, கடப்பது - கடக்கிறதே, அரிது - அருமையுள்ளது, இறை - கொஞ்சமேனும், எண்ணம்பேரில்-நமதுநினைவுபிசகினால்அசட்டையானால், அரும் - செய்தற்கரிதான, கடன் - பிராட்டியைக் கொண்டுபோய்ச் சொல்லுகிற கடனை, முடிப்பது - தீர்க்கிறது, அரிதுஆம்-அருமையுள்ளதேஆம் ஆகலால், அமர்-இவரொடுசண்டை, கிடைக்கில் - எனக்குநேரிட்டால், நெருங்கு - நெருங்கின, அமர் - அந்தச்சண்டை கிடக்கும், நெடுநாள் - நெடுங்காலமானாலும் முடிவுபெறாதிருக்கும், எனநினைந்தான் - என்றுநினைத்தார்—எ-று. (எங)

வாயில்வழிசேறலரிதன்றியும்வலத்தோர்
ஆயிலவர்வைத்தவழியேகலழகன்றால்
காய்கதிரியக்கின்மதிலைக்கடிதுதாவிப்
போயிநகர்புக்கிடுவெனென்றோரயல்போனான்.

இ-ள். வாயில்வழி - ஆனாலுமிந்தவாயில்வழியாக, சேறல் - நான்செல்லுதல், அரிது - அருமையுள்ளதே, அன்றியும் - அல்லாமலும், வலத்தோராயில் - உள்ளே போகிறவர்கள் சாமர்த்தியமுள்ளவர்களானால், அவர்வைத்தவழி - அவர்கள் விட்டிருக்கிறவழியே, ஏகல் - செல்லுதல், அழகுஅன்று - அழகுள்ளதல்ல, காய் - எரிக்கின்ற, கதிர் - சூரியன், இயக்குஇல் - சஞ்சரித்தலில்லாத, மதிலை - இந்தமதிலை, கடிது - விரைவிலே, தாவி - தாண்டி, போய் - சென்று, இந்நகர் - இந்தஊருக்குள்ளே, புக்கிடுவெனென்று - செல்லுவேனென்று, ஓரயல்-ஒருபுறத்திலே, போனான்-சென்றார்—எ-று. அன்று - ஒருமைமுடிபு, அல்ல-பன்மைமுடிபு, என்பதுணர்க.

வேறு.

நாணாளுந்தானல்கியகாவனனிமூதூர்
வாணாளங்நாள்போவதின்மேலேவழிநின்றாள்
தூணாமென்னுந்தோளுடையானைச்சுடரோனைக்
காணாவந்தகட்செவியென்னக்கனல்கண்ணாள்.

இ-ள். நாணாளும் - தினந்தினமும், தான் - தான்ஒருத்தியே, காவல்நல்கிய-காவலைச்செய்துவருகிற, நனிமூதூர் - மிகப்பெரியஊரிலே, வாழ்நாள் - வர்த்திக்கிற

காலத்தில், அந்நாள் - அன்றைத்தினம், போவதின்மேலே - அனுமார்செல்லுவதான அவ்விடத்திலே, வழிநின்ருள் - வழியிலேநிற்றலானுள் அவள், தூண்ஆமென்னும் - தூணேநிகராமென்பதான, தோளுடையானை - தோள்களையுடைய அனுமாரை, சுடரோனைக்காணு - சூரியனைக்கண்டு, வந்த - வருவதான, கட்செவியென்ன - பாம்புபோல், கனல் - கொதிக்கின்ற, கண்ணுள் - கண்களையுடையவள்—எ-று. மூதூர்வாழ்நா ளன்னுளென்று பாடமாம்போது அவ்வூருக்கு ஆயுள்போன்றவள் என்ரும் ஆகவே இவள்முடிந்தால் அவ்வூரும் முடிந்தழியுமென்றுகருத்து போவதின்மேலே போவதற்குமுன்னே என்க. (௪௫)

எட்டுத்தோளாணு லுமுகத்தாளுலகேழும்
தொட்டுப்பேருஞ்சோதிநிறத்தாள்சுழல்கண்ணுள்
முட்டிப்பேரின்மூவுலகத்தைமுதலோடும்
கட்டிச்சீறுங்காவல்வலத்தாள்கமையில்லாள்.

இ-ள். எட்டுத்தோளான்-எட்டுத்தோள்களுள்ளவள், நாலுமுகத்தாள்-நான்குமுகங்களுள்ளவள், உலகேழும் - மேலேழுலோகங்களையும், தொட்டு - தீண்டி, பேரும் - அதற்குமேலும் செல்லுவதான, சோதி - பிரகாசமான, நிறத்தாள் - நிறமுள்ளவள், சுழல் - சுழலுகின்ற, கண்ணுள் - கண்களுள்ளவள், முட்டுப்பேரில்-(பகைவர்கள்) மோதிவந்தால், மூவுலகத்தை - ராவணனுடைய உள்கோட்டையான மூன்றரணையும், முதலோடும் - அடியுடனே, கட்டி - தனக்குள்ளாகச் செய்துகொண்டு, சீறும் - வந்தபகைவருடனே கோபிப்பதான, காவல் - காக்குஞ்செய்கையில், வலத்தாள் - வல்லமையுள்ளவள், கமை-பொறுமை, இல்லாள்-இல்லாதவள்—எ-று.

பாராநின்ருளெண்டிசைதோறும்பலரப்பால்
வாராநின்ருரோவெனமாரிமழையேபோல்
ஆராநின்ருணூபுரமச்சந்தருதாளாள்
வேராமெய்யாண்மின்னினிமைக்குமிளிர்பூணுள்.

இ-ள். பலர் - அனுமாரையல்லாது இன்னம் பலபேர்துணையாக, அப்பால்-தூரத்திலே, வாராநின்ருரோஎன - வருகிருர்களோஎன்று, எண்டிசைதோறும்-எட்டுத்திக்கிலும், பாராநின்ருள்-பார்க்கிருள், மாரிமழையேபோல்-மழைகாலத்து மேகம்போல், ஆராநின்ருள் - கர்ச்சிக்கிறவள், நூபுரம் - காற்சிலம்புகள், அச்சம்-ஒலியாற் பிறருக்குப்பயத்தை, தரு - கொடுப்பதான, தாளாள் - கால்களையுடையவள், வேர்ஆம் - வேர்வையுண்டாகுகின்ற, மெய்யாள் - சரீரமுள்ளவள், மின்னின்-மின்போல், இமைக்கும் - விளங்குவனவான, மிளிர்பூணுள் - ஒளிகொண்ட ஆபரணங்களுள்ளவள்—எ-று. (௪௭)

வேல்வாள்சூலம்வெங்கதைபாசம்விளிசங்கம்
கோல்வாள்குந்தங்கொண்டகரத்தாள்வடகுன்றம்
போல்வாடிங்கள்போழிநெயிற்ருள்புகைவாயிற்
கால்வாள்காணிற்காலனுமுட்குங்கதமிக்காள்.

இ-ள். வேல் - வேலும், வாள் - வாளும், சூலம் - சூலமும், வெங்கதை-வெவ்விதான கதையும், பாசம் - கயிறும், விளி - ஒலிக்கின்ற, சங்கம் - சங்கும்,கோல்-அம்பும், வாள் - ஒளிபொருந்தின, குந்தம் - எறியீட்டியும், கொண்ட - ஆகிய இவைகளைப்பற்றின, கரத்தாள் - கைகளையுடையவள், வடகுன்றம் போல்வாள் - மேருமலை

யை ஒப்பானவள், திங்கட்போழின் - சந்திரதுண்டம்போலும், எயிற்றுள் - பற்களை யுடையவள், புகை - புகையை, வாயில் - வாய்வழியே, கால்வாள் - விடுகின்றவள், காலனும் - யமனும், காணில் - கண்டால், உட்கும் - அஞ்சுவதான, கதம் - கோபத்திலே, மிக்காள் - மிகுந்தவள்—எ-று. (எஅ)

அஞ்சுவணத்தினுடையுடுத்தாளரவெல்லாம்
அஞ்சுவணத்தின்வேகமிகுத்தாளருளில்லாள்
அஞ்சுவணத்தினுத்தரியத்தாளலையாரும்
அஞ்சுவணத்தின்முத்தொளிராரத்தணிகொண்டாள்.

இ-ள். அஞ்சுவண்ணத்தின் - பஞ்சவர்ணங்களுள்ள, ஆடை - வஸ்திரத்தை, உடுத்தாள் - கட்டினவள், அரவெல்லாம் - பாம்புகளெல்லாம், அஞ்சு - பயப்படுவதான, உவணத்தின் - கருடனைப்போல், வேகம் - வேகத்திலே, மிகுத்தாள் - மிகுந்தவள், அருளில்லாள் - இரக்கமில்லாதவள், அம் - அழகிதான, சுவணத்தின் - சுவர்ணத்தாலான, உத்தரியத்தாள் - மார்யாப்புள்ளவள், அலைஆரும் - அலைகள்நிரம்பின, அம் - நீரிலுள்ள, சு - நல்ல, வள் - பிரகாசமுடைய, நத்தின் - சங்கிலுண்டான, முத்து - முத்துகளாலே, ஒளிர் - விளங்குகின்ற, ஆரத்து - மாலையை, அணிகொண்டாள் - அணிந்திருக்கிறவள்—எ-று. (எகூ)

சிந்தாரத்தின்செச்சையணிந்தாள்தெளிநூல்யாழ்
அந்தாரத்தினேர்வருசொல்லாளறைதும்பி
கந்தாரத்தினின்னிசைபாடிக்களிகூரும்
மந்தாரத்தின்மாலையலம்புமகுடத்தாள்.

இ-ள். சிந்து - மணஞ்சிந்துவதான, ஆரத்தின்செச்சை - சந்தனக்குழம்பை, அணிந்தாள் - அணிந்தவள், தெளி - தெளிந்த, நூல்யாழ் - நூலின்படியானவீணையிலுள்ள, அம் - அழகிதான, தாரத்தின் - தாரமென்னும்இசைக்கு, நேர்வரு - சரிவருகின்ற, சொல்லாள் - சொற்களுள்ளவள், அறை - சத்திக்கின்ற, தும்பி - வண்டுகள், கந்தாரத்தின் - இசைப்பாட்டுப்போல், இன்னிசை - இனிதான இசைகள், பாடி - பாடுதல்செய்து, களிகூரும் - சந்தோஷமிகுகின்ற, மந்தாரத்தின் மாலை - மந்தாரப்பூமாலைகள், அலம்பும் - அசைவதான, மகுடத்தாள் - முடியை யுடையவள்—ள்-று.

எல்லாமுட்குமாழியிலங்கையிகன்மூதூர்
நல்லாளவ்வூர்வைகுறையொக்குநயனத்தாள்
நில்லாய்நில்லாயென்றுரைநேர்வாணினையாமுன்
வல்லேசென்றாண்மாருதிகண்டான்வருகென்றான்.

இ-ள். எல்லாம் - உலகங்களெல்லாம், உட்கும் - அஞ்சுவதான, ஆழி - கடல்சூழ்ந்த, இலங்கை - இலங்கையாகிய, இகல் - பலங்கொண்ட, மூதூர் - பெரியஊருக்கு, நல்லாள் - நன்மையேசெய்பவள், அவ்வூர் - அந்தஇலங்கையானது, வைகு - தங்குவதான, உறை - உறைப்போர்வையை, ஒக்கும் - ஒப்பான, நயனத்தாள் - கண்களையுடையவள், நில்லாய் - நில்லாயென்று, நில்லு - நில்லென்று, உரை - வார்த்தை, நேர்வாள் - சொல்லுவாளாக, நினையாமுன் - நினைத்து அனுமாருக்குமுன்னே, வல்லே - விரைவிலே, சென்றாள் - போனாள், கண்டான்மாருதி - அதைஅனுமார்கண்டு, வருகென்றான் - என்கிட்டவாவென்றார்—எ-று. (அக)

ஆகாசெய்தாயஞ்சலைபோலுமறிவில்லாய்
சாகாமூலந்தின்றுழல்வார்பாற்சலமென்னும்

பாகாரிஞ்சிப்பொன்மதிருவிப்பதையாதே
போகாயென்றாள்பொங்கனலென்னப்புகைகண்ணாள்.

இ-ள். ஆகா - தகாதசெய்கையை, செய்தாய் - பண்ணினாய், அறிவில்லாய்-ஒபுத்தியில்லாதவனே, அஞ்சலைபோலும் - பயப்படுகின்றிலை, சாகா - மரக்கிளைகளிலிருந்து, மூலம் - மரவேர்களை, தின்று - புசித்து, உழல்வார்பால் - அலைகிறவர்களிடத்திலே, சலம் - எனதுகோபம், என்ஆம் - யாதுபயன்படும், பாகு - சுண்ணச்சாந்தின்குழம்பு, ஆர் - நிரம்பப்பூசினதினாலே, இஞ்சி - இறுகுதலையுடையதாய், பொன்-பொன்மயமான, மதில் - இந்தமதிலை, பதையாது - அச்சமில்லாமல், தாவி - தாண்டி, போகாய் - செல்லாதேபோ, என்றாள் - என்றுசொன்னாள், பொங்கு - கொதிக்கின்ற, அனலென்ன - நெருப்புப்போல், புகை - புகைகின்ற, கண்ணாள் - கண்களையுடையவள்—எ-று. (அஉ)

களியாவுள்ளத்தண்ணன்மனத்திற்கதமூழ்க
விளியாநின்றேநீதிநலத்தின்வினையோர்வான்
அளியாலிவ்வூர்காணுநலத்தினணைகின்றேன்
எளியேனுற்றாலியாவதுனக்கிங்கிழவென்றான்.

இ-ள். களியா - மயங்காத, உள்ளத்து - மனத்தையுடைய, அண்ணல் - அனுமார்தமது, மனத்தில் - மனத்திலே, கதம் - கோபம், மூழ்க - அதிகமாக அதனால், விளியா - வெளியேகோபியாமல், நின்று - நின்றுகொண்டு தமது, நீதிநலத்தின்-நல்லநீதிமார்க்கத்தினாலே, வினை - அவள்செய்கையை, ஓர்வான் - உணர்தற்காக, அளியால் - உன்தயவினாலே, இவ்வூர் - இந்த ஊரை, காணும் - காணவேண்டின, நலத்தின் - ஆசையினால், அணைகின்றேன் - போகிறேன், எளியேன் - உனக்குச்சுலபனானநான், உற்றால் - இவ்வூர்க்குள்ளேபோனால், உனக்கு இங்கு - இங்கேதிரிகிறவுனக்கு, இழவுயாவது - நஷ்டியென்ன, என்றான் - என்றுசொன்னார்—எ-று. ()

என்னாமுன்னமேகெனவேகாதெதிர்மாற்றம்
சொன்னாயேநீயாவனடாதொல்புரமட்டான்
அன்னாரேனுமஞ்சுவரெய்தற்களியுற்றால்
உன்னாலெய்துமூர்கொலிவ்வூரென்றுறநக்காள்.

இ-ள். என்னாமுன்னம் - அனுமாரிப்படிச்சொல்லுதற்குமுன்னே, ஏகென-நான்போவென்றுசொல்ல, ஏகாது - நீபோகாமல், எதிர்மாற்றம் - எதிர்வார்த்தை, சொன்னாயே - சொல்லினாய், நீயாவனடா - நீயாரடா, தொல் - பழையதான, புரம்-திரிபுரத்தை, அட்டான் - எரித்தவனே, அன்னாரேனும் - ஒப்பவரானாலும், எய்தற்கு - இவ்வூருட்போவதற்கு, அஞ்சுவர் - பயப்படுவோர்கள், அளியுற்றால் - என்தயவுண்டானாலும், உன்னால் - (குரங்குவடிவான) உன்னாலே, எய்தும் - போகத்தக்க, ஊர்கொல் - ஊரோ, இவ்வூரென்று - இந்தவூரென்று, உற - மிகவும், நக்காள் - சிரித்தாள்—எ-று. (அச)

நக்காளைக்கண்டையன்மனத்தோர்நகைகொண்டான்
நக்காய்நீயார்யார்சொலவந்தாயுனதாவி
உக்காலேதாமோடலையென்றாளினியிவ்வூர்
புக்காலன்றிப்போகிலெனென்றான்புகழ்கொண்டான்.

இ-ள். நக்காளை - அப்படிச்சிரித்தவளை, கண்டு - பார்த்து, ஐயன் - அனுமார், மனத்து - தமதுமனத்துள்ளே, ஓர்நகை - ஒருவகைச்சிரிப்பை, கொண்டான்-

கொண்டவராக அப்போது, நக்காய் - சிரித்தவனே, நீயார் - யாவன் நீ, யார்-எவன், சொல - போகச்சொல்ல, வந்தாய் - வந்தனை, உனதாவி - உன்னுயிர், உக்கால்-சிந்திப்போனால் அதன்பின்பு, ஏதாம் - யாது பயன் உண்டாகும், ஓடலை - நீ ஓடிப்போகாமல் நிற்கிறாய், என்றாள் - என்றுசொன்னாள் அதற்கு, இனி இவ்வூர் - இவ்வூர்க்குள்ளே, புக்காலன்றி-போனாலல்லது, போகிலேன்-வெளிச்செல்லேன், என்றான்-என்றுசொன்னார், புகழ்கொண்டான் - கீர்த்திமிக்க அனுமார்—எ-று. அக்கால் நீயாரென்று பாடமாம்போது அப்போது என்க. (அறு)

வஞ்சங்கொண்டான்வானரமல்லன்வருகாலன்
துஞ்சுங்கண்டாலென்னையிவன்சூழ்திரையாழி
நஞ்சங்கொண்டகண்ணுதலைப்போனகுகின்றான்
நெஞ்சங்கண்டேகல்லெனநின்றேநினைவுற்றாள்.

இ-ள். வஞ்சங்கொண்டான் - வஞ்சனை வடிவாயிருக்கிறான், வானரம்-குரங்குவடிவுள்ளவன், அல்லன் - அல்லனாகும், வருகாலன் - அந்தியகாலத்தில் வருகிற யமனும், என்னைக்கண்டால் - என்னைப்பார்த்தால், துஞ்சும் - இறந்துபோவான், இவன் - இவனே, சூழ்திரை ஆழி - உலகைச்சூழ்ந்த அலைகளையுடைய கடலினுண்டான, நஞ்சங்கொண்ட - விடத்தைக் கண்டத்திலேகொண்ட, கண்நுதலைப்போல-நெருப்புக்கண்ணை நெற்றியிலேயுடைய சிவனைப்போல், நகுகின்றான் - விளங்குகிறான் என்று, நெஞ்சம் - அனுமாருடைய மனோதிடத்தை, கண்டு - தெரிந்து, கல்லெனநின்று - ஒருகல்லைப்போல்நின்று, நினைவுற்றாள் - ஆலோசித்தாள்—எ-று. ()

கொல்வாமன்றேற்கோளுறுமிவ்வூரெனல்கொண்டாள்
வெல்வாய்நீயேவென்றியெனத்தன்விழிதோறும்
வல்வாய்தோறும்வெங்கனல்பொங்கமதில்வாயில்
செல்வாயென்னாமூவிலைவேலைச்செலவிட்டாள்.

இ-ள். கொல்வாம் - இனி இவனைக்கொல்லுவோம், அன்றேல் - நம்மால் கொல்லப்படானானால், இவ்வூர் - இந்த ஊர் இவனாலே, கோளுறும் - கொள்ளப்படுவதாம், எனல் - என்னுநியதியை, கொண்டாள் - மனத்திலேகொண்டவளாய்,நீயே-நீ ஒருவனே உனது, வென்றி - ஜெயம்பண்ணுநினைவின்படி, வெல்வாய் என - ஜெயிக்கக்கடவையென்று, தன் விழிதோறும்-தனது கண்களிலும், வல் வாய்தோறும்-வலிய வாயிலும், வெங் கனல் - வெவ்விய நெருப்பு, பொங்க - மிகுதியாக உள்ளே போகிறவனானால், மதில் - மதில் சூழ்ந்திருக்கிற, வாயில் - கோட்டை வாயில் வழியாக, செல்வாய் - போ என்று, மூவிலைவேலை - தன்கையிலிருக்கிற மூத்தலைச்சூலத்தை, செலவிட்டாள் - எறிந்தாள் அனுமார்மேற்பட எறிந்தாள்—எ-று. (அஎ)

தடித்தாமென்னத்தன்னெதிர்செல்லுந்தழல்வேலைக்
கடித்தானாகம்விண்ணின்முரிக்குங்கருளன்போல்
ஒடித்தான்கையாலும்பருவப்பவுயர்காலம்
பிடித்தானெஞ்சந்துண்ணெனவெண்ணம்பிழையாதாள்.

இ-ள். தடித்து - மின்னலே, ஆமென்ன - சரியென்னும்படி, தன் எதிர்-தனக்குமுன்னே, செல்லும் - வருவதான, தழல் - அக்கினி ஜாச்சுவியமான, வேலை-அந்தச் சூலத்தை, கடித்தான் நாகம் - பாம்பை வாயிலே கடித்தவனாகி, விண்ணில்-ஆகாயத்திலே நின்று, முரிக்கும் - காலாலேசிதறச்செய்கிற, கருளன்போல் - கருட

ஊைப்போல், உம்பர் - தேவர்கள், உவப்ப - சந்தோஷிக்க, கையால்-தமது கையினுலே, ஒடித்தான் - ஒடித் தெறிந்தார் அப்போது, உயர்காலம் - நெடுங்காலமும், பிடித்தாள்-அச்சூலத்தைப் பிடித்திருந்த அவள், நெஞ்சம்-மனது, துண்ணென - திடுக்கென்று, எண்ணம் - தனது நினைவு, பிழையாதாள்-பிசகாதவளாகி—எ-று. (அஅ)

இற்றுச்சூலநீறெழுகாலத்தெறியொப்பாள்
மற்றுத்தெய்வபலபடைகொண்டுமலைவாண்மேல்
உற்றுக்கையாலாயுதமெல்லாமொழியாமல்
பற்றிக்கொள்ளாவிண்ணிலெறிந்தான்பழியோர்வான்.

இ-ள். இற்றுச்சூலம் - அந்தச்சூலமுறிந்து, நீறெழு - தூளாகப்போகிற, காலத்து-காலத்துக்குள்ளே, எரிஒப்பாள் - நெருப்புப்போன்றவளாய், மற்றும் - இன்னமுமுள்ள, தெய்வம்-தெய்வத்தன்மையான, பல்படைகொண்டு - பலஆயுதங்களாலும், மலைவாள்மேல்-சண்டைசெய்கிறவள்மேலே, உற்று - சென்று, கையால் - தமதுகைகளாலே, ஆயுதமெல்லாம்-ஆயுதங்களையெல்லாம், ஒழியாமல் - தப்பாமல், பற்றி - அவள்கைகளைப்பிடித்து, கொள்ளா - பறித்து, விண்ணில் – ஆகாயத்திலேசெல்ல, எறிந்தான் – வீசினாராகி, பழி - பெண்பழியென்று, ஓர்வான் - எண்ணுகிறவரானார்—எ-று. (அகூ)

வழங்குந்தெய்வப்பல்படைகாணுண்மலைவான்மேல்
முழங்கும்மேகமென்னவுரப்பிமுதிர்கின்றாள்
கழங்கும்பந்துங்குன்றுகொடாடுங்கரமோச்சித்
தழங்குஞ்செந்தீச்சிந்தவடித்தாடகவில்லாள்.

இ-ள். வழங்கும் – பிரமன்கொடுத்த, தெய்வம் – தெய்வத்தன்மையுள்ள, பல்படை – பலஆயுதங்களும், காணுள் – தன்னிடத்தில்லாதவளாகிய, மலைவான்மேல்- சண்டைபண்ணுகிற அனுமார்மேலே, முழங்கும் – இடிக்கிற, மேகமென்ன – மேகம்போல், உரப்பி – அதட்டி, முதிர்கின்றாள்-அதிககோபங்கொண்டவளாய், கழங்கும்- கழற்காயாகவும், பந்தும் – பந்தாகவும், குன்றுகொடு – மலைகளைக்கொண்டு, ஆடும்- ஆடுவதான, கரம் – கைகளை, ஓச்சி – ஓங்கி, தழங்கும்-சத்திக்கின்ற, செந்தீ – சிவந்த நெருப்பு, சிந்த – சிதறுவதாக, அடித்தாள் – அறைந்தாள், தகவு இல்லாள் – புத்தியில்லாதவள்—எ-று. (கூ0)

அடியாமுன்னமங்கையனைத்துமொருகையால்
பிடியாவென்னேபெண்ணிவள்கொல்லிற்பிழையென்னு
ஒடியாநெஞ்சத்தோரடிகொண்டானுயிரோடும்
இடியேறுண்டநாகமெனப்பாரிடைவீழ்ந்தாள்.

இ-ள். அடியா – அவள் அப்படி அடியாமல், முன்னம் – முந்தி, அம்கைஅனைத்தும் – அவளுடைய அழகியகைகளையெல்லாம், ஒருகையால் பிடியா – தமதொருகையாலே சேரப்பிடித்து, என்னே – இதுஎன்ன துர்விவகாரம், பெண் இவள் – பெண்ணுயிருக்கிருளிவள், கொல்லில் – கொன்றால், பிழையென்னு – தோஷமென்று, ஒடியா – அவளுடையதகராத, நெஞ்சத்து – மார்பிலே, ஓரடிகொண்டான் – ஒரு அறைஅறைந்தார், உயிரோடும் – உயிருடனே, இடியேறுண்ட-நெருப்பிடி விழுதலான, நாகமென – மலைபோல், பாரிடை – பூமியிலே, வீழ்ந்தாள் – விழுந்தாள்—எ-று.

விழுந்தாளைஞ்தாள்வெங்குருதிச்செம்புனல்வெள்ளத்
தழுந்தாநின்றுணுன்முகனுர்தம்மருளுன்றி

எழுந்தாள்யாருமியாவையுமெல்லாவுலகத்தும்
தொழுந்தாள்வீரன்றாதுவன்முன்னின்றிவைசொன்னாள்.

இ-ள். விழுந்தாள் - கீழேவிழுந்தவள், நொந்தாள் - வருந்தினள், வெம்-வெப்பமான, குருதி - இரத்தமான, செம் - சிவந்த, புனல்வெள்ளத்து - நீர்ப்பிரவாகத்திலே, அழுந்தாநின்றாள்-அழுந்தப்படுகிறவள், நான்முகனார்தம் - பிரமாவினுடைய, அருள் - அருளுதலை, ஊன்றி - உள்ளேநிறுத்தி, எழுந்தாள் - எழுந்திருந்தாள், யாரும் - சரங்களும், யாவையும்-அசரங்களும், எல்லாவுலகத்தும் - எந்தவுலகங்களிலாலும், தொழும்-வணங்குவதான, தாள்-பாதங்களையுடைய, வீரன்-ஸ்ரீராமனுக்கு, தூதுவன் - தூதுவந்தஅனுமாருக்கு, முன்னின்று - முன்னேநின்று, இவை - இவ்வார்த்தைகளை, சொன்னாள் - சொல்லலானாள்—எ-று. (சுஉ)

வேறு.

ஐயகேள்வையநல்குமயனருளமைதியாக
எய்தியிம்மூதூர்காப்பெனிலங்கைமாதேவியென்பேர்
செய்தொழிலிழுக்கியுள்ளந்திகைத்திந்தச்சிறுமைசெய்தேன்
உய்தியென்றளித்தியாயினுணர்த்துவலுண்மையென்றாள்.

இ-ள். ஐய - ஐயனே, கேள் - கேட்கக்கடவை, வையம்-உலகத்தை, நல்கும்-சிருஷ்டித்த, அயன் - பிரமாவினுடைய, அருள் - அருளுதலே, அமைதியாக - ஏற்பாடாக, எய்தி - வந்து, இம்மூதூர் - இந்தப்பெரியஊரை, காப்பென் - காவல்செய்வதானேன், இலங்கைமாதேவி என்பேர்-என்பேரோ இலங்கைமாதேவி, செய்தொழில் - நான்செய்யுங்காவற் செய்கையினாலே, இழுக்கி-தவறுதலாய், உள்ளந்திகைத்து - புத்திமயங்கி, இந்தச்சிறுமைசெய்தேன்-இப்படிப்பட்ட குற்றம்பண்ணினேன், உய்தியென்று - தப்பிப்போவென்று, அளித்தி - ரக்ஷிக்கவேணும், ஆயின் - ஆனால், உண்மை உணர்த்துவல் - மெய்சொல்லுகிறேன், என்றாள் - என்று—எ-று. (சுரு)

எத்தனைகாலங்காப்பல்யானிந்தமூதூரென்று
முத்தனைவினவினேற்குமுரண்வலிக்குரங்கொன்றுன்னைக்
கைத்தலமதனாற்றீண்டிக்காய்ந்தவன்றென்னைக்காண்டி
சித்திரநகரம்பின்னைச்சிதைவதூஉதிண்ணமென்றான்.

இ-ள். யான் இந்தமூதூர் - நான் இந்தப்பெரியஊரை, எத்தனைகாலம் காப்பல்என்று - எவ்வளவுநாள் காக்கக்கடவேனென்று, முத்தனை - அந்தப்பிரமாவை, வினவினேற்கு-கேட்டஎனக்கு, முரண்வலி - மிகுந்தசாமர்த்தியமுள்ள, குரங்கொன்று-ஒருகுரங்கு, உன்னை-காவல்வேலைசெய்கிற வுன்னை, கைத்தலமதனால் - தன் கையினாலே, தீண்டி-தொட்டு, காய்ந்த - கொன்ற, அன்று - அக்காலம்வந்து, என்னைக்காண்டி - என்னைநீபார்ப்பாய், பின்னை - பின்பு, சித்திரம் - அழகான, நகரம்-இந்தஊர், சிதைவது - அழிந்துபோகிறது, திண்ணம் - மெய், என்றான் - என்று சொன்னார் பிரமதேவர்—எ-று. (சுச)

அன்னதேமுடிந்ததையவறம்வெல்லும்பாவந்தோற்கும்
என்னுமீதியம்பவேண்டுந்தகையதோவினிமற்றுன்னால்
உன்னியவெல்லாமுற்றுமுனக்குமுற்றுறாததுண்டோ
பொன்னகர்புகுதியென்னாப்புகழ்ந்தவளிறைஞ்சிப்போனாள்.

இ-ள். அன்னதே - அந்தப்பிரமா சொன்னபடியே, ஐயமுடிந்தது - ஐயா முடிவாயிற்று, அறம் - தருமமே, வெல்லும் - ஜெயிக்கும், பாவம் - பாவமே, தோற்

கும் - கெட்டுப்போம், என்னும் ஈது - என்பதான இது, இயம்பவேண்டும்-சொல்ல வேண்டுவதான, தகையதோ - தகுதியுள்ளதோ, இனிமற்று-இனிமேல், உன்னால்-உம்மாலே, உன்னிய - நினைக்கப்படுகிற, எல்லாம்-எல்லாக் காரியங்களும், முற்றும்-முடிவுபெறும், உனக்கு-உம்மால், முற்றாதது-முடிவாகாததும், உண்டோ - ஒன்று உண்டா இல்லை, பொன்னகர் - இந்தப் பொன்மயமான ஊர்க்குள்ளே, புகுதி யென்னா - இனிச் செல்லக்கடவீரென்று, புகழ்ந்து - அனுமாரைத்துதித்து, அவள்-அந்த இலங்கைமாதேவி, இறைஞ்சி-வணக்கஞ் செய்துகொண்டு, போனாள் - பிரமலோகத்துக்குப் போயினாள்—எ-று. (சுரு)

வீரனும்விரும்பிநோக்கிமெய்ம்மையேவிளையுமஃதென்
றூரியன்கமலபாதமகத்துறவணங்கியாண்டப்
பூரியரிலங்கைமூதூர்ப்பொன்மதிறாவிப்புக்கான்
சீரியபாலின்வேலைசிறுபிரைதெறித்ததன்னான்.

இ-ள். வீரனும் - பின்பு அனுமார், விரும்பி - ஆசை கொண்டு, நோக்கி-அவள்சொன்னதை ஆலோசித்து, மெய்மையே-நிஜமே, விளையும் - முடிவுபெறும், அஃது என்று - அப்படியாக என்று, ஆரியன்-ஸ்ரீராமனுடைய, கமல பாதம் - பாத பத்மங்களை, அகத்து உற - மனத்திலே நன்றாக, வணங்கி - வந்தனை செய்து கொண்டு, ஆண்டு - அங்கே, அ - அந்த, பூரியர் - கீழ்மக்களான ராக்ஷதருடைய, இலங்கை மூதூர் - பெரிய இலங்கையாகிய ஊரினது, பொன் மதில் - பொன்னாலான மதிலை, தாவி-தாண்டி, புக்கான் - போயினார், சீரிய - சிறந்த, பாலின்வேலை - பாற்கடலிலே, சிறுபிரை - கொஞ்சம்மோர், தெறித்தது-சிந்தினதை, அன்னான் - ஒப்பதாயினார்—எ-று. (சுசு)

வான்றொடர்மணியிற்செய்தமையறுமாடகோடி
ஆன்றபேரிருளைச்சீத்துப்பகல்செய்தவழகைநோக்கி
ஊன்றியவுதயத்துச்சியொற்றைவானுருளைத்தேரோன்
தோன்றினன்கொல்லோவென்னாவறிவனுந்துணுக்கங்கொண்டான்.

இ-ள். வான்தொடர்மணியில் - சூரியகாந்தக் கல்லால், செய்த - பண்ணின, மை அறு - குற்றம் அற்ற, மாடகோடி - கோடானுகோடி வீடுகளும், ஆன்ற - விசாலித்துப்பரவின, பேர் இருளை - பெரிய இருட்டை, சீத்து - போக்கி, பகல்செய்த-வெளிச்சஞ் செய்துகொண்டிருக்கிற, அழகை நோக்கி - அழகைப் பார்த்து, ஊன்றிய - நிலைகொண்டிருக்கிற, உதயத்து-உதயகிரியின், உச்சி - உச்சியிலே, ஒற்றை-ஒரு உருளையாய், வான்-ஆகாயத்திலே, உருளை-உருளுதலையுடைய, தேரோன்-தேர்மேல் வருகிற சூரியன், தோன்றினனோ என்னா - உதயமாயிற்றோ என்று, அறிவனும் - கால அளவுதெரிந்த அனுமார், துணுக்கம் கொண்டான் - அஞ்சுதலானார், எ-று. வான்தொடர்மணி - வானிலேசெல்லுகிறதினாலே அந்தரமணி விண்மணியென்று சூரியனுக்குப்பெயர். (சுஎ)

மொய்ம்மணிமாடமூதூர்முழுதிருளகற்றுந்தானே
மெய்ம்மையையுணரினுணுமிகையெனவிலங்கிப்போனான்
இம்மதிலிலங்கைநாப்பணெய்துமேற்றன்பாலெய்து
மிம்மினியல்லனோவவ்வெயிற்கதிர்வேந்தனென்றான்.

இ-ள். மூதூர் - இந்தப் பெரியவூரிலே, மொய் மணி - மணிகள் நிரம்பின, மாடம்தானே - வீடுகளே, முழுதும் இருள்-இருள்களையெல்லாம், அகற்றும்-போக்

கும், மெய்மையே - நிஜமாகவே, உணரில் - யோசித்துப்பார்த்தால், நாண் ஆம் - நமக்குவெட்கம் உண்டாம்,' மிகையென - நாம் அதிகமேயென்று வேண்டாதவனேயென்று, வெயிற்கதிர்வேந்தன் - சூரியன், விலங்கிப்போனான் - ஒதுங்கிச் செல்கிறவனானான், இம்மதில் - இந்த மதில்சூழ்ந்த, இலங்கை நாப்பண் - ஊர்நடுவே, எய்துமேல் - வருவானானால், தன்பால் - தன்முன்னே, எய்தும் - வருவ்தான, மிம்மினிகச்சோதம்போல்வான், அல்லனோ - ஆகானோ ஆவான், அ - அந்த, வெயில் - உஷ்ணகிரணங்களையுடைய, கதிர்வேந்தன் - சூரியபகவான், என்றான் - என்று நினைத்தார்—எ-று. (கூஅ)

பொசிவுறுபசும்பொற்குன்றிற்பொன்மதினடுவட்பூத்து
வசையறவிளங்குஞ்சோதிமணியினாலமைந்தமாடத்
தசைவிலவிலங்கைமூதூராரிருளின்மையாலே
நிசிசரராயிற்றம்மாநெடுநகர்நிருதரெல்லாம்.

இ-ள். பொசிவுஉறு - ஒளிபரம்புகின்ற, பசும்பொன்குன்றில் - பசியபொன்மலைகள்போல், பொன்மதில் - அழகிய மதிலின், நடுவண் - நடுவே, பூத்து - உள்ளனவாகி, வசை அற - தோஷமில்லாமல், விளங்கும் - பிரகாசிப்பதான, சோதிமணியினால் - சூரியகாந்தக்கல்லாலே சூரியன்போன்றரத்நங்களாலே, அமைந்த - உள ஆன, பதித்தலானமாடத்து - வீடுகளுடனே, அசைவு இல் - அசைதலில்லாதிருக்கிற, இலங்கை மூதூர் - இவ்வூரிலே, ஆர் - பொருந்துவதாக, இருள் - இருட்டு, இன்மையாலே - இல்லாதபடியால், நெடுநகர் - இந்தநெடியநகரிலுள்ள, நிருதரெல்லாம் - ராக்ஷதர்களெல்லாம், நிசிசரர் - நிசியிலுஞ்சஞ்சரிக்கிறவர்கள், ஆயிற்று - என்னலாயிற்று, அம்மாநெடுநகர் அந்தப்பெரிய ஊரில்—எ-று. (கூகூ)

என்றனனியம்பிவீதியேகுதலிழுக்கமென்னாத்
தன்றகையனையமேனிசுருக்கிமாளிகையின்சாரல்
சென்றனனென்பமன்னோதேவருக்கமுதமீந்த
குன்றெனவயோத்திவேந்தன்புகழெனக்குவவுத்தோளான்.

இ-ள். என்றனன் - என்றுநினைத்து, இயம்பி - தன்உள்ளேசொல்லிக்கொண்டு, வீதியேகுதல் - வீதிவழியேசெல்லுதலாலே, இழுக்கம் என்னா - தோஷமுண்டாமென்று, தன் - தனது, தகைஅனைய - பெருமைக்கொத்த, மேனி - உடம்பை, சுருக்கி - ஒடுக்கிக்கொண்டு, மாளிகையின்சாரல் - வீடுகளினோரமாக, சென்றனன்- பிராட்டியைத் தேடிப்போனார், என்ப - என்றுசொல்லுவர் மேலோர், தேவருக்கு அமுதம் ஈந்த - தேவர்களுக்கு அமுதம்கொடுத்த, குன்றென - மந்தரகிரிபோலவும், அயோத்திவேந்தன் - தசரதமகாராஜனுடைய, புகழென - கீர்த்திபோலவும், குவவு - உருண்ட, தோளான் - புஜங்களையுடைய அநுமார்—எ-று. (க00)

ஆத்துறுசாலைதோறுமானையின்கூடந்தோறும்
மாத்துறுமாடந்தோறும்வாசியின்பந்திதோறும்
காத்துறுகடைகடோறுங்கருங்கடல்கடந்தகாலால்
பூத்தொறும்வாவிச்செல்லும்பொறிவரிவண்டிற்போனான்.

இ-ள். ஆதுறு - பசுக்கள்கட்டப்பட்டிருக்கிற, சாலைதோறும் - கொட்டங்களும், ஆனையின்கூடந்தோறும் - யானைகட்டியிருக்கிறகூடங்களும், மாதுறு - (சதுரங்கத்திற் பிரதானமான) பெருமையையுடைய தேர்களிருக்கிற, மாடந்தோறும்-

வீடுகளும், வாசியின் - குதிரைகள்நிற்கிற, பந்திதோறும் - லாயங்களும், காத்துஉறு-காவல்செய்துகொண்டிருக்கிற, கடைகள்தோறும் - கடைவாசல்களும், கருங்கடல்-கரியகடலை, கடந்த - தாண்டிவந்த, காலால் - கால்களாலே, பூதொறும் - புஷ்பங்களெல்லாம், அவாவி - விரும்பி, செல்லும் - செல்லுவதான, பொறி - புள்ளியம்,வரி-பாட்டும்உடைய, வண்டில் - வண்டுபோல், சென்றான் - போனார்—எ-று. மாதேருக்காகுபெயர் அழகுபொருந்திய;வீடெனவுமாம். (கoக)

பெரியநாளொளிகொணாலுவிதமணிப்பித்திப்பத்தி
சொரியுமாநிழல்களாங்குச்சுற்றலாற்காலின்மேறான்றல்
கரியனாய்வெளியனாகிச்செய்யனாய்க்காட்டுங்காண்டற்
கரியனாயெளியனாய்த்தன்னகத்துறையழகனேபோல்.

இ-ள். பெரிய - பெரிதான, நாள் ஒளிகொள் - நக்ஷத்திர ஒளியைக்கொண்டுள்ள, நாலுவிதம் - பலவகைகளான, மணி - ரத்நங்களாலமைத்த, பித்திப்பத்தி-சுவர்வரிசைகள், சொரியும் - சொரிவதான;வீசுகிற, மா - பெரிதாகிய, நிழல்கள்-சோதிகள், ஆங்கு - அங்கங்கும், சுற்றலால் - சூழுதலாலே, காலின்றோன்றல் - வாயுபுத்திரனான சிறியதிருவடி, கரியனாய்க்காட்டும் - ஓரிடத்திலே கறுப்பாகவுந்தோற்றுவார், வெளியனாகிக்காட்டும் - ஓரிடத்திலே;வெளுப்பாகவுந்தோற்றுவார், செய்யனாய்க்காட்டும் - ஓரிடத்திலே சிவப்பாகவும்தோற்றுவார், காண்டற்கு;அரியனாய்-பிரதிகூலர்காணுதற்கு அசக்கியனாய், எளியன் ஆய் - அநுகூலர் காணுதற்குச்சக்கியனுமாய், தன்அகத்துஉறை - தன்உள்ளத்திலேஇருக்கிற, அழகனேபோல் - ராமனைப்போல் சிறியதிருவடி மூவகைநிறவடிவாகவும் சந்தடியுள்ள இடங்களிலே அரூபியாகவும் அதில்லாத இடங்களிலே ரூபமுள்ளவராகவும் தோன்றச் செல்லுகிறாரென்க—எ-று. (கoஉ)

கானகமயில்களென்னக்களிமடவன்னமென்ன
ஆனனகமலப்போதுபொலிதரவரக்கர்மாதர்
தேனுகுசரளச்சோலைத்தெய்வநீராற்றிற்றெண்ணீர்
வானவர்மகளிராட்டமஞ்சனமாடுவாரை.

இ-ள். கானகம் - காட்டிலுள்ள, மயில்களென்ன - மயில்கள்போலவும், களிமடஅன்னம்என்ன - காமமயக்கமுமுக்தபருவமுமுள்ள அன்னம்போலவும், ஆனனம் - முகமாகிய, கமலப்போது - தாமரைமலர், பொலிதர - விளங்குவதாக, அரக்கர்மாதர் - ராக்ஷதப்பெண்கள், தேன்உகு - தேன்சிந்துவதான, சரளம் - வரிசையுள்ள, சோலை - பூஞ்சோலையிலேவைத்து, தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள, நீராற்றில் - நீருள்ளஆற்றினது, தெண்ணீர் - தெளிந்தநீரால், வானவர்மகளிர் - தெய்வப்பெண்கள், ஆட்ட - குளிப்பாட்ட, மஞ்சனம்;ஆடுவாரை - முழுகுகிற பெண்களையும், தெய்வநீர் - தெய்வத்தன்மை, நீர் - தன்மை—எ-று. (கoங)

ஈட்டுவார்தவமலான்மற்றீட்டினாலியைவதின்மை
காட்டினார்விதியாரஃதுகாண்கிற்பார்காண்மினம்மா
பூட்டுவார்முலைபொருதபொய்யிடைநையப்பூநீர்
ஆட்டுவாரமரர்மாதராடுவாரரக்கர்மாதர்.

இ-ள். ஈட்டுவார் - தேடுகிறவர்கள், தவம்அல்லால் - தவத்தைஅல்லது, மற்றாரீட்டினல் - வேறொருதேட்டினாலே, இயைவது - வருவது அடைவது, இன்மை-

ஒன்றுமில்லையென்பதை, காட்டினர் - தெரியச்செய்தார், விதியார்-பிரமதேவனனை வர், அஃது - அப்படித்தவத்தாலடைந்திருக்கிறபயனை, காண்கிற்பார்-பார்க்கவேண்டினவர்கள், காண்மின் - பாருங்கள், பூட்டுவார் - கச்சணிந்திருக்கிற, முலை - தனங்களை, பொறுத - தாங்காத, பொய் - உருவமில்லாத, இடை - மத்தியம், நைய - வருந்த, பூநீர் - நன்னீரினலே, அமரர்மாதர் - தெய்வகன்னிகள், ஆட்டுவார் - முழுகச்செய்கிறார்கள், அரக்கர்மாதர் - ராக்ஷதப்பெண்கள், ஆடுவார் - முழுகுகிறார்கள், காண்மின் எனவேதவத்தாலுயர்ந்தராக்ஷதப்பெண்களுக்கு குலத்தாலுயர்ந்த தெய்வப்பெண்கள் பணிவிடைசெய்கிறதினலே தவமே பெரிதென்று கருத்து—எ-று. அப்படி முழுகுகிறவர்களையும் கண்டுபோகிறாரென்க. (கoசு)

இலக்கணமரபிற்கேற்றவெழுவகைநரம்பினல்யாழ்
அலத்தகத்தளிர்க்கைநோவவளந்தெடுத்தமைந்தபாடல்
கலக்குறமுழங்கிற்றென்றுசேடியர்கன்னிமார்கள்
மலர்க்கையான்மாடத்தும்பர்மழையின்வாய்பொத்துவாரை.

இ-ள். இலக்கணமரபிற்கு - லக்ஷணக்கிரமத்திற்கு, ஏற்ற - தக்கதான, எழுவகை - எழுவகையுள்ள, நரம்பின் - தந்திகளுடனே, நல் - நன்மைமிக்கிருப்பதான, யாழ் - வீணையிலே, அலத்தகம் - செம்பஞ்சுக் குழம்பு பூசின, தளிர் மாந்தளிர்போன்ற, கை - கைவிரல்கள், நோவ - வருந்த, அளந்து - அளவுசெய்து, எடுத்து - கொண்டு, அமைந்த - அமைதலான, பாடல் - சுருதியானது, கலக்குற - தப்பிப்போக, முழங்கிற்றென்று - கதறிற்றென்று, சேடியர் - ஊழியக்காரிகளான, கன்னிமார்கள் - பெண்கள், மலர் - தங்கள் மலர்போன்ற, கையால் - கையினலே, மாடத்து உம்பர் - மேலுபரிகையிலேறி, மழையின் - மேகத்தினது, வாய் - வாயை, பொத்துவாரை - மூடுகிறவர்களையுங் கண்டார், ராக்ஷதப் பெண்கள் வீணையின் தந்திகளைச் சுதிகூட்டிக்கொண்டிருக்கச்செய்தே அப்போது மேகங் குமுற அந்த ஓசையினலே சுருதிதவற அதற்கு அஞ்சி ஊழியகாரிகளான தெய்வப்பெண்கள் மேகத்தின் வாயை இனிக் கத்தாதேயென்று மூடுகிறார்களென்க—எ-று. (கoரு)

சந்தப்பூம்பந்தர்வேய்ந்ததமனியவரங்கிற்றத்தம்
சிந்தித்ததுதவுந்தெய்வமணிவிளக்கொளிருஞ்சேக்கை
வந்தொத்துந்துரிதமாக்கள்விளம்பிதநெறிவழாமை
கந்தர்ப்பமகளிராடுநாடகங்காண்கின்றாரை.

இ-ள். தத்தம் - அவரவர்கள், சிந்தித்தது - நினைத்தது, உதவும் - கொடுப்பதான, தெய்வம் - திவ்வியஸ்வரூபமுள்ள, மணி - சிந்தாமணியாகிய, விளக்கு - தீபமானது, ஒளிரும் - விளங்குகின்ற, சேக்கை - படுக்கைமேலிருந்துகொண்டு, சந்தம்-அழகான, பூம்பந்தர் - புஷ்பப்பந்தலால், வேய்ந்த - அலங்கிருதமான, தமனியம்-பொன்னாலாகிய, அரங்கில் - சேக்கைமுன்னுள்ள நாடகசாலையில், வந்து - அடைவுடன்வந்து, ஒத்தும் - தாளங்களை ஒத்துகின்ற, துரிதம் - விரைவுள்ள, மாக்கள்-பாடகரது, விளம்பிதநெறி - தாளப்பிரமாணவகைகள், வழாமை - தப்பாமல், கந்தர்ப்பமகளிர் - காந்தருவப்பெண்கள், ஆடும் - ஆடுகின்ற, நாடகம் - ஆடல்களை, காண்கின்றாரை - பார்க்கிறவர்களையும்—எ-று. (கoசு)

திருத்தியபளிக்குவேதித்தெள்ளியவேல்களென்னக்
கருத்தியல்புரைக்குமுண்கட்கருங்கயல்செம்மைகாட்ட
வருத்தியகொழுநர்தம்பால்வரம்பின்றிவளர்ந்தகாம
வருத்தியபயிர்க்குநீர்போலருநறவருந்துவாரை.

இ-ள். பளிக்கு - பளிங்குக்கற்களாலே, திருத்திய - செய்திருக்கிற, வேதி- திண்ணைமேலிருந்து, தெள்ளிய - தெளிவுள்ளவடித்த, வேல்களென்ன - வேல்கள் போல், கருத்து - தங்கள்மனத்துள்ள, இயல்பு - குறியை, உரைக்கும்-காட்டுகின்ற, உண் - ரூபவிஷயத்தைக்கிரகிக்கிற, கண் - கண்களாகிய, கருங்கயல் - கறுத்த கெண்டைகள், செம்மைகாட்ட-சிவந்துதோன்ற, வருத்திய - தங்களைவருந்தும்படிபண்ணின, கொழுநர் தம்பால் - நாயகரிடத்திலே, வரம்பு இன்றி - அளவில்லாமல், வளர்ந்த - வளர்தலான, காம அருத்திய - காமவிருப்பமாகிய, பயிர்க்கு - சஸ்யத்துக்கு, நீர்போல் - பாய்ச்சுகிற தண்ணீரைப்போல், அரு - அரியதான, நறவு - மதுவை, அருந்துவாரை - குடிக்கிறவர்களையும்—எ-று. (கoஎ)

கோதறுங்குவளைநாட்டங்கொழுநர்கணாட்டங்கொள்ளத்
தூதுளங்கனியைவென்றதுவர்த்தவாய்வெண்மைதோன்ற
மாதருமைந்தர்தாமுமொருவர்மேலொருவர்வைத்த
காதலங்கள்ளுண்டார்போன்முறைமுறைகளிக்கின்றாரை.

இ-ள். கோது அறும் - குற்றமற்ற, குவளை - நீலோற்பலம்போன்ற, நாட்டம் - கண்கள், கொழுநர்கள் - புருஷர்களுடைய, நாட்டம் - கண்களை, கொள்ள- கிரகிக்கவும், தூதுளங் கனியை - சிவந்த பழத்தை, வென்ற - செயிப்பதான, துவர்த்த - சிவந்த, வாய் - வாயானது, வெண்மைதோன்ற - வெள்ளைநிறமாகவும், மாதரும் - பெண்களும், மைந்தரும் - புருஷர்களும், ஒருவர்மேல் - ஒருவரிடத்தில், ஒருவர்வைத்த - ஒருவர்கொண்ட, காதல் - ஆசையாகிய, அம் - அழகுள்ள, கள் - மதுவை, உண்டார்போல் - புசித்தவர்களைப்போல், முறைமுறை - மாறிமாறி, களிக்கின்றாரை - கள்குடிக்கின்றவர்களையும்—எ-று. மாறிமாறிப் போகிப்பதுபோல் மாறி மாறிக் கட்குடிக்கிறார்களென்க. (கoஅ)

விற்படர்பவளப்பாதத்தலத்தகமெழுதிமேனி
பொற்பளவில்லாவாசப்புனைநறுங்கலவைபூசி
அற்புதவடிக்கண்வாளினஞ்சனமெழுதியந்தில்
கற்பகங்கொடுக்கவாங்கிக்கலன்றெரிந்தணிகின்றாரை.

இ-ள். வில்படர் - ஒளிபரவுவதான, பவளம் - பவளம்போன்ற, பாதத்து- கால்களிலே, அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு, எழுதி - பூசி, மேனி - உடம்பில், பொற்பு - அழகுற, அளவு இல்லா - அளவுபடாத, வாசம் - பரிமளத்தையுடைய, புனை நறும் - நன்மைசேர்ந்த, கலவை - கூட்டுவர்க்கச்சந்தனமும், பூசி - திமிர்ந்து, அற்புதம் - ஆச்சரியத்தைத்தருவதான, வடி - கூர்மையுள்ள மாவடுப்போன்ற, கண்- கண்களாகிய, வாளின் - கத்திகளிலே, அஞ்சனம் எழுதி - மையிட்டு, அந்தில் - அவ்விடத்தில் நின்று, கற்பகம் - கற்பகவிருக்ஷம், கொடுக்க - கொடுப்பதாக, வாங்கி அதைக்கொண்டு, கலன் - ஆபரணவகைகளை, தெரிந்து - இடமிடங்களில், அணிகின்றாரை - இடுகிறவர்களையும்—எ-று. (கoகூ)

புலியடுமதுகைமைந்தர்புதுப்பிழையுயிரைப்புக்கு
நலிவிடவமுதவாயானச்சுயிர்த்தயிற்கணல்லார்
மெலிவுடைமருங்குன்மின்னினலமரச்சிலம்புவிம்மி
ஒலிபடவுதைக்குந்தோறுமயிர்புளகுதிக்கின்றாரை.

இ-ள். புலி - புலிபோல், அடு - பகைவரைக்கொல்லுகின்ற, மதுகை-சமர்த்தரான, மைந்தர் - புருஷர்கள்செய்த, புதுப்பிழை - நூதனமான குற்றங்கள், உயி

ரை - தங்களுயிரை, புக்கு - உள்ளேசென்று, நலிவுஇட - வருத்தஞ்செய்ய, அமுதம் - அமுதமுள்ள, வாயால் - வாயினாலே, நச்சு உயிர்த்து - நஞ்சைப்பெற்று கொடுஞ்சொற்கூறி, அயில் - வேல்போன்ற, கண் - கண்களையுடைய, நல்லார் - அப்பெண்கள், மெலிவுஉடை - இளைப்பையுடைய, மருங்குல் - இடையானது, மின்னின் - மின்போல், அலமர - துவளுவதாக, சிலம்பு - சிலம்புகள், விம்மி - மிகுந்து, ஒலிபட - சத்திக்க, உதைக்குந்தோறும் - உதைக்கும்போதெல்லாம், மயிர்புளகு - மயிர்சிலிர்த்தல், உதிக்கின்றாரை - உடம்பிலே உண்டாகுகிறவர்களையும்—எ-று. (கக0)

உள்ளுடைமயக்காலுண்கண்சிவந்துவாய்வெண்மையூறித்
துள்ளிடைப்புருவங்கோட்டித்துடிப்பவேர்பொடிப்பத்தூய
வெள்ளிடைமருங்குலார்தம்மதிமுகம்வேறொன்றாகிக்
கள்ளிடைத்தோன்றநோக்கிக்கணவரைக்கவல்கின்றாரை.

இ-ள். உள்ளுடை - உள்ளேஉடையதான, மயக்கால் - மயக்கத்தினாலே, உண் - ரூபவிஷயத்தைக்கொள்ளுகின்ற, கண்சிவந்து - கண்கள்சிவப்பாய், வாய் - வாயிலே, வெண்மைஊறி - வெண்ணிறந்தோன்றுதலாகி, துள் - துடிப்பதான, இடை - நடுஇடத்தையுடைய, புருவம் - புருவங்களையும், கோட்டி - வளைத்து, துடிப்ப - பதறுதலாக, வேர் - வேர்வை, பொடிப்ப - பொடிப்பொடியாயரும்ப, தூய - பரிசுத்தமுள்ள, வெள்ளிடை - வெறுநிலமான வெள்ளைவஸ்திரமுடுத்தின இடமான, மருங்குலார்தம் - இடைப்பக்கத்தையுடைய பெண்கள், மதி - தமது சந்திரன்போன்ற, முகம் - முகமானது, வேறொன்றாகி - வேறொருவகையாய், கள்ளிடை - கள்ளிலே, தோன்ற - குடிக்கும்போது தெரிய, நோக்கி - பார்த்து, கணவரை - புருஷர்களை, கவல்கின்றாரை - நொந்துகொள்ளுகிறவர்களையும்—எ-று தூயவெள்ளை வஸ்திரமுள்ள இடைமருங்கு இடைப்பக்கம் வெற்றிலை வெள்ளிலை என்றாற்போல் வெறு அரை அதாவது உருவமில்லாதிருத்தல் வஸ்திரமில்லாதிருத்தல் என்க. (கககூ)

ஆலையின்மலையின்சாரன்முழையினிலமுதவாரிச்
சோலையிற்றுவசரில்லிற்சோனகர்மனையிற்றூய
வேலையிற்கொளவொண்ணாதவேற்கணார்குமுதச்செவ்வாய்
வாலெயிற்றூறுதீந்தேன்மாந்தினர்மயங்குவாரை.

இ-ள். ஆலையின் - கரும்பாலையிலும், மலையின்சாரல் - மலைப்பக்கங்களிலும், முழையினில் - குகைகளிலும், அமுதவாரி - அமுதமூறுகிற, சோலையில் - தோப்புகளிலும், துவசர்இல்லில் - சாணார்வீடுகளிலும், சோனகர்மனையில் - மிலேச்சர் வீடுகளிலும், தூய - பரிசுத்தமான, வேலையில் - கடலிலும், கொள - பெற, ஒண்ணாத - கிடையாத, வேல் - வேல்போன்ற, கண்ணார் - கண்களையுடைய பெண்களது, குமுதம் - செவ்வல்லிமலர்போன்ற, செவ்வாய் - சிவந்தவாயிலும், வால் - வெண்மையுள்ள, எயிற்று - பல்லிலும், ஊறு - சுரக்கப்படுகிற, தீந்தேன் - இனிப்பான தேனை, மாந்தினர் - குடித்தவர்களாய், மயங்குவாரை - மயங்குகிறவர்களையும்—எ-று. ()

நலனுறுகணவர்தம்மைநவையுறப்பிரிந்துநல்கு
முலையுறுகலவைதீயமுள்ளிலாமுளரிச்செங்கேழ்
மலர்மிசைமலர்பூத்தென்னமலர்க்கைபால்வதனந்தாங்கி
உலவருமுயிரினோடுநெடிதிருந்துயிர்க்கின்றாரை.

இ-ள். நலன்உறு - அழகால்மிகுத்த, கணவர்தம்மை - புருஷர்களை, நவைஉற - தோஷம் அதிகமாக, பிரிந்து - பிரிதலாய், நல்கும் - முன்னேபூசியிருக்கிற, மு

லைஉறு - தனங்களிலேபொருந்தின, கலவை - கலவைச்சந்தனம், தீய - உலர்ந்துஉதிரவும், முள்இலா - முட்களில்லாத, முளரி - தாமரைமலர்போலும், செங்கேழ்- சிவந்தநிறமுள்ள, மலர்மிசை - பூமேலே, மலர் - மற்றொருபூவானது, பூத்தென்ன- புஷ்பித்தாற்போல், மலர் - மலர்போன்ற, கையால் - ஒருகையாலே, வதனம் - முகத்தை, தாங்கி - சுமந்துகொண்டு, உலவு - உலாவுகின்ற, அறும் - நிறுத்தற்கரிதான, உயிரினோடும் - உயிருடனே, இருந்து - நெடும்போதிருந்து, நெடிது - நீளமாக, உயிர்க்கின்றாரை - சுவாசம்விடுகிறவர்களையும்—எ-று. (கக௩)

ஏதியங்கொழுநர்தம்பாலெய்தியசலத்தர்வைகும்
தாதியங்கமளிச்சேக்கையுயிரிலாவுடலிற்சார்வார்
மாதுயர்க்காதறூண்டவழியின்மேல்வைத்தகண்ணார்
தூதியர்முறுவனோக்கியுயிர்வந்துதுடிக்கின்றாரை.

இ-ள். ஏதி - ஆயுதங்களைக்கொண்ட, அம் - அழகுள்ள, கொழுநர்தம்பால்- நாயகரிடத்தில், எய்திய - உண்டான, சலத்தர் - கோபமுள்ளவர்கள், வைகும் - தங்குகின்ற, தாது - பராகங்கள், இயங்கு - உதிர்வதான, அமளிச்சேக்கை - படுக்கையாகியமெத்தையிலே, உயிர்இலா - பிராணனில்லாத, உடலில் - உடல்போல், சார்வார் - சாய்ந்துவிழுவார்கள், மாதுயர் - பெரியதுன்பத்தைத்தருகிற, காதல் - ஆசையானது, தூண்ட - வினைவைஉண்டாக்க அதனாலே, வழியின்மேல் - நாயகன்வருந்திசைமேலே, வைத்த - செலுத்தின, கண்ணார் - கண்களையுடைய பெண்களானவர்கள், தூதியர் - அழைக்கப்போன பெண்களுடைய, முறுவல் - சிரிப்பு, தோன்ற - தெரிவதாக, உயிர்வந்து - தங்களுக்குப்பிராணனுண்டாக, துடிக்கின்றாரை - துடிக்கிறவர்களையும்—எ-று. (ககச)

சங்கொடுசிலம்புநூலும்பாதசாலகமுந்தாழப்
பொங்குபன்முரசமார்ப்பவில்லுறைதெய்வம்பேணிக்
கொங்கலர்கூந்தற்செவ்வாயரம்பையர்பாணிகொட்டி
மங்கலகீதம்பாடமறிப்பலிவகுக்கின்றாரை.

இ-ள். சங்கொடு - வளையலுடனே, சிலம்பும் - சிலம்புகளும், நூலும் - துவளுதலையுடைய அசைகிற, பாதசாலகமும் - பாதசரமும், தாழஓசை - தாழ்வனவாக, பொங்கு - சத்திக்கின்ற, பல்முரசம் - பலவாத்தியங்களும், ஆர்ப்ப - சத்திக்க, இல உறை - தங்கள்வீட்டுக்குரியதாயிருக்கிற, தெய்வம் - தெய்வத்தை, பேணி - பூசித்து, கொங்கு - வாசனை, அலர் - விரிகின்ற, கூந்தல் - கூந்தலையும், செவ்வாய் - சிவந்தவாயையுமுடைய, அரம்பையர் - தெய்வப்பெண்கள், பாணிகொட்டி - கைகளைத்தட்டி, மங்கலகீதம் - சுபமானபாட்டுகள், பாட - பாடுதல்செய்ய, மறி - ஆடு, பலி- பூசையாக, வகுக்கின்றாரை - வெட்டுகிறவர்களையும்—எ-று. (ககரு)

இழைதொடர்வில்லும்வாளுமிருளொடுமலையயாணர்க்
குழைதொடர்நயனக்கூர்வேல்குமரர்நெஞ்சுருவக்கோட்டி
முழைதொடர்சங்கம்பேரிமுகிலெனமுழங்கமூரி
மழைதொடர்மஞ்ஞையென்னவிழாவொடுவருகின்றாரை.

இ-ள். இழை - ஆபரணங்களிலிருந்து, தொடர் - வருவனவாகிய, வில்லும்- விற்போலொளியும், வாளும் - வாள்போலொளியும், இருளொடு - அன்றிருளுடனே, மலைய - பொருதுதல்செய்ய, யாணர் - அழகிதான, குழை - காதுடனே பொருத,

தொடர் - செல்லுவனவாகிய, நயனம் - கண்களான, கூர்வேல் - கூரியவேல்கள், குமரர் - யௌவன புருஷர்களுடைய, நெஞ்சு - மார்புமுழுதும், உருவ - தொளைத்துச்செல்ல, கோட்டி - சார்த்தி, முழை - ஊதுந் தொளையை, தொடர் - பொருந்திய, சங்கம் - சங்குகளும், பேரி - டம்மானமும், முகிலென-மேகம்போல், முழங்க-குமுற, மூரி-பெரிய, மழை - மேகத்தை, தொடர்-பற்றிவருகிற, மஞ்ஞையென்ன-மயில்போல், விழாவொடு - உற்சவத்துடனே, வருகின்றாரை - வருகிறவர்களையும், எ-று. குழை குண்டலமணிந்த காதென்க. (கக௬)

பள்ளிபின்மைந்தரோடுமூடியபண்புநீங்கி
ஒள்ளியகலவிப்பூசலுடற்றுதற்குருத்தநெஞ்சர்
மெள்ளவேயிமையைநீக்கியஞ்சனவிழுதுவேய்ந்த
கள்ளவாணெடுங்கணென்னும்வாளுறைகழிக்கின்றாரை.

இ-ள். பள்ளியின்-படுக்கையிலே, மைந்தரோடும் - புருஷர்களுடனே, ஊடியபண்பு - பிணங்கினகுணத்தை, நீங்கி - விட்டு, ஒள்ளிய - அறிவுக்கிசைந்த, கலவிப்பூசல் - போகச் சண்டையை, உடற்றுதற்கு - செய்கிறதற்கு, உருத்த - கோபித்த, நெஞ்சர் - மனத்தையுடைய பெண்கள், மெள்ள - மெதுவாக, இமையை - மேலிமையை, நீக்கி - திறந்து, அஞ்சன இழுது - மைக் குழம்பு, வேய்ந்த - பூசின, கள்ளம் - திருட்டுத்தனமுள்ள, வாள் - வாள்போன்ற, நெடு-நீண்ட, கண்ணென்னும்-கண்களென்கிற, வாள் - வாள்களை, உறை - இமையாகிய உரையிலிருந்து,கழிக்கின்றாரை - உருவுகின்றவர்களையும்—எ-று. (கக௭)

ஓவியமனையமாதரூடினருணர்வோடுள்ளம்
மேவியகரணமற்றுங்கொழுநரோடொழியயாணர்த்
தூவியம்பேடையென்னமின்னெனத்துவளவேகி
ஆவியுந்தாமுமேசென்றருங்கதவடைக்கின்றாரை.

இ-ள். ஓவியம் - சித்திரத்தை, அனைய - ஒப்பான, மாதர்-பெண்கள், ஊடினர் - பிணங்கினவர்களாய், உணர்வோடு - பிணங்கின மனத்துடனே, உள்ளம்-உள்ளத்துடன், மேவிய-கூடின, கரண மற்றும் - மற்றுமுள்ள கரணங்களும், கொழுநரோடு - புருஷருடனே, ஒழிய - செல்ல, யாணர் - அழகுள்ள, தூவி - இறகு பொருந்தின, அம் - அழகொடுகூடிய, பெடையென்ன-பெட்டை அன்னம்போல், மின்னென - மின்னலைப்போல், துவள - உடம்புதள்ளாட, ஏகி - நடந்து, ஆவியும்-உயிரும், தாமுமே - தாங்களுமாகவே, சென்று - போய், அரும் - அரிதான, கதவு-கதவை, அடைக்கின்றாரை - மூடுகிறவர்களையும்—எ-று. (கக௮)

கின்னரமிதுனம்பாடவெண்மழைகிழித்துத்தோன்று
மின்னெனத்தரளம்வேய்ந்தவெண்ணிறவிமானமூர்ந்து
பன்னகமகளிர்சுற்றிப்பலாண்டிசைபரவப்பண்ணைப்
பொன்னகர்வீதிதோறும்புதுமனைபுகுகின்றாரை.

இ-ள். கின்னர மிதுனம் - இரட்டைக்கின்னரி, பாட - வாசிக்க, வெண்மழை - வெள்ளைமேகத்தை, கிழித்து-பிளந்துகொண்டு, தோன்றும் - விளங்குகிற, மின்னென-மின்னல்போல, தரளம் - முத்துகளால், வேய்ந்த - அலங்கிருதமான, வெண் நிறம் - வெள்ளை நிறத்தையுடைய, விமானம்-பல்லக்கை, ஊர்ந்து - செலுத்திக்கொண்டு, பன்னக மகளிர் - நாககன்னிகள், சுற்றி சூழ்ந்து, பல்லாண்டு - மங்க

ளமான, இசை - பாட்டை, பரவ - மிருத்துப்பாட, பண்ணை - பெண்கள் கூட்டத்துடனே, பொன்னகர் - அந்த அழகான பட்டணத்து, வீதிதோறும் - வீதிகளெல்லாம், புது மனை - புது வீட்டுக்குள், புகுகின்றுரை-போகிறவர்களையும், இது கலியாணம் பண்ணுதபெண்ணை கலியாணம்பண்ணக்கூட்டிப்போதல். (ககக)

கோவையுங்குழையுமின்னக்கொண்டலின்முரசமார்ப்பத்
தேவர்வந்தாசிகூறமுனிவர்சோபனங்கள்செப்பப்
பாவையர்குழாங்கள்சூழப்பாட்டொடுவானநாட்டுப்
பூவையர்பலாண்டுகூறப்புதுமணம்புணர்கின்றுரை.

இ-ள். கோவையும் - கழுத்தின்மாலைகளும், குழையும் - குண்டலங்களும், மின்ன - பிரகாசிக்கவும், கொண்டலின் - மேகத்தைப்போல், முரசம் - பேரிகை, ஆர்ப்ப - ஒலிக்கவும், தேவர் - தேவர்கள், வந்து - கூடவந்து, ஆசி கூற - ஆசீர்வதிக்கவும், முனிவர் - ரிஷிகள், சோபனங்கள் செப்ப - மங்களங்கள் சொல்லவும், பாவையர் குழாங்கள் - பெண்களுடைய கூட்டங்கள், சூழ-சூழ்ந்துவரவும், பாட்டொடு-பாட்டுடனே, வான நாட்டுப் பூவையர் - தெய்வலோகத்துப் பெண்கள், பலாண்டு கூற - மங்களங்கள் சொல்லவும், புதுமணம் - புதிதான கலியாணமாக, புணர்கின்றுரை - சேர்கிறவர்களையும்—எ-று. (கஉ0)

இயக்கியரரக்கிமார்களுகியரெஞ்சில்விஞ்சை
முயற்கறைமலராத்திங்கண்முகத்தியர்முதலினேரை
மயக்கறநாடியேகுமாருதிமலையின்வைகும்
கயக்கமிறுயிற்சிக்கும்பகருணனைக்கண்ணிற்கண்டான்.

இ-ள். இயக்கியர் - யக்ஷகன்னிகள், அரக்கிமார்கள் - ராக்ஷதப் பெண்கள், நாகியர் - நாககன்னிகள், எஞ்சு இல் - யாதொரு குறைவு மில்லாத, விஞ்சை-வித்தியாதர கன்னிகளான, முயல் கறை - முயலாகிய களங்கம், மலரா - தோன்றுத, திங்கள் - சந்திரன் போன்ற, முகத்தியர்-முகத்தையுடையவர்கள், முதலினேரை-முதலானவர்களையும், மயக்கு அற - சந்தேகம் தீர, நாடி - தேடி ஆராய்ந்து, ஏகும் மாருதி - போகிற திருவடியானவர், மலையின்-ஒரு மலைபோல், வைகும் - தங்குவதான, கயக்கம் இல் - அசைதலில்லாத, துயிற்சி - தூக்கத்தையுடைய, கும்ப கருணனை - கண்ணில் கண்டான் தம்முடைய கண்களாலே பார்த்தார், கயம்-கம், இல்-குளத்து நீர்போல், ஒரிடத்தொடுங்கி அசையாதிருந்து தூங்குகிற எனவுமாம்-எ-று.

வேறு.

ஓசனையேழகன்றுயர்ந்தவும்பரின்
வாசவன்மணிமுடிகவித்தமண்டபம்
ஏசறவிளங்கியதிருளையெண்வகை
ஆசையினிலைகெடவலைக்கலான்றது.

இ-ள். ஓசனையேழ் - எழுயோசனை, அகன்று - விசாலமுள்ளதாய், உயர்ந்த-அவ்வளவே உயர்ந்துள்ள, உம்பரின்-மேலுலகத்திலே, வாசவன் - இந்திரன், மணிமுடி - ரத்நகிரீடம், கவித்த - சூடிக்கொண்ட, மண்டபம் - மண்டபம்போல், ஏசு அற - குற்றந்தீர, விளங்கியது - விளங்கத்தக்கது, எண்வகை - எட்டுவகையான, ஆசையின் - திக்குகளிலும், நிலைகெட - நிலையில்லாமற்போக, இருளை - இருட்டை, அலைக்கல் - ஓட்டுதலுக்கு, ஆன்றது - அகன்றுள்ளது கும்பகருணன் தூங்குமண்டபம்—எ-று. (கஉஉ)

அன்னதனடுவணோரமளிமீமிசைப்
பன்னகவரசெனப்பரவைதானெனத்
துன்னிருளொருவழித்தொக்கதாமென
உன்னருந்தீவினையுருக்கொண்டென்னவே.

இ-ள். அன்னதன் - அப்படிப்பட்ட மண்டபத்தில், நடுவண் - நடுவே, ஓர்- ஒரு, அமளி மீமிசை - மெத்தையின்மேலே, பன்னக அரசென - நீளத்தால் சர்ப்ப ராஜன் போலவும், பரவைதானென - அகலத்தால் கடல்போலவும், துன் - நெருங் கின, இருள் - நிறத்தால் இருளெல்லாம், ஒருவழி - ஓரிடத்திலே, தொக்கது என- சேர்ந்திருக்கின்றன என்னவும், உன்னரும்-நினைத்தற்கரிதான, தீவினை - பாபமெ ல்லாம், உருக்கொண்டென்ன-தோற்றத்தால் வடிவுகொண்டாற்போலவும்—எ-று.

முன்னியகனைகடன்முழுகிமூவகைத்
தன்னியல்கதியொடுதழுவித்தாதுகு
மன்னெடுங்கற்பகவனத்துள்வைகிய
இன்னிளந்தென்றல்வந்திழுகியேகவே.

இ-ள். முன்னிய - தான் கருதின, கனை - சத்தியாநின்ற, கடல் - கடலிலே போய், முழுகி - தோய்ந்து, மூவகை - மூன்றுவகையாக, தன் - தனக்கு, இயல்- பொருந்திய, கதியொடு - வேகத்துடனே, தழுவி - கூடி, தாது - பராகங்கள், உகு- சிந்துகின்ற, மன் - நிலையான, நெடு - நீண்ட, கற்பக வனத்துள் - கற்பகச் சோலை யிலே, வைகிய - தங்கிய, இன் - இனிதான, இளந் தென்றல் வந்து-இளமையாகிய தென்றற்காற்றுவந்து, இழுகி - உரசி, ஏக - போகவும்—எ-று. மந்தகதி தீவிரகதி அதிதீவிரகதி - ந. (கஉச)

வானவர்மகளிர்கால்வருடமாமதி
ஆநனங்கண்டமண்டபத்துளாய்கதிர்க்
கானகுகாந்தமீக்கான்றகாமர்நீர்
தூநிறநறுந்தளிமுகத்திற்றோற்றவே.

இ-ள். வானவர் மகளிர் - தெய்வப் பெண்கள், கால் வருட-கால்பிடிக்கவும், மாமதி - பூரணச் சந்திரன்போன்ற, ஆனனம் - அப்பெண்கள் முகங்களை, கண்ட- பார்த்த, மண்டபத்துள் - மண்டபத்துக் குள்ளே, ஆய் - ஆராய்ந் தமைத்த, கதிர்க் கால் - ஒளியையுடைய தூணாக, நகு - விளங்குகின்ற, காந்தம் - சந்திர காந்தக் கற் கள், மீ - மேலிருந்து, கான்ற - ஒழுகுகின்ற, காமர் - அழகிதான, நீர் - ஜலத்தி னது, தூ - பரிசுத்தமான, நிறம் - நிறத்தையுடைய, நறுந்தளி - நல்லதுளிகள், முக த்தில் - அவன் முகத்திலே, தோற்ற - தெறிக்கவும்—எ-று. (கஉரு)

மூசியவுயிர்ப்பெனுமுடுகுவாதமும்
வாசலின்புறத்திடைநிறுவிவன்மையான்
நாசியிகளவையினடத்தக்கண்டவன்
கூசினன்குதித்தனன்விதிர்த்தகையினான்.

இ-ள். மூசிய - நெருங்கின, உயிர்ப்பெனும் - சுவாசமென்கிற, முடுகு-விரை வான, வாதமும் - காற்றும், வாசலின் - அந்த மண்டபத்துவாசலுக்கு, புறத்திடை- வெளிப்புறத்திலே திருவடியை, நிறுவி - நிறுத்தி, வன்மையான் - மகாபலாட்டிய

ஞன கும்பகருணனது, நாசியின் - மூக்கின், அளவையின் - அளவும், நடத்த - இழுத்துக்கொண்டுபோக, கண்டவன் - பார்த்துணர்ந்த திருவடி, கூசினன் - அவன்மூக்கிலே புகுதக் கூசினவராய், குதித்தனன் - விலகிக் குதித்தார், விதிர்த்த-நடுங்கின, கையினன் - கையையுடையவர்—எ-று. (கஉசு)

பூழியின்றொகைவிசும்பணவப்போய்ப்புகும்
கேழில்வெங்கிளர்கிடையுயிர்ப்புக்கேடிலா
வாழியவுலகெலாந்துடைக்குமாருதம்
ஊழியின்வரவுபார்த்துழல்வதொத்ததே.

இ-ள். பூழியின்றொகை - தூசிக் கூட்டம், விசும்பு - ஆகாயத்தை, அணவ-கிட்ட, போய் - சென்று, புகும் - திரும்ப வந்து நுழைகிற, கேழ் இல்-ஒப்பில்லாத, வெம் - வெம்மை, கிளர் - விளங்குகின்ற, கிடை உயிர்ப்பு - அவனது படுக்கையிலுண்டான சுவாசமானது, கேடு இலா - கெடுதலில்லாமல், வாழிய - வாழ்வையுடைய, உலகெலாம் - உலகமுழுதும், துடைக்கும் - அழிப்பதான, மாருதம் - பிரசண்டவாயு, ஊழியின் - ஊழிகாலத்து, வரவு - வரவை, பார்த்து - பார்த்துக்கொண்டு, உழல்வது - ஓரிடத்திலே சஞ்சரித்தலை, ஒத்தது - ஒப்பாயிருக்கிறது—எ-று. வாசலிலுள்ள தூளியைவாரிக்கொண்டு மேலேபோய்த் திரும்பி மூக்கிலே புகுகிற சுவாசம். (கஉஎ)

பகையெனமதியினைப்பகுத்துப்பாடுற
வகையில்பேழ்வாய்மடுத்தருந்துவானெனப்
புகையொடுமுழங்குபேருயிர்ப்புப்பொங்கிய
நகையிலாமுழுமுகத்தெயிறுநாறவே.

இ-ள். பகையென - தனக்கு விரோதமென்று, மதியினை - சந்திரனை, பகுத்து - இரண்டு பங்காக்கி, பாடு உற - தன திரண்டு வாய்ப்புறத்தும் பொருந்த, வகையில் - ஒருபடிப்பட்டிராத, பேழ்வாய் - அகன்ற வாயிலே, மடுத்து - சேர்த்து, அருந்துவானென - புசிக்கிறானென்றுதோற்ற, புகையொடு-புகையுடனே,முழங்கு-ஒலிப்பதான, பேருயிர்ப்பு - பெருமூச்சு, பொங்கிய - மிகுந்துவருகிற, நகையிலா-ஒளியில்லாமல், முழுமுகத்து-முழுதும்இருண்டிருக்கிற முகத்திலே, எயிறு-வக்கிரதந்தங்கள், நாற - தோன்றவும்—எ-று. (கஉஅ)

தடைபுகுமந்திரந்தகைந்தநாகம்போல்
இடைபுகலரியதோருறக்கமெய்தினான்
கடையுகமுடிவெனுங்காலம்பார்த்தயல்
புடைபெயராநெடுங்கடலும்போலவே.

இ-ள். தடைபுகு - தடைசெய்வதான, மந்திரம்-மந்திரத்தினாலே, தகைந்த-கட்டுப்பட்ட, நாகம்போல் - பாம்புபோல், இடை - நடுவே, புகல்அரியது - விழித்துவருதலில்லாததான, ஓர்-ஒப்பில்லாத, உறக்கம் - நித்திரையை, எய்தினான்-அடைந்தான், கடையுகம் - கலியுகத்தினது, முடிவெனும் - முடிவென்பதான, காலம்பார்த்து - காலங்கருதி, அயல்-வேறொரு, புடை - பக்கத்தே, பெயரா - வராத, நெடுங்கடலும்-நீண்டகடலையும், போல - ஒப்பாகவும்—எ-று. (கஉகூ)

வேறு.

ஆவதாகியதன்மையவரக்கனையரக்கர்
கோவெனுநின்றகுணமிலியிவனெனக்கொண்டான்

காவனாட்டங்கள்பொறியுகக்கனலெனக்கனன்றான்
ஏவனோவிவன்மூவரினொருவனாமீட்டான்.

இ-ள். ஆவது - அப்படிச்சொல்வது, ஆகிய - சரியாயிருக்கிற, தன்மைய - குணத்தையுடைய, அரக்கனை - ராக்ஷதனை, அரக்கர் - ராக்ஷதர்களுக்கு, கோ - அரசன், எனாநின்ற - என்றுசொல்லப்படுகிற, குணம் இலி - குணங்கெட்டவனான ராவணன், இவனென - இவனேயென்று, கொண்டான் - நினைத்தார், கா - என்னைக்காத்தவிலே, வல் - வலியனவான, நாட்டங்கள் - கண்களிலே, பொறி - தீப்பொறி, உக - சிந்த, கனலென - நெருப்பைப்போல், கனன்றான் - கோபங்கொண்டார், ஏவனோ இவன் - இவன் எவனோ, மூவரின் - ராவணன் கும்பகருணன் விபீடணன் ஆகிய மூவரிலே, ஒருவன் - ஒருத்தன், ஆம் - என்றுசொல்லலான, ஈட்டான் - பெருமையையுடையவன் எவனோ—எ-று. காவல் காத்தலையுடைய இமையோடுகூடிய கண்கள் எனவுமாம் கவி தம்மைக்காப்பது கருதிச்சொன்னதாக என்னைக்காத்தலென்று பிரதிபதம்கொள்க. (கங்0)

குறுகிநோக்கிமற்றவன்றலையொருபதுங்குறித்த
இறுகுதிண்புயமிருபதிங்கிவனிலனென்னா
மறுகியேறியமுனிவெனும்வடவைவெங்கனலை
அறிவெனும்பெரும்பரவையம்புனலினாலவித்தான்.

இ-ள். குறுகி - கிட்டப்போய், நோக்கி - பார்த்து, மற்று இவன் - இப்படிக்கிடக்கிறஇவனுக்கு, தலை ஒருபதும் - ஒருபத்துத்தலைகளும், குறித்த - அத்தலைகளுக்குச்சரியாகச்சொல்லுகின்ற, இறுகு - கடினமான, திண் - பலம்பொருந்திய, புயம் தோள்கள், இருபது - இருபதும், இங்கு இவன் - இங்கேகிடக்கிற இவன், இலன் என்னா - இல்லாதிருக்கிறானென்று, மறுகி - மயங்கி, ஏறிய - உயர்தலான, முனிவெனும் - கோபமென்கிற, வடவைவெங்கனலை - வெப்பமுள்ளவடவாக்கினியை, அறிவெனும் - தமது அறிவென்கிற, பெரு - பெரிதான, பரவை - கடலினது, புனலினால் - நீராலே, அவித்தான் - தணித்தார்—எ-று. அம் சாரியை. (கஙக)

அவித்துநின்றெவனாயினுமாகவென்றங்கை
கவித்துநீங்கிடச்சிலபகலென்பதுகருதாச்
செவிக்குத்தேனெனவிராகவன்புகழினைத்திருத்தும்
கவிக்குநாயகனனையவனுறையுளைக்கடந்தான்.

இ-ள். அவித்துநின்று - கோபத்தையடக்கிநின்று, எவன் ஆயினும் - யாரானாலும், ஆக என்று - இருக்க என்று, அங்கை - தமது அழகியகையை, கவித்து-அமைத்து, நீங்கிட - இவன்தொலைய, சிலபகல் - இன்னஞ்சிலநாளே, என்பது - என்கிறதை, கருதா - நினைத்து, செவிக்கு - எல்லார்காதுக்கும், தேனென - தேன்போல், இராகவன் - ஸ்ரீராமனுடைய, புகழினை - கீர்த்தியை, திருத்தும் - பிரபலிக்கச்செய்கிற, கவிக்குநாயகன் - வானரசிரேஷ்டரான திருவடி, அனையவன் - அந்தக் கும்பகருணனுடைய, உறையுளை - படைவீட்டை, கடந்தான் - கடந்துசென்றார்—எ-று. (கஙஉ)

மாடகூடங்கண்மாளிகையோளிகைமகளிர்
ஆடரங்குகளம்பலந்தேவராலயங்கள்
பாடல்வேதிகைபட்டிமண்டபமுதற்பலவும்
நாடியேகினனிராகவன்புகழெனுநலத்தான்.

இ-ள். மாடகூடங்கள் - வீடுகள்கூடங்கள், மாளிகை - பெரியவீடுகள்வுள்ள, ஓளிகை - நீண்டவரிசைகளும், மகளிர் - பெண்கள், ஆடு - நடனஞ்செய்கிற, அறங்குகள், நாடகசாலைகளும், அம்பலம் - பொதுச்சாவடிகளும், தேவர் ஆலயங்கள் - தேவர்வீடுகளும், பாடல் - பாடுதலையுடைய, வேதிகை - திண்ணைகளும், பட்டிமண்டபம் - பெரியமண்டபங்களும், முதல் - முதலான, பலவும் - பல இடங்களும், நாடி-தேடிக்கொண்டு, ஏகினன் - சென்றார், இராகவன் - ஸ்ரீராமனுடைய, புகழெனும்-கீர்த்தியே என்கிற, நலத்தான் - நன்மையைவேண்டுகிறவர்—எ-று.; (௧௩௩)

மணிகொள்வாயிலுட்சாளரத்தாள்களின்மலரில்
கணிகொணாளத்திற்காலினும்புகையினுங்கலக்கும்
நுணுகும்வீங்குமற்றவனிலையாவரே நுவல்வார்
அணுவின்மேருவினாழியானெனச்செலுமநுமன்.

இ-ள். மணிகொள் - அழகுகொண்ட, வாயிலுள் - வாயிலுக்குள்ளும், சாளரம் - சன்னலினது, தாள்களில் - கம்பிகளுக்குள்ளும், மலரில் - புஷ்பத்தினாலே, கண்ணிகொள் - மாலையாகக் கொண்ட, நாளத்தில் - காயாம்புகளிலும், காலினும்-காற்றாகவும், புகையினும் - புகையுருவாகவும், கலக்கும் - சென்று தேடுவார், நுணுகும் - ஒவ்வோரிடங்களில் அதிசூட்சும ரூபங்கொள்ளுவார், வீங்கும் - ஒவ்வோரிடங்களில் பெரியவுருவுங்கொள்ளுவார், மற்றவனிலை - அந்த அனுமாருடைய செல்கையின்வகையை, யாவரே நுகல்வார் - தெரிந்து சொல்லுவோர்கள் யார், அணுவின் - அணுவைப் போலவும், மேருவின் - மேருவைப் போலவும், ஆழி யானென-சக்கரத்தையுடைய திருமால்போல், செலும் - செல்லுகிறார், அனுமன் - திருவடி, எ-று. வாயில் - இல்வாய், முன்றில் - இல்முன். (௧௩௪)

ஏந்தலிவ்வகையெவ்வழிமருங்கினுமெய்திக்
காந்தண்மெல்விரன்மடந்தையர்யாரையுங்காண்பான்
வேந்தர்வேதியர்மேலுளோர்கீழுளோர்விரும்பப்
போந்தபுண்ணியன்கண்ணகன்கோயிலுட்புக்கான்.

இ-ள். ஏந்தல்-பெருமையையுடைய திருவடி, இவ்வகை - இப்படி, எவ்வழி-எப்படிப்பட்ட, மருங்கினும் - இடங்களிலும், எய்தி - போய், காந்தள் - காந்தள் மலர்போலும், மெல்விரல் - மென்மையான விரல்களையுடைய, மடந்தையர் - பெண்கள், யாரையும் - எல்லாரையும், காண்பான் - காணுதற்கு, வேந்தர் - அரசர்களும், வேதியர் - பிராமணர்களும், மேலுளோர் - மேலுலகத்தாரும், கீழுளோர்-கீழுலகத்தாரும், விரும்ப - வேண்டும்படி, போந்த - பிறந்திருக்கிற, புண்ணியன் - பரிசுத்தனான விபீடணனுடைய, கண் அகன் - இடம் அகன்ற, கோயிலுள் - வீட்டுக்குள்ளே, புக்கான் - போயினார்—எ-று. (௧௩௫)

பளிக்குவேதிகைப்பவளத்தின்கூடத்திற்பசுந்தேன்
துளிக்குங்கற்பகப்பந்தரிற்கருநிறத்தோரை
வெளிததுவைகுவதரிதெனவவருருமேவி
ஒளித்துவாழ்கின்றதருமமன்னான்றனையுற்றான்.

இ-ள். பளிக்கு - பளிங்குக் கல்லாற்செய்த, வேதிகை - திண்ணையிலும், பவளத்தின் - பவளக்கால்கள் நிறுத்தின, கூடத்தில் - பட்டகசாலையிலும், பசுந்தேன் பசியதேனை, துளிக்கும் - சிந்துகின்ற, கற்பகப் பந்தரில் - கற்பகப்பூம் பந்தலிலும் உள்ள, கருநிறத்தோரை - கரியநிறத்தையுடைய அரக்கர்களில், வெளித்து - வெளி

யாக வெள்ளைநிறங்கொண்டு, வைகுவது - இருக்கிறது, அரிதென - அருமை யென்று, அவர் - அவ்வரக்கருடைய, உரு - வடிவை, மேவி - கொண்டு, ஒளித்து - மறைந்து, வாழ்கின்ற - இருக்கிற, தருமம் - தருமத்தை, அன்னான் றன்னை - ஒத்தவிபீடணனை, உற்றான் - போய்க்கண்டார்—எ-று. கருநிறத்தோரை ஒளித்தெனக்கூட்டி கருநிறத்தோருக்குப் பயந்து மறைந்துவைகிய தருமம் எனக்கொள்க. (கடசு)

உற்றுநின்றவனுணர்வைத்தன்னுணர்வினுலுணர்ந்தான்
குற்றமில்லதோர்குணமுளனிவனெனக்கொண்டான்
செற்றநீங்கியமனத்தினனொருசிறைசென்றான்
பொற்றைமாடங்கள்கோடியோர்நொடியிடைப்புக்கான்.

இ-ள். உற்றுநின்று - அடுத்துநின்று, அவன் உணர்வை - அவன் புத்தியை, தன் உணர்வினால் - தன்புத்தியாலே, உணர்ந்தான் - ஆய்ந்துதெரிந்தார், குற்றம்-யாதொரு தோஷங்களும், இல்லது - இல்லாததாகிய, ஓர் - ஒப்பற்ற, குணமுளன்-குணமுள்ளவன், இவனென - இவனென்று, கொண்டான் - தெரிந்தவராய், செற்றம்நீங்கிய - அவன்மேல் கோபம் இல்லாத, மனத்தினன் - மனத்தையுடையவராய், ஒருசிறை - மற்றோர் பக்கத்தில், சென்றான் - போயினார், பொற்றை - மலைபோன்ற, மாடங்கள்கோடி - ஒருகோடி வீடுகள், ஓர்நொடியிடை - ஒருக்ஷணத்துக்குள்ளே, புக்கான் - போயினார்—எ-று. (கடஎ)

முந்தரம்பையர்முதலினர்முழுமதிமுகத்துச்
சிந்துரம்பயில்வாய்ச்சியர்யாரையுந்தெரிந்து
மந்திரம்பலகடந்தவன்மனத்தின்முன்செல்வான்
இந்திரன்சிறையிருந்தவாயிலின்கடையெதிர்ந்தான்.

இ-ள். முந்து - முன்னே, அரம்பையர் - தெய்வப்பெண்கள், முதலினர் - முதலானவர்கள், முழுமதி - பூரணச்சந்திரன்போன்ற, முகத்து - முகத்தையுடைய, சிந்துரம்பயில் - சிவப்புநிறம்பொருந்திய, வாய்ச்சியர் - வாயையுடைய பெண்கள், யாரையும் - எல்லாரையும், தெரிந்து - பார்த்தறிந்து, மந்திரம் - ரகசியமான இடங்கள், பல - பலவும், கடந்தவன் - தாண்டிப்போனவராகிய, மனத்தின் - மனோவேகத்துக்கு, முன்செல்வான் - முந்திப்போகிற அனுமார், இந்திரன் - தேவராசன், சிறையிருந்த - சிறைகிடந்த, வாயிலின்கடை - கடைவாயிலினை, எதிர்ந்தான் - கண்டார்—எ-று. (கடஅ)

ஏதியேந்தியதடக்கையர்பிறையெயிறிலங்க
மூதுரைப்பெருங்கதைகளும்பிதிர்களுமொழிவார்
ஓதிலாயிரமாயிரமுணர்விலியரக்கர்
காதுவெஞ்சினக்களியினர்காவலைக்கடந்தான்.

இ-ள். ஏதியேந்திய - ஆயுதங்களைக் கொண்ட, தடக்கையர் - நீண்ட கைகளுள்ளவர்கள், பிறை - சந்திரதுண்டம்போல், எயிறு - பற்கள், இலங்க - விளங்க, மூதுரை - பழஞ்சொற்களும், பெருங்கதைகளும் - பெரிய சரித்திரங்களும், பிதிர்களும் - சிறுகதைகளும், மொழிவார் - சொல்லிக்கொண்டிருக்கிறவர்களை, ஓதில்-அளவு சொல்லும்போது, ஆயிர மாயிரம் - கோடி கோடி, உணர்விலி - அறிவிலிகளான, அரக்கர் - ராக்ஷதர்கள், காது - கொல்லத்தக்க, வெம்சினம் - வெவ்விய கோபத்தையுடைய, களியினர் - கட்குடியர்கள், காவலை - காக்கும்வாயிலை, கடந்தான்-கடந்துசென்றார்—எ-று. (கடகூ)

முக்கணேக்கினன்முதன்மகனறுவகைமுகனும்
திக்குநோக்கியபுயங்களுஞ்சிலகரந்தனையான்
ஒக்கநோக்கியர்குழாத்திடையுறங்குகின்ருனைப்
புக்குநோக்கினன்புகைபுகாவாயிலும்புகுவான்.

இ-ள். முக்கண் - மூன்றுகண்களாலே, நோக்கினன் - பார்க்கிறவரானபரமனுடைய, முதல்மகன் - போரிற்பிரதானபுத்திரனுன முருகக்கடவுள், அறுவகை-தமது ஆறுவகையான, முகனும் - முகங்களையும், திக்கு - திசைகளை, நோக்கிய - பார்ப்பனவான விசாலமான, புயங்களும் - தோள்களும், சில - முகத்திலைந்தும் கையில்பத்தும், கரந்தனையான் - மறைந்தனபோலிருக்கிறவன், ஒக்க - தன் அழகுக்குச் சரியாக, நோக்கியர் - அழகுள்ளபெண்கள், குழாத்திடை - கூட்டத்திலே, உறங்குகின்ருனை - தூங்குகிறவனை இந்திரசித்தை, புக்குநோக்கினன் - போய்க்கண்டார், புகைபுகா - புகைநுழையாத, வாயிலும் - வாயிலிலும், புகுவான் - போகத்தக்க அனுமார்—எ-று. (கசா0)

வளையும்வாளெயிற்றரக்கனேகணிச்சியான்மகனே
அளையில்வாளரியனையவன்யாவனேவறியேன்
இளையவீரனுமேந்தலுமிருவரும்பலநாள்
உளையவுள்ளபோரிவனெடுமுளதெனவுணர்ந்தான்.

இ-ள். வளையும் - வளைந்திருப்பனவாகிய, வாள் - ஒளிபொருந்தின, எயிற்று - வக்கிரதந்தங்களையுடைய, அரக்கனே - இவன்ராக்ஷதனே, கணிச்சியான் - சூலத்தையுடைய சிவன், மகனே - மகனுன முருகக்கடவுளோ, அளையில் - குகையிலிருக்கிற, வாள் - வெள்ளிய ஒளியையுடைய, அரி - சிங்கத்தை, அனையவன் - ஒப்பான இவன், யாவனே - யாரோ, அறியேன் - நான்தெரிந்திலேன், இளையவீரனும் - இளையபெருமாளும், ஏந்தலும் - ஸ்ரீராமனும், இருவரும் - ஆகியஇருவரும்கூடி, பலநாள்-அநேககாலம், உளைய - வருந்த, உள்ள - உளதாகுகிற, போர் - சண்டை, இவனெடும்-இவனுடனே, உளதென - உண்டாமென்று, உணர்ந்தான் - தெரிந்தார்—எ-று.

இவனையின்றுணையுடையபோரிராவணனென்னே
புவனமூன்றையும்வென்றதோர்பொருளெனப்புகறல்
சிவனைநான்முகத்தொருவனைத்திருநெடுமாலாம்
அவனையல்லவர்நிகர்ப்பவரென்பதுமறிவோ.

இ-ள். இவனை - இப்படிப்பட்டவனை, இன் - தனக்கினிதான, துணையுடைய - துணையாகக்கொண்டிருக்கிற, போர் - வலிமையுள்ள, இராவணன் - இராவணனுனவன், புவனமூன்றையும் - திரிலோகத்தையும், வென்றது - ஜெயங்கொண்டதை, ஓர்பொருளென - ஒருபொருளாக, புகறல் - சொல்லுகிறது, என்னே - என்னபெரிதோஅன்று, சிவனை - பரமசிவனையும், நான்முகத்தொருவனை - சதுர்முகப்பிரமாவையும், திருநெடுமாலாம் - ஸ்ரீய்ப்பதியான, அவனை - அவனையும், அல்லவர்-அல்லாதமற்றையோர், நிகர்ப்பவர் - இவனுக்கு ஒப்பாவார், என்பதும் - என்றுசொல்லுகிறதும், அறிவோ - விவேகச்செய்கையோ அன்று—எ-று. (கசஉ)

என்றுகைம்மறித்திடைநின்றுகாலத்தையிகப்ப
தன்றுபோவதென்ருயிரமாயிரத்தடங்காத்
துன்றுமாளிகையோளிகடரிசறத்துருவிச்
சென்றுதேடினனிந்திரசித்தினைதீர்ந்தான்.

இ-ள். என்று - என்றுநினைத்து, கைமறித்து - இவன்ஒருவராலும்வெல்லத்தகாதவனெனக் கையாலேதடுத்து, இடைநின்று - இவ்விடத்தேநின்று, காலத்தையிகப்பது - வீணேகாலம்போக்குகிறது, அன்று - காரியமல்ல, போவதென்று - இனிப்போகிறதே நன்றென்று, ஆயிர மாயிரத்து - ஒருகோடியளவிலும், அடங்கா-அடங்காமல், துன்று - நெருங்கின, மாளிகை - பெரியவீடுகளின், ஒளிகள் - நீண்டவரிசைகளெல்லாம், துரிசு அற - ஒழிவில்லாமல், துருவிச்சென்று - தேடிக்கொண்டுபோய், தேடினன் - பின்னும்தேடுகிருர், இந்திரசித்தினை - இந்திரசித்தை, தீர்ந்தான் - விட்டுப்போன அனுமார்—எ-று. (கசங)

அக்கன்மாளிகைகடந்துபோய்மேலதிகாயன்
தொக்ககோயிலும்பொருநர்களில்லமுந்துருவித்
தக்கமந்திரத்தலைவர்கண்மனைகளுந்தாவிப்
புக்குநீங்கினனிராகவன்கழலெனப்புகழோன்.

இ-ள். அக்கன் - அக்ஷனுடைய, மாளிகை - வீட்டையும், கடந்துபோய்-தாண்டிப்போய், மேல் - அதற்குப்பின்பு, அதிகாயன் - அதிகாயன், தொக்க - கூடியிருக்கிற, கோயிலும் - வீட்டையும், பொருநர்கள் - போர் வீரர்களுடைய, இல்லமும்-வீடுகளையும், துருவி - தேடி, தக்க - தகுதியான, மந்திரத்தலைவர்கள் - ஆலோசனையிற்சிறந்தமந்திரிகளுடைய, மனைகளும் - வீடுகளையும், தாவி-தாண்டி, புக்கு - போய் நீங்கினன் அவைகளையுங்கடந்தார், இராகவன்கழலென - ஸ்ரீராமனது திருவடியென்பதான, புகழோன் - கீர்த்தியையுடையவர்—எ-று. (கசச)

இன்னராமிரும்பெரும்படைத்தலைவர்களிருக்கைப்
பொன்னின்மாளிகையாயிரகோடியும்புக்கான்
கன்னிமாநகர்ப்புறத்தகன்கரந்துறைகாண்பான்
சொன்னமூன்றினுநடுவணத்தகழியைத்தொடர்ந்தான்.

இ-ள். இன்னராம் - இத்தன்மையர்களான, இரும் - பெருமையில், பெரும்-பெரியரான, படைத்தலைவர்கள் - சேனாதிபதிகளுடைய, இருக்கை-இருப்பிடமான, பொன்னின் - பொன்னாலமைந்த, மாளிகை - வீடுகள், ஆயிரகோடியும் - ஆயிரகோடிகளிலும், புக்கான் - போனார், கன்னி - அழியாத, மாநகர்ப்புறத்து - பெருமையுடைய அந்த இலங்கைக்குள்ளே, அகன் - அகன்ற, கரந்துறை - மறைவிடமான இராவணன்வீட்டை, காண்பான் - காணுதற்கு, சொன்ன - எல்லாராலுஞ் சொல்லலான, மூன்றினும் - மூன்றரணினின்றும், நடுவணத்து - நடுவிலிருக்கிற, அகழியை அகழ்க்கிடங்கை, தொடர்ந்தான் - அடுத்தார்கிட்டினார்—எ-று. (கசரு)

தனிக்கடக்களிறெனவொருதுணையிலான்றூய
பனிக்கடற்பெருங்கடவுடன்பரிபவந்துடைப்பான்
இனிக்கடப்பதன்றேழ்கடல்கிடந்ததென்றிசைத்தான்
கனிக்கடற்கதிர்தொடர்ந்தவனகழியைக்கண்டான்.

இ-ள். தனி - ஒப்பில்லாத, கடக்களிறென - மதயானைபோல், ஒருதுணையிலான் - ஒருவர்துணையும்வேண்டாதவரான, கனி - சிவந்தபழமென்று, கடல் - கடலிலே தோன்றுகிற, கதிர் - சூரியனை, தொடர்ந்தவன் - பற்றிப்பாய்ந்த அனுமார், அகழியை - அந்த அகழ்க்கிடங்கை, கண்டான் - பார்த்தவராய், தாய - முன்னே தாம்தாண்டிவந்த, பனிக்கடல் - குளிர்ந்தகடலென்கிற, பெருங்கடவுள்தன் - மகாதே

வனுடைய, பரிபவம் - துன்பத்தை, துடைப்பான் - போக்குதற்கு, இனி - இனிமேல், கடப்பது - தாண்டப்படுவது, அன்று - அல்ல, எழ்கடல் - கடலேழுஞ்சேர, கிடந்ததென்று - கிடக்கின்றதென்று, இசைத்தான் - சொன்னார்—எ-று. பெருங்கடவுளுக்குத் துன்பமாவது அனுமார்தாண்டுதலான இழிவு. (கசசு)

பாழிநன்னெடுங்கிடங்கெனப்பகர்வரேற்பல்லோர்
ஊழிகாலநின்றுலகெலாங்கல்லினுமுலவா
ஆழிவெஞ்சினத்தரக்கனையஞ்சியாழ்கடல்கள்
ஏழுமிங்கர்சுலாயதுகொலாமெனவிசைத்தான்.

இ-ள். பாழி - விசாலமான, நல் - நன்மைகொண்ட, நெடு - நீண்ட, கிடங்கென - தோண்டினபள்ளமென்று, பல்லோர் - பலரும், பகர்வரேல் - சொல்லுவார்களேயானால், ஊழிகாலநின்று-ஊழிகாலஅளவுங்கூடி, உலகெலாம் - எல்லாவுலகத்தாரும், கல்லினும் - தோண்டினாலும், உலவா - இவ்வளவு ஆழமுண்டாகா முடிவுபெறு, ஆழி - கடல்நிறமுடைய, வெஞ்சினத்து - வெவ்வியகோபமுள்ள, அரக்கனை - இராவணராக்ஷதனுக்கு, அஞ்சி - பயந்துகாவலாக, ஆழ்கடல்கள் ஏழும் - ஆழமுள்ள ஏழுகடல்களும், இங்கர் - இந்தப்பட்டணத்தை, சுலாயதுகொலென - சூழ்ந்திருக்கிறதோ என்று, இசைத்தான் - சொன்னார்—எ-று. ஆம் சாரியை. (கசஎ)

ஆயதாகியவகன்புனலகழியையடைந்தான்
தாயவேலையினிருமடிவிசைகொடுதாவிப்
போயகாலத்தும்போக்கரிதென்பதுபுகன்றான்
நாயகன்புகழ்நடந்தபேருலகெலாநடந்தான்.

இ-ள். ஆயதாகிய - அப்படிப்பட்டதான, அகன் - அகன்ற, புனலகழியை- நீருள்ள அகழ்க்கிடங்கை, அடைந்தான் - கிட்டினவராய், தாய - முன்னே தாண்டின, வேலையின் - கடலைப்பார்க்கிலும், இருமடி - இரண்டுபங்கு, விசைகொண்டு- வேகத்துடனே, தாவி - தாண்டி, போயகாலத்தும் - போனபோதிலும், போக்கரிது - போகக்கூடாது, என்பது - என்பதாய், புகன்றான் - சொன்னார், பயநாயகன்- ஸ்ரீராமனுடைய, புகழ் - கீர்த்தி, நடந்த - உலாவுகிற, பேர் - பெரிய, உலகெலாம்- உலகமுழுதும், நடந்தான் - உலாவுகின்றகீர்த்தியுள்ளவர் எழு—எ-று. (கசஅ)

வேறு.

மேக்குநால்வகைமேகமுங்கீழ்விழத்
தூக்கினாலன்னதோயத்ததாய்த்துயர்
ஆக்கினான்படையன்னவகழியை
வாக்கினாலுரைவைக்கலுமாகுமோ.

இ-ள். மேக்கு - மேலுள்ள, நால்வகை - நான்குபிரிவுள்ள, மேகமும்-மேகங்களுங்கூடி, கீழ்விழ - அகழியின் அடித்தரைதோன்ற, தூக்கினால் - நீர்மொண்டெழுந்தால், அன்ன - அவ்வளவுள்ள, தோயத்தது ஆய் - நீருள்ளதாகி, துயர் - உலகுக்கெல்லாந்துன்பத்தை, ஆக்கினான் - உண்டாக்கினராவணனுடைய, படை அன்ன- சேனைவெள்ளம்போன்ற, அகழியை - அந்த அகழ்க்கிடங்கை, வாக்கினால் - நமதுவாயினாலே, உரை - சொல்லுஞ்சொற்களை, வைக்கலும் - கொள்ளுதலும், ஆகுமோ- கூடுமோ சொல்லிமுடியாது—எ-று. (கசகூ)

ஆனைமும்மதமும்பரியாழியும்
வானமங்கையர்குங்குமவாரியும்
நானமாதர்நறைக்குழலாவியும்
தேனுமாரமுந்தேய்வையுநாறுமால்.

இ-ள். ஆனை - யானைகளினுடைய, மும்மதமும் - மூவகைமதங்களும், பரி- குதிரைகளினுடைய, ஆழியும் - மூத்திரப்பிரவாகமும், வானமங்கையர் - தெய்வகன்னிகளுடைய, குங்குமவாரியும் - குங்குமக்குழம்பினீரும், நானம் - வீட்டில் ஸ்நானஞ் செய்கிற, மாதர் - பெண்களுடைய, நறை - பரிமளமுள்ள, குழல் - கூந்தலுக்கூட்டின, ஆவியும் - அகிற்புகையும், தேனும் - அத்தரும், ஆரமும் - சந்தனக்குழம்பும், தேய்வையும் - கர்ப்பூரத்தேய்வும், நாறும் - அவ்வகழிநீர் பரிமளிக்கின்றது—எ-று.

உன்னுநாரைமகன்றில்புதாவுளில்
அன்னங்கோழிவண்டானங்களாழிப்புள்
கின்னரங்குரண்டங்கிலுக்கஞ்சிரல்
சென்னங்காகங்குணாலஞ்சிலம்புமே.

இ-ள். உன்னும் - மீனைத்தேடுகிற, நாரை - நாரைகளும், மகன்றில் - அண்றில்களும், புதா - குருகுகளும், உளில் - உள்ளான்களும், அன்னம் - அம்சங்களும், கோழி - நீர்க்கோழிகளும், வண்டானங்கள் - பெண்குருகுகளும், ஆழிப்புள் - சக்கரவாளங்களும், கின்னரம் - கின்னரபக்ஷிகளும், குரண்டம் - கொக்குகளும், கிலுக்கம் - கிலுக்கபக்ஷிகளும், சிரல் - மீன்குத்திக்குருவிகளும், சென்னம் - நீர்ப்பருந்துகளும், காகம் - நீர்க்காக்கைகளும், குணாலம் - குணாலபக்ஷிகளும், சிலம்பும் - ஒலிக்கும்—எ-று. (கடுக)

நலத்தமாதர்நறையகிலாவியும்
அலத்தகக்குழம்புஞ்செறிந்தாடிய
விலக்கணக்கரியோடிளமென்னடைக்
குலப்பிடிக்குமோரூடல்கொடுக்குமால்.

இ-ள். நலத்த - அழகுள்ள, மாதர் - பெண்களுடைய, நறை - பரிமளங்களும், அகில் - அகிற்புகையும், நாவியும் - கஸ்தூரியும், அலத்தகக்குழம்பும் - செம்பஞ்சுக்குழம்பும், செறிந்து - நெருங்கப்பெற்று, ஆடிய - பூசுதலான, இலக்கணம்- லக்ஷணங்களுள்ள, கரியோடு - யானைகளுடனே, இளம் - இளமைபொருந்தின, மெல் - மெதுவான, நடை - நடையையுடைய, குலப்பிடிக்கும் - சிறப்புள்ள பெண்யானைகளுக்கும், ஓரூடல் - ஒருவகைப் பிணக்கை, கொடுக்கும் - தரும் அந்த அகழி எ-று. (கடுஉ)

நறவுநாறியநாணறுந்தாமரை
துறைகடோறுமுகிழ்த்தனதோன்றுமால்
சிறையினெய்தியசெல்விமுகத்தினோ
டுறவுதாமுடையாரொடுங்கார்களோ.

இ-ள். நறவு - தேனுடனே, நாறிய - மணம்வீசுகின்ற, நாள் - தினமுமலர்கிற, நறும் - நல்ல, தாமரை - தாமரைமலர்கள், துறைகள்தோறும் - எந்த இடங்களிலும், முகிழ்த்தன - குவிந்தனவாகி, தோன்றும்-காணப்படும், சிறையின்-சிறையில், எய்திய - அகப்பட்டிருக்கிற, செல்வி-சீதாபிராட்டியினுடைய, முகத்தினோடு-

முகத்துடனே, உறவுடையார்கள் - உறவுள்ளபேர்கள், ஒடுங்கார்களோ - ஒடுங்கியிரார்களோ ஒடுங்கியிருப்பார்கள்—எ-று. உறவு ஒப்பு ஒப்பான தாமரைகள் குவிந்திருக்கின்றன தாம் சாரியை. (கருங)

பளிங்குசெற்றிக்குயிற்றியபாயொளி
விளிம்பும்வெள்ளமுமெய்தெரியாதுமேல்
தெளிந்தசிந்தையருஞ்சிறியார்களோ
டளிந்தபோதறிதற்கெளிதாவரோ.

இ-ள். பளிங்கு - பளிங்குக்கற்களை, செற்றி - செதுக்கி, குயிற்றிய - பதித்திருக்கிற, பாய் ஒளி - பரவின பிரகாசமுள்ள, விளிம்பும் - ஓரமும், வெள்ளமும்- நீரும், மெய் - உண்மை, தெரியாது - தெரியாமலிருக்கின்றது, மேல் - அகழ்மேல், தெளிந்த - தெளிவுள்ள, சிந்தையரும் - மனமுடையவர்களும், சிறியார்களோடு- தெளிவில்லாத சிறியோருடனே, அளிந்தபோது - கூடுதலானால், அறிதற்கு - தெரிவதற்கு, எளிதாவரோ - சுலபராவர்களோ ஆகார் குயிற்றிய பளிங்கினது பாயொளி எனக்கூட்டுக—எ-று. ஒளியால் பளிங்கும்நீரும் வேறு பிரிக்கலாகாம லிருக்கின்றன என்க. (கருச)

நீலமேமுதனன்மணிநித்திலம்
மேலகீழுபல்வேறொளிவீசலால்
பாலின்வேலைமுதற்பலவேலையும்
கால்கலந்தனவோவெனக்காட்டுமே.

இ-ள். நீலமேமுதல் - நீலரத்நமேமுதலாகிய, நன்மணி - நல்ல ரத்நங்களும், நித்திலம் - முத்துகளும், மேல - மதில்மேலும், கீழ - நீரின்கீழும், பல்வேறு - பலவேறுவகையான, ஒளி - ஒளியை, வீசலால் - வீசுதலாலே, பாலின்வேலை - பாற்கடல், முதல் - முதலான, பல வேலையும் - பலநிறக் கடல்களும், கால் - காற்றால், கலந்தனவோ - கலப்பன வாயினவோ, என - என்னும்படி, காட்டும் - அந்த அகழ் தோற்றும், மதிலிலுள்ளபலவகை ரத்நங்களும் அகழி லொளி வீசுதலாலே அகழ் பல நிறங் காட்டுகிறதென்க—எ-று. (கருரு)

அன்னவேலையகழியையார்கலி
என்னவேகடந்திஞ்சியும்பிற்படத்
துன்னருங்கடிமாநகர்துன்னினன்
பின்னரெய்தியதன்மையும்பேசுவாம்.

இ-ள். அன்ன - அப்படிப்பட்ட, வேலை - கடல்போன்ற, அகழியை - அகழ்க்கிடங்கை, ஆர் கலியென்ன - முன்னே தாண்டிவந்த கடல்போலவே, கடந்து- தாண்டிவந்து, இஞ்சியும் - அந்த அகழையடுத்த மதிலும், பிற்பட - பின்னாக, துன்னரும் - போகுதற்கரிதான, கடி - காவலையுடைய, மாநகர் - பெரிய ஊர்க்குள்ளே, துன்னினன் - போயினர், பின்னர் - போனபின்பு, எய்திய தன்மையும் - அங்குப் போனவகைகளையும், பேசுவாம் - சொல்லுவோம் யாம்—எ-று. (கருசு)

கரியநாழிகைபாதியிற்காலனும்
வெருவியோடுமரக்கர்தம்வெம்பதி
ஒருவனேயொருபன்னிருயோசனைத்
தெருவுமும்மைநூறாயிரந்தேடினன்.

இ-ள். கரியநாழிகை பாதியில் - நடுராத்திரியிலே, காலனும் - யமனும், வெருவி - பயந்து, ஓம் - ஒடுவதான, அரக்கர்தம் - ராக்ஷதர்களுடைய, வெம்பதி-வெவ்விதான ஊர்க்குள், ஒருவனே - இவரொருவரே, ஒரு-ஒப்பில்லாத, பன்னிருயோசனை - பன்னிரண்டுயோசனை யளவுள்ள, மும்மை நூறுயிரந் தெருவும் - மூன்று லட்சம் தெருவும், தேடினன் - தேடலானார்—எ-று. (கடுஎ)

வேறு.

வேரியுமடங்கினநெடுங்கடல்விளம்பும்
பாரியுமடங்கினதடங்கியதுபாடல்
காரியமடங்கினர்கள்கம்மியர்கண்மும்மைத்
தூரியமடங்கினதொடங்கியதுறக்கம்.

இ-ள். வேரியும் - கட் குடித்தலும், அடங்கின - ஒய்வாயின, நெடுங்கடல்-நீண்ட கடல்போல், விளம்பும் - பேசுகிற, பாரியும் - பாரிப்பும், அடங்கினது - அடங்கலாயிற்று, பாடல் - அங்கங்கே பாடுகிறதும், அடங்கியது - அடங்கலாயிற்று, கம்மியர்கள் - தொழிலாளிகளுடைய, காரியம் - வேலைகளும், அடங்கின - அடங்கலாயின, மும்மை - மூவகையான, தூரியம் - வாத்தியங்களும், அடங்கின - அடங்கலாயின, உறக்கம் - எவ்விடத்தும் நித்திரை, தொடங்கியது - தொடங்கலாயிற்று, எ-று. நெடுங்கடல் என்றதனுனே நீண்ட வீதிகளெல்லாம் ஜனசந்தடி அடங்கின என்க. பாரித்தல் - பரவுதல், பாரி - முதனிலைத் தொழிற்பெயர். (கடுஅ)

இறங்கினநிறங்கொள்பரியேமமுறவெங்கும்
கறங்கினமறங்கொளெயில்காவலர்துடிக்கண்
பிறங்கினர்நறுங்குழலரன்பர்பிரியாதோர்
உறங்கினர்பிணங்கியெதிரூடினவரல்லார்.

இ-ள். நிறங்கொள் - நல்லநிறத்தையுடைய, பரி - குதிரைகள், ஏமமுற-சந்தோஷமாக, எங்கும் - எவ்விடத்திலும், இறங்கின - தலைகுனிதலாயின தூங்குகின்றன, மறங்கொள் - வீரங்கொண்ட, எயில்காவலர் - மதில்காப்பவர்களுடைய, துடிக்கண் - பறைகளின் மேற்றேேர்போர்வைகள், கறங்கின - சத்திக்கலாயின, நறும்-வாசனையுள்ள, குழலர் - கூந்தலையுடையவர்களாய், அன்பர் - நாயகரை, பிரியாதோர்-பிரியாதபெண்கள்சிலர், பிறங்கினர் - காமவின்பத்துடன் விளங்குகிறார், பிணங்கி-ஊடி, எதிர் - நாயகர்முன்னே, ஊடினவர் - விரோதித்திருக்கிறவர்களை, அல்லார்-அல்லாதபெண்கள்சிலர், உறங்கினர் - நித்திரைசெய்கிறார்கள்—எ-று. (கடுக)

வடந்தருகடங்கொள்புயமைந்தர்கலவிப்போர்
கடந்தனரிடைந்தனர்களித்தமயில்போலும்
மடந்தையர்கடந்தனமுகட்டிடைமயங்கிக்
கிடந்தனர்நடந்ததுபுணர்ச்சிதருகேதம்.

இ-ள். வடந்தரு - வில்லினது நாணியைத்தருவதான, கடம்கொள் - முறையைக்கொண்ட, புயம் - தோளையுடைய, மைந்தர் - வீரர்கள், கலவிப்போர் - புணர்ச்சியாகிய சண்டையில், கடந்தனர் - பெண்களைவென்றார்கள், களித்த - மயங்கின, மயில்போலும் - மயிற்சாயல்போன்ற, மடந்தையர்-பெண்கள், இடைந்தனர் - தோற்றார்கள், கடம் - குடம்போன்ற, தனம் - கொங்கைகளின், முகட்டிடை - உச்சியிலே, மயங்கி - மயக்கங்கொண்டு, கிடந்தனர் - சாய்ந்தார்கள் அம்மைந்தர்கள், புணர்ச்சிதரு - அக்கலவிப்போர் தருவதான, கேதம் - பெண்கள் அணையமாட்டாததுன்ப

மும் மைந்தராணையவேண்டுகிறதும், நடந்தது - நடக்கலாயிற்று உண்டாயிற்று,விற்றமும்புள்ளகோள் மடந்தையர்கள் தந்தனம் என்றுமானுலும் கடந்தனம் என்றால் மெலித்தல் விகாரங்கொள்க—எ-று. (கசுO)

வாமநறையின்றுறைமயங்கினர்மறந்தார்
காமநறையின்றிறநுகர்ந்தனர்களித்தார்
பூமனறைவண்டறையலங்கமளிபுக்கார்
தூமநறையின்றுறைபயின்றிலர்துயின்றார்.

இ-ள். தூமநறையின்துறை - அகிற்புகை மணமுள்ளஇடங்களில், பயின்றிலர் - சஞ்சரித்தலில்லாதவர்களாய், வாம்அ - ஒழுகுவதையுடைய, நறையின்துறை- மதுபானவிஷயங்களில், மயங்கினர் - கலங்கினவர்களாகி, மறந்தார் - பரவசராய் துயின்றார், காமநறையின்துறை - காமசுகமான மதுரவிஷயங்களை, நுகர்ந்தனர்- அனுபவித்தவர்களாய், களித்தார் - களிப்புக்கொண்டு துயின்றார், பூ-பூவிலே,மன்- பொருந்தின, நறை - தேன்குடிக்கிற, வண்டு - வண்டுகள், அறை - சத்திப்பதான, அலங்கு அமளி - அசையும் ஊசல்மெத்தையிலே, புக்கார் - போய்த்துயின்றார், வாமநறை காமநறைகளிலே களித்துதூமநறையின்றுரைகளிலே பூமன்நறை வண்டறை அலங்கு அமளிக்குப்போய் வெளிச்சஞ்சரிப் பில்லார்களாய் எல்லாரும் தூங்குகிறார்களென்க, சிலர்வாமநறையில் மயங்கியிருக்கிறார்கள் சிலர்காமநறையிற் களித்திருக்கிறார்கள் சிலர் பயின்றிலர் துயின்றாரெனவுமாம்—எ-று. (கசுக)

பண்ணிமையடைத்தபலகட்பொருநர்பாடல்
விண்ணிமையடைத்தனவிளைந்ததிருள்வீணைத்
தண்ணிமையடைத்தனதழங்கிசைவழங்கும்
கண்ணிமையடைத்தனவடைத்தனகபாடம்.

இ-ள். பலகண் - பல இடங்களிலும், பொருநர் - நாடகர்களுடைய, பாடல் பண் - பாடலும்பண்ணும், இமைஅடைத்தன - இமைகள்மூடின ஒலித்தலில்லையாயின, விண்-மேகங்களும், இமைஅடைத்தன - தூங்கலாயின, இருள்-எங்கும் அந்தகாரம், விளைந்தது - ஆயிற்று, வீணை - வீணைகளும், தண் - தமதுகுளிர்ந்த, இமையடைத்தன-கண்களைமூடின என்றால் வாசித்தலில்லையாயின என்க, தழங்கு - சத்திக்கின்ற, இசைவழங்கும்கண் - இராகத்தைத்தருகிற தொளைக்கருவிகளும், இமையடைத்தன - தூங்கலாயின, கபாடம் - கதவுகள், அடைத்தன - எங்கும் மூடலாயிருக்கின்றன—எ-று. (கசுஉ)

விரிந்தனநரந்தமுதல்வெண்மலர்விளாகத்
துரிஞ்சவருதென்றலுயிரின்புடையுலாவச்
சொரிந்தனகருங்கண்வருதுள்ளிதருவெள்ளம்
எரிந்தனபிரிந்தவர்தமெஞ்சுதலினெஞ்சம்.

இ-ள். நரந்தம்முதல் - கஸ்தூரிமணமுதலானவைகள், விரிந்தன - எங்கும் பரவியிருக்கின்றன, வெண்-வெண்ணிறமுள்ள முல்லைமல்லிகை, மலர்விள்-புஷ்பங்களின் விகஸிப்பு, ஆகத்து-தனதுடம்பிலே, உரிஞ்ச - உரசுதலாய், வரு - வருகிற, தென்றல் - தென்றற்காற்றானது, உயிரின்புடை - மார்பிலே, உலாவ-மோத தவழ, கருங்கண் - கரியகண்கள், துள்ளிவருதரு - துளிதுளியாய்வருதலையுடைய, வெள்ளம் - நீர்ப்பிரவாகத்தை, சொரிந்தன - சொரிதலாயின, பிரிந்தவர்தம் - பிரிந்திரு

க்கிற மகளிருடைய, எஞ்சுதலில் - யாதொருகுறைவுமில்லாத, நெஞ்சம்-மனசு,எரிந்தன - எரிதலாயின, கண் - நீரைச்சொரிதலாயின—எ-று. (கசுங)

இளக்கரிழுதெஞ்சவிழுமெண்ணருவிளக்கைத்
துளக்கியதுதென்றல்பகைசோரவுயர்வோரின்
அளக்கரொடளக்கரியவாசையுறவீசா
விளக்கினம்விளக்குமணிமெய்யுறுவிளக்கம்.

இ-ள். இளக்கர் - இளகுதலையுடைய, இழுது - நெய், எஞ்ச - குறையவே, விழும் - அவிவனவான, எண்அரு-எண்ணுதற்குக்கூடாத, விளக்கை-விளக்குகளை, பகை - விரோதிகள், சோர - தளர்ந்தபோது, உயர்வோரின் - அதிகரிக்கின்றவர்கள்போல் - முழுதுங்கெடுக்கிறவர்கள்போல், தென்றல் - தென்றற்காற்றானது, துளக்கியது - அசைத்தவித்துவிட்டது அப்போது, அளக்கரொடு-கடலும், அளக்க-ஒப்புச்சொல்ல, அரிய - நேரில்லாத, ஆசை உற - பிரியந்தோன்ற, மெய் - அப்பெண்கள்சரீரத்திலே, உறு - அணிதலான, மணிவிளக்கம்வீசா - ரத்நாபரணச்சோதிகள்வீசி, விளக்கினம் - எண்ணருவிளக்குகளாக, விளக்கும் - இருளைப்போக்கும்—எ-று. (கசுச)

நித்தநியமத்தொழிலராய்நிறையுஞானத்
துத்தமருறங்கினர்கள்யோகியர்துயின்றார்
மத்தமதவெங்களிறுறங்கினமயங்கும்
பித்தருமுறங்கினரினிப்பிறரிதென்னும்.

இ-ள். நித்தம் - குறைவுபெறாத, நியமத் தொழிலராய்-நியதிக் கிரியைகளையுடையராகி, நிறையும் - பரிபூரணமான, ஞானத்து - மெய்ஞ் ஞானத்தையுடைய, உத்தமர் - நல்லோர்களும், துயின்றனர்கள் - தூங்குகிறார்கள், யோகியர் - அஷ்டாங்க யோகிகளும், துயின்றார் - தூங்குகிறார்கள், மத்தம்-மயக்கத்தைத்தருகிற,மதம்-மதத்தையுடைய, வெங்களிறு - வெவ்விய யானைகளும், உறங்கின - தூங்கலாயின, மயங்கும் - எப்போதும் பிராந்திகொண் டலைகிற, பித்தரும்-பைத்தியக்காரர்களும், உறங்கினர் - தூங்கலானார்கள் என்றால், இனி - இனிமேல், பிறர் - தூங்குகிற மற்றையோர்களுக்கு, இது - இந்த நித்திரைக் காலத்தில், என் ஆம் - யாது உண்டாகும் நித்திரையே யுண்டாகு மென்பதாம்—எ-று. பித்தர் - நித்திரை செய்யாதலைகிறவர்கள். (கசுரு)

ஆயபொழுதம்மதிலகத்தரசர்வைகும்
தூயதெருவொன்றொடொருகோடிதுருவிப்போய்த்
தீயவனிருக்கையயல்செய்தவகழிஞ்சி
மேயதுகடந்தனன்வினைப்பகையைவென்றான்.

இ-ள். ஆயபொழுது - அப்போது, அம்மதிலகத்து - அந்தமதிலுக்குள்ளாக, அரசர்வைகும் - ராஜாக்கள்தங்குகிற, தூயதொரு - நல்லவீதிகள், ஒன்றொடொரு கோடி - இரண்டுகோடியளவு, துருவிப்போய்-தேடிக்கொண்டுபோய், தீயவன்-பொல்லாதராவணன், இருக்கை - வீட்டுக்கு, அயல்-புறமே, செய்த-செய்திருக்கிற, அகழ்இஞ்சி - அகழும் மதிலும் ஆய், மேயது - இருக்கிறதை, கடந்தனன் - தாண்டிப்போனார், வினைப்பகையை - தீவினைச்செய்கைகளான காமக்குரோதங்களை, வென்றான் - ஜெயித்திருக்கிறதிருவடி—எ-று. (கசுசு)

வேறு.

போரியற்கையிராவணன்பொன்மனை
சீரியற்கைநிரம்பியதிங்களாத்
தாரகைக்குழுவிற்றழுவித்தொடர்
நாரியர்க்குறைவாமிடநண்ணினன்.

இ-ள். போர் - எங்கும் பொருதுதலே, இயற்கை - சுவபாவமாகவுடைய, இராவணன்-இராவணனது, பொன்மனை - சுவர்ணமயமானவீடே, சீர்இயற்கை - சிறந்தசுவபாவமே, நிரம்பிய-நிரம்புதலுள்ள, திங்களா - சந்திரனாக, தாரகைக்குழுவில்-நக்ஷத்திரக் கூட்டங்கள்போல், தழுவி - கூடி, தொடர் - சேர்ந்திருக்கிற, நாரியர்க்கு - பெண்களுக்கு, உறைவு ஆம் - இருப்பனவாகிய, இடம் - வீடுகளையுடையவீதியை, நண்ணினன் - கிட்டினார்—எ-று. (கசுஎ)

முயற்கருங்கறைநீங்கியமொய்மதி
அயர்க்கும்வாண்முகத்தாரமுதன்னவர்
இயக்கர்மங்கையர்யாவருமீண்டினர்
நயக்குமாளிகைவீதியைநண்ணினன்.

இ-ள். முயல் - முயலாகிய, கரும் கறை - கரிய களங்கம், நீங்கிய-இல்லாத, மொய் - கிரணங்கள் நிரம்பின, மதி - சந்திரன், அயர்க்கும்-சோர்வாகத்தக்க, வாள்-ஒலி பொருந்தின, முகத்து - முகங்களையுடைய, ஆர் அமுது - அருமையான அமுதத்தை, அன்னவர் - ஒத்த பெண்களாகிய, இயக்கர் மங்கையர் - யக்ஷ கன்னிகள், யாவரும் - எல்லாரும், ஈண்டினர் - கூடினவர்களாக, நயக்கும்-விரும்பியிருக்கின்ற, மாளிகை - வீடுகளையுடைய, வீதியை - தெருவை, நண்ணினன் - போய்த்தேடினார் எ-று. (கசுஅ)

தழைந்தமொய்யொளிபெய்மணித்தாழ்தொறும்
இழைந்தநூலினுமின்னிளங்காலினும்
நுழைந்துநொய்தினின்மெய்யுறநோக்கினன்
விழைந்தவெவ்வினைவேரறவீசினன்.

இ-ள். தழைந்த - மிகுந்த, மொய் ஒளி-நெருங்கின ஒளிகளை, பெய் - வீசுகின்ற, மணி - ரத்னங்களாலான, தாழ் தொறும் - தாழ்க்கோல் செல்லு மிடங்களெல்லாம், இழைந்த - நூற்ற, நூலினும் - நூல்போலவும், இன் - இனிதான, இளங்காலினும் - தென்றற் காற்றுப்போலவும், நொய்தினில்-விரைவாக, நுழைந்து-புகுந்து, மெய் உற - மெய்விளங்க, நோக்கினன் - பார்த்தார், விழைந்த - எல்லாரும் வேண்டலான, வெவ்வினை - வெவ்விய காமச்செய்கையின், வேர்-வாசனையும், அற-போக, வீசினன் - போக்கின திருவடி—எ-று. தாழ்க்கோல் - திறவுகோல். (கசுகு)

அத்திரம்புனையானையரக்கன்மேல்
வைத்தசிந்தையர்வாங்குமுயிர்ப்பினர்
பத்திரம்புரைநாட்டம்பதைப்பறச்
சித்திரங்களெனவிருந்தார்சிலர்.

இ-ள். அத்திரம் - பகைவரம்புக்காயங்களை, புனை - அலங்காரமாகக் கொண்ட, யானை - பட்டத் தியானையையுடைய, அரக்கன்மேல் - இராவணனிடத்தில்,

வைத்த - நிறுத்தின, சிந்தையர் - மனமுள்ளவர்கள், வாங்கும் - மிகவு நீளுதல்கொண்ட, உயிர்ப்பினர் - சுவாசத்தையுடையவர்களாய், பத்திரம் - அம்புகளை, புரை - ஒப்பான, நாட்டம் - கண்கள், பதைப்பு - இமைத்தல், அற - இல்லாமல், சித்திரங்களென கண்டோர் - சித்திரமென்று நினைக்க, இருந்தார் சிலர் - சிலர் இருந்தார்கள்—எ-று. (கஎ0)

வள்ளல்வெஞ்சரமாரனையஞ்சியோ
மெள்ளவேகனவின்பயன்வேண்டியோ
கள்ளமென்கொலறிந்திலங்கண்முகிழ்த்
துள்ளமின்றியுறங்குகின்றார்சிலர்.

இ-ள். வள்ளல் - ஓயாமல்எய்கிற, வெஞ்சரம் - வெவ்விய அம்புகளையுடைய, மாரனை - மன்மதனுக்கு, அஞ்சியோ - பயந்துதானோ, மெள்ளவே - மெதுவாக,கனவின் - சொப்பனத்தினாலாவது, பயன் - அனுபவிக்கிற காமசுகத்தை, வேண்டியோ - விரும்பித்தானோ, கள்ளம் - அப்பெண்களது கபடநினைவு, என்கொல் - யாதோ, அறிந்திலம் - நாம்அறிகிலோம், கண்முகிழ்த்து - கண்களைமூடிக்கொண்டு, உள்ளமின்றி - மனமில்லாமல், சிலர் உறங்குகின்றார் - சிலர் தூங்குகின்றார்கள்—எ-று.(கஎக)

பழுதின்மன்மதன்வெங்கணைபன்முறை
உழுதகொங்கையரூசலுயிர்ப்பினர்
அழுதுசெய்வதென்னுணையரக்கனை
எழுதலாங்கொலென்றெண்ணுகின்றார்சிலர்.

இ-ள். பழுதுஇல் - தோஷமில்லாமல், மன்மதன் - மன்மதனுடைய, வெங்கணை - வெவ்வியஅம்புகள், பல்முறை - அநேகவகைகளாக, உழுத - கைத்திருக்கிற, கொங்கையர் - தனங்களையுடையவர்கள், ஊசல் - நீண்டுபோய்வருகிற ஊசல்போலாடுகிற, உயிர்ப்பினர் - சுவாசத்தையுடையவர்கள், அழுது - நாம் அழுததனாலே, செய்வது - அந்தராவணன் செய்யலாவது, என் - ஒன்றுமில்லை, ஆணை - மகாக்ஞையையுடைய, அரக்கனை - ராவணனை, எழுதலாங்கொல் - எழுதுவோமா எழுதிமுடியுமா, என்றுஎன்பதாய் - எண்ணுகின்றார்சிலர் சிலரெண்ணுகிறார்—எ-று. (கஎஉ)

ஆவதொன்றருளாயெனதாவியைக்
கூவுகின்றிலைகூறலைசென்றெனாப்
பாவைபேசுவபோற்கண்பனிப்புறப்
பூவையோடும்புலம்புகின்றார்சிலர்.

இ-ள். ஆவதொன்று - எனக்கு வேண்டியதான ஒரு காரியத்தையும், செய்யாய் - செய்யாதிருக்கிறாய், அருளாய் - இரக்கஞ்செய்திலை, எனது - என்னுடைய, ஆவியை - பிராணநாயகனான ராவணனை, கூவுகின்றிலை - கூப்பிடா திருக்கிறாய், சென்றுகூறலை - நீதானேபோய்ச் சொல்லுகின்றிலை, எனா - என்று, பாவை - பிரதிமை, பேசுவபோல் - பேசுகிறதுபோல், கண் - கண்களிலே, பனிப்பு உற - துளித்தலுண்டாக, பூவையோடும் - நாகணவாய்ப் புட்களுடனே சிலர் புலம்புகின்றார்—எ-று. (கஎங)

ஈரத்தென்றலிழுகமெலிந்துதம்
பாரக்கொங்கையைப்பார்த்தனர்பாதகன்
வீரத்தோள்களின்வீக்கநினைந்துயிர்
சோரச்சோரத்துளங்குகின்றார்சிலர்.

இ-ள். ஈரத்தென்றல் - குளிர்ந்த தென்றற்காற்று, இழுக - வீச அதனாலே, மெலிந்து - உடல்தளர்ந்து, தம் - தம்முடைய, பாரக்கொங்கையை - கனத்த தனங்களை, பார்த்தனர் - நோக்கினவர்களாய், பாதகன் - தம்மொடு கூடாது பாவஞ்செய்கிற ராவணனுடைய, வீரத்தோள்களின் - வீரங்கொண்ட புஜங்களின், வீக்கம்-கனத்தை, நினைந்து - எண்ணி, உயிர் சோரச் சோர - தமதுயிர் குலையக் குலைய, சிலர் துளங்குகின்றார் - சிலர் உடல் நடுங்குகிறார்கள்—எ-று. (௧௭௪)

நக்கசெம்மணிநாறியநாணிழல்
பக்கம்வீசுறுபள்ளியிற்பல்பகல்
ஒக்கவாசையுலக்கவுலந்தவர்
செக்கர்வான்றருதிங்களொத்தார்சிலர்.

இ-ள். நக்க - விளங்குகின்ற, செம்மணி - சிவந்த ரத்நங்களிலே, நாறிய-தோன்றுகின்ற, நாள்நிழல் - எப்போதும் ஒருபடியான காந்திகள், பக்கம் - பக்கங்களிலே, வீசுறு - வீசுதலையுடைய, பள்ளியில் - படுக்கையிலே, பல் பகல் - பலநாளும், ஒக்க - கூடவேண்டின, ஆசை - தங்களாசை, உலக்க - வியர்த்தமாக, உலந்தவர் - வருந்தின பெண்கள்சிலர், செக்கர் வான் - செவ் வானத்திலே, தரு - தோன்றுதலாகிய, திங்கள் - சந்திரனை, ஒத்தார் - ஒத்திருக்கிறார்கள்—எ-று. (௧௭௫)

வாளினாற்றெளிகற்பகவல்லியர்
தோளினாற்றியதூங்கமளித்துயில்
நாளினாற்செவியிற்புகநாமயாழ்த்
தேளினாற்றிகைப்பெய்துகின்றார்சிலர்.

இ-ள். வாளினால் - ஒளியினாலே, தெளி - தெளிவுள்ள, கற்பகம் - கற்பகவிருக்ஷத்திலே சூழுகிற, வல்லியர் சிலர் - பொன்னங் கொடிபோன்ற சில பெண்கள், தோளில் - தங்கள் தோள்கள்போல், நாற்றிய - தொங்கக் கட்டியிருக்கிற, தூங்கு அமளி - தூங்குமஞ்சத்திலே, துயில் - தூங்குகிற, நாளினால் - கால மாகையாலே, செவியிற்புக - காதுகளிலே நுழைய அந்தக் கானமாகிய, நாமயாழ் - வீணையென்கிற பெயரையுடைய, தேளினால் - தேளாலே, திகைப்பு - மயக்கத்தை, எய்துகின்றார் - அடைகிறார்கள், தூக்கம்வந்து தூங்கும்போது மற்றொரு வீட்டிலே மற்றொருத்திபாடுகிற வீணாகானம் தேள்கொட்டினதுபோல் துன்பஞ்செய்ததென்க—எ-று.

கவ்வுதீக்கணைமேருவைக்கால்வளைத்
தெவ்வினான்மலையேந்தியவேந்துதோள்
வவ்வுசாந்துதம்மாமுலைவெளவிய
செவ்விகண்டுகுலாவுகின்றார்சிலர்.

இ-ள். மேருவை - மகா மேருவை, கால் வளைத்து - இருகதி காலும் சேர வளைவுசெய்து, கவ்வு - பற்றுவதான, தீக்கணை - அக்கினி பாணத்தை, எவ்வினான்-எவின சிவனுடைய, மலை - வெள்ளிமலையை, ஏந்திய - பேர்த்துத் தாங்கின, ஏந்து தோள் - உயர்ந்ததோள்களிலே, வவ்வு - பூசுதலான, சாந்து - சந்தனமானது, தம் தங்களுடைய, மாமுலை - பெரிய தனங்களிலே, வெளவிய - படிந்திருக்கிற, செவ்வி கண்டு - அழகைப் பார்த்து, சிலர் - சில பெண்கள், குலாவுகின்றார் - கொண்டாடிக்கொள்ளுகிறார்கள்—எ-று. (௧௭௭)

கூடிநான்குயர்வேலையுங்கோக்கநின்
ருடினுன்புகழங்கைநரம்பினுல்
நாடிநாற்பெரும்பண்ணுநயப்புறப்
பாடினுன்பெயர்பாடுகின்ருர்சிலர்.

இ-ள். கூடி - ஒன்ருகக்கூடி, நான்கு - நான்குதிக்கிலுமுள்ள, உயர் - உயர்ந்த, வேலையும் - கடல்களும், கோக்க - எங்கும்பிரவகிக்க, நின்று - அக்காலத்திலே நிலைகொண்டு, ஆடினுன் - ஆடின பரமசிவனுடைய, புகழ் - கீர்த்தியை, அம் கை - தன தழகியகையிலுள்ள, நரம்பினுல் - நரம்புகளாகிய தந்திகளைக் கொண்டு, நாடி - ஆலோசித்து, நால் - நானுவகைகளான, பெரும் - பெருமை கொண்ட, பண்ணும் - இராகங்களெல்லாம், நயப்பு உற - சந்தோஷிக்க, பாடினுன் - பாடின ராவணனுடைய, பெயர் - கீர்த்தியை, பாடுகின்ருர் சிலர் - சில பெண்கள் பாடுகிருர்கள் எ-று. (கஎஅ)

இனையதன்மையியக்கியரெய்திய
மனையொராயிரமாயிரகோடியாம்
அனையவன்குலத்தாயிழையாரிடம்
நினைவினெய்தினனீதியினெய்தினுன்.

இ-ள். இனைய - இப்படிப்பட்ட, தன்மை - குணங்களையுடைய, இயக்கியர் - யக்ஷகன்னிகள், எய்திய - இருக்கிற, மனை - வீடுகள், ஓராயிர மாயிரம் கோடி ஆம் - கோடி கோடி கோடிகளான தாம் அதுவிட்டு, அனையவன் - அந்த ராவணனுடைய, குலத்து ஆயிழையார் - குலப்பெண்கள், இடம் - இடமான வீடுகளை, நினைவின் - தமது எண்ணப்படி, எய்தினன் - போய்த் தேடினுர், நீதியின் - நீதி சாஸ்திரப்படியே, எய்தினுன் - செல்லுகிற திருவடிகோடியாம், இயக்கிய ரெய்திய மனை இனைய தன்மையாகவென முடிக்க—எ-று. (கஎகூ)

வேறு.

எரிசுடர்மணியின்செங்கேழிளவெயிலிடைவிடாது
விரியிருள்பருகினுளும்விளக்கின்றிவிளங்குமாடத்
தரிவையர்குழுவுநீங்கவாசையுந்தாமுமேயாய்
ஒருசிறையிருந்துபோனவுள்ளத்தோடூடுவாரும்.

இ-ள். எரி - நெருப்பைப்போலும், சுடர் - காந்தியைக்கொண்ட, மணியின் - ரத்நங்களினது, செங்கேழ் - சிவந்தநிறத்தையுடைய, இளவெயில் - இளஞ்சோதியானது, இடைவிடாது - நடுவேஒழிதலில்லாமல், விரி - விரிவதான, இருள் - இருளை, பருகி - உண்டு, நாளும் - எப்போதும், விளக்கின்றி - விளக்கில்லாமல், விளங்கும் - தாமேவிளங்குவனவான, மாடத்து - வீடுகளிலே, அரிவையர்குழுவும் - ஊழியகாரிகளும், நீங்க - போய்விட, ஆசையும் - உண்டான ஆசையும், தாமுமேயாய் - தாங்களுமாக, ஒருசிறையிருந்து - ஒருபுறத்திலேயிருந்துகொண்டு, போன - நாயகனிடத்தே சென்ற, உள்ளத்தோடு - மனத்துடனே, ஊடுவாரும்-பிணங்குகிறவர்களும்—எ-று.

நகையெரிக்கற்றைநெற்றிநாவிதோய்ந்தனையவோதி
புகையெனத்தும்பிசுற்றப்புதுமலர்பொங்குசேக்கை
பகையெனவேகியான்றபளிங்குடைச்சீதப்பள்ளி
மிகையொடுங்காதகாமவிம்மலின்வெதும்புவாரும்.

இ-ள். நகை - விளங்குகின்ற, எரிக்கற்றை - நெருப்புச்சுவாலையின், நெற்றிமேலே, நாவி - கஸ்தூரி, தோய்ந்தனைய - பூசினாற்போல, ஓதி - கூந்தலிலே, புகையென - புகைபோல், தும்பி - வண்டுகள், சுற்ற - மொய்க்க, புதுமலர் - நூதனபுஷ்பங்களாலே, பொங்கு - மிகுந்திருக்கிற, சேக்கை - படுக்கையானதை, பகையென - விரோதமென்று, ஏகி - அதைவிட்டுப்போய், ஆன்ற - அகன்ற, பளிங்குடை - பளிங்காலமைதலையுடைய, சீதப்பள்ளி - குளிர்ந்ததிண்ணையிலே, மிகை - அதிகமாய், ஒடுங்காத - அடங்காதிருக்கிற, காமவிம்மலின் - காமவெப்பத்தினாலே, வெதும்புவாரும் - சூடுகொண்டிருக்கிறவர்களும்—எ-று. காமவிம்மல் - காமமிகுதி. (௧௮௧)

சவிபடுதகைசால்வானந்தானொருமேனியாகக்
குவியுமீனாரமாகமின்கொடிமருங்குலாகக்
கவிரொளிச்செக்கர்க்கற்றையோதியாமழையுண்கண்ணா
அவிர்மதிநெற்றியாகவந்திவானொக்கின்றாரும்.

இ-ள். சவிபடு - சூரியன் அஸ்தமிப்பதாய், தகைசால் - பெருமை அமைந்த, வானந்தான் - ஆகாயமே, ஒருமேனியாக - ஒருஉடம்பாகவும், குவியும் - அவ்வாகாயத்திலேகூடின, மீன் - நக்ஷத்திரங்களே, ஆரமாக - முத்துமாலையாகவும், மின்கொடி - மின்னற்கொடிகளே, மருங்குலாக - இடையாகவும், கவிர் - முருக்கம்பூப்போல், ஒளி - சிவந்தநிறத்தையுடைய, செக்கர் - செவ்வானமே, கற்றை - திரட்சியையுடைய, ஓதியா - கூந்தலாகவும், மழை - மேகங்களே, உண் - உருவத்தைக்கொள்ளுகிற, கண்ணா - கண்களாகவும், அவிர் - அப்போது விளங்குகிற, மதி - சந்திரனே, நெற்றியாக - நெற்றியாகவும், அந்திவான் - அந்திக்காலத்து ஆகாயத்தை, ஒக்கின்றாரும் - ஒத்திருக்கிறவர்களும்—எ-று. (௧௮௨)

பானலுண்கண்ணும்வண்ணப்படிமுறைமாறப்பண்ணைச்
சோனைபோன்றளிகள்பம்புஞ்சுரிகுழற்கற்றைசோர
மேனிமிர்ந்தெழுந்தமாடவெண்ணிலாமுன்றிநண்ணி
வானமீன்கையின்வாரிமணிக்கழங்காடுவாரும்.

இ-ள். பானல் - பானற்பூப்போன்றனவாய், உண் - விஷயங்களைக் கிரகிக்கிற, கண்ணும் - கரியகண்களும்தாமும், வண்ணப்படி - தாமிருக்கும்படியான, முறைமாற - நிறம்வேறுபாடாகவும், பண்ணை - பெண்கள் கூட்டத்துடனே, சோனைபோன்று - மேகம்போல், அளிகள்பம்பும் - வண்டுகள்மொய்ப்பனவாகிய, சுரி - சுருளுதலையுடைய, குழற்கற்றை - கூந்தலினதுதிரட்சியும், சோர - அவிழ்ந்து விழவும், மேல் - மேலே, நிமிர்ந்து - உயர்ந்து, எழுந்த - போயிருக்கிற, மாடம் - வீட்டினது, வெள் - வெண்மையான, நிலாமுன்றில் - நிலாமுற்றத்தை, நண்ணி அடைந்து, வானம் - ஆகாயத்துள்ள, மீன் - நக்ஷத்திரங்களை, கையின்வாரி - கையாலே அள்ளி, மணி - அழகிதான, கழங்கு - கழற்சிக்காயாக, ஆடு வாரும் - ஆடுகிறவர்களும்-எ-று. முறைமாறல் - தமது நிலைகுலைதல். (௧௮௩)

உழையுழைபரந்தவானயாற்றுநின்றும்பர்நாட்டுக்
குழைமுகத்தாயந்தந்தபுனல்குளிர்ப்பிலவென்றாடி
இழைதொடுத்திலங்குமாடமிடைதடுமாறவேறி
மழைபொதுத்தொழுகுநீரான்மஞ்சனமாடுவாரும்.

இ-ள். உழை உழை - எந்த இடங்களிலும், பரந்த - பரவுதலாகிற, வானயாற்றுநின்று - ஆகாச கங்கையிலிருந்து, உம்பர்நாட்டு - மேனாட்டிலுள்ள, குழை கு

ழைந்த - வருந்தின, முகத்து - முகத்தையுடைய, ஆயம் - தோழிக்கூட்டங்கள், தந்த - முகந்துகொண்டுவந்த, புனல் - ஜலமானது, குளிர்ப்பு - குளிர்ச்சி, இல என்று - இல்லையென்று, ஊடி - அவர்களோடு பிணங்கி, இழை தொடுத்து - இழைத்தல் செய்து செய்யவேண்டுவன வெல்லாம் செய்து, இலங்கு - விளங்குகின்ற, மாடம்- மேலுபரிகைக்கு, இடை - தமதிடையான்வை, தடுமாற - துவள்வதாக, ஏறி - உயரவேறி, மழை - மேகத்தை, பொதுத்து - பொத்து, ஒழுகு - சிந்துகிற, நீரால் - ஜலத்தினாலே, மஞ்சனம் ஆடுவாரும் - ஸ்நானஞ்செய்கிறவர்களும், குழைமுகம்—குண்டலம் விளங்குகிற முகமென்றுமாம்—எ-று. (௧௮௪)

பன்னகவரசர்செங்கேழ்ப்பணாமணிவலிதிற்பற்றி
இன்னுயிர்க்கணவனீந்தானாமெனவிருத்திவிஞ்சை
மன்னவர்முடியும்பூணுமாரமும்பணையமாகப்
பொன்னணிபலகைசூதுதுயில்கிளர்பொருகின்றாரும்.

இ-ள். பன்னக அரசர் - சர்ப்பராஜர்களுடைய, செங்கேழ் - சிவந்த நிறமுள்ள, பணாமணி - படத்திலிருக்கிற ரத்நத்தை, வலிதில் - பலாத்காரமாய், பற்றி- பறித்துவந்து, இன் - தமக்கினியனான, உயிர்க்கணவன் - பிராணநாயகன், ஈந்தான்- கொடுத்தான், ஆமென - எனக்கேயிது தகுமென்று, இருத்தி - அதை வைத்துக்கொண்டு, விஞ்சை மன்னவர் - வித்தியாதர ராஜாக்கள், முடியும் - கிரீடங்களும், பூணும் - ஆபரணங்களும், ஆரமும் - முத்துமாலைகளும், பணையமாக - பந்தயமாக வைத்து, பொன் - பொன்னால், அணி - அலங்கிருதமான, பலகை - பலகையிலே, துயில்கிளர் - நித்திரையில்லாதவர்களாய்த் தன்போன்ற மற்றொருத்தியுடன், சூது பொருகின்றாரும் - சூது ஆடுகிறவர்களும், எல்லா நாயகன் தந்தனவே யானாலும் பணாமணி சிறந்ததென்றதைப் பந்தயத்தில்வையாமல் மற்றவைகளை வைத்தாடுகிறார்களென்க—எ-று. (௧௮௫)

தென்னகுகுடமுட்பாடல்சித்தியரிசைப்பத்தீஞ்சொற்
பன்னகமகளிர்வள்வார்த்தண்ணுமைபாணிபேணப்
பொன்னகர்த்தரளப்பந்தர்கற்பகப்பொதும்பர்பொற்றோள்
இன்னகையரம்பைமாரையாடல்கண்டிருக்கின்றாரும்.

இ-ள். தென் - அழகாக, நகு - விளங்குகிற, குடமுள் - கடவாத்தியத்துடனே, பாடல் - பாட்டுகளை, சித்தியர் - சித்தகன்னிகள், இசைப்ப - பாட, தீஞ்சொல் - இனிச் சொற்களையுடைய, பன்னகமகளிர் - நாககன்னிகள், வள் - பலமான, வார் - தோலாற் கட்டின, தண்ணுமை - மத்தளங்களை, பாணி - கைகளாலே, பேண - முழக்க, பொற்றோள் - அழகான தோள்களும், இன்னகை - இனிமையைத் தருகிற பல்வரிசைகளுமுள்ள, அரம்பைமாரை - தெய்வப்பெண்களின், கற்பகப் பொதும்பர் - கற்பகப்பூஞ்சோலையிலே கட்டியிருக்கிற, பொன்னகர் - பொன்மயமான வீட்டிலே, தரளப்பந்தர் - முத்துப்பந்தலின் கீழே, ஆடல் - ஆடுதலை, கண்டிருக்கின்றாரும் - பார்த்திருக்கிறவர்களும்—எ-று. (௧௮௬)

ஆணியிற்கிடந்தகாதலகஞ்சுடவருவியுண்கண்
சேணுயருறக்கந்தீர்ந்தசிந்தையர்செய்வதோரார்
வீணையுங்குழலுந்தத்தமிடறும்வேற்றுமையுந்தீர்ந்த
பாணிகளளந்தபாடலமிழ்துகப்பாடுவாரும்.

இ-ள். ஆணியில் - தைத்த ஆணிபோல், கிடந்த - தங்கியிருக்கிற, காதல்-ஆசையானது, அகம் சுட - மனதைச்சுட, அருவிஉண் - அருவியாறு பொருந்தின, கண் - கண்களில், சேண் உயர் - மிகவு நெடுநேரமாக, உறக்கம் - நித்திரை, தீர்ந்த-இல்லாத, சிந்தையர் - எண்ணங்கொண்டவர்கள், செய்வது - செய்யுஞ் செய்கைகள், ஓரார் - ஒன்றுந் தெரியாதவர்களாய், வீணையும் - யாழும், குழலும் - பொல்லாங்குழலும், தத் தம் - தங்கள் தங்களுடைய, மிடறும் - மிடற்றோசையும், வேற்றுமையும்-ஒத்திருத்தலே யன்றி வேறுபடுதலும், தீர்ந்த - இல்லாத, பாணிகள் - சங்கீதக்கிரமப்படியே, அளந்த - அளவுசெய்துபாடுகிற, பாடல் - பாட்டுகளை - அமிழ்து உக-ரஸஞ்சிந்த, பாடுவாரும் - பாடுகிறவர்களும்—எ-று. (௧௮௭)

தண்டலைவாழையன்னகுறங்கிடையல்குற்றட்டில்
கொண்டபூந்துகிலுங்கோவைகலைகளுஞ்சோரக்கூர்ங்கள்
உண்டலமந்தகண்ணோடூசலிட்டுலாவுகின்ற
குண்டலந்திருவில்வீசக்குரவையிற்குழற்றுவாரும்.

இ-ள். தண்டலை - சோலையிலுள்ள, வாழை - வாழைத் தண்டை, அன்ன-ஒப்பான, குறங்கிடை - தொடைநடுவிலுள்ள, அல்குல் - அல்குலாகிய தட்டில்-தேர்த் தட்டிலே, கொண்ட - உடுத்தின, பூம்துகிலும் - அழகிய வஸ்திரங்களும், கோவை - கோத்த மாலைகளும், கலைகளும் - மேகலை வகைகளும், சோர - அவிழ, கூர்ங்கள் - மிகவு மயக்கமுள்ளமதுவை, உண்டு - குடித்து, அலமந்த - சுழலுகின்ற, கண்ணோடு - கண்களுடனே, ஊசலிட்டு - ஊஞ்சல்போலாடி, உலாவுகின்ற - அசைகிற, குண்டலம் - காதணிகள், திருவில் - மிக்ககாந்தியை, வீச - ஜொலிக்க, குரவையில் - குரவைக் கூத்திலே, குழற்றுவாரும் - குழறி ஒலிக்கிறவர்களும்—எ-று.()

நச்செனக்கொடியநாகக்கள்ளொடுகுருதிநக்கிப்
பிச்சரிற்பிதற்றிபல்குற்பூந்துகில்கலாபம்பீறிக்
குச்சரித்திறத்தினோசைகளங்கொளக்குழக்கொண்டீண்டிச்
சச்சரிபாணிகொட்டிநிறைதடுமாறுவாரும்.

இ-ள். நாகநச்சென - பாம்பினஞ்சுபோல், கொடிய - பொல்லாத, கள்ளொடு - மதுவுடனே, குருதி - இரத்தமும், நக்கி - குடித்து, பிச்சரில் - பைத்தியகாரர்போல், பிதற்றி - குழறி, அல்குல் - அல்குல்மேலணிந்த, பூந்துகில் - அழகியவஸ்திரத்தையும், கலாபம் - அரைநூன்மாலையையும், பீறி - கிழித்துக்கொண்டு, குச்சரித்திறத்தின் - குச்சரியென்னும் பண்ணிலே, ஓசை - சத்தம், களம்கொள - கண்டத்திலேதோன்ற, குழுக்கொண்டு - கூட்டங்கொண்டு, ஈண்டு - கூடி, சச்சரி - சர்ச்சரியென்று ஓசைதோன்ற, பாணி - பிரமதாளங்களைக் கைகளாலே, கொட்டி-மோதி, நிறை - தமதுநிற்குநிலை, தடுமாறுவாரும் - தட்டழிகிறவர்களும்—எ-று. (௧௮௯)

தயிர்நிறத்துறுகளுள்ளந்தள்ளூறவறிவுதள்ளிப்
பயிர்வுறத்தெய்வமென்மேற்படிந்ததுபார்மினென்னா
உயிருயிர்த்திரண்டுகையுமுச்சிமேலுயரநீட்டி
மயிர்சிலிர்த்துடலுங்கூசிவாய்விரித்தொடுங்குவாரும்.

இ-ள். தயிர்நிறத்து - தயிரினதுநிறத்தை, உறு - பொருந்தின, கள் - மதுவானது, உள்ளம் - மனத்தை, தள்ளூற - தடுமாறப்பண்ண அதனாலே, அறிவுதள்

ளி - புத்திமயங்கி, பயிர்வுற - எல்லாரும்அஞ்ச, தெய்வம் - நமதுகுலதெய்வம், என்மேல் - என்மேலே, படிந்தது - ஆவேசமாயிற்று, பார்மினென்று-பாருங்களென்று, உயிர்உயிர்த்து - சுவாசங்களை விட்டுக்கொண்டு, இரண்டுகையும் - இரண்டுகைகளையும், உச்சிமேல் - தலைக்குமேலே, உயர - நீளமாக, நீட்டி-நீளவிட்டு, மயிர்சிலிர்த்து-உரோமபுளகிதமாய், உடலும் - உடம்பும், கூசி - கூசுதலாகி, வாய்விரித்து-ஆவென்றுகத்தி, ஓடுங்குவாரும் - ஒய்கிறவர்களும்—எ-று. (கக0)

இத்திறத்தரக்கிமார்களீரிருகோடியீட்டப்
பத்தியருறையுந்தெய்வப்படர்நெடுந்தெருவும்பார்த்தான்
சித்தியருறையுமாடத்தெருவும்பின்னுகச்சென்றான்
உத்திசைவிஞ்சைமாதருறையுளைமுறையினுற்றான்.

இ-ள். இத்திறத்து - ஆகிய இவ்வகையான, அரக்கிமார்கள்-ராக்ஷதப்பெண்கள், ஈரிருகோடி - நாலுகோடி, ஈட்டம் - கூட்டமான, பத்தியர் - வரிசையானவீடுகளையுடையராய், உறையும் - இருக்கிற, தெய்வம்-தெய்வத்தன்மைகொண்ட, படர்-விசாலமான, நெடுந்தெருவும் - நீண்டவீதிமுழுதும், பார்த்தான் - தேடினார், சித்தியர் - சித்தகன்னிகள், உறையும் - வாசம்பண்ணுகிற, மாடம் - வீடுகளையுடைய, தெருவும் - வீதியும்பின்னுக தமக்குப்பின்புறமாக, சென்றான் - தேடிப்போயினர், உத்திசை - அப்புறமான திக்கிலே, விஞ்சைமாதர் - வித்தியாதரகன்னிகள், உறையுளை-இருக்கும்வீதியை, முறையின்-ஒவ்வொருவீடாக, உற்றான்-தேடிப்போயினர்-எ-று.

வேறு.

வளர்ந்தகாதலர்மகரிகைநெடுமுடியரக்கனைவரக்காணர்
தளர்ந்தசிந்தைதம்மிடையினுநடுங்கிடவுயிரொடுதடுமாறிக்
களந்தவாநெடுங்கருவியிற்கைகளிற்செயிரியர்கலைக்கண்ணல்
அளந்தபாடல்வெவ்வரவுதஞ்செவிபுகவலமாலுறுகின்றார்.

இ-ள். வளர்ந்த - அதிகமான, காதலர் - ஆசையுள்ளவர்களாய், மகரிகை-மகரதோரணவரிசைபோன்ற, நெடுமுடி-நீண்டதலைவரிசைகளையுடைய, அரக்கனை-ராவணராட்சதனை, வரக்காணர் - வரக்காணுதவர்களாகி, தளர்ந்த - சோர்வான, சிந்தை - நெஞ்சானது, தம் - தங்களுடைய, இடையினும் - இடையைப்பார்க்கிலும் அதிகமாக, நடுங்கிட - துவளுதலாக, உயிரொடு-உயிருடனே, தடுமாறி-தடுமாற்றங்கொண்டு, களம் - தங்கள்கண்டத்தோசைக்கு, தவா - தப்புதலாகாத, நெடுங்கருவியில் - நீண்டவாத்தியங்களாலும், கைகளில் - கைகளாலும், செயிரியர் - பாடகர்கள், கலைக்கண்ணல் - சாஸ்திரோக்தமாக, அளந்த - அளவாக்கிச்சொல்லுகிற, பாடல்-பாட்டான், வெவ்வரவு - வெம்பாம்பு, தம்செவிபுக - தங்கள்காதிலேநுழைய, அலமரலுறுகின்றார் - துன்பமடைகிறார்கள்—எ-று. (ககஉ)

புரியுநன்னெறிமுனிவரும்புலவரும்புகலிலாப்பொறைகூர
எரியும்வெஞ்சினத்திகலடுகொடுந்திரலிராவணற்கெஞ்ஞான்றும்
பரியுநெஞ்சினரிவரெனவயிர்த்ததோர்பகைகொடுபனித்திங்கள்
சொரியும்வெங்கதிர்துணைமுலைக்குவைசுடக்கொடிகளிற்றுடிக்கின்றார்.

இ-ள். நன்னெறிபுரியும் - நன்மார்க்கத்தைச்செய்கிற, முனிவரும் - ருஷிகளும், புலவரும் - தேவர்களும், புகல்இலா - வேறேஅடைதலுக்கிடமில்லாமல், பொறைகூர - பொறுத்துக்கொள்ள, எரியும் - எரிகின்ற, வெஞ்சினத்து-வெவ்வியகோ

பத்தினாலே, இகல் - பகைவரை, அடும்-வாதிக்கிற, கொடுந்திறல் - கொடுமையான சக்தியையுடைய, இராவணற்கு-இராவணனுக்கு, எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், பரியும்-இரங்குவதான, நெஞ்சினர்-மனமுடையவர்கள், இவரென - இப்பெண்களென்று, வயிர்த்தது - வயிரம்பற்றினதான, ஓர்பகைகொடு - ஒருவிரோதங்கொண்டு, பனித்திங்கள் - குளிர்ந்தசந்திரன், சொறியும் - கொட்டுகிற, வெங்கதிர் - வெவ்வியகிரணமானது, துணைமுலை - இரண்டுமுலைகளாகிற, குவை-குப்பல்களை, சுட-எரிக்க, கொடிகளில் - கொடிகள்போல் துடிக்கின்றார்—எ-று. (கககூ)

சிறுகுகாலங்களூழிகளாம்வகைதிரிந்துசிந்தனைசிந்த
முறுகுகாதலின்வேதனையுழப்பவர்முயங்கினர்மூலைமுன்றில்
இறுகுசாந்தமுமெழுதுநற்குறிகளுமின்னுயிர்ப்பொறையீர
மறுகுவாட்கண்கள்சிவப்புறநோக்கினர்வயிர்த்தனருயிர்க்கின்றார்.

இ-ள். சிறுகுகாலங்கள் - சொற்பகாலமும், ஊழிகளாம்வகை - ஊழிகாலம்போல்நீண்டிருக்கும்படி, திரிந்து - அலைந்து வேறுபாடாய், சிந்தனைசிந்த-எண்ணங்குலைய, முறுகு - முதிர்ந்த, காதலின் - காமமாகிய, வேதனை - துன்பத்திலே, உழப்பவர் - வருந்துகிற பெண்கள், முயங்கினர் - தம்மை அணைந்த புருஷனாலே, முலை முன்றில் - தமது முலைகளாகிய முகடுகளிலே, இறுகு - அழுந்தப்பட்ட, சாந்தமும் - சந்தனமும், எழுது - எழுதியிருக்கிற, நற் குறிகளும் - நல்ல அடையாளங்களும் கண்டு, இன் - இனிதான, உயிர்ப் பொறை - உடம்பை அவை, ஈர - வருத்தஞ் செய்ய, மறுகு - மயங்குகின்ற, வாள் - வாளாயுதம்போன்ற, கண்கள் - நேத்திரங்கள், சிவப்புற - சிவக்க அவற்றை, நோக்கினர் - பார்த்தார்கள், வயிர்த்தனர்- வயிரங்கொண்டு, உயிர்க்கின்றார் - நெடுமூச் செறிவார்கள், முயங்கினவர்-முன்னே கூடினவர்களாய் என்க—எ-று. (கஙச)

ஆயவிஞ்சையர்மடந்தையருறைவிடமாறிரண்டமைகோடி
தூயமாளிகைநெடுந்தெருத்துருவிப்போய்த்தொலைவின்மூன்றுலகிற்கும்
நாயகன்பெருங்கோயிலைநண்ணுவான்கண்டனனளிர்திங்கள்
மாயநந்தியவாண்முகத்தொருதனிமயன்மகளுறைமாடம்.

இ-ள். ஆய் - அப்படிப்பட்ட, விஞ்சையர் மடந்தையர் - வித்தியாதர கன்னிகள், உறை விடம் - இருக்கு மில்லிடமான ஆறிரண்டு அமைகோடி - பன்னிரண்டு கோடி, தூய - பரிசுத்தமுள்ள, மாளிகை - வீடுகளையுடைய, நெடுந் தெரு - நீண்ட வீதிமுழுதும், துருவி - தேடிக்கொண்டுபோய், தொலைவு இல் - அழிவில்லாத, மூன் றுலகிற்கும் - திரி லோகத்திற்கும், நாயகன் - அதிபனான ராவணனுடைய, பெருங் கோயிலை - பெரிய கோயிலுக்கு, நண்ணுவான்-போகும்படியானவர், கண்டனன் - பார்த்தார், நளிர் திங்கள் - பூரண சந்திரன், மாய - தோற்க, நந்திய-விளங்குகின்ற, வாள் - ஒளி பொருந்தின, முகத்து - முகத்தையுடைய, ஒருதனி - ஒப்பில்லாமல் தானே தனக்கொப்பான, மயன் மகள் - மண்டோதரி, உறை மாடம்- இருக்கும் வீட்டை கண்டனன்—எ-று. ஆறிரண்டு கூடினகோடி - அசுரர் தச்சன் மகள் மண்டோதரி. (கஙரு)

கண்டுகண்ணெடுகருத்தொடுகடாவினன்காரணங்கடைநின்ற
துண்டுவேவெருசிறப்பெங்கணுயகற்குயிரினுமுரியாளைக்
கொண்டுபோந்தவன்வைத்ததோருறையுள்கொல்குலமணிமனைக்கெல்லாம்
விண்டுவின்றடமார்பினின்மணியொத்ததிதுவெனவியப்புற்றான்.

இ-ள். கண்டு - அந்தவீட்டைப்பார்த்து, கண்ணொடு - தமதுகண்களை, கருத்தொடு - மனத்துடனே, கடாவினன் - கூட்டியோசித்தார், காரணம் - நாம்தேடிவந்ததற்கு நிமித்தமானபொருள், கடைநின்றது உண்டு - முடிவிலே யிருந்ததாயிருக்கிறது, வேறு - வேறே, ஒருசிறப்பு - ஒருவிசேடமுள்ளதாக, எங்கள்நாயகற்கு - எங்களாண்டவனுக்கு, உயிரினும் - உயிரினுஞ்சிறந்ததென்ன, உரியாளை - தக்கவளான பிராட்டியை, கொண்டுபோந்தவன் - கொண்டுவந்தராவணன், வைத்தது - வைக்கப்பட்டதான, ஓர் உறையுளகொல் - ஒருவீடுதானோ இந்தவீடு, குலமணி - சிறந்தரத்நகசிதமுள்ள, மனைக்கெல்லாம் - எல்லாவீடுகளுக்கும், விண்டுவின் - விஷ்ணுவினுடைய, தடம் - விசாலமுள்ள, மார்பினின் - மார்பிலணிந்த, மணி - மாணிக்கத்தை, ஒத்தது - ஒத்திருக்கின்றது, இது என - இந்தவீடென்று, வியப்புற்றான் - அதிசயித்தார்—எ-று. (௧௬௬)

அரம்பைமேனகைதிலோத்தமையுருப்பசியாதியர்மலர்க்காமன்
சரம்பெய்தூணிபோற்றளிரடிதாங்தொடச்சாமரைபணிமாறக்
கரும்பையுஞ்சுவைகைப்பித்தசொல்லியர்காமரங்கனியாழின்
நரம்பினின்னிசைசெவிபுகநாசியிற்கற்பகவிரைநாற.

இ-ள். அரம்பை - மேனகை - திலோத்தமை - உருப்பசி - அரம்பையோடு கூடின இந்தநால்வரே, ஆதியர் - முதலானபெண்கள், காமன் - மன்மதனது, மலர்ச்சரம் - பூங்கணைகளை, பெய் - அடக்குகின்ற, தூணிபோல் - அம்புக்கூடுபோலவும், தளிர் - தளிர்போலவுமிருக்கிற, அடி - கணைக்கால்களை, தொட - பிடிக்கவும், சாமரை - வெண்சாமரம், பணிமாற - வீசவும், கரும்பையும் - கரும்புரசத்தையும், சுவை-ருசியாலே, கைப்பித்த - கசப்பென்னச்செய்த, சொல்லியர் தாம் - மிருதுபாஷிகள் பாடுகிற, காமரம்கனி - இசைமுதிர்கின்ற, யாழின் - வீணையினது, நரம்பின் - தந்தியில்வருகிற, இன் இசை - மதுரப்பண்ணனது, செவிபுக - காதிலே நுழையவும், நாசியில் - மூக்கிலே, கற்பகவிரை - கற்பகப்பூமணம், நாற - பரிமளிக்கவும்—எ-று. ()

விழைவுநீங்கியமேன்மையோராயினுங்கீழ்மையோர்வெகுள்வுற்றால்
பிழைகொனன்மைகொல்பெறுவதென்றையுறுபீழையாற்பெருந்தென்றல்
உழையர்கூவப்புக்கேதெனப்பெயர்வதோரூசலினுளதாகும்
பழையம்யாமெனப்பண்பிலசெய்வரோபரிணிதர்பயனோர்வார்.

இ-ள். விழைவுநீங்கின - இச்சையற்ற, மேன்மையோர் - மேம்பாட்டினர், ஆயினும்-ஆனாலும், கீழ்மையோர் - கீழானவர்கள், வெகுள்வுற்றால் - கோபங்கொண்டால், பெறுவதுபிழைகொல் - அக்கோபத்தினாலேதோஷமாமோ, பெறுவதுநன்மைகொல் - நன்மையாமோ, என்று ஐயுறு - என்று சந்தேகிப்பதான, பீழையால்-பயமுள்ளவிசனத்துடன், பெருந்தென்றல் - மிகுதியாய்வருகிறதென்றற்காற்று, உழையர் - ஊழியகாரிகள், கூவ - கூப்பிட்டால், புக்கு - வந்து, ஏதென - என்ன உத்தரவு என்று, பெயர்வது - போவதான, ஓர் ஊசலின் - ஒரு ஊசற்போல், உளதாகும் - போகிறதுவருகிறதாயிருக்கும்,பழையம் - வயதால்மூப்புடையோம், யாமென-நாமென்று அடங்காமல், பண்பு இல - தகாதவைகளை, செய்வரோ - செய்யார்கள், பரிணிதர் - தெரிந்தவர்கள், பயன் ஓர்வார் - தாம்செய்பவைகளால் வருகிறபயனைக் கருதுவார்கள்—எ-று. என்பதனால்வாயு அரக்கருக்குச் செல்காலமென்று போவென்றாற் போய் வா என்றால் வருகிறதாயிருக்கிறது. (௧௬அ)

இன்னதன்மையினெரிமணிவிளக்கங்களெழில்கெடப்பொலிகின்ற
தன்னதின்னொளிதழைப்புறத்துயில்வுறுதையலைத்தகைவில்லான்

அன்னளாகியசானகியிவளெனவயிர்த்தகத்தெழுவெந்தீ
துன்னுமாருயிருடலொடுசுடுவதோர்துயருழந்திவைசொன்னான்.

இ-ள். இன்னதன்மையின் - இப்படிப்பட்ட உல்லாசத்துடனே, எரி - நெருப்புநிறமான, மணிவிளக்கங்கள் - ரத்நவிளக்குகள், எழில்கெட - அழகுதோற்க, பொலிகின்ற - விளங்குகிற, தன்னது - தனது, இன் ஒளி - குளிர்ந்த தேககாந்தி, தழைப்புற - எங்குந் தோன்றுவதாக, துயில்வுறு தையலை - தூங்குகின்ற மண்டோதரியை, தகைவு இல்லான் - தடையில்லாமற்போய்க்கண்டு திருவடி, அன்னள் ஆகிய - அப்படிப்பட்டராஜசோபிதமுள்ள உளதாயிருக்கையால், சானகி - சீதாபிராட்டி, இவள் என - இவள்தானென்று, அயிர்த்து - சந்தேகித்து என்றால் தெரியாமல், அகத்து - உள்ளத்திலே, எழு - உண்டாகுகிற, வெந்தீ - வெவ்வியகோபாக்கினி, துன்னும் - பொருந்துவதான, ஆர் உயிர் - அரிய தமதுயிரையும், உடலொடு - உடம்பையும், உருபுமயக்கம் - சுடுவதுதகிப்பதான, ஓர் துயர் - ஒருவிததுன்பத்தால், உழந்து - வருந்தி, இவை - இவ்வார்த்தைகளைமனத்தொடு, சொன்னான் - சொல்லலானார்—எ-று. (௧௯௯)

எற்புவான்றொடர்யாக்கையாற்பெறும்பயனிகந்தனெனிதுநிற்க
அற்புவான்றளையிற்பிறப்பதனொடுமிகழ்ந்துதன்னருந்தெய்வக்
கற்புநீங்கியகனங்குழையிவளெனிற்காகுத்தன்புகழோடும்
பொற்பும்யானுமிவ்விலங்கையுமரக்கரும்பொன்றுதுமின்றென்றான்.

இ-ள். எற்பு - எலும்பையே, வான் - பெரிதான, தொடர் - ஆதாரமாகவுடைய, யாக்கையால் - சரீரத்தினாலே, பெறும்பயன் - அடையும்பலனை, இகந்தனென் - அடைவேனானேன், இது நிற்க - பிராட்டி நிலைதவறினதிருக்க நான் அடையாதிருப்பது இருக்க, அற்புவான்றளை - அன்பென்னும்பெரியபந்தத்தை, இற்பிறப்பதனொடு - குடிப்பிறப்புடனே, இகழ்ந்து - போகவிட்டு, தன் - தனது, அரும் - சொல்லுதற்கரிய, தெய்வம் - தெய்வம்போன்ற, கற்புநீங்கியகனங்குழை - கலங்காநிலை கலங்கினவள், இவள் எனில் - இவளேயானால், காகுத்தன் - ஸ்ரீராமனுடைய, புகழோடும் - கீர்த்திமுழுதும், பொற்பும் - அவன்பொலிவும், யானும் - நானும், இவ் இலங்கையும் - இந்த ஊரும், அரக்கரும் - ராக்ஷதரும், பொன்றுதும் இன்று - இன்றே மடிவோம், என்றான் - என்றெண்ணினார்—எ-று. இவள்நிலை மகிழ்வுகொண்டதால் பிராட்டியெனமதிப்பு. (௨௦௦)

மானுயர்த்திருவடிவினளவளிவண்மாறுகொண்டனள்கூறின்
தானியக்கியோதானவர்தையலோவையுறுந்தகையானாள்
கானுயர்த்ததாரிராமன்மேனோக்கியகாதல்காரிகையார்க்கு
மீனுயர்த்தவன்மருங்குதான்மீளுமோநினைந்ததுமிகையென்றான்.

இ-ள். மானுயர் - மனிதரது, திருவடிவினள் - திருக்கோலமா யிருப்பாள், அவள் - அந்தப்பிராட்டி, இவள் - இவளோமனிதரில், மாறுகொண்டனள் - வேறாயிருக்கிறாள், கூறில் - இவளையின்னாரென்றுமதித்தால், இயக்கியோ - யக்ஷகன்னியோ, தானவர்தையலோ - அசுரர்பெண்ணோ, ஐயுறும் - சந்தேகிப்பதான, தகையானாள் - தகுதியுள்ளவளாயிருக்கிறாள், கான் - பரிமளத்தாலே, உயர்த்த - விசேஷமான, தார் - மாலையணிந்த, இராமன்மேல் - ஸ்ரீராமனையே, நோக்கிய - குறித்திருக்கிற, காதல் - ஆசை, காரிகையார்க்கு - பிராட்டிக்கு, மீனுயர்த்தவன்மருங்குதான் - மன்மதனிடத்திலாவது, மீளுமோ - செல்லுமோ, நினைத்தது - முன்னே எண்ணினது, மிகை என்றான் - தப்பு என்றுகொண்டார்—எ-று. (௨௦௧)

இலக்கணங்களுஞ்சிலவுளவென்னினுமெல்லைசென்றிருக்கில்லா
அலக்கணெய்துவதணியதுண்டென்றெடுத்தறைகுவதிவள்யாக்கை
மலர்க்கருங்குழல்சோர்ந்துவாய்வெரீஇச்சிலமாற்றங்கள்பறைகின்றாள்
உலக்குமிங்கிவள்கணவனுமழிவுமிவ்வியனகர்க்குளதென்றான்.

இ-ள். சில இலக்கணங்களும் - பிராட்டிக்குளதாகிற சில லக்ஷணங்களும், உள - இவளிடத்துளவாயிருக்கின்றன, என்னினும் - என்றாலும், எல்லைசென்றிருக்கில்லா - லக்ஷணம்முழுதுஞ்சென்று முடிவுவபரா, அலக்கண் எய்துவது - இவள் துன்பத்தையடைகிறது, அணியது - சமீபத்திலேயிருக்கிறது, உண்டென - இது தப்பாதுவருமென்று, எடுத்து அறைகுவது - விதந்து சொல்லுகின்றது, இவள்யாக்கை - இவள்சரீரம், மலர்க்கருங்குழல் - பூவையணிந்தகரியகூந்தல், சோர்ந்து - அவிழ்ந்துகிடக்கிறதாய், வாய்வெரீஇ - வாயுங்குழறி, சிலமாற்றங்கள் - சிலமறுமொழிகள், பறைகின்றாள் - பிதற்றுகிறாள், இங்கிவள் - இவளுடைய, கணவனும் - புருஷனும், உலக்கும் - சாவான், இவ்வியன்நகர்க்கு - இந்தப்பெரிய ஊர்க்கு, அழிவும்உளது-கெடுதியும்உண்டுஅறைகுவதிவள்யாக்கை, என்றான்-என்றெண்ணினார்—எ-று.

என்றுணர்ந்துநின்றேழுறுமிந்நிலைநிற்கவித்திறனென்னாப்
பின்றுசிந்தையன்பெயர்ந்தனனெடுமனைபிற்படப்பெருமேருக்
குன்றுகுன்றியதகையுறவோங்கியகொற்றமாளிகைதன்னில்
சென்றுபுக்கனனிராவணற்கெடுப்பருங்கிரியெனத்திரடோளான்.

இ-ள். என்றுணர்ந்து - என்றெண்ணி, நின்று - சற்றேபொறுத்து, ஏழுறும் இந்நிலை-இவள் இன்பத்தையடைகிறநிலைமையும், இத்திறன் - இவ்வகைக்குறிகளும், நிற்க என்னா - ஒருவகையிலே இருக்கட்டுமென்று, பின்றுசிந்தையன்-மீண்டமனத்தினராகி, நெடுமனை - அந்தநீண்டவீடு, பிற்படப்பெயர்ந்தனன் - பின்னாகப்போனார், பெருமேருக்குன்று - பெரியமேருமலை, குன்றியதகை உற - குட்டையென்னும்படி, ஓங்கிய - நீண்ட, கொற்றமாளிகை தன்னிற்சென்று - ஒருவெற்றிவீட்டிலே போய், இராவணற்கு - இராவணனாலும், எடுப்புஅரும் - எடுக்கக்கூடாத, கிரியென-மலையென்னும்படி, திரள் - திரண்ட, தோளான் - தோள்களையுடையதிருவடி, புக்கனன் - உள்ளேநுழைந்தார் நுழைந்த உடன்—எ-று. (௨0௩)

நிலந்துடித்தனநெடுவரைபொடித்தனநிருதர்தங்குலமாதர்
பொலந்துடிக்கமைமருங்குல்போற்கண்களும்புருவமும்பொற்றோளும்
வலந்துடித்தனமாதிரந்துடித்தனதடித்தின்றிமதிவானம்
கலந்திடித்தனவெடித்தனபூரணமங்கலகலசங்கள்.

இ-ள். நிலந்துடித்தன - பூமிஅதிர்ந்தன, நெடுவரை - நீண்டமலைபோன்றவீடும், பொடித்தன - பொடிப்பொடியாயுதிர்தலாயின, நிருதர்தம் குலமாதர் - ராக்ஷதப்பெண்களுடைய, பொலந் துடிக்கு - அழகான உடுக்கைக்கு, அமை - ஒப்பான, மருங்குல்போல் - இடையைப்போல், கண்களும் - நேத்திரங்களும், புருவமும் - புருவங்களும், பொன்தோளும் - அழகியதோள்களும், வலம் - வலப்புறம், துடித்தன-துடிப்புள ஆயின, மாதிரந் துடித்தன - திசைகளெல்லா நடுங்கின, தடித்து இன்றி-மின்னலில்லாமல், மதிவானம் - சந்திரன்விளங்குகிற ஆகாயத்திலே, கலந்து - அபூர்வமாய்வந்து, இடித்தன - இடிமுழங்கின, பூரணம் - நீர்நிறைந்த, மங்கலகலசங்கள்-புதுக்குடங்கள், வெடித்தன - கள்ளுப்பொங்கி வெடிப்பதாயின—எ-று. (௨0௪)

புக்குநின்றுதன்புலன்கொடுநோக்கினன்பொருவருந்திருவுள்ளம்
நெக்குநின்றனனீங்குமந்தோவிந்தநெடுநகர்த்திருவென்னு
எக்குலங்களின்யாவரேயாயினுமிருவினையெல்லோர்க்கும்
ஒக்குமூழ்முறையல்லதுவலியதொன்றில்லெனவுணர்வுற்றான்.

இ-ள். புக்குநின்று - போய்நின்று - தன்புலன்கொடு - தமதுமனவொருமையாய், நோக்கினன் - பார்த்தார், பொரு அரும் - ஒப்பில்லாத, திரு உள்ளம் - கலங்காமனம், நெக்கு - கலங்கி, நின்றனன்-நின்றவர், அந்தோ - ஐயோ, இந்தநெடுநகர்த்திரு - இந்த நீண்டவீட்டிலுள்ளலட்சுமி, நீங்கும் என்னு - விலகிப்போவாளென்று, எக்குலங்களின் - எந்தக்குலத்திலேதானுவதுள்ள, யாவரேயாயினும் - யார்தான் ஆனலும், எல்லோர்க்கும் - சகலருக்கும், இருவினை ஒக்கும் - புண்ணிய பாபங்கள் சரியே, ஊழ்முறைஅல்லது - வகுத்தவிதியே அல்லாமல், வலியதொன்று - பெருவலியுள்ள ஒருபொருள், இல்லென - வேறே இல்லையென்று, உணர்வுற்றான் - யோசித்தார்—எ-று. இவ்வூர் புண்ணியவலியா விதுகாறுமுளதாகி பாபவலியால் இவனுக்கில்லையாய்ப்போமென்று கருத்து. (உ0ரு)

நூற்பெருங்கடனுணங்கியகேள்வியனோக்கினனியனோன்றாள்
வேற்பெருங்கடல்புடைபரந்தீண்டியவெள்ளிடைவியன்கோயில்
பாற்பெருங்கடற்பன்மணிப்பஃறிரைப்பரப்புடைப்படர்வேலை
மாற்பெருங்கடல்வதிந்ததேயனையதோர்வளப்பினன்றுயில்வானை.

இ-ள். நூல் - கலைஞானங்களான, பெருங்கடல் - பெரிய கடல்முழுதும், நுணங்கிய – சென்றுலாவின, கேள்வியன் - வியாகரணபண்டிதர், நோக்கினன் - பார்த்தார், இயல் - எந்நேரமும் உலாவுவதிலே, நோன் - பலமுள்ள, தாள் - கால்களையுடைய, வேல் - வேலாளிகளான, பெருங்கடல் - பெரியகூட்டங்கள், புடை - சுற்றிலும், பரந்து - பரவுதலாய், ஈண்டிய - கூடியிருக்கிற, வெள்இடை - வெறுநிலமுமுள்ள, வியன்கோயில் - பெரியவீடுஆகிய, பாற் பெருங்கடல் - பெரியபாற்கடலிலே, பன்மணி – பலரத்நாபரணங்களாகிற, பல்திரைப்பரப்பு - அநேக அலைவரிசைகளை, உடை - கொண்ட, படர்வேலை - பரவியஒருகடலிலே, மாற்பெருங்கடல் - ஆசையாகிய ஒருபெரியகடல், வதிந்ததே அனையது - தங்கியிருக்கிறதையே போல்வதான, ஓர்வளப்பினன் - வீடே ஒருகடல் அதனுள் ஆபரணங்களுள்ள அவன் ஒருகடல் அதனுள் அவன் ஆசை ஒருகடலென்கிற வளப்பத்தையுடையவனுகத் தூங்குகிறவனைக் கண்டார்—எ-று. (உ0சு)

குழவிஞாயிறுகுன்றிவர்ந்தனையனகுருமணிநெடுமோலி
இழைகளோடுநின்றிளவெயிலெறித்திடவிரவெனும்பொருள்வீய
முழைகொண்மேருவின்பொகுட்டிடைக்கனகனைமுருக்கியமுரட்சீயம்
தழைகடோளொடுதலைபலபரப்பிமுன்றுயில்வதோர்தகையானை.

இ-ள். குழவிஞாயிறு - இளஞ்சூரியன், குன்று - மலைமேல், இவர்ந்தனையன - உதயமானுற்போல், குருமணி - காந்தியுள்ளரத்நங்கள், நெடுமோலி - நீளப்பதித்துள்ளகிரீடங்களை, இழைகளோடு-ஆபரணங்களுடனே, நின்று-நிலைகொண்டு, இளவெயில் - சிவந்தகாந்தியை, எறித்திட – வீச, இரவெனும் – இராத்திரியென்கிற, பொருள்வீய - பெயர்கெட, முழைகொள் – குகையைக்கொண்ட, மேருவென்பொகுட்டிடை – மேருவென்கிறமலையிலே, கனகனை - இரணியனை, முருக்கிய-கொன்ற, முரண்சீயம் – வலியநரசிங்கமானது, தழைகொள்-விரிதலைக்கொண்ட, தோளொடு-

தோள்களுடனே, தலைபலபரப்பி - பலதலைகளையும்பரப்பிக்கொண்டு, முன் - முன்னே, துயில்வது - தூங்குவதுபோன்ற, ஓர்தகையானை - ஒருதகுதியை யுடையவனை எ-று. மேருமலைபோல்வது அவன்வீடு அதனுட்குகைபோல்வது அவன்படுக்குமிடம் அதில் அவன் நரசிங்கம்போல் தூங்குகிறானென்க. (உ0எ)

ஆயபொற்றலத்தாய்வளையரம்பையராயிரரணிநின்று
தூயபொற்கவரித்திரளியக்கிடச்சுழிபடுபசுங்காற்றின்
வீயகற்பகத்தேன்றுளிவிராயனவீழ்தொறுநெடுமேனி
தீயநற்றொடிச்சீதையைநினைதொறுமுயிர்த்துயிர்தேய்வானை.

இ-ள். ஆய் - அப்படிப்பட்ட, பொற்றலத்து - பொன்மயமான இடத்திலே, ஆய்வளை - நல்லவளையல்களணிந்த, அரம்பையர் - தெய்வப்பெண்கள், ஆயிரர் - ஆயிரம்பேர்கள், அணிநின்று - வரிசையாய்நின்று, தூய - வெண்மையான, பொன்-பொன்காம்புள்ள, கவரித்திரள் - சாமரங்கள், இயக்கிட - வீச, சுழிபடு - சுழன்றுவருகிற, பசுங்காற்றின் - இளந்தென்றலுடனே, கற்பகவீய - கற்பகப்பூவிலுள்ள, தேன்துளி - தேனினதுதுளிகள், விராயன - கலந்தனவாகி, வீழ்தொறும் - அவன்மேல் விழும்போதெல்லாம், நெடுமேனி - நீண்டஉடம்பு, தீய - கருக, நற்றொடி - நல்லவளையல்களணிந்த, சீதையை - சீதாபிராட்டியை, நினைதொறும் - எண்ணும்போதெல்லாம், உயிர்த்து - நெடுமூச்சுவிட்டு, உயிர் - உடம்பு, தேய்வானை - தளர்கிறவனைக் கண்டார்—எ-று. (உ0அ)

குழந்தைவெண்மதிக்குடுமியனெடுவரைகுலுக்கியகுலத்தோளைக்
கழிந்துபுக்கிடைகரந்தனவநங்கன்வெங்கடுங்கணைபலபாய
உழந்தவெஞ்சமத்துயர்திசையானையினொளிமருப்புற்றிற்ற
பழந்தழும்பினுக்கிடையிடையேசிலபசும்புண்களசும்பூற.

இ-ள். குழந்தைவெண்மதி - வெள்ளிய இளஞ்சந்திரனை, குடுமியன் - தலையிலேகொண்ட பரமசிவனது, நெடுவரை - நீண்டகைலைமலையை, குலுக்கிய - அசைத்துப்பேர்த்த, குலத்தோளை - சிறந்ததோள்களை, கழிந்துபுக்கு - உருவிப்போய், இடை - அந்தத்தோள்களிலே, கரந்தன - அழுந்தின ஆக, அநங்கன் - மன்மதனது, வெங்கடுங்கணை - வெவ்வியகடூரமுள்ள அம்புகள், பலபாய, அநேகமாய்த் தைத்துக்கொண்டேயிருக்க அதனாலே, உழந்த - வருந்திச்செய்த, வெஞ்சமத்து - வெவ்வியசண்டையிலே, உயர் - உயர்ந்த, திசையானையின் - திக்கஜங்களின், ஒளி - வெண்மையான, மருப்பு - கொம்புகள், உற்று - பட்டு, இற்ற - ஒடிந்திருக்கிற, பழந்தழும்பினுக்கு - பழையகாயத்துக்கு, இடைஇடையே - நடுநடுவே, சிலபசும்புண்கள் - சிலபச்சைப்புண்களாய், அசும்புஊற - ஊன்சுரந்து வடியக்கண்டார்—எ-று. (உ0கூ)

சாந்தளாவியகலவைமேற்றவழ்வுறுதண்டமிழ்ப்பசுந்தென்றல்
ஏந்துகாமவெங்கனலினுக்குமிழதட்டுருத்தியினுயிர்ப்பேறக்
காந்தண்மென்விரற்சனகிமேன்மனமுதற்கரணங்கள்கடிதோடப்
பாந்தணீங்கியமுழையெனக்குழைவுறுநெஞ்சுபாழ்பட்டானை.

இ-ள். கலவைச்சாந்து - கூட்டுவர்க்கச்சந்தனம், அளாவிய - மேல்பூசியிருக்கிறமார்பிலே, தவழ்வுறு - வீசுகிற, தண்தமிழ் - குளிர்ந்ததமிழோடுபிறந்துவருகிற, பசுந்தென்றல் - இளந்தென்றலாலே, ஏந்து - மூளுகிற, காமவெங்கனலினுக்கு-வெவ்வியகாமாக்கினிக்கு, உமிழ் - விடுகிற, அதள்துருத்தியின் - தோல்துருத்தியைப்போல், உயிர்ப்பு - அவன்மூக்குச்சுவாசம், ஏற - அதிகமாக, காந்தள் - காந்தள்மலர்

போல, மெல்விரல் - மெல்லியவிரல்களையுடைய, சனகிமேல் - சீதைமேலே, மனமுதல் - மனமுதலான, கரணங்கள் - அந்தக்கரணங்கள், கடிதுஓட - விரைந்துசெல்ல, பாந்தள் - பாம்பு, நீங்கிய - போகலான, முழையென - குகைபோல், குழைவுறு-நொந்திருக்கிற, நெஞ்சு-உள்ளம், பாழ்பட்டானை - பாழாயிருக்கிறவனைக்கண்டார்-எ-று.

வேறு.

கொண்டபேரூக்கமூளத்திசைதொறுங்குறித்துமேனாள்
மண்டியசெருவின்வீரத்தோள்களால்வாரிவாரி
உண்டதுதெவிட்டிப்பேழ்வாய்க்கடைகடோறொழுகிப்பாயும்
அண்டர்தம்புகழிற்றோன்றும்வெள்ளெயிற்றமைதியானை.

இ-ள். கொண்ட - அவன்கொண்டிருக்கிற, பேர்ஊக்கம் - பெரிதான தயிரியம், மூள - மேன்மேலாக, திசைதொறும் - திக்குகளெல்லாம், குறித்து - ஜெயிக்க எண்ணி, மேல்நாள் - முன்னாள், மண்டிய - நெருங்கின, செருவில் - சண்டையில், வீரத்தோள்களால் - ஜெயம்பண்ணினகைகளாலே, வாரி வாரி - அள்ளி அள்ளி, உண்டது - சாப்பிட்டது, தெவிட்டி - அதிகமாய், பேழ்வாய்கடைகள்தோறு-அகன்றகடைவாய்களெல்லாம், ஒழுகிபாயும் - ஒழுகிவழிகிற, அண்டர்தம் - தேவர்களுடைய, புகழில் - கீர்த்திபோல், தோன்றும் - விளங்குகிற, வெள் - வெண்மையான, எயிறு - வக்கிரமானபற்கள், அமைதியானை - தோன்றுகிறவனைக்கண்டார்—எ-று. ()

வெள்ளிவெண்சேக்கைவெந்துபொறியெழவெதும்புமேனி
புள்ளிவெண்மொக்குளென்னப்பொடித்துவேர்கொதித்துப்பொங்கக்
கள்ளவிழ்மாலைத்தும்பிவண்டொடுங்கரிந்துசாம்ப
ஒள்ளிணர்மாலைதீயவுயிர்க்கின்றவுயிர்ப்பினானை.

இ-ள். வெள்ளி - வெள்ளிபோல, வெண் - வெண்மையான, சேக்கை - மல்லிகைப்பூப்படுக்கையானது, வெந்து - வேவுதலாய், பொறிஎழ - நெருப்புப்பொறிகள் தோன்ற, வெதும்பு - அவ்வளவுக்கிரமான, மேனி - சரீரத்திலே, புள்ளி - புள்ளிபுள்ளியாய், வெண்மொக்குளென்ன - வெள்ளியநீர்க்குமிழிகள்போல், வேர்பொடித்து-வேர்வைகள் பொடிப்பொடியாய், கொதித்து - கொதித்தலாகி, பொங்க - பின்னும் பின்னும் வேர்வைஅதிகமாக, கள்அவிழ் - தேன்விரிவதான, மாலை - மாலையில்மொய்க்கிற, தும்பி - தும்பிகளும், வண்டொடு - கருவண்டுகளுடனே, கரிந்துசாம்ப - தீந்துஅவிய, ஒள் - பிரகாசமுள்ள, இணர்மாலை - கொத்துமாலைகள், தீய - கரிய, உயிர்க்கின்ற - சுவாசிக்கிற, உயிர்ப்பினானை - சுவாசமுள்ளவனைக் கண்டார்—எ-று. ()

தேவியனேமியானிற்சிந்தைமெய்த்திருவினேகப்
பூவியலமளிமேலாப்பொய்யுறக்குறங்குவானைக்
காவியங்கண்ணிதன்பாற்கண்ணியகாதனீரின்
ஆவியையுயிர்ப்பென்றோதுமம்மியிட்டரைக்கின்றானை.

இள். தேஇயல் - தெய்வமாகவிளங்குகிற, நேமியானில் - சக்கரவர்த்தியைப்போல், சிந்தை - அவன்மனமானது, மெய்த்திருவின் - மெய்யானபிராட்டிவிஷயத்திலே உண்மையானசெல்வத்திலே, ஏக - செல்ல, பூஇயல் - புஷ்பங்களாலலங்கிருதமான, அமளிமேலா - மெத்தைமேல், பொய்உறக்கு - பொய்நித்திரையாய், உறங்குவானை - தூங்குகிறவனை, காவிஅம் - நீலோற்பலம்போலழகிதான, கண்ணிதன்பால் - கண்களையுடைய பிராட்டிவிஷயத்திலே, கண்ணிய - கருதுகிற, காதல் - ஆசையாகிய, நீரின்-ஜலத்தினாலே, ஆவியை - உயிரை, உயிர்ப்புஎன்றோதும் - சுவாச

மென் றுசொல்லுகிற, அம்மியிட்டு - அம்மியிலேவைத்து, அரைக்கின்ருனை-அரைக்கிறவனைக்கண்டார், சக்கரவர்த்திக்கு மனஞ்சென்றது - மெய்சொல்லுதலில், திருவானபிராட்டி விஷயத்திலே இராவணன்மனஞ்சென்றதென்று பிரிக்க—எ-று. ()

மிகுந்தகைநினைப்புமுற்றவுருவெளிப்பட்டவேலை
நகுந்தகைமுகத்தன்காதனடுக்குறுமெய்யன்வார்தேன்
உகுந்தகைமொழியாண்முன்னமொருவகையுறையுளுள்ளே
புகுந்தனளன்றேவென்றுமயிர்புறம்பொடிக்கின்ருனை.

இ-ள். தகை மிகும் - பிராட்டி அழகிலேமிகுவதான, நினைவுமுற்ற - எண்ணமுடிவாக, உரு - அவள்வடிவு, வெளிப்பட்டவேலை - கண்ணுக்குவெளியே தோற்றினபோது, நகும் - சிரிப்பதான, தகைமுகத்தன்-பெருமையுள்ளமுகத்தையுடையவனுய், காதல் - ஆசையாலே, நடுக்குறு - அஞ்சுகிற, மெய்யன் - சரீரத்தையுடையவன், வார் - ஒழுகுகிற, தேன் - தேன்போல், உகு - சிந்துகிற, தகை - அழகுள்ள, மொழியாள் முன்னம் - வசனத்தையுடைய பிராட்டி நமக்குமுன்னே, ஒருவகை-ஒருபடிதிருந்தி, உறையுளுள்ளே - நமதிருக்கைக்குள்ளே, புகுந்தனள்அன்றே-வந்தாளல்லவோ, என்று - என்பதாய், மயிர் - உரோமங்கள், புறம் - மேலெல்லாம், பொடிக்கின்ருனை - சிலிர்க்கிறவனைக்கண்டார்—எ-று. (உகச)

மென்றொழிற்கலாபமஞ்ஞைவேட்கைமீக்கூறுமேனும்
குன்றொழித்தொருமாக்குன்றினரிதிற்சேர்கொள்கைபோல
வன்றொழிற்கொற்றப்பொற்றோண்மணந்தருமயிலேயன்ஞர்
ஒன்றொழித்தொன்றினேகவரியதோரொழுக்கினுனை.

இ-ள். மென்தொழில் - மெல்லிதானவிசித்திரங்களையுடைய, கலாபம் - வாலைக்கொண்ட, மஞ்ஞை - மயிலானது, வேட்கை - ஆசையை, மீக்கூறும் எனும்-அதிகமாய் அடையுமே ஆனுலும், குன்று - தான் இருக்குமலையை, ஒழித்து - விட்டு, ஒருமாக்குன்றில் - இன்னமொரு.நீலமலைமேலே, அரிதில் - வருத்தத்துடனே, சேர்கொள்கைபோல - சேருகிற தன்மையைப்போல், வன்தொழில் - பலமானசெய்கைகளையுடைய, கொற்றம் - வெற்றிகொண்ட, பொன்தோள் - அழகானதோளை, மணந்து - கூடி, அரு - பிரியஅரியதான, மயிலே - மயிலையே, அன்ஞர்-ஒத்தபெண்கள், ஒன்று - தாம்கூடின ஒருதோளை, ஒழித்து-விட்டு, ஒன்றின்-மற்றொருதோளிலே, ஏக - செல்ல, அரியது - அரியதான, ஓர் - ஒரு, ஒழுக்கினுனை - தோள்வரிசைகளுள்ளவனைக் கண்டார்-எ-று. ஒவ்வொருதோளே ஒவ்வொருத்திக்குக்கூடப் போதுமானதாயிருக்கிறதென்க. (உகரு)

வேறு.

தழுவாநின்றகருங்கடன்மீதுதயகிரியிற்சுடர்தயங்க
எழுவானென்னமின்னிமைக்குமாரம்புரளுமியல்பிற்ருய்
முழுவானவராயுலகமொருமூன்றுங்காக்குமுதற்றேவர்
மழுவாணேமிகுலிசத்தின்வாய்மைதுடைத்தமார்பானை.

இ-ள். தழுவாநின்றகருங்கடல்மீது-எல்லாங்கொள்வதான இராவணனுகியகரியகடலின்மேலே தோள்களான, உதயகிரியில் - உதயகிரியிலே, சுடர்தயங்க-தனது கிரணங்கள்விளங்க, எழுவானென்ன - உதிக்கிறசூரியன்போல, மின்இமைக்கும் - ஒளிவிளங்குகிற, ஆரம் - ரத்நமாலைகள், புரளும்-அசைவதான, இயல்பிற்ருய்-

சுவபாவமுள்ளதாய், முழுவானவராய் - முழுதும்தெய்வங்களேயாய், உலகமொரு மூன் றும்-ஒருமூன் றுலகத்தையும், காக்கும்-ஆளுகின்ற, முதல்-பிராதானியமுள்ள, தேவர் - தேவர்களானமும்மூர்த்திகளுடைய, மழுவாள் - மழுவாகியவாள், நேமி-சக்கரம், குலிசத்தின் - வச்சிராயுதம்ஆகிய இவைகளின், வாய்மை-கூறியமுனையை, துடைத்த - மழுங்கச்செய்த, மார்பானை - மார்புள்ளவனைக்கண்டார்—எ-று. மார்பையே உதயகிரியெனவுமாம், நான்முக னிவனுக்குறவாதலால் ஈண்டுமுதற்றேவ ரென்றது, உருத்திரன் விஷ்ணு இந்திரனை என்க. (உகசு)

வேறு.

தோடுழுதண்டார்வண்டுந்திசையானைமதந்துதைந்தவண்டுஞ்சுற்றி
மாடுழுதநறுங்கலவைவயக்களிற்றின்சிந்துரத்தைமாறுகொள்ளக்
கோடுழுதமார்பானைக்கொலையுழுதவடிவேலின்கொற்றமஞ்சித்
தாடொழுதபகைவேந்தர்முடியுழுததழும்பிருந்தசரணத்தானை.

இ-ள். தோடுஉழு - இதழ்களிலே ஊர்கிற, தண்தார் - குளிர்ந்த மாலையிலேயுள்ள, வண்டும் - வண்டுகளும், திசையானை - திக்கஜங்களின், மதம்துதைந்த-மதங்களிலேமொய்க்கிற, வண்டும் - வண்டுகளும், மாடுசுற்றி - பக்கமெல்லாம் சூழ்ந்து, உழுத - மொய்க்கலான, நறுங்கலவை - மார்பிலேபூசின நல்லகலவைச்சந்தனம், வயம்-இவனுலே வெற்றிகொண்ட, களிற்றின்-யானைமுகத்திலணிந்த, சிந்துரத்தை-சிவந்தபொட்டை, மாறுகொள்ள-விரோதிக்க, கோடுஉழுத - அந்தயானைக்கொம்புகள் பதிந்த, மார்பானை - மார்புள்ளவனை, கொலையுழுத-கொலைசெய்த, வடிவேலின்-இவனதுகூரியவேலின், கொற்றம் - வெற்றிக்கு, அஞ்சி-பயந்து, தாள்-இவன்பாதங்களை, தொழுத - வணங்கின, பகைவேந்தர்-முன்பகைவராயிருந்த அரசர்கள், முடி உழுத - கிரீடங்கள்பதிந்த, தழும்புஇருந்த-தழும்புகள்பொருந்தின, சரணத்தானை-கால்களுள்ளவனைக்கண்டார்—எ-று. (உகஎ)

வேறு.

கொண்டதோருருவமாயன்குறளினுங்குறுகநின்றுன்
திண்டலைபத்துந்தோள்களிருபதுந்தெரியநோக்கிக்
கண்டனன்காண்டலோடுங்கருத்தின்முன்காலச்செந்தீ
விண்டனகண்கள்கீண்டுவெடித்தனகீழுமேலும்.

இ-ள். கொண்டது - இவர்கொண்டிருப்பதான, ஓர் உருவம் - ஒருவடிவு, மாயன் - திருமால்கொண்ட, குறளினும்-வாமனரூபத்திலும், குறுகநின்றுன் - குட்டையாகநின்று, திண்தலை - அவனதுதிண்ணியதலைகள், பத்தும் - பத்தையும், தோள்கள் இருபதும்-இருபது தோள்களையும், தெரியநோக்கி-இவனேராவணனென்று தெரிவதாகப்பார்த்து, கண்டனன் - தெரிந்தார், காண்டலோடும் - தெரிந்தவுடனே, கருத்தின்முன் - அவர்நினைவுக்குமுந்தி, கண்கள் - நேத்திரங்கள், காலச்செந்தீ - சிவந்தகாலாக்கினியை, விண்டன - வெளியேவிட்டன, கீழும்மேலும் கீண்டு வெடித்தன - நிலமும்கிழிந்துமேலும்பிளக்கலாயின—எ-று. கீழ்கீண்டு மேல்வெடித்தன எனக்கூட்டுக. (உகஅ)

வேறு.

தோளாற்றலென்னுருமேனிற்குஞ்சொல்லென்னும்
வாளாற்றகண்ணுளைவஞ்சித்தான்மணிமுடியென்
தாளாற்றலாலிடித்துத்தலைபத்துந்தகர்த்தென்றன்
ஆளாற்றல்காட்டேனுலடியேனுய்முடியேனே.

இ-ள். தோள் - இவனுடையதோள்களின், ஆற்றல் - பலமானது, என் ஆகும் - யாதுபயன்தரும், புஜபலமுள்ளவன் (வஞ்சித்ததனாலே பழியையேதரும்) என்றபடி, மேல் (இப்போதேயன்றி) இனிமேலும், நிற்கும் - பரதாரத் துரோகியென்று நிற்பதான, சொல் - சொல்லால், என் ஆம் - யாதுண்டாம் (பாவமேவிளையும்) வாள் ஆற்ற - மிகவும்வாளையே ஒத்த, கண்ணாளை - கண்களையுடைய பிராட்டியை, வஞ்சித்தான் - பழியும்பாவமும் வளர வஞ்சனைசெய்து கொண்டுவந்த இவனுடைய, மணிமுடி - ரத்நகிரீடங்களை, என் - என்னுடைய, தாள் ஆற்றலால் - கால்வலியாலே, இடித்து - உதைத்துத்தள்ளி, தலைபத்தும் - பத்துத்தலைகளையும், தகர்த்து - உடைத்து, என்தன் - எனதான, ஆள் ஆற்றல் - அடிமைசெய்வதை, காட்டேன் - செய்யாதிருக்கிறேன், ஆல் - ஆகையாலே, அடியேனாய் - ஸ்ரீராமனுக்குத் தாசனாகி, முடியேன் - முடிவுபெறேன்—எ-று. (உகக)

நடித்துவாழ்தகைமையதோவடிமைதானன்னுதலைப்
பிடித்தவாளரக்கனார்யான்கண்டும்பிழைப்பரோ
ஒடித்துவான்றோளனைத்துந்தலைபத்துமுதைத்துருட்டி
முடித்திவ்வூர்முடித்தான்மேன்முடிவதெலாமுடிந்தொழிக.

இ-ள். அடிமைதான் - அடிமைசெய்கிறது என்ன, நடித்துவாழ் தகைமையதோ - கூத்தாடித்திரிகிற தகுதியுள்ள ஒருசெய்கையோ, நன்னுதலை - நல்லநெற்றியையுடைய சீதாபிராட்டியை, பிடித்த - வஞ்சித்துக்கொண்டுவந்த, வாள் - வாளாயுதத்தையுடைய, அரக்கனார் - ராக்ஷதப்பயல், யான் கண்டும் - நான்காணக்கிடைத்தும், பிழைப்பரோ - தப்பிப்போறதோ, வான் - பெரிய, தோள் அனைத்தும் - இருபது தோள்களையும், ஒடித்து - என்கைகளாலொடித்து, தலைபத்தும் - பத்துத்தலைகளையும், உதைத்து - என் கால்களாலேஉதைத்து, உருட்டி - கீழேஉருளப்பண்ணி, முடித்து - முன்னே இவனைக்கொன்று, இவ்வூர் - இந்த ஊரையும், முடித்தால் - அழித்தால், மேல் - அதற்குமேல், முடிவதெல்லாம் - முடிகிறவையெல்லாம், முடிந்தொழிக - முடிந்தேதீர்க என்றால் முன்னே இவனைக்கொன்று ஊரையழிக்கத்தொடங்கினால் நம்மோடு இவன்மகன் தம்பிமுதலாயினோர்வந்து பொருதாலும் அவர்களையுங் கொல்லுகிறேனென்று கருத்து, இவனைக்கண்டு தப்பவிடுகிறது அடிமைத்தனமன்று - இவ்வளவுஞ்செய்தாலல்லவோ அடிமைத்தனம்சரியாமென்கிறார்-எ-று.

என்றூக்கியெயிறுகடித்திருகரனும்பிசைந்தெழுந்து
நின்றூக்கியுணர்ந்துரைப்பானேமியோன்பணியன்றால்
ஒன்றூக்கியொன்றிழைத்தலுணர்வுடைமைக்குரித்தன்றால்
பின்றூக்கினிதுசாலப்பிழையாகுமெனப்பெயர்ந்தான்.

இ-ள். என்று ஊக்கி - என்று முயற்சிசெய்து, எயிறுகடித்து - பல்லைக்கடித்து, இருகரனும் - இரண்டுகைகளையும், பிசைந்தெழுந்து - முறுக்கிக்கொண்டெழுந்து, நின்று - சற்றேநின்று, ஊக்கி - உற்சாகங்கொண்டு, உணர்ந்து - ஆலோசித்து, உரைப்பான் - தம்மனத்தொடுசொல்லுகிறார், நேமியோன் - சக்கரவர்த்தித் திருமகன், பணி அன்று - இப்போதுநாம் எண்ணினபடிசெய்யச்சொன்னதில்லை, ஒன்று - பிராட்டியைக்கண்டு போய்ச்சொல்லுகிற ஒருகாரியத்தை, ஊக்கி - முயற்சித்து, ஒன்று - மற்றொருகாரியத்தை, இழைத்தல் - செய்கிறது, உணர்வுடைமைக்கு - அறிவுடைமைக்கு, உரித்து அன்று - தக்கதல்ல, பின் - பின்பு, தூக்கின் - ஆலோசித்தால், இது - இவனைக்கொல்லநினைக்கிறது, சால - மிகவும், பிழையாகும் எனத் - தவறுதலுளதாமென்று, பெயர்ந்தான் - அவ்விடத்தை நீங்கினார்—எ-று. (உஉக)

ஆலம்பார்த்துண்டவன்போலாற்றலமைந்துளரெனினும்
சீலம்பார்க்குரியோர்களெண்ணாதுசெய்பவோ
மூலம்பார்க்குறினுலகைமுற்றுவிக்குமுறைதெரினும்
காலம்பார்த்திறைவேலைகடவாதகடலொத்தான்.

இ-ள். பார்த்து - தேவர்கள் துன்பத்தைக்கண்டு, ஆலமுண்டவன்போல்-நஞ்சுண்ட கடவுள்போல், ஆற்றல் - சாமர்த்தியம், அமைந்துளர் - பொருந்தியிருப்பவர்கள், எனினும் - என்றாலும், சீலம் - தாம்செல்லுங்கிரமத்தை, பார்க்கஉரியோர்கள்-ஆலோசிக்கத்தக்கவர்கள், எண்ணாது - ஆலோசியாமல், செய்பவோ - செய்வார்களா செய்யார்கள், மூலம் - இவர் ஆலோசனைக்குக்காரணம் என்னையென்று, பார்க்குறின் - யோசித்தால், உலகை - உலகமுழுதும், முற்றுவிக்கும் - முடியச்செய்கிற, முறை - நீதியுள்ளதுதானென்று, தெரினும் - தனக்கேதெரிந்தாலும், காலம்பார்த்து-தான் அழிக்குங்காலத்தையெண்ணி, இறை - கொஞ்சமேனும், வேலைகடவாத-கரைகடவாதிருக்கிற, கடல் - கடலை, ஒத்தான் - ஒத்தவரானார்—எ-று. (உஉஉ)

இற்றைப்போர்ப்பெருஞ்சீற்றமென்னோடுமுடிந்திடுக
கற்றைப்பூங்குழலாளைச்சிறைவைத்தகண்டகனை
முற்றப்போர்முடித்ததொருகுரங்கென்றான்முனைவீரன்
கொற்றப்போர்ச்சிலைத்தொழிற்குக்குறைவுண்டாமெனக்குறைந்தான்.

இ-ள். இற்றை - இன்றுண்டான, போர் - பொருதற்குரிய, பெருஞ்சீற்றம்-பெருங்கோபமானது, என் - யாதுகாரணத்தால், ஓடும் - இப்படி நீளுகிறதாயிருக்கிறது ஆண்டான்காரியமென்றுநீளுகிறதே ஆனாலும் கோபமேநீ, முடிந்திடுக - அடங்குக, கற்றை - திரட்சியான, பூங்குழலாளை - பூவையணிந்த கூந்தலையுடைய பிராட்டியை, சிறைவைத்த - சிறையிலே அமைத்த, கண்டகனை - துஷ்டனை, முற்ற-முடிவாக, போர்முடித்தது - சண்டைசெய்துகொன்றது, ஒருகுரங்கு என்றால் - ஒரு வானரமென்றுசொல்லலானால், முனைவீரன் - அரக்கரைக் கொல்லவே முனைந்து நிற்கிற ஜயராமனுடைய, கொற்றம் - வெற்றிகொண்ட, போர் - வலிமையுள்ள,சிலைத்தொழிற்கு - வில்விசையத்துக்கு, குறைவு உண்டாம் - குறைவுதோன்றுதலாகும், என - என்று, குறைந்தான் - கோபங்குறைதலானார். (உஉங)

அந்நிலையான்பெயர்ந்துரைப்பானாய்வளைக்கையணியிழையார்
இந்நிலையானுடன்றுயில்வாருளரல்லரிவனிலையும்
புன்னிலையகாமத்தாற்புலர்கின்றநிலைபூவை
நன்னிலையினுளளென்னுநலனெனக்குநல்குமால்.

இ-ள். அந்நிலையான் - அப்படிக்கோபம் அடங்கினவராய், பெயர்ந்து - அவ்விடம்விட்டுப்போய், உரைப்பான் - மனத்தொடுசொல்லுகிறார், ஆய்வளைக்கை - அந்தவளையலணிந்தகைகளும், அணியிழையார் - அணிந்த ஆபரணங்களுமுள்ள பிராட்டியானவர், இந்நிலையானுடன் - இத்தன்மையுள்ள பழிபாவியானவனுடனே, துயில்வார் - தூங்குகிறவர்களில், உளர் அல்லர் - உளராயிருத்தலிலர், இவன் நிலையும்-இவன்தன்மையோ, புல்நிலைய - அல்பநிலையுள்ள, காமத்தால் - காமவெப்பத்தாலே, புலர்கின்றநிலை - வேவுகின்றதன்மை ஆதலாவித்தன்மையே, பூவை - சீதாபிராட்டி, நல்நிலையில் - இவனுக்கிணங்காதுபதிவிரதாநிலையிலே, உளள் - இருக்கிறாள்,என்னும் நலன் - என்கிறநன்மையை, எனக்குநல்கும் - எனக்குத் தெரிவிக்கின்றது—எ-று.

அனுமார் தாம் அணியிழையாரென் றுயர்வுகுறித்ததாகவும் புலர்கின்றநிலை பெண் பாலாகவே குறித்ததாகவுங்கொள்க. (உஉச)

என்றெண்ணியீண்டினியோர்பயனில்லையெனநினையாக்
குன்றன்னதோளவன்றன்கோமனைபிற்படப்பெயர்ந்தான்
நின்றெண்ணியுன்னுவானந்தோவிந்நெடுநகரம்
பொன்றுன்னுமணிப்பூணாரிலரென்னப்பொருமுவான்.

இ-ள். என்றெண்ணி - என்று நினைத்து, ஈண்டு - இங்கே நிற்றலால், இனி ஓர்பயனில்லையெனநினையா - இனி ஒருபலனுமுளதாவதில்லையென்றுதெரிந்து, குன்றன்ன - மலைபோன்ற, தோளவன்றன் - புஜங்களையுடைய இராவணனது, கோமனை - பெரியவீடு, பிற்பட - பின்னாக, பெயர்ந்தான் - போனார், நின்று - விலகிப் போய்நின்று, எண்ணி உன்னுவான் - ஆலோசித்தெண்ணுகிறதிருவடி, அந்தோ- ஐயோ, இ நெடுநகரம் - இந்த நெடியவூரிலே, பொன்துன்னு - பொன்னிலே பதிந்த, மணிப்பூணார் - ரத்நாபரணங்களணிந்த பிராட்டியார், இலர் என்ன - இல்லையாயினாரென்று, பொருமுவான் - துக்கிக்கலானார்—எ-று. (உஉரு)

கொன்றானோகற்பழியாக்குலமகளைக்கொடுந்தொழிலால்
தின்றானோவப்புறத்தேசெறித்தானோசிறையறியேன்
ஒன்றானுமுணர்கிலேன்மீண்டினிப்போயென்னுரைக்கேன்
பொன்றாதபொழுதெனக்குக்கொடுந்துயரம்போகாதால்.

இ-ள். கொன்றானோ கற்பழியாக்குலமகளை - கற்புநிலையிற்கலங்காத லோகமாதாவை வதைசெய்துவிட்டானோ, தின்றானோ - கொடுந்தொழிலால் தனது புலால் உண்கிற கொடியசெய்கைக்குணத்தினாலே தின்றுதீர்ந்தானோ, அப்புறத்தே-இந்தஇலங்கைக் கப்பாலேகொண்டுபோய், சிறை - காவலுக்குள்ளே, செறித்தானோ-அடங்கச்செய்திருக்கிறானோ, அறியேன் - இந்த மூவகையிலின்னதென்று தெரிகிலேன், ஒன்றானும் - எண்வகை அளவையுள் ஓரளவையா லாவது, உணர்கிலேன் - தெரிந்துகொண்டிலன், மீண்டினிப்போய் - இனித்திரும்பிப்போய், என் உரைக்கேன்-யாதுசொல்லக்கடவேன் செத்தால் ஒன்றுமில்லை, பொன்றாதபொழுது - நான் சாவாதிருக்குமளவும், எனக்கு - அடியேனான எனக்குஇந்த, கொடுந்துயரம் - கொடிய துக்கம், போகாது - போகிறதில்லை—எ-று. (உஉசு)

கண்டுவருமென்றிருக்குங்காகுத்தன்கவிகுலக்கோன்
கொண்டுவருமென்றிருக்கும்யானிழைத்தகோளிதுவால்
புண்டரிகநயனத்தான்பாலின்னம்போவேனோ
விண்டவரோடுடன்வீயாதியான்வாளாவிளிவேனோ.

இ-ள். காகுத்தன் - சக்கிரவர்த்தித்திருமகனார், கண்டுவரும் - திருவடிகண்டேவருவான், என்றிருக்கும் - என்று நினைத்திருப்பர், கவிகுலக்கோன்-வானரகுலசிரேஷ்டரானமஹாராஜர், கொண்டுவரும் - பிராட்டியைச் சுமந்துகொண்டுவருவான், என்று இருக்கும் - என்றெண்ணியிருப்பர், யான் இழைத்த - நான்முடித்திருக்கிற, கோள்இது - உணர்கிலேனென்றுகொள்கையாகிற இதுவே ஆம் நான்பண்ணினகொள்கை உணர்கிலேனென்னுமிவ்வளவினதே, புண்டரிகநயனத்தான்பால்-ஸ்ரீராமதிவாகரனிடத்திற்கு, இன்னம் - இவ்வளவானபின்பு, போவேனோ - போகவும் எண்ணுவேனோசாவேன், யான் - வாளாவிளிவேனோ, நான் - சும்மாசாவேனோ, வி

ண்டவரோடு - (என்னைவியர்த்தமாக) அனுப்பின அங்கதாதிகளோடு, உடன்வீயாது - கூடச்சாவாமல் நான் ஒருவன்மாத்திரமா சாவேனென்றபடி—எ-று. புண்டரிகநயனத்தான் - தாமரைக்கண்ணன், விண்டவர் - விட்டவர். (உஉஎ)

கண்ணியநாள்கழிந்துளவாற்கண்டிலெனுன்கனங்குழையை
விண்ணடைதுமென்றுரையாண்டிருத்திவிரைந்தயான்
எண்ணியதுமுடிக்ககிலேன்யான்முடியாதிருப்பேனே
புண்ணியமென்றொருபொருளென் னுழைநின்றும்போயதால்.

இ-ள். கண்ணியநாள் - நமக்குக்கெடுச்செய்தனுப்பினகாலஅளவு, கழிந்துள - கடந்துபோயின, நான் கனங்குழையைக்கண்டிலென் - நான் பிராட்டியை யின்னமுங் காணப்பெறுகிலேன், விண் அடைதும் - செத்துப்போவோம், என்றுரை - என்று உத்தியோகித்த அங்கதாதிகளை, ஆண்டு இருத்தி - அந்தமலையிலே யிருக்கச்சொல்லி, விரைந்தயான் - கண்டுவிரைவில்வருகிறேனென்று வந்தநான், எண்ணியது - நினைத்துவந்ததை, முடிக்கிலேன் - செய்யாதிருக்கிறேன், யான் - செய்யவேண்டுகிறநான், முடியாதிருப்பேனே - செய்யத்தாமதிக்கத் தக்கவனோநான் முடியாதிருப்பேன் ஆனால், புண்ணியமென்றொருபொருள் - எனக்குத் துணையாய்வந்த தருமமென்கிற ஒருவஸ்து, என்னுழைநின்றும் - என்னிடத்திலிராமல், போயது - இப்படிநான்வருந்த நீங்கிற்றென்பதாய்முடியும்—எ-று. (உஉஅ)

ஏழுநூறுசனைசூழ்ந்தெயில்கிடந்ததிவ்விலங்கை
வாழுமாமன் னுயிர்யான்காணுதமற்றில்லை
ஊழியான்பெருந்தேவியொருவரையும்யான்காணேன்
ஆழிதாயிடராழியிடையேவீழ்ந்தழிவேனே.

இ-ள். ஏழுநூறுசனை - ஏழுநூறியோசனை, சூழ்ந்து எயில்கிடந்தது - அளவுசுற்றிமதிலுள்ளதாகிய, இவ் இலங்கை - இந்த ஊரிலே, வாழும் - உள்ள, மா-பெருமையும் சரமும், மன் - நிலைமையும் அசரமும், உயிர் - ஆன உயிர்களில், நான்காணுத இல்லை - நான்பார்க்காதவைகளொன்றுமில்லை, ஊழியான் - கால அளவில்லாதவனான ஸ்ரீராமனது, பெருந்தேவி - பெரியபிராட்டி பெரியதேவியாரான, ஒருவரையும் - ஒருவரைமாத்திரம், யான்காணேன் - நான் கண்டுகொள்ளாதிருக்கிறேன் என்றால் பிராட்டி இவ்வூரிலிருந்தால் நான் எல்லாரையுங்கண்டு பிராட்டியைக்காணக்கூடாமைகூடுமோ என்றபடி, ஆழிதாய் - ஒருகடலைத் தாண்டிவந்து, இடர் ஆழி இடையேவீழ்ந்து - ஒரு துன்பக்கடலைக் கடக்க மாட்டாமல் அதிலேவிழுந்து, அழிவேனே - என்னுழை புண்ணியமின்றால் இப்படி அழிந்துவிடக் கடவேனு—எ-று.()

வல்லரக்கன் றனைப்பற்றிவாயாறுகுருதியுக
கல்லரக்குங்கரதலத்தாற்காட்டென்றுகாண்கேனே
எல்லரக்குமயிலுநிவேலிராவணனுமிவ்வூரும்
மெல்லரக்கினுருக்கியுகவெந்தழலாய்வேய்கேனே.

இ-ள். வல் அரக்கன்றனை - இவ்வளவு வல்லவனான இந்த ராக்ஷதனையே, பற்றி - போய்ப்பிடித்து, வாய் ஆறு - அவன் வாய்வழியிலே, குருதி உக - ரத்தஞ்சிந்த, கல் - மலையையும், அரக்கும் - வருந்தச்செய்கிற, கரதலத்தால் - என்கையாலே, காட்டென்று - பிராட்டியைக் காட்டென்று அடித்து, காண்கேனே - காணக்கடவனு, எல்லரக்கும் - சூரியனொளியையும் வருந்தச்செய்கிற, அயில்நுதிவேல் - கூரிய

முனையையுடைய வேல்பிடித்த, இராவணனும் இவ்வூரும்-இந்தஇலங்கையும், மெல்-மெல்லிய, அரக்கின் - அரக்கைப்போல, உருக்கி - உருகப்பண்ணி, உக - கரையும் படி, வெம்தழலால் - கொடிய நெருப்பைமூட்டிஅதனாலே, வேய்கேனோ-முடித்துப் பின்காண்பேனோ நெருப்பாற்கொளுத்தேனோ, வாயாறுகுருதியுகக்காண்கேனோ-செய்யவல்லேனா என்றபடி—எ-று. (உ௱0)

வானவரேமுதலோரைவினவுவெனேல்வல்லரக்கன்
தானொருவனுளனாகவுரைசெய்யுந்தருக்கிலரால்
ஏனையர்களெங்குரைப்பாரெவ்வண்ணந்தெரிகேனோ
ஊனழியநீங்காதவுயிர்சுமந்தவுணர்வில்லேன்.

இ-ள். வானவரே முதலோரை - தேவர்முதலியோரைக் கண்டு, வினவுவனேல் - பிராட்டியிருப்பை விசாரிப்பேனானால், வல்லரக்கன்தான் ஒருவன் - இந்த வலிய அரக்கனான ஒருராவணன், உளனாக - சாவாமலிருக்குமளவும், உரைசெய்யும்-பிராட்டிநிலையைச்சொல்லுவதான, தருக்கு - சக்தி, இலர்-உள்ளவர்களல்லர், ஏனையர்கள் - அசுரர்முதலான இவனைச்சேர்ந்தவர்கள், எங்கு-எப்படி, தெரியச்சொல்லுவர்கள் - சொல்லார், எவ்வண்ணம் - மற்றெந்தவகையாலே, தெரிகேனோ - தெரிந்தவனாவேனோ தெரிய இல்லை, ஊன் அழிய - இப்படிஎண்ணிச் சரீரம் கரையச்செய்தேயும், நீங்காத உயிர் - போகாத உயிரை, சுமந்த - பொறுத்துக் கொண்டிருக்கிற, உணர்வு இல்லேன் - புத்தியில்லாதநான் எவ்வண்ணந்தெரிகேன்—எ-று. (உ௱க)

எருவைக்குமுதலாயசம்பாதியிலங்கையிலத்
திருவைக்கண்டனெனென்றானவனுரையுஞ்சிதைந்ததால்
கருவைக்குநெடுநகரைக்கடலிடையேகரையாதென்
உருவைக்கொண்டின்னமுநானுளனாகியுழல்கேனோ.

இ-ள். எருவைக்குமுதலாய - கழுகுகளுக்குத் தலைவரான, சம்பாதி-சம்பாதியென்பவர், இலங்கையில் - இதோ இலங்காபுரியிலே, அத்திருவை - அந்தலட்சுமியை, கண்டனன் - பார்த்தேன், என்றான் - என்றுசொன்னார், அவன் உரையும்-அவர்சொல்லும், சிதைந்தது - பொய்யாய்ப்போயிற்று, கரு - தெய்வக்கம்மாளனாலே, வைக்கும் - நிருமித்ததான, நெடுநகரை - இந்தநெடியஊரை, கடலிடையே-இந்தக்கடலிலேதானே, கரையாது - கரைத்துக்கெடுக்காமல், இன்னமும்என் உருவைக்கொண்டு - என் உடம்புடனே, நான்உளனாகி - நான்இருக்கிறவனாய், உழல்கேனோ - இப்படிவருந்தவேகடவேனோ—எ-று. (உ௱உ)

வடித்தாய்பூங்குழலாளைவானறியமண்ணறியப்
பிடித்தானிவ்வடலரக்கனெனுமாற்றம்பிழையாதால்
எடுத்தாழியிலங்கைதனையிருங்கடலினிட்டிவனை
முடித்தாலேயான்முடிதன்முறைமன்றவென்றுணர்வான்.

இ-ள். வான் அறிய - மேலுலகங்களுமறிய, மண் அறிய - இந்தவுலகங்களுமறிய, வடித்து ஆய் - நீண்டு பூமியைத்துழாவுவதான, பூங்குழலாளை - பூவையணிந்த கூந்தலையுடைய பிராட்டியை, இவ் அடலரக்கன் - இந்தவலியராக்ஷதன், பிடித்தானெனும் - சிறைகொண்டானென்கிற, மாற்றம் - மேனிற்குஞ்சொல், பிழையாது-தவறாது, ஆழியிலங்கைதனை - கடல்சூழ்ந்த இவ்வூரை, எடுத்து - ஒருசேரத் தூக்கி, இருங்கடலினிட்டு - ஒருபெரியகடலிலேபோகவிட்டு, இவனை - இந்தராக்ஷதனை, யான் முடித்தாலே - நான்முடியச்செய்தாலா, முடிதல் - காரிய முடிவு பெறுதல்,

மன்றமுறை-இதுவேமிகவு நீதியாவது, என்றுணர்வான்-என்றுயோசித்தவர்-எ-று. முடித்தால்-முடிக்கத்தொடுத்தால், ஏயான் - மூடியான் அதனால்நான் முடிதலே மன்றமுறையென்று கினைத்தவர் என்னவுமாம். (உ௩௩)

எள்ளுறையுமொழியாமல்யாண்டையுளுமுளனுய்த்தன்
உள்ளுறையுமழகனைப்போலெம்மருங்குமுலாவினுன்
புள்ளுறையுய்யானத்தையுறநோக்கியயல்போவான்
கள்ளுறையுமலர்ச்சோலையயலொன்றுகண்ணுற்றுன்.

இ-ள். எள் உறையும் - ஒரு எள்ளிருக்குமிடமும், ஒழியாமல் - தப்பாமல், யாண்டையுளும் - எல்லாப்பொருள்களிலும், உளனுய் - உள்ளவனுகி, தன் உள்-தனக்குள்ளும், உறையும் - வாசஞ்செய்கிற, ஒருவனைப்போல்-அந்த ஏகமூர்த்தியைப்போல், எம்மருங்கும் - எல்லா இடங்களிலும், உலாவினுன் - கண்டு வருகிற திருவடி, அயல் - தான்வேறேயிருந்தாலோசிக்க, புள் உறை-வண்டுகள்சஞ்சரிப்பதான, உய்யானத்தை - ஒருதோப்பை, உற நோக்கி - அடையத்தேடி, அயல் - அவ்விடம், போவான் - போகநினைத்தவர், கள்ளுறையும்-தேன்மிக்கிருப்பதான, ஒன்றுமலர்ச்சோலை - ஒருபூந்தோட்டம், அயல்-தாம்செல்லுகிற ஒரு புறத்திலே, கண்உற்றுன்-கண்டார்—எ-று. எள் உறையும் எள்ளுக்குள்ளும் என்க. ஒருசோலைக்குட்போவோமென்று போனுர் அங்கேஒரு சோலையைக் கண்டார் என்க. (உ௩௪)

ஊர்தேடுபடலம் முற்றிற்று.

ஆ படலம் - உ - க்கு திருவிருத்தம் - ௩உக.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

மூன்றவது,

காட்சிப்படலம்.

பிராட்டியைக்கண்டது.

மாடுநின்றவம்மணிமலர்ச்சோலையைமருவித்
தேடியவ்வழிக்காண்பனேற்றீருமென்சிறுமை
ஊடுகண்டிலெனெனிற்பின்னருரியதொன்றில்லை
வீடுவேன்மற்றிவ்விலங்கன்மேலிலங்கையைவீட்டி.

இ-ள். மாடுநின்ற - பக்கத்தேதோன்றின, அ மணி - அந்த அழகிதான, மலர்ச்சோலையை - பூந்தோட்டத்தை, மருவி - அடைந்து, தேடியவ்வழி - அந்த இடமெல்லாந்தேடி, காண்பெனேல் - காணுவேனேயானல், என்சிறுமை - எனது விசனம், தீரும் - போம், ஊடு - இந்தச்சோலைக்குள்ளே, கண்டிலேனெனில் - காணப்பெறேனுனல், பின்னர் - பின்பு, உரியது ஒன்று இல்லை - செய்யத்தக்கது ஒன்றுமில்லை (செய்வதியாதெனில்), இ - இந்த, விலங்கல்மேல் - மலைமேலே, இலங்கையை - இலங்காபுரத்தை, வீட்டிவிடுவேன் - விழச்செய்துவிடுவேன் அல்லது வீட்டிவிடுவேன் மலைமேலுள்ள இலங்கையை அழித்துவிடுவேனெனவுமாம், வீட்டிவிடல் ஆவது இலங்கையை அடியோடெடுத்து இம்மலைமேல்விழ விடுகிறேனெனல்—எ-று. வீடுவேன் விடுவேன். (க)

என்றுசோலைபுக்கெய்தினனிராகவன்றூதன்
ஒன்றிவானவர்பூமழைசொரிந்தனருவந்தார்
அன்றவாளரக்கன்சிறையவ்வழிவைத்த
துன்றலோதிதன்னிலையினைச்சொல்லுவான்றுணிந்தாம்.

இ-ள். என்று - என்றெண்ணி, இராகவன்றூதன்-ஸ்ரீராம தூதனான திருவடி, சோலைபுக்கு - அந்தச்சோலைக்குள்ளேபோய், எய்தினன் - ஒருபுடையிருந்தார், ஒன்றிவானவர்-அப்போதுதேவர்கள்கூடி, பூமழைசொரிந்தனர் - புஷ்பமழையைப் பெய்தார்கள், உவந்தார் - ஆனந்தித்தார்கள், அன்று-கொண்டுவெந்த, அன்றுதொடங்கி, அவ்வாளரக்கன் - அந்தக்கத்தியை யுடைய ராக்ஷதனாலே, அவ்வழி - அந்த அசோகவனத்திலே, சிறை - காவலுக்குள்ளாக, வைத்த - வைக்கப்பட்ட, துன்று-நெருங்கின, அல்-இருள்போன்ற, ஓதிதன் - கூந்தலையுடையவளான பிராட்டியின், நிலையினை - நிலைமையை, சொல்லுவான் - சொல்லுதற்குக்கூடாதாயினும், துணிந்தாம்-ஒருவகை சொல்லத் துணிவுகொண்டோம்—எ-று. (உ)

வன்மருங்குல்வாளரக்கியர்நெருக்கவங்கிருந்தார்
கன்மருங்கெழுந்தென்றுமோர்துளிவரக்காணு
நன்மருந்துபோனலனறவுணங்கியநங்கை
மென்மருங்குல்போல்வேறுளவங்கமுமெலிந்தாள்.

இ-ள். வன்மருங்குல் - வலிதான இடையையுடைய, வாள் அரக்கியர் - பல்லொளியுள்ளராக்ஷதிகள், நெருக்க-நெருங்குதலாக, அங்கு - அவ்வனத்திலே, இருந்தார் - இருந்தார்கள், கல்மருங்கு-கல்லினிடையே, எழுந்து - முளைத்து, என்றும்-எக்காலத்தும், ஓர்துளி-ஒருமழைத்துளியாவது, வர-விழுவதாக, காணு - கிட்டாத, நல்மருந்துபோல் - அமிர்த சஞ்சீவியைப்போல், நலன் அற - தன் அழகெல்லாங் குலைய, உணங்கிய-வருந்தலான, நங்கை-சீதாபிராட்டி, மென்மருங்குல்போல் - மெல்லிய இடையைப்போல், வேறுள - மற்றுமுள்ள, அங்கமும்-கரசரணாதி யவயவங்களெல்லாம், மெலிந்தாள் - இளைத்தலானாள்—எ-று. நெருக்க - வருத்தப்படுத்த எனவுமாம். (ங)

துயிலெனக்கண்களிமைத்தலுமுகிழ்த்தலுந்துறந்தாள்
வெயிலிடைத்தந்தவிளக்கெனவொளியிலாமெய்யாள்
மயிலியற்குயின்மழலையாண்மானிளம்பேடை
அயிலெயிற்றுவெம்புலிக்குழாத்தகப்பட்டதன்னாள்.

இ-ள். துயிலென - நித்திரைசெய்கிறதுபோல், கண்கள் - நேத்திரங்களை, இமைத்தலும் - சிமிட்டுதலும், முகிழ்த்தலும் - மூடுதலும், துறந்தாள் - விட்டாள் என்றால் முழுதும் திறத்தலு முழுது மூடுதலு மில்லாதிருக்கிறாளென்க, வெயிலிடைத்தந்த - வெயிலிலேவைத்த, விளக்கென - விளக்கைப்போல், ஒளியிலா - காந்தியில்லாத, மெய்யாள் - சரீரமுடையவளாய், மயில் இயல் - மயிற்சாயலும், குயில்-குயிற்றொனிபோல், மழலையாள் - இளஞ் சொற்களுமுள்ள பிராட்டி, மான் இளம்பேடை - ஒரு இளையதான பெட்டை மானானது, அயில்-கூரியதான, எயிற்று-பற்களையுடைய, வெம்புலிக்குழாத்து - வெவ்விய புலிக்கூட்டத்திலே, அகப்பட்டது-உள்ளானதை, அன்னாள்-ஒத்தவளானாள்—எ-று. (ச)

விழுதல்விம்முதன்மெய்யுறவெதும்புதல்வெருவல்
எழுதலேங்குதலிரங்குதலிராமனையெண்ணித்

தொழுதல்சோருதறுளங்குதறுயருழந்துயிர்த்தல்
அழுதலன்றிமற்றயலொன்றுஞ்செய்குவதறியாள்.

இ-ள். விழுதல் - சோர்ந்துவிழுதலும், விம்முதல் - துக்கித்தலும், மெய்-உடம்பெல்லாம், உற - அதிகமாக, வெதும்புதல் - வெம்மைகொள்ளுதலும், வெருவல் - பயப்படுதலும், எழுதல்-எழுந்திருத்தலும், ஏங்குதல் - ஏக்கங்கொள்ளுதலும், இரங்குதல் - பிரலாபித்தலும், இராமனையெண்ணி - ஸ்ரீராமனைநினைத்து, தொழுதல் - கும்பிடுதலும், சோருதல் - தளர்தலும், துளங்குதல் - நடுங்குதலும், துயர்-துன்பத்திலே, உழந்து - வருந்தி, உயிர்த்தல்-சுவாசித்தலும், அழுதல் - அழுதலும், அன்றி-அல்லது, மற்று அயல் ஒன்றும்-வேறேயாதொன்றும், செய்குவது-செய்யத் தக்கது, அறியாள் - தெரியாளாகி—எ-று. (௬)

தழைத்தபொன்முலைத்தடங்கடந்தருவிபோய்த்தாழப்
புழைத்தபோலநீர்நிரந்தரம்பொழிகின்றபொலிவால்
இழைக்குநுண்ணியமருங்குலாளிணைநெடுங்கண்கள்
மழைக்கணென்பதுகாரணக்குறியெனவகுத்தாள்.

இ-ள். தழைத்தபொன் - பொன்னிறமான தேமல்மிகுத்திருக்கிற, முலைத் தடம் - முலைகளாகியமேடுகளை, கடந்து - மேலிட்டுப்பெருகி, அருவி - கண்ணீரருவியானது, போய் - ஓடி, தாழ - இறங்க, புழைத்தபோல - துவாரத்திலிருந்து வருகிறதுபோல, நீர் - ஜலத்தை, நிரந்தரம் - எப்போதும், பொழிகின்ற - சிந்துகிற, பொலிவால் - நிறைவினாலே, இழைக்கும் - நூலிழையைப்பார்க்கிலும், நுண்ணிய-சூட்சுமமான, மருங்குலாள் - இடையையுடைய பிராட்டியின், இணை - இரண்டு, நெடுங்கண்கள் - நீண்டகண்களும், மழைக்கண் - மழைக்கண்கள், என்பது - என்று சொல்லுகிறது, காரணக்குறியென - மழை பெய்தலாலே அப்படிச்சொல்லுகிறதென்று, வகுத்தாள் - நியமித்தாள் என்றால் எப்போதும் அழுதுகொண்டேயிருக்கிறாளென்க, மழைக்கண் - குளிர்ந்தகண் எனப்பெண்களுக்குப்பொதுவருணனை-எ-று.

அரியமஞ்சினோடஞ்சனமுதலிவையதிகம்
கரியகாண்டலுங்கண்ணினீர்கடல்புகக்கலுழ்வாள்
உரியகாதலினொருவரோடொருவரையுலகில்
பிரிவெனுந்துயருருவுகொண்டாலனபிணியாள்.

இ-ள். அரிய - தொடுதற்கரிதான, மஞ்சினோடு - மேகத்துடனே, அஞ்சனம்முதல் - மையும்முதல் ஆகிய, இவை - இந்த கரியபொருள்களில், அதிகம்கரிய-மிகக்கரியபொருள் எவையானாலும், காண்டலும் - கண்டவுடனே, கண்ணினீர்-கண்களிலுண்டாகிற ஜலம், கடல்புக - பெருகிக் கடலிலேபோய்விழும்படி, கலுழ்வாள் - அழுகிறவள், உரிய - உரியதான, உள்ளகாதலின் - ஆசையினாலே, உலகின்-உலகத்திலே, ஒருவரோடு - ஒருவருடனே, ஒருவரை - இன்னமொருவரை, பிரிவு எனும் - பிரிதலாகிய, துயர் - துன்பமே, உருவு-ஒருவடிவு, கொண்டாலன-கொண்டாற்போன்ற, பிணியாள் - நோயுள்ளவளானாள்—எ-று. (எ)

துப்பினாற்செய்தகைகொடுகால்பெற்றதுளிமஞ்
சொப்பினான்றனைநினைதொறுநெடுங்கண்களுகுத்த
அப்பினானனைந்தருந்துயருயிர்ப்புடையாக்கை
வெப்பினாற்புலர்ந்தொருநிலையுறுதமென்றுகிலாள்.

இ-ள். துப்பினல் - பவளத்திலே, செய்த - பண்ணின, கைகோடு - கையையுங்கொண்டு, கால்பெற்ற - காலும்பவளத்தாலாய், துளி - நீரைத்துளிக்கிற, மஞ்சு - மேகத்தை, ஒப்பினுன்றனை - ஒப்பான ஸ்ரீராமனை, நினைதொறும் - நினையும்போதெல்லாம், நெடுங்கண்கள் - நீண்டகண்கள், உகுத்த - சிந்துகிற, அப்பினுல் - ஜலத்தினுலே, நனைந்து - ஈரமாய், அரும் - போக்கற்கரிதான, துயர் - துக்கமும், உயிர்ப்புடை - சுவாசமுமுள்ள, யாக்கைவெப்பினுல் - தேகவெம்மையினுலே, புலர்ந்து - காய்தலாய், ஒருநிலையுருத - ஒருபடியாயிராத, மென் - மெல்லிதான, துகிலாள் - வஸ்திரமுள்ளவளாகி—எ-று. (அ)

அரிதுபோகவோவிதிவலிகடத்தலென்றஞ்சிப்
பரிதிவானவன்குலத்தையும்பழியையும்பாராச்
சுருதிநாயகன்வரும்வருமென்பதோர்துணிவால்
கருதிமாதிரமனைத்தையுமளக்கின்றகண்ணுள்.

இ-ள். அரிதுபோகவோ - இவ்வூரைவிட்டுப் போகலாமென்றுலோ மிகவும் அரியதாயிருக்கிறது, விதி - தெய்வசங்கற்பமோ, வலிகடத்தல் - நமதுசெய்கைவலியைவிஞ்சியதாயிருக்கிறது, என்றுஅஞ்சி - என்றுபயந்து, பருதிவானவன் - சூரியபகவானுடைய, குலத்தையும் - குலப்பெருமையையும், பழியையும் - அக்குலத்துக்குண்டானபழிப்பையும், பாரா - பார்த்து, சுருதிநாயகன் - வேதநாயகனுன ஸ்ரீராமன், வரும் வரும் - வருவார் வருவார், என்பது - என்பதாகிற, ஓர் துணிவால் - ஒருநிச்சயத்தைக்கொண்டு, கருதி - வருவாரென்று நினைத்து, மாதிரம் அனைத்தையும் - திக்குகளெல்லாம், அளக்கின்ற - அளாவிப்பார்க்கிற, கண்ணுள் - கண்களையுடையவளானுள்—எ-று. தானே செல்லமாட்டாமையாற் போக அரிதென்றும் தன்னுலொன்றுஞ் செய்யக்கூடாமையால் விதி வலிகடப்பதென்றுங் கூறினுள் என்க. (கூ)

கமையினுடிருமுகத்தயல்கதுப்புறக்கவ்விச்
சுமையுடைக்கற்றைநிலத்திடைக்கிடந்ததூமதியை
அமையவாயிற்பெய்துமிழ்கின்றவயிலெயிற்றரவிற்
குமையுறத்திரண்டொருசடையாகியகுழலாள்.

இ-ள். கமையினுள் - மிக்க பொறுமையுள்ள பிராட்டியினது, திருமுகத்து - திருமுகத்துக்கு, அயல் - இருபுறமுமுள்ள, கதுப்பு உற - கவுளைப்பொருந்த காதோரத்தை, கவ்வி - பற்றி, சுமையுடை - கனமுடையதான புருவமயிராகிய, கற்றை - திரட்சியையுமுடைய, நிலத்திடை - இடத்திலே, கிடந்த - இருக்கிற, தூமதியை - பரிசுத்தமானமுகசந்திரனை, அமைய - முழுதுமடங்க, வாயிற் பெய்து - வாய்க்குள்ளேகொண்டு, உமிழ்கின்ற - கக்குகிற, அயில் - கூரிய, எயிற்று - பற்களையுடைய, அரவில் - பாம்பைப்போல், குமையுற - நெருக்கமாக, திரண்டு - ஒருசேர்க்கையாய், ஒருசடையாகிய - ஒரேஜடைபோலிருக்கிற, குழலாள் - கூந்தலையுடையவளாய்—எ-று. பாம்புகவ்வினல் அதன் இருபுறவா யலகும்போல் காதோரங்களினீண்டுள்ள மயிரே பற்றுதலாகக்கொள்க புருவமயிர்திரளவும்செறிவுமுள்ளனவென்க.

ஆவியந்துகில்புனைவதொன்றன்றிவேறறியாள்
தூவியன்னமென்புனலிடைத்தோய்கிலாமெய்யாள்
தேவுதென்கடலமிழ்துகொண்டநங்கவேள்செய்த
ஓவியம்புகையுண்டதேயொக்கின்றவுருவாள்.

இ-ள். ஆவி - தனக்குயிரொன்றுபோலவே, அம்துகில் - அழகிய வஸ்திரமாக, புனைவது - கட்டிக்கொள்ளுகிறது, ஒன்றன்றி - முன் உடுத்தியிருக்கிற ஒன்றையேயல்லது, வேறு அறியாள் - வேறே இல்லாதவள், தூவி - இறகையுடைய, அன்னம் - அன்னபக்ஷிபோலிருக்கிலும், மென் - மிருதுவான, புனலிடை - ஜலத்திலே, தோய்கிலா - முழுகாத, மெய்யாள் - சரீரமுள்ளவள், தேவு - தெய்வத்தன்மையுள்ள, தெண் - தெளிவுபொருந்திய, கடல் - பாற்கடலிலுண்டான, அமிழ்துகொண்டு - அமிர்தத்தினலே, அனங்கவேள் - மன்மதனனவன், செய்த - அமைத்த, ஓவியம் - சித்திரமானது, புகையுண்டதே - புகைபடிந்திருக்கிறதையே, ஒக்கின்ற - சரியான, உருவாள் - வடிவையுடையவளாய் — எ-று. (கக)

கண்டிலன்கொலாமிளவலுங்கனைகடனடுவண்
உண்டிலங்கையென்றுணர்ந்திலருலகெலாமொறுப்பான்
கொண்டிறந்தமையறிகிலராமெனக்குழையாப்
புண்டிறந்ததினெரிநுழைந்தாலெனப்புகைவாள்.

இ-ள். இளவலும் - இளையபெருமாளும், கண்டிலன்கொல் ஆம் - தன்தமையனைக்கண்டிலனே ஆம் (கண்டாலும்), கனை - சத்திக்கின்ற, கடல்நடுவண் - கடலினடுவே, உண்டு இலங்கையென்று - இலங்கையிருக்கிறதென்று, உணர்ந்திலர் - தெரிந்திலரே, ஆம் - அல்லது, உலகெலாம் - எல்லாவுலகங்களையும், ஒறுப்பான் - வருத்துகிறராவணன் என்னை, கொண்டிறந்தமை - கொண்டுவந்தது, அறிகிலர் - தெரிந்திலர், ஆமென - ஆகுமென்று, குழையா - வருந்தி, புண் - புண்ணனது, திறந்து - வெடித்து, அதின் - அப்புண்ணிலே, எரி - அக்கினி, நுழைந்தாலென - பட்டாற்போல, புகைவாள் - துக்கிக்கிருள் — எ-று. (கஉ)

மாண்டுபோயினனெருவைகட்கரசன்மன்மற்றோர்
யாண்டையென்னிலையறிவுறுப்பார்களிப்பிறப்பில்
காண்டலோவரிதென்றென்றுவிம்முறுங்கலங்கும்
மீண்டுமீண்டுபுக்கெரிநுழைந்தாலெனமெலிவாள்.

இ-ள். எருவைகட்கு அரசன் - சடாயு, மாண்டுபோயினன் - இறந்துபோனர், மன் - அவர்மாண்டுபோனபோது, மற்றோர் - அவரல்லாதமற்றோர், என்னிலை - என துநிலைமையை, யாண்டை - எப்படி, அறிவுறுப்பார்கள் - தெரியச்செய்வார்கள் ஆகையால், இப்பிறப்பில் - இந்தஜன்மத்திலே, காண்டலோ - நான்போய்க்காணுதலோ, அரிது - துர்லபம், என்றென்று - என்றுஇப்படிஎண்ணிஎண்ணி, விம்முறும் - விம்முவாள், கலங்கும் - கலங்குவாள், மீண்டு மீண்டு - மறுபடியும்மறுபடியும், புக்கு - வந்து, எரி - அக்கினியானது புண்ணிலே, நுழைந்தாலென - புகுந்தாற்போல, மெலிவாள் - சரீரம் இளைப்பாளாயினள் — எ-று. (கங)

என்னைநாயகனிளவலையெண்ணலாவினையேன்
சொன்னவார்த்தைகேட்டறிவிலளெனத்துறந்தானே
முன்னையூழ்வினைமுடிந்ததோவென்றென்றுமுறையால்
பன்னவாய்புலர்ந்துணர்வுதேய்ந்தாருயிர்பதைப்பாள்.

இ-ள். நாயகன் - ஸ்ரீராமன், இளவலை - இளையபெருமாளை, எண்ணலா - மதியாத, வினையேன் - பாவியானநான், சொன்னவார்த்தை - சொன்னகடுஞ்சொல்லை, கேட்டு - கேள்வியாய், அறிவிலள் என - புத்தியில்லாதவளென்று, என்னை - தமக்கு

நாயகியான என்னை, துறந்தானோ - வேண்டாவென்று வெறுத்துவிட்டாரோ, முன்னை ஊழ்வினை - பூர்வகன்மபலம், முடிந்ததோ - அவர் வேண்டாவென்னும்படி முடிதலாயிற்றோ, என்று என்று - இப்படிப்பலபடிநினைத்து, முறையால்-(ஒவ்வொன்றையும் எண்ணி) வரிசையாக, பன்ன - பிரலாபித்தலால், வாய் புலர்ந்து - வாய் காய்ந்து, உணர்வுதேய்ந்து - அறிவுங்குறைந்து, ஆர் - அரிதான, உயிர் - ஜீவாம்சம், பதைப்பாள் - துடிப்பதானாள்—எ-று. (கச)

அருந்துமெல்லடகாரிடவருந்துமென்றழுங்கும்
விருந்துகண்டபோதென்னுறுமோவென்றுவிம்மும்
மருந்துமுண்டுகொல்யான்கொண்டநோய்க்கென்றுமயங்கும்
இருந்தமாநிலஞ்செல்லரித்திடவுமாண்டெழாதாள்.

இ-ள். அருந்தும் - நான் உண்ணச்செய்கிற, மெல் அடகு - மெல்லிய இலைக்கறியுணவை, ஆரிட - வேறேயார் பரிமாற, அருந்தும் என்று - சாப்பிடுவாரென்று, அழுங்கும் - வருந்துவாள், விருந்துகண்டபோது - புதியோர் வரக்கண்டால், என் உறுமோ - (உபசரிப்பாரில்லையேயென்று) என்ன துன்பப்படுவாரோ, என்றுவிம்மும் - என்றுதுக்கிப்பாள், யான்கொண்ட - நான்கொண்டிருக்கிற, நோய்க்கு - பிணிக்கு, மருந்து - அவிழ்தமும், உண்டுகொலென்று - உண்டோஎன்று, மயங்கும் - மயங்குவாள், இருந்த - அவளிருக்கிற, மாநிலம் - பெரிதான இடமெல்லாம், செல் அரித்திடவும் - கரையான்பிடித்துத்தின்றாலும், ஆண்டு - அவ்விடத்தைவிட்டு, எழாதாள் - எழுந்திராதவளாகி—எ-று. (க௫)

வன்கண்வஞ்சனையரக்கரித்துணைப்பகல்வையார்
தின்பரென்னினிச்செயத்தக்கதென்றுதீர்ந்தானோ
தனகுலப்பொறைதன்பொறையெனத்தணிந்தானோ
என்கொலெண்ணுவேனென்னுமங்கிராப்பகலில்லாள்.

இ-ள். வன்கண் - கொடுமைசெய்கிற, வஞ்சனை - வஞ்சனையுள்ள, அரக்கர்-ராக்ஷதர்கள், இத்துணைப்பகல் - இவ்வளவுகாலம், வையார் - உயிரோடுவையார்கள், தின்பர் - தின்றுதீர்வார்கள், என் - நாம் போய் யாது, இனிச்செயத்தக்கது என்று-இனிச்செய்யப்படுவதென்று, தீர்ந்தானோ - போய்விட்டாரோ, தன் குலப்பொறை-தனதுகுலத்தைப்பொறுத்தாளுகையே, தன்பொறையென - தனதுசுமையென்று, தணிந்தானோ - என்னைப்பிரிந்துபோயினாரோ, என்கொல் - அவர்செய்கை எவ்விதமென்று, எண்ணுவேன் - நினைப்பேன், என்னும் - என்பாள், அங்கு - அவ்வூரிலே, இரா - இராத்திரியென்றும், பகல் - பகலென்றும், இல்லாள் - தெரியாதவள் என்னும்—எ-று. உலகை ஆளுகிறது தன் குலப்பொறை ஆகலால் இப்போதாள்வோரில்லாமைபற்றித் தனதுசுமையென்று போயினாரோவென்பது கருத்து. (க௬)

பெற்றதாயருந்தம்பியும்பெயர்த்தும்வந்தெய்திக்
கொற்றமாநகர்கொண்டிறந்தார்களோகுறித்துச்
சொற்றவாண்டெலாமுற்றந்தனறியங்கர்துன்னான்
உற்றதுண்டெனப்படருழந்துருதநோயுறுவாள்.

இ-ள். பெற்றதாயரும் - பெற்றதாய்மார்களும், தம்பியும் - பரதாழ்வானும், பெயர்த்தும்வந்து எய்தி - மறுபடியும்வந்துகூடி, கொற்றம் - வெற்றிபொருந்திய, மாநகர் - அயோத்திமாநகருக்கு, கொண்டிறந்தார்களோ - கூட்டிக்கொண்டுபோனார்க

ளோ, குறித்துச்சொற்ற - அளவுசெய்துசொன்ன, ஆண்டெலாம் - பதினாலுவருஷமும், உறைந்துஅன்றி - காட்டிலிருந்தல்லது, அந்நகர் - அந்த அயோத்திக்கு, துன்னுன் - போகார், உற்றது - இன்னம்வனத்திலேயேயிருக்கிறது, உண்டு எனு - உளதென்று, படர் - துன்பத்தால், உழந்து - வருந்தி, உறுதநோய் - பொருந்தப்படாத வியாதியெல்லாம், உறுவாள் - பொருந்துவாளானுள்—எ-று. (கள)

முரனெனத்தகுமொய்ம்பினேர்முன்பொருதவர்போல்
வரனுமாயமும்வஞ்சமும்வரம்பிலவல்லார்
பொரநிகழ்ந்ததோர்பூசலுண்டாமெனப்பொருமாக்
கரனெதிர்ந்ததுகண்டனளாமெனக்கவல்வாள்.

இ-ள். முரன் எனத்தகும் - முரனென்னும் அசுரனே என்னத்தக்க, மொய்ம்பினேர் - புஜபலங்களுள்ளவர்கள், முன் - முன்னே, பொருதவர்போல்-சண்டைபண்ணினவர்கள்போல், வரனும் - வரபலத்தினுலும், மாயமும் - மயங்கச்செய்தலாலும், வஞ்சமும் - வஞ்சனைசெய்தலாலும், வரம்பில - அளவில்லாத, வல்லார் - வல்லமையுள்ளவர்கள், பொர - அங்கேவந்து சண்டைசெய்ய, நிகழ்ந்தது - நடக்கிறதான, ஓர் - ஒப்பில்லாத, பூசல் - சண்டையும், உண்டாமென - உளதாயிருக்குமென்று, பொருமா - துக்கங்கொண்டு, கரன் - கரன்முதலானோர், எதிர்ந்தது - வந்து பொருததை, கண்டனளாமென் - இப்போதுங்கண்டவள்போல், கவல்வாள் - துக்கிப்பாள்—எ-று. (கஅ)

வேறு.

தெம்மடங்கியசேணிலங்கேகயர்
தம்மடந்தையுன்றம்பியதாமெனு
மும்மடங்குபொலிந்தமுகத்தினன்
வெம்மடங்கலையுன்னிவெதும்புவாள்.

இ-ள். தெவ் - சத்துருக்கள், மடங்கிய - கண்டுமீளத்தக்க, சேண் - அகலமுள்ள, நிலம் - கோசலநாடு, கேகயர்தம் - கேகயதேசத்தாருடைய, மடந்தையர்- பெண்ணுனகைகேசியானவள், உன்தம்பியது - உன்தம்பியானபரதனது, ஆமென- ஆகுமென்றுசொல்ல ஆயிற்றென்ன, மும்மடங்கு - முன்னிருந்ததுக்குமூன்றுபங்கு, பொலிந்த - விளங்குதலான், முகத்தின் - முகத்தையுடைய, நன் வெம் மடங்கலை- நல்ல வீரமுள்ள சிங்கம்போன்ற ஸ்ரீராமனை, உன்னி - நினைத்து, வெதும்புவாள்- சரீரமெல்லாம் வெப்பங்கொள்வாளானுள்—எ-று. முகத்தினனவெம் மடங்கலெனவுங் கொள்க. (கக)

மெய்த்திருப்பதமேவென்றபோதினும்
இத்திருத்துறந்தேகென்றபோதினும்
சித்திரத்தினலர்ந்தசெந்தாமரை
ஒத்திருந்தமுகத்தினையுன்னுவாள்.

இ-ள். மெய் - உண்மையாகவே, திருப்பதம் - தனது சிறந்த ராஜபதத்தை, மேவு என்றபோதினும் - நீகொள்ளக்கடவையென்று சக்கரவர்த்தி சொன்னபோதும், இத்திரு - இந்த ராஜ செல்வத்தை, துறந்து - விட்டுக் காட்டுக்கு, ஏகென்றபோதினும் - நீபோவென்று கைகேசி சொன்ன அப்போதும், சித்திரத்தின் - சித்திரித்த உருவிலே, அலர்ந்த - விகவித்திருக்கிற, செந்தாமரை - சிவந்ததாமரைமலரை, ஒத்திருந்த - ஒப்பதாய் விளங்கின, முகத்தினை - திருமுகத்தை, உன்னுவாள்- நினைப்பதானுள்—எ-று. (உ0)

தேங்குகங்கைத்திருமுடிச்செங்கணன்
வாங்குகோலவடவரைவார்சிலே
ஏங்குமாத்திரத்திற்றிரண்டாய்விழ
வீங்குதோளேநினைந்துமெலிந்துளாள்.

இ-ள். தேங்குகங்கை - கங்கைதங்குதலான, திருமுடி - திருமுடியுடனே, செங்கணன் - சிவந்தநெற்றிக்கண்ணையுடைய பரமசிவன், வாங்கு - வளைத்ததான, கோலம் - அழகிய, வடவரை - மேருமலையாகிய, வார் - நீண்ட, சிலை - திரியம்பகமென்னும்வில்லைவளைப்பரோ வளைக்கமாட்டாரோவென்று, ஏங்குமாத்திரத்து - என்பிதாதுக்கிக்குமுன்னே, இற்று - அந்தவில்லொடிந்து, இரண்டாய் - இருகூறாய், விழ - கீழேவிழும்படி, வீங்கு - பருத்ததான, தோளை - புஜபலத்தை, நினைந்து - எண்ணி, மெலிந்துளாள் - இளைத்தவளானாள்—எ-று. ஏங்குமாத்திரத்து - துக்கிக்குமளவில் என்க. (உக)

இன்னலம்பரவேந்தற்கியற்றிய
பன்னலம்பதினாலாயிரம்படை
கன்னன்மூன்றிற்களப்படக்கால்வளை
வின்னலம்புகழ்ந்தேற்றிவெதும்புவாள்.

இ-ள். அம்பரம் - விண்ணுலகத்திற்கு, வேந்தற்கு - அரசனான இந்திரனுக்கு, இன்னல் - துன்பத்தை, இயற்றிய - செய்த, பல்நலம் - பலவிசேஷங்களுமுள்ள, பதினாலாயிரம்படை - பதினாலாயிரம்சேனைவீரர்களும், கன்னல்மூன்றில் - மூன்றுநாழிகையளவிலே, களப்பட - யுத்தகளத்திலேசாவ, கால் - இரண்டுகதிகாலும் வளைய, வளை - வளைத்த, வில் - வில்லினது, நலம் - நன்மையை, புகழ்ந்து - கொண்டாடி, ஏற்றி - மிகவுயர்த்திச்சொல்லி, வெதும்புவாள் - வெம்மையடைகிறாள்-எ-று.

ஆழநீர்க்கங்கையம்பிகடாவிய
ஏழைவேடனுக்கெம்பிநின்றம்பிநீ
தோழன்மங்கைகொழுந்தியெனச்சொன்ன
வாழிநண்பினையுன்னிமயங்குவாள்.

இ-ள். ஆழநீர் - ஆழமுள்ளநீரையுடைய, கங்கை - கங்காநதியிலே, அம்பி - தோணி, கடாவிய - செலுத்தின, ஏழை - அறிவின்மையானான, வேடனுக்கு - ஒருவேடசாதியானுக்கு, எம்பி - எனதுதம்பி, நின்தம்பி - உனக்குத்தம்பியாம், நீதோழன் - நீஎனக்குத்தோழனானாய், மங்கை - இந்தச்சீதையோ, கொழுந்தியென - கொழுந்தியாளென்று, சொன்ன - நியமித்த, வாழி - குறைவுபடாத, நண்பினை - குகனுக்குச்சிநேகமானதை, உன்னி - நினைத்து, மயங்குவாள் - மயக்கங்கொள்வாளானாள்—எ-று. ஏழைவேடன் - எளியவனானவேடனென்க. (உங)

மெய்த்ததாதைவிரும்பினனீட்டிய
கைத்தலங்களைக்கைகளினீக்கிவே
றுய்த்தபோதுதருப்பையிலொண்பதம்
வைத்தவேதியிற்செய்திமனக்கொள்வாள்.

இ-ள். மெய்த்த - மெய்ச்சின, தாதை - தந்தையானஜனகமகாராஜன், விரும்பினன் - விருப்பமுள்ளவனாக, நீட்டிய - பிடித்துக்கொடுத்த, கைத்தலங்களை - தன்கைகளை, கைகளில் - தம்முடையகைகளில்நின்றும், நீக்கி - விடுதல்செய்து, வேறு-

வேறாக, உய்த்தபோது - அரசாணியைச்சூழ்ந்து வரவிட்டபோதில், தருப்பையில்-தர்ப்பைபோற்பரிசுத்தமுள்ள, ஒண் - அழகிதான, பதம் - தன்காலை, வைத்த-அம்மிமேலே எடுத்துவைத்த, வேதியிற்செய்தி - ஓமகுண்டத்தின்முன்னே நடந்தசெய்கையை, மனக்கொள்வாள் - மனத்துள்ளே எண்ணுவாள்—எ-று. தருப்பையில்என்பது அசம்ஹியப்படாமல் பரிசுத்தமுள்ளதை யெடுக்கிறதுபோலெடுத்து அம்மிமேல்வைத்தகுணத்தை மனக்கொள்வாளென்க. (உச)

உரங்கொடேமலர்ச்சென்னியுரிமைசால்
வரங்கொள்பொன்முடிதம்பிவனைந்திலன்
திரங்குசெஞ்சடைகட்டியசெய்வினைக்
கிரங்கியேங்குவதெண்ணியிரங்குவாள்.

இ-ள். உரங்கொள் - பலங்கொண்ட, தேம் - தேன்பொருந்திய, மலர் - பூவையணிவதான வெற்றிமாலையணிவதான, சென்னி - சிரசிலேகொள்ள, உரிமைசால் - பாத்தியதையான, வரங்கொள் - வரத்தாலேகொண்ட, பொன்முடி - சுவர்ணகிரீடத்தை, தம்பி - பரதாழ்வான், வனைந்திலன் - சூடாதவனாகி, திரங்கு - திரட்சியான, செஞ்சடை - சிவந்தசடையை, கட்டிய - சூடிக்கொண்டுவந்த, செய்வினைக்கு - அந்தச்செய்கையைக்குறித்து, இரங்கி - இரக்கங்கொண்டு, ஏங்குவது - அவர் வருந்துகிறதை, எண்ணி - நினைத்து, இரங்குவாள் - துக்கிக்கிறாள்—எ-று. (உரு)

பரித்தசெல்வமொழியப்படருநாள்
அருத்திவேதியர்க்கான்குலமீந்தவர்
கருத்தினாசைக்கரையின்மைகண்டிறை
சிரித்தசெய்கைநினைந்தழுஞ்செய்கையாள்.

இ-ள். பரித்த - தாம் தாங்குவதான, செல்வம் ஒழிய - பாக்கியம் தம்மைவிட்டுவிட, படருநாள் - வனத்துக்குவரும்போது, அருத்தி - வாங்க ஆசைகொண்ட, வேதியர்க்கு - பிராமணர்களுக்கு, ஆன்குலம் - பசுக்களைத்தானமாக, ஈந்து - கொடுத்து, அவர் - அந்தப்பிராமணர்கள், கருத்தின் - மனத்திலே உள்ள, ஆசை - ஆசைக்கு, கரையின்மை - அளவில்லாமையை, கண்டு - தெரிந்து, இறை - கொஞ்சம், சிரித்த - நகைத்த, செய்கை - செய்கையை, நினைந்து - எண்ணி, அழும் - அழுகிற, செய்கையாள் - செய்கையுள்ளவளானாள்—எ-று. (உசு)

மழுவின்வாளினன்மன்னரைமூவெழு
பொழுதினூறிப்புலவுறுபுண்ணினீர்
முழுகினான்றவமொய்ம்பொடுமூரிவில்
தழுவுமேன்மைநினைந்துயிர்சாம்புவாள்.

இ-ள். மழுவின்வாளினன் - மழுவாயுதத்தையுடையவராய், மன்னரை - அரசர்களை, மூஎழுபொழுதின் - இருபத்தொருவம்சத்தளவும், நூறி - அழித்து, புலவுறு - (அவ்வரசர்) உடம்பிற்பொருந்தின, புண்ணினீர் - ரக்தஜலத்திலே, முழுகினான் - மூழ்குதல்செய்த பரசுராமருடைய, தவமொய்ம்பொடு - தவபலமெல்லாம்சேர, மூரிவில் - அவரதுபெரியவில்லை, தழுவுமேன்மை - கொண்டமேம்பாட்டை, நினைந்து - எண்ணி, உயிர்சாம்புவாள் - உயிர்சோர்வாளானாள்—எ-று. (உஎ)

ஏகவாளியவ்விந்திரன்காதன்மேல்
போகவேவியதுகண்பொடித்தநாள்

காகமுற்றுமொர்கண்ணிலவாக்கிய
வேகவென்றியைத்தன்றலைமேற்கொள்வாள்.

இ-ள். ஏகவாளி - ஒருபாணத்தை, அ - அந்த, இந்திரன்காதல்மேல் - இந்திரகுமாரன்மேலே, போக - செல்ல, ஏவி - விட்டு, அது - அந்தக்காக்கையின், கண்பொடித்தநாள் - கண்ணைப்பிடுங்கினநாள்முதல், காகமுற்றும் - காகங்களுக்கெல்லாம், ஓர்கண் - ஒருகண், இல ஆக்கிய - இல்லையாகச்செய்த, வேகம் - விரைவுள்ள, வென்றியை - ஜயத்தை, தன் - தனது, தலைமேற் கொள்வாள் - சிரமேற்கொண்டு புகழுவாள்—எ-று. (உஅ)

வெவ்விராதனைமேல்வருந்தீவினை
வவ்விமாற்றருஞ்சாபமுமாற்றிய
அவ்விராமனையுன்னித்தன்னாருயிர்
செவ்விராதுணர்வோய்ந்துடறேம்புவாள்.

இ-ள். வெவ்விராதனை - கொடியவிராதனுடைய, மேல்வரும் - இனி அவனுக்குவருவதான, தீவினை - ஆகாமிய கர்மங்களையெல்லாம், வவ்வி - வாங்கிபோக்கி, மாற்ற அரும் - போக்கக்கூடாத, சாபமும் - அவனடைந்திருந்த சாபத்தையும், மாற்றிய - போக்கின, அவ்இராமனை - அந்தராமதிவாகரனை, உன்னி - நினைத்து, தன் ஆர் உயிர் - தனதருமையான ஆவி, செவ் இராது - செவ்வே நில்லாமல், உணர்வு ஒய்ந்து - புத்திமயங்கி, உடல்தேம்புவாள் - உடம்பு கசங்குகிறவளாய், இருந்தனள்- இருந்தாள்—எ-று. (உகூ)

வேறு.

இருந்தனடிரிசடையென்னுமின்சொலில்
திருந்தினளொழியமற்றிருந்ததீவினை
அருந்திறலரக்கியரல்லுநள்ளுறப்
பொருந்தலுந்துயினறைக்களிபொருந்தினார்.

இ-ள். இருந்தனள் - பிராட்டிக்குக் காவலாயிருந்தவளான, திரிசடையென்னும் - திரிசடையென்கிற, இன்சொலில் - பிராட்டிக் கினிமைசொல்லுதலிலே, திருந்தினள் - நன்றானவள், ஒழிய - தவிர, மற்றிருந்த - இன்னமுமுள்ள, தீவினை- தீயசெய்கையையுடைய, அருந்திறல் - கடக்க அரிதானவலிமையுள்ள, அரக்கியர்- ராக்ஷதிகள், அல்லு - அந்தராத்திரி, நள் உற - நடுவாகியகாலம், பொருந்தலும்-வந்த அளவில், துயில் - நித்திரையும், நறைக்களி - கள்ளுமயக்கமும், பொருந்தினார்- கூடினார்கள் நன்றாய்த்தூங்கலானார்கள்—எ-று. (ந0)

ஆயிடைத்திரிசடையென்னுமன்பினள்
தாயினுமினியவடன்னைநோக்கினள்
தூயைநீகேட்டியென்றுணைவியாமெனா
மேயதோர்கட்டுரைவிளம்பன்மேயினாள்.

இ-ள். ஆயிடை - அப்போது, திரிசடையென்னும் - திரிசடையென்கிறபெயரையுடைய, அன்பினள் - மிக்கப்பிரீதியுள்ளவள், தாயினும் - தனக்குத்தாயைப்போல், இனியவள்தன்னை - நல்லவளை, நோக்கினள் - பார்த்தாளாய், தூயைநீ - நல்லவளானநீயே, கேட்டி - கேட்கக்கடவை, என் துணைவி - எனக்குச்சகாயமுள்ளவள், ஆமெனா - ஆனவளென்று, மேயது - அப்போதுதோற்றியதான, ஓர்கட்டுரை - ஒரு உறுதிமொழியை, விளம்பல் - சொல்லுதற்கு, மேயினாள் - தொடங்கினாள்—எ-று,

நலந்துடிக்கின்றதோநான்செய்தீவினைச்
சலந்துடித்தின்னமுந்தருவதுண்மையோ
பொலந்துடிமருங்குலாய்புருவங்கண்முதல்
வலந்துடிக்கின்றிலவருவதோர்கிலேன்.

இ-ள். நலம் - (எனக்குவருவதான) ஒருநன்மைதான், துடிக்கின்றதோ - அவசரப்படுகிறதோ, நான்செய் - அல்லதுநான்பண்ணின, தீவினை - பாபமானது, சலம்துடித்து - கோபங்கொண்டு, இன்னமும் - இனிமேலும், தருவது - கொடுப்பதொரு தீவினைப்பயன், உண்மையோ - உண்டோ, பொலம் - அழகிய, துடி - உடுக்கை போலும், மருங்குலாய் - இடையையுடையவளே, புருவம் - புருவமும், கண்முதல்- கண்முதலியவைகளும், வலம் - வலப்புறம், துடிக்கின்றில - துடிக்கஇல்லை இடப்புறந்துடிக்கின்றன, வருவது - இக்குறியால் வருவதின்னதென்று, ஓர்கிலேன் - தெரிகிலேன்—எ-று. துடித்தல் சீக்கிரச்குறி. (கஉ)

முனியொடுமிதிலையின்முதல்வன்முந்துநாள்
துனியறுபுருவமுந்தோளுநாட்டமும்
இனியனதுடித்தனவீண்டுமாண்டென
நனிதுடிக்கின்றனவாய்ந்துநல்குவாய்.

இ-ள். மிதிலையின் - மிதிலாபுரிக்கு, முனியொடு - கோசிகமுனியுடனே, முதல்வன் - ஸ்ரீராமன், முந்துநாள் - வருமுன்னுக்கு, துனி அறு - கூடிப்பிரிந்த, புருவமும் - என்புருவமும், தோளும் - தோளுடனே, நாட்டமும் - கண்ணும், துடித்தன - துடித்தலாயின அவை, இனியன - நன்மையைவிளைத்தன, ஈண்டும் - இங்கிருக்கச்செய்தேயும், ஆண்டென - அங்குத்துடித்தாற்போலவே, நனி - மிகவும், துடிக்கின்றன - துடிக்கின்றகுறியை, ஆய்ந்து - ஆராய்ந்து, நல்குவாய் - எனக்குச்சொல்லவேணும்—எ-று. கூடிப்பிரிதல் புருவத்தினிடைவெளியாதல். (கக)

மறந்தனெனிதுவுமோர்மாற்றங்கேட்டியால்
அறந்தருசிந்தையென்னுவிநாயகன்
பிறந்தபார்முழுவதுந்தம்பியேபெறத்
துறந்துகான்புகுந்தநாள்வலந்துடித்ததே.

இ-ள். மறந்தனென் - முன்னேமறந்துபோனேன், இதுவும் ஓர்மாற்றம் - இதுவமொருசொல், கேட்டி - கேட்பாய், அறந்தரு - தருமத்தையேயெண்ணுகிற, சிந்தை - மனசுள்ள, என் ஆவிநாயகன் - எனதுபிராணனுக்குச் சுவாமியானவர், பிறந்த - சக்கரவர்த்தியாலே தமக்கென்றுசொல்லவுண்டான, பார்முழுவதும் - உலகமெல்லாம், தம்பியேபெற - பரதாழ்வான்பெறுவதாக, துறந்து - ஒழித்து, கான்புகுந்தநாள் - காட்டுக்குவரும்போது, வலந்துடித்தது - வலப்புறந்துடித்தது—எ-று. ()

நஞ்சனையான்வனத்திழைக்குநாளிடை
வஞ்சனையால்வலந்துடித்தவாய்மையால்
எஞ்சலவிண்டுதாமிடந்துடித்ததால்
அஞ்சலென்றிரங்குதற்கடுப்பதியாதென்றாள்.

இ-ள். வஞ்சனையால் - கபடஞ்செய்கிறதினாலே, நஞ்சு அனையான் - விஷத்தையொத்தராவணன், வனத்து - நாங்களிருக்கும் வனத்திலே, இழைக்குநாள்

இடை - வஞ்சனைசெய்யத்துணிந்த முன்னுக்கு, வலந்துடித்த-வலப்புறந்துடித்தன, வாய்மையால் - அவற்றால் உண்மைவிளங்கியதாகையால், எஞ்சல - குறையாமல், ஈண்டு - இவ்வூரிலிப்போது, தாம் - அந்த அவயவங்கள், இடந்துடித்தது - இடப்புறந்துடிக்கின்றன, அஞ்சலென்று - பயப்படாதையென்று, இரங்குதற்கு - என் விஷயத்தில் இரக்கமுள்ளதாய், அடுப்பது - வருவது, யாது-எதிருக்கின்றது ஒன்றுமில்லையே, என்றாள் - என்றுபிராட்டிசொல்லினாள்—எ-று. (நரு)

என்றலுந்திரிசடையியைந்தசோபனம்
நன்றிதுநன்றெனுநயந்தசிந்தையாள்
உன்றுணைக்கணவனையுறுதலுண்மையால்
அன்றியுங்கேட்டியென்றறைதன்மேயினாள்.

இ-ள். என்றலும் - என்றுசொன்ன அளவிலே, திரிசடை - திரிசடைசொல்லுகிறாள்தாயே, இயைந்தசோபனம் - உனக்கு நன்மைவந்து கிட்டுவதாயின, நன்று - மிகவும் நன்று, இது நன்று - இதுவு நல்லது, எனு-என்று, நயந்த - விரும்பின, சிந்தையாள் - மனமுள்ளவளாய், உன்துணை-உனக்குச்சகாயரான, கணவனை-நாயகரை, உறுதல் - நீர்சேர்கிறது, உண்மை-இனிமெய்யே, அன்றியும்-அல்லதும், கேட்டிஎன்று - கேள் என்று, அறைதல்மேயினாள் - சொல்லத்தொடுத்தாள்-எ-று. அன்றியுமென்றது தனக்குத்தோற்றின குறிகளை. (நசு)

உன்னிறம்பசப்புறவுயிருயிர்ப்புற
இன்னிறத்தேனிசையினியநண்பினால்
மின்னிறமருங்குலாய்செவியின்மெல்லெனப்
பொன்னிறத்தும்பிவந்தூதிப்போயதால்.

இ-ள். உன்நிறம் - உனதுதேககாந்தி, பசப்புற-பசுமையாகவும், உயிர் உயிர்ப்புற - ஆயாசந்தீரவும் சுவாசம்விடுவதாகவும், இன்நிறம் - காண இனிதானநிறமுள்ள, தேன் இசை இனிய - தேன்போன்றசொல்லின தினிமையுள்ள,நண்பினால்-உறவினாலே, மின்நிறம் - மின்னலையொத்த, மருங்குலாய் - இடையையுடையசீதா, செவியில் - உன்காதிலே, மெல்லென - மெள்ள, பொன்நிறத்தும்பி - பொன்மயமான ஒருவண்டு, வந்து - உன்சொல்லைத் தனதுபெட்டையி னிசையென்று நினைத்துவந்து, ஊதி - உன்சொல்லிசையென்றுதெரிந்து ஊதிக்கொண்டு, போயது-இதோபோயிற்று—எ-று. (நஎ)

ஆயதுதேரினுன்னுவிநாயகன்
ஏயதுதூதுவந்தெதிர்தலுண்மையால்
தீயதுதீயவர்க்கெய்தறிண்ணமென்
வாயதுகேளெனமறித்துங்கூறுவாள்.

இ-ள். ஆயது - அதை, தேரின் - ஆராய்ந்தால், உன்ஆவி - உனதுபிராணனை, நாயகன் - கணவரால‌லே, ஏயது - அனுப்பியதான, தூதுவந்து - தூதுவருதலாய், எதிர்த்தல் - காணப்படுகிறது, உண்மை - உண்டு, தீயது - கெட்டது, தீயவர்க்கு - கெட்டவர்களுக்கே, எய்தல் - வருகிறது, திண்ணம் - மெய், என்வாயது-என்னிடத்து நடந்தகுறியையும், கேளென - கேளென்று, மறித்தும் - பின்னும், கூறுவாள் - சொல்லுகிறாள்—எ-று. (நஅ)

துயிலிலவாதலிற்கனவுதோன்றல
அயில்விழியொருகனவமைந்துநோக்கினேன்

பயில்வனபழுதிலபழுதிஞடென
வெயிலினும்வெய்யனவுரைத்தன்மேயினுள்.

இ-ள். துயில்இல - எனக்குநித்திரையில்லே, ஆதலில் - ஆகையால், கனவு-) சொப்பனமொன்றும், தோன்றல - காணஇல்லே, அயில்விழி-வேல்போலுங் கண்களுள்ளவளே, ஒருகனவு-ஒருசொப்பனம், அமைந்து - உண்டாகி, நோக்கினேன்-கண்டேன், பழுதுஇல் - யாதொருதோஷமுமில்லாத, நாடு-இந்தஇலங்கைத்தீவில், பயில்வன - இனிப்பொருந்துமவைகள், பழுதுஇல-தப்புகிறது இல்லே, என-என்று, வெயிலினும் - எல்லாவற்றையும் எரிக்கிற சூரியகிரணத்தைப்பார்க்கிலும்,வெய்யன்-கொடுமையுள்ளவைகளே, உரைத்தல் - சொல்லுதற்கு, மேயினுள் - தொடங்கினுள் எ-று. மெய்யனவென்றுபாடமானுல் உதயமாதலும் அஸ்தமித்தலும் தப்பாதுடைய சூரியன்போல் தப்பாதுபலிக்குமவைகள் நான்கண்டசொப்பனவகைகளென ஆம். ()

எண்ணெய்பொன்முடிதொறுமிழுகியீறிலாத்
திண்ணெடுங்கழுதைபேய்பூண்டதேரின்மேல்
அண்ணலவ்விராவணனரத்தவாடையன்
நண்ணினன்றென்புலனவையில்கற்பினுய்.

இ-ள். எண்ணெய் - எண்ணெயை, பொன்முடிதொறும்-தனதுபொன்முடியணிகிற தலேகளெல்லாம், இழுகி - பூசிக்கொண்டு தேய்த்துக்கொண்டு, ஈறிலா-ஓரளவில்லாத, திண் - பலம்பொருந்தின, நெடு - நீண்ட, கழுதை-கழுதைகளேயும், பேய்-பேயையும், பூண்ட - கட்டின, தேரின்மேல் - இரதத்திலே, அண்ணல் - பெருமையையுடைய, அவ்விராவணன் - அந்தராவணன், அரத்தஆடையன் - சிவந்த வஸ்திரமுடுத்தினவனுய், தென்புலம்-தெற்குத் திசையைக் குறித்து, நண்ணினன்-சென்றுன், நவையில் - பழுதில்லாத, கற்பினுய் - கற்புள்ளவளே—எ-று. (௪0)

மக்களுஞ்சுற்றமுமற்றுளோர்களும்
புக்கனரப்புலம்போந்ததில்லேயால்
சிக்கறநோக்கினென்றீயவின்னமும்
மிக்கனகேட்கெனவிளம்பன்மேயினுள்.

இ-ள். மக்களும் - அவன்பிள்ளேகளும், சுற்றமும் - அவன்உறவினரும், மற்றுளோர்களும் - இன்னமுள்ளவர்களும், அப்புலம் - அந்தத்திசையைக்குறித்தே, புக்கனர் - போயினுர்கள், போந்ததில்லே-திரும்பிவர இல்லே, சிக்குஅற - தவறில்லாமல், நோக்கினன் - பார்த்தேன், தீயஇன்னமும்-இன்னம் பொல்லாங்கானவைகள், மிக்கன - அதிகமுண்டு அவைகளே, கேட்கென - நீ கேட்கக் கடவையென்று, விளம்பல் - சொல்லுதற்கு, மேயினுள் - தொடங்கினுள்—எ-று. (௪க)

ஆண்டகையிராவணன்வளர்க்குமவ்வனம்
ஈண்டனவிறந்தவாலினங்கொள்செஞ்சிகை
தூண்டருமணிவிளக்கழலுந்தொன்மனே
கீண்டதால்வானவேறெறியக்கிளைநாள்.

இ-ள். ஆண்டகை - ஆண்மையிற்சிறந்த, இராவணன் - இராவணனுனவன், வளர்க்கும் - வளர்ப்பதான, அவ்வனம் - அந்த அசோகவனமானது, ஈண்டன - மரக்கூட்டத்துடனே, இறந்தன - அழிந்துபோயின, இனங்கொள் - கூட்டங்கொண்ட, செஞ்சிகை - சிவந்தசுவாலேயையுடைய, தூண்டரு - தூண்டப்படாத, மணிவிளக்கு-

ரத்நவிளக்குகள், அழலும் - எரிவதான, தொல்மனை - அவனதுபழையதானவீடு, கிழைநாள் - விடியற்காலத்திலே, வானஏறுஎறிய - இடியேறுமோத இடிவிழ, கீண்டது - பிளந்தது—எ-று. (சஉ)

பிடிமதம்பிறந்தனபிறங்குபேரியும்
இடியெனமுழங்குமாலிரட்டலின்றியே
தடியுடைமுகிற்குலமின்றித்தாவில்வான்
வெடிபடவதிருமாலுதிருமீனெலாம்.

இ-ள். பிடி - பெண்யானைகளுக்கு, மதம்பிறந்தன - மதங்கள்ஒழுகலாயின, இரட்டலின்றி - அடிப்பதில்லையாக, பிறங்கு - விளங்குகின்ற, பேரியும் - முரசங்கள், இடியென - இடிபோல், முழங்கும் - முழங்கலாயின, தடியுடை-மின்னலையுடைய, முகிற்குலம் - மேகக்கூட்டங்கள், இன்றி-இல்லாமல், தா இல் - கெடுதலில்லாத, வான் - ஆகாயத்திலே, வெடிபட - அண்டம் வெடிப்பதாக, அதிரும் - அதிர்தலாயின, மீனெல்லாம் - நக்ஷத்திரங்களெல்லாம், உதிரும் - உதிர்தலாயின—எ-று. ()

விற்பகலின்றியேயிரவுவிண்டற
எற்பகவெரிந்துளதென்னத்தோன்றுமால்
மற்பகமலர்ந்ததோண்மைந்தர்சூடிய
கற்பகமாலையும்புலவுகாலுமால்.

இ-ள். வில் - ஒளியையுடைய, பகல்-பகற்காலம், இன்றி - இல்லாமல், இரவு - இராக்காலமும், விண்டுஅற - உலகைவிட்டுநீங்க, எல் - சூரியன், பக - பிளவாகி, எரிந்துளது - எரிந்துபோயிற்று, என்னத்தோன்றும்-என்னும்படி தோன்றலாயின, மல் - மற்போர், பக-விரிய, மலர்ந்த-விசாலித்த, தோள் - புஜங்களையுடைய, மைந்தர்-புருஷர்கள், சூடிய - முடித்திருக்கிற, கற்பகமாலையும் - கற்பகப்பூமாலையும், புலவு - புலால்நாற்றத்தை, காலும் - வீசுதலாயின—எ-று. (சச)

திரியுமாலிலங்கையுமதிலுந்திக்கெலாம்
எரியுமாற்கந்தர்ப்பநகரமெங்கணும்
தெரியுமான்மங்கலகலசஞ்சிந்தின
விரியுமால்விளக்கினைவிழுங்குமாலிருள்.

இ-ள். இலங்கையும் - இவ்வூரும், மதிலும்-இவ்வூரின்மதிலும், திரியும்-சுழலலாயின, திக்கெல்லாம் - எந்தத்திக்குகளும், எரியும்-எரிதலாயின, கந்தர்ப்பநகரம்-மன்மதபுரம் பெண்குறி, எங்கணும்-எவ்விடத்தும், தெரியும் - தோன்றலாயின, மங்கலகலசம் - சுபமானபூரணகும்பங்கள், சிந்தின - உடைந்துபோயின, விரியும்-எங்கும் ஒளி விருந்திருக்கிற, மால்விளக்கினை - பெரியநிலைவிளக்குகளை, இருள்-அந்தகாரம்வந்து, விழுங்கும் - மூடிக்கொள்வதாயின—எ-று. (சரு)

தோரணமுறிந்தனதுணியச்சூழிமால்
வாரணமுறியுமால்வலத்தவாண்மருப்
பாரணமந்திரத்தறிஞர்நாட்டிய
பூரணகுடத்துநீர்நறவுபொங்குமால்.

இ-ள். தோரணம் - தோரணகம்பங்கள், முறிந்தன - ஒடிந்தனவாகி, துணிய, இருதுண்டாக, சூழி-முகபடாத்தையுடைய, மால்-உயர்ந்த, வாரணம்-யானைகள்,

வலத்த - பலங்கொண்ட, வாள் - வெள்ளொளியுள்ள, மருப்பு-கொம்புகள், முறியும்- ஒடிவன ஆயின, ஆரணமந்திரத்து - வேதமந்திரங்களறிந்த, அறிஞர் - அறிவுள்ளவர்கள், நாட்டிய - நிறுத்தின, பூரணகுடத்து-நிறைகுடத்திலுள்ள, நீர்-ஜலமெல்லாம், நறவு - கள்ளானவையாய், பொங்கும் - பொங்கலாயின—எ-று. (சசு)

விண்டொடர்மதியினைப்பிளந்துமின்னெழும்
புண்டொடர்குருதியிற்பொழியும்போர்மழை
தண்டொடுதிகிரிவாடனுவென்றின்னன
மண்டமர்புரியுமாலாழிமாறுற.

இ-ள். விண் - ஆகாயத்திலே, தொடர் - செல்லுவதான, மதியினை - சந்திரனை, பிளந்து - கிழித்துக்கொண்டு, மின்எழும் - மின்னல்விளங்கும், புண் - புண்ணிலிருந்து, தொடர் - சிந்துகிற, குருதியில் - ரக்தம்போல, போர்மழை - வலியமேகங்கள், பொழியும் - நீரைப்பொழியும், தண்டொடு - கதையுடனே, திகிரி - சக்கரமும், வாள் - கட்கமும், தனு - வில்லும், என்று-என்றுசொல்லப்படுகிற, இன்னன-இவ்வகையாயுதங்கள், மண்டு - நெருங்கின, அமர்புரியும் - சண்டைகள்பண்ணும், ஆழி- கடல்கள் ரக்தப்பிரவாகத்தாலே, மாறுற - நிறமாறுவனவாக அமர்புரியும்—எ-று. மீன்எழும்எனில் கடலிலுள்ளமீன்கள் துள்ளுமென ஆம். (சஎ)

மங்கையர்மங்கலத்தாலிமற்றையோர்
அங்கையின்வாங்கினரெவருமன்றியே
கொங்கையின்வீழ்ந்தனகுறித்தவாற்றினால்
இங்கிதனற்புதமின்னுங்கேட்டியால்.

இ-ள். மங்கையர் - பெண்களுடைய, மங்கலத்தாலி-சுபமானதாலியை, அங்கையில் - தமதழகியகையினாலே, வாங்கினர் - அவிழ்த்தார்கள், மற்றையோர் எவரும் - பிறரொருவரும், அன்றி - அல்லராக, கொங்கையின் - தனங்கள்மேல், வீழ்ந்தன - அவிழ்ந்துவிழலாயின, குறித்தஆற்றினால் - இப்படிநான்சொல்லுகிற முறையினாலே, இங்கு - இவ்வூரிலே, இதன்-இந்தக்கனவினது, அற்புதம்-ஆச்சரியத்தை, இன்னும் - இன்னமும், கேட்டி - சொல்லக்கேள்—எ-று. (சஅ)

மன்னவன்றேவியம்மயன்மடந்தைதன்
பின்னவிழோதியும்பிறங்கிவீழ்ந்தன
துன்னிருஞ்சுடர்சுடச்சுறுக்கொண்டேறின
இன்னலுண்டெனுமிதற்கேதுவீதென்றாள்.

இ-ள். மன்னவன் - இவ்வூரரசனது, தேவி - பார்வையான, அ - அந்த, மயன்மடந்தைதன் - மயன்குமாரி மண்டோதரியினுடைய, பின் - பின்னுதல், அவிழ்- அவிழ்ந்த, ஓதியும் - அவள்கூந்தலுமோ, பிறங்கி - சுழன்று, வீழ்ந்தன - விழலாய், துன் - அவளருகேயிருந்த, இருஞ்சுடர் - பெரியநிலைவிளக்கு, சுட - கொளுத்த, சுறுக்கொண்டேறின - சுறுசுறுவென்று நீளப்பிடித்துவெந்தன, இன்னல்உண்டு- துன்பம்உண்டாகுகிறது, எனுமிதற்கு - என்னும்இக்கனவுக்கு, ஏது - காரணம், ஈதென்றாள் - எரிவதுமணிவிளக்கானாலும் நெய்விளக்குச்சூழ்ந்து சுருள நாறுதலான இதுவேஆம் என்றுசொன்னாள்—எ-று. (சகூ)

என்றனளியம்பிவேறிசைப்பக்கேட்டியால்
இன்றிவணிப்பொழுதியைந்ததோர்கனா

வன்றுணைக்கோளரியிரண்டுமாறிலாக்
குன்றிடையுழுவையங்குழுக்கொண்டீண்டியே.

இ-ள். என்றனள் - என்றுசொன்ன திரிசடை, இயம்பிவேறு - நான்சொன்னதற்குவேறே, இசைப்ப - இன்னமொன்றுஞ்சொல்ல, கேட்டி - கேள், இன்று-இன்றைத்தினம், இவண் - இவ்விடத்திலே, இப்பொழுது - இப்பொழுதிலேதானே, இயைந்தது - காணலானது, ஓர்கனு - ஒருசொப்பனம், வன் - வலிதான, துணை-ஒன்றற்கொன்று சகாயமுள்ள, கோளரியிரண்டு - இரண்டுசிங்கங்கள், மாறிலா-பகைவரணுகாத, குன்றிடை - சுவேலமலையிலே, உழுவையாம் - புலிகளான, குழுக்கொண்டு - கூட்டத்துடனே, ஈண்டி - கூடிவந்து—எ-று. கீழைநாள்என்றதனுலேமுன் சொன்ன சொப்பனக்குறிகளெல்லாம் நேற்றுமுதல்நாள்களில் தன்வீட்டிலேகண்ட கனவுகளென இன்றிவணென்பதனுலே கொள்க. (௫0)

வரம்பிலாமதகரியுறையுமவ்வனம்
நிரம்புறவளைந்தனநெருக்கிநேர்ந்தன
குரம்பறுபிணம்படக்கொன்றமாறிலாப்
புரம்புகவிருந்ததோர்மயிலும்போயதால்.

இ-ள். வரம்புஇலா - அளவில்லாத, மதகரி - மதயானைகள், உறையும்-பொருந்துவனவான, அவ்வனம் - அந்தக்காட்டுக்குள், நிரம்புற - நிரம்ப, வளைந்தன-கோளரிஉழுவைக் குழாங்கள்சூழ்ந்தனவாய், நெருக்கி - நெருக்கமுண்டாக்கி, நேர்ந்தன-பொருதலாயின, குரம்புஅறு - ஒதுங்கவில்லாத, பிணம்பட - பிணங்களுண்டாக, கொன்ற - வதைசெய்தன, மாறிலா - நிகரில்லாத, புரம் - இப்புரத்திலே இவ்வூரிலே, புகஇருந்தது - வருதலாயிருந்தது, ஓர்மயில் - ஒருமயில், உம் - அதுவும், போயது - விட்டுப்போயிற்று—எ-று. மதகரிக்கூட்டத்திலே மயில்வாராமையைக் குறிக்கிறதும்மை என்க. (௫க)

ஆயிரந்திருவிளக்கமையமாட்டிய
சேயொளிவிளக்கதொன்றேந்திச்செய்யவள்
நாயகன்றிருமனைநின்றுநண்ணுதல்
மேயினள்வீடணன்கோயின்மென்சொலாய்.

இ-ள் ஆயிரந்திருவிளக்கு - ஆயிரந்திரியிட்ட திருவிளக்கு, அமைய - எல்லாமெரிய, மாட்டிய - கொளுத்தின, சேயொளி - சிவந்தஒளியையுடைய, விளக்கதொன்று - ஒருவிளக்கை, ஏந்தி - தாங்கிக்கொண்டு, செய்யவள் - சிவந்தநிறமுள்ள ஒருத்தி, நாயகன் - இராவணனுடைய, திருமனைநின்று - திருக்கோயிலிலே யிருந்து, வீடணன்கோயில் - எனதுதந்தை திருவீட்டுக்கு, மென்சொலாய் - ஓமிருதுபாஷி, நண்ணுதல்மேயினள் - போகலானுள்—எ-று. செய்யவள்ராஜலட்சுமி - மிருதுபாஷி மெள்ளப்பேசுகிறவள். (௫உ)

பொன்மனைபுக்கவப்பொருவில்போதினில்
என்னைநீயுணர்த்தினைமுடிந்ததில்லென
அன்னையேயதன்குறைகாணென்றுயிழை
யின்னமுந்துயில்கெனவிருகைகூப்பினுள்.

இ-ள். அப்பொருவில் - அந்தஒப்பில்லாத, பொன்மனை - அழகிதான வீடான எனதுதந்தைதிருக்கோயிலுக்குள், புக்கபோதினில் - அந்தராஜலட்சுமிநுழைந்த

அளவிலே, என்னைநீ - நீஎன்னை, உணர்த்தினை - விழிக்கச்செய்தாய், முடிந்தது-அக்கனுமுடிவுபெறலானது, இல்என - இல்லையென்று திரிசடைசொல்ல அதற்கு,அன்னையே - எனக்குத் தாயானவளே, அதன்குறை - அக்கனுவின் குறையையும், காண்என்று - பார்என்று, ஆயிழை - சீதாபிராட்டி, இன்னமும் - இன்னமுங்கூட, துயில்கென - நித்திரைபண்ணென்று, இருகை - தனதிரண்டுகைகளையும், கூப்பினுள் - குவித்தாள்—எ-று. பொன் இந்தவிளக்கேந்தின லட்சுமி - மனைபுக்கபோதினில் என்பதுமாம், பிராட்டி இன்னமுந் துயில்கென் றுசொல்லதிரிசடை நன்றென்றிருகை கூப்பினுளென்பதுமொன்று. (ருங)

இவ்விடையண்ணலவ்விராமனேவிய
வெவ்விடையனையபோர்வீரத்தூதனும்
அவ்விடையெய்தினனரிதினேக்குவான்
நொவ்விடைமடந்தைதன்னிருக்கைநோக்கினுன்.

இ-ள். இவ்இடை - இங்கேமதங்கபருவதத்திலிருக்கிற, அண்ணல் - பெருமையிற்சிறந்த, அவ்இராமன் - அந்த ஸ்ரீராமதிவாகரன், ஏவிய - அனுப்பின, வெவ்விடை - வெவ்விய கொடியவிர்ஷபத்தை, அனைய - ஒத்த, போர்வீரம் - போர்வல்லரான, தூதனும் - சிறியதிருவடி, அவ்இடை - அப்போதவ்விடத்திற்கு, எய்தினன்-வந்தார், நோக்குவான் அரிதின் - வடிவுகாணுதற் கருமையாய், நோஇடை - வருந்தும்இடையையுடைய, மடந்தைதன் - பிராட்டியினுடைய, இருக்கை - இருக்குநிலையை, நோக்கினுன் - கண்டனர்—எ-று. இவ்இடைஎன்பதற்கு பிராட்டியும்திரிசடையும் பேசிக்கொண்டிருக்கிற இத்தருணத்திலென் றுகொள்க, இடைக்கு வடிவின்மைதெரிதல். (ருச)

அவ்வயினரக்கியரறிவுற்றம்மவோர்
செவ்வையிறுயினமைச்செகுத்ததீதெனு
எவ்வயின்மருங்கினுமெழுந்துவீங்கினுர்
வெவ்வயின்மழுவெழுச்சூலவெங்கையார்.

இ-ள். அவ்வயின் - அப்போது, அரக்கியர் - ராக்ஷதப்பெண்கள், அறிவுற்று-நித்திரை தெளிந்து, அம்ம - இதென்ன ஆச்சரியம், ஓர் - ஒரு, செவ்வையில் - நன்மையுமில்லாத, துயில் - தூக்கம்வந்து, நமை - நம்மையெல்லாம், செகுத்தல்-கெடுத்தது, தீதெனு - மிகவுங்கெட்டதென்று, எவ்வயின் மருங்கினும் - நாலுதிக்கிலும், எழுந்து - எழுந்து, வீங்கினுர் - கூடினுர்கள், வெவ்-வெவ்விதான, அயில் - வேலும், மழு - மழுவும், எழு - எழுவும், சூலம் - சூலமுங் கொண்ட, வெங்கையார் - கொடியகரங்களையுடையவர்கள்—எ-று. (ருரு)

வயிற்றிடைவாயினர்வளைந்தநெற்றியிற்
குயிற்றியவிழியினர்கொடியநோக்கினர்
எயிற்றினுக்கிடையிடையானையாளிபேய்
துயிற்கொள்வெம்பிலனெனத்தொட்டவாயினர்.

இ-ள். வயிற்றிடை - வயிற்றிலே, வாயினர் - வாயையுடையவர்கள், வளைந்த-வளைவாயிருக்கிற, நெற்றியில் - நெற்றிமேலே, குயிற்றிய - பதிவாயிருக்கிற, விழியினர் - கண்களுள்ளவர்கள், கொடிய - இன்னமுங்கொடுமையான, நோக்கினர்-பார்வையுள்ளவர்கள், எயிற்றினுக்கு - பற்களுக்கு, இடைஇடை - நடுவேநடுவே, யானை-யானைகளும், யாளி - சிங்கங்களும், பேய் - பசாசுகளும், துயில்கொள் - நித்திரை

கொள்ளும்படியான, வெம்பிலனென - வெவ்வியகுகைபோல, தொட்ட - ஆழமான, வாயினர் - வாயுள்ளவர்கள், சிலர் என - எல்லாருங்கூட்டுகே—எ-று. (ருசு)

ஒருபதுகையினரொற்றைச்சென்னியர்
இருபதுதலையினரிரண்டுகையினர்
வெருவருதோற்றத்தர்விகடவேடத்தர்
பருவரையெனமுலைபலவுநாற்றினர்.

இ-ள். ஒருபதுகையினர் - பத்துக்கைகளுள்ளவர்கள், ஒற்றைச்சென்னியர்- பத்துத்தலைக்கு ஒரேதலையுள்ளவர்கள், இருபதுதலையினர் - இருபதுதலையுள்ளவர்களாய், இரண்டுகையினர் - அதற்கு இரண்டே கைகளுள்ளவர்கள், வெருவரு - பயப்படத்தக்க, தோற்றத்தர் - சுரூபத்தை யுடையவர்கள், விகடவேடத்தர் - மாறுமாறுன உருவங்களுள்ளவர்கள், பருவரையென - பருத்தமலைபோல், முலைபலவும் - பல தனங்கள், நாற்றினர் - தொங்குகிறவர்கள்—எ-று. (ருஎ)

சூலம்வாள்சக்கரந்தோட்டிதோமரம்
காலவேல்கற்பணங்கற்றகையினர்
ஆலமேயுருவுகொண்டனையமேனியர்
வாலமேதரித்தவன்வெருவும்வண்மையர்.

இ-ள். சூலம் - வாள், சக்கரம் - தோட்டி, தோமரம் - காலவேல், கப்பணம்- முதலிய ஆயுதங்கள்பழகி, கற்ற - தெரிந்த, கையினர் - கைகளுள்ளவர்கள், ஆலமே- விஷமே, உருவு கொண்டனைய - ஒருவடிவுகொண்டாற்போலும், மேனியர் - நிறத்தையுடையவர்கள், வாலமே - தலையிற் கங்கையையும், தரித்தவன் - கொண்டகடவுளும், வெருவும் - அஞ்சுவதான, வண்மையார் - அழகினையுடையவர்கள், வால் அம்- சுத்தஜலம்—எ-று. (ருஅ)

கரிபரிவேங்கைமாக்கரடியாளிபேய்
அரிநரிநாயெனவணிமுகத்தினர்
வெரிநுறுமுகத்தினர்விழிகண்மூன்றினர்
புரிதருகொடுமையர்புகையும்வாயினர்.

இ-ள். கரி - யானையென்றும், பரி - குதிரையென்றும், வேங்கைமா - வேங்கைப்புலியென்றும், கரடி-கரடி, யாளி-யானைபோன்ற ஆளியென்றும், பேய்-பசாசு என்றும், அரி - சிங்கம் என்றும், நரி - நரிஎன்றும், நாயென - நாயென்றும், அணி- நினைக்கக்கொண்ட, முகத்தினர் - முகங்களுள்ளவர்கள், வெரின் உறு - முதுகிலேயிருக்கிற, முகத்தினர் - முகத்தையுடையவர்கள், விழிகள்மூன்றினர் - திரிநேத்திரங்களுள்ளவர்கள், புரிதருகொடுமையர் - கொடுமைகளையேசெய்கிறவர்கள், புகையும் வாயினர் - புகைகிறவாயுள்ளவர்கள்—எ-று. (ருக)

எண்ணினுக்களவிடலரியவீட்டினர்
கண்ணினுக்களவிடலரியகாட்சியர்
பெண்ணெனப்பெயர்கொடுதிரியும்பெற்றியர்
துண்ணெனத்துயிலுணர்ந்தெழுந்துசுற்றினர்.

இ-ள். எண்ணினுக்கு - நினைக்கவும், அளவிடல் - அளவுசெய்யவும், அரிய- அருமையான, ஈட்டினர் - சேர்க்கையுள்ளவர்கள், கண்ணினுக்கு - நம்கண்களுக்கு,

அளவிடல் - அளவுசெய்ய, அரிய - கூடாத, காட்சியர் - தோற்றமுள்ளவர்கள், பெண்ணென - பெண்ணென்று, பெயர்கொடு - பெயரைக்கொண்டு, திரியும் - அலைகிறதான, பெற்றியர் - வரம் பெறுதலுள்ளவர்கள், துண்ணென - திடுக்கென்று, துயில் உணர்ந்து - நித்திரைதெளிந்து, எழுந்து சுற்றினர் - எழுந்துசூழ்ந்தார்கள் எ-று. (சுo)

ஆயிடையுரையழிந்தழகன்றேவியும்
தீயனையவர்முகநோக்கித்தேம்பினள்
நாயகன்றூதனும்விரைவினண்ணினன்
ஓய்விலதுயர்மரப்பணையினும்பரான்.

இ-ள். ஆயிடை - அப்போது, உரை அழிந்து - தான்பேசின பேச்சுக்குலைந்து, அழகன் தேவியும் - ஸ்ரீராமனுடைய தேவியானபிராட்டி, தீ - நெருப்பை, அனையவர் - ஒப்பானராக்ஷதிகள், முகநோக்கி - முகங்களைப்பார்த்து, தேம்பினள்-துக்கித்தாள், நாயகன் தூதனும் - அப்போது ஸ்ரீராமதூதனானதிருவடி, விரைவில்நண்ணினன் - விரைவில்வந்துகூடினர், ஓய்விலது-தளர்வில்லாததாய், உயர் - உயர்ந்த, மரப்பணையின் - ஒருமரக்கிளையின், உம்பரான் - மேலிருக்கிறவரானர்—எ-று. ()

அரக்கியரயின்முதலேந்துமங்கையர்
நெருக்கியகுழுவினர்துயிலுநீங்கினர்
இருக்குநர்பலரிதற்கேதுவென்னெனப்
பொருக்கெனவவரிடைப்பொருந்தநோக்கினன்.

இ-ள். அரக்கியர் - ராக்ஷதப்பெண்கள், அயில்முதல் - வேல்முதலாயுதங்களை, ஏந்தும் - தாங்கின, அங்கையர் - உள் அங்கையுள்ளவர்கள், நெருக்கிய - நெருக்கமான, குழுவினர் - கூட்டமுள்ளவர்கள், துயிலும் - நித்திரையும், நீங்கினர் - இல்லாதவர்களாய், இருக்குனர்பலர் - அநேகரிருக்கிறார்கள், இதற்கு - இப்படியிருத்தற்கு ஏதுகாரணம், என் என - யாதென்று, பொருக்கென - விரைவாக, அவர் இடை - அவர்கள் இருக்குமிடத்தை, பொருந்த - தாம்போய்நோக்க, நோக்கினன்-பார்த்து ஆலோசித்தார்—எ-று. (சுஉ)

விரிமழைக்குலங்கிழித்தொளிருமின்னெனக்
கருநிறத்தரக்கியர்குழுவிற்கண்டனன்
உருநிறத்தொருதனிக்கொண்டலூழியான்
இருநிறத்துற்றவெற்கியைந்தகாந்தத்தை.

இ-ள். விரி - விரிந்துள்ள, மழைக்குலம் - மேகக்கூட்டங்களை, கிழித்து - பிளந்துகொண்டு, ஒளிரும் - விளங்குவதான, மின்னென - மின்னல்போல, கருநிறத்து - கரியநிறத்தையுடைய, அரக்கியர்குழுவில் - ராக்ஷதிகள் கூட்டத்திலே, கண்டனன் - பார்த்தார், உரு - குளிர்ந்த வடிவாலும், நிறத்து - கரியநிறத்தாலும், ஒரு தனி - ஒரு ஒப்புமில்லாத, கொண்டல் - மேகம்போன்ற, ஊழியான் - எந்நாளுமுள்ளவனான ஸ்ரீராமனுடைய, இரு - பெரிதான, நிறத்து - மார்பிலே, உற்ற - பொருந்தினகவுத்துவமென்னும், எற்கு - பதுமராகமணியானசூரியனுக்கு, இயைந்த-சம்பந்தமான, காந்தத்தை - சூரியகாந்தம்போன்றவளைக்கண்டனன்—எ-று. (சுஈ)

தொடற்கருமரக்கியர்காவல்சுற்றுளாள்
மடக்கொடிச்சீதையாமாதரேகொலாம்

கடற்றுணைநெடியதன்கண்ணினீர்ப்பெருந்
தடத்திடையிருந்ததோரன்னத்தன்மையாள்.

இ-ள். தொடற்கு - தொடுதற்கு, அரும் - கூடாத, அரக்கியர் - ராக்ஷதிகள், காவல் - காப்பது, சுற்று - சுற்றிலும், உளாள் - உள்ளவர், மடக்கொடி - இளங்கொடிபோன்ற, சீதையாம் - ஜனகியாகிய, மாதரேகொல் - பெண்ணரசிதானோ, கடல் துணை - கடலளவு, நெடிய - நீண்டவிசாலமான, தன் - தனது, கண்ணின் - கண்களிலிருந்துவருகிற, நீர் - ஜலமுள்ள, பெருந்தடத்திடை - பெரியகுளத்திலே, இருந்தது - இருப்பதான, ஓர் அன்னம் - ஒருஅம்சத்தினது, தன்மையாள்-சுவபாவமுள்ளவராயிருக்கிறவர்—எ-று. (கூசு)

வீடினதன்றறன்யானும்வீகலேன்
தேடினனென்கண்டனனென்றேவியேயெனு
ஆடினன்பாடினனுண்டுமீண்டும்பாய்ந்
தோடினனுலாவினனுவகைத்தேனுண்டான்.

இ-ள். அறன் - தருமமானது, வீடினது - என்னை விட்டுப்போனது, அன்று - அல்ல, யானும் - நானும், வீகலேன் - விடாதவனாகி, தேடினன் - தேடித்திரிந்து, கண்டனன் - பார்த்தேன், தேவியேயெனு - இவர்தேவியே ஆமென்று, ஆடினன் - ஆடினார், பாடினன் - பாடினார், அங்கும் - அவ்விடத்தும், இங்கும் - இவ்விடத்தும், பாய்ந்து - தாவித்தாவி, ஓடினன் - ஓடினார், உலாவினன் - உலாவினார், உவகை - சந்தோஷமான, தேன் - கள்ளை, உண்டான் - குடித்தார்—எ-று. (கூரு)

எள்ளருமுருவினவ்விலக்கணங்களும்
வள்ளறன்னுரையொடுமாறுகொண்டில
கள்ளவாளரக்கனார்கமலக்கண்ணனார்
உள்ளுறையுயிரினையொளித்துவைத்தவா.

இ-ள். எள்ளரும் - இகழ்வில்லாத நிர்த்தோஷமான, உருவின் - உருவத்தையுடைய, அவ்விலக்கணங்களும் - அந்தலட்சணங்களெல்லாம், வள்ளல்தன் - ஸ்ரீராமனுடைய, உரையொடு - சொல்லுடனே, மாறுகொண்டில - விரோதித்திருக்க இல்லை, கள்ளம் - வஞ்சனையையுடைய, வாள் அரக்கனார் - வாளாயுதத்தைக் கையிற்கொண்ட ராக்ஷதனானவன், கமலக்கண்ணனார் - செந்தாமரைக்கண்ணனான ஸ்ரீராமனுடைய, உள் உறை - உடம்புள்ளிருக்கிற, உயிரினை - பிராணமயமானதேவியை, ஒளித்து - மறைத்து, வைத்தவா - வைத்தபடி இது—எ-று. அரக்கனாரென்றது இழிவு குறிப்பு கமலக்கண்ணனாரென்ற துயர்வுகுறிப்பு. (கூசு)

மூவகையுலகையுமுறையினீக்கிய
பாவிதன்னுயிர்கொள்வானிழைத்தபண்பிதால்
ஆவதேயையமிலரவினீங்கிய
தேவனேயவனிவள்கமலச்செல்வியே.

இ-ள். மூவகை - மூன்றுவிதமான, உலகையும் - உலகங்களையெல்லாம், முறையின் - நீதியினின்றும், நீக்கிய - விலகச்செய்த, பாவி - பாவியான இந்தராவணன், தன் உயிர் - தனதுயிரை, கொள்வான் - ஸ்ரீராமன்வாங்குதற்காக, இழைத்த- செய்துகொண்ட, பண்புஇது - முறைமையிதுவே, ஆவதே - இப்படி இவன்செய்யலாகுமா செய்யக்கூடாது, ஐயமில் - சந்தேகமில்லை, அரவின் - சர்ப்பசயனத்தினின்

கள

றும், நீங்கிய - நீங்கிவந்தவதரித்த, தேவனே - தெய்வமே, அவன் - அந்தராமன், இவள் - இவர், கமலச்செல்வியே - லட்சுமியே சந்தேகமில்லை—எ-று. (கூஎ)

மாசுண்டமணியனுள்வயங்குவெங்கதிர்த்
தேசுண்டதிங்களுமென்னத்தேய்ந்துளாள்
காசுண்டகூந்தலாள்கற்புங்காவலும்
ஏசுண்டதில்லையாலறத்துக்கீறுண்டோ.

இ-ள். மாசுண்ட - அழுக்குப்பிடித்த, மணி - ரத்நத்தை, அனுள் - ஒப்பாயிருக்கிறார், வயங்கு - விளங்குகின்ற, வெங்கதிர் - சூரியனுடைய, தேசுண்ட - கிரணம்படலான, திங்களுமென்ன - சந்திரனையும்போல், தேய்ந்துளாள் - தேககாந்திமழுங்கியிருக்கிறார், காசுண்ட - சிக்குப்பிடித்த, கூந்தலாள் - கூந்தலையுடையவர், கற்பும் - இவரதுகற்புநிலையும், காவலும் - அதைக்காக்குநிலையும், ஏசுண்டதில்லை - இகழ்வுபட்டதில்லை குறைவுபடஇல்லை, அறத்துக்கு - தருமத்துக்கு, ஈறுண்டோ - அழிவுண்டாகுமா ஆகாது—எ-று. (கூஅ)

புனைகழலிராகவன்புயத்தையோபுகழ்
வனிதையர்திலகத்தின்மனத்தின்மாண்பையோ
வனைகழலரசரின்வண்மைவீக்கிடும்
சனகர்தங்குலத்தையோயாதைச்சாற்றுகேன்.

இ-ள். புனைகழல் - வீரக்கழல்கட்டின, இராகவன் - ஸ்ரீராமனுடைய, புயத்தையோ - தோள்களையோ, புகழ் - எல்லாருங்கொண்டாடத்தக்க, வனிதையர் - பெண்களுக்கு, திலகத்தின் - முகத்தில் பொட்டுப்போல்வாரது, மனத்தின் - மனத்தினுடைய, மாண்பையோ - பெருமைக்குணத்தையோ, வனைகழல் - வீரக்கழல்கட்டின், அரசரில் - ராஜாக்களிலே, வண்மை - ஔதாரியகுணத்தையே, வீக்கிடும் - வீரக்கழல்போற், கட்டியிருக்கிற - கொண்டிருக்கிற, சனகர்தம் - சனகமகாராஜனுடைய, குலத்தையோ - குலசிரேஷ்டத்தையோ, யாதை - இவற்றுளெதைப்புகழ்ந்து, சாற்றுகேன் - சொல்லுவன்—எ-று. (கூகூ)

தேவரும்பிழைத்திலர்தெய்வவேதியர்
ஏவரும்பிழைத்திலரறமுமீறின்றால்
யாவதிங்கினிச்செயலரியதெம்பிராற்
காவவென்னடிமையும்பிழைத்தின்றுமன்றே.

இ-ள். தேவரும் - தேவர்களிலும் தங்கள்நீதியினின் றும், பிழைத்திலர் - தவறினவர்களில்லை, தெய்வவேதியர் - தெய்வப்பிராமணர்களில், ஏவரும் - ஒருவராயினும், பிழைத்திலர் - தவறினவர்களில்லை, அறமும் - தருமமும், ஈறு இன்று - தவறி அழிவதில்லை, எம்பிராற்கு - என்னை ஆண்டவனை ஸ்ரீராமனுக்கு, இங்கு - இவ்வுலகத்திலே, இனி - இனிமேல், செயலரியது - செய்யக்கூடாதது, யாவது - ஏதிருக்கிறது, ஆவ - எல்லாக்காரியமு முடிவுபெறுவனவேஆம், என் - எனது, அடிமையும் - அடிமைத்தனமும், பிழைத்தின்று - தவறுதலில்லை, ஆமன்றே - ஆகுமல்லவோ—எ-று. (எ௦)

கேழிலாணிறையிறைகீண்டதாமெனின்
ஆழியான்முனிவெனுமாழிமீக்கொள
ஊழியினிறுதிவந்துறுமென்றுன்னினேன்
வாழியருலகினிவரம்பினுளெலாம்.

இ-ள். கேழ் இலாள் - ஒப்பில்லாத இந்த செகன்மாதாவினுடைய, நிறை- பதிவிரதாநிலை, இறை - கொஞ்சம், கீண்டது - தவறிற்றே, ஆமெனில் - ஆமானால், ஆழியான் - சக்கரவர்த்தித்திருமகனுடைய, முனிவெனும் - கோபமென்கிற, ஆழி- கடல், மீக்கொள - மேற்கொண்டுபொங்க, ஊழியினிறுதி - உலகம் அழிகிறமுடிவு காலம், வந்து உறுமென்று - வந்துகூடுமென்று, உன்னினேன் - முன்னே எண்ணி னேன், இனி - இனிமேல் நிறைதவராகாமையால், வரம்புஇல் - அளவில்லாத, நாள் எலாம் - காலதத்துவமுள்ளதனையும், உலகு - உலகத்தார், வாழியர் - வாழக்கடவர் கள்—எ-று. (எக)

வெங்கனன்முழுகியும்புலன்கள்வீக்கியும்
நுங்குவவருந்துவநீக்கிநோற்றவர்
எங்குளர்குலனில்வந்தில்லின்மாண்புடை
நங்கையர்மனத்தவநவிலற்பாலதே.

இ-ள். வெம் - வெப்பமான, கனல் - நெருப்பிலே, முழுகியும் - நின்றும், பல ன்கள் - விஷயவாசனைகளை, வீக்கியும் - அடக்கியும், நுங்குவ - பானம்பண்ணுகிற நீரும், அருந்துவ - புசிக்கிற உணவும், நீக்கி - விட்டு இப்படி, நோற்றவர் - தவஞ்செ ய்தவர்கள், எங்கு உளர் - எவ்விடத்திலே யாரிருக்கிறார்கள், குலனில் வந்து - நல்ல குலத்திலேதோன்றி, இல்லின்மாண்பு உடை - இல்லறத்துக்குரிய நற்குணநற்செய் கைகளையுடைய, நங்கையர் - பெண்களுக்குள்ள, மனத்தவம் - மனத்தாற் செய்யுந் தவத்தை, நவிலற்பாலதோ - சொல்விமுடியும் அளவுள்ளதோ—எ-று. (எஉ)

பேணநோற்றதுமனைப்பிறவிபெண்மைபோல்
நாணநோற்றுயர்ந்ததுநங்கைதோன்றலால்
மாணநோற்றீண்டிவளிருந்தவாறெலாம்
காணநோற்றிலனவன்கமலக்கண்களால்.

இ-ள். நங்கை - இந்தப்பிராட்டியார், தோன்றலால் - பிறந்திருக்கிறபடியினா லே, பேண - எல்லாருந்தன்னைவிரும்பும்படி, நோற்றது - தவஞ்செய்து உயர்ந்தது, மனைப்பிறவி - இவரதுகுடிப்பிறப்பு, பெண்மைபோல் - இவரதுபெண்தன்மையைப் போலவே, நாணம் - நாண்முதலிய பெண்மைக்குணமும், நோற்று - தவஞ்செய்து, உயர்ந்தது - உயர்வாயிற்று, மாண - தமதுபெருமைதோன்ற, நோற்று - தவஞ்செ ய்து, ஈண்டு - இங்கே, இவள் - இவர், இருந்த ஆறெலாம் - இருந்தபடியெல்லாம், அவன் - அந்த ஸ்ரீராமன், கமலக்கண்களால் - தனதுதாமரைபோலுங்கண்களாலே, காண - பார்க்க, நோற்றிலன் - தவஞ்செய்திலர்—எ-று. (எங)

முனிபவரரக்கியர்முறையினீங்கினர்
இனியவடானலாதியாருமில்லையால்
தனிமையும்பெண்மையுந்தவமுமின்னதே
வனிதையர்க்காகநல்லறத்தின்மாண்பெலாம்.

இ-ள். முறையில் - கிரமத்தினின்று, நீங்கினர் - நீங்கினவர்களாய், முனி பவர் - இவரை வெறுத்துப்பேசுகிறவர்கள், அரக்கியர் - ராக்ஷஸிகளே, இனி - இனி யோசித்தால், அவள்தான் - அந்த ஸ்ரீராமன்தேவியார், அலாது - இவரை அல்லது, யாருமில்லை - வேறொருவருமிவ்வூரிலில்லை, தனிமையும் - ஒருவராயிருக்கிறதும், பெ ண்மையும் - பெண்தன்மையும், தவமும் - நாயகனைப்பிரிந்ததாலுள்ள தவச்செய்கை யும், இன்னதே - இவ்வளவினதே ஆகையால், நல் அறத்தின் - நல்லதருமத்தினாலா

குகிற, மாண்பெல்லாம் - நற்குணநற்செய்கைகளெல்லாம், வனிதையர்க்கு - பெண்களுக்கே, ஆக - உளவாகவேண்டும்—எ-று. (எசு)

தருமமேகாத்ததோசழக்கன்றன்வினைக்
கருமமேகாத்ததோகற்பின்காவலோ
அருமையேயருமையேயாரிதாற்றுவார்
ஒருமையேயெம்மனோர்க்குரைக்கற்பாலதோ.

இ-ள். தருமமே - தருமந்தானே, காத்ததோ - காவல்செய்ததோ, சழக்கன்றன் - கர்வியான ராவணனுடைய, வினைக்கருமமே - தீவினைச்செய்கையே, காத்ததோ - காவல்செய்ததோ, கற்பின்காவலோ - கற்பாகியகாவலாலோ, அருமையே-அருமையே - மிகவும் அருமையுள்ளதே, இது - வெங்கதிர்போற்கனற்றுகிற ராக்ஷதிகள் இம்சையை, யார் - எவர், ஆற்றுவார் - பொறுக்க வல்லவர்கள் இவர்பொறுத்திருக்கிறது அருமையே அருமையே என்க, ஒருமையே - ஒருவகையாலே, எம் அனோர்க்கு - என்போல்வாருக்கு, உரைக்கற்பாலதோ-சொல்லுமுறையானதோசொல்விமுடியாது—எ-று. (எடு)

செல்வமோவதுவவர்தீமையோவிது
அல்லினும்பகலினுமமரராட்செய்வார்
ஒல்லுமோவொருவர்க்கீதுறுகண்யாதினி
வெல்லுமோதீவினையறத்தைமெய்ம்மையால்.

இ-ள். செல்வமோ - இந்தராவணன்முதலியோர் ஐசுவரியமோ, அது - அப்படிப்பட்டதாயிருக்கிறது, அவர் - அந்தராக்ஷதர்பண்ணின, தீமையோ - தீயசெய்கையோ, இது - இப்படிப்பட்டதாயிருக்கிறது, அல்லினும் - ராத்திரியிலும், பகலினும் - பகலிலும், அமரர் - தேவர்கள், ஆட்செய்வார் - அடிமைத்தனஞ் செய்வாராயினர், ஒருவர்க்கு - வேறொருவருக்கு, ஈது - இச்செல்வம், ஒல்லுமோ - கிட்டுமோகிட்டாது, இனி உறுகண்யாது - இனித்துன்பமென்பதென்ன இருக்கிறது, மெய்ம்மையால் - இவர்கள்செல்வம் அளவற்றதாயினும் பிராட்டியைப் பிரித்தபாவம் பெரிதாயிருப்பது மெய்யாகையாலே, தீவினை - பாவமானது, அறத்தை - தருமத்தை, வெல்லுமோ - ஜெயிக்குமோ—எ-று. (எசு)

என்றிவையினையனவெண்ணிவண்ணவான்
பொன்றிணிநெடுமரப்பொதும்பர்புக்கவண்
நின்றனனவ்வழிநிகழ்ந்ததென்னெனின்
துன்றுபூஞ்சோலைவாயரக்கன்றோன்றினான்.

இ-ள். என்று - என்றுநினைத்து, இவை - இவைகள்போன்ற, இனையன-இப்படிப்பட்டவைகளை, எண்ணி - பின்னுநினைத்து, வண்ணம் - நிறத்தால், வான்-பெரிய, பொன் - பொன்மயமான, திணி - நெருங்குதலுள்ள, நெடுமரம் - நீண்டமரத்தினது, பொதும்பர் - ஒருசெறிவிலே, புக்கு - போய், அவண் - அவிடத்தில், நின்றனன் - மறைந்திருந்தார், அவ்வழி - அப்போது, நிகழ்ந்தது - நடந்தது, என்னெனின் - யாதென்றால், துன்றுபூ - மலர்கள்நெருங்கின, சோலைவாய் - அந்தத்தோட்டத்தில், அரக்கன் - ராவணன், தோன்றினான் - வந்தான்—எ-று. (எஎ)

காட்சிப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - -கூக்கு திருவிருத்தம் - சுoசு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

நான்காவது,

நிந்தனைப்படலம்.

பிராட்டி ராவணனைத் தூஷித்தல்.

**சிகரவண்குடுமிநெடுவரையெவையுமொருவழிதிரண்டனசிவண
மகரிகைவயிரகுண்டலமலம்புந்திண்டிறற்றோள்புடைவயங்கச்
சகரவேலையினீர்தழுவியகதிரிற்றலைதொறுந்தலைதொறுந்தயங்கும்
வகையபன்மகுடமிளவெயிலெறிப்பக்கங்குலும்பகல்படவந்தான்.**

இ-ள். சிகரவண்குடுமி - சிகரத்தையும் அழகிய அதன்மேற் செறிவையுமுடைய, நெடுவரை - நீண்டமலைகள், எவையும் - யாவும், ஒருவழி - ஒருபுறம்போல் மற்றொருபுறமும், திரண்டன - கூடியிருந்தவற்றை, சிவண - ஒப்பாக, மகரிகை- தங்கத்தாலேதலையும்வாலுந் தோன்றமுதலை வடிவாய்ச்செய்து, வயிரம் - அதன்மேல் வயிரம்பதித்த, குண்டலம் - கடுக்கன்கள், அலம்பும்-ஒளிவீசுவனவாகிய, திண்-கெட்டியும், திறல் - சக்தியுமுள்ள, தோள் - தோள்கள், பத்தும் - மற்றொருபத்தும், புடை - இருபுறமும், வயங்க - விளங்க, சகரவேலையினீர் - சாகரமென்னுங்கடனீரை, தழுவிய - தொட்டுத்தோன்றுகிற, கதிரில் - சூரியன்போல, தலைதொறுந் தலைதொறும் - பத்துத்தலைகளிலும், தயங்கும்-விளங்குகிற, வகைய-வெவ்வேறான, பன்மகுடம் - பத்துக்கிரீடங்களும், இளவெயிலெறிப்ப - இளஞ்சோதிகாட்ட, கங்குலும் - அன்றிராத்திரியும், பகல்பட - விடிந்ததாக, வந்தான் இராவணன்வந்தான் எ-று. (க)

**உருப்பசியுடைவாளெடுத்தனடொடரமேனகைவெள்ளடையுதவச்
செருப்பினைத்தாங்கித்திலோத்தமைசெல்லவரம்பையர்குழாம்புடைசுற்றக்
கருப்புரச்சாந்துங்கலவையுமலருங்கலந்துமிழ்பரிமளகந்தம்
மருப்புடைப்பொருப்பேர்மாதிரக்களிற்றின்வரிக்கைவாண்மூக்கிடைமடுப்ப.**

இ-ள். உருப்பசி - ஊர்வசியானவள், உடைவாள் - இடையிலுடுத்துக்கட்டுகிறவாளை, எடுத்தனள் - எடுத்துக்கொண்டு, தொடர-பின்வரவும், மேனகை-மேனகையென்பவள், வெள்ளடை - வெற்றிலைமடித்து, உதவ - கொடுக்கவும், செருப்பினை - காற்செருப்பை, தாங்கி - எடுத்துக்கொண்டு, திலோத்தமை - திலோத்தமையென்பவள், செல்ல - கூடவரவும், அரம்பையர்குழாம் - தெய்வப்பெண்கூட்டம், புடைசுற்ற - நான்குபுறமுஞ்சூழ்ந்துவரவும், கருப்புரம் - பச்சைக்கர்ப்பூரங்கலந்த, சாந்தும் - சந்தனமும், கலவையும் - கூட்டுவர்க்கக்குழம்பும், மலரும்-திவ்வியபுஷ்பங்களும், கலந்து - ஒன்றுகூடி, உமிழ் - வீசுகிற, பரிமளகந்தம் - பரிமளவாசமானது, மருப்புஉடை - கொம்புகளையுடைய, பொருப்பு-மலைபோன்ற, ஓர்மாதிரக்களிற்றின் - ஒருதிக்கஜத்தினது, வரி - நீண்ட, கை - துதிக்கையிலுள்ள, வாள் - செவ்வொளிகூடின, மூக்கிடைமடுப்ப - மூக்கிலேபுகுதவும்வந்தான்—எ-று. (உ)

**நானநெய்விளக்கநாலிருகோடிநங்கையரங்கையிலெடுப்ப
மேனிவந்தெழுந்தமணியுடையணியின்விரிகதிரிருளெலாம்விழுங்கக்
கான்முதற்றொடர்ந்தநூபுரஞ்சிலம்பக்கிண்கிணிகலையொடுங்கலிப்பப்
பாணிறத்தன்னக்குழாம்படர்ந்தென்னப்பற்பலமழலையும்பகர.**

இ-ள். நானம் - கஸ்தூரிமணம்வீசுகிற, நெய்விளக்கம் - நெய்விளக்குகள், நாலிருகோடிநங்கையர் - எட்டுநூதனகன்னிகள், அங்கையில் - அழகியகைகளாலே, எடுப்ப - தாங்கவும், மேல் - அப்பெண்கள்மேலே, நிவந்து எழுந்த-உயர்ந்து தோன்றுகிற, மணியுடை-ரத்நங்கள்பதித்தலேயுடைய, அணியின் - ஆபரணங்களிலிருந்து, விரிகதிர் - பரவுகிறஒளியானது, இருளெலாம் - அப்போதுள்ள இருள்முழுவதையும், விழுங்க - போக்கவும், கால்முதல்-காலிலே, தொடர்ந்த-கூடின, நூபுரம்-சிலம்புகள், சிலம்ப - சத்திக்கவும், கிண்கிணி - பாதசாலம், கலையொடும்-மேகலேயோடு கூடி, கலிப்ப - சத்திக்கவும், பால்நிறத்து-வெள்ளைநிறத்தையுடைய, அன்னக்குழாம் - அம்சகூட்டங்கள், படர்ந்தென்ன-நடந்தாற்போல், பற்பல - பகுவிதமான, மழலேயும் - குழறொலிகளும், பகர - பேச, ஒலிக்கவும்வந்தான்—எ-று. சிலம்பொலியும் அன்னத்தொலியும் ஒப்பு வெள்ளைவஸ்திரங்களைப் பானிறமென்முரென்க. (ந)

அந்தரம்புகுந்ததுண்டெனமுனிவுற்றருந்துயினீங்கினனாண்டைச்
சந்திரவதனத்தருந்ததியிருந்ததண்ணறுஞ்சோலையின்றனையோ
மந்திரம்யாதோயாரொடும்போமோவென்றுமாமனமறுக்குறலால்
இந்திரன்முதலோரிமைப்பிலாநாட்டமுகிழ்த்தனருயிர்ப்பவிந்திருப்ப.

இ-ள். அந்தரம் - நம்மூரிலேதோவேற்றுமை, புகுந்தது - உண்டானது, உண்டென - உண்டென்று, முனிவுற்று-கோபங்கொண்டு, அருந்துயில் - போக்கற்கரியநித்திரையை, நீங்கினன் - போக்கிக்கொண்டானாய், இவன்வருதல், ஆண்டை-அந்த, சந்திரவதனத்து - சந்திரன்போலுமுகமுள்ள, அருந்ததி - மகாபதிவிரதை, இருந்த - இருப்பதான, தண் - குளிர்ந்த, நறும் - நலமுள்ள, சோலேயின்தனையோ-வனத்தளவோ, மந்திரம் - இவன்எண்ணம், யாதோ-எதுவோ இன்னம், யாரொடும் - யாரளவிலே, போமோ - முடிவுபெறுமோ, என்று - என்பதாய், மா - மிகவும், மனம்-மனசு, மறுக்குறலால் - மயங்குகிறதினாலே, இந்திரன்முதலோர் - இந்திராதிதேவர்கள், இமைப்பிலா நாட்டம் - மூடாதகண்களை, முகிழ்த்தனர் - மூடிக்கொண்டு, உயிர்ப்பு - சுவாசம், அவிந்திருப்ப - விடாதிருக்கவும். (ச)

நீனிறக்குன்றிநெடிதினிற்ருழ்ந்தநீத்தவெள்ளருவியினிமிர்ந்த
பானிறப்பட்டின்மாலையுத்தரியம்பண்புறப்பசும்பொனாரத்தின்
மானிறப்புடவியுடையுறப்பரந்தவளர்கதிரிளவெயில்பொருவச்
சூனிறக்கொண்மூக்கிழித்திடைதுடிக்குமின்னெனமார்பினூறுளங்க.

இ-ள். நீலநிறம் - கறுத்தநிறத்தையுடைய, குன்றின்-ஒருமலையிலேயிருந்து, நெடிதினில் - நீளமாக, தாழ்ந்த - இறங்குகிற, நீத்தம் - பிரவாகமான, வெள்ளருவியில் - வெள்ளருவிபோல், நிமிர்ந்த - உயர்ந்த, பால்நிறம் - பால்நிறமுள்ள, பட்டின்-பட்டினலான, மாலே - ஒழுங்காகிய, உத்தரியம், அங்கவஸ்திரத்தினது, பண்புற-சோபைதோற்ற, பசும்பொன் - பசும்பொன்னலான, ஆரத்தின் - மாலேயின், மால்நிறம்-பெரியஒளியானது, புடவி-பூமிக்கு, உடை - வஸ்திரம்போன்றிருக்கிற கடலிலே, உறப்பரந்த - மிகவும்பரவின, வளர்கதிர் மேலுயர்ந்து வருகிறசூரியனது, இளவெயில் - இளஞ்சோதியை, பொருவ - ஒப்பாகவும், சூல்நிறம் - கருப்பத்தால் கருநிறமான, கொண்மூ-மேகத்தை, கிழித்து-பீறிக்கொண்டு, இடை-அம்மேகத்திலே, துடிக்கும் - துவளுகிற, மின்னென - மின்னலேப்போல், மார்பில் - மார்பிலே, நூல்துளங்க - யக்ஞோபவீதம் விளங்கவும்—எ-று. (ரு)

தோடொறுந்தொடர்ந்தமகரிகைவயிரக்கிம்புரிவலயமாச்சுடர்கள்
நாடொறுஞ்சுடருங்கலிகெழுவிசும்பினுளொடுகோளினைக்கத்

தாடொறுந்தொடர்ந்ததழங்குபொற்கழலின்றகையொளிநெடுநிலந்தடவக்
கேடொறுந்தொடர்ந்தமுறுவல்வெண்ணிலவின்முகமலரிரவினுங்கிளர.

இ-ள். தோள்தொறும் - இருபதுதோள்களிலும், தொடர்ந்த - அலம்புகிற, மகரிகைவயிரம் - வயிரக் கடுக்கன்களும், கிம்புரி - தோளணியாகிய, வலயம் - கேயூரங்களும் ஆகிய இவைகளின், மாச்சுடர்கள் - பேரொளிகளானவை, நாள்தொறும்-தினந்தினமும், சுடரும் - விளங்குவனவான, கலிகெழு - ஓசைவடிவாகிய, விசும்பில் - ஆகாசத்திலேதோற்றுகிற, நாளொடு - நக்ஷத்திரங்களையும், கோளினை - கிரகங்களையும், நக்க - மழுங்கச்செய்யவும், தாள்தொறும்-இரண்கோலிலும், தொடர்ந்த-கட்டின, தழங்கு - சத்திக்கின்ற, பொற்கழலின் - பொன்னுலான வீரக்கழல்களின், தகைஒளி - பேரொளியானது, நெடுநிலம் - அவன் வருகிற நெடியவழிமுழுதும், தடவ - வீசவும், கேள்தொறும்-உறவெல்லாம், தொடர்ந்த - அமைந்த ஒன்றோடொன்றிருத்திருக்கிற, முறுவல் - பற்களாகிய, வெண்ணிலவின் - வெள்ளியசந்திரிகையையுடைய, முகமலர் - அவன் முககமலங்கள், இரவினும் - அந்தஇராத்திரியிலும், கிளர - விளங்கவும்வந்தான் —எ-று. (சு)

தன்னிறத்தோடுமாறுதந்திமைக்குநீவியந்தழைபடவுடுத்த
பொன்னிறத்தூசுகருவரைமருங்கிற்றழுவியபுதுவெயில்பொருவ
மின்னிறக்கதிரிற்சுற்றியபசும்பொன்விரற்றலையவிரொளிக்காசின்
கன்னிறக்கற்றைநெடுநிழல்பூத்தகற்பகமுழுவனங்கவின.

இ-ள். தன்னிறத்தோடு - தனதொளியுடனே வஸ்திரமான, மாறுதந்து-வேறுபாடுசெய்து, இமைக்கும் - விளங்குகின்ற கரையையுடைய, நீவி - கொய்சகத்தினது, அம் - அழகானது, தழைபட - தழைவுதோன்ற, உடுத்த - அவன்கட்டியிருக்கிற, பொன்னிறத்தூசு - பொன்மயமானவஸ்திரமானது, கருவரைமருங்கில்-ஒருநீலமலையினடுவே, தழுவிய - சூழ்ந்த, புதுவெயில்-இளஞ்சோதியை, பொருவ-ஒப்பாகவும், விரல்தலை - அவன்கைவிரல்களிலே, மின்னிறம்-மின்னுகிற ஒளியையுடைய, கதிரில்-செஞ்சுடர்போல், சுற்றிய - சூழ்ந்திருக்கிற, பசும்பொன் - பைம்பொன்னுலான மோதிரங்களின், அவிரொளி - மிக்க ஒளிகள்கொண்ட, காசின்கல் - ரத்நக்கற்களின், நிறக்கற்றை - ஒளிச்செறிவு ஆனது, நெடுநிழல்பூத்த - நீண்ட ஒளியைக்கொண்ட, கற்பகமுழுவனம் - முழுதுங்கற்பகக் காடேபோல், கவின-அழகுசெய்யவும்வந்தான் —எ-று. (எ)

சன்னவீரத்தகோவைவெண்டரளமூழியினிறுதியிற்றனித்த
பொன்னெடுவரையிற்றோற்றியகோளுநாளுமொத்திடையிடைபொலிய
மின்னொளிமௌலியுதயமால்வரையின்மீப்படர்வெங்கதிர்ச்செல்வர்
பன்னிருவரினுமிருவரைத்தவிர்வுற்றுதித்ததோர்படியொளிபரப்ப.

இ-ள். சன்னவீரத்த - சன்னவீரத்துடனே, கோவை-கோத்திருக்கிற, வெண்தரளம்-வெண்மையானமுத்துமாலையானது, ஊழியினிறுதியில் - ஊழிகாலமுடிவிலே, தனித்த - ஒன்றாய்நிற்கிற, பொன்நெடுவரையில் - நீண்ட பொன்மலையிலே, தோற்றிய-தோன்றுகிற, கோளும் - ஒன்பதுகிரகங்களையும், நாளும் - நக்ஷத்திரங்களையும், ஒத்து - ஒப்பாய், இடைஇடை-அந்தச்சன்னவீரத்துக்கு நடுவேநடுவே, பொலிய-விளங்கவும், மின்-மின்னுகின்ற, ஒளி - ஒளியையுடைய, மௌலி - கிரீடங்கள், உதயமால்வரையில் - பெரியஉதயகிரியின், மீப்படர் - மேலேவருகிற, வெங்கதிர்ச்செல்வர் - சூரியர்கள், பன்னிருவரினும் - பன்னிரண்டுபேர்களிலே, இருவரை-இர

ண்டுபேரை, தவிர்வுற்று - விட்டு, உதித்தது-பத்துச்சூரியர்களுதயமாகிய, ஓர்படி-ஒருவகை, ஒளிபரப்ப - பத்துக் கிரீடங்களும் ஒளிவீசவும் வந்தான்—எ-று. சன்னவீரம் - கழுத்திலணிகிற ஒருவகைமாலை இக்காலத்து முந்நூலென்ப. (அ)

பயிலெயிற்றிரட்டைப்பணைமருப்பொடியப்படியினிற்பரிபவஞ்சுமந்த
மயிலடித்தொழுக்கினனையமாமதத்தமாதிரக்காவன்மால்யானை
கயிலையிற்றிரண்டமுரண்டொடர்தடந்தோட்கனகனதுயர்வரங்கடந்த
அயிலெயிற்றரியின்சுவடுதன்கரத்தாலளைந்தமாக்கரியினின்றஞ்ச.

இ-ள். பயில் - வாயிலேபொருந்தின, எயிற்று - பற்போல்வனவாகிய, இரட்டை - இரண்டுகிளையாய்முளைத்த, பணை - பருத்த, மருப்பு - கொம்புகள், ஒடிய-முறிய அதனாலே, படியினில் - பூமியிலே, பரிபவம்-துன்பத்தை, சுமந்த-கொண்ட, மயில் - மயிலினுடைய, அடித்து - கால்விரல்மூன்றுபோல், ஒழுக்கின் - மூவகையாய் ஒழுகுதலையுடைய, அனைய - அந்த, மாமதத்த - பெரியமதங்களைக்கொண்ட, மாதிரம் - திசைகளை, காவல் - காக்கின்ற, மால்யானை - உயர்ந்தயானைகள், கயிலையில்-கயிலாசமலைபோல், திரண்ட - திரட்சியான, முரண்தொடர் - பலங்கூடின, தடந்தோள் - பெரியதோள்களாலே, கனகனது - இரணியனுடைய, உயர்வரம்-உயர்ந்தவரபலமெல்லாம், கடந்த - வென்ற, அயில்எயிற்று - கூரியபற்களையுடைய, அரியின் சுவடு - சிங்கத்தின்காற்சுவட்டை, தன்கரத்தால்-தனதுதிக்கையாலே, அளைந்த-தொட்டுக்கண்ட, மாகரியின் - பெரியயானைபோல், நின்றுஅஞ்ச - திக்கிலேநின்று பயப்படவும்வந்தான்—எ-று. (கூ)

அங்கயற்கருங்கணியக்கியர்துயக்கிலரம்பையர்விஞ்சையர்க்கமைந்த
மங்கையர்நாகமடந்தையர்சித்தர்நாரியரரக்கியர்முதலாக்
குங்குமக்கொங்கைக்குவிமுலைக்கனிவாய்க்கோகிலந்துயர்ந்தமென்குதலை
மங்கையரீட்டமால்வரைதழீஇயமஞ்ஞையங்குழுவெனமயங்க.

இ-ள். அம் - அழகிதான, கயல் - கெண்டைமீன்போலும், கருங்கண்-கரிய கண்களையுடைய, இயக்கியர் - யக்ஷகன்னிகளும், துயக்குஇல் - தோஷமில்லாத, அரம்பையர் - தெய்வகன்னிகளும், விஞ்சையர்க்கு - வித்தியாதரருக்கு, அமைந்த மங்கையர் - உடம்பாடான வித்தியாதரகன்னிகளும், நாகமடந்தையர் - நாககன்னிகளும், சித்தர்நாரியர் - சித்தகன்னிகளும், அரக்கியர் - ராக்ஷதகன்னிகளும், முதலா-முதலாக, குங்குமம் - குங்குமத்தினது, கொங்கை - மணத்தைக்கொண்ட, குவிமுலை - குவிந்ததனங்களையும், கனிவாய் - கனிபோன்றவாயும், கோகிலம் - குயிலும், துயர்ந்த - துன்பப்படுவதான, மென் - மிருதுவாகிய, குதலை-சொற்களையுமுடைய, மங்கையரீட்டம் - பெண்கள்கூட்டம், மால்வரை-ஒருபெரியமலையை, தழீஇய - சூழ்ந்த, மஞ்ஞையங்குழுவென - மயிற்கூட்டங்கள்போல், மயங்க - கூடிவரவும்வந்தான் எ-று. கொங்கு - வாசனை, ஐ - சாரியை என்க. (க0)

தொளையுறுபுழைவேய்த்தூக்கிசைக்கானந்துயல்வுறுவொருநிலைபடர
இளையவர்மிடறுமிந்நிலையிசைப்பக்கிந்நரர்முறைநிறுத்தெடுத்த
கிளையுறுபாடல்சில்லரிப்பாண்டிறழுவியமுழவொடுகெழுமி
அளையுறுமரவுமமுதுவாயுகுப்பவண்டமும்வையமுமளப்ப.

இ-ள். தொளையுறு - துவாரம் பொருந்தின, புழைவேய் - நெடுந்துவாரத்தையுடைய பொல்லாங்குழலினது, தூக்கிசை - பாட்டோசையான, கானம் - இராகமா

னது, துயல்வுறு - அசையாமல், ஒருநிலை - ஒருபுறத்திலே, படர - வரவும், இளைய
வர் - யௌவனப்பெண்களுடைய, மிடறும் - கண்டத்தோசையும், இந்நிலை - இப்ப
டியே, இசைப்ப - ஒலிக்கவும், கிந்நரர் - கின்னரர்கள், முறை - கிரமமாக, நிறுத்து-
அளவுசெய்து, எடுத்த - சுதிகூட்டிப்பாடுகிற, கிளையுறு - நரம்பிலிருந்துவருவதான,
பாடல் - பாட்டொலியும், சில்லரி - நாகசுரமும், பாண்டில் - பிரமதாளமும், தழுவி
ய - கூடின, முழவொடு - மத்தளத்தொனியுடனே, செழுமி - சேர்ந்து, அளைஉறு
ம் - புற்றிலேயிருக்கிற, அரவும் - பாம்பும், அமுது - அமிர்தத்தை, வாய் - வாய்வழி
யாய், உகுப்ப - சிந்த, அண்டமும் - ஆகாயத்தையும், வையமும் - பூலோகத்தையும்,
அளப்ப - அளவிடுவதாகவந்தான்—எ-று. (கக)

அன்னபூஞ்சதுக்கஞ்சாமரையுக்கமாதியாம்வரிசையிற்கமைத்த
உன்னரும்பொன்னின்மணியினிற்புனைந்தவிழைக்குலமுழைக்குலமனைய
மின்னிடைச்செவ்வாய்க்குவிமுலைப்பணைத்தோள்வீங்குதேரல்குலார்தாங்கி
நன்னிறக்காரின்வரவுகண்டுவக்குநாடகமயிலெனநடப்ப.

இ-ள். அன்ன - அப்படிப்பட்ட அந்த, பூஞ்சதுக்கம் - அழகிய நான்குபுறமு
ம்வந்துகூடுவதான அவன்வருகிறவழியிலே, சாமரை - வெண்சாமரமும், உக்கம்-
விசிறியும், ஆதியாம் - முதலான, வரிசையிற்கு - உபசாரத்துக்கு, அமைந்த - தகுந்
தவைகளையும், உன்னரும் - நினைத்தளவிடக்கூடாத, பொன்னின் - பொன்னாலும்,
மணியினில் - ரத்நங்களாலும், புனைந்த - அலங்கிருதமான, இழைக்குலம் - ஆபரண
வகைகளையும், உழைக்குலம் - மான்கூட்டம், அனைய - போன்ற, மின்இடை - மின்
னற்போலிடையும், செவ்வாய் - சிவந்தவாயும், குவிமுலை - குவிந்ததனங்களும், பணை
த்தோள் - மூங்கில்போன்ற தோள்களும், வீங்கு - பெரிய, தேர் - தேர்த்தட்டுப்
போன்ற, அல்குலார் - அல்குலுமுள்ளபெண்கள், தாங்கி - கொண்டு, நன்னிறம்-
நல்லநிறமுள்ளதான, காரின்வரவுகண்டு - மேகத்தின் வருதலைக்கண்டு, உவக்கும்-
சந்தோஷிக்கின்ற, நாடகமயிலென - ஆடுகிறமயில்போல், நடப்ப - நடந்துவரவும்
வந்தான்—எ-று. (கஉ)

தந்திரிநெறியிற்றூக்குறுகருவிதூக்கினரெழுவிதச்சதியின்
முந்துறுகுணிலோடியைவுறுகுறட்டிற்சில்லரிப்பாண்டிலின்முறையின்
மந்திரகீதத்திசைப்பதந்தொடரவகையுறுகட்டளைவழாமல்
அந்தரவானத்தரம்பையர்கரும்பிற்பாடலாரருகுவந்தகவ.

இ-ள். தந்திரி - தந்திகளின், நெறியில் - கிரமப்படியே முறைக்கேற்க, தாக்
குறு - முழக்குகின்றபாடுகின்ற, கருவி - யாழ்முதலியவைகளாலே, தூக்கினர் - பா
டினவர்களுடைய, எழுவிதச்சதியின் - எழுவகைத்தாளவொத்துடனே, முந்துறு-மு
ன்னிட்டுவருகிற, குணிலோடு - அடிக்கிறகுறுந்தடியுடனே, இயைவுறு - கூடுதலா
ன, குறட்டில் - குறடென்னும்வாத்தியத்தினாலும், சில்லரி - நாகசுரத்துடனே, பா
ண்டிலின் - பிரமதாளங்களாலும், முறையின் - முறைப்படியே, மந்திரம் - ரகசியங்
களைச்சொல்லுகிற, கீதத்து - பாட்டாகிய, இசைப்பதம் - ராகமுள்ளகவிகள், தொ
டர - சேர, வகையுறு - அந்தஅந்தவகைகளுக்குள்ள, கட்டளை - நிறை, வழாமல்-தப்
பாமல், அந்தரவானத்து அரம்பையர் - அழகானதகுதியுள்ள தெய்வலோகத்துப்பெ
ண்களாகிய, கரும்பில் - கரும்புச்சாறுபோலும், பாடலார் - பாடகிகள், அருகுவந்
து - சமீபத்திலேவந்துநின்று, அகவ - பாடவும்வந்தான்—எ-று. (கங)

அந்தில்வேளநங்கனழல்படத்துரந்தவயின்முகப்பகழிவாயறுத்த
வெந்துறுபுண்ணின்வேனுழைந்தாங்குவெண்மதிப்பசுங்கதிர்விரவ

மந்தமாருதம்போய்மலர்தொறும்வாரிவயங்குநீர்மம்மரின்வருதேன்
சிந்துநுண்டுளியின்சீகரத்திவலையுருக்கியசெம்பொனத்தெறிப்ப.

இ-ள். அந்தில் - அந்தச்சமயத்திலே, வேள் - மன்மதனுன, அநங்கன் - உருவமில்லாதவன், அழல்பட - நெருப்புப்பொறிஉதிர, துரந்த - எய்த, அயில்முகப்பகழி - கூரியநுனையையுடைய அம்பானது, வாய் - தன்வாயாலே, அறுத்த - அறச்செய்த, வெந்துறு - வெந்திருக்கிற, புண்ணின் - புண்ணிலே, வேல் - வேலாயுதம், நுழைந்தாங்கு - புகுந்தாற்போல், வெண்மதி - வெள்ளியசந்திரனது, பசுங்கதிர் - குளிர்ந்தசந்திரிகை, விரவ - கலக்க, மந்தமாருதம் - தென்றற்காற்றுனது, போய்-சென்று, மலர்தொறும் - புஷ்பங்களிலெல்லாம், வாரி - பராகங்களை வாரிக்கொண்டு, வயங்கு - விளங்குகின்ற, நீர்மம்மரின் - நீர்க்குழம்புபோல் சேற்றுநீர்போல, வரு- ஊறிவருகிற, தேன் - தேனினின்றும், சிந்து - சிதறுதலாகிற, நுண்துளியின் - சிறியதுளிகளையுடைய, சீகரத்திவலை - பனிநீர்ச்செம்புகொண்டு தூவுகிறதூவல்கள், உருக்கிய - உருக்கின, செம்பொன - செம்புத்துளிபோல, தெறிப்ப - மேலேபடவந்தான்—எ-று. (கச)

இழைபுரைமருங்குலிறுமிறுமெனவுமிறுகலாவனமுலையிரட்டை
உழைபுகுசெப்பினெளிதரமறைத்தவுத்தரியத்தினரொல்கிக்
குழைபுகுகமலங்கோட்டினர்நோக்குங்குறுநகைக்குமுதவாய்மகளிர்
மழைபுரைதடங்கட்செங்கடையீட்டமார்பினுந்தோளினுமலைய.

இ-ள். இழை - நூலிழையை, புரை - ஒப்பான, மருங்குல் - இடையானது, இறும் இறும் - ஒடியும் ஒடியும், எனவும் - என்றுசொன்னுலும், இறுகலா - ஒடிவுகொள்ளாத விம்முதலாகுகிற, வனமுலை - அழகியதனங்கள், இரட்டை - இரண்டும், உழைபுகு - கச்சிலேபுகுந்திருக்கிற, செப்பின் - செப்புகள்போல், ஒளிதர-மறைப, மறைத்த - மூடின, உத்தரியத்தினர் - மார்யாப்புள்ள பெண்கள், ஒல்கி - துவண்டு, குழைபுகு - காதோலைகள்கூடின, கமலம் - தாமரைமலர்போன்றமுகங்களை, கோட்டினர் - கவிழ்ந்துகொண்டு, நோக்கும் - பார்க்கப்பட்ட, குறுநகை - மந்தகாசத்தையும், குமுதவாய் - செவ்வல்லிமலர்போன்றவாயுமுள்ள, மகளிர் - பெண்களுடைய, மழைபுரை - குளிர்ச்சிஒத்த குளிர்ந்த, தடங்கண் - பெரியகண்களின், செம் - சிவந்த, கடை - கடைப்பார்வைகளான, ஈட்டம் - கூட்டங்கள், மார்பினும் - மார்பிலும், தோளினும் - தோள்களிலும், மலைய - தைக்கவந்தான்—எ-று. உழை எழனுருபு கச்சினிடத்தே என்க. (கரு)

மாலையுஞ்சாந்துங்கலவையும்பூணும்வயங்குநுண்டூசொடுகாசும்
சோலையின்றொழுதிக்கற்பகத்தருவுநிதிகளுங்கொண்டுபின்றொடரப்
பாலின்வெண்பரவைத்திரைகருங்கிரிமேற்பரந்தெனச்சாமரைபதைப்ப
வேலைநின்றுயருமுயவில்வெண்மதியின்வெண்குடைமீதுறவிளங்க.

இ-ள். மாலையும் - பூமாலைகளும், சாந்தும் - சந்தனமும், கலவையும் - கூட்டுவர்க்கச்சந்தனமும், பூணும் - ஆபரணங்களும், வயங்கு - விளங்குகின்றது, நுண்தூசொடு - மெல்லியவஸ்திரத்துடனே, காசும் - பொற்காசும்ரத்நங்களும், சோலையின் தொழுதி - மரக்கூட்டமாக, கற்பகத்தருவும் - கற்பகவிருக்ஷமும், நிதிகளும் - சங்கநிதி பதுமநிதிகளும், கொண்டுபின் - கைக்கொண்டுபின்னே, தொடர - வரவும், பாலின் - பாலுருவமாய், வெண் - வெண்மையான, பரவைத்திரை - கடலினலைகள், கருங்கிரிமேல் - ஒருநீலகிரிமேலே, பரந்தென - பரவினாற்போல், சாமரை-வெண்சா

மரங்கள், பதைப்ப - அசைந்தசைந்துவிழவும், வேலைநின்று - கடல்மேலேநின்று, உயரும் - உயர்கின்ற, முயல் இல் - களங்கமில்லாத, வெண்மதியின் - வெள்ளைச்சந்திரன்போல, வெண்குடை - வெள்ளைக்குடையானது, மீதுற - தலைமேலாக, விளங்க - விளங்கவும் வந்தான்—எ-று. (கசு

ஆர்தருமகழியருவரையிலங்கையடிபெயர்த்திடுதொறுமழுந்தி
நேர்தரும்பரவைப்பிறழ்திரைதவழ்ந்துநெடுந்தடந்திசைதொறுநிமிரச்
சார்தருங்கடுவினெயிறுடைப்பகுவாயநந்தனுந்தலைதடுமாற
மூரிநீராடையிருநிலமடந்தைமுதுகுளுக்குற்றனண்முரல.

இ-ள். ஆர்தரும் - நீர்நிறைந்துள்ள, அகழி - அகழ்சூழ்ந்த, அருவரை - மேருசிகரமான, இலங்கை - இலங்காபுரியில், அடி - அந்தராவணன்கால்களை, பெயர்த்து - மாறிமாறி, இடுதொறும் - வைக்கவைக்க, அழுந்தி - பள்ளமாய், நேர் தரும் - அங்குவருகிற, பரவை - கடலினது, பிறழ் - மடங்குகிற, திரை - அலைகள், தவழ்ந்து - பாய்ந்து, நெடு - நீண்ட, தடம் - பெரிதான, திசைதொறும் - திக்கெல்லாம், நிமிர - பெருகிச்செல்லவும், சார்தரும் - அவ்விலங்கையைச்சார்ந்து, கடுவின்எயிறுடை - விஷப்பற்களையும், பகுவாய் - அகன்றவாயையுமுடைய, அநந்தனும் - ஆதிசேடனும், தலைதடுமாற - தலைமாறித்தாங்கவும், மூரிநீர் - கடலை, ஆடை - வஸ்திரமாகவுடைய, இருநிலமடந்தை - பெரியபூமிதேவி, முதுகு - தன்முதுகு, உளுக்குற்றனள் - நொந்தவளாய், முரல - கூசலிடவும் வந்தான்—எ-று. (கஎ)

கேடகத்தோடுமழுவெழுச்சூலமங்குசங்கற்பணங்கிடுகோ
டாடகச்சுடர்வாளயில்சிலைகுலிசமுதலியவாயுதமனைத்தும்
தாடகைக்கிரட்டியெறுழ்வலிக்கமைந்ததகைமையர்தடவரைபொறுக்கும்
சூடகத்தடக்கைச்சுடுசினத்தடுபோரரக்கியர்தலைதொறுஞ்சுமப்ப.

இ-ள். கேடகத்தோடு - கேடகத்துடனே, மழு - மழுவும், எழு - எழுவும், சூலம் - சூலமும், அங்குசம் - அங்குசமும், கப்பணம் - கப்பணமும், கிடுகோடு - பரிசையுடனே, ஆடகச்சுடர் - பொன்னொளிவீசுகிற, வாள் - கத்தியும், அயில் - வேலும், சிலை - வில்லும், குலிசம் - வச்சிரமும், முதலிய - முதலான, ஆயுதமனைத்தும் - ஆயுதங்களெல்லாம், தாடகைக்கு - தாடகையென்பவளுக்கு, இரட்டி - இரண்டுபங்கு, எறுழ்வலிக்கு - சாமர்த்தியத்திற்கு, அமைந்த - தகுந்த, தகைமையர் - பெருமையுள்ளவர்கள், தடவரை - பெரியமலையையும், பொறுக்கும் - வேரோடுகொண்டுதாங்கவல்ல, சூடகம் - கங்கணமணிந்த, தடக்கை - நீண்டகைகளுள்ள, சுடுசினத்து - சுடுகின்றகோபத்தினால், அடு - கொல்லப்பட்ட, போர் அரக்கியர் - வலியராக்ஷிகள், தலைதொறும் - தலைகளெல்லாங்கொண்டு, சுமப்ப - தாங்கவும்வந்தான்—எ-று. ()

விரிதளிர்முகைபூக்கொம்படைமுதல்வேரிவையெலாமணிபொனால்விரிந்த
தருவுயர்சோலைதிசைதொறுங்கரியத்தழலுமிழுயிர்ப்புமுன்றவழத்
திருமகளிருந்ததிசையறிந்திருந்துந்திகைப்புறுசிந்தையன்கெடுத்த
தொருமணிநெடும்பற்பஃறலையரவினுழைதொறுமுழைதொறுமுலாவ.

இ-ள். விரி - விரிகின்ற, தளிர் - தளிரும், முகை - அரும்பும், பூ - மலரும், கொம்பு - கொம்பும், அடை - இலையும், முதல்வேர் - அடிவேரும் ஆகிய, இவையெலாம் - இவைகள்யாவும், மணி - ரத்நங்களாலும், பொன்னால் - பொன்னாலும், விரிந்த - விரிவதான, தருஉயர் - விருக்ஷங்களுயர்ந்திருக்கிற, சோலை - அந்தஅசோகவனத்து, திசைதொறும் - திக்குகளெல்லாம், கரிய - தீய்ந்துபோகும்படி, தழல் உமிழ்-

சுவாஸலவீசுகிற, உயிர்ப்பு - இவன் சுவாசமானது, முன்தவழ - முன்னேவீச, திருமகள் - சீதாபிராட்டி, இருந்ததிசை - இருக்கிற இடம், அறிந்திருந்தும் - தெரிந்தும், திகைப்புறு - தெரியாமல்மயங்குகிற, சிந்தையன் - மனசுள்ளராவணன், ஒருமணி- ஒரேஜீவரத்நத்தை, கெடுத்தது - போக்கிக்கொண்டதான, நெடும்பல் - நீண்டபல்லும், பல்தலை - அநேகந்தலைகளுமுள்ள, அரவின் - பாம்புபோல், உழைதொறும்- எந்த இடங்களிலும், உலாவ - மனசுபாயவந்தான்—எ-று. (சக)

இனையதோர்தன்மையெறுழ்வலியரக்கரேந்தல்வந்தெய்துகின்றானை
அனையதோர்தன்மையஞ்சனைச்சிறுவன்கண்டனனமைவுறநோக்கி
வினையமுஞ்செயலுமேல்விளைபொருளுமிவ்வழிவிளங்குமென்றெண்ணி
வனைகழலிராமன்பெரும்பெயரோதியிருந்தனன்வந்தயன்மறைந்தே.

இ-ள். இனையது - இப்படிப்பட்டதான, ஓர்தன்மை - ஒப்பில்லாதபெருமையுள்ள, எறுழ்வலி - மிக்கபலமுடைய, அரக்கரேந்தல் - ராட்சதராஜனாய், வந்தெய்துகின்றானை - வந்துகிட்டுகிறராவணனை, அனையது - அப்படிப்பட்டதான, ஓர்தன்மை - ஒப்பில்லாத பெருமையையுடைய, அஞ்சனை - அஞ்சனாதேவி, சிறுவன் - புத்திரனான திருவடி, கண்டனன் - பார்த்தார், அமைவுற - செவ்வையாக, நோக்கி - பார்த்து, வினையமும் - இவன் உபாயமும், செயலும் - இவன்செய்வதும், மேல் - அதற்குமேலே, விளைபொருளும் - நடக்கிறகாரியமும், இவ்வழி - இவ்விடத்தே, விளங்குமென்று - தெரியுமென்று, எண்ணி - யோசித்து, வனைகழல் - வீரக்கழல்வனைந்துள்ள, இராமன் - ஸ்ரீராமனுடைய, பெரும்பெயர் - பெரியபெயரான திருமந்திரத்தை, ஓதி - உச்சரித்துக்கொண்டு, வந்து அயல் - கிட்டவந்து, மறைந்திருந்தனன் - மறைந்துகொண்டிருந்தார்—எ-று. (உO)

ஆயிடையரக்கனரம்பையர்குழுவுமல்லவும்வேறயலகல
மேயினன்பெண்ணின்விளக்கெனுந்தகையாளிருந்துழியாண்டவள்வெருவிப்
போயினவுயிரளாமெனநடுங்கிப்பொறிவரியெறுழ்வலிப்புகைக்கட்
காய்சினவுழுவைதின்னியவந்தகலையிளம்பிணையெனக்கரைந்தாள்.

இ-ள். ஆயிடை - அப்போது, அரக்கன் - ராவணனானவன், அரம்பையர்குழுவும் - தெய்வப்பெண்கள்கூட்டமும், அல்லவும் - மற்றைஜாதி கூட்டமும், வேறு-வேறே, அயல்அகல - தூரப்போக, மேயினன் - உத்தரவுசெய்து, பெண்ணின்- பெண்களில், விளக்கு எனும் - தீபம் என்ன, தகையாள் - தக்கவள், இருந்துழி - இருக்குமிடத்துக்குவேறயலகலமேயினன், ஆண்டு - அப்போது, அவள் - பிராட்டியார், வெருவி - பயந்து, போயின உயிரள் - உயிர்நீங்கினபிரேதம், ஆமென - ஆமென்னும்படி, நடுங்கி - நடுக்கங்கொண்டு, பொறி - புள்ளிகளும், வரி - நீளரேகைகளும், எறுழ்வலி - மிக்கசாமர்த்தியமும், புகைக்கண் - புகைகிறகண்களுங்கொண்டு, தின்னியவந்த - தின்னுதற்குவந்த, காய்சின உழுவை - கொல்லுங்கோபமுள்ள புலியைக்கண்ட, கலை - ஆண்மானில்லாத, இளம்பிணையென - ஒரு இளையபெண்மான்போல், கரைந்தாள் - உருகுவதானாள்—எ-று. (உக)

வேறு.

கூசியாவிதுலைவுறுவாளையும்
ஆசையாலுயிராசழிவாளையும்
காசில்கண்ணிணைசான்றெனக்கண்டனன்
ஊசலாடியுளையுமுளத்தினான்.

இ-ள். கூசி - உடம்பெல்லாங்கூசுதலாய், ஆவி - உயிரும், துலைவுறுவாளையும் - நடுங்குகிறசீதையையும், ஆசையால் - ஆசையினாலே, உயிர் - பிராணன், ஆசு-வி

ரைவில், அழிவானையும் - கெடுகிறராவணனையும், காசுஇல் - குற்றமில்லாத, கண்ணிணை - தமதிரண்டுகண்களும், சான்றென - சாக்ஷியாக, கண்டனன் - பார்த்தார், ஊசல் - ஊஞ்சல்போல், ஆடி - அசையும், உளையும் - வருந்துகிற, உளத்தினன் - மனத்தையுடையதிருவடி—எ-று. (உ௨)

வாழிசானகிவாழியிராகவன்
வாழிநான்மறைவாழியரந்தணர்
வாழிநல்லறமென்றுறவாழ்த்தினன்
ஊழிதோறும்புதிதுறுங்கீர்த்தியான்.

இ-ள். வாழிஜானகி - ஜனக்குலசுந்தரிவாழ்வாளாக, வாழிஇராகவன் - ரகுகுலசுந்தரன்வாழ்வானாக, வாழிநான்மறை - நான்குவேதங்களும் வாழ்வதாக, வாழியர் அந்தணர் - பிராமணர்களெல்லாரும் வாழ்வாராக, வாழிநல்லறம் - இவ்விருவராலே நல்லதருமமும்வாழ்வதாக, என்று - என்பதாய், உற - மிகவும், வாழ்த்தினன் - வாழிசொல்லினர், ஊழிதோறும் - ஊழிகாலமெல்லாம், புதிதுறும் - விசேஷப்படுகிற, கீர்த்தியான் - கீர்த்தியையுடைய திருவடி—எ-று. (உ௩)

அவ்விடத்தருகெய்தியரக்கன்றான்
எவ்விடத்தெனக்கின்னருளீவது
நொவ்விடைக்குயிலேநுவல்கென்றனன்
வெவ்விடத்தையமிழ்தெனவேண்டுவான்.

இ-ள். அவ்விடத்து - அந்தஇடத்துக்கு, அருகெய்தி - பக்கத்திலேவந்து, அரக்கன்தான் - ராவணனானவன், எவ்விடத்து - எந்தஇடத்திலேஎப்போது, எனக்கு - உன்னைவேண்டுகிற எனக்கு, இன் அருள்ஈவது - இனியதயவுசெய்கிறது எவ்விடத்து, நொ - வருந்துகிற, இடை - இடையையுடைய, குயிலே - குயில்போலுந் தொனியுள்ளவளே, நுவல்க - சொல்லு, என்றனன் - என்றுசொன்னான், வெவ்விடத்தை - கொடியநஞ்சை, அமிழ்தென - அமிர்தமென்றுநினைத்து, வேண்டுவான்- விரும்புகிறராவணன்—எ-று. (உ௪)

ஈசற்காயினுமீடழிவுற்றிறை
வாசிப்பாடழியாதமனத்தினான்
ஆசைப்பாடுமந்நாணுமடர்த்திடக்
கூசிக்கூசியினையனகூறினான்.

இ-ள். ஈசற்கு - சிவனுக்கே, ஆயினும் - ஆனாலும், ஈடுஅழிவுற்று - தனதுபெருமைகுலைந்து, இறை - கொஞ்சமாவது, வாசிப்பாடு - மேம்பாடு, அழியாத - கெடாதகுறையாத, மனத்தினான் - மனத்தையுடையராவணன், ஆசைப்பாடும் - இவன் ஆசைப்படுகையும், அ - அந்த ஆசைநிரம்பாமையால்வருகிற, நாணும் - வெட்கமும், அடர்த்திட - இவனைமிகவும்வருத்த, கூசிக்கூசி - பேசக்கூச்சமிகுதியாய், இனையன - இவ்வார்த்தைகள், கூறினான் - சொன்னான்—எ-று. (உ௫)

இன்றிறந்தனநாளையிறந்தன
என்றிறந்தருந்தன்மையிதாலெனைக்
கொன்றிறந்தபின்கூடுதியோகுழை
சென்றிறங்கிமறந்தருசெங்கணாய்.

இ-ள். இன்றுஇறந்தன - இன்றும்வீணேபோயின, நாளை இறந்தன - நாளையும் அப்படியேபோவன, என்திறம் - என்விஷயத்திலே, தருந்தன்மை - நீசெய்யும்வகை, இது - இப்படியிருக்கிறது, எனை - என்னை இந்தக்காமநோய், கொன்று - கொலைசெய்து, இறந்தபின் - போனபின்பு, கூடுதியோ - கூடஎண்ணுவாயோ, குழைகாதளவும், சென்று - நீண்டு, இறங்கி - என்மேலிழிந்து, மறம்தரு - கொலையைத்தருவதான, செங்கணாய் - சிவந்தகண்களையுடையவளே—எ-று. (உசு)

உலகமொன்றூடிரண்டொருங்கோம்புமென்
அலகில்செல்வத்தரசியலாணையில்
திலகமேயுன்றிறத்தநங்கன்றரு
கலகமல்லதெளிமையுங்காண்டியோ.

இ-ள். உலகம் - உலகங்கள், ஒன்றூடிரண்டு - மூன்றையும், ஒருங்கு - முழுதும், ஓம்பும் - அரசாட்சிசெய்கிற, என் - எனது, அலகுஇல் - கணக்கில்லாத, செல்வத்து - ஐசுவரியத்தையுடைய, அரசியல் - ராஜலக்ஷணமுள்ள, ஆணையில் - ஆக்கினைக்கு, திலகமே - திலகம்போற்சிறந்தவளே, உன்திறத்து - உன்மூலமாக, அநங்கன்தரு - மன்மதன் உண்டுபண்ணுகிற, கலகம் - கலகத்தை, அல்லது - அல்லாமலும், எளிமையும் - அவனுக்குநான் தோற்கிறதையும், காண்டியோ - பார்க்க உனக்குச்சம்மதிதானே—எ-று. (உஎ)

பூந்தண்வார்குழற்பொற்கொழுந்தேபுகழ்
ஏந்துசெல்வமிகழ்ந்தனையின்னுயிர்க்
காந்தன்மாண்டிலன்காடுகடந்துபோய்
வாழ்ந்தவாழ்வதுமானிடர்வாழ்வன்றே.

இ-ள். பூ - பூவணிந்து, தண் - குளிர்ச்சியான, வார் - நீண்ட, குழல் - கூந்தலையுடைய, பொன்கொழுந்தே - பொன்னிற் சிறந்தவளே, புகழ் - மிகுகீர்த்தியை, ஏந்து - கொண்டுள்ள, செல்வம் - என்பாக்கியத்தை, இகழ்ந்தனை - அசட்டைபண்ணுகிறாய், இன் - இனிதான, உயிர் - உன்உயிர்போன்ற, காந்தன் - நாயகன், மாண்டிலன் - இறவாதவனாகி, காடு - வனவாசகாலமெல்லாம், கடந்துபோய் - கழித்துச்சென்று, வாழ்ந்தவாழ்வு - இனிவாழப்போகிற வாழ்வுதானென்ன, அதுமானிடர்- அதுவும்மனிதருக்குரிய, வாழ்வுஅன்றே - அல்பவாழ்வுதான் அல்லவோ என்வாழ்வுபோல் நிலையுள்ளதன்று, வாழும்வாழ்வை - வாழ்ந்தவென இறந்தகாலத்தாற்கூறினும் செய்யுட்கேற்பவழுவமைதியாகக் கொள்க—எ-று. (உஅ)

நோற்கின்றார்களுநுண்பொருணுண்ணிதிற்
பார்க்கின்றாரும்பெறும்பயன்பார்த்தியேல்
வார்க்குன்றாமுலையென்சொனமௌலியால்
ஏற்கின்றாரொடுடனுறையின்பமால்.

இ-ள் நோற்கின்றார்களும் - தவஞ்செய்கிறவர்களும், நுண்பொருள் - அதிசூட்சுமார்த்தங்களும், நுண்ணிதில் - சுலபத்திலே, பார்க்கின்றாரும் - தெரிகிறவர்களும், பெறும்பயன் - அடையும்பலனை, பார்த்தியேல் - நீதெரிவையேயானால், வார்- ரவுக்கையணிந்த, குன்றாம் - மலைக்கொப்பான, முலை - தனங்களையுடையவளே, என்சொல் - எனதுபணிவிடையை, மௌலியால் - தலையாலே, ஏற்கின்றாரொடு- அங்கீகரிக்கிறதேவர்களுடனே, உடன்உறை - கூடஇருக்கிற, இன்பம் - சுகமேபெறும்பயன் வேறில்லை—எ-று. (உகூ)

பொருளும்யாழும்விளரியும்பூவையும்
மருளுநாளுமழலைவழங்குவாய்
தெருளுநான்முகன்செய்ததுன்சிந்தையின்
அருளுமின்மருங்கும்மரிதாக்கியோ.

இ-ள். பொருளும் - பிள்ளையும், யாழும் - வீணையும், விளரியும் - விளரியென்னுமிராகமும், பூவையும் - நாகணவாய்ப்புள்ளும் ஆகியநான்கும் சொற்சுவைக்குவமைகள், நாளுமருளும் - தினமுமயங்குவனவாகும், மழலை - இளஞ்சொற்களை, வழங்குவாய் - பேசுகிறவளே, தெருளும் - எல்லாந்தெளிந்தவனான, நான்முகன் - சதுர்முகக்கடவுள், செய்தது - உன்னைப்படைத்தது, உன்சிந்தையில் - உன்மனசிலே, அருளும் - இரக்கமும் உடம்பிலே, மின் - மின்போல், மருங்கும் - இடையும், அரிது ஆக்கியோ - இல்லையாகவோ செய்தது—எ-று. (ருo)

ஈண்டுநாளுமிளமையுமீண்டில
மாண்டுமாண்டுபிறிதுறுமாலைய
வேண்டுநாள்வெறிதேவிளிந்தாலினி
யாண்டுவாழ்வவ்விடருழன்றாழ்தியோ.

இ-ள். ஈண்டு (கழிந்துகொண்டு) வருகிற, நாளும் - ஆயிசும், இளமையும் - யௌவநமும், ஈண்டில (கழிவனவேயன்றி) மீளுவனவல்ல, மாண்டுமாண்டு - போய்ப்போய், பிறிதுறு - வேறுபாடாகிற, மாலைய - செல்கையையுடையன அவ்விரண்டும், வேண்டுநாள் - அனுபவிக்கவேண்டுகிறகாலம், வெறிதே - வியர்த்தமாகவே, விளிந்தால் - போனால், இனியாண்டு - இனியெங்கே, வாழ்வு - சுகம்உண்டாகுகிறது, அவ்விடர் - காலத்தேயனுபவியாமற்போன அந்தத்துக்கக்கடலிலே, உழன்று - பின்புவருந்தி, ஆழ்தியோ - முழுகுவையோ—எ-று. (ருக)

இழவெனக்குயிர்க்கெய்தினுமெய்துக
குழைமுகத்துநின்சிந்தனைகோடினால்
பழகநிற்புறும்பண்பிவைகாமத்தோ
டழகினுக்கினியாருளராவரே.

இ-ள். எனக்கு - எனக்கு, உயிர்க்கிழவு - உயிர்ச்சேதம், எய்தினும் - வந்தாலும், எய்துக - வருக, குழை - குண்டலமணிந்த, முகத்து - முகத்தையுடைய, நின் சிந்தனை - உன்மனசு, கோடினால் - கோணினால், பழக-நீ இணங்குவதாக, நிற்புறும்-நான் அடங்கிநிற்கிற, பண்பு - குணங்கள், இவை - இப்போது நான்வேண்டுகோள்கள்முதலியன, காமத்தோடு - இனிஉனக்குளதாகிறகாமத்துக்கும், அழகினுக்கு-என் அழகுக்கும், இனியார் - இனித்தக்கவர், உளராவரே - என்னை அல்லது வேறே ஒருவருண்டாஇல்லை ஆகையால் நீமனங்கோணி என்உயிர்போகாமற்செய்கைவேணுமென்கிறான்—எ-று. (ருஉ)

பெண்மையும்மழகும்பிறழாமனத்
திண்மையும்முதல்யாவையுஞ்செய்யவாய்க்
கண்மையும்பொருந்திக்கருணைப்படர்
வண்மையென்கொல்ஜனகரின்மாண்டவா.

இ-ள். பெண்மையும் - பெண்தன்மையும், அழகும் - அதற்கேற்றஅழகும், பிறழா - அதற்குக்குறையாத, மனத்திண்மையும் - மனோதிடமும், முதல்யாவையும்-

முதலான எல்லாம், செய்யஆய் - செவ்வையாய் நல்லனவாய், கண்மையும் - தாக்ஷண்ணியமும், பொருந்தி — உளதாகி, கருணை — இரக்கத்தினலே, படர் — வருகிற, வண்மை — உதாரகுணமும், ஜனகரில் — ஜனகன்குலத்திலே, மாண்டவா — அழிந்துபோனபடி, என்கொல் — யாதுகாரணம்—எ-று. உன்னிடத்திலே நற்குணங்களெல்லாமிருந்தும் தாக்ஷண்ணியமும் ஈகையுமில்லையென்கிருன் என்ருல்எனக்கு உயிர்ப்பலி தரவேணுமென்கை, பலி பிச்சை. (ரு௩.)

வீட்டுங்காலத்தலறியமெய்க்குரல்
கேட்டுங்காண்டற்கிருத்திசொல்கிள்ளைநீ
நாட்டுங்காணெடுநல்லறத்தின்பயன்
ஊட்டுங்காலத்திகழ்வதுறுங்கொலோ.

இ-ள். வீட்டுங்காலத்து — ராமனைநான்கொல்லும்போது, அலறிய — கத்திக்கொண்டுவிழுந்த, மெய்க்குரல் — மெய்யானசொல்லை, கேட்டும் — நீகேள்விகொண்டும், காண்டற்கு — இன்னம்ராமனைப்பார்க்கவோ, கிள்ளைநீ — ஓ கிளிபோல்வசனிப்பவளே, இருத்திகொல் — எண்ணிஇருக்கிருய், நாட்டுங்கால் — சொல்லும்போது, நெடு-நெடுங்காலமுமுளதாகுகிற, நல் அறத்தின்பயன் — நல்ல புண்ணியபலத்தை, ஊட்டுங்காலத்து — நீஅனுபவிக்கக்கிடைத்தபோது, இகழ்வது — அதைவேண்டாவென்கிறது, உறுங்கொல் — உனக்குத்தகுமா, என்னைநீ அனுபவிக்கையேஉனக்கு நல்லபுண்ணியபல மென்கிருன்—எ-று. மாரீசன் ராமன்குரலாக ஆலட்சுமணு என்றதுமெய்க்குரல். (ரு௪)

தக்கதென்னுயிர்வீடெனிற்ருழ்கிலா
தொக்கசெல்வமுலையுமொருத்திநீ
புக்குயர்ந்ததெனும்புகழ்போக்கிவே
றுக்கதென்னுமுறுபழிகோடியோ.

இ-ள். என்உயிர்வீடு — உன்ஞலே நான் என் உயிரைவிடுகையே, தக்கதெனில் — சரியென்ருல், தாழ்கிலாது — அரைநிமிடமேனுந் தாமதியாமல், ஒக்க — என்கூடவே, செல்வம் — இவ்வளவு ஐசுவரியத்தையும், உலையும் - கெடுத்துக்கொள்ளுகிற கெடுதலாகிற, ஒருத்திநீ — ஒருபெண்ணுயிருக்கிருய்நீ, புக்கு — நீவந்துகூடி, உயர்ந்தது — ராவணன்செல்வம் மேன்மேலாயிற்று, எனும் — என்பதான, புகழ் — கியாதியை, போக்கி — விட்டுநீக்கி, வேறு — சீதைவந்து வேறுபாடாய், உக்கது — ஐசுவரியம் அழிந்தது, என்னும் — என்பதான, உறுபழி — மிக்கபழிப்பை, கோடியோ — கொள்ளவோநீவந்தனை—எ-று. (ரு௫)

தேவர்தேவியர்சேவடிகைதொழும்
தாவின்மூவுலகின்றனிநாயகம்
மேவுகின்றதுநுன்கண்விலக்கினை
யாவரேழையர்நின்னினிலங்கிழாய்.

இ-ள். தேவர் — தேவர்களும், தேவியர் — அத்தெய்வப்பெண்களும், சேவடி-உனதுசிவந்தபாதங்களைக்கண்டு,கைதொழும் — கைகூப்பும்படியான, தாஇல் — கெடுதலில்லாமல், மூன்றுலகுக்கும் — திரிலோகத்துக்கும், தனி — ஒப்பில்லாத, நாயகம்- அதிகாரமுடைமை, நுன்கண் — உன்இடத்தே, மேவுகின்றது — வருகிறதாவதை, விலக்கினை — வேண்டாவென்கிருய், இலங்குஇழாய் - விளங்கும் ஆபரணங்களணிந்தவளே, நின்னில் — உன்போல், ஏழையர் — பெண்கள், யாவர் — யாருண்டு—எ-று.(ரு௬)

குடிமைமூன்றுலகுஞ்செயுங்கொற்றத்தென்
அடிமைகோடியருளுதியாலெனு
முடியின்மீதுமுகிழ்த்துயர்கையினன்
படியின்மேல்விழுந்தான்பழிபார்க்கலான்.

இ-ள். மூன்றுலகும் - திரிலோகமும், குடிமைசெயும் - குடித்தனஞ்செய்வதாய் அடக்கின, கொற்றத்து - வெற்றியையுடைய, என் - என்னை, அடிமைகோடி- உனக்கு அடிமையாகக்கொள்ளு என் அடிமைப்பணியைக்கொள்ளு, அருளுதி - தயவுபண்ணு, ஆல் எனு - மெய்யாகவென்றுசொல்லி, முடியின்மீது - தலைமேல், முகிழ்த்து - குவித்து, உயர் - உயர்ந்த, கையினன் - கையையுடையவனாய், பழிபார்க்கலான் - பழிப்பையும் எண்ணுமல், படியின்மேல் - மண்மேலே, விழுந்தான் - நீண்டு விழுந்துசேவித்தான்—எ-று. (ருஎ)

வேறு.

காய்ந்தனசலாகையன்னவுரைவந்துகதுவாமுன்னம்
தீய்ந்தனசெவிகளுள்ளந்திரிந்ததுசிவந்தசோரி
பாய்ந்தனகண்களொன்றும்பரிந்திலளுயிர்க்கும்பெண்மைக்
கேய்ந்தனவல்லாவெய்யமாற்றங்களினையசொன்னாள்.

இ-ள். காய்ந்தன - நெருப்பிலேவெந்த, சலாகை - இரும்புக்கம்பியை, அன்ன - ஒப்பான, உரைவந்து - சொல்லானதுவந்து, கதுவாமுன்னம் - நுழையுமுன்னே, செவிகள் - காதுகள், தீந்தன - கருகுதலாயின, உள்ளம் - மனசு, திரிந்தது- வேறுபாடாயிற்று, கண்கள் - நேத்திரங்களிலே, சிவந்தசோரி - சிவந்தரத்தம், பாய்ந்தன - ஒழுகலாயின, ஒன்றும் - ஒருவிதத்தாலும், பரிந்திலள் - துக்கப்படாதவளாய், உயிர்க்கும் - நெடுமூச்செறிகிறவள், பெண்மை - தனதுபெண்தன்மைக்கு, ஏய்ந்தன - பொருந்தியன, அல்லா - அல்லாத, வெய்யமாற்றங்கள் - கொடுஞ்சொற்கள், இனைய - இப்படியாக, சொன்னாள் - சொல்லலானாள்—எ-று. அவள்பேசுகிறதுபெண்கள்போலன்று ஆண்கள்போற் பேசுகிறாளென்க. தன் உயிர்க்குப் பரிந்திலளெனவுமாம். (ருஅ)

மல்லடுதிரடோள்வஞ்சன்மனம்பிறிதாகும்வண்ணம்
கல்லொடுந்தொடர்ந்தநெஞ்சகற்பின்மேற்கண்டதுண்டோ
இல்லொடுந்தொடர்ந்தமாதர்க்கேய்வனவல்லவெய்ய
சொல்லிதுதெரியக்கேட்டிதும்பெனக்கனன்றுசொன்னாள்.

இ-ள். மல் - மல்யுத்தத்தினாலும், அடு - கொல்லவல்ல, திரள்தோள் - திரண்டதோள்களையுடைய, வஞ்சன் - வஞ்சகனான ராவணன், மனம் - மனசு, பிறிதாகும்வண்ணம் - வேறுபடும்படி, கல்லொடும் - கல்லுடனே, தொடர்ந்த - ஒப்பதான, நெஞ்சம் - மனதாகிறதற்கு, கற்பின்மேல் - கற்பிலுஞ்சிறந்ததாக, கண்டது - பார்க்கத்தக்கபொருளும், உண்டோ - உளதாமோ, இல்லொடும் - இல்லறத்துடனே, தொடர்ந்த - கூடியிருக்கிற, மாதர்க்கு - பெண்களுக்கு, ஏய்வன - தகுவனவாயவை, அல்ல - அல்லவேயான, வெய்யசொல் - கொடுஞ்சொல், இது - இப்போது நீசொன்னது, தெரிய - இனியாவதுநீதெரிவதாக, கேட்டி - நான்சொல்வதைக்கேள், தும்பு - ஓதிரணமே, என - என்று, கனன்று - கோபங்கொண்டு, சொன்னாள் - சொல்வதானாள்—எ-று. (ருகூ)

மேருவையுருவல்வேண்டின்விண்பிளந்தேகல்வேண்டின்
ஈரேழுபுவனம்யாவுமுற்றுவித்திடுதல்வேண்டின்
ஆரியன்பகழிவல்லதறிந்திருந்தறிவிலாதாய்
சீரியவல்லசொல்லித்தலைபத்துஞ்சிந்துவாயோ.

இ-ள். மேருவை — மேருமலையை, உருவ — பொத்துக்கொண்டு செல்ல, வேண்டில் — வேண்டினாலும், விண் — ஆகாயத்தை, பிளந்து — கிழித்துக்கொண்டு, ஏகல் வேண்டில் — செல்லல்வேண்டினாலும், ஏரேழுபுவனம்யாவும் — இந்தப்பதினாலுலோகங்களெல்லாம், முற்றுவித்திடுதல்வேண்டில் — அழியச்செய்யவேண்டினாலும், ஆரியன் — ஸ்ரீராமனுடைய, பகழி — பாணமானது, வல்லது — வலிமையுள்ளதே அதை, அறிந்திருந்து — நீயேதெரிந்துகொண்டும், அறிவிலாதாய் — ஒபுத்திகெட்டவனே, சீரிய அல்ல — நல்லதல்லாதவைகளை, சொல்லி — சொல்லுவாயாகி, தலைபத்தும் — உன்பத்துத்தலைகளும், சிந்துவாயோ — சிந்தக்கடவையோ அற்றுப்போகுவையோ—எ-று.

அஞ்சினையாதலானன்றாரியனற்றநோக்கி
வஞ்சனைமானென்றேவிமாயையான்மறைந்துவந்தாய்
உய்ஞ்சனைபோதியாகின்விடுதியுன்குலத்துக்கெல்லாம்
நஞ்சினையெதிர்ந்தபோதுநோக்குமேநினதுகாட்டம்.

இ-ள். அஞ்சினை — நீபயந்தாய், ஆதலால் — ஆனபடியினாலே, அன்று — அப்போது, ஆரியன் — ஸ்ரீராமனது, அற்றம் — இல்லாதகாலம், நோக்கி — பார்த்து, வஞ்சனை — வஞ்சனையுள்ள, மானென்று - ஒருமானை, ஏவி - முன்னேவிட்டு, மாயையால் - வஞ்சிக்குங்கருத்துடனே, மறைந்துவந்தாய் — மறைந்துவரலானாய், உய்ஞ்சனைபோதியாகில் — இனிப்பிழைத்துப் போகமனதுண்டானால், விடுதி — என்னைவிட்டுவிடு, உன்குலத்துக்கெல்லாம் — உன்வமிசத்துக்கெல்லாம், நஞ்சினை - விடம்போலிருக்கிற என்னை, எதிர்ந்தபோது — கண்டால், நினதுகாட்டம் — உன்கண்கள், நோக்குமே — வேண்டிப்பார்க்கத்தகுமா—எ-று. (சக)

பத்துளதலையுந்தோளும்பலபலபகழிதூவி
வித்தகவில்லினாற்குத்திருவிளையாடற்கேற்ற
சித்திரவிலக்கமாகுமல்லதுசெருவிலேற்கும்
சத்தியைபோலின்மேனாள்சடாயுவாற்றரையின்வீழ்ந்தாய்.

இ-ள். பத்துள — பத்தாயிருக்கிற, தலையும் — தலைகளும், தோளும் — தோள்களும், பலபல — அநேகங்களான, பகழிதூவி — அம்புகளைவிட்டு, வித்தகவில்லினாற்கு- தனுர்வேதந்தெரிந்த ஸ்ரீராமனுக்கு, திருவிளையாடற்குஏற்ற — திருவிளையாடல்செய்யத்தக்க, சித்திரம் — வேடிக்கையான, இலக்கமாகும் — லக்ஷியப்பொருளானவை, அல்லது — அல்லாமல், செருவில் — யுத்தத்திலேவந்து, ஏற்கும் — எதிர்ப்பதான, சத்தியை - நீபலமுள்ளவன், போலும் — போல்வையோ, மேனாள் — என்னைநீகொண்டுவரும்போது, சடாயுவால் — ஒருசடாயுஅடித்ததனாலே, தரையில் வீழ்ந்தாய் — மூர்ச்சையாய் மண்மேல்விழுந்த நீ செருவிலேற்குஞ் சத்தியைபோல்வையோ, போலாய் என்கிறாள்—எ-று. (சஉ)

தோற்றனைபறவைக்கன்றுதுள்ளுநீர்வெள்ளஞ்சென்னி
ஏற்றவன்வாளால்வென்றாயன்றேனினிறத்தியன்றே

நோற்றநோன்புடையவாழ்நாள்வரமிவை நுனித்தவெல்லாம்
கூற்றினுக்கன்றேவீரன்சரத்திற்குங்குறித்ததுண்டோ.

இ-ள். பறவைக்கு – அந்தப்பக்ஷிக்கு, அன்று – அக்காலத்திலேசரியாகாமல், தோற்றனை – தோற்றுப்போனாய், துள்ளும் – திவலைதெறிப்பதான, நீர்வெள்ளம் – கங்காப்பிரவாகத்தை, சென்னியேற்றவன் – தலைமேற்கொண்டசிவனுடைய, வாளால் – கத்தியினாலே, வென்றாய் – செயங்கொண்டாய், அன்றெனில் – அந்தக்கத்தியல்லதானால், இறத்திஅன்றே – சாவாயல்லவோ, நோற்றநோன்பு – நீமுன்புபசிதாகங்களைப் பொறுத்துப்பண்ணின தவப்பலனாலே, உடையவாழ்நாள்வரம்-உடையஆயிசும்வேண்டியவரங்களும், இவை – ஆகிய இவைகளுடனே, நுனித்தஎல்லாம் – நீ பெற்றிருக்கிறயாவும், கூற்றினுக்குஅன்றே – யமனுக்கல்லவோநியமித்தது, வீரன் – ஸ்ரீராமனுடைய, சரத்திற்கும் – அம்புக்கும், குறித்ததுண்டோ - நியமித்ததுண்டோ, உலகத்தில் – எல்லாரும் யமன்வாய் விழுவாரானல் நீவீரன் அம்பின்வாய் விழுகிறவனானயென்கிறள்—எ-று. (சங)

பெற்றுடைவாளுநாளும்பிறந்துடையுரனும்பின்னும்
மற்றுடையெவையுந்தந்தமலரயன்முதலோர்வார்த்தை
விற்றொடையிராமன்கோத்துவிடுதலும்விலக்குண்டெல்லாம்
இற்றிடைந்திறுதன்மெய்யேவிளக்கின்முன்னிருளுண்டாமோ.

இ-ள். பெற்றுடை – நீபெற்றிருக்கிற, வாளும் – கத்தியும், நாளும்-ஆயிசும், பிறந்துடை – நீபிறந்துகொண்டுள்ள, உரனும் – பலமும், பின்னும் – பின்பும், மற்றுடை – இன்னமுமுள்ள, எவையும் – எல்லாம், தந்த – கொடுத்த, மலர் – பூமேலிருக்கிற, அயன் – பிரமன், முதலோர் – முதலானவர்கள், வார்த்தை – வரபலமெல்லாம், வில் – வில்லினின்றும், தொடை – தொடுப்பதை, இராமன் – ஸ்ரீராமனானவர், கோத்துவிடுதலும் – பூட்டிவிடுமளவிலே, விலக்குண்டு – நீங்குதலாய், எல்லாம் – எல்லாப்பொருள்களும், இற்று – அழிந்து, இடைந்து இறுதல் – கெட்டுமுடிகிறது, மெய்யே – சத்தியமே, விளக்கின்முன்-விளக்குக்குமுன்னே, இருள் உண்டாமோ-இருள் நிற்குமோநில்லா—எ-று. (சச)

குன்றுநீயெடுத்தநாடன்சேவடிக்கொழுந்தாலுன்னை
வென்றவன்புரங்கள்வேவத்தனிச்சரந்துரந்தமேரு
என்றுணைக்கணவனாற்றற்குரனிலாதிற்றுவீழ்ந்த
அன்றெழுந்துயர்ந்தவோசைகேட்டிலைபோலுமம்மா.

இ-ள். குன்றுநீ – நீமலையை, எடுத்தநாள் – தூக்கினபோது, தன் – தமது, சேவடிக்கொழுந்தால் – சிவந்தபாதப்பெருவிரலாலே, உன்னைவென்றவன்-உன்னைச்செயித்தவன், புரங்கள்வேவ – திரிபுரங்களெரிய, தனிச்சரம் – ஒப்பிலாதபாணத்தை, துரந்த – விட்ட, மேரு – மேருமலையானவில், என்துணை - எனதுசகாயரான, கணவன் – நாயகருடைய, ஆற்றற்கு – பலத்துக்கு, உரன்இலாது – தான்பலம்போதாமல், இற்றுவீழ்ந்தது – ஒடிந்துவிழுந்தது, அன்று – அப்போது, எழுந்து – உண்டாகி உயர்ந்த-உயர்தலான, ஓசை – சத்தமானதை, கேட்டிலைபோலும் – நீ கேட்கஇல்லைபோலிருக்கிறது, அம்மா – இதென்ன ஆச்சரியம்—எ-று. (சரு)

வேறு.

மலையெடுத்தெண்டிசைகாக்குமாக்களை
நிலைகெடுத்தேனெனுமாற்றநேருநீ

சிலையெடுத்திளையவனிற்கச்சேர்ந்திலை
தலையெடுத்தின்னமுமகளிற்றாழ்தியோ.

இ-ள். மலையெடுத்து - வெள்ளிமலையைப்பேர்த்து, எண்திசை - எட்டுத் திக்கையும், காக்கும் - காவல்செய்கிற, மாக்களை - பெருமையுள்ளவர்களை - நிலை கெடுத்தேன் - நிலைகெடச்செய்தேன், எனுமாற்றம் - என்கிற வார்த்தையை, நேரு நீ - கொண்டுள்ளநீ, சிலையெடுத்து - வில்லேந்திக்கொண்டு, இளையவன்நிற்க-இளைய பெருமாள் நிற்கும்போது, சேர்ந்திலை - வரப்பயந்தாய் பயந்தநீ, தலையெடுத்து-தலை களைத்தூக்கிக்கொண்டு, இன்னமும் - இன்னமும் சாமர்த்தியமுள்ளவன்போல், மகளில் - ஒருபெண்காலிலே, தாழ்தியோ - குனியலாமோஎன்றால், நீசாமர்த்தியமு ள்ளவனானால் ராமனென ஆண்காலினருகேபோய்க்குனி என்கிறாள் பிராட்டி-எ-று.

ஏழைநின்னொளித்துறையின்னதாமென
வாழியெங்கோமகனறியவந்தநாள்
ஆழியுமிலங்கையுமழியத்தாழுமோ
ஊழியுந்தீயுமுன்னுயிரொடோயுமோ.

இ-ள். ஏழை - அடேஅறிவில்லாதவனே, நின்-உன்னுடைய, ஒளித்துறை-மறைவிடமான இவ்வூர், இன்னது - இவ்விடத்துள்ளது, ஆமென - ஆமென்று, வாழி - எல்லாரும்வாழ்த்தப்பெற்ற, எங்கோமகன் - எனதுநாயகர், அறியவந்தநாள்-தெரிந்துகொள்ளலானபோது, ஆழியும் - இந்தக்கடலும், இலங்கையும் - இந்தஊரும், அழிய - அழிந்தாலும், தாழுமோ - அடங்குவாரோ, ஊழியும் - இனிவருகிற ஊழிகாலமும், தீயும் - வெந்துபோம், உன்உயிரோடு - உன் உயிருடனே, ஊழியுந்தீயும் ஓயுமோ ஓய்ந்திருப்பரோ - ஒருவருக்கும் அடங்கார், ஆகையாலிப்போதேஎன்னைவிட்டு விடு என்கிறதாம்—எ-று. (சஎ)

வெஞ்சினவரைக்கரைவிளித்துவீயுமோ
வஞ்சனைநீசெயவள்ளல்சீற்றத்தால்
எஞ்சலிலுலகெலாமெஞ்சுமெஞ்சுமென்
றஞ்சுகின்றேனிதற்கறனுஞ்சான்றரோ.

இ-ள். வெஞ்சினம் - வெப்பமான கோபமுள்ள, அரக்கரை - ராக்ஷதர்களை, விளித்து - கொன்று, வீயுமோ - அதுடனே அடங்குமோ, வஞ்சனைநீசெய - நீவஞ்சனைசெய்து என்னைச்சிறையிலேவைக்க, வள்ளல் - அதனாலே ஸ்ரீராமனுக்குண்டாகுகிற, சீற்றத்தால் - கோபத்தினாலே, எஞ்சல்இல் - யாதொருகுறைவுமில்லாத, உலகெலாம் - உலகங்கள்முழுதும், எஞ்சும் - அழிந்துபோம், எஞ்சுமென்று - அழிந்துபோமென்று, அஞ்சுகின்றேன்-நான்பயப்படுகிறேன், இதற்கு-இப்படிநான்பயப்படுகிறதற்கு, அறமும் - தருமமும் தேவர்களுமே, சான்று - சாக்ஷியாம் அரோ அசை எ-று. (சஅ)

அங்கண்மாஞாலமும்விசும்புமஞ்சவாழ்
வெங்கணாய்புன்றொழில்விலக்கிமேற்கொளாய்
செங்கண்மானான்முகன்சிவனென்றேகொலோ
எங்கணாயகனையுநினைந்ததேழைநீ.

இ-ள். அங்கண் - அழகிய இடத்தையுடைய, மாஞாலமும் - பெரியவுலகமும், விசும்பும் - ஆகாயமும், அஞ்ச - பயப்படும்படி, வாழ்-வாழுகின்ற, வெங்கணாய்-

கொடுமையுள்ளவனே, புன்தொழில் - உனதுகெட்டநடக்கையை, விலக்கி - விட்டு, மேற்கொளாய் - மேம்பாட்டைக் கொள்கிலை, செங்கண் - சிவந்தகண்களையுடைய, மால் - திருமாலும், நான்முகன் - சதுர்முகப்பிரமனும், சிவன் - சிவனும், என்றேகொல் - என்பதாகவோ, எங்கள்நாயகனையும் - எங்கள்ஆண்டவனையும், ஏழைநீ - அறிவில்லாதநீ, நினைந்தது - எண்ணினது, அப்படி எண்ணக்கூடாது—எ-று. (௪௯)

மானுயரிவரெனமனக்கொண்டாயெனிற்
கானுயர்வரைநிகர்காத்தவீரியன்
தானொருமனிதனாற்றளர்ந்துளானெனில்
தேனுயர்தெரியலான்றன்மைதேர்தியால்.

இ-ள். மானுயர் - மனிதர், இவரென - இவ்விருவருமென்று, மனக்கொண்டாயெனில் - நீ உன்மனத்திலே எண்ணுவையானால், கான் - விருக்ஷசாதிகள், உயர் - நீண்டிருக்கிற, வரைநிகர் - மலைபோன்ற, காத்தவீரியன்றான் - காத்தவீரியனென்பவன், ஒருமனிதனால் - ஒருபரசிராமனாலே, தளர்ந்துளான் - சோர்வையடைந்தான், எனில் - என்றுசொல்வதானால், தேன் - வண்டுகள், உயர் - மிகுத்திருப்பதான, தெரியலான் - மாலையணிந்த ஸ்ரீராமனது, தன்மை - குணத்தை, தேர்தி- அந்தப்பரசிராமனையும் வென்றவரென்று தெரிவாயாக—எ-று. விருக்ஷசாதிகள்போற் கைகளும் மலைபோற்காத்த வீரியனுமாகக்கொள்க. (௫௦)

இருவரென்றிகழ்ந்தனையென்னின்யாண்டெல்லை
ஒருவனன்றேயுலகழிக்குமூழியான்
செருவருங்காலையென்மெய்ம்மைதேர்தியால்
பொருவருந்திருவிழந்தநாயம்பொன்றுவாய்.

இ-ள். இருவரென்று - படைத்துணையில்லாதவர்கள் அவ்விருவருமென்று, இகழ்ந்தனையென்னில் - அலட்சியஞ்செய்வாயானால், யாண்டெல்லை - யுகமுடிவிலே வருஷஅளவிலே, உலகு அழிக்கும் - உலகத்தையெல்லாங் கெடுப்பவனாக, ஊழியான் - ஊழிகாலத்துள்ளசிவன், ஒருவன் அன்றே - ஒருவனே அல்லவோ, செருவருங்காலை - இனி யுத்தம்வரும்போது, என் - என்னுடைய, மெய்ம்மை - உண்மையானசொல்லை, தேர்தி - அறிவாயாக, பொருஅரும் - ஒப்பரிதான, திரு - உன்செல்வமெல்லாம், இழந்து - நஷ்டியாய், அநாயம் - அநியாயமாய், பொன்றுவாய் - சாகிறவனே என்மெய்மைதேர்தி—எ-று. (௫௧)

பொற்கணான்றம்பியென்றினையபோர்த்தொழில்
விற்கொணாண்பொருவுதோளவுணர்வேறுளார்
நற்கணார்நல்லறந்துறந்தநாளினும்
இற்கணாலிறந்திலரிறந்துநீங்கினார்.

இ-ள். பொற்கணான் - இரணியாக்ஷசன், தம்பி - இரணியகசிபன், என்று- என்பதாய், இனைய - இப்படிப்பட்ட, போர்த்தொழில் - போர்வல்லமையுள்ள, விற்கொள்ள - வில்லிலேகொள்வதான, நாண்பொருவு - நாணித்தழும்பமைந்த, தோள்- புஜங்களையுடைய, அவுணர் - அசுரரும், வேறுளார் - இன்னம் வேறானவரும், நற்கண் - நன்மையின்கண்ணே, ஆர் - பொருந்துதலான, நல்லறம் - நல்லதருமத்தை, துறந்தநாளினும் - விட்டுத் தீமைகள்செய்தபோதும், இற்கண் ஆல் - ஒருவன்மனைவி விஷயத்தினாலே, இறந்திலர் - உன்போல் இறந்துபடுதலில்லையாயினார்கள், இறந்து

நீங்கினர் — அவர்கள் காலமுங்கழிந்துபோயினர்களே அல்லது உன்போல் என்று நிலைபெறலாமென்றெண்ணினரில்லை—எ-று. (ருஉ)

வேறு.

பூவிலோகனுதியாகப்புலன்கள்போநெறியிற்போதாத்
தேவரோவவுணர்தாமோநிலைநின்றுவினையிற்றீர்ந்தார்
ஏவலெவ்வுலகுஞ்செய்யச்செல்வநிற்கிசைந்தவென்றால்
பாவமோமுன்னீசெய்ததருமமோதெரியப்பாராய்.

இ-ள். பூ இலோன் — பூமேலிருக்கும்பிரமன் பூவேவீடாகவுடையவன், ஆதியாக — முதலாக, புலன்கள்போம் - விஷயங்களிலேபோகிற, நெறியில் — வழியிலே, போதா — செல்லாத, தேவரோ - தேவர்களோ, அவுணர்தாமோ - அசுரர்களோ, நிலைநின்று — நீதிநிலையிலேநின்று, வினையில் — வினையினின்றும், தீர்ந்தார் — நீங்கினவர்கள்யார் அப்படிவினையிற்றீர்ந்த எல்லாரும், ஏவல் - உனக்கு ஊழியங்கள், எவ்வுலகும் — எந்தவுலகங்களிலும், செய்ய - செய்யும்படியாய், செல்வம் - பாக்கியம், நிற்கு- உனக்கு, இயைந்தஎன்றால் — கிடைத்ததானல், பாவமோ — கிடைத்ததுபாவத்தினலா, முன் நீ - முன்னே நீ, செய்த - பண்ணின, தருமமோ — புண்ணியத்தினலா, தெரிய — இப்போதாவ துனக்குத்தெரியும்படி, பாராய் — யோசிக்கக்கடவை—எ- று.

இப்பெருஞ்செல்வநின்கணீய்ந்தபேரீசன்யாண்டும்
அப்பெருஞ்செல்வந்துய்ப்பானின்றுமாதவத்தினன்றே
ஒப்பருந்திருவுநீங்கியுறவொடுமுலக்கவுன்னித்
தப்புதியறத்தையேழாய்தருமத்தைக்காமியாதே.

இ-ள். இப்பெருஞ்செல்வம் - இந்தமகாஐசுவரியத்தை, நின்கண் — உன்னிடத்தில், ஈந்த - கொடுத்தது, பேர் - பெருமையையுடைய, ஈசன் - தெய்வமானது, யாண்டும் — எவ்விடத்திலும், இன்றும் — இப்போதும், அப்பெருஞ்செல்வம் - அப்படிக்கொடுபட்டதான மகதைசுவரியத்தை, துய்ப்பான் - நீஅனுபவிக்கிறதற்கு, மாதவத்தின் அன்றே — உனதுபெரியதவத்தினலேயல்லவோ, ஒப்புஅரும்-அப்படிப்பட்டஒப்பரிதான, திருவும் — ஐசுவரியமும், நீங்கி — போய், உறவொடும் — உன்சுற்றத்தாருடனே, உலக்க — அழிந்துபோக, உன்னி — எண்ணிதெரிந்து, அறத்தைத்தப்புதி — உனக்குள்ளதருமத்தைக்கெடுக்கிறுய் விடுகிறுய், தருமத்தை — பிறர்க்குரிய தருமபத்தினியை, ஏழாய் — புத்தியில்லாதவனே, காமியாதே — ஆசைகொள்ளாதே ஆசைப்படாதே என்னைவிட்டுவிடு—எ-று.இப்பெருஞ்செல்வநின் கணிந்ததோரீசன்யாண்டுமெப்பெருஞ்செல்வந் துய்ப்பானினதுமாதவத்தினன்றே எனப்பாடங்கொள்க.)

மறந்திறம்பாததோலாவலியினரெனினுமாண்டார்
அறந்திறம்பினருமக்கட்கருடிறம்பினருமன்றே
பிறந்திறந்துழலும்பாசப்பிணக்குடைப்பிணியிற்றீர்ந்தார்
துறந்தரும்பகைகண்மூன்றுந்துடைத்தவர்பிறர்யார்சொல்லாய்.

இ-ள். மறம்திறம்பாத — வீரத்தில்வழுவாத, தோலா — யார்க்குந்தோற்காத, வலியினரெனினும் — பலமுள்ளவர்களானலும், மாண்டார் — பெரியோர்கள்சொன்ன, அறம்திறம்பினரும் — தருமங்களில்வழுவினவர்களும், மக்கட்கு — ஜீவர்கள்விஷயத்தில், அருள்திறம்பினரும் — இரக்கமில்லாதவர்களும், அன்றே — பிணியிற்றீர்ந்தாரல்லர், பிறந்துஇறந்து — உற்பவித்தழிந்து, உழலும் — அலைவதான, பாசம் - ஆசாபாசமாகிய, பிணக்குஉடை — விரோதமுள்ள, பிணியில் — நோயினின்றும், தீர்ந்தார் நீ-

ங்கினவர்கள் எழு, துறந்து – இருவகைப்பற்றையும்விட்டு, அரும் – போக்குதற்கரிதான, பகைகள் – விரோதங்களாகிய, மூன்றும் – காமவெகுளிமயக்கங்களை, துடைத்தவர் – போக்கினவர்களேயாவார்பய, பிறர்யார் – இவர்களையல்லது வேறேயாவர் யாவரிருக்கிறார்கள், சொல்லாய் – நீயேசொல்லிக்காண்—எ-று. வலியினரெனினுமாண்டாரறந்திறம்பாமையுமக்கட்கருடிறம்பாமையும் வேண்டுமென்றுகொள்க. (ருரு)

தென்றமிழுரைத்தோன்முன்னாத்தீதுதீர்முனிவர்யாரும்
புன்றொழிலரக்கர்க்காற்றேநோற்கிலம்புகுந்தபோதே
கொன்றருணின்னாலன்னார்குறைவதுசரதங்கோவே
என்றனர்யானேகேட்டேனீயிதற்கியைவசெய்தாய்.

இ-ள். தென்தமிழ் – அழகிதான தமிழ்ப்பாஷையை, உரைத்தோன்-சொன்ன அகஸ்தியர், முன்னா – முதலாக, தீதுதீர் – தீமையினீங்கின, முனிவர் – இருஷிகள், யாரும் – எல்லாரும், புன்தொழில் – ஈனச்செய்கைகளையுடைய, அரக்கர்க்கு-ராக்ஷதர்களுக்கு, ஆற்றேம் – நேர்நிற்கமாட்டோம், நோற்கிலம் – இனித்தவஞ்செய்யமாட்டோம், புகுந்தபோதே – நீரவதரித்துவந்ததனாலே, கொன்று அருள் – அவ்வரக்கரைக்கொன்று எங்களுக்கருள்செய்யவேணும், நின்னால் – ஸ்ரீராமா உம்மாலே, அன்னார் – அந்தராக்ஷதர்கள், குறைவது – அழிந்துபோகிறது, சரதம் – சத்தியம், கோவே என்றனர் – ஸ்ரீராமா என்றுசொன்னார்கள், யானேகேட்டேன் – அப்படி அவர்கள்சொல்லக்கேட்டவள்நானே, நீ இதற்கு – நீ அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு, இயைவசெய்தாய் – பொருந்தச்செய்தாய்—எ-று. (ருசு)

உன்னையுங்கேட்டுமற்றுன்னாற்றமுமுடையநாளும்
பின்னையிவ்வரக்கர்சேனைப்பெருமையுமுனிவர்பேணிச்
சொன்னபினுங்கைமூக்குமும்பியர்தோளுந்தாளும்
சின்னபின்னங்கள்செய்தவதனைநீசிந்தியாயோ.

இ-ள். உன்னையும் – இராவணனென்கிற உன்னையும், கேட்டு – கேள்விகொண்டு, மற்று உன் – இன்னமுமுன்னுடைய, ஊற்றமும் – வரபலமும், உடையநாளும் – நீபெற்றிருக்கிறவாழ்நாளும், பின்னை – பின்னையும், இவ்வரக்கர் – இந்தராக்ஷதர்களுடைய, சேனைப்பெருமையும் – சேனைப்பெருக்கத்தையும், முனிவர் – இருஷிகள், பேணி – புகழ்ந்து, சொன்னபின் – சொன்னபின்பு, உங்கை – உன்தங்கையினுடைய, மூக்கும் – மூக்கையும், உம்பியர் – உன் தம்பிமார்களான கரதூஷணாதிகள், தோளும் தாளும் – தோள்களையுங்கால்களையும், சின்னபின்னங்கள்செய்த – துண்டுதுண்டாடின, அதனை – அந்த நிர்ப்பயத்தையாவது, நீ சிந்தியாயோ – நீ எண்ணமாட்டாயோ—எ-று. (ருஎ)

ஆயிரந்தடக்கையானின்னைநான்குகரமும்பற்றி
வாய்வழிகுருதிசோரக்குத்திவான்சிறையில்வைத்த
தூயவன்வயிரத்தோள்கடுணித்தவன்றொலைந்தமாற்றம்
நீயறிந்திலையோவேகுநெறியறிந்திலாதநீசா.

இ-ள். ஆயிரந்தடக்கையால் – ஆயிரம்நீண்டகைகளாலே, நின் – உன்னுடைய, ஐநான்குகரமும் – இருபதுகைகளையும், பற்றி – பிடித்து, வாய்வழி – உன்வாயின்வழியே, குருதிசோர – ரத்தமொழுக, குத்தி – உன்னை அடித்து, வான்சிறையில்-பெரியகாவலுக்குள்ளே, வைத்த – இடுவித்த, தூயவன் – நல்லவனானகாத்தவீரியனு

டைய, வயிரத்தோள்கள் – பலமுள்ளதோள்களை, துணித்தவன் – சிதைத்தபரசிராமனும், தொலைந்தமாற்றம் – தோற்பானசமாச்சாரம், நீ அறிந்திலையோ – நீ அறியாயோ, ஏகுநெறி – செல்லுமார்க்கம், அறிந்திலாத – தெரியாத, நீசா – சண்டாளா– எ-று. (௫அ)

கடிக்கும்வல்லரவுங்கேட்குமந்திரங்களிக்கின்றோயை
அடுக்குமீதடாதென்றுன்றவேதுவோடறிவுகாட்டி
இடிக்குநரில்லையுள்ளாரெண்ணியதெண்ணியுன்னை
முடிக்குநரென்றபோதுமுடிவன்றிமுடிவதுண்டோ.

இ-ள். கடிக்கும் – கடிப்பதான, வல் அரவும் – வலிய பாம்புங்கூட, மந்திரம்- ஒருவர்சொல்லுந்தடையை, கேட்கும் - கேட்டுநிற்கும், களிக்கின்றோயை – ஒன்றுந்தெரியாமல்மதத்திருக்கிறவுனக்கு, அடுக்கும் இது – இக்காரியஞ் செய்யத்தகும், அடாதது இது – இதுசெய்யத்தகாதது, என்று ஆன்ற – என்பதாய் அகன்ற, ஏதுவோடு – காரணத்துடனே, அறிவுகாட்டி – ஞானத்தையுஞ்சொல்லி, இடிக்குநர் – தடுத்துப்பேசுகிறவர்கள், இல்லை – ஒருவருமில்லை, உள்ளார் – உன்னிடத்திருக்கிறவர்கள், எண்ணியது – நீநினைத்ததையே, எண்ணி உன்னை – தாமும்யோசித்து, முடிக்குநர் – முடிவுசெய்கிறார்கள், என்றபோது – என்றுசொல்லலானபோது, முடிவு அன்றி – இனிமுடிவாகிறதே அல்லாமல், முடிவதுண்டோ – வேறொன்றுமுடிவுபெறுமோ—எ-று. (௫௯)

வேறு.

என்றறத்துறைகேட்டலுமிருபதுநயனம்
மின்றிறப்பனவொத்தனவெயில்விடுபகுவாய்
குன்றிறத்தெழித்துரப்பினன்குறிப்பதென்காமன்
தன்றிறத்தையுங்கடந்ததுசீற்றத்தின்றகைமை.

இ-ள். என்று – என்பதாய், அறத்துறை – தருமமார்க்கங்கள்சொல்ல, கேட்டலும் – கேட்டஅளவிலே, இருபதுநயனம் – இருபதுகண்களும், மின் – மேகத்திலிருந்துமின்னல், திறப்பன – தோன்றுவனவற்றை, ஒத்தன – ஒப்பாயின, வெயில்விடு – ஒளியைவீசுகின்ற, பகுவாய் – பிளந்தவாய்களாலே, குன்று – மலைகளும், இறதூள்தூளாக, தெழித்து – அதட்டி, உரப்பினன் – குமுறினான், குறிப்பது – அவன் நினைப்பது, என் – யாது, காமன்தன் – மன்மதனுடைய, திறத்தையும் – வலியையும், கடந்தது – மேவிட்டுச்சென்றது, சீற்றத்தின் – அவன் கோபத்தினது, தகைமை- பெருமை என்றால், பிராட்டியைக் கொல்லவெண்ணினானென்றாய்த்து—எ-று. ()

வளர்ந்தநாணினன்மாதிரமனைத்தையுமறைவித்
தளந்ததோளினனனல்சொரிகண்ணினனிவளைப்
பிளந்துதின்பெனென்றுடன்றவன்பெயர்ந்தனன்பெயரான்
கிளந்தசீற்றமுங்காதலுமெதிரெதிர்கிடைப்ப.

இ-ள். வளர்ந்த – மென்மேலாகுகிற, நாணினன் – வெட்கமுள்ளவனாய், மாதிரம்அனைத்தையும் – திக்குகளையெல்லாம், மறைவித்து – மறையப்பண்ணி, அளந்த-அளவிடுகின்ற, தோளினன்-தோள்களுள்ளவன், அனல்சொரி-நெருப்பைச்சிந்துகிற, கண்ணினன் – கண்களுள்ளவன், இவளை – இந்தச்சீதையை, பிளந்து – இருகூறாகப்பண்ணி, தின்பெனென்று – சாப்பிடுகிறேனென்று, உடன்றனன் - பெயர்ந்தனன், கோபங்கொண்டு – மேற்சென்றான், பெயரான் – மறுபடிபிராட்டிமேற் செல்

லாதவனானான், கிளர்ந்த - பொங்கின, சீற்றமும் - கோபமும், காதலும் - ஆசையும், எதிர் எதிர் - நேருக்குநேரே, கிடைப்ப - நெருங்குவன வாகவே பெயரான் — எ - று.

அன்னகாலையினனுமனுமருந்ததிக்கற்பின்
என்னையாளுடைநாயகன்றேவியையென்முன்
சொன்னநீசன்கைதொடுவதன்முன்றுகைத்துழக்கிப்
பின்னைநின்றதுசெய்குவேனென்பதுபிடித்தான்.

இ-ள். அன்னகாலையின் - அப்போது, அனுமனும் - சிறியதிருவடியானவர், அருந்ததி - அருந்ததிபோலும், கற்பின் - கற்புள்ள, என்னை - அடியேனை, ஆளுடை - ஆளுதலுடைய, நாயகன் - ஆண்டவனது, தேவியை - நாயகியை, என்முன் - எனக்குமுன்னே, சொன்ன - இப்படியெல்லாஞ்சொன்ன, நீசன் - இந்தச்சண்டாளன், கை - கையாலே, தொடுவதன்முன் - தீண்டுதற்குமுன்னே, துகைத்து - காலாலே மிதித்து, உழக்கி - வருத்தி, பின்னை - பின்பு, நின்றது - செய்யவேண்டியதை, செய்குவனென்பது - செய்வேனென்பதை, பிடித்தான் - மனத்திலெண்ணினார் - எ - று.

தனியினின்றனன்றலைபத்துங்கடிதுகத்தாக்கிப்
பனியின்வேலையிலிலங்கையைக்கீழுறப்பாய்ச்சிப்
புனிதமாதவத்தணங்கினைச்சுமந்தனன்போவான்
இனிதினென்பதுநினைந்தனன்கரம்பிசைந்திருந்தான்.

இ-ள். தனியில் - ஒருவனாக, நின்றனன் - நிற்கிற இவனுடைய, தலைபத்தும் - பத்துத்தலைகளும், கடிது - விரைவிலே, உக - உதிர, தாக்கி - அடித்து, பனியின் - குளிர்ச்சியையுடைய, வேலையில் - கடலிலே, இலங்கையை - இந்தஊரை, கீழுற - உள்ளழுந்த, பாய்ச்சி - எடுத்துக்கவிழ்த்து, புனிதம் - பரிசுத்தமுள்ள, மாதவத்து - பெரியதவத்தையுடைய, அணங்கினை - பிராட்டியை, சுமந்தனன் - தாங்கிக்கொண்டு, போவான் - போக, இனிதின்என்பது - சந்தோஷமாகஎன்பதை, நினைந்தனன் - எண்ணினவராய், கரம்பிசைந்து - கைகளைப் பிசைந்துகொண்டு, இருந்தான் - இருந்தார் — எ - று. (௬௩)

ஆண்டவாளரக்கன்கனன்றண்டத்தையழிப்பான்
மூண்டகாலவெந்தீயெனமுற்றியசீற்றம்
நீண்டகாதனீர்நீத்தத்தின்வீவுறுநிலையின்
மீண்டுநின்றொருதன்மையாலிவையிவைவிளம்பும்.

இ-ள். ஆண்டு - அப்போது, அவ்வாளரக்கன் - அந்த வாளைக்கையிலே கொண்டராவணன், கனன்று - கோபங்கொண்டு, அண்டத்தை - அண்டமுழுதும், அழிப்பான் - அழிக்கிறதற்கு, மூண்ட - மூண்டதான, காலவெந்தீயென - வெப்பமுள்ளகாலாக்கினிபோல, முற்றிய - முதிர்ந்துவந்த, சீற்றம் - கோபமானது, நீண்ட - அதிகமான, காதல் - ஆசையென்கிற, நீர்நீத்தத்தின் - ஜலப்பிரவாகத்தினாலே, வீவுறுநிலையின் - அவிந்தடங்குகிற தன்மையினாலே, மீண்டு - கொல்வெனென்றெழுந்ததைவிட்டு, நின்று - காமத்துடனேநின்று, ஒருதன்மையால் - ஒருவகைகொண்டு, இவைஇவை - பிராட்டிசொன்னதற்கு நேர்நேரானவைகளை, விளம்பும் - சொல்லலானான் — எ - று. (௬௪)

வேறு.

கொல்வெனென்றுடன்றேனுன்னைக்கொல்கிலென்குறித்துச்சொன்ன
சொல்லுளவவற்றுக்கெல்லாங்காரணந்தெரியச்சொல்லின்

ஒல்வதீதொல்லாதிதென்றெனக்குமொன்றுலகத்துண்டோ
வெல்வதுந்தோற்றருனும்விளையாட்டின்விளைந்தமேனாள்.

இ-ள். கொல்வெனென்று – இதோகொல்லுகிறேனென்று, உடன்றேன்- கோபங்கொண்டேன், உன்னை – எனக்குப்பிரியமானவுன்னை, கொல்கிலேன்-கொல்லமாட்டேன், குறித்துச்சொன்ன – நீ உத்தேசித்துச்சொன்ன, சொல்லுள – சொற்களுமுண்டு, அவற்றுக்கெல்லாம் – அச்சொற்களுக்கெல்லாம், காரணம் – நிமித்தமானவைகளை, தெரிய – உனக்குத்தெரிவதாக, சொல்லில் – சொல்லலானால், ஒல்வது ஈது – என்னாலேசெய்யத்தக்கதுஇது, ஒல்லாதீது – செய்யக்கூடாததீது, என்று- என்பதாய், எனக்கும் ஒன்று – எனக்கும்ஒருகாரியம், உலகத்துஉண்டோ – உலகத்திலேஉள்ளதாமோ, வெல்வதும் – காத்தவீரியன் வெல்லலானதும், தோற்றலதானும் – நான்தோற்பானதும், விளையாட்டின் – விநோதவகையாலே, மேனாள் – முன்னாளிலே, விளைந்த – உண்டாயின — எ-று. (சுரு)

ஒன்றுகேளுரைக்கநிற்கோருயிரெனவுரியோன்றன்னைக்
கொன்றுகோளிழைத்தானீநின்னுயிர்விடிற்கூற்றங்கூடும்
என்றனாருயிருநீங்குமென்பதையியையவெண்ணி
அன்றுநான்வஞ்சஞ்செய்ததாரெனக்கமரினேர்வார்.

இ-ள். உரைக்க – நான்சொல்ல, ஒன்றுகேள் – இதொருவார்த்தையாவது கேள், நிற்கு – உனக்கு, ஒருயிர்என – ஒப்பற்ற பிராணனென்ன, உரியோன்றன்னை – தக்கராமனை, கொன்று – கொலைசெய்து, கோள் – உன்னைக் கொண்டுவருதலை, இழைத்தால் – நான்செய்தால், நீநின்உயிர் – நீ உன்னுயிரைவிடுவை, விடில்-அப்படி நீ உயிர்விடுவதானால், கூற்றங்கூடும் – யமன் எதிர்வான் அதனால், என்றன்- என்னுடைய, ஆர் உயிரும் – அருமையானவுயிரும், நீங்கும் என்பதை – போம்என்கிறதை, இயைய – பொருந்த, எண்ணி – நான்யோசித்து, அன்று – அப்போது, நான்வஞ்சஞ்செய்தது – நான்வஞ்சித்து உன்னைக் கொண்டுவந்தது, அமரில் – சண்டைசெய்யத்துணிந்தால் அப்போரிலே, எனக்கு நேர்வார் – சரியானவர்கள், ஆர்- யாரிருக்கிறார்கள் ஒருவருமில்லை—எ-று. (சுசு)

மானென்பதறிந்துபோனமானிடராவார்மீண்டி
யானென்பதறிந்தால்வாராரேழைமையெண்ணிநோக்கல்
தேனென்பதறிந்தசொல்லாய்தேவர்தாம்யாவரேயெங்
கோனென்பதறிந்தபின்னைத்திறம்புவார்குறையினல்லால்.

இ-ள். மான்என்பது – வந்தமாரீசனை மானென்றே, அறிந்து – தெரிந்து, போன – சென்ற, மானிடராவார் – மனிதரான அவ்விருவரும், மீண்டு – திரும்பி, யானென்பது – நானென்று, அறிந்தால் – தெரிந்தால், வாரார் – உன்னைமீட்கவாரார்கள், ஏழமை – உனதறியாமையைக்கொண்டு, எண்ணி – யோசித்து, நோக்கல்- பாராதே, தேன்என்பது – தேன் என்பதற்கு, அறிந்த – தகுதியான, சொல்லாய்- வசனத்தையுடையவளே, தேவர்தாம் – தேவர்களிலேதான், யாவரே – யாரிருக்கிறார்கள், எம் – எமக்குராவணன், கோன்என்பது – அரசன்என்பதை, அறிந்தபின்னை- தெரிந்தபின்பு, திறம்புவார் – வழுவிநடப்பவர்யாவர், குறையின் அல்லால் – கண்டனப்படுவதேயல்லது, தேவர்தாம் – யாவரேதிறம்புவார் அறியாக்கால் திறம்புவார் எ ன்க—எ-று. (சுஎ)

வென்றோருமிருப்பயார்க்குமேலவர்விளிவிலாதோர்
என்றோருமிருப்பவன்றேயிந்திரனேவல்செய்ய
ஒன்றுதவுலகமூன்றுமுணர்கின்றவொருவன்யானே
மென்றோளாயிதற்குவேறோர்காரணம்விரிப்பதுண்டோ.

இ-ள். வென்றோரும் - என்னை வெல்லவல்லவர்களும், இருப்ப - இருக்கிறார்கள், யார்க்கும் - எல்லாருக்கும், மேலவர் - மேம்பட்டவர்கள், விளிவிலாதோர்-சாவாதவர்கள், என்றோரும் - என்னத்தக்கவர்களும், இருப்ப - இருக்கிறார்கள், அன்றே - அல்லவோ அப்படி இருக்கச்செய்தே, இந்திரன் - தேவேந்திரன், ஏவல் செய்ய - ஊழியஞ்செய்ய, ஒன்றுத - ஒருதன்மைத்தாகாத, உலகமூன்றும் - திரிலோகமும், உணர்கின்ற - தெரியத்தக்க, ஒருவன் - ஒப்பில்லாதவன், யானே - நானேயாம், மென் - மெல்லிய, தோளாய் - தோள்களுள்ளவளே, இதற்கு - எனதொப்பில்லாமைக்கு, வேறோர்காரணம் - வேறேஒரு திருஷ்டாந்தம், விரிப்பது - சொல்லவேண்டுவது, உண்டோ - உளதா இல்லை—எ-று. (சுஅ)

மூவருந்தேவர்தாமுமுரணுகமுற்றுங்கொற்றம்
பாவைநின்பொருட்டினாலோர்பழிபெறப்பயன்றீர்நோன்பின்
ஆவியின்மனிதர்தம்மையடுகிலேனவரையீண்டுக்
கூவிநின்றேவல்கொள்வேன்காணுதிகுதலைச்சொல்லாய்.

இ-ள். மூவரும் - மும்மூர்த்திகளும், தேவர்தாமும் - தேவர்களும், முரண் உக - பலங்குறைவதாக, முற்றும் - முடிக்கப்படுகிற, கொற்றம் - வெற்றியானது, பாவாய் - பெண்ணே, நின்பொருட்டினால் - உனதுகாரணமாக, ஓர்பழிபெற-ஒரு பழிப்பையடைய, பயன்றீர் - ஒருபலனுமில்லாத, நோன்பின் - விரதங்களைச்செய்கிற, ஆவியில் - ஜீவபலமில்லாத, மனிதர்தம்மை-இரண்டுமனிதரையும், அடுகிலேன்-கொல்லமாட்டேன், அவரை - அவ்விருவரையும், ஈண்டு - இவ்வூருக்குவர, கூவி-அழைத்து, நின்று - நெடுங்காலமும், ஏவல்கொள்வேன் - ஊழியம்வாங்குவேன், காணுதி - நீபார்க்கப்போகிறாய், குதலைச்சொல்லாய்-இளஞ்சொற்களுள்ளவளே-எ-று.

சிற்றியற்சிறுமையாற்றல்சிறுதொழின்மறவரோடே
முற்றியதாவில்வீரமுனிவென்கண்விளையாதேனும்
இற்றையிற்பகலினெய்தியிருவரையொருகையாலே
பற்றினென்கொணருந்தன்மைகாணுதிபழிப்பிலாதாய்.

இ-ள். சிற்றியல் - சிறியசுவபாவமும், சிறுமை ஆற்றல் - கொஞ்சபலமும், சிறுதொழில் - அல்பச்செய்கையுமுள்ள, மறவரோடே - வேடர்போல்வாருடனே, முற்றிய - எங்குமுடிவுபண்ணின, தாஇல் - வருத்தமில்லாத, வீரம் - வீரத்தைக்கொண்ட, முனிவு - கோபம், என்கண் - எனக்கு, விளையாது-உண்டாகாது,எனும்-ஆனாலும், இற்றையிற்பகலில் - இன்றையத்தினமே, எய்தி - அங்குப்போய், இருவரை - அவ்விருவரையும், ஒருகையாலே - என் ஒருகையினாலே, பற்றினன் - பிடித்தேனாகி, கொணருந்தன்மை - நான்கொண்டுவருகிறவேடிக்கையை, காணுதி - இனி நீபார்ப்பாயாக, பழிப்புஇலாதாய் - யாதொருதோஷமுமில்லாதவளே—எ-று. (எ௦)

பதவியமனிதரேனும்பைந்தொடிநின்னைத்தந்த
உதவியையுணரநோக்கினுயிர்கொலைக்குரியரல்லர்

சிதைவுறலவர்க்குவேண்டிற்செய்திறன்றேர்ந்ததெண்ணின்
இதனினக்கீதேயாகினியற்றுவல்காண்டியின்னும்.

இ-ள். பதவிய - எனக்குத்தின்னப்பக்குவமான, மனிதரேனும் - மனிதரேயானாலும், பைந்தொடி - சீதா, நின்னை - உன்னை எனக்கு, தந்த உதவியை - கொடுத்தஉபகாரத்தை, உணரநோக்கில் - தெரியயோசித்தால், உயிர் - ஜீவனை, கொலைக்கு - கொல்லுதற்கு, உரியார்அல்லர் - தக்கவரல்லர் ஆகையால், சிதைவுஉறல்-அழிவுபடுதல், அவர்க்கு - அவ்விருவருக்கும், வேண்டில் - நீவேண்டுவையானால், செய்திறன் - நான்செய்யுந்திறத்தை, எண்ணில் - யோசிக்கும்போது, தேர்ந்தது - தெரிந்தகாரியமே, இதம்நினக்கு - உனக்குநன்மை, ஈதேயாகில் - இதுவேயானால் அவ்விருவரையுங்கொண்டுவருகிற துனக்குச்சம்மதியானால், காண்டி-பார், இன்னும்-இன்னமும் நீவேண்டியபடியே, இயற்றுவல் - செய்கிறேன் —எ-று. (எக)

பள்ளநீரயோத்திநண்ணிப்பரதனேமுதலினோராண்
டுள்ளவர்தம்மையெல்லாமுயிர்குடித்தூழித்தீயின்
வெள்ளநீர்மிதிலையோரைவேரறுத்தெளிதினெய்திக்
கொள்வெனின்னுயிருமென்னையறிந்திலைகுறைந்தநாளோய்.

இ-ள். பள்ளநீர் - அகழிநீராலேசூழப்பட்ட, அயோத்திநண்ணி - அயோத்தியாபுரிக்குப்போய், பரதனேமுதலினோர் - பரதன்முதலானவர்கள், ஆண்டுஉள்ளவர் தம்மையெல்லாம் - இன்னமும் அங்குள்ளவர்களையெல்லாம், உயிர்குடித்து - உயிர்வதைசெய்து, ஊழித்தீயின் - காலாக்கினிபோலேபோய், வெள்ளநீர்-பிரவாகஜலத்தையுடைய, மிதிலையோரை - மிதுலாபுரியிலுள்ளவர்களையும், வேர் அறுத்து - அடியோடேபோக்கி, எளிதின்எய்தி-அதிசுலபத்திலேவந்து, நின்உயிரும் - உன்பிராணனையும், கொள்வேன்-வாங்குவேன், என்னை - என்பெருமையைநீ, அறிந்திலை-தெரிந்தவளல்லை, குறைந்தநாளோய் - அல்பாயிசுள்ளவளே, நீ நெடுங்காலத்தவளானால் முன்னே நடந்தவைகளெல்லாந்தெரிவாயென்றபடி—எ-று. (எஉ)

ஈதுரைத்தழன்றுபொங்கியெதிர்கதிர்வாளைநோக்கித்
தீதுயிர்க்கிழைக்குநாளுந்திங்களோடிரண்டிற்றேய்ந்த
தாதலினின்றதெண்ணென்றறிந்தவாறறிவாயென்னுப்
போதரிக்கண்ணினாளையகத்துவைத்துரப்பிப்போனான்.

இ-ள். ஈது - இப்படி இவ்வார்த்தை, உரைத்து - சொல்லி, அழன்று - மனங்கொதித்து, பொங்கி - கோபங்கொண்டு, எதிர் - பிராட்டிக்குமுன்னே, கதிர்- ஒளிமிக்க, வாளை - தனதுகத்தியை, நோக்கி - பார்த்து இந்தக்கத்தியே, உயிர்க்கு- சீதாஉன்உயிர்க்கு, தீது இழைக்கும் - கெடுதியைச்செய்யும், திங்கள் - சந்திரன் இக்கத்தியோடுகூடி, ஓரிரண்டில் - ஒருஇரண்டுள்ளதென்பதுபோல், நாளும் - எப்போதும்நான், தேய்ந்தது - வெட்டிவெட்டித்தேய்ந்திருக்கிறதிக்கத்தி, ஆதலின் - ஆகையால், நின்றது - இனிநீசெய்யஇருக்கிறதை, எண்ணென்று - ஆலோசியென்றுசொல்லி, அறிந்தஆறுநீ - உன்வயதளவுக்குள்ளவைகளே, அறிவாயென்னு - தெரிவாயென்று, போது அரி - மலர்போலவும் வண்டுபோலவுமிருக்கிற, கண்ணினாளை - கண்களுள்ளபிராட்டியை, மனத்துவைத்து - உள்ளேநிரம்பக்காதல்கொண்டு, உரப்பிப்போனான் - அதட்டிக்கொண்டுபோயினான் —எ-று. (எங)

அஞ்சுவித்தானுமொன்றாலறிவுறத்தேற்றியானும்
வஞ்சியிற்செவ்வியாளைவசித்தென்பால்வருவீரன்றால்

நஞ்சுமக்காவெனென்னுநகையிலாமுகத்துப்பேழ்வாய்
வெஞ்சினத்தரக்கிமார்க்குவேறுறவுணர்த்திப்போனான்.

இ-ள். அஞ்சுவித்தானும் - பிராட்டியை ஒருவகை அஞ்சும்படிசெய்தவனாய், ஒன்றால் - இன்னமொருவகையினாலே, அறிவுற - பிராட்டிதன்பெருமைஅறிய, தேற்றியானும் - தெளிவுபடுத்தினவனுமாய், வஞ்சியில் - இந்தக்கொடிபோலும், செவ்வியாளை - அழகுள்ளசீதையை, வசித்து - இணங்கச்செய்து, என்பால் - என்னிடத்துக்குக்கூட்டிக்கொண்டு, வருவீரன்று - வருகிறவளொருத்தியுமில்லை, ஆல் - ஆகையால், நஞ்சு உமக்கு ஆவேனென்னா - இனி உங்களுக்குநான் விஷமாவேனென்று, நகையிலாமுகத்து - சந்தோஷமில்லாதமுகத்துடனே, பேழ்வாய் - அகன்ற வாயுள்ள, வெஞ்சினத்து - வெவ்வியகோபங்கொண்டு, அரக்கிமாரை - அந்தராக்ஷஸிகளைப்பார்த்து, வேறுற - தனியாகநின்று, உணர்த்தி - வசித்தென்பால் வருவீரன்றென்பதைச்சொல்லி, போனான் - தனதிடம் போயினான்ராவணன்—எ-று. (எச)

போயினனரக்கன்பின்னைப்பொங்கராநுங்கிக்கான்ற
தூயவெண்மதியையொத்ததோகையைத்தொடர்ந்துசுற்றித்
தீயவல்லரக்கிமார்கடெழீஇத்தெழித்துரப்பிச்சிந்தை
மேயினவண்ணமெல்லாம்விளம்புவருடன்றுமிக்கார்.

இ-ள். போயினனரக்கன் பின்னை - அந்தராவணன் போனபின்பு, பொங்கு அரா - சீறும்பாம்பு, நுங்கிக்கான்ற - விழுங்கிக் கக்கின, தூய வெண்மதியை - பரிசுத்தமானவெள்ளியசந்திரனை, ஒத்த - ஒப்பாயிருக்கிற, தோகையை - சீதாபிராட்டியை, தொடர்ந்துசுற்றி - நெருங்கிச்சூழ்ந்து, தீயவல் அரக்கிமார்கள் - பொல்லாதவலியராக்ஷஸிகள், தெழீஇ - அதட்டி, தெழித்து - பின்னும் அதட்டி, உரப்பி - ஓங்கிப்பேசி, சிந்தை - தங்கள் மனத்துக்கு, மேயினவண்ணமெல்லாம் - தோற்றினவகைகளையெல்லாம், மிக்கார் - மிகவுங்கும்புகூடி, உடன்று - சண்டையிட்டுவைது, விளம்புவர் - சொல்லலானார்கள்—எ-று. (எரு)

வேறு.

முன்முன்னின்றார்கண்கனல்சிந்தமுடுகுற்றார்
மின்மின்னென்னுஞ்சூலமும்வேலுமிவையோச்சிக்
கொன்மின்கொன்மின்கொன்றுகுறைத்துகுடராரத்
தின்மின்றின்மினென்றுதெழித்தார்சிலரெல்லாம்.

இ-ள். முன்முன் - பிராட்டிக்குமுன்பில், நின்றார் - நின்றுகொண்டு, கண் - தங்கள் கண்களிலே, கனல் சிந்த - நெருப்புப்பொறிபறக்க, முடுகுற்றார் - அடிக்கவிரைகிறார்கள்சிலர், மின்மினென்னும் - பளபளவென்கிற, சூலமும் - சூலாயுதங்களும், வேலும் - வேலாயுதங்களும், இவை - ஆகிய இவ்வாயுதங்கள்கொண்டு, ஓச்சி - ஓங்கி, கொல்மின் கொல்மின் - கொல்லுங்கள் கொல்லுங்கள், கொன்று - கொலைசெய்து, குறைத்து - சதைசெய்து சதைசெய்து, குடர் ஆர - வயிறு நிறைய, தின்மின் தின்மின் - தின்னுங்கள் தின்னுங்கள், என்றுதெழித்தார் - என்று அதட்டினார்கள், சிலரெல்லாம் - சிலர்முழுதும் ஹிம்சித்தார்கள்—எ-று. முன்முன் ஒருத்திக்குமுன்னே ஒருத்திமுந்தி எனவுமாம். (எசு)

வையந்தந்தநான்முகன்மைந்தன்மகன்மைந்தன்
ஐயன்வேதமாயிரம்வல்லோனறிவாளன்

மெய்யன்புன்பால்வைத்துளதல்லால்வினைவென்றோன்
செய்யும்புன்மையாதுகொலென்றார்சிலரெல்லாம்.

இ-ள். வையம்தந்த - உலகத்தைப்பெற்ற, நான்முகன் - சதுர்முகப்பிரமனுக்கு, மைந்தன் - புத்திரனான புலத்தியருக்கு, மகன் - புதல்வனான விச்சிரவாவுக்கு, மைந்தன் - தனயனானவன் ராவணன், ஐயன் - எல்லாரிலுஞ் சிறந்தவன், வேதம் ஆயிரம் - ஆயிரம்வேதங்களும், வல்லோன் - தெரிந்தவன், அறிவாளன் - இன்னம் அனுபவரசமெல்லாந்தெரிந்தவன், உன்பால் மெய் அன்பு - அப்படிப்பட்டவன் உன்னிடத்திலே நிஜவிசுவாசம், வைத்துளது - கொண்டிருக்கிற இதொருகுற்றமே, அல்லால் - அல்லாமல், வினைவென்றோன் - தீவினையைவென்று தவஞ்செய்த இவன், செய்யும்புன்மை - செய்ததோஷம், யாது என்றார் - என்ன இருக்கிறது என்றுசொன்னார்கள், சிலர் எல்லாம் - சிலர்முழுதும்—எ-று. (எஎ)

மண்ணிற்றீயமானுயர்தத்தம்வழியோடும்
பெண்ணிற்றீயோய்நின்முதன்மாயும்பிணிசெய்தாய்
புண்ணிற்கோலிட்டாலனசொல்லிப்பொதுநோக்கால்
எண்ணிக்காணாய்மெய்ம்மையுமென்றார்சிலரெல்லாம்.

இ-ள். மண்ணில் - இந்தவுலகத்திலுள்ளவெல்லாம், தீய - வெந்துபோக, மானுயர் - மனிதரும் மனிதர்தீய என்க, தத்தம் - தங்கள் தங்கள், வழியோடும் - வம்சத்துடனே, பெண்ணில் - பெண்களிலே, தீயோய் - கெட்டவளே, நின்முதல் - உன்குலவேரும், மாயும் பிணி - அழிவதான நோயை, செய்தாய் - பண்ணினாய், பொதுநோக்கால் எண்ணி - எல்லாரையும் பார்க்கிறதுபோலவே பார்த்து, புண்ணில்-புண்ணிலே, கோலிட்டாலன - கோல்கொண்டுகுத்தினாற்போல், சொல்லி - அரசன் முன்னேபேசி, மெய்ம்மையும் - அவன் திரிலோகாதிபத்திய முள்ளவனென்கிற மெய்யானசிறப்பையும், காணாய் - நீதெரிந்துகொள்கிலை, என்றார் - என்று சொன்னார்கள், சிலரெல்லாம் - சிலர்முழுதும்—எ-று. (எஅ)

புக்கவழிக்கும்போந்தவழிக்கும்புகழ்வெந்தீ
ஒக்கவிதைப்பாயுற்றனையன்றோவுணர்வில்லாய்
இக்கணமிற்றாய்முந்தினமெல்லாமினிவாழாய்
சிக்கவுரைத்தேமென்றுதெழித்தார்சிலரெல்லாம்.

இ-ள். புக்கவழிக்கும் - நீமருமகளாய்ப்போன உன்குலத்துக்கும், போந்தவழிக்கும் - மகளாய்ப்பிறந்தகுலத்துக்கும், புகைவெந்தீ - புகைகிறவெப்பமுள்ள நெருப்பு, ஒக்க - மூள, கூட - சரியாக, விதைப்பாயுற்றனை - மூட்டுகிறவளானாய், அன்றோ - அல்லவோ, உணர்வு இல்லாய் - ஒபுத்தியில்லாதவளே, இக்கணம் - இந்தக்ஷணத்துக்குள்ளே, இற்றாய் - இறந்துபோனவளாவாய், முந்தினம் - நீசாவாதபடிமுன்னின்றோம், எல்லாம் - நாங்களெல்லாம், இனி - இனிராவணன் வந்தால், வாழாய்-நீ பிழைக்கமாட்டாய், சிக்க - நீ அவன்கைவசமாகுதற்காக, உரைத்தேமென்று - இந்நேரமும் இப்படி புத்தி சொல்லுகிறோமென்று, அன்றேல் - கொல்வோமென்று, தெழித்தார் - அதட்டியுறுக்கினார்கள், சிலரெல்லாம் - சிலர்முழுதும், புகழ் வெந்தீயென்று பாடமானால் இருகுலத்துப்புகழையும் அரக்கராகிய நெருப்பிலே வீழ்த்துகிறாயென்க. விதைத்தல் - வளரச்செய்தல்—எ-று. (எகூ)

கொல்வானுற்றோர்பெற்றிமையாதுங்குறையாதாள்
வெல்வானங்கோன்றின்னுமின்வம்மென்பவர்மெய்யும்
வல்வாய்வெய்யோனேவலுமெல்லாமனம்வைத்தாள்
நல்லாணல்லகண்கள்கலுழ்ந்தேநகுகின்றாள்.

இ-ள். கொல்வான் உற்று - - நாமெல்லாங் கொல்லத்தொடுத்தும் கொல்ல எண்ணினதுகண்டு, பெற்றிமை - தன்குணத்தன்மையில், ஓர் யாதும் - ஒரு எவ்வளவும் கொஞ்சமேனும், குறையாதாள் - குறைவுபடாதிருக்கிறாள் ஆதலால், வெல்வான் நங்கோன் - நமதரசன் நம்மைவருத்துவான், தின்னுமின் - இவளைத் தின்னுங்கள், வம் - வாரும், என்பவர் - என்னும் அரக்கிகள், மெய்யும் - மெய்யே கொல்லவருகிறதையும், வல்வாய் - இராவணனென அவ்வல்லவாயையுடைய, வெய்யோன் - கொடியோனுடைய, ஏவலும் - ஆக்ஞையும், எல்லாம் - ஆகிய இவைமுழுதும், மனம்வைத்தாள் - தன்மனத்திலேகொண்டு, நல்லாள் - பிராட்டி, நல்ல - நலமுள்ள ராக்ஷதிகள்மேற்கண்ணோட்டமுள்ள, கண்கள் - நேத்திரங்களால், கலுழ்ந்தே - அழுதுகொண்டே, நகுகின்றாள் - அரக்கிகளைநோக்கி விளங்குகிறாள், அரக்கிகளறியாமைக்குச் சிரிக்கிறாள் சந்தோஷிக்கிறாள் மகிழ்கிறாள் என்க, குணத்தன்மை - பதிவிரதா குணம்—எ-று. (அ0)

இன்னோரன்னவெய்தியகாலத்திடைநின்றாள்
முன்னேசொன்னேன்கண்டகனவின்முடிவம்மா
பின்னேவாளாபேதுறுவீயேற்பிழையென்றாள்
அன்னேநன்றென்றாரவரெல்லாமறிவுற்றார்.

இ-ள். இன்னோர் - இவ்வகைராக்ஷதிகள், அன்ன - அப்படியாக, எய்தியகாலத்து - வந்தபோது, இடைநின்றாள் - அவர்கள் நடுவேநின்ற திரிசடையானவள், கண்ட - நான்கண்ட, கனவின்முடிவு - சொப்பனமுடிவை, முன்னேசொன்னேன் - முன்பேசொல்லினேன் ஆதலால், பின்னே - இப்போது, வாளா - வியர்த்தமாக, பேதுறுவீரேல் - மயங்குவீரேயானால், பிழையென்றாள் - தோஷமாம் என்று பிராட்டியை நோக்கிச்சொன்னாள், அவரெல்லாம் - அது அந்தராக்ஷதிகளெல்லாம், அறிவுற்றார் - தெரிந்தவர்களாய், அன்னே ராஜபுத்திரியான திரிசடையைப்பார்த்து தாயே நன்று உன்கனவு நன்றாயிருந்தது எப்படியாமோ, என்றார் - என்று சொன்னார்கள்—எ-று. (அக)

அறிந்தாரன்னமுச்சடையென்பாளவள்சொல்லப்
பிறிந்தார்சீற்றமன்னனையஞ்சிப்பிறிதில்லாச்
செறிந்தாராயதீவினையன்னார்தெறலெண்ணார்
நெறிந்தாரோதிப்பேதையுமாவிநிலைநின்றாள்.

இ-ள். அறிந்தார் - வருவதுணர்ந்தபெரியோரை, அன்ன - ஒப்பான, முச்சடையென்பாள் - திரிசடையென்கிற, அவள் - அந்தவிபீஷணன்புத்திரி, சொல்ல - ஆக்ஞாபிக்க, பிறிந்தார் சீற்றம் - ரக்ஷதிகள் கோபநீங்கினார்கள், மன்னனை - அரசனைராவணனுக்கு, அஞ்சி - பயந்து, பிறிது - அல்லது, இல்லா - ஒன்றுஞ்செய்தவில்லாது, செறிந்தாராய - கூடினவர்களான, தீவினை - பாபரூபமே, அன்னார் - ஒத்த ராக்ஷதிகள், தெறல் - பிராட்டியைவருத்த, எண்ணார் - நினையாதிருந்தார்கள், நெறிந்து - நடுவேவழிக்கொண்டு வாகுகொண்டு, ஆர் - நிரம்பினதான, ஓதி - கூந்தலையுடைய, பேதையும் - பிராட்டியாரும், ஆவி - தமது பிராணன், நிலைநின்றாள் - ஒருவகைநிலையிலே நிற்கலானார்—எ-று. (அஉ)

நிந்தனைப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - - சக்கு திருவிருத்தம் - சஅஅ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஐந்தாவது,

உருக்காட்டு படலம்.

சிறியதிருவடி தம்வடிவைப் பிராட்டிக்குக் காட்டுதல்.

காண்டற்கொத்தகாலமுமீதேதெருகாவல்
தூண்டற்கொத்தசிந்தையினாருந்துயில்கில்லார்
வேண்டத்துஞ்சாரென்றொருவிஞ்சைவினைசெய்தான்
மாண்டற்குற்றாராமெனவெல்லாமயர்வுற்றார்.

இ-ள். காண்டற்கு - இனிநான்காணுதற்கு, ஒத்த - தகுந்த, காலமும் ஈதே- காலமும் இதுவே, தெறுகாவல் - காக்குங்காவலினின்று, தூண்டற்கு - வருத்துதற்கு, ஒத்த - தக்க, சிந்தையின் - மனசுள்ளவர்களாகையால், ஆரும் - ஒருத்தியேனும், துயில்கில்லார் - நித்திரைகொள்ள இல்லை, வேண்ட - நான்வேண்டுகிறதினாலே, துஞ்சாரென்று - இவர்கள்தூங்கார்களென்று, ஒருவிஞ்சை - ஒருமந்திரத்தை, வினைசெய்தான் - உச்சரித்தார் திருவடி அம்மந்திரத்தினாலே, மாண்டற்கு - சாவுதற்குக்காலம், உற்றாராமென - நேரிட்டவர்கள்போல, எல்லாம் - எல்லாரும் பெருமூச்சுவிட்டு, மயர்வுற்றார் - மயங்கினார்கள் தூங்கினார்கள்—எ-று. காணச்சமையம் கிடையாமையைக்குறித்து காலமும் என்றார் அருமைச்சிறப்பு. (க)

துஞ்சாதாருந்துஞ்சுதல்கண்டாடுயராற்றாள்
நெஞ்சாலொன்றுமுய்வழிகாணாநெகுகின்றாள்
அஞ்சாநின்றாள்பன்னெடுநாளுமழிவுற்றாள்
எஞ்சாவன்பாலின்னபகர்ந்தாங்கிடருற்றாள்.

இ-ள். துஞ்சாதாரும் - தூங்காதராக்ஷதிகளும், துஞ்சுதல் - தூங்குகிறதை, கண்டாள் - அப்போதுபார்த்தாள், துயர்ஆற்றாள் - உள்ள துன்பத்தைப் பொறுக்கமாட்டாதவளாய், நெஞ்சால் - தன்புத்தியோசனையால், ஒன்றும் - ஒருவகையாலும், உய்வழி காணாள் - துன்பத்துக்குத் தப்பும்வகை தோற்றாதவளாய், நெகுகின்றாள்- உருகுகிறவள், அஞ்சா நின்றாள் - பயப்படுகிறவள், பல் நெடுநாளும் - சிறையிலகப்பட்டகாலமெல்லாம், அழிவுற்றாள் - கரைந்தவள், எஞ்சா - குறையாத, அன்பால்- ராமபக்தியினாலே, இன்ன - இவ்வார்த்தைகளை, பகர்ந்து - சொல்லி, ஆங்கு - அப்போது, இடருற்றாள் - கிலேசித்தாள்—எ-று. (உ)

வேறு.

கருமேகநெடுங்கடல்காரனையான்
தருமேதனியேனெனதாருயிர்தான்
உருமேறுறழ்வெஞ்சிலைநாணொலிதான்
வருமேயுரையாய்வலியார்வலியே.

இ-ள். கருமேகம் - நீலமேகம் கருவைக்கொண்டமேகமும், நெடுங்கடல்-ஆழமுள்ளகடலும், கார் - இருளும், அனையான்தான் - ஒப்பான ஸ்ரீராமன்தானே, தனியேன் - ஒருத்தியான; எனது - என்னுடைய, ஆர் உயிர் - சாவ அரிதான உயிரை, தருமே - சாவாமல்நிலைபெறச்செய்வரோ, உருமேறு - இடியேற்றை, உறழ் - ஒப்ப

தான, வெஞ்சிலே – கொடியகோதண்ட, நாணொலிதான் – குணத்தொனியும், வருவே – நான்கேட்கக்கிடைக்குமா, உரையாய் – சொல்லக்கடவை, வலியார் – வல்லேமென்பாரை, வலியே – வெல்லவல்லதெய்வமே—எ-று. கருமேகத்திலு நெடுங்கடலிலுமுள்ள கருநிறத்தை ஒத்தவனெனவுமாம். (ரு)

கல்லாமதியேகதிர்வாணிலவே
செல்லாவிரவேசிறுகாவிருளே
எல்லாமெனையேமுனிவீர்நினையா
வில்லாளனையாதும்விளித்திலிரோ.

இ-ள். கல்லாமதியே – விவேகமில்லாதசந்திரனே, கதிர்-நாற்குங்கதிர்போல் நீண்ட, வாள்நிலவே – ஒளியுள்ளசந்திரிகையே, செல்லா – கழியாத, இரவே – இராத்திரியே, சிறுகா – குறையாதுபெருகின, இருளே – அந்தகாரமே, எல்லாம் – நீவிர்நால்வரும், எனையே – என் ஒருத்தியையே, முனிவீர்-வெறுத்தல் செய்கிறீர்கள், நினையா – என்னை எண்ணுதிருக்கிற, வில்லாளனை – கோதண்டபாணியை, யாதும்-எவ்வளவும், விளித்திலிரோ – வெறுத்தல்செய்வீர்களோ, நீவிர் வெறுத்தாலென்னை நினைந்து இங்குவருவாரென்கிறாள்—எ-று. (சா)

தழல்வீசவுலாய்வருவாடைதழீஇ
அழல்வீரெனதாவியறிந்திலிரோ
நிழல்வீரையனுருடனீர்நெடுநாள்
உழல்வீர்கொடியீருரையாடிலிரோ.

இ-ள். தழல்வீச – நெருப்புச்சுவாலைபட, உலாய்வரு – உலவிவருகிற, வாடை – வடகாற்றை, தழீஇ – கூட்டிக்கொண்டு, அழல்வீர் – ஜ்வராய்க்கொதித்து முனிகிறீர்கள், எனதாவி – என்உயிரொன்றுதான் ஜீவர்க்கஞ்சில்லையென்று, அறிந்திலிரோ-தெரிகிலீர்களோ, நிழல் – தேககாந்தி, வீரை – கடலை, அனுருடன் – ஒத்த ஸ்ரீராமனுடனே, நீர் – நீவிரைவரும், நெடுநாள் – நெடுங்காலமும் நான்சிறைவந்தகாலஅளவும், உழல்வீர் – கூடியிருக்கிறநீவிர், கொடியீர் – பொல்லாதவர்களாகையால், உரையாடிலிர் – என்குறையொன்றுஞ் சொல்கிலீர்—எ-று. (௱)

வாராதொழியானெனும்வண்மையினல்
ஓராயிரகோடியிடர்க்குடைவேன்
தீராவொருநாள்வலிசேவகனே
நாராயணனேதனிநாயகனே.

இ-ள். ஒருநாள் – ஒருகாலத்திலும், வலிதீரா – சக்திகுறையாத, சேவகனே-சாமர்த்தியமுள்ளவனே, நாராயணனே – சர்வசுவாமியானவனே, தனிநாயகனே-உபயவிபூதியிநீ ஒருதானே நிர்வாஹகனே நீயாதலால், வாராதொழியான் – இங்குத்தேடிவராமலிரார் இரீர், எனும் – என்கிற, வண்மையினல் – ஔதாரியகுணத்தையெண்ணி, ஓராயிரகோடி – அளவிறந்தகோடி, இடர்க்கு – துன்பத்துள்நின்று, உடைவேன் – வருந்திக்கிடக்கிறேன் வாரீரென்றுநிச்சயந்தெரிந்தால் நான்செய்வதுபிராணத்தியாகமென்பது போதரல்காண்க—எ-று. (சு)

தருவொன்றியகானடைவாய்தவிர்நீ
வருவென்சிலநாளினின்மாநகர்வாய்

இருவென்றனையின்னருடானிதுவேல்
ஒருவென்றனியாவியையுண்ணுதியோ.

இ-ள். தருஒன்றிய - விருக்ஷங்கள்கூடின, கான் - காட்டுக்கு, அடைவாய்நீ-வருகிறநீ, தவிர் - வருகிறதைவிடு, மாநகர்வாய் - இந்தமூதூருக்கு, சிலநாளினில்-கொஞ்சநாளுக்குள், வருவென் - வருகிறேன், இருஎன்றனை - என்னைஊரிலேதானே இருஎன்றுசொன்னீர், இன் அருள்தான் - உமதினிதான தயவுதான் அது, இது ஏல் - இப்படிச்சிறையிருப்பதென்னுலானுல் இப்போது, ஒருவென் — அநாதியாயிருக்கிற எனது, தனிஆவியை - ஆதரவில்லாதஉயிரை, உண்ணுதியோ - வதைசெய்யலாகுமா யோசித்தால் உமதுசொற்கடந்து கூடவந்ததனுலே தயவுதப்பினீரென்பது கொள்க—எ-று. (எ)

பேணும்முணர்வேயுயிரேபெருநாள்
நாணின்றுழல்வீர்தனிநாயகனைக்
காணுந்துணையுங்கழிவீரலிர்நான்
பூணும்பழியோடுபொருந்துவதோ.

இ-ள். பேணும் - நான்விரும்பத்தக்க, உணர்வே - என்மனசே,உயிரே-என் ஆத்மாவே, பெருநாள் - நெடுங்காலமும், நாண் இன்று - வெட்கமில்லாமல், உழல்வீர் - அலைகிறீர்கள், தனிநாயகனை - ஏகவஸ்துவானசரணியனை, காணுந்துணையும்-காணுமளவும், கழிவீரலீர் - போகிறவர்களல்லீர் நீவிரிருவரும், நான் - ஆனுலினிக் காணுமல்நான், பூணும் - பூண்டுகொள்வதான, பழியோடு - நாயகன் சொல்வழி நடவாதவளென்கிற பழிச்சொல்லுடனே, பொருந்துவதோ - கூடி நீவிருமிருக்கவோ சம்மதிசொல்லுங்கள் உணர்வே உயிரே—எ-று. (அ)

முடியாமுடிமன்னன்முடிந்திடவும்
படியேழுநெடுந்துயர்பாவிடவும்
மடியாநெறிவந்துவனம்புகுதும்
கொடியார்வருமென்றுகுலாவுவதோ.

இ-ள். முடியா - அழிவுபடாத, முடி - கிரீடாதிபனுன, மன்னன் - சக்கரவர்த்தி, முடிந்திடவும் - இறந்துபோகவும், படியேழும் - சப்தலோகங்களும், நெடுந்துயர் - நெடியதுக்கத்தில், பாவிடவும் - மூழுகவும் துக்கம்பரவவும், மடியாநெறி-நீதிவழுவாமல், வந்து - பிதுர்வாக்கியபரிபாலநராய்வந்து, வனம்புகுதும் - காட்டிலே நுழைகிற, கொடியார் - கொடியசெய்கையுள்ளவர், வருமென்று - எப்படியும் வருவாரென்று, குலாவுவதோ - நீவிரிருவரும் என்னைவிடாதிருக்கிறதோ, சொல்லீர் அவரிரக்கமுள்ளவரானுல் அவ்வளவுதுக்கம் அங்குளதாகக் காட்டுக்கு வருவாரா இரக்கமில்லாதவரென்று தன்னைத்தேடாமையைக் குறிப்பிக்கிருள்—எ-று. (கூ)

என்றென்றுயிர்விம்மியிருந்தழிவாள்
மின்றுன்னுமருங்குல்விளங்கிழையாள்
ஒன்றென்னுயிருண்டெனினுண்டிடர்யான்
பொன்றும்பொழுதேபுகழ்பூணுமெனு.

இ-ள். என்றென்று - இப்படிபலவகை, உயிர்விம்மி - உயிர்வருந்தி, இருந்து அழிவாள் - நெடுநேரம் யோசித்து துக்கிக்கிறவளான, மின்துன்னும் - மின்னலுக்

கொப்பான, மருங்குல் - இடையையுடைய, விளங்கு இழையாள் - சீதாபிராட்டியானவள், ஒன்று - இதொன்றேசரி, என் உயிர் - எனக்கு உயிர், உண்டெனில் - இருக்குமேயானல், உண்டு இடர் - துன்பமும் உண்டு துன்பமும் இருக்கும் ஆதலால், யான் - நான், பொன்றும்பொழுதே - இறந்தபோதுதான், புகழ்பூணுமென - எனக்குப்புகழுண்டாமென்று—எ-று. (க0)

வே று.

பொறையிருந்தாற்றியென்னுயிரும்போற்றினேன்
அறையிருங்கழலவற்காணுமாசையால்
நிறையிரும்பல்பகனிருதர்நீணகர்
சிறையிருந்தேனையப்புனிதன்றீண்டுமோ.

இ-ள். அறை - சத்தியாநின்ற, இருங்கழலவன் - பெரியவீரக்கழலுள்ள ஸ்ரீராமனை, காணுமாசையால் - பார்க்கலாமென்கிற ஆசையினலே, பொறையிருந்து ஆற்றி - இங்கேஇருந்து துன்பத்தைப் பொறுத்தல்செய்து, என் உயிரும்-என் உயிரையும், போற்றினேன் - இதுவரையிலும் வைத்திருந்தேன் இனி, நிறை - நிறைவதான, இரும் - பெருமையையுடைய, பல்பகல் - பலகாலமும்நெடுங்காலம், நிருதர்-ராக்ஷதர்களுடைய, நீள்நகர் - நெடிய ஊரிலே, சிறையிருந்தேனை - சிறைகிடந்த என்னை, அப்புனிதன் - அந்தப்பரிசுத்தன், தீண்டுமோ - தொடுவாரோ தொடார் எ-று. (கக)

உன்னினர்பிறரெனவுணர்ந்துமுய்ந்தவர்
சொன்னனசொன்னனசெவியிற்றூங்கவும்
மன்னுயிர்காத்திருங்காலம்வைகினேன்
என்னின்வேறரக்கியர்யாண்டையார்கொலோ.

இ-ள். பிறர் உன்னினர் என - என்னை வேறொருவ ராசைகொண்டார்கள் என்று, உணர்ந்தும் - தெரிந்தும், உய்ந்து - உயிர்பிழைத்து, அவர் - அந்த ஆசைகொண்டவர்கள், சொன்னன சொன்னன - சொல்லுமவைகளெல்லாம், செவியில்-என் காதிலேபுகுந்து, தூங்கவும் - நிலைகொண்டிருக்கவும், மன் - என் உடலிலே பொருந்தின, உயிர் - உயிரை, காத்து - ரக்ஷித்துக்கொண்டு, இருங்காலம் - சிறைப்பட்டு இக்கால அளவும், வைகினேன் - இருந்தேன், என்னின் - இப்படியிருக்கிற என்னைப்பார்க்கிலும், வேறு - வேறே, அரக்கியர் - ராக்ஷதிகள், யாண்டையார்-எங்கேயிருக்கிருர்கள் எங்குமிரார்கள், கொல்ஓ - அசைகள்—எ-று. (கஉ)

சொற்பிரியாப்பழிசுமந்துதூங்குவேன்
நற்பிறப்புடைமையுநாணுநன்றரோ
கற்புடைமடந்தையர்கதையுளோர்கடாம்
இற்பிரிந்துய்ந்தவர்யாவர்யானலால்.

இ-ள். சொற்பிரியா - சொல்லுதல் விடாத, பழி - பிறர் சிறைக்குள்ளான பழியை, சுமந்து - கொண்டு, தூங்குவேன் - பொழுதுபோக்குகிறேன் ஆனலென்னுடைய, நற்பிறப்புடைமையும் - நல்லகுடிப்பிறப்பும், நாணும் - எனக்குள்ளவெட்கமும், நன்று - நல்லனவேயாம் என்றுல் நல்லன அன்றென்பது, கற்புடைமடந்தையர் - கற்புள்ளபெண்களாய், கதையுளோர்கள் - முன்நடந்த சரித்திரங்களில்வருகிற பெண்கள், தாம் - தாங்கள், இற்பிரிந்து - தமதில்லினின்று நீங்கி நாயகனைப்பிரி

ந்து, உய்ந்தவர் - உயிர்பிழைத்தவர்கள், யாவர்யான் அலால் - என்னையல்லது அச்சரித்திரங்களிலே யாரிருக்கிறார்கள் ஒருவருமில்லை, நான் ஒருத்தியே நாயகனைப் பிரிந்தும் உயிர்பிழைத்தவளென்பது கருத்து—எ-று. (கரு)

பிறர்மனையெய்தியபெண்ணைப்பேணுதல்
திறனலதென்றுயிர்க்கிறைவன்றீர்ந்தனன்
புறனலரவனுறப்போதுபோக்கியான்
அறனலதியற்றிவேறென்கொண்டாற்றுகேன்.

இ-ள். பிறர்மனை எய்திய - அன்னியர்வீட்டிற்போன, பெண்ணை - ஒருபெண்ணை, பேணுதல் - இனிநாம் வேண்டுகிறது, திறன் - நியாயமானது, அலதென்று - அன்றென்று, உயிர்க்கு - என் உயிர்க்கு, இறைவன் - நாயகனானவர், தீர்ந்தனன் - கைவிட்டுப்போயினார், புறன் - வெளியெல்லாம், அலர் - பழித்துச் சொல்லுதலை, அவன் - அந்தநாயகனானவர், உற - அடைய, யான் - நான், போதுபோக்கி - இப்படிக்காலங்கழித்து, அறன் - தருமம், அலது - அல்லதானபாவத்தை, இயற்றி - செய்து, வேறு - இனிவேறே, என்கொண்டு-எந்தநன்மையைக்கொண்டு, ஆற்றுகேன்- அந்தப்பாபத்தைப் போக்கிக்கொள்ளுவேன்—எ-று. (கச)

எப்பொழுதிப்பெரும்பழியினெய்தினேன்
அப்பொழுதேயுயிர்துறக்குமாணையேன்
ஒப்பரும்பெருமறுவுலகமோதயான்
துப்பழிந்துய்வதுதுறக்கந்துன்னவோ.

இ-ள். எப்பொழுது - எப்போதுநான், இப் பெரும்பழியின் - இந்தப்பெரிதான தூஷணைக்குள்ளே, எய்தினேன் - அடைந்தேன் கூடினேன், அப்பொழுதே- அப்போதுதானே, உயிர் - என் உயிரை, துறக்கும்-போக்கிக்கொள்ளத்தக்க, ஆணையேன் - நியதியுள்ளநான், ஒப்பு அரும் - எவர்க்குஞ் சம்மதியில்லாத, பெருமறு-பெரியதோஷத்தை, ஓத உலகம் - உலகமெல்லாம்சொல்ல, யான் - நான், துப்பு அழிந்து - மதிகேடியாய், உய்வது - பிழைத்திருக்கிறது, துறக்கம் - சுவர்க்கலோகத்தை, துன்னவோ - இனி அடையலாமென்றோ, சிறைப்பட்டவளுக்குச் சுவர்க்கம் கிடைக்குமா கிடையாதே என்கிறாள்—எ-று. (கரு)

அன்பழிசிந்தையராயவாடவர்
வன்பழிசுமக்கினுஞ்சுமக்கவானுயர்
துன்பழிபெரும்புகழ்க்குலத்துட்டோன்றினேன்
என்பழிதுடைப்பவரென்னின்யாவரே.

இ-ள். அன்பு அழி - விசுவாசங்கெட்ட, சிந்தையர் - மனசுள்ளவர்கள், ஆய ஆடவர் - ஆன அவ்விருவரும், வன்பழி - என்னைத்தேடாதிருக்கிற வலிதானபழிப்பை, சுமக்கினும் - கொண்டாலும், சுமக்க - கொள்க, வானுயர் - பெரியவுயர்வுள்ள, துன்பு அழி - துன்பத்தைக்கெடுக்கிற, பெரும்புகழ் - பெரிதான புகழையுடைய, குலத்துள் - குலத்திலே, தோன்றினேன் - பிறந்தேனானேனான, என்பழி - எனக்குண்டானபழிப்பை, துடைப்பவர் - போக்குகிறவர்கள், என்னில் - என்னையல்லது, யாவர் - யாரிருக்கிறார்கள், நானே பழியைத் தீர்த்துக்கொள்ளவேணுமென்பது கருத்து—எ-று. (கசு)

வஞ்சனை மானின்பின்மன்னைப்போக்கியென்
மஞ்சனை வைதுபின்வழிக்கொள்வாயென
நஞ்சனையானகம்புகுந்தநங்கையான்
உய்ஞ்சனெனிருத்தலுமுலகங்கொள்ளுமோ.

இ-ள். வஞ்சனை – கபடவேடங்கொண்டுவந்த, மானின்பின் – அந்தமானுக்குப்பின்னே, மன்னை – சக்கரவர்த்திதிருமகனை, போக்கி – போகவிட்டு, என்மஞ்சனை – எனக்குப்புத்திரபாவமான இளையபெருமாளை, வைது – தூஷித்து, பின் – உன் தமையன் பின்னே, வழிக்கொள்வாயென – செல்லக் கடவையென்று போகவிட்டு, நஞ்சு – விஷத்தை, அனையான – ஒத்தவனை இவனுடைய, அகம்புகுந்த – வீட்டுக்குள்ளேவந்திருக்கிற, நங்கையான் – பெண்ணானநான், உய்ஞ்னன் – உயிர்பிழைத்தவளாய், இருத்தலும் – இருக்கிறதையும், உலகம் – உலகத்தார், கொள்ளுமோ – சம்மதிப்பார்களோ சம்மதியார்கள்—எ-று. (கஎ)

வல்லியன்மறவர்தம்வடுவிற்றீர்பவர்
வெல்லினும்வெல்கபோர்விளிந்துவீடுக
இல்லியலறத்தையானிறந்துவாழ்ந்தபின்
சொல்லியவென்பழியவரைச்சுற்றுமோ.

இ-ள். வல்இயல் – சாமர்த்தியம் பொருந்தின, மறவர் – அந்த இராமவீரரும், தம் – தமக்குண்டாகுகிற, வடுவில் – தோஷத்தினின்றும், தீர்பவர் – நீங்கவேண்டியவர்தான் ஆனால், வெல்லினும் – ராக்ஷதரைவென்றாலும், வெல்க – வெல்லக்கடவது, போர் – சண்டையால், விளிந்துவீடுக – இறந்துவிட்டாலும் விடக்கடவது இச்செய்கை அவ்விருவர்காரியம், இல் – ஒருவருக்குமனையாளாக, இயல் – பொருந்துகிற, அறத்தை – தருமத்தை, யான் – நான், இறந்து – தப்பி, வாழ்ந்தபின் – இப்படிவாழலானபோது, சொல்லிய – அவ்விருவரையும் பிரிந்துபோகும்படிசொன்ன, என்பழி – எனதுபழிப்பு, அவரை – அவ்விருவரை, சுற்றுமோ – சூழுமா சூழாது—எ-று. ஆகையால் என்னால்வந்தபழியை நானே போக்கிக்கொள்ளவேணுமென்று கருத்து. (கஅ)

வருந்தலின்மானமாவனையமாட்சியர்
பெருந்தவமடைந்தயர்முன்புபேதையேன்
கருந்தனிமுகிலினைப்பிரிந்துகள்வரூர்
இருந்தவளிவளெனவேசநிற்பெனோ.

இ-ள். வருந்தலில் – வருத்த முற்றபோது, மானமா – மயிர் நீப்பின் வாழாக் கவரிமானை அனைய ஒத்த, மாட்சியர் – குணமுள்ளவர்களான, பெருந்தகை – பெரிதான தகுதியுள்ள, மடந்தையர்முன்பு – பெண்கள்முன்னே, பேதையேன் – அறிவில்லாதநான், கரும் – கறுத்த, தனி – ஒப்பில்லாத, முகிலினை – மேகநிறமுள்ள ஸ்ரீராமனை, பிரிந்து – நீங்கி, கள்வர் – திருட்டுராக்ஷதர்களுடைய, ஊர் – ஊரிலே, இருந்தவள் – நெடுங்காலமுமிருந்தவள், இவளென – இந்தச்சீதையென்று, ஏச – இகழ்ந்து சொல்ல, நிற்பெனோ – அப்பெண்கள்முன்னே நிற்கமாட்டுவேனோ நிற்கமாட்டேன் எ-று. (கக)

அற்புதனரக்கர்தம்வருக்கமாசற
விற்பணிகொண்டருஞ்சிறையின்மீட்டநாள்

இற்புகத்தக்கலேயென்னின்யானுடைக்
கற்பினேயெப்பரிசிழைத்துக்காட்டுகேன்.

இ-ள். அற்புதன் — ஆச்சரியகுணங்களுள்ள ஸ்ரீராமன், அரக்கர்தம் — ராக்ஷதர்களுடைய, வருக்கம் - கூட்டமான, ஆசுஅற — தோஷந்தீர, வில் — தமதுவில்வலியாலே, பணிகொண்டு — காரியஞ்செய்து, அருஞ்சிறையில் - அரிதானசிறையினின்றும், மீட்டநாள் — திரும்பக்கொண்டபோது, இல் - என்னேநோக்கி நீவீட்டுக்குள், புகத்தக்கலே - புகத்தகாதவள், என்னில் - என்றுசொன்னல், யானுடை - நான்இங்குடையதாயிருக்கிற, கற்பினே - கலங்காநிலேயை, எப்பரிசு-எவ்விதமாக, இழைத்து-செய்து, காட்டுவேன் - மெய்க்காட்டுவேன்—எ-று. காட்டவகையில்லே என்பது கருத்து. (௨௦)

ஆதலானிறத்தலேயறத்தினுறெனச்
சாதல்காப்பவருமென்றவத்திற்சாம்பினுர்
ஈதலாதிடமும்வேறில்லேயென்றெரு
போதுலாமாதவிப்பொதும்பரெய்தினுள்.

இ-ள். ஆதலான் - ஆகையாலே, இறத்தலே - நான் என் ஜீவனேவிடுகிறதே, அறத்தின் - தருமத்தின், ஆறெனு - ஒழுங்கென்று, சாதல் - இதற்குமுன்னேதானே நான் செத்துப்போகிறதை, காப்பவரும் - தடைசெய்கிறராக்ஷதிகளும், என் தவத்தில் - நான்செய்த தவபலத்தினுலே, சாம்பினுர் - மயங்கித் தூங்குகிருர்கள், ஈது - இந்தச் சமயத்தை, அலாது - அல்லாமல், இடமும் - சமயமும், வேறில்லே-வேறேஇனிக்கிடைக்காது, என்று-என்றெண்ணி, ஒருபோது உலாம் - ஒருபுஷ்பங்கள் பொருந்தின, மாதவிப்பொதும்பர் - குருக்கத்திமரச்செறிவிலே எய்தினுள்-சென்ருள்—எ-று. (௨க)

கண்டனனநுமனுங்கருத்துமெண்ணினுன்
கொண்டனன்றுணுக்கமெய்தீண்டக்கூசுவான்
அண்டர்நாயகனருட்டூதன்யானெனுத்
தொண்டைவாய்மயிலினேத்தொழுதுதோன்றினுன்.

இ-ள். அநுமனும் - சிறிய திருவடிஅது, கண்டனன் - பார்த்தார், கருத்தும் - பிராட்டிசாவஙினேத்துச் சென்றகுறிப்பும், எண்ணினுன்-யோசித்துத் தெரிந்தாராய், துணுக்கம் கொண்டனன் - பயங்கொண்டு, மெய் - பிராட்டி உடம்பை, தீண்ட - தொட, கூசுவான் - அஞ்சினவராய், யான் - நான், அண்டர்நாயகன் - தேவநாயகனுன ஸ்ரீராமனுடைய, அருள்-அருளால்வந்த, தூதன்எனு-தூதுவன்என்று, தொண்டை - கொவ்வைக்கனிபோன்ற, வாய்-வாயையுடைய, மயிலினே - மயிற்சாயலுள்ளபிராட்டியை, தொழுது - வணங்கி, தோன்றினுன் - தன் உருவைக்காட்டி முன்னின்ருர்—எ-று. (௨௨)

அடைந்தனெனடியனேனிராமனுணேயால்
குடைந்துலகனேத்தையுநாடுங்கொட்பினுல்
மிடைந்தவருலப்பிலர்தவத்தைமேவலான்
மடந்தைநின்சேவடிவந்துநோக்கினேன்.

இ-ள். அடியனேன் - அடியேனுகியநான், அடைந்தனென - வந்தேனென, இராமன் - ஸ்ரீராமனுடைய, ஆணேயால் - ஏவுதலாலே அடைந்தேன், குடைந்து-

பூமியைப்பிளந்தாவது, உலகனைத்தையும் – உலகங்களெல்லாம், நாமும் – உன்னைத் தேடவேண்டிய, கொட்பினல் – சூட்சியாலே யோசனையாலே, மிடைந்தவர் – தேடிப்போனவர்கள், உலப்பிலர் – கணக்கில்லாதவர்கள் அவர்களில், தவத்தை – நான் தவத்தை, மேவலான் – செய்திருந்ததனாலே, மடந்தை – ஓபெண்கள்சிகாமணி, நின் சேவடி – உனது சிவந்த திருவடிகளை, வந்து – கடல்கடந்துவந்து, நோக்கினேன்- கண்டேன்—எ-று. அவர்கள் என்போற்காணத்தவஞ்செய்திலர் என்க. (உ௩)

ஈண்டுநீயிருந்ததையிடரின்வைகுறும்
ஆண்டகையறிந்திலனதற்குக்காரணம்
வேண்டுமேயரக்கர்தம்வருக்கம்வேரொடு
மாண்டிலவீதலான்மாறுவேறுண்டோ.

இ-ள். ஈண்டு – இங்கே, நீயிருந்ததை – நீயிருக்குமிருப்பை, இடரின் – துன்பத்திலே, வைகுறும் – தங்கிக்கிடக்கிற, ஆண்தகை – புருஷசிரேஷ்டரான ஸ்ரீராமன், அறிந்திலன் – இன்னும்தெரிந்திலர், அதற்குக்காரணம் – அவர்தெரிந்திலரென்பதற்குத் திருஷ்டாந்தம், வேண்டுமோ – சொல்லவேணுமா, அரக்கர்தம் – இந்த ராக்ஷதருடைய, வருக்கம் – கூட்டம், வேரொடு – அடியோடே, மாண்டில – அழியாதிருக்கின்றன, ஈது – அவர்கள் அழியாதிருக்கிறஇதுவே, அலால் – அல்லாமல், மாறு – வேறேகாரணம், வேறுண்டோ – இன்னம் உண்டோ இல்லை—எ-று. ஆண்டகைநீ இருக்குமிடம் தெரிந்தால் ராக்ஷதர்களழிந்து போவார்கள், அவர்தெரியாதிருத்தலால் இவர்கள் சாவாதிருக்கிறார்கள் சாவாதிருக்கிறதே அவர்தெரிந்திலரென்பதற்குக்காரணமென்க. (உ௪)

ஐயுறலுனதடையாளமாரியன்
மெய்யுறவுணர்த்தியவுரையும்வேறுள
கையுறுநெல்லியங்கனியிற்காண்டியால்
நெய்யுறுவிளக்கனைய்நினையல்லேறென்றான்.

இ-ள். ஐயுறல் – என்னைச் சந்தேகப்படாதே, உனதுஅடையாளம் – ராமன் கொடுத்த அடையாளமிருக்கின்றது, ஆரியன் – ஸ்ரீராமன், மெய்உற – நீ நிஜந்தெரிவதாக, உணர்த்திய – சொன்ன, உரையும் – சொற்களும், வேறு – வெவ்வேறாக, உள-உண்டாயிருக்கின்றன, கைஉறு – உன்கையிலேயிருக்கிற, நெல்லியங்கனியில்- நெல்லிப்பழம்போல், காண்டி – பார்ப்பாயாக, நெய் உறு – நெய்உளதான, விளக்கு- திருவிளக்கை, அனைய் – ஒத்ததாயே, வேறு – என்னை வேறாக, நினையல் – எண்ணாதேகொள், என்றான் – என்றுசொன்னார்—எ-று. (உ௫)

வேறு.

என்றவனிறைஞ்சநோக்கியிரக்கமுமுனிவுமெய்தி
நின்றவனிருதனல்லனெறிநின்றுபொறிகளைந்தும்
வென்றவனல்லனாகின்விண்ணவனாகவேண்டும்
நன்றுணர்வுரையன்றாயனவையிலன்போலுமென்னா.

இ-ள். என்று அவன் – என்று திருவடி, இறைஞ்சநோக்கி – வணங்கக்கண்டு, இரக்கமும் – தயவும், முனிவும் – கோபமும், எய்தி – உண்டாகி, நின்றவன் – எதிரேநிற்கிறவன், நிருதன் – ராக்ஷதன், அல்லன் – அல்லனே, நெறிநின்று – கிரமப்ப

டியேநடந்து, பொறிகளைந்தும் – ஐந்திந்திரியங்களையும், வென்றவன் – நிக்கிரகித்த முனிவன், அல்லனுகில் – அல்லனுனல், விண்ணவன் – இவன்தேவனே, ஆகவேண் டும் – ஆகியிருத்தலாகும், நன்று உணர்வு – இவனெண்ணமோ நன்ருயிருக்கிறது, உரையன் – சொற்களும் நன்குடையனுயிருக்கிருன், தூயன் – உருவும் பரிசுத்தனு யிருக்கிருன் ஆகையாலே, நவையிலன் – இவன் தோஷரகிதனே, என்னு – ஆமென் று—எ-று. போலும் அசை. (உசு)

அரக்கனேயாகவேறேரமரனேயாகவன்றிக்
குரக்கினத்தலைவனேதானுகுககொடுமையாக
இரக்கமேயாகவந்திங்கெம்பிரானாமஞ்சொல்லி
உருக்கினனுணர்வைத்தந்தானுயிரிதினுதவியுண்டோ.

இ-ள். அரக்கனே – இவன் ராக்ஷதனுனலும், ஆக – ஆகட்டும், வேறோர்- வேறேஒரு, அமரனே – தேவனுனலும், ஆக – ஆகட்டும், அன்றி-அல்லது, குரக்கு- குரங்குகளுடைய, இனம் – கூட்டத்துக்குள், தலைவனே தான் – சிறந்தவனுனலும், ஆகுக – ஆகட்டும், கொடுமை – இவன்செய்வது கொடுமையே, ஆக – ஆனுலும்ஆகட் டும், இரக்கமே – இவன்செய்வது என்னிடத்தில் இரக்கமே ஆனுலும், ஆக – ஆகட் டும், வந்து – இந்தச்சமயத்திலேவந்து, இங்கு – எம்பிரான் என் ஆண்டவனுடைய, நாமம் – திருநாமத்தை, சொல்லி – உச்சரித்து, உருக்கினன் – உணர்வை என்மன சை உருகப்பண்ணினுன், தந்தான்உயிர் – என் உயிரையுந்தருவானுனன், இதின்- இதைப்பார்க்கிலும், உதவியுண்டோ – உபகாரஞ்செய்வதுவேறுண்டாஇல்லை-எ-று.

எனநினைத்தெய்தநோக்கியிரங்குமெனுள்ளங்கள்ளம்
மனனகத்துடையராயவஞ்சகர்மாற்றமல்லன்
நினைவுடைச்சொற்கள்கண்ணீர்நிலம்புகப்புலம்பாநின்ருன்
வினவுதற்குரியனென்னுவீரநீயாவனென்ருள்.

இ-ள். எனநினைத்து – என்றுயோசித்து திருவடியை, எய்தநோக்கி – நன்ரு கப்பார்த்து, என் – யாதுகாரணத்தால் இவனுக்கு, உள்ளம் – என்மனசு, இரங்கும்- இரக்கங்கொள்கின்றது, கள்ளம் – ஆனல் திருட்டுத்தனத்தை, மனனகத்து – மன சிலே, உடையராய – உள்ளவர்களான, வஞ்சகர் – கபடராக்ஷதர்கள், மாற்றம் – வா ர்த்தையுள்ளவன், அல்லன் – அல்லனே இன்னும், நினைவுடை – நான் எண்ணுதலை யுடைய, சொற்கள் – வார்த்தைகள்சொல்லி சொற்களாலே, கண்ணீர் – இவன்கண் களினீரானது, நிலம்புக – பூமியிலேசோர, புலம்பாநின்ருன் – பிரலாபிக்கிருன் ஆ கையால், வினவுதற்கு – நீயாரென்று கேட்பதற்கு, உரியன்என்னு – தக்கவன்தா னென்று, வீர – ஓ வீரனே, நீயாவன் – நீயார், என்ருள் – என்றுகேட்டாள்-எ-று.

ஆயசொற்றலைமேற்கொண்டவங்கையனன்னைநின்னைத்
தூயவன்பிரிந்தபின்புதேடியதுணைவன்றெல்லைக்
காய்கதிர்ச்செல்வன்மைந்தன்கவிக்குலமவற்றுக்கெல்லாம்
நாயகன்சுக்கிரீவனென்றுளனவையிற்றீர்ந்தான்.

இ-ள். ஆயசொல் – அந்தவார்த்தைகளை, தலைமேற்கொண்ட – சிரசின்மேற் கொண்டகுவித்த, அங்கையன் – அழகியகைகளையுடையவராய், அன்னை – தாயே, நின்னை – உன்னை, தூயவன் – பரிசுத்தனுன ஸ்ரீராமன், பிரிந்தபின்பு-பிரிந்தபிறகு- தேடிய – உன்னைத்தேடுதற்காக, துணைவன் – கிடைத்தசகாயனுனவன், தொல்லை-

தோன்றுதொட்டு, காய் – எரிக்கப்பட்ட, கதிர் – கிரணங்களில், செல்வன் – மிக்க சூரியனுடைய, மைந்தன் – புத்திரன் அவனே, கவிக்குலம் – குரங்குக்கூட்டங்களான, அவற்றுக்கெல்லாம் – அவைகளுக்கெல்லாம், நாயகன் சுக்கிரீவன் – அரசன், என்று உளன் – என்று ஒருவனிருக்கிறான், நவையில் – தோஷங்களினின்று, தீர்ந்தான் – நீங்கினவன்—எ-று. (உகூ)

மற்றவன்முன்னோனந்நாளிராவணன்வலிதன்வாலின்
இற்றுகக்கட்டியெட்டுத்திசையினுமெழுந்துபாய்ந்த
வெற்றியன்றேவர்வேண்டவேலையைவிலங்கன்மத்தில்
சுற்றியநாகந்தேயவமுதெழக்கடைந்ததோளான்.

இ-ள். மற்றவன் – அந்தச்சுக்கிரீவனுக்கு, முன்னோன் – மூத்தவன் ஒருவன் அவனே, அந்நாள் – சென்றகாலத்திலே, இராவணன்வலி – இந்தத் துஷ்டனுடைய சாமர்த்தியமெல்லாம், இற்று உக – அழிந்து சிந்தும்படி, தன்வாலின் – தனதுவாலினாலே, கட்டி – சூழ்ந்து, எட்டுத் திசையினும் – எட்டுத்திக்கிலும், எழுந்து பாய்ந்த-தாவிச்சென்ற, வெற்றியன் – ஜெயத்தையுடையவன், தேவர்வேண்ட – தேவர்கள் கேட்டுக்கொள்ள, வேலையை – திருப்பாற்கடலை, விலங்கல் – மந்தரகிரியாகிய, மத்தில் – மத்திலே, சுற்றிய – சூழ்ந்த, நாகம் – பாம்பு, தேய – நைய, அமுது எழ – அமிர்தம் உண்டாகவும், கடைந்த – மதனம்பண்ணின, தோளான் – தோள்களுள்ளவன்—எ-று. (௩௦)

அன்னவன்றன்னையுங்கோனம்பொன்றாலாவிவாங்கிப்
பின்னவற்கரசுநல்கித்துணையெனப்பிடித்தானங்கள்
மன்னவன்றனக்குநாயேன்மந்திரத்துள்ளேன்வானின்
நன்னெடுங்காலின்மைந்தனுமமுமநுமனென்றான்.

இ-ள். அன்னவன்தன்னை – அப்படிப்பட்ட வாலியை, உங்கோன் – உங்கள் நாயகனானவர், அம்பு ஒன்றால் – ஒருபாணத்தினாலே, ஆவிவாங்கி – உயிரை அபகரித்து, பின்னவற்கு – அவன் தம்பியான சுக்கிரீவனுக்கு, அரசு நல்கி – வாலியினுடைய ராஜாங்கத்தைக்கொடுத்து, துணையென – உன்னைத்தேடத்துணையென்று, பிடித்தான் – கொண்டான் உங்கோன், நங்கள் – எங்களுக்கு, மன்னவன் தனக்கு – ராஜனான சுக்கிரீவனுக்கு, நாயேன் – அடியேன், மந்திரத்துள்ளேன் – மந்திரித்தொழில் செய்கிறவன், வானின் – ஆகாயத்திலே, நல் – நன்றாக, நெடும் – நீண்டுலாவுகிற, காலின்மைந்தன் – வாயுபுத்திரன், நாமும் – எனக்குப்பெயரோ, அநுமன் என்றான்-அனுமன் என்றுசொன்னார்—எ-று. (௩க)

எழுபதுவெள்ளங்கொண்டவெண்ணனவுலகமெல்லாம்
தழுவிநின்றெடுப்பவேலைதனித்தனிக்கடக்குந்தாள
குழுவினவுங்கோன்செய்யக்குறித்ததுகுறிப்பினுன்னி
வழுவிலசெய்தற்கொத்தவானரம்வானினீண்ட.

இ-ள். எதுபதுவெள்ளம் – என்று, கொண்ட – சொல்லுகிற, எண்ணன-கணக்குள்ளவைகள், உலகமெல்லாம் – எல்லாவுலகங்களையும், தழுவிநின்று – சேரக்கொண்டு, எடுப்ப – தூக்கத்தக்கவைகள், வேலை – கடலை, தனித்தனி – ஒவ்வொன்றுமே, கடக்கும் – தாண்டிவருகிற, தாள – கால்களுள்ளவைகள், குழுவின – கூடியிருக்கின்றன, உங்கோன் – உங்கள்நாயகனானவர், செய்யக்குறித்தது – செய்ய எண்

ணினதை, குறிப்பின் உன்னி - தங்கள் மனத்திலேகொண்டு, வழு இல - தவருமல், செய்தற்கு - செய்கிறதற்கு, ஒத்த - தகுந்த, வானரம் - குரங்குகள், வானில் - ஆகாயத்திலும், நீண்ட - தேடப்போயிருக்கின்றன—எ-று. வானரம் வானிற்பெரியன என ஆம் கடலிற்பெரிது. (௩௨)

துப்புறுபரவையேழுஞ்சூழ்ந்தபாரேழுமாழ்ந்த
ஒப்புறுநாகர்நாடுமும்பரினிம்பர்காறும்
இப்புறந்தேடிநின்னையெதிர்ந்திலவென்னினண்டத்
தப்புறம்போயுந்தேடவவதியினமைந்துபோன.

இ-ள். துப்புறு - அலைகளைவீசுகிற, பரவை யேழும் - எழு கடலும், சூழ்ந்த - அக்கடல் சூழ்ந்துள்ள, பார் ஏழும் - ஏழுதீவும், ஆழ்ந்த - ஆழத்திலிருக்கிற, ஒப்புறு - தேவருலகத்தை ஒப்பான, நாகர்நாடும் - நாகலோகமும், உம்பரின் - மேலுலகம்போலவே, இம்பர் காறும் - கீழே இந்த உலகளவும், இப்புறம் - இவ்விடங்களெல்லாம், தேடி நின்னை - தேடி உம்மை, எதிர்ந்தில - காணஇல்லை, என்னில் - ஆனுல், அண்டத்து அப்புறம் - இந்த அண்டத்துக்கப்பாலும், போயும் - போயாகிலும், தேட - தேடுதற்கு, அவதியின் - இவ்வளவுநாள் என்று, அமைந்து - கெடுச்செய்துகொண்டு போன - போயிருக்கின்றன—எ-று. (௩௩)

புன்றொழிலரக்கன்கொண்டுபோந்தநாள்பொதிந்ததூசின்
குன்றினெம்மருங்கினிட்டவணிகலக்குறியினுலே
வென்றியானடியன்றன்னைவேறுகொண்டிருந்துகூறித்
தென்றிசைசேறியென்றுனவனருள்சிதைவதாமோ.

இ-ள். புன் தொழில் - இழிதொழிலையுடைய, அரக்கன் - இந்த ராக்ஷதன், கொண்டுபோந்தநாள் - உம்மைக் கொண்டுவரும்போது, பொதிந்த தூசின் - கிழித்த வஸ்திரத்திலே முடிந்துள்ளவைகள், எம் குன்றின்மருங்கில் - எங்கள் மலையினிடத்திலே, இட்ட - நீர்விழவிட்ட, அணிகலம் - நீர் அணிந்திருந்த ஆபரணங்களின், குறியினுலே - அடையாளத்தினுலே நான் காட்டினதினுலே, வென்றியான் - அந்த ஜெயராமன், அடியன்றன்னை - அடியேனை, வேறுகொண்டு - தனியேகூட்டிக்கொண்டு, இருந்து - போயிருந்து ஓரிடத்திருந்து, கூறி - அடையாளங்களுஞ் சொல்லி, தென்திசை - நீதெற்குத்திசைக்கு, சேறியென்ருன் - போ என்ருர், அவன் அருள் - அவரேவினது, சிதைவதாமோ - பழுதுபடுமோ, உம்மைநான் கண்டதினுலே பழுதில்லை—எ-று. (௩௪)

கொற்றவற்காண்டுக்காட்டிக்கொடுத்தபோதடுத்ததன்மை
பெற்றியினுணர்தற்பாற்றேவுயிர்நிலைபிரிதுமுண்டோ
இற்றைநாளளவுமன்னுவன்றுநீயிழித்துநீத்த
மற்றைநல்லணிகள்காணுன்மங்கலங்காத்தமன்னே.

இ-ள். கொற்றவற்கு - ஸ்ரீராமனுக்கு, ஆண்டு - அங்கே உமதென்றுதெரிய, காட்டி - முன்னேபார்க்கச்செய்து, கொடுத்தபின் - நான் கொடுத்தபின்பு, அடுத்த தன்மை - அவருக்குண்டான படியை, பெற்றியின் - நான் சொல்லுகிறதினுலே, உணர்தற்பாற்றே - அறிந்துகொள்ளக்கூடுமோ கண்டே தெரியவேணும், உயிர்நிலை - ஜீவஸ்திதி, பிறிதும் - அந்த ஆபரணத்தையல்லாமல் வேறேயும், உண்டோ - உளதாமா, இற்றைநாள் அளவும் - இன்றளவும், அன்னு - தாயே, நீஅன்று - நீர்பிரிந்து

வருகிறபோது, இழித்து - இவைகள்வேண்டாவென்று, நீத்த - எறிந்து விழவிட்ட, மற்றை - அந்த, நல் அணிகள் - நல்ல ஆபரணங்களே, உன்மங்கலம் - நீர் சுமங்கலியாகவேயிருக்கும்படி, காத்த - இராமனுயிரை ரக்ஷித்துக்கொண்டிருக்கின்றன, ஆபரணங்காணுக்காலிறந்துபடுவரென்கிறூர்திருவடி—எ-று. காண்முன்னிலையசைமன்னே அசை. (நடு)

ஆயவன்றன்மைநிற்கவங்கதன்வாலிமைந்தன்
ஏயவன்றென்பால்வெள்ளமிரண்டினேடெழுந்துசேனை
மேயினபடர்ந்துதீரவனையவன்விடுத்தானென்னைப்
பாய்புனலிலங்கைமூதூர்க்கென்றனன்பழியைவென்றூன்.

இ-ள். ஆயவன் - அந்தராமனுடைய, தன்மை - காரியம் அப்படி, நிற்க-இருக்க இனி, வாலிமைந்த னங்கதன் - வாலிபுத்திரனுன அங்கதனும், ஏயவன் - ராமனால் அனுப்பப்பட்டவனே, தென்பால் - தென்றிசைக்கு, வெள்ளமிரண்டினேடு-இரண்டுவெள்ளஞ்சேனையுடனே, எழுந்து - கூடிவந்து, சேனை - அச்சேனைகள், மேயினபடர்ந்து - பரவியெங்கும்போயிருக்கின்றன, தீர - அவைகள்வராதிருக்கச்செய்தே, அனையவன் - அந்த அங்கதன், என்னைவிடுத்தான் - என்னை அனுப்பினுன், பாய்புனல் - கடல்நீர்மோதுவதான, இலங்கைமூதூர்க்கு - இந்த இலங்காபுரிக்கு விடுத்தானென்னை, என்றனன் - என்றுசொன்னூர், பழியை - பிராட்டிக்குண்டானபழிப்பை, வென்றூன் - போக்கினுர் போக்கின திருவடி—எ-று. (நசு)

எய்தவனுரைத்தலோடுமெழுந்துபேருவகையேற
வெய்துறலொடுங்குமேனிவானுறவிம்மியோங்கி
உய்தல்வந்துற்றதோவென்றருவிநீரொழுகுகண்ணுள்
ஐயசொலையமேனியெப்படிக்கறிதியென்றூள்.

இ-ள். எய்து - ஊதாகவந்த, அவன் - அந்த அனுமார், உரைத்தலோடும்-சொன்னஅளவில், எழுந்து - நெஞ்சிலேதோற்றி, பேர் உவகை - பெருங்களிப்பு, ஏற - பின்னுமேன்மேலாக, வெய்துறல் - துக்கித்திருத்தல், ஒடுங்கி - போய், மேனி - சரீரம், வானுற - பெரிதாக, விம்மி ஓங்கி - பெருத்து நீண்டு, உய்தல் - நான் பிழைக்கும்படியான, வந்துற்றதோ - காரியசித்தியாயிற்றே, என்று - என்பதாய், அருவி - மலையருவிபோல், நீரொழுகு - நீர்பெருகிவருகிற, கண்ணுள் - கண்களையுடையபிராட்டி, ஐய - ஐயனே, ஐயன் - அந்த ஸ்ரீராமனுடைய, மேனி - திருமேனியை, எப்படிக்கு - எந்தவிதமாக எவ்வுவமை சொல்ல, அறிதி - நீதெரிந்தாய், சொல் - சொல்லக்கடவை என்றூள்—எ-று. (நஎ)

படியெடுத்துரைத்துக்காட்டும்படித்தன்றுபடிவம்பண்பின்
முடிவுளவுவமமெல்லாமிலக்கணமொழியுமுன்னர்த்
துடியிடையடையாளத்தினறுடரவைதொடர்தியென்னு
அடிமுதன்முடியின்காறுமறிவுறவநுமன்சொல்வான்.

இ-ள். படிவம் - அவன்திருமேனியோ, படியெடுத்து-ஒப்புள்ளவைகளாலே, உரைத்துக்காட்டும் - சொல்லித்தெரிவிக்கிற, படித்து அன்று - தன்மையுள்ளதல்ல, பண்பின் - குணங்களாலே, பண்புந்தொழிலும் - பயனுமென்பவைகளாலே, முடிவுஉள - முடிவுபெற்றிருக்கிற சரியாயிருக்கிற, உவமமெல்லாம் - எல்லாஉவமைகளுக்குமுள்ள, இலக்கணம் - சிறப்பியல்புகளை, மொழியுமுன்னர் - நான்சொல்லுத

ற்குமுன்னே, துடிஇடை - உடுக்கைபோலும் இடையையுடையாய், அடையாளத்தின் - உனது ஞாபகக்குறியினலே, தொடர் - காணத்தக்க, அவை - அந்த உபமேயங்களை அந்தந்த அவயவங்களை, தொடர்தியென்று - கண்டுகொள்ளென்று, அடிமுதல் - பாதாதி, முடியின்காறும் - கேசஅளவும், அறிவுற - பிராட்டிதெரிவதாக, அனுமன்சொல்வான் - திருவடிசொல்லுகிருர்—எ-று. (ருஅ)

வேறு.

சேயிதழ்த்தாமரையென்றுசேணுளோர்
ஏயினரதன்றுணையெளியதில்லையால்
நாயகன்றிருவடிகுறித்துநாட்டுறின்
பாய்திரைப்பவளமுங்குவளைப்பண்பினும்.

இ-ள். சேய்இதழ் - சிவந்த இதழ்களையுடைய, தாமரையென்று - தாமரைமலர்சரியென்று, சேணுளோர் - முன்னுள்ளபெரியோர்கள், ஏயினர் - பாதங்களுக்குவமையாக நியமித்தார்கள், அதன்துணை - அதனளவு அம்மலரளவு, எளியது-சுலபமாய்க்கிடைப்பது, இல்லை - வேறென்றுமில்லை, ஆல் - ஆகையால் சேணுளோர் கண்ணுக்கெளிதாய்க் கிடைத்தமையா லம்மலரைநியமித்தாரென்க, நாயகன் - உனது கணவனுடைய, திருவடி - திருவடியையே, குறித்து - உத்தேசித்து, நாட்டுறில்-லக்ஷணஞ்சொல்லலானல், பாய்திரை - பரவுகிற அலைமேலேமிதக்கிற, பவளமும்-பவளமுங்கூட, குவளைப்பண்பின் - நீலோற்பலம்போல், ஆம் - கரியதென்று சொல்லலாகும், எனவே - தாமரைமலரும் உவமையாகாது பவளமும் திருவடியின்சிவப்புக்கு நேர்நில்லாது என்க—எ-று. (ருகூ)

தளங்கெழுகற்பகமுகிழுந்தண்டுறை
இளங்கொடிப்பவளமுங்கிடக்கவென்னவை
துளங்கொளிவிரற்கெதிருதிக்குஞ்சூரியன்
இளங்கதிரொக்கினுமொக்குமேந்திழாய்.

இ-ள். தளம்கெழு - இதழ்களோடுகூடின, கற்பகமுகிழும் - கற்பக அரும்பும், தண்துறை - குளிர்ந்தநீர்த்துறையிலே கிடக்கிற, இளங்கொடி - இளமையான கொடிரூபமுள்ள, பவளமும் - பவளமும் சேணுளோர் நியமித்ததானுலும், கிடக்க-இருக்கட்டும், என் - யாதுபயனும், அவை - அவ்விரண்டும், துளங்கு - விளங்குவதான, ஒளி - ஒளியையுடைய, விரற்கு - கால்விரல்களுக்கு நிறத்தால், எதிர் - நேரே, உதிக்கும் - உதயமாகிற, சூரியன் - சூரியனுடைய, இளங்கதிர் - செஞ்சோதியானது, ஒக்கினும் - ஒருபடிஒப்பானுலும், ஒக்கும் - ஆகும், ஏந்திழாய் - முன்னே தாங்கின ஆபரணங்களை யெம்மிடம் விழவிட்டதாயே—எ-று. கற்பகப்பூ அரும்பும் கொடிப்பவளமும் கால்விரல்களுக்குவமை. (சா0)

சிறியவும்பெரியவுமாகித்திங்களோ
மறுவிலபத்துளவல்லமற்றினி
எறிசுடர்வயிரமோதிரட்சியெய்தில
அறிகிலேனுகிர்க்கியானுவமமாவன.

இ-ள். சிறியவும் - சின்னவடிவும், பெரியவும் - பெரியவடிவும், ஆகி - உள்ளதாய், திங்களோ - சந்திரனே, மறுஇல - களங்கரகிதனய், பத்து-பத்துச்சந்திரன்,

உளஅல்ல - உள்ளவைகளல்ல, மற்று - வேறே, இனி - மேல், எறிசுடர் - ஒளிவீசுகின்ற, வயிரமோ - வயிரரத்நமோஎன்றால், திரட்சி - அதுவும் பத்துக்கூடியிருத்தலே, எய்தில - பொருந்ினதில்லை ஆகலால், உகிர்க்கு - கால்விரலினகங்களுக்கு, உவமமாவன - சரியாயிருக்கும் பொருள்களை, யான் - நான், அறிகிலேன் - சேனுளோர் நியமித்தசந்திரன் வயிரமென்னு மிவ்விரண்டையன்றி வேறேதெரிந்திலேன் எ-று. (சச)

பொருந்திலநிலனெடுபோந்துகானிடை
வருந்தினவெனினதுநூலைமாறுகொண்
டிருந்ததுநின்றதுபுவனம்யாவையும்
ஒருங்குடன்புணர்வஃதுரைக்கற்பாலதோ.

இ-ள். நிலனெடு - தமக்குரியஊரிலே, பொருந்தில - இராதனவாய் கீழே படியாதவைகளாயிருந்து பின்பு, கானிடைபோந்து - காடுகளிலேநடந்து, வருந்தின - வருத்தமுற்றிருக்கின்றன, எனில் - என்றுசொன்னாலும், அது - அவர்புறவடி, நூலை - நூலெழுதுபுத்தகத்தை, மாறுகொண்டு - நேர்கொண்டு, இருந்தது - ஆசனத்தின்மேலிருக்கலானது, நின்றது - காடெல்லாம் நடவாநின்றது, புவனம் - யாவையும் - உலகமெல்லாம், ஒருங்குஉடன் - ஒருசேரமுழுதுந் தன்னெடு, புணர்வு - சேர்க்கையுள்ளது, அஃது - அப்படிப்பட்டதான புறவடி, உரைக்கற்பாலதோ - ஒருவராலேசொல்லும்பகுதியுள்ளதோ அன்று—எ-று. வாமனவதாரத்தைக்குறித்துச் சொன்னாராகவுமாம், புவனம்யாவையும் - காடு மேடுகளெல்லாம், புணர்வு - சேர்க்கை யுள்ளது, எல்லாவுலகமும் - வணங்கத்தக்கது என்க. (சஉ)

தாங்கணைப்பணிலமும்வளையுந்தாங்கரா
வீங்கணைப்பள்ளியானெனினும்வேறினிப்
பூங்கணைக்காற்கொருபரிசுதான்பொரும்
ஆங்கணைக்காவமோவாவதன்னையே.

இ-ள். அணை - கைகளே அணையாக, தாங்கு - தாங்கலான, பணிலமும் சங்கும், வளையும் - சக்கரமும், தாங்கு - தன்னைத்தாங்குவதாய், அரா - ஆதிசேடனாகிய, வீங்கு - காற்றையுண்டுபெருக்கிற, அணை - பஞ்சுமெத்தையான, பள்ளியான் - படுக்கையுமுள்ளதிருமாலே, எனினும் - உவமைநியமித்த தானாலும், வேறுஇனி - இனி உவமைக்குவேறான, பூங்கணைக்காற்கு - அழகிய கணைக்காலுக்கு, ஒருபரிசுதான் - ஒருபடிதான், பொரும் - ஒப்பாகும், ஆவமோ - அம்புக்கூடென்றாலோ, ஆம் கணைக்கு - அம்புகள்வைக்க இடமாம், ஆவது - கணைக்காலுக்கொப்பாகுவது ஆவமோ அம்புக்கூடோ, அன்னையே - தாயே—எ-று. உவமை நியமிக்கவல்ல சேனுளோரில் திருமாலும் ஒருவரானாலும், ராமன் பூங்கணைக்காலுக்கு முழுதும் உவமையாகாது, அம்புக்கூடு ஒருபரிசுதான் பொருமென்க எனினுமென்றதிலும்மை திருமால் நியமித்தது பிறழாதென்றுகுறிக்கிறது. (சங)

அறங்கிளர்பறவையினரசனாடெழிற்
பிறங்கெருத்தனையனபெயரும்பெற்றுடை
மறங்கிளர்மதகரிக்கரமுநாணின
குறங்கினுக்குவமையிவ்வுலகிற்கூடுமோ.

இ-ள். அறங்கிளர் - தருமவடிவாக விளங்குகிற, பறவையின் - பக்ஷிகளுக்கு, அரசன் - ராஜனான கருடனுடைய, ஆடு - திருமால் குறங்குகளிருந் தசைவதான,

எழில் – அழகு, பிறங்கு – விளங்குகின்ற, எருத்து - கழுத்து நிறத்தை, அனையன- ஒத்த அனைய என்னும் பெயரெச்சக்குறிப்பு அன்சாரியைபெற்றுநின்றது,பெயரும்- வெள்ளையென்கிறபெயரையும், பெற்று – கொண்டு, உடை – தானுடைய, மறம்- வீரத்துடன், கிளர் - விளங்குகிற, மதகரிக்கரமும் – மதயானையினது துதிக்கையும், நாணினது – நாணித்தொங்குதலாயிருக்கிறது, குரங்கினுக்கு – அப்படிப்பட்ட தொடைகளுக்கு, உவமை – நேரானபொருள், இவ்வுலகில்-இந்தவுலகத்திலே, கூடுமோ- இனித்தானுண்டாகுமா இல்லை—எ-று. கருடன் பிடர்போல் தான்முழுதும் வெளுத்ததானாலும் திருமால் தொடைகள் தன்கழுத்திலேபொருந்தப் பொருமையால் கைசோர்ந்து நாணியது என்க, நாணினது என்பது - நாணினவெனக் கடைக்குறையாயிற்று, கரமும் நாணையுடையதாயிற்று என்க தருமவடிவென்ருலும் வேதவடிவென்ருலும் ஒக்கும். (சச)

வலஞ்சுழித்தொழுகுநீர்வழங்குகங்கையின்
பொலஞ்சுழியென்றலும்புன்மைபூவொடு
நிலஞ்சுழித்தெழுவணியுந்திநேரினி
இலஞ்சியுஞ்போலும்வேறுவமையாண்டரோ.

இ-ள். வலம் – வலப்புறமாக பலங்கொண்டு, சுழித்து – சுழலுதலாய், ஒழுகு- ஓடுவதான, நீர் – ஜலரூபமாக, வழங்கு – சொல்லப்படுகிற, கங்கையின் – கங்காநதியினது, பொலம் – அழகிதான, சுழி – நீர்ச்சுழிபோலும், என்றலும் – என்றுசொல்லுகிறதும், புன்மை – அல்பவுவமையே, பூவொடு – தாமரைப்பூவுடன், நிலம் – உலகமும், சுழித்து கடல் – சூழ்வதாய், எழும் – உண்டாகத்தருகிற, மணி – அழகிதான, உந்தி – திருவுந்தியானத்தை, நேர் இனி – ஒப்புவதாக, இலஞ்சியும் – மகிழம்பூவும், போலும் – நேர்நிற்கும், வேறு – உவமை, இவ்விரண்டையன்றிவேறே ஒப்பானபொருள்கள், யாண்டு – எந்தநூலிலே சொல்லுகின்றன அது எந்த உலகத்திலே உண்டு எ-று. (சரு)

பொருவருமரகதப்பொலன்கொண்மால்வரை
வெருவுறவிரிந்துயர்விலங்கலாகத்தைப்
பிரிவுறநோற்றிலளென்னிற்பின்னையத்
திருவினிற்றிருவுளார்யாவர்தெய்வமே.

இ-ள். பொரு அரு – ஒப்பரிதான, மரகதம் - மரகதமென்னும், பொலங்கொள் – அழகுகொண்ட, மால்வரை – பெரியமலையும், வெருவுற – அஞ்சுவதாக,விரிந்து – அகன்று, உயர் – வளர்வதான, விலங்கல் – இதுவொரு மலையென்னலாகிய, ஆகத்தை – மார்பை, பிரிவு உற – பிரிகிறதில்லாதிருக்க, நோற்றிலள் – தவஞ்செய்திலள், என்னில் – என்ருல், பின்னை – இனி, அத்திருவினில் – அந்த லட்சுமியைப் பார்க்கிலும், திருவுளார் – சிறந்த அழகுள்ள பெண்கள், யாவர் – யாரிருக்கிருர்கள், தெய்வமே – எனக்குக் குலதெய்வமான தாயே, அழகிற்சிறந்த திருவும் க்ஷணகாலமேனும் பிரிவுறநோற்றிலள் – எனப்பாடங்கொண்டு பிரியப்பொருளென்க, அகலகில்லே னிறையுமென்றலர் மேண்மங்கை யுறைமார்பென்பதுகாண்க—எ-று. நோற்றுளையாயில் நீபிரியாய் என்பது குறிப்பு. (சசு)

நீடுறுகீட்டிசைநின்றயானையின்
கோடுறுகரமெனச்சிறிதுகூறலாத்

தோடுறுமலரெனச்சுரும்புசுற்றருற்
தாடொடுதடக்கைவேறுவமைசாலுமே.

இ-ள். நீடுறு — நெடுங்காலமுமுளதான, கீட்டிசை — கிழக்குத்திக்கிலே, நின்ற — நிற்கிற, யானையின் — ஐராவதத்தினது, கோடு உறு — கொம்புகளினடுவேயிருக்கிற, கரமென — துதிக்கைபோலுமென்று, சிறிதும் — கொஞ்சமேனும், கூறலா-தொடைகளுக்கொப்புச் சொல்லப்படாதிருக்கச்செய்தே, தோடு உறு — இதழ்கள்பொருந்தின, மலரென — தாமரைமலரென்றெண்ணி, சுரும்பு — வண்டுகள், சுற்று — மொய்க்கிறது, அரு — நீங்காதிருக்கிற, தாள் — முழந்தாளுக்குக்கீழும், தொடு — நீண்டிருப்பதான, தடக்கை — நீண்டகைகள், வேறு உவமை — தமக்கு வேறோரொப்புளதாக, சாலுமே — சாலா அமையுமோ—எ-று. கூறலார் எனப்பாடங்கொண்டு குறங்கென்பதைத் தகுதிபற்றி வருவித்துக்கொள்க சிறிதுகூறலாமென்று கைக்கே உவமையாக்குவது பொருந்தாமையுணர்க. (சஎ)

பச்சிலைத்தாமரைபகல்கண்டாலெனக்
கைச்செறிமுகிழுகிர்கனகனென்பவன்
வச்சிரயாக்கையைவகிர்ந்தவன்றொழில்
நிச்சயமென்றெனிணையநீங்குமே.

இ-ள். பச்சிலை — பசிய இலைகளையுடைய, தாமரை — தாமரைமலரை, பகல்-பகற்காலத்திலே, கண்டால் என — கண்டாற்போன்ற, கை — அங்கையிலே, செறி-நெருங்கின, முகிழ் — அரும்புபோன்ற குவிந்த, உகிர் — நகங்களுக்கு, கனகனென்பவன் — இரணியனென்னுமவனுடைய, வச்சிரம் — வயிரமலைபோன்ற, யாக்கையை-மார்பை, வகிர்ந்த — கிழித்த, வன் தொழில் — கொடுஞ்செய்கையே, நிச்சயம் — எப்பொழுதுமுள்ளது, அன்றெனில் — அச்செய்கை உள்ளதல்லதென்றால் என்பவருக்கு, ஐயம் — சந்தேகம், நீங்குமோ — தீருமா தீராது, நிச்சயமென்பாருக்கு தூணிலாம் வாளரியே ராமகோளரியென்று சந்தேகந்தீரும் என்க—எ-று. (சஅ)

திரண்டிலவொளியிலதிருவின்சேர்வில
முரண்டருமேருவின்முரியமூரிநாண்
புரண்டிலபுகழிலபொருப்பென்றென்றுபோன்
றிரண்டிலபுயங்களுக்குவமமேற்குமோ.

இ-ள். திரண்டில — ராமன் தோள்கள்போல் உலகில் திரண்ட பொருள்களொன்றுமில்லை, ஒளி இல — ஒளியுள்ளவைகளுமில்லை, திருவின் சேர்வு இல — வீரலட்சுமி சம்பந்தமுள்ளவைகளுமில்லை, முரண் — பகைவர்மேற்பலத்தை, தரு — கொடுப்பதான, மேரு — மேலைமலையாகிய, வில்முரிய — வில்லொடிய, மூரிநாண் — பெரியநாரியும், புரண்டில — புரளுதற்கிடமாகிறதுமில்லை, புகழ் இல — புகழுள்ளவைகளுமில்லை, பொருப்பென்று — மலையென்று, ஒன்றுபோன்று — ஒன்றையொத்ததாய், இரண்டில — மற்றொருமலையுமில்லைசரியான இரண்டுமலைகளில்லை ஆனல், புயங்களுக்கு — தோள்களுக்கு, உவமம் — ஒப்பாம் பொருள்கள், ஏற்குமோ — உண்டென்னக்கூடுமோ—எ-று. (சக)

கடற்படுபணிலமுங்கன்னிப்பூகமும்
மிடற்றினுக்குவமையென்றுரைக்குமெல்லியோர்
உடற்படவொண்ணுமோவுரகப்பள்ளியான்
இடத்துறைசங்கமொன்றிருக்கவெங்களால்.

இ-ள். கடல்படு - கடலிலே உண்டாகுகிற, பணிலமும் - சங்கும், கன்னி- இளமையுள்ள, பூகமும் - கமுகும், மிடற்றினுக்கு - கண்டத்துக்கு, உவமையென்று- ஒப்பாமென்று, உரைக்கும் - சொல்லுகிற, மேலையோர் - முன்னுள்ள பெரியோர் களை, உரகப்பள்ளியான் - பாம்பணை அமலன், இடத்து - இடப்புறத்திலே, உறை- தங்குகிற, சங்கமொன்று இருக்க - ஒருபாஞ்சசந்நியமென்னுஞ் சங்கொன்றிருக்கச் செய்தே, எங்களால் - சொன்னபடி சொல்கிற எங்களாலே, உடற்பட ஒண்ணுமோ சம்மதியாகக் கூடுமோ சம்மதியாகப்படாது—எ-று. உடன்படாமையா லவர்களை மெல்லியோரென்றிகழ்ந்ததாகப் பாடஞ்சொல்லவுமாம். (கூ0)

அண்ணறன்றிருமுகங்கமலமாமெனிற்
கண்ணினுக்குவமைவேறியாதுகாட்டுகேன்
தண்மதியாமெனவுரைக்கத்தக்கதோ
வெண்மதிபொலிந்ததுமெலிந்துதேயுமால்.

இ-ள். அண்ணல்தன் - ஸ்ரீராமனது, திருமுகம் - திருமுகத்தை, கமலம்- தாமரைமலர், ஆமெனில் - நிகராமென்றால், கண்ணினுக்கு - அவர் கண்களுக்கு, உ வமைவேறு - வேறோரொப்புள்ளதாக, யாது - எதை, காட்டுகேன் - தெரியச்சொ ல்லுவேன், தண் மதி - குளிர்ந்த சந்திரன், ஆமென - நிகராமென்று, உரைக்கத்தக் கதோ - சொல்லத்தகுமா தகாது, வெண் மதி - அந்த வெள்ளைச்சந்திரன் பொலிந் ததும் - நிறைந்த பூரணமாகியும், மெலிந்து - நேர்நில்லாதிளைத்து, தேயும் - குறைவு படும்—எ-று. (கூக)

வேறு.

ஆரமுமகிலுநீவியகன்றதோளமலன்செவ்வாய்
நாரமுண்டலர்ந்தசெங்கேழ்நளினமென்றுரைக்கநாணும்
ஈரமுண்டமுதமூறுமின்னுரையியம்பாதேனும்
மூரல்வெண்முறுவல்பூவாப்பவளமோமொழியற்பாற்றே.

இ-ள். ஆரமும் - செஞ்சந்தனமும், அகிலும் - அகிற்சந்தனமும், நீவி - பூசு தலாய், அகன்ற - விசாலித்த, தோள் - புஜங்களையுடைய, அமலன் - யாதொரு பரி சுத்தரான அவருடைய, செவ்வாய் - சிவந்தவாய்க்குநிகர், நாரம் உண்டு - நீரைக்குடி த்து, அலர்ந்த - விகசித்திருக்கிற, செம் கேழ் - சிவந்த நிறத்தையுடையதான, நளி னமென்று - தாமரை மலரென்று, உரைக்க - சொல்லுதலாலே, நாணும் - அம்மல ர்தான் நேர்நில்லாமையால் தலைசாய்ந்துபோவதாம், ஈரம் உண்டு - குளிர்ச்சியைக் கொண்டு, அமுதம் ஊறும் - சுவைசுரப்பதான, இன் உரை - இனியசொற்களை, இ யம்பாது - அம்மலர்பேசுதலில்லை, ஏனும் - ஆனாலும், மூரல் - பலவரிசையும், வெ ண்முறுவல் - வெள்ளைநகையும், பூவா - அம்மலரிலுளவாகுதலில்லை தாமரைமலரப் படியாம்போது, பவளமோ - பவளமா, மொழியற்பாற்று - சொல்லும் பான்மையது, பவளம் எவ்வளவும் நிகராவதன்று—எ-று. (கூஉ)

வேறு.

முத்தங்கொல்லோமுழுநிலவின்முறியின்றிறனேமுறையமுதச்
சொத்தின்றுள்ளிவெள்ளியினந்தொடுத்தகொல்லோதுறையறத்தின்
வித்துமுளைத்தவங்குரங்கொல்வேறேசிலகொன்மெய்முகிழ்த்த
தொத்தின்றெகைகொல்யாதென்றுபல்லுக்குவமைசொல்லுகேன்.

இ-ள். முத்தங்கொல்லோ - முத்துகளோ, முழுநிலவின் - பூரணச்சந்திரனது, முறியின்திறனோ - துண்டுகளின்வகையோ, முறை - வரிசையாக, அமுதச்சொத்தின் - அமுதமாகியபொருளினது, துள்ளிவெள்ளி - வெள்ளைத்துளிகளை, இனம்-ஒரேசரியாக, தொடுத்தகொல்லோ - கோத்திருக்கின்றதோ, துறை - பலவகையாய்ச்செய்யப்படுகிற, அறத்தின்வித்து - புண்ணியத்தின் விதையினின்று, முளைத்த-தோன்றின, அங்குரங்கொல் - முளைகளோ, வேறே - இன்னம்வேறான, சிலகொல்-சிலமுல்லையரும்புகளோ, மெய் - சத்தியமாகிய மரத்திலே, முகிழ்த்த - அரும்பின, தொத்தின் - பூவரும்புகளின், தொகைகொல் - தொகுப்புகளோ, யாதென்று-இன்னம் ஏதென்று, பல்லுக்கு - அவர் பல்வரிசைக்கு, உவமை - ஒப்பு, சொல்லுகேன்-சொல்லக்கடவேன், அறமும் மெய்யும்பரிசுத்தமுள்ளவை யாதலால் வெண்ணிறமென்ப துலகவழக்குதொத்து அரும்புக்காகலாகுபெயர்—எ-று. (ருங)

எள்ளாநிலத்திந்திரநீலத்தெழுந்தகொழுந்துமரகதத்தின்
விள்ளாமுழுமாநிழற்பிழம்பும்வேண்டவேண்டுமேனியதோ
தள்ளாவோதிகோபத்தைக்கவ்வவந்துசார்ந்ததுவும்
கொள்ளாவள்ளறிருமூக்கிற்குவமைபின்னுங்குணிப்பாமோ.

இ-ள். எள்ளா - இகழ்தலில்லாத, நிலத்து - நன்னிலத்திலே தோன்றின, இந்திரநீலத்து - இந்திரநீல ரத்நத்திலே, எழுந்த - உண்டான, கொழுந்தும் - சுடரும், மரகதத்தின் - மரகதமலையினது, விள்ளா - நீங்காத, முழுமா - முழுதும்பெருமைகொண்ட, நிழற்பிழம்பும் - ஜோதியினது திரள்வும் என்றால் இந்திரநீலக்கொழுந்தும் மரகதச்சோதியும், வேண்ட வேண்டும் - விரும்பவேண்டுவதான, மேனியதோ-நிறமுள்ளதுதானோ மூக்கு, தள்ளா - விடாமல், ஓதி - ஒணானது, கோபத்தை-இதழாகிய இந்திரகோபத்தை, கவ்வ - பிடிக்க, வந்துசார்ந்ததுவும் - நீண்டுவந்து நிமிர்ந்திருக்கிறதென்றாலும், வள்ளல் - ஸ்ரீராமனுடைய, திருமூக்கிற்கு - திருநாசிகைக்கு, கொள்ளா - நிகர்போதாது, உவமை - வேறே ஒப்பாம்பொருளை, பின்னும்-இன்னமும்சொல்ல, குணிப்புஆமோ - அளவுள்ளதுண்டா—எ-று. (ருச)

பனிக்கச்சுரத்துக்கரன்முதலோர்கவந்தப்படையும்பல்பேயும்
தனிச்கைக்சிலையும்வானவருமுனிவர்குழுவுந்தனியறனும்
இனிக்கட்டழிந்ததரக்கர்குலமென்னுஞ்சுருதியீரிரண்டும்
குனிக்கக்குனித்தபுருவத்துக்குவமைநீயேகோடியால்.

இ-ள். சுரத்து - காட்டிலே, கரன்முதலோர் - கரதூஷணாதிகள், பனிக்க-நடுநடுங்கவும், கவந்தப்படையும் - அவ்வரக்கர்களுடைய தலையற்ற சேனைகளும், பல்பேயும் - அநேகம்பசாசுகளும், தனி - ஒப்பில்லாத, கைச்சிலையும் - கையிலுள்ளவில்லும், வானவரும் - தேவர்களும், முனிவர்குழுவும் - முனிவர்கூட்டங்களும், தனி-ஒப்பில்லாத, அறனும் - தருமமும், இனி - இனிமேல், கட்டழிந்தது - நிலைகுலைந்தது, அரக்கர்குலம் - ராக்ஷதகூட்டம், என்னும் - என்பதான, சுருதியீரிரண்டும்-நான்குவேதமும், குனிக்க - கூத்தாடவும், குனித்த - வளைத்த, புருவத்துக்கு உவமை - ஒப்பு, நீயோகோடி - நீயேதெரிந்துகொள்—எ-று. (ருரு)

வருநாட்டோன்றுதனிமருவும்வளர்வுந்தேய்வும்வாளரவம்
ஒருநாட்கவ்வுமுறுகோளும்பிறப்பும்பிறப்புமொழிவுற்றால்

இருநாற்பகலினிலங்குமதியலங்கலிருளினெழினிழற்கீழ்ப்
பெருநாணிற்பினவனெற்றிப்பெற்றிற்றகப்பெறுமன்னே.

இ-ள். வருநாள் – தானுதையமாகும்போதும், தோன்று – தெரிவதான, தனி மறுவும் – ஒருகளங்கமும், வளர்வும் – வளருகிறதும், தேய்வும் – தேய்கிறதும், வாள் அரவம் – ரத்நத்தாலே ஒளியுள்ளபாம்பு, ஒருநாள் – ஒருபோது, கவ்வும் – பற்றுதலாகிற, உறுகோளும் – துன்பமும், இறப்பும் – அஸ்தமிக்கிறதும், பிறப்பும் – உதயமாகிறதும், ஒழிவுற்றால் – தீர்ந்தால், இருநாற்பகலின் – எட்டாநாளிலே, இலங்குமதி-விளங்குகிறசந்திரன் இன்னமொரு, அலங்கல் – மாலையணிந்த குஞ்சியாகிய, இருளின் – இருளினது, எழில் – அழகுள்ள, நிழற்கீழ் – நிழலின்கீழே, பெருநாள் – நெடுங்காலமும், நிற்பின் – நிலைநிற்கப்பெற்றால், அவன் – அந்த ராமனது, நெற்றி – நெற்றியின், பெற்றிற்றாக – தன்மையுள்ளதாக, பெறும் – கிடைக்கும்—எ-று. ஒழிவுற்று நிற்பினெனக்கூட்டுக. (௬௬)

நீண்டுகுழன்றுநெய்த்திருண்டுநெறிந்துசெறிந்துநெடுநீலம்
பூண்டுபுரிந்துசரிந்துகடைசுருண்டுபுகையுநறும்பூவும்
வேண்டுமல்லவெனத்தெய்வவெறியேகமழுநறுங்குஞ்சி
யீண்டுசடையாயினதென்றான்மழையென்றுரைத்தலிழிபன்றே.

இ-ள். நீண்டு – நீளமுள்ளதாய், குழன்று – சேர்க்கையுள்ளதாய், நெய்த்து-நீலநிறமாய், இருண்டு – இருண்டிருப்பதாய், நெறிந்து – செவ்வையுள்ளதாய், செறிந்து – நெருக்கமுள்ளதாய், நெடுநீலம் – மிகவுங்கருநிறத்தை, பூண்டு – கொண்டதாய், புரிந்து – சுருண்டதாய், சரிந்து – சரிவுமுள்ளதாய், கடை – நுனியிலே, சுருண்டு – சுருளுவதாய், புகையும் – அகிற்புகையும், நறும்பூவும் – நல்லபூவும், வேண்டும்-விரும்புகிறதும், அல்லவென – அல்லதென்னும்படி, தெய்வவெறியே – தெய்வமணமே, கமழும் – பரிமளிப்பதான, நறுங்குஞ்சி – நன்மையான தலைமயிர், ஈண்டு – இப்போது, சடையாயின – சடையாயிருக்கின்றது, என்றால் – என்றுசொல்லலானால், மழையென்று – மேகமென்று, உரைத்தல் – சொல்லுகிறது, இழிபன்றே – தாழ்வல்லவோ—எ-று. (௬௭)

புல்லலேற்றதிருமகளும்பூவும்பொருந்தப்புவியேழும்
எல்லையேற்றநெடுஞ்செல்வமெதிர்ந்தஞான்றுமஃதின்றி
அல்லலேற்றகானகத்துமழியாநடையையிழிவான
மல்லலேற்றினுளதென்றான்மத்தயானைவருந்தாதோ.

இ-ள். புல்லல் – அணைத்தலை, ஏற்ற – உடைய, திருமகளும் – பெரியபிராட்டியும், பூவும் – பூமிப்பிராட்டியும், பொருந்த – கூடியிருக்கச்செய்தே, புவியேழும்-சப்ததீவுகளுமே, எல்லையேற்ற – அடவாயுள்ள, நெடுஞ்செல்வம் – நெடிதான பாக்கியம், எதிர்ந்தஞான்றும் – கிடைத்தபோதிலும், அஃது இன்றி – அச்செல்வங் கிடைத்ததில்லையாய், அல்லலேற்ற – துன்பத்தைத் தருவதான, கானகத்தும் – காட்டில் வந்தபோதிலும், அழியா – வேறுபடாத, நடையை – அவரதுநடையை, இழிவான-தாழ்வாகிய, மல்லல் – வளமையையுடைய, ஏற்றின் – ஒரு எருதினிடத்தில், உளது-உள்ளதானநடைதான், என்றால் – என்றுசொல்லலானால், மத்தயானை – அவ்விதநடையுள்ள மதயானையானது, வருந்தாதோ – தன்னைச்சிலாகிக்க இல்லையென்று, வருத்தப்படாதா வருத்தப்படுமே—எ-று. இப்படி ராமனது சுந்தரத்தைச் சொல்லுதலாலே இக்காண்டம் சுந்தரகாண்டமெனலாயிற்று சுந்தரம் அழகு. (௬௮)

இன்னமொழியவம்மொழிகேட்டெரியினிட்டமெழுகென்னத்
தன்னையறியாதயர்வாளைத்தரையில்வணங்கிநாயகனுர்
சொன்னகுறியுண்டடையாளச்சொல்லுமுளவாலவைதோகை
அன்னநடையாய்கேட்கென்னவறியவறைவானுயினுன்.

இ-ள். இன்ன – என்றிப்படி, மொழிய – திருவடி சொல்லச்செய்தே, அம்மொழிகேட்டு – அந்தச்சொல்லைக்கேட்டு, எரியினிட்ட – நெருப்பிலேபோட்ட, மெழுகென்ன – மெழுகுபோல, தன்னையறியாது – தன்னையே தனக்குத் தெரியாமல், அயர்வாளை – சோர்கிறபிராட்டியை, தரையில் – பூமியிலேதம்முடல்படிய, வணங்கி- விழுந்துசேவித்து இன்னம், நாயகனுர் – உமது நாயகனுனவர், சொன்ன – சொல்லிய, குறியுண்டு – லட்சியங்களுமுண்டு, அடையாளச்சொல்லும் – அடையாளங்களான சொற்களும், உள – உள்ளன, அவை – அவைகளையெல்லாம், தோகை – மயில்போல்வாய், அன்னம் – அம்சம்போலும், நடையாய் – நடையுள்ளவளே, கேட்கென்ன – கேளென்று, அறிய – பிராட்டிதெரிவதாக, அறைவானுயினுன் – சொல்லுவாரானுர்—எ-று. (ருகூ)

வேறு.

நடத்தலரிதாகுநெறிநாள்கள்சிலதாயர்க்
கடுத்தபணிசெய்திவணிருத்தியெனவச்சொற்
குடுத்ததுகிலோடுமுயிருக்கவுடலோடும்
எடுத்தமுனிவோடுமயனின்றதுமிசைப்பாய்.

இ-ள். நடத்தல் – நீநடக்கிறதற்கு, அரிதாகும் – அருமையாயிருக்கும், நெறி- காட்வெழி, நாள்கள்சில – நான்மீண்டுவருகிற சிலகால அளவும், தாயர்க்கு – என் தாய்மார்களுக்கு, அடுத்தபணி – தக்க ஊழியங்களை, செய்து – செய்துகொண்டு, இவண் – இந்த அயோத்தியிலேதானே, இருத்தி – இரு, என – என்று சொல்ல, அச்சொற்கு – அந்தச்சொல்லுக்கு, உடுத்த – கட்டின, துகிலோடும் – வஸ்திரத்துடனே, உயிர் உக்க – பிராணன் போனதுபோன்ற, உடலோடும் – உடம்புடனே, எடுத்த – அப்போதுகொண்ட, முனிவோடும் – கோபத்துடனே, அயல் – தூரத்தேபோய், நின்றதும் – நின்றதையும், இசைப்பாய் – சீதைக்குத்தெரிய நீ சொல்லக்கடவை—எ-று. (கூ0)

நீண்டமுடிவேந்தனருளேந்திநிறைசெல்வம்
பூண்டதனைநீங்கிநெறிபோதலுறுநாளின்
ஆண்டநகராரையொடுவாயிலகலாமுன்
யாண்டையதுகானெனவிசைத்ததுமிசைப்பாய்.

இ-ள். நீண்ட – நெடிதான, முடி – கிரீடத்தையுடைய, வேந்தன் – சக்கரவர்த்தியின், அருள் ஏந்தி – அனுக்கிரகத்தைக்கொண்டு, நிறைசெல்வம் – மகதைசுவரியத்தை, பூண்டு – பெற்று, அதனை – அந்த ஐசுவரியத்தை, நீங்கி – பின்புவிட்டு, நெறி – வழிக்கொண்டு, போதலுறுநாளின் – வருகிறபோது, ஆண்ட – அரசன் ஆளுகையையுடைய, நகர் – அயோத்தியாபுரியின், ஆரையொடு – மதிலுடனே, வாயில்- கோட்டைவாயிலையும், அகலாமுன் – கடந்துவருமுன்னே, கான் – காடு இன்னம், யாண்டையதென் – எங்கிருக்கின்றதென்று, இசைத்ததும் – சொன்னதையும், இசைப்பாய் – நீசொல்லக்கடவை—எ-று. (கூக)

எள்ளரியதேர்தருசுமந்திரனிசைப்பாய்
வள்ளன்மொழிவாசகமனத்துயர்மறந்தாள்
கிள்ளையொடுபூவைகள்கிளத்தல்கிளவென்னும்
பிள்ளையொடுதன்றிறமுணர்த்துதிபெயர்த்தும்.

இ-ள். எள்ளரிய - யாதோரிகழ்வுமில்லாத, தேர்தரு - தேரூர்ந்துவந்த, சுமந்திரன் - சுமந்திரன், இசைப்பாய் - சொல்லுவதாய், வள்ளல் - சக்கரவர்த்திபோன்ற சுமந்திரன், மொழி - சொன்ன, வாசகம் - சொற்களையும், மனத்துயர் - அவன் மனத்துண்டாயிருக்கிற துக்கத்தையும், மறந்தாள் - மறந்தவளாய், கிள்ளையொடு - நான்வளர்க்கிறகிளியுடனே, பூவைகள் - நாகணவாய்ப்புட்களுக்கும், கிளத்தல் - பேசக்கற்றுக்கொடுக்கிறதை, கிள - சொல்லுக, என்னும் - என்றுசொல்லுகிற, பிள்ளையொடு - மழலைப்பேச்சுள்ளவளுடனே, தன் திறம் - அவளறியாமைக் குணங்களானதை, பெயர்த்தும் - மறுபடியும் அனுமனே, உணர்த்துதி - நீ சொல்லக்கடவை— எ-று. இசைப்பு ஆய் சுமந்திரன் - நீசொல்வதென்னவென்று கேட்டபின்பு, இசைப்பு - சொல்லுதல் கட்டல் ஆய் ஆனபின்பு. (சுஉ)

மீட்டுமுரைவேண்டுவனவில்லையெனமெய்ப்பேர்
தீட்டியதுதீட்டரியசெய்கையதுசெவ்வே
நீட்டிதெனநேர்ந்தனனெனுநெடியகையால்
காட்டினனொராழியதுவாணுதலிகண்டாள்.

இ-ள். மீட்டும் - மறுபடியும், உரைவேண்டுவன - சொல்லல் வேண்டியவைகள், இல்லையென - இல்லையென்று, மெய் - தமதுமெய்யான, பேர்தீட்டியது - பெயரெழுதியிருப்பது, தீட்டரிய - மற்றொருவராலேசெய்யப்படாத, செய்கையதுஇது-வேலைப்பாடுள்ளது ஆகிய இதை, செவ்வே - நேரே, நெடிய - நீண்ட, கையால் - தமதுகையாலே, நீட்டென - கொடென்று, நேர்ந்தனனெனு - கொடுத்தாரென்று, ஒராழி - ஒருமோதிரம், காட்டினன் - காணச்செய்தார், அது - அம்மோதிரத்தை, வாணுதலி - பிராட்டிகண்டாள்—எ-று. வேண்டுவன உரை விரும்பத்தக்க சொற்கள் இல்லையென. (சுங)

இறந்தனர்பிறந்தபயனெய்தினர்கொலென்கோ
மறந்தனரறிந்துணர்வுவந்தனர்கொலென்கோ
துறந்தவுயிர்வந்திடைதொடர்ந்ததுகொலென்கோ
திறந்தெரிவதென்னைகொலிநன்னுதலிசெய்கை.

இ-ள். இ - இந்த, நன்னுதலி - சீதா பிராட்டிக்குண்டான, செய்கை - சந்தோஷச்செய்கையை, நன்னுதலிக்கு - அம்மோதிரஞ் செய்ததை, பிறந்த - உலகிற்பிறந்தாலடையவேண்டின, பயன் - புருஷார்த்தங்களை, இறந்தனர் - அதிகமாக, எய்தினர் - அடைந்தவர்கள் சந்தோஷம்போலும், என்கோ - என்னவோஎன்னலாமா, அறிந்து - ஒன்றுதெரிந்து, மறந்தனர் - மறந்தவர்கள், உணர்வு - மீண்டு அத்தெரிந்தபுத்தி, வந்தனர் - உண்டாயினர்போலும், என்கோ - என்னவோ, துறந்த உயிர் - போனபிராணன், வந்து இடை - மீண்டு தன்னிடம்வந்து, தொடர்ந்தது - கூடிற்றுப்போலும், என்கோ - என்னவோ, இந்நன்னுதலிசெய்கைத்திறம் - பிராட்டிக்குண்டான சந்தோஷவகையை, தெரிவது - தெரிந்துசொல்லுகிறது, என்னை - எப்படி, 'கொல் சு-ம் அசை என்னைகொல் - எப்படியோ எனவுமாம்—எ-று. (சுச)

இழந்தமணிபுற்றரவெதிர்ந்ததெனலானுள்
பழந்தனமிழந்தனபடைத்தவரையொத்தாள்
குழந்தையையுயிர்த்தமலடிக்குவமைகொண்டாள்
உழந்துவிழிபெற்றதொருயிர்ப்பொறையுமொத்தாள்.

இ-ள். புற்றரவு - புற்றிலுள்ளபாம்பு, இழந்தமணி - தான்காணுமற்போயின ரத்நத்தை, எதிர்ந்தது - மீண்டுகண்டது, எனலானுள் - என்றுசொல்லத்தக்கவளானுள், இழந்தன - தாம்போக்கடித்த, பழந்தனம்-பழையபொருளை, படைத்தவரை-மீண்டுபெற்றவர்களையும், ஒத்தாள் - ஒப்பதானுள், மலடி - பிள்ளையில்லாத ஒருத்தி, குழந்தையை - நல்லஆண்பிள்ளையை, உயிர்த்ததற்கு - பெற்றதற்கு, உவமைகொண்டாள் - ஒப்பானுள், உழந்து - கண்ணில்லாமல்வருந்தி, விழிபெற்றது-கண்கள்பெற்றதான, ஓர் - ஒரு, உயிர்ப்பொறையும் - உடலையும், ஒத்தாள் - ஒப்பதானுள்-எ-று. வினையெச்சமேவினை முற்ருகலுமெனக்கொள்க கீழ்ப்பாட்டிலும் எங்கும். (சுரு)

வாங்கினண்முலைக்குவையில்வைத்தனள்சிரத்தால்
தாங்கினண்மலர்க்கண்மிசையொத்தினடடந்தோள்
வீங்கினண்மெலிந்தனள்குளிர்ந்தனள்வெதுப்போ
டேங்கினளுயிர்த்தனளிதின்னதெனலாமே.

இ-ள். வாங்கினள் - தன்இருகையாலும், முலைக்குவையில் - தனமேட்டின் மேலே, வைத்தனள் - ஒருபீடத்தில்வைப்பதுபோல் வைத்தாள், சிரத்தால் - தன் தலையாலேகிரீடம்போல், தாங்கினள் - சுமந்தாள், மலர்க்கண்மிசை-தனதுநீலமலர் போலுங் கண்களிலே, ஒத்தினள் - தூசிப்பட்டதென்று கண்மலராலேதுடைத்தாள் ஒத்திக்கொண்டாள், தடந்தோள் - நீண்டதோள்கள், வீங்கினள் - பூரித்தாள், மெலிந்தனள் - இளைத்தாள், குளிர்ந்தனள் - சந்தோஷித்தாள், வெதுப்போடு-வெப்பங்கொண்டு, ஏங்கினள் - அழுதாள், உயிர்த்தனள் - நெடுமூச்செறிந்தாள், இது-நன்னுதலிசெய்கையாகிய இதை, இன்னது - இவ்வளவினது, எனலாமே - என்று சொல்லிமுடியுமா, மெலிதல்முதலைந்தும் - இன்னதனுலே இன்னதாயிற்றென்னலாகுமா—எ-று. (சுசு)

மோக்குமுலைவைத்துறமுயங்குமொளிர்நன்னீர்
நீக்கிநிறைகண்ணிணைததும்பநெடுநீள
நோக்குநுவலக்கருதுமொன்றுநுவல்கில்லாள்
மேக்குநிமிர்விம்மலள்விழுங்கலுறுகின்றுள்.

இ-ள். மோக்கும் - மூக்காலேமுகருவாள், முலைவைத்து - தனங்களின்மேற்கொண்டு, உறமுயங்கும் - மிகவும்அணைப்பாள், கண்ணிணை - இரண்டுகண்களிலும், ததும்பஒளிர் - ததும்பவருகிற, நிறைநன்னீர் - நிறைவுள்ளநல்லசலத்தை, நீக்கி-துடைத்துக்கொண்டு, நெடுநீளம் - மிகவுநெடியகாலம், நோக்கும் - மோதிரத்தைப் பார்த்துயோசிப்பாள், நுவல - அம்மோதிரத்துடனேபேச, கருதும் - எண்ணுவாள், ஒன்றும் - ஒருவார்த்தையேனும், நுவல்கில்லாள் - பேசாள், மேக்குநிமிர் - மேலே பொங்கிவருகிற, விம்மலள் - அழுகையை யுடையவளாய், விழுங்கல் உறுகின்றுள்-அவ்வழுகை அடக்குகிறவளாகிறுள்—எ-று. (சுஎ)

நீண்டவிழிநேரிழைதன்மின்னிறமெல்லாம்
பூண்டதொளிர்பொன்னனையபொம்மனிறமெய்யே

ஆண்டகைதன்மோதிரமடுத்தபொருளெல்லாம்
தீண்டளவில்வேதிகைசெய்தெய்வமணிகொல்லோ.

இ-ள். நீண்டவிழி - நெடியகண்களையுடைய, நேர் இழைதன் - பிராட்டியினது, மின்னின் — மின்னுதலையுடைய, நிறமெல்லாம் — சரீரமுழுதும், எழுமெய்யே-நிஜமாகவே, ஒளிர் - மோதிரவடிவாகவிளங்குகிற, பொன்நிறம் - சுவர்ணநிறத்தையும், அனைய - அதிலேபொதிந்துள்ளமணியின், பொம்மல்நிறம் - விசேஷகாந்தியையும், பூண்டது — பூணலானது, பயஆண்டகைதன் - ஸ்ரீராமனுடைய, மோதிரம்-சிகாமணிமோதிரமானது மோதிரத்துள்ளமணியானது, அடுத்த - தன்னைச்சேர்ந்த, பொருளெல்லாம் - எந்தப்பொருள்களையும், தீண்டளவில் - பரிசித்தஅப்போதே, வேதிகைசெய் - பேதித்தலைச்செய்கிற, தெய்வமணிகொல்-ஒருதெய்வரத்நந்தானோ ஒளிர்பொன்னிலேபதித்த அந்தரத்நச்சோதி மின்னினிறமெல்லாம்பூண்ட தென்பதேகொள்க—எ-று. பிராட்டி மின்னினிறமெல்லாம் ஒளிர்பொன்னுகலால் அனைய அதற்குத்தக்க பொம்மனிறம்பெற்றது ரத்நச்சோதியாயிற்றெனல்வேண்டும் தெய்வமணியென்றதனாலே. (௬௮)

இருந்துபசியாலிடருழந்தவர்களெய்தும்
அருந்துமமுதாகியதறத்தவரையண்மும்
விருந்துமெனலாகியதுவீயுமுயிர்மீளும்
மருந்துமெனலாகியதுவாழிமணியாழி.

இ-ள். பசியால் — பசியினைப்பினாலே, இருந்து - நடவாதிருந்து, இடர்உழந்தவர்கள் - துன்பப்பட்டவர்கள், எய்தும் - கிடைக்கப்பெற்ற, அருந்தும் அமுது-உண்ணுஞ்சோறுபோல்வதும், ஆகியது - வாழிமணியாழியாயிற்று, அறத்தவரை-அம்பரமேதண்ணீரே சோறேயென்கிற அறத்தைச்செய்யுமவரை, அண்மும் - அடுத்த, விருந்தும் - விருந்தினரையும், எனலாகியது — போலுமென்னலாயிற்று, வீயுமுயிர் - செத்தபிராணன் போனஉயிர், மீளும்-திரும்புவதான, மருந்தும்-அவிழ்தத்தையும், எனலாகியது - போலுமென்னலாயிற்று, வாழி - வாழ்வைத்தருவதான, மணிஆழி - ரத்நமோதிரம்—எ-று. அறத்தினருக்கு விருந்தினிடத்தி லதிகபிரியமுண்டென்பது கொண்டார். (௬௯)

இத்தகையளாகியுயிரேமுறவிளங்கும்
முத்தநகையாள்விழியினுலிமுலைமுன்றில்
தத்தியுகமென்குதலைதள்ளவுயிர்தந்தாய்
உத்தமவெனுவினையவாசகமுரைத்தாள்.

இ-ள். இத்தகையள் ஆகி-இப்படிப்பட்டவள் ஆய், உயிர்-தனதாவி, எமுற-சந்தோஷிக்க, விளங்கும் - ஒளிருகின்ற, முத்தம் - முத்துகள்போலும், நகையாள்-பல்வரிசைகளுள்ளவள், விழியினுலி - கண்ணனீர், முலைமுன்றில் - முலைமுகட்டிலே, தத்திஉக - துளும்பிவிழ, மென்குதலை - மிருதுவான இளஞ்சொற்கள், தள்ள - குழற, உத்தம - ஓஉத்தமனே, உயிர்தந்தாய் - எனக்கு உயிர்கொடுத்தவனே, எனு - என்றழைத்து, இனையவாசகம் - இந்தவார்த்தைகள், உரைத்தாள்-சொல்லலானுள்—எ-று. (௭௦)

வேறு.

மும்மையாமுலகந்தந்தமுதல்வற்குமுதல்வன்றாதாய்ச்
செம்மையாலுயிர்தந்தாய்க்குச்செயலென்னுலெளியதுண்டோ

அம்மையாயத்தனுய்வப்பனேயருளின்வாழ்வே
இம்மையேமறுமைதானுநல்கினையிசையோடென்றாள்.

இ-ள். மும்மையாம் – மூவகையான, உலகம் தந்த – உலகங்களையும் சிருஷ்டித்த, முதல்வற்கு – மண்பொதுத் தந்தைக்கு பிரமனுக்கு, முதல்வன் – காரணபூதனானவனுக்கு, தூதாய் – தூதனாகிவந்து, செம்மையால் – உனது செவ்வைக்குணத்தினாலே, உயிர் தந்தாய்க்கு – எனக்குப் பிராணோபகாரம்பண்ணின உனக்கு, செயல்கைம்மாறுசெய்தலே, என்னால் – என்னாலேசெய்ய, எளியது – எளிதாகியதாய், உண்டோ – கிடைக்குமா, அம்மையாய் – எனக்குத்தாயாய், அத்தனாய் – அப்பனுமான, அப்பனே – மகோபகாரனே, அருளின்வாழ்வே – தயைக்கிடமானவனே, இம்மையே – இப்போதுதானே, மறுமைதானும் – இனி அடையும்பலனை, இசையோடு-புகழுடனே, நல்கினை – கொடுத்தாய் என்றாள்—எ-று. (எக)

பாழியபணைத்தோள்வீரதுணையிலேன்பரிவுதீர்த்த
வாழியவள்ளலேயான்மறுவிலாமனத்தேனென்னின்
ஊழியோர்பகலாயோதும்யாண்டெலாமுலகமேழும்
ஏழும்வீவுற்றஞான்றுமின்றெனவிருத்தியென்றாள்.

இ-ள். பாழிய – விசாலமான, பணை – பருமையுள்ள, தோள் – புஜங்களைக்கொண்ட, வீர – வீரனே, துணையிலேன் – ஒருஉதவியு மில்லாதிருக்கிற என்னுடைய, பரிவுதீர்த்த – துன்பத்தைப்போக்கின, வாழிய – வாழ்வையுடைய, வள்ளலே-ஔதாரியகுணமுள்ளவனே, யான் – நான், மறுஇலா-தோஷமில்லாத, மனத்தேன் என்னில் – மனமுடையவளேயானால், ஊழி – ஊழிகாலமே மாயன்வாழ்நாளே, ஓர்பகலாய் – ஒருநாளாக, ஓதும் – சொல்லப்பட்ட, யாண்டெலாம் – மாயன்வாழ்நாளுக்குள்ள வருஷகாலமுழுதும், உலகமேழுமேழும் – பதினாலுலகங்களும், வீவுற்ற ஞான்றும் – முழுதும் அழிவுகொண்டகாலத்திலும், இன்றென – இன்றைக்கொருநாளென்று இன்றுபோலவே, இருத்தி – இருக்கக்கடவை என்றாள்—எ-று. உலகமேழுமேழும் வீவுற்றஞான்றும் ஊழியோர்பகலாயோதும்யாண்டெலாம் இன்றென இருத்தியென்றாளெனக்கூட்டுக. (எஉ)

மீண்டுரைவிளம்பலுற்றாள்விழுமியகுணத்தோய்வீரன்
யாண்டையானிளவலோடுமெவ்வழியெய்திற்றுன்னை
ஆண்டகையடியேன்செய்கையார்சொலவறிந்ததென்றாள்
தூண்டிரடடந்தோளானுமுற்றதுசோறலுற்றான்.

இ-ள். மீண்டுரை – மறுபடியும்சொற்கள், விளம்பலுற்றாள்-சொல்லலானாள், விழுமியகுணத்தோய் – சிறந்தகுணமுள்ளவனே, வீரன் – அந்தரகுவீரனான ஸ்ரீராமன், யாண்டையான் – இப்போதெங்கிருக்கிறார், இளவலோடும் – தம்பியுடனே, எவ்வழி – எந்தஇடத்திலே, உன்னை எய்திற்று – உன்னைக்கண்டது, ஆண்டகை-அந்தஸ்ரீராமன், அடியேன்செய்கை – எனதுகாரியத்தை எனக்குவந்தவிபத்தை, யார் சொல – எவர்கள்சொல்ல, அறிந்தது – அறியலானதுசொல், என்றாள்-என்றுகேட்டாள், தூண் – தூண்போல், திரள் – திரண்ட, தடந்தோளானும் – நீண்ட தோள்களுள்ள அனுமார், உற்றது – நடந்த வரலாற்றை, சோறலுற்றான் – சொல்லலானார் எ-று. (எங)

உழைக்குலத்தியமாயவுருவுகொண்டுறுதல்செய்தான்
மழைக்கருநிறத்துமாயவரக்கன்மாரீசனென்பான்

இழைத்தடமார்பத்தண்ணலெய்யப்போய்வையஞ்சேர்வான்
அழைத்ததவ்வோசையுன்னைமயக்குதற்கரக்கன்சொல்ல.

இ-ள். உழைக்குலம் – மான்ஜாதியான, தீயமாயம் – பொல்லாத மயக்கஞ்செய்கிற, உருவுகொண்டு - ரூபங்கொண்டு, உறுதல்செய்தான்-அங்குவந்தவன், மழை-மேகம்போல், கருநிறத்து – கரியநிறத்தையுடைய, மாயஅரக்கன் – மாயராக்ஷதஜாதியான், மாரீசனென்பான் - மாரீசனென்பவன், இழை-ஆபரணங்களைக்கொண்ட, தடமார்பத்து – அகன்றமார்பையுடைய, அண்ணல் - ஸ்ரீராமன், எய்ய-மாயமென்று தெரிந்து அம்புவிட்டபோது, போய் - அந்தஅம்புபட்டு, வையம் - மண்ணிலே, சேர்வான் - விழுகிறவன், அழைத்தது - ஆ லட்சுமணாவென்றுகூப்பிட்டது ஆன, அவ்வோசை - அந்தச்சத்தம், உன்னைமயக்குதற்கு - உன்னைமயக்கவேண்டி, அரக்கன்-அந்தமாரீசன், சொல்ல - அப்படிச்சொல்லவே—எ-று. (எச)

இக்குரலிளவல்கேளாதொழிகெனவிரைவனிட்டான்
மெய்க்குரல்சாபம்பின்னைவிளைந்ததுவிதியின்மெய்ம்மை
பொய்க்குரலென்றுபோலாம்பொருள்பின்னர்ப்பயக்குமென்பான்
கைக்குரல்வரிவில்லானுமிளையவன்வரவுகண்டான்.

இ-ள். இக்குரல் - இந்தச்சத்தம், இளவல் - தம்பி, கேளாதொழிகென-கேளாதிருக்கக்கடவதென்று, இறைவன் - நமதாண்டவன், இட்டான் - நியமித்தார், மெய்க்குரல் - தனதுமெய்யானகுரலாலே, சாபம் - சாபமிட்டனன் இறைவன், பின்னை - பின்பு, விதியின்மெய்ம்மை - அவர் நியமித்தபடி மெய்யாகவே, விளைந்தது-தம்பிக்குக்கேளாதிருந்தது, பொய்க்குரல்என்று - ஏதுக்கு இந்தப்பொய்க்குரலிட்டானென்று யோசித்து, ஆம்பொருள்-இந்தக்குரலாலாகிறகாரியம், பின்னர்-பின்பு, பயக்கும்-ஏதோவிளைவதாம், என்பான் - என்று நினைத்தவராய், கைக்குரல் - தம்பிக்கும் உனக்குந்தெரியச்சிறு நாணொலிகாட்டிமீள்கிற, வரிவில்லானும் – வரிந்த கோதண்டபாணியானவர், இளையவன் - தம்பி, வரவு – தன்னைத்தேடிவருதலைக்கண்டான்—எ-று. (எரு)

கண்டபினிளையவீரன்முகத்தினாற்கருத்தையோர்ந்த
புண்டரீகக்கணானுமுற்றதுபுகலக்கேட்டான்
வண்டுறைசாலைவந்தானின்றிருவடிவுகாணான்
உண்டுயிரிருந்தானின்னலுழப்பதற்கேதுவொன்றோ.

இ-ள். கண்டபின் – பார்த்தபின்பு, இளையவீரன் – தம்பியுடைய, முகத்தினால் – முகக்குறியினாலே, கருத்தை – அவர்மனக்கருத்தை, ஓர்ந்த – தெரிந்த, புண்டரீகக்கணானும் – தாமரைபோலுங் கண்களையுடைய ஸ்ரீராமன், உற்றது – அவர் வரலானவகையெல்லாம், புகலக்கேட்டான்-சொல்லக்கேட்டவராய், வண்டுஉறை-வண்டுகள்மொய்த்திருப்பதான, சாலை – பன்னசாலைக்கு, வந்தான் – வந்து, நின்திருவடிவு – உனது திருவுருவை, காணான் – காணாதவனானர், உண்டுஉயிர் – உயிருள்ளதாய், இருந்தான் – இருக்கிறவர், இன்னல் உழப்பதற்கு – துன்பப்படுவதற்கு, ஏது ஒன்றோ - வேறேஒருகாரணம்வேணுமோபலவகைக்காரணங்களுண்டாயின—எ-று.

தேண்டினேர்கண்டேன்வாழிதீதிலனெங்கோனுகம்
பூண்டமெய்யுயிரேபோகப்பொய்யுயிர்போலநின்ற

ஆண்டகைநெஞ்சினின்றுமகன்றிலையழிவுண்டாமோ
ஈண்டுநீயிருந்தாயாண்டங்கெவ்வுயிர்விடுமிராமன்.

இ-ள். தேண்டி – தேடிவந்து, நேர் – என்கண்ணுக்குநேராக, கண்டேன்- உம்மைக்காணலானேன் ஆதலால், வாழி – பல்லாண்டு பல்லாண்டு, தீதுஇலன்- இனியாதொருகெடுதலும் இல்லாதவரானார், எங்கோன் - எங்களாண்டவனான ஸ்ரீராமன், ஆகம்பூண்ட – அவர்சரீரத்தை இடமாகக்கொண்டிருக்கிற, மெய்உயிரே-மெய் உயிரானநீர், போக – பிரிய அதனாலே, பொய் உயிர்போலநின்ற – உயிரில்லாதவராகஇருக்கிற, ஆண்டகை - ஸ்ரீராமன், நெஞ்சின் – மனத்தினின்று, இன்றும் – இப்போதும், அகன்றிலை – நீர் நீங்க இல்லை பிரியஇல்லை ஆனால், அழிவுஉண்டாமோ- அவருக்குக்கெடுதலுண்டாகுமா, ஈண்டுநீ - நீர்இங்கே, இருந்தாய் – இருக்கிறீர் இருக்கும்போது, ஆண்டு – அங்கே, எவ்உயிர் – எந்தஉயிரை, இராமன்விடும் – இராமன் விடுவார்—எ-று. (எஎ)

அங்கிலையாயவண்ணலாண்டுநின்றன்னைநின்னைத்
துன்னிருங்கானும்யாறுமலைகளுந்தொடர்ந்துநாடி
இன்னுயிரின்றியேகுமியந்திரப்படிவமொப்பான்
தன்னுயிர்புகழ்க்குவிற்றசடாயுவைவந்துசார்ந்தான்.

இ-ள். அங்கிலையாய – அப்படியான, அண்ணல் – அந்தராமன், ஆண்டுநின்று- அங்கேயிருந்து, அன்னை – தாயே, நின்னை – உம்மை, துன்இரும் – நெருக்கமிகுதியான, கானும் – காடுகளும், யாறும் – ஆறுகளும், மலைகளும் - பருப்பதங்களும், தொடர்ந்துநாடி – போய்த்தொடர்ந்துதேடி, இன்உயிர் – இனிதானஉயிர், இன்றி – இல்லாமல், ஏகும் – செல்லுகின்ற தேடிவருகிற, இயந்திரவப்படிவம் - சூஸ்திரப்பாவையை, ஒப்பான் – ஒத்துவருகிறஸ்ரீராமன், தன்உயிர் – தன்உயிரை, புகழ்க்கு – கீர்த்திக்காக, விற்ற – விலைசெய்த, சடாயுவைவந்து - சடாயுவென்கிறபெரியஉடையாரைக்கிட்டிவந்து, சார்ந்தான் - சேர்ந்தார்—எ-று. (எஅ)

வந்தவன்மேனிநோக்கிவானுயர்துயரின்வைகி
எந்தைநீயுற்றதன்மையியம்பெனவிலங்கைவேந்தன்
சுந்தரிநின்னைச்செய்தவஞ்சனைச்சொல்லச்சொல்ல
வெந்தனவுலகமென்னநிமிர்ந்ததுசீற்றவெந்தீ.

இ-ள். வந்துஅவன் - கிட்டிவந்து அந்தச்சடாயுவினுடைய, மேனி - சரீரத்தை, நோக்கி - பார்த்து, வான்உயர் - மிகவும்பெரிதான, துயரின்வைகி - துக்கத்திலழுந்தி, எந்தை - என்ஐயாவே, நீ உற்றதன்மை - நீரிப்படி விழலானதை, இயம்பென - சொல்லுமென்றுகேட்க, இலங்கைவேந்தன் - இந்த இராவணனானவன், சுந்தரி - ஜகன்மாதாவான, நின்னைச்செய்த - உமக்குப்பண்ணின, வஞ்சனை - கபடத்தை, சொல்ல சொல்ல - சொல்லும்போது, உலகம் - உலகங்களெல்லாம், வெந்தன என்ன - வெந்துபோமென்னும்படி, சீற்றவெந்தீ - வெப்பமுள்ள கோபாக்கினியானது, நிமிர்ந்தது - மேன்மேலாயிற்று—எ-று. (எகூ)

சீறியிவ்வுலகமூன்றுந்தீந்துகச்சினவாயம்பால்
நூறுவெனென்றுகைவிரைக்கியகாலைநோக்கி
ஊனொருசிறியோன்செய்பமுனிதியோவுலகையுள்ளம்
ஆறுதியென்றுதாதையாற்றலிற்சீற்றமாறி.

இ-ள். சீறி - அப்படிக்கோபங்கொண்டு, இவ்வுலகமூன் றும்-இந்தத்திரிலோகமும், தீந்து உக - கரிந்துசிந்துவதாக, சினவாய் - மீண்டுங்கோபமுண்டாகி, அம்பால் - அதிதீக்ஷணியமானபாணத்தினலே, நூறுவெனென்று - அழிக்கிறேனென்றுகை - தமதுகையிலுள்ள, வில்நோக்கியகாலை - தனுசைப்பார்த்தபோது, நோக்கி- அக்கோபக்குறியைக்கண்டு, ஊறு - இடையூற்றை, ஒருசிறியோன் - ஒரு அல்பமதியுள்ளவன், செய்ய - பண்ண அதற்காக, முனிதியோ - கோபிக்கக்கடவையோ, உலகை - உலகத்தையெல்லாமுனிதியோ, உள்ளம் - உன்கோபத்தை மனத்துக்குள்ளே, ஆறுதிஎன்று - தணிதியாவாயென்று, தாதைஆற்றலில் - அந்தத்தகப்பன் ஆறச்செய்ததனலே, சீற்றம்ஆறி - கோபந்தணிந்து—எ-று. (அ0)

எவ்வழியேகியுற்றான்யாண்டையானுறையுள்யாது
செவ்வியோய்கூறுகென்னச்செப்புவானுற்றசெவ்வி
வெவ்வியல்விதியின்கொட்பால்வீடினன்கழுகின்வேந்தன்
எவ்வியவரிவிற்செங்கையிருவருமிடரின்வீழ்ந்தார்.

இ-ள். எவ்வழி - எந்தத்திசைமுகமாக, ஏகி உற்றான் - போய்ச்சேர்ந்தான் ஓடிப்போனன், யாண்டையான் - இப்போதெங்கிருப்பான், உறையுள்யாது - அவனூர் எது எங்கே, செவ்வியோய் - ஓ தருணோபகாரியே, கூறுகென்ன - சொல்லுமென்றுகேட்கச்செய்தே, செப்புவான் - சொல்லுதற்கு, உற்றசெவ்வி - வாய்கூட்டுகிறபோது, வெவ்வியவிதியின்கொட்பால் - கொடியதெய்வச்செய்கையினலே, கழுகின்வேந்தன்வீடினன் - சடாயுஇறந்துபோனர் தானே உயிர்போயிற்று, எவ்விய- அம்புகளை ஏவத்தக்க, வரிவில் - வரிந்தவிற்களைக்கொண்ட, செங்கை - சிவந்தகைகளையுடைய, இருவரும் - ராமலட்சுமணர், இடரில்வீழ்ந்தார் - துன்பக்கடலிலழுந்தினர்கள்—எ-று. (அக)

அயர்த்தவரரிதிற்றேறியாண்டொழிற்றாதைக்காண்டுச்
செயத்தகுகடன்மையாவுந்தேவருமருளச்செய்தார்
கயத்தொழிலரக்கன்றன்னைநாடிநாங்காண்டுமென்னுப்
புயற்றொடுகுடுமிக்குன்றுங்கானமுங்கடிதுபோனர்.

இ-ள். அயர்ந்தவர் - அப்படிதுன்பசாகரத்தி லழுந்தின இருவரும், அரிதில்தேறி - தெளிதற்குமிகவருத்தமாய், ஆண்தொழில் - ஆண்மைத்தொழிலைப் புரிந்த, தாதைக்கு - தகப்பனுக்கு, ஆண்டு - அங்கே, செயத்தகு - செய்யத்தக்க, கடன்மையாவும் - ஈக்கடன்களெல்லாம், தேவரும் - தேவருங்கூட, மருள - இதென்னவிசேஷமென்று மயங்குவதாக, செய்தார் - செய்துமுடித்த அவ்விருவரும், கயத்தொழில்- இழிதொழில்செய்த, அரக்கன்றன்னை - ராக்ஷதனை, நாம் - நாமிருவரும், நாடி-தேடி, காண்டுமென்னு - பார்ப்போமென்று கண்டுபிடிப்போமென்று, புயல்தொடு- மேகமண்டலத்தை அளாவின, குடுமிக்குன்றும் - சிகரவரைகளும், கானமும் - காடுகளும், கடிதுபோனர் - விரைந்துவந்தார்கள்—எ-று. (அஉ)

அவ்வழிநின்னைக்காணுதயர்த்தவரரிதிற்றேறிச்
செவ்வழிநயனஞ்செல்லுநெடுவழிசேறுசெய்ய
வெவ்வழலுற்றமெல்லென்மெழுகெனவழியுமெய்யன்
இவ்வழியினையபன்னியறிவழிந்திரங்கலுற்றான்.

இ-ள். அவ்வழி - அந்த இடங்களெல்லாம், நின்னைக்காணுது - உம்மைத்தேடியுங்காணமல், அயர்த்தவர் - இளைத்த அவ்விருவரிலே, அரிதில்தேறி-தெளிதற்கு

மிகவும் பிரயாசையாய், செவ்வழி - சிவந்தகாந்திவழிகிற, நயனம் - கண்கள், செல்லும் - நடந்துபோகிற, நெடுவழி - நீளவழிகளெல்லாம், சேறுசெய்ய - அளருக்க, வெவ்அழல் - கொடிய நெருப்பிலே, உற்ற - விழுந்த, மெல்லென் - மிருதுவுள்ளதென்கிற, மெழுகென - மெழுகுபோல, அழியும் - கரைகிற, மெய்யன் - சரீரத்தையுடையனான ஸ்ரீராமன், இவ்வழி - இப்படியான, இனையபன்னி-இவைகளெல்லாஞ்சொல்லி, அறிவழிந்து - மதிமயங்கி, இரங்கல் உற்றான் - அழலானார்—எ-று. (அங)

வேறு.

கன்மத்தைஞாலத்தவராருளரேகடப்பார்
பொன்மெய்த்ததோளான்மயல்கொண்டுபுலன்கள்வேறாய்
நன்மத்தைநாகத்தயல்சூடியநம்பனேபோல்
உன்மத்தனானன்றனையொன்றுமுணர்ந்திலாதான்.

இ-ள். கன்மத்தை - தெய்வஞ்செய்யு நிக்கிரகத்தை, ஞாலத்தவர் - உலகத்துள்ளவர்களில், கடப்பார் - கடக்கவல்லவர்கள், ஆருளரே - யாரேனு மிருக்கிறார்களா, பொன் மொய்த்த - அழகு நிரம்பின, தோளான் - புஜங்களுள்ளவர், மயல்கொண்டு - மயங்கி, புலன்கள்வேறாய் - விஷயங்கள் வேறுபாடாகி சுவைஒளிஊறோசைதெரியாமல், நாகத்துஅயல் - பாம்போடுகூட, நன்மத்தை - நல்லஊமத்தம்பூவை, சூடிய - சூடியிருக்கிற, நம்பனேபோல் - சிவனேநேர்க, உன்மத்தனானன்-தேறுதவராயினர், தனை - தன்னிலையில், ஒன்றும் - ஏதேனுமொருபடியாவது, உணர்ந்துஇலாதான் - ஆலோசியாதவர் தன்படிதனக்குத்தெரியாதவன் தனக்குந்தன்றன்மையறிவரியான்—எ-று. (அச)

போதாயினபோதுனதண்புனலாடல்பொய்யோ
சீதாபவளக்கொடியன்னவட்டேடியென்கண்
நீதாதருகிற்றிலையேனெருப்பாதியென்னாக்
கோதாவிரியைச்சினங்கொண்டனன்கொண்டலொப்பான்.

இ-ள். போது - சூரியன், ஆயினபோது - உதயமான வுடனே, உனதண்புனல் - உனது குளிர்ந்தநீரிலே, ஆடல்சீதா - சீதைவந்துமுழுகுகிறது, பொய்யோ-இல்லையா, பவளக்கொடி - அந்தப்பவளக்கொடி, அன்னவள் - போன்றவளை, தேடி-தேடிக்கண்டு, என்கண் - என்னிடத்தே கொண்டுவந்து, நீதா - நீயே கொடுக்கவேணும், தருகிற்றிலையேல் - தராதிருப்பாயானால், நெருப்பு ஆதி - எனது பாணக்கினியாலே வெந்துபோவாய், என்னா - என்று, கோதாவிரியை - கோதாவிரியாற்றைப்பார்த்து, சினங்கொண்டனன் - கோபமூண்டார், கொண்டல்ஒப்பான் - மேகம்போன்றவர்—எ-று. (அரு)

குன்றேகடிதோடினைகோமளக்கொம்பரன்ன
என்றேவியைக்காட்டுதிகாட்டலையென்னினிவ்வம்
பொன்றேயமையும்முனுடைக்குலமுள்ளவெல்லாம்
இன்றேபிளவாவெரியாக்கரியாக்கவென்றான்.

இ-ள். குன்றே - ஓமலையேநீ, கடிது - விரைந்துகாண, ஓடினை - நீண்டோடியிருக்கிறதினாலே, கோமளக்கொம்பர் அன்ன - இளங்கொம்புபோன்ற, என்தேவியை - எனதுநாயகியை, காட்டுதி - நான் பார்க்கச்செய்யவேணும், காட்டலையென்னில் - நீகாட்டாயேயானால், இவ் அம்புஒன்றே - இந்தஒருபாணமே, அமையும்-போ

தும், உன் உடைக்குலம் - உன்னுடைய ஜாதிகளாக, உள்ள எல்லாம் - இருப்பவைகளை யெல்லாம், இன்றே - இப்போதே, பிளவா - பிளந்து, எரியா - எரித்து, கரியாக்க - கரிகளாகப் பண்ணுதற்கு, என்றான் - இவ்வம்பொன்றே அமையும்—எ-று. ()

பொன்மானுருவாற்சிலமாயைபுணர்க்கவன்றோ
என்மானகல்வுற்றனளிப்பொழுதென்கணென்னா
நன்மான்களைநோக்கிநுந்நாமமுமாய்ப்பெனின்றே
வின்மாண்கொலைவாளியினென்றுவெகுண்டுநின்றான்.

இ-ள். பொன்மான் உருவால் - பொன்மான்வடிவுகொண்டு, சிலமாயைபுணர்க்க - சிலவஞ்சனைசெய்ய, அன்றோ - அதனாலல்லவோ, என்மான்-எனதுமானானவள், அகல்வுற்றனள் - பிரியலானாள் எப்போதென்றால், இப்பொழுது - இப்போது யாரிடத்தென்றால், என்கண் - என்னிடத்தினின்று அகல்வுற்றனள், என்னா-என்றெண்ணி, நன்மான்களைநோக்கி - காட்டிலுள்ள நன்மான்களையெல்லாம்பார்த்து, இன்றே - இப்போதே, வில்மான் - வில்லினதுமாண்பினாலே, கொலை - கொலைசெய்யவல்ல, வாளியின் - ஒரு அம்பினாலே, நும்நாமமும் - உங்கள்பேரையும், மாய்ப்பன் - அழிக்கிறேன், என்று வெகுண்டுநின்றான்-நெடிதுநேரங்கோபங்கொண்டார் எ-று. (அஎ)

வேறுற்றமனத்தவனின்னதொர்விம்மனோவ
ஆறுற்றநெஞ்சிற்றனதாருயிராயதம்பி
கூறுற்றசொல்லென்றுளகோதறுநன்மருந்தால்
தேறுற்றுயிர்பெற்றியல்புஞ்சிலசொல்லலுற்றான்.

இ-ள். வேறுற்ற - இப்படிவேறுபடுதலான, மனத்தவன் - மனமுள்ளவர்,இன்னது - இப்படியான, ஓர் - நிகரில்லாத, விம்மல் - துன்பங்கொண்டு, நோவ - வருந்த அதுகண்ட, ஆறுற்ற - கோபம்ஆறின, நெஞ்சின் - மனமுள்ள, தனது-தன்னுடைய, ஆர்உயிராய - அரியஉயிர்போன்ற, தம்பி - இளையபெருமாள், கூறுற்ற-சொன்ன, சொல்லென்றுள - சொல்லென்கிற, கோதுஅறு - தோஷமில்லாத, நன்மருந்தால் - நல்லஔஷதத்தினாலே, தேறுற்று - தெளிந்து, உயிர்பெற்று - தன்புத்திதனக்குத்தோன்றி, இயல்பும் - பின்பு தேடிவர லானவதையும், சில - சிறிது,சொல்லலுற்றான் - சொல்லலானார்—எ-று. (அஅ)

வந்தானிளையானொடுவானுயர்தேரின்வைகும்
நந்தாவிளக்கின்வருமெங்குலநாதன்வாழும்
சந்தார்தடங்குன்றினிற்றன்னுயிர்க்காதலோனும்
செந்தாமரைக்கண்ணனுநட்டனர்தேவருய்ய.

இ-ள். வந்தானிளையானொடு - இளையபெருமாளுடனே தேடிவந்தார், வான் உயர்தேரின் - உயர்ந்தஆகாசத்திலே ஒற்றைஉருளைத்தேரின்மேலே, வைகும்-தங்குவதான, நந்தாவிளக்கின் - கெடாதவிளக்கான சூரியனிடத்திலிருந்து, வரும் - பிறந்த, எங்குலநாதன் - எமதுகூட்டத்தரசன், வாழும் - இருப்பதான, சந்துஆர்-சந்தனவிருக்ஷங்கள்நிரம்பின, தடங்குன்றினில் - ஒருபெரியமலையிலே, தன்உயிர் - தனதுயிர்மேல், காதலோனும் - பிரியமுள்ளசுக்கிரீவனும் வாலிஉயிரைப்போக்கவேண்டித் தன்னுயிரை அவ்வலியால்அழியாமற்காக்கவேண்டினவனும், செந்தாமரைக்கண்

ணனும் – ஸ்ரீராமனும், நட்டனர் – சிநேகமானார்கள், தேவர்உய்ய – தேவர்கள் துன்பந்தீர்வதாக நட்டனர்—எ-று. (அகூ)

உண்டாயதுமுற்றதுமுற்றுமுணர்த்தியுள்ளம்
புண்டானெனநோயுறவிம்முறுகின்றபோழ்தின்
எண்டானிழந்திட்டனனேந்திழையாங்கள்காட்டக்
கண்டானுயர்வேதமும்போதமுங்காண்கிலாதான்.

இ-ள். உண்டாயதும் – நாட்டிலே கைகேசியால் வந்தவிளைவும், உற்றதும்- சாட்டிலே மான்வடிவாலே வந்தவிளைவும், முற்றும் – முழுதும், உணர்த்தி – சொல்லி, உள்ளம் – மனமானது மனமல்ல, புண்தானென – புண்ணேயென்னும்படி, நோய்உற – பிணிமிகுதியாய், விம்முறுகின்றபோழ்தில் – துக்கப்படுகிறபோது, எண் தான் – தன துநினைவை, இழந்திட்டனன் – மறந்துபோயினர், ஏந்துஇழை – அப்போது நீபூண்டிருந்த ஆபரணங்களை, யாங்கள்காட்டக்கண்டான் – நாங்கள் கொண்டுவந்து காட்டக்கண்டனர், உயர் – உயர்ந்த, வேதமும் – வேதங்களாலும், போதமும் – அவையுணர்ந்த ஞானங்களாலும், காண்கிலாதான் – காணக்கூடாதவர்கண்டார்—எ-று. (கூ0)

தணிகின்றநஞ்சொற்றொடர்தன்மையத்தன்மைதன்னைத்
துணிகொண்டிலங்குஞ்சுடர்வேலவன்றூயநின்கண்
அணிகண்டுழியேயமுதந்தெளித்தாலுமாறுப்
பிணிகொண்டதுபண்டதுண்டாயினும்பேர்ப்பதென்றால்.

இ-ள். தணிகின்ற – தாழ்ந்துசொல்லுகிற,நம்சொல் – எங்கள்சொல்லை,தொடர்தன்மை – கேட்கிறதினாலே, அத்தன்மைதன்னை – அப்படிதுக்கப்படுகிறதை, துணிகொண்டு – துணித்துக்கொண்டு போக்கிக்கொண்டு, இலங்கு – உயிருள்ளவன் போலிருக்கிற, சுடர்வேலவன் – ஒண்மதியானவேலையுடையவர், தூய – பரிசுத்தமுள்ள, நின்கண் – உன்னிடத்திலிருக்கிற, அணிகண்டுழியே – ஆபரணங்களைக்கண்டபோதே, அமுதம் – சாவாமருந்தை, தெளித்தாலும் – பூசினாலும் ஊற்றினாலும், ஆறு – ஆறுததீராத, பிணிகொண்டது – நோயாளியானது, பண்டுமுன்னே-அணிகாட்டினபோது, அது – அந்தநோய், உண்டாய் – அதுமுதல்தோன்றி, இனும் – இன்னமும், பேர்ப்பது – பேர்க்கத்தக்கது, அன்று – அல்லாததாயிருக்கிறது—எ-று. ()

அயர்வுற்றரிதிற்றெளிந்தம்மலைக்கப்புறத்தோர்
உயர்பொற்கிரியுற்றுளன்வாலியென்றோங்கலொப்பான்
துயருற்றவிராவணன்வாலிடைப்பண்டுதூங்க
மயர்வுற்றபொருப்பொடுமால்கடறாவிவந்தான்.

இ-ள். அயர்வுற்று – அப்படிச்சோர்ந்து, அரிதில்-மிகவும்வருத்தத்துடனே, தெளிந்து – ஒருவகைத் தெளிவுகொண்டு, அம்மலைக்கு – அந்த மதங்கமலைக்கு, அப்புறத்து - அப்பால், ஓர் - ஒரு, உயர் - உயர்ந்த, பொற்கிரி-பொன்மயமான கிரிக்கு, உற்று – போய், உளன் - அங்குள்ளவன், வாலியென்று - வாலியென்னும்பெயர்கொண்டு, ஓங்கல் ஒப்பான் - மலைபோலிருக்கிறவன், துயர்உற்று - துன்பங்கொண்டு, அவிராவணன் - அந்த இராவணனானவன், வாலிடை – தன்வாலிலே, பண்டு-முன்னே, தூங்க - கட்டுப்பட்டிருக்க, மயர்வுஉற்ற - மயங்கிக்கிடக்கிற, பொருப்போடு-மலைகளுடனே, மால்கடல் - மயங்கிக் கிடக்கிற கடல்களையும், தாவி - தாண்டி, வந்தான் - வரலானவன்—எ-று. மயர்வு இங்குகலந்திருத்தல். (கூஉ)

ஆயானையோரம்பினிலாருயிர்வாங்கியன்பிற்
றூயான்வயினவ்வரசீந்தவன்சுற்றுசேனை
மேயான்வருவானெனவிட்டனன்மேவுகாறும்
ஏயானிருந்தானிடைதிங்களிரண்டிரண்டும்.

இ-ள். ஆயானை - அப்படிப்பட்டவாலியை, ஓரம்பினில் - ஒரு பாணத்தினு லே, ஆர்உயிர் - அருமையான உயிரை, வாங்கி - கொண்டு, அன்பில் - விசுவாசத்தி னுலே, தூயான்வயின் - பரிசுத்தனுன சுக்கிரீவன்வசமாய், அவ்வரசு - அந்தராஜாங் கத்தை, ஈந்து - கொடுத்து, அவன் - அந்தச்சுக்கிரீவன், சுற்று - தன்னைச்சூழ்ந்த, சேனை - சேனைகளுடனே, மேயான் - கூடினவனுகி, வருவானென - வருவானென்று, விட்டனன் - சுக்கிரீவனைப் போகவிட்டு, மேவுகாறும் - அவன் வருமளவும், ஏயான் - அவனைப்போகவிட்டராமன், திங்களிரண்டிரண்டும் - நாலுமாசக்காலமும், இடை - அம்மலையினிடத்தே, இருந்தான் - இருந்தனர்—எ-று. இடைநடுவுள்ள நாலுமாசமும் எனவுமாம். (கூங)

பிற்கூடியசேனைபெருந்திசைபின்னவாக
விற்கூடுநுதற்றிருநின்னிடைமேவவேவித்
தெற்கூடுருவக்கடிதேவினன்சேர்ந்ததென்ன
முற்கூடியகூறினன்காலமோர்மூன்றும்வல்லான்.

இ-ள். பிற்கூடிய - பின்னேவந்துகூடின, சேனை - சேனைகளை, பெருந்திசை - தூரஅளவுள்ள திசைகள், பின்னஆக - பின்னுள்ளனஆக திசைகளுக் கப்பாலும், விற்கூடு - வில்லுக்கொப்பான, நுதல் - புருவத்தையுடைய, திரு-லட்சுமியே, நின்னிடை - உன்னைக் காண்பதாக உன்னிடத்துக்கு, மேவ - வரும்படி, ஏவி- அனுப்பிவிட்டு, தெற்கூடு - இந்தத்தென்திசைக்குள், உருவ-முழுதுந்தேட, கடிது- விரைந்து, ஏவினன் - என்னை அனுப்பினுன், சேர்ந்தது என்ன - அவன் உத்தரவின்படிதான் நான்வந்ததென்று, முற்கூடிய - முன்னேதாங்கள்கூடினவகைகளை, கூறினன் - சொன்னுர், காலமோர் மூன்றும் - முக்காலமும், வல்லான் - தெரியவல்ல அனுமார்—எ-று. (கூச)

வேறு.

அன்பினனிவ்வுரையுணர்த்தவாரியன்
வன்பொறைநெஞ்சினன்வருத்தமுன்னுவாள்
என்புறவுருகினளிரங்கியேங்கினள்
துன்பமுமுவகையுஞ்சுமந்தவுள்ளத்தாள்.

இ-ள். அன்பினன் - அன்புள்ளவரான அனுமார், இவ்வுரை - இந்தவார்த் தைகளை, உணர்த்த - சொல்லுமளவில், ஆரியன் - முழுதுந்தனக்குநல்லவராய்,வன் பொறை - வலிதானபொறுமையுள்ள, நெஞ்சினன்-மனதுள்ளராமனுடைய, வருத்தம் - வருத்தத்தை, உன்னுவாள் - எண்ணுகிறவளாய், என்பு - தன் எலும்பும், உற உருகினள் - மிகக்கரைந்து, இரங்கி - இரக்கங்கொண்டு அழுது, ஏங்கினள்-துக்கித் தவளாய், துன்பமும் - துக்கமும், உவகையும் - சந்தோஷமும், சுமந்த-உளவான, உள்ளத்தாள் - மனத்தையுடையவளானுள்—எ-று. (கூரு)

நையுறுசிந்தையணயனவாரியின்
தோய்யல்வெஞ்சுழியிடைச்சுழிக்குமேனியள்
ஐயநீயளப்பருமளக்கர்நீந்தினை
எய்தியதெப்பரிசியம்புவாயென்றாள்.

இ-ள். நையுறு — நைந்துகரைகிற, சிந்தையள் — மனமுள்ளவளாய், நயனம்-கண்களிலிருந்துவருகிற, வாரியின் — ஜலத்தாலாய, தொய்யல் — சேற்றிலும், வெஞ்சுழியிடை — வெவ்வியசுழியிலும், சுழிக்கும் — சுழல்வதான, மேனியள் — சரீரத்தையுடையவள், ஐயநீ — அப்பனேநீ, அளப்பரும் — அளவிட அரிதான, அளக்கர் — கடலை, நீந்தினையெய்தியது — கடந்துவந்தது, எப்பரிசு — எப்படி, இயம்புவாய் — சொல்லக்கடவை என்றாள்—எ-று. (கூசு)

சுருங்கிடையுன்னொருதுணைவன்றூயதாள்
ஒருங்குடையுணர்வினரோய்வின்மாயையின்
பெருங்கடல்கடந்தனர்பெயரும்பெற்றிபோல்
கருங்கடல்கடந்தனென்காலினலென்றான்.

இ-ள். சுருங்கு - அதிசூட்சுமமான, இடை - இடையையுடையாய், உன்-உன்னுடைய, ஒரு துணைவன் — ஒப்பில்லாத நாயகனுடைய, தூயதாள் — பரிசுத்தமான திருவடிகளை, ஒருங்கு உடை — முழுதும் எண்ணுதலையுடைய, உணர்வினர்-அறிவுள்ளபெரியோர்கள், ஓய்வில் — ஓய்தலில்லாத, மாயையின் பெருங்கடல் - மாயையானபெரியகடலை, கடந்தனர் - கடந்து, பெயரும்பெற்றிபோல் — போகிறதுபோல், காலினல் - என்காலாலே, கருங்கடல் - இந்தக்கரியகடலை, கடந்தனன்-கடந்துவந்தேன் என்றான்—எ-று. (கூஎ)

இத்துணைச்சிறியதோரெண்ணில்யாக்கையை
தத்தினைகடலதுதவத்தினயதோ
சித்தியினியன்றதோசெப்புவாயென்றாள்
முத்தினுநிலவினுமுறுவன்முற்றினள்.

இ-ள். இத்துணை — இவ்வளவு, சிறியது — சிறியதான, ஓர் - ஒரு, எண்ணில்-எள்ளுப்போல் இவ்வளவு சிறியதான ஒரு, யாக்கையை - சரீரமுள்ளநீ, தத்தினை கடல் — கடலைத்தாண்டினாய், அது - அப்படித்தாண்டிவந்தது, தவத்தின் — உன் தவத்தால், ஆயதோ - முடிந்ததோ, சித்தியின் — நீபெற்றிருக்கிற சித்திகளால், இயன்றதோ — ஆயிற்றோ, செப்புவாய் - சொல்லக்கடவை என்றாள், முத்தினும் — முத்தைப்பார்க்கிலும், நிலவினும் - சந்திரிகையைப்பார்க்கிலும், முறுவல் - பல்லொளி, முற்றினள் மிக்கவள்—எ-று. (கூஅ)

சுட்டினனின்றனன்றொழுதகையினன்
விட்டுயர்தோளினன்விசும்பின்மேக்குயர்
எட்டருநெடுமுகடெய்திநீளுமேல்
முட்டுமென்றுருவொடுவளைந்தமூர்த்தியான்.

இ-ள். தொழுதகையினன் - குவித்தகைகளையுடையவராய், சுட்டினன் - தாயேபாருமென்றுகுறித்து, நின்றனன் — நின்றார், விட்டு — கீழேதொங்கவிட்டு, உயர்-மேலே உயர்ந்துள்ள, தோளினன் — தோள்களுடனே, விசும்பின்மேக்கு — ஆகாயத்

தின்மேலே, உயர் — உயர்ந்த, எட்டரு — யாவராலு மெட்டக்கூடாத, நெடு முகடு- நீண்டவான்முகட்டை, எய்தி - சென்று, நீளுமேல் — இன்னம் தலையுயருமானல், முட்டுமென்று - தலையில்மோதுமென்று, உருவொடு - உருவுடனே, வளைந்த - குனிந்த, மூர்த்தியான் - தலையையுடையவராய் சுட்டினனின்றனன்—எ-று. (கூகூ)

செவ்வழிப்பெருமையென்றுரைக்குஞ்செம்மைதான்
வெவ்வழிப்பூதமோரைந்தின்மேலதோ
அவ்வழித்தன்றெனின நுமன்பாலதோ
எவ்வழித்தாகுமென்றெண் ணுமீட்டதே.

இ-ள். செவ்வழி — செவ்வையான மார்க்கத்தால்வருகிற, பெருமையென்று- பெருந்தன்மையென்று, உரைக்கும் — சொல்லுகிற, செம்மைதான் — அந்தச்செவ்வையானது, வெவ்வழி - கொடியமார்க்கமுள்ள, பூதமோரைந்தின் — ஒரு ஐம்பூதங்களின், மேலதோ — மேலுள்ளதோ, அவ்வழித்து - அந்தப்பூதங்களினிடமானது, அன்றெனின் — அல்லவென்ருல், அனுமன்பாலதோ — அனுமாரிடமாயிருக்கிறதோ, எவ்வழித்து — எந்த இடத்தில், ஆகுமென்று - உள்ளதாகுமென்று, எண்ணும் - ஆலோசிக்கும்படியான, ஈட்டது — பெருமையுள்ளது அப்பெருமை—எ-று. (௪00)

ஒத்துயர்கனகவான்கிரியினோங்கிய
மெய்த்துறுமரந்தொறுமின்மினிக்குலம்
மெய்த்துளவாமெனமுன்னும்பின்னரும்
தொத்தினதாரகைமயிரின்சுற்றெலாம்.

இ-ள். ஒத்து உயர் - உயர்ந்த, கனகவான்கிரியின் - பெரிய பொன்மலையை, ஒத்து — ஒப்பாய், ஓங்கிய - வளர்ந்த, மெய் - சரீரத்திலே, துறு — நெருங்கின, மரந்தொறும் - உரோமங்களான மரங்களெல்லாம், மின்மினிக்குலம் - மின் மினிக்கூட்டங்கள், மொய்த்துள — நெருங்கிமொய்த்திருக்கின்றன, ஆமென — போலுமென்ன, முன்னும்பின்னரும் — முன்னும்பின்னும், தொத்தினதாரகை — ஒட்டியிருந்தன நக்ஷத்திரங்கள், மயிரின் — உரோமங்களின், சுற்றெலாம் - சூழலெல்லாம்—எ-று. ()

கண்டலமறிவொடுகடந்தகாட்சியன்
விண்டலமிருபுடைவிளங்குமெய்ம்மையைக்
குண்டலமிரண்டுமக்கோளின்மாச்சுடர்
மண்டிலமிரண்டொடுமாறுகொண்டவே.

இ-ள். கண்டலம் - கண்களையும், அறிவொடு - மனங்களையும், கடந்த - மேவிட்டுச்சென்ற, காட்சியன் - தோற்றமுள்ளவருடைய, விண்டலம் — ஆகாயத்தின், இருபுடை - இருபுறத்திலும், விளங்கும் - விளங்குகிற, மெய்மை - மெய்யான, அக்குண்டலம் இரண்டும் - அந்தக்குண்டலங்களிரண்டும், அ - அங்குள்ள, கோள் இல்- நவக்கிரகங்களிலே, மா - பெரிய, சுடர்மண்டிலம் - சோதிவட்டங்களான, இரண்டொடு — சூரியசந்திரருடனே, மாறுகொண்ட - எதிராயின—எ-று. (௪0உ)

ஏணிலவொருகுரங்கிதென்றெண்ணலா
ஆணியையநுமனையமைய்நோக்குவாள்
சேணுயர்பெருமையோர்திறத்ததன்றெனு
நாணுறுமுலகெலாமளந்தநாயகன்.

இ-ள். ஏணில - பலமில்லாத, ஒருகுரங்கு ஈதென்று - இதொருகுரங்கென்று, எண்ணலா - எண்ணுமல், ஆணியை - அப்போது தனக்காதாரமாய்வந்த, அனுமனை - திருவடியை, அமைய - முழுதும்பொருந்த, நோக்குவாள் - பார்ப்பவளானபிராட்டி, சேண் உயர் - மிகவுமுயர்ந்ததான, பெருமை - பெருமையென்பது, ஓர்திறத்தது - ஓரிடத்துள்ளது, அன்றெனு - அல்லாததென்று, உலகெலாம் - உலகமுழுதும், அளந்த - அளவுசெய்த, நாயகன் - சுவாமிபோல், நாணுறும் - வெள்கலானுள்- எ-று. அளக்கர் நீந்தினையெப்பரிசென்று தான்கேட்டதனுலே உலகளந்த நாயகன் அனுமார் பெருமைகண்டு வெள்குதல்போல் பிராட்டிவெள்கினுளென்க. (கoரு)

எண்டிசைமருங்கினுமுலகம்யாவினும்
தண்டவிலுயிரெலாந்தன்னைநோக்கின
அண்டமென்றதினுறையமரர்யாரையும்
கண்டனன்ருனுந்தன்கமலக்கண்களால்.

இ-ள். எண்திசைமருங்கினும் - எட்டுத்திக்குகளிலும், உலகம்யாவினும் - எந்தலோகங்களினும், தண்டல் இல் - பிரிதலில்லாத, உயிரெல்லாம் - எல்லா உயிர்களும், தன்னைநோக்கின - அனுமாரையேபார்க்கலாயின, அண்டமென்றதில் - ஆகாயமென்னுமிடத்திலே, உறை - வாசம்பண்ணுகிற, அமரர்யாரையும் - எல்லாத்தேவர்களையும், தன் - தம்முடைய, கமலக்கண்களால் - தாமரைமலர்போலுங்கண்களாலே, தானும்கண்டனன் - தாமுங்கண்டார்—எ-று. (கoச)

எழுந்துயர்நெடுந்தகையிரண்டுபாதமும்
அழுந்துறவழுத்தலினிலங்கையாழ்கடல்
விழுந்ததுநிலமிசைவிரிந்தவெண்டிரை
தழைந்தனபுரண்டனமீனந்தாமெலாம்.

இ-ள். எழுந்து - மேலே எழுதலாய், உயர் - உயர்ந்த, நெடுந்தகை - நீண்டபெருமையையுடைய அனுமார், இரண்டுபாதமும் - இரண்டுகால்களும், அழுந்துற- பூமியிலேபதிய, அழுத்தலின் - அழுத்துதலினுலே, இலங்கை - அந்த இலங்காபுரியானது, ஆழ்கடல் - ஆழமானகடலுக்குள்ளே, விழுந்தது - அழுந்திற்று, நிலமிசை- அந்தப்பூமிமேலே, விரிந்த - விரிந்துள்ள, வெண்திரை - வெள்ளை அலைகள், தழைந்தன - மிகப்பெருகலாயின, மீனமெல்லாம் - மீன்களெல்லாம், புரண்டன - அதன்மேற்புரளலாயின—எ-று. (கoரு)

வஞ்சியம்மருங்குலம்மறுவில்கற்பினுள்
கஞ்சமும்புரைவனகழலுங்கண்டிலாள்
துஞ்சினரரக்கரென்றுவக்குஞ்சூழ்ச்சியாள்
அஞ்சினெனிவ்வுருவடங்குவாயென்ருள்.

இ-ள். வஞ்சி - கொடிபோலும், அம் - அழகிதான, மருங்குல் - இடையையுடைய, அ - அந்த, மறுஇல் - யாதொரு தோஷமுமில்லாத, கற்பினுள் - கற்புள்ள சீதாபிராட்டி, கஞ்சமும் - தாமரைமலரையும், புரைவன - ஒப்பாகுவனவாகிய, கழலும் - பாதமுழுதும், கண்டிலள் - தெரியாதவளாய், அரக்கர் - இனி அரக்கரெல்லாம், துஞ்சினரென்று - இவ்வுருவால் மடிவார்களென்று, உவக்கும் - சந்தோஷிக்கிற, சூழ்ச்சியாள் - ஆலோசித்து, இவ்வுரு - இந்த உன் உருவுக்கு, அஞ்சினன் - பயந்தேன், அடங்குவாய் - இனி அடங்கக்கடவை, என்ருள்—எ-று. (கoசு)

முழுவதுமிவ்வுருக்காணமுற்றிய
குழுவிலதுலகினிக்குறுகுவாயென்றாள்
எழுவினுமெழிலிலங்கிராமன்றோள்களைத்
தழுவினளாமெனத்தளிர்க்குந்தன்மையாள்.

இ-ள். இவ்வுருமுழுவதும் – இந்தவடிவுமுழுதும், காண – காண்பதற்கு, முற்றிய – நிரம்பின, குழுவினது – கூட்டமுள்ளதாயிருக்கிறது, உலகு இனி – இந்த இடம் ஆகையால், குறுகுவாய் என்றாள் - முன்போலாகக்கடவை, எழுவினும் – எழுக்கம்பத்திலும், எழில் – அழகு, இலங்கு – விளங்குகின்ற, இராமன் – இராமனுடைய, தோள்களை – புஜங்களை, தழுவினளாமென – சேர்ந்தாள்போல, தளிர்க்கும் – சந்தோஷிப்பதான, தன்மையாள் - குணமுள்ளவள் என்றாள்—எ-று. (கoஎ)

ஆண்டகையநுமனுமருளதாமெனு
மீண்டனன்விசும்பெனும்பதத்தைமீச்செல்வான்
காண்டலுக்குரியதோருருவங்காட்டினன்
தூண்டருவிளக்கனாளினையசொல்லினாள்.

இ-ள். ஆண்தகை – ஆண்மையிற்சிறந்த, அனுமனும் – சிறியதிருவடி, அருளது – உமதருளின்படியே, ஆமெனு - முடியுமென்று, விசும்பெனும்பதத்தை - ஆகாயமென்னுமிடத்துக்கு, மீச்செல்வான் – மேலேபோகிறவர், மீண்டனன் – திரும்பினராய், காண்டலுக்கு – பிராட்டிபார்ப்பதற்கு, உரியது – தக்கதான, ஒருருவம்- ஒருவடிவை, காட்டினன் – காண்பித்தார், தூண்டரு – தூண்டுதலில்லாத, விளக்கு- தீபத்தை, அனாள் – ஒத்தபிராட்டி, இனைய – இவ்வார்த்தைகள், சொல்லினாள்-சொல்லலானாள்—எ-று. (கoஅ)

வேறு.

இடந்தாயுலகைமலையோடுமெடுத்தாய்விசும்பையிவைசுமக்கும்
படந்தாழரவையொருகரத்தாற்பறித்தாயெனினும்பயனின்றால்
நடந்தாயிடையேயென்றாலுநாணாநினக்குநளிர்கடலைக்
கடந்தாயென்றாலென்னாகுங்காற்றாமன்னகடுமையாய்.

இ-ள். மலையோடும் உலகை இடந்தாய் – மலைகளுடனே உலகத்தையும்பேர்த்தாய், விசும்பையெடுத்தாய் – ஆகாயத்தையும் தூக்கினாய், இவை – மலைகள்முதலான இவைகளையெல்லாம், சுமக்கும் – தாங்குகின்ற, படம் தாழ் – படங்கள்பொருந்தின, அரவை - ஆதிசேடனையும், ஒருகரத்தால் – ஒருகையாலே, பறித்தாய் – இழுத்தெறிந்தாய், எனினும் – என்றுசொன்னாலும், பயன் இன்று – பிரயோஜனமில்லை, இடையே – இந்தக்கடலினிடத்தே, நடந்தாய் - நடந்துவந்தாய், என்றாலும் – என்று சொன்னாலும், நினக்கு – உன்பெருமைக்கு, நாண் ஆம் - வெட்கமுள்ளதாம், நளிர்- பெரிதான, கடலை – இந்தக்கடலை, கடந்தாய் – தாண்டிவந்தாய், என்றால் – என்று சொல்வதானால், என் ஆகும் - என்னபெருமைவிளங்கும், காற்று - வாயுவையே, அன்ன – ஒப்பான, கடுமையாய் – வேகமுள்ளவனே—எ-று. ஆம்-சாரியை. (கoகூ)

ஆழிநெடுங்கையாண்டகைதன்னருளும்புகழுமழிவின்றி
ஊழிபலவுநிலைநிறுத்தற்கொருவனீயேயுளையானாய்
பாழிநெடுந்தோள்வீராநின்பெருமைக்கேற்பப்பகையிலங்கை
எழுகடற்குமப்புறத்ததாகாதிருந்ததிழிபன்றோ.

இ-ள். ஆழி – சக்கரத்தையுடைய, நெடுங்கை – நீண்டகைகளோடுள்ள, ஆண்டகைதன் – ஆண்மையிற்சிறந்த தசரதமகாராஜருடைய, அருளும் – தயவுக்கும், புகழும் – கீர்த்திக்கும், அழிவு – ஒருகெடுதலும், இன்றி – இல்லாமல், ஊழிபலவும் - அநேக ஊழிகாலஅளவும், நிலைநிறுத்தற்கு – நிலைபெறச்செய்வதற்கு, ஒருவனீயே – நீ ஒருவனே, உளஆனாய் – உண்டானாய், பாழி – விசாலமான, நெடுந்தோள் – நீண்ட தோள்களையுடைய, வீரா – வீரனே, நின்பெருமைக்கு – உன்பெருமைக்கு, எற்பசரியாக, பகை – விரோதமான, இலங்கை – இந்த இலங்காபுரி, ஏழுகடற்கும் – ஏழுகடலுக்கும், அப்புறத்தது - அப்பாலுள்ளதாய், ஆகாதிருந்தது – இல்லாதிருக்கிறது, இழிபுஅன்றே – குறைவு அல்லவோ, ஆழிநெடுங்கை – ஆண்டகை ஸ்ரீராமனெனவுமாம்—எ-று. (கக0)

அறிவுமீதேயுருவீதேயாற்றலீதேயரும்புலத்தின்
செறிவுமீதேசெயலீதேதேற்றமீதேதேற்றத்தின்
நெறியுமீதேநினைவீதேநீதியீதேநினக்கென்றால்
வெறியரன்றேகுணங்களான்விரிஞ்சன்முதலாமேலானோர்.

இ-ள். அறிவும் – உன்விவேகமும், ஈதே – இத்தன்மையதே, உரு-உன்சொரூபமும், ஈதே – இத்தன்மையதே, ஆற்றல் – உன்சாமர்த்தியமும், ஈதே – இத்தன்மையதே, அரும் – அடக்கற்கரிதான, புலத்தியன் – இந்திரியங்களை, செறிவும் – நீ அடக்கியிருக்கிறதும், ஈதே – இத்தன்மையதே, செயல் – உனதுசெய்கையும், ஈதே- இத்தன்மையதே, தேற்றம் – உன்துணிவும், ஈதே - இத்தன்மையதே, தேற்றத்தின் – துணிவினுடைய, நெறியும் – மார்க்கமும், ஈதே - இத்தன்மையதே, நினைவு-உன்எண்ணமும், ஈதே – இத்தன்மையதே, நீதி - உன் ஒழுங்கும், ஈதே – இத்தன்மையதே, நினக்கு – உனக்கு, என்றால் – என்றுசொல்லலானால், விரிஞ்சன்முதலாம் – பிரமாவேமுதலான, மேலானோர் – மேம்பாடுள்ளவர்கள், குணங்களால் - தங்கள்குணங்களாலே, வெறியர் - பயனில்லாமையையுடையவர்கள், அன்றே - அல்லவோ—எ-று. (ககக)

மின்னேரெயிற்றுவல்லரக்கர்வீக்கநோக்கிவீரற்குப்
பின்னேபிறந்தானல்லதோர்துணையிலாதபிழைநோக்கி
உன்னாநின்றேயுடைகின்றேனொழிந்தேனையமுயிருயிர்த்தேன்
என்னேநிருதரென்னுவரிவனேயெங்கோன்றுணையென்றால்.

இ-ள். மின் – மின்னலுக்கு, நேர் - ஒப்பான, எயிற்று - பற்களையுடைய,வல் அரக்கர் – வலியராக்ஷதர்கள், வீக்கம்நோக்கி – பெருக்கத்தைப்பார்த்து, வீரற்கு-ஸ்ரீராமனுக்கு, பின்னேபிறந்தான் – பின்பிறந்ததம்பியை, அல்லது – அல்லாமல், ஓர்துணைஇலாத – ஒருதுணையும் இல்லாதிருக்கிற, பிழைநோக்கி - குற்றங்கண்டு, உன்னாநின்றே - ஆலோசித்துக்கொண்டே, உடைகின்றேன் – மனங்கலங்குகிறநான், ஐயம்ஒழிந்தேன் - இப்போது சந்தேகந்தீர்ந்தேன், உயிர் – எனக்குயிருண்டாகி, உயிர்த்தேன் – சுவாசம்விடலானேன், இவனே – இப்படிப்பட்டமகாபுருஷனே, எங்கோன் – எங்கள்ஆண்டவனுக்கு, துணையென்றால் - உதவியானால், நிருதர் - இந்ராக்ஷதர்கள், என் ஆவர் - எவ்வளவினராவார்கள், என்னே - இதுஎன்ன ஆச்சரியம்-எ-று.

மாண்டேனெனினும்பழுதன்றேயின்றேமாயச்சிறைநின்றும்
மீண்டேனென்னையொறுத்தாரைக்குலங்களோடும்வேரறுத்தேன்
பூண்டேனெங்கோன்பொலன்கழலும்புகழேயன்றிப்புன்பழியும்
தீண்டேனென்றுமனமகிழ்ந்தாடிருவின்முகத்துத்திருவன்னாள்.

இ-ள். மாண்டேன் – இறந்துபோனேனே, எனினும்-ஆனாலும், பழுதுஅன்றே – குற்றமல்லவோ, இன்றே – இப்போதே, மாயம்-கபடமான, சிறையினின்றும்-சிறையினின்றும், மீண்டேன் – நீங்கினேன், என்னை ஒறுத்தாரை – என்னைவருத்தப்படுத்தினவர்களையெல்லாம், குலங்களோடும் – வம்சத்துடனே, வேர்அறுத்தேன்-அடிஅறச்செய்தேன், எங்கோன் – எமதாண்டவனுடைய, பொலங்கழலும் – பொன்னடியையும், பூண்டேன் – சிரமேற்பூண்டவளானேன், புகழேயன்றி – கீர்த்தியேயல்லது, புன்பழியும் – புன்மையானபழிப்பையும், தீண்டேன்என்று – சேராதவளானேனென்று, மனமகிழ்ந்தாள் – மனதுசந்தோஷித்தாள், திருவின்முகத்து-லட்சுமிமுகத்திலுள்ள, திரு – லட்சுமீகரத்தை அழகை, அன்னாள் – ஒப்பானபிராட்டி-எ-று.

அண்ணற்பெரியோனடிவணங்கியறியவுரைப்பானருந்ததியே
வண்ணக்கடலினிடைக்கிடந்தமணலிற்பலரால்வானரத்தின்
எண்ணற்கரியபடைத்தலைவரிராமற்கடியார்யானவர்தம்
பண்ணைக்கொருவனெனப்போந்தேனேவக்கடவபணிசெய்வேன்.

இ-ள். அண்ணற்பெரியோன் – உருவாலும் அறிவாலும்பெருமையுள்ள அனுமார், அடிவணங்கி – பிராட்டிகாலிலேவிழுந்துசேவித்து, அறிய – பிராட்டி இன்னம் தெரிவதாக, உரைப்பான் – சொல்லுகிறார், அருந்ததியே-அருந்ததிபோன்றவளே, வண்ணம் – கரியநிறத்தையுடைய, கடலினிடை – கடலுக்குள்ளே, கிடந்த – கிடக்கிற, மணலில் – மணலிலும், பலர் – அநேகர், எண்ணற்கரிய – எண்ணிமுடியாத,வானரத்தின்படை – வானரசேனைகளுக்கு, தலைவர் – அதிபர்கள்அவரெல்லாம், இராமற்கடியார் – ஸ்ரீராமனுக்கே ஊழியக்காரர்கள், யான் – நான், அவர்தம் – அவர்களுடைய, பண்ணைக்கு – கூட்டத்துக்குள், ஒருவனென – ஒருவனெனும்படி, போந்தேன் – வந்தவன் இருக்கிறவன், ஏவக்கடவ – அவர்களேவத்தக்க, பணிசெய்வேன் – ஊழியங்கள்செய்கிறவன்—எ-று. (ககச)

வெள்ளமேழுபத்துளதால்வீரன்சேனையிவ்வேலைப்
பள்ளமொருகைநீரள்ளிக்குடிக்கச்சாலும்பான்மையதோ
கள்ளவரக்கர்கடியிலங்கைகாணாதொழிந்ததாலன்றோ
உள்ளதுணையுமுளதாவதறிந்துபின்னுமுளதாமோ.

இ-ள். வீரன்சேனை – இராமனுக்குச்சேனை, வெள்ளம் ஏழுபத்துளது – எழுபதுவெள்ளஞ்சேனை உண்டாயிருக்கிறது, இவ்வேலை – இந்தக்கடலாகிய, பள்ளம்-குழியிலுள்ளநீரெல்லாம், ஒருகைநீர் – ஒருகையளவுஜலமாக, அள்ளிக்குடிக்க – அள்ளிஉண்ண, சாலும் – போதுமான, பான்மையதோ – அளவுள்ளதாகுமா, கள்ள அரக்கர் – வஞ்சனையுள்ளராக்ஷதர்களிருக்கிற, கடி இலங்கை – காவலுள்ள இலங்காபுரியை, காணாது – காணாமல், ஒழிந்ததால் – இருந்ததனாலே, அன்றோ – அல்லவோ, உள்ளதுணையும் – நீ இங்கிருக்குமளவும், உளதாவது—இவ்விலங்கை முளதாயிருக்கிறது, அறிந்து – இலங்கை இவ்விடத்ததென்று தெரிந்து, பின்னும் – இன்னமும், உளதாமோ – இலங்கை அழியாதிருக்குமா, இலங்கைஅழிந்தல்லவோ நீ இங்கில்லாதிருப்பதாகும், அழியுமளவும் நீ யிங்கிருக்கவேண்டியதே—எ-று. (ககரு)

வாலியிளவலவன்மைந்தன்மயிந்தன்றுமிந்தன்வயக்குமுதன்
நீலனிடபன்குமுதாக்கன்பனசன்சரபனெடுஞ்சாம்பன்
காலனனையதுன்மருடன்காம்பன்கவயன்கவயாக்கன்
ஞாலமறியுநற்சங்கன்வினதன்றுவிந்தனளனென்பான்.

இ-ள். வாலிஇளவல் – வாலிதம்பியான சுக்கிரீவனும், அவன்மைந்தன் – அவ்வாலிபுத்திரனான அங்கதனும், மயிந்தனும் – துமிந்தனும் வெற்றியுள்ள, குமுதனும்-நீலனும் இடபனும் குமுதாக்கனும், பனசனும் – சரபனும், நெடியசாம்பனும் – காலன் அனைய, யமனுக்கொப்பான – துன்மருடனும், காம்பனும் – கவயனும், கவயாக்கனும் – ஞாலமறியும் லோகப்பிரசித்தனான நலம்பெற்ற சங்கனும், வினதனும் - துவிந்தனும் நளனென்பவனும்—எ-று. (கககூ)

தம்பன்றூமத்தனிப்பெயரோன்றதியின்வதனன்சதவலியென்
றிம்பருலகோடெவ்வுலகுமெடுக்குமிடுக்கிராமன்கை
அம்பினுதவும்படைத்தலைவரவரைநோக்கினிவ்வரக்கர்
வம்பின்முலையாயுறையிடவும்போதார்கணக்குவரம்புண்டோ.

இ-ள். தம்பனும் – தூமத்தனிப்பெயரோனும், ததிமுகனும் – சதவலியும் என்று, இம்பருலகோடு – இந்தவுலகுடனே, எவ்வுலகும் – எந்தவுலகங்களையும், எடுக்கும் – தூக்கத்தக்க, மிடுக்கர் – சக்தியுள்ளவர்கள், இராமன் – ஸ்ரீராமனுக்கு, கையம்பின் – அவர்கையம்புபோல், உதவும் – உதவுவோரான, படைத்தலைவர் - சேனாதிபர்கள், அவரைநோக்கின் – அவர்களைக்குறித்தாலோசித்தால், இவ்வரக்கர்-இந்தராக்ஷதர்களெல்லாம், வம்பின் – கச்சணிந்தமுலையாய், தனங்களுள்ளவளே – உறையிடவும் சிற்றளவுகொள்ளவும், போதார் – பற்றார்கள், கணக்குவரம்பு – கணக்களவு,உண்டோ – உளதாமோ—எ-று. (கஎஎ)

உருக்காட்டுபடலம் முற்றிற்று.

ஆக படலம் - ரு - க்கு திருவிருத்தம் - சுOரு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஆறவது,

சூடாமணிப் படலம்.

வேறு.

உண்டுதுணையென்னவெளிதோவுலகிலென்னாப்
புண்டரிகைபோலுமிவளின்னல்புரிகின்றாள்
அண்டமுதனாயகனதாவியனையாளைக்
கொண்டகல்வதேகருமமென்றுணர்வுகொண்டான்.

இ-ள். உண்டுதுணையென்ன – சேனைகளுக்கு அளவுண்டென்றுசொல்ல, எளிதோ – சுலபமோ, உலகிலென்னா – உலகத்திலேயென்றுபின்பு, புண்டரிகைபோலும் – லட்சுமிபோலிருக்கிற, இவள் – இந்தச்சீதாபிராட்டி, இன்னல்புரிகின்றாள்-ஸ்ரீராமனுக்குத் துன்பஞ்செய்கிறவளானாள் ஆகையால், அண்டம் – எல்லாவுலகங்களுக்கும், முதல்நாயகனது – காரணபூதனான ஸ்ரீராமனுடைய, ஆவிஅனையாளை-உயிர்போலிருக்கிறதேவியை, கொண்டுஅகல்வதே – கொண்டுபோகிறதே, கருமமென்று – காரியமென்று, உணர்வுகொண்டான் – ஆலோசித்தார்—எ-று. (க)

கேட்டியடியேனுரைமுனிந்தருளல்கேளார்
வீட்டியிடுமேலவனைவேறல்வினையன்றால்

ஈட்டியினியென்பலவிராமனெதிர்நின்னைக்
காட்டியடிதாழ்வெனிதுகாண்டியிதுகாலம்.

இ-ள். அடியேன் உரை - அடியேன்சொல்லை, கேட்டி - தாயே கேட்கக்கடவை, முனிந்தருளல் - கோபங்கொள்ளாதொழிக, கேளார் - பகைவரை, வீட்டியிடும் - வதைத்தல்செய்கிற, மேலவனை - மேம்பாடுள்ளராவணனை, வேறல் - இப்போதுவெல்லநினைத்தல், வினைஅன்று - காரியமல்ல அதற்குநியாயங்களை, பலஈட்டி-பலவுந்தேடிச்சொல்லி, இனியென் - இனிஎன்னபிரயோசனம், இராமன்எதிர்-ஸ்ரீராமனுக்குமுன்னே, நின்னைக்காட்டி - உன்னைக்கொண்டுபோய்விட்டு, அடிதாழ்வென் - அவர்பாதம்வணங்குகிறேன், இதுகாண்டி - இதைக்கண்டுதெளிதி,இதுகாலம்-நின்னைக்கொண்டுபோதற்கு இதுவேதருணம்—எ-று. (உ)

பொன்றிணிபொலன்கொடியென்மென்மயிர்பொருந்தித்
துன்றியபுயத்தினிதிருக்கதுயர்விட்டாய்
இன்றுயில்விளைக்கவொரிமைப்பொனிறைவைகும்
குன்றிடையுனைக்கொடுகுதிப்பெனிடைகொள்ளேன்.

இ-ள். பொன்திணி - பொன்போலுந்தேமல்கள்நெருங்கின, பொலங்கொடி-பொன்கொடிபோன்றதாயே, என்மென்மயிர் - எனதுமெல்லிய உரோமங்கள்,பொருந்தித்துன்றிய - பொருந்திநெருங்கின, புயத்து - தோள்களிலே, இனிது - நீ சுகமாக, இருக்க - இரு, துயர்விட்டாய் - துன்பநீங்கினவளாய், இன்துயில் விளைக்க-நல்லநித்திரை செய்துகொண்டிரு, ஒரிமைப்பின் - ஒருக்ஷணப்பொழுதிலே, இறைவைகும் - ஸ்ரீராமனிருப்பதான, குன்றிடை - மலையிலே, உனைக்கொடு - உன்னைஎடுத்துக்கொண்டுபோய், குதிப்பென் - நான்குதிக்கிறேன், இடைகொள்ளேன் - நடுவேதங்கேன்—எ-று. (௩)

அறிந்திடையரக்கர்தொடர்வார்களுளராமேல்
முறிந்துதிரநூறியெதிரென்சினமுடிப்பேன்
நெறிந்தகுழனின்னிலைமைகண்டுநெடியோன்பால்
வெறுங்கைபெயரேனொருவராலும்விளியாதேன்.

இ-ள். அறிந்து - இதுதெரிந்து, இடை - நடுவேவந்து, அரக்கர் - ராக்ஷதர்கள், தொடர்வார்கள் - தொடர்ந்து பின்னேவருகிறது, உளராமேல் - உளராகில் உண்டானால், முறிந்து - தோற்று, உதிர - கடலிலேசிந்தும்படி, நூறி - அழித்து, எதிர் - உன்கண்முன்னே, என்சினம் - எனதுகோபத்தை, முடிப்பேன் - தீர்த்துக்கொள்ளுகிறேன், நெறிந்த - வாகுள்ள, குழல் - கூந்தலையுடையதாயே, நின்னிலைமைகண்டும் - உனதுசுவபாவம் முழுதுந்தெரிந்தும், நெடியோன்பால் - அந்த ஸ்ரீராமனிடத்தே, வெறுங்கை - வெறுங்கையொடு, பெயரேன் - செல்லேன் ஆனால், ஒருவராலும் - யாராலும் நான், விளியாதேன் - சாவமாட்டேன்—எ-று. (௪)

இலங்கையொடுமேகுதிகொலென்னினுமிடந்தென்
வலங்கொளொருகைத்தலையில்வைத்தெதிர்தடுப்பான்
விலங்கினரைநூறிவரிவெஞ்சிலையினோர்தம்
பொலன்கொள்கழலூழ்குவெனிதன்னைபொருளன்றல்.

இ-ள். இலங்கையொடும் - இந்த இலங்கையுடனே, ஏகுதியென்னினும்-எடுத்துக்கொண்டுபோஎன்றாலும், இடந்து - பெயர்த்து, என் - எனது, வலங்கொள்-

பலங்கொண்ட, ஒருகைத்தலையில் - ஒருகையிலேமுழுதும், வைத்து - கொண்டு, எதிர் - அப்போதென்முன்னே, தடுப்பான் - தடுத்தற்காகவந்து, விலங்கினரை-தடுத்தவர்களையெல்லாம், நூறி - ஒருகையாலேகொன்று, வரிவெஞ்சிலையினோர்தம்-வரிந்தவெவ்வியவில்லாளிகளுடைய, பொலன்கொள் - பொன்னிறத்தைக்கொண்ட,கழல் - பாதங்களை, தாழ்குவென் - வணங்குவேன், இது - இவ்வளவுஞ்செய்கிறது,அன்னை - தாயே, பொருள் அன்று - எனக்குலட்சியமுள்ளதல்ல—எ-று. (௫)

அருந்ததியுரைத்தியழகற்கருகுசென்றுன்
மருந்தனையதேவிநெடுவஞ்சர்சிறைவைப்பில்
பெருந்துயரினோடுமொருவீடுபெறவில்லா
திருந்தனளெனப்பகரினென்னடிமையென்னும்.

இ-ள். அருந்ததி - அருந்ததிபோல்வாய், உரைத்தி - நீதான்சொல்லு, அழகற்கருகு - ஸ்ரீராமனுக்குச்சமீபத்தே, சென்று - நான்போய், உன்-உனது, மருந்து அனைய - தேவாமிர்தம்போன்ற, தேவி - நாயகியானவர், நெடுவஞ்சர் - அதிகவஞ்சகருடைய, சிறைவைப்பில் - சிறைவைத்தஇடத்திலே, பெருந்துயரினோடும் - பெரிதான துக்கத்துடனே, ஒருவீடுபெறல்இல்லாது-ஒருவகையாலும்விட்டுவருதல்கூடாமல், இருந்தனள் - இருக்கிறார், எனப்பகரில்-என்றுநான்சொல்வதானால், என் அடிமை - எனதடிமைத்தொழில், என் ஆம் - என்னபிரயோஜனப்படும் எப்படிபிரயோஜனப்படுதலாம்—எ-று. (௬)

புண்டொடர்வகற்றியபுயத்தினொடுபுக்கேன்
விண்டவர்வலத்தையும்விரித்துரைசெய்கேனோ
கொண்டுவருகிற்றிலென்னுயிர்க்குறுதிகொண்டேன்
கண்டுவருகிற்றிலெனெனக்கழறுகேனோ.

இ-ள். புண்தொடர்வு - புண்படுகிறதை, அகற்றிய - நீக்கிக்கொண்ட, புயத்தினொடு - தோள்களுடனே, புக்கேன் - போனேனாகி, விண்டவர் - நம்மில்வேறான இவ்வரக்கர்களையும் இவர்களுடைய, வலத்தையும் - சாமர்த்தியங்களையும், விரித்து-விஸ்திரித்து, உரைசெய்கேனோ - சொல்லக்கடவேனோ அல்லது, கொண்டுவருகிற்றிலென் - எடுத்துக்கொண்டுவருகிலேன், உயிர்க்கு உறுதிகொண்டேன் - என்உயிர்க்கு நன்மையைத்தேடிக்கொண்டேன் கொண்டுவர எண்ணினால் என்னுயிர்போம் அதனால், கண்டுவருகிற்றிலென் - நான்காணவேயில்லை கண்டிலேன் கண்டுவருகின்றிலேன், எனக்கழறுகேனோ - என்று சொல்லிவிடவா நான்கண்டிலேனென்பதை என் உயிர்க்குறுதிஎனக்கொள்க—எ-று. (௭)

இருக்குமதில்சூழ்கடியிலங்கையையிமைப்பின்
உருக்கியெரியாவிகலரக்கரையுமொன்றூ
முருக்கிநிருதக்குலமுடித்துவினைமுற்றிப்
பொருக்கவகல்கென்னினுமதின்றுபுரிகின்றேன்.

இ-ள். இருக்கும் - நீயிருப்பதான, கடிமதில்சூழ்-காவலாகமதில்சூழ்ந்த, இலங்கையை - இலங்காபுரியை, இமைப்பில் - ஒருக்ஷணப்பொழுதிலே, உருக்கிஎரியா-நெருப்பாலெரித்து உருகப்பண்ணி, இகலரக்கரையும் - இதிலுள்ள வலியராக்ஷதர்களையும், ஒன்றூ - ஒருசேர, முருக்கி - கொன்று, நிருதக்குலம்-ராக்ஷதகூட்டத்தை, முடித்து - இனி இல்லாமற்களைந்து, வினைமுற்றி - சண்டைமுடிவுபண்ணி, பொரு

க்க — விரைவாக, அகல்க — போ, என்னினும்-என்றுநீசொல்வாயானாலும், அது-அப்படிச்செய்கிறதை, இன்று — இப்போதே, புரிகின்றேன் — செய்கிறேன்—எ-று. (அ)

இந்துநுதனின்னொடிவணெய்தியிகல்வீரன்
சிந்தையுறுவெந்துயர்தவிர்ந்துதெளிவோடும்
அந்தமிலரக்கர்குலமற்றவியநூறி
நந்தலில்புவிக்கணிடர்பிற்களைதனன்றால்.

இ-ள். இந்து-அஷ்டமிசந்திரனையொப்பான, நுதல்-நெற்றியுள்ளஜெகந்மாதா, நின்னொடு — இப்போதேநீ அங்குப்போய்ராமனைக்கண்டபின்புஉன்னுடனே, இகல்வீரன் — அந்தப்போர்வீரனான ராமன், சிந்தையுறு — தமதுமனத்துள்ள — வெந்துயர்-வெவ்விதான துன்பம், தவிர்ந்து — நீங்கி, தெளிவோடும் — யாதொருகலக்கமுமில்லாமல், இவண்எய்தி — இங்குவந்து, அந்தம்இல் — முடிவில்லாத, அரக்கர்குலம்-ராக்ஷத கூட்டங்கள், அற்றவிய — அற்றுப்போக, நூறி — அழித்து, நந்தல்இல் — கெடுதலில்லாத, புவிக்கண் — உலகத்துக்குள்ள, இடர் — துன்பத்தை, பின் — நீராமனிடம்போய்ச்சேர்ந்தபின்பு, களைதல் — தீர்க்கிறது, நன்று — மிகவும்நல்லது—எ-று. (கூ)

வேறினிவிளம்பவுளதன்றுவிதியாலிப்
பேறுபெறவென்கணருடந்தருளுபின்போய்
ஆறுதுயரஞ்சொலிளவஞ்சியடியன்றோள்
ஏறுகடிதென்றுதொழுதின்னடிபணிந்தான்.

இ-ள். வேறினி — இனிவேறே, விளம்பஉளதன்று-சொல்லக்கிடந்ததில்லை, விதியால் — உனதுநியமத்தாலே, இப்பேறுபெற — சுவாமிகாரியமான இந்தப்பலனை நானடைய, என்கண் — என்விஷயத்தில், அருள்தந்தருளு — அருள்பாலிட்டருளவேணும், பின் — நான்கொண்டுபோனபின்பு, போய் — அங்குப்போய், ஆறுதுயர்-துன்பந்தீர்தி, அஞ்சொல் — அழகியவசனத்தையுடைய, இளவஞ்சி — இளங்கொடியே, அடியன்தோள் — இதோ எனதுதோளின்மேலே, கடிதுஏறு — விரைந்தெழுந்தருளுக, என்று தொழுது — என்றுகும்பிட்டு, இன்னடிபணிந்தான் — பிராட்டி திருவடிகளிலேவணங்கினர்—எ-று. (க0)

வேறு.

ஏயநன்மொழியெய்தவிளம்பிய
தாயின்முன்னியகன்றனையான்றனை
ஆயதன்மையரியதன்றாமெனத்
தூயமென்சொலினையனசொல்லினாள்.

இ-ள். ஏய — தகுதியாக, நன்மொழி-நல்லவசனங்களை, எய்த — முடிவுபெற, விளம்பிய — சொன்ன, தாயின்முன்னிய — தாய்ப்பசுவுக்குமுன்னிற்கிற, கன்று-இளங்கன்றை, அனையான்றனை — ஒப்பான திருவடியைநோக்கி, ஆயதன்மை — நீஅப்படிச்சொன்னவெல்லாம், அரியதுஅன்று — உனக்குப்பெரிதானதல்ல, ஆமென — நீசெய்யத்தக்கதேயாமென்று, தூய — பரிசுத்தமான, மென்சொல் — மிருதுவான சொற்கள், இனையன — இனிச்சொல்லுமவைகளை, சொல்லினாள் — சொன்னாள்—எ-று. ()

அரியதன்றுநின்னாற்றலுக்கேற்றதே
தெரியவெண்ணினைசெய்வதுஞ்செய்தியே

உரியதன்றெனவோர்கின்றதுண்டதென்
பெரியபேதைமைச்சின்மதிப்பெண்மையால்.

இ-ள். அரியது - நீசெய்யக்கூடாதது, அன்று - அல்ல, நின் ஆற்றலுக்கு- உன்சமர்த்துக்கு, ஏற்றதே - தக்கதே, தெரிய - எனக்கும்தெரியும்படி, எண்ணினை- ஆலோசித்தாய், செய்வதும்செய்தி - நீயேசெய்தாலும்செய்வாய், உரியது - அது நீ செய்ய உரியது, அன்று என - அல்ல என்று, ஓர்கின்றது - நான்யோசிக்கிறது, உண்டு - ஒன்றுண்டு, அது - அதாவது, என் - என்னுடைய, பெரிய-பெரிதான, பேதைமை - அறியாமையோடுகூடின, சின்மதி - அல்பபுத்தியுள்ள, பெண்மையால்- பெண்பிறப்பினாலே ஓர்கின்றதுண்டு—எ-று. (கஉ)

வேலையின்னிடையேவந்துவெய்யவர்
கோலிவெஞ்சரநின்னொடுங்கோத்தபோ
தாலமன்னவர்க்கல்லையெற்கல்லையால்
சாலவுந்தடுமாறுந்தனிமையோய்.

இ-ள். வேலையின்னிடையே - கடலுக்குநடுவே, வந்து - தொடர்ந்துவந்து, வெய்யவர் - கொடியராக்ஷதர்கள், கோலி - சூழ்ந்துகொண்டு, வெஞ்சரம் - வெவ்விய பாணங்களை, நின்னொடும் கோத்தபோது - உன்மேலெய்யும்போது, ஆலம் அன்னவர்க்கு - விஷத்தை ஒப்பானராக்ஷதர்களுக்கே, அல்லை - நேர் நிற்கக்கூடாது, எற்கு - என்னைச்சுமந்துகாத்தற்கு, அல்லை - எப்படி ஒருவனாலேகூடும் என்றபடி, துணைவேண்டுமென்பதுதோன்ற அதுவுமாட்டாய் - இதுவுமாட்டாய் என இரண்டல்லை சொன்னாள், சாலவும் - ஆசையால்மிகவும், தடுமாறும் - சஞ்சலமுண்டாம், தனிமையோய் - நீ ஒருவனே ஆதலால்—எ-று. (கங)

அன்றியும்பிறிதுள்ளதொன்றாரியன்
வென்றிவெஞ்சிலைமாசுணும்வேறினி
நன்றியென்பதம்வஞ்சித்தநாய்களின்
நின்றவஞ்சனைநீயுநினைத்தியோ.

இ-ள். அன்றியும் - அல்லாமலும், பிறிது - வேறேயும், உள்ளது ஒன்று - ஒன்றிருக்கின்றது, ஆரியன் - ஸ்ரீராமனுடைய, வென்றி - ஜயம்பொருந்தின, வெஞ்சிலை - வெவ்வியவில்லுக்கு, மாசு உணும் - தோஷமுள்ளதாம், வேறினி - இனிவேறும் ஒன்றுண்டு அதாவது, நன்றி என் - விசேஷம் என்னிருக்கின்றது, பதம் - நல்லதென்கிறநானுகியசோற்றை, வஞ்சித்த - வஞ்சனைசெய்துகொண்டுவந்து உண்ண எண்ணுகிற, நாய்களின் - இந்தராக்ஷதநாய்கள்போல், நின்ற - அவர்கள்செய்யக்கிடக்கிற, வஞ்சனை - கபடச்செய்கையை, நீயும் நினைத்தியோ - நீயும் எண்ணலாமா கூடாது—எ-று. (கச)

கொண்டபோரினுங்கொற்றவன்விற்றொழில்
அண்டரேவருநோக்கவென்னாக்கையைக்
கண்டபோரரக்கன்விழிகாகங்கள்
உண்டபோதன்றியானுளெனாவெனோ.

இ-ள். கொண்டபோரினும் - இவர்கள்செய்யக்கோலின்சண்டையிலும், கொற்றவன் - ஸ்ரீராமனுடைய, விற்றொழில் - வில்வல்லமையை, அண்டரேவரும் - எல்லாத்தேவர்களும், நோக்க - பார்க்க, என் ஆக்கையை - என்சரீரத்தை, கண்ட - பார்த்தாசைப்பட்ட, போரரக்கன் - வலியராக்ஷதனுடைய, விழி - கண்களை, காகங்க

ள் - காக்கைகள், உண்டபோது - கொத்தித்தின்றால் நான் உளனாவேன், அன்றியா ன்-கொத்தித் தின்னவிட்டால், உளனாவேனோ-உயிரோடிருப்பேனா இரேன்-எ-று.

வெற்றிநாணுடைவில்லியர்விற்றொழில்
முற்றநாணிலரக்கியர்மூக்கொடும்
அற்றநாணினராயினபோதன்றிப்
பெற்றநாணமும்பெற்றியதாகுமோ.

இ-ள். வெற்றிநாண் உடை - ஜெயமும்நாரியும் உள்ள, வில்லியர் - அந்தவில்லாளிகளுடைய, விற்றொழில் - வில்வல்லமையை, முற்ற - முடிவுபெறச்செய்ய அதனாலே, நாண் இல் - வெட்கமில்லாத, அரக்கியர் - இந்தராக்ஷிகள், மூக்கொடும்-மூக்குடனே, நாண் அற்றவர் - வெட்கமும்போனவர்களாய், ஆயினபோது - முடிந்த நாளிலே, அன்றி - நாண் உள்ளவள் ஆவேன் அல்லது, பெற்றநாணமும் - நான்கொண்டவெட்கமும், பெற்றியதாகுமோ - நான்கொண்டுள்ளதாகுமா கொள்ளாதவளே ஆவேன்—எ-று. (கசு)

பொற்பிறங்கலிலங்கைபொருந்தலர்
எற்புமால்வரையாகிலதேயெனின்
இற்பிறப்புமொழுக்குமிழுக்கமில்
கற்பும்யான்பிறர்க்கெங்ஙனங்காட்டுகேன்.

இ-ள். பொற்பிறங்கல் - பொன்மலையான, இலங்கை - இந்த இலங்காபுரியானது, பொருந்தலர் - சத்துருக்களுடைய, எற்புமால்வரை - எலும்புமலைபெரிய எலும்புமலை, ஆகிலதேயெனில் - ஆகாமற்போமானால், இற்பிறப்பும் - என்குடிப்பிறப்பும் ஒழுக்கும் - என்நடக்கையும், இழுக்கம்இல் - யாதொருவழுவுமில்லாத, கற்பும் - பதிவிரதாநிலையும், யான்பிறர்க்கு - என்னையல்லாதபெண்களுக்கு, எங்ஙனம் - எப்படி, காட்டுகேன் - மெய்காட்டுகிற்பேன், பொன்மலை - எலும்புமலையாகவேணும் என்றபடி—எ-று. (கஎ)

அல்லன்மாக்களிலங்கையதாகுமோ
எல்லைநீத்தவுலகங்கள்யாவுமென்
சொல்லினாற்சுடுவேனதுதூயவன்
வில்லினாற்றற்குமாசென்றுவீசினேன்.

இ-ள். அல்லல் - ஆரவாரஞ்செய்கிற, மாக்கள் - மிருகங்கள்போன்றவர்களுடைய, இலங்கையது - இலங்கை அளவிலே, ஆகுமோ - முடிவுபெறுமோ அல்லல், எல்லைநீத்த - அளவில்லாத, உலகங்கள்யாவும் - உலகங்களையெல்லாம், என்சொல்லினால் - என்சொல்லாலே, சுடுவேன் - சுட்டுப்போடுவேன், அது - அப்படிச்சுடுகிறது, தூயவன் - ஸ்ரீராமனுடைய, வில்லின் ஆற்றற்கு - வில்வல்லமைக்கு, மாசென்று-தோஷமென்று, வீசினேன் - விட்டிருக்கிறேன், பெண்ணால் வெற்றிபெறுகிறது ஆண்பிள்ளைக்குப் புகழன்று—எ-று. (கஅ)

வேறுமுண்டுரைகேளதுமெய்ம்மையோய்
ஏறுசேவகன்மேனியல்லாலிடை
ஆறுமைம்பொறிநின்னையுமாணெனக்
கூறுமிவ்வுறுத்தீண்டுதல்கூடுமோ.

இ-ள். வேறும் – வேறேயும், உண்டுஉரை – சொல்லுண்டு சொல்வதுண்டு, கேள்அது - அதைக்கேட்பாயாக, மெய்ம்மையோய் - ஓசத்தியவாக்கியே, ஏறுசேவகன் – சிங்கம்போலும்வீரனான ஸ்ரீராமனுடைய, மேனியல்லால் - திருமேனியையல்லது, இடை – நடுவே, ஆறும் ஐம்பொறி-ஐந்திந்திரியங்களும்அடங்கின, நின்னையும்-எல்லாரோனென்னையும், ஆணெனக்கூறும் – ஆண்என்றுசொல்லப்படுகிற, இவ்வுரு-இந்தஉன்கையாலே உன்சரீரத்தினாலே, தீண்டுதல்கூடுமோ-தொடலாகுமா-எ-று.

தீண்டுவானெனினித்தனைச்சேண்பகல்
ஈண்டுமோவுயிர்மெய்யினிமைப்பின்முன்
மாண்டுதீர்வனென்றேநிலம்வன்மையால்
கீண்டுகொண்டெழுந்தேகினன்கீழ்மையான்.

இ-ள். தீண்டுவான் எனில் - இந்தராக்ஷதன்தொடுவானேயானால்,மெய்யின்-அவன்சரீரத்தில், இத்தனை – இவ்வளவு, சேண்பகல் – நெடுங்காலம், உயிர்ஈண்டுமோ – உயிர்கூடியிருக்குமோ, இமைப்பின்முன் - ஒருக்ஷணப்பொழுதாகுமுன்னே, மாண்டுதீர்வன் - இறந்துபோவான், என்றே – என்று அவன்தெரிந்தே, நிலம் - பூமியை, வன்மையால் – தன்பலத்தினாலே, கீண்டுகொண்டு-வகிர்ந்தெடுத்துக்கொண்டு, எழுந்து – தேர்மேற்கொண்டு, ஏகினன் - வந்தான், கீழ்மையான் – சண்டாளனான இந்தராவணன்—எ-று. (உ0)

மேவுசிந்தையின்மாதரைமெய்தொடில்
தேவுவன்றலைசிந்துகதீதெனப்
பூவின்வந்தபுராதனனேபுகல்
சாவமுண்டெனதாருயிர்தந்ததால்.

இ-ள். மேவுசிந்தை – கூடமனசு, இல் – இல்லாத, மாதரை-பெண்களாகிய, மெய்தொடில் - அவர்களுடையசரீரத்தைத்தொட்டால், தீது – அந்தத்தீமைக்காக, தேவு – தெய்வத்தன்மையாய்மீண்டு முளைப்பதான, வன்தலை - வலியதலைகள், சிந்துக என – சிதறிப்போகக்கடவையென்று, பூவில்வந்த-உந்திக்கமலத்திலேதோன்றின, புராதனனே – பழையபிரமதேவன், புகல் – சொன்ன, சாபமுண்டு – சாபமுளதாயிருந்து, எனது – என்னுடைய, ஆர்உயிர் - அருமையானஉயிரை, தந்தது - கொடுத்ததாயிற்று—எ-று. (உக)

அன்னசாவமுளதெனவாண்மையான்
மின்னுமௌலியன்மெய்ம்மையன்வீடணன்
கன்னியென்வயின்வைத்தகருணையாள்
சொன்னதுண்டுதுணுக்கமகற்றுவாள்.

இ-ள். அன்னசாபம் - அப்படிப்பட்டசாபம், உளதென - அவனுக்குண்டென்று, ஆண்மையான் – இராவணன்போலாளுகைக்குத்தக்கவன், மின்னும்-விளங்குகின்ற, மௌலியன் – கிரீடாதிபதியானவன், மெய்ம்மையன்-சத்தியநிலையுள்ளவன், வீடணன் – விபீஷணனுடைய, கன்னி – புத்திரியானதிரிசடையென்பவள், என்வயின் - என்னிடத்தே, வைத்தகருணையாள்-இரக்கமுள்ளவளாய், துணுக்கம்-என்பயத்தை, அகற்றுவாள் – போக்கவேண்டியவள், சொன்னதுஉண்டு - சொல்லியிருக்கிறதுஉண்டு—எ-று. (உஉ)

ஆயதுண்மையிஞனுமதன்றெனின்
மாய்வென்மன்றவறம்வழுவாதென்றும்
நாயகன்வலியெண்ணியுநானுடைத்
தூய்மைகாட்டவுமித்துணை தூங்கினேன்.

இ-ள். ஆயது-அந்தச்சாபம், உண்மையிஞனும் - உண்டாயிருக்கிறதிஞலும், மன்ற - நிரம்ப, அறம்-தருமம், வழுவாதென்றும்-தவருகாதென்றும், நாயகன்வலி-நமதாண்டவனுடைய சாமர்த்தியத்தை, எண்ணியும்-நினைத்தும், நான் உடை - நான் உடைத்தாயிருக்கிற, தூய்மை — பரிசுத்தத்தை, காட்டவும் - காட்டவும்வேண்டி, இத்துணை-இவ்வளவுகாலம், தூங்கினேன் - உயிர்வைத்திருக்கிறேன், அது - அந்தச் சாபம், அன்றெனில்-இல்லையாஞல், மாய்வென்-உயிர்விடுவேன்—எ-று. (உங)

ஆண்டுநின்றுமரக்கனகழ்ந்துகொண்
டீண்டுவைத்ததிளவலியற்றிய
நீண்டசாலையொடுநிலைநின்றது
காண்டியையநின்மெய்யுணர்கண்களால்.

இ-ள். ஆண்டுநின்றும் — அங்கிருந்து, அரக்கன் — இந்தராக்ஷதன், அகழ்ந்து கொண்டு-தோண்டிக்கொண்டுவந்து, ஈண்டுவைத்தது — ஈண்டுவைத்திருக்கிறஇடம், இளவல் — இளையபெருமாள், இயற்றிய — கட்டின, நீண்டசாலையொடு — நெடியபன்னசாலையுடனே, நிலைநின்றது — நான்நிலைகொண்டிருக்கிறதை, ஐய — ஐயனே, நின்-உன்னுடைய, மெய்உணர் — மெய்உணர்ச்சியுள்ள, கண்களால்காண்டி-கண்களாலே பார்—எ-று. (உச)

தீர்கிலேனிதொருபகலுஞ்சிலை
வீரன்மேனியைமானுமிவ்வீங்குநீர்
நாரநாண்மலர்ப்பொய்கையைநண்ணுவேன்
சோருமாருயிர்காக்குந்துணிவிஞல்.

இ-ள். இது — இந்தப்பன்னசாலையை, தீர்கிலேன்ஒருபகலும் - விட்டுவெளியேஒருநாளாகிலும் நான்போகிறதில்லை, சிலைவீரன் - அந்தக்கோதண்டபாணியினுடைய, மேனியை — திருமேனியை, மானும் — ஒப்பான, இ — இந்த, வீங்குநீர்-பெருகிற தன்மையுள்ள, நாரம் — ஜலத்திலே, நாள் — நாளும்பூப்பதான, மலர்ப்பொய்கையை — புஷ்பங்களுள்ள குளத்துக்கு, நண்ணுவேன் — போகவேண்டும்போதுபோவேன், சோரும் — உண்பதில்லாமற் சோர்வையடைகிற, ஆர்உயிர் — அரிதான என் உயிரை, காக்கும் — தாகசாந்திசெய்துகாக்க, துணிவிஞல்-வேண்டியஒருதுணிவுகொண்டு, நாரநாண்மலர்ப்பொய்கையை நண்ணுவேன்—எ-று. (உரு)

ஆதலானதுகாரியமன்றைய
வேதநாயகன்பாலினிமீண்டனை
போதல்காரியமென்றனள்பூவையக்
கோதிலானுமினையனகூறிஞன்.

இ-ள். ஆதலால் — ஆகையிஞலே, அது — நீ ஆலோசித்த அது, காரியம் அன்று-செய்யத்தக்கதுஅல்ல, ஐய-ஐயனே, வேதநாயகன்பால் இனி-ஸ்ரீராமனிடத்துக்கு, மீண்டனைபோதல் - திரும்பிப்போகிறதே, காரியம் — செய்யத்தக்ககாரியம்,

என்றனள் - என்றுசொன்னாள், பூவை - பிராட்டிஅதற்கு, அக்கோதிலானும்-அந்த யாதொரு தோஷமுமில்லாததிருவடி, இனையன - இவைகளை, கூறினன் - சொன்னார்—எ-று. (உசு)

நன்றுநன்றிவ்வுலகுடைநாயகன்
தன்றுணைப்பெருந்தேவிதவத்தொழில்
என்றுசிந்தைகளித்துவந்தேத்தினன்
நின்றசங்கையிடரொடுநீங்கினன்.

இ-ள். நன்று நன்று - மிகவுநல்லது நல்லது, இவ்வுலகுடை - இந்தவுலகங்களையெல்லாம் தன்னதாகஉடைய, நாயகன்தன் - செகதீசனுக்குரிய, துணை - சகாயமான, பெருந்தேவி - பெரியபிராட்டியாருடைய, தவத்தொழில் - தவச்செய்கை, நன்றுநன்றுஎன்று - என்றுகொண்டாடி, சிந்தைகளித்து - மனதுசந்தோஷித்து, உவந்து - மிக்கபிரீதிகொண்டு, ஏத்தினன் - துதிசெய்தனர், நின்றசங்கை - இராவணன்தொடுவானேவென்றுள்ள சந்தேகம், இடரொடு - துன்பத்துடனேநீங்கினன்- தீர்ந்தான்—எ-று. (உஎ)

இருளுஞாலமிராவணனாலிது
தெருளுநீயினிச்சில்பகறங்குறின்
மருளுமன்னவற்கியான்சொலும்வாசகம்
அருளுவாயென்றடியினிறைஞ்சினன்.

இ-ள். இராவணனால் - இந்தராக்ஷதனாலே, இருளும்-இருண்டிருப்பதான, ஞாலம்இது - உலகமாகியஇது, தெருளும் - தெளிவையடையும், நீ - நீ, இனிச்சில் பகல் - இன்னமுஞ்சிலநாள், தங்குறின் - இங்கிருப்பாயானால், மருளும் - மயங்கிக்கொண்டிருக்கிற, மன்னவற்கு - ஸ்ரீராமனுக்கு, யான்சொலும் - நான்சொல்வதான, வாசகம் - சொற்களை, அருளுவாயென்று - சொல்லவேணுமென்று, அடியின் - அவள்பாதத்திலே, இறைஞ்சினன் - வணங்கினர்—எ-று. இராவணனாலே அஞ்ஞானாந்தகாரத்திலே முழுகிக்கிடக்கிற இந்த இலங்கைமுதலான எல்லாவுலகங்களும் இனி உன்னாலேதெளிவுபெறும் என்பது கருத்து என்றஅளவில்பிராட்டிசொல்லுகிருள் எ-று. (உஅ)

இன்னுமீண்டொருதிங்களிருப்பல்யான்
நின்னைநோக்கிப்பகர்ந்ததுநீதியோய்
பின்னையாவிபிடிக்கின்றிலேனந்த
மன்னனாணையிதனைமனக்கொணீ.

இ-ள். இன்னும் - இன்னமும், ஈண்டு - இங்கே, ஒருதிங்கள் - ஒருமாதம், இருப்பல்யான் - நானுயிர்கொண்டிருப்பேன், நின்னைநோக்கி-உன்னைச்சாக்ஷியாகக்கொண்டு, பகர்ந்தது - நான் சத்தியமாகச் சொல்லுகிறதாவது, நீதியோய் - நீதிதெரிந்த அனுமாரே, பின்னை - ஒருமாசத்துக்குப்பின்பு, ஆவிபிடிக்கின்றிலேன் - உயிர் வைத்திருக்கமாட்டேன், அந்தமன்னன் - அந்தச் சக்கிரவர்த்தித்திருமகன், ஆணை- ஆணை உள்ளதாக, இதனைநீ - நீ இந்த உருதிச்சொல்லை, மனக்கொள் - மனத்திலே எண்ணிக்கொள்—எ-று. (உகூ)

ஆரந்தாழ்திருமார்பற்கமைந்ததோர்
தாரந்தானலளேனுந்தயாவெனும்

ஈரந்தானகத்தில்லையென்றாலுந்தன்
வீரங்காத்தலைவேண்டென்றுவேண்டுவாய்.

இ-ள். ஆரம் தாழ் – முத்துமாலைகள் தங்கின, திருமார்பற்கு – திருமார்பை யுடைய ஸ்ரீராமனுனவருக்கு, அமைந்தது – தக்கது ஆன, ஓர்தாரம் – ஒருமனைவி, அலள் எனும் – அல்லாதவளே யானாலும் அதனால், தயா எனும் – தயையென்கிற, ஈரந்தான் – ஒரு அன்புங்கூட, அகத்து - அவருள்ளத்திலே, இல்லையென்றாலும்- இல்லையானாலும், தன்வீரம் – தமக்குள்ள வீரத்தை, காத்தலை – நிறுத்துகிறதையே, வேண்டு என்று - வேண்டக்கடவீரென்று, வேண்டுவாய் - நீவேண்டக்கடவை-எ-று. அகத்தில்லவென்று தன்னையே பின்னும் சொன்னதாகப்பாடங்கோடலுமொன்று.

ஏற்றும்வென்றிஇளையவற்கிதொரு
வார்த்தைகூறுதிமன்னருளாலெனைக்
காத்திருந்தவற்கேகடனென்றிடை
கோத்தவெஞ்சிறைவீடென்றுகூறுவாய்.

இ-ள். ஏத்தும் – எல்லாருங்கொண்டாடவெதான, வென்றி-ஜயத்தையுடைய- இளையவற்கு – இளைய பெருமாளுக்கு, ஈது – இந்த, ஒருவார்த்தை கூறுதி – ஒரு சொற்சொல்லு, மன் அருளால் - ஆண்டான் அனுக்ஞைகொண்டு, எனை - புத்தி யில்லாத என்னை, காத்திருந்தவற்கே - காவல்செய்துகொண்டிருந்ததனக்கே, கட னென்று – இன்னும் காப்பதே கடனென்று, இடைகோத்த – நடுவேவந்த, வெஞ் சிறை – வெவ்விதான சிறையை, வீடென்று – விடுதல்செய்து கொள்ளவேணுமெ ன்று, கூறுவாய் – நீசொல்லவேணும்—எ-று. (நுக)

திங்களொன்றினென்செய்தவந்தீர்ந்ததால்
இங்குவந்திலனேயெனின்யாணர்நீர்க்
கங்கையாற்றங்கரையடியேற்குத்தன்
செங்கையாற்கடன்செய்கென்றுசெப்புவாய்.

இ-ள். திங்களொன்றில் - ஒருமாதத்துக்குள்ளே, என் செய்தவம் – எனக்கு முன்செய்துள்ள தவப்பலன் ஆயுள்முடிவென்று, தீர்ந்தது ஆல் – நிச்சயப்படுகிறதி னாலே, இங்குவந்திலனே - இங்கே கூட்டிப்போகவாராரே என்பது, எனில் – மெய் யேஆனால், யாணர் – அழகுபொருந்தின, நீர் – நீரையுடைய, கங்கை – ஆற்றங்கரை- கங்காநதி தீரத்திலே, அடியேற்கு – அடியேனுக்கு, தன்செங்கையால் – தமதுசெ வந்தகைகளாலே, கடன்செய்கென்று- தீக்கடன் திருத்தி முடிப்பதை முடிக்கவேணு மென்று, செப்புவாய் – நீசொல்லக்கடவை—எ-று. (நுஉ)

சிறக்குமாமியர்மூவர்க்குஞ்சீதையாண்
டிறக்கின்றாடொழுதாளெனுமின்னசொல்
அறத்திநாயகன்பாலருளின்மையால்
மறக்குமாயினுநீமறவேலையா.

இ-ள். சிறக்கும் – மிகவுமேன்மைபெற்றுள்ள, மாமியர் மூவர்க்கும் – மூன்று மாமிகளுக்கும், சீதை – சீதையானவள், ஆண்டு – அந்த இலங்கையிலே, இறக்கின் றாள் – சாகிறாள் சாகிறவள், தொழுதாள் – கும்பிட்டாள், எனும் – என்பதான, இன்னசொல் – இந்தவார்த்தையை, அறத்திநயகன்பால் – அந்தத்தருமசொரூபியா

னவருக்கு, அருளின்மையால் - என்மேல் தயவுஇல்லாதிருக்கிறதினலே, மறக்கும்- சொல்லமறந்துபோவர், ஆயினும்நீ - ஆனலும், மறவேல் ஐயா - ஐயனே நீமறந்து போகாதை—எ-று. (௩௩)

வந்தெனைக்கரம்பற்றியவைகல்வாய்
இந்தவிப்பிறவிக்கிருமாதரைச்
சிந்தையாலுந்தொடேனென்றசெவ்வரம்
தந்தவார்த்தைதிருச்செவிசாற்றுவாய்.

இ-ள். வந்தெனை - என் ஊர்வந்து என்னை, கரம்பற்றிய - பாணிக்கிரஹண ம்பண்ணிக்கொண்ட, வைகல்வாய் - நாளிலே, இந்த இப்பிறவிக்கு - இந்த இப்படிப் பட்ட ஜன்மத்துக்கு, இருமாதரை - இரண்டாவதுபெண்ணை, சிந்தையாலும் - மன த்தினலுங்கூட, தொடேன் - தீண்டாதிருப்பேன், என்றசெவ்வரம் - என்றுசொன் ன செவ்வையானவரத்தை, தந்தவார்த்தை - கொடுத்த திருவாக்கை, திருச்செவி- அவருக்கு ரகசியமாக, சாற்றுவாய் - சொல்லக்கடவை—எ-று. (௩௪)

ஈண்டுநானிருந்தின்னுயிர்மாயினும்
மீண்டுவந்துபிறந்துதன்மேனியைத்
தீண்டலாவதோர்தீவினைதீர்வரம்
வேண்டினடொழுதென்றுவிளம்புவாய்.

இ-ள். ஈண்டு - இப்போது இங்கேதானே, நான் இருந்து - நான் இருப்பதா ய், இன் உயிர் - அவருக்குமுன் பிரியமானஉயிரை, மாயினும் - மடித்துக்கொண்டா லும், மீண்டுவந்து - திரும்பிவந்து, பிறந்து - உலகத்திலே உற்பவித்து, தன்மேனி யை - அவரது திருமேனியை, தீண்டலாவது - தொடும்படியான, தீவினைதீர் - குற் றமில்லாத, ஓர்வரம் - ஒருவரத்தை, தொழுது வேண்டினள் - ஒரு கும்பிடுபோட்டு வேண்டுகிருள், என்றுவிளம்புவாய் - என்றுசொல்லக்கடவை—எ-று. (௩௫)

அரசுவீற்றிருந்தாளவுமாய்மணிப்
புரசையானையின்வீதியிற்போகவும்
விரசுகோலங்கள்காணவிதியிலேன்
உரைசெய்தென்னையென்னூழ்வினையுன்னுவேன்.

இ-ள். அரசு - ராஜாவாக, வீற்றிருந்து - விலக்ஷணராயிருந்து, ஆளவும் - ஆ ட்சிகொள்ளுதலையும், ஆய்மணி - ஆராய்ச்சிமணிகட்டின, புரசையானையில் - கழுத் திற் கயிறுகூடிய யானைமேல், வீதியில் - அயோத்தியாபுரித்தெருவிலே, போக வும் - பவனிவருதலையும், விரசு—அப்போதைக்கப்போதுகொள்ளுகிற, கோலங்கள்- அலங்காரங்களையும், காண - பார்க்க, விதியிலேன் - அதிர்ஷ்டமில்லாமற் போனே ன், உரைசெய்து - நான்பலவுஞ் சொல்லியதனலே, என்னை - பயன்யாது, என்ஊ ழ்வினை - எனது பூர்வகர்மத்தை, உன்னுவேன் - நினைத்துக்கொண்டு போகிறேன் எ-று. (௩௬)

தன்னைநோக்கியுலகந்தளர்தற்கும்
அன்னைநோய்க்கும்பரதனங்காற்றுறும்
இன்னலுக்குமங்கேகுவதன்றியே
என்னைநோக்கியிங்கெய்வனமெய்துமோ.

இ-ள். தன்னைநோக்கி - தாம்வரும் திசைபார்த்து, உலகம் - கோசல நாடு முழுதும், தளர்தற்கும் - துன்பப்படுதற்காகவும், அன்னைநோய்க்கும் - தாய்துன்பத்துக்காகவும், பரதன் - ஸ்ரீபரதாழ்வான், அங்கு - அயோத்தியிலே, ஆற்றுறும் - பட்டுக்கொண்டிருக்கிற, இன்னல்நோய்க்கும் - துன்பப்பிணிக்காகவும், அங்கு - அங்கே, ஏகுவதன்றி - போகவேண்டியதே அல்லாமல், என்னைநோக்கி - என்னைத்தேடி, இங்கு - இங்கே, எங்ஙனம் எய்தும் - எப்படிவருவார்—எ-று. (௩எ)

வேறு.

எந்தையாய்முதலியகிளைஞர்யார்க்குமென்
வந்தனைவிளம்புதிகவியின்மன்னனைச்
சுந்தரத்தோளனைத்தொடர்ந்துகாத்துப்போய்
அந்தமினெடுநகர்க்கரசனுக்கென்பாய்.

இ-ள். எந்தையாய் - என் தந்தைதாய், முதலிய - முதலான, கிளைஞர்யார்க்கும் - உறவினரெல்லாருக்கும், என்வந்தனை - என துவணக்கத்தை, விளம்புதி - நீ சொல்லக்கடவை, கவியின்மன்னனை - வானரேசனான சுக்கிரீவனுக்கு, சுந்தரம்-அழகுள்ள, தோளனை - புஜங்களையுடைய ஸ்ரீராமனை, தொடர்ந்துகாத்து - பின்தொடர்ந்துபகரித்துக்கொண்டு, போய்அந்தம்இல் - முடிவில்லாத, நெடுநகர்க்கு - நெடிய அயோத்திமாநகருக்கு, அரசனுக்கு - அரசனாகச்செய், என்பாய் - என்றுநீசொல்லக்கடவை—எ-று. அந்தம் இல் - பகைவரால் முடிவுபெறுதலில்லாதஎன்க, யுத்தத்தினாலே வெல்லப்படாதது அயோத்தி. (௩அ)

இத்திறமினையனவிளம்பவின்னுநீர்
தத்துறலொழிந்திலீர்தையலீரென
எத்திறத்தேதுதமியைந்தவின்னுரை
ஒத்தனதெரிவுறவுணர்த்தினனரோ.

இ-ள். இத்திறம் - இவ்விதங்களான, இனையன - இச்சொற்களை, விளம்ப - சொல்லும்போது, இன்னுநீர் - தாயே நீரின்னமும், தத்துறல் - துன்பப்படுதலை, ஒழிந்திலீர் - விடாதிருக்கிறீர், தையலீர்என - தாயேஎன்று, எத்திறத்து - எந்தஎந்த வகைகளுக்குள்ள, ஏதுவும் - நிமித்தகாரணங்களும், இயைந்த - கூடின, இன்உரை - இன்சொற்கள், ஒத்தன - தக்கவைகளாக, தெரிவுற - பிராட்டிதெரிய, உணர்த்தினன் - சொன்னார்—எ-று. (௩௯)

வேறு.

வீவாய்நீயிவண்மெய்யஃதே
ஒய்வானின்னுயிருய்வானும்
போய்வானங்கர்புக்கன்றே
வேய்வான்மௌலியுமெய்யன்றே.

இ-ள். இவண் - இந்தஇலங்கையிலே, வீவாய்நீ - செத்துப்போவாய்நீ, மெய்-மெய்யாக, அஃதே - அப்படியே, ஒய்வானும் - இப்போது ஒய்ந்திருக்கிற ஸ்ரீராமன், உயிர்உய்வானும் - உயிர்பிழைப்பதும் ஆகும், போய் - காடுவிட்டுப்போய், வான்-பெருமைபொருந்தின, அந்நகர் - அந்த அயோத்திக்கு, புக்கன்றே - போயல்லவோ, மௌலி - கிரீடம், வேய்வான் - சூடிக்கொள்ளுவான், மெய்அன்றே - இவையெல்லாம் மெய்யானதல்லவோ—எ-று. (௪0)

கைத்தோடுஞ்சிறைகற்போயை
வைத்தோனின்னுயிர்வாழ்வானும்
பொய்த்தோர்வில்லிகள்போவாராம்
இத்தோடொப்பதியாதுண்டோ.

இ-ள். கைத்து - வெறுப்புக்கொண்டு, ஒடுஞ்சிறை - நீளமான காலங் காவலிலிருக்கும்படி, கற்போயை - மகாபதிவிரதையான உன்னை, வைத்தோன் - வைத்த இந்தராவணன், இன்உயிர் - அவனுக்கினிதான உயிர்கொண்டு, வாழ்வான் ஆம் - வாழுமவனுஆவான் ஆகான், பொய்த்து - அவனைக் கொல்கிறேமென்றது பொய்யாய், ஓர் - அந்தஒப்பற்ற, வில்லிகள் - வில்லாளிகள், போவார்ஆம் - போமவர்களா ஆம் ஆகார்கள், இத்தோடு - அவன்சாவாமல் வில்லிகள்போகிற இதற்கு, ஒப்பது-சரியானவல்லமையாதுண்டோ - ஏதிருக்கின்றது—எ-று. (௬௧)

நல்லோய்நின்னைநலிந்தோரைக்
கொல்லேமெம்முயிர்கொண்டங்கே
எல்லோருஞ்செலவெங்கோனும்
வில்லோடுஞ்செலவேண்டாவோ.

இ-ள். நல்லோய் - சாதுவானதாயே, நின்னை - உன்னை, நலிந்தோரை - வருத்தினவர்களை, கொல்லேம் - நாங்கள் கொல்லமாட்டோமாய், எம் உயிர் - எங்களுயிரை, கொண்டு - சுமந்துகொண்டு, அங்கே - அந்த அயோத்தியாபுரிக்கு, எல்லோரும் - வானரர்களெல்லாம், செல்ல - நீயின்றிப்போக, எங்கோனும் - எமதாண்டவனை ஸ்ரீராமனுங்கூட, வில்லோடும் - வில்லுடனே, செலவேண்டாவோ - செல்லவேண்டியதில்லையா—எ-று. உன்னொடு செல்லவேண்டியதே என்பது குறிப்பு. ()

நீந்தாவின்னலினீந்தாமே
தேய்ந்தாறாதபெருஞ்செல்வம்
ஈந்தானைக்குனையீயாதே
ஒய்ந்தாலெம்மினுயர்ந்தார்யார்.

இ-ள். நீந்தா - கடக்கக்கூடாத, இன்னலின் - துன்பக்கடலினை, நீந்தாமே- கடவாமல், தேய்ந்து - துன்பப்பட்டு, ஆறாத - நீங்காத, பெருஞ்செல்வம் - பெரிய செல்வத்தை, ஈந்தானுக்கு - கொடுத்த ஸ்ரீராமனுக்கு, உனை - உன்னை, ஈயாதே- கொடாமல், ஒய்ந்தால் - நாங்களிளைத்துநின்றால், எம்மில்-எங்களைவிட, உயர்ந்தார்- உயர்ந்தவர்கள், யார் - யாரிருக்கிறார்கள், ஈயாவிட்டால் நாங்களேதாழ்ந்தவர்களென்பது குறிப்பு—எ-று. (௬௩)

நன்றாய்நல்வினைநல்லோரைத்
தின்றார்தங்குடர்பேய்தின்னக்
கொன்றாலல்லதுகொள்ளேனா
டென்றானுக்கிவையேலாவோ.

இ-ள். நல்வினை - நல்லசெய்கைகளை, நன்றாய் - நன்காராய்ந்துள்ள, நல்லோரை - நல்லபெரியோர்களை, தின்றார்தம் - வதைத்துண்டவர்களுடைய, குடர் - குடலை, பேய்தின்ன - பசாசுகளுண்ணும்படி, கொன்றால் - கொன்றால்நாட்டுக்குப்போவேன், அல்லது - அப்படிக்கொல்லாவிட்டால், கொள்ளேன்நாடு - நாட்டுக்குப்போ

௨௭

களண்ணேன், என்றானுக்கு - என்றுஉறுதிசொன்ன ஸ்ரீராமனுக்கு, இவை - இவைகளெல்லாம், ஏலாவோ - செய்யமுடியாதோ—எ-று. (சச)

மாட்டாதார்சிறைவைத்தோயை
மீட்டாமென்கிலமீள்வாமேல்
நாட்டார்நல்லவர்நன்னூலும்
கேட்டாரிவ்வுரைகேட்பாரோ.

இ-ள். மாட்டாதார் – சத்துருக்களாலே, சிறைவைத்தோயை – சிறைவைக்கப்பட்டஉன்னை, மீட்டாம் – திருப்பினேம், என்கிலம் – என்னப்பெறாமாய், மீள்வோமேல் – திரும்பிப்போவோமேயானால், நாட்டார் – நாட்டிலுள்ளவர்களும், நல்லவர் - நகரிலுள்ளவர்களும், நன்னூலும் – நல்லசாஸ்திரங்கள் முதலானஎல்லாம், கேட்டார் - கேட்டுணர்ந்தவர்களும், இவ்வுரை - இந்த மீட்காத எங்கள்பேச்சையும், கேட்பரரோ - யாராவது சொல்லக்கேட்பார்களா எல்லாரும் எங்களை இகழ்வார்களென்றபடி—எ-று. (சரு)

பூண்டாள்கற்புடையாள்பொய்யாள்
தீண்டாவஞ்சகர்தீண்டாமுன்
மாண்டாளென்றுமனந்தேறி
மீண்டால்வீரம்விளங்காதோ.

இ-ள். பூண்டாள்கற்பு - கற்புநிலையைக்கொண்டவள், பொய்யாள் – அந்தநிலைதவறாதவளாய், உடையாள் – மெய்யே உடையஜானகி, தீண்டா - தொடவுங்கூடாத, வஞ்சகர் – கபடராக்ஷதர்கள், தீண்டாமுன் - தொடுதற்குமுன்னே, மாண்டாளென்று – இறந்துபோனளென்று, மனந்தேறி – மனந்தெளிந்து, மீண்டால் - திரும்பினேமானல், வீரம்விளங்காதோ - எங்கள்வீரத்தனம் மிகவும்விளங்குதலுறுதா—எ-று. என்றால் - எங்களுக்கு இகழ்ச்சியேவருமென்பதாயிற்று. (சசு)

கெட்டேனீயுயிர்கேதத்தால்
விட்டாயென்றிடின்மெல்லம்பால்
ஒட்டாரோடுலகோரேழும்
சுட்டாலுந்தொலையாவன்றே.

இ-ள். கெட்டேன் - ஐயோ, நீ உயிர் – உன்னுயிரைநீ, கேதத்தால் – துன்பத்தினலே, விட்டாய் - விட்டுவிட்டாய் இறந்துபோனய், என்றிடில் - என்றுசொல்லலானல், மெல்அம்பால் – எளிதே உயிர்வாங்குவதான அம்பினலே, ஒட்டாரோடு-சத்துருக்களுடனே, உலகு ஒரேழும் - ஒருஏழுலகங்களையும், சுட்டாலும் – தகனஞ்செய்தாலும், தொலையா - பழிபோகாதது, அன்றே – அல்லவோ—எ-று. (சஎ)

முன்னேகொல்வான்மூவுலகும்
பொன்னேயோங்கியபோர்வில்லான்
என்னேநின்னிலையீதென்றால்
பின்னேசெம்மைபிடிப்பானே.

இ-ள். முன்னே - முன்பு, மூவுலகும் – இந்தத்திரிலோகங்களையும், கொல்வான் - அழிப்பான், பொன்னே – ஓலட்சுமியானவளே, 'ஓங்கிய - உயர்ந்த, போர்-வல்லமைகொண்ட, வில்லான் – கோதண்டபாணியானவர், என்னே-இதென்னஆ

ச்சரியம், நின்நிலை – உனதுநிலைமை, ஈதென்றால் - இப்படிஆனால், பின்னே - பின்பு தனது, செம்மை – செவ்வைக்குணத்தை, பிடிப்பானோ - கொள்ளுவானோ கொள்ளான்—எ-று. மனம்போனபடியெல்லாம் போவான் என்றதாயிற்று. (சஅ)

கோளாளருயிர்கோளோடு
மூளாவெஞ்சினமுற்றாகா
மீளாவேலயல்வேறுண்டோ
மாளாதோபுவிவானோடும்.

இ-ள். கோளாளர் – உன்னைச் சிறைகொண்டவர்களுடைய, உயிர்-உயிரை, கோளோடும் – கொள்ளுகிறதுடனே, மூளா – வராத, வெஞ்சினம் – வெங்கோபம், முற்றாகா – முடிவுபெறாது, மீளாவேல் – அப்படிக்கோபந்திரும்பாமல் அதிகப்படுமானால், அயல் – இந்தராக்ஷதருக்குவேறாக, வேறுண்டோ – வேறேஉலகங்களை அல்லாமல் வேறே யாதிருக்கின்றது, புவி - இந்த உலகம், வானோடும் - சுவர்க்கத்துடனேகூட, மாளாதோ – அழிந்துபோகாதா—எ-று. என்கிலேசிக்கிறாயென்றபடி. ()

தாழித்தண்கடறம்மோடும்
ஏழுக்கேழுலகெல்லாமன்
ஆழிக்கையவனம்பம்மா
ஊழித்தியெனவுண்ணாவோ.

இ-ள். தாழி – பானைபோலிருக்கிற, தண் – குளிர்ந்த, கடலோடும் – கடல்களுடனே, ஏழுக்கு – கீழேழுக்குச்சரியாக, ஏழ் – மேலுமேழான, உலகெல்லாம்-உலகங்களையெல்லாம், மன் – நிலைகொண்ட, ஆழி – சக்கரத்தை, கையவன் – கையிலே கொண்ட ஸ்ரீராமனுடைய, அம்பு – பாணங்களானவை, அம்மா – தாயே, ஊழித்தீயென – முடிவுகாலத்து நெருப்பைப்போல், உண்ணாவோ – எரித்துமுடிவுசெய்யவல்லன அல்லவோ, தம் – சாரியை—எ-று. (ருo)

படுத்தான்வானவர்பற்றாரைத்
தடுத்தான்றீவினைதக்கோரை
எடுத்தானல்வினையெந்நாளும்
கொடுத்தானென்றிசைகொள்ளாயோ.

இ-ள். வானவர் – தேவர்களுக்கு, பற்றாரை – சத்துருக்களான ராக்ஷதரை, படுத்தான் – கொன்றானாகி, தக்கோரை – நல்லோர்க்குள்ள, தீவினை – தீயசெய்கைகளையெல்லாம், தடுத்தான் – விலக்குதல்செய்து, எந்நாளும் – எக்காலமும், நல்வினை-புண்ணியத்தை, எடுத்தான் – மென்மேலாக்கி, கொடுத்தான் – நல்லோருக்குக் கொடுத்தான், என்று – என்றுசொல்வதான, இசை – கீர்த்தியை, கொள்ளாயோ-நீபெறமாட்டாயோ பெறுவாயென்பதாம்—எ-று. (ருக)

சின்னாளியிடர்தீராதாய்
இன்னாவைகலினெல்லோரும்
நன்னாள்காணுதனன்றன்றோ
உன்னானல்லறமுண்டானால்.

இ-ள். சின்னாள்நீ – நீசிலகாலம், இடர் – துன்பத்தை, தீராதாய் - போக்காதவளாய், இன்னா - அத்துன்பத்துடனே, வைகலின்-இருத்தலாலே, எல்லோரும்-

அனைவரும், நன்னாள் – தங்களுக்கு நல்லகாலத்தை, காணுதல் – காணப்பெறுதல், நன்றன்றோ – நன்மையானதல்லவோ, உன்னால் – உன்னாலே, நல்லறம் – நல்லதருமம், உண்டானால் – நிலைபெறுவதானால், உன்னால் நல்லதருமம்நிலைபெறுவதாய்எல்லோரும் நன்னாள்காணுதல் நன்றன்றோ என்க—எ-று. (௫௨)

புளிக்குங்கண்டகர்புண்ணீருள்
குளிக்கும்பேய்குடையுந்தோறும்
ஒளிக்குந்தேவருவந்துள்ளம்
களிக்குந்நல்வினைகாணாயோ.

இ-ள். புளிக்கும் – எல்லாரும் வெறுக்கத்தக்க, கண்டகர் – ராக்ஷதர்களுடைய, புண்ணீருள் – இரக்தஜலத்திலே, குளிக்கும்பேய் – பசாசுகள்முழுகும், குடையுந்தோறும் – முழுகும்போதெல்லாம், ஒளிக்கும் – அஞ்சிமறைந்திருக்கிற, தேவர்-தேவர்கள், உவந்து – சந்தோஷித்து, உள்ளம் – மனங்கள், களிக்கும்-ஆனந்திப்பதான, நல்வினை – நல்லசெய்கைகளை, காணாயோ – உன்கண்ணாற்பார்க்கமாட்டாயா பார்ப்பாய்—எ-று. (௫௩)

வேறு.

ஊழியினிறுதியினுருமெறிந்தெனக்
கேழ்கிளர்சுடுகணைகிழித்தபுண்பொழி
தாழிருங்குருதியிற்றரங்கவேலைகள்
ஏழுமொன்றாகநின்றிரைப்பக்காண்டியால்.

இ-ள். ஊழியினிறுதியின் – ஊழிகாலத்துமுடிவில்விழுகிற, உரும் - இடியானது, எறிந்தென – விழுந்தாற்போல், கேழ்கிளர்-ஒளிவிளங்குகின்ற, சுடுகணை-தகிப்பதான அம்பு, கிழித்த – விழுந்துபிளந்த, புண்பொழி – புண்ணினின்றுஞ் சிந்துகிறதினாலே, தாழ் – தங்கின, இரும் – அதிகபிரவாகமான, குருதியில்-இரக்தஜலத்திலே, தரங்கம் – அலைகளையுடைய, வேலைகளேழும் – ஏழுகடல்களும், ஒன்றாக - ஒருசேர்க்கையாக, நின்று – நிலைகொண்டு, இரைப்ப – முழங்குதல்செய்ய, காண்டி-நீபார்—எ-று. (௫௪)

சூலிரும்பெருவயிறலைத்துச்சோர்வுறும்
ஆலியங்கண்ணியரறுத்துநீத்தன
வாலியுங்கடப்பருவனப்பவானுயர்
தாலியம்பெருமலைதயங்கக்காண்டியால்.

இ-ள். சூல் – கருப்பத்தையுடைய, இரும்பெருவயிறு – மிகப்பெரியவயிற்றிலே, அலைத்து – மோதிக்கொண்டு, சோர்வுறும் – தளர்ச்சியாகிற, ஆலிஅம் – நீர்த்துளிகளைச்சிந்துகிற, கண்ணியர் – கண்களையுடையராக்ஷிகள், அறுத்துநீத்தன-அறுத்துப் போக்கின, வாலியும் – தாண்டவல்ல வாலியுங்கூட, கடப்பரு - தாண்டஅரிதான, வனப்ப – அழகுகொண்ட, வான் – ஆகாயத்தளவும், உயர் – உயர்ந்த, தாலியின்பெருமலை – தாலிகளானபெரியமலை, தயங்க – இங்கேவிளங்க, காண்டி – நீபார் எ-று. (௫௫)

விண்ணினீளியநெடுங்கழுதும்வெஞ்சிறை
எண்ணினீளியபெரும்பறவையீட்டமும்

புண்ணினீர்ப்புணரியிற்படிந்துபூவையர்
கண்ணினீராற் றினிர்குளிப்பக்காண்டியால்.

இ-ள். விண்ணில் - ஆகாயத்தளவும், நீளிய - உயர்ந்த, நெடுங்கழுகும் - அதிகமானபசாசுகளும், வெஞ்சிறை - வெவ்விதான சிறகுகளையுடைய, எண்ணில் - கணக்கில், நீளிய - மிகுதியான, பெரும் - பெரிய, பறவையீட்டமும் - பக்ஷிக்கூட்டங்களும், புண்ணினீர் - ரக்தஜலமாகிய, புணரியில் - கடலிலே, படிந்து - முழுகி, பூவையர் - ராக்ஷதப்பெண்களுடைய, கண்ணினீர் - கண்ணீரான, ஆற்றினில் - ஆற்றிலே அந்தரக்தநிறம்போக, குளிப்ப - முழுக, காண்டி - நீபார்—எ-று. (கூசு)

கரம்பயின்முரசினங்கறங்கக்கைதொடர்
நரம்பினுமிமிழிசைநவிலநாடகம்
அரம்பையராடியவரங்கினுண்டொழிற்
குரங்குகண்முறைமுறைகுனிப்பக்காண்டியால்.

இ-ள். கரம் - கைகளாலே, பயில் - அடிக்கப்படுகிற, முரசினம் - பேரிகைவகைகள், கறங்க - முழங்கவும், கை - ஒழுங்காக, தொடர் - பூண்டிருக்கிற, நரம்பினும் - தந்தியினின் றும், இமிழ் - சத்திக்கின்ற, இசை - இசைப்பாட்டுகள், நவில-பாடவும், அரம்பையர் - தெய்வப்பெண்கள், நாடகம்ஆடிய - கூத்தாடின, அரங்கின்-நாடகசாலைகளிலே, ஆண்தொழில் - ஆண்மைத்தொழில்செய்த, குரங்குகள் - வானரங்கள், முறைமுறை - வரிசை வரிசையாக, குனிப்ப - ஆட, காண்டி - நீபார் எ-று. (கூஎ)

புரையுறுபுன்றொழிலரக்கர்புண்பொழி
திரையுறுகுருதியாறீர்ப்பச்செல்வன
வரையுறுபிணப்பெறும்பிறக்கமண்டின
கரையுறுநெடுங்கடறூர்ப்பக்காண்டியால்.

இ-ள். புரையுறு - தோஷங்களால் மிகுந்த, புன்தொழில் - ஈனச் செய்கைகளையுடைய, அரக்கர் - ராக்ஷதர்கள் தேகத்திலுண்டான, புண்பொழி - காயங்களிலிருந்து சிந்துகிற, திரையுறு - அலைகளால் மிகுந்த, குறுதி ஆறு - ரக்தவெள்ளமானது, ஈர்ப்ப - இழுத்துக் கொண்டுபோக, செல்வன - போவனவான, வரை உறு-மலைபோன்ற, பிணம் - ராக்ஷதப்பிணங்களின், பெரும்பிறக்கம் - பெரிய தோற்றங்கள், மண்டின - நெருங்கின ஆகி, கரை - கரையிலே, உறு - அலைகளால் மோதுவதான, நெடுங்கடல் - நீண்டகடலை, தூர்ப்ப - நிறைவுசெய்ய, காண்டி - நீபார்-எ-று.

வினையுடையரக்கராமிருந்தைவெந்துகச்
சனகியென்றொருதழனடுவட்டங்கலான்
அனகன்கையம்பெனுமளவிலூதையால்
கனகநீடிலங்கைநின் றுருகக்காண்டியால்.

இ-ள். வினைஉடை - தீவினையையுடைய, அரக்கராம் - ராக்ஷதர்களாகிய, இருந்தை - கரிகள், வெந்து உக - வெந்து கரைவதாக, சனகி என்று - ஜனககுமாரியென்கிற பெயர்கொண்டு, ஒருதழல் - ஒருவகை நெருப்பு, நடுவெண் - இவ்வூர்நடுவிலே, தங்கலால் - இருத்தலாலே, அனகன் - யாதொரு பரிசுத்தனான ஸ்ரீராமனுடைய, கைஅம்பு எனும் - கையால்விடுகிற அம்பென்கிற, அளவில் - அளவில்லாத, ஊ

தையால் - காற்றினாலே, கனகம் - சுவர்ணமயமாக, நீடு - நெடிதாயிருக்கிற, இலங்கை - இந்த இலங்கையானது, நின்று - நிலைகொண்டு, உருக - உருகும்படி, காண்டி - நீபார்—எ-று. (ருகூ)

தாக்கிகலிராவணன்றலையிற்றாவின
பாக்கியமனையநின்பழிப்பின்மேனியை
நோக்கியகண்களைநுதிகொண்மூக்கினால்
காக்கைகள்கவர்ந்துகொண்டுண்ணக்காண்டியால்.

இ-ள். தாக்கு - யாவரோடும் மோதுகின்ற, இகல் - வலிமையுள்ள, இராவணன் - இராவணனுடைய, தலையில் - தலைகளிலே, தாவின - பறந்துபோயிருந்து, பாக்கியம் - தேவர்கள்செய்த பாக்கியத்தை, அனைய - ஒப்பான, நின் - உன்னுடைய, பழிப்பு இல் - யாதொரு தோஷமுமில்லாத, மேனியை - திருமேனியைவிரும்பி, நோக்கிய - பார்த்த, கண்களை - அவனுடைய கண்களை, நுதிகொள் - கூர்மைகொண்ட, மூக்கினால் - மூக்குகளாலேகுத்தி, காக்கைகள் - காகங்கள், கவர்ந்துகொண்டு - பிடுங்கிக்கொண்டு, உண்ண - தின்ன, காண்டி - நீபார்—எ-று. (சுO)

மேலுறவிராவணற்கழிந்துவெஃகிய
நீலுறுதிசைக்கரிதிரிந்துநிற்பன
வாலுறவனையவன்றலையைவவ்வலில்
காலுறுகணைகடிந்திடுவகாண்டியால்.

இ-ள். மேல் - முன்னாளிலே, உற - மிகவும், இராவணற்கு - தசக்கிரீவனுக்கு, அழிந்து - தோற்று, வெஃகிய - விரும்பத்தக்க, நீல்உறு - நீலநிறம்பொருந்தின அஞ்சனமுதலான, திசைக்கரி - திக்கஜங்களாய், வால்உற - வாற்புறந்தோன்ற, திரிந்து - முகங்களைத்திரும்பிக்கொண்டு, நிற்பன - நிற்கின்றவைகள்கண்முன், அனையவன் - அந்தராவணனுடைய, தலையை - தலைகளை, வவ்வலில் - கொண்டுபோய், கால்உறு - வாயுவேகத்தையுடைய, கணை - அம்புகள், கடிந்து - அறுத்து, இடுவ - விழஇடுவனவற்றை, காண்டி - நீபார்—எ-று. (சுக)

நீர்த்தெழுகணைமழைவழங்கநீலவான்
வேர்த்ததென்றிடையிடைவீசுந்தூசுபோல்
போர்த்தெழுபொலன்கொடியிலங்கைப்பூழியோ
டார்த்தெழுகழுதிரைத்தாடக்காண்டியால்.

இ-ள். மழைநீர்த்து - மழையினதுதன்மையாக, எழு - உண்டாகுகிற, கணை - அம்புகளை ஸ்ரீராமன், வழங்க - பெய்ய அதனாலே, நீலவான் - நீலநிறத்தை யுடைய ஆகாயத்துக்கு, வேர்த்ததென்று - வேர்வையுண்டாயிற்றென்று அவ்வேர்வைபோக, இடை இடை - அங்கங்கே, வீசும் - வீசுகின்ற, தூசுபோல் - வஸ்திரத்தைப்போல்-போர்த்து எழு - கவிந்துதோன்றுகிற, பொலன்கொடி - பொன்மயமானகொடி ஆடைகளைக்கொண்ட, இலங்கை - இந்த இலங்கையிலே, பூழியோடு - பூதூளிகளுடனே, ஆர்ந்து - நிறைதலாய், எழு - எழுகின்ற, கழுகு - பசாசுகள், இரைத்து-கொக்கரித்துக்கொண்டு, ஆட - கூத்தாட, காண்டி - நீபார்—எ-று. (சுஉ)

நீனிறவரக்கர்தங்குருதிநீத்தநீர்
வேலைமிக்காற்றொடுமீளவேலைசூழ்

ஞாலமுற்றுங்கடையுகத்துநச்சறுக்
காலனும்வெறுத்துயிர்காலக்காண்டியால்.

இ-ள். நீலநிறம் — கறுத்த நிறத்தைக்கொண்ட, அரக்கர்தம் — ராக்ஷதர்களுடைய, குருதிநீத்தம் — ரக்தப்பிரவாகம், நீர்வேலை — நீர்மயமானகடலை, மிக்கு — நிரம்பச்செய்து, ஆற்றொடு — உப்பங்கழிகளுடனேபோய்க்கூடி, மீள — மேலேறிச் செல்லவும், வேலைசூழ் — கடல்சூழ்ந்த, ஞாலமுற்றும் — உலகமுடிவாகிற, கடையுகத்து — உகாந்தத்திலே, நச்சு அறு — உயிர்களை அழித்தலில் இரக்கமில்லாத, காலனும் — யமனுங்கூட, வெறுத்து — அழித்தலிலேசலித்து, உயிர்கால — மூச்சுவிடவும் ஓய்ந்துபோவதும், காண்டி — நீபார்—எ-று. (சுங)

அணங்கிளமகளிரொடரக்கராடுறு
மணங்கிளர்கற்பகச்சோலைவாவிவாய்ப்
பிணங்குறுவான்முறைபிடித்துமாலைய
கணங்கொடுகுரக்கினங்குளிப்பக்காண்டியால்.

இ-ள். அணங்கு — அழகுள்ள, இளமகளிரோடு — யௌவநப்பெண்களுடனே, அரக்கர் — ராக்ஷதர்கள், ஆடுறும் — ஸ்நானஞ்செய்கிற, மணங்கிளர் — வாசனைபரிமளிப்பதான, கற்பகச்சோலை — கற்பகப்பூஞ்சோலையிலுள்ள, வாவிவாய் — குளங்களிலே, பிணங்கு உறு — கோணியிருக்கிற, வால் — ஒன்றன்வாலைமற்றொன்று, முறை — வரிசைவரிசையாக, பிடித்து — பற்றிக்கொண்டு, மாலைய — நீளநீளமாய், கணங்கொண்டு — கூட்டங்கொண்டு, குரக்கினம் — குரங்குக்கூட்டங்கள், குளிப்ப — ஸ்நானஞ்செய்ய, காண்டி — நீபார்—எ-று. (சுச)

செப்புறலென்பலதெய்வவாளிகள்
இப்புறத்தரக்கரைமுருக்கியேகின
முப்புறத்துலகையுமுடிக்கமூட்டலான்
அப்புறத்தரக்கருமவியக்காண்டியால்.

இ-ள். பலசெப்புறல் — பலவாகச் சொல்லுதலாலே, என் — யாது பயனுண்டாம், தெய்வம் — தெய்வத்தன்மையுள்ள, வாளிகள் — அம்புகளானவை, இப்புறத்து — இந்த இலங்கையிலுள்ள, அரக்கரை — ராக்ஷதர்களை, முருக்கி — கொன்று, ஏகின — சென்றனவாய், முப்புறத்து — மூன்றிடங்களான மூவகையான, உலகையும் — லோகங்களையும், முடிக்க — முடிவுசெய்ய, மூட்டலால் — அம்புகள்விடுகிறதினாலே, அப்புறத்து — மூவுலகுக்கப்பாலுமுள்ள, அரக்கரும் — ராக்ஷதர்களும், அவிய — சாவ, காண்டி — நீபார்—எ-று. (சுரு)

ஈண்டொருதிங்களிவ்விடரின்வைகுதல்
வேண்டுவதன்றுநான்விரைவில்வீரனைக்
காண்டலேகுறைவுபின்காலம்வேண்டுமோ
ஆண்டகையினியொருபொழுதுமாற்றுமோ.

இ-ள். ஈண்டு — இங்கே, ஒருதிங்கள் — ஒருமாத அளவு, இவ் இடரில் — இப்படியான துன்பத்திலே, வைகுதல் — தங்கியிருப்பது இருக்க, வேண்டுவது அன்று — வேண்டியதில்லை, நான் — அடியேன், விரைவில் — சீக்கிரத்திலே, வீரனை — ஸ்ரீராமனைப்போய், காண்டலே — காண்பதேவேண்டுவது, குறைவுபின் — காணுங்குறை தீர்

ந்தபின்பு, காலம்வேண்டுமோ – கால அளவும்வேணுமோவேண்டா, ஆண்தகை – புருஷசிரேஷ்டரான பெருமாள், இனி – நான்கண்டுசொன்னபின்பு, ஒருபொழுதும்-ஒருநாளாவது, ஆற்றுமோ – பொறுத்திருப்பாரோ பொறார்—எ-று. (சுசு)

ஆவியுண்டென்னுமீதுண்டுன்னருயிர்ச்
சேவகன்றிருவுருத்தீண்டத்தீதிலாப்
பூவிலேதளிரிலேபொரிந்துவெந்திலாக்
காவிலேகொடியிலேநெடியகானெலாம்.

இ-ள். ஆவி – அவருக்கு உயிர், உண்டென்னும் – உண்டென்பதான, ஈது-இவ்வார்த்தைமாத்திரம், உண்டு – உள்ளதேயாம், உன் – உனது, ஆர் உயிர் – அரிதான உயிர்போன்ற, சேவகன் – மகாவீரரானபெருமாளுடைய, திருவுரு – திருமேனியை, தீண்ட – தொடுதெற்கு, தீதிலா – கரிதலில்லாத, பூ இலே-புட்பங்களுமில்லை, தளிர் இலே – தளிர்களுமில்லை, பொரிந்து – பொரிப்பொரியாய், வெந்திலா – வேவுதலில்லாத, கா இலே – சோலைகளுமில்லை, கொடி இலே – கொடிகளுமில்லை, நெடிய-நெடிதான – கானெலாம் – காடுகளெல்லாம்—எ-று. (சுஎ)

சோகம்வந்துறுவதுதெளிவுதோய்ந்தன்றே
மேகம்வந்திடித்துவந்துருவுமூழ்கினும்
ஆகமம்புயங்களுமழுந்தவைந்தலை
நாகம்வந்தடர்ப்பினுமுணர்வுநாறுமோ.

இ-ள். சோகம் – துன்பம், வந்து உறுவது – வந்துசேர்கிறது, தெளிவு – ஞாபகமானநினைவு, தோய்ந்து அன்றே – உண்டாகி அல்லவோ நினைவில்லையானால் எப்படி சோகமென்பது தெரியுமென்றபடி, மேகம் வந்து – மேகங்கள்கூடி, இடித்து-கெர்ச்சித்து, வந்து – வருதலாலே, உருமு – இடிவந்து, வீழ்கினும் – விழுந்தாலும், ஆகமும் – மார்பிலும், புயங்களும் – தோள்களிலும், அழுந்த – பதிய, ஐந்தலை – ஐந்துதலைகளுள்ள, நாகம் வந்து – பாம்புவந்து, அடர்ப்பினும் – கொத்தினாலும் கடித்தாலும், உணர்வு – நினைவு பிரக்ஞை, நாறுமோ – தோன்றுவதுண்டா இல்லை—எ-று.

மத்துறுதயிரெனவந்துசென்றிடை
தத்துறுமுயிரொடுபுலன்கடள்ளுறும்
பித்துநின்பிரிவினிற்பிறந்தவேதனை
எத்தனையுளவவையெண்ணுமீட்டவோ.

இ-ள். மத்து உறு – மத்துவிழுந்துகலக்குகிற, தயிரென – தயிர்போல், வந்து – உடம்புள்ளேவந்தும், சென்று – வெளியேபோயும், இடை – இப்படி நடுவேநின்று, தத்துறும் – தமொறுகிற, உயிரொடு – உயிருடனே, புலன்கள் – எதிர்விஷயங்களும், தள்ளுறும் – தோன்றாதிருக்கிற, பித்து-பைத்தியத்துடனே, நின்பிரிவினில்-உனதுபிரிவினாலே, பிறந்த – உண்டான, வேதனை – துன்பங்கள், எத்தனை உள-எவ்வளவு உண்டு, அவை – அவ்வளவும், எண்ணும் – எண்ணிச் சொல்வதான, ஈட்டவோ – தகுதியுள்ளவைகளோ—எ-று. (சுகூ)

இந்நிலையுடையவன்றரிக்குமென்றியேல்
மெய்ந்நிலையுணர்ந்துழிமிடைந்ததீதெனிற்

பொய்ந்நிலைகாண்டியான்புகன்றயாவுமுன்
கைந்நிலைநெல்லியங்கனியிற்காட்டுகேன்.

இ-ள். இந்நிலை — இவ்வகையான சுவபாவம், உடையவன் உள்ளபெருமாள், தரிக்கும் - தாமதித்திருப்பார், என்றியேல் — என்பாயேஆனுல், மெய்நிலை — அவரது தேகநிலையை, உணர்ந்துழி - தெரிந்தபோது, மிடைந்தது - உண்டானது, ஈது எனில் - இத்தன்மையதேஎன்னல்தெரிவாய்ஆனுல், பொய்நிலைகாண்டி — தாமதித்திருப்பாரென்றுநீகொண்டது பொய்நிலையென்றுதெரிவாய்பார்க்கக்கடவை, யான் புகன்ற — நான் இப்போதுசொன்னவை, யாவும்-எல்லாம், உன் - உனது, கைநிலை-கையிலுள்ள, நெல்லியங்கனியில் - நெல்லிப்பழம்போல் பின்பு, காட்டுகேன் - காட்டக்கடவேன்—எ-று. (எ0)

தீர்த்தனுங்கவிக்குலத்திறையுந்தேவிநின்
வார்த்தைகேட்டுவப்பதன்முன்னர்மாக்கடல்
தூர்த்தனவிலங்கையைச்சூழுமாக்குரங்
கார்த்ததுகேட்டுவந்திருத்தியன்னைநீ.

இ-ள். தீர்த்தனும் — ஸ்ரீராமனும், கவிக்குலத்து-வானரகுலத்துக்கு, இறையும் — அரசனை சுக்கிரீவனும், தேவி-தெய்வமானதாயே, நின்-உன்னுடைய, வார்த்தைகேட்டு - சொல்லைக்கேட்டு, உவப்பதன்முன்னம் - சந்தோஷிக்குமுன்னே, மாக்கடல்-பெரியகடலை, தூர்த்தன - மேடுசெய்தவைகளாய், இலங்கையை — இந்த இலங்காபுரியை, சூழும் - சுற்றுவனவான, மாக்குரங்கு — பெரியகுரங்குகள், ஆர்த்தது - சத்திக்கிறதை, கேட்டு - கேள்வுகொண்டு, உவந்து-சந்தோஷித்து, இருத்தி-இருக்கக்கடவை, அன்னைநீ - தாயாகியநீ—எ-று. (எக)

எண்ணரும்பெரும்படைநாளையிந்நகர்
நண்ணியபொழுததுநடுவணங்கைநீ
விண்ணுறக்கருளன்மேல்விளங்கும்விண்டுவிற்
கண்ணனையென்னெடுவெரிநிற்காண்டியால்.

இ-ள். எண்ணரும்-எண்ணுதற்கரிதான, பெரும்படை - பெரியசேனைகள், நாளை - நாளைத்தினமே, இந்நகர் - இவ்வூருக்கு, நண்ணியபொழுது — வந்தபோது, அது — அந்தச்சேனைகளுக்கு, நடுவண் - நடுவே, நங்கைநீ - தாயிலுஞ்சிறந்தநீ, விண்ணுற — ஆகாயத்தைப்பொருந்த, கருளன்மேல்-கருடன்மேலே, விளங்கும் - விளங்குகிற, விண்டுவில் — திருமால்போல், கண்ணனை - ஸ்ரீராமனை, என் — எனது, நெடு-நீண்ட, வெரிநில் — முதுகின்மேலே, காண்டி — நீபார்—எ-று. (எஉ)

அங்கதன்றோண்மிசையிளவலம்மலை
பொங்குவெங்கதிரெனப்பொலியப்போர்ப்படை
இங்குவந்திருக்குநீயிடருமையமும்
சங்கையுநீங்குதிதனிமைநீங்குவாய்.

இ-ள். அங்கதன் - அங்கதனுடைய, தோள்மிசை — தோள்மேலே, இளவல்-இளையபெருமாள், அம்மலை — அந்தஉதயகிரிமேலே, பொங்கு - விளங்குகின்ற, வெங்கதிரென — சூரியன்போல், பொலிய - விளங்கவும், போர் - பொருதவல்ல, படை-சேனைகள், இங்குவந்து — இங்கேவந்து, இறுக்கும் - இறங்கும், நீ இடரும் — துன்ப

மும், ஐயமும் - சந்தேகமும், சங்கையும் - ராக்ஷதிகளாலுண்டாகின்ற தோஷங்களும், நீங்குதி - நீங்குவாய், தனிமை - இங்கே ஒருத்தியாயிருத்தலும், நீங்குவாய்-தீர்வாய்—எ-று. (எங)

குராவருங்குழலியிக்குறித்தநாளினே
விராவருநெடுஞ்சிறைமீட்கிலானெனிற்
பராவரும்பழியொடும்பாவம்பற்றுதற்
கிராவணனவனிவனிராமனென்றனன்.

இ-ள். குரா – குரவமலர்கள், வரும் - மணப்பதான, குழலி – கூந்தலையுடையவளே, இ - இப்படி, குறித்த - அளவுசெய்த, நாளினே-நாள்களுக்குள்ளே, விரா-இவ்வூரிலே சேர்ந்திருக்க, வரு – வருவதான, நெடுஞ்சிறை - நெடியசிறையானதை காவலுக்குள்ளிருப்பதை, மீட்கிலான் - ராமன்மீளச்செய்யான், எனில் - என்றால், பரா – பரவி, வரும்-வருவதான, பழியொடு-பழிப்புடனே, பாவம் - பாவமும், பற்றுதற்கு-கூடிதற்கு, இராவணன்-தசக்கிரீவனுவான், அவன்-அந்த ஸ்ரீராமன், இவன்-இந்தராவணன், இராமன்-இராமனுவான், என்றனன் – என்றுசொன்னுர்-எ-று. ()

ஆகவிம்மொழியாசிலகேட்டறிவுற்ருள்
ஓகைகொண்டுகளிக்குமனத்தளுயர்ந்தாள்
போகைநன்றிவனென்பதுபுந்தியின்வைத்தாள்
தோகையுஞ்சிலவாசகமின்னனசொன்ஞள்.

இ-ள். ஆசில ஆக- யாதொருதோஷமுமில்லையாக, இம்மொழி – இந்தவார்த்தைகளை, கேட்டு – கேள்விகொண்டு, அறிவுற்ருள்-தெளிந்தவளாகி, ஓகைகொண்டு-சந்தோஷப்பட்டு, களிக்கும் – ஆனந்திப்பதான, மனத்தள்-மனத்தையுடையவளாய், உயர்ந்தாள்-தலைநிமிர்ந்துநோக்கி, இவன்போகை – இனிஇவன்போகுதலே, நன்று-நல்லகாரியம், என்பது-என்பதை, புந்தியின் - தன் எண்ணத்திலே, வைத்தாள்-கொண்டாளாகி, தோகையும் - சீதாபிராட்டியும், சிலவாசகம் - சிலசொற்கள், இன்னன – இத்தன்மையானவைகளை, சொன்ஞள் – சொல்லிஞள்—எ-று. (எரு)

சேறியையவிரைந்தனைதீயவையெல்லாம்
வேறியானினியொன்றும்விளம்பலென்மேலோய்
கூறுகின்றனமுன்குறியுற்றனகோமாற்
கேறுமென்றவைசொல்லெனவின்னவிசைப்பாள்.

இ-ள். ஐய-அப்பனே, விரைந்தனை – சீக்கிரமாக, சேறி – போ, தீயவையெல்லாம் – நடுவேவருந்தீங்குகளையெல்லாம், வேறி-வென்றுகொள், யான் இனி-இனிமேல்நான், ஒன்றும்விளம்பலென் – ஒன்றுஞ்சொல்லமாட்டேன்ஆனுலும், மேலோய் – மேம்பாடுள்ளவனே, கூறுகின்றன – நான்சொல்வன என்னென்னில், முன்குறியுற்றன – முன்னே அடையாளமானவைகள் அவைகள், கோமாற்கு - பெருமாற்கு, ஏறுமென்று – சம்மதியாமென்றும், அவை - அவைகளை, சொல்லென – நீ சொல்லென்றும், இன்ன – இப்படியாக, இசைப்பாள்-சொல்லுவாள்—எ-று. (எசு)

நாகமொன்றியநல்வரையின்றலைமேஞள்
ஆகம்வந்தெனைவள்ளுகிர்வாளினளைந்த

காகமொன்றைமுனிந்தயல்கல்லெழுபுல்லால்
வேகவெம்படைவிட்டதுமெல்லவிரிப்பாய்.

இ-ள். நாகம் ஒன்றிய — ஆகாயத்தை அளாவின, நல்வரையின் தலை — நல்ல மலையான சித்திரகூடத்திலே, மேனாள் — முன்னாளிலே, எனை — என்னுடைய, ஆகம் — மார்பில், வந்து — கிட்டிவந்து, வள் — கூர்மையான, உகிர் — நகமாகிய, வாளின் — வாளாலே, அளைந்த — கீறின, காகம் ஒன்றை — ஒருகாக்கையை, முனிந்து — கோபித்து, அயல் — தன் அருகிலே, கல் — கல்லின்மேல், எழு — முளைத்த, புல்லால் — ஒரு புல்லைக்கொண்டு, வேகம் — வேகமுள்ள, வெம் — வெவ்விய, படை — பிரமாஸ்திரமாக, விட்டது — விட்டதை, மெல்ல — மெதுவாக, விரிப்பாய் — நீசொல்லு—எ-று. (எஎ)

அங்கதஞ்சிநடுங்கியயன்பதியண்மி
இங்குநின்வரவென்னவெனக்கனல்வெய்த
மங்கைபங்கனொடெண்டிசையுஞ்செலமற்றோர்
தங்கடங்களிடங்கண்மறுத்தமைதைப்பாய்.

இ-ள். அங்கு அது — அப்போது அந்தக்காகம், அஞ்சி — பயந்து, நடுங்கி — நடுக்கங்கொண்டு, அயன்பதி — பிரமலோகத்தை, அண்மி — கிட்டி கிட்டினபோது, இங்கு — என்னுலகத்துக்கு, நின் வரவு — உன்வருதலினாலே, என்ன என — யாது விளையுமோவென்று, கனல்வு எய்த — பிரமன் கோபங்கொள்ள, மங்கைபங்கனொடு — பார்வதிசமேதனிடத்துடனே, எண் திசையும் — எட்டுத் திக்கிலும், செல — போக, மற்றோர் — அவர்களெல்லாம், தங்கள் தங்கள் — அவரவர்கள், இடங்கள் — இடங்களுக்கு வரவேண்டாமென்று, மறுத்தமை — தடுத்தவிட்டவைகளை, தைப்பாய் — அவருக்குத் தெரியச்சொல்லு—எ-று. (எஅ)

இந்திரன்றருமைந்தனுறுந்துயர்யாவும்
அந்தரத்தினினின்றவர்கண்டினியந்தோ
எந்தைதன்சரணன்றியோர்தஞ்சமுமின்றால்
வந்தவன்சரண்வீழ்கெனவுற்றதும்வைப்பாய்.

இ-ள். இந்திரன்தரும் — தேவேந்திரன்பெற்ற, மைந்தன் — புத்திரனான அந்தக்காகம், உறும் துயர் யாவும் — பட்டதுக்கமெல்லாம், அந்தரத்தினில் — ஆகாயத்திலே, நின்றவர் — சஞ்சரிக்கிறதேவர்கள், கண்டு — பார்த்து, இனி — இனிமேல், அந்தோ — ஐயோ, எந்தைதன் — எங்கள்சுவாமியான பெருமாளுடைய, சரண் அன்றி — பாதமல்லது, ஓர்தஞ்சமும் — வேறே ஒரு ஆதரவும், இன்று ஆல் — இல்லை ஆகலால், வந்து — காகமேநீபோய், அவன்சரண் — அந்தப் பெருமாள் பாதத்திலே, வீழ்கென — விழக்கடவையென்ன, உற்றதும் — காகம்மீண்டுவந்ததையும், வைப்பாய் — தெரியவைக்கவேணும்—எ-று. (எகூ)

ஐயநின்சரணஞ்சரணென்றவனஞ்சி
வையம்வந்துவணங்கிடவள்ளன்மகிழ்ந்தே
வெய்யவன்கணிரண்டொடுபோகெனவிட்ட
தெய்வவெம்படையுற்றுளதன்மைதெரிப்பாய்.

இ-ள். ஐய — ஐயனே ஒசுவாமி, நின் சரணம் — உன் திருவடிகளே, சரணென்று — ரக்ஷிக்கவல்லனவென்று, அவன் — அந்தச்சயந்தன், அஞ்சி — பயந்து, வையம் வந்து — பூமியில்வந்து, வணங்கிட — நமஸ்கரிக்க, வள்ளல் — பரமோதாரரான பெரு

மாள், மகிழ்ந்து - சந்தோஷித்து, வெய்யவன்கண் - அந்தக் கொடியவனுடைய, கண் இரண்டொடு - இரண்டுகண்களையும்பிடுங்கிக்கொள்ளுதலுடனே, போகென - அஸ் திரத்தைச்செல்லென்று, விட்ட - அனுசந்தித்த, தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள, வெம் - வெவ்விதான, படை - பிரமாஸ்திரம், உற்றுள தன்மை - அப்படியேசென்ற படியை, தெரிப்பாய் - பெருமாளுக்குத் தெரியச்சொல்லு—எ-று. (அ0)

எந்தைநின்சரணஞ்சரணென்றவிதனால்
முந்துநின்குறையும்பொறைதந்தனமுந்துன்
சந்தமொன்றுகொடித்திரள்கண்கடமக்கே
வந்தொர்நன்மணிநிற்கெனவைத்ததும்வைப்பாய்.

இ-ள். எந்தை - என்சுவாமி, நின்சரணம் - உன்பாதமே, சரண் என்ற - ரக்ஷகமென்ற, இதனால் - இந்தச்சொல்லாலே, முந்து - முன்னேநீசெய்த, நின்குறையும் - உன்குற்றத்தையும், பொறைதந்தனம் - பொறுத்தோம், முந்து - இக்காலத்துக்குமுன்னே, உன்சந்தம் - உன்வடிவை, ஒன்று - பொருந்தின, கொடித்திரள் - காக்கைக்கூட்டங்களுடைய, கண்களுக்கு - இரண்டுகண்களுக்கும், வந்து - வருவதாய், ஒர் நன்மணி - ஒருநல்லகண்மணியே, நிற்கென - நிலையாகக்கடவதென்று, வைத்ததும் - நிலையுறுத்தினதையும், வைப்பாய் - தெரியவைத்தி—எ-று. (அக)

வேகம்விண்டுசயந்தன்வணங்கிவிசும்பில்
போகவண்டர்கள்கண்டலர்கொண்டுபொழிந்தார்
நாகநம்பனிளங்கிளைநன்குணராத
பாகுதங்கியவென்றியினின்சொல்பணிப்பாய்.

இ-ள். வேகம்விண்டு - தான்வேகங்கொண்டலைந்ததைவிட்டு, சயந்தன் - இந்திரகுமாரன், வணங்கி - கும்பிட்டுக்கொண்டு, விசும்பில் - ஆகாயத்திலே, போக - செல்லச்செய்தே, அண்டர்கள்கண்டு - தேவர்கள்பார்த்து, அலர்கொண்டு - புஷ்பங்களைவாரி, பொழிந்தார் - சிந்தினார்கள், நாக நம்பன் - மலைகளிற் சிறந்தவனான பருபதராஜனுக்கு, இளங்கிளை - இளையபிள்ளைபோன்ற இளையபெருமாள், நன்கு - இச்செய்கைகளைநன்றாய், உணராத - தெரியாத, பாகுதங்கிய - ரஸம்பொருந்தின, வென்றியின் - காகஜயத்தை, நின்சொல் - உன்சொல்லாலே, பணிப்பாய் - சொல்லு எ-று. இந்தக்காகாசுரஜயம் இளையபெருமாளில்லாதகாலத்திலே நடந்ததென்க. பருபதராஜன்பிள்ளையென்றது மேருமலைபோல்வார் இளையபெருமாளென்க. (அஉ)

என்னொரின்னுயிர்மென்கிளிக்கியார்பெயரீகேன்
மன்னவென்றலுமாசறுகைகயன்மாதென்
அன்னைதன்பெயராகெனவன்பினோடன்னாட்
சொன்னமெய்ம்மொழிசொல்லுதிமெய்ம்மைதொடர்ந்தோய்.

இ-ள். என் ஒர் - எனது ஒப்பற்ற, இன் உயிர் - இனிய உயிர்போன்ற, மென்கிளிக்கு - மெல்லிய கிளிப்பிள்ளைக்கு, யார்பெயர் - யாருடையபெயரை, ஈகேன் - வைப்பேன், மன்ன - பெருமாளே, என்றலும் - என்று நான் கேட்டபோது, மாசு அறு - குற்றந்தீர்ந்த, கைகயன்மாது - கேகயராஜ குமாரியான, என் அன்னைதன் - எனது தாயினுடைய, பெயர் - பெயரே, ஆகென - வைக்கக்கடவதென்று, அன்பினொடு - பிரியத்துடனே, அந்நாள் - அப்போது, சொன்ன - சொல்லிய, மெய்மொழி - மெய்யானவார்த்தையை, சொல்லுதி - சொல்லு, மெய்ம்மை - மெய்மார்க்கத்தை, தொடர்ந்தோய் - அனுசரித்தவனே—எ-று. (அ௩)

என்றுரைத்தினிதித்தனைபேரடையாளம்
ஒன்றுணர்த்துவதில்லெனவெண்ணியுணர்ந்தாள்
தன்றிருத்துகிலிற்பொலிவுற்றதுதானே
வென்றதச்சுடர்மேலொடுகீழுறமெய்யால்.

இ-ள். என்று - என்பதாய், இனிது உரைத்து - நன்றாகச்சொல்லி, இத்தனை - இவ்வளவு, பேர் அடையாளம் - பெரிய அடையாளங்களில், ஒன்று - ஒன்றும் இதுபோல, உணர்த்துவது - மெய்க்காட்டுவது, இல்லென - இல்லையென்று, எண்ணி - ஆலோசித்து, உணர்ந்தாள் - தெரிந்தவளாய், தன் திருத்துகிலில் - தனது திருவுடையிலே, பொலிவுற்றது - அடங்கியுள்ளது, தானே - அதுதானே, மெய்யால் - தன்வடிவொளியாலே, மேலொடு - மேலுலகத்துடனே, கீழ்உற - கீழுலகமும் தெரிய, அச்சுடர் - அந்தச் சூரியன் முதலான தேஜசுக்களை, வென்றது - ஜயங்கொண்டிருப்பது—எ-று. (௮௪)

வாங்கினாடன்மலர்க்கையினன்னதுமுன்னா
ஏங்கினாளவ்வநுமனுமென்கொலிதென்னா
வீங்கினான்வியந்தானுலகேழும்விழுங்கித்
தூங்குகாரிருண்முற்றுமிரிந்ததுசுற்றி.

இ-ள். தன்மலர் - தனதுமலர்போன்ற, கையின் - கையிலே, வாங்கினாள் - கொண்டாள், அன்னது - அதை, முன்னா - நினைத்து, ஏங்கினாள் - வியசனப்பட்டாள், அவ் அநுமனும் - அந்த அநுமாருங்கண்டு, இது - இப்பொருள், என்கொலென்னா - யாதோவென்று, வீங்கினான் - உடம்பு பூரித்தவராய், வியந்தான் - அதிசயித்தார், உலகேழும் - ஏழுலகங்களையும், விழுங்கி - கபளீகரித்து, தூங்கு - தங்குகின்ற, கார் - கறுத்த, இருள்முற்றும் - இருள்முழுதும், சுற்றி - சூழ்ந்து ஒருசேர, இரிந்தது - ஓடிப்போயிற்று—எ-று. (௮௫)

மஞ்சலங்கொளியோனுமிம்மாநகர்வந்தான்
அஞ்சலன்னெனவெங்கணரக்கரயிர்த்தார்
சஞ்சலம்புரிசக்கரவாகமுடன்றாழ்
கஞ்சமும்மலர்வுற்றனகாந்தினகாந்தம்.

இ-ள். அஞ்சலன் - பயப்படாதவனாய், மஞ்சு - மேகமண்டலத்துக்குமேலே, அலங்கு - விளங்குகின்ற, ஒளியோனும் - சூரியனும், இம்மாநகர் - இந்தப் பெரிய ஊருக்குள்ளே, வந்தான் என - வருவதானானென்று, வெங்கண் - கொடுமைசெய்கிற, அரக்கர் - ராக்ஷதர்கள், அயிர்த்தார் - சந்தேகித்தார்கள், சஞ்சலம்புரி - துன்பங்கொண்டலைகிற, சக்கரவாகமுடன் - சக்கரவாகப் பட்சிகளுடனே, தாழ் - அந்த நீரிலேதங்குகிற, கஞ்சமும் - தாமரைகளும், மலர்வுற்றன - முகமலர்ச்சியாயின, காந்தம் - சூரியக்காந்தக்கற்கள், காந்தின - கொதிப்பதாயின—எ-று. இராத்திரிகாலத்திலே இரைக்காக அலைதலைவிட்டு - பகற்காலமாயிற்றென்று நீரிலேமுழுகிப்புணர்தற்கு முகமலர்ச்சியாகச்செய்தது சூடாமணி. (௮௬)

கூந்தன்மென்மழைகொண்முகின்மேலெழுகோளின்
வேந்ததன்னதுமெல்லியறன்னெழின்மேனி
சேந்ததந்தமில்சேவகன்சேவடிபோலக்
காந்துகின்றதுகாட்டினண்மாருதிகண்டான்.

இ-ள். மென்கூந்தல் – மெல்லிதான அளகபாரமென்கிற, மழைகொள் - குளிர்ச்சிகொண்ட, முகில்மேல் – மேகத்தின்மேலே, எழு - தோன்றுகிற, கோளின் வேந்து – கிரகங்களிற்சிறந்த சூரியன்போல்வது, அது – அந்தச் சூடாமணி, அன்னது – அப்படிப்பட்ட சூடாமணியானது, மெல்லியல்தன் - மிருதுவே சுவபாவமான சீதாபிராட்டியினுடைய, எழில் - அழகிதான, மேனி – திருமேனிபோல், சேந்தது - சிவந்திருப்பது, அந்தம் இல் – முடிவில்லாத, சேவகன் – வீரத்தன்மை கொண்ட பெருமாளுடைய, சேவடிபோல – சிவந்த திருவடிகள்போல், காந்துகின்றது – விளங்குகின்றதை, காட்டினள் – தெரியக்காண்பித்தாள், மாருதி – அனுமாரானவர், கண்டான் – பார்த்தார்—எ-று. (அஎ)

சூடையின்மணிகண்மணியொப்பதுதொன்னுள்
ஆடையின்கணிருந்ததுபேரடையாளம்
நாடிவந்தெனதின்னுயிர்நல்கியநம்பா
கோடியென்றுகொடுத்தனண்மெய்ப்புகழ்கொண்டாள்.

இ-ள். சூடையின்மணி – இது நான் தலைமேல் முடிக்கிற சூடாமணி, கண்மணி ஒப்பது – எனக்குக் கண்மணிபோல்வது, தொல்நாள் - முன்சிறையிலகப்பட்ட நாள்முதல், ஆடையின்கண் - என்வஸ்திரத்திலே, இருந்தது-முடிந்திருக்கலானது, பேர் அடையாளம் - இதுவேபெரிதான அடையாளமாம், நாடிவந்து – என்னைத் தேடிவந்துகண்டு, எனது இன் உயிர் - எனதினிய உயிரை, நல்கிய – கொடுத்த, நம்பா – புருஷசிரேஷ்டனே, கோடியென்று - கொள்ளென்று, கொடுத்தனள் – கொடுத்தாள், மெய்ப்புகழ் - மெய்யானகற்பென்னும் புகழையே, கொண்டாள் - பரிபாலித்தவள்—எ-று. சூடாமணியென்பது நடுவே ரத்நம்பதித்த சடைப்பில்லை. (அஅ)

தொழுதுவாங்கினன்சுற்றியதூசினன்முற்றப்
பழுதுறுவகைபந்தனைசெய்தனன்வந்தித்
தழுதுமும்மைவலங்கொடிறைஞ்சினனன்போ
டெழுதுபாவையுமேத்தினளேகினனிப்பால்.

இ-ள். தொழுது – கும்பிட்டு, வாங்கினன் – வாங்கி அதை, சுற்றிய – முடிந்த, சீரையன் – உடையையுடையவராய், முற்ற தாம் – கொண்டுபோய்க் கொடுக்குமளவும், பழுது – அதற்கு யாதொருதோஷமும், உறுவகை – வாராதபடி, பந்தனை செய்தனன் - பத்திரப்படுத்தினர், வந்தித்து - பிராட்டியைவணங்கி, அழுது – தனிமைகருதித்துக்கித்து, மும்மை – மூன்றுதரம், வலங்கொண்டு - வலம்வந்து, இறைஞ்சினன் - வணங்கினர், அன்போடு – பிரியத்துடனே, எழுது – எழுதின, பாவையும் – சித்திரத்தை ஒப்பான பிராட்டியும், ஏத்தினள் – ஆசீர்வதித்தாள், ஏகினன் - சென்றார், இப்பால் – பின்பு—எ-று. (அகு)

சூடாமணிப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - சு - க்கு திருவிருத்தம் - சுகூசு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஏழாவது,

பொழிலிருத்தபடலம்.

அசோக வனத்தை அழித்தது.

நெறிக்கொடுவடக்குறநினைப்பினினிமிர்ந்தான்
பொறிக்குலமலர்ப்பொழிலிடைக்கடிதுபோவான்
சிறுத்தொழின்முடித்தகறநீதெனவெறிந்தான்
மறித்துமொர்செயற்குரியகாரியமதித்தான்.

இ-ள். நினைப்பினில் – மனத்திலே, வடக்குற – வடக்கு முகமாக, நெறிக்கொடு – பிரயாணமாய், நிமிர்ந்தான் – எழுந்தவராய், பொறி-பிராட்டியிருக்கிற, குலமலர் – விசேஷபுஷ்பங்களையுடைய, பொழிலிடை – அந்த அசோக வனத்தினின்றும், கடிதுபோவான் – விரைந்துசெல்லுமவரான திருவடி, சிறுதொழில்-பிராட்டியிருக்குமிடங்கண்டு செல்லுதலோ மிகவும் அல்பகாரியம், முடித்து – அதைமாத்திர முடிவுசெய்து, அகல்தல் – போகிறது, நீது – ஆண்மைக்கு மிகவுங்குறைவு, எனல்-என்பதாக, தெரிந்தான் – யோசித்தவராய், மறித்து ஓர்-பின்னும்ஒரு, செயற்குரிய-செய்யத்தக்க, காரியம் – செய்கையை, மதித்தான் – யோசித்தார்—எ-று. சிறுத்தொழில்விரித்தல் விகாரம். (க)

ஈனமுறுபற்றலரையெற்றியெயின்மூதூர்
மீனநிலயத்திலுகவீசிவிழிமானை
மானவன்மலர்க்கழலின்வைத்துமிலெனென்றால்
ஆனபொழுதெப்பரிசினானடியனாவேன்.

இ-ள். ஈனம் உறு – இழிவால்மிகுந்த, பற்றலரை-இந்தப் பகைவர்களையெல்லாம், எற்றி – அடித்துக்கொன்று, எயில் – மதிலாற் சூழப்பட்ட, மூதூர் – இந்தப்பழையவூரை, மீனநிலயத்தில் – மீன்களுக்கிருப்பிடமான இந்தக்கடலிலே, உக-கவிழ, வீசி – கொட்டிவிட்டு, விழிமானை – மான்போலுங் கண்களுள்ளபிராட்டியை, மானவன் – புருஷசிரேஷ்டருடைய, மலர்க்கழலில் – மலர்போலுந் திருவடிகள்முன்னே, வைத்தும் – கொண்டுபோய்வைப்பதையும், இலென் – செய்யாதிருக்கிறவன், என்றால் – நானேயென்று சொல்லலானால், ஆனபொழுது – அப்படிச்சொல்லலான போது, எப்பரிசின் – பின்னை எந்தவகையினாலே, நான் அடியனாவேன் – நான் அடிமையாகப்பெறுவேன்—எ-று. அடிமையென்னத்தக்கிலேனென்கிறார். (உ)

வஞ்சனையரக்கனைநெருக்கிநெடுவாலால்
அஞ்சினொடுமஞ்சுதலைதோளுறவசைத்தே
வெஞ்சிறையில்வைத்துமிலென்வென்றுமிலெனென்றால்
தஞ்சமொருவர்க்கொருவரென்றறகுமன்றே.

இ-ள். வஞ்சனை – திருடிக் கொண்டுவந்த, அரக்கனை – இந்த ராவணராக்ஷதனை, நெருக்கி – இருபதுகைகளும் ஒருசேரப்பண்ணி, நெடுவாலால் – எனதுநீண்டவாலாலே, அஞ்சினொடும் – ஓரஞ்சுடனே, அஞ்சு – பின்னுமோரஞ்சுகூடின, தலை-

தலைகளையும், தோளுற - இருபது தோள்களோடுகூட, அசைத்து-கட்டிக்கொண்டு போய், வெஞ்சிறையில் - கொடியசிறைக்கூடத்திலே, வைத்தும் - வைப்பதையும், இலென் - செய்யாதிருக்கிறேன், வென்றும் - ஜெயங்கொள்வதையும், இலென்-செய்யாதிருக்கிறேன், என்றால் - என்றுசொல்லலானால், ஒருவர்க்கு - ஒருவருக்கு,ஒருவர் - மற்றொருவர், தஞ்சமென்றல் - ஆதரவாகவேணுமென்பது, தகும் அன்றோ-தக்கதாமல்லவோ, அத்தகவிலேன் - நான் என்பது குறிப்பு—எ-று. (ஙு)

கண்டநிருதக்கடல்கலக்கினன்வலத்தில்
திண்டிறலரக்கனுமிருக்கவொர்திறத்தின்
மண்டவுதரத்தவண்மலர்க்குழல்பிடித்துக்
கொண்டுசிறைவைத்திடுதலிற்குறைவதுண்டோ.

இ-ள். கண்ட - இப்போது நான்பார்த்த, நிருதக்கடல்-ராக்ஷதக்கடலை, கலக்கினன் வலத்தில் - என்வலியாலேகலக்கி, திண்திறல் - மிக்க வலியையுடைய, அரக்கனும் - இந்த ராவணனும், இருக்க - பார்த்துக்கொண் டிருக்கச்செய்தே, ஓர்திறத்தின் - என் ஒருசக்தியினாலேதானே, மண்டவுதரத்தவள் - மண்டோதரியை,மலர்க்குழல் - அவள் பூங்குழலை, பிடித்துக்கொண்டு - பிடித் திழுத்துக்கொண்டுபோய், சிறைவைத்திடுதலில் - கிட்கிந்தாபுரியிலே சிறையில் வைத்தால், குறைவது - அதனாலே காரியக்குறைவாவது, உண்டோ - உளதாமோ, உளதாகாது—எ-று. மண்டோதரி இராவணன்மனைவி. (சு)

மீட்டுமினியெண்ணும்வினைவேறுமுளதன்றால்
ஓட்டியிவ்வரக்கரையுலைத்துரிமையெல்லாம்
காட்டுமிதுவேகருமமன்னவர்கடும்போர்
மூட்டும்வகையாவதுகொலென்றுமுயல்கின்றான்.

இ-ள். மீட்டும் - மறுபடியும், இனி - இன்னமும், எண்ணும்வினை - ஆலோசிக்குங்காரியம், வேறும் - இவைகளைவிடவேறே, உளது - உள்ளதானால், அன்று-அதுசெய்யத்தக்கதன்றாம், இவ்அரக்கரை - இந்தராக்ஷதர்களையெல்லாம், ஓட்டியுலைத்து - ஊரைவிட்டுத் துரத்திப்பின்பு, உரிமையெல்லாம் - நான் அடிமையென்னும் பாத்தியதைமுழுதும், காட்டும் இதுவே - தெரியச்செய்கிற இதே, கருமம் - செய்யத்தக்ககாரியம் ஆனால், அன்னவர் - அந்தராக்ஷதர்களுடனே, கடும்போர்-கடிதான சண்டை, மூட்டும்வகை - செய்யும்விதம், யாவது என்று - எப்படியென்று, முயல்கின்றான் - அதற்குத்தக யோசிக்கிறார், கொல் - அசை—எ-று. (எ)

இப்பொழிலினைக்கடிதிறுக்குவெனிறுத்தால்
அப்பெரியபூசல்செவிசார்தலுமரக்கர்
வெப்புறுசினத்தரெதிர்மேல்வருவர்வந்தால்
துப்புறமுருக்கியுயிருண்பலிதுசூதால்.

இ-ள். இப்பொழிலினை - இந்தச் சோலையை, கடிது - விரைவிலே, இறுக்குவென் - அழிக்கிறேன், இறுத்தால் - அப்படி அழித்தால், அ - அந்த, பெரியபூசல்-பெருமுழக்கம், செவிசார்தலும்-செவியில் விழுந்தவுடனே, அரக்கர் - ராக்ஷதர்கள், வெப்பு உறு - வெம்மைமிகுந்த, சினத்தர் - கோபமுள்ளவர்களாய், எதிர் - நமக்கு முன்னே, மேல்வருவர் - இனிவருவார்கள், வந்தால் - அப்படிவரலானால், துப்புஉற-எனது பலமிகுதியாக, முருக்கி - எல்லாரையுங்கொன்று, உயிர் - அவருயிர்களையெல்லாம், உண்பல் - பக்ஷிப்பேன், இதுசூது - இதுவே உபாயம், ஆல் - அசை—எ-று.

வந்தவர்கள்வந்தவர்கண்மீள்கிலர்மடிந்தால்
வெந்திறலரக்கனும்விலக்கருவலத்தால்
முந்துமெனினன்னவன்முடித்தலைமுசித்தென்
சிந்தையுறுகோபமுமவித்தினிதுசெல்வேன்.

இ-ள். வந்தவர்கள் வந்தவர்கள் - மேன்மேலும் வந்தவர்களெல்லாம், மீள்கிலர் - திரும்பாதவர்களாய், மடிந்தால் - செத்தால் பின்பு, விலக்கஅரு - யாராலும் என்னைத்தடுக்க அரிதாயிருக்கிற, வலத்தால் - பலத்தைப்பற்றி, வெம்திறல் - வெவ்விதானபலத்தையுடைய, அரக்கனும் - அந்த ராவணனும், முந்துமெனில் - வருவானானல், அன்னவன் - அந்தராவணனுடைய, முடித்தலை - கிரீடமணிந்த தலைகளை, முசித்து - திருகி, என்சிந்தையுறு - என்மனத்திலே உள்ளதான, கோபமும்-கோபத்தையும், அவித்து - தணித்துக்கொண்டு, இனிது - சந்தோஷமாக, செல்வேன்-போகக்கடவேன்—எ-று. (எ)

என்றுநினையாவிரவிசந்திரனியங்கும்
குன்றமிருதோளனையதன்னுருவுகொண்டான்
அன்றுலகெயிற்றிடைகொளேனமெனலானுன்
துன்றுகடிகாவினையடிக்கொடுதுகைத்தான்.

இ-ள். என்றுநினையா - என்றுநினைத்து, இரவிசந்திரன்-சூரியசந்திரர்கள், இயங்கும் - சஞ்சரிப்பதான, குன்றம் - மேருமலையே, இருதோள் - இரண்டுதோள்களும், அனைய - ஒப்பதான, தன்உருவு - தனதுபெரியவடிவை, கொண்டான்-கொண்டவராய், அன்று - இரணியாக்ஷசனைவதைத்த அப்போது, உலகு - உலகை, எயிற்றிடை - தனதொருகொம்பிலே, கொள் - கொண்ட, ஏனம் - மஹாவராகமே,எனலானுன் - நிகரென்னலான திருவடி, துன்றுகடி - நெருங்கினவாசமுள்ள, காவினை-அசோகவனத்தை, அடிக்கொடு - தமதுகால்களாலே, துகைத்தான் - மிதித்துழக்கினர்—எ-று. (அ)

முடிந்தனபிளந்தனமுரிந்தனநெரிந்த
மடிந்தனபொடிந்தனமறிந்தனமுறிந்த
இடிந்தனதகர்ந்தனவெரிந்தனகரிந்த
ஒடிந்தனவொசிந்தனவுதிர்ந்தனபிதிர்ந்த.

இ-ள். முடிந்தன - சிலமரங்கள் வேரோடு முடிதலாயின, பிளந்தன - சில பிளவுகளாயின, முரிந்தன - சிலமுறிதலாயின, நெரிந்த - சிலநெரிதலாயின, மடிந்தன - சில அடியோடுதலைசாய்ந்தன, பொடிந்தன - சிலதூள்தூளாயின, மறிந்தன-சிலமடங்கினவாய், முறிந்த - முறிதலாயின, இடிந்தன - சிலகிளைகள் முதலியன வெல்லாஞ் சிந்துதலாயின, தகர்ந்தன - சிலதுண்டுதுண்டாயின, எரிந்தன - சிலநெருப்புத்தோன்றி எரிதலாயின, கரிந்த - சில அதனலே கரிதலாயின, ஒடிந்தன-சில ஒடிதலாயின, ஒசிந்தன - சில ஒடிந்துதுவளாளாயின, உதிர்ந்தன - சிலபூகாய்முதலியன உதிர்தலாயின, பிதிர்ந்த - இப்படி ஒன்றன்மேலொன்ருய்ச் சிலபிதிர்தலாயின—எ-று. (கூ)

வேரொடுமறிந்தசிலவெந்தசிலவிண்ணில்
காரொடுமறிந்தசிலகாலினெடுவேலைத்

தூரொடுமறிந்தசிலதும்பியொடுவானோர்
ஊரொடுமறிந்தசிலவுக்கசிலநெக்க.

இ-ள். வேரொடுமெறிந்த — வேரோடுமெடங்கலாயின, சில — சிலமரங்கள், வெந்தசில — சிலமரங்கள் வேவலாயின, விண்ணில் — ஆகாயத்திலேபோய், காரொடு-மேகங்களோடுகூடி, மறிந்தசில — திரும்பலாயின சில, காலினொடு — காற்றோடுகூடி, வேலை — கடற்கரையிலுள்ள, தூரொடு — மரவேர்களுடனே, மறிந்தசில — மடங்கிவிழுந்தனசில, தும்பியொடு — வண்டுகளுடனேபோய், வானோர்ஊரொடு — தேவருலகத்திலேகூடி, மறிந்தசில — மீண்டனசில, உக்கசில — சிலஉதிர்தலாயின, நெக்க-இப்படி அசோகவனங்கடிகுலைந்தன, காலினொடு — உப்பங்கழிகளுடனேகூடி, வேலை-கடலுக்கு, தூரொடுமெறிந்த — வேரொடு செல்லலாயின எனவுமாம்—எ-று. (௧0)

சோலைமுதன்மற்றவைசுழற்றியதிசைப்போர்
ஆலைநுகரக்குளகுமானவடிபற்றா
மேனிமிரவிட்டனவிசும்பின்வழிமீப்போய்
வானவர்கணந்தனவனத்தையுமடித்த.

இ-ள். சோலைமுதல் — மேகமுதலான, மற்றவை — ஆகாயத்துள்ளவைகளை, சுழற்றிய — சிலமரங்கள் சுழற்றலாயின, திசை — திக்குகளிலேயுள்ள, போர் — பலமுள்ள, ஆனை — யானைகள், நுகர — தின்ன, குளகுமான — இலைகளுமாயின, அடிபற்று — அடியைப்பிடித்து, மேல்நிமிர — மேலேபோக, விட்டன — எறிந்தமரங்கள், விசும்பின்வழி — ஆகாயமார்க்கமாய், மீப்போய் — மேலேசென்று, வானவர்கள் — தேவர்களுடைய, நந்தவனத்தையும் — சோலையையும், மடித்த-சில அழிக்கலாயின-எ-று.

அலைந்தனகடற்றிரையரக்கரகன்மாடம்
குலைந்துகவிடிந்தனகுலக்கிரிகளோடு
மலைந்துபொடியுற்றனமயங்கிநெடுவானத்
துலைந்துவிழுமீனினொடுவெண்மலருதிர்ந்த.

இ-ள். கடல்திரை — கடலினலைகளெல்லாம், அலைந்தன — மரங்களலைதலாயின, அரக்கர் — அந்தராக்ஷதர்களுடைய, அகல்மாடம் — அகன்றவீடுகள், குலைந்து உக — கெட்டழிய, இடிந்தன — மரங்களாலிடிதலாயின, குலக்கிரிகளோடு — குலாசலங்களுடனே, மலைந்து — மோதிவிழுந்து, பொடியுற்றன — பொடிப்பொடியாயின, மயங்கி — கலந்து, நெடுவானத்து — நீண்ட ஆகாயத்தினின்றும், உலைந்துவிழு — அசங்கிவிழுகிற, மீனினொடு — நக்ஷத்திரங்களுடனே, வெண்மலர் — வெள்ளியபுட்பங்கள், உதிர்ந்த — உதிர்தலாயின—எ-று. (௧உ)

முடக்குநெடுவேரொடுமுகந்துலகமுற்றும்
கடக்கும்வகைவீசினகளித்ததிசையானை
மடப்பிடியினுக்குதவமையினிமிர்கைவைத்
திடுக்கியனவொத்தனவெயிற்றினிடைஞால்வ.

இ-ள். முடக்கு — கீழேவளைந்து பதிந்திருக்கிற, நெடுவேரொடு — நீண்டவேருடனே, முகந்து — பிடுங்கி, உலகமுற்றும் — உலகமெல்லாம், கடக்கும்வகை — கடந்துபோய்விழும்படி, வீசின — எறிந்தமரங்கள், களித்த — மதமயக்கங்கொண்ட, திசையானை — திக்கியானைகள், மடப்பிடியினுக்கு — தமது இளையபெண்யானைக்கு, உதவ-

கொடுக்க, மையில் – மேகமண்டலத்தளவும், நிமிர் – நீளுகின்ற, கைவைத்து – துதிக்கையினடியிலேகொண்டு, இடுக்கியன – கொம்பொடு நெருங்கக்கொண்டிருக்கின்றவற்றை, ஒத்தன – ஒப்பாயின, எயிற்றினிடை – அதன்கொம்புகளிலே சொருகுதலாகி, ஞால்வ – தொங்குகிறமரங்கள்—எ-று. (கங)

விஞ்சையுலகத்தினுமியக்கர்மலைமேனும்
துஞ்சுதலில்வானவர்துறக்கநகரத்தும்
பஞ்சியடிவஞ்சியர்கண்மொய்த்தனர்பறித்தார்
நஞ்சமனையானுடையசோலையினறும்பூ.

இ-ள். விஞ்சையுலகத்தினும் – விஞ்சையருலகத்திலும், இயக்கர்மலைமேலும் - யக்ஷர்களுடைய மலைகளின்மேலும், துஞ்சுதல்இல் – மடிதலில்லாத, வானவர் – தேவர்களுடைய, துறக்கநகரத்தும் – சுவர்க்கலோகத்திலும்உள்ள, பஞ்சி – செம்பஞ்சுக்குழம்புபூசின, அடி – கால்களுள்ள, வஞ்சியர்கள் – பெண்கள், மொய்த்தனர் – நெருங்கிவந்து, நஞ்சம் அனையானுடைய - விஷம்போன்ற ராவணனுடைய, சோலையில் – பூஞ்சோலையிலுள்ள, நறும்பூ – நல்லமலர்களை, பறித்தார் - கொய்தார்கள்எ-று. அவ்வூர்களெல்லாமரங்கள் போய்விழுதலாலே நறும்பூப்பறித்தாரென்க. (கச)

பொன்றிணிமணிப்பருமரன்றிசைகள்போவ
மின்றிரிவவொத்தனவெயிற்கதிருமொத்த
ஒன்றினொடுமொன்றிடைபுடைத்துதிரவூழின்
தன்றிரளொடுக்கிவிழுதாரகையுமொத்த.

இ-ள். பொன் – பொன்னாலும், திணி – கெட்டியான, மணி – ரத்நத்தாலும் ஆகிய, பருமரன் – பருத்தமரங்கள், திசைகள்போவ – திக்குகளிலேபோய் விழும்போது, மின் திரிவ – மின்னல் உலாவுகிறதையும், ஒத்தன – ஒப்பாயின, வெயிற்கதிரும் – சூரியப்பிரகாசத்தையும், ஒத்த – ஒப்பாயின, ஒன்றினொடும் – ஒருமரத்துடனே, ஒன்று – மற்றொருமரம், இடைபுடைத்து – எவ்விடங்களிலுமோதுதலாய், உதிர – சிந்துதலாக அவைகள், தன் திரள் – தமது திரட்சியெல்லாம், ஒடுக்கி – ஒடுங்கக்கொண்டு, ஊழின் – முறைமுறையே, விழு – உதிருகிற, தாரகையும் – நக்ஷத்திரங்களையும், ஒத்த – ஒப்பாயின—எ-று. பொன்மரம் – மின்னலையும், மணிமரம் – சூரியப்பிரகாசத்தையும் ஒத்தனவென்பது நிரனிறை சிதறிவிழுகிறதுண்டுகள் நக்ஷத்திரங்கள்போன்றனவென்க தன் சாரியை. (கரு)

புள்ளினொடுவண்டுமிஞிறுங்கடிகொள்பூவும்
கள்ளுமுகையுந்தளிர்களோடினியகாயும்
வெள்ளநெடுவேலையிடைமீனினம்விழுங்கித்
துள்ளினமரன்படநெரிந்தனதுடித்த.

இ-ள். புள்ளினொடு – பக்ஷிகளையும், வண்டும் – கருவண்டுகளையும், மிஞிறும்-பொன்வண்டுகளையும், கடிகொள் – மணங்கொண்ட, பூவும் – மலர்களையும், கள்ளும்-தேனையும், முகையும் – அரும்புகளையும், தளிர்களோடு – தளிர்களுடனே, இனிய-நன்றான, காயும் – பழங்களையும், வெள்ளம்-மஹாப்பிரவாகமான, நெடுவேலையிடை-நெடுங்கடலிலேயுள்ள, மீனினம் – மீன் கூட்டங்கள், விழுங்கி – மரங்கள்போய் விழுகிறதினாலே உண்டு, துள்ளின – முன் துள்ளுதலாயின, மரன்பட – பின்னுமரங்கள் போய்விழுவதனாலே, நெரிந்தன – நசுங்கினவாகி, துடித்த-துடிப்பனவாயின-எ-று.

தூவியமலர்த்தொகைசுமந்துதிசைதோறும்
பூவின்மணநாறுவபுலால்கமழ்கிலாத
தேவியர்களோடுமுயர்தேவரினிதாடும்
ஆவியெனலாயதிரையார்கலிகளம்மா.

இ-ள். தூவிய - எங்குஞ்சிந்தின, மலர்த்தொகை - புஷ்பக்குவியல்களை, சுமந்து - சுமந்துகொண்டு, திசைதோறும் - எந்த இடங்களும், பூவின்மணம் - புஷ்பவாசமே, நாறுவ - பரிமளிக்கின்றன, புலால் - மீனினதுநாற்றம், கமழ்கிலாத-நாறாதிருக்கின்றன, தேவியர்களோடும் - தங்கள்மனைவிகளுடனே, உயர் - உயர்ந்த, தேவர் - தேவர்கள், இனிது - சந்தோஷமாக, ஆடும் - முழுகுவதான, ஆவியெனலாய-குளமென்றுசொல்லலாயின, திரை - அலைகளையுடைய, ஆர்கலிகள்-கடல்கள்-எ-று. அம்மா அசை ஆர்கலிகள்முழுதும் மீனுற்றம்போய் பூமணநாறுகின்றனவென்க. ()

இடந்தமணிவேதியுமிறுத்தகடிகாவும்
தொடர்ந்தனதுரந்தனபடிந்துநெறிதூரக்
கடந்துசெலவென்பதுகடந்தவிருகாலால்
நடந்துசெலலாகுமெனலாகியதுநன்னீர்.

இ-ள். இடந்த - அனுமார்பெயர்த்தெறிந்த, மணிவேதியும்-அழகிய திண்ணைகளும், இறுத்த - அழித்த, கடிகாவும் - காவலுள்ள சோலைமரங்களும், தொடர்ந்தன - ஒன்றையொன்று தொடர்ந்துபோனவைகளாய், துரந்தன - பின்னும் எறியுமவைகளும்போய், படிந்து - கடலெல்லாம் அமிழ்ந்து, நெறி - அனுமார்தாவிவந்தவழி, தூர - மூடப்பட்டதனுலேமுன்னே, கடந்துசெலவு - தாவிப்போகத்தக்கது, என்பது - என்றுசொல்லலாகியதான, நன்னீர் - அந்த நன்மணங்கொண்டகடல் இப்போது, கடந்த - தாண்டிவந்த, இருகாலால் - இரண்டுகால்களாலும், நடந்துசெலலாகுமெனலாகியது - நடந்துபோகும்படிமேடாயினது—எ-று. (கஅ)

வேனில்விளையாடுசுடரோனினொளிவிம்மும்
வானினிடைவீசியவரும்பணைமரத்தால்
தானவர்கண்மாளிகைதகர்ந்துபொடியாய
வானவிடியாலொடியுமால்வரைகண்மான.

இ-ள். வேனில் - கோடைகாலத்திலே, விளையாடு - சஞ்சரிப்பதான, சுடரோனில் - சூரியன்போல், ஒளிவிம்மும் - பிரகாசமிகுகின்ற, வானினிடை - ஆகாயத்திலே, வீசியவரும் - எறிதலாலேவருகிற, பணைமரத்தால் - கிளைகளுள்ள மரங்களாலே, தானவர்கள் - அசுரர்களுடைய, மாளிகை - வீடுகள், தகர்ந்து - உடைபட்டு, பொடியாய - தூள்களாயின, வானம் - ஆகாயத்திலிருந்துவிழுகிற, இடியால் - இடியேற்றினலே, ஒடியும் - உடைபடுகிற, மால்வரைகள் - பெரியமலைகளை, மான-ஒப்பாகப்பொடியாயின—எ-று. ஒளிவிம்முமரமெனக்கூட்டுக. (கக)

எண்ணிறருகோடிகளெறிந்தனசெறிந்தே
தண்ணமழைபோவிடைதழைந்ததுசலத்தால்
அண்ணலநுமானடவிராவணனதந்நாள்
விண்ணுமொருசோலையுளதாமெனவிதித்தான்.

இ-ள். எண்ணில் - ஆலோசிக்குமிடத்தில், எறிந்த - அனுமார் உயர எறிந்த, தருகோடிகள் - கோடிமரங்களும், செறிந்து - நெருங்கி, தண்ணம் - நீரைப்பெய்கிற,

மழைபோல் – மேகங்களைப்போல், இடை – ஆகாயத்திலே, தழைந்தது – மிகுதலாயி னது எப்படியென்னில், சலத்தால் – கோபத்துடனே, அண்ணல் – பெருமைகொண்ட, அநுமான் – சிறியதிருவடியானவர், அடல் – வெற்றிகொண்ட, இராவணனது– இராவணனதாக, அந்நாள் – அப்போது, விண்ணும் – ஆகாயத்திலும், ஒருசோலை உளது என – ஒரு பூந்தோட்டம் உண்டென்ன, விதித்தான் – நியமித்தார்போலாயிற்று—எ-று. தண் அம் – குளிர்ந்தநீர் ஆம் சாரியை. (௨0)

தேனுறைதுளிப்பநிறைபுட்பலசிலம்பப்
பூநிறைமணித்தருவிசும்பினிடையேபோய்
மேன்முறைநெருக்கவொளிவாளொடுவில்வீச
வானிடைநடாயநெடுமானமெனலான.

இ-ள். தேன் உறை – தேன் றுளிகள், துளிப்ப – சிந்தவும், நிறை – மரங்களிலேநிறைந்துள்ள, புள்பல – பலபக்ஷிகளும், சிலம்ப – சத்திக்க, பூ நிறை – புஷ்பங்கணிறைந்த, மணித்தரு – ரத்நமயமானமரங்களெல்லாம், விசும்பினிடையே – ஆகாசத்திலே, போய் – சென்று, மேல் – மேலே, முறை – வரிசைவரிசையாக, நெருக்க– நெருங்குதலாலே, ஒளிவாளொடு – வாளொளியுடனே, வில்லொளி – வில்லினொளியும், வீச – தருவனவாக, வானிடை – ஆகாயத்திலே, நடாய – செலுத்துகிற, நெடுமானம் – நெடிய விமானங்களே, எனலான – என்றுசொல்வதாய்விளங்கின—எ-று. ஒளியை வாளுக்கும் வில்லுக்குங் கூட்டுக வாள்போனீண்ட வொளிவிற்போல் வளைவானவொளி. (௨௧)

சாகநெடுமோப்பணைதழைத்தனதனிப்போர்
நாகமனையானெறியமேனிமிர்வநாளு
மாகநெடுவானிடையிழிந்துபுனல்வாரும்
மேகமெனலாயநெடுமாகடலின்வீழ்வ.

இ-ள். நெடுமோப்பணை – நீண்ட பெரியகிளைகளும், தழைத்தன – இலைகளுமிகுத்திருக்கின்றனவாகிய, சாகம் – தேக்கமரங்கள், தனி – ஒப்பில்லாத, போர்பலங்கொண்ட, நாகம் – ஒருமலையையானையை, அனையான் – ஒத்ததிருவடி, எறிய– பிடுங்கி எறிய, மேல் – அவைகள்மேலே, நிமிர்வ – உயர்ந்துசெல்லுவனவாய், மாகம்– மாகமென்கிற, நெடுவானிடை – நெடிய ஆகாயத்தினின்றும், இழிந்து – பின்புதாழ்ந்து, நெடுமா – நீண்டபெருமையையுடைய, கடலின்வீழ்வ – கடலில் விழுகின்றன எப்படியென்னில், புனல் – கடலினீரை, வாரும் – முகப்பனவான, மேகம் – மேகங்களே, எனலாய – என்றுசொல்லலாயின—எ-று. (௨௨)

வேறு.

ஊனமுற்றிடைமண்ணினுதித்தவர்
ஞானமுற்றுபுநண்ணினர்வீடெனத்
தானகற்பகத்தண்டலைவிண்டலம்
போனபுக்கனமுன்னுறைபொன்னகர்.

இ-ள். ஊனம் உற்று – ஏதேனுமொரு தோஷத்தைச்செய்து, இடை – மத்தியலோகமான, மண்ணின் – பூமியிலே, உதித்தவர் – பிறந்தவர்கள், ஞானம் – சுவரூபஞானம், முற்றுபு – நிறைதலாகி, வீடு – மோக்ஷலோகத்தை, நண்ணினரென– அடைந்தாரென்னும்படி, விண்டலம் – ஆகாயத்திலே, போன – திருவடியெறியச்

சென்ற, தானம் – எல்லாந்தருவனவான, கற்பகத் தண்டலை – கற்பக மரங்களெல்லாம், முன் – முன்னே, உறை – தாங்களிருந்த, பொன்னகர் – சுவர்க்கலோகத்திற்கே, புக்கன – போய்ச்சேர்ந்தன—எ-று. (உகூ)

மணிகொள்குட்டிமமட்டித்துமண்டபம்
துணிபடுத்தயல்வாவிகடூர்த்தொளிர்
திணிசுவர்த்தலஞ்சிந்திச்செயற்கரும்
பணிபடுத்துயர்குன்றம்படுத்தரோ.

இ-ள். மணிகொள் – ரத்நங்களென்றுகொள்ளத்தக்க, குட்டிமம் – கற்பதித்தவாசல்களையெல்லாம், மட்டித்து – தகர்த்து, மண்டபம் – மண்டபங்களையெல்லாம், துணிபடுத்து – துண்டுதுண்டுகளாகவுடைத்து, அயல் – பக்கங்களிலுள்ள, வாவிகள்-குளங்களையெல்லாம், தூர்த்து – மேடாக்கி, ஒளிர் – விளங்குகின்ற, திணி – கெட்டியான, சுவர்த்தலம் – சுவரான இடங்களையும், சிந்தி – இடித்து, செயற்கு – செய்கிறதற்கு, அரும் – அருமையான, பணி – வேலைப்பாடுகளையெல்லாம், படுத்து – கெடுத்து, உயர் – உயர்ந்த, குன்றம் – மலைகள்போல், படுத்து – அவைகளைக்குவித்து, அரோ – அசை—எ-று. உயர்குன்றம் படுத்து உயர்ந்தசெய்குன்றுகளையு மிடித்து என்னலாம். (உச)

வேங்கைசெற்றுமராமரம்வேர்பறித்
தோங்குகற்பகம்பூவொடொடித்துராய்ப்
பாங்கர்சண்பகப்பத்திபறித்தயல்
மாங்கனிப்பணைமட்டித்துமாற்றியே.

இ-ள். வேங்கை – வேங்கைமரங்களையும், செற்று – அழித்து, மராமரம் – கடப்பமரங்களையும், வேர்பறித்து – வேரோடுபிடுங்கி, ஓங்கு – உயர்ந்த, கற்பகம் – கற்பகவிருக்ஷங்களை, பூவோடு – புஷ்பங்களுடனே, ஒடித்து – முறித்து, உராய் – அவைகளை உரசிக்கொண்டு, பாங்கா – பக்கத்தேநிற்கிற, சண்பகப் பத்தி – சண்பகமரவரிசைகளையும், பறித்து – பிடுங்கியெறிந்து, அயல் – அவற்றினருகுள்ள, மாங்கனி – மாம்பழங்களையுடைய, பணை – மரக்கிளைகளையும், மட்டித்து – கெடுத்து, மாற்றி – அவைகளெல்லாம் நிலைமாறச்செய்து—எ-று. (உரு)

சந்தனங்கடகர்ந்தனதாள்பட
இந்தனங்களின்வெந்தெரிசிந்திட
முந்தனங்கவசந்தன்முகங்கெட
நந்தனங்கள்கலங்கிநடுங்கவே.

இ-ள். தாள்பட – திருவடி கால்கள் படுதலாலே, சந்தனங்கள் – சந்தனவிருக்ஷங்கள், தகர்ந்தன – ஒடிந்தனவாய், எரிசிந்திட – நெருப்புப் பொறிபறக்க அதனாலே, இந்தனங்களின் – அந்தமரங்களெல்லாம் விறகுகள்போல், வெந்து – வேகின்றனவாகி, முந்து – முற்காலத்திலே, அனங்கம் – சரீரமில்லாதவனான, வசந்தன் – மன்மதனுடைய, முகம்கெட – முகம்சோர்வாக, நந்தனங்கள் – அவனுக்குப் பாடிவீடான சோலைமுழுதும், கலங்கி – நிலைகெட்டு, நடுங்க – மரங்களெல்லாம் அசைதலாக-எ-று. உச-உரு-உசு ஆகிய இம்மூன்றுபாட்டும் உஎ-ம் பாட்டில் மடிந்தனவென்பதால் முடிபாயின: (உசு)

காமரங்களிவண்டுகலங்கிட
மாமரங்கண்மடிந்தனமண்ணொடு

தாமரங்கவரங்குதகர்ந்துகப்
பூமரங்களெரிந்துபொரிந்தவே.

இ-ள். காமரம் – இசைப்பாட்டுடனே, களி – மதுமயக்கங்கொண்ட, வண்டு-வண்டுகளெல்லாம், கலங்கிட – கலைந்தோட, மாமரங்கள் – பெரியமரங்களெல்லாம், மடிந்தன – இப்படிஅழிதலாயின, மண்ணொடு – நிலத்துடனேசேர, அரங்குதாம்-நாடகசாலைகளெல்லாம், அரங்க – படிதலாக, தகர்ந்து – மரங்கள்போய்விழுந்து இடிந்து, உக – சிந்துதலாக, பூமரங்கள் – புஷ்பங்களையுடைய விருக்ஷங்களும், எரிந்து-வெந்து, பொரிந்த – பொரிதலாயின, தாம் – உயரத்தாவுகிறளனவுமாம், ஏ – அசை எ-று. (உ௭)

குழையுங்கொம்புங்கொடியுங்குயிற்குலம்
விழையுந்தண்டளிர்ச்சூழலுமென்மலர்ப்
புழையும்வாசப்பொதும்பும்பொலன்கொடேன்
மழையும்வண்டுமயிலுமரிந்தவே.

இ-ள். குழையும் – இலைகளும், கொம்பும் – கிளைகளும், கொடியும் – கொடிகளும், குயிற்குலம் – குயிற்கூட்டங்கள், விழையும் – விரும்புவனவான, தண் – குளிர்ந்த, தளிர்ச்சூழலும் – தளிர்களுள்ள இடங்களும், மென் – மிருதுவான, மலர்ப்புழையும் – மலரின் றுவாரங்களும், வாசம் – மணமுள்ள, பொதும்பும் – மரச்செறிவுகளும், பொலன்கொள் – பொன்னிறத்தைக்கொண்ட, தேன்மழையும் – தேன்சிந்துதலும், வண்டும் – வண்டுகளும், மயிலும் – மயில்களும், மரிந்த – அழிதலாயின, ஏ – அசை எ-று. புழையாவது – மலரின துகாம்பு பொதிந்துள்ளஇடம். (உ௮)

பவளமாக்கொடிவீசினபன்மழை
துவளுமின்னெனச்சுற்றிடச்சூழ்வரை
திவளும்பொற்பணைமாமரஞ்சேர்ந்தன
கவளயானையினோடையிற்காந்தவே.

இ-ள். வீசின – திருவடிபிடுங்கியெறிந்த, பவளமாக்கொடிபல் – நீண்டபவளக்கொடிகள்பலவும், மழை – மேகமண்டலத்திலேபோய், துவளும் – மேகத்திலே நுடங்குகிற, மின்னென – மின்னல்போல், சுற்றிட-மேலே சுழலவும், சூழ்-கடலைச்சூழ்ந்த, வரை – மலைமேலே, திவளும் – அசைதலான, பொன் – பொன்மயமுள்ள, பணை – கிளைகளையுடைய, மாமரம் – பெரியமரங்கள்போய், சேர்ந்தன-விழுந்துகிடப்பன எப்படியென்னில், கவளம் – கவளந்தின்று பருத்த, யானையின் – யானையினது, ஓடையில் – முகபடாம்போல், காந்த – விளங்கவும்—எ-று. கவளம் – யானையுணவு, இப்பாட்டு-௩௦-பாட்டில் போயதென்பதால் முடியும். (உ௯)

பறவையார்த்தெழுமோசையும்பன்மரம்
இறலெடுத்தவிடிக்குரலோசையும்
அறவனார்த்தெழுமோசையுமண்டத்தின்
புறநிலத்தையுங்கைம்மிகப்போயதே.

இ-ள். பறவை – பக்ஷிகள், ஆர்த்துஎழும் – சத்தித்துக் கிளம்புகிற, ஓசையும்-சத்தமும், பன்மரம் – பலமரங்களும், இறல் – ஒடிதலாலே, எடுத்த – உண்டான, இடிக்குரல் – இடிக்குரல்போன்ற, ஓசையும் – சத்தமும், அறவன் – தருமரூபமான திருவடி, ஆர்த்து – சத்தித்தலாலே, எழும் – உண்டாகுகிற, ஓசையும் – சத்தமும்,

அண்டத்தின் - இந்த அண்டத்துக்கு, புறம் - வெளியிலுள்ள, நிலத்தினும் - இடங்களிலும், சைமிக - படைவகுப்புகள்கூட, போயது - சென்றொலித்தன—எ-று. திருவடி இங்குப்படைகூடிப் போர்க்கு வரச்செய்ய அண்டத்தின் புறநிலத்தினும் படைகூடுவதாயின இவ்வொலிகளாலே யென்க இறஎடுத்த என்றுபாடமானால் ஒடியப்பிடுங்கின என்க. (௩0)

பாடலம்படர்கோங்கொடும்பன்னிசைப்
பாடலம்பனிவண்டொடுபஃறிரைப்
பாடலம்புயர்வேலையிற்பாய்ந்தன
பாடலம்பெறப்புள்ளினம்பாறவே.

இ-ள். பாடலம் - பாதிரிமரங்களெல்லாம், படர் - ஆகாயத்தளவுஞ் சென்றிருக்கிற, கோங்கொடும் - கோங்கமரங்களுடனே, பன் - பாடுகின்ற, இசைப்பாடல்- இசைப்பாடலும், அம் - அழகும், பனி - குளிர்ச்சியுமுள்ள, வண்டொடும் - வண்டுகளுங்கூட, பல்திரை - அளவற்ற அலைகளாலே, பாடு - பக்கமெல்லாம், அலம்பு-சத்தித்தலையுடைய, உயர் - உயர்ந்த, வேலையில் - கடலிலேபோய், பாடலம் - சிவந்த நிறத்தை, பெற - கடல்நீர்பெறவும், புள்ளினம் - தம்மிடத்துள்ள பக்ஷிக்கூட்டங்கள், பாற - ஓடவும், பாய்ந்தன - விழுந்தன—எ-று. பலமரங்களும்போய் விழுதலால் கடலுங்கலங்கி அதிலுள்ள ஜலசரங்களுமிறந்து ரக்தப்பிரவாக மாகுதலாலே பாடலம் பெறவென்றார். (௩௧)

வண்டலம்புநலாற்றின்மராமரம்
வண்டலம்புனலாற்றின்மடிந்தன
விண்டலம்புகநீங்கியவெண்புனல்
விண்டலம்புகநீண்மரம்வீழ்ந்தவே.

இ-ள். வண்டு - வண்டுகள், அலம்பு - சத்திக்கின்ற, நல்லாற்றின் - நல்லொழுங்கினையுடைய, மராமரம் - கடப்பமரங்கள், வண்டல் - சேற்றையுடைய, அம்- அழகிதான, புனலாற்றில் - நீராற்றிலேபோய்விழுந்து, விண்டுமடிந்தன - வெவ்வேருயழிதலாயின, அலம்பு - திருமால் திருவடியைக்கழுவுவதான, உகம்நீங்கிய - முடிவில்லாத, வெண்புனல் - வெண்ணிறமான ஆகாயகங்கையிலே போய், விண்டலம்- ஆகாயத்தளவும், புக - செல்லுவதாக, நீள் - நீண்டுள்ள, மரம் - மரங்கள், வீழ்ந்த- விழுதலாயின—எ-று. நீராறு - உப்பங்கழி. (௩௨)

தாமரைத்தடம்பொய்கைசெஞ்சந்தனம்
தாமரைத்தனவொத்ததுகைத்தலின்
காமரக்களிவண்டொடுங்கள்ளொடும்
காமரக்கடல்பூக்கடல்கண்டவே.

இ-ள். தடம் - பெரியனவாய் அங்குள்ள, தாமரைப்பொய்கை - தாமரைக்குளங்கள், செஞ்சந்தனந்தாம் - சிவந்த சந்தனத்தை, அரைத்தன ஒத்த - அரைத்துக் குழப்பினபோலாயின, துகைத்தலின் - மரங்கள்போய்விழுந்துகுழப்புதலாலே, காமரம் - இசைப்பாட்டுடனே, களி - மயக்கத்தையுடைய, வண்டொடும் - வண்டுகளுடனே, கள்ளொடும் - தேனோடுகூட, கா - அந்த அசோகவனத்துள்ள, மரம்- மரங்களையுமுடைய, அக்கடல் - அந்த இலங்கைக்கருகுள்ள கடலானது, பூக்கடல்- பலமலர்களையும் புஷ்பித்திருக்கிற கடலாகவும், கண்ட - திருவடியாலே செய்யலாயின—எ-று. (௩௩)

சிந்துவாரந்திசைதொறுஞ்சென்றன
சிந்துவாரம்புரைதிரைசேர்ந்தன
தந்துவாரம்புதவொடுதாளறத்
தந்துவாரந்துகள்படச்சாய்ந்தவே.

இ-ள். திசைதொறும்-அசோகவனத்தைச்சூழ வேலியாக நான்குதிக்கிலும், சென்றன - நீண்டுநிற்கின்றனவாகிய, சிந்துவாரம் - நொச்சிமரங்கள், சிந்து - கடலினது, வாரம் - கரையிலும், புரை - உயர்வுள்ள, திரை - அலைகளிலும், சேர்ந்தன - போய்விழுந்தன, தந்து - திருவடியாலே எறிதலாகி, வார் - நீண்ட, அம் - அழகிய, புதவொடு - கதவுடனே, தாள் - அதன்சீப்பும், அற - அறுதலாக, தம் - அந்த அரக்கருடைய, துவாரம் - வாயிலும், துகள்பட - தூள்தூளாக, சாய்ந்த - அழிந்தன எ-று. தம் அக்கதவுகளையுடையனவான எனவுமாம். (௩௪)

நந்தவானத்துநாண்மலர்நாறின
நந்தவானத்துநாண்மலர்நாறின
சிந்தவானந்திரிந்துகச்செம்மணி
சிந்தவானந்திரிந்ததிரைக்கடல்.

இ-ள். நந்தவானத்து - அசோகவனத்திலே, நாள் - தினந்தோறும், நாறின - பூத்த, மலர் - புஷ்பங்கள், நந்த - அதிகமாக, வானத்து-ஆகாயத்திலேபோய், மலர் - அங்கேவிரிகிற, நாள் - நக்ஷத்திரங்கள்போல், நாறின - பரிமளித்து நின்றனவாகி, சிந்து - நீரைப்பெய்கிற, அவ்வானம் - அந்த மேகமண்டலத்திலே, திரிந்து - காற்றூற்சுழன்று, உக - உதிர அவ்வளவில், செம்மணி - செவ்வையான மணிகளை நன்றான முத்துகளை, சிந்த - பெறும்படி, வால்நந்து - வெண்சங்குகள், இரிந்த - பயந்து ஓடலாயின, திரை - அலைகளையுடைய, கடல் - கடலிலே—எ-று. மணிசிந்த என்றது சங்குகள் கர்ப்பங்கலங்க என்றபடி. (௩௫)

பொல்லும்பொற்பணைப்பன்மணிப்பொன்மரம்
கொள்ளுமிப்பொழுதேயெனுங்கொள்கையால்
எல்லியிட்டுவிளக்கியவிந்திரன்
வில்லுமொத்தனவிண்ணுறவீசின.

இ-ள். புல்லும்பொன் - பொன்னிறத்தைக்கொண்ட, பணை - கிளைகளையுடைய, பொன்மரம் - பொன்னுலானமரங்களும், பல்மணிமரம் - பலரத்நங்களாலுமானமரங்களும், இப்பொழுதே - இந்தக்ஷணத்துக்குள்ளே, சொல்லும் - கொல்லப்படும், எனும்-என்பதான, கொள்கையால்-திருவடி மனத்துள்ளே கொண்டிருத்தலாலே, எல்லி - இராத்திரியிலே, இட்டு - இடப்பட்டு, விளக்கிய - உற்பாதமாகக் காட்டின, இந்திரன்வில்லும்-இந்திரதனுசையும், விண்ணுற - ஆகாயத்திலேசெல்ல, வீசின - பிடுங்கியெறிந்த பொற்பணைப்பன்மணிப்பொன்மரம், ஒத்தன-ஒப்பாயின எ-று. இனி இந்தவனமும் ஊரும் அழிந்துபோமென்று அவசகுனமாக இராத்திரியிலே தோன்றுகிற இந்திரதனுசுபோன்றன மேலெறிந்தமரங்கள் இன்னும்மரங்களை அழிப்பான் எனுங்கொள்கையால் எல்லியிட்டுவிளக்கிய இந்திரவில்என்க. (௩௬)

ஆனைத்தானமுமாடலரங்கமும்
பானத்தானமும்பாய்பரிப்பந்தியும்

ஏனைத்தாரணிதேரொடுமிற்றன
கானத்தார்தருவண்ணல்கடாவவே.

இ-ள். ஆனைத்தானமும் - யானைச்சாலைகளும், ஆடல் அரங்கமும் - நாடக சாலைகளும், பானத்தானமும் - கள்ளுக்கடைகளும், பாய்பரித்தானமும்-தாவுகின்ற குதிரைலாயங்களும், ஏனை - இன்னமுள்ள, தார்அணி - கிண்கிணிமாலைகட்டின, தேர்ஓடும் - தேர்ச்சாலைகளுடன், இற்றன-அழிதலாயின, கானத்து - அந்தஅசோக வனத்திலே, ஆர் - நிரம்பியுள்ள, தரு - மரங்களை, அண்ணல் - திருவடி, கடாவ- எறிந்ததனாலே, அந்தவனமேயன்றி ஊரும் அழிந்தன—எ-று. (௩௭)

மயக்கில்பொல்குலவல்லிகள்வாரிநேர்
இயக்குறத்திசைதோறுமெறிந்தன
வெயிற்கதிர்க்கற்றையற்றுறவீழ்ந்தன
புயற்கடற்றலைபுக்கனபோல்வன.

இ-ள். வாரி-அள்ளி அள்ளி, திசைதோறும் - திக்குகளெல்லாம், நேர் - நீள நீளமாக, இயக்குற - இயங்கிவிழ தொங்கிவிழும்படி, எறிந்தன - வீசிய, மயக்கில்-மழுங்குதலில்லாத, பொன் - பொன்மயமான, குலவல்லிகள் - சிறந்தகொடிகள், எழு வெயில் - சூரியனுடைய, கதிர்க்கற்றை - கிரணத்திரள், அற்று - அறுபட்டு, உற - மிகவும், வீழ்ந்துஅன - வீழ்ந்தாற்போலாயின, பய - அவைகள்எழு, புயல்-மேகங்கள், கடல்தலை - கடலிலே, புக்கன - இறங்கிமொய்த்தல், போல்வன - போலாயின பயனிலை புகுந்தன போன்றன—எ-று. (௩௮)

பெரியமாமரமும்பெருங்குன்றமும்
இரியவீசலினிந்நெடும்பொன்மதில்
நெரியமாடநெருப்பெழநீறெழ
இரியல்போனவிலங்கையுமெங்கணும்.

இ-ள். பெரிய - பெரிதான, மாமரமும் - மகாவிருக்ஷங்களும், பெருங்குன்றமும் - பெரியமலைகளும், இரிய - கெட தகரும்படி, வீசலின் - சுற்றும் எறிதலாலே மரங்கள்விழுந்து, இ - இந்தராவணனுடைய, நெடு - நீண்ட, பொன் - பொன்னாலான, மதில் - சுற்றுச்சுவர்கள், நெரிய - நெரிந்துவிழ, அதனாலே மாடம் - வீடுகளிலே, நெருப்புஎழ - நெருப்புப்பிறக்க அதனாலே, நீறுஎழ - எல்லாம்வெந்து சாம்பலாக அச்சாம்பல், இலங்கையும் - இலங்காபுரியிலும், எங்கணும் - மற்ற எவ்விடங்களிலும், இரியல்போன - பறந்துபோயின, ஊராரும் பலவிடங்களிலும் ஓடலாயினார்களென்பதுமாம்—எ-று. (௩௯)

வேறு.

தொண்டையங்கனிவாய்ச்சிதைதுயக்கினலென்னைச்சுட்டாய்
விண்டவானவர்தம்முன்னேவிரிபொழிலிறுத்துவீசக்
கண்டனைநின்றாயென்றுகாணுமேலரக்கன்காய்தல்
உண்டெனவெருவினன்போலொளித்தனனுடுவின்கோமான்.

இ-ள். தொண்டை - கொவ்வைக்கனிபோல், அம் - அழகிதான, கனி-பழம் போன்ற, வாய் - அதரமுள்ள, சீதைதுயக்கினல் - சனகிநிமித்தமாக, என்னைச் சுட்டாய் - என்னைச் சுடுதேலும்செய்தாய், விண்ட - என்னில்வேறான, வானவர்தம்முன்

னே - தேவர்கள் முன்பே, விரிபொழில் - இந்த விரிந்தசோலையை, இறுத்து வீச-ஒடித்தெறியவும், கண்டனைநின்ருய் என்று - பார்த்துக்கொண்டிருந்தாய் என்பதாக, காணுமேல் - கண்டானுனல், அரக்கன் - இராவணன், காய்தலுண்டென - கோபிப்பதாமென்று, வெருவினன்போல் - பயந்தவன்போல், உடுவின்கோமான் - சந்திரன், ஒளித்தனன் - அஸ்தமித்தான் — எ-று. (௪0)

காசறுமணியும்பொன்னுங்காந்தமுங்கஞல்வதாய
மாசறுமரங்களாகக்குயிற்றியமதனச்சோலை
ஆசைகடோறுமையன்கைகளாலள்ளியள்ளி
வீசியவிளக்கலாலேவிளங்கினவுலகமெல்லாம்.

இ-ள். காசு அறு - குற்றமற்ற, மணியும் - ரத்நங்களும், பொன்னும் - சுவர்ணமும், காந்தமும் - சூரியகாந்தம்சந்திரகாந்தமுமே, கஞல்வதாய - விளங்குவதான, மாசு அறு - தோஷந்தீர்ந்த, மரங்களாக - விருக்ஷங்களாக, குயிற்றிய - செய்திருக்கிற, மதனச்சோலை - காமரசத்துக்கிடமான அந்தச்சோலையினின்று, ஆசைகள்தோறும் - எந்தத்திக்கிலும், ஐயன் - திருவடியானவர், கைகளால் - இரண்டுகையாலும், அள்ளிஅள்ளி - பிடுங்கிப்பிடுங்கி, வீசிய - எறிந்தமரங்கள், விளக்கலாலே - துலங்கச்செய்கிறதினுலே, உலகமெல்லாம் - எல்லாவுலகங்களும், விளங்கின - விழித்து விளங்கலாயின சஞ்சரிப்பதாயின — எ-று. (௪௧)

கதறினவெருவியுள்ளங்கலங்கினவிலங்குகண்கள்
குதறினபறவைவேலைகுளித்தனகுளித்திலாத
பதறினபதைத்தவானிற்பறந்தனபறந்துபார்வீழ்ந்
துதறினசிறையைமீளவொடுக்கினவுலந்துபோன.

இ-ள். விலங்கு - அந்தவனத்துள்ள மிருகஜாதிகள், வெருவி - பயந்து, கதறின - கத்துமவைகளாய், உள்ளம் - மனங்கள், கலங்கின - கலக்கங்கொண்டன, பறவை - அதிலுள்ளபக்ஷிஜாதிகள், கண்கள் - தம்முடையவிழிகள், குதறின - கலங்குமவைகளாய், வேலை - கடலிலேபோய், குளித்தன - சிலபக்ஷிகள்முழுகின, குளித்திலாத - அப்படிமுழுகாதபக்ஷிகள், பதறின - துடிக்குமவைகளாய், பதைத்த - ஆத்திரப்பட்டு, வானில் - ஆகாயத்திலே, பறந்தன - பறக்கலாயின, பறந்து - அப்படிப் பறந்தபடியே, பார் - பூமியிலே, வீழ்ந்து - மரங்களாலடிபட்டு விழுந்து, சிறையை-இறகுகளை, உதறின - உதறிக்கொண்டு, மீள - பின்னும், ஒடுக்கின - சிறகுகளைக் குவித்தவைகளாய், உலந்துபோன - இறந்துபோயின — எ-று. (௪௨)

தோட்டொடுந்துதைந்ததெய்வமரந்தொறுந்தொடுத்தபுட்பம்
கூட்டொடுந்துறக்கம்புக்ககுன்றெனக்குவவுத்திண்டோள்
சேட்டகன்பரிதிமார்பன்சீரியுந்தீண்டறன்னுல்
மீட்டவன்கருணைசெய்தாற்பெறும்பதம்விளம்பலாமோ.

இ-ள். தோட்டொடும் - இதழ்களுடனே, துதைந்த - மலர்கணெருங்கின, தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள, மரந்தொறும் - மரங்களெல்லாம், தொடுத்த - கூடுகட்டியிருக்கிற, புள் - பக்ஷிகள், தம் - தம்முடைய, கூட்டொடு - கூடுகளுடனே, துறக்கம் - சுவர்க்கலோகம், புக்க - மரங்களோடுபோயின, குன்றென - மலையென்னும்படி, குவவு - உருண்டிருக்கிற, திண்தோள் - பலமானதோள்களையுடைய, சேடு - இளமையுடனே, அகன் - அகன்ற, பரிதி - பிரகாசந்தங்கின, மார்பன் - மார்பை

யுடையதிருவடி, சீறியும் - அருள்செய்யாது கோபித்தேனும், தீண்டல் தன்னால்- தொட்டதனாலே சுவர்க்கம்போகலாயின, மீட்டு - அப்படிக்கோபியாமல், அவன்- அந்த ஆஞ்சனேயர், கருணைசெய்தால் - அருள்கொண்டு தீண்டினால், பெறும்பதம்- தொடப்பெற்றவையடையும்பதவியைப்பரமபதம் என்பதையன்றி, விளம்பலாமோ- வேறுசொல்லப்படுமோ—எ-று. (சங)

பொய்ம்முறையரக்கர்காக்கும்புள்ளுறைபுதுமென்சோலை
விம்முறுமுள்ளத்தன்னமிருக்குமவ்விருக்கமொன்றும்
மும்முறையுலகமெல்லாமுற்றுறமுடிவதான
அம்முறையையன்வைகுமாலெனநின்றதம்மா.

இ-ள். பொய்முறை - மெய்யில்லாத கிரமங்களைக்கொண்ட அக்கிரமங்களையுடைய, அரக்கர் - ராக்ஷதர்கள், காக்கும் - காவல்செய்கிற, புள் உறை - பக்ஷிகளிருப்பதான, புது - நித்தியவசந்தமுள்ள, மென் - மென்காற்றுவீசுவதான, சோலை - அந்த அசோகவனத்திலே, விம்முறும் - துக்கித்துக்கொண்டிருக்கிற, உள்ளத்து - மனத்தையுடைய, அன்னம் - அம்சநடையைக்கொண்ட சீதாபிராட்டி, இருக்கும் - இருப்பதான, அவ்விருக்கமொன்றும் - அந்த ஒருமரமும்அந்தமரமாத்திரம், மும்முறை- மூவகையாயிருக்கிற, உலகமெல்லாம் - உலகங்கள் முழுதும், முற்றுற - அழிவுபட, முடிவதான - முடிவுபெறுகிற, அம்முறை - அக்காலத்திலே, ஐயன் - ஜகத்காரணபூதன், வைகும் - தங்குகிற, ஆலென - ஆலமரம்போல், நின்றது - நிற்றலாயிற்று எ-று. அம்மா அசை. (சச)

உறுசுடர்ச்சூடைக்காசவ்வுயிரினையுயிரொப்பானுக்
கறிகுறியாகவிட்டாளாதலான்வறியளந்தோ
செறிகுழற்சீதைக்கென்றோர்சிகாமணிதெரிந்துவாங்கி
எறிகடலீவதென்னவெழுந்தனனிரவியென்பான்.

இ-ள். உறு சுடர் - மிக்க ஒளியையுடைய, சூடைக்காசு - சூடாமணியான, அ உயிரினை - அந்த உயிர்போல்வதை, உயிரொப்பானுக்கு - தன் உயிர்போன்ற நாயகனுக்கு, அறிகுறியாக - தன்னை அறியும் அடையாளமாக, விட்டாள் - சீதை அனுப்பினாள், ஆதலால் - ஆனபடியினாலே, வறியள் - இப்போ தொன்று மில்லாதிருக்கிறாள், அந்தோ - ஐயோ என்று, செறிகுழல் - மணஞ்செறிந்தகூந்தலையுடைய, சீதைக்கென்று - சீதாபிராட்டிக்கென்று, ஓர்சிகாமணி - இன்னமொருசூடாமணி, தெரிந்துவாங்கி - தேடியெடுத்து, எறிகடல் - அலைமோதுவதானகடலானது, ஈவதென்ன - மகளென்றுகொடுப்பதுபோல, இரவியென்பான் - சூரியனென்பவன், எழுந்தனன் - உதயமாயினான்—எ-று. செறிகுழல் - சிறையிருத்தலாலே சடையாகச்செறிந்த கூந்தலெனலாம். (சரு)

தாழிரும்பொழில்களெல்லாந்துடைத்தொருதமியனின்றான்
ஏழினோடேழுநாடுமளந்தவனென்னலுமானான்
ஆழியினடுவணின்றவருவரைக்கரசுமொத்தான்
ஊழியினிறுதிக்காலத்துருத்திரமூர்த்தியொத்தான்.

இ-ள். தாழ் - பிராட்டிதங்குவதான, இரும் - பெரிய, பொழில்களெல்லாம்- சோலைமுழுதும், துடைத்து - அழித்து, ஒருதமியன் - தானொருவராகவே, நின்றான் - நின்றதிருவடி, ஏழினோடேழுநாடும் - பதினாலுலகங்களையும், அளந்தவன்-

அளந்தநெடுமாலே, எனலும் - இவரென்றுசொல்லுதற்கும், ஆனான் - சரியானார், ஆழியின்நடுவண் - பாற்கடலினடுவே, நின்ற - கடைவதாகநின்ற, அருவரைக்கு அரசும் - உயர்வுகாண அரிதானமலைகளுக்கெல்லாஞ் சிறந்தமந்தரகிரியையும், ஒத்தான்-சோலைநடுவேநிற்றலால் ஒப்பதானார், ஊழியின்-ஊழியாகிய, இறுதிக்காலத்து-முடிவுகாலத்திலே தோன்றுகிற, உருத்திரமூர்த்தி - உருத்திரசுரூபத்தையும், ஒத்தான் - ஒப்பதானார்—எ-று. (௪௬)

இன்னனநிகழும்வேலையரக்கியரெழுந்துபொங்கிப்
பொன்மலையென்னநின்றபுனிதனைப்புகன்றுநோக்கி
அன்னையீதென்னைமேனியார்கொலென்றச்சமுற்றார்
நன்னுதறன்னைநோக்கியறிதியோநங்கையென்றார்.

இ-ள். இன்னன - இத்தன்மையனவாக, நிகழும்வேலை - நடக்கும்போது, அரக்கியர் - அந்தராக்ஷஸிகள், எழுந்து - விழித்தெழுந்து, பொங்கி-ஒருசேரக்கூட்டி, பொன்மலையென்ன - மேருமலைபோல், நின்ற - நிற்கிற, புனிதனை-பரிசுத்தரான திருவடியை, புகன்று - யாரடாவென்றுசொல்லி, நோக்கி-திரிசடையைப்பார்த்து, அன்னை - தாயே, ஈது - இங்கேநிற்கிறது, என்னைமேனி - என்னசுவரூபம், யார்கொலென்று - யாரோவென்று, அச்சமுற்றார் - பயங்கொண்டவர்களாய் பின்பு, நன்னுதல்தன்னை - சீதாபிராட்டியை, நோக்கி - பார்த்து, நங்கை - பெண்ணே, அறிதியோ - இந்தவுருவை நீதெரிந்ததுண்டோ, என்றார் - என்றுகேட்டார்கள்—எ-று.

தீயவர்தீயசெய்தறீயவர்தெரியினல்லால்
தூயவர்துணிதலுண்டே நும்முடைச்சூழலெல்லாம்
ஆயமானெய்தவம்மானிளையவனரக்கர்செய்த
மாயமென்றுரைக்கவேயுமெய்யெனமையல்கொண்டேன்.

இ-ள். தீயவர் - கெட்டவர்களே, தீய - கெட்டகாரியங்களை, செய்தல் - செய்கிறது அதை, தீயவர் - அப்படிக்கெடுதலானவர்களே, தெரியின் - தெரிகிறதே, அல்லால் - அல்லாமல், தூயவர் - நல்லவர்கள், துணிதல் - தெரிந்துசொல்லுதலும், உண்டே - உளவோ, நும்முடை - உங்களுடைய, சூழலெல்லாம் - மாயச்செய்கைகளையெல்லாம், தூயவர் - துணிதலுண்டா இல்லை, ஆயமான் - அந்தமாயமான், எய்த-வந்தபோது, அம்மான் - அந்தமானைக்கண்டு, அரக்கர்செய்த - ராக்ஷதர்கள்பண்ணின, மாயமென்று - மாயாரூபமென்று, இளையவனுரைக்கவேயும் - இளையபெருமாள் சொல்லச்செய்தேயும், மெய்யென - மெய்மானென்று, மையல்கொண்டேன் - மயங்கினேன் தெரியவல்லேனே என்பது எஞ்சியது, நும்முடைச் சூழலெல்லாம் உள்ளதாகியமானென்று கூட்டவுமாம்—எ-று. தீமைசெய்தலால் தீயவருக்குத் தீமையே வந்ததென்றாளென்க. (௪௮)

என்றனளரக்கிமார்கள்வயிறலைத்திரியல்போகிக்
குன்றமுமுலகும்வானுங்கடல்களுங்குலையவோட
நின்றதோர்சமித்தங்கண்டானீக்குவலிதனையென்னுத்
தன்றடக்கைகணீட்டிப்பற்றினன்றூதையொப்பான்.

இ-ள். என்றனள் - என்றுசொன்னாள் பிராட்டி அதற்கு, அரக்கிமார்கள்-அந்தராக்ஷசிகள், வயிறலைத்து - வயிற்றில்மோதிக்கொண்டு, இரியல்போகி - பயமிகுந்து, குன்றமும் - இலங்கையைச்சேர்ந்தமலையும், உலகும் - அந்தஇலங்கையும்,

வானும் — ஆகாயமும், கடல்களும் - சமுத்திரங்களும், குலைய - நடுங்கும்படி, ஓட-ஓடு தலாக அப்போது, நின்றது — அந்தவனத்திலே கெடாமல்நிற்பதான, ஓர்சமித்தம்- ஒமமண்டபம் ஒன்றை, கண்டான் - திருவடியானவர் கண்டு, இதனை-இதையும், நீக்குவலென்று - பிடுங்கியெறிகிறேனென்று, தன் - தனது, தடம் - நீண்ட, கைகள் நீட்டி - இருகைகளுங்கொண்டு, பற்றினன் - நீட்டிப் பெயர்த்தார், தாதை - தன்பிதாவான வாயுபகவானை, ஒப்பான் - ஒப்பானவர்—எ-று. (௪௯)

கண்கொளவரிதுமீதுகால்கொளவரிதுதிண்கால்
எண்கொளவரிதிராவுமிருள்கொளவரிதுமாக
விண்கொளநிவந்தமேருவெள்குறவெதும்பியுள்ளம்
புண்கொளவுயர்ந்ததிப்பார்பொறைகொளவரிதுபோலாம்.

இ-ள். கண்கொள - யாருங்கண்கொண்டுபார்க்கவும், அரிது - கூடாது ஒளியாற் கண்கூசுமெனவுமாம், மீது — அதன்மேலேயாரேனும், கால்கொள — கால்வைக்கவும், அரிது - கூடாதுவாயுவுஞ் சஞ்சரிக்கவுங்கூடாதென்னவுமாம், திண் — அதற்குப்பலமாயுள்ள, கால் - அடிவாரத்தை இவ்வளவினதென்று, எண்கொள - மதிக்கவும், அரிது — கூடாது, இராவும் — இராத்திரியும், இருள்கொள - இருண்டுசூழ, அரிது - கூடாது, மாகவிண்கொள - மிகப்பெரியஆகாயத்தைக்காணுவதாக, நிவந்த- உயர்ந்த, மேரு - மேருமலையானது, வெள்குற — நாணவும் உயர்வுக்குத்தோற்று,வெதும்பியுள்ளம் - மனம்வெந்ததாய், புண்கொள - அம்மேருவேபுண்ணாகவும், உயர்ந்தது - உயர்ந்திருப்பது, இப்பார் - அது இருக்கிறபூமி, பொறைகொள - பொறுத்துத்தாங்கவும், அரிதுபோலாம் - கூடாதென்னவுமாம்—எ-று. போல் — ஐயத்தில் வந்த அசை. (௫0)

பொங்கொளிநெடுநாளீட்டிப்புதியபால்பொழிவதொக்கும்
திங்களைநக்குகின்றவிருளெலாம்வாரித்தின்ற
அங்கைபத்திரட்டியான்றன்ணையாலழகுமானப்
பங்கயத்தொருவன்றானேபசும்பொனாற்படைத்ததம்மா.

இ-ள். பொங்கு - மிகுந்த வளர்ந்துகொண்டிருக்கிற, ஒளி - பிரகாசத்தை, நெடுநாள் — நெடுங்காலமாக, ஈட்டி - சம்பாதித்து, புதியபால் - கறக்கிறபால், பொழிவது — சிந்துவதை, ஒக்கும் - ஒப்பதான, திங்களை — சந்திரனையும், நக்குகின்ற-கவிவதான, இருளெல்லாம் - இருட்டைமுழுதும், வாரி - அள்ளி அள்ளி, தின்றது- உண்டிருப்பது, அங்கை - அழகியகைகள், பத்திரட்டியான்றன் — இருபதுள்ள இராவணன், ஆணையால் — உத்தரவினாலே இதன், அழகுமான — அழகுசரியென்ன, பங்கயத்து — தாமரைமலரிலிருக்கிற, ஒருவன்தானே — தானொருவனே பிரமனே,பசும்பொன்னால் - பசும்பொன்னாலே விளங்க, படைத்தது - சிருஷ்டித்தது—எ-று. அந்த ஒமமண்டபம் சூரியனுக்காபரணமாகச் சூடத்தக்கது. (௫௧)

தூணெலாஞ்சுடருங்காசுசுற்றெலாமுத்தஞ்சொன்னம்
பேணலர்மணியின்பத்திப்பிடரெலாமொளிகள்விம்மக்
சேணெலாம்விரியுங்கற்றைச்சேயொளிச்செல்தற்கேயும்
பூணலாமெம்மனோராற்புகழலாம்புதுமைத்தன்றே.

இ-ள். தூணெலாம் - அதிலுள்ளதூண்களெல்லாம், சுடரும்-விளங்குகின்ற, காசு - ரத்நங்களேயாம், சுற்றெலாம் - அதன்சுற்றுப்புறமெல்லாம், முத்தம்-முத்து

களும், சொன்னம் - சுவர்ணங்களுமேயாப், பேணல்ஆம் - மிகவும் விரும்புவதான, மணியின்பத்தி - ரத்நவரிசைகளே, பிடரெலாம்-அதன்பின்புறமெல்லாம், ஒளிகள்-காந்திகள், விம்ம - அதிகமாயிருத்தலாலே, சேணெலாம் - நெடுந்தூரமான இடங்களெல்லாம், விரியும் - விரிவதான, கற்றை - திரட்சியான, சேயொளி - சிவந்தகாந்தியையுடைய, செல்வற்கேயும் - சூரியனுக்கேயானாலும், பூணலாம் - அலங்கரிக்கப்படுவனவாம் அவ்வொளிகள், எம் அனோரால் - எம்போலிகளாலே, புகழலாம் - புகழ்ந்துசொல்லுவதான, புதுமைத்து - புதுமையானது, அன்று - அல்லதாம் என்றால்சூரியனுக்கும் அம்மண்டபத்தினொளிகளைக்கொண்டு அலங்கரிக்கலாகும் அதிசயவொளிகளைக்கொண்டுள்ளது நான்புகழ்ந்து முடிவுபடுவதன்று என்பதுகருத்து—எ-று.

வெள்ளியங்கிரியைப்பண்டவ்வெந்தொழிலரக்கன்வேரோ
டள்ளினனென்னக்கேட்டானத்தொழிற்கழிவுதோன்றப்
புள்ளிமாமேருவென்னும்பொன்மலையெடுப்பான்போல
வள்ளுகிர்த்தடக்கைதன்னான்மண்ணின்றும்வாங்கியண்ணல்.

இ-ள். வெள்ளியங்கிரியை - கைலாயமலையை, பண்டுஅவ் - முன்னே அந்த, வெந்தொழில் அரக்கன் - கொடியசெய்கையுள்ள இராவணன், வேரோடுஅள்ளினன் - வேருடனேபிடுங்கினன், என்ன - என்றுபலருஞ்சொல்ல, கேட்டான் - கேட்டவரான திருவடி, அத்தொழிற்கு - அந்தப்பலப்பெருமைக்கு, இழிவுதோன்ற - குறைவுண்டாக, புள்ளி - மலைகளிற்சிறந்த, மா - பெருமைகொண்ட, மேருவென்னும் - வடமேருவென்கிற, பொன்மலை - சுவர்ணபருவதத்தை, எடுப்பான்போல - பெயர்ப்பவர்போல் பெயர்க்கிறதுபோல், வள்உகிர் - கூரியநகத்தைக்கொண்ட, தடக்கைதன்னால் - நீண்டகைகளாலே, மண்ணின்றும் - அது இருக்குமிடத்திலிருந்து, வாங்கி - வேருடனேகொண்டு அடியோடெடுத்து, அண்ணல் - திருவடியானவர்விட்டனர்—எ-று. (௫௩)

விட்டனனிலங்கைதன்மேல்விண்ணுறவிரிந்தமாடம்
பட்டனபொடிகளானபகுத்தனபாங்குநின்ற
சுட்டனபொறிகள்பின்னைத்துளங்கினரரக்கர்தாமும்
கெட்டனர்வீரரம்மாபிழைப்பரோகேடுசூழ்ந்தார்.

இ-ள். இலங்கைதன்மேல் விட்டனன் - இலங்காபுரிமேலெறிந்தார், விண்ணுற - ஆகாயத்தையளாவ, விரிந்த - எங்குமுள்ள, மாடம் - வீடுகளின்மேலே, பட்டன - விழுந்தஅளவில், பொடிகளான - வீடுகள் தூளிகளாயுடைந்து, பகுத்தன- உடைபட்டவைகளின், பாங்குநின்ற - இடத்திலுளவான, பொறிகள் சுட்டன - நெருப்புப்பொறிகள்போய்ச்சுட்டு, பின்னை - பின்பு அதனாலே, அரக்கர்தாமும் - ராக்ஷஸர்களும், துளங்கினர் - கலங்கினார்கள், வீரர்கெட்டனர் - அந்த ராக்ஷஸவீரர்கள் அநேகர்கள் செத்தார்கள், கேடுசூழ்ந்தார் - பிராட்டிக்குக் கெடுதியைச்செய்தவர்கள், பிழைப்பரோ - எங்கேனும் அழியாதுதப்புவார்களா அழிவாரென்பதாம்—எ-று. ()

நீரிடுதுகிலரச்சர்நெருப்பிடுநெஞ்சர்நெக்குப்
பீரிடுமுருவர்தெற்றிப்பிணங்கிடுதாளர்பேழ்வாய்
ஊரிடுபூசலாரவுளைத்தனரோடியுற்றார்
பாரிடுபழுவச்சோலைபாலிக்கும்பருவத்தேவர்.

இ-ள். அச்சர் - அதுகண்டுபயந்தவர்களாய், நீரிடுதுகிலர் - மூத்திரம்பெய்துகொண்ட கௌபீனர்களாகி, நெருப்பு இடு - வனம் அழிந்ததென்கிற நெருப்புவி

ழுந்த, நெஞ்சர் - மனசுண்டாகி, நெக்கு - சதைந்து காயம்பட்டு, பீரிடும் - ரக்தமொழுகுகிற, உருவர் - உடம்புகளுடனே, தெற்றி - மரங்கள்பட்டு, பிணங்கிடு - தமொறிவிழுகிற, தாளர் - கால்கள் நடுங்க அதுடனே, பேழ்வாய் - அகன்ற இடமுள்ள, ஊர் இடு - ஊரார்கத்துகிற, பூசல் - பெருமுழக்கமும், ஆர - நிரம்பக் கேட்டவுடனே, உளைத்தனர் - மிகவும் வருத்தங்கொண்டு, பார் - இலங்கையென்னு நிலத்திலே, இடு - இராவணன்வளர்த்திருக்கின்ற, பழுவச்சோலை - இளஞ்சோலையை, பாலிக்கும் - காக்கக்கடவ, தேவர் - தேவர்கள், ஓடிஉற்றார் - ஓடிப்போனார்கள்—எ-று. பழுவச்சோலை - அடர்ந்தசோலை, பருவத்தேவர் - காலதேவதைகள், சோலையின்பருவந் தெரிந்துபாலிக்குந்தேவரென்க. (ருரு)

அரிபடுசீற்றத்தான் றனருகுசென் றடியின்வீழ்ந்தார்
கரிபடுதிசையினீண்டகாவலாகாவலாற்றேம்
கிரிபடுகுவவுத்திண்டோட்குரங்கிடைகிழித்துவீச
எரிபடுதுகிலினொய்தினிற்றதுகடிகாவென்றார்.

இ-ள். அரிபடு - சிங்கம்போல், சீற்றத்தான்றன் - சீறிக்கிடக்கிற ராவணன், அருகுசென்று - கிட்டப்போய், அடியின்வீழ்ந்தார் - காலில்விழுந்து, கரிபடு-யானைகள்தாங்குகிற, திசையில் - எட்டுத்திக்கிலும், நீண்ட - செல்லுவதான, காவலா-ஆக்ஞையுள்ளவனே, காவல்ஆற்றேம் - இனியாங்கள் காக்கவல்லேமல்லேம், கிரிபடு-மலைபோலிருக்கிற, குவவு - உருண்ட, திண்தோள் - வலியதோள்களையுடைய, குரங்கு - ஒருகுரங்கு, இடை - நடுவேநின்று, கிழித்துவீச - ஒடித்தெறிந்ததனாலே, எரிபடு - நெருப்பிலேவிழுந்த, துகிலின் - பஞ்சுபோல், நொய்தின் - ஒருநொடியளவிலே, கடிகா - நாங்கள்காக்கிறசோலை, இற்றது என்றார் - அழிந்ததென்று சொன்னார்கள்—எ-று. (ருசு)

சொல்லிடவெளியதன்றாற்சோலையைக்காலிற்கையிற்
புல்லொடுதுகளுமின்றிப்பொடிபடநூறிப்பொன்னால்
வில்லிடுவோமந்தன்னைவேரொடுவாங்கிவீசச்
சில்லிடமொழியத்தெய்வவிலங்கையுஞ்சிதைந்ததென்றார்.

இ-ள். சொல்லிட - எங்களாலேசொல்ல, எளியது அன்று - சுலபமானதல்ல ஆல்ஐயோ, சோலையை - அந்த அசோகவனத்தை, காலில் - அதன்கால்களாலும், கையில் - கைகளாலும், புல்லொடு - ஒருபுல்லுடனே, துகளும் - அந்தப் புல்லிலொட்டின தூசியுங்கூட, இன்றி - இல்லையாக, பொடிபட - தூள்தூளாக, நூறி - அழித்து, பொன்னால் - முழுதும் பொன்னாலாகி, வில்லிடு - ரத்நகாந்திகளும்வீசுகிற, ஓமந்தன்னை - ஓமமண்டபத்தையும், வேரொடுவாங்கி - அடியோடேபிடுங்கி, வீச - ஊர்மேலேயெறிய அதனாலே, சில்லிடம் ஒழிய - கொஞ்சம்இடம்போக தவிரஎன்றபடி, தெய்வஇலங்கையும் - தெய்வீகபட்டணமுழுதும், சிதைந்தது - இடிந்துபோயிற்று, இடியாதசில்லிடம் - இராவணன்வீட்டிலே கொஞ்சம்—எ-று. (ருஎ)

ஆடகத்தருவிண்சோலைபொடிபடுத்தரக்கர்காக்கும்
தேடருமோமம்வாங்கியிலங்கையுஞ்சிதைத்ததம்மா
கோடரமொன்றேநன்றிதிராக்கதர்கொற்றஞ்சொற்றல்
மூடருமொழியாரென்னமன்னனுமுறுவல்செய்தான்.

இ-ள். விண் - ஆகாயத்திலேயுள்ள, ஆடகத்தருச்சோலை - பொன்மயவிருக்ஷங்களுள்ளசோலையை, பொடிபடுத்து - தூள்களாக அழித்து, அரக்கர்காக்கும்-

ராக்ஷஸர்கள்காக்கிற, தேட அரும் - தேடினாலுங்கிடையாத, ஓமம் - ஓம மண்டபத்தை, வாங்கி - வேரோடே பிடுங்கி, இலங்கையும் - ஊரையுங்கூட, சிதைத்தது - அழித்தது, கோடரம் ஒன்றே - ஒருகுரங்கே, அம்மா - மிகப்புதுமை, நன்றிது - இது நல்லகாரியமே புதுமையே, இராக்கதர் - ராக்ஷஸர்களுடைய, கொற்றஞ் சொற்றல்- வெற்றியைக்கொண்டாடுதலிலே, மூடரும் - புத்தியீனருங்கூட, மொழியார் என்ன- உங்களைப்போற் பொய்சொல்லார்களென்று, மன்னனும் - ராக்ஷதேந்திரன், முறுவல்பூத்தான் - சிரித்தான் - எ-று. (ருஅ)

தேவர்கள்பின்னுமன்னவதனுருச்சுமக்குந்திண்மைப்
பூவலயத்தையன்றேபுகழ்வதுபுலவர்போற்றும்
மூவரினொருவனென்றுபுகல்கினுமுடிவிலாத
ஏவமக்குரங்கையையகாணுதியின்னேயென்றார்.

இ-ள். தேவர்கள் - அப்படிச் சொல்லக்கேட்ட காவற்றேவர்கள், பின்னும்- மறுபடியும், மன்ன - ராக்ஷதேந்திரா, அதனுரு - அந்தக் குரங்கின் சரீரகனத்தை, சுமக்கும் திண்மை - தாங்கவல்லதான, பூவலயத்தை அன்றே - அதுநிற்கிற இடத்தையல்லவோ, புகழ்வது - கொண்டாடவேண்டும், புலவர் போற்றும் - தேவர்கள் வணங்கத்தக்க, மூவரில் - அரியரப்பிரமர்களிலே, ஒருவனென்று - சிறந்த ஒருவனிவனென்று, புகல்கினும் - சொன்னபோதிலும், முடிவிலாதது - போதுமானதன்று, ஏவம் - நாங்களெவ்வளவினம் சொல்லவல்லேமல்லேம், அக்குரங்கை - அப்படிப்பட்டகுரங்கைவந்து, ஐய - சுவாமி, இன்னே காணுதி - இப்போதே பார்ப்பீராக, என்றார் - என்றுசொன்னார்கள் - எ-று. (ருக)

மண்டலங்கிழிந்தவாயின்மறிகடன்மோழைமண்ட
எண்டிசைசுமந்தமாவுந்தேவருமிரியல்போகத்
தொண்டைவாயரக்கிமார்கள்சூல்வயிறுடைந்துசோர
அண்டமும்பிளந்துவிண்டதாமெனவநுமனார்த்தான்.

இ-ள். மண்டலம் - அப்போது திருவடிகர்ச்சித்ததனாலே அந்தப்பூமி, கிழிந்த - வெடித்துப்பிளந்த, வாயில் - வெடிப்புவழியே, மறிகடல் - அலைகள் கொதித்து மடங்குகிறகடலாகிய, மோழை - கஞ்சியானது, மண்ட - புகுந்துசெல்லவும், எண்திசை - அஷ்டதிக்கையும், சுமந்த - தாங்குகிற, மாவும் - யானைகளும், தேவரும்- அவைகளிலேறுகிற தேவர்களும், இரியல் போக - ஓடுதலாகவும், தொண்டைவாய்- கொவ்வைக்கனிபோலும் அதரத்தையுடைய, அரக்கிமார்கள் - ராக்ஷதப் பெண்களுடைய, சூல்வயிறு - கருப்பங்கொண்ட வயிறு, உடைந்து - வெடித்து, சோர - பிள்ளை வெளிவரவும், அண்டமும் - ஆகாயமுகடும், பிளந்து விண்டது - பிளந்து வெடித்தது, ஆமென - மெய்யேயென்னும்படி, அனுமன் ஆர்த்தான் - திருவடி கர்ச்சித்தார் எ-று. (சுO)

பொழிலிருத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - எ - க்கு திருவிருத்தம் - எருச.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

எட்டாவது,

கிங்கரர்வதைப்படலம்.

அருவரைமுழையின்முட்டுமசனியினிடிப்புமாழி
வெருவருமுழக்குமீசன்வில்லிறுமொலியுமென்னக்
குருமணிமகுடகோடிமுடித்தலைகுலுங்கும்வண்ணம்
இருபதுசெவியினூடுநுழைந்ததவ்வெழுந்தவோசை.

இ-ள். அரு - தெய்வத்தன்மையுள்ள, வரைமுழையில் - ஒரு மலைக்குகையி லேபோய், முட்டும் - மோதுவதான, அசனியினிடிப்பும் - இடிமுழக்கமும், வெரு வரும் - பயந்தோன்றத்தக்க, ஆழிமுழக்கும் - கடல்முழக்கமும், ஈசன் - சிவனுடை ய, வில் இறும் - வில்லொடிந்த, ஒலியும் என்ன - முழக்கமும்போல, குருமணி - கா ந்திபொருந்தின ரத்நங்கள்பதித்த, மகுடகோடி - கிரீடவரிசைகளானவுறுப்பும், மு டி - மயிர்முடியுமுள்ள, தலை - பத்துத்தலைகளும், குலுங்கும்வண்ணம் - நடுங்கும்படி, இருபதுசெவியினூடும் - இராவணன் இருபதுகாதுக்குள்ளும், நுழைந்தது - புகுந் தது, அவ் - அந்தச்சோலையினின்றும், எழுந்த - உண்டான, ஓசை - அனுமார்கெர்ச் சித்தவொலி, இராவணனே - ஒருமலையாகவும், அவன் காதுகளே - குகைகளாகவுங் கொள்க—எ-று. (க)

புல்லியமுறுவறேன்றப்பொருமையுஞ்சிறிதுபொங்க
எல்லையிலாற்றன்மாக்களெண்ணிறந்தாரையேவி
வல்லியினகலாவண்ணம்வானையும்வழியைமாற்றிக்
கொல்லலீர்குரங்கைநொய்திற்பற்றுதிர்கொணர்திரென்றான்.

இ-ள். புல்லியமுறுவல் - புன்சிரிப்பும், தோன்ற - உண்டாக, பொருமை யும் - அழுக்காறும், சிறிதுபொங்க - கொஞ்சமுண்டாக, எல்லையில் - அளவில்லாத, ஆற்றல் - பலத்தையுடைய, மாக்கள் - வீரர்கள், எண் இறந்தாரை - அளவற்றபேர் களை, ஏவி - போகச்சொல்லி, வல்லையின் - அதிகவிரையிலே, அகலாவண்ணம் - அ து ஓடிப்போகாதபடி, வானையும் - ஆகாயத்தையும் திக்குகளையும், வழியை மாற்றி- போகும்வழியைமறித்து, கொல்லலீர் குரங்கை - கொல்லாமல்நீங்கள், நொய்தில்-உ பாயத்தினல், பற்றுதிர் - பிடியுங்கள், கொணர்திர் - கொண்டுவாருங்கள், என்றான் என்றுவிடைதந்தான் இராவணன், வானையும் என்பதில் - வானிலும் திசைகளிலும் எனவுருபுமாறுக—எ-று. (உ)

சூலம்வாண்முசலங்கூர்வேறோமரந்தண்டுபிண்டி
பாலமேமுதலாவுள்ளபடைக்கலம்பரித்தகையர்
ஆலமேயனையமெய்யரகலிடமருவுசெய்யும்
காலமேலெழுந்தமூரிக்கடலெனக்கடிதுசெல்வார்.

இ-ள். சூலம் - சூலாயுதங்களும், வாள் - வாளாயுதங்களும், முசலம் - இருப் புலக்கைகளும், கூர்வேல் - கூரியவேலாயுதங்களும், தோமரம் - எறியாயுதங்களும், தண்டு - தண்டாயுதங்களும், பிண்டிபாலம் - பிண்டிபாலங்களும், முதலாவுள்ள-முத லான, படைக்கலம் - ஆயுதங்களை, பரித்த - கொண்ட, கையர் - கைகளுள்ளவர்கள்,

ஆலமேஅனைய – விஷத்தையேநேரான, மெய்யர் – சரீரமுள்ளவர்கள், அகல் இடம்-அகன்றவுலகத்தை, அழிவுசெய்யும் – முழுகலப்பண்ணுகிற, காலமேல் – காலத்திலே, எழுந்த – பொங்கிவருகிற, மூரிக்கடல்என – பெருங்கடல்போல், கடிது – விரைவிலே, செல்வார் – எங்கும் வியாபிக்கத்தக்கவர்கள்—எ-று. பாலமே என்பதில் ஏ-எண்ணிடைச்சொல், (ஙு)

நானிலமதனினுண்டுபோரெனநவிலினச்சொல்
தேனினுங்களிப்புச்செய்யுஞ்சிந்தையர்த்தெரித்துமென்னின்
கானினும்பெரியரோசைகடலினும்பெரியர்கீர்த்தி
வானினும்பெரியர்மேனிமலையினும்பெரியர்மாதோ.

இ-ள். நால் நிலம் – நான்குதிக்குகளாகிய, அதனில் – அவ்விடங்களிலே, உண்டுபோரென – சண்டையுண்டென்று, நவிலில் – சொல்லக்கேட்டால், அச்சொல்-அந்தவார்த்தையை, தேனினும் – தேனின்மாதுரியத்திலும்,களிப்புச்செய்யும் – அதிகமதுரமாகக்கொள்ளுகிற, சிந்தையர் – மனமுள்ளவர்கள் அவர்களளவை, தெரித்துமென்னின் – ஒருவகை தெரிந்துசொல்வோமானால், கானினும் – நெருக்கத்தாலுநீளத்தாலும் காட்டைப்பார்க்கிலும், பெரியர் – அதிகமானவர்கள், ஓசை – குமுறுகிறதினலே, கடலினும் – கடலைப்பார்க்கிலும், பெரியர்-அதிகமானவர்கள், கீர்த்தி-புகழாலே, வானினும் – ஆகாயப்பரப்பிலும், பெரியர் – அதிகமானவர்கள், மேனி-சரீரதிடத்திலே, மலையினும் – மலைகளைப்பார்க்கிலும், பெரியர் – அதிகமானவர்கள், மாது ஓ – அசைகள்—எ-று. (சு)

திருகுறுஞ்சினத்துத்தேவர்தானவரென்னுந்தெவ்வர்
இருகுறும்பெறிந்துநின்றவிசையினர்வசையென்றெண்ணிப்
பொருகுறும்பின்றுவென்றுபுணர்வதுபூவுண்வாழ்க்கை
ஒருகுறுங்குரங்கென்றெண்ணிநெடிதுநாணுழக்குநெஞ்சர்.

இ-ள். திருகு உறும் – மாறுபாடுகொள்கிற, சினத்து – கோபத்தையுடையவராய், தேவர் தானவர் – தேவாசுரர்கள், என்னும்-என்னப்படுகிற, தெவ்வர்-பகைவர்களாகிய, இருகுறும்பு – இருவகையோர் போர்களையும், எறிந்து – கடிந்து, நின்ற-நிலைகொண்ட, இசையினர் – புகழுள்ளவர்கள், வசையென்று – அரசன் பொழிலை அழித்ததனலே பழிப்புண்டாயிற்றென்று, எண்ணி – நினைத்து, பொருகுறும்பு-பொரும்போரிலே, இன்று – இப்போதுநாம், வென்றுபுணர்வது – ஜெயித்துப் புகழையடைவதற்கு, பூ – பூ, தளிர் – இலைகளை, உண்வாழ்க்கை – தின்கிற அல்பசரீரியான, ஒரு குறுங்குரங்கு – ஒருசிறியகுரங்குதானே, என்று எண்ணி – என்று இகழ்ச்சிசெய்து, நெடிதுநாண் – மிகவும் வெட்கத்தால், உழக்கும் – வருந்துவதான, நெஞ்சர் – மனமுள்ளவர்கள்—எ-று. இக்குரங்கை வென்றதனலே புகழில்லை யென்பதவர்கள் கருத்து. (எ)

கட்டியவாளரிட்டகவசத்தர்கழலர்திக்கைத்
தட்டியதோளர்மேகந்தடவியகையர்வானை
எட்டியமுடியர்தாளாலிடறியபொருப்பரீட்டிக்
கொட்டியபேரியென்னமழையெனக்குமுறுஞ்சொல்லார்.

இ-ள். கட்டியவாளர் – இடையிலே கத்திகட்டினவர்கள், இட்டகவசத்தர்-மார்பிலே சீரா அணிந்தவர்கள், இட்டகழலர் – காலிலே வீரக்கழல்கட்டினவர்கள்,

திக்கை - திசைகளை, தட்டிய - மோதுகிற, தோளர் - புஜங்களுள்ளவர்கள், மேகம் - மேகங்களை, தடவிய - தடவுகிற, கையர் - அகங்கைகளுள்ளவர்கள், வானை - ஆகாயத்தை, எட்டிய - தொடுகிற, முடியர் - தலைகளுள்ளவர்கள், தாளால் - கால்களாலே, இடறியபொருப்பர் - மலைகளை உந்துகிறவர்கள், ஈட்டி - ஒருசேர்க்கையாக, கொட்டிய - முழக்குகிற, பேரியென்ன - பேரிமுதலிய வாத்தியவோசைபோலவும், மழையென - மேகமுழக்கமென்றுநினைக்கவும், குமுறும் - அதட்டுகிற, சொல்லார் - சொற்களுள்ளவர்கள் அந்த வீரர்கள்—எ-று. (சு)

வானவரெறிந்ததெய்வவடுபடைவடுக்கண்மற்றைத்
தானவர்துரந்தவேதித்தழும்பொடுதயங்குந்தோளர்
யானையும்பிடியும்வாரியிடுங்கயவாயரீன்ற
கூனல்வெண்பிறையிற்றோன்றுமெயிற்றினர்கொதிக்குங்கண்ணர்.

இ-ள். வானவர் - தேவர்கள், எறிந்த - வீசின, தெய்வம் - தெய்வத்தன்மையுள்ளனவாய், அடு - கொல்லுகின்ற, படை - அஸ்திரசஸ்திரங்களாலான, வடுக்கள் - தழும்புகளும், மற்றைத்தானவர் - தேவரில்வேறான அசுரர்கள், துரந்த - பிரயோகித்த, எதி - ஆயுதமுதலானவைகளாகிய, தழும்பொடு - காயங்களுடனே, தயங்குந்தோளர் - விளங்கும் புஜங்களுள்ளவர்கள், யானையும் - ஆண்யானைகளையும், பிடியும் - பெண்யானைகளையும், வாரியிடும் - அள்ளியுண்கிற, கயவாயர் - பெரியவாய்களுள்ளவர்கள், ஈன்ற - அவ்வாய்கள்பெற்றனவாக, கூனல் - வளைவுள்ள, வெண் - வெண்மையான, பிறையில் - அர்த்தசந்திரன்போல், தோன்றும் - விளங்குகிற, எயிற்றினர் - தந்தங்களுள்ளவர்கள், கொதிக்கும் - கொதிப்புள்ள, கண்ணர் - கண்களுள்ளவர்கள், ஈன்றகூனல்வெண்பிறை - மூன்றாம்பிறைபோலெனவுமாம்—எ-று. (எ)

சக்கரமுலக்கைதண்டுதாரைவாள்பரிகஞ்சங்கு
முற்கரமுசுண்டிபிண்டிபாலம்வேல்சூலமுட்கோல்
பொற்கரங்குலிசம்பாசம்புகர்மழுவெழுப்பொற்குந்தம்
விற்கருங்கணைவிட்டேறுகழுக்கடையெழுக்கண்மின்ன.

இ-ள். சக்கரம் - சக்கராயுதங்களும், உலக்கை - இருப்புலக்கைகளும், தண்டு - தண்டாயுதங்களும், தாரை - கூர்மையுள்ள, வாள் - வாளாயுதங்களும், பரிகம் - வளைதடிகளும், சங்கு - சங்குகளும், முற்கரம் முசுண்டி - இவ்வகைகளும், பிண்டிபாலம் - எறியீட்டிகளும், வேல் சூலம் முட்கோல் - இவைகளும், பொற்கரம் - பொன்னொளியுள்ள, குலிசம் - வச்சிராயுதங்களும், பாசம் - கயிறுகளும், புகர் - காந்தியுள்ள, மழு - பரசாயுதங்களும், எழு - எழுத்தண்டங்களும், பொற்குந்தம் - பொன்வடிம்புள்ளகைவேல்களும், வில் - விற்களும், கருங்கணை - பெரியஅம்புகளும், விட்டேறு - நெடுஞ்சூலங்களும், கழுக்கடை - கூறியகழுக்களும், எழுக்கள் - மற்றுமுள்ளபலவகை ஆயுதங்களும், மின்ன - விளங்க—எ-று. (அ)

பொன்னின்றுகளுலுந்தெய்வப்பூணினர்பொருப்புத்தோளர்
மின்னின்றபடையுங்கண்ணும்வெயில்விரிக்கின்றமெய்யர்
என்னென்றார்க்கென்னென்றூரெய்தியதறிந்திலாதார்
முன்னின்றார்முதுகுதீயப்பின்னின்றார்முடுகுகின்றார்.

இ-ள். பொன்நின்று - சுவர்ணமயமாகநிலைகொண்டு, கஞலும் - விளங்குகின்ற, தெய்வப்பூணினர் - திவ்வியாபரணங்களுள்ளவர்கள், பொருப்பு - மலைபோலும்,

தோளர் — புஜங்களுள்ளவர்கள், மின் நின்ற — ஒளிவிளங்குகிற, படையும் - ஆயுதங்களும், கண்ணும் — கண்களும், வெயில் - சூரியகிரணத்தைப்போல், விரிக்கின்ற — ஒளியைக்காட்டுகிற, மெய்யர் — சரீரமுள்ளவர்கள், என் என்றார்க்கு — செல்லாகுநிற்றல் ஏனென்று கேட்பவர்களுக்கு, என் என் - அப்படியே ஏன் ஏன், என்றார் — என்றுசொல்லலானார்கள், எய்தியது — செல்ல இடமில்லாமனிற்பது, அறிந்திலாதார்-தெரியாதவர்கள், முன் நின்றார் - முன்னேநின்றவர்கள், முதுகு — பின்புறம், தீய-வேவ, பின்நின்றார் — பின்னேநிற்றவர்கள், முடுகுகின்றார் — விரைவுசெய்கிறார்கள், அறிந்திலாதாரேனேனென்றாரெனக்கூட்டுக. முதுகுதீயமுடுகுதல் சினந்துசெல்லச்சொல்லுதல்—எ-று. (௯)

வெய்துறுபடையின்மின்னர்வில்லினர்வீசுகாலர்
மையுறுவிசும்பிற்றோன்றுமேனியர்மடிக்கும்வாயர்
கைபரந்துலகுபொங்கிக்கடையுகமுடியுங்காலைப்
பெய்யவென்றெழுந்தமாரிக்குவமைசால்பெருமைபெற்றார்.

இ-ள். வெய்து உறு - வெம்மைமிகுந்த, படையின் — ஆயுதங்களான, மின்னர் — மின்னலையுடையவர், வில்லினர் - இந்திரதனுசுபோல்வில்லுமுள்ளவர்கள், வீசு-மோதுகின்ற, காலர் — மூச்சுக்காற்றுமுள்ளவர்கள், மை உறு — கருமைமிகுந்த, விசும்பில் — மேகம்போலவே, தோன்றும் — காணப்படுகிற, மேனியர் - நிறமுள்ளவர்கள், மடிக்கும் - இதழைமடிக்கிற, வாயர் - வாயுமுள்ளவர்கள், கைபரந்து — கைகளாகியஅலைகள்பரவி, உலகு உலகமெல்லாம்பொங்கி — நிரம்புதலாய், கடையுகம் — யுகமுடிவுவந்து, முடியுங்காலை - எல்லாம் அழியும்போது, பெய்யவென்று — பொழியவேணுமென்று, எழுந்த - கிளர்ந்துகூடின, மாரிக்கு — மேககூட்டத்திற்கு, உவமைசால்-ஒப்பமைவதான, பெருமை பெற்றார் - பெரியதன்மை கொண்டுள்ளவர்கள்—எ-று. மின் வில் காற்று கரியநிறம் அம்புபெய்தல்முதலிய பலதிறத்தானும் உலகம் அழியப்பெய்யவெழுந்த மேக கூட்டத்தை ஒத்தனரென்க. (௧௦)

பனியுறுசெயலைசிந்தியோமமும்பறித்ததம்மா
தனியொருகுரங்குபோலாநன்றுநந்தருக்கென்கின்றார்
இனியொருபழிமற்றுண்டோவிதனினென்றிரைத்துப்பொங்கி
முனிவுறுமனத்திற்றாவிமுந்துறமுடுகுகின்றார்.

இ-ள். பனியுறு - குளிர்ச்சிமிகுந்த, செயலை — அசோகவனத்தை, சிந்தி-அழித்து, ஓமமும் — ஓமமண்டபத்தையும், பறித்தது - அம்மா வேரோடே தோண்டியழித்தது, தனி - தனியேவந்து, ஒரு குரங்குபோல் — ஒரு குரங்கு வடிவுள்ளதே, ஆம் - இதுமெய்யேயானால், நம்தருக்கு - நமது மனக்களிப்பு, நன்று — நன்றாயிருந்தது, என்கின்றார் - என்றுசொல்கிறார்கள், இதனின் - இதைப்பார்க்கிலும், இனி-இன்னமும், ஒருபழி - ஒருபழிப்பு, மற்று உண்டோ - நமக்கு வேறே விளையவேணுமோவேண்டா, என்று இரைத்து - என்றுமுழங்கி, பொங்கி — கொதித்து, முனிவுறு - கோபங்கொள்ளுகிற, மனத்தில் - மனோவேகத்துடனே, தாவி - தாண்டி, முந்துற - முன்னேசெல்ல, முடுகுகின்றார் - விரைவுகொள்கிறார்கள்—எ-று. (௧௧)

எற்றுறுமுரசும்வின்னாணேறவிட்டெடுத்தவார்ப்பும்
சுற்றுறுகழலுஞ்சங்குந்தெழிதெழித்துரப்புஞ்சொல்லும்
உற்றுடன்றொன்றாயோங்கியொலித்தெழுந்தூழிப்பேர்வில்
நற்றிறைக்கடல்களோடுமேழைகளைநாவடக்க.

இ-ள். எற்றுறு - கொட்டப்படுகிற, முரசும் - பேரிகைச்சத்தமும், வில்-வில்லிலே, நாண் ஏறவிட்டு - நாணையேற்றி, எடுத்த - குணத்தொனிசெய்கிற, ஆர்ப்பும் - சத்தமும், சுற்றுறு - காலிலே சூழக்கட்டின, கழலும் - வீரகண்டா மணியும், சங்கும் - சங்குகளும், தெழிதெழித்து - மிகமுழங்கி, உரப்பும் - அதட்டுகிற, சொல்லும் - சொல்முழக்கமும், உற்று - ஒருசேர்க்கையாய், உடன்று - மாறுகொண்டு, ஒன்ருய் - ஒரேமுழக்கமாய், ஓங்கி - உயர்ந்து, ஒலித்து - சத்தித்து, எழுந்து - எழுதலாகி, ஊழிப்பேர்வில் - யுகமுடிவிலேதோன்றுகிற, நல்திரை - பெரிய அலைகள் மிகுகின்ற, கடல்களோடு - கடல்களுடனே, மழைகளை - அக்காலத்துமேகத்தையும், நா அடக்க - ஒலிக்கும்வாய்களை அடங்கச்செய்வதாய்ச்செல்கிருர், நாணேறு என்ருல் - நாணுகிய இடிமுழக்கமென்க—எ-று. (கஉ)

தெருவிடமில்லென்றெண்ணிவானிடைச்செல்கின்ருரும்
புருவமுஞ்சிலையுங்கோட்டிப்புகையுயிர்த்துயிர்க்கின்ருரும்
ஒருவரினொருவர்முந்திமுறைமறுத்துருக்கின்ருரும்
விரிவிலதிலங்கையென்றுவழிபெருர்விளிக்கின்ருரும்.

இ-ள். தெரு - வீதியிலேநடக்க, இடமில்லென்று - இடமில்லையென்று, எண்ணி - நினைத்து, வானிடை - ஆகாயத்திலே, செல்கின்ருரும் - சிலர் செல்கிருர்கள், புருவமும் - புருவங்களையும், சிலையும் - வில்லையும், கோட்டி - வளைத்து, புகை உயிர்த்து - கோபாக்கினியால் வருகிற புகையைப்பெறுதலாய், உயிர்க்கின்ருரும்- சிலர் சுவாசிக்கிருர்கள், ஒருவரின் ஒருவர் - ஒருவனுக்கொருவன், முந்தி - முன்னிட்டு, முறைமறுத்து - அடைவுகேடராய், உருக்கின்ருரும் - சிலர் கோபங்கொள்கிருர்கள், இலங்கை - அந்த அந்த இலங்காபுரி, விரிவிலதென்று - அகலமில்லையென்று, வழிபெருர் - நடக்கவழிகிடையாதவர்களாய், விளிக்கின்ருரும் - சிலர்தம்மோடு பொருதவல்லவனைக் கூப்பிடுகிருர்கள்—எ-று. விளித்தல் - அழைத்தல், உம் எல்லாம் - அசைகளென்க. (கங)

வாளுறைவிதிர்க்கின்ருரும்வாயினைமடிக்கின்ருரும்
தோளுறத்தட்டிக்கல்லைத்துகள்படத்துகைக்கின்ருரும்
தாள்பெயர்த்திடம்பெருதுதருக்கினர்நெருக்குவாரும்
கோள்வளையெயிறுதின்றுதீயெனக்கொதிக்கின்ருரும்.

இ-ள். வாள் - கத்தியை, உறை - உறையினின்று, விதிர்க்கின்ருரும் - சிலருருவுகிருர்கள், வாயினை - வாயிதழை, மடிக்கின்ருரும் - சிலர் மடிக்கின்ருர்கள், தோள் - புஜங்களை, உற - அதிகமாக, தட்டி - கொட்டி, கல்லை - கீழுள்ளகற்களை, துகள்பட - தூள்தூளாக, துகைக்கின்ருரும் - சிலர் மிதிக்கின்ருர்கள், தாள்பெயர்த்து - கால்களை எடுத்துவைத்து, இடம்பெருது - ஊன்ற இடங்கிடையாமல், தருக்கினர் - கெருவங்கொண்டவர்களாய், நெருக்குவாரும் - சிலர் நெருக்குகிருர்கள், கோள்வளை - வளைவுகொண்ட, எயிறு தின்று - பல்லைக்கடித்து, தீயென - நெருப்பைப்போல், கொதிக்கின்ருரும் - சிலர்மனங்கொதிக்கிருர்கள்—எ-று. (கச)

வேறு.

அனைவருமலையெனநின்ருரளவறுபடைகள்பயின்ருர்
அனைவருமமரினுயர்ந்தாரகலிடநெளியநடந்தார்
அனைவரும்வரனினமைந்தாரசனியினணிகளணிந்தார்
அனைவருமமரரைவென்ருரசுரரையுயிரையயின்ருர்.

இ-ள். அனைவரும் - எல்லாரும், மலையென - மலைபோல், நின்றார் - வந்து நின்றார்கள், அளவறு - அளவற்ற, படைகள் - ஆயுதவரிசைகளெல்லாம், பயின்றார்-கற்றவர்கள், அனைவரும் - எல்லாரும், அமரின் - யுத்தஞ்செய்வதிலே, உயர்ந்தார்-மேலானவர்கள், அகலிடம் - அகன்றபூமியின், நெளிய - முதுகுசுளிக்க, நடந்தார்-சென்றார்கள், அனைவரும் - எல்லாரும், வரனின் - வரபலத்தை, அமைந்தார்-கொண்டவர்கள், அசனியின் - இடிமுழக்கம்போலொலிக்க, அணிகள் - வீரக்கழல்களை, அணிந்தார் - இறுகக்கட்டினார்கள், அனைவரும் - எல்லாரும், அமரரை-தேவர்களை, வென்றார் - ஜெயங்கொண்டவர்கள், அசுரரை - அசுரர்களுடைய, உயிரை-பிராணவாயுவை, அயின்றார் - பாம்புபோலுண்டவர்கள்—எ-று. (கரு)

குறுகினகவசருமின்போற்குரைகழலுரகரும்வன்போர்
முறுகினபொழுதினுடைந்தார்முதுகிடைமுறுவல்பயின்றார்
இறுகினநிதிகிழவன்பேரிசைகெடவளகையெறிந்தார்
தெறுகுநரின்மையர்வன்றோடினவுறவுலகுதிரிந்தார்.

இ-ள். குறுகின - குறைதலான, கவசரும் - சட்டையிட்டிருக்கிற சித்தரும், மின்போல் - மின்போலொளிவிடுகிறதாய், குரை - சத்திக்கிற, கழல் - வீரக்கழலணிந்த, உரகரும் - உரகசாதியும், வன்போர்-வலியபோரிலே, முறுகினபொழுதின் - அதிகமான காலத்தில், உடைந்தார் - தோற்றுரா யோடுகிறவர்கள், முதுகிடை - முதுகைக்கண்டு, முறுவல்பயின்றார் - சிரிக்கக்கற்றவர்கள், இறுகின - நிலைகொண்ட, நிதி - சங்கநிதி பதுமநிதிகளுக்கு, கிழவன் - பாத்தியனான குபேரனுடைய, பேரிசை - பெருங்கீர்த்தி, கெட - அழிய, அளகை - அளகாபுரியை, எறிந்தார் - இடித்தவர்கள், தெறுகுனர் - தம்மைவெல்லவல்லவரை, இன்மையர் - இல்லாதவர்கள், வன்தோள் - வலியதோள்கள், தினவுற - நமைச்சலுண்டாகையாலே, உலகு - உலகமெல்லாம், திரிந்தார் - சண்டைசெய்ய அலைந்தவர்கள்—எ-று. குறுகினகவசம் அரைச்சட்டை. (கசு)

வரைகளையிடறுமினென்றான்மறிகடல்பருகுமினென்றால்
இரவியைவிழவிடுமென்றாலெழுமழைபிழியுமினென்றால்
அறவினதரசனையொன்றேதரையினொடரையுமினென்றால்
தரையினையெடுமெடுமென்றாலொருவரதமைதல்சமைந்தார்.

இ-ள். வரைகளை - மலைகளை, இடறுமினென்றால் - உந்துங்களென்றாலும், மறிகடல் - அலைபுரளுகிறகடலை, பருகுமினென்றால் - குடியுங்களென்றாலும், இரவியை - சூரியனை, விழவிடுமென்றால் - தள்ளிவிடுங்களென்றாலும், எழுமழை-எழுமேகங்களையும், பிழியுமினென்றால் - பிழிந்துவிடுங்களென்றாலும், அரவினதரசனை-சர்ப்பராஜனை, ஒன்றே-ஒருவகையாகவோ, தரையினொடு-பூமியோடேசேர, அரையுமினென்றால் - அரைத்துவிடுங்களென்றாலும், தரையினை-பூமியை, எடும் எடுமென்றால் - எடுங்கள் எடுங்களென்றாலும், ஒருவர் - அவரிலொருவரே, அது - அச்செய்கை, அமைதல் - செய்தலுக்கு, சமைந்தார் - தக்கவர்கள்—எ-று. (கஎ)

தூளியினிமிர்படலம்போயிமையவர்விழிதுறவெம்போர்
மீளியினினமெனவன்றாள்விரைபுலிநிரையெனவிண்டோய்
ஆளியினணியெனவன்றேலலைகடல்விடமெனவஞ்சா
வாளியின்விசைகொடுதிண்கார்வரைவருவனவெனவந்தார்.

இ-ள். தூளியின் – பூதுளிகளின், நிமிர் – உயர்தலான, படலம்போய்-பரப்புச்சென்று, இமையவர் – தேவர்களுடைய, விழிதுற – கண்களிற்புகுத, வெம்போர்-வெவ்வியசண்டைசெய்யவல்ல, மீளியின் – சிங்கங்களின், இனமென – கூட்டம்போலவும், வன்தாள் - வலியகால்களாலே, விரை – வேகஞ்செய்வதான, புலிநிரையென-புலிக்கூட்டங்கள்போலவும், விண்தோய் – ஆகாசத்தளவுபாயவல்ல, ஆளியின்-யாளியின், இனமென – கூட்டம்போலவும், அன்றேல் – இவைகளல்லவாயில், அலைகடல் – அக்கடலிலேதோன்றின, விடமென – நஞ்சுபோலவும், அஞ்சா-அஞ்சாமல், வாளியின் – பாணத்தினது, விசைகொடு – வேகங்கொண்டு, திண்-பலமுள்ள, கார்வரை – கரியமலைகள், வருவனவென – நடந்துவருவனபோல், வந்தார் – வந்துகூடினார்கள்—எ-று. (கஅ)

பொறிதரவிழியுயிரொன்றேபுகையுகவயிலொளிமின்போல்
செறிதரவுருமதிர்கின்றார்திசைதொறும்விசைகொடுசென்றார்
எறிதருகடையுகவன்காலிடறிடவுருமினினம்போய்
மறிதரமழையகல்விண்போல்வடிவழிபொழிலைவளைந்தார்.

இ-ள். விழி – கண்களிலே, பொறிதர – நெருப்புப்பொறி தோன்ற, உயிரொன்றே-நெடுமூச்சுமாத்திரமோ, புகையுக-அதுடனே புகையும்வர, அயிலொளி-வேலினதுகாந்தி, மின்போல் – மின்னலைப்போல், செறிதர-நெருங்குதலாக,உரும்-இடிபோல், அதிர்கின்றார் - முழங்குகிறார்கள், திசைதொறும் - நான்குதிக்கிலும், விசைகொடு - வேகங்கொண்டு, சென்றார் - செல்லலானார்கள், எறிதரு-வீசுகின்ற, கடையுகம் - முடிவுகாலத்து, வன்கால் – பிரசண்டவாயு, இடறிட – தடுமாறவும், உருமினினம் - இடிக்கூட்டங்கள், போய் - தூரச்சென்று, மறிதர - மடங்குதலாகவும், மழை – மேகசஞ்சாரம், அகல் – நீங்குதலான, விண்போல்-ஆகாயம்போல், வடிவுஅழி-மரவுருமாய்ந்துகிடக்கிற, பொழிலை - அசோகவனத்தை, வளைந்தார் – சூழ்ந்தார்கள்—எ-று. (கக)

வயிரொலிவளையொலிவன்கார்மழையொலிமுரசொலிமண்பால்
உயிருலைவுறநிமிரும்போருருமொலிசெவியினுணர்ந்தான்
வெயில்விரிகதிரவனும்போய்வெருவிடவெளியிடைவிண்டோய்
கயிலையின்மலையெனநின்றானனையவர்வருதொழில்கண்டான்.

இ-ள். வயிரொலி – கொம்பினொலியும், வளையொலி-சங்கினொலியும், வன்-பலமான, கார் - மழைகாலத்து, மழையொலி – மேகமுழக்கம்போன்ற, முரசொலி-பேரிகைச்சத்தமும், மண்பால்-உலகத்துள்ள, உயிர் – உயிர்களெல்லாம், உலைவுற-நடுநடுங்க, நிமிரும் – அதிகரித்துவருகிற, போர் - யுத்தசன்னகமான, உருமொலி-இடிபோன்ற கெர்ச்சிதவொலியும், செவியின் - காதில்விழ, உணர்ந்தான் - தெரிந்தாராய், வெயில்விரி – கிரணங்களைவிரிக்கிற, கதிரவனும் - சூரியனும், போய்-விலகிப்போய், வெருவிட-பயங்கொள்ள, வெளியிடை - ஆகாயத்துள்ள, விண்தோய்-மேகமண்டலத்தைஅளாவுகிற, கயிலையின்மலையென-வெள்ளிமலைபோல், நின்றான்-நின்ற அனுமார், அனையவர் – அந்தக்கிங்கரர், வருதொழில் – வருகிறசெய்கையை, கண்டான் - பார்த்தார்—எ-று. (உ0)

இதவியலிதுவெனமுந்தேயியைவுறவினிதுதெரிந்தான்
பதவியலறிவுபயந்தாலதினலபயனுளதுண்டோ
சிதவியல்கடிபொழிலொன்றேசிதறியசெயறருதிண்போர்
உதவியலினிதினுவந்தானெவரினுமதிகமுயர்ந்தான்.

இ-ள். இதவியல் – செய்தற்குரியதான இயல்பு, இதுவென – இப்படியென்று, முந்தே – முன்புதானே, இயைவுற – பொருத்தமாக, இனிது – நன்றாக, தெரிந்தான் – இப்பொழிலினைக் கடிதிறுக்குவனென்றபாட்டில் யோசித்தவராதலாலே, பதவியல் – பக்குவமானவியல்புள்ள, அறிவு – விவேகம், பயந்தால் – உண்டானால், அதின் – அதைப்பார்க்கிலும், நலபயன் – நல்லபயனைத்தருவது, உளதுண்டோ-வேறொன்றுளதாவதில்லை, சிதவியல் – ஜயத்தைத்தருமியல்புள்ளது, கடிபொழில்-இந்தக்காவலையுடையசோலை, ஒன்றே – ஒன்றினாலேதானே இன்னம், சிதறிய – அழித்தற்கேதுவான, செயல்தரு – செய்கையைத்தருகிற, திண்போர் – வலிதானசண்டையை, உதவுஇயல் – எனக்குத்தந்தஇயல்பு இந்தவனத்தை அழித்ததல்லவோவென்று, இனிதின் – நன்றாக, உவந்தான் – சந்தோஷித்தார், எவரினும் – எல்லாரிலும், அதிகம் – அறிவாலும் திறலாலும் அதிகமாக, உயர்ந்தான் – உயர்ந்துள்ள அனுமார், இயல் – சிறப்பு—எ-று. (உ௧)

இவனிவனிவனெனநின்றாரிதுவெனமுதலியெதிர்ந்தார்
பவனனின்முடுகிநடந்தார்பகலிரவுறமிடைகின்றார்
புவனியுமலையும்விசும்பும்பொருவருநகருமுடன்போர்த்
துவனியிலதிரவிடம்போற்சுடர்விடுபடைகடுரந்தார்.

இ-ள். இவன்இவன் இவன்என – இப்படிக்குறிப்பித்து, நின்றார் – நின்றார் சிலர், இதுவென – இந்தக்குரங்குதான் வனத்தை அழித்ததென்று, முதலி – முற்பட்டு, எதிர்ந்தார் – எதிரேசென்றார்கள்சிலர், பவனனில்-வாயுவைப்போல், முடுகி-விரைந்து, நடந்தார் – நடக்கலானார்கள் சிலர், பகல் – அந்தப்பகற்காலமும்,இரவுற-இராக்காலமாகஇருள, மிடைகின்றார் – நெருங்குகிறார்கள் சிலர், புவனியும் – உலகமும், மலையும் – மலைகளும், விசும்பும் – ஆகாயமும், பொருவரு – ஒப்பில்லையான, நகரும் – அந்தஊரும், உடன் – ஒருசேர, போர்த்துவனியில் – அவர்கள் யுத்தமுழக்கத்தினாலே, அதிர – நடுங்குவதாக, விடம்போல் – நஞ்சுப்போல்வனவான, சுடர்விடு-ஒளிவீசுகிற, படைகள் – அஸ்திரசஸ்திரங்களை, துரந்தார் – சிலர் விடலானார்கள் எ-று. நஞ்சுபோற் சுடர்விடுதல் விஷாக்கினிபோல் சுவலித்தல். (உஉ)

மழைகளுமறிகடலும்போய்மதமறமுரசமறைந்தார்
முழைகளினிதழ்கடிறந்தார்முதுபுகைகதுவமுனிந்தார்
பிழையிலபடவரவின்றோள்பிடருறவடியிடுகின்றார்
கழைதொடர்வனமெரியுண்டாலெனவெரிபடைஞர்கலந்தார்.

இ-ள். மழைகளும் – மேகங்களும், மறி – அலைகள்மடங்குகிற, கடலும் – சமுத்திரங்களும், போய் – தூரவிலகி, மதம்அற – தமதுபெருமைகுலைய, முரசம்-பேரிகைகளை, அறைந்தார் – கொட்டினார்கள்சிலர், முழைகளின் – குகைகள்போல், இதழ்கள் – வாய்களை, திறந்தார் – விழுங்க அங்காந்தார்கள்சிலர், முதுபுகை – அதிகமானபுகைகள், கதுவ – உண்டாக, முனிந்தார் – கோபங்கொண்டார்கள் சிலர், பிழையில – தோஷமில்லையான, படம் – படங்களையுடைய, அரவின் – ஆதிசேடனது, தோள் – தோளும், பிடர் – பிடரும், உற – அழுந்த, அடியிடுகின்றார் – சிலர் மிதிக்கிறார்கள், கழைதொடர் – மூங்கில்களைநெருங்கின, வனம் – காடுகளிலே,' எரியுண்டாலென – நெருப்புவிழுந்தாற்போல, எரி – சுவாலிக்கிற, படைஞர் – ஆயுதங்களுள்ள சிலர், கலந்தார் – கிட்டினார்கள்—எ-று. (உ௩)

அறவனுமதனையறிந்தானருகினிலழகினமைந்தார்
இறவினினுதவுநெடுந்தாருயர்மரமொருகையியைந்தான்

உறவருதுணையெனவன்றோவுதவியவதனையுவந்தான்
நிறைகடல்கடையுநெடுந்தாண்மலையெனநடுவணிமிர்ந்தான்.

இ-ள். அறவனும் - தருமரூபியான அனுமார், அதனை - அப்படி அவர்கள் வந்ததை, அறிந்தான் - தெரிந்தாராய், அருகினில் - தமதுபக்கத்திலே, அழகினமைந்தார் - யுத்தவேஷங்கொண்டுவந்தவர்கள், இறவினின் - இறத்தலுக்கு, உதவு - உதவிசெய்வதான, நெடுந்தார் - நீண்டவொழுங்குள்ளதாய், உயர்மரம் - உயர்ந்தவொரு மரத்தை, ஒருகை - தமதொருகையிலே, இயைந்தான் - கொண்டார் அம்மரத்தை, உறவரு - நமக்குப்பொருந்தவருவதான, துணையென அன்றோ - துணையென்று நினைக்கவல்லவோ, உதவியஅதனை - கொடுத்த அவ்வனத்தை, உவந்தான் - மிகவுஞ் சந்தோஷித்தவராய், நிரைகடல் - நிறைந்தகடலை, கடையும் - கடைவதான, நெடுந்தாள் - நீண்ட அடியையுடைய, மலையென - மந்தரகிரிபோல், நடுவண் - அவர்கள் நடுவிலே, நிமிர்ந்தான் - உயர்ந்துநின்றார்—எ-று. (உச)

பருவரைபுரைவனவன்றோள்பனிமலையருவிநெடுங்கால்
சொரிவனபலவெனமண்டோய்துறைபொருகுருதிசொரிந்தார்
ஒருவரையொருவர்தொடர்ந்தாருயர்தலையுடையவுருண்டார்
அருவரைநெரியவிழும்பேரசனியுமசையவறைந்தான்

இ-ள். பருவரை - பருத்தமலையை, புரைவன - ஒப்பாயினவான, வன்றோள் - தமதுவலியதோள்களாலே, பனிமலை - இமையமலையானதுபலவாய், அருவி-அருவிகளான, நெடுங்கால் - நீண்டவாய்க்கால்களை, பல - அநேகமாக, சொரிவனவென - சிந்துகின்றனவென்ன, மண்தோய் - பூமியிலேபடிகிற, துறைபோரு - துறைகளையுடைய ஆறுகள்போல் அலைமோதுகின்ற, குருதி - ரக்தவெள்ளங்களை, சொரிந்தார் - ஒழுகவிட்டவர்களாய், ஒருவரை யொருவர் - ஒருத்தனை மற்றொருத்தன், தொடர்ந்தார் - பின்பற்றினவனுகி, உயர்தலை - உயர்ந்ததலைகள், உடைய - உடைபடுதலாய், உருண்டார் - கீழேஉருள்வதானார்கள், அருவரை - பெரியமலைகளும், நெரிய - தகர, விழும் - விழுவதான, பேர் - பெரிய, அசனியும் - இடியும், அசைய-நடுங்க, அறைந்தான் - பருவரை புரைவனவன்றோளிலே அம்மரத்தைக்கொண்டு மோதினர்—எ-று. (உ௫)

பறைபுரைவிழிகள்பறிந்தார்படியிடைநெடிதுபடிந்தார்
பிறைபுரையெயிறுமிழந்தார்பிடரொடுதலைகள்பிளந்தார்
குறையுயிர்சிதறநெரிந்தார்குடரொடுகுருதிகுழைந்தார்
முறைமுறைபடைகளெறிந்தார்முடையுடன்மறியமுறிந்தார்.

இ-ள். பறை - அகன்றவாயுள்ள தோட்பறையை, புரை-ஒப்பான, விழிகள்-கண்கள், பறிந்தார் - சிலர்தெறிபட்டார்கள், படியிடை - பூமியிலே, நெடிது - நீளநீளமாக, படிந்தார் - சிலர்விழுந்தார்கள், பிறை - பாதிச்சந்திரனை, புரை-ஒப்பான, எயிறும் - பற்களும், இழந்தார் - சிலர்ஒடிந்தார்கள், பிடரொடு - பிடரியுடனே, தலைகள் - தலைகளும், பிளந்தார் - சிலர் பிளவுபட்டார்கள், குறையுயிர் - குற்றுயிராக, சிதற - உடல்சிதைவுபட்டு, நெரிந்தார் - சிலர் நெரிதலானார்கள், குடரொடு - குடலுடனே, குருதி - ரக்தமுங்கூடி, குழைந்தார் - சிலர் குழைவுபட்டார்கள், முறைமுறை - வரிசைவரிசையாய்நின்று, படைகள் - ஆயுதங்கள், 'எறிந்தார் - வீசின கிங்கரர்களிற்சிலர், முடை - நாற்றம்பொருந்தின, உடல்மறிய - தேகம்பிளக்க, முறிந்தார் - முறிவுபட்டார்கள்—எ-று. தோட்பறையாவது ஒருதோளிலே சேர மார்பிலும் இடக்கையிலுங் கொண்டு கொட்டுகிற ஓர்வகைவாச்சியம். (உசு)

புடையொடுவிடுகனலின்காய்பொறியிடைமயிர்கள்புகைந்தார்
தொடையொடுமுதுகுதுணிந்தார்சுழிபடுகுருதிசொரிந்தார்
படையிடையொடியநெடுந்தோள்பறிதரவயிறுதிறந்தார்
இடையிடைமலையின்விழுந்தாரிகல்பொரமுடுகியெழுந்தார்.

இ-ள். புடையொடு — அனுமாரடிக்கிற அடியுடனே, விடு — வேகத்தால்வருகிற, கனலின் — நெருப்பினாலே, காய் — சுடுகிற, பொறியிடை — பொறிகள்பட்டு, மயிர்கள் — உரோமங்கள், புகைந்தார் — புகைதலாய்நாறினார்கள்சிலர், தொடையொடு — தொடைகளுடனே, முதுகு — முதுகும், துணிந்தார் - துண்டு துண்டானார்கள் சிலர், சுழிபடு — சுழலுண்டாகுகின்ற, குருதி - ரக்தப்பிரவாகங்களை, சொரிந்தார்-சிந்தினார்கள் சிலர், படையிடை — தாங்கொண்ட ஆயுதங்களினடு, ஒடிய - முறிய, நெடுந்தோள் — நீண்டதோள்கள், பறிதர - துண்டித்துவிழ, வயிறு - உதரமுழுதும், திறந்தார் — கிழிந்தார்கள்சிலர், இடைஇடை — அங்கங்கே, மலையின் - மலைகள்போல், விழுந்தார் — கீழேவிழுந்தார்கள்சிலர், இகல்பொர — சண்டைசெய்ய, முடுகி — விரைந்து, எழுந்தார் — சிலர்எழுந்துவந்தார்கள்—எ-று. (உஎ)

புதைபடவிருளின்மிடைந்தார்பொடியிடைநெடிதுபுரண்டார்
விதைபடுமுயிரர்விழுந்தார்விளிவொடுவிழியுமிழந்தார்
கதையொடுமுதிரமலைந்தார்கணைபொழிசிலையர்கலந்தார்
உதைபடவுரனுநெரிந்தாருதரொடுகுருதியுமிழ்ந்தார்.

இ-ள். புதைபட — எங்குமறைவாக, இருளின் — இருள்போல், மிடைந்தார்-நெருங்கினவர்களிலேசிலர், பொடியிடை — பூதூளியிலே, நெடிது — நீளநீளமாக, புரண்டார்சிலர் — புரளலானார்கள், விதைபடும் - சிந்திப்போன, உயிரர் — உயிருள்ளவர்களாய், விழுந்தார் — சிலர்விழுந்தார்கள், விளிவொடு - சாதலுடனே, விழியும் — கண்களும், இழந்தார் — சிலர்போனார்கள், கதையொடு — தண்டாயுதத்துடனே, முதிர-அதிகமாக, மலைந்தார் - சண்டைசெய்தவர்களும், கணைபொழி — அம்புகளைப் பெய்கிற, சிலையர் - வில்லாளிகளாக, கலந்தார் — நெருங்கினவர்களிற்சிலர், உதைபட-அனுமாராலுதைபடுதலாலே, உரனும் - மார்புமுதுகும், நெரிந்தார் - ஒடிந்தார்கள், உதரொடு — வயிற்றுடனே, குருதி — ரக்தமும், உமிழ்ந்தார் — சிலர் சிந்தினார்கள்-எ-று.

அயலயன்மலையொடறைந்தானடுபகையளகையடைந்தார்
வியலிடமறையவிரிந்தார்மிசையுலகடையமிடைந்தார்
புயலொடுகடலின்விழுந்தார்புடைபுடைசிதைவொடுசென்றார்
உயர்வுறவிசையினெறிந்தானுடலொடுமுலகுதுறந்தார்.

இ-ள். அளகை — அளகாபுரியை, அடு — வெல்லுகிற, பகை-சத்துருக்களாக, அடைந்தார் — முன்னேசென்று வென்ற அவர்களை, அயலயல் — நான்குபுறத்துமுள்ள, மலையொடு — மலைகளுடனே, அறைந்தான் — மோதினார் அதனாலே யிறந்து, வியவிடம் — அகன்ற அவ்விடமெல்லாம், மறைய — மறைவாக, விரிந்தார் — உடல்கள் அதிகமாகக்கிடந்தார்கள், மிசையுலகு — மேலுலகம், அடைய — முழுதும், மிடைந்தார்-உயிர்கள்நெருங்கலானார்கள் சிலர், புயல்தொடு — மேகங்கள்மேய்கிற, கடலின் — கடலிலேபோய், விழுந்தார் - சிலர்விழுந்தார்கள், புடைபுடை - நான்குபுறத்திலும், சிதைவொடு — காயங்களுடனே, சென்றார் - சிலர்போனார்கள், உயர்வுற — மேலேசெல்ல, விசையின் - வேகங்கொண்டு, எறிந்தான் - சிலரைவாரியெறிந்தான் அவர்கள்,

உடலொடும் - தம்முடலுடனே, உலகு - தாம்வாழ்ந்த ஊரையும், துறந்தார் - விட்டுப்போனார்கள் சிலர்—எ-று. அயல் - புடை என்பன இடம். (உகூ)

வேறு.

பற்றித்தாளொடுதோள்பறித்தெறிந்தனன்பாரின்
இற்றவெஞ்சிறைவெற்பினமாமெனக்கிடந்தார்
கொற்றவாலிடைக்கொடுந்தொழிலரக்கரையடங்கச்
சுற்றிவீசலிற்பம்பரமாமெனச்சுழன்றார்.

இ-ள். பற்றி - அவர்களைப்பிடித்து, தாளொடு - கால்களுடனே, தோள்-தோள்களையும், பறித்து - ஒடித்தொடித்து, எறிந்தனன் - சிலரைஎறிந்தார் அவர்கள், பாரின் - உலகத்திலே, வெம்சிறை - வெவ்விதான இறகுகள், இற்ற - ஒடிந்த, வெற்பினம் - மலைக்கூட்டங்களே, ஆமென - நிகரென்னும்படி, கிடந்தார் - கிடப்பதானார்கள், கொற்றம் - வெற்றிபொருந்தின, வாலிடை - வாலாலே, கொடுந்தொழில் - கொடியசெய்கையுடைய, அரக்கரை - ராக்ஷதர்களை, அடங்க - அடங்கும்படி, சுற்றி - சூழக்கட்டி, வீசலில் - உதறுதலாலே, பம்பரம் ஆமென - பம்பரம் ஆடுவதுபோல், சுழன்றார் - சுழலலானார்கள் சிலர்—எ-று. (௩0)

வாள்களிற்றனவிற்றனவரிசிலைவயிரத்
தோள்களிற்றனவிற்றனசுடர்மழுச்சூலம்
நாள்களிற்றனவிற்றனநகையெயிற்றீட்டம்
தாள்களிற்றனவிற்றனபடையுடைத்தடக்கை.

இ-ள். வாள்கள் - கத்திகளும், இற்றன - ஒடிதலாயின, வரிசிலை - வரிந்துள்ளவிற்களும், இற்றன - ஒடிதலாயின, வயிரம் - வயிரமலைபோன்ற, தோள்கள்-புஜங்களும், இற்றன - ஒடிதலாயின, சுடர் - காந்தியுள்ள, மழு - மழுக்களும், சூலம்-சூலங்களும், இற்றன - ஒடிதலாயின, நாள்கள் - நக்ஷத்திரங்கள், இற்றன - உதிர்ந்தாற்போல, நகை - விளங்குகின்ற, எயிற்றீட்டம் - பல்லின்கூட்டங்கள், இற்றன-உடைந்துதிர்ந்தன, தாள்கள் - கால்களும், இற்றன - ஒடிந்தன, படையுடை - ஆயுதங்கள்பற்றின, தடக்கை - நீண்டகைகளும், இற்றன - ஒடிதலாயின—எ-று. (௩க)

தெறித்தவன்றலைதெறித்தனசெறிசுடர்க்கவசம்
தெறித்தபைங்கழல்தெரித்தனசிலம்பொடுபொலந்தார்
தெறித்தபன்மணிதெறித்தனபெரும்பொறித்திறங்கள்
தெறித்தகுண்டலந்தெறித்தனகண்மணிசிதறி.

இ-ள். வன்றலை - வலியதலைகள், தெறித்த - உடைந்து தெறிப்பதாயின, செறிசுடர் - நெருங்கினகாந்தியுள்ள, கவசம் - சீராக்களும், தெறித்தன - கிழிந்து தெறிப்பதாயின, பைங்கழல் - பசும்பொன்னாலான வீரக்கழல்களும், தெறித்த - உடைந்துதெறிப்பதாயின, சிலம்பொடு - சத்திப்பதுடனே, பொலம் - பொன்னாலே செய்த, தார் - அரையிற்கட்டின கிங்கிணிமாலைகளும், தெறித்தன - உடைந்துதெறிப்பதாயின, பன்மணி - ஆபரணங்களிலுள்ள பலவகைரத்நங்களும், தெறித்த-தெறித்துதிர்ந்தன, பெரும் - பெரிதாகிய, பொறித்திரங்கள் - உடலின் பொருத்துவகைகள், தெறித்த - கழன்றுசிந்தின, குண்டலம் - காதணிகள், தெறித்தன - தகர்ந்துதிர்ந்தன, கண்மணி - கண்ணின்மணிகள், சிதறி - சிதறுதலாய், தெறித்தன-தெறித்துவிழுந்தன சிலம்புகளுடனே எனவுமாம்—எ-று. (௩உ)

உக்கபற்குவையுக்கனதுவக்கெலும்புதிர்வுற்
றுக்கமுற்கரமுக்கனமுசுண்டிகளுடைவுற்
றுக்கசக்கரமுக்கனவுடறிறந்துயிர்கள்
உக்ககற்பணமுக்கனவுயர்மணிமகுடம்.

இ-ள். பற்குவை — பல்லின்கூட்டங்கள், உக்க-உதிர்ந்தன, துவக்கு-உடம்பிலுள்ள, எலும்பு - எலும்புகள், உதிர்வுற்றுக்கன - வெவ்வேறுயுதிர்ந்தன, முற்கரம்-பாங்குகள்ஒடிந்து, உக்க-சிந்தின, முசுண்டிகள் — முள்ளம்புகளும், உக்கன — ஒடிந்துதிர்ந்தன, சக்கரம் — சக்கரங்கள், உடைவுற்று - உடைந்து, உக்க - உதிர்ந்தன, உடல்திறந்து — தேகங்கள்பிளந்து, உயிர்களுக்கன — பிராணன்கள்சிந்தின, கற்பணம் — கல்வட்டங்களும், உக்க — உடைந்துதிர்ந்தன, உயர் — உயர்ந்த, மணிமகுடம்-ரத்நகிரீடங்களும், உக்கன - உடைந்துசிந்தின—எ-று. (௩௩)

தாள்களாற்பலர்தடக்கைகளாற்பலர்தாக்கும்
தோள்களாற்பலர்சுடர்விழியாற்பலர்தொடரும்
கோள்களாற்பலர்குத்துகளாற்பலர்தத்தம்
வாள்களாற்பலர்மரங்களினற்பலர்மடிந்தார்.

இ-ள். தாள்களால் — அனுமார்கால்களாலே, பலர் - அநேகரும், தடக்கைகளால் — நீண்டகைகளாலே, பலர் - அநேகரும், தாக்கும்-மோதுவனவான, தோள்களால் — புஜங்களாலே, பலர்-அநேகரும், சுடர் - பிரகாசமான, விழியால் - கண்பார்வையாலே, பலர் — அநேகரும், தொடரும் — தொடர்ந்துசெல்கிற, கோள்களால்-கொள்கைகளாலே, பலர் - அநேகரும், குத்துகளால் - கைக்குத்துகளாலே, பலர்-அநேகரும், தத்தம் - அவ்வவர், வாள்களால் - கத்திகளாலேதானே, பலர் — அநேகரும், மரங்களினல்-மரத்தடியாலே, பலர் - அநேகருமாக, மடிந்தார் - இறந்தார்கள் எ-று. கொள்கைபிடித்துக்கொள்ளுதல். (௩௪)

ஈர்க்கப்பட்டனர்சிலர்சிலரிடிப்புண்டுபட்டார்
பேர்க்கப்பட்டனர்சிலர்சிலர்பிடியுண்டுபட்டார்
ஆர்க்கப்பட்டனர்சிலர்சிலரடியுண்டுபட்டார்
பார்க்கப்பட்டனர்சிலர்சிலர்பயமுண்டுபட்டார்.

இ-ள். சிலர்ஈர்க்க - சிலர் பற்றியிழுத்தலாலே, பட்டனர்-இறந்தார்கள், சிலரிடிப்புண்டு - சிலர்மோதுண்டு, பட்டார் - இறந்தார்கள், சிலர்பேர்க்க - சிலர்பெயர்ந்துநடக்கும்போதே, பட்டனர் - இறந்தார்கள், சிலர்பிடியுண்டு - சிலர்கைப்பிடியினலே, பட்டார் - இறந்தார்கள், சிலர்ஆர்க்க - சிலர் அனுமார்கெர்ச்சித்ததினலே, பட்டனர் - இறந்தார்கள், சிலரடியுண்டு - சிலர்மரத்தடிபட்டு, பட்டார் - இறந்தார்கள், சிலர்பார்க்க - சிலர்பார்க்கிறதினலேயே, பட்டனர் - இறந்தார்கள், சிலர் பயமுண்டு - சிலர்பயமுண்டாகியதனலே, பட்டார் - இறந்தார்கள்—எ-று. (௩௫)

ஓடிக்கொன்றனன்சிலவரையுடலுடரேறும்
கூடிக்கொன்றனன்சிலவரைக்கொடிநெடுமரத்தால்
சாடிக்கொன்றனன்சிலவரைப்பிணக்தொறுந்தடவித்
தேடிக்கொன்றனன்சிலவரைக்கறங்கெனத்திரிவான்.

இ-ள். ஓடி - ஓடுதலாலே, சிலவரை - சிலரை, கொன்றனன் — கொன்றார், சிலவரை - சிலரை, உடல் - பொருதுகின்ற, உடல்தோறும் - சரீரங்களெல்லாம்,

கூடி – சேரச்சென்று, கொன்றனன் – கொன்றார், சிலவரை – சிலரை, கொடிநெடு- கொடிபோல்நீளமான, மரத்தால் – மரத்தினாலே, சாடி – அடித்து, கொன்றனன் - கொன்றார், சிலவரை – சிலரை, பிணந்தொறும் – பிணங்கள் முழுதும், தடவி – விசாரித்து, தேடி – உயிருள்ளதுதெரிந்து, கொன்றனன் – கொன்றார், சிலவரை-சிலரை, கறங்கென – காற்றாடிபோல், திரிவான் – சுழன்றுதிரிகிற அனுமார்—எ-று.()

முட்டினார்படமுட்டினான்முறைமுறைமுடுகிக்
கிட்டினார்படக்கிட்டினான்கிரியெனநெருங்கிக்
கட்டினார்படக்கட்டினான்கைகளின்மெய்யிற்
றட்டினார்படத்தட்டினான்மலையெனத்தகுவான்.

இ-ள். முட்டினார் – மோதினவர்கள், பட – சாவ, முட்டினான் – மோதினார், முறைமுறை – வரிசைவரிசையாய், முடுகி – விரைந்து, கிட்டினார் – நெருங்கினவர்கள், பட – சாவ, கிட்டினான் – நெருங்கினார், கிரியென – மலைபோல்வந்து, நெருங்கி- நெருக்கமாக, கட்டினார் – கைகளாலிறுகப்பிடித்தவர்கள், பட – சாவ, கைகளிற்கட்டினான் – தம்முடையகைகளாலிறுகப்பிடித்தார், மெய்யில் – தம்முடையசரீரங்களாலே, தட்டினார் – தடுத்தவர்கள், பட – சாவ, தட்டினான் – தடுத்தார், மலையென- மலையென்றுநினைக்க, தகுவான் – தக்கவர்—எ-று. (௰௭)

மறக்கினுங்கொல்லுமுணரினுங்கொல்லுமால்விசும்பிற்
பறக்கினுங்கொல்லும்படரினுங்கொல்லுமின்படைக்கை
நிறக்கருங்கழலரக்கர்கணெறிதொறும்பொறிகள்
பிறக்கநின்றெறிபடைகளைத்தடக்கையாற்பிசையும்.

இ-ள். மறக்கினும் – சண்டையைமறந்துநின்றாலும், கொல்லும் – கொல்லுவார், உணரினும் – சண்டைசெய்யநினைந்தாலும், கொல்லும் – கொல்லுவார், மால்- உயர்ந்த, விசும்பில் – ஆகாயத்திலே, பறக்கினும் – பறந்துசென்றாலும், கொல்லும்- கொல்லுவார், படரினும் – கீழேபோனாலும், கொல்லும் – கொல்லுவார், மின்-மின்னுகின்ற, படை – ஆயுதங்களை, கை – கையிலேயுடைய, நிறம் – கரியநிறமும், கருங்கழல் – பெரியவீரக்கழலுமுள்ள, அரக்கர்கள்-ராக்ஷதர்கள், நெறிதொறும்-நெறியும்போதெல்லாம், பொறிகள் – நெருப்புப்பொறிகள், பிறக்க – சிதற, நின்று – எதிரேநின்று, எறி – அவர்களெறிகிற, படைகளை – ஆயுதங்களை, தடக்கையால் – நீண்டகைகளாலே, பியையும் – பிசைவார்—எ-று. (௰௮)

சேறும்வண்டலுமூளையுநிணமுமாய்த்திணிய
நீறுசேர்நெடுந்தெருவெலாநீத்தமாய்நிரம்ப
ஆறுபோல்வருங்குருதியவ்வநுமனாலலைப்புண்
டீறில்வாய்தொறுமுமிழ்வதேயொத்ததவ்விலங்கை.

இ-ள். சேறும் – குழையும், வண்டலும் – அள்ளுசேறும், மூளையும்-தலையிலுமெலும்பிலுமுள்ள மூளைகளும், நிணமும் – கொழுப்பும், ஆய் – ஆகி, திணிய – கெட்டியாக, நீறுசேர் – தூளிகள்பொருந்தின, நெடுந்தெருவெலாம் – நீண்டவீதிகள்முழுதும், நீத்தமாய் – வெள்ளமாய், நிரம்ப – நிறைவாக, ஆறுபோல் – ஆற்றைப்போல், வரும் – பெருகிவருகிற, குருதி – ரக்தமானது, அவ்வனுமனால்-அந்தஅனுமாராலே, அலைப்புண்டு – அடிபட்டு, ஈறில் – முடிவில்லாத, வாய்தொறும்-நான்குவாயிலாகிய வாய்முழுதும், உமிழ்வதே – கக்குகிறதையே, அவ்விலங்கை – அந்த ஊர், ஒத்தது-

ஒப்பாயிற்று—எ-று. ஆற்றிலுள்ளசேறே மூளை வண்டலே நிணமாக நிரனிறை கொள்க. (௩௯)

கருதுகாலினுங்கையினும்வாலினுங்கட்டிச்
சுருதியேயன்னமாருதிமரத்திடைதுரப்பான்
நிருதரெந்திரத்திடுகரும்பாமெனநெரிவார்
குருதிசாறெனப்பாய்வதுகுரைகடற்கூனில்.

இ-ள். கருது - நாமெல்லாமெண்ணத்தக்க, காலினும் - அவர்காலினுலும், கையினும் - கைகளாலும், வாலினும் - வாலாலும், கட்டி-சேரப்பிடித்து, சுருதியே-வேதத்தையே, அன்ன - ஒப்பான, மாருதி - அனுமாரானவர், மரத்திடை-மரத்தினுலே, துரப்பான் - அடிக்கலானுர் அப்போது, நிருதர் - ராக்ஷதர்கள், எந்திரத்து-ஆலையிலே, இடு - கொடுக்கிற, கரும்பாமென - கரும்பேநிகரென்ன, நெரிவார்-கால் கைவால்களானெரிவாராயினுர்கள், குருதி - அவர்களிரத்தமோ, சாறென-கருப்பஞ் சாறே நிகரென்ன, பாய்வது - ஒழுகலாயிற்று, குரை - சத்தியாநின்ற, கடல்-சமுத்திரமாகிய, கூனில் - பானையில்—எ-று. (௪0)

எடுத்தரக்கரையெறிதலுமவருடலெற்றக்
கொடித்திண்மாளிகையிடிந்தனமண்டபங்குலைந்த
தடக்கையானைகண்மறிந்தனகோபுரந்தகர்ந்த
பிடிக்குலங்களும்புரவியுமவிந்தனபெரிய.

இ-ள். அரக்கரை - ராக்ஷதர்களை, எடுத்து - வாரி, எறிதலும்-எறியுமளவில், அவர் - அவ்வரக்கருடைய, உடல் - சரீரங்கள்போய்விழுந்து, எற்ற - மோத அதனுலே, கொடி - கொடிகள்கட்டின, திண் - கெட்டியான, மாளிகை - வீடுகள், இடிந்தன - தகர்தலாயின, மண்டபம் - மண்டபங்கள், குலைந்த - உடைதலாயின, தடக்கை - நீண்டகைகளையுடைய, யானைகள் - யானைகளெல்லாம், மறிந்தன - முகமடங்கலாயின, கோபுரம் - கோபுரங்கள், தகர்ந்த - இடிதலாயின, பிடிக்குலங்களும்-பெண்யானைக்கூட்டங்களும், புரவியும் - குதிரைகளும், அவிந்தன - இறந்தவைகளே, பெரிய - அதிகமாயின—எ-று. (௪௧)

தத்தமாடங்கடம்முடலாற்சிலர்தகர்த்தார்
தத்தமாதரைத்தங்கழலாற்சிலர்சமைத்தார்
தத்தமாக்களைத்தம்படையாற்சிலர்தடிந்தார்
எற்றிமாருதிதடக்கைகளான்விசித்தெறிய.

இ-ள். தத்தம் - தங்கள்தங்கள், மாடங்கள் - வீடுகளை, தம் உடலால் - தங்கள்சரீரங்களாலேயே, சிலர் - சிலராக்ஷதர்கள், தகர்த்தார்-உடைத்தார்கள், தத்தம்-தங்கள்தங்கள், மாதரை - பெண்களை மனைவியரை, தங்கழலால் - தம்முடையகால்களாலேயே, சிலர் - சிலஅரக்கர்கள், சமைத்தார் - அழித்தார்கள், தத்தம் - தங்கள்தங்கள், மாக்களை - குதிரைகளை, தம்படையால் - தங்களாயுதங்களாலேயே, சிலர்-சில அரக்கர்கள், தடிந்தார் - கொன்ருர்கள், மாருதி - அனுமாரானவர், எற்றி-அடித்து, தடக்கைகளால் - நீண்டகைகளாலே, விசித்து - சேரப்பிடித்து, எறிய-எறிதலாலே—எ-று. (௪௨)

ஆடன்மாக்களிறனையவனரக்கியர்க்கருளி
வீடுநோக்கியேசெல்கென்றுசிலவரைவிட்டான்

**கூடினூர்க்கவருயிரெனச்சிலவரைக்கொடுத்தான்
ஊடினூர்க்கவர்மனைதொறுஞ்சிலவரையுய்த்தான்.**

இ-ள். ஆடல் - ஜெயங்கொள்ளுகின்ற, மாக்களிறு-பெரியயானையை, அனையவன் - ஒப்பான திருவடி, அரக்கியர்க்கு - அந்தராக்ஷஸிகளுக்கு, அருளி - இரக்கங்கொண்டு, வீடுநோக்கியே - உங்கள் வீட்டைப்பார்க்கவே, செல்கென்று - போங்களென்று, சிலவரை - சிலராக்ஷதர்களை, விட்டான் - போக எறிந்தார், கூடினூர்க்கு-அன்றுகூடினபெண்களுக்கு, அவருயிரென - அவர்கள் தம்முயிர்வந்ததென் றுநினைக்க, சிலவரை - சில அரக்கரை, கொடுத்தான்-எடுத்துவீசினூர், ஊடினூர்க்கு-அன்றுபிணங்கியிருந்தபெண்களுக்கு, அவர் - அப்பெண்கள், மனைதொறும் - வீடுகளெல்லாம்போய்விழ, சிலவரை - சிலஅரக்கரை, உய்த்தான் - எறிந்தார்—எ-று. (சங)

**தருவெலாமுடறெற்றியெலாமுடல்சதுக்கத்
துருவெலாமுடலுவரியெலாமுடலுள்ளூர்க்
கருவெலாமுடல்காயமெலாமுடலரக்கர்
தெருவெலாமுடறேயமெலாமுடல்சிதறி.**

இ-ள். தருவெலாம் - மரத்தடிகளெல்லாம், உடல் - சரீரங்கள், தெற்றியெல்லாம் - திண்ணைகளெல்லாம், உடல் - சரீரங்களே, சதுக்கத்து - நாலுதெருவுங்கூடுகிறதின், உருவெலாம் - இடங்கள்முழுதும், உடல் - சரீரங்களே, உவரியெல்லாம் - கடல்முழுதும், உடல் - சரீரங்களே, உள்ளூர் - அந்நகரின், கருவெலாம்-நடுவிடங்களெல்லாம், உடல் - சரீரங்களே, காயமெலாம்-மேலிடங்களெல்லாம், உடல்-சரீரங்களே, அரக்கர் - ராக்ஷதர்களுடைய, தெருவெல்லாம்-வீதிகளெல்லாம்,உடல்-சரீரங்களே, தேயமெல்லாம் - வெளிநகரெல்லாம், உடல் - சரீரங்களாக, சிதறி-சிந்தி, சாடுகை தவிரானெனப் பின்கூட்டுக—எ-று. (சச)

**ஊனெலாமுயிர்கவர்வுறுங்காலனுேய்ந்துலந்தான்
தானெலாரையுமாருதிசாடுகைதவிரான்
மீனெலாமுயிர்மேகமெலாமுயிர்மேன்மேல்
வானெலாமுயிர்மற்றுமெலாமுயிர்சுற்றி.**

இ-ள். ஊனெலாம் - சரீரங்கள்முழுதுமுள்ள, உயிர்-உயிர்களை, கவர்வுறும்-பிடிக்கிற, காலன் - யமனும், ஒய்ந்து - கைகால்களயர்ந்து, உலந்தான் - வருந்தினுன் ஆனாலும், மாருதிதான் - அனுமாரானவர், எலாரையும் - அவர்களெல்லாரையும், சாடுகை - மரத்தாலடிக்கிறதில், தவிரான் - ஒய்கிறதில்லையாக, மீனெலாம்-நக்ஷத்திரமண்டலங்களெல்லாம், உயிர் - உயிர்கள்போகலாயின, மேகமெலாம் - மேகமண்டலங்களெல்லாம், உயிர் - உயிர்களே, மேன்மேல் - மிகவுமுயரமான, வானெலாம்-ஆகாயமெல்லாம், உயிர் - உயிர்களே, மற்றுமெலாம் - மற்றஇடங்களிலும், சுற்றி-சூழ்ந்து, உயிர் - உயிர்கள் செல்லலாயின—எ-று. அந்த அந்த உயிர்கள் செல்லுங் கதிகளுக்குச் செல்லுகின்றனவென்பது கருத்து. (சடு)

**ஆகவிச்செருவிளைவுறுமமைதியினரக்கர்
மோகமுற்றனராமெனமுறைமுறைமுனிந்தார்
மாகமுற்றவுமாதிரமுற்றவும்வளைந்தார்
மேகமொத்தனர்மாருதிவெய்யவனுெத்தான்.**

இ-ள். ஆக - இப்படியாக, இச்செரு - இந்தச்சண்டை, விளைவுறும் - நடக்கிற, அமைதியின் - காலத்திலே, அரக்கர் - சிலராக்ஷதர்கள், மோகம் - மயக்கம், உற்றனர் - கொண்டவர்களே, ஆமென - நிகரென்னும்படி, முறை முறை - கும்பல் கும்பலாகவந்து, முனிந்தார் - கோபங்கொண்டவர்களாய், மாகமுற்றவும் - ஆகாய முழுதும், மாதிரமுற்றவும் - திசைகள்முழுதும், வளைந்தார் - சூழ்ந்தார்கள் சூழ்ந்து, மேகம் - மேககூட்டத்தைநிறத்தால், ஒத்தனர் - ஒப்பதானுர்கள், மாருதி-அனுமார் தனிமையால், வெய்யவன் - சூரியனை, ஒத்தான் - ஒப்பானுர்—எ-று. (சசு)

அடலரக்கருமார்த்தலினலைத்தலினயரப்
புடைபெருத்துயர்பெருமையிற்கருமையிற்பொலிவின்
மிடலயிற்படைமீனெனவிலங்கலிற்கலங்கும்
கடனிகர்த்தனர்மாருதிமந்தரங்கடுத்தான்.

இ-ள். அடல் - மிகவும்பலமுள்ள, அரக்கரும் - ராக்ஷதர்கள், ஆர்த்தலின்-முழங்குதலாலும், அலைத்தலின் - அனுமாரை அலைவுசெய்தலாலும், அயர்-சண்டைசெய்கிற, அப்புடை - அவ்விடத்திலே, பெருத்து - மிகப்பெருமிதராய், உயர் - உயர்ந்துநிற்கிற, பெருமையில் - திரளின்பெருமையாலும், கருமையில் - நிறத்தின்கருமையாலும், பொலிவின் - நிறைவினுலும், மிடல் - பலங்கொண்ட, அயில் - வேலாயுதங்களும், படை - வாளாயுதங்களும், மீனென - மீன்கள்போல், விலங்கலில் - புரளுதலாலும், கலங்கும் - கடையும்போது கலங்குகிற, கடல் - கருங்கடலை, நிகர்த்தனர் - ஒப்பாயினுர்கள், மாருதி - அனுமார், மந்தரம் - முன்பாற்கடலைக்கலக்கினது போலவே இப்போது கருங்கடலையும் கலக்குகிறமந்தரகிரியை, கடுத்தான் - ஒப்பாயினுர்—எ-று. அக்கட லமுதிற்காக, இக்கடல் விருதிற்காக, பிராட்டியாகிய அமுதிற்காக எனவுமாம். (சஎ)

காதலத்தினுங்காலினும்வாலினுங்கதுவலைந்
நிரைமணித்தலைநெரிந்துகச்சாய்ந்துயிர்நீப்பார்
சுரர்நடுக்குறவமுதுகொண்டெழுந்தநாடொடரும்
உரகரொத்தனரநுமனுங்கலுழனேயொத்தான்.

இ-ள். கரதலத்தினும் - கையினுலும், காலினும் - காலினுலும், வாலினும்-வாலாலும், கதுவ - பிடித்தலாலே, நிரைமணி - வரிசையாகக்கறுத்த, தலை - தலைகள், நெரிந்து - நெரிதலாகி, உக - உதிர, சாய்ந்து - கீழேவிழுந்து, உயிர் - உயிரை, நீப்பார் - விடுகிறவர்கள், சுரர் - தேவர்கள், நடுக்குற - அஞ்சுவதாக, அமுதுகொண்டு - அமுதகலசத்தையெடுத்துக்கொண்டு, எழுந்தநாள் - வந்தபோது, தொடரும்-பின்றொடர்ந்துவந்த, உரகர் - உரகரை, ஒத்தனர் - ஒப்பாயினுர்கள், அனுமனும்-அனுமார், கலுழனே - கருடனையே, ஒத்தான் - ஒப்பானுர்—எ-று. (சஅ)

மானமுற்றதம்பகையினுன்முனிவுற்றுவளைந்த
மீனுடைக்கடலுலகினிலுளவெலாமிடைந்த
ஊனறக்கொன்றுதுகைக்கவுமொழிவிலாநிருதர்
ஆனையொத்தனராளரியொத்தனனநுமன்.

இ-ள். மானமுற்ற - பெருமைபொருந்தின, தம் - தமக்கு, பகையினுல் - பகையானதினுலே, முனிவுற்று - கோபங்கொண்டு, வளைந்த - உலகைச்சூழ்ந்த, மீனுடை - மீன்களையுடைய, கடல் - கடலை அகழாகக்கொண்ட, உலகினின் - இலங்கை

யிலே, உளவெலாம் - உள்ளஜீவராசிகளெல்லாம், மிடைந்த - நெருங்கினுற்போற்கூடின, ஊன் - ராக்ஷதசரீரங்கள், அற - முடிவுபெற, கொன்று - வதைத்து, துகைக்கவும் - வருத்துமிடத்திலும், ஒழிவிலா - ஓயாமல்வந்துகொண்டிருக்கிற, நிருதர்-அரக்கர்கள், ஆனை - யானைகளை, ஒத்தனர் - ஒப்பாயினுர்கள், ஆளரி - நரசிங்கத்தை, ஒத்தனன் - ஒப்பாயினுர், அனுமன் - திருவடி—எ-று. (சகூ)

எய்தவெற்றினவெறிந்தனவீர்த்தனவிகலிற்
பொய்தகுத்தினபொதுத்தனதொளைத்தனபோழ்ந்த
கொய்தசுற்றினபற்றினகுடைந்தனபொலிந்த
ஐயன்மற்பெரும்புயத்தனபுண்ணளப்பரிதால்.

இ-ள். எய்த - அவர்களெய்த அம்புகளாலும், எற்றின - அடித்தவைகளாலும், எறிந்தன - வெட்டினவைகளாலும், ஈர்த்தன - அறுத்தவைகளாலும், இகலில்-தமதுபலங்கொண்டு, பொய்த - இடித்தவைகளாலும், குத்தின - குத்தினவைகளாலும், பொதுத்தன - பொத்தவைகளாலும், தொளைத்தன - துவாரஞ்செய்தவைகளாலும், போழ்ந்தன - பிளந்தவைகளாலும், கொய்த - கத்தரித்தவைகளாலும், சுற்றின - சூழ்ந்தவைகளாலும், பற்றின - பிடித்தவைகளாலும், குடைந்தன-கிண்டினவைகளாலும், பொலிந்த - நிறைதலான, ஐயன் - அனுமாருடைய, மல் - பலத்தாலே, பெரு - பெரிய, புயத்தன - தோள்களிலுள்ள, புண் - காயங்களை, அளப்பு-அளவுசெய்ய, அரிது - முடியாது—எ-று. கயிற்றாலே சுற்றல். (ருo)

கார்க்கருந்தடங்கடல்களுமழைமுகிற்கணனும்
வேர்க்கவெஞ்செருவிளைத்தெழும்வெள்ளெயிற்றரக்கர்
போர்க்குழாம்படிபூசலினையனைப்புகழ்வுற்
றார்க்கும்விண்ணவரமலையேயுயர்ந்ததன்றமரில்.

இ-ள். கார்க்கரு - மிகவுங்கரியதான, தடங்கடல்களும் - பெரியகடல்களும், மழை - மழைபெய்கிற, முகிற்கணனும் - மேகக்கூட்டங்களும், வேர்க்க - அஞ்ச, வெஞ்செரு - வெவ்விதானசண்டையை, விளைத்து - செய்து, எழும் - மேன்மேலாகிற, வெள் - வெண்மையான, எயிற்று - பற்களையுடைய, அரக்கர் - ராக்ஷதர்களின், போர்க்குழாம் - வலியகூட்டத்தில், படி - பொருந்தின, பூசலின் - சத்தத்தைக்காட்டினும், ஐயனை - அனுமாரை, புகழ்வுற்று - கொண்டாடி, ஆர்க்கும் - கெர்ச்சிக்கிற, விண்ணவர் - தேவர்களுடைய, அமலையே - சத்தமே, உயர்ந்தது - அதிகமாயிற்று, அன்று - அப்போது, அமரில் - யுத்தகளத்திலே—எ-று (ருக)

மேவும்வெஞ்சினத்தரக்கர்கண்முறைமுறைவிசையால்
ஏவும்பல்படையெத்தனைகோடிகளெனினும்
தூவுந்தேவருமகளிருமுனிவருஞ்சொரிந்த
பூவும்புண்களுந்தெரிந்திலமாருதிபுயத்தில்.

இ-ள். மேவும் - சண்டைக்குவந்த, வெஞ்சினத்து - வெவ்விய கோபத்தையுடைய, அரக்கர்கள் - அந்தராக்ஷதர்கள், முறைமுறை - வரிசைவரிசையாய், விசையால் - வேகங்கொண்டு, ஏவும் - விடுகிற, பல்படை-பலவகை அஸ்திரசஸ்திரங்கள், எத்தனை - எவ்வளவோ, கோடிகளெனினும் - கோடிகளென்றாலும், தூவும் - சிந்துகிற, தேவரும் - வானவரும், மகளிரும் - அவர்கள்மனைவியரும், முனிவரும் - தேவரிஷிகளும், சொரிந்த - பொழிந்த, பூவும் - புஷ்பங்களென்றும், புண்களும் - காயங்

களென்றும், தெரிந்தில - வேறுபாடுதோற்றவில்லை, மாருதி - அனுமாருடைய, புயத்தில் - தோள்களிலே—எ-று. (௫௨)

பெயர்க்குஞ்சாரிகைகறங்கெனத்திசைதொறும்பெயர்வின்
உயர்க்கும்விண்மிசையோங்கலின்மண்ணின்வந்துறலின்
அயர்த்துவீழ்த்தனரழிந்தனரரக்கராயுள்ளார்
வெயர்த்திலன்மிசையுயிர்த்திலனல்லறவீரன்.

இ-ள். பெயர்க்கும் - மாறிமாறிச்செல்லுகிற, சாரிகை — இடசாரியும்வலசாரியும், கறங்கென - காற்றாடிபோல், திசைதொறும் - நான்குதிக்கிலும், பெயர்வில்- செல்லுதலாலும், உயர்க்கும்-உயர்த்தப்படுகிற, விண்மிசை — ஆகாயத்திலே, ஓங்கலில் — நிமிர்தலாலும், மண்ணில் - பூமியிலே, வந்துறலில் - வந்துதாழ்தலாலும், அயர்ந்து - சோர்தலாய், வீழ்ந்தனர் - விழுந்தார்களாய், அழிந்தனர் - இறந்தார்கள், அரக்கராயுள்ளார் - ராக்ஷதரானவர்கள், மிசை — தம்முடைய உடம்பின்மேல், வெயர்த்திலன் — சற்றேனும் வெயர்வுகொண்டிலர், உயிர்த்திலன் — அயர்வுகொண்டிலர், நல்லறம் - நல்ல தருமசொரூபியான, வீரன் — அனுமார்—எ-று. உயிர்த்திலன் — மூச்சுவிடுதலுமிலரெனவுமாம். (௫௩)

எஞ்சலக்கணத்தறிந்திலமிராவணனேவ
நஞ்சமுண்டவராமெனவநுமன்மேனடந்தார்
துஞ்சினாரல்லதியாவருமறத்தொடுந்தொலைவுற்
றஞ்சினாரில்லையரக்கரில்வீரர்மற்றியாரே.

இ-ள். அக்கணத்து - அந்தக்ஷணப்பொழுதிலே, எஞ்சல் - அவர்கள் குறைதலானதை, அறிந்திலம் - இவ்வளவென்றுதெரிந்துசொல்ல வல்லோமல்லோம், இராவணன் — தசக்கிரீவன், ஏவ - அனுப்ப, நஞ்சம் — விஷத்தை, உண்டவர் — சாப்பிட்டவர்கள், ஆமென — நிகரென்னும்படி, அனுமன்மேல் — அனுமார்மேலே, நடந்தார்- வந்தராக்ஷதர்கள், மறத்தொடும் - வீரத்துடனே, யாவரும் — எல்லாரும், துஞ்சினார்- இறந்தார்களே, அல்லது - அல்லாமல், தொலைவுற்று - தோற்று, அஞ்சினாரில்லை- ஓடினவர்கள்கிடையாது, அரக்கரில் - ராக்ஷதர்கள்போல், வீரர் - வீரத்தன்மையுள்ளவர்கள், மற்றியார் — வேறேயாரிருக்கிறார்கள்—எ-று. (௫௪)

வந்தகிங்கரரேயெனுமாத்திரைமடிந்தார்
நந்தவானத்துநாயகரோடினர்நடுங்கிப்
பிந்துகாலினர்கையினர்பெரும்பயம்பிடரின்
உந்தவாயிரம்பிணக்குவைமேல்விழுந்துளைவார்.

இ-ள். வந்த - பிடிக்கவந்த, கிங்கரர் - இராவணனுடைய ஊழியகாரர்கள், ஏயெனுமாத்திரை — உம்மென்னுமளவில், மடிந்தார் — இறந்தார்கள், நந்தவானத்து- அந்த அசோகவனத்தை, நாயகர் - காக்கிறதேவர்கள், ஓடினர் நடுங்கி — பயந்தோடும்போது, பிந்து — பின்வாங்குகிற, காலினர் — காலராகியும், கையினர் — கையராகியும், பெரும்பயம் — பெரிதான அச்சம், பிடரினுந்த - பிடரியைப்பற்றித்தள்ள, ஆயிரம்- அநேகமாய்க்கிடக்கிற, பிணக்குவை — பிணக்குப்பல்கள், மேல்விழுந்து — மேலேவிழுந்து, உளைவார் — வருந்துவாரானார்கள்—எ-று. (௫௫)

விரைவினுற்றனர்விம்மலுற்றியாதொன்றும்விளம்பார்
கரதலத்தினாற்பட்டதுங்கட்டுரைக்கின்றார்

தரையினிற்கிலர் திசைதொறுநோக்கினர்சலிப்பார்
அரசன்மற்றவரலக்கணேயுரைத்திடவறிந்தான்.

இ-ள். விரைவின் - சீக்கிரத்திலே, உற்றனர் - போனார்கள், விம்மலுற்று - துக்கப்படுதலாய், யாதொன்றும் - யாதொருவார்த்தையும், விளம்பார் - சொல்லாதவர்களாய், கரதலத்தினால் - கையினாலே, பட்டதும் - கிங்கரர்பட்டதும் தாங்கள் பட்டுவந்ததும், கட்டுரைக்கின்றார் - குறிப்பிக்கின்றார்கள், தரையின் - பூமியிலே, நிற்கிலர் - நிலைகொள்ளாதவர்களாய், திசைதொறும் - நாலுபக்கமும், நோக்கினர் - பார்த்து, சலிப்பார் - வியசனப்படுவாரானார்கள், அரசன் - அதுகண்ட ராவணன், மற்றவர் - அந்தவனங்காக்குந் தேவர்கள், அலக்கணே - படுகிற துன்பமே, உரைத்திட - கிங்கரரிறந்துபோனார்களென்பதைச்சொல்ல, அறிந்தான் - தெரியலானான் எ-று. (ருசு)

இறந்துநீங்கினரோவின்றெனாணையையிகழ்ந்து
துறந்துநீங்கினரோவென்றிவெஞ்சமர்தொலைந்தார்
மறந்துநீங்கினரோவென்கொல்வந்ததென்றுரைத்தான்
நிறஞ்செருக்குறவாய்தொறுநெருப்புமிழ்கின்றான்.

இ-ள். இறந்துநீங்கினரோ - செத்துப்போனார்களா, இன்று - அல்லதிப்போது, என் ஆணையை - எனதாக்கினையை, இகழ்ந்து - குரங்கின்மேலேவினையென்றிகழ்ச்சிசெய்து, துறந்துநீங்கினரோ - இவ்வூரையேவிட்டுப்போயினார்களா, அன்றி - அல்லது, வெஞ்சமர் - வெவ்விதானயுத்தஞ்செய்ய, தொலைந்தார் - மாட்டாராய், மறந்து நீங்கினரோ - சோர்ந்துபோனார்களா, என்கொல் - யாதுசொல்வதாக, வந்ததென்று - நீங்கள்வரலானதென்று, உரைத்தான் - கேட்டான், நிறம் - அவன்நெஞ்சிலே, செருக்குற - அதிககருவந்தோன்றலாலே, வாய்தொறும் - பத்து வாயிலும், நெருப்பு - அக்கினியை, உமிழ்கின்றான் - கக்குகிறராவணன்—எ-று. (ருஎ)

வேறு.

சலந்தலைக்கொண்டனராயதன்மையார்
அலந்திலர்செருக்களத்தஞ்சினாரலர்
புலந்தெரிபொய்க்கரிபுகலும்புண்கணார்
குலங்களினவிந்தினர்குரங்கினாலென்றார்.

இ-ள். சலம் - கோபத்திலே, தலைக்கொண்டனர் - அதிகமாயினவர்கள், ஆய தன்மையார் - நீரனுப்பின அந்தக்கிங்கரர், அலந்திலர் - சோர்ந்ததுமில்லை, செருக்களத்து - யுத்தபூமியிலே, அஞ்சினாரலர் - பயந்தோடினதுமில்லை, புலந்தெரி - தம் மனமேதெரிகிற, பொய்க்கரி - பொய்ச்சாட்சி, புகலும் - சொல்வதான, புண்கணார் - துன்பிகள், குலங்களின் - வம்சங்கள்போல், அவிந்தனர் - இறந்துபோனார்கள், குரங்கினால் - ஒருகுரங்கினாலே, என்றார் - என்று சொன்னார்கள்—எ-று. அலந்திலர் - குரங்கின்மேலேவினையென்று துன்பமாயினருமல்லரென வினாவுக்குநேர் விடையாக்கவுமாம். (ருஅ)

ஏவலினெய்தினரிருந்தவெண்டிசைத்
தேவரைநோக்கினனெணுஞ்சிந்தையான்
யாவதென்றறிந்திவிர்போலுமாலென்றான்
மூவகையுலகையும்விழுங்கமூள்கின்றான்.

இ-ள். ஏவலின் – தன் உத்தரவினாலே, எய்தினர் – வந்தவர்களாய், இருந்த-சபையிலேவந்திருக்கிற, எண்திசைத்தேவரை – அஷ்டதிக்குப்பாலரையும், நோக்கினான் – பார்த்து, நாணும் – வெட்கமடைந்த, சிந்தையான் – மனமுள்ள ராவணன், யாவதென்று – அங்கேநடந்ததின்னதென்று, அறிந்திலிர் – நீங்கள் – தெரிந்துவந்தீரல்லீர், என்றான் – என்றுசொன்னான், மூவகை – மூன்றுவிதமான, உலகையும்-உலகமெல்லாம், விழுங்க – கபளீகரிக்க, மூள்கின்றான்-தொடங்குகிற கோபமுடையவனானராவணன்—எ-று. போலும் ஆல் அசைகள். (ருகூ)

மீட்டவருரைத்திலர்பயத்தின்விம்முவார்
தோட்டலரினமலர்த்தொங்கன்மோலியான்
வீட்டியதரக்கரையென்னும்வெவ்வுரை
கேட்டதோகண்டதோகிளத்துவீரென்றான்.

இ-ள். மீட்டு – அந்தவார்த்தைக்கு மறுமொழி, பயத்தின் – பயத்தினாலே, விம்முவார் – துக்கித்தவர்களாய், அவர் – அந்தவனங்காப்பவர்கள், உரைத்திலர்-தடுத்து ஒன்றுஞ்சொல்லாது நின்றார்கள், தோடு – இதழ்கள், அலர் – விகசிக்கின்ற, இனம் – பலஜாதி, மலர் – பூவாற்கட்டின, தொங்கல் – மாலையணிந்த, மோலியான்-முடியையுடையராவணன், அரக்கரை – கிங்கரரை, வீட்டியது – குரங்குகொன்றுவிட்டது, என்னும்-என்பதான, வெவ்வுரை – கொடியசொல்லை, கேட்டதோ – யாரேனுஞ் சொல்லக் கேட்டுவந்தீர்களா, கண்டதோ – நீங்களே கண்ணாற் கண்டுவந்தீர்களா, கிளத்துவீர் – சொல்லுங்கள், என்றான் – என்று கேட்டான் ராவணன் எ-று. (சுo)

கண்டனமொருபுடை நின்றுகண்களால்
தெண்டிரைக்கடலெனவளைந்தசேனையை
மண்டலந்திரிந்தொருமரத்தினாலடித்
துண்டதக்குரங்கினமொழிவதன்றென்றார்.

இ-ள். ஒருபுடைநின்று – நாங்களொருபுறத்திலேநின்றே, கண்களால் – எங்கள்கண்களாலேயே, கண்டனம்-பார்த்தோம், தெண்-தெளிந்த, திரை – அலைகளையுடைய, கடலென – கடல்போல், வளைந்த – சூழ்ந்த, சேனையை – சேனைகளையெல்லாம், மண்டலம்திரிந்து – ஒருவட்டமிட்டு, ஒருமரத்தினால் – ஒருமரத்தினாலே, அடித்து – அடித்தடித்து, உண்டது – உயிரைவாங்கிற்று, அக்குரங்கு – அந்த ஒரே குரங்கு, இனம் – இன்னமும், ஒழிவது அன்று-ஒழிப்போகிறதல்ல, என்றார்-என்றுசொன்னார்கள்—எ-று. சேனை அடியுண்டதென்று கொண்டால், ஐக்கும் மண்டலந்திரிந்தென்பதற்கும் சேராமையால் அடித்து உயிருண்டதுகுரங்கென்க. (சுக)

கிங்கரர்வதைப்படலம் முற்றிற்று.

ஆ படலம் – அ – க்கு திருவிருத்தம் – அகரு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஒன்பதாவது,

சம்புமாலிவதைப்படலம்.

கூம்பினகையனின்றகுன்றெனக்குவவுத்திண்டோட்
பாம்பிவர்தறுகட்சம்புமாலியென்பவனைப்பாரா
வாம்பரித்தானையோடுவளைத்ததன்மறனைமாற்றித்
தாம்பினிற்பற்றித்தந்தென்மனச்சினந்தணித்தியென்றான்.

இ-ள். கூம்பினகையன் - குவித்தகைகளையுடையவனாகி, நின்ற - முன்னே நிற்கிற, குன்றென - மலைபோல், குவவு - உருண்ட, திண்தோள்-பலமானதோள்களும், பாம்பு - பாம்புப்பார்வைபோல், இவர் - சீறிப்பார்க்கிற, தறுகண் அஞ்சாதவீரனான ஜம்புமாலியென்பவனை, பாரா - ராவணன்பார்த்து, வாம் - தாவுவனவான, பரி - குதிரைகளோடுகூடின, தானையோடு-சேனைகளுடனேபோய், வளைத்து - அந்தக்குரங்கைச்சூழ்ந்து, அதன்மறனை - அதனுண்மையை, மாற்றி - மாறச்செய்து, தாம்பினில்-கயிற்றினாலே, பற்றி-பிடித்துவந்து, தந்து-கொடுத்து, என்மனச்சினம்-என்மனத்திலுள்ளகோபத்தை, தணித்தி - நீங்கச்செய், என்றான் - என்றுசொன்னான்—எ-று. (க)

ஆயவன்வணங்கிவீரமளக்கருமளக்கர்முன்னர்
நீயிதுமுடித்தியென்றுநேர்ந்தனைநினைவினெண்ணி
ஏயினையென்னப்பெற்றாலென்னின்யாருயர்ந்தாரென்னாப்
போயினனிலங்கைவேந்தன்போர்ச்சினம்போவதொப்பான்.

இ-ள். ஆயவன் - அந்தச்சம்புமாலி, வணங்கி - கும்பிட்டுக்கொண்டு, வீரம்-சாமர்த்தியத்தை, அளக்கஅரும் - அளவிடஅரிதான, அளக்கர்முன்னர் - உமதுசேனைக்கடலுக்குமுன்னே, நீஇது-நீஇந்தக்காரியத்தை, முடித்தியென்று - முடிவுசெய்யென்று எனக்கு, நேர்ந்தனை - உத்தரவுசெய்தீர், நினைவின் - உமதுள்ளத்திலே இப்படி ஆலோசித்து, எண்ணி - இவன்முடிப்பானென்றுத்தரவுசெய்தீரென்று, ஏயினை என்னப்பெற்றால் - எல்லாருங்கொண்டாட நான்பெற்றேனே ஆனால், என்னின்-என்னிலும், யார்-எவர், உயர்ந்தாரென்னா - உயர்ந்தவரென்று, போயினன்-போனான், இலங்கைவேந்தன் - இராவணனுடைய, போர்ச்சினம்-வலிதானகோபம், போவது - செல்வதை, ஒப்பான் - ஒத்தவனாயினான்—எ-று. (உ)

தன்னுடைத்தானையோடுந்தசமுகன்றருகென்றேய
மன்னுடைச்சேனையோடுந்தாதைவந்தீந்தவாளின்
மின்னுடைப்பரவையோடும்வேறுளோர்சிறப்பின்விட்ட
பின்னுடையனிகத்தோடும்பெயர்ந்தனன்பெரும்போர்பெற்றான்.

இ-ள். தன்னுடை-தன்னுடைய, தானையோடும் - சேனைகளுடனே, தசமுகன் - ராவணன், தருகென்று - குரங்கைப்பிடித்துவாருங்களென்று, ஏய-தன்கூட அனுப்பின, மன்னுடை-அரசனுடைய, சேனையோடும்-சேனைகளுடனும், தாதை-பிரமதேவன், வந்து - இவன்தவத்துக்குப் பிரசன்னனாகி, ஈந்த-முன்னேகொடுத்த,

வாளின் .- வாளாயுதங்களாலே, மின்னுடை - மின்னுதலையுடைய, பரவையோடும்- கடல்போன்றசேனைகளுடனும், வேறுளோர் - மற்றுமுள்ளவர்கள், சிறப்பின்-இவனுக்கலங்காரமாக, விட்ட - அனுப்பின, பின்னுடை - பின்துணையாக வுதவுதலையுடைய, அனிகத்தோடும் - சேனைகளுங்கூட, பெயர்ந்தனன் - போயினான், பெரும் போர்பெற்றான் - பெரியவலிமைகொண்ட சம்புமாலி—எ-று. வேறுளோர் - இவனுக்குச்சரியான ராக்ஷதராஜர்கள். (௫)

உருமொத்தமுழக்கிற்செங்கண்வெள்ளெயிற்றோடைநெற்றிப்
பருமித்தகிரியிற்றோன்றும்வேழமும்பதுமத்தண்ணல்
நிருமித்தவெழிலிமுற்றிற்றென்னலாநிலையநேமி
சொரிமுத்தமாலைசூழுந்துகிற்கொடித்தடந்தேர்சுற்ற.

இ-ள். உரும் ஒத்த - இடியை ஒப்பான, முழக்கின் - சத்தத்தையுடையனவாய், செங்கண் - சிவந்தகண்களும், வெள்ளெயிறு - வெண்கொம்புகளும், ஓடை- முகபடாமணிந்த, நெற்றி - நெற்றியுங்கொண்டு, பருமித்த - விரியிட்டலங்காரஞ்செய்த, கிரியில் - மலைபோல், தோன்றும் - காணப்படுகிற, வேழமும் - யானைகளும், முன் - முன்னே, பதுமத்து - தாமரைமலர்மேலிருக்கிற,அண்ணல் - பிரமதேவன், நிருமித்த - உண்டாக்கின, எழிலி - மேகங்களெல்லாம், முற்றிற்று - கூடிவருகின்றன, என்னலாம் - என்றுசொல்லலாகிய, நிலைய - நிலையையுடையன, நேமி - கடலானது, சொரி - சிந்துகிற, முத்துமாலை - முத்துமாலைகள், சூழும் - சுற்றிலுமணிந்த, துகிற்கொடி - கொடியாடைகள்கட்டின, தடந்தேர் - பெரியதேர்களும், சுற்ற- சூழ—எ-று. நிலையவேழங்களும் தேர்களும்சூழ எனக்கூட்டுக. (௬)

காற்றினைமருங்கிற்கட்டிக்கால்வகுத்துயிருங்கூட்டிக்
கூற்றினையேற்றியன்னகுலப்பரிகுழுவக்குன்றின்
தூற்றினிலெழுப்பியாண்டுத்தொகுத்தெனச்சுழல்பைங்கண்ண
வேற்றினப்புலியேறென்னவியந்தெழும்பதாதியீட்டம்.

இ-ள். காற்றினை - வாயுவை, மருங்கில் - இடையிலே, கட்டி - சேர்த்து- கால் - நாலுகால்களாக, வகுத்து - செய்து, உயிரும் - ஜீவனும், கூட்டி - உண்டாக்கி, கூற்றினை - யமனை, ஏற்றிஅன்ன - அதன்மேலேற்றினதுபோன்ற, குலப்பரி- நல்லஜாதிக்குதிரைகள், குழுவ - கூட, குன்றின் தூற்றினில் - மலைக்குகைகளிலிருந்து, எழுப்பி - எழக்கூட்டி, ஆண்டு - அங்கே, தொகுத்தென - பேரச்செய்தாற்போல், சுழல் - சுழலுகின்ற, பைங்கண்ண - பசியகண்களையுடைய, வேற்றினம் - வெவ்வேறுவகைகளான, புலியேறு - ஆண்புலிகள், என்ன - என்றுசொல்லும்படி, வியந்து - அக்குரங் கெப்படிப்பட்டதென்றதிசயித்து, பதாதியீட்டம்-காலாட்கூட்டம், எழும் - எழுவதாயின—எ-று. (௭)

தோமரமுலக்கைகூர்வாள்சுடர்மழுக்குலிசந்தோட்டி
தாமரந்தின்றகூர்வேறழலொளிவட்டஞ்சாபம்
காமர்தண்டெழுக்கள்காந்துங்கற்பணங்காலபாசம்
மாமரம்வலயம்வெங்கோன்முதலியவயங்கமாதோ.

இ-ள். தோமரம் - தோமரங்களும், உலக்கை - இருப்புலக்கைகளும், கூர்வாள் - கூரியவாளாயுதங்களும், சுடர்மழு - ஒளிபொருந்தின மழுக்களும், குலிசம்- வச்சிராயுதங்களும், தோட்டி - அங்குசங்களும், தாம் - அராவுகின்ற, அரம் - அரத்

தாலே, தின்ற – அராவப்பட்ட, கூர்வேல் - கூரியவேல்களும், தழல் - கொதிக்கப் படுகிற, ஒளிவட்டம் – சக்கரங்களும், சாபம் - விற்களும், காமர்-அழகிதான, தண்டு- தண்டாயுதங்களும், எழுக்கள் – எழுத்தடிகளும், காந்தும் – ஒளிவிடுகிற, கற்பணம்- கற்பணங்களும், காலபாசம் – காலபாசங்களும், மாமரம் – பெரியமரங்களும்,வலயம்- வல்லயங்களும், வெங்கோல் – வெவ்விதானதடிகளும், முதலிய – முதலான ஆயுதங் கள், வயங்க - விளங்க—எ- று. (சு)

எத்தியவயில்வேல்குந்தமெழுக்கழுமுதலவேந்திக்
குத்தியதிளேப்பமீதிற்குழுவினமழைமாக்கொண்மூப்
பொத்துகுபொருவினன்னீர்சொரிவனபோவபோலச்
சித்திரப்பதாகையீட்டந்திசைதொறுஞ்செறிவசெல்வ.

இ-ள். எத்திய – கொண்டாடத்தக்க, அயில்வேல் – கூரிய கைவேல்களும், குந்தம் - எறியீட்டிகளும், எழு - எழுவும், கழு - கழுவும், முதல-முதலானவைகளே, ஏந்தி – கொண்டு, குத்திய - குத்ினவைகளாலே, திளேப்ப – பொருந்த, மீதில்- ஆகாயத்திலே, குழுவின – கூடின, மழை – மழைபெய்கிற, மா-கறுத்த, கொண்மூ- மேகங்கள், பொத்து -பொத்தலாய், உகு – சிந்துகிற, பொருவில் – ஒப்பில்லாத, நன்னீர் – நல்லஜலத்தை பனிநீரை, சொரிவன – சிந்துவனவாகி, போவபோல்-செல் கின்றனபோல், சித்திரம் – பலநிறங்களேயுமுடைய, பதாகையீட்டம் – கொடிக்கூட் டங்கள், திசைதொறும் – எந்தத்திக்கிலும், செறிவ – நெருங்குவனவாய், செல்வ- செல்லலாயின—எ- று. அயில் வேல் முதலியவைகளாலே குத்திப் பொத்தாற்போல் மேகங்களேப் பொத்துச்சேனைகள்மேல் பனிநீர்ச்சிந்திக்கொண்டு செல்கிறவர்கள் போற் கொடிகள் செல்கின்றன என்க. (எ)

பல்லியந்துவைப்பநன்மாப்பணிலங்கண்முரலப்பொன்றேர்ச்
சில்லிகளிடிப்பவாசிசிரித்திடச்செறிபொற்றாரும்
வில்லுநின்றிசைப்பயானேமுழக்கம்விட்டார்ப்பவிண்டோய்
ஒல்லொலிவானிற்றேவருரைதெரிவொழிக்கமன்னோ.

இ-ள். பல்லியம் – பலவாத்தியங்களும், துவைப்ப – சத்திக்க, நன்மா – நல்ல பெரிதான, பணிலங்கள் - சங்குகள், முரல - சத்திக்கவும், பொன்தேர் - பொன்மய மான ரதங்களின், சில்லிகள் – உருளேகள், இடிப்ப – மோதிமுழங்கவும், வாசி – குதி ரைகள், சிரித்திட – அனுமானிக்கவும், செறி – நெருங்கின, பொன் – பொன்னுலா கிய, தாரும் – கிண்கிணிமாலேகளும், வில்லும் – வில்லினது குணத்தொனிகளும், நின்று – அவைகளோடுகூடிநின்று, இசைப்ப – சத்திக்கவும், யானே – யானேயினது, முழக்கம் – சத்தமானது, விட்டார்ப்ப – அதன்வாய்விட்டொலிக்கவும் ஆகிய இவை யெல்லாங்கூடி, விண்தோய்-ஆகாயத்திலேபோய்ச்சேருகிற, ஒல்லொலி-மிக்கவொலி யானது, வானில் – ஆகாயத்திலுள்ள, தேவர் – தேவர்கள், உரை – ஒருவரோடொரு வர் பேசுகிறபேச்சு. தெரிவு – தெரிந்துகொள்கிறதை, ஒழிக்க – தெரியாதுசெய்ய எ- று. (அ)

மின்னகுகிரிகள்யாவுமேருவின்விளங்கித்தோன்றத்
தொன்னகர்பிறவிமெல்லாம்பொலிந்தனதுறக்கமென்ன
அன்னவன்சேனேசெல்லவார்கலியிலங்கையாய
பொன்னகர்தகர்ந்துபொங்கியார்த்தெழுதூளிபோர்க்க.

இ-ள். மின் - மின்களையுடையமேகங்கள், நகு - விளங்குகின்ற, கிரிகள்யாவும் - மலைகளெல்லாம், மேருவின் - மகாமேருவைப்போல், விளங்கி - பிரகாசித்து, தோன்ற - தெரிய, தொன்னகர் - பழையபட்டணங்கள்முதலான, பிறவும் - மரஞ்செடிகளும், எல்லாம் - தூளிபட்டவைகளெல்லாம், துறக்கமென்ன - பொன்னுலகம்போல், பொலிந்தன - விளங்கின, அன்னவன் - அந்தச் சம்புமாலியினுடைய, சேனை - சேனைகள், செல்ல - மிதித்துநடத்தலாலே, ஆர்கலி - கடல்சூழ்ந்த, இலங்கையாய - இலங்காபுரியான, பொன்னகர் - பொன்னுலாகியவூர், தகர்ந்து - நெரிந்து, பொங்கி - மிகுந்து, ஆர்த்து - திமிர்ந்து, எழு - கிளம்புகிற, தூளி - தூளிகள்போய், போர்க்க - படிதலாலே—எ-று. (௯)

ஆயிரமைந்தொடைந்தாமாழியந்தடந்தேரத்தேர்க்
கேயினவிரட்டியானையானையினிரட்டிபாய்மா
போயினபதாதிசொன்னபுரவியினிரட்டிபோலாம்
தீயவன்றடந்தேர்சுற்றிற்தெத்றெனச்சென்றசேனை.

இ-ள். ஆயிரம் ஐந்தொடைந்தாம் - பதினாயிரமாகிய, ஆழி - உருளைகளையுடைய, அம் - அழகிதான, தடந்தேர் - பெரியதேர்களும், அத்தேர்க்கு - அந்தத்தேர்க்கு, ஏயின - சொன்னகணக்கின்தொகை, இரட்டி - இரண்டானால் இருபதினாயிரம், யானை - யானைகளும், யானையினிரட்டி - யானைத்தொகையை இரட்டித்தால் நாற்பதினாயிரம், பாய்மா - பாயுங்குதிரைகளும், போயின - இவைகளுடன்சென்ற, பதாதி - காலாள்கள், சொன்ன - முன்னேசொன்ன, புரவியினிரட்டி - குதிரைத்தொகையை இரட்டித்தால் எண்பதினாயிரம், தீயவன் - பொல்லாதவனானசம்புமாலியின், தடந்தேர் - பெரியதேரை, சுற்றி - சூழ்ந்து, தெற்றென - விரைவாக, சென்ற - போன, சேனை - சேனையின்தொகை—எ-று. (௧0)

வின்மறைக்கிழவர்நானுவிஞ்சையர்வரத்தின்மிக்கார்
வன்மறக்கண்ணராற்றல்வரம்பிலாவயிரத்தோளார்
தொன்மறக்குலத்தர்தூணிதூக்கியபுறத்தர்மார்பின்
கன்மறைத்தொளிருஞ்செம்பொற்கவசத்தர்கடுந்தேராட்கள்.

இ-ள். வின்மறைக்கிழவர் - தனுர்வேதந்தெரிந்தவர்களும், நானுவிஞ்சையர்- பலவிதவித்தை கற்றவர்களும், வரத்தின்மிக்கார் - வரபலத்தாலதிகர்களும்,வன்மறக்கண்ணர் - வலியவீரவேஷமுள்ளவர்களும், ஆற்றல்-சாமர்த்தியத்தால், வரம்பிலா-அளவில்லாத, வயிரம் - வயிரமலைபோன்ற, தோளர் - புஜங்களுள்ளவர்களும், தொல்-பாரம்பரியமாய், மறக்குலத்தர் - வலியிற்சிறந்தவர்களும், தூணிதூக்கிய - அம்பறாத்தூணிதொங்குகிற, புறத்தர் - முதுகுள்ளவர்களும், மார்பின்கல் - மார்பாகிய கல்லை, மறைத்து - மூடுதல்செய்து, ஒளிரும் - விளங்குகின்ற, செம்பொன் - சிவந்தபொன்மயமான, கவசத்தர் - சீராவையுடையவர்களுமே ஆனவர்கள், கடு - வேகமுள்ள, தேராட்கள் - தேர்வீரர்கள்—எ-று. (௧௧)

பொருதிசையானையூரும்புனிதனைப்பொருவும்பொற்பர்
சுரிபடைத்தொழிலுமற்றையங்குசத்தொழிலுந்தொக்கார்
நிருதியிற்பிறந்தவீரர்நெருப்பிடைபரப்புங்கண்ணர்
பரிதியிற்பொலியுமெய்யர்படுமதக்களிற்றின்பாகர்.

இ-ள். பொரு - ராவணனுடனேசண்டைபண்ணவல்ல, திசையானை - திக்கியானைமேல், ஊரும் - ஏறிவருகிறவனான, புனிதனை-பாலனகுணமுள்ளநைருதியை,

பொருவும் - சாமர்த்தியத்தாலொத்த, பொற்பர் - அழகுள்ளவர்கள், சுரிபடை - உடைவாளால்வெல்லுகிற, தொழிலும் - செய்கையும், மற்றை - யானையைச்செலுத்துவ்தான, அங்குசத்தொழிலும் - தோட்டிகொண்டுவெல்லுஞ்செய்கையும், தொக்கார் - கூடியவர்கள், நிருதியில் - நைருதிகுலத்திலே, பிறந்த - உற்பவித்த, வீரர்-வீரர்கள், நெருப்பு - அக்கினிப்பொறியை, இடை - பார்க்குமிடமெல்லாம், பரப்பும் - விரிப்பதான, கண்ணர் - கண்களுள்ளவர்கள், பரிதியில் - சூரியன்போல், பொலியும்-ஆபரணங்களால் விளங்குகிற, மெய்யர் - சரீரமுள்ளவர்கள், படுமதம் - மதஞ்சிந்துகின்ற, களிற்றின்பாகர் - யானைமேலேறிச்செலுத்திவருகிற வீரர்கள்—எ-று. (௧௨)

ஏர்கெழுதிசையுஞ்சாரிபதினெட்டுமியல்பினெண்ணிப்
போர்கெழுபடையுங்கற்றவித்தகப்புலவர்போரில்
தேர்கெழுமறவர்யானைச்சேவகர்சிரத்திற்செல்லும்
தார்கெழுபுரவியென்னுந்தம்மனந்தாவப்போனார்.

இ-ள். ஏர்கெழு - எழுதலையுடைய, திசையும் - திக்கினதுநெடுமையும், சாரி பதினெட்டும் - பதினெண்சாரியும், இயல்பின் - முறைப்படி, எண்ணி-ஆலோசித்து, போர்கெழு - யுத்தஞ்செய்தற்குத்தக்க, படையும் - ஆயுதவகையும், கற்ற - தெரிந்த, வித்தகப்புலவர் - விவேகத்திலேசிறந்தவர்கள், போரில் – யுத்தத்திலே, தேர்கெழு மறவர் – ரதவீரர்சிரத்திலும், யானைச்சேவகர்-யானைவீரர்களுடைய, சிரத்தில்-தலைகளிலும், செல்லும் – தாவிக்கால்வைக்கின்ற, தார்கெழு – கிண்கிணிமாலைகள் பூண்ட, புரவியென்னும் – குதிரைகளென்கிற, தம்மனம் – தங்கள்மனமானவை, தாவ-தாண்டிச்செல்ல, போனார் – குதிரைவீரர்களும் போனார்கள்—எ-று. (௧௩)

அங்நெடுந்தானைசுற்றவமரரையச்சஞ்சுற்றப்
பொன்னெடுந்தேரிற்போனான்பொருப்பிடைநெருப்பிற்பொங்கித்
தன்னெடுங்கண்கள்காந்தத்தாழ்பெருங்கவசமார்பின்
மின்னிடவெயிலும்வீசவில்லிடுமெயிற்றுவீரன்.

இ-ள். அங்நெடுந்தானை – அந்தநெடியசேனைகள், சுற்ற - சூழவும், அமரரை-தேவர்களை, அச்சஞ்சுற்ற - பயஞ்சூழவும், பொன்னெடுந்தேரில் – பொன்மயமான நெடியதேரின்மேலேறி, பொருப்பிடை – ஒருமலைமேலே, நெருப்பில் – நெருப்பெரிகிறதுபோல், பொங்கி – கோபங்கொண்டு, போனான் – சென்றான், தன் – தன்னுடைய, நெடுங்கண்கள் – நீண்டகண்கள், காந்த – கொதிக்கவும், தாழ் – தங்க அணிந்த, பெருங்கவசம் – பெரியசீராவானது, மார்பின்மின்னிட – மார்பிலே விளங்கவும், வெயிலும் – ரத்னமாலைகள்வெயிலையும், வீச – வீசுதலாக, வில்லிடும் - விற்போல்வளைந்தொளிவீசுகின்ற, எயிற்று – பற்களையுடைய, வீரன் – மஹாவீரனான சம்புமாலி எ-று. (௧௪)

நந்தனவனத்துணின்றநாயகன்றூதன்றானும்
வந்திலரரக்கரென்னுமனத்தினன்வழியைநோக்கிச்
சந்திரன்முதலவானமீனெலாந்தழுவநின்ற
இந்திரதனுவிற்றோன்றுந்தோரணமிவர்ந்துநின்றான்.

இ-ள். நந்தனவனத்துணின்ற – அசோகவனத்திலேநிற்கிற, நாயகன்றூதன்றானும் – அனுமாரானவர், அரக்கர்வந்திலர் – ராக்ஷதர்களின்னம் வரக்காணேமே, என்னுமனத்தினன் – என்கிற நினைவுடையவராய், வழியைநோக்கி – அவர்வருந்திசையைக்குறித்து, சந்திரன்முதலவான – சந்திரன்முதலாகிய, மீனெலாம்-நக்ஷத்தி

ரங்கள்யாவும், தழுவநின்ற — சூழ்வதாகநிற்கிறவுயர்வுள்ளதாய், இந்திர தனுவில் — பலரத்நவொளிகளாலே வானவிற்போல், தோன்றும் — காணப்படுகிற, தோரணம்- தோரணகம்பத்தில், இவர்ந்துநின்றான் — ஏறியிருந்தார்—எ-று. (௧௫)

கேழிருமணியும்பொன்னும்விசும்பிருள்கிழித்துவீங்க
ஊழிருங்கதிர்களோடுந்தோரணத்தும்பர்மேலான்
சூழிருங்கதிர்களெல்லாந்தோற்றிடச்சுடருஞ்சோதி
ஆழியினடுவட்டோன்றுமருக்கனேயனையனானான்.

இ-ள். கேழிரு - ஒளியாற்பெரிதான, மணியும் - ரத்நங்களும், பொன்னும்- சுவர்ணமும், விசும்பு - ஆகாயத்துள்ள, இருள் - இருளை, கிழித்து - நீண்டுபோக்கி, வீங்க - அதிகமாக, ஊழ் - முறைமுறையாக, இரும் - பெரிதான, கதிர்களோடும்- தேஜசுக்களோடுகூடி, தோரணத்தும்பர் - தோரணகம்பத்தினுனியின், மேலான- மேலேயிருக்கிற அனுமார், சூழ் - பலவகைரத்நங்களினின்றும்வருகிற, இரும் - பெரிய, கதிர்களெல்லாம் - ஒளிகளெல்லாம், தோற்றிட - வெளியேவிளங்க, சுடரும்- காந்துவதான, சோதி - பிரகாசமுள்ள, ஆழியினடுவண் - கடலினடுவே, தோன்றும், விளங்குகின்ற, அருக்கனே - சூரியனையே, அனையன் - ஒத்தவன், ஆனான்-ஆயினார் எ-று. ரத்நாகரமாகையால் கடலைத்தோரணகம்பமாகவும் உடம்பெல்லாம் புண்ணிய ரத்நதேஜஸ்ஸோடிருப்பதினாலே அனுமாரைச் சூரியனாகவுஞ் சொல்லியது. (௧௬)

செல்லொடுமேகஞ்சிந்தத்திரைக்கடல்சிலைப்புத்தீரக்
கல்லளைக்கிடந்தநாகமுயிரொடுவிடமுங்காலக்
கொல்லியலரக்கர்நெஞ்சிற்குடிபுகவச்சம்வீரன்
வில்லெனவிடிக்கவிண்ணோர்நடுக்குறவீரனார்த்தான்.

இ-ள். செல்லொடு - இடியுடனே, மேகம் - மேகங்கள், சிந்த - சிதறவும், திரைக்கடல் — அலையையுடைய கடல்கள், சிலைப்புத்தீர — தம்மொலியடங்கவும், கல்லளை — மலைக்குகைகளிலே, கிடந்த — கிடக்கிற, நாகம் — பாம்புகள், உயிரொடு — தம்முயிருடனே, விடமும் — நஞ்சையும், கால — கக்கவும், கொல் இயல் — கொலைசெய்கிற, அரக்கர் — ராக்ஷதர்களுடைய, நெஞ்சில் — மனத்திலே, அச்சம் — பயம், குடிபுக- நிலைகொள்ளவும், வீரன் — ஸ்ரீராமனுடைய, வில்லென — கோதண்டத்தின் குணத்தொனியென்னும்படி, இடிக்க — பெருமுழக்கமாக, விண்ணோர்-தேவரும், நடுக்குற- அஞ்ச, வீரன் — அனுமார், ஆர்த்தான் — கெர்ச்சித்தார்—எ-று. (௧௭)

நின்றனதிசைக்கண்வேழநெடுங்களிச்செருக்குநீங்கத்
தென்றிசைநமனுமுள்ளந்துணுக்கெனச்சிந்திவானில்
பொன்றலின்மீன்களெல்லாம்பூவெனவுதிரப்பூவும்
குன்றமும்பிளக்கவேலைதுளக்குறக்கொட்டினான்றோள்.

இ-ள். திசைக்கணின்றன — திக்குகளிலேநிற்கிற, வேழம் — யானைகள், நெடுங்களி — தம்முடைய நெடியமதமயக்காலுண்டான, செருக்கு - கருவங்கள், நீங்க- போக, தென்றிசை — தெற்குத்திசையிலுள்ள, நமனும் — யமனுங்கூட, உள்ளம் — மனசு, துணுக்கென — திடுக்கிட, சிந்தி — சிதறுதலாய், வானில் — ஆகாயத்திலே, பொன்றலில் — கெடுதலில்லாதிருக்கிற, மீன்களெல்லாம் - நக்ஷத்திரங்களெல்லாம், பூவென — பூப்போல், உதிர — உதிர்தலாக, பூவும் - பூமியும், குன்றமும் — மலைகளும், பிளக்க — பிளந்துபோகவும், வேலை - கடல்கள், துளக்குற - சலிக்கவும், தோள்கொட்டினான் - புஜங்களைத்தட்டினார்—எ-று. (௧௮)

அவ்வழியரக்கரெல்லாமலைநெடுங்கடலினூர்த்தார்
செவ்வழிச்சேறலாற்றூர்பிணப்பெருங்குன்றந்தெற்றி
வெவ்வழிகுருதிவெள்ளம்புடைமிடைந்துயர்ந்துவீங்க
எவ்வழிச்சேறுமென்றூர்தமருடம்பிடறிவீழ்வார்.

இ-ள். அவ்வழி – அப்போது, அரக்கரெல்லாம் – ராக்ஷதர்களெல்லாம், அலை-அலைகளையுடைய, நெடுங்கடலின் – நெடியகடல்போல், ஆர்த்தார் – முழங்கினூர்கள், செவ்வழி – நல்லவழிகிடைத்து, சேறலாற்றூர் – செல்லமாட்டாதவர்களாய், பிணம்-சவங்களான, பெருங்குன்றம் – பெரியமலைகள், தெற்றி – தடுக்குதலாகி, வெவ்வழி-அந்தக்கொடியவழியிலே, குருதிவெள்ளம் – ரக்தப்பிரவாகம், புடை – பிணமலைகளினிடத்திருந்து, மிடைந்து – அதிகமாய், உயர்ந்து – உயர்வுகொண்டு, வீங்க – பெருக அதனூலே, எவ்வழி – எந்தவழியாக, சேறும் – செல்லுவோம், என்றூர் – என்றுசொல்லுகிறவர்கள், தமர் – தம்முறவினர்கள், உடம்பிடறி – உடம்புதடுக்கி, வீழ்வார்-விழுவார்கள்—எ-று. (கக)

ஆண்டுநின்றரக்கன்வெவ்வேறணிவகுத்தனிகந்தன்னை
மூண்டிருபுடையுமுன்னுமுறைமுறைமுசவேவித்
தூண்டினன்றூனுந்திண்டோர்தோரணத்திருந்ததோன்றல்
வேண்டியதெதிர்ந்தானென்னவீங்கினன்விசயத்திண்டோள்.

இ-ள். ஆண்டுநின்று – அங்கிருந்து, அரக்கன் – அந்தச்சம்புமாலி, வெவ்வேறு – வேறுவேறாக, அணிவகுத்து – ஒழுங்குசெய்து, அனிகந்தன்னை – சேனைகளை, மூண்டு – அதிகரித்து, இருபுடையும் – இருபுறத்திலும், முன்னும் – முன்னேயும், முறைமுறை – வரிசைவரிசையாய், மூச – நெருங்கிச்செல்ல, ஏவி – விட்டு, திண்தேர் – தனதுபலமுள்ளதேரை, தானும்தூண்டினன் – தானும்செலுத்தினூன், தோரணத்து – தோரண கம்பத்தின்மேலே, இருந்ததோன்றல் – இருந்த அனுமார், வேண்டியது – தமக்கு வேண்டிய பொருள், எதிர்ந்தானென்ன – கிடைக்கப்பெற்றூற்போல், விசயத்திண்டோள் – சயத்தினூலேபலமுள்ளதோள்கள், வீங்கினன் – பருத்தார்—எ-று. (உ0)

ஐயனுமமைந்துநின்றூனூழியானளவினூமம்
நெய்சுடர்விளக்கிற்றேன்றுநெற்றியேநெற்றியாக
மொய்மயிர்ச்சேனைபொங்கமுரணயிலுகிர்வாண்மொய்த்த
கைகளேகைகளாகக்கடைக்கூழைதிருவாலாக.

இ-ள். ஐயனும் – அனுமாரும், அமைந்து – அவன்போலவே அணிவகுத்து, நின்றூன் – நின்றனர் எப்படியென்னில், ஆழியான் – சக்கராயுதனூன திருமாலினுடைய, அளவின் – அடிமைக்குறியளவான, நாமம் – கேசவாதி திருமண்காப்பே, நெய் – நெய்யூற்றி, சுடர் – எரிவதான, விளக்கில் – விளக்கைப்போல், தோன்றும்-விளங்குகின்ற, நெற்றியே – இவர்நெற்றிதானே, நெற்றியாக – முன்னணியாகவும், மொய் – இவருடம்பெல்லா நெருங்கியிருக்கிற, மயிர் – உரோமங்களாகிய, சேனை-சேனைகள், பொங்க – மிகுதலாகவும், முரண் – பலம்பொருந்தின, அயில் – கூர்மையான, உகிர் – கைகாலினகங்களே, வாள் – வாளாயுதங்களாகவும், மொய்த்த – அவைகளையுடைய, கைகளே – இருகைகளும், கைகளாக – சேனை ஒழுங்காகவும், கடைக்கூழை – பின்னணியானது, திருவாலாக – அழகியவாலாகவும் ஐயனமைந்து நின்றூனென்க—எ-று. (உக)

வயிர்கள்வால்வளைகள்விம்மவரிசிலைசிலைப்பமாயப்
பயிர்களார்ப்பெடுப்பமுரிப்பல்லியங்குமுறப்பற்றிச்
செயிர்கொள்வாளரக்கர்சீற்றஞ்செருக்கினர்படைகள்சிந்தி
வெயில்கள்போலொளிகள்வீசவீரன்மேற்கடிதுவிட்டார்.

இ-ள். வயிர்கள் - கொம்புகளும், வால்வளைகள் - வெண்சங்குகளும், விம்ம-சத்திக்கவும், வரிசிலை - வரிதலையுடையவிற்களிலே, சிலைப்ப - குணத் தொனியுண்டாகவும், மாயப்பயிர்கள் - மாயச்செய்கைகளான, ஆர்ப்பெடுப்ப-சத்தமுண்டாகவும், மூரிப்பல்லியம் - பெரிதான பலவகைவாத்தியங்களும், குமுற - முழங்கவும், பற்றி-கையிலேகொண்டு, செயிர்கொள் - தீமையைச்செய்கிற, வாள் - கத்திகளையுடைய, அரக்கர் - ராக்ஷதர்கள், சீற்றம் - சீறுதலாலே, செருக்கினர் - மனக்களிப்பினராய், படைகள் - அஸ்திரசஸ்திரங்களை, சிந்தி - பொழிந்து, வெயில்கள்போல் - சூரியகிரணம்போல், ஒளிகள்வீச - காந்திகள்தோன்ற, வீரன்மேல் - அனுமார்மேலே, கடிது - விரைந்து, விட்டார் - பிரயோகித்தார்கள்—எ-று. பயிர் - பயில், சிந்தி ஒளிகள்வீசவிட்டாரென்க. (உஉ)

வேறு.

கருங்கடலரக்கர்தம்படைக்கலங்கரத்தால்
பெருங்கடலுறப்புடைத்திறுத்துகப்பிசைந்தான்
விரிந்தனபொறிக்குலநெருப்பெனவெகுண்டாண்
டிருந்தவன்கிடந்ததொரெழுத்தெரிந்தெடுத்தான்.

இ-ள். கருங்கடல் - கரியகடல்போன்ற, அரக்கர்தம் - ராக்ஷதர்களுடைய, படைக்கலம் - ஆயுதங்களை, கரத்தால் - கைகளாலே, பெருங்கடல் - பெரியகடலிலேபோய், உற - விழும்படி, புடைத்து - அடித்து, இறுத்து - ஒடித்து, உக-உதிர, பிசைந்தான் -கசக்கினர் அதனாலே, பொறிக்குலம்-நெருப்புப்பொறிகள், விரிந்தன-பறத்தலாயின, நெருப்பென - அப்பொறிகளுண்டாகுகிற நெருப்பென்னும்படி, வெகுண்டு - கோபங்கொண்டு, ஆண்டு - அங்கே தோரணகம்பத்திலே, இருந்தவன்-முன் இருந்தவரான அனுமார், கிடந்தது ஓர் - அங்கேகிடந்ததான ஒரு, எழு-எழுத்தடி, தெரிந்து - ஆராய்ந்துகண்டு, எடுத்தான் - கையிலேகொண்டார்—எ-று. (உங)

இருந்தனனெழுந்தனனிழிந்தனனுயர்ந்தான்
திரிந்தனன்புரிந்தனனெனநனிதெரியார்
விரிந்தவர்குவிந்தவர்விலங்கினர்கலந்தார்
பொருந்தினர்நெருங்கினர்களப்படப்புடைத்தான்.

இ-ள். இருந்தனன் - தோரணகம்பத்திலிருந்தவர், எழுந்தனன்-எழுந்தார், இழிந்தனன் - அதைவிட்டிறங்கினர், உயர்ந்தான் - வளர்ந்தார், திரிந்தனன் - சுழன்றார், புரிந்தனன் - இன்னதுசெய்தார், என நனி - என்றுமுழுதும், தெரியார்-தெரியார்களாய், விரிந்தவர் - அதிகரான ராக்ஷதர்கள், குவிந்தவர் - கும்பல்கூடினவர்களாய், விலங்கினர் - ஒதுங்கினவர்களும், கலந்தார் - கூடிநின்றவர்களும், பொருந்தினர் - சண்டைசெய்தவர்களும், நெருங்கினர் - கிட்டினவர்களும், களப்பட - எல்லாரும்யுத்தகளத்திலே சாவும்படி, புடைத்தான்-அடித்தார்எழுத்தடியினாலே-எ-று. தெரியாதவர்களும் விரிந்தவரும் குவிந்தவருமெனவுமாம். (உச)

எறிந்தனவெய்தனவிடியுருமெனமேல்
செறிந்தனபடைக்கலமிடக்கையிற்சிதைத்தான்

முறிந்தனதெறுங்கரிமுடிந்தனதடந்தேர்
மறிந்தனபரிநிரைவலக்கையின்மலைந்தான்.

இ-ள். எறிந்தன — எறிந்தசாஸ்திரங்களும், எய்தன — எய்த அஸ்திரங்களும், இடி — இடிக்கின்ற, உருமென — இடிபோல், மேற்செறிந்தன — தம்மேலேபட்ட, படைக்கலம் — ஆயுதவகைகளை, இடக்கையில் - இடதுகையினாலே, சிதைத்தான் - அழித்தார், தெறுங்கரி - கொல்லும் யானைகள், முறிந்தன — கொம்புகளொடிந்தன, தடந்தேர் — பெரியதேர்கள், முடிந்தன — அழிந்தன, பரிநிரை — குதிரைக்கூட்டங்கள், மறிந்தன - தலைகள்மடங்கின, வலக்கையின் - இப்படிவலதுகையாலே, மலைந்தான் — சண்டைசெய்தார்—எ-று. (உ௫)

இழந்தனநெடுங்கொடியிழந்தனவிருங்கோ
டிழந்தனநெடுங்கரமிழந்தனவியன்றாள்
இழந்தனமுழங்கொலியிழந்தனமதம்பா
டிழந்தனபெருங்கதமிருங்கவுள்யானை.

இ-ள். நெடுங்கொடி - முதுகின்மேற்கொண்ட நெடியகொடிகளும், இழந்தன - போயின, இருங்கோடு — பெரியகொம்புகளும், இழந்தன — போயின, நெடுங்கரம் — நீண்டகைகளும், இழந்தன — போயின, வியன்றாள் — பெரியகால்களும்,இழந்தன — போயின, முழங்கொலி - வீறிடுகிறசத்தமும், இழந்தன-போயின, மதம்பாடு- மதமொழுகுதலும், இழந்தன - போயின, பெருங்கதம் - பெரியகோபமும், இழந்தன — போயின, இருங்கவுள்-பெரியகபோலங்களையுடைய, யானை-யானைகள்-எ-று.

நெரிந்தனதடஞ்சுவர்நெரிந்தனபெரும்பார்
நெரிந்தனநுகம்புடைநெரிந்தனவதன்கால்
நெரிந்தனகொடிஞ்சில்கணெரிந்தனவியன்றார்
நெரிந்தனகடும்பரிநெரிந்தனநெடுந்தேர்.

இ-ள். தடஞ்சுவர் — பெரிய சுற்றுச்சுவர்களும், நெரிந்தன — நெரிதலாயின, பெரும்பார் - பெரிய அடிப்பார்களும், நெரிந்தன — நெரிதலாயின, நுகம்புடை — நுகத்தடியினிடமெல்லாம், நெரிந்தன — நெரிதலாயின, அதன்கால்-அதனுருளைகளும், நெரிந்தன - நெரிதலாயின, கொடிஞ்சில்கள் — மேற்பரப்புகளும், நெரிந்தன-நெரிதலாயின, வியன்றாள் - பெரியகுதிரைக்கால்களும், நெரிந்தன — நெரிதலாயின, கடும்பரி — வேகக்குதிரைகளும், நெரிந்தன — நெரிதலாயின, நெடுந்தேர் - இப்படிநெடிய தேர்களெல்லாம், நெரிந்தன — நெரிதலாயின—எ-று. நுகமும் அதன்பக்கமும் எனவுமாம். (உஎ)

ஒடிந்தனவுருண்டனவுலந்தனபுலந்த
இடிந்தனவெரிந்தனநெரிந்தனவெழுந்த
மடிந்தனமறிந்தனமுறிந்தனமலைபோல்
படிந்தனமுடிந்தனகிடந்தனபரிமா.

இ-ள். ஒடிந்தன - கழுத்தொடிந்தனசில, உருண்டன — கீழே உருளலாயின சில, உலந்தன — உயிரே போயினசில, புலந்த- துன்பப்படுகின்றனசில, இடிந்தன- இடிபட்டனசில, எரிந்தன - வேவுதலாயினசில, நெரிந்தன — எலும்புநெரிதலாயின சில, எழுந்த - கீழேவிழுந்தெழுந்தனசில, மடிந்தன — மடிவதாயினசில, மறிந்தன-

மீண்டோவெனசில, முறிந்தன - கால்கள் முறிந்தனசில, மலைபோல் படிந்தன - இப்படி மலைகளைப்போற் படிதலாயினபல, முடிந்தன - இப்படி முடிவுபெற்று, கிடந்தன - கிடக்கலாயின, பரிமா - ஏறுங்குதிரைகள்—எ-று. (உஅ)

வெருண்டனர்வியந்தனர்விழுந்தனரெழுந்தார்
மருண்டனர்மயங்கினர்மறிந்தனரிறந்தார்
உருண்டனருலைந்தனருழைத்தனர்பிழைத்தார்
சுருண்டனர்புரண்டனர்தொலைந்தனர்மலைந்தார்.

இ-ள். வெருண்டனர் - பயங்கொண்டார்கள் சிலர், வியந்தனர் - அதிசயித்தார்கள்சிலர், விழுந்தனர் - கீழேவிழுந்தார்கள்சிலர், எழுந்தார் - சண்டைக்கெழுந்தார்கள்சிலர், மருண்டனர் - மயங்கினுர்கள்சிலர், மயங்கினர் - மூர்ச்சையானுர்கள் சிலர், மறிந்தனர் - மீண்டோடினுர்கள்சிலர், இறந்தார் - செத்துப்போனுர்கள்சிலர், உருண்டனர் - தலைகளுருண்டார்கள்சிலர், உலைந்தனர் - வருந்தினுர்கள்சிலர், உழைத்தனர் - குற்றுயிரானுர்கள்சிலர், பிழைத்தார் - அடிக்குத்தப்பினுர்கள்சிலர், சுருண்டனர் - சுருண்டுவிழுந்தார்கள்சிலர், புரண்டனர் - குப்புறவிழுந்தார்கள்சிலர், மலைந்தார் - சண்டைசெய்தகாலாள்கள், தொலைந்தனர் - இப்படி அழிந்தார்கள்—எ-று.()

வேறு.

கரிகொடுகரிகளைக்களப்படப்புடைத்தான்
பரிகொடுபரிகளைத்தலத்திடைப்படுத்தான்
வரிசிலைவயவரைவயவரின்மடித்தான்
நிரைமணித்தேர்களைத்தேர்களினிரைத்தான்.

இ-ள். கரிகொடு - யானைகளாலே, கரிகளை - யானைகளை, களப்பட - யுத்தகளத்திலே சாவும்படி, புடைத்தான் - அடித்தார், பரிகொடு - குதிரைகளாலே, பரிகளை - குதிரைகளை, தலத்திடை - பூமியிலே, படுத்தான் - சாவக்கொன்ருர், வரிசிலை - வரிதலுள்ளவில்லையுடைய, வயவரை - வீரரை, வயவரின் - அவ்வகை வீரர்களாலே, மடித்தான் - கொன்ருர், நிரை - வரிசைவரிசையாய்நிற்கிற, மணித்தேர்களை - மணிகள்கட்டினதேர்களை, தேர்களில் - அவ்வகைத் தேர்களாலே, நிரைத்தான் - அழித்து வரிசைவரிசையாய்க்குவித்தார்—எ-று. (௩0)

மூளையுமுதிரமுமுழங்கிருங்குழம்பாய்
மீளிருங்குழைபடக்கரிவிழுந்தழுந்தத்
தாளொடுந்தலையுகத்தடநெடுங்கிரிபோல்
தோளொடுநிருதரைவாளொடுந்துகைத்தான்.

இ-ள். மூளையும் - தலைகால்மூளைகளும், உதிரமும் - ரத்தமுங்கூடி, முழங்கு - கொதிப்பதான, இருங்குழம்பாய் - பெரியகுழம்பாகி, மீள் - சருக்குவதான, இரும் - அதிகமுள்ள, குழைபட - சேருக, கரிவிழுந்து - யானைகள்விழுந்து, அழுந்த- பதியவும், தாளொடும் - கால்களுடனே, தலையுக - தலைகளுமுதிர, தடநெடுங்கிரிபோல் - பெரியநீண்டமலைபோல், தோளொடு - தோள்களுடனும், வாளொடும் - கத்திகளுடனும், நிருதரை - ராக்ஷதர்களை, துகைத்தான் - மிதித்தார்—எ-று. (௩க)

மல்லொடுமலைமலைத்தோளரைவளைவாய்ப்
பல்லொடுநெடுங்கரப்பகட்டொடும்பருந்தாள்
வில்லொடுமயிலொடும்விறலொடும்விரிக்கும்
சொல்லொடுமுயிரொடுநிலத்தொடுந்துகைத்தான்.

இ-ள். மல்லொடு - மல்யுத்தங்கொண்டு, மலை - சண்டைசெய்கிற, மலை-மலை போன்ற, தோளரை - புஜங்களுள்ளவர்களை, வாய் - வாயிலுள்ள, வளைபல்லொடும்- வளைந்தபற்களுடனே, நெடுங்கரம் - நீண்டகைகளையுடைய, பகட்டொடும் - யானைக ளுடனே, பருந்தாள் - கனத்தகதிகால்களையுடைய, வில்லொடும் - விற்களுடனே, அயிலொடும் - வேல்களோடு, விறலொடும் - சவுரியத்துடனே, விளிக்கும் - கூப்பிடு கிற, சொல்லொடும் - சொற்களுடனே, உயிரொடு - உயிர்களோடுகூட, நிலத்தொ டும் - பூமியிலேபடிய, துகைத்தான் - கால்களாலேமிதித்துக்கொன்றார்—எ-று. ()

புகைநெடும்பொறிபுகுந்திசைதொறும்பொலிந்தான்
சிகைநெடுஞ்சுடர்விடுந்தேர்தொறுஞ்சென்றான்
தகைநெடுங்கரிதொறும்பரிதொறுஞ்சரித்தான்
நகைநெடும்படைதொறுந்தலைதொறுநடத்தான்.

இ-ள். புகை - புகையுடனே கோபாக்கினியால், நெடும்பொறி - நீண்ட நெ ருப்புப்பொறிகள், புகுந்திசைதொறும் - போகுமிடமெல்லாம், பொலிந்தான் - போ ய்விளங்கினார், சிகை - சிகரத்துடனே, நெடுஞ்சுடர் - நீண்டகாந்தியை, விடும்-வீசுவ னவான, தேர்தொறும் - தேர்கள்நிற்குநிலையெல்லாம், சென்றான் - போயுலாவினார், தகை - பெரிதாக, நெடும் - உயர்ந்துள்ள, கரிதொறும் - யானைகள்மேலும், பரிதொ றும் - குதிரைகள்மேலும் ,சரித்தான் - சஞ்சரித்தார் நகைவிளங்குகிற, நெடும்-நீண் ட, படைதொறும் - ஆயுதங்கள்மேலும், தலைதொறும் - அவர்கள் தலைகள்மேலும், நடந்தான் - நடந்துசென்றார், நகைநெடும்படை - பற்களாகிய நீண்டவாள்கள் மேலு மெனவுமாம்—எ-று. புகைநெடும்பொறி புகுந்திசைதொறு மென்பது - தமக்குக் கோபமூண்ட இடமெல்லாஞ் சென்று விளங்கினாரென்க. (ருரு)

வென்றிவெம்புரவியின்வெரிநினும்விரவார்
மன்றலந்தாரணிமார்பினுமணித்தேர்
ஒன்றினின்றொன்றினுமுயர்மதமழைதாழ்
குன்றினுங்கடையுகத்துருமெனக்குதித்தான்.

இ-ள். வென்றி - முன்னே ஜயம்பெற்றுள்ள, வெம்புரவியின் - வெவ்வியகுதி ரைகள், வெரிநினும் - முதுகுகளிலும், விரவார் - அந்தப்பகைவருடைய, மன்றலந் தார் - பரிமளமிக்கமாலைகள், அணிமார்பினும் - அணிந்தமார்புகளிலும், மணித்தேர்- மணிகள்கட்டினதேர், ஒன்றினின்று - ஒன்றின்மேலேநின்று, ஒன்றினும் - மற்றொ ன்றின்மேலும், உயர் - உயர்ந்த, மதமழை - மதமாகியமழை, தாழ் - இறங்குகின்ற, குன்றினும் - மலைபோன்றயானைகள்மேலும், கடையுகத்து - முடிவுகாலத்திலேவிழு கிற, உருமென - இடிகள்போல், குதித்தான் - குதிகொண்டார்—எ-று. (ருச)

பிரிவருமொருபெருங்கோலெனப்பெயரா
இருவினைதுடைத்தவரறிவெனவெவர்க்கும்
வருமுலைவிலைக்கெனமதித்தனர்வழங்கும்
தெரிவையர்மனமெனக்கறங்கெனத்திரிந்தான்.

இ-ள். பிரிவரும் - நீங்குதலில்லாத, ஒருபெருங்கோலென - ஒருபெரிதான செங்கோல்போலவும், பெயரா - போகாத, இருவினை-பெரியபாபங்களையெல்லாம், துடைத்தவர் - போக்கினவர்கள், அறிவென - புத்திபோலவும், எவர்க்கும் - யார்க் காணும், வரு - விம்மிவருகிற, முலை - தனங்களை, விலைக்கென - விலைசெய்து,

மதித்தனர் — பொருள்நிச்சயித்தவர்களாய், வழங்கும் — கொடுக்கின்ற, தெரிவையர்-தாசிகளுடைய, மனமென — மனம்போலவும், கறங்கென — காற்றாடிபோலவும், திரிந்தான் — சுழன்றுவியாபித்தான்—எ-று. செங்கோல் நல்லோரறிவு — தாசிகள்மனம் கறங்கு எங்கும் சுழன்று வியாபித்தற் குவமைப்பொருள்களாம். (௩௫)

அண்ணலவ்வரியினுக்கடியவரன்சீர்
நண்ணுவரெனும்பொருணவையறத்தெரிப்பான்
மண்ணினும்விசும்பினுமருங்கினும்வலித்தார்
கண்ணினுமனத்தினுந்தனித்தனிக்கலந்தான்.

இ-ள். அண்ணல் — எப்பொருட்குமிறைவனன, அவ்வரியினுக்கு — அந்தத் திருமாலுக்ரு, அடியவர் — தாசரானவர்கள், அவன்சீர் — அத்திருமாலினது சிறப்பையே, நண்ணுவர் — அடைவார்கள், எனும்பொருள் — என்கிற அர்த்தவிசேஷத்தை, நவையற — தோஷமில்லாமல், தெரிப்பான் — தெரியச்செய்தற்கு, மண்ணினும் — நிலத்திலும், விசும்பினும் — ஆகாயத்திலும், மருங்கினும் — திக்குகளிலும், வலித்தார்-வலிசெய்தராக்ஷதர்கள், கண்ணினும் — கண்களிலும், மனத்தினும் — அவர்கள் நினைவிலும், தனித்தனி — ஒவ்வொருவராக, கலந்தான் — தோற்றலானுர்—எ-று. மனத்தினும் என்பதனுல் மனோவேகத்திலும் அதிகமாய் அவ்விடங்களெல்லாம் கலந்தாரெனவுமாம். (௩௬)

கொடித்தடந்தேரொடுங்குரகதக்குழுமை
அடித்தொருதடக்கையினிலத்தினிட்டரைத்தான்
இடித்துநின்றதிர்கதத்தெயிற்றுவன்பொருப்பைப்
பிடித்தொருதடக்கையினுயிருகப்பிழிந்தான்.

இ-ள். கொடி — கொடிகள் கட்டின, தடந்தேரொடும் — பெரியதேர்களுடனே, குரகதக்குழுவை — குதிரைக்கூட்டங்களை, அடித்து — எழுவாலடித்து, ஒருதடக்கையில் — நீண்ட ஒருகையாலே, நிலத்தினிட்டு — பூமியிலேசாய்த்து, அரைத்தான் — தேய்த்தார், இடித்துநின்று — முழங்குதலுடனே நின்று, அதிர் — அதிர்க்கிற, கதம் — கோபமுள்ள, எயிற்று — கொம்புகளையுடைய, வன் — வலிய, பொருப்பை-மலைபோன்ற யானைகளை, பிடித்து — பற்றி, ஒருதடக்கையின் — நீண்ட ஒருகையினுலே, உயிருக — உயிர்கள்சிந்த, பிழிந்தான் — ரத்தத்தைப்பிழிந்தார்—எ-று. (௩௭)

கறுத்தெழுநிறத்தினரெயிற்றினர்கயிற்றார்
செறுத்தெரிவிழிப்பவர்சிகைக்கழுவலத்தார்
மறுத்தெழுமறலிகளிவரெனவதிந்தார்
ஒறுத்துருத்திரனெனத்தனித்தனியுதைத்தான்.

இ-ள். கறுத்தெழு — கருமைகொண்டு வருகிற, நிறத்தினர் — நிறமுள்ளவர்களையும், எயிற்றினர் — வக்கிரதந்தங்களுள்ளவர்களையும், கயிற்றார் — பாசக்கயிறுகொண்டவர்களையும், செறுத்து — சினங்கொண்டு, எரி — நெருப்புப்போல், விழிப்பவர்-கண்கள்திறப்பவர்களையும், சிகை — கூரியநுனியையுடைய, கழு — கழுவாயுதத்தால், வலத்தார் — பலமிக்கவர்களையும், மறுத்து — இரக்கத்தைவிட்டு, எழு — வருகிற, மறலிகள் — யமன்களே, இவரென — இவர்களென்னும்படி, வதிந்தார் — நெருங்கினவர்களையும், ஒறுத்து — கொன்று, உருத்திரனென — சங்கார வுருத்திரமூர்த்திபோல், தனித்தனி — ஒவ்வொருவரையும், உதைத்தான் — காலாலெற்றினுர்—எ-று. (௩௮)

சக்கரந்தோமரமுலக்கைதண்டயில்வாள்
மிக்கனதேர்பரிகுடைகொடிவிரவி

உக்கனகுருதியம்பெருந்திரையுருட்டிப்
புக்கனகடலிடைநெடுங்கரப்பூட்கை.

இ-ள். சக்கரம் - தோமரம் உலக்கை தண்டு அயில் வாள் ஆகிய இவைகளும், மிக்கன - மிகுந்துள்ள, தேர் - இரதங்களும், பரி - குதிரைகளும், குடை - குடைகளும், கொடி - கொடிகளும், விரவி - கலந்து, உக்கன - சிந்தலாயின, குருதியம் பெருந்திரை - ரத்தக்கடலானது, உருட்டி - அவைகளை உருட்டிக்கொண்டு, கடலிடை - கடலிலேபோய், புக்கன - சேரலாயின, நெடுங்கரம் - நீண்டகைகளையுடைய, பூட்கை - யானைகளும் புக்கன என்க—எ-று. (நக)

எட்டினவிசும்பினையெழுப்படவெழுந்த
முட்டினமலைகளைமுயங்கினதிசையை
ஒட்டினவொன்றையொன்றூடடித்துதைந்து
தட்டுமுட்டாடினதலையொடுதலைகள்.

இ-ள். எழுப்பட - எழுவி னடிபடுதலாலே, எழுந்த - எழலாகி, விசும்பினை - ஆகாயத்தை, எட்டின - சிலதலைகள்தொடலாயின, மலைகளை - பருப்பதங்களின்மேலே, முட்டின - சிலமோதலாயின, திசையை - திக்குகளை, முயங்கின - சிலகூடலாயின, ஒன்றையொன்று - ஒருதலைகளை மற்றொருதலை, ஒட்டின - நெருங்கலாயின, ஊடு - ரணகளத்துக்குள்ளே, அடித்து - அனுமாராலடிக்கப்பட்டு, உதைந்து - நெருங்கியுதைதலாய், தட்டுமுட்டு - தட்டுதலும்முட்டுதலும்ஆக, ஆடின - ஆடலாயின, தலையொடு - ஒருதலையொடு, தலைகள் - மற்றுமுள்ளதலைகள்—எ-று. (சO)

வேறு.

கானேகாவல்வேழக்கணங்கள்கதவாளரிகொன்ற
வானேயெய்தத்தனியேநின்றமதமால்வரையொப்பான்
தேனேபுரைகண்கனலேசொரியச்சீற்றஞ்செருக்கினான்
தானேயானான்சம்புமாலிகாலன்றன்மையான்.

இ-ள். கதவாளரிகொன்ற - சிங்கத்தாலே கொல்லப்பட்ட, கானே - காடே, காவல் - தம்மைக் காத்தலாகவுடைய, வேழக்கணங்கள் - யானைக்கூட்டங்கள், வானே எய்த - எல்லாமுடிவாக, தனியேநின்ற - ஒருதானேயாகநின்ற, மதமால்வரை - யூதநாதனானயானையை, ஒப்பான் - ஒத்தவன், தேனே - சிவந்ததேனையே, புரை - ஒப்பான, கண் - கண்களிலேநின்றும், கனலே - நெருப்பே, சிந்த - உதிர, சீற்றம் - சீறுதலுடனே, செருக்கினான் - கர்வமுமுள்ளவன், தானே - தானொருவனே, ஆனான்சம்புமாலி - மிகுந்தவனானான், காலன்றன்மையான் - கொல்லுதலாலே யமனைநிகர்த்தவன்—எ-று. கதவாளரி - கோபமும் நகங்களானவாளுமுள்ளசிங்கம், மதமால்வரை - மதமு முயர்வுமுள்ள மலைபோல்வது, உதவிசெய்தினத்தைக் காக்குமும்பலே யூதநாதன் எனவுணர்க. (சக)

காற்றிற்கடியகலினப்புரவிநிருதர்களத்துக்கார்
ஆற்றுக்குருதிநிணத்தோடடுத்தவள்ளற்பெருங்கொள்ளை
சேற்றிற்செல்லாத்தேரினாழியாழுநிலைதேரா
வீற்றுச்செல்லும்வெளியோவில்லையளியன்விரைகின்றான்.

இ-ள். காற்றில் - வாயுவேகத்திலும், கடிய - அதிகவேகமுள்ள, கலினம்-கடிவாளம்பூண்ட, புரவி - தேர்க்குதிரைகள், களத்து - யுத்தகளத்திலே, உக்கார் - இற

ந்தவர்களான, நிருதர் - ராக்ஷதர்களுடைய, ஆற்று — ஆறுபோற்பெருகி வருகிற, குருதி — ரத்தமானது, நிணத்தோடு — கொழுப்புடனே, அடுத்த — கூடின, அள்ளல்-கையாலள்ளத்தக்க, பெரும் — பெரிதான, கொள்ளேச்சேற்றில் — அதிகமாகிய சேற்றிலே, செல்லா - போகமாட்டாமல், தேரினுழி — தேரினுருளைகள், ஆழுநிலை — அழுந்துகிறபடியை, தேரா — தெரிந்து, வீற்று - வேறே, செல்லும் - போகுதலான, வெளியோ — வெறுநிலமோ, இல்லை - இல்லாமல், அளியன் - தனி அவனொருவனே, விரைகின்றான் - அவசரப்படுகின்றான்—எ-று. (சஉ)

ஏதியொன்றாற்றேருமஃதாலெளியோருயிர்கோடல்
நீதியன்றாலுடன்வந்தாரைக்காக்குநிலையில்லாய்
சாதியன்றேற்பிறிதென்செய்தியவர்பின்றனிநின்றாய்
போதியென்றான்பூத்தமரம்போற்புண்ணாற்பொலிகின்றான்.

இ-ள். ஏதியொன்றால் - என்கையிலாயுதமும் ஒன்றே, தேரும் — உனக்குள்ளதேரும், அஃதால் - அவ்வொன்றே, எளியோர் — எளிமையான ஒருவனுடைய, உயிர்கோடல் - பிராணனைவாங்குதல், நீதியன்று ஆல் — நியாயமல்ல ஆகையாலே, உடன்வந்தாரை - உன்கூடவந்தவர்களை, காக்கும் - ரக்ஷிப்பதான, நிலையில்லாய் — திறமில்லாதவனே, சாதி — சண்டைபண்ணிப்பார், அன்றேல் - அல்லவானால், பிறிது-வேறே, என்செய்தி - நீ என்னசெய்யவல்லவன், அவர் — அவ்வரக்கர்களுக்கு, பின்-பின்னே, தனிநின்றாய் - நீ ஒருவனேநிற்பதானாய், போதியென்றான் - ஆதலாலோடிப்போவென்றுசொன்னார், பூத்தமரம்போல் — புஷ்பித்த செம்முருக்க மரத்தைப்போல், புண்ணால் — காயங்களாலே, பொலிகின்றான் - விளங்குகிற அனுமார்-எ-று. ஏதியொன்று தேரொன்றென்றதனாலே ஒரே அடிக்குத்தான்காணும் ஓடிப்போவென்று கருத்து. (சஙு)

நன்றுநன்றுன்கருணையென்னாநெருப்புநகநக்கான்
பொன்றுவாரினொருவனென்றாய்போலுமெனையென்னா
வன்றிண்சிலையின்வயிரக்காலால்வடித்திண்சுடர்வாளி
ஒன்றுபத்துநூறுநூறாயிரமுமுதைப்பித்தான்.

இ-ள். நன்று நன்று — மிகவு நன்றாயிருக்கிறது, உன்கருணையென்னா - உன் இரக்கமென்று, நெருப்புநக — நெருப்புவிளங்க, நக்கான் — சிரித்தவனாகி, பொன்றுவாரின் — இறந்து போனவர்களிலே, எனை — என்னையும், ஒருவனென்றாய் — ஒருவனென்றெண்ணினாய், என்னா — என்று, வன்றிண் - வலிதாய்க்கெட்டியான, சிலையின் - வில்லினது, வயிரக்காலால் - உறுதியானகால்களாலே, வடித்திண் - கூர்மையானபலமுள்ள, சுடர்வாளி — பிரகாசமான அம்புகள், ஒன்று - முன்னே ஒன்றும், பத்து - உடனேபத்தும், நூறு - பின்புநூறும், நூறாயிரமும் - அப்புறம் நூறாயிரமுமாக, உதைப்பித்தான் — வயிரக்காலால் உதைந்து செல்லச்செய்தான் வில்லினலெய்தான்—எ-று. போலும் — அசை. (சச)

செய்திசெய்திசிலைகைக்கொண்டால்வெறுங்கைதிரிவோரை
நொய்தின்வெல்வதரிதோவென்னாமுறுவலுகநக்கான்
ஐயனங்குமிங்குங்காலாலழியுமழையென்ன
எய்தவெய்தபகழியெல்லாமெழுவால்வழுவித்தான்.

இ-ள். சிலைகைக்கொண்டால் — வில்கையிலிருந்தால், செய்திசெய்தி - நீசெய்யவல்லவனே செய்யவல்லவனே, வெறுங்கைதிரிவோரை - வெறுங்கையுடனே திரி

கிறவர்களை, நொய்தின் – விரைவிலே, வெல்வது - ஜெயிப்பது, அரிதோ – அருமையோ, என்னு - என்று, முறுவலுக – பல்லொளிதோன்ற, நக்கான் – சிரித்தவரான, ஐயன் – அனுமார், அங்குமிங்கும் – எவ்விடத்தும், காலால் – காற்றினலே, அழியும்-குலைவாகிற, மழையென்ன – மேகங்கள்போல், எய்தஎய்த – அவன் ஒன்றன்மேலொன்ருகவிட்ட, பகழியெல்லாம் – அம்புகளையெல்லாம், எழுவால் – தமதுகையிற்கொண்ட எழுத்தடியினலே, வழுவித்தான் – தம்மேலேபடாமல் தடுத்தார்—எ-று. (சரு)

முற்றமுனிந்தானிருதன்முனியாமுன்னும்பின்னுஞ்சென்
றுற்றபகழியுருதுமுறியாவுதிர்கின்றதையுன்னுச்
சுற்றுநெடுந்தேரோட்டித்தொடர்ந்தான்றொடருந்துறைகாணன்
வெற்றவெழுவைமழுவாயம்பாலறுத்துவீழ்த்தினன்.

இ-ள். முற்ற – அதிகமாக, முனிந்தான் - கோபங்கொண்டான், நிருதன்-சம்புமாலி, முனியா – அப்படிக்கோபித்து, முன்னும் பின்னும் - ஒன்றன்மேலொன்ருக, சென்றுற்ற – போய்மோதின, பகழி – அம்புகள், உருது - தம்மேலேபடாமல், முறியா – முறிந்து, உதிர்கின்றதை – சிந்துகிறதை, உன்னு – நினைத்து, சுற்றும்-அவரைச்சுற்றிலும், நெடுந்தேர் – தனதுநெடியதேரை, ஓட்டி – செலுத்தி, தொடர்ந்தான் – நெருங்கினன், தொடரும் – நெருங்கிப்பிடிப்பதற்கு, துறைகாணன் - வழியில்லாதவனய், வெற்ற - வெறுமையான, எழுவை - எழுத்தடியை, மழுவாய் – மழுவுக்குநேரான, அம்பால் – அம்பினலே, அறுத்து – கண்டித்து, வீழ்த்தினன் - கீழேவிழப்பண்ணினன்—எ-று. (சுசு)

சலித்தானையன்கையாலெய்யுஞ்சரத்தையுகச்சாடி
ஒலித்தாரமரர்கண்டாரார்ப்பத்தேரினுட்புக்குக்
கலித்தான்சிலையைக்கையால்வாங்கிக்கழுத்தினிடையிட்டு
வலித்தான்பகுவாய்மடித்துமலைபோற்றலைமண்ணிடைவீழ.

இ-ள். சலித்தான் ஐயன் - அதற்கு அனுமார்மனஞ்சலித்து, கையால் – தம்முடையகைகளாலே, எய்யும் - அவனெய்கிற, சரத்தை – அம்புகளையெல்லாம், உகச்சாடி - உதிரஅடித்து, ஒலித்தார் – கெர்ச்சித்தவர்களாய், அமரர் - தேவர்களுடனே, கண்டார் – கண்டமுனிவர்களும், ஆர்ப்ப – ஆரவாரிக்க, தேரினுள் - அவன் தேருக்குள்ளே, புக்கு – புகுந்து, கலித்தான் - கெர்ச்சிதஞ்செய்து, சிலையை – அவன் வில்லை, கையால் – தமதுகையினலே, வாங்கி - பிடுங்கி, கழுத்தினிடை – அவன்கழுத்திலே, இட்டு – மாட்டி, வலித்தான் – இழுத்தார், பகுவாய் - அகன்றவாயை, மடித்து-மடித்துக்கொண்டு, மலைபோல் – ஒருமலைபோல், தலை - அவன்றலையானது, மண்ணிடை – மண்ணிலே, வீழ - விழுவதாகவலித்தார்—எ-று. (சுஎ)

குதித்துத்தேருங்கோல்கொளாளும்பரியுங்குழம்பாக
மிதித்துப்பெயர்த்துநெடுந்தோரணத்தைவீரன்மேற்கொண்டான்
கதித்துப்பழிந்துகழிந்தார்பெருமைகண்டுகளத்தஞ்சி
உதித்துப்புலர்ந்ததோல்போலுருவத்தமரரோடினர்.

இ-ள். குதித்து – பின்பு அவன்தேரின்மேலேகுதித்து, தேரும் - அந்தத்தேரும், கோல்கொள் – சாட்டிக்கோலைக்கொண்டிருக்கிற, ஆளும் – சாரதியும், பரியும்-குதிரைகளும், குழம்பாக – குழம்பிப்போக, மிதித்து - மிதித்துக்கொன்று, பெயர்த்தும் – மறுபடியும், நெடுந்தோரணத்தை - நீண்ட தோரணகம்பத்தின்மேல், வீரன்-அனுமார், மேற்கொண்டான் – ஏறியிருந்தார், கதி - தங்கள்வேகமான, துப்பழிந்து-

சாமர்த்தியங்குலைந்து, கழிந்தார் — இறந்தவர்களுடைய, பெருமை - அதிகத்தை, கண்டு - பார்த்து, களத்து - அந்தயுத்தகளத்திலேயிருக்க, அஞ்சி - பயந்து, உதித்து-பெருத்து, புலர்ந்த - காய்ந்த, தோல்போல் - தோலைப்போல், உருவத்து - சரீரத்தையுடைய, அமரர் - வணங்காக்குந்தேவர்கள், ஓடினர் - ஓடினார்கள்—எ-று. (சஅ)

பரிந்துபுலம்புமகளிர்காணக்கணவர்பிணம்பற்றி
விரிந்தகுருதிப்பேராறீர்த்துமனைகடொறும்வீச
இரிந்ததிலங்கையெழுந்தழுகையின்றிங்கிவனாலே
சரிந்தஅரக்கர்வலியென்றெண்ணியறமுந்தளிர்த்ததால்.

இ-ள். பரிந்து - இரங்கி, புலம்பும் - புலம்புகிற, மகளிர்பெண்கள், காண-பார்க்கும்படி, கணவர் - அவர்கள்நாயகருடைய, பிணம் - இறந்த உடல்களை, பற்றி-வாரி, விரிந்த - பிரவாகமான, குருதி - ரத்தமாகிய, பேராறு - பெரியநதி, ஈர்த்து-இழுத்து, மனைகடொறும் - அவர் வீடுகளெல்லாம், வீச - அலையெறிய, இரிந்ததிலங்கை - இலங்கைமுழுதும் ஓடலாயிற்று, எழுந்தழுகை - அழுகுரலதிகமாயிற்று, இன்று - இப்போது, இங்கிவனாலே - இந்த அநுமாராலே, அரக்கர்வலி - ராக்ஷதர்கள்பலம், சரிந்தது - சாய்ந்துபோயின, என்றெண்ணி - என்றுநினைத்து, அறமும்-தருமமும், தளிர்த்தது - சந்தோஷித்தது—எ-று. (சகூ)

புக்காரமரர்பொலந்தாரரக்கன்பொருவில்பெருங்கோயில்
விக்காநின்றார்விளம்பலாற்றார்வெருவிவிம்முவார்
நக்கானரக்கனடுங்கலென்றானையநமரெல்லாம்
உக்கார்சம்புமாலியுலந்தானென்றேகுரங்கென்றார்.

இ-ள். புக்காரமரர் - போனதேவர்கள், பொலந்தார் - பொன்மாலைகளணிந்த, அரக்கன் - இராவணனுடைய, பொருவில் - ஒப்பில்லாத, பெருங்கோயில்-பெரிய அரண்மனைக்குள்ளேபோய், விக்காநின்றார் - விக்கிக்கொண்டுநின்றார்கள், விளம்பலாற்றார் - சொல்லமாட்டாதவர்களாய், வெருவி - பயந்து, விம்முவார் - துக்கிக்கிறவர்களைக்கண்டு, நக்கான் - சிரித்தவனாகி, அரக்கன் - ராவணன், நடுங்கல் - பயப்படாமல்நில்லுங்கள், என்றான் - என்றுசொன்னான், ஐய - சுவாமி, நமரெல்லாம்-நமதுகூட்டத்தாரெல்லாம், உக்கார் - இறந்தார்கள், சம்புமாலி - சம்புமாலியும், உலந்தான் - இறந்துபோனான், ஒன்றேகுரங்கு - அந்த ஒருகுரங்கினாலே, என்றார்-என்றுசொன்னார்கள், பெருங்கோயில்புக்காராகிய அமரரெனக்கூட்டுக—எ-று. (ருo)

என்னுமளவினெரிந்துவீங்கியெழுந்தவெகுளியான்
உன்னவுன்னவுதிரக்குமிழிவிழியூடுமிழ்கின்றான்
சொன்னகுரங்கையானேபிடிப்பன்கடிதுதொடர்ந்தென்ன
அன்னதுணர்ந்தசேனைத்தலைவரைவரறிவித்தார்.

இ-ள். என்னுமளவின் - என்றுசொல்லும்போது, எரிந்து - எரிதலாகி, வீங்கியெழுந்த - அதிகமாயுண்டான, வெகுளியான் - கோபமுள்ளராவணன், உன்ன உன்ன - நினைக்கநினைக்க, உதிரக்குமிழி - ரத்தக்குமிழிகள், விழியூடு - கண்களினின்றும், உமிழ்கின்றான் - சிந்துகிறவன், சொன்ன - நீங்கள்சொன்ன, குரங்கை-அந்தக்குரங்கை, யானேபிடிப்பன் - நானேபற்றுகிறேன், கடிது - விரைவிலே, தொடர்ந்தென்ன - போய் என்றுசொல்ல, அன்னது - அதை, உணர்ந்த - தெரிந்த, சேனைத்தலைவர் - சேனாபதிகள், ஐவர் - ஐந்துபேர்கள், அறிவித்தார் - தெரியச்சொல்லுகிறார்கள்—எ-று. (ருக)

சம்புமாலிவதைப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - கூ - க்கு திருவிருத்தம் - அகூகூ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

பத்தாவது,

பஞ்சசேனுபதிகள்வதைப் படலம்.

சிலந்தியுண்பதோர்குரங்கின்மேற்சேறியேற்றிறலோய்
கலந்தபோரிடைக்கட்புலன்கடுங்கனல்கதுவ
உலந்தமால்வரையருவியாறொழுக்கற்றவொக்கப்
புலந்தமாமதம்பூக்குமன்றேதிசைப்பூட்கை.

இ-ள். சிலம்பி – புழுப்பூச்சிகளை, உண்பது - போசிப்பதான, ஓர்குரங்கின் மேல் – ஒருகுரங்கைக்குறித்து, சேரியேல்-போர்க்குச் செல்வாயானுல், திறலோய்-மகாவல்லவரே, கட்புனல் – உம்முடைய கண்களினிடத்தில், கடுங்கனல் – கடுமையானநெருப்பு, கதுவ – பொருந்த, கலந்த – நேர்தலான, போரிடை – யுத்தத்திலே, மால்வரை – பெரியமலைகள், அருவியாறு – அருவியாகிய ஆறுகள், ஒழுக்கு அற்ற-ஒழுகுதலில்லாமல், உலந்த – காய்ந்தவற்றை, ஒக்க – ஒப்பாக, புலந்த – காய்ந்துபோன, மாமதம் – பெரிதானமதங்கள், பூக்கும் அன்றே – உண்டாகப்பெறுமல்லவோ, திசைப்பூட்கை – திக்கிலுள்ளயானைகள்—எ-று. சிலம்பி – நூல்நூற்கிற ஒருவகைச்செந்து அதை எட்டுக்காற்பூச்சியென்பர்கள். (க)

இலங்குவெஞ்சினத்தஞ்சிறையெறுழ்வலிக்கலுழன்
உலங்கின்மேலுருத்தன்னநீகுரங்கின்மேலுருக்கின்
அலங்கன்மாலைநின்புயநினைந்தல்லுநன்பகலும்
குலுங்கும்வன்றுயர்நீங்குமால்வெள்ளியங்குன்றம்.

இ-ள். இலங்கு – மிகவிளங்குகின்ற, வெஞ்சினத்து – வெவ்வியகோபத்தையுடைய, அஞ்சிறை - அழகியசிறகுகளைக்கொண்ட, எலுழ்வலி-மிக்கவலிமைபெற்ற, கலுழன் – கருடபக்ஷியானது, உலங்கின்மேல் – ஒருகொசுகின்மேலே, உருத்தன்ன – கோபித்துச்சென்ருற்போல், நீ – மகப்பிரபுவானநீர், குரங்கின்மேல் – ஒருகுரங்கின்மேலே, உருக்கின் – கோபங்கொண்டுசென்ருல், அலங்கன்மாலை – அசைகிறமாலையணிந்த, நின்புயம் – உமதுதோள்வலியை, நினைந்து – எண்ணி, அல்லும் – இரவும், நன்பகலும் – நல்லபகற்காலமும், குலுங்கும் – நடுங்குவதான, வன்றுயர் – தீராததுன்பம், வெள்ளியங்குன்றம் – கயிலாசமலையானது, நீங்கும் – உம்மை அலட்சியமாகஎண்ணித்தீர்வதாகும்—எ-று. (உ)

உறுவதென்கொலோவானிழிவென்பதொன்றுடையார்
பெறுவதியாதொன்றுங்காண்கிலர்கேட்கிலர்பெயர்ந்தார்
சிறுமையீதொப்பதியாதுநீகுரங்கின்மேற்சேறின்
முறுவல்பூக்குமன்றேநின்றமூவர்க்குமுகங்கள்.

இ-ள். உறுவது – நீர் அடையவேண்டியது, என்கொல் – இன்னம்யாதிருக்கின்றது, வானிழிவு – மிகவுந்தாழ்வு, என்பது – என்பதாகிய, ஒன்று – ஒன்றையே, உடையார் – அடைந்தவர்களாய், பெறுவது-தாம் பெறத்தக்கபெருமையில், யாதொன்றும் – எதுவும், காண்கிலர் – உமக்குமுன்னே காணக்கிடையாராய், கேட்கிலர்-உமதுபெயர்கேட்கவும் அஞ்சுதலுண்டாகி, பெயர்ந்தார் – ஓடிப்போனுர்கள் மூவர்

அப்படிக்கிருக்க, நீ – நீர், குரங்கின்மேல் – ஒருகுரங்கின்மேலே, சேறின் – செல்லு வீரேயானால், ஈதொப்பது – இதற்குச்சரியான, சிறுமை – இழிவு, யாது – வேறே என்ன இருக்கிறது, நின்ற – மறைந்துவிலகிநிற்கிற, மூவர்க்கும் – மும்மூர்த்திகளுக்கும், முகங்கள் – முகங்களிலே, முறுவல் – சிரிப்பு, பூக்கும் – உண்டாகும், அன்றே – அல்லவோ—எ - று. (ஙு)

அன்றியும்முனக்காளின்மைதோன்றுமாலரச
வென்றியில்லவர்மெல்லியோர்தமைச்செலவிட்டாய்
நன்றியின்றொன்றுகாண்டியேலெமைச்செலநயத்தி
என்றுகைதொழுதிறைஞ்சினரரக்கனுமிசைந்தான்.

இ-ள். அன்றியும் – இவைகளையல்லாமலும் – உனக்கு – மூவரையும் வென்றவுமக்கு, ஆளின்மை – துணைவலியில்லையாக, தோன்றும் – காணப்படும், அரச – ஓபிரபு, வென்றியில்லவர் – செயங்கொள்ளமாட்டார்களும், மெல்லியோர்தமை – மிகவும் இளைத்தவர்களுமானவர்களை, செலவிட்டாய் – போகவிட்டீர், நன்றியொன்று – நாங்கள்செய்யுமோருதவியை, இன்று – இப்போது, காண்டியேல் – காணவேண்டுவீரானால், எமை – எங்களை, செல – போகும்படி, நயத்தி – வேண்டுவீராக, என்றுகை தொழுது – என்றுகைகள்குவித்து, இறைஞ்சினர் – வணங்கினார்கள், அரக்கனும் – இராவணனும், இசைந்தான் – அதற்குச்சம்மதியானான்—எ - று. (சு)

உலகமூன்றிற்குமுதன்மைபெற்றோரெனவுயர்ந்தார்
திலகமண்ணுறவணங்கினர்கோயிலிற்றீர்ந்தார்
அலகிறேர்பரிகரியொடாள்மிடைந்தபோரரக்கர்
தொலைவிலாதனகதுமெனவருகெனச்சொன்னார்.

இ-ள். உலக மூன்றிற்கும் – ஒருதிரிலோகத்திற்கும், முதன்மை – தலைமையானபெருமையை, பெற்றோரென – அடைந்தவர்கள்போல், உயர்ந்தார் – உயர்வுகொண்டவர்களாய், திலகம் – நெற்றியிலுள்ளபொட்டு, மண்ணுற – மண்ணிலேபட விழுந்து, வணங்கினர் – தொழுதுகொண்டு, கோயிலில் – அரசனரண்மனையினின்றும், தீர்ந்தார் – வெளியேவந்து, அலகு இல் – கணக்கில்லாத, தேர் – இரதங்களும், பரி – குதிரைகளும், கரியொடு – யானைகளுடனே, ஆள் – காலாள்களுமாக, மிடைந்த – நெருங்கின, போரரக்கர் – வலியராக்ஷதவீரர்கள், தொலைவிலாதன – அளவில்லாதவைகளுமுள்ளசேனைகள், கதுமென – விரைவாக, வருகென – வரக்கடவனவென்று, சொன்னார் – உத்தரவுசெய்தார்கள்—எ - று. (ரு)

ஆனைமேன்முரசறைந்தனர்வள்ளுவரமைந்தார்
பேனவேலையிற்புடைபரந்ததுபெருஞ்சேனை
சோனைமாமழைமுகிலெனப்போர்ப்பணைதுவைப்ப
மீனவானிடைமின்னெனப்படைக்கலமிடைந்த.

இ-ள். அமைந்தார் – அவ்வுத்தரவைத் தெரிவிப்பாரான, வள்ளுவர் – பறையறைவோர்கள், ஆனைமேல் – ஆனைமேலிட்டு, முரசு – பேரிகையை, அறைந்தனர் – அடித்தார்கள், பெருஞ்சேனை – அவ்வளவிலேபெரியசேனைகள், பேனம் – நுரைகளையுடைய, வேலையில் – கடல்போல், புடைபரந்தது – சேனாபதிகளிடத்தேவந்து கூடின, சோனை – விடாதுபெய்கிற, மாமழை – பெரியமேகங்களாகிய, முகிலென – மழையிடிகள்போல், போர்ப்பணை – யுத்தவாத்தியங்கள், துவைப்ப – முழங்க, மீன – நக்ஷ

த்திரங்களையுடைய, வானிடை - ஆகாசசஞ்சாரமான மேகங்களிலே, மின்னென- மின்னல்கள்போல், படைக்கலம் - அஸ்திரசஸ்திரங்கள், மிடைந்த - நெருங்கிவிளங்கின—எ-று. (சு)

தானைமாக்கொடிமழைபொதுத்துயர்நெடுந்தாள
மானமாற்றருமாருதிமுனியநாளுலந்து
போனமாற்றலர்புகழெனக்கால்பொரப்புரண்ட
வானயாற்றுவெண்டிரையெனவரம்பிலபரந்த.

இ-ள். தானை - அந்தச்சேனைகளிலுள்ள, மாக்கொடி - பெரியகொடிகள், மழை - மேகங்களை, பொதுத்து - பொத்து, உயர் - உயர்ந்த, நெடுந்தாள - நீண்டகால்களையுடைய தானைமாக்கொடியென்க, மானம் - ராமதாசனென்னும் அபிமானத்தை, மாற்றரு - மாறுதலில்லாத, மாருதி - அனுமார், முனிய - கோபித்தலாலே, நாளுலந்துபோன - ஆயுள்முடிந்துசென்ற, மாற்றலர் - பகைவரான அரக்கர்கள், புகழென - கீர்த்திகள் புரண்டாற்போல், கால்பொர-காற்றுவீசலாலே, புரண்ட - கொடியாடைகள் புரளலாயின, வானயாற்று - ஆகாயகங்கையினது, வெண்டிரையென- வெள்ளையான அலைகள்போல், வரம்பில் - அளவில்லாதவைகள், பரந்த - மேலேபரவலாயின, நெடுந்தாளாவது - அடிமரம் அடிமரத்தினுனி மேகங்களைப்பொத்தெனக் கூட்டுக—எ-று. (எ)

விரவுபோர்க்கழல்வீசித்தனர்வெரிநுற்றிவிளங்கச்
சரமொடுக்கினபுட்டிலுஞ்சாத்தினர்சமையக்
கருவிபுக்கனரரக்கர்மாப்பல்லணங்கவினப்
புரவியிட்டதேர்பூட்டினபருமித்தபூட்கை.

இ-ள். விரவுபோர் - போருக்குத்தகுதியான, கழல் - வீரக்கழல்களை, விசித்தனர் - காலிலேகட்டிக்கொண்டு, வெரின் உற்று - முதுகிலேபொருந்தி, விளங்க- பிரகாசிக்க, சரமொடுக்கின - பாணங்களையடக்கியிருக்கிற, புட்டிலும் - அம்புக்கூடுகளும், சாத்தினர் - கட்டிக்கொண்டார்கள், சமைய - பொருந்த, கருவி - கவசத்துக்குள், புக்கனர் - நுழைந்துகொண்டு, அரக்கர் - ராக்ஷதர்கள், மா - குதிரைகளுக்கு, பல்லணம் - சேனங்கள், கவின - விளங்கவும், புரவி - குதிரைகளை, இட்ட-கட்டுவதான, தேர் - இரதங்களிலே, பூட்டின - கட்டலாயின, பூட்கை - யானைகள், பருமித்த - விரிமுதலானவைகளால் அலங்கிருதமாயின—எ-று. (அ)

ஆறுசெய்தனவானையின்மதங்களவ்வாற்றைச்
சேறுசெய்தனதேர்களின்சில்லியச்சேற்றை
நீறுசெய்தனபுரவியின்குரமற்றைநீற்றை
வீறுசெய்தனவப்பரிக்கலினமாவிலாழி.

இ-ள். ஆனையின்மதங்கள் - யானைமதங்கள், ஆறுசெய்தன-எங்கும் ஆறாகப் பண்ணின, அவ்வாற்றை - அந்தமதயாற்றை, தேர்களின்சில்லி - தேருருளைகள்,சேறுசெய்தன - சேறாகப்பண்ணின, அச்சேற்றை - அந்தத்தூளிகலந்து சேறானதை, புரவியின்குரம் - குதிரைகளின்கால்கள், நீறுசெய்தன - முழுதுந்தூளியாகவேசெய்தன, மற்றைநீற்றை - அந்தத்தூளிகளை, கலினம் - கடிவாளம்பூண்ட, அப்பரிமா- அந்த ஆண்குதிரைகளின், விலாழி - வாய்நுரைகள்கூடி, வீறுசெய்தன - வேறுவிதமானகுழை சேறாக்கின—எ-று. (கூ)

வழங்குதேர்களினிடிப்பொடுவாசியினார்ப்பும்
முழங்குவெங்களிற்றதிர்ச்சியுமொய்கழலொலியும்
தழங்குபல்லியத்தமலையுங்கடையுகத்தாழி
விழுங்குமோதையின்மும்மடங்கெழுந்ததுவிரைந்து.

இ-ள். வழங்கு - அங்கே ஊர்ந்துவருகிற, தேர்களின் - இரதங்களினுடைய, இடிப்பொடு - முழக்கத்துடனே, வாசியின் - குதிரைகளின், ஆர்ப்பும் - அனுமானிப்பும், முழங்கு - வீறிடுகின்ற, வெங்களிற்று - கோபமிக்கயானைகளின், அதிர்ச்சியும்- பேரொலியும், மொய் - காலிலே அணிந்த, கழலொலியும் - வீரக்கழல்களின் முழக்கமும், தழங்கு - அதிருகிற, பல்லியத்து - பலவாத்தியங்களின், அமலையும் - சத்தமும், கடையுகத்து - யுகமுடிவிலே, விழுங்கும் - உலகைவிழுங்குகிற, ஆழி ஓதையின்- கடலொலியிலும், விரைந்து - வேகமாய், மும்மடங்கு - மூன்றுபங்கு, எழுந்தது- கிளம்பலாயிற்று—எ-று. (கo)

ஆழித்தேர்த்தொகையைம்பதினுயிரமஃதே
சூழிப்பூட்கைக்குத்தொகையவற்றிரட்டியின்றொகைய
ஊழிக்காற்றன்னபுரவிமற்றவற்றினுக்கிரட்டி
பாழித்தோணெடும்படைக்கலப்பதாதியின்பகுதி.

இ-ள். ஆழி - உருளையையுடைய, தேர்த்தொகை - தேரினளவு, ஐம்பதினுயிரம் - அஃதே அந்த ஐம்பதினுயிரமே, சூழி - முகபடாமணிந்த, பூட்கைக்கு - யானைகளுக்கும், தொகை - அளவு, அவற்று - அவைகளை, இரட்டியின் - இரண்டுகொண்ட நூறுயிரம், தொகைய - அளவுள்ளன, ஊழிக்காற்று - முடிவுகாலக்காற்றை, அன்ன - ஒப்பான, புரவி - குதிரைகள், மற்றவற்றினுக்கு இரட்டி - அவைகளையிரண்டுகொண்ட இருநூறுயிரமே, பாழித்தோள் - பெரியதோள்களையுடைய, நெடும்- நெடிதான, படைக்கலம் - ஆயுதங்களையுடைய, பதாதியின்பகுதி - காலாள்களினளவு—எ-று. (கக)

கூய்த்தருந்தொறுந்தருந்தொறுந்தானைவெங்குழுவின்
நீத்தம்வந்துவந்தியங்கிடுமிடனின்றிநெருங்கக்
காய்த்தமைந்தவெங்கதிர்ப்படையொன்றென்றுகதுவித்
தேய்த்தெழுந்தனபொறிக்குலமழைக்குலந்தீய.

இ-ள். கூய் - கூப்பிட்டு, தருந்தொறும் - தருந்தொறும்வரவர, தானை - அந்தச்சேனைகளின், வெங்குழுவின் - வெவ்வியகூட்டமாகிய, நீத்தம் - பிரவாகம், வந்துவந்து - சேர்ந்துசேர்ந்து, இயங்கிடும் - சஞ்சரித்தற்கு, இடனின்றி - இடமில்லாமல், நெருங்க - நெருக்கமாக அதனாலே, காய்ந்து - கொல்லனுலையிலே காய்ந்து, அமைந்த - உண்டான, வெங்கதிர் - வெவ்விதான ஒளிகொண்ட, படை - ஆயுதங்கள், ஒன்றொன்று - ஒன்றோடொன்று, கதுவி - மோதி, தேய்த்து - உரசி, மழைக்குலம் - மேகக்கூட்டங்கள், தீய - கருக, பொறிக்குலம் - பொறிக்கூட்டங்கள், எழுந்தன- உண்டாயின—எ-று. (கஉ)

பண்மணிக்குலம்யானையின்புடைதொறும்பரந்த
ஒண்மணிக்குலமழையிடையுருமெனவொலிப்பக்
கண்மணிக்குலங்கனலெனக்காந்துவகதுப்பின்
தண்மணிக்குலமழையெழுகதிரெனத்தழைப்ப.

இ-ள். பண் - மிகவுமொலிக்கச்செய்திருக்கிற, மணிக்குலம் - கழுத்துமணிகளும், யானையின் - கழுத்துமணியையுடையயானைகளின், புடைதொறும் - இருபுறத்திலும், பரந்த - ஒலிபரவலாயிருக்கிற, ஒண் - அழகிதான, மணிக்குலம் - மணிகளும், மழையிடை - மேகத்திலேயுள்ள, உருமென - இடிகள்போல, ஒலிப்ப - முழங்க, கண்மணிக்குலம் - அந்தயானைகளின் கண்களினொளிகள், கனலென - நெருப்புப்போல், காந்துவ - ஒளிவிடுகின்றன, கதுப்பில் - இரண்டுகெவுள்களிலும் ஆபரணங்களாயணிந்துள்ள, தண் - குளிர்ந்தஒளியுள்ள, மணிக்குலம் - ரத்நச்சோதிகள், மழை-மேகத்திலே, எழு - தோன்றுகிற, கதிரென - சூரியன்போல், தழைப்ப - ஒளிசெய்கின்றன — எ-று. (கந)

தொக்கதாம்படைசுரிகுழன்மடந்தையர்தொடிக்கை
மக்கடாயர்மற்றியாவருந்தடுத்தனர்மறுகி
ஒக்கவேகுதுங்குரங்கினுக்குயிர்தரவொருவர்
புக்குமீண்டிலரென்றழுதிரங்கினர்புலம்பி.

இ-ள். படை - இப்படிச்சேனைகள், தொக்கதுகூடியது - கூடுமளவில், சுரிகுழல் - சுருண்டகூந்தலையுடைய, மடந்தையர் - ராக்ஷதப்பெண்களும், தொடிக்கை-கங்கணங்களணிந்த, மக்கள் - அவர்கள் பிள்ளைகளும், தாயர் - தாய்மார்களும், மற்றியாவரும் - இன்னமுள்ள எல்லாரும்வந்து, மறுகி - மயங்குதலாகி, தடுத்தனர் - தடைசெய்தார்கள், ஒக்க - கூடவே, ஏகுதும் - வருகிறோம், குரங்கினுக்கு - அந்தக்குரங்குக்கே, உயிர்தர - எங்களுயிரையுங்கொடுக்க, ஒருவர் - ஒருவராயினும், புக்கு-போய், மீண்டிலர் - திரும்பினதிலர், என்று - என்பதாக,புலம்பி - பிரலாபித்து, அழுதிரங்கினர் - அழுது அவலித்தார்கள் — எ-று. (கச)

கைபரந்தெழுசேனையங்கடலிடைக்கலந்தார்
செய்கைதாம்வருந்தேரிடைக்கதிரெனச்செல்வார்
மெய்கலந்தமாநிகர்வருமுவமையைவென்றார்
ஐவரும்பெரும்பூதமோரைந்துமொத்தமைந்தார்.

இ-ள். கைபரந்து - ஒழுங்குகொண்டுபரவி, எழு - எழுகின்ற, சேனையங்கடலிடை - சேனைக்கடலிலே, கலந்தார் - கூடினார்கள், செய்கை - மயன்செய்ததினாலே, தாம் - தாவுகின்றனவாக, வரு - வருகின்ற, தேரிடை - தேர்களின்மேல், கதிரென - சூரியர்கள்போல், செல்வார் - போகலானார்கள், மெய்கலந்த - நரசரீரத்துடன்கூடின, மா - சிங்கத்தை, நிகர்வரும் - ஒப்பாகச்சொல்லுகிற, உவமையை - ஒப்பையும், வென்றார் - கடந்தவர்களான, ஐவரும் - பஞ்சசேனாபதிகள், பெரும் பூதம்-பெரியபூதங்கள், ஓரைந்தும் - ஓரைந்தையும், ஒத்து அமைந்தார் - எண்ணலொத்தவர்கள் — எ-று. சூரியன்தேர் அயன்செய்தது. (கரு)

முந்தியம்பலகறங்கிட முறைமுறைபொறிகள்
சிந்தியம்புறுகொடுஞ்சிலையுருமெனத்தெரிப்பார்
வந்தியம்புறுமுனிவர்க்குமமரர்க்கும்வலியார்
இந்தியம்பகையாயவையைந்துமொத்தியைந்தார்.

இ-ள். முந்து - முன்னே, இயம்பல - பலவாத்தியங்களும், கறங்கிட - ஒலிக்க, முறைமுறை - வரிசைவரிசையாக, பொறிகள்சிந்தி - பொறிகள் சிதறுதலாய், அம்பு உறு - அம்புகள்பொருந்தின, கொடுஞ்சிலை - வளைந்தவில்லை, உருமென-இடி

யென்னும்படி, செறிப்பார் - குணத்தொனி செய்துகொண்டு, வந்து - போர்க்களத்திலேவந்து, இயம்புறு - மதித்துச்சொல்லத்தக்க, முனிவர்க்கும் - ருஷிகளுக்கும், அமரர்க்கும் - தேவர்களுக்கும், வலியார் - சமர்த்தின்மிக்கவர்கள், இந்தியம் - இந்திரியங்களென்று, பகையாயவை - பகைகளான, ஐந்துமொத்து - ஐந்தையும் ஒப்பாய், இயைந்தார் - கூடினார்கள்—எ-று. (கசு)

வாசவன்வயக்குலிசமும்வருணன்றன்கயிறும்
ஏசிறெதென்றிசைக்கிழவன்றனெரிமுனையெழுவும்
ஈசன்வன்றனிச்சூலமுமென்றிவையொன்றும்
ஊசிபோவதோர்வடுச்செயாநெடும்புயமுடையார்.

இ-ள். வாசவன் - இந்திரனுடைய, வயம் - வெற்றியுள்ள, குலிசமும் - வச்சிராயுதமும், வருணன்றன் - வருணதேவனுடைய, கயிறும் - பாசமும், ஏசு இல் - இகழ்வில்லாத, தென்றிசைக்கிழவன்றன் - யமனுடைய, எரிமுனை - நெருப்பைமுனையிலேகொண்ட, எழுவும் - எழுத்தண்டமும், ஈசன் - சிவனுடைய, வன்றனி - வலிதாயொப்பில்லாத, சூலமும் - சூலாயுதமும், என்றிவை - என்றுசொல்லலான இவ்வாயுதங்களில், ஒன்றும் - ஒன்றாயினும், ஊசி - ஒரு ஊசியானது, போவது - நுழைவதாகிய, ஓர்வடு - ஒருகாயமும், செயா - பண்ணப்படாத, நெடும்புயம் - நீண்டதோள்கள், உடையார் - உடையவர்கள்—எ-று. (கஎ)

சூர்தடிந்தவன்மயிலிடைப்பறித்தவன்றோகை
பார்பயந்தவனன்னத்தினிறகிடைப்பறித்த
மூரிவெஞ்சிறகிடையிட்டுத்தொடுத்தனமுறுக்கி
வீரசூடிகைநெற்றியினயலிட்டுவிசித்தார்.

இ-ள். சூர்தடிந்தவன் - சூரனைக்கொன்ற முருகவேளினுடைய, மயிலிடை - மயிலினிடத்தே, பறித்த - பிடுங்கின, வன்றோகை - வலிதானவாலை, பார் - உலகத்தை, பயந்தவன் - சிருஷ்டித்தபிரமனுடைய, அன்னத்தின் - அன்னபக்ஷியின், இறகிடை - இறகிலே, பறித்த - பிடுங்கின, மூரி - பெரிய, வெஞ்சிறகிடை - வெவ்விய இரகிலேசேர, இட்டு - கூட்டி, முறுக்கித்தொடுத்தன - முறுக்குள்ளவாகநீட்டியிருக்கிற, வீரசூடிகை - கலிக்கித்துரா, நெற்றியின் - நெற்றிக்கு, அயலிட்டு - மேலேகொண்டு, விசித்தார் - கட்டினவர்கள்—எ-று. வீரசூடிகை - வீரத்தினாலேஉச்சிக்கொண்டையிலே சேர்த்துக்கட்டுகிற இறகுகள் மயில்வாலும் அன்னத்திறகுமென்க. (கஅ)

பொன்றிணிந்ததோளிராவணன்மார்பொடும்பொருத
அன்றிழந்தகோடரிந்திடுமழகுறுகுழையர்
நின்றவன்றிசைநெடுங்களியானையினெற்றி
மின்றிணிந்தன்னவோடையின்வீரபட்டத்தர்.

இ-ள். பொன்திணிந்த - பொன்வலயங்களாலிறுகின, தோள் - தோள்களையுடைய, இராவணன் - இலங்கேசனது, மார்பொடும் - மார்புடனே, பொருத - யானைகள்மோதின, அன்று - அந்நாள், இழந்த - ஒடிதலான, கோடு - கொம்பை, அரிந்திடும் - பின்னும் அறுத்தணிந்துகொண்ட, அழகுறு - அழகுள்ள, குழையர் - குண்டலங்களையுடையவர்கள், நின்ற - நிலைகொண்ட, வன்நெடு - வலிமையுள்ள நெடிய, திசையானையின் - திக்கஜங்களின், நெற்றி - நெற்றியிலே, மின் - மின்னல், திணிந்தன்ன - ஒட்டினாற்போன்ற, ஓடையின் - முகபடாத்தையே, வீரபட்டத்தர் - தமக்

குவீரபட்டமாகக்கொண்டவர்கள்—எ-று. நெடுங்களி – அதிக மதமயக்கங்கொண்டதிக்கஜங்களென்க. (கக)

வேறு.

நிதிநெடுங்கிழவனைநெருக்கிநீணகர்ப்
பதியொடும்பெருந்திருப்பறித்தபண்டைநாள்
விதியொடுமன்னவன்விழுந்துவெந்கிடப்
பொதியொடும்வாரியபொலன்கொள்பூணினர்.

இ-ள். நிதிநெடுங்கிழவனை – நெடியநிதிக்குரிய குபேரனை, நெருக்கி – கிட்டி, நீணகர் – நீணடபட்டணமான, பதியொடும் – அவன் ஊருடனே, பெருந்திரு- அவன்பெருஞ்செல்வத்தையும், பறித்த – பிடுங்கிக்கொண்ட, பண்டைநாள் – முன்னாளிலே, விதியொடும் – செய்தொழிலுடனே, அன்னவன் – அந்தக்குபேரன், விழுந்து – கீழ்ப்பட்டவனாகி, வெந்கிட – முதுகுகொடுக்க, பொதியொடும் – மூட்டை மூட்டையாக, வாரிய – வாரிக்கொண்டுவந்த, பொலன்கொள் – பொன்மயமான, பூணினர் – ஆபரணங்களுள்ளவர்கள்—எ-று. பொதி – பொதியப்படுதல். (உ0)

இந்திரனிசையிழந்தேகுவானிகற்
றந்திமுன்கடாவினன்முடுகத்தாமதன்
மந்தரவாலடிபிடித்துவல்லையேல்
உந்துதிநீயெனவலிந்தவூற்றத்தார்.

இ-ள். இந்திரன் – மகவான், இசையிழந்து-தனதுகீர்த்திகெட்டு, ஏகுவான்-ஓடுமவனாகி, இகல் – பலங்கொண்ட, தந்தி – தனது யானையை, முன்கடவினன்-முன்னேசெல்லவிட்டுக்கொண்டு, முடுக – விரைந்துபோக, தாம் – இவர்கள் தாங்கள், அதன் – அந்த, மந்தரம் – மந்தரகிரிபோன்றயானையின், வாலடி – அடிவாலை, பிடித்து – பிடித்துநிறுத்தி, வல்லையேல் – நீ சமர்த்தனானால், உந்துதி நீயென – எங்கள்மேலிந்த யானையைச் செலுத்திப்பாரென்று, வலிந்த – பலாத்கரித்த, ஊற்றத்தார் – பலாட்டியர்களிவர்கள்—எ-று. (உக)

பானிறுத்தந்தணன்பணியனாகிநின்
கோனினைத்திலனெனவுலகங்கூறலும்
நீனிறத்திராவணன்முனிவுநீக்குவான்
காலனைக்காலினிற்கையிற்கட்டினர்.

இ-ள். பானிறுத்து – முறையே உயிர்களைவிதிப்பதாய், அந்தணன் – பிரமனுடைய, பணியனாகி – உத்தரவுபெற்றவனாய், நின்கோல் – உனதாச்ஞையை, நினைத்திலன் – அசட்டைசெய்கிறான், என – இந்தயமனென்று, உலகம் – இந்த இலங்காபுரியார், கூறலும் – சொல்லும்போது, நீல்நிறத்து - கரியநிறத்தையுடைய, இராவணன் – இலங்கேசனது, முனிவு - கோபத்தை, நீக்குவான் – தணிப்பதாக, காலனை - அந்தயமனை - காலினில் - கால்களிலும், கையினில் - கைகளிலும், கட்டினர்- பாசத்தாற் கட்டிப் பிடித்துக் கொண்டுவந்தவர்கள்—எ-று. காலனுடைய காலிலே பாசத்தாலே தங்கள் கையாற் கட்டினரெனவுமாம். (உஉ)

மலைகளைநகுந்தடமார்பர்மால்கடல்
அலைகளைநகுநெடுந்தோளரந்தகன்

கொலேகளைநகுநெடுங்கொலேயர்கொல்லனூ
துலேகளைநகுமனலுமிழுங்கண்ணினர்.

இ-ள். மலேகளை – பெரியமலேகளேயும், நகும் – இகழ்வதான, தடமார்பர்-பெரியமார்புள்ளவர்கள், மால்கடல் – பெரியகடல்களின், அலேகளே – பெரிய அலேகளேயும், நகும் – இகழ்வதான, நெடுந்தோளர் – நீண்டதோள்களுள்ளவர்கள், அந்தகன்-யமனுடைய, கொலேகளே – கொல்லுஞ்செய்கைகளே, நகும் – இகழ்வதான, நெடும்-நெடிதான, கொலேயர் – கொலேத்தொழிலில் வல்லவர்கள், கொல்லன் – கருமகன், ஊது – ஊதுகிற, உலேகளே – உலேநெருப்பையும், நகும் – இகழ்வதான, அனல்-நெருப்பை, உமிழும் – சிந்துகிற, கண்ணினர் – கண்களுள்ளவர்கள்—எ-று. (உ௩)

தோல்கிளர்திசைதொறுமுலகைச்சுற்றிய
சால்கிளர்முழங்கெரிதழங்கியேறினும்
கால்கிளர்ந்தோங்கினுங்காலங்கையுற
மால்கடல்கிளரினுஞ்சரிக்கும்வன்மையார்.

இ-ள். தோல்கிளர் – யானேகள்நிற்கிற, திசைதொறும் – திக்குகளெல்லாம், உலகை – உலகத்தை, சுற்றிய – சூழ்வதாக, சால்கிளர் – மிகவும் எரிகிற, முழங்கு-ஒலியைக்கொண்ட, எரி – நெருப்பு, தழங்கி – கொதித்து, ஏறினும் – அதிகரித்தபோதிலும், கால்கிளர்ந்து – பிரசண்டவாயு மேன்மேலாகி, ஓங்கினும் – உயர்ந்தாலும், காலம் – யுகமுடிவு, கையுற – சிறியதாக, மால்கடல் – பெரியகடல்கள், கிளரினும் – பொங்கினபோதும், சரிக்கும் – எப்போதும்போற் சஞ்சரிப்பதான, வன்மையார் – திடமுள்ளவர்கள்—எ-று. (உ௪)

இவ்வகையனேவருமெழுந்ததானேயர்
மொய்கிளர்தோரணமதனேமுற்றினர்
கையொடுகையுறவணியுங்கட்டினர்
ஐயனுமவர்நிலேயமையநோக்கினன்.

இ-ள். இவ்வகை – இப்படிப்பட்டவர்களான, அனேவரும் – எல்லாரும், எழுந்த – கூடத்தொடர்ந்த, தானேயர் – சேனேகளேயுடையவராகி, மொய்கிளர் – பலங்கொண்டுநிற்கிற, தோரணமதனே – தோரணகம்பத்தினருகே, முற்றினர் – வந்துகூடினர்கள், கையொடு – கைகளுடனே, கையுற – கைகள்சேர, அணியும் – வகுப்பும், கட்டினர் – வகுந்தார்கள், ஐயனும் – அனுமாரும், அவர்நிலே – அந்தராக்ஷத கூட்டத்தாருடைய திடசத்தியை, அமைய – பொருந்த, நோக்கினன் – பார்த்தார்-எ-று. கையொடுகையுறுதல்—வகுப்போடு வகுப்புச்சேர்ந்துநிற்றல். (உ௫)

அரக்கரதாற்றலுமளவில்சேனேயின்
தருக்குமம்மாருதிதனிமைத்தன்மையும்
பொருக்கெனநோக்கியபுரந்தராதியர்
இரக்கமுமவலமுந்துளக்குமெய்தினர்.

இ-ள். அரக்கரது – அந்தராக்ஷதர்களுடைய, ஆற்றலும் – சாமர்த்தியமும், அளவில் – கணக்கில்லாத, சேனேயின் – சேனேகளினுடைய, தருக்கும் – மனக்களிப்பும், அம்மாருதி – அந்த அனுமாருடைய, தனிமைத்தன்மையும் – ஒருவரானநிலேயும், பொருக்கென – திடுக்கென்று, நோக்கிய – கண்ட, புரந்தராதியர் – இந்திராதி

தேவர்கள், இரக்கமும் – காருண்ணியமும், அவலமும் – துன்பமும், துளக்கும் – பயமும், எய்தினர் – அடைந்தார்கள், இரக்கம் – அழுதிறங்கலெனவாம்—எ-று. (உசு)

இற்றனரரக்கரிப்பகலுளேயெனுக்
கற்றுணர்மாருதிகளிக்குஞ்சிந்தையான்
முற்றுறச்சுலாவியமுடிவிற்றானையைச்
சுற்றுறநோக்கித்தன்றோளைநோக்கினன்.

இ-ள். இற்றனரரக்கர் – ராக்ஷதர்களெல்லாம் அழிந்தார்கள், இப்பகலுளே-இந்த ஒருநாளுக்குள்ளே, என – என்று, கற்றுணர் – எல்லாங்கற்றறிந்த, மாருதி-அனுமார், களிக்கும் – சந்தோஷிப்பதான, சிந்தையான் – மனமுடையவராய், முற்றுற – தம்மைமுழுதும், சுலாவிய – சூழ்ந்த, முடிவில் – கணக்கிறந்த அழிவுபடாத, தானையை – சேனைகளை, சுற்றுற – சுற்றிலும், நோக்கி – பார்த்து, தன் – தம்முடைய, தோளை – புஜங்களையும், நோக்கினன் – பார்த்தார்—எ-று. (உஎ)

புன்றலைக்குரங்கிதுபோலுமாலமர்
வென்றதுவிண்ணவர்புகழைவேரொடும்
தின்றவல்லரக்கரைத்திருகித்தின்றதால்
என்றனரயிர்த்தனர்நிருதரெண்ணிலார்.

இ-ள். புன்றலை – அல்ப விஷயமான, குரங்கு – குரங்குருவமாகிய, இதுபோலுமால் – இதுவே ஆமல்லவோ, அமர்வென்றது – சண்டையிலே ஜயங்கொண்டது, விண்ணவர்புகழை – தேவர்கள் கீர்த்தியை, வேரொடுந்தின்ற – வேரோடழித்த, வல்லரக்கரை – வலியராக்ஷதர்களை, திருகித்தின்றது – தலைகளைத்திருகியழித்தது, என்றனர் – என்று நினைத்தார்கள், அயிர்த்தனர் – இது இவ்வளவுசெய்யவல்லதாவென்றுஞ் சந்தேகித்தார்கள், நிருதர் – ராக்ஷதர்கள், எண்ணிலார் – நினைவு பிசகினர்கள்—எ-று. (உஅ)

ஆயிடையநுமனுமமரர்கோனகர்
வாயினின்றவ்வழிகொணர்ந்துவைத்தமாச்
சேயொளித்தோரணத்தும்பர்ச்சேணெடு
மீயுயர்விசும்பையுங்கடக்கவீங்கினன்.

இ-ள். ஆயிடை – அப்போது, அனுமனும் – சிறிய திருவடியானவர், அமரர்கோன் – இந்திரனுடைய, நகர்வாயினின்று – பட்டணத்துக்கு முன்னிடத்தேநிற்கலாய், அவ்வழி – இராக்காலத்தவ் விலங்கையிலே, கொணர்ந்துவைத்த – கொண்டுவந்துவைத்த, தானமா – பெரிய, சேயொளி – சிவந்த ஒளியைக்கொண்ட, தோரணத்தும்பர் – தோரணகம்பத்தின்மேலே, சேணெடு – மிகவுமுயரமாய், மீயுயர்-மேன்மேலான, விசும்பையும் – ஆகாயத்தையும், கடக்க – கடந்துசெல்வதாக, வீங்கினன்-பருத்தார்—எ-று. தோரணகம்பத்தின்மேலே தானேநின்று வளர்ந்தாரென்க. ()

வீங்கியவீரனைவியந்துநோக்கிய
தீங்கியலரக்கருந்திருகினர்சினம்
வாங்கியசிலையினர்வழங்கினர்படை
ஏங்கியசங்கினமிடித்தபேரியே.

இ-ள். வீங்கிய - அப்படிவளர்ந்த, வீரனை - அனுமாரை, வியந்து - அதிசயித்து, நோக்கிய - பார்த்த, தீங்குஇயல் - தீயசெய்கையையுடைய, அரக்கரும் - ராக்ஷதர்களும், சினந்திருகினுர் - கோபமிகுந்தார்கள், வாங்கியசிலேயினர் - வில்லைவளைத்தவர்களாய், படைவழங்கினுர் - அம்புகளை விட்டார்கள், ஏங்கினசங்கினம் - சங்குகள் முழங்கலாயின, பேரி - முரசங்கள், இடித்த - அதிரலாயின—எ-று. (௬0)

எறிந்தனரெய்தனரெண்ணிறந்தன
பொறிந்தெழுபடைக்கலமரக்கர்போக்கினுர்
செறிந்தனமயிர்ப்புறந்தினவுதீர்வுறச்
சொறிந்தனவெனவிருந்தையன்றூங்கினுன்.

இ-ள். எறிந்தனர் - சிலரெறிந்தார்கள், எய்தனர் - சிலரெய்தார்கள், எண்ணிறந்தன - அளவில்லாதவைகளாய், பொறிந்து - பொறிகளுண்டாகி, எழு - கிளருகின்ற, படைக்கலம் - அஸ்திரங்களை, அரக்கர் - ராக்ஷதர்கள், போக்கினுர் - செல்லவிட்டார்கள், செறிந்தன - அவைகள்மேலேபடப்பட, மயிர்ப்புறம் - மயிர்களுள்ள உடம்பெல்லாம், தினவுதீர்வுற - நமைச்சல்போக, சொறிந்தனவென - சொறிந்தாற்போலாக, இருந்து - சுகமாகக்கொண்டு, ஐயன் - அனுமார் சற்றுநேரம், தூங்கினுன் - நித்திரைசெய்தார்—எ-று. (௬க)

உற்றுடன்றரக்கருமுருத்துடற்றினர்
செற்றுறநெருக்கினர்செருக்குஞ்சிந்தையர்
மற்றையர்வரும்பரிசிவரைவல்விரைந்
தெற்றுவெனெனவெழுவநுமனேந்திஞன்.

இ-ள். உற்று - கிட்டநெருங்கி, உடன்று - கோபங்கொண்டு, அரக்கரும் - ராக்ஷதர்களெல்லாம், உருத்து - ஆக்கிரமித்து, உடற்றினர் - சண்டைசெய்தார், செற்று - அநேகமாயிரம்சித்து, உறநெருக்கினர் - மிகவுநெருக்கினுர்கள், செருக்கும் - களிப்புக்கொண்ட, சிந்தையர் - மனமுள்ளவர்கள், மற்றையர் - அவர்கள், வரும்பரிசு - இப்படிவரும்போது, இவரை - இவர்களையெல்லாம், வல்விரைந்து - மிகவும் சீக்கிரத்திலே, எற்றுவெனென - அடிக்கிறேனென்று, எழு - எழுத்தடியை, அனுமன் - அனுமார், ஏந்திஞன் - கையிலேகொண்டார்—எ-று. (௬உ)

ஊக்கியபடைகளுமுருத்தவீரரும்
தாக்கியபரிகளுந்தடுத்ததேர்களும்
மேக்குயர்கொடியுடைமேகமாலைபோல்
நூக்கியகரிகளும்புரளநூக்கிஞன்.

இ-ள். ஊக்கிய - அவர்கள்விட்ட, படைகளும் - அஸ்திரசஸ்திரங்களும், உருத்த - கோபங்கொண்டுவந்த, வீரரும் - வீரர்களும், தாக்கிய - மோதின, பரிகளும் - குதிரைகளும், தடுத்த - தடைசெய்கிற, தேர்களும் - இரதங்களும், மேக்கு - மேலே, உயர் - உயர்ந்த, கொடியுடை - துவசங்களையுடைய, மேகமாலைபோல் - மேககூட்டங்கள்போல், நூக்கிய - தம்மைக்கீழேதள்ளுவதான, கரிகளும் - யானைகளும், புரள - சாவ அழிய, நூக்கினுன் - அடித்துத்தள்ளினுர்—எ-று. (௬௩)

வார்மதக்கரிகளின்கோடுவாங்கிமாத்
தேர்படப்புடைக்குமத்தேரின்சில்லியால்

வீரரையுருட்டுமவ்வீரர்வாளினல்
தாருடைப்புரவியைத்துணியத்தாக்குமால்.

இ-ள். வார் – நீண்ட, மதக்கரிகளின் – மதயானைகளினுடைய, கோடு – கொம்புகளை, வாங்கி – பிடுங்கி, மாத்தேர்பட – குதிரைகட்டினதேர்கள்விழ, புடைக்கும்- அடிப்பார், அத்தேரின் – அந்தரதங்களினுடைய, சில்லியால் – உருளைகளாலே, வீரரை – வீரர்களை, உருட்டும் – உருளப்பண்ணுவார், அவ்வீரர் – அந்தவீரர்களுடைய, வாளினல் – கத்திகளாலே, தாருடை – கிங்கிணிமாலைகளுள்ள, புரவியை – குதிரைகளை, துணிய – துண்டாக, தாக்கும் – வெட்டுவார்—எ-று. (௩௪)

இரண்டுதேரிரண்டுகைத்தலத்துமேந்திவே
றிரண்டுமால்யானைபட்டுருளவெற்றுமால்
இரண்டுமால்யானைகையிரண்டினேந்திவே
றிரண்டுபாலினும்வரும்பரியையெற்றுமால்.

இ-ள். இரண்டுதேர் – இரண்டுதேரை, இரண்டுகைத்தலத்தும் – இரண்டுகைகளிலும், ஏந்தி – கொண்டு, வேறு – வேறன, இரண்டுமால்யானை – இரண்டுபெரியயானைகள், பட்டுருள – செத்துவிழ, எற்றும் – அடிப்பார், இரண்டுமால்யானை-இரண்டுபெரியயானைகளை, கையிரண்டினேந்தி – இருகையிலுங்கொண்டு, வேறு-வேருக, இரண்டுபாலினும்வரும் – இருபுறத்திலும் வருகிற, பரியை – குதிரைகளை,எற்றும் – அடிப்பார்—எ-று. (௩௫)

மாயிருநெடுவரைவாங்கிமண்ணினிட்
டாயிரந்தேர்படவரைக்குமாலழித்
தாயிரங்களிற்றையோர்மரத்தினலடித்
தேயெனுமாத்திரையெற்றிமுற்றுமால்.

இ-ள். மாயிரு – மிகப்பெரிதான, நெடுவரை – நீண்டமலைகளை, வாங்கி – பிடுங்கி, ஆயிரந்தேர்பட – ஆயிரந்தேர்களழிய, மண்ணினிட்டு – பூமியிலேதள்ளி, அரைக்கும் – அரைப்பார், அழித்து – அப்படியழிவுசெய்து, ஆயிரங்களிற்றை – ஆயிரம்யானைகளை, ஓர்மரத்தினல் – ஒருமரத்தாலே, அடித்து – எற்றி, ஏயெனுமாத்திரை-உம்மென்னுமளவில், எற்றி – பின்னுமடித்து, முற்றும் – முடிவுசெய்வார்—எ-று. ()

உதைக்கும்வெங்கரிகளையுழக்குந்தேர்களை
மிதிக்கும்வன்புரவியைத்தேய்க்கும்வீரரை
மதிக்கும்வல்லெழுவினலரைக்குமண்ணிடைக்
குதிக்கும்வன்றலையிடைக்கடிக்குங்குத்துமால்.

இ-ள். வெங்கரிகளை – கோபங்கொண்டயானைகளை, உதைக்கும் – உதைப்பார், தேர்களை – இரதங்களை, உழக்கும் – மிதிப்பார் குழப்புவார், வன்புரவியை-வலியகுதிரைகளை, மிதிக்கும் – மிதிப்பார், வீரரை – வீரர்களை,தேய்க்கும் – தேய்ப்பார், மதிக்கும் – மதிப்புள்ள, வல்எழுவினல் – வலியஎழுத்தடியினலே, அரைக்கும் - குழவியாகக்கொண்டரைப்பார், மண்ணிடை – மண்ணிலே, வன்றலையிடை – வலியதலைகள்மேலே, குதிக்கும் – குதிப்பார், கடிக்கும்-கடிப்பார், குத்தும் – குத்துவார்-எ-று.

விசையின்மான்றேர்களுங்களிறும்விட்டகன்
றிசையுமாகாயமுஞ்செறியச்சிந்துமால்

குசைகொள்பாய்பரியொடுங்கொற்றவேலொடும்
பிசையுமாலரக்கரைப்பெருங்கரங்களால்.

இ-ள். விசையின் - வேகத்தினையுடைய, மான்றேர்களும் - குதிரைத்தேர்களும், களிறும் - யானைகளும், விட்டு - உயரச்செல்லவீசி, அகன்றிசையும் ஆகாயமும் - அகன்றதிக்குகளும் ஆகாசமும், செறிய - நெருங்க, சிந்தும் - சிதறுவார், குசைகொள் - கடிவாளங்கொண்ட, பாய்பரியொடும் - பாயுங்குதிரைகளுடனே, கொற்றவேலொடும் - வெற்றிவேல்களுடனே, பெருங்கரங்களால் - பெரியகைகளாலே, அரக்கரை - அரக்கர்களை, பிசையும் - பிசைவார்—எ-று. (௩அ)

தீயுறுபொறியுடைச்செங்கண்வேங்கைமா
மீயுறத்தடக்கையால்வீரன்வீசுதோ
றாய்பெருங்கொடியனகடலினாழ்வன
பாயுடைநெடுங்கலம்படுவபோன்றவே.

இ-ள். தீயுறு - நெருப்பிலேபொருந்தின, பொறியுடை - பொறிகளையுடைய, செங்கண் - சிவந்தகண்களோடு, வேங்கை - புலிபோன்ற, மாமீயுற - குதிரைகள் மேலேசெல்ல, தடக்கையால் - நீண்டகைகளாலே, வீரன் - அனுமார், வீசுதோறு - எறியும்போது, ஆய் - திசைகளை ஆராயத்தக்க, பெருங்கொடியன - பெரியகொடிகளையுடையனவாக, கடலினாழ்வன - கடலிலேபோய்விழுகின்றன, பாயுடை - அவைகள்பாய்மரத்தையுடைய, நெடுங்கலம் - உயர்ந்தகப்பல்கள், படுவபோன்ற - செல்லுவனபோலிருந்தன—எ-று. கப்பல்களழுந்துவனபோலெனவுமாம். (௩௯)

தாரொடுமுருளொடுந்தடக்கையாற்றனி
வீரன்விட்டெறிந்தனகடலின்வீழ்வன
வாரியினெழுஞ்சுடர்க்கடவுள்வானவன்
தேரினைநிகர்த்தனபுரவித்தேர்களே.

இ-ள். தாரொடும் - கிங்கிணிமாலைகளுடனே, உருளொடும் - உருளைகளோடுகூடி, தடக்கையால் - நீண்டகைகளாலே, தனிவீரன் - ஒப்பில்லாத அனுமார், விட்டெறிந்தன - தூக்கியெறிந்தவைகள், கடலின்வீழ்வன - கடலிலே விழுகின்றன, வாரியின் - கடலின்மேலே, எழும் - உதயமாகுகிற, சுடர் - சோதிவடிவான, கடவுள்வானவன் - தெய்வமாகிய சூரியனது, தேரினை - தேரை, நிகர்த்தன - ஒப்பாயின, புரவித்தேர்கள் - குதிரைத்தேர்கள்—எ-று. (௪0)

மீயுறவிண்ணிடைமுட்டிவீழ்வன
வாய்பெருந்திரைக்கடலழுவத்தாழ்வன
ஓய்வனபுரவிவாயுதிரங்கால்வன
வாயிடையெரியுடைவடவைபோன்றவே.

இ-ள். மீயுற - மேலேமிகவும், விண்ணிடை - ஆகாயத்திலேசென்று, முட்டி - மோதி, வீழ்வன - விழுகிறவைகள், ஆய் - அந்த, பெருந்திரை - பெரிய அலைகளையுடைய, கடலழுவத்து - கடற்பள்ளத்திலே, ஆழ்வன - அழுந்துகிற, ஓய்வன - ஓய்ந்த, புரவிவாய் - குதிரைகளின்வாயிலே, உதிரங்கால்வன - ரத்தங்கள் சிந்துகிறவை எப்படியிருக்கிறதென்றால், வாயிடை - வாயிலே, எரியுடை - நெருப்பையுடைய, வடவை - வடவாக்கினியை, போன்ற - ஒப்பாயின—எ-று. (௪க)

வரிந்துறவல்லிதிற்சுற்றிவாலினுல்
விரிந்துறவீசலிற்கடலின்வீழ்குநர்
திரிந்தனர்செறிகயிற்றரவினுற்றிரி
அருந்திறன்மந்தரமனையராயினர்.

இ-ள். வல்லிதின் - பலமாக, உறவரிந்து - மிகவும்வரிந்து, சுற்றி - சுழற்றி, வாலினுல் - வாலாலே, விரிந்துற - மிகவும்விரிதலாய், வீசலில் - வீசுதலாலே, கடலின் - கடலிலே, வீழ்குநர் - விழுகிறவர்கள், திரிந்தனர் - சுழன்ருர்களாய், செறி- இறுகுகிற, கயிற்று - கயிறுபோன்ற, அரவினுல் - பாம்பினுலே, திரி - சுழலுகிற, அருந்திறல் - அரிதானபலத்தையுடைய, மந்தரம் - மந்தரகிரியை, அனையர் - ஒத்தவர், ஆயினர் - ஆனுர்கள்—எ-று. (சஉ)

வீரன்வன்றடக்கையாலெடுத்துவீசிய
வார்மதகரியினிற்றேரின்வாசியின்
மூரிவெங்கடல்புகக்கடிதின்முந்தின
ஊரின்வெங்குருதியாறீர்ப்பவோடின.

இ-ள். வீரன் - அனுமார், வன்றடக்கையால் - வலிதாய் நீண்டகைகளாலே, எடுத்துவீசிய - எடுத்தெறிந்த, வார் - ஒழுகுகின்ற, மதம் - மதத்தையுடைய, கரியினில் - யானையிலும், தேரில் - தேரிலும், வாசியின் -குதிரையிலும், மூரிவெங்கடல்- பெரிதாய்க் கொதிப்புள்ளகடலிலே, புக - போய்விழ, கடிதின் - மிகுவிரைவிலே, முந்தின - முன்சென்றன, ஊரின் - அவ்வூரிலேபெருகின, வெங்குருதியாறு-கொதிப்பானரத்தப்பிரவாகம், ஈர்ப்ப ஓடின - பிணங்களையிழுப்பனவாக ஓடியகுருதியாறு கடிதின்முந்தின—எ-று. (சங)

பிறைக்கடையெயிற்றினபிலத்தின்வாயின
கறைப்புனல்பொறிகளோடுமிழுங்கண்ணின
உறைத்தபுபடையினவுதிர்ந்தயாக்கைகள்
மறைத்தனமகரதோரணத்தைவானுற.

இ-ள். பிறை - பிறைபோல், கடை எயிற்றின - கடைவாய்ப்பற்களையும், பிலத்தின் - குகைபோலும், வாயின - வாயையும், கறைப்புனல் - ரத்தஜலத்தை, பொறிகளோடு - நெருப்புப்பொறிகளுடனே, உமிழுங் கண்ணின் - சிந்துகிற கண்களையும், உறைத்தபுபடையின - உறையினீங்கின வாள்கள்பிடித்த கைகளுமுள்ள, உதிர்ந்தயாக்கைகள் - சிந்தின சரீரங்கள், வான் உற - ஆகாயத்தைப்பொருந்துவனவாக, மகரதோரணத்தை - அந்தத்தோரணகம்பத்தை, மறைத்தன - மூடலாயின எ-று. தோரணகம்பத்துயர்வினளவும் பிணங்களுயர்ந்தன என்பதாம். (சச)

குன்றுளமரமுளகுலங்கொள்பேரெழு
ஒன்றலபலவுளவுயிருண்பானுள
அன்றினர்பலருளரையன்கையுள
பொன்றுவதல்லதுபுறத்துப்போவரோ.

இ-ள். குன்றுள - மலைகளுமுள்ளன, மரமுள - மரங்களுமுள்ளன, குலங்கொள் - கூட்டங்கொண்ட, பேரெழு - பெரிய எழுத்தடிகள், ஒன்றல - ஒன்றேயல்லது, பலவுள-அநேகங்களுள்ளன, உயிருண்பான் - உலகத்துள்ளவுயிர்களையுண்ணு

தற்கு, உள - உளராகிய, அன்றினர் – பகைவரான அரக்கரும், பலருளர் - அநேக ருண்டு, ஐயன் – அனுமாருடைய, கையுள – கைகளுமுளவாயின ஆதலால், பொன் றுவது - இறவதே, அல்லது - அல்லாமல், புறத்து-வேறொருவகையில், போவரோ- அவ்வரக்கர்கள் செல்வார்களா உயிருள்ள அளவும் சண்டைபண்ணுவார்களென்பது கருத்து—எ-று. (சரு)

முழுமுதற்கண்ணுதன்முருகன்றாதைகை
மழுவெனப்பொலிந்தோளிர்வயிரவான்றனி
எழுவினிற்பொலங்கழலரக்கரீண்டிய
குழுவினைக்களப்படக்கொன்றுநீக்கினன்.

இ-ள். முழுமுதல் – நிரம்பவும் ஆதியான, கண்ணுதல்-கண்ணைநெற்றியிலே கொண்ட, முருகன்-முருகவேளினுடைய, தாதை - பிதாவினது, கை - கையிலே கொண்ட, மழுவென - மழுவாயுதம்போல், பொலிந்தோளிர் – மிகுந்து விளங்குகி ன்ற, வயிரம் – வயிரக்கற்போல், வான் – பெரியதிண்மையினலே, தனி – ஒப்பில் லாத, எழுவினில் - எழுத்தடியாலே, பொலங்கழல் - பொன்னிறக்கழல்கட்டின, அ ரக்கர் – ராக்ஷதர்களாக, ஈண்டிய - கூடின, குழுவினை – கூட்டத்தை, களப்பட-ர ணக்களத்திலேவிழ, கொன்றுநீக்கினன் – கொன்றுதீர்த்தார்—எ-று. (சசூ)

வேறு.

உலந்ததுதானையுவந்தனரும்பர்
அலைந்தலையுற்றதவ்வாழியிலங்கை
கலந்ததழுங்குரலின்கடலோதை
வலந்தருதோளவரைவரும்வந்தார்.

இ-ள். உலந்ததுதானை – இப்படிச்சேனைகளிறந்தது, உம்பருவந்தனர்-தே வர்கள் சந்தோஷித்தார்கள், அவ்வாழியிலங்கை – அந்தக்கடல்சூழ்ந்தவூர், அலந்து- துன்பங்கொண்டு, அலையுற்றது – அலையலாயிற்று அதுடன், அழுங்குரலின் – அழு கிறசத்தமான, கடலோசை – கடல்முழக்கமே, கலந்தது – எங்கும்பரவியது அப்போ து, வலந்தரு – பலமுள்ள, தோளவர் – தோள்களையுடையவரான, ஐவரும் – ஐந்து சேனுபதிகளும், வந்தார் – அனுமார்மேல்வரலானார்கள்—எ-று. (சஎ)

ஈர்த்தெழுசெம்புனலெக்கரிழுக்கத்
தேர்த்துணையாழியழுந்தினர்சென்றார்
ஆர்த்தனராயிரமாயிரமம்பால்
தூர்த்தனரஞ்சனைதோன்றலுநின்றான்.

இ-ள். ஈர்த்து எழு – இழுத்துக்கொண்டுபோகிற, செம்புனல் - சிவந்தரத்த மானது, எக்கர் – பிணக்குவியல்களைப்போல், இழுக்கத்தேர் – தேரையிழுக்க, துணை யாழி – இருபுறவண்டில்களும், அழுந்தினர் – அழுந்தப்பட்டவராய், சென்றார் – செ ல்லலானவர்கள், ஆர்த்தனர் – கெர்ச்சித்தவர்களாய், ஆயிரமாயிரம் – அளவில்லாத, அம்பால் – அம்புகள்கொண்டு, தூர்த்தனர் – அவருடம்பெல்லா மறையச் செய்தார்க ள், அஞ்சனைதோன்றலும் – ஆஞ்சனேயர், நின்றான் – அதற்கு நேர்நின்றவராய் எ-று. (சஅ)

எய்தகடுங்கணையாவையுமெய்தா
நொய்தகலும்படிகைகளினூறுப்
பொய்தகடொன்றுபொருந்திநெடுந்தேர்
செய்தகடும்பொறியொன்றுசிதைத்தான்.

இ-ள். எய்தகடுங்கணை — அவர்களெய்த கடுமையுள்ள அம்புகள், யாவையுமெய்தா — ஒன்றுந்தம்மேல்விழாமல், நொய்து - விரைவிலே, அகலும்படி — தீரும்படியாக, கைகளில் — தங்கைகளாலே, நூறு — அழித்து, பொய்து — துளைகளுள்ளதாக, அகடு — அச்சின்வயிறு நடுமுழுதும், ஒன்றுபொருந்தி — ஒருதன்மையதாகச்சேர்ந்து, நெடுந்தேர் - நெடியதேருக்கு, செய்த — செய்திருக்கிற, கடும் — வேகமான, பொறியொன்று - ஒருசூத்திரத்தை, சிதைத்தான் - அழித்தார்—எ-று. (சகூ)

உற்றுறுதேர்சிதையாமுனுயர்ந்தான்
முற்றினவீரனைவானின்முனிந்தான்
பொற்றிரணீளெழுவொன்றுபொறுத்தான்
எற்றினனஃதவன்வில்லினினேற்றான்.

இ-ள். உற்றுறு — நடந்துகொண்டுவந்த, தேர் — அந்தத்தேரினதுசூத்திரம் சிதையாமுன் - கெடுமுன்னே. உயர்ந்தான் — மேலேயெழுந்தானொருவன், முற்றின — அப்படிமேலேபோன, வீரனை — அவனை, வானின் — ஆகாயத்திலேதானே, முனிந்தான் - கோபங்கொண்டவராகி, பொற்றிரள் - பொன்திரண்டாற்போன்ற, நீளெழுவொன்று - ஒருநீண்டஎழுத்தடியை, பொறுத்தான் — தாங்கி, எற்றினன்-அடித்தார், அஃது — அவ்வடியை, அவன்வில்லினில் — அவன்தன்வில்லாலே, எற்றான்-தாங்கினான்—எ-று. (ரு0)

முறிந்ததுமூரிவிலம்முறியேகொ
டெறிந்தவரக்கனோர்வெற்பையெடுத்தான்
அறிந்தமனத்தவனவ்வெழுவேகொ
டெறிந்தவரக்கனையின்னுயிருண்டான்.

இ-ள். மூரிவில் — அந்தப்பெரியவில் அப்படித்தாங்கினதினாலே, முறிந்தது-முறிந்துபோயிற்று, அம்முறியேகொடு — அந்தவில்லினது துண்டையேகையாலே, எறிந்து — அனுமார்மேலேயெறிந்தபின்பு, அவ்அரக்கன் — அந்தராக்ஷதன், ஓர்வெற்பை — ஒருமலையை, எடுத்தான் — கையிலேகொண்டான், அறிந்த — அதுதெரிந்த, மனத்தவன் - மனமுள்ளஅனுமார், அவ்வெழுவேகொடு - அந்த எழுத்தடியாலேயே, எறிந்து — அடித்து, அவ்வரக்கனை - அந்தராக்ஷதனுடைய, இன்உயிர் — இனிதானஉயிரை, உண்டான் - போக்கினார்—எ-று. (ருக)

ஒழிந்தவர்நால்வருமூழியுருத்த
கொழுந்துறுதீயெனவெய்துறுகொட்பர்
பொழிந்தனர்வாளிபுகைந்தனகண்கள்
விழுந்தனசோரியவ்வீரன்மணித்தோள்.

இ-ள். ஒழிந்தவர் - மற்றையரான, நால்வரும் - நாலுபேரும், ஊழியுருத்த-யுகமுடிவிலேசினவுகிற, கொழுந்துறு - சுவாலையுள்ள, தீயென - நெருப்புப்போல், வெய்துறு - கொதிப்புள்ள, கொட்பர் - சூழ்தலானவர்கள், கண்கள்புகைந்தன-கண்கள் புகையுள்ளனவாக, வாளிபொழிந்தனர் - அம்பெய்தார்கள், அவ்வீரன்-அந்த அனுமாருடைய, மணித்தோள் — அழகியதோள்களிலிருந்து, சோரிவிழுந்தன-ரத்தமொழுகின—எ-று. (ருஉ)

ஆயிடைவீரனுமுள்ளமழன்றான்
மாயவரக்கர்வலத்தையுணர்ந்தான்

மீயெரியுய்ப்பதோர்கற்செலவிட்டான்
தீயவரச்சிலையைப்பொடிசெய்தார்.

இ-ள். ஆயிடைவீரனும் – அப்போது அனுமார், உள்ளமழன்ருன் – மனங் கொதித்தாராய், மாயஅரக்கர் – மாயைசெய்யவல்லராக்ஷதர்கள், வலத்தை – சௌரியத்தை, உணர்ந்தான் – தெரிந்தாராய், மீ – அவர்கள்மேலே, எரியுய்ப்பது – நெருப்புச்சிந்துவதான, ஓர்கல் – ஒருமலையை, செலவிட்டான் – படஎறிந்தார், தீயவர்-அந்தக்கொடியவர்கள், அச்சிலையை – அந்தக்கல்லை, பொடிசெய்தார் – தூளாக்கினர்கள்—எ-று. (ருங)

தொடுத்ததொடுத்தசரங்கடுரந்த
அடுத்தகன்மார்பினழுந்தியகன்ற
மிடற்ருெழிலான்விடுதேரொடுநொய்தின்
எடுத்தொருவன்றனைவிண்ணினெறிந்தான்.

இ-ள். தொடுத்த தொடுத்த – அவர்கள்விட்டவிட்ட, சரங்கள் – அம்புகளும், துரந்த – எறிந்த ஆயுதங்களும், அடுத்து – வந்து, அகல் – அனுமாருடைய அகன்ற, மார்பினழுந்தி – மார்பிலேபட்டுப்பட்டு, அகன்ற – நீங்கி உதிர்ந்தன, மிடற்ருெழிலான் – அவரில் பலச்செய்கையானுக, விடு – செலுத்துகிற, தேரொடு – இரதத்துடனே, நொய்தின் – விரைவிலே, எடுத்து – தூக்கி, ஒருவன்றனை – ஒருராக்ஷதனை, விண்ணின் – ஆகாயத்திலே, எறிந்தான் – வீசினுர்—எ-று. (ருச)

ஏய்ந்தெழுதேரிமிழ்விண்ணினையெல்லாம்
நீந்தியதோடிநிமிர்ந்ததுவேகம்
ஓய்ந்ததுவீழ்வதன்முன்னுயர்பாரில்
பாய்ந்தவன்மேலுடன்மாருதிபாய்ந்தான்.

இ-ள். ஏய்ந்தெழு – எறியச்செல்லுகிற, தேர் – அந்தத்தேரானது, இமிழ்-சத்திக்கின்ற, விண்ணினையெல்லாம் – ஆகாயமுழுதும், நீந்தியதோடி – விரைந்து கடந்து, நிமிர்ந்தது – உயரப்போனது, வேகமோய்ந்தது – பின்பு வேகங்குறைந்ததாய், வீழ்வதன்முன் – விழுதற்குமுன்னே, உயர்பாரில் – உயர்ந்த ஒருமேட்டிலே, பாய்ந்தவன்மேல் – குதித்தஅரக்கன்மேலே, உடன் – உடனே, மாருதிபாய்ந்தான்-அனுமார்பாய்ந்தார்—எ-று. (ருரு)

மதித்தகளிற்றினின்வாளரியேறு
கதித்ததுபாய்வதுபோற்கதிகொண்டு
குதித்தனன்மால்வரைமேனிகுழம்ப
மிதித்தனன்வெஞ்சினவீரருள்வீரன்.

இ-ள். மதித்த – மதங்கொண்டெழுந்த, களிற்றினின் – ஒருயானைமேலே, வாளரியேறு – நகாயுதமுள்ள ஒரு ஆண்சிங்கம், கதித்தது – வேகங்கொண்டதாக, பாய்வதுபோல் – குதித்தாற்போல், கதிகொண்டு – வேகங்கொண்டு, குதித்தனன்-குதித்தார், மால்வரை – பெரியமலைபோன்ற, மேனி – அவனுடம்பு, குழம்ப – குழம்புதலாக, மிதித்தனன் – துகைத்தார், வெஞ்சினம் – வெவ்வியகோபமுள்ள, வீரருள்-வீரரில், வீரன் – அதிவீரனுன அனுமார்—எ-று. (ருசு)

மூண்டசினத்தவர்மூவர்முனிந்தார்
தூண்டியதேரர்சரங்கடுறந்தார்

வேண்டியவெஞ்சமம்வேறுவிளைப்பார்
யாண்டினியேகுதியென்றெதிர்சென்றார்.

இ-ள். மூண்ட – மேன்மேலான, சினத்தவர் – கோபமுள்ளவர்களாகிய, மூவர் – மற்றமூவரும், முனிந்தார் – கோபங்கொண்டு, தூண்டியதேரர் – தேர்களைச் செலுத்திவந்து, சரங்கள்துரந்தார் – அம்புகளைஎய்தார்கள், வேண்டிய – பின்னும் வேண்டினவளவு, வெஞ்சமம் – வெவ்வியசண்டைகள், வேறுவிளைப்பார் – வெவ்வேறேசெய்வார்களாய், யாண்டுஇனி – இனிஎங்கேநீ, ஏகுதியென்று – போகிறாயென்று, எதிர்சென்றார் – முன்னேவந்தார்கள்—எ-று. (௫எ)

திரண்டுயர்தோளிணையஞ்சனைசிங்கம்
அரண்டருவிண்ணுறைவார்களுமஞ்ச
முரண்டருதேரவையாண்டொருமூன்றின்
இரண்டுமிரண்டுகையிற்கொடெழுந்தான்.

இ-ள். திரண்டு – திரட்சியாய், உயர் – உயர்ந்த, தோளிணை – தோள்களைக் கொண்ட, அஞ்சனை – அஞ்சனாதேவி, சிங்கம் – புத்திரனான வானரசிரேஷ்டர், அரண்தரு – தம்மைக்காத்தல்செய்யவேண்டுகிற, விண் – ஆகாயத்திலே, உறைவோர்களும் – வாசஞ்செய்கிற தேவர்களுங்கூட, அஞ்ச – பயங்கொள்ள, முரண்தரு – பலஞ்செய்வதான, தேரவை – தேர்களாகியஅவைகள், ஆண்டு – அங்கே, ஒருமூன்றில்-மூன்றிலேஒப்பற்ற, இரண்டும் – இரண்டுதேர்களை, இரண்டுகையிற்கொடு – இரண்கைகயிலுங்கொண்டு, எழுந்தான் – மேலேகிளர்ந்தார்—எ-று. (௫அ)

தூங்கியபாய்பரிசூதருலைந்தார்
வீங்கியதோளவர்விண்ணின்விசைத்தார்
ஆங்கதுகண்டவர்போயகலாமுன்
ஓங்கியமாருதியொல்லையினுற்றான்.

இ-ள். தூங்கிய – அவ்விரண்டிலுங்கட்டின, பாய்பரி – பாயுங்குதிரைகளும், சூதர் – பாகரும், உலைந்தார் – அழிந்தார்கள், வீங்கிய – அப்போதுபருத்த, தோளவர் – தோள்களுள்ள அரக்கர்கள், விண்ணின் – ஆகாயத்திலே, விசைத்தார் – வேகங்கொண்டுகிளர்ந்தார்கள், ஆங்கது – அப்படி அவர்களெழுந்ததை, கண்டு – பார்த்து, அவர்போய் – அவ்விருவரும் தூரத்தேசென்று, அகலாமுன் – ஒடுதற்கு முன்னே, ஓங்கியமாருதி – வளர்ந்தஅனுமார், ஒல்லையின் – விரைவிலே, உற்றான் – அவரருகேபோய்—எ-று. (௫௯)

கானிமிர்வெஞ்சிலைகையினிறுத்தான்
ஆனவர்தூணியும்வாளுமகைத்தான்
ஏனையவெம்படையில்லவரெஞ்சார்
வானிடைநின்றுயர்மல்லின்மலைந்தார்.

இ-ள். கால் – இரண்டுகெதிகால்களுடனே, நிமிர் – உயர்வதான, வெஞ்சிலை-அவர்கள்வெவ்வியவில்லை, கையின் – தமதுகைக்கொண்டு, இறுத்தான் – ஒடித்து, ஆனவர் – அப்படியான அவ்விருவருடைய, தூணியும் – அம்புக்கூடுகளையும், வாளும்-கத்திகளையும், அகைத்தான் – ஒடித்தார், ஏனைய – அப்போதுமற்ற, வெம்படை-வெவ்விய ஆயுதங்களொன்றும், இல்லவர் – இல்லாமல் அவ்விருவரும், எஞ்சார்-பலங்

குறையாதவர்களாய், வானிடைநின்று - ஆகாயத்திலேநின்று, உயர்மல்லின் - உயர்ந்தமல்லயுத்தத்தாலே, மலைந்தார் - சண்டைசெய்தார்கள்—எ-று. (சுo)

வெள்ளெயிற்றர்கறுத்துயர்மெய்யர்
பிள்ளைவிரித்தபிலப்பெருவாயர்
கொள்ளவுருத்தடர்கோளரவொத்தார்
ஒள்ளிகல்வீரனருக்கனையொத்தான்.

இ-ள். வெள்ளை எயிற்றர் - வெண்பல்லராய், கறுத்துயர் - கறுப்பாயுயர்ந்த, மெய்யர் - சரீரமுள்ள அவ்விருவரும், பிள்ள - பிளவாக, விரித்த - திறந்த, பிலம் - குகைபோன்ற, பெருவாயர் - பெரியவாய்களுள்ளவர், கொள்ள - விழுங்க, உருத்து - கோபங்கொண்டு, அடர் - நெருங்குகின்ற, கோளரவு - இராகுக்கோள்கேதுக்கோள்களை, ஒத்தார் - ஒப்பானார்கள், ஒள் - பிரகாசமான, இகல்வீரன் - வலிமையுள்ள அனுமார், அருக்கனை ஒத்தான் - சூரியனை ஒப்பாயினார்—எ-று. (சுக)

தாம்பெனவாலின்வரிந்துயர்தாளோ
டேம்பலிலாரிருதோள்களிறுத்தான்
பாம்பெனநீங்கினர்பட்டனர்வீழ்ந்தார்
ஆம்பனெடும்பகைபோல்பவனின்றான்.

இ-ள். தாம்பென - கயிறுபோல், வாலின் - வாலாலே, வரிந்து - வரியக்கட்டி, உயர்தாளோடு - உயர்ந்தகால்களுடனே, ஏம்பலிலார் - நல்லோருக்காகாத அவ்விருவருடைய, இருதோள்கள் - இரண்டுதோள்களையும், இறுத்தான் - ஒடித்துவிட்டார், பாம்பென - அந்த இரண்டுபாம்புகள்போல், நீங்கினர் - விலகினாராகி, பட்டனர் - இறந்து, வீழ்ந்தார் - கீழேவிழுந்தார்கள், ஆம்பல் - செவ்வல்லிகளுக்கு, நெடும்பகை - நெடிய பகையான சூரியனை, போல்பவன் - ஒப்பான அனுமார், நின்றான் - தனியேநின்றார்—எ-று. (சுஉ)

நின்றனனேனையனின்றதுகண்டான்
குன்றிடைவாவுறுகோளரிபோல
மின்றிரிவன்றலைமீதுகுதித்தான்
பொன்றியவன்புவிதேரொடுபுக்கான்.

இ-ள். நின்றனன் - சாவாதுநின்றவனான, ஏனையன் - மற்றுமொருவன், நின்றது - நிற்பதை, கண்டான் - அனுமார்பார்த்து, குன்றிடை - மலைமேலே, வாவுறு - தாவுகின்ற, கோளரிபோல் - சிங்கம்போல், மின்திரி - ஒளிசுலாவுகிற அவனது, வன்றலைமீது - வலியதலைமேலே, குதித்தான் - ஒருகுதிகொண்டார், பொன்றி அவன் - அக்குதியினாலே அவன் இறந்து, புவி - பூமியிலே, தேரொடு - ஏறியிருந்த தனதுதேருடனே, புக்கான் - புதைந்துபோயினான்—எ-று. (சுங)

வேறு.

வஞ்சமுங்களவும்வெஃகிவழியலாவழிமேலோடி
நஞ்சினுங்கொடியராகிநவைசெயற்குரியநீரார்
வெஞ்சினவரக்கரைவரொருவனேவெல்லப்பட்ட
அஞ்செனும்புலன்களொத்தாரவனுநல்லறிவையொத்தான்.

இ-ள். வஞ்சமும் – வஞ்சனையும், களவும் – சோரமும், வெஃகி - விரும்புதலாய், வழியலா – நீதியல்லாத, வழிமேல் – வழிமேலே, ஓடி – சென்று, நஞ்சினும்- விஷத்திலும், கொடியர் ஆகி – பொல்லாதவர்களாய், நவைசெயற்கு – தோஷஞ்செய்தற்கு, உரியநீரார் – தகுந்ததன்மையுள்ளவர்கள், வெஞ்சினம் – வெவ்வியகோபமுள்ள, அரக்கர் – ராக்ஷதர்கள், ஐவர் – அஞ்சுசேனபதிகளும், ஒருவனே – அனுமார் ஒருவராலே, வெல்லப்பட்ட – வெல்லலான, அஞ்செனும்புலன்கள் – பஞ்சவிஷயங்களையும், ஒத்தார் – ஒப்பாயினர்கள், அவனும் – அந்த அனுமார், நல்லறிவை – பரிசுத்த ஞானத்தை, ஒத்தான் – ஒப்பானர்—எ-று. (கூச)

நெய்தலையுற்றவேற்கைநிருதரச்செருவினேர்ந்தார்
உய்தலையுற்றுமீண்டாரொருவருமில்லையுள்ளார்
கைதலைப்பூசல்பொங்கக்கடுகினர்காலனுட்கும்
ஐவருமுலந்ததன்மையனைவருமமையக்கண்டார்.

இ-ள். நெய்தலையுற்ற – நெய்யை முனையிலேகொண்ட, வேற்கை – வேலைக்கையிலேயுடைய, நிருதர் – ராக்ஷதர்களான, அச்செருவில் – அந்தயுத்தத்திலே, நேர்ந்தார் – எதிரிட்டவர்களில், உய்தலையுற்று – பிழைத்தவாகி, மீண்டாரொருவருமில்லை – திரும்பினவர்களொருவராயினுமிலர், உள்ளார் – சாவாதொழிந்தவர்கள், கைதலை – கைகளைத்தலைமேற்கொண்டு, பூசல்பொங்க – அழுகுரலதிகமாக, கடுகினர்- ஓடினர்கள், காலனுட்கும் – யமனும் அஞ்சுவதான, ஐவரும் – அந்தப்பஞ்சசேனபதிகள், உலந்ததன்மை – அழிந்துபோனதை, அனைவரும் – எல்லாரும், அமைய – சரியாக, கண்டார் – பார்த்தார்கள்—எ-று. (கூரு)

இறுக்குறுமின்னேநம்மைக்குரங்கெனவிரங்கியேங்கி
மறுக்குறுகின்றநெஞ்சின்மாதரைவைதுநோக்கி
உறுக்குறுசொல்லரூழித்தீயெனவுலகமேழும்
சுறுக்கொளநோக்குவான்றன்செவித்தொளைதீயச்சொன்னர்.

இ-ள். குரங்கு – இனி இந்தவானரம், இன்னே - இப்பொழுதே, நம்மை- நம்மையும், இறுக்குறும் – கொன்றுவிடும், என – என்றெண்ணி, இரங்கியேங்கி - அழுதுபிரலாபித்து, மறுக்குறுகின்ற – மயங்குகிற, நெஞ்சின் - மனமுள்ள, மாதரை- பெண்களையெல்லாம், நோக்கிவைது – பார்த்துத்திட்டி, உறுக்குறு - அதட்டுகிற, சொல்லர் - சொல்லையுடையவர்களாய், ஊழித்தீயென - முடிவுகாலத்தக்கினிபோல, உலகமேழும் – ஏழுலகங்களும், சுறுக்கொள - தீய்ந்துபோக, நோக்குவான்றன் - பார்க்கின்ற இராவணன், செவித்தொளை - காதுத்துவாரங்கள், தீய - தீயும்படி, சொன்னர் - போய்ச் சொன்னர்கள்—எ-று. மாதரைப்போகச்சொல்லி அதட்டுகிற. ()

தானையுமுலந்ததைவர்தலைவருஞ்சமைந்தார்தாக்கப்
போனபின்மீள்வேம்யாமேயதுவும்போர்புரிகிலாமை
வானையும்வென்றுளோரைவல்லையின்மடியநூறி
ஏனையரின்மைசோம்பியிருந்ததக்குரங்குமென்றார்.

இ-ள். தானையும் - சேனைகளும், உலந்தது - அழிந்தது, ஐவர் தலைவரும்- அஞ்சுசேனபதிகளும், தாக்க - அந்தக்குரங்குகொல்ல, சமைந்தார் - அப்படியேபோனர்கள், போனபின் - அவர்கள் சண்டைக்குப்போனபின்பு, மீள்வேம்யாமே-திரும்பினவர்கள்நாங்களே, அதுவும் - அந்தக்குரங்கு, போர்புரிகிலாமை - இப்போதுசண்

டைசெய்ய ஒருவருமில்லாமையாலே, வானையும் - இந்திரலோகத்தையும், வென்றுளோரை - வென்ற அவர்களை, வல்லையின் - விரைவிலே, மடியநூறி - அழியக்கொன்று, ஏனையர் - இனிவருவார், இன்மை - இல்லாமையாலே, சோம்பியிருந்தது- சோம்பலாயிருக்கின்றது, அக்குரங்கு என்ருர் - அந்தக்குரங்குகென்று சொன்னர்கள்—எ-று. உம் அசை. (சூஎ)

பஞ்சசேனபதிகள்வதைப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - கo - க்கு திருவிருத்தம் - கூகஉ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

பதினேராவது,

அட்சகுமாரன்வதைப்படலம்.

கேட்டலும்வெகுளிவெந்தீக்கிளர்ந்தெழுமுயிர்ப்பனுகித்
தோட்டலர்தெரியன்மாலைவண்டொடுஞ்சுருக்கொண்டேற
ஊட்டரக்குண்டபோலுநயனத்தானெருப்பட்டானைத்
தாட்டுணைதொழுதுமைந்தன்றடுத்திடைதருதியென்ருன்.

இ-ள். கேட்டலும் - கேட்டவுடனே, வெகுளி - கோபமாகிய, வெந்தீ - வெவ்விய நெருப்பு, கிளர்ந்து - மிகுந்து, எழும் - எழாநின்ற, உயிர்ப்பனுகி - சுவாசமுள்ளவனய், தோடு அலர் - இதழ்களுடன் விகசிக்கின்ற, தெரியல் - மாலையிலேமொய்த்த, மாலைவண்டொடும் - ஒழுங்கானவண்டுகளுடனே, சுறுக்கொண்டு - சுறீரென்று, ஏற - அச்சுவாசம்பட, ஊட்டு - ஒன்றிலே பூசப்படுகிற, அரக்குண்டபோலும் - அரக்கைப்பூசினற்போன்ற, நயனத்தான் - கண்களுள்ளவனுகை, ஒருப்பட்டானை - சண்டைக்குப்போக எழுந்த இராவணனைக்கண்டு, தாள்துணை - அவனதிரண்டுபாதங்களையும், தொழுது - வணங்கி, மைந்தன் - புத்திரனன அட்சன், இடைதடுத்து - அவனை அவ்விடத்தேநிறுத்தி, தருதியென்ருன் - விடைகொடு என்றுசொல்லுகிருன்—எ-று. இறை தருதியென்றுபாடமானல் - விடைகொடுவெனவாம். பிறர்மேல் வண்டுகளுஞ் சுவாசமும்பட. (க)

முக்கணனூர்தியன்றேன்மூன்றுலகடியிற்றுயோன்
ஒக்கவூர்பறவையன்றேலவன்றுயிலுரகமன்றேல்
திக்கயமல்லதேற்புன்குரங்கின்மேற்சேறிபோலாம்
இக்கடனடியேற்கீதியிருத்தியீண்டினிதினெந்தாய்.

இ-ள். முக்கணன் - சிவனுடைய, ஊர்தி - வாகனம், அன்றேல் - அல்லதுமாய், மூன்றுலகு - திரிலோகமும், அடியில் - பாதத்தாலே, தாயோன் - அளந்தவிஷ்ணு, ஒக்க - நேராக, ஊர் - செலுத்துகிற, பறவை - கருடபக்ஷி, அன்றேல் - அல்லதுமாய், அவன் - அந்தவிஷ்ணு, துயில் - தூங்குகின்ற, உரகம்-பாம்பு, அன்றேல்- அல்லதுமாய், திக்கயம் - திக்கியானையும், அல்லதேல் - அல்லதுமாயிருக்கச்செய்தே, புன்குரங்கின்மேல் - அல்பமான ஒருகுரங்கைநோக்கி, சேறிபோலாம் - செல்லுதியாகிருய், ஆதலால்இக்கடன் - இந்தச்செய்முறையை, அடியேற்கு - அடியேனுக்கு,

ஈதி - கொடுத்தருளு, இருத்தி ஈண்டு - இங்கேதானே இரு, இனிதின் - சுகமாக, எந்தாய் - என துதந்தையே—எ-று. (உ)

அண்டர்கோன் றன்னைப்பற்றித்தருகெனவடியேனிற்கக்
கொண்டனையென்முன் றன்னைப்பணியெனநெஞ்சங்கொண்ட
துண்டதுதீருமன்றேயுரனிலாக்குரங்கொன்றேனும்
எண்டிசைவென் றநீயேயேவுதியென்னையென்றான்.

இ-ள். அண்டர்கோன் றன்னை - இந்திரனை, பற்றித்தருகென - பிடித்துக் கொடென்று, அடியேனிற்க - நானிருக்கச்செய்தே, என்முன் றன்னை - என துதமையனை, கொண்டனை - கேட்டுக்கொண்டாய், பணியென - அவ்வுத்தரவையெனக்குச் கொடென்று, நெஞ்சங்கொண்டது - என்மனத்திலே நான்கொண்டுநின்றது, உண்டு - அப்படியுண்டான, அது - அந்த என்மனவிருப்பம், தீருமன்றே - இப்போது இந்தக்குரங்கின்மேலேவினல் தீருமல்லவா, உரனிலா - சக்திபோதாத, குரங்கு ஒன்றேனும் - ஒரு குரங்காயிருந்தாலுமிருக்க, எண்டிசை - எட்டுத்திக்கையும், வென்ற - ஜெயங்கொண்ட, நீயே - நீதானே, ஏவுதியென்னை - என்னை ஏவியருளு, என்றான் - என்றுசொன்னான் அட்சன்—எ-று. (ங)

கொய்தளிர்கோதும்வாழ்க்கைக்கோடரத்துருவுகொண்டு
கைதவமியற்றியீண்டோர்சிறுபழியிழைக்குங்கற்பான்
எய்தினனிமையாமுக்கணீசனேயென்றபோதும்
நொய்தினின்வென்றுபற்றித்தருகுவெனொடியினுன்பால்.

இ-ள். கொய்தளிர் - பறிக்குந்தளிர்களை, கோதும் - வாயாலுண்கிற, வாழ்க்கை - வாழ்வையுடைய, கோடரத்து - குரங்கினது, உருவுகொண்டு - வடிவாகி, கைதவமியற்றி - வஞ்சனையைச்செய்து, ஈண்டு - இந்த இலங்கைக்கு, ஓர்சிறுபழி - ஒரு சிறியதோஷத்தை, இழைக்குங்கற்பால் - செய்ய நினைவுகொண்டு, எய்தினன் - வந்தான், இமையாமுக்கண் - சிமிட்டாத மூன்றுகண்களையுடைய, ஈசனேயென்றபோதும் - சிவனேஎன்றாலும், நொய்தினின் - விரைவிலே, வென்று-ஜெயங்கொண்டு, பற்றித்தருவன் - பிடித்துத்தருகிறேன், நொடியின் - ஒருக்ஷணப்பொழுதிலே, நுன்பால் - உன்னிடத்தில் பற்றிவருகிறேன்—எ-று. (ச)

துண்டத்தூணதனிற்றோன்றுங்கோளரிசுடர்வெண்கோட்டு
மண்டொத்தநிமிராண்கேழலாயினுமலைதலாற்று
தண்டத்தைக்கடந்துபொங்கியப்புறத்தகலினென்பால்
தண்டத்தையிடுதியன்றேநின்வயிற்றந்திலேனேல்.

இ-ள். துண்டத்தூணதனில் - ஒருதுண்டாகிய ஒருதூணிலே, தோன்றும்- உண்டான, கோளரி - சிங்கமும், சுடர் - விளங்குகிற, வெண்கோட்டு - வெள்ளைக் கொம்பிலே, மண்தொத்த - மண் ஒட்டும்படி, நிமிர் - உயர்ந்த, ஆண்கேழல் - ஆண் பன்றியும் ஆகிய, ஆயினும் - இவ்விரண்டிலெதுவானாலும் ஆகுக, மலைதலாற்று து- என்னோடுசண்டைசெய்யமாட்டாமல், அண்டத்தைக்கடந்து - இந்த வெளியைக்கடந்து, பொங்கி - மிகுந்து, அப்புறத்து - அப்பால், அகலின் - அதைப்போகவிட்டாலும், நின்வயின் - உன்னிடத்தில், தந்திலேனேல் - பிடித்துக்கொண்டு வரேனேயானாலும், என்பால் - எனக்கு, தண்டத்தையிடுதி - அபராதம்விதிப்பாய், அன்றே- அல்லவோ—எ-று. (ரு)

எனவிவையியம்பியீதிவிடையெனவிறைஞ்சிநின்ற
வனைகழல்வயிரத்திண்டோன்மைந்தனைமகிழ்ந்துநோக்கித்
துனைபரித்தேர்மேலேறிச்சேறியென்றினையசொன்னான்
புனைமலர்த்தாரினானும்போரணியணிந்துபோனான்.

இ-ள். எனவிவை – என்றிவ்வார்த்தைகளை, இயம்பி – சொல்லி, ஈதிவிடையென – கொடு உத்தரவென்று, இறைஞ்சிநின்ற – வணங்கிநிற்கிற, வனைகழல் – கட்டின வீரக்கழலும், வயிரத் திண்டோள் – வயிர மலைபோற் கெட்டியான தோள்களுமுடைய, மைந்தனை – தன்மகனை, மகிழ்ந்துநோக்கி-சந்தோஷித்துப்பார்த்து, துனை-வேகமுள்ள, பரித்தேர்மேல்ஏறி – குதிரைகட்டின தேரின்மேலேறிக்கொண்டு, சேறியென்று – செல்லென்று, இனையசொன்னான் – இவ்வாறுசொன்னான், புனைமலர்-மலராற்புனைந்த, தாரினானும் – மாலையையுடைய அட்சன், போரணி – யுத்தவேஷம், அணிந்து – கொண்டு, போனான் – போயினான் — எ-று. (சு)

ஏறினனென்பமன்னோவிந்திரனிகலினிட்ட
நூறொடுநூறுபூண்டநொறில்வயப்புரவிநோன்றேர்
கூறினரரக்கராசிகுமுறினமுரசக்கொண்மூ
ஊறினவுரவுத்தானையூழிபேர்கடலையொப்ப.

இ-ள். இந்திரன் – தேவராஜன், இகலினிட்ட – சண்டையிலே விட்டுப்போன, நூறொடுநூறுபூண்ட – இருநூறுகட்டின, நொறில் – வேகமும், வயம் – வெற்றியுமுள்ள, புரவிமான் – ஆண்குதிரைகளையுடைய, தேர் – தேர்மேலே, ஏறினனென்ப – ஏறினானென்பார்கள், அரக்கர் – அப்போது ராக்ஷதர்கள், ஆசிகூறினர்-ஆசீர்வாதஞ்சொன்னார்கள், முரசம் – பேரிகையாகிய, கொண்மூ – மேகங்கள், குமுறின – முழங்கலாயின, உரவுத்தானை – மகாபலமுள்ளசேனைகள், ஊறின – பெருகுதலாயின, ஊழி – – அவைகளூழிகாலத்தே, பேர் – கிளருகிற, கடலை ஒப்ப-கடலை ஒப்பதாக — எ-று. (எ)

பொருகடன்மகரமெண்ணினெண்ணலாம்பூட்கைபொங்கித்
திரிவனமீன்களெண்ணினெண்ணலாஞ்செம்பொற்றிண்டேர்
உருவுறுமணலையெண்ணினெண்ணலாமுரவுத்தானை
வருதிரைமரபினெண்ணினெண்ணலாம்வாவும்வாசி.

இ-ள். பொரு – அலைகள்மோதுகின்ற, கடல் – கடலிலுள்ள, மகரம் – மகரமீன்களை, எண்ணில் – எண்ணி அளவுசெய்தால், பூட்கை-யானைகளை, எண்ணலாம்-எண்ணி அளவுசொல்லலாகும், பொங்கி – மிகுந்து, திரிவன – அக்கடலிலே உலாவுகிற, மீன்கள் – மகரங்களல்லாத மீன்களை, எண்ணின் – எண்ணி அளவுசெய்தால், செம்பொன் – சிவந்தபொன்னாலான, திண்தேர் – பலமுள்ளதேர்களை, எண்ணலாம்-எண்ணி அளவுசொல்லலாகும், உருவுறு – நுண்வடிவாயிருக்கிற, மணலை – மணல்களை, எண்ணின் – எண்ணி அளவுசெய்தால், உரவு – பலங்கொண்ட, தானை-காலாள்களை, எண்ணலாம் – எண்ணி அளவுசொல்லலாகும், வரு-ஒன்றன்மேலொன்றாக வருகிற, திரை – அலைகளை, மரபின் – ஒவ்வொன்றாக, எண்ணின் – எண்ணி அளவுசெய்தால், வாவும்வாசி – தாவுங்குதிரைகளை, எண்ணலாம் – எண்ணி அளவுசொல்லலாகும் — எ-று. (அ)

ஆறிரண்டடுத்தவெண்ணினுயிரங்குமராராவி
வேறிலாத்தோழர்வென்றியரக்கர்தம்வேந்தர்மைந்தர்
ஏறியதேரர்சூழ்ந்தாரிறுதியின்யாவுமுண்பான்
சீறியகாலத்தீயின்செறிசுடர்ச்சிகைகளன்னார்.

இ-ள். ஆறிரண்டு – பனிரண்டு, அடுத்தஎண்ணின் - கூடினதொகையுள்ள, ஆயிரம் – ஆயிரமென்றால் பன்னீராயிரம், குமரர் – புத்திரர்கள், ஆவிவேறிலா-உயிர் வேறுபாடில்லாத, தோழர் – அட்சனுக்குச் சிநேகர்கள், வென்றி – எங்கும்ஜெயங் கொண்ட, அரக்கர்தம் – ராட்சதர்களுக்கு, வேந்தர் – அரசரானவர்களுடைய, மைந்தர் – பிள்ளைகள் அவர்களும், ஏறியதேரர் – தேரேறினவர்களாக, சூழ்ந்தார் – அட்சனைச்சுற்றினார்கள், இறுதியின் – முடிவுகாலத்திலே, யாவும்-எல்லாப்பொருள்களையும், உண்பான் – உண்ணுதற்கு எரிக்கிறதற்கு, சீறிய – சுவாலித்துவருகிற, காலத்தீயின் – காலாக்கினியினது, செறிசுடர் – கனமான ஒளிகொண்ட, சிகைகள்-சுவாலைகளை, அன்னார் – ஒத்தவர்கள் அந்தப்பன்னீராயிரங் குமாரரும்—எ-று. (௯)

மந்திரக்கிழவர்மைந்தர்மதிநெறியமைச்சர்மக்கள்
தந்திரத்தலைவரீன்றதநயர்கள்பிறருந்தாதைக்
கந்தரத்தரம்பைமாரிற்றோன்றினராதியாயோர்
எந்திரத்தேரர்சூழ்ந்தாரீரிரண்டிலக்கம்வீரர்.

இ-ள். மந்திரக்கிழவர் மைந்தர் - ஆலோசனைக்குரிய யூகிகள் பிள்ளைகளும், மதிநெறி – புத்தியு நீதியுமுள்ள, அமைச்சர் மக்கள் – மந்திரிகள் பிள்ளைகளும், தந்திரத்தலைவர் - சாமபேத தான தண்டங்களிற் சிறந்தவர்கள், ஈன்ற – பெற்ற, தனயர்கள் – பிள்ளைகளும், பிறரும் – இன்னமுள்ளபிள்ளைகளும், தாதைக்கு – அட்சனுடைய தகப்பனான ராவணனுக்கு, அந்தரத்து – தேவருலகத்திருந்த, அரம்பைமாரில் – தேவகன்னிகள் வயிற்றிலே, தோன்றினர் – பிறந்த பிள்ளைகளும், ஆதியாயோர் – முதலானபிள்ளைகளெல்லாரும், வந்திரம் – உருளைகளையுடைய, தேரர்-தேர்மேலேறினவராக, சூழ்ந்தார் – சுற்றினார்கள், ஈரிரண்டிலக்கம் – நாலுலட்சம், வீரர்-வீரர்கள்—எ-று. (௧0)

தோமரமுலக்கைசூலஞ்சுடர்மழுக்குலிசந்தோட்டி
ஏமருவரிவில்வேல்கோலீட்டிவாளெழுவிட்டேறு
மாமரம்வீசுபாசமெழுமுளைவயிரத்தண்டு
காமருகணையங்குந்தங்கற்பணங்காலநேமி.

இ-ள். தோமரம் – உலக்கை, சூலம் – சுடர்மழு, குலிசம் – வச்சிராயுதம்தோட்டி, ஏமரு – அம்புகள்பொருந்தின, வரிவில் – வரிந்தவிற்கள், வேல் – வேலாயுதம், கோல் - தடி, ஈட்டி - வாள், எழு - விட்டேறு, மாமரம் - வீசுபாசம் எழுமுளை, வயிரத்தண்டு – காமருகணையம் குந்தம், கற்பணம் – காலநேமி, சுடர்த்தோமரம்-சுடருலக்கை சுடர்ச்சூலமெனக்கூட்டுக, வீசிக்கட்டுங்கயிறு – எழுவாற்செய்தமுளை, அழகு பொருந்தினகணையம் - இவ்வாறே கீழாயுதங்களைச்சொன்ன இடங்களெல்லாம் பிரதிபதங்கள் வேறெழுதப்படாமையால் அந்த அந்தப் பெயர்களே பெயராகக்கொள்க எ-று. (௧௧)

என்றிவைமுதலயாவுமெறிதருபடைகளீண்டி
மின்றிரண்டனையவாகிவெயிலொடுநிலவுவீசத்

துன்றிருந்தூளிபொங்கித்துறுதலாலிறுதிசெல்லாப்
பொன்றிணியுலகமெல்லாம்பூதலமாயமாதோ.

இ-ள். என்று - என்றுசொல்லப்படுகிற, இவைமுதல் - இவ்வாயுதங்கள்முதலான, யாவும் — எல்லாம், எறிதரு — எறியத்தக்க, படைகள் — சேனைகள், ஈண்டி-கூடி, மின் - மின்னல்கள், திரண்டனையவாகி — கூடினாற்போற்கூடி, வெயிலொடு-வெயிலொளியுடனே, நிலவு - நிலவொளியும், வீச — ஜுவலிக்க, துன்று - நெருங்கின, இரும் — அதிகமாகிய, தூளிபொங்க - தூள்கள்கிளர்ந்து, துறுதலாய் — நெருங்குதலாலே, இறுதிசெல்லா — அழிவுபடாத, பொன்திணி — பொன்மயமான, உலகமெல்லாம் - மேலுலகங்களெல்லாம், பூதலம் ஆய — மண்ணுலகமாயின—எ-று. ()

காகமுங்கழுகும்பேயுங்காலனுங்கணக்கில்காலம்
சேகுறவினையிற்செய்ததீமையுந்தொடர்ந்துசெல்லப்
பாகியல்கிளவிச்செவ்வாய்ப்படைவிழிப்பணைத்தவேய்த்தோட்
டோகையர்மனமுந்தொக்கதும்பியுந்தொடர்ந்துசுற்ற.

இ-ள். காகமும் — காக்கைகளும், கழுகும் - கழுகுகளும், பேயும்-பேய்களும், காலனும் - யமனும், கணக்கில்காலம் — அளவில்காலமெல்லாம், சேகு உற — சஞ்சிதமாயிருக்க, வினையிற்செய்த — இவ்வரக்கர்கள் செய்கையாலே பண்ணின, தீமையும்-பாபமும், தொடர்ந்துசெல்ல — பின்பற்றிவரவும், பாகுஇயல் - தேன்குழம்புக்கொப்பான, கிளவி - சொற்களும், செவ்வாய் — சிவந்தவாயும், படைவிழி — வாளாயுதம்போன்ற கண்களும், பணைத்த — பருத்த, வேய்த்தோள் - மூங்கில்போன்ற தோள்களுமுள்ள, தோகையர்மனமும் - பெண்களுள்ளமும், தொக்க — அம்மனங்கள்கூடின, தும்பியும் — வண்டுகளான கண்களும், தொடர்ந்து சுற்ற — பின்னே தொடர்ந்து சூழவும், மனங்கூடியே கண்பார்த்தலாலே தொக்க தும்பியென்பது கண்களென்று கொள்க—எ-று. (௧௩)

உழைக்குலநோக்கினார்களுலந்தவர்க்குரியமாதர்
அழைத்தழுகுரலின்வேலையமலையினரவச்சேனை
தழைத்தெழுமொலியினானுப்பல்லியந்துவைத்தலால்விண்
மழைக்குரலிடியிற்சொன்னமாற்றங்களொழிப்பமன்றோ.

இ-ள். உழைக்குலம் - மான்கூட்டம்போன்ற, நோக்கினார்கள் — பார்வையுள்ளவர்களான, உலந்தவர்க்கு — அனுமாராலே இறந்தவர்களுக்கு, உரியமாதர் — உரித்தானமனைவிகள், அழைத்து — தம்முடைய நாயகர்களைக் கூப்பிட்டு, அழு — அழுகின்ற, குரலின் - குரல்களான, வேலை - கடல்போன்ற, அமலையின் - சத்தத்தாலும், அரவம் - பெருமுழக்கமுள்ள, சேனை — சேனைகள், தழைத்து — அதிகரித்து, எழும்-எழுகின்ற, ஒலியின் - சத்தத்தாலும், நானா — பலவிதங்களான, பல்லியம் — அநேகவாத்தியங்களும், துவைத்தலால் — சத்திக்கிறதினாலும், விண் — ஆகாயத்துள்ள, மழைக்குரல் — மேகத்தொனியாகிய, இடியில் — இடிபோல், சொன்ன - அவர்கள்பேசின, மாற்றங்கள் - சொற்கள்தெரிதல், ஒழிப்ப — இல்லையாவன—எ-று. (௧௪)

வெயிற்கரமணிகள்வீசும்விரிகதிர்விழுங்கவெய்ய
அயிற்கரமணிகள்காலுமவிரொளிபருகவஃகா
எயிற்றிளம்பிறைகளீன்றவிலங்கொளியொதுங்கயாணர்
உயிர்க்குலவிரவுமன்றுபகலன்றென்றுணர்வுதோன்ற.

இ-ள். வெயிற்கரம் – சூரியகிரணத்தைக்கொண்ட, மணிகள் – அவர்களாபரணங்களிலுள்ளரத்நங்கள், வீசும் – ஆகாயத்தினின்றும் எறிக்கிற, விரிகதிர் – விரிந்த சூரியகிரணத்தை, விழுங்க – கபளீகரிக்கவும், வெய்ய – வெவ்விதான, அயில்-வேலாயுதங்களின், கரம் – ஒளிகளானவை, மணிகள் – அந்த ரத்நங்கள், காலும் – வீசுகிற, அவிரொளி – மிக்க ஒளியை, பருக – உண்டு மறைக்கவும், அஃகா – குறைவுபடாத, எயிற்று – அவர்கள்பல்லொளிகளாலே, இளம்பிறைகள் - இளஞ்சந்திரர்கள், ஈன்ற – பெறுவனவாகிய, இலங்கொளி – மிக்கவொளிகள், ஒதுங்க – மறையரும் ஆகுதலாலே, யாணர் – அந்தப் புதுமைகள் காண்கின்றனவாக, உலவுயிர்க்கு – மேலுங் கீழும் சஞ்சரிக்கிற வுயிர்களுக்கு, இரவும் அன்று – இக்காலம் இராத்திரியுமல்ல, பகலன்று – பகலுமல்ல, என்று – என்பதாக, உணர்வுதோன்ற – புத்திக்கு விளங்க—எ-று. (கரு)

ஓங்கிருந்தடந்தேர்பூண்டவுளைவயப்புரவியொல்கித்
தூங்கினவீரத்தோளுங்கண்களுமிடத்துத்துள்ள
வீங்கினமேகமெங்குங்குருதிநீர்த்துள்ளிவீழ்ப்ப
ஏங்கினகாகமார்ப்பவிருளில்விண்ணிடிப்பமாதோ.

இ-ள். ஓங்கு இரும் – வளர்ந்துபெரிதான, தடந்தேர் – விசாலமான தேரிலே, பூண்ட – கட்டின, உளை – உரோமங்களையும், வயம் – வெற்றியுமுள்ள, புரவி – குதிரைகள், ஒல்கி – தளர்ந்து, தூங்கின – உறங்கிவிழவும், வீரத்தோளும் – வீரமுள்ள தோள்களும், கண்களும் – நேத்திரங்களும், இடத்து – இடப்புறத்திலே, துள்ள- துடிக்கவும், வீங்கின – அதிகமானவைகளாய், மேகம் – மேகங்கள், எங்கும் – எவ்விடங்களிலும், குருதிநீர் – ரத்தஜலங்களை, துள்ளி – துளிதுளிகளாக, வீழ்ப்ப – உதிர்க்கவும், ஏங்கின – அழுதுகொண்டு, காகம் – காக்கைகள், ஆர்ப்ப – கத்தவும், இருளில் – இருட்டில்லாமல், விண் – ஆகாயம், இடிப்ப – குமுறவும்—எ-று. (கசு)

வெள்ளவெஞ்சேனைசூழவிண்ணுளோர்வெருவிவிம்ம
உள்ளநொந்தனுங்கிவெய்யகூற்றமுமுறுவதுன்னத்
துள்ளியசுழல்கட்பேயடோள்புடைத்தார்ப்பத்தோன்றும்
கள்ளவிழலங்கலானைக்காற்றின்சேய்வரவுகண்டான்.

இ-ள். வெள்ளம் - வெள்ளக்கணக்குள்ள, வெஞ்சேனை - வெவ்வியசேனைகள், சூழ – சுற்றவும், விண்ணுளோர் - ஆகாசவாசிகள், வெருவி விம்ம - பயந்து துக்கிக்கவும், உள்ளம் – மனது, நொந்து – வருந்தி, அனுங்கி – கெடுதலாய், வெய்ய கூற்றமும் - கொடியயமனும், உறுவது – அட்சன்வருகிறதை, உன்ன – பார்த்துயோசிக்கவும், துள்ளிய – துள்ளுகின்ற, சுழல்கண் - சுழலுங்கண்களுள்ள, பேய்கள் - பேய்க்கூட்டங்களையுடைய காளியானவள், தோள்புடைத்து - தன் தோள்களைத் தட்டிக்கொண்டு, ஆர்ப்ப – கர்ச்சிக்கவும், தோன்றும் – வருகிற, கள் அவிழ் – தேனொழுகுகின்ற, அலங்கலானை – தும்பைமாலையணிந்துவருகிற அட்சகுமாரனுடைய, வரவு- வருதலை, காற்றின்சேய் - அனுமார், கண்டான் – பார்த்தார்—எ-று. (கஎ)

இந்திரசித்தோமற்றவ்விராவணனேயோவென்னச்
சிந்தையினுவகைகொண்டுமுனிவுற்றகுரக்குச்சீயம்
வந்தனன்முடிந்ததன்றேமனக்கருத்தென்னவாழ்த்திச்
சுந்தரத்தோளைநோக்கியிராமனைத்தொழுதுசொன்னான்.

இ-ள். இந்திரசித்தோ - மேகநாதனோ, மற்றவ்விராவணனேயோ - அல்லதந்த இராவணனோ, என்னா - என்று, சிந்தையின் - மனத்திலே, உவகைகொண்டு - சந்தோஷமாய், முனிவுற்ற - கோபங்கொண்ட, குரக்குச்சீயம் - வானரசிரேஷ்டரான அனுமார், வந்தனன் - அவ்விருவரிலொருவன் வந்தானாகையாலே, மனக்கருத்து - நமது மனத்திலேகொண்ட எண்ணம், முடிந்ததன்றோ - முடிவாயிற்றல்லவோ, என்னவாழ்த்தி - என்று ராமனைத்துதித்துக்கொண்டு, சுந்தரத்தோளைநோக்கி - தமதழகியதோள்களையும்பார்த்து, இராமனை - ஸ்ரீராமனையும், தொழுது - வணங்கிக்கொண்டு, சொன்னான் - சொல்வாராயினார்—எ-று. (௧அ)

எண்ணியவிருதர்தம்முளொருவனேல்யான்முன்செய்த
புண்ணியமுளதாலெங்கோன்றவத்தொடும்பொருந்தினானே
நண்ணினனானுநின்றேன்காலனுநணுகிநின்றான்
கண்ணியகருமமின்றேமுடிக்குவென்கடிதினென்றான்.

இ-ள். எண்ணிய - நாமெண்ணின, இருவர்தம்முள் - இருவரிலே, ஒருவனேல் - ஒருவனானால், யான்முன் - நான்முன்னே, செய்த - பண்ணின, புண்ணியம் - புண்ணியபலம், உளது - சித்தித்ததாயிற்று, எங்கோன் - எமதரசனான சுக்கிரீவனும், தவத்தொடும்பொருந்தினானே - தவத்துடனே கூடினவனேயாவான், நண்ணினன் - இருவரிலொருவன்வந்தான், நானுநின்றேன் - இதோநானும் அவன்முன்னே நிற்கிறேன், காலனும் - யமனுங்கூட, நணுகிநின்றான் - சமீபித்திருக்கிறான், கண்ணிய - நான்கருதின, கருமம் - காரியத்தை, இன்றே - இப்பொழுதே, முடிக்குவன் - முடித்துவிடுகிறேன், கடிதின் - விரைவிலே, என்றான் - என்றுயோசித்தார்-எ-று.

பழியிலதுருவென்றாலும்பஃறலையரக்கனல்லன்
விழிகளாயிரமுங்கொண்டவேந்தைவென்றானுமல்லன்
மொழியின்மற்றவர்க்குமேலான்முரட்டொழின்முருகனல்லன்
அழிவிலொண்குமரன்யாரோவஞ்சனக்குன்றமன்னான்.

இ-ள். பழியிலது - உருஇவன்வடிவு ராஜலட்சணத்திலொருகுறைவுமில்லாதிருக்கிறது, என்றாலும் - என்னலாமாயினும், பஃறலை - பத்துத்தலைகளையுடைய, அரக்கன் - ராவணன், அல்லன் - இவன் ஒருதலையோடிருத்தலாலல்லனேயாம், விழிகளாயிரமுங்கொண்ட - ஆயிரங்கண்களுள்ள, வேந்தை - அரசனான இந்திரனை, வென்றானும் - வென்றமேகநாதனும், அல்லன் - அல்லனாகவே தோற்றுகிறான் இடிக்கொடியில்லாமையாலே, மொழியின் - இவனையின்னானென்றுசொல்லுமிடத்தில், மற்றவர்க்கு - அந்த இருவருக்கும், மேலான் - சிரேஷ்டனான, முரண்தொழில் - பலாட்டியச்செய்கையுள்ள, முருகன் அல்லன் - முருகவேளுமல்லன் ஆறுமுகமில்லாமையால், அழிவில் - யாதொரு கெடுதலுமில்லாத, ஒண்குமரன் - அழகிய இவன், யாரோ - எவனோ, அஞ்சனக்குன்றம் - நீலமலையையே, அன்னான் - ஒப்பாயிருக்கிறான்—எ-று. (௨0)

என்றவனுவந்துவிண்டோயிந்திரசாபமென்ன
நின்றதோரணத்தினும்பரிருந்ததோர்நீதியானை
வன்றொழிலரக்கனோக்கிவாளெயிறிலங்கநக்கான்
கொன்றதிக்குரங்குபோலாமரக்கர்தங்குழுவையென்றான்.

இ-ள். என்றவன் - என்றுநினைத்தவராய், உவந்து - சந்தோஷித்து, விண்தோய் - ஆகாயத்தை அளவுவதாய், இந்திரசாபமென்ன - இந்திர வில்லைப்போல்,

நின்ற - நிற்பதான, தோரணத்தினும்பர்-தோரணகம்பத்தின்மேலே, இருந்ததோர்- இருப்பதான ஒரு, நீதியானை - நீதியுள்ள அனுமாரை, வன்றொழில்-வலியசெய்கையுள்ள, அரக்கன் - ராட்சதனான அட்சன், நோக்கி - பார்த்து, வாள்எயிறு - ஒளி பொருந்தினபற்கள், இலங்க - விளங்க, நக்கான் - சிரித்தவனாகி, அரக்கர்தங் குழுவை - இங்குவந்த ராக்ஷதகூட்டத்தை, கொன்றது - வதைபண்ணினது, இக்குரங்கு - இந்தக்குரங்குவடிவுள்ளதுதானா என்றான்—எ-று. போல் ஆம் அசைகள். ()

அன்னதாமச்சொற்கேட்டசாரதியையகேண்மோ
இன்னதாமென்னலாமோவுலகியலிகழ்தலம்மா
மன்னனோடெதிர்ந்தவாலிகுரங்கென்றான்மற்றுமுண்டோ
சொன்னதுதுணிவிற்கொண்டுசேறியென்றுணரச்சொன்னான்.

இ-ள். அச்சொற்கேட்ட - அந்தவார்த்தையைக்கேட்ட, சாரதி - பாகனானவன், அன்னது - அந்தக்குரங்கே, ஆம் - வெல்லவல்லதாகும், ஐய - சுவாமி, கேண்மோ - நான்சொல்வதைக் கேட்பீராக, இன்னது - இப்படிப்பட்டதாக, உலகியல்- லோகசுவபாவம், ஆம் - முடிவுபெறும், என்னலாமோ - என்று அளவுபடுத்தக்கூடுமோகூடாது, இகழ்தல் - உலகியலை இகழ்ந்துபேசுதலைக்கேட்டோர், ஆமென்னலாமோ - சரிதானென்னக்கூடுமோ கூடாது, அ - அந்த, மாமன்னனோடு - பெரிய அரசனான இராவணனுடனே, எதிர்ந்தவாலி - நேரானவாலியும், குரங்கென்றால் - குரங்குருவமேயானபோது, மற்றுமுண்டோ - இன்னம் இகழ்ந்துபேசக்கூடுமோ, சொன்னது - நான் சொல்லியதை, துணிவிற்கொண்டு - நம்புதலாக எண்ணி, சேறியென்று - செல்கவென்று, உணர - அவன்தெரிவதாக, சொன்னான் - சொல்லினான் எ-று. (உஉ)

விடந்திரண்டனையமெய்யானவ்வுரைவிளம்பக்கேளா
இடம்புகுந்தினையசெய்தவிதனொடுசீற்றமெஞ்சத்
தொடர்ந்துசென்றுலகமூன்றுந்துருவினெனொழிவுறாமல்
கடந்துபின்குரங்கென்றோதுங்கருவையுங்களைவெனென்றான்.

இ-ள். விடம்திரண்டனைய - நஞ்சே ஒருவடிவுகொண்டாற்போலிருக்கிற, மெய்யான் - உருவமுள்ள அட்சன், அவ்வுரை - அந்தவார்த்தைகளை, சாரதி - தன் பாகனானவன், விளம்ப - சொல்ல, கேளா - கேட்டு, இடம்புகுந்து - நம்மூரிலேவந்து, இனையசெய்த - இப்படிப்பட்டவைகளைப்பண்ணின, இதனொடு - இந்தக்குரங்குடனே, சீற்றம் - எனதுகோபம், எஞ்ச - தீர, தொடர்ந்துசென்று-இதுபோன இடமெல்லாங் கூடவேபோய், உலகமூன்றும் - திரிலோகமும், துருவினென் ஒழிவுறாமல் - தப்பாமல்தேடினேனாகி, கடந்து - இதைவென்று, பின் - பின்பு, குரங்கென்று ஓதும் - குரங்கென்றுசொல்லுகிற, கருவையும் - மூலத்தையும், களைவென்- போக்குவேன், என்றான் - என்றுசொன்னான்—எ-று. (உ௩)

ஆர்த்தெழுந்தரக்கர்சேனையஞ்சனைக்குரியகுன்றைப்
போர்த்ததுபொழிந்ததம்மாபொருபடைப்பருவமாரி
வேர்த்தனர்திசைகாப்பாளர்சலித்ததுவிண்ணுமண்ணும்
தார்த்தனிவீரன்றானுந்தனிமையும்வரமேற்சார்ந்தான்.

இ-ள். ஆர்த்து - அப்போது கெர்ச்சிதத்துடனே, எழுந்து - எழுதலாகி, அரக்கர்சேனை - அந்தராக்ஷதசேனைகள், அஞ்சனைக்கு - அஞ்சனாதேவிக்கு, உரிய-

புத்திரனாதற்குரித்தான், குன்றை - மலைபோன்ற அனுமாரை, போர்த்தது-சூழ்ந்த தாக, பொருபடை - மோதுகிற அஸ்திரசஸ்திரங்களான, பருவமாரி - பெய்யுங்காலத்துமழைபோல், பொழிந்தது - பெய்யலாயிற்று, திசைகாப்பாளர் - அப்போது திக்குப்பாலகர்கள், வேர்த்தனர் - பயந்து உடம்புவேர்த்தார்கள், விண்ணும்-விண்ணுலகும், மண்ணும் - மண்ணுலகமும், சலித்தது - சலிக்கலாயிற்று, தார் - வெற்றிமாலைகொண்ட, வீரன் - வீரனான அனுமார், தானும் - தாமும், தனிமையும் - தாமொருவரேயென்கிறசொல்லும், வர - கூடவருவதாக, மேல் - அச்சேனைகளின்மேலே, சார்ந்தான், சென்றார்—எ-று. தனி - ஒப்பில்லாத, அம்மா - அசை. (௨௪)

எறிந்தனநிருதர்வெய்தினெய்தனபடைகள்யாவும்
முறிந்தனவீரன்மேனிமுட்டினமொகரயானை
மறிந்தனமடிந்ததேரும்வாவுமாக்குழுவுமற்றும்
நெறிந்தனவரம்பில்யாக்கையிலங்கைதன்னிலையிற்பேர.

இ-ள். நிருதர் - அந்தராக்ஷதர்கள், எறிந்தன - எறிந்தசஸ்திரங்களும், வெய்தின் - கோபங்கொண்டு, எய்தன் - எய்தஅஸ்திரங்களுமாகிய,படைகள்யாவும் - எல்லாவகைகளும், முறிந்தன - முறிதலாயின, வீரன்மேனி - அனுமாருடம்பின்மேல், முட்டின - மோதினவாகிமுறிந்தன, மொகரம் - முதலொழுங்கிலேநின்ற, யானை-யானைகள், மறிந்தன - மீண்டோடலாய், மடிந்த - இறந்துபோயின, தேரும் - இரதங்களும், வாவும் - தாவுகின்ற, மாக்குழுவும் - குதிரைக்கூட்டங்களும், மற்றும்-குடைகொடி முதலாயினவும், நெறிந்தன - நெரிதலாயின, வரம்புஇல் - அளவில்லாத, யாக்கை - தேகங்கள்குவிகிறதனத்தினாலே, இலங்கை - அந்தஊர், தன்நிலையில் - தனதுநிலையினின்றும், பேர - விலகுதலாகமுறிந்தன மடிந்தன நெறிந்தன என்க. (௨௫)

காயெரிமுளிபுற்கானிற்கலந்தெனக்காற்றின்செம்மல்
ஏயெனுமளவிற்கொல்லுநிருதர்க்கோரெல்லையில்லைப்
போயவருயிரும்போகித்தென்புலம்படர்தல்பொய்யா
தாயிரகோடிதூதருளர்கொலோநமனுக்கம்மா.

இ-ள். காய் - சுடுகின்ற, எரி - அக்கினியானது, முளி - தீந்திருக்கிற, புல்கானில் - புல்லுள்ளகாட்டிலே, கலந்தென - கூடினாற்போல், காற்றின்செம்மல்-அனுமார், ஏயெனுமளவில் - உம்மென்னுமளவிலே, கொல்லும் - கொல்லலான,நிருதர்க்கு - ராக்ஷதர்களுக்கு, ஓரெல்லையில்லை - ஒருஅளவுமில்லை, போய் - உடல்அழிந்துபோய், அவர் - அந்த ராட்சதர்களுடைய, உயிரும் - பிராணன்களும், போகி-போய், தென்புலம் - யமலோகத்துக்கு, படர்தல் - செல்லுதல், பொய்யாது - தப்புதலில்லைஆனால், ஆயிரகோடிதூதர் - உளர்கொலோநமனுக்கு - எமனுக்குண்டோ எ-று. எமதூதர்களே அவ்வளவினரானால் இறந்தவர்களெவ்வளவினரென்று சொல்லலாமென்றுகருத்து. (௨௬)

வரவுற்றார்வாராநின்றார்வந்தனர்வரம்பில்வெம்போர்
பொரவுற்றபொழுதும்வீரன்முழுமடங்காற்றல்பொங்கி
எரியிற்போய்க்கதிரோனூழியிறுதியினென்னலானான்
உரவுத்தோளரக்கரெல்லாமென்பிலாவுயிர்களொத்தார்.

இ-ள். வரவுற்றார் – வருவார்களும், வாராநின்றார் - வருகிறவர்களும், வந்தனர் – வந்தவர்களும் ஆக, வரம்பில் – அளவில்லாத, வெம்போர் – வெவ்வியசண்டைகளை, பொரவுற்றபொழுதும் - செய்யத்தொடங்கினபோதிலும், வீரன் – அனுமாருக்கு, மும்மடங்கு – முன்னிலு மூன்றுபங்கு, ஆற்றல் - சாமர்த்தியம், பொங்கி-அதிகமாய், எரியில் – முன்னேநெருப்புப்போல், போய் - சென்று, ஊழியிறுதியின்-யுகமுடிவிலேதோன்றுகிற, கதிரோன் – சூரியனே, என்னலானன் – என்றுசொல்லும்படியாயினர், உரவு – பலங்கொண்ட, தோள் – புஜங்களையுடைய, அரக்கரெல்லாம்-ராக்ஷதர்கள்முழுதும், என்பில்லா - எலும்பில்லாதபுழுவை, ஒத்தார் - ஒப்பாயினர்கள்—எ-று. (உஎ)

வேறு.

பிள்ளப்பட்டன நுதலோடைக்கரிபிறழ்பொற்றேர்பரிபிழையாமல்
அள்ளப்பட்டழிகுருதிப்பொருபுனலாறுகப்படிசேருக
வள்ளப்பட்டனமகரக்கடலெனமதில்சுற்றியபதிமறலிக்கோர்
கொள்ளைப்பட்டுளவுயிரென்னும்படிகொன்றானைம்புலன்வென்றானே.

இ-ள். நுதல் ஓடை – நெற்றியிலே வீரபட்டமுள்ள முகபடாமணிந்த, கரி-யானைகளும், பிறழ் – ஊர்கிற விளங்குகின்ற, பொற்றேர் - பொன்மயமான ரதங்களும், பரி - குதிரைகளும், பிழையாமல் – தப்பாமல், பிள்ளப்பட்டன – பிளவுபடுதலாயின, அள்ளப்பட்டு – கையாலள்ளு கூழ்போலாகி, அழி – கரைதலாகுகிற, குருதி – ரத்தமாகி, பொரு – அலைமோதுவதான, புனலாறுக - நீராறுபோற் பிரவாகமாக, படி – கீழ்மண்ணெல்லாம், சேருக – சேறுமாகிறதினாலே, வள்ளம்பட்டன-ஒருதோணிமிதப்பதுபோலான, மகரக்கடலென – மகரமீன்களையுடையகடல் சூழ்ந்தாற்போல், மதில் சுற்றியபதி – மதிலாலே சூழப்பட்ட அவ்வூரிலே, மறலிக்கு – யமனுக்கு, உயிர் – ராக்ஷதர்களுயிராகியபொருள், ஓர் கொள்ளைப்பட்டுள - ஒரு கொள்ளைகொள்ளும்படி, என்னும்படி - ஆயினவென்பதாக, ஐம்புலன்வென்றான் – ஜிதேந்திரியரான அனுமார், கொன்றான் – வதைசெய்தார்—எ-று. ஒருதோணிமிதப்பதுபோலாயினதிலங்கை என்க. (உஅ)

தேரேபட்டனவென்றார்சிலர்சிலர்தெறுகட்செம்முகவயிரத்தோள்
பேரேபட்டனவென்றார்சிலர்சிலர்பரியேபட்டனபெரிதென்றார்
காரேபட்டன நுதலோடைக்கடகரியேபட்டனகடிதென்றார்
நேரேபட்டனர்படமாடேதனிநில்லாவுயிரொடுநின்றாரே.

இ-ள். மாடே - பக்கங்களிலே, தனி - ஒவ்வொருவரும், நில்லாவுயிரொடு-நிலைகொள்ளாதவுயிருடனே, நின்றார் – நின்றுகாண்போர்களில், தேரேபட்டனவென்றார்சிலர் – சிலர் தேர்களே அதிகமாயுடைபட்டனவென்றார்கள், தெறுகண்-கொல்லநோக்குங்கண்கள், செம் - சிவந்திருத்தலையுடைய, முகம் – முகங்களும், வயிரம்-வயிரமலைபோன்ற, தோள் – தோள்களுமுள்ள, பேரே - பேர்களானகாலாள்களே, பட்டன – அதிகமாய்ச்சாதலாயின, என்றார் – என்றார்கள், சிலர் – சிலர்கள், பரியே – குதிரைகளே, பட்டன – அழிந்தன, பெரிதென்றார் – அதிகமென்றார், சிலர்-சிலர்கள், காரே-மேகங்களே, பட்டன-இறந்துவிழுந்தாற்போல், நுதலோடை – முகபடாத்தையுடைய, கடகரியே – மதயானைகளே, பட்டன – அழிந்தன, கடிது – விரைவிலே, என்றார் – என்றுசொன்னார்கள், நேரே – அனுமார்முன்னே, பட்டனர்-

இறந்தவர்கள், பட - இறந்துகொண்டிருக்க, மாடுநின்றுகண்டோர்கள் அவ்வாறு நிர்ஜீவர்களாய்ச் சொல்லுகிறார்களென்க—எ-று. (உசு)

ஆழிப்பொருபடைநிருதப்பெருவலியடலோராய்மகளடுபேழ்வாய்த்
தாழிப்படுதயிரொத்தார்மாருதிதனிமத்தென்பதொர்தகையானான்
ஏழிப்புவனமுமிடைவாழுயிர்களுமெறிவேலிளையவரினமாக
ஊழிப்பெயர்வதொர்புனலொத்தாரனலொத்தான்மாருதமொத்தானே.

இ-ள். ஆழி - கடல்போற்சூழ்ந்து, பொரு - சண்டைசெய்கிற, படை - ஆயுதங்களாலே, பெருவலி - மிக்கவல்லமையுள்ள, நிருத அடலோர் - ராட்சதர்களான கொலைக்கஞ்சாதபாவிகளெல்லாம், ஆய்மகள் - இடைச்சி, அடு - கட்டியையுடைத்துக்கடைகிற, பேழ்வாய் - அகன்றவாயையுடைய, தாழி - இலங்கையானபானையிலே, படு - உள்ள, தயிர் - தயிரை, ஒத்தார் - ஒப்பானார்கள், மாருதி - அனுமாரானவர், தனிமத்து - ஒருநிலைமத்தே, என்பது - என்றுசொல்லலான, ஓர்தகையானான் - ஒருதகுதிக்கொப்பாயினார், ஏழ் - ஏழென்கிறஅளவுள்ள, இப்புவனமும் - சப்ததீவுகளிலும், மிடை - நெருங்கின நெருங்குதலாகி, வாழ் - வாழ்கின்ற, உயிர்களும் - உயிர்கள்முழுதும், எறி - குத்துகிற, வேல் - வேல்களைக்கொண்ட, இளையவர் - ராக்ஷதகுமாரர்கள், இனமாக - கூட்டமேயாக, ஊழி - யுகமுடிவிலே, பெயர்வது - கரைபுரண்டுவருவதான, ஓர்புனல் - ஒருபிரவாகஜலத்தை, ஒத்தார் - ஒப்பானார்கள், மாருதமொத்தான் - பிரசண்டவாயுவேகமுள்ள அனுமார், அனலொத்தான் - அந்தநீரை உறிஞ்சுகிற நெருப்பைஒப்பானார்—எ-று. (௩0)

கொன்றானுடன்வருகுழுவைச்சிலர்பலர்குறைகின்றாருடல்குலைகின்றார்
பின்றாநின்றனருதிரப்பெருநதிபெருகாநின்றனரருகாரும்
நின்றார்நின்றிலர்தனிநின்றானொருநேமித்தேரொடுமவனேரே
சென்றான்வன்றிறலயில்வாயம்புகடெரிகின்றான்விழியெரிகின்றான்.

இ-ள். கொன்றான் - இப்படியாகவதைத்தார், உடன்வருகுழுவை - அட்சனுடனேவருகிற கூட்டத்தை, சிலர்குறைகின்றார்உடல் - அதிலே சிலர்கைகால்கள்குறைவுபடுகிறார்கள், பலர்குலைகின்றார் - பலர்உடல்நடுங்குகிறார்கள், பின்றாநின்றனர் - சிலர்பின்னிடுகிறார்கள், உதிரப்பெருநதி - பலர் ரத்தப்பிரவாகம் பெருகாநின்றனர் - உடலிலேஉண்டாகுகிறார்கள், அருகு - அட்சன்பக்கத்திலே, நின்றார் - சிலர் நின்றார்கள், ஆரும் - பலரில்யாரேனுமொருவரும், நின்றிலர் - நில்லாதோடினார்கள், தனிநின்றான் - தானொருவனேநிற்பதானான் அட்சன், ஒருநேமித்தேரொடும் - உருளையையுடைய ஒருதேருடனே தனிநின்றான், அவன்நேரே - அப்படி நிற்கிறவன் அனுமாருக்குமுன்னே, வன்றிறல் - மிகவும்வலிமையுள்ள, அயில்வாய் - கூர்மைபொருந்தின, அம்புகள் - பாணங்களை, தெரிகின்றான் - விட்டுக்கொண்டு, விழி - கண்கள், எரிகின்றான் - எரிகிறவனாக, சென்றான் - போயினான்—எ-று. (௩க)

உற்றானிந்திரசித்துக்கிளையவனொருகாலேபலருயிருண்ணக்
கற்றானும்முகமெதிர்வைத்தானதுகண்டார்விண்ணவர்கசிவுற்றார்
எற்றாமாருதிநிலையென்பாரினியிமையாவிழியினையிவையொன்றே
பெற்றாமல்லதுபெற்றாமென்றனர்பிறியாதெதிரெதிர்செறிகின்றார்.

இ-ள். இந்திரசித்துக்கிளையவன் - மேகநாதனுடையதம்பி, உற்றான்-நேரேவந்தான், ஒருகாலே - ஒருமூக்களவிலே, பலர் - அநேகருடைய, உயிர்-உயிர்களையு

ம், உண்ணக்கற்றானும் - கொல்லவல்லஅனுமார், முகம் - தமதுமுகத்தை,எதிர்வைத்தான் - அவன்முன்னேதிருப்பினார், அதுகண்டார் - அதைப்பார்த்த, விண்ணவர்-தேவர்கள், கசிவுற்றார் - மனமிளகினவர்களாய், இனிமாருதிசிலே - இனிஅனுமாருடையவீரம், எற்றாம் - எத்தன்மையதாகும், என்பார் - என்னுமவராய், விழியினையிமையா - கண்களைமூடாத, இவைஒன்றோ - இவ்வளவோ, பெற்றாம் - பெற்றிருக்கிறோம், அல்லது - கூசிக்கண்கள்மூடுகிறதையே, பெற்றாம் - பெற்றுளோம், என்றனர் - என்றுசொல்லி, பிரியாது - ஒருவரையொருவர்விடாமல், எதிர்எதிர் - ஒருவருக்குமுன்னேஒருவர், செறிகின்றார் - நெருங்குகிறார்கள் ஓடுகிறார்கள்—எ-று. ()

எய்தான்வாளிகளெரிவாயுமிழ்வனவீரேழெதிரவைபார்சோரப்
பொய்தான்மணியெழுவொன்றாலன்றதுபொடியாயுதிர்வுறவடிவாளி
வெய்தாயினபலவிட்டான்வீரனும்வேறோர்படையிலன்மாறாமெங்
கைதானேபொருபடையாகத்தொடர்காலார்தேரதன்மேலானான்.

இ-ள். எய்தான்வாளிகள் - அம்புகளைவிட்டான், எரி - அவ்வம்புகள் நெருப்பை, வாய்உமிழ்வன - தம்வாய்வழியேசிந்துமவைகள், ஈரேழ் - அவைஒன்றல்ல பதினான்குமாகிய, அவை - அவ்வம்புகள், எதிர் - அட்சனுக்குமுன்னே, பார்சோர - பூமியிலேஉதிர, மணியெழுவொன்றால் - ஒருகறுத்தஎழுத்தடியினாலே, பொய்தான் - தடுத்தார், அன்று - அப்போது, அது - அந்தஎழுத்தடி, பொடியாய் - தூள்தூளாய், உதிர்வுற - சிந்துதலாக, வடிவாளி - கூரியஅம்புகள், வெய்தாயின - வெப்பமுள்ளவைகளாக, பலவிட்டான் - அனேகம்விட்டறுத்தான், வீரனும் - அனுமாரானவர், வேறோர் - வேறேஒரு, படையிலன் - ஆயுதங்களுமில்லாதவராய், மாறா - ஓயாத, வெங்கைதானே - வெவ்வியகைகளே, பொருபடையாக - பொருதும் ஆயுதங்களாகக்கொண்டு, தொடர் - தம்மைத்தொடர்கிற, கால்ஆர் - உருளைகள்பொருந்தின, தேரதன்மேல் - அவன்தேர்மேலே, ஆனான் - ஏறினார்—எ-று. (௩௩)

தேரிற்சென்றெதிர்கோல்கொள்வானுயிர்தின்றானப்பொருசெறிதிண்டேர்
பாரிற்சென்றதுபரிபட்டனவவன்வரிவிற்சிந்தியபகழிக்கோல்
மார்பிற்சென்றனசிலபொற்றோளிடைமறைவுற்றனசில்மறவோனும்
நேரிற்சென்றவன்வயிரக்குனிசிலைபற்றிக்கொண்டெதிருறநின்றான்.

இ-ள். தேரிற்சென்று - தேர்மேலேறி, எதிர் - முன்னே, கோல்கொள்வான் - சாட்டிக்கோலையுடையசாரதிதன், உயிர்தின்றான் - உயிரைப்போக்கினார், அப்பொரு - அந்தப்பொருதுதலான, செறிதிண்தேர் - வலிமைமிகுந்ததேரானது, பாரிற்சென்றது - இவர்கனத்தாலே பூமியிலேஅழுந்தியது அதுடனே, பரிபட்டன-குதிரைகளுமிறந்தன, அவன் - அந்தஅட்சன், வரிவில் - வரிந்தவில்லாலே, சிந்திய-பெய்த, பகழிக்கோல் - அம்புகள்அனுமார், சிலமார்பிற்சென்றன - சிலமார்பிலேபதிந்தன, சிலபொற்றோளிடை - சில அழகியதோள்களிலே, மறைவுற்றன - அழுந்தலாயின, மறவோனும் - அப்போது மகாவீரனான அனுமார், நேரிற்சென்று - அவன்முன்னேபோய், அவன் - அவனுடைய, வயிரக்குனிசிலை - பலமாகவளைந்தவில்லை, பற்றிக்கொண்டு - பிடித்துக்கொண்டு, எதிருறநின்றான்-அவனுக்கெதிராகநின்றார்-எ-று.

ஒருகையாலவன்வயிரத்திண்சிலையுற்றுப்பற்றலுமுரவோனும்
இருகையாலிவன்வலியாமுன்னமதிற்றோடியதிவர்பொற்றோளான்
சுரிகையாலவனுருவிக்குத்தலுமதனைச்சொற்கொடுவருதூதன்
பொருகையாலிடைபிதிர்வித்தான்முதிர்பொறியோடும்படியறியாவே.

இ-ள். உரவோனும் - அதிக பலாட்டியரான அனுமார், ஒருகையால் - தமதொருகையினாலே, அவன் - அந்த, அட்சனுடைய, வயிரத்திண்சிலை - வயிரம்போற்கெட்டியான வில்லை, உற்றுப்பற்றலும் - நெருங்கிப்போய்பிடித்த அளவில், இவன்- இந்த அக்ஷன், இருகையால் - தன் இரண்டு கைகளாலும், வலியாமுன்னம் - கொடாமலிழுக்குமுன்னே, அது - அந்தவில், இற்றோடியது - முறிந்துபோயிற்று, இவர் - உயர்வான, பொற்றோளான் - அழகியதோள்களுள்ள அனுமாரை, சுரிகையால்- சிறுபாங்கினாலே, உருவி - உறையினின்றெடுத்து சுரிகையால், அவன் - அந்த அட்சன், குத்தலும் - குத்தினபோது, அதனை - அந்தச்சுரிகையை, சொற்கொடு - ராமன்சொல்லைக்கொண்டு, வருதூதன் - வந்ததூதனானவர், பொருகையால் - சண்டைபண்ணுகிறகையினாலே, இடை - குத்தின இடத்தினின்றும், பிதிர்வித்தான் - பிதுங்கப்பண்ணினார், முதிர் - முதிர்ந்த, பொறியோடும்படி - பொறிகள்தெறிக்கும்படி, பறியா - பிடுங்கிப்பிதிர்வித்தான்—எ-று. (௫௫)

வாளாலேபொரலுற்றானிற்றதுமண்சேராமுனம்வயிரத்திண்
தோளாலேபொரமுடுகிப்புக்கிடைதழுவிக்கோடலுமுடல்முற்றும்
நீளாரயிலெனமயிர்தைத்திடமணிநெடுவாலவனுடனிமிர்வுற்று
மீளாவகைபுடைசுற்றிக்கொண்டதுபற்றிக்கொண்டனன்மேலானான்.

இ-ள். வாளாலே - உடைவாளையுருவிக்கொண்டு, பொரலுற்றான் - சண்டைசெய்யத்தொடங்கினான், இற்று அது - அவ்வாள்முறிந்து, மண்சேராமுனம் - பூமியிலேவிழுமுன்னே, வயிரத்திண் - வயிரம்போற்பலமுள்ள, தோளாலே - தோள்களாலே, பொர - சண்டைசெய்ய, இடை - அப்போது, முடுகிப்புக்கு - விரைந்துபோய், தழுவிக்கோடலும் - அவனைக்கட்டிப்பிடிக்குமளவில், உடல்முற்றும் - இவருடம்பெல்லாம், நீளார் - நெடியனவாயிருக்கிற, அயிலென - வேல்போல், மயிர்தைத்திட- உரோமங்கள்குத்த, மணிநெடுவால் - மணிகட்டின நீண்டவாலானது, அவனுடல்- அவன் தன்னுடம்பை, நிமிர்வுற்று - நிமிர்த்துக்கொண்டு, மீளாவகை - போகாதபடி, புடை - அவனுடம்பெல்லாம், சுற்றிக்கொண்டது - சூழ்ந்துகொண்டதாயிற்று, மேலானான் - அவன்மேற்கொண்டு, பற்றிக்கொண்டனன் -பிடித்துக்கொண்டார்-எ-று.

பற்றிக்கொண்டவன்வடிவாளெனவொளிர்பல்லிற்றுகநிமிர்படர்கையால்
எற்றிக்கொண்டலினிடைநின்றுமிழ்சுடரினமின்னினம்விழுவனவென்ன
முற்றிக்குண்டலமுதலாமணியுகமுழைநாலாவிவர்குடர்நாலக்
கொற்றத்திண்சுவல்வயிரக்கைகொடுகுத்திப்புடையொருகுதிகொண்டான்.

இ-ள். பற்றிக்கொண்டு - அப்படிப்பிடித்துக்கொண்டு, அவன் - அந்த அட்சனுடைய, வடிவாளென - கூறியவாள்போல், ஒளிர் - விளங்குகின்ற, பல் இற்றுஉக- பற்களுடைந்து உதிர, நிமிர் - நிமிர்ச்சியாய், படர் - மேலேசெல்லுகிற, கையால்- கையாலே, எற்றி - ஒரு அடி அடித்து, கொண்டலினிடை - மேகத்திலே, நின்று உமிழ் - இருந்துஉதிருகிற, சுடரின - ஒளிவிளங்குதலான, மின்னினம் - மின்னல்கள், விழுவனவென்ன - சிந்துவனபோல், முற்றி - உடைந்து, குண்டலமுதல் ஆம்- குண்டலத்திலேயுள்ள, மணி உக - ரத்நங்களுதிர, முழைநாலா - அக்குண்டலங்கள் புகுந்திருந்த தொண்டிகளுந் தொங்குதலாகி, இவர்குடர்நால - உயர எறினகுடலுந் தொங்க, கொற்றம் - வெற்றியுள்ள; திண்சுவல் - அவனது வலியபிடரிலே, வயிரக்கைகொடு - வயிரம்போன்றகையாலே, குத்தி - ஒருகுத்துக்குத்தி, புடை - அப்பிடரினிடத்தே, ஒருகுதிகொண்டான் - ஒருகுதிகுதித்தார்—எ-று. முதல்-ஏழனுருபு.

நீத்தாயோடினவுதிரப்பெருநதிநீராகச்சிலைபாராகப்
போய்த்தாழ்செறிதசையரிசிந்தினபடிபொங்கப்பொருமுயிர்போகாமுன்
மீத்தாநிமிர்சுடர்வயிரக்கைகொடுபிடியாவிண்ணொடுமண்காணத்
தேய்த்தானூழியினுலகேழ்தேயினுமொருதன்புகழிறைதேயாதான்.

இ-ள். நீத்து ஆய் – நீந்துதலாகி, உதிரப்பெரு நதி-ரத்தப்பிரவாகம், ஓடின-ஓடலாயின, நீராக – அந்தரத்தமேஜலமாகவும், சிலை – அம்மிக்கல், பாராக – பூமியாகவும், போய்த்தாழ் – நீண்டுதெங்கின அவனது, செறிதசை – நெருங்கின இறைச்சியே, அரிசிந்தினபடி – ஊறலரிசிகளைவைத்தபடியாக, பொங்க – மேன்மேற்குவியவும், பொரும் உயிர் – சண்டைபண்ணுகிற அவனுடைய உயிர், போகாமுன் – போமுன்னே உயிரோடவனைக் குழவிபோலாக, மீத்தா – மேலேதாவுகிற, நிமிர் சுடர்-அதிககாந்தியுள்ள, வயிரக்கைகொடு – வயிரம்போன்றகைகளாலே, பிடியா – இருபுறமும்பிடித்து, விண்ணொடு – விண்ணுலகத்தாருடனே, மண் – மண்ணுலகத்தாரும், காண – பார்க்க, தேய்த்தான் – அரைத்தார், ஊழியின் – யுகமுடிவிலே, உலகேழ்-ஏழுலகங்களும், தேயினும் – தேய்ந்தாலும், ஒருதன்புகழ் – ஒப்பற்ற தமது புகழ், இறை – கொஞ்சமேனும், தேயாதான் – தேய்வுபடாத அனுமார்—எ-று. (௩அ)

புண்டாழ்குருதியின்வெள்ளத்துயிர்கொடுபுக்கார்சிலர்சிலர்பொதிபேயின்
பண்டாரத்திடையிட்டார்தம்முடல்பட்டார்சிலர்சிலர்பயமுந்தத்
திண்டாடித்திசையறியாமறுகினர்செற்றார்சிலர்சிலர்செலவற்றார்
கண்டார்கண்டதோர்திசையேவிசைகொடுகால்விட்டார்படைகைவிட்டார்.

இ-ள். புண்தாழ் – காயங்களிலே தங்கிவருகிற, குருதியின்வெள்ளத்து – ரத்தப்பிரவாகத்திலே, உயிர்கொடு – உயிர்போகாமல், புக்கார் சிலர் – சிலர் விழுந்தொளிந்தார்கள், பொதி – நெருங்கின, பேயின் – பசாசுகளினது, பண்டாரத்திடை – உணவாகிய பிணமலைகளிலே, தம்முடல் – தங்களுடலைப் பிணமென்று நினைக்க, இட்டார்சிலர் – சிலர்விழக்கிடத்தினார்கள், பயமுந்த – பயம் அதிகமாகி, பட்டார் சிலர்-சிலரிறந்தார்கள், செற்றார்சிலர் – பகைவரான சிலர், திண்டாடி – தடுமாறுதலாகி, திசையறியா – திக்குத்தெரியாமல், மறுகினர் – மயங்கினார்கள், சிலர்செலவுஅற்றார்-சிலர்போகமாட்டாமல்நின்றார்கள், கண்டார் – இவற்றைக்கண்டசிலர், கண்டது-பார்த்ததான, ஓர்திசையே-ஒரு அவ்விடத்திலேதானே, விசைகொடு – வேகங்கொண்டு, படை – ஆயுதங்களை, கைவிட்டார் – கையினின்றும் விடுதல்செய்தாராய், கால்விட்டார் – ஓடலானார்கள்—எ-று. (௩௯)

மீனாய்வேலையையுற்றார்சிலர்சிலர்பசுவாய்வழிதொறுமேய்வுற்றார்
ஊனார்பறவையினவடிவுற்றார்சிலர்சிலர்நான்மறையவருருவானார்
மானார்கண்ணிளமடவாராயினர்முன்னேதங்குழல்வகிர்வுற்றார்
ஆனார்சிலர்சிலரையாநின்சரணென்றார்நின்றவரரியென்றார்.

இ-ள். மீனாய் – மீனுருவாகி, வேலையையுற்றார்சிலர் – சிலர்கடலிலேபோய்விழுந்தார்கள், சிலர்பசுவாய் – சிலர்பசுவுருக்கொண்டு, வழிதொறும் – வழியெல்லாம், மேய்வுற்றார் – மேய்வதானார்கள், ஊனார் – அங்கே இறைச்சி தின்னவந்த, பறவையின்வடிவுற்றார்சிலர் – பட்சிவடிவானார்கள்சிலர், சிலர்நான் மறையவர் – சிலர்பிராமணருடைய, உருவானார் – உருவங்கொண்டார்கள், மானார் – சிலர் மான்போன்ற, கண் இளம் – கண்களுள்ளஇளமையான, மடவாராயினர் – பெண்ணுருக்கொண்டார்களா

ய், முன்னே – அனுமார்முன்னே, தங்குழல் – தமதுகூந்தலை, வகிர்வுற்றார் – நடுவே வகிர்ந்துகொண்டு நின்றார்கள், ஆனார்சிலர் – ஆயினார்கள்சிலர், சிலர்ஐயா – சிலர்சுவாமி, நின்சரண் – உமதடைக்கலம், என்றார் – என்றார்கள், நின்றவர் – இப்படியாக நின்றவரிற்சிலர், அரியென்றார் – அரியென்றுவிஷ்ணுநாமத்தைச் சொன்னார்கள் எ-று. (௬௦)

தந்தாரமுமுறுகிளையுந்தமையெதிர்தழுவுந்தொறு நுமதமரல்லேம்
வந்தேம்வானவரென்றேகினர்சிலர்சிலர்மானுயரெனவாய்விட்டார்
மந்தாரங்கிளர்பொழில்வாய்வண்டுகளானார்சிலர்சிலர்மருள்கொண்டார்
இந்தாரெயிறுகளிறுவித்தார்சிலரெரிபோற்குஞ்சியையிருள்வித்தார்.

இ-ள். தந்தாரமும் – தம்மனைவியரும், உறுகிளையும் – மிக்கவுறவினரும், எதிர் – முன்வந்து, தழுவுந்தொறும் – கிட்டுமளவில், நும் – உங்களுடைய, தமர் – உறவினர். அல்லேம் – நாங்களல்லோம், வந்தேம் – இங்குவந்தயாம், வானவரென்று-தேவர்களென்று, ஏகினர்சிலர் – போனார்கள்சிலர், சிலர்மானுயரென – சிலர்மனிதர்போல், வாய்விட்டார் – பேசினார்கள், மந்தாரம் – மந்தாரவிருக்ஷமுதலியவைகள், கிளர் – வளர்வனவாகிய, பொழில்வாய் – சோலைகளிலே, வண்டுகளானார்சிலர் – சிலர் வண்டுருவானார்கள், சிலர்மருள்கொண்டார் – சிலர் மயங்கினார்கள், இந்துஆர் - பாதிச்சந்திரன்போன்ற, எயிறுகள் – பற்களை, இறுவித்தார் சிலர் – ஒடித்துக்கொண்டார்கள்சிலர், எரிபோல் – நெருப்புநிறமான, குஞ்சியை – தலைமயிரை, இருள்வித்தார்-கருமையாகச்செய்துகொண்டார்கள்சிலர்—எ-று. (௬௧)

வேறு.

குண்டலக்குழைமுகக்குங்குமக்கொங்கையார்
வண்டலைத்தெழுகுழற்கற்றைகால்வருடவாய்
விண்டலத்தகவிரைக்குமுதவாய்விரிதலால்
அண்டமுற்றுளதவ்வூரழுதபேரமலையே.

இ-ள். குண்டலம் – பொன்னோலையும், குழை – அதன்மேல் வளைவுமுள்ள, முகம் – முகங்களையுடைய, குங்குமம் – செஞ்சாந்துபூசின, கொங்கையார் – தனங்களுள்ளபெண்கள், வண்டு – வண்டுகள், அலைந்து – அலைதலாகி, எழு – கிளம்புகிற, குழற்கற்றை – கூந்தலின்றிரள்வு, கால்வருட – காலிலேவிழ, வாய்விண்டு-வாயைத்திறந்து, அலத்தகம் – செம்பஞ்சினிறமும், விரை – பரிமளமுமுள்ளதான, குமுதம்-செவ்வல்லிமலர்போல், வாய்விரிதலால் – வாய்திறந்தழுதலாலே, அவ்வூர் – அப்படி அந்த இலங்கையிலுள்ளவர்கள், அழுத – அழுது பிரலாபித்த, பேரமலை-பெருங்குரலோசை, அண்டமுற்றுளது – தேவருலகம்போய் முட்டியது, அவ்வூரிலுள்ளகுங்குமக்கொங்கையா ரழுதலாலாகியபேரமலை அண்டமுற்றுளதென்க—எ-று. குழற்கற்றை கால்வருடலாவது தலைமயிரவிழ்ந்து காலளவுந்தொங்க யுத்தகளத்துக்குவந்து அவர்மேல் விழுந்தழுகிறார்களெனக் கொள்க, அவ்வூரிலே பெண்களழுத பேரமலையெனவுமாம், அலைத்து எனவலித்தல் விகாரம். (௬௨)

கதிரெழுந்தனையசெந்திருமுகக்கணவர்மா
டெதிரெழுந்தடிவிழுந்தழுதுசோரிளநலார்
அதிரலங்கோதைசேரோதியோடன்றவ்வூர்
உதிரமுந்தெரிகிலாதிடைபரந்தொழுகியே.

இ-ள். கதிர் - சூரியன், எழுந்தனைய — உதயமானாற்போலிருக்கிற, செம்திரு — ரத்தம்பெருகிச்சிவந்த அழகுள்ள, முகம் — முகங்களையுடைய, கணவர்மாடு - நாயகரிடத்திலே, எதிரெழுந்து — முன்னேயென்று, அடிவிழுந்து — அவர்கள்காலின்மேலேவிழுந்து, அழுதுசோர் - அழுதுசோர்கின்ற, இளநலார்-இலம்பெண்களுடைய, அதிநலம் - மிகுந்தஅழகுள்ள, கோதைசேர் — மாலைமுடித்த, ஓதியோடு - கூந்தலுடனே, அன்று - அப்போதுசிந்தன, அவூர் - அவ்விடத்துள்ள, உதிரமும் — ரத்தமும், இடை — அவ்விடத்திலே, பரந்துஒழுகி — பரவிநீளுதலாலும், தெரிகிலாது-சிவந்தநிறமுடைமையாலும் வேறுபாடுதோன்றவில்லை—எ-று. (௪௩)

தாவில்வெஞ்செருநிலத்திடையுலந்தவர்தமேல்
ஓவியம்புரைநலார்விழுதொறுஞ்சிலருயிர்த்
தேவுகண்களுமிமைத்திலர்களாமிதுவெலாம்
ஆவியொன்றுடலிரண்டாயதாலேகொலாம்.

இ-ள். தாஇல் - கெடுதலில்லாத, வெம் — வெப்பமுள்ள, செருநிலத்திடை-யுத்தபூமியிலே, உலந்தவர்தமேல் — இறந்தவர்கள்மேலே, ஓவியம் — சித்திரத்தை, புரை - ஒப்பான, நலார் - பெண்கள், விழுதொறும் - விழும்போது, சிலர் - சிலபுருஷர்கள், உயிர்த்து - உயிருளராகி, ஏவு - அப்பெண்கள் மேலேவுவனவான, கண்களும் — நேத்திரங்களும், இமைத்திலர்கள் — சிமிட்டாமற் பின்னுமுயிர்போயினார்கள், ஆம் — ஆகிய, இதுவெலாம் - இப்படியாகிற இத்தன்மைகள் முழுதும், ஆவியொன்று - உயிரொன்று, உடலிரண்டு — தேகமிரண்டு. ஆயதாலேகொல் - ஆனபடியினாலேயோ—எ-று. தாஇல்பூமி - கெட்டியானதறை, ஏவுதல் - பார்த்தல். (௪௪)

ஓடினாருயிர்களுடுடல்கள்போலுதவியால்
வீடினார்வீடினார்மிடையுடற்குவைகள்வாய்
நாடினார்மடநலார்நவையிலாநண்பரைக்
கூடினாரூடினாரும்பர்வாழ்கொம்பனார்.

இ-ள். உயிர்கள்நாடு - உயிரைத்தேடுகிற, உடல்கள்போல் — உடம்பைப்போல், வீடினார் - இறந்தவர்களுடைய, மிடை - நெருங்கின, உடற்குவைகள்வாய்-பிணக்குப்பல்களினிடத்தே, ஓடினார் - அரக்கிகளோடிவந்து, உதவியால் - அப்புருஷர்கள் பேருதவியையெண்ணி, வீடினார் - தாமுங்கூட இறந்தார்கள், மடநலார்-அப்படியிறந்த இளம்பெண்கள், நவையிலா-யாதொருதோஷமுமில்லாத, நண்பரை-நாயகருயிரை, நாடினார் — தேடினவர்களாய், கூடினார் - கண்டுகூடினார்கள், உம்பர்_வீரசுவர்க்கத்திலே, வாழ் - வந்தவருடனேவாழ்கிற, கொம்பு-பூங்கொம்பை, அனார்-ஒத்த அரம்பையர், ஊடினார் - அதுகண்டு பிணங்கினார்கள்—எ-று. இந்தபுருஷருயிருடனே பெண்களுயிருங்கூடிற்றென்பது கருத்து. (௪௫)

தீட்டுவாளனையகட்டெரிவையோர்திருவனாள்
ஆட்டினின்றயர்வதோராறுதலைக்குறையினைக்
கூட்டிநீயோருயிர்த்துணைவனெங்கோவினைக்
காட்டுவாயாதியென்றழுதுகைகூப்பினாள்.

இ-ள். தீட்டு - தீட்டின, வாள்அனைய - வாளையொத்த, கண் - கண்களையுடைய, தெரிவை - பெண்ணானவள், ஓர் - ஒரு, திருஅனாள் - லட்சுமிபோலும் அழகுள்ளவள், ஆடிநின்று - நிலைகொண்டுகூத்தாடி, அயர்வது - சோர்ந்துவிழுகிற,

ஓர் - ஒரு, அறுதலை - தலையற்றதான, குறையினை - முண்டத்தை - கவந்தத்துடனே, கூட்டி - அதன் றலையைச்சேர்த்துவைத்து, நீ - ஒருயிர்த்துணைவன் - நீயோ என்னுயகனுக்கு ஒருபிராணசகாயனாகையாலே, எங்கோவினை-என துநாயகனை, காட்டுவாயாதி - காட்டக்கடவை, என்று - அழுது, கைகூப்பினாள் - கைகுவித்தாள் எ-று. தன்தோழிமாரைக்கூட்டி எங்கோவென்றாளென்க. ஆட்டினன ஓரொற்று விரிதல் செய்யுள்விகாரம். (௪௬)

ஏந்தினாடலையையோரெழுதருங்கொம்பனாள்
காந்தனின்றாடுவானுயர்கவந்தத்தினை
வேந்தனீயலசினாய்விடுதியானடமெனாப்
பூந்தளிர்க்கைகளான்மெய்யுறப்புல்லினாள்.

இ-ள். எழுதரும் - எழுதப்படாத அழகுள்ள, ஓர்கொம்புஅனாள் - கொம்பு போன்றவொருத்தி, தலையையேந்தினாள் - அற்றதலையைக்கையிலேகொண்டு, நின்றாடுவான் - நின்றுஆடுகிறவனாகிய, காந்தன் - நாயகனுடைய, உயர் - நீண்டுள்ள, கவந்தத்தினை - தலைக்குறையைப்பார்த்து, வேந்தன்-அரசனே, நீ அலசினாய் - ஆடி இளைத்தாய், நடம்விடுதியெனா - இனி ஆடுதலைநிறுத்தென்று, பூந்தளிர் - அழகியதளிர் போன்ற, கைகளால் - தன்கைகளாலே, மெய் - அவனுடலிலே, உற - அவன் தலையொட்ட, புல்லினாள் - சேர்த்தாள் ஒருகொம்பனாள்—எ-று. (௪௭)

நாடினார்நாடியேநனைவருங்கொம்பனார்
வாடினார்கணவர்தம்மார்புறத்தழுவியே
வீடினாரவ்வயின்வெருவிவிண்ணவர்கடாம்
ஓடினாரரசன்மாடணுகிநின்றுரைசெய்வார்.

இ-ள். நாடினார் - இப்படித்தேடினார்கள், நாடி - தேடி, நனைவரும் - அரும்புகள்தோன்றுகிற, கொம்புஅனார் - கொம்பையொத்தபெண்கள், வாடினார் - இளைத்தவர்களாய், கணவர்தம் - நாயகருடைய, மார்பு - மார்பை, உறத்தழுவி - இறுகப்பிடித்துக்கொண்டு, வீடினார் - சிலரிறந்தேபோனார்கள், அவ்வயின் - அப்போது, விண்ணவர்கள் - சோலைகாக்குந்தேவர்கள், வெருவி - பயந்து, ஓடினார் - ஓடிப்போய், அரசன் - இராவணனுடைய, மாடணுகி - சமீபத்திலேநெருங்கி, நின்றுரைசெய்வார் - நின்றுசொல்லுகிறார்கள்—எ-று. ஏஎதாம் அசைகள் அப்போது. (௪௮)

வேறு.

கயன்மகிழ்கண்ணிணைகலுழிகான்றுகப்
புயன்மகிழ்புரிகுழல்பொடியளாவுற
அயன்மகன்மகன்மகனடியின்வீழ்ந்தனள்
மயன்மகள்வயிறலைத்தலறிமாழ்கினாள்.

இ-ள். கயல் - கண்டோர்கயலென்று, மகிள் - சந்தோஷிப்பதான, கண்ணினை - இரண்டுகண்களிலும், கலுழி - நீர்பெருகுதலாய், கான்றுக - மிகுந்துசிந்த, புயல் - மேகமென்று, மகிழ் - சந்தோஷிப்பதான, புரிகுழல் - கொண்டையிட்டகூந்தல், பொடி - அவிழ்ந்துபூதூளியிலே, அளாவுற - படிந்துபுரள, அயன் - பிரமனுடைய, மகன் - மகனான புலத்தியனுடைய, மகன் - மகனான விச்சிரவாவினுடைய, மகன் - மகனான இராவணனுடைய, அடியின் - காலிலே, வீழ்ந்தனள் - விழுந்து,

மயன்மகள் - மயன்புத்திரியானமண்டோதரி, வயிறலைத்து - தன்வயிற்றைப்பிசைந்துகொண்டு, அலறி - கூசலிட்டு, மாழ்கினள் - வருந்தினள்—எ-று. (௭௯)

தாவருந்திருநகர்த்தையலார்முதல்
ஏவருமிடைவிழுந்திரங்கியேங்கினர்
காவலன்கான்மிசைவிழுந்துகாவன்மாத்
தேவருமழுதனர்களிக்குஞ்சிந்தையார்.

இ-ள். தா அரும் - அழிதலில்லாத, திருநகர் - அழகுள்ள அவ்வூரினுண்டான, தையலார்முதல் - பெண்கள்முதலான, ஏவரும் - எல்லாரும், இடைவிழுந்து- அவள் காலிலே விழுந்து, இரங்கி ஏங்கினர் - அழுதுபிரலாபித்தார்கள், காவலன்கால்மிசை - அப்போதிராவணன்காலிலே, விழுந்து - காவல்மா வனங்காக்கும்பெருமையுள்ள, தேவரும் - தேவர்களும், அழுதனர் - அழுதார்கள், களிக்கும் - சந்தோஷிப்பதான, சிந்தையார் - மனமுடையவராய் இராவணனுக்காக அழுதனர், இராவணனும் - இனி அழிவது கருதிக் களித்தனரென்பதுகருத்து—எ-று. (௮௦)

அட்சகுமாரன்வதைப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - ௧௧ - க்கு திருவிருத்தம் - ௯௮௩.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

பன்னிரண்டாவது,

பாசப்படலம்.

அவ்வழியவ்வுரைகேட்டவாண்டகை
வெவ்விழியெரியுகவெகுளிவீங்கினன்
எவ்வழியுலகமுங்குலையவிந்திரத்
தெவ்வழிதரவுயர்விசயச்சீர்த்தியான்.

இ-ள். அவ்வழி - அப்போது, அவ்வுரை - அந்தத்தம்பி இறந்தசொல்லை, கேட்ட ஆண்தகை - ஆண்மையிற்சிறந்த மேகநாதன், வெவ்விழி-வெவ்வியகண்களிலே, எரி உக - நெருப்புச்சிந்த, வெகுளி - கோபம், வீங்கினன் - அதிகமானான், எவ்வழி- எந்த இடங்களிலுமுள்ள, உலகமும் - லோகங்களும், குலைய - நடுங்க, இந்திரத்தெவ் - இந்திரனுகியபகை, அழிதர - கலங்க, உயர் - உயர்ந்த, விசயம் - வெற்றிகொண்ட, சீர்த்தியான் - சிறப்பின்மிக்கவன்—எ-று. (௧)

அரஞ்சுடர்வேற்றனதனுசனிற்றசொல்
உரஞ்சுடவெரியுயிர்த்தொருவனேங்கினன்
புரஞ்சுடவரிசிலைப்பொருப்புவாங்கிய
பரஞ்சுடரொருவனைப்பொருவும்பான்மையான்.

இ-ள். அரம் - அரத்தாலராவி, சுடர் - விளங்குகின்ற, வேல் - வேலைக்கொண்ட, தனதனுசன - தனதுதம்பி, இற்றசொல் - இறந்தானெனும்வார்த்தை, உர

ஞ்சுட - தன்மனத்தைக் கொதிப்புச்செய்ய, எரியுயிர்த்து – நெருப்பைக் கக்கிக்கொண்டு, ஒருவன் - தானொருவனாகவே, ஓங்கினான் - எழுந்தான், புரஞ்சுட – திரிபுரத்தையெரிக்கிறதற்கு, வரிசிலை - வரிந்தவில்லாக, பொருப்பு - மேருமலையை, வாங்கிய – வளைத்த, பரஞ்சுடர் – பரஞ்சோதியான, ஒருவனை – ஒப்பற்றசிவனை, பொருவும் – ஒப்பான, பான்மையான் – ஆக்ஞையையுடையவன் –எ-று. (௨)

ஏறினன்விசும்பினுக்கெல்லைகாட்டுவ
ஆறிருநூறுபேய்பூண்டவாழித்தேர்
கூறினகூறினசொற்கள்கோத்ததால்
கீறினநெடுந்திசைபிளந்ததண்டமே.

இ-ள். விசும்பினுக்கு – ஆகாயத்தினுயர அளவை, எல்லை – இவ்வளவேயென்று, காட்டுவ – காட்டத்தக்க, ஆறிருநூறு – ௧௨௦௦ - ஆயிரத்திருநூறு, பேய்பூண்ட – பசாசுகட்டின, ஆழித்தேர் - உருளைகளுள்ள தேரின்மேல், ஏறினன்-ஏறினான், கூறினகூறின - அவ்வவருஞ்சொன்ன, சொற்கள்-இந்திரசித்துத்தேரேறினானென்னும்வார்த்தைகள், கோத்ததால் - ஒருசேரக்கூடிமோதுகிறதினாலே, நெடுந்திசை-நீண்டதிக்குகள், கீறின – கிழிந்தன, அண்டம்பிளந்தது-ஆகாயமுங்கிழிந்தது-எ-று.

வேறு.

ஆர்த்தனகழலுந்தாரும்பேரியுமசனியஞ்ச
வேர்த்துயிர்குலையமேனிவெதும்பினனமரர்வேந்தன்
சீர்த்ததுபோருமென்னாத்தேவர்க்குந்தேவராய
மூர்த்திகடாமுந்தத்தம்யோகத்தின்முயற்சிவிட்டார்.

இ-ள். கழலுந்தாரும் – வீரக்கழல்களுங் கிங்கிணிமாலைகளும், பேரியும் - முரசங்களும், அசனி – இடியும், அஞ்ச – அஞ்சுவதாக, ஆர்த்தன-எங்குமுழங்கின, வேர்த்து - உடம்பெல்லாம்வேர்த்து, உயிர்குலைய - உயிரும்நடுங்க, மேனி - உடம்பு, வெதும்பினன் – கொதிப்புக் கொண்டான், அமரர்வேந்தன் – தேவராசன், போரும்- இனிச்சண்டையும், சீர்த்தது என்னா – கனமாயிற்றென்று, தேவர்க்கும் - தேவர்களுக்கும், தேவராய் – தேவர்களான, மூர்த்திகள் – மும்மூர்த்திகள், தாமும் - தாங்களும், தத்தம் – தங்கள் தங்கள், யோகத்தின் – கூட்டத்திலே, முயற்சி - முயன்றிருத்தலை, விட்டார் – விட்டிட்டார்கள்–எ-று. தார் – சேனையெனவுமாம். (௪)

தம்பியையுன்னுந்தோறுந்தாரைநீர்ததும்புங்கண்ணான்
வம்பியல்சிலையைநோக்கிவாய்மடித்துருத்துநக்கான்
கொம்பியன்மாயவாழ்க்கைக்குரங்கினாற்குரங்காவாற்றல்
எம்பியோதேய்ந்தானெந்தைபுகழன்றோதேய்ந்ததென்றான்.

இ-ள். தம்பியை – தன் தம்பியான அட்சனை, உன்னுந்தோறும் - நினைக்கநினைக்க, தாரைநீர் – தாரை தாரையாக நீரானது, ததும்பும் – துளும்புகின்ற, கண்ணான் – கண்களையுடைய அவன், வம்பு – அம்புகள் தொடுப்பதில்லாமல் வியர்த்தமாக, இயல் – இருக்கிற, சிலையைநோக்கி – வில்லைப்பார்த்து, வாய்மடித்து – இதழைமடித்துக்கடித்து, உருத்து - கோபங்கொண்டு, நக்கான் - சிரித்து, கொம்பு- மரக்கொம்புகளிலே, இயல் – சஞ்சரிப்பதாய், மாயவாழ்க்கை - நமக்குமறைந்து திரிகிற வாழ்வையுடைய, குரங்கினால் - இந்தஒருகுரங்காலே, குரங்கா – கோணாத, ஆற்றல் - சாமர்த்தியமுள்ள, எம்பியோ – எனதுதம்பியா, தேய்ந்தான் – தேய்வுபட்டா

ன் அன்று, எந்தை – எனதுதந்தையினுடைய, புகழன்றே – கீர்த்தியல்லவோ, தே
ய்ந்தது – தேய்வுபட்டது, என்றான் – என்றுகினைந்தான்—எ-று. (௫)

வேதிரண்டனவும்வில்லுமிடைந்தவும்வெற்பென்றாலும்
கூறிரண்டாக்கும்வாட்கைக்குழுவையுங்குணிக்கலாற்றேம்
சேறிரண்டருகுசெய்யுஞ்செறிமதச்சிறுகண்யானை
ஆறிரண்டஞ்சுநூற்றினிரட்டிதேர்த்தொகையுமஃதே.

இ-ள். வேல் – வேலாளிகளாக, திரண்டனவும் - கூடியவைகளையும், வில்லு-
வில்லாளிகளாக, மிடைந்தவும் – கூடியவைகளையும், வெற்பென்றாலும் – மலையேயா
னாலும், கூறுஇரண்டு – இரண்டுதுண்டாக, ஆக்கும் – வெட்டத்தக்க, வாள் – வாளா
யுதங்களை, கை – கைகளிலேகொண்ட, குழுவையும் – கூட்டங்களையும், குணிக்கல்-
அளவுசெய்தற்கு, ஆற்றேம் – எம்மாலாகா, இரண்டருகு – இருபுறத்திலும், சேறு
செய்யும் – சேறுபண்ணுகின்ற, செறிமதம் – மதச்செறிவையும், சிறுகண் – சிறுகண்
களையுமுடைய, யானை – யானையினளவு, ஆறிரண்டு – பனிரண்டுகூடின, அஞ்சுநூ
ற்றினிரட்டி – ஆயிரம், தேர்த்தொகையும் – தேரினளவும், அஃதே – அந்தப்பன்னீ
ராயிரமேயாம்—எ-று. (௬)

ஆயமாத்தானைதான்வந்தண்மியதண்மவேனைத்
தீயவாணிருதர்வேந்தர்சேர்ந்தவர்சேரத்தேரின்
ஏயெனுமளவின்வந்தானிராவணனிருந்தயாணர்
வாயிறேய்கோயில்புக்கானருவிசோர்வயிரக்கண்ணான்.

இ-ள். ஆய – அப்படிப்பட்ட, மாத்தானை – பெருஞ்சேனைகள், வந்துஅண்மி
யது – வந்துகூடிற்று, அண்ம – கூடவே, ஏனை – மற்ற அந்த, தீய – பொல்லா, வா
ள் – கத்திகளையுடைய, நிருதர்வேந்தர் – ராக்ஷதராஜர்களில், சேர்ந்தவர்சேர – கூடி
னவர்கள்கூட, தேரின் – தேருடனே, ஏயெனுமளவில் – உம்மென்னுமளவில், வந்
தான் – வந்து, இராவணனிருந்த – இராவணனிருக்கிற, யாணர் – அழகான, வாயில்
தோய் – முன்முகப்பையுடைய, கோயில் – கோயிலுக்குள்ளே, புக்கான் - போனான்,
அருவி – அருவிபோற்கண்ணீர், சோர் – ஒழுகாநின்ற, வயிரக்கண்ணான் – கோபக்
கண்களையுடைய இந்திரசித்து—எ-று. (௭)

தாளிணைவிழுந்தான்றம்பிக்கிரங்கினான்றறுகணானும்
தோளிணைபற்றியேந்தித்தழுவினனழுதுசோர்ந்தான்
வாளிணைநெடுங்கண்மாதர்வயிறலைத்தலறிமாழ்க
மீளிபோன்மொய்ம்பினானும்விலக்கினன்விளம்பலுற்றான்.

இ-ள். தாளிணை – இராவணனுடையஇரண்டுகால்மேலும், விழுந்தான்-விழு
ந்து, தம்பிக்கு – தம்பிக்காக, இரங்கினான் – அழுதான் அதுகண்டு, தறுகணானும்-
அஞ்சாதராவணன், தோளிணை – மகனிரண்டுதோள்களையும், பற்றியேந்தி – பிடித்
துத்தூக்கி, தழுவினன் – ஆலிங்கனஞ்செய்து, அழுதுசோர்ந்தான் – தானும் அழுது
பிரலாபித்தான், வாளிணை – அப்போதிரண்டுவாள்கள்போன்ற, நெடுங்கண்-நீண்ட
கண்களையுடைய, மாதர் – அட்சனதுதேவிகள், வயிறலைத்து – வயிற்றிலடித்துக்கொ
ண்டு, அலறிமாழ்க – அழுதுதுக்கிக்க, மீளிபோல் – சிங்கம்போன்ற, மொய்ம்பின
னும் – புஜபலமுள்ள இந்திரசித்து, விலக்கினன் – அவர்களைப்போகச்சொல்லி, விள
ம்பலுற்றான் – சொல்லலானான் தந்தையைப்பார்த்து—எ-று. (௮)

ஒன்றுநீயுறுதியோராயுற்றிருந்துளையகிற்றி
வன்றிறற்குரங்கினாற்றன்மரபுளியுணர்ந்துமன்னா
சென்றுநீர்பொருதிரென்றுதிறத்திறஞ்செலுத்தித்தேயக்
கொன்றனைநீயேயன்றோவரக்கர்தங்குழுவையென்றான்.

இ-ள். ஒன்றுநீ - ஐயாநீர் ஒருவகையாலும், உறுதி - பலாபலங்களை ஓராய்-எண்ணாதிருக்கிறீர், உற்றிருந்து - துன்பம்வந்தபின்பு, உளையகிற்றி - வருந்துகிறீர், வன்திறல் - வலியசாமர்த்தியமுள்ள, குரங்கின் - குரங்கினுடைய, ஆற்றல்-சாமர்த்திறத்தை, மரபுளி - கிரமமாகவே, உணர்ந்தும் - தெரிந்திருந்தும், மன்னா - அரசனே, நீர்சென்று - நீங்கள்போய், பொருதிரென்று - சண்டைபண்ணுங்களென்று, திறத்திறம் வரிசைவரிசையாக, செலுத்தி - போகச்செய்து, தேய - பின்புஅட்சனுந்தேயும்படி, கொன்றனைநீயே - நீரேகொல்லும்படிசெய்தீர், அன்றோ - அல்லவோ, அரக்கர்தங்குழுவை ராட்சதர்கூட்டங்களை, என்றான் - என்றுசொன்னான்—எ-று.

கிங்கரர்சம்புமாலிகேடிலாவைவரென்றிப்
பைங்கழலரக்கரோடுமுடன்சென்றபகுதிச்சேனை
இங்கொருவருமீண்டார்தாமில்லையேற்குரங்கதெந்தாய்
சங்கரனயன்மாலென்பார்தாமெனுந்தகையதாமே.

இ-ள். கிங்கரர் - ஊழியக்காரர்களும், சம்புமாலி - சம்புமாலியம், கேடிலா-அழிவுபடாத, ஐவர் - பஞ்சசேனாபதிகளும், என்று - என்றுசொல்கிற, இ - இவ்விதமான, பைங்கழல் - பசியபொற்கழல்கள்கட்டின, அரக்கரோடும் - ராட்சதர்களுடனே, உடன்சென்ற - கூடப்போன, பகுதிச்சேனை - பிராதானியமுள்ளசேனைகளில், இங்கு - இங்கே, ஒருவரும் - யாரெனுமொருவரும், மீண்டார்தாம் - திரும்பினவாகள், இல்லையேல் - இல்லையேயானால், குரங்குஅது - அந்தக்குரங்கு, எந்தாய் - என்ஐயனே, சங்கரன் - சிவன், அயன் - பிரமன், மால் என்பார் - விஷ்ணுஆகிய, தாம்எனும் - இம்மூவரிலொருவனாமென்னும், தகையது - பெருமையுள்ளது, ஆமே-ஆமல்லவோ—எ-று. (௧௦)

திக்கயவலியுமேனாடிரிபுரந்தீயச்செற்ற
முக்கணன்கைலையோடுமுலகொருமூன்றும்வென்றாய்
அக்கணைக்கொன்றுநின்றகுரங்கினையாற்றல்காண்டி
புக்கினிவென்றுமென்றாற்புலம்பன்றிப்புலமைத்தாமோ.

இ-ள். திக்கயவலியும் - திக்கியானைகளின்பலமும், மேனாள் - முன்னாளிலே, திரிபுரம் - முப்புரமும், தீய - வேவும்படி, செற்ற - எரித்த, முக்கணன் - சிவனுடைய, கைலையோடும் - வெள்ளிமலையுடனே, உலகொருமூன்றும் - திரிலோகமும், வென்றாய் - செயித்தீர், அக்கணை - இப்போது அட்சனை, கொன்றுநின்ற, கொன்றிருக்கிற, குரங்கினது - குரங்கினுடைய, ஆற்றல் - பலப்பரிக்ஷையை, காண்டி-பார்க்கிறீர், புக்கு இனி - இனிப்போய், வென்றும் - வென்றோமே, என்றால் - ஆனா புலம்பு அன்றி - நாம்வியசனப்படுகிறதேயல்லாமல், புலமைத்து - நாம் புத்தியுள்ள தன்மையோம், ஆமோ - ஆவோமோ—எ-று. (௧௧)

ஆயினுமையநொய்தினாண்டொழிற்குரங்கையானே
ஏயெனுமளவிற்பற்றித்தருகுவெனிடரென்றென்றும்

நீயினியுழக்கற்பாலையல்லைநீடிருத்தியென்னாப்
போயினனமரர்கோவைப்புகழொடுகொண்டுபோந்தான்.

இ-ள். ஆயினும் - ஆனாலும், ஐய - ஐயனே, நொய்தின் - விரைவிலே, ஆண்தொழில் - ஆண்மைத்தொழில்செய்கிற, குரங்கை - இந்தக்குரங்கை, யானே - நானேபோய், ஏயெனுமளவில் - உம்மென்னுமளவிலே, பற்றித்தருகுவென் — பிடித்துக்கொண்டுவருகிறேன், இடரென்று — துன்பமென்கிற, ஒன்றும் - ஒன்றைமாத்திரம், நீஇனி — இனிமேல்நீ, உழக்கற்பாலை — வருந்தத்தக்கனை, அல்லை — அல்லனாகுக, நீடு-எக்காலமும் இடர் அல்லையாக, இருத்தியென்னா — இருவென்று சொல்லிக்கொண்டு, போயினன் - போனான். அமரர்கோவை — இந்திரனை, புகழொடு-வெற்றிகொண்டவனாகி அவன்கீர்த்தியுடனே, கொண்டு - கட்டிக்கொண்டு, போந்தான் - வந்தவனானமேகநாதன் இந்திரசித்து—எ-று. நீடு இடரென்றொன்று நீயினி உழக்கற்பாலையல்லையெனக்கூட்டுக. (௧௨)

உடைந்தவல்லிருளுேற்றுப்பலுருக்கொடக்கதிர்க்குழாங்கள்
மிடைந்தனமிலைச்சியாங்குமெய்யணிபலவுமின்னக்
குடைந்துவெம்பகைவருன்றோய்கொற்றப்போர்வாள்வில்வீச
அடைந்தகாரரக்கர்தானைபகலிடமிடமின்றென்ன.

இ-ள். உடைந்த - முன்னே தோற்றுப்போன, வல்லிருள் - வலிய இருளானது, நோற்று - சூரியனை வெல்லத் தவஞ்செய்து, பல் உருக்கொடு — பலரூபங்கொண்டுவென்று, அக்கதிர்க்குழாங்கள் - அந்தச்சூரியன தொளிக்கூட்டங்களை, மிடைந்தன — நெருக்கமுள்ளனவாக, மிலைச்சியாங்கு - சூட்டிக்கொண்டாற்போல், மெய்-இருள்போன்ற உடம்பிலே, அணி — சூரியனொளிபோன்ற ஆபரணங்கள், பலவும்-பலவகைகளும், மின்ன — பிரகாசிக்க, குடைந்து — அழுந்தி, வெம்பகைவர் - வெவ்வியபகைவருடைய, உளன் — சரீரத்திலே, தோய் — பதிவதான, கொற்றம் — வெற்றியுள்ள, போர்வாள் - வலியகத்திகள், வில்வீச - ஒளிவிட, கார்அரக்கர் - காரியராட்சதர்கள் கூடின, சேனை - சேனைகள், அகலிடம் — அந்த அகன்றயுத்தபூமியானது, இடம் இன்றென்ன - இடம்போதாதென்னும்படி, அடைந்த - வந்தன—எ-று. ()

ஆழியந்தேருமாவுமரக்கருமுருக்குஞ்செங்கட்
சூழிவெங்கோபமாவுந்துவன்றியநிருதர்சேனை
ஊழிவெங்கடலிற்சுற்றவொருதனிநடுவணின்ற
பாழிமாமேருவொத்தான்வீரத்தின்பான்மைதீர்ப்பான்.

இ-ள். ஆழி - உருளையையுடைய, அம்தேரும் - அழகியதேர்களும், மாவும்-குதிரைகளும், அரக்கரும் - ராக்ஷதர்களும், உருக்கும் - கோபிக்கத்தக்க, செங்கண்-சிவந்தகண்களையுடைய, சூழி - முகபடாமணிந்த, வெங்கோபமாவும் - வெவ்வியகோபமுள்ளயானைகளும், துவன்றிய - ஆகக்கூடின, நிருதர்சேனை - ராக்ஷதசேனைகளெல்லாம்வந்து, ஊழி - பிரளயகாலத்து, வெங் கடலில் - கொதிப்புள்ள கடல்போல், சுற்ற - சூழ, ஒருதனி - தானொன்றாகவே, நடுவண் - அக்கடலினடுவிலே, நின்ற-நிற்கிற, பாழிமா - மிகப்பெரிதான, மேரு - மேருமலையை, ஒத்தான் - ஒப்பாயினான், வீரத்தின் - தனதுவீரத்தன்மையினது, பான்மை - முறையைகடனை, தீர்ப்பான் - தீர்க்கவல்ல இந்திரசித்து—எ-று. வீரரென்றுள்ளோரை வெல்ல வல்லோனெனவுமாம் தம்பி பழிவாங்கவல்லான் என்பதுகருத்து. (௧௪)

சென்றனனென்பமன்னோதிசைகளோடுலகமெல்லாம்
வென்றவனிவனென்றாலும்வீரத்தேநின்றவீரன்
அன்றதுகண்டவாழியநுமனையமரினாற்றல்
நன்றெனவுவகைகொண்டான்யாவருநடுக்கமுற்றார்.

இ-ள். திசைகளோடு – எட்டுத்திக்குகளுடனே, உலகம்யாவும் – எல்லாவுலகங்களையும், வென்றவன் – ஜயங்கொண்டவன், இவனென்று – இவனேயென்று, ஆலும் – கொண்டாடும்படியான, வீரத்தே – வீரத்தன்மையிலே, நின்ற – நிலைபெற்றுள்ள, வீரன் – வீரனான இந்திரசித்து, சென்றனன் – இப்படியாகப்போனான், அன்று – அப்போது, அதுகண்ட – அவ்வகைசெய்த, வாழி-ஜயத்தையுடைய, அனுமனை-திருவடியைப்பார்த்து, அமரினாற்றல் – இவனது போர்வல்லமை, நன்றென – மிகவும் அருமைதானென்று, உவகைகொண்டான் – சந்தோஷப்பட்டான், யாவரும் – அதுகண்ட எல்லாரும், நடுக்கமுற்றார் – அனுமானை என்செய்வனோவென்றுபயமடைந்தார்கள்—எ-று. என்ப - மன்னோ - அசைகள். (கரு)

இலைகுலாம்பூணினானுமிரும்பிணக்குருதியீரத்
தலகில்வெம்படைகடெற்றியளவிடற்கரியவாகி
மலைகளுங்கடலும்யாறுங்கானமும்பெற்றுமற்றோர்
உலகமேயொத்ததம்மாபோர்ப்பெருங்களமென்றுன்ன.

இ-ள். இலைகுலாம் – தகட்டுவடிவாக விளங்குகிற, பூணினானும் – ஆபரணங்களையுடைய இந்திரசித்து, இரும்பிணம் – பெரிதான பிணத்திலுள்ள, குருதியீரத்து – ரத்தப்பிரவாகத்தினாலும், அலகில் – கணக்கில்லாத, வெம்படைகள் - வெவ்விய ஆயுதங்கள், தெற்றி - தெறுதலாகி தடுப்பனவாய், அளவிடற்கு - அளவுசெய்யவும், அரியவாகி - அருமையுள்ளனவாய், மலைகளும் - பிணங்களானமலைகளும், கடலும் - குருதியாகியகடலும், யாறும் - ஈரமாகியஆறும், கானமும் - வெம்படைகளாகிய காடும், பெற்று - உள்ளதாய், மற்றோருலகமே ஒத்தது - வேறேயொருஇடம்போல்வதே ஆயிற்று, போர்ப்பெருங்களமென்று - பெரிய யுத்தபூமியென்று, உன்ன-நினைத்து—எ-று. ஈரம் - கரைபுரண்டுமேல்வழிந்தோடுவது. (கசு)

வெப்படைகில்லாநெஞ்சிற்சிறியதோர்விம்மல்கொண்டான்
அப்படைவேலையன்னபெருமையராற்றலோடும்
ஒப்படைகில்லாரெல்லாமுலந்தனர்குரங்குமொன்றே
எப்படைகொண்டுவெல்வதிராமன்வந்தெதிர்க்கினென்றான்.

இ-ள். வெப்பு - அடைகில்லா கோபங்கொள்வதில்லாமல், நெஞ்சில் - மனத்திலே, சிறியதோர் - ஒருபடிகொஞ்சம், விம்மல்கொண்டான் - ஓய்வுள்ளவனானான், அப்புஅடை - ஜலமயமான, வேலையன்ன - கடலேபோன்ற, பெருமையர் - பெருமையுள்ளவீரர்கள், ஆற்றலோடும் - தமதுவல்லமைக்கு, ஒப்புஅடைகில்லார்-சமானமில்லாதவர்கள், எல்லாம்உலந்தனர் - எல்லாரும்அழிந்தார்கள், குரங்குமொன்றே- ஒருகுரங்கினாலேயானால், இராமன்வந்து - அந்தஇராமனானவன்வந்து, எதிர்க்கின்- எதிரிடும்போது, எப்படைகொண்டு - இனிஎந்தச்சேனைகளைக்கொண்டு, வெல்வது- ஜயங்கொள்ளலாவது, என்றான் - என்றெண்ணினான்—எ-று. (கஎ)

கண்ணனாருயிரேயொப்பார்கைப்படைக்கலத்திற்காப்பார்
எண்ணலாந்தகைமையில்லாரிறந்திடைக்கிடந்தார்தம்மை

மண்ணுளேநோக்கிநின்றுவாய்மடித்துருத்துமாயாப்
புண்ணுளேகோலிட்டன்னமானத்தாற்புழுங்குகின்றான்.

இ-ள். கண்அனார் - தமக்குகண்போல்வாரும், உயிரேஅன்னார்-உயிரேபோல்வாரும், கை - தமதுகையிலேயுள்ள, படைக்கலத்தில் – ஆயுதம்போல், காப்பார்-காப்பவரும்ஆக, எண்ணலாம் – அளவுசெய்யலாகிய, தகைமையில்லார் – தகுதியில்லாதவர்கள், இறந்து – செத்து, இடை – அவ்விடத்தே, கிடந்தார்தம்மை - கிடக்கிறவர்களை, மண்ணுளே – அந்தயுத்தபூமியிலே, நோக்கிநின்று - பார்த்துஅங்கங்கேநின்று, வாய்மடித்து - இதழைமடித்துக்கடித்து, உருத்து - கோபங்கொண்டு, மாயா-ஆறாத, புண்ணுளே – புண்ணிலே, கோலிட்டன்ன – கோலாற்குத்தினாற்போல்,மானத்தால் - ரோஷத்தினாலே, புழுங்குகின்றான் - வெப்பங்கொள்ளுகிறான்—எ-று. ()

கானிடையத்தைக்குற்றகுற்றமுங்கரனார்பாடும்
யானுடையெம்பிவீந்தவிடுக்கணும்பிறவுமெல்லாம்
மானிடரிருவரானும்வானரமொன்றினானும்
ஆனிடத்துளவென்வீரமழகிற்றேயம்மவென்றான்.

இ-ள். கானிடை - காட்டிலே, அத்தைக்கு - சூர்ப்பநகைக்கு, உற்ற - உண்டான, குற்றமும் - பழிப்பும், கரனார்பாடும் - கரதூஷணாதிகள் பட்டதும், யானுடை - என்னுடைய, எம்பிவீந்த - தம்பியிறந்த, இடுக்கணும் - துன்பமும், பிறவும்-மற்றவைகளும், எல்லாம் - முழுதும்வனமழிந்தது முதலானவையெல்லாம், மானிடர் - மனிதர், இருவரானும் - இரண்டுபேர்களாலும், வானரமொன்றினாலும் - ஒருகுரங்கினாலும், ஆனிடத்து - ஆனபோதில், உளஎன்வீரம் - என்னிடத்துள்ளசாமர்த்தியம், அழகிற்றே - மிகநன்றானதே, அம்ம - இதாச்சரியம், என்றான் - என்றெண்ணினான்—எ-று. (௧௯)

நீப்புண்டவுயிரவாகிநெருப்புண்டநிறத்திற்றோன்றி
ஈப்புண்டற்கரியவாயபிணக்குவடிடறச்செல்வான்
தேய்ப்புண்டதம்பியாக்கைசிவப்புண்டகண்கடீயில்
காய்ப்புண்டசெம்பிற்றோன்றக்கறுப்புண்டமனத்தன்கண்டான்.

இ-ள். உயிர்நீப்புண்டவாகி - உயிர்போனதாய், நிறநெருப்புண்டதில் - நிறமானதுநெருப்பாலெரிகிறதுபோல், தோன்றி - காணலாய், ஈப்புண்டற்கு - அசைத்தற்கு, அரியஆய - அருமையான, பிணக்குவடு - பிணமலைகள், இடற - தடுக்கும்படியாக, செல்வான் - போகிற இந்திரசித்து, தேய்ப்புண்ட - அரைபட்ட, தம்பியாக்கை - தன்தம்பிசரீரத்தை, சிவப்புண்ட - சிவந்த, கண்கள் - கண்களானவை, தீயில் - நெருப்பிலே, காய்ப்புண்ட - காய்ச்சின, செம்பில் - செம்பைப்போல், தோன்ற - தெரியவிளங்க, கறுப்புண்ட - வயிரமுளதான, மனத்தன் - மனமுள்ளவனாகி, கண்டான் - பார்த்தான்—எ-று. (௨0)

தாருகன்குருதியன்னகுருதியிற்றனிமாச்சீயம்
கூருகிர்கிளைத்தகொற்றக்கனகன்மெய்க்குழம்பிற்றோன்றத்
தேருகக்கையின்வீரச்சிலையுகவயிரச்செங்கண்
நீருகக்குருதிசிந்தநெருப்புகவயிர்த்துநின்றான்.

இ-ள். தாருகன் - தாருகாசுரனது, குருதியன்ன - ரத்தம்போன்ற, குருதியில் - ரத்தத்திலே, தனிமா - ஒப்பில்லாத பெருமையுள்ள, சீயம் - நரசிங்கத்தி

னது, கூருகிர் – கூரியநகத்தாலே, கிளைத்த – வகிரலாய், கொற்றம் – கொல்லப்பட்ட, கனகன் – இரணியனுடைய, மெய்க்குழம்பில் – உடம்புகுழம்பிக் கிடப்பதுபோல், தோன்ற – தம்பியாக்கைதெரிய, தேர்உக – அவ்விடத்தே தேருமழுந்த, கையின் – கையிலிருந்து, வீரம் – வெற்றியைத்தருவதான, சிலைஉக – வில்லுநழுவ, வயிரம் – வீரம்பொருந்தின, செங்கண் – சிவந்தகண்களிலே, நீர்உக – ஜலமுமொழுக, குருதிசிந்த – ரத்தமுஞ்சிந்த, நெருப்புஉக – நெருப்புமுதிர, வயிர்த்து – முழுதும் வயிரங்கொண்டு, நின்றான் – நின்றுநோக்கினான் — எ-று. (உக)

வெவ்விலையயில்வேலுந்தைவெம்மையைக்கருதிநோக்கி
வவ்வுதல்கூற்றுமாற்றான்மாறுமாறுலகின்வாழ்வார்
அவ்வுலகத்துளாருமஞ்சுவரொளிக்கவையா
எவ்வுலகத்தையுற்றாயெம்மைநீத்தெளிதினெந்தாய்.

இ-ள். வெவ்விலை – வெற்றிலைபோலும், அயில்வேல் – கூரியவேலையுடைய, உந்தை – உனதுதந்தையினது, வெம்மையை – கோபத்தை, கருதிநோக்கி – எண்ணிப்பார்த்து, வவ்வுதல் – உன்உயிர்பற்றுதற்கு, கூற்றும் – யமனும், ஆற்றான் – அஞ்சுவான், மாறுமாறு – இன்னம்வெவ்வேறான, உலகின் – உலகத்திலே, வாழ்வார் – வாழ்வார்களான, அவ்வுலகத்துளாரும் – அந்தஅந்த வுலகத்துள்ளவர்களும், ஐயா – ஐயனே, அஞ்சுவர் – பயப்படுவார்கள், ஒளிக்க – உன்னைமறைக்க, அஞ்சுவர் – நீ எங்களுக்குக்காணாமல், எவ்வுலகத்தை – எந்தவுலகத்தை, உற்றாய் – அடைந்தாய், எம்மைநீத்து – எங்களைவிட்டிட்டு, எளிதின் – அதிசுலபத்திலே, எந்தாய் – என்ஐயனே எ-று. (உஉ)

ஆற்றலனனையனாகியறிவழிந்தயரும்வேலை
சீற்றமென்றொன்றுதானேமேனிமிர்செலவிற்றாகித்
தோற்றியதுன்பநோயையுள்ளுறத்துரந்ததம்மா
ஏற்றஞ்சாலாணியாணியெதிர்செலக்கடாயதென்ன.

இ-ள். ஆற்றலன் – பொறாதவனாய், அனையனாகி – அப்படியானவன் அத்தன்மையனாகி, அறிவழிந்து – புத்திமயங்கி, அயரும்வேலை – சோரும்போது, சீற்றமென்றொன்றுதானே – கோபமென்பதொன்றுமே, மேனிமிர் – மேலேகிளருகிற, செலவிற்றாகி – செல்கையையுடையதாய், தோற்றிய – அங்குண்டான, துன்பநோயை – துக்கமானபிணியை, உள் உற – உள்ளே அடங்க, துரந்தது – அழுத்தியது, ஏற்றஞ்சால் – முன்னேதைத்திருந்த, ஆணி – ஆணிமேல், ஆணி – மற்றோராணி, எதிர்செல – அவ்வாணி உள் அடங்க, கடாயதென்ன – அறைந்தாற்போல் உள் உறத் துரந்தது — எ-று. எதிர்செலக்கடாவுதல் கடாவுமாணிக்குமுன்செல்லச்செய்தல் எனவே துன்பம் அடங்கிக் கோபம் அதிகமாயிற்றென்க. (உ௩)

வேறு.

ஈண்டிவைநிகழ்வுழியிரவிதேரெனத்
தூண்டுறுதேரின்மேற்றோன்றுந்தோன்றலை
மூண்டுமுப்புரஞ்சுடமுடுகுமீசனின்
ஆண்டகைவனைகழலநுமனோக்கினான்.

இ-ள். ஈண்டு – இங்கே, இவை – இவ்வகைகள், நிகழ்வுழி – நடக்கச்செய்தே, இரவி – சூரியனுடைய, தேரென – தேரைப்போல், தூண்டுறு – செலுத்தவருகிற,

தேரின்மேல் – தேரின்மேலே, தோன்றும் – காணப்படுகிற, தோன்றலை – இந்திரசித்தை, மூண்டு – கோபம் அதிகமாய், முப்புரம் – திரிபுரத்தை, சுட - தகிக்க, முடுகும் – விரைவுகொள்கின்ற, ஈசனின் – சிவன்போன்ற, ஆண்தகை – புருஷ சிரேஷ்டராய் ஆண்மையிற்சிறந்த, வனைகழல் – கட்டினவீரக்கழலையுடைய, அனுமன்-அனுமார், நோக்கினன் – பார்த்தார்—எ-று. (உச)

வேறு.

வென்றேனிதன்முன்சிலவீரரையென்னும்வெம்மை
அன்றேமுடுகிக்கடிதெய்தவழைத்ததம்மா
ஒன்றேயினிவெல்லுதறோற்பதடுத்ததுள்ள
தின்றேசமையுமிவனிந்திரசித்துவென்பான்.

இ-ள். இதன்முன் – இதற்குமுன்னே, சிலவீரரை – சிலவீரர்களை, வென்றேன் – ஜெயங்கொண்டேன், என்னும் – என்பதான, வெம்மையன்றே – கோபமல்லவா, முடுகிக்கடிது – மிகவும்விரைவாக, எய்த – இவன்வரும்படி, அழைத்தது-கூப்பிட்டதாயிற்று, ஒன்றே இனி – இனி ஒருகாரியமே, வெல்லுதல் – ஜயங்கொள்ளுதல் அல்லது, தோற்பது – தோல்வியடைதலே, அடுத்தது – இனிவரலானதாக, உள்ளது – இருக்கின்றது, இன்றே – இப்போதே, சமையும் – வெற்றி தோல்வியென்னு மிரண்டிலொன்றுமுடிவுபெறும், இவன் – இப்போதுவருகிற இவனே, இந்திரசித்து - மேகநாதன், என்பான் – என்றுசொல்லப்படுமவன்—எ-று. வெல்லுதல் தோற்பதிலொன்றே இனி அடுத்ததுள்ளது எனக்கூட்டுக ஆகையால். (உரு)

கட்டேறுநறுங்கமழ்கண்ணியிக்காளையென்கைப்
பட்டாலதுவேயவ்விராவணன்பாடுமாகும்
கெட்டோமெனவெண்ணியக்கேடருங்கற்பினளை
விட்டேகுமதன்றியரக்கரும்வெம்மைதீர்வார்.

இ-ள். கட்டேறு - கட்டுதல்கூடின, நறும் கமழ் – மணம்பரிமளிக்கின்ற- கண்ணி – மாலையையணிந்த, இக்காளை – இந்தவீரன், என்கை – என்கையாலே, பட்டால் - இறந்தால், அதுவே – அவ்விறப்பே, அவ்விராணன்பாடும் – அந்த இராவணனிடத்திலும், ஆகும் – உண்டாகும், கெட்டோமென - புத்திகெட்டோமென்று, எண்ணி – நினைத்து, அ - அந்த, கேடு அரும் – கெடுதலில்லாத, கற்பினளை - மகாபதிவிரதையை, விட்டேகும் - விட்டுவிடுவான் இராவணன், அதன்றி – அதுவேயல்லாமல், அரக்கரும் – இந்த ராக்ஷதர்களும், வெம்மை – தங்கள் கொடுஞ்செய்கைகளை, தீர்வார் - விட்டுவிடுவார்கள்—எ-று. விட்டேகும் – விட்டுப்போவான், நறுங்கள்-தேறு – தெளிவு – கமழென்பதுமாம். (உசு)

ஒன்றோவிதனுன்வருமூதியமொண்மையானைக்
கொன்றேனெனினிந்திரனுந்துயர்க்கோளுநீங்கும்
இன்றேகடிகெட்டதரக்கரிலங்கையானே
வென்றேனவிராவணன்றன்னையும்வேரொடென்றான்.

இ-ள். ஒன்றோ – இது ஒருவகைதானோ, இதனுன் - இவனைக்கொன்றதனாலே, வரும் – வருவதாகிய, ஊதியம் – இலாபம், ஒண்மையானை – இந்தமகாவீரனை, கொன்றேனெனில் – கொன்றேனேயானால், இந்திரனும் – தேவராஜனுங்கூட, துயர்க்கோளும் – துன்பங் கொண்டிருப்பதுவும், நீங்கும் – தீர்வான், அரக்கரிலங்கை-

ராக்ஷதர்களுள்ள இந்தவூர், இன்றே - இப்போதே, கடிகெட்டது-காவலழிந்ததாம், அ - இராவணன்றன்னையும் அந்த இராவணனையுங்கூட, வேரொடு- அவன்வம்சத்துடனே, யானேயென்றேன் - நானேயென்றவனுவேன் என்றெண்ணினுர்—எ-று. ()

அக்காலையரக்கருமானையுந்தேருமாவும்
மூக்கா லுலகமொருமூன்றையும்வென்றுமுற்றிப்
புக்கானின்முன்புக்குயர்பூசல்பெருக்கும்வேலை
மிக்கா னும்வெகுண்டோர்மராமரங்கொண்டுமிக்கான்.

இ-ள். அக்காலை - அப்போது, அரக்கரும் - ராக்ஷதர்களும், ஆனையும் - யானைகளும், தேரும் - இரதங்களும், மாவும் - குதிரைகளும், உலகம் ஒருமூன்றையும்- ஒருமூன்றுலகத்தையும், முக்கால் - மூன்றுதரம், வென்று - ஜயங்கொண்டு, முற்றிப்புக்கானின் - முடித்துவந்தவனுக்கு இந்திரசித்துக்கு, முன்புக்கு - முன்னேவந்து, உயர்பூசல் - மிகுந்தசண்டையை, பெருக்கும்வேலை - அதிகரிக்கும்போது, மிக்கானும் - முன்னேவென்றுமிக்க அனுமாரும், வெகுண்டு - கோபங்கொண்டு, ஓர்மராமரம் - ஒருநீண்டமரத்தை, கொண்டு - கையிலேகொண்டு, மிக்கான் - சண்டையில் அதிகரித்தார்—எ-று. அக்காலையரக்கருமானையுந் தேருமாவுமுன்புக்கெனக்கூட்டுக.()

வேறு.

உதைப்புண்டனயானையுருண்டனயானையொன்றோ
மிதிப்புண்டனயானைவிழுந்தனயானைமேன்மேல்
புதைப்புண்டனயானைபுரண்டனயானைபோரால்
வதைப்புண்டனயானைமறிந்தனயானைமண்மேல்.

இ-ள். உதைப்புண்டன - உதைபட்டனவாகி, யானை - சிலயானைகள், உருண்டன - கீழேஉருளுதலாயின, யானை ஒன்றோ - அந்தயானைகள் ஒருவிதத்தினுலோ, மிதிப்புண்டன - மிதிபட்டனவாகி, யானை - சிலயானைகள், விழுந்தன - விழலாயின, யானை - பின்னும்யானைகளே, மேன்மேல் - மேலுமேலும், புதைப்புண்டன - புதைபடலாயின, யானை - சிலயானைகள், புரண்டன - புரளுதலாயின, யானை- சிலயானைகள், போரால் - அனுமார்பொருதுதலாலே, வதைப்புண்டன - வதைபடலாயின, யானை - சிலயானைகள், மறிந்தன - முகங்கொடாதுசென்றன, யானை - சிலயானைகள், மண்மேல் - அந்தயுத்தபூமியிலே—எ-று. (உக)

வேறு.

முடிந்ததேர்க்குலமுறிந்தனதேர்க்குலமுரணிற்
றிடிந்ததேர்க்குலமிற்றனதேர்க்குலமச்சிற்
றெடிந்ததேர்க்குலமுக்கனதேர்க்குலநெக்குப்
படிந்ததேர்க்குலம்பறிந்தனதேர்க்குலம்படியில்.

இ-ள். முடிந்த - முழுதுமுடிதலாயின, தேர்க்குலம் - சிலதேர்வகைகள், முறிந்தன - முறிதலாயின, தேர்க்குலம் - சிலதேர்வகைகள், முரண்இற்று - தமதுபலங்குறைந்து, இடிந்த - இடிபடலாயின, தேர்க்குலம் - சிலதேர்வகைகள், இற்றன- அச்சிறுதலாயின, தேர்க்குலம் - சிலதேர்வகைகள், அச்சிற்று - அப்படிஅச்சுகளிறுதலாய், ஒடிந்த - எல்லாம்ஒடிதலாயின, தேர்க்குலம் - சிலதேர்வகைகள், உக்கன- பொடிப்பொடியாயுதிர்தலாயின, தேர்க்குலம் - சிலதேர்வகைகள், நெக்கு - கட்டுகெள்விட்டு, படிந்த - கீழேபடிதலாயின, தேர்க்குலம் - சிலதேர்வகைகள், பறிந்தன-மீ

ண்டுசெல்லலாயின, தேர்க்குலம் - சிலதேர்வகைகள், படியில்-அந்த யுத்தபூமியிலே, பறிதல் - அனுமாருக்குத்தெரியாமல் மீண்டுபோதல்—எ-று. (௩௦)

சிரனெரிந்தவுங்கண்மணிசிதைந்தவுஞ்செறிதாட்
டரனெரிந்தவுமுதுகுறச்சாய்ந்தவுந்தார்ப்பூண்
உரனெரிந்தவுமுதிரங்களுமிழ்ந்தவுமொண்பொற்
குரனெரிந்தவுங்கொடுங்கழுத்திழந்தவுங்குதிரை.

இ-ள். சிரன் - தலைகள், நெரிந்தவும் - சிலநெரிந்தவைகளும், கண்மணி-கண்களிலுள்ளமணிகள், சிதைந்தவும் - சிலஅழிந்தவைகளும், செறி - நெருங்கின, தாள்-கால்களின், தரன் - வலிகள், நெரிந்தவும் - சிலநெரிந்தவைகளும், முதுகுஇற-முதுகொடிய, சாய்ந்தவும் - சிலசாய்ந்தவைகளும், தார்ப்பூண் - மாலைகளான ஆபரணங்களுள்ள, உரன் - நெஞ்சு, நெரிந்தவும் - சிலநெரிந்தவைகளும், உதிரங்கள் - ரத்தங்களை, உமிழ்ந்தவும் - சிலகக்கினவைகளும், ஒண் - அழகிதான, பொன் - பொற்சதங்கைகளணிந்த, குரன் - குளம்புகள், நெரிந்தவும் - சிலநெரிந்தவைகளும், கொடும்-கோணலான, கழுத்து - கழுத்துகள், இழந்தவும் - சிலபோனவைகளும், குதிரை-குதிரைகளாயின—எ-று. (௩௧)

பிடியுண்டார்களும்பிளத்தலுண்டார்களும்பெருந்தோள்
ஒடியுண்டார்களுந்தலையுடைந்தார்களுமுருவக்
கடியுண்டார்களுங்கழுத்திழந்தார்களுங்கரத்தால்
அடியுண்டார்களுமச்சமுண்டார்களுமரக்கர்.

இ-ள். பிடியுண்டார்களும் - பிடிபட்டார்கள்சிலர், பிளத்தலுண்டார்களும்-பிளவுபட்டார்கள்சிலர், பெருந்தோள் - பெரியதோள்கள், ஒடியுண்டார்களும் - ஒடிபட்டார்கள்சிலர், தலை - தலைகள், உடைந்தார்களும் - உடைபட்டார்கள்சிலர், உருவ - முழுதும், கடியுண்டார்களும் - கடிபட்டார்கள்சிலர், கழுத்து - கழுத்துகள், இழந்தார்களும் - போனார்கள்சிலர், கரத்தால் - கையினாலே, அடியுண்டார்களும் - அடிபட்டார்கள்சிலர், அச்சமுண்டார்களும் - பயப்பட்டோடினார்கள்சிலர், அரக்கர்-காலாள்களான ராக்ஷதர்களில்—எ-று. (௩௨)

வட்டவெஞ்சிலையோட்டியவாளியும்வயவர்
விட்டவிட்டவெம்படைகளும்வீரன்மேல்வீழ்ந்த
சுட்டவல்லிரும்படைகளைச்சுடுகலாதனபோல்
பட்டபட்டனதிசையொடும்பொறியொடும்பரந்த.

இ-ள். வட்டம் - வளைவாகிய, வெஞ்சிலை - வெவ்வியவில்லினின்றும், ஓட்டிய - செல்லவிட்ட, வாளியும் - அம்புகளும், வயவர் - வீரர்கள், விட்டவிட்ட - அடிக்கடிவிடுதலான, வெம்படைகளும் - வெவ்வியஆயுதங்களும், வீரன்மேல் - அனுமார்மேலே, வீழ்ந்த - விழலானவைகளெல்லாம், சுட்ட - காய்ச்சின, வல்லிரும்பு-வலிய இரும்புகள், அடைகளை - பட்டடையை, சுடுகலாதனபோல் - சுடாதபடியேபோல், பட்டபட்டன - அவ்வகைகள்படலான, திசையொடும் - இடமெல்லாம், பொறியொடும் - நெருப்புப்பொறியுடனே, பரந்த - பரவிப்போயின—எ-று. (௩௩)

சிகையெழுஞ்சுடர்வாளிகளிந்திரசித்து
மிகையெழுஞ்சினத்தநுமன்மேல்விட்டனவெக்கு

புகையெழுந்தனவெரிந்தனகரிந்தனபோக
நகையெழுந்தனவழிந்தனவானுளோர்நாட்டம்.

இ-ள். சிகையெழும் — சுவாலைகளுண்டாகுகிற, சுடர் - ஒளிபொருந்தின, வாளிகள் — அம்புகளை, இந்திரசித்து — மேகநாதனானவன், மிகையெழும் — அதிகமாகமூளுகிற, சினத்து — கோபமுள்ள, அனுமன்மேல் — அனுமார்மேலே, விட்டன-விட்டவைகளெல்லாம், வெந்து - வேவுதலாய், புகையெழுந்தன - புகைகளுண்டாயினசில, எரிந்தன — நெருப்பாயெரிந்தனசில, கரிந்தன - கரிந்துபோயினசில, போக-இப்படியாகப்போகவே, நகையெழுந்தன — இந்திரசித்துக்குச் சிரிப்புண்டாயின சிரிக்கவே, வானுளோர் — அதுகண்டதேவர்களுடைய, நாட்டம் — கண்கள், அழிந்தன-கலங்கலாயின — எ-று. (௩௪)

தேரும்யானையும்புரவியுமரக்கருஞ்சிந்திப்
பாரின்வீழ்தலுந்தானொருதனிநின்றபணைத்தோள்
வீரவீரனுமுறுவலும்வெகுளியும்வீங்க
வாரும்வாருமென்றழைக்கின்றவநுமன்மேல்வந்தான்.

இ-ள். தேரும் — இரதங்களும், யானையும் — யானைகளும், புரவியும் — குதிரைகளும், அரக்கரும் - ராக்ஷதர்களும் காலாள்களும், சிந்தி - அழிந்து, பாரின் — மண்மேலே, வீழ்தலும் - விழுமளவில், தான் - தானே, ஒருதனிநின்ற — ஒருவனாகநிற்கிற, பணைத்தோள் - பெருத்ததோள்களையுடைய, வீரவீரனும் - வீரர்களிலே சிறந்த இந்திரசித்தானவனுக்கு, முறுவலும் — சிரிப்பும், வெகுளியும் - கோபமும், வீங்க-அதிகமாக, வாரும்வாருமென்று - வாருங்கள்விரைந்தென்று, அழைக்கின்ற - கூப்பிடுகிற, அனுமன்மேல் — அனுமார்மேலே, வந்தான் - வந்துநெருங்கினான் — எ-று. ()

புரந்தரன்றலைபொதிரெறிந்திடப்புயல்வானில்
பரந்தபல்லுருமேற்றினம்வெறித்துயிர்பதைப்ப
நிரந்தரந்தலைநெடுநிலஞ்சுமந்தபேருரகன்
சிரந்துளங்கிடவரக்கன்வெஞ்சிலையைநாண்டெறித்தான்.

இ-ள். புரந்தரன் - இந்திரனுடைய, தலை - சிரசு, பொதிரெறிந்திட - நடுங்குதலாக, புயல்வானில் - பெய்கிறமேகங்களிலே, பரந்த — பரவியிருக்கிற, பல் - அநேகம், உருமேற்றினம் — இடியேற்றின் கூட்டங்கள், வெறித்து — மயக்கங்கொண்டு, உயிர்பதைப்ப — மனநடுங்குவதாக, நிரந்தரம் - எப்போதும், தலை-தன்றலைகளாலே, நெடுநிலம் - நெடியவுலகை, சுமந்த — தாங்குகின்ற, பேருரகன் - பெரிய ஆதிசேடனுடைய, சிரந்துளங்கிட — தலைகளுநடுங்க, அரக்கன் - இந்திரசித்தானவன், வெஞ்சிலையை — தனதுவெவ்விதானவில்லினது, நாண் - நாணை, தெறித்தான் — இழுத்துப்பார்த்தான் குணத்தொனிசெய்தான் — எ-று. (௩௫)

ஆண்டநாயகன்றாதனுமயனுடையண்டம்
கீண்டதாமெனக்கிரியுகநெடுநிலங்கிழிய
நீண்டமாதிரம்வெடிபடவவனெடுஞ்சிலையில்
பூண்டநாணிறத்தன்னெழிற்றோள்களைப்புடைத்தான்.

இ-ள். ஆண்ட — நம்மை அடிமைகொண்டருளுகிற, நாயகன் தூதனும் — ஸ்ரீராமதூதனும் அவ்வொலிக்கெதிரே, அயனுடையண்டம் - இந்தப்பிரமாண்டம், கீண்

டதாமென — கிழிந்ததென்னும்படி, கிரி உக — மலைகளும்பொடியாக, நெடுநிலம் — நீண்டபூமியும், கிழிய — பிளக்கவும், நீண்டமாதிரம் — நெடியதிசைகள், வெடிபட — வெடிக்கவும், அவன் — அந்த இந்திரசித்தினது, நெடுஞ் சிலையில் — நீண்ட வில்லிலே, பூண்டநாண் — பூட்டுகிறகயிறு, இற — அற்றுப்போகவும், தன் — தனது, எழில் — அழகிதான, தோள்களை — புஜங்களை, புடைத்தான் — கொட்டினர்—எ-று. (௩௭)

நல்லைநல்லையிஞ்ஞாலத்துணின்னொக்கநல்லார்
யில்லையில்லையாலெறுழ்வலிக்கியாரொடுமிகல
வல்லைவல்லையின்றாகுநீபடைத்துளவாழ்நாட்
கெல்லையெல்லையென்றிந்திரசித்துவுமிசைத்தான்.

இ-ள். நல்லை நல்லை — நீ மிகவும்சமர்த்தனே, இஞ்ஞாலத்துள் — இந்தவுலகத்திலே, நின்னொக்க — உன்னை ஒப்பாக, நல்லார் — சமர்த்தர்கள், இல்லை இல்லை — கிடையவே கிடையாது, எறுழ்வலிக்கு — மிகுந்தபலத்தினாலே, யாரொடும் — எல்லாருடனும் எப்படிப்பட்டவர்களானாலும், இகல — சண்டைசெய்ய, வல்லைவல்லை — நீ மிகவும்வல்லவனே ஆனாலும், நீபடைத்துள — நீபெற்றிருக்கிற, வாழ்நாட்கு — ஆயுளுக்கு, எல்லை எல்லை — முடிவினளவு, இன்றாகும் — இன்றே ஆம், என்று — என்பதாய், இந்திரசித்துவும் — அனுமார்தோள்கொட்டினதுகண்டுஇந்திரசித்து, இசைத்தான்-சொன்னர்—எ-று. (௩௮)

நாளுக்கெல்லையுநிருதராயுலகத்தைநலியும்
கோளுக்கெல்லையுங்கொடுந்தொழிற்கெல்லையுங்கொடியீர்
வாளுக்கெல்லையும்வந்தனவகைகொண்டுவந்தேன்
தோளுக்கெல்லையொன்றில்லையென்றநுமனுஞ்சொன்னான்.

இ-ள். நாளுக்கு — உங்கள்வாழ்நாளுக்கு, எல்லையும் — முடிவும், நிருதராய்-ராக்ஷதர்களாகி, உலகத்தை — உலகமெல்லாம், நலியும் — வருத்தப்படுத்துகிற, கோளுக்கு — உங்கள் கொள்கைக்கு, எல்லையும் — முடிவும், கொடுந்தொழிற்கு — உங்கள்கொடியசெய்கைக்கு, எல்லையும் — முடிவும், கொடியீர் — ஒபொல்லாதவர்களே, வாளுக்கு-உங்கள் வாளாயுதமுதலியவைகளுக்கு, எல்லையும் — முடிவும், வந்தன — வரலாயின, வகைகொண்டு — அந்தவருதலையே காரியமாக, வந்தேன் — நான் வரலானேன், தோளுக்கு — என்புஜபலத்துக்கு, எல்லை — முடிவு, ஒன்றில்லை — ஒருகாலத்து முளதாகாது, என்று — என்பதாய், அனுமனும் — திருவடி அவன்மொழிக்கெதிர், சொன்னான் — சொல்லினர்—எ-று. (௩௯)

இச்சிரத்தையைத்தொலைப்பெனென்றிந்திரன்பகைஞன்
பச்சிரத்தம்வந்தொழுகிடவானவர்பதைப்ப
வச்சிரத்தினும்வலியனவயிரவான்கணைகள்
அச்சிரத்தினுமார்பிலுமழுத்தலுமநுமன்.

இ-ள். இச்சிரத்தையை — இந்தத்திடமான நம்பிக்கையை, தொலைப்பெனென்று — இதோ அழித்துவிடுகிறேனென்று, இந்திரன் பகைஞன் — இந்திரசித்தானவன், பச்சிரத்தம் — அனுமாருடம்பிலேபசியரத்தம், வந்து ஒழுகிட — ஊறிவழியவும், வானவர் — தேவர்களெல்லாம், பதைப்ப — நடுங்கவும், வச்சிரத்தினும் — வயிரத்தைப்பார்க்கிலும், வலியன — பலமுள்ள, வயிரம் — உறுதிகொண்ட, வான்கணைகள்-பெ

ரிய அம்புகளை, அச்சிரத்தினும் – அவர்தலையிலும், மார்பினும் - நெஞ்சிலும், அழுத்தலும் - அழுந்த எய்தபோது, அனுமன் - திருவடியானவர்—எ-று. (௪0)

குறிதுவானென்றுகுறைந்திலனெடுஞ்சினங்கொண்டான்
மறியும்வெண்டிரைமாகடலுலகெலாம்வழங்கிச்
சிறியதாய்சொன்னதிருமொழிசென்னியிற்சூடி
நெறியினின்றதன்னுயகன்புகழெனநிமிர்ந்தான்.

இ-ள். குறிதுவானென்று - ஆகாயம்உயர்வுபோதாதென்று, குறைந்திலன் - இவர் உயர்வுகுறுகாதவராகி, நெடுஞ்சினம் – அதிககோபம், கொண்டான் – கொண்டு, மறியும் - மடங்குகின்ற, வெண்திரை - வெள்ளைஅலைகளையுடைய, மாகடல்-பெரியகடல்சூழ்ந்த, உலகெலாம் - உலகமுழுதும், வழங்கி - தம்பிக்கேகொடுத்து, சிறியதாய் – கைகேசியானவள், சொன்னதிருமொழி – சொன்னதிருவார்த்தையை, சென்னியில்சூடி - தமதுதலைமேற்கொண்டு, நெறியில் – தபோமார்க்கத்திலே, நின்ற-நிலைகொண்ட, தன்னுயகன் - தமதாண்டானது, புகழென - கீர்த்திபோல், நிமிர்ந்தான்-உயர்ந்தார் – எ-று. (௪௧)

பாகமல்லதுகண்டிலனநுமனைப்பார்த்தான்
மாகவன்றிசைபத்தொடும்வரம்பிலாவுலகிற்
கேகநாதனைபெறுழ்வலித்தோள்பிடித்தீர்த்த
மேகநாதனுமயங்கினனுமெனவியந்தான்.

இ-ள். அனுமனை – திருவடியை, பார்த்தான் – இந்திரசித்துப்பார்த்து, பாகமல்லது - அவருருவிலே பாதியேஅல்லாமல், கண்டிலன் – முழுதுந்தெரியாதவனாய், மாகம் – பெரிதான, வன்திசை - வலிதானதிக்குகள், பத்தொடும் - பத்துடனே,வரம்பிலா – அளவில்லாத, உலகிற்கு – உலகத்திற்கு, ஏகநாதனை - ஒருவனான இந்திரனுடைய, எறுழ்வலி – மிகவும்வலியனவான, தோள்பிடித்து – தோள்களைப்பற்றி, ஈர்த்த - இழுத்த, மேகநாதனும் – இந்திரசித்தும், மயங்கினன் – திகைத்தான், ஆமென - ஆகுமென்றுசொல்ல, வியந்தான் - அதிசயித்தான்—எ-று. (௪௨)

நீண்டவீரனுநெடுந்தடங்கைகளைநீட்டி
ஈண்டுவெஞ்சரமெய்தனவெய்திடாவண்ணம்
மீண்டுபோய்விழவீசியாங்கவன்மிடற்றடந்தேர்
பூண்டமாவொடுசாரதிதரைப்படப்புடைத்தான்.

இ-ள். நீண்ட – அப்படிஉயர்ந்த, வீரனும் - அனுமாரானவர், நெடுந்தடம்-மிகவுநீண்டுள்ள, கைகளை - தம்முடையகைகளை, நீட்டி – நீளவிட்டு, ஈண்டு - மேன்மேலாய்வருகிற, வெஞ்சரம் - வெவ்வியஅம்புகள், எய்தன – அவன்விட்டவைகளிலொன்றேனும், எய்திடாவண்ணம் - தம்மேற்படாதபடி, மீண்டு – திரும்பி, போய்-அவன்மேலேபோய், விழ - விழும்படி, வீசி - தட்டிவிட்டு, அவன் - அவனுடைய, மிடல்தடம் - பலமும்பருமையுமுள்ள, தேர் - தேரிலே, பூண்ட - கட்டின, மாவொடு - குதிரைகளுடனே, சாரதி – சாரதியும், தரைப்பட - கீழேவிழுந்திறக்க, புடைத்தான் – அடித்தார்—எ-று. புதைத்தான் என்றுபாடமானால் பூமியிலேஅழுந்தச்செய்தாரென்க. ஆங்கு – அசை. (௪௩)

ஊழிக்காற்றன்னவொருபரித்தேரவனுதவப்
பாழித்தோளவனத்தடந்தேர்மிசைப்பாய்ந்தான்

ஆழிப்பல்படையனையனவளப்பருஞ்சரத்தால்
வாழிப்போர்வலிமாருதிமேனியைமறைத்தான்.

இ-ள். ஊழிக்காற்று – பிரசண்டவாயுவை, அன்ன – ஒப்பான, ஒருபரித்தேர் – குதிரைகள்பூண்ட மற்றொருதேர், அவண் – அவ்விடத்திலப்போது, உதவ – உதவியாகவர, பாழி – அகன்றபெருமையுள்ள, தோளவன் – தோள்களையுடைய இந்திரசித்தானவன், அத்தடம் – அந்தப்பெரிதான, தேர்மிசை – தேர்மேலே, பாய்ந்தான் – தாவியேறி, ஆழிப்பல்படை – அநேகஞ்சக்கராயுதங்களை,அனையன – ஒப்பான, அளப்பரும் – அளவிடலரிதான, சரத்தால் – அம்புகளாலே, வாழி – குறைவுபடாத, போர்வலி – யுத்தபலத்தையுடைய, மாருதிமேனியை – அனுமார் சரீரமெல்லாம், மறைத்தான் – மூடினன்—எ-று. (சச)

உற்றவாளிகளுரத்தடங்கினவுகவுதருக்
கொற்றமாருதியனையவன்றேர்மிசைக்குதித்துப்
பற்றிவன்கையாற்பறித்தெழுந்துலகெலாம்பலகால்
முற்றவென்றபோர்மூரிவெஞ்சிலையினைமுறித்தான்.

இ-ள். உற்றவாளிகள் – பட்டஅம்புகள், உரத்தடங்கின – நெஞ்சிலேபதிந்தவைகளெல்லாம், உக – கீழேசிந்திவிழ, உதரு-உதறி, கொற்றமாருதி – வெற்றிகொண்டதிருவடியானவர், அனையவன் – அவனுடைய, தேர்மிசை – தேரின்மேலேபோய், குதித்து – குதிகொண்டு, பற்றிவன்கையால் – தமது வலிதானகையினுலே பிடித்து, பறித்து – பிடுங்கி, எழுந்து – மேலேகிளர்ந்து, உலகெலாம் – முன்னேஉலகமெல்லாம், பலகால் – பலதரமும், முற்ற – முடிய, வென்ற – ஜெயம்பண்ணின, போர்-பலத்தினுலே, மூரி – பெரிதான, வெஞ்சிலையினை – வெவ்வியவில்லை, முறித்தான்-ஒடித்துவிட்டார்—எ-று. உற்ற – பட்ட, உரத்தடங்கினவாளிகளெனக்கூட்டுக. ()

முரிந்தவில்லின்வல்லோசைபோய்முடிவதன்முன்னர்
மறிந்துபோரிடைவழிக்கொள்வான்வயிரவாட்படையால்
செறிந்தவான்பெருமலைகளைச்சிறகறச்செயிரா
எறிந்தவிந்திரனிட்டவார்சிலையினையெடுத்தான்.

இ-ள். முறிந்த - அப்படிஒடிந்த, வில்லின் – வில்லினது, வல்லோசைபோய்-வலியசத்தம்நீண்டு, முடிவதன்முன்னம் – ஓயுமுன்னே, போரிடை – முன்சண்டையிலே, மறிந்து – தோற்றுமீண்டு, வழிக்கொள்வான் – ஓடுகிறவனுகிய, வயிரவாள்படையால் – வச்சிராயுதத்தினுலே, செறிந்த – நெருங்கின, வான்பெருமலைகளை – மிகப்பெரியமலைகளினுடைய, சிறகுஅற – இறகுகளற்றுப்போக, செயிரா – கோபங்கொண்டு, எறிந்த – வெட்டின, இந்திரன் – தேவராஜன், இட்ட – போட்டுவிட்ட, வார்சிலையினை – நீண்டவில்லை, எடுத்தான் – கையிலேகொண்டான் இந்திரசித்து, வழிக்கொள்வானுன இந்திரனிட்ட எனக்கூட்டுக—எ-று. போகவிட்டிட்ட என்க.()

நூறுநூறுபோர்வாளியோர்தொடைகொடுநொய்தின்
மாறில்வெஞ்சினத்திராவணன்மகன்சிலைவளைத்தான்
ஊறுதன்னெடுமேனியிற்பலபடவொல்கி
ஏறுசேவகன்றூதனுஞ்சிறிதுபோதிருந்தான்.

இ-ள். நூறுநூறு – பதினுயிரம், போர்வாளி-பலமுள்ள அம்புகளை, ஓர்தொடைகொடு – ஒருதொடுப்பிலேகொண்டு, நொய்தின் – விரைவிலே, மாறில் – நிகரில்

லாத, வெஞ்சினத்து - வெவ்வியகோபத்தையுடைய, இராவணன்மகன் — இந்திரசித்தானவன், சிலைவளைத்தான் — வில்லைவளைத்து எய்தான், தன்னெடுமேனியில் - தமது நெடியசரீரத்திலே, ஊறுபலபட - அநேகங்காயங்களுண்டாக, ஒல்கி — அதனாலே தளர்ந்து, ஏறு — சிங்கம்போன்ற, சேவகன்றூதன் - ஸ்ரீராமதூதனானவர், சிறிதுபோது - கொஞ்சநேரம், இருந்தான் — ஓய்ந்திருந்தார்—எ-று. வளைத்தானென்பதை வளைத்தெய்தானெனக் கூட்டுக. உம் — அசை. (௪௭)

ஆர்த்தவானவராவலங்கொளீஇயறிவழிந்தார்
பார்த்தமாருதிதாருவொன்றங்கையிற்பற்றித்
தூர்த்தவாளிகண்முறைமுறைதுணிபடச்சுற்றிப்
போர்த்தபொன்னெடுமணிமுடித்தலையிடைப்புடைத்தான்.

இ-ள். ஆவலங்கொளீஇ - கர்வங்கொண்டு, ஆர்த்த - கெர்ச்சித்த, வானவர்-தேவர்களெல்லாம், அறிவழிந்தார் — புத்திமயங்கினார்கள், பார்த்த - அதுகண்ட, மாருதி - அனுமாரானவர், தாருஒன்று — ஒருமரத்தை, அங்கையிற் பற்றி - தமதுகையிலேகொண்டு, தூர்த்த — அவன்பொழிகிற, வாளிகள் — அம்புகளெல்லாம், முறைமுறை — வரிசைவரிசையாக, துணிபட — துண்டுதுண்டாய்விழ, சுற்றி — அந்தமரத்தைச்சுழற்றிவீசி, பொன்னெடு — பொன்னாலாகிநெடிதான, மணிமுடி - ரத்நகிரீடம், போர்த்த — கவித்திருக்கிற, தலையிடை - அவன்தலைமேலே, புடைத்தான் — சுழற்றி அடித்தார்—எ-று. (௪௮)

பாரமாமரமுடியுடைத்தலையிடைப்படலும்
தாரையின்னெடுங்கற்றைகள்சொரிவனதயங்க
ஆரமால்வரையருவியினழிகொழுங்குருதி
சோரநின்றுடறுளங்கினனமரரைத்தொலைத்தான்.

இ-ள். பாரம் - அந்தக்கனமான, மாமரம் — பெரியமரத்தடியானது, முடியுடை — கிரீடமணிந்த, தலையிடை — தலைமேலே, படலும் - பட்டஅளவில், தாரையின் — ரத்ததாரைகளின், நெடுங்கற்றைகள் - நீண்டதிரட்சிகள், தயங்கச்சொரிவன-மிகவுந்தெரியச்சிந்துகின்றன அப்படி, ஆர — நிரம்ப, மால்வரை — பெரியமலையிலிருந்துவருகிற, அருவியின் — அருவிபோல், அழி - ஓடிவருதலான, கொழுங்குருதி-சிவந்தரத்தம், சோர — ஒழுகிவழிய, நின்று — தேர்மேலிருந்துகொண்டே, உடல் -தன்னுடம்பு, துளங்கினன் — நடுங்கலானான், அமரரை — முன்னேதேவர்களை, தொலைத்தான் — வென்றஇந்திரசித்து—எ-று. (௪௯)

நின்றுபோதம்வந்துறுதலுநிறைபிறையெயிற்றைத்
தின்றுதேவருமுனிவருமவுணருந்திகைப்பக்
குன்றுபோனெடுமாருதியாகமுங்குலுங்க
ஒன்றுபோல்வனவாயிரம்பகழிகோத்துய்த்தான்.

இ-ள். நின்று - அப்படிச்சிறிதிருந்து, போதம் — தன்னினைவு, வந்துறுதலும் - வந்து கூடின அளவில், நிறை — நிறைந்த, பிறை — பிறைபோன்ற, எயிற்றை-பற்களை, தின்று - கடித்து, தேவரும் — தேவர்களும், முனிவரும் - ருஷிகளும், அவுணரும் — அசுரர்களும், திகைப்ப — மயங்க, குன்றுபோல் - மலைபோலுள்ள, நெடுமாருதி — நீண்ட அனுமாருடைய, ஆகமும் — மார்பும், குலுங்க — நடுநடுங்க, ஒன்றுபோல்வன - ஒரேசீரான, ஆயிரம்பகழி - ஆயிரம் அம்புகள், கோத்து — தொடுத்து, உய்த்தான் - விட்டான்—எ-று. (௫௦)

உய்த்தவெஞ்சரமுரத்தினுங்கரத்தினுமொளிப்பக்
கைத்தசிந்தையன்மாருதிநனிதவகனன்றான்
வித்தகன்சிலைவிடுகணைவிசையினுங்கடுகி
அத்தடட்பெருந்தேரொடுமெடுத்தெறிந்தார்த்தான்.

இ-ள். உய்த்த – அப்படி அவன்விட்ட, வெஞ்சரம் - வெவ்விய அம்புகள், உரத்தினும் – அனுமார் மார்பிலும், கரத்தினும் – கைகளிலும், ஒளிப்ப-பதிய, கைத்த-வெறுத்தலான, சிந்தையன்மாருதி – மனமுள்ள அனுமார், நனிதவ - அதிகமதிகமாக, கனன்றான் – கோபங்கொண்டாராய், வித்தகன் - ஸ்ரீராமனுடைய, சிலை-கோதண்டத்தினின்றும், விடு – எய்கிற, கணை - அம்பினது, விசையினும் - வேகத்தைப்பார்க்கிலும், கடுகி – விரைந்து, அத்தடம் - அந்தப்பெரிதான, பெருந்தேரொடும்-பெரிய தேரோடவனை, எடுத்தெறிந்து – தூக்கிமேலே எறிந்து, ஆர்த்தான் – கெர்ச்சித்தார்—எ-று. (௩௧)

கண்ணின்மீச்சென்றவிமையிடைகலப்பதன்முன்னை
எண்ணின்மீச்சென்றவெறுழ்வலித்திறலுடையிகலோன்
புண்ணின்மீச்சென்றுபொழிபுனல்பசும்புலால்பொடிப்ப
விண்ணின்மீச்சென்றுதேரொடும்பார்மிசைவீழ்ந்தான்.

இ-ள். கண்ணின்மீ – கண்ணுக்குமேலே, சென்ற – செல்லுவதான, இமை-இமைகள், இடை – கீழிமையிலேவந்து, கலப்பதன்முன்னம் – கூடுவதன்முன்னே, என்றால் – இமைக்குமுன்னே, எண்ணின்மீ – அளவுக்குமேலே, சென்ற - செல்லுவதான, எறுழ்வலி - மிக்கவலிமைபெற்ற, திறலுடை – சாமர்த்தியமுள்ள, இகலோன் – திடசித்தனான இந்திரசித்து, புண்ணின்மீச்சென்று-காயங்களுக்குமேற்பட்டு, பொழிபுனல் – சிந்துகிற ரத்தமானது, பசும் புலால் - பசியபுலால்வீச்சுடனே, பொடிப்ப - ஒழுக, விண்ணின் - ஆகாயத்தின், மீச்சென்று - மேலேபோய், தேரொடும்-தேருடனே, பார்மிசை - பூமியிலே வீழ்ந்தான்—எ-று. (௩௨)

விழுந்துபாரடையாமுனமின்னெனுமெயிற்றான்
எழுந்துமாவிசும்பெய்தினனிடையவன்படையில்
செழுந்தண்மாமணித்தேர்க்குலம்யாவையுஞ்சிதைய
உழுந்துபேர்வதன்முன்னெடுமாருதியுதைத்தான்.

இ-ள். விழுந்து – கீழேவிழுந்து, பார் - பூமியிலே, அடையாமுனம் – சேருதற்குமுன்னே, மின்னெனும் – பளீரென்னும்படியான, எயிற்றான் – பற்களையுடையஇந்திரசித்து, எழுந்து – தேரினின்றெழுந்து, மா - கறுத்திருக்கிற, விசும்பு - ஆகாயத்தை, எய்தினன் - சேர்ந்தான், இடை – அவ்விடத்திலப்போது, அவன்படையில் - அவனுடையசேனையிலுள்ள, செழும் – அழகான, தண் – நிழலிடங்களுள்ள, மாமணி – பெரியரத்நமயமான, தேர்க்குலம் - தேர்க்கூட்டங்கள், யாவையும் - எல்லாம், சிதைய – அழிவாக, உழுந்து - ஒருஉழுந்து, பேர்வதன்முன் - உருளுதற்குமுன்னே, நெடுமாருதி - நீண்டஅனுமார், உதைத்தான் - உதைத்தழித்தார்—எ-று. ()

ஏறுதேரிலனெதிர்நிற்குமுரணிலனெரியிற்
சீறுவெஞ்சினந்திருகுகின்றான்றிரிவானும்
வேறுசெய்வதோர்வினைபிறிதின்மையின்விரிஞ்சன்
மாறிலாப்பெரும்படைக்கலந்தொடுப்பதாய்மதித்தான்.

இ-ள். ஏறு - தானேறிவருதற்கும், தேரிலன் - தேரில்லாதவனாகி, எதிர்-அனுமார்முன்னே, நிற்கும் - நிற்கத்தக்க, முரணிலன்-பலமுமில்லாதவனாய், எரியில்-நெருப்பைப்போல், சீறும் - சுவாலிப்பதான, வெஞ்சினம் - வெவ்வியகோபம், திருகுகின்றான் - மூளுகிறவனுமாய், திரிவானும் - உலாவுகின்றவன், வேறு - அப்போதுவேறே, செய்வது - செய்யத்தக்க, ஓர்வினை - ஒருசெய்கையும், இன்மையின்-இல்லாததினாலே, பிறிதுமாறிலா - வேறோரொப்புமில்லாத, விரிஞ்சன்பெரும்படைக்கலம் - பெருமையுள்ள பிரமாஸ்திரத்தை, தொடுப்பதாய் - தொடுத்துவிடுவதாக, மதித்தான் - எண்ணினான்—எ-று. (௫௪)

பூவும்பூநிறவயினியுந்தீபமும்புகையும்
தாவில்பாவனையாற்கொடுத்தருச்சனை சமைத்தான்
தேவியாவையுமுலகமுந்திருத்தியதெய்வக்
கோவினான்முகன்படைக்கலந்தடக்கையிற்கொண்டான்.

இ-ள். பூவும் - புஷ்பமும், பூநிறம் - பூநிறமுள்ள, அயினியும் - பிரசாதமும் வெண்சோறும், தீபமும் - கர்ப்பூரவிளக்கும், புகையும் - சாம்பிராணிப்புகையும், தாவில் - கலங்குதலில்லாத, பாவனையால் - நினைவினாலே, கொடுத்து - உபசரித்துத்தந்து, அருச்சனை - அர்ச்சனைசெய்வதும், சமைத்தான் - செய்தானாகி, தேவியாவையும் - முப்பத்துமூன்றுதேவர்களையும், உலகமும் - உலகங்களையும், திருத்திய - சிருஷ்டித்த, தெய்வம் - தெய்வத்தன்மையாகிய, கோவில் - திருவுந்திக்கமலமான பெரியவீட்டிலிருக்கிற, நான்முகன்படைக்கலம் - பிரமாஸ்திரத்தை, தடக்கையில் - தனதுநீண்டகையிலே, கொண்டான் - எடுத்தான்—எ-று. தெய்வத்தன்மையாவது இரணியகர்ப்பம். (௫௫)

கொண்டகொற்றவெஞ்சிலைநெடுநாணொடுகூட்டிச்
சண்டவேகத்தமாருதிதோளொடுஞ்சாத்தி
மண்டுளங்கிடமாதிரந்துளங்கிடமதிதோய்
விண்டுளங்கிடமேருவுந்துளங்கிடவிட்டான்.

இ-ள். கொண்ட - இடக்கையிலேபிடித்த, கொற்றம் - வெற்றிபொருந்தின, வெஞ்சிலை - வெவ்வியவில்லினது, நாணொடும் - நாணுடனே, கூட்டி - சேர்த்து, சண்டவேகத்த - அதிகவேகமுள்ள, மாருதி - அனுமாருடைய, தோளொடும் - தோள்களை, சாத்தி - குறித்து, மண்துளங்கிட - பூமியுநடுங்க, மாதிரம்துளங்கிட - திசைகளுநடுங்க, மதிதோய் - சந்திரன்பொருந்தின, விண்துளங்கிட - ஆகாயமுநடுங்க, மேருவும் - மேருமலையும், துளங்கிட - நடுங்க, விட்டான் - பிரயோகித்தான்—எ-று. நெடுநாண் - நீண்டநாரி. (௫௬)

தணிப்பரும்பெரும்படைக்கலந்தழலுமிழ்தறுகட்
பணிக்குலங்களுக்கரசினதுருவினைப்பற்றித்
துணுக்கமுற்றுயர்கலுழனுநடுக்குறச்சுற்றிப்
பிணித்ததப்பெருமாருதிதோள்களைப்பிறங்க.

இ-ள். தணிப்பு - நீக்குதற்கு தடுத்தற்கு, அரு - கூடாத, பெரும்படைக்கலம் - பெருமையுள்ள பிரமாஸ்திரமானது, தழல்உமிழ் - நெருப்பைக்கக்குகிற, தறுகண் - கொடுங்கண்களையுடைய, பணிக்குலங்களுக்கு - பாம்புக்கூட்டங்களுக்கு, அரசனது - ராஜாவானவனுடைய, உருவினைப்பற்றி - உருவைக்கொண்டு, துணுக்கமுற்

று - திகிலடைந்து, உயர் - உயர்ந்த, கலுழனும் - பட்சிராஜனும், நடுக்குற - நடுங்கும்படி, சுற்றி - வந்துசூழ்ந்து, பிணித்தது - கட்டியது, அ - அந்த, பெரு - பெரியவுருவுள்ள, மாருதி - அனுமாருடைய, தோள்களை - புஜங்களை, பிறங்க - தன்வடிவு தோன்ற சுற்றிப்பிணித்தது—எ-று. (௫௭)

திண்ணென்யாக்கையைத்திசைமுகன்படைசென்றுதிருக
அண்ணன்மாருதியன்றுதன்பின்சென்றவறத்தின்
கண்ணினீரொடுங்கனகத்தோரணத்தொடுங்கடைநாள்
தண்ணென்மாமதிகோளொடுஞ்சாய்ந்தெனச்சாய்ந்தான்.

இ-ள். திண்ணென் - கெட்டியென்பதான, யாக்கையை - அனுமாருடம்பை, திசைமுகன் - பிரமாவினுடைய, படைசென்று - அஸ்திரம்போய், திருக - சூழ்ந்து கட்டவே, அண்ணல் - பெருமைகொண்ட, மாருதி - அனுமாரானவர், அன்று - அப்போது, தன்பின் - தம்பின்னே, சென்ற - வந்த, அறத்தின் - தருமத்தினது, கண்ணினீரொடு - கண்ணீரொடு, கனகம் - சுவர்ணமயமான, தோரணத்தொடும்-தோரணகம்பத்துடன்கூட, கடைநாள் - முடிவுகாலத்திலே, தண்ணென் - குளிர்ச்சியுள்ளதென்கிற, மாமதி - பெரியசந்திரனானவன், கோளொடும் - ராகுவென்கிறபாம்புடனே, சாய்ந்தென - கீழேவிழுந்தாற்போல், சாய்ந்தான் - சாய்ந்துவிழுந்தார்—எ-று.

சாய்ந்தமாருதிசதுமுகன்படையெனுந்தன்மை
ஆய்ந்துமற்றிதனாணையையவமதித்தகறல்
ஏய்ந்ததன்றெனவெண்ணினன்கண்முகிழ்த்திருந்தான்
ஓய்ந்ததாமிவன்வலியெனவரக்கன்வந்துற்றான்.

இ-ள். சாய்ந்த - அப்படிக்கீழேவிழுந்த, மாருதி - அனுமாரானவர், சதுமுகன் - பிரமாவினுடைய, படையெனுந்தன்மை - அஸ்திரமென்கிற பெருமையை, ஆய்ந்து - தெரிந்து, மற்றிதன் - இந்த அஸ்திரத்தினுடைய, ஆணையை - ஆக்ஞையை, அவமதித்து - அசட்டைபண்ணி, அகறல் - போகுதல், ஏய்ந்தது - தக்கது, அன்றென - அல்லவென்று, எண்ணினன் - நினைத்தாராய், கண்முகிழ்த்து - கண்களைமூடிக்கொண்டு, இருந்தான் - கிடந்தார், இவன்வலி - இந்தக்குரங்கின்பலமானது, ஓய்ந்தது - அடங்கியது, ஆமென - மெய்யென்று தெரிந்து, அரக்கன் - இந்திரசித்து, வந்துற்றான் - வந்துபார்த்தான்—எ-று. (௫௯)

உற்றகாலையினுயிர்கொடுதிசைதொறுமொதுங்கி
அற்றநோக்கினர்நிற்கின்றவாளெயிற்றரக்கர்
சுற்றும்வந்துடல்சுற்றியதொளையெயிற்றரவைப்
பற்றியீர்த்தனரார்த்தனர்தெழித்தனர்பலரால்.

இ-ள். உற்றகாலையின் - அப்படி அவன்வந்தபோது, உயிர்கொடு - தம்முயிர் தப்பி, திசைதொறும் - நான்கு திக்குகளிலும், ஒதுங்கி - மறைந்து, அற்றம்-அதன் சோர்வை, நோக்கினர் - பார்த்து, நிற்கின்ற - நிற்கிற, வாள் - கத்திபோலும், எயிறு - பற்களையுடைய, அரக்கர் - ராக்ஷதர்கள், சுற்றும்வந்து - சுற்றிலுமிருந்துவந்து, உடல்சுற்றிய - அனுமாருடம்பைச் சூழ்ந்திருக்கிற, தொளை - துவாரம்பொருந்தின, எயிற்று - பற்களையுடைய, அரவை - அந்தப்பாம்பை, பற்றி - பிடித்து, ஈர்த்தனர்-இழுத்தார்கள்சிலர், தெழித்தனர் - அதட்டினார்கள்சிலர், ஆர்த்தனர் - கர்ச்சித்தார்கள், பலர் - அநேகர்—எ-று. (௬0)

குரக்குநல்வலங்குறைந்ததென்றுவலங்கொட்டி
இரைக்குமாநகரெறிகடலொத்ததெம்மருங்கும்
திரைக்குமாசுணம்வாசுகியொத்ததுதேவர்
அரக்கரொத்தனர்மந்தரமொத்தனனநுமன்.

இ-ள். குரக்கு – இந்தக் குரங்கினுடைய, நல்வலம் – மிகுந்தவலிமை, குறைந்ததென்று – அடங்கிற்றென்று, ஆவலம் – கர்வத்தினாலே, கொட்டி – தோள்களைத் தட்டிக்கொண்டு, இரைக்கும் – சத்திக்கின்ற, மாநகர் – அந்தப்பட்டணமானது, எறிகடல் – அலைமோதுகிறகடலை, ஒத்தது – ஒப்பாயிற்று, எம்மருங்கும் – எவ்விடத்திலும், திரைக்கும் – சூழ்ந்திருக்கிற, மாசுணம் – அஸ்திரமானபாம்பு, வாசுகி – வாசுகியென்னும்பாம்பை, ஒத்தது – ஒப்பாயிற்று, தேவர் – அதைப்பற்றியிழுத்ததேவரை, அரக்கர் – ராக்ஷதர்கள், ஒத்தனர் – ஒப்பாயினார்கள், மந்தரம்-மந்தரமலையை, ஒத்தனன் – ஒப்பாயினார், அநுமன் – அநுமார்—எ-று. (௬௧)

கறுத்தமாசுணங்கனகமாமேனியைக்கட்ட
அறத்துக்காங்கொருதனித்துணையாநின்றவநுமன்
மறத்துமாருதம்பொருதநாள்வாளராவரசு
புறத்துச்சுற்றியமேருமால்வரையையும்போன்றான்.

இ-ள். கறுத்த – கருநிறமுள்ள, மாசுணம் – அந்தப்பாம்பு, கனகம் – சுவர்ணமயமான, மாமேனியை – பெரியதமதுடம்பை, கட்ட – சூழ்ந்ததனாலே, அறத்து – தருமத்துக்கு, ஆங்கு – அங்கே, ஒருதனி – ஒருதானே, துணையாய்நின்ற – சகாயமாயிருந்த, அநுமன் – அநுமாரானவர், மறத்து – வீரத்துடனே, மாருதம் – வாயுவானது, பொருதநாள் – வீசும்போது, வாள் – பல்லாகியவாளையுடைய, அராஅரசு – சர்ப்பராஜனாலே, புறத்து – சுற்றிலும், சுற்றிய – சூழ்ந்த, மேருமால்வரையையும் – பெரியமேருமலையையும், போன்றான் – ஒப்பாயினார்—எ-று. அநுமாருடல் ரத்தத்தால் சிவந்திருத்தலாலே செம்பொன்மா மேருவென்றார். (௬௨)

வந்திரைத்தனர்மைந்தருமகளிருமழைபோல்
அந்தரத்தினும்விசும்பினுந்திசைதொறுமார்ப்பார்
முந்தியுற்றதோருவகைக்கோர்கரையிலைமொழியின்
இந்திரன்பிணிப்புண்டநாளொத்ததவ்விலங்கை.

இ-ள். வந்து இரைத்தனர் – அப்போதங்குவந்துசத்தித்தார்கள், மைந்தரும்-புருஷர்களும், மகளிரும் – பெண்களும், மழைபோல் – மேகங்கள்போல், அந்தரத்தினும் – ஆகாயத்திலும், விசும்பினும் – மேகமண்டலத்தினும், திசைதொறும் – மற்ற எந்தத்திக்குகளிலும், ஆர்ப்பார் – முழங்கலானார்கள், முந்தி – அவர்கள் துன்பத்துக்குமுன்னே, உற்றது – வந்ததான, ஒருவகைக்கு – ஒரு சந்தோஷத்துக்கு, ஓர் கரையிலை – ஒரு அளவுமில்லை, மொழியின் – சொல்லுமிடத்திலே, இந்திரன் – முன்னே தேவராஜன், பிணிப்புண்டநாள் – கட்டுப்பட்ட நாளிலுண்டான சந்தோஷத்தை, ஒத்தது – ஒப்பாகச்சந்தோஷிக்கலாயிற்று, அவ்விலங்கை – அந்தவூர்—எ-று. அந்தரத்தினும் அவ்விடத்திலும் விசும்பிலும் ஆகாயத்திலுமெனவுமாம். (௬௩)

பாசப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - ௩௨ - க்கு திருவிருத்தம் - ௧௦௬௬.
கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

பதின்மூன்றாவது,

பிணிவீட்டுபடலம்.

அனுமாரைக் கட்டினது விடுதல்.

வேறு.

எய்யுமினீருமினெறிமின்போழுமின்
கொய்யுமின்குடரினைக்கூறுகூறுகள்
செய்யுமினுலகிடைத்தேய்மின்றின்னுமின்
உய்யுமேலில்லைநம்முயிரென்றோடுவார்.

இ-ள். எய்யுமின் - அம்பாலெய்யுங்கள், ஈருமின் - கத்தியால் வெட்டுங்கள், எறிமின் - ஈட்டியாற்குத்துங்கள், போழுமின் - குடாரியாற்பிளவுங்கள், கொய்யுமின் - சுரிகையாலறுங்கள், குடரினை - இதன்குடலை, கூறுகூறுகள் - துண்டுதுண்டுகளாக, செய்யுமின் - பண்ணுங்கள், உலகிடை - மண்ணிலேகிடத்தி, தேய்மின் - அரையுங்கள், தின்னுமின் - கொய்து கொய்து தின்னுங்கள், உய்யுமேல் - இனி இது பிழைக்குமானல், நம் உயிர் - நம்முடைய உயிர்கள், இல்லை - இல்லையாம், என்று - என்றுசொல்லி, ஓடுவார் - சிலர் ஓடிவருவார்கள்—எ-று. (க)

மைத்தடங்கண்ணியர்மைந்தர்யாவரும்
பைத்தலையரவெனக்கனன்றுபைதலை
இத்தனைபொழுதுகொண்டிருப்பதோவென
மொய்த்தனர்கொலைசெயமுயல்கின்றார்சிலர்.

இ-ள். மை - மையிட்ட, தடம் - விசாலமான, கண்ணியர் - கண்களையுடைய பெண்களும், மைந்தர் - புருஷர்களுங்கூடி, யாவரும் - எல்லாரும், மொய்த்தனர் - நெருங்கினவர்களாக, பை - படத்தை, தலை - தலையிலேயுடைய, அரவென - பாம்பு போல், கனன்று - கோபங்கொண்டு, பைதலை - இந்தக்குரங்குப்பையலை, இத்தனை பொழுதுகொண்டு - இந்நேரமும்வைத்துக்கொண்டு, இருப்பதோ என - இருக்கலாமாவென்று, கொலைசெய - கொல்ல, முயல்கின்றார் சிலர் - சிலர்யுத்தஞ்செய்கிறார்கள்—எ-று. (உ)

நச்சடைபடைகளானலியுமீட்டதோ
வச்சிரமுடன்மறிகடலின்வாய்மடுத்
துச்சியினழுத்துமினுருத்ததின்றெனிற்
கிச்சிடைபிடுமெனக்கிளக்கின்றார்சிலர்.

இ-ள். நச்சு அடை - விஷஜலத்தைக்கொண்ட, படைகளால் - அஸ்திரசஸ்திரங்களாலே, நலியும் - வருத்திக்கொல்லத்தக்க, ஈட்டதோ - தகுதியுள்ளதோ, வச்சிரமுடன் - தலையிலேசேர்த்தவச்சிராயுதத்துடனே, மறிகடலின் - அலைமடங்குகிறகடலின், வாய்மடுத்து - இடத்திலேதள்ளி, உச்சியின் - உச்சந்தலையிலே, அழுத்துமின் - எல்லாருங்கூடி அழுத்துங்கள், இன்று - இப்போது, உருத்தது - கோபங்கொண்டிருப்பதே, எனின் - என்றால், கிச்சிடை - நெருப்பிடை, இடுமென - போகவிடுங்களென்று, கிளக்கின்றார்சிலர் - சிலர்சொல்லுகிறார்கள்—எ-று. (ங)

எந்தையையெம்பியையெம்முனோர்களைத்
தந்தனைபோகெனத்தடுக்கின்றார்பலர்
அந்தரத்தமரர்தமாணையாலிவன்
வந்ததென்றுயிர்கொளமறுகினார்பலர்.

இ-ள். எந்தையை – என்தந்தையையும், எம்பியை – என் தம்பியையும், எம்முனோர்களை – எனக்குமுன்பிறந்தவர்களையும், தந்தனை-கொன்றபழியைத்தந்தாயாகி, போகென – போவென்று, தடுக்கின்றார்பலர்-பலருந்தடுப்பதானார்கள், அந்தரத்து-ஆகாயத்திலுள்ள, அமரர்தம் – தேவர்களுடைய, ஆணையால்-உத்தரவினால், இவன்-இந்தக்குரங்கு, வந்ததென்று – இங்குவந்தகாரியமென்று, உயிர்கொள-அவருயிரை வதைக்க, மறுகினார்பலர் – பலரும்எண்ணி மயங்குகிறார்கள்—எ-று. (௪)

ஓங்கலம்பெருவலியுயிரினன்பரை
நீங்கலமின்றொடுநீங்கினுமினி
ஏங்கலமிவன்சிரத்திருந்தலாற்றிரு
வாங்கலமென்றழுமாதரார்பலர்.

இ-ள். ஓங்கல் – மலைபோல்வதான, பெருவலி – மகாபலத்தைக்கொண்ட, உயிரின் – நமக்குயிர்போன்ற, அன்பரை – நாயகரை, நீங்கலம் – இன்றளவும்பிரியாதிருந்தோம், இன்றொடு – இன்றுமுதலாக, நீங்கினும் – பிரிவதாயினோம், இனி-பிரிந்ததற்காகஇனி, ஏங்கலம் – அழமாட்டோம் ஏனென்றால், இவன் – இந்தக்குரங்கினது, சிரத்து – தலைமேல், இருந்தலால் – இருந்து தாலியறுக்கிறதே அல்லாமல், திருவாங்கலம் – தாலிஅறுக்கமாட்டோம், என்று – என்பதாக, அழும் – அழுகிற, மாதரார்பலர் – பெண்கள்பலர்—எ-று. (௫)

கொண்டனரெதிர்செலுங்கொற்றமாநகர்
அண்டமுற்றதுநெடிதார்க்குமார்ப்பது
கண்டமுற்றுளவருங்கணவர்க்கேங்கிய
குண்டலமுகத்தியர்க்குவகைகூரவே.

இ-ள். கொண்டனர் – இழுத்துக்கொண்டுபோகிறவர்கள், எதிர் – முன்னே, செலும் – வேடிக்கைபார்க்கவருகிற, கொற்றம் – வெற்றியுள்ள அந்த, மாநகர்-பெரிய வூரிலுள்ளவர்கள், நெடிது – அதிகமாக, ஆர்க்கும் – கெர்ச்சிக்கிற, ஆர்ப்பது – சத்தமானது, அண்டமுற்றது – ஆகாசம்போய்முட்டலாயிற்று, கண்டமுற்றுள – கண்டதுண்டப்பட்டிறந்த, அருங்கணவர்க்கு – அருமையானநாயகர்களுக்கு, ஏங்கி – அழுகிற, குண்டலம் – பொன்னோலையணிந்த காதுகளுள்ள, முகத்தியர்க்கு – முகமுள்ள பெண்களுக்கு, உவகை – சந்தோஷம், கூர – அதிகமாக, ஆர்ப்பது-அண்டமுற்றது எ-று. (௬)

வடியுடைக்கனற்படைவயவர்மால்கரி
கொடியுடைத்தேர்பரிகொண்டுவீசலின்
இடிபடச்சிதைந்தமால்வரையினில்லெலாம்
பொடிபடக்கிடந்தனகண்டுபோயினான்.

இ-ள். வடியுடை – கூர்மையுள்ள, கனல் – அக்கினிச் சுவாலையோடு கூடின, படை – அஸ்திரசஸ்திரங்களுள்ள, வயவர் – வீரர்களும், மால்கரி – பெரியயானைக

ளும், கொடியுடை - கொடிகளைக்கொண்ட, தேர் - தேர்களும், பரி - குதிரைகளும், கொண்டு - கையிலேகொண்டு, வீசலின் - தாம் எறிந்ததனலே, இடிபட - இடிந்து, சிதைந்த - தகர்ந்துள்ள, மால்வரையின் - பெரியமலைபோன்ற, இல்லெலாம்-வீடுகெளெல்லாம், பொடிபடக்கிடந்தன - தூள் தூளாகிக்கிடப்பதை, கண்டு - பார்த்துக்கொண்டு, போயினன் - அனுமார்போகலானர்—எ-று. (எ)

முயிறலைத்தெழுமுதுமரத்தின்மொய்ம்புதோள்
கயிறலைப்புண்டதுகண்டுகாண்கிலா
தெயிறலைத்தெழுமிதழரக்கரேழையர்
வயிறலைத்திரியலின்மயங்கினர்பலர்.

இ-ள். முயிறு - ஒருவகைச் செவ்வெறும்புகள், அலைத்து - சூழ்ந்துமொய்த்து, எழும் - சஞ்சரிப்பதான, முதுமரத்தின்-பெரியமரம்போல், மொய்ம்புதோள்-தோள்களும் தோட்புறமும், கயிறு - இந்திரசித்தின்பாசத்தாலே, அலைப்புண்டது-இறுகியிருப்பதை, கண்டு - பார்த்து பின்னும், காண்கிலாது - பார்க்கஅஞ்சி,எயிறு-பற்கள், அலைத்து - மோதுதலாய்வந்து, எழும் - வெளியேதோன்றுகிற, இதழ்-இதழ்களையுடைய, அரக்கரேழையர் - ராக்ஷதப்பெண்கள், வயிறு - தங்கள்வயிற்றை, அலைத்து - பிசைந்துகொண்டு, இரியலின் - ஓடுகிறதினலே, மயங்கினர்பலர் - சோர்ந்துள்ளபெண்கள் அநேகர்—எ-று. (அ)

ஆர்ப்புறவஞ்சினரடங்கினர்பலர்
போர்ப்புறச்செயலினைப்புகல்கின்றார்பலர்
பார்ப்புறப்பார்புறப்பயத்தினற்பதைத்
தூர்ப்புறத்திரியலுற்றோடுவார்பலர்.

இ-ள். ஆர்ப்புற - அதட்டிப்பேச, அஞ்சினர் - பயந்தவர்களாய், அடங்கினர் பலர் - அடங்கிப்போனர்கள் பலபெண்கள், போர்ப்புறம் - சண்டையிலேநடந்த,செயலினை - அனுமார்செய்கைகளை, புகல்கின்றார்பலர் - சொல்லுகிறார்கள் அநேகர், பார்ப்புறப்பார்ப்புற - அனுமாரைப்பார்க்கிறபோது, பயத்தினல் - பயமிகுதியாலே, பதைத்து - துடிதுடித்து, ஊர்ப்புறத்து - ஊருக்குவெளியே, இரியலுற்று-செல்லுதலாகி, ஓடுவார்பலர் - ஓடுகிறவர்கள் அநேகர்—எ-று. (௯)

காந்துறுகதழெயிற்றரவின்கட்டொரு
பூந்துணர்சேர்த்தெனப்பொலியும்வாண்முகம்
தேர்ந்துறுபொருள்பெறவெண்ணிச்செய்யுமின்
வேந்துறல்பழுதெனவிளம்புவார்சிலர்.

இ-ள். காந்துறு - சீறுகின்ற, கதழ் - அசைதலையுடைய, எயிற்று-பற்களோடுகூடின, அரவின்கட்டு - பாம்பாலேகட்டியிருக்கிறது, ஒருபூந்துணர் - ஒரு பூமாலையாலே, சேர்த்தென - கட்டினதுபோல, வாள்முகம் - இந்தக்குரங்கின தொளியுள்ள முகம், பொலியும் - விளங்குகின்றது ஆகையால், தேர்ந்து - ஆலோசித்து, உறுபொருள் - இனிநாம் பெறுங்காரியத்தை, பெற - பெறுதற்கும், எண்ணி-ஆலோசித்து, செய்யுமின் - செய்யுங்கள், வேந்து - அரசனிடத்தே, உறல்-இதைக்கொண்டுபோய் விடுகிறது, பழுதென - வியர்த்தமேயென்று; விளம்புவார்சிலர்-சிலர்சொல்லுகிறார்கள்—எ-று. (௧௦)

ஒளிவருநாகத்துக்கொல்கியன்றுதன்
இளிவரலின்றுபின்னெண்ணம்வேறெனுக்
களிவருசிந்தையாற்காண்டிநங்களைச்
சுளிகலையாமெனத்தொழுகின்றார்சிலர்.

இ-ள். ஒளிவரும் — ஒளியோடுகூடின, நாகத்துக்கு - கட்டியிருக்கிற நாகபாசத்துக்கு, ஒல்கியன்று — தளர்ந்ததல்ல, தன் — இக்குரங்கு தன்னுடைய, இளிவரல்- எளியதன்மை, இன்று - எவ்வளவுமில்லாதிருக்கின்றது, பின் — பின்பு, எண்ணம்- தனதுநினைவு, வேறெனு — வேறேயென்று, களிவரு — இதன் சந்தோஷத்துடனே கூடிவருகிற, சிந்தையால் — மனோதிடத்தினாலே எண்ணம்வேறென்று தெரிந்து, காண்டி நங்களை - ஐயா எங்களைத் தயவுகொண்டு பாரும், சுளி கலையென - கோபஞ் செய்யாதிருப்பீராகவென்று, தொழுகின்றார்சிலர் — சிலர் கும்பிடுகிறார்கள்—எ-று. ஆம் — சாரியை. (௧௧)

பைங்கழலநுமனைப்பணித்தபாந்தளைக்
கிங்கரரொருபுடைகிளர்ந்துபற்றினார்
ஐம்பதினாயிரரளவிலாற்றலர்
மொய்ம்பினினெறுழ்வலிக்கருளன்மும்மையார்.

இ-ள். பைங்கழல் - பசியதான வீரக்கழலையுடைய, அனுமனை - அனுமாரை, பிணித்த — கட்டியிருக்கிற, பாந்தளை - பாம்பை, கிங்கரர் — இராவணனுழியகாரர்கள், ஒருபுடை — ஒருபக்கத்திலேகூடி, கிளர்ந்து — மேன்மேலாகி, பற்றினார் - பிடித்திழுக்கலானார்கள் அவர்களோ, ஐம்பதினாயிரர் - ஐம்பதினாயிரம்பேர்களான, அளவில் - கணக்கில்லாத, ஆற்றலர் - பலமுள்ளவர்கள், மொய்ம்பினின் — தங்கள் புஜபலத்தினாலே, எறுழ்வலி — மிக்கவலிமையுள்ள, கருளன் - கருடனிலும், மும்மையார்- மூன்றுபங்கதிகமானவர்கள்—எ-று. ஒருபுடையென்றதனானே மற்றொருபுடைக்கு மவ்வளவினரேயென்பதுகொள்க. (௧௨)

திண்டிறலரக்கர்தஞ்செருக்குச்சிந்துவான்
தண்டவிறன்னுருக்கரந்ததன்மையான்
மண்டமர்தொடங்கினன்வானரத்துருக்
கொண்டனனந்தகன்கொல்லென்றார்பலர்.

இ-ள். திண்திறல் - மிக்கபலமுள்ள, அரக்கர்தம் - ராக்ஷதர்களுடைய, செருக்கு - மனக்களிப்பை, சிந்துவான் — போக்குதற்கு, தண்டவில் — நீங்குதலில்லாத, தன்உரு — தன்வடிவை, கரந்த - மறைத்துள்ள, தன்மையான் — குணமுள்ளவனாகி, மண்டுஅமர் - நெருங்கின இந்தச்சண்டையை, தொடங்கினன் — ஆரம்பித்துச்செய்தவன், வானரத்துரு — குரங்குவடிவை, கொண்டனன் — கொண்டுவந்தவனே, அந்தகன்கொல் — ஆனவிவன் யமன்தானோ, என்றார்பலர் - என்றுபலருஞ்சொல்லலானார்கள்—எ-று. (௧௩)

அரமியத்தலந்தொறுமம்பொன்மாளிகைத்
தரமுறுநிலைதொறுஞ்சாளரந்தொறும்
முரசெறிகடைதொறுமிரைத்துமொய்த்தனர்
கிரைவளைமகளிருநிரைந்தமைந்தரும்.

இ-ள். அரமியத்தலந்தொறும் - நிலாமுற்றங்களிலும், அம்பொன் - அழகான பொன்மயமான, மாளிகை - வீடுகளின், தரமுறு - இடமுள்ள தகுதியுள்ள, நிலைதொறும் - நிலைவாயில்களிலும், சாளரந்தொறும் - சன்னல்களிலும், முரசுஎறி-பேரிகையடிக்கிற, கடைதொறும் - இடங்களிலும், இரைத்து - சத்தித்தவர்களாக, மொய்த்தனர் - வேடிக்கைபார்க்கக்கூடினர்கள், நிரை - வரிசையான, வளை - வளையல்களணிந்த, மகளிரும் - பெண்களும், நிறைந்த - வரிசைவரிசையாகக்கூடின, மாந்தரும் - புருஷர்களும்—எ-று. (௧௪)

கயிலையினொருதனிக்கணிச்சிவானவன்
மயிலியற்சீதைதன்கற்பின்மாட்சியால்
எயிலுடைத்திருநகர்சிதைப்பவெய்தினன்
அயிலெயிற்றொருகுரங்காயென்பார்பலர்.

இ-ள். கயிலையின் - வெள்ளிமலையிலிருக்கிற, ஒருதனி - ஒப்பில்லாத ஒருவரான, கணிச்சிவானவன் - சூலபாணியானமகாதேவர், மயிலியல் - மயிற்சாயலைக்கொண்ட, சீதைதன் - சீதாபிராட்டியினுடைய, கற்பின்மாட்சியால்-பதிவிரதாநிலையின் பெருமையினாலே, எயிலுடை - மதில்களையுடைய, திருநகர் - இந்த இலங்கையை, சிதைப்ப - அழிக்க, எய்தினன் - வந்தார், அயில் - கூரிய, எயிற்று - பற்களையுடைய, ஒருகுரங்காய் - ஒருகுரங்குவடிவாக, என்பார்பலர் - என்றுசொல்கிறவர்களநேகர்—எ-று. (௧௫)

அரம்பையர்விஞ்சைநாட்டளகவல்லியர்
நரம்பினுமினியசொனாகநாடியர்
கரும்பியல்சித்தியரியக்கர்கன்னியர்
வரம்பறுசும்மையர்தலைமயங்கினர்.

இ-ள். அரம்பையர் - ரம்பைகளும், விஞ்சைநாட்டு - வித்தியாதரர்நாட்டிலேயுள்ள, அளகம் - கூந்தலைக்கொண்ட, வல்லியர் - கொடிபோன்றவர்களும், நரம்பினும் - வீணைகானத்திலும், இனியசொல் - இன்சொற்களைக்கொண்ட, நாகநாடியர்-நாகலோகத்துக்கன்னிகளும், கரும்புஇயல் - கரும்புபோல் அனுபவரசமுள்ள, சித்தியர் - சித்தகன்னிகளும், இயக்கர்கன்னியர் - யக்ஷகன்னிகளும், வரம்புஅறு - அளவற்ற, சும்மையர் - சத்தமுள்ளவர்களாகி, தலை - எவ்விடங்களிலும், மயங்கினர்-வந்துகூடினர்கள்—எ-று. (௧௬)

நீரிடைக்கண்டுயினெடியநேமியும்
தாருடைத்தனிமலருலகின்றாதையும்
ஒருடற்கொண்டுதம்முருவமாற்றினர்
பாரிடைப்புகுந்தனர்பகைத்தென்பார்பலர்.

இ-ள். நீரிடை - ஜலத்திலே, கண்துயில் - நித்திரைசெய்கிற, நெடிய - நீண்டுயர்ந்த, நேமியும் - சக்கராயுதக்கடவுளும், தாருடை - தண்டுநீளுதலுடைய, தனிமலர் - ஒருபூவிலேயிருக்கிற, உலகின்தாதையும் - லோகசிருஷ்டியனான பிரமாவும், ஒருடற்கொண்டு - ஒரேசரீரமாகி, தம்உருவம் - தங்கள்வடிவை, மாற்றினர் - மறைத்தவர்களாக, பாரிடை - இந்தஇலங்கையிலே, புகுந்தனர் - வந்தார்கள், பகைத்து-நம்மோடுபகைகொண்டு, என்பார்பலர் - என்றுசொல்லுகிறவர்களநேகர்—எ-று. ()

அரக்கருமரக்கியர்குழாமுமல்லவர்
கரக்கிலர்நெடுமழைக்கண்ணினீரது

விரைக்குழற்சீதைதன்மெலிவுநோக்கியோ
இரக்கமோவறத்தினதெண்மையேகொலோ.

இ-ள். அரக்கரும் - ராக்ஷதர்களும், அரக்கியர்குழாமும் - ராக்ஷதிகள்கூட்டமும், அல்லவர் - அல்லர்தமற்றையோர்களும், நெடு - நீண்ட, மழை-மழைபோன்ற, கண்ணினீர் - கண்களினீரைஒழுகவிடுதலே, கரக்கிலர் - இல்லாதிருக்க இல்லே, அது - அழவேண்டாதவர்களும் அழுகிறது, விரை - மணம்பொருந்தின, குழல்-கூந்தலேயுடைய, சீதைதன் - சீதாபிராட்டியின், மெலிவு - இளேத்தலே, நோக்கியோ-குறித்தோ, இரக்கமோ - அனுமார்மேலுள்ளஇரக்கத்தினுலோ, அறத்தினது - தருமத்துக்குண்டான, எண்மையேகொல் - எளிவரவைக்குறித்தோ—எ-று. ராக்ஷதர்களும் - ராக்ஷதிகளும் அழுகிறது ராக்ஷதர்களிறந்ததைக்குறித்து மற்றையோரும் அழுகிறது இராவணனுக்கு மெய்க்காட்ட என்பதுகருத்து, அதாவது இராவணனிடத்தில் அன்புள்ளவர்களென்று அவனெண்ண. (கஅ)

ஆண்டொழிலநுமனுமவரொடேகினுன்
மீண்டிலன்வேறிலன்விரும்பலுற்றிலன்
ஈண்டிதுவேதொடர்ந்திலங்கைவேந்தனேக்
காண்டலேநலனெனக்கருத்தினெண்ணினுன்.

இ-ள். ஆண்தொழில் - ஆண்மைத்தொழிலிற்சிறந்த, அனுமனும் - அனுமாரானவர், அவரோடு - அவர்களுடன்கூட, ஏகினுன் - ஒன்றுஞ்செய்யாது போகிறவராய், மீண்டிலன் - வாரேனென்று திரும்புதலுமில்லேயாய், வேறிலன் - வேருென்றுஞ்செய்வதில்லேயாய், விரும்பலுற்றிலன் - தம்மைக்கட்டிக்கொண்டு போகிறதற்கும் சந்தோஷமில்லேயாய், ஈண்டு - இப்போதுசெல்லுகிற, இதுவே - இந்தச்செல்லுகையேகாரணமாக, தொடர்ந்து - இவர்கள்கூடப்போய், இலங்கைவேந்தனே - இராவணனே, காண்டலே - கண்டுபேசுகிறதே, நலனென-நல்லகாரியமென்று, கருத்தின் - தமதுள்ளத்திலே, எண்ணினுன் - நினைத்தார்—எ-று. (ககூ)

எந்தையதருளினுமிராமன்சேவடி
சிந்தைசெய்நலத்தினுஞ்சீதைவானவர்
தந்துளவரத்தினுந்தறுகட்பாசமும்
சிந்துவெனயர்வுறுசிந்தைசீரிதால்.

இ-ள். எந்தையது - என்பிதாவினுடைய, அருளினும் - தயவினுலும்,இராமன் - ஸ்ரீராமனுடைய, சேவடி - சிவந்தபாதங்களே, சிந்தைசெய் - தியானிக்கின்ற, நலத்தினும் - நன்மையினுலும், சீதை - சீதாபிராட்டியும், வானவர் - தேவர்களும், தந்துள - கொடுத்திருக்கிற, வரத்தினும் - வரபலத்தினுலும், தறுகண் - என்னேக்கட்டியிருக்கிற கொடுமையுள்ள, பாசமும் - கயிற்றையும், சிந்துவென்-அறப்பண்ணுவேன் ஆனுலும், அயர்வுறு - இந்தவேளேயி லிப்பாசத்துக்காக இளேத்தவனுகியிருக்கிற, சிந்தை - மனநினேவே, சீரிது - நன்ருனது—எ-று. (உ0)

வளேயெயிற்றரக்கனேயுற்றுமந்திரத்
தளவுறுமுதியருமறியவாணேயால்
விளேவினேவிளம்பினுன்மிதிலேநாடியை
இளகினனென்வயினீதலேயுமால்.

இ-ள். வளேயெயிறு - வளேந்தபற்களேயுடைய, அரக்கனே - ராவணனே, உற்று - போய்க்கண்டு, மந்திரத்து - அவனுலோசனேயில், அளவுறு - அடங்குதலான,

முதியரும் — விருத்தர்களும், அறிய-தெரிவதாக, ஆணையால் — சுககிரீவன் சொன்னதாக, விளைவினை - நடக்கப்போகிறதை, விளம்பினல் — நான்சொன்னல், மிதிலைநாடியை — சீதாபிராட்டியை, இளகினன் — மனந்திருந்தினவனகி, என்வயின் - என் வசமாகவே, ஈதலேயும் — கொடுப்பதும்கூடும்—எ-று. (உக)

அல்லதூஉவமனுடைத்துணைவராயினர்க்
கெல்லையுந்தெரிவுறுமெண்ணுந்தேறலாம்
வல்லவனிலைமையுமனமுந்தேறலாம்
சொல்லுகமுகமெனுந்தூதுசொல்லவே.

இ-ள். அல்லதூஉம் — அதைஅல்லாமலும், அவனுடை — அவனுடைய, துணைவர் — உதவியானவர்களாக, ஆயினர்க்கு — கூடியிருப்பவர்களுடைய, எல்லையும்-அளவும், தெரிவுறும் — தெரிவதாகும், எண்ணும் — அவனினைவும், தேறலாம் — தெரிந்துகொள்ளலாம், வல்லவன் — வல்லனன அவனுடைய, நிலைமையும் — சுவபாவமும், மனமும் - மனேதிடமும், தேறலாம் — தெளிந்துகொள்ளலாம், முகம் — ராவணன்முன்னே, சொல்லுகஎனும் - சொல்லக்கடவையென்கிற, தூதுசொல்லவே-தூதுசொல்லுதலாலே—எ-று. (உஉ)

வாலிதன்னிறுதியுமரத்துக்குற்றதும்
கூலவெஞ்சேனையின்குணிப்பிலாமையும்
மேலவன்காதலன்வலியுமெய்ம்மையான்
நீனிறத்திராவணனெஞ்சினிற்குமால்.

இ-ள். வாலிதன் - வாலியினுடைய, இறுதியும் — சாவும், மரத்துக்கு - மராமரத்துக்கு, உற்றதும் - துவாரமானதும், கூலம்-வால்களுள்ள குரங்குகளின், வெஞ்சேனையின் - வெவ்வியசேனைகளுடைய, குணிப்பில்லாமையும் — அளவில்லாதமையையும், மேலவன்காதலன் - சூரியகுமாரனன சுக்கிரீவனுடைய, வலியும் - பலமும், மெய்மையால் — மெய்யாகவே, நீலநிறத்து — கரியநிறமுள்ள, இராவணன்-இராவணனுடைய, நெஞ்சில் — மனத்திலே, நிற்கும் — நிலைபெறுவனவாம்—எ-று. (உ௩)

ஆதலானரக்கனையெய்தியாற்றலும்
நீதியுமனக்கொளநிறுவிநின்றவும்
பாதியின்மேற்செலநூறிப்பையப்
போதலேகருமமென்றநுழன்போயினன்.

இ-ள். ஆதலான் - ஆகையால், அரக்கனையெய்தி — ராவணனைக்கண்டு, ஆற்றலும் - ஸ்ரீராமனுடையபலமும், நீதியும் — அவருடையநன்மார்க்கமும், மனக்கொள-அவன்மனத்திலேபட, நிறுவி - நிலைபெறச்செய்து, நின்றதும் - சாவாதிருக்கிற சேனைகளிலே, பாதியின்மேற்செல — பாதிக்குமேலாக, பையபைய நூறி — கொஞ்சங்கொஞ்சமாக, அழித்துவிட்டு, போதலே — போகிறதே, கருமமென்று — காரியமென்று யோசித்துக்கொண்டு, அனுமன்போயினன் — அனுமார்போனர்—எ-று. (உ௪)

கடவுளர்க்கரசனைக்கடந்ததோன்றலும்
புடைவரும்பெரும்படைப்புணரிபோர்த்தெழ
விடைபிணிப்புண்டதுபோலும்வீரனைக்
குடைகெழுமன்னனிற்கொண்டுபோயினன்.

இ-ள். கடவுளர்க்கு – தேவர்களுக்கு, அரசனை – ராஜனான இந்திரனை, கடந்த – வென்ற, தோன்றலும் – மேகநாதன், புடைவரும் – தன்கூடவருகிற, பெரும்படை – பெரியசேனைகளின், புணரி – கடலானது, போர்த்தெழ – சூழ்ந்துவர, விடை – ஒருருஷபம், பிணிப்புண்டது – கட்டுப்பட்டது, போலும் வீரனை – போன்ற அனுமாரை, குடைகெழு – பூச்சக்கிரக்குடையையுடைய, மன்னனில் – அரசனான ராவணனிடம், கொண்டுபோயினான் – கொண்டுபோனான்—எ-று. (உ௫)

தூதுவரோடினர்தொழுதுதொல்லைநாள்
மாதிரங்கடந்தவற்குறுகிமன்னநின்
காதலன்மரைமலர்க்கடவுள்வாளியால்
ஏதில்வானரம்பிணிப்புண்டதாமென்றார்.

இ-ள். தூதுவர் ஓடினார் – தூதரோடிப்போய், தொழுது – ராவணனை வணங்கி, தொல்லைநாள் – முன்னாளிலே, மாதிரம் – திசைகளையெல்லாம், கடந்தவன்-ஜெயித்தராவணனை, குறுகி – பார்த்து, மன்ன – அரசனே, நின் காதலன் – உன் புத்திரனுடைய, மரைமலர்க்கடவுள் வாளியால் – பிரமாஸ்திரத்தினாலே, ஏதில் – நம்மில்வேறான, வானரம் – குரங்கு, பிணிப்புண்டது – கட்டுப்பட்டது, ஆமென்றார்-மெய்யேயென்றார்கள்—எ-று. (உ௬)

கேட்டலுங்கிளர்சுடர்க்கேட்டவானென
வீட்டிருள்விழுங்கியமார்பின்யானையின்
கோட்டெதிர்பொருதபேராரங்கொண்டெதிர்
நீட்டினனுவகையினிமிர்ந்தநெஞ்சினான்.

இ-ள். கேட்டலும் – அச்சொற்கேட்டவுடனே, கிளர் – விளங்குகிற, சுடர்-சூரியசந்திரர்களை, கேட்ட - இல்லாதிருக்கிற, வானென - ஆகாயம்போல், ஈட்டிருள் – செறிந்த இருளை, விழுங்கிய – கபளீகரித்த, மார்பில் – கரியமார்பிலே, யானையின்கோட்டு – திக்கியானைகளின் கொம்புக்கு, எதிர் – முன்னே, பொருத - பொருதவிட்டணிந்த, பேராரம் – பெரியமுத்துமாலையைதன்மார்பின்மாலையை, கொண்டு-கழற்றி, எதிர் - சொன்னவர்களுக்குமுன்னே, நீட்டினன் – வெகுமானமாகக் கொடுத்தான், உவகையில் – சந்தோஷத்தினாலே, நிமிர்ந்த – உயர்ந்த, நெஞ்சினான் – மனமுள்ளவன்மார்பினிருணிறத்தை விழுங்கிய பேராரமெனக்கூட்டுக—எ-று. (உ௭)

எல்லையிலுவகையாலிவர்ந்ததோளினன்
புல்லுறமலர்ந்தகட்குமுதப்பூவினன்
ஒல்லையினோடிநீருரைத்தெனதாணையால்
கொல்லலிர்தருகெனக்கூறுவீரென்றான்.

இ-ள். எல்லையில் – அளவில்லாத, உவகையால் – சந்தோஷத்தினாலே, இவர்ந்த – உயர்ந்த, தோளினன் - தோள்களையுடையராவணன், புல்லுற – அந்தக்குரங்கைக்காண, மலர்ந்த - விகசிதமான, கண் - கண்கள், குமுதப் பூவினன் – செவ்வல்லிப்பூப்போற்சிவந்தவனாகி, ஒல்லையின் – விரைவிலே, ஓடிநீர் – நீவிரோடிப்போய், உரைத்து - சொல்லி, என் ஆணையால் – என் உத்தரவின்படியே, கொல்லலீர்-கொல்லாமல்நீவிர், தருகென – கொண்டுவாருங்களென்று, கூறுவீர் என்றான் - சொல்லக்கடவீர்களென்றான்—எ-று. (உ௮)

அவ்வுரைதூதருமாணையால்வரும்
தெவ்வுரைநீக்கினனறியச்செப்பினர்
இவ்வுரைநிகழ்வுழியிருந்தசீதையாம்
வெவ்வுரைநீங்கினணிலைவிளம்புவாம்.

இ-ள். அவ்வுரை — அந்தச்சொல்லை, தூதரும் — தூதர்கள்போய், ஆணையால்- ஆக்ஞையுடனே, வரும் - வருகிற, தெவ் உரை - சத்துருவென்னும் சொல்லை, நீக்கினன் — போக்கடித்த இந்திரசித்துக்கு, அறிய-தெரிய, செப்பினர் - சொன்னார்கள், இவ்வுரை - அனுமார்பிடிபட்ட இந்தச்சொல், நிகழ்வுழி — எங்கும் பிரசித்தமானபோது, இருந்த — சிறையிலிருந்த, சீதையாம் - சீதாபிராட்டியான, வெவ்வுரை - கொடுஞ்சொற்களை, நீங்கினன் - சொல்லாதிருக்கிறவள், நிலைவிளம்புவாம் — நிலையைச்சொல்லக்கடவோம்—எ-று. கோபங்கொண்டு-சாபமிடாதிருக்கிறவளென்க. (௪௯)

இறுத்தனன்கடிபொழிலெண்ணிலோர்பட
ஒறுத்தனனென்றுகொண்டுவக்கின்றுளுயிர்
வெறுத்தனள்சோர்வுறவீரற்குற்றதைக்
கறுத்தலில்சிந்தையாள்கவன்றுகூறினள்.

இ-ள். கடிபொழில் - இந்தக்காவலுள்ளசோலையை, இறுத்தனன் — ஒடித்தழித்தான், எண்ணிலோர்பட — அளவற்றவர்கள்சாவ, ஒறுத்தனன் - கொன்றான், என்றுகொண்டு - என்றுசொல்லக்கேட்டு, உவக்கின்றுள் - சந்தோஷிக்கிற பிராட்டி, உயிர்வெறுத்தனள் - தன் உயிரைவேண்டாளாகி, சோர்வு உற - தளர்ச்சி அதிகமாக, வீரற்கு - அனுமாருக்கு, உற்றதை - வந்த ஆபத்தையெண்ணி, கறுத்தலில்- பின்னும்கோபித்தலில்லாத, சிந்தையாள் — மனமுள்ளவளாய், கவன்று - அதிக துன்பங்கொண்டு, கூறினள் - சொல்லலானுள்—எ-று. (௫௦)

வேறு.

ஓவியம்புகையுண்டதுபோலொளிர்
பூவின்மெல்லியன்மேனிபொடியுறப்
பாவிவேடன்கைபார்ப்புறப்பேதுறும்
தூவியன்னமன்னளிவைசொல்லினள்.

இ-ள். ஓவியம் - சித்திரமானது, புகையுண்டதுபோல் - புகையிற்படிந்தாற்போல், ஒளிர் - விளங்குகின்ற, பூவில் - புஷ்பம்போன்ற, மெல்லியல் - மிருதுவேசுவபாவமாகவுள்ள, மேனி — திருமேனியானது, பொடி உற - மண்தூளியிலே விழ, பாவி - கொலைசெய்கிற பாவியான, வேடன்கை - ஒருவேடன் கையிலேதன், பார்ப்புற - குஞ்சு அகப்பட்டுக்கொள்ள, பேதுறும் — அதனாலே வருத்தப்படுகிற, தூவி- இறகையுடைய, அன்னம் — அன்னபட்சியை, அன்னள் - ஒப்பானவளாகி, இவை- இவ்வார்த்தைகளை, சொல்லினள் - சொல்லலானுள்—எ-று. குஞ்சைப் பிடிகொடுத்த அன்னம்போற் புலம்புகிறுளென்று கருத்து. (௫௧)

உற்றுண்டாயவிசும்பையுருவினுய்
முற்றுண்டாய்கலையாவையுமுற்றுறக்
கற்றுண்டாயொருகள்ளவரக்கனுல்
பற்றுண்டாயிதுவோவறப்பான்மையே.

இ-ள். உற்று – என்னிடம்வந்து, உண்டாய – அளவில்லாதிருக்கிற, விசும்பை – ஆகாயவரையும், உருவினுய் – அளவி நின்றவனுகி, முற்றுண்டாய் – முழுதுநீயேயாய், கலையாவையும் – கலைஞானங்களெல்லாம், முற்றுற-நிரம்ப,கற்றுண்டாய்-கற்றறிந்தவனுமானநீ, ஒருகள்ளம் – ஒருதிருட்டுத்தனமுள்ள, அரக்கனுல் – ராட்சதனுலே, பற்றுண்டாய் – பிடிபடலானுய் ஆனுல், அறப்பான்மை – தருமநிலை,இதுவோ – இவ்வளவுதானே, என்றுல் – தருமநிலை சரியல்லவென்றபடி—எ-று. (௧௨)

கடர்கடந்துபுகுந்தனைகண்டகர்
உடர்கடந்துநின்னூழிகடந்திலை
அடர்கடந்ததிரள்புயத்தையநீ
இடர்கடந்தனைவந்திடர்மேலுமே.

இ-ள். கடர்கடந்து – கடலைக்கடந்து, புகுந்தனை – வந்தாய், கண்டகர் – ஹிம்சகருடைய, உடர் – சரீரதிடமெல்லாம், கடந்தும் – வெல்லலாகியும், நின்ஊழி-உனதுநெடுங்கால அளவை, கடந்திலை – போக்கிக்கொள்ளலை, அடர்கள் – ஜயங்களையே, தந்த – செய்துகொண்டுநின்ற, திரள் – திரண்ட, புயத்து – புஜங்களையுடைய, ஐயநீ-என் அப்பனேநீ, இடர் – என் துன்பமெல்லாம், கடந்தனை – போக்கினுய், மேலும்-பின்னும் எனக்கு, இடர்வந்து – துன்பம்வரலாயிற்று, கடர் – உடர் – அடர் – என்பவைகளினிறுதி லகரம் ரகரமாதல்போலி – வந்தது என்பதில் ஒருயிர்மெய்தொகுத்தல் – ஊழிகடந்திலை என்பது உன் ஆயுளுக்கு ஒருகுறைவுமில்லாதிருக்கிறுயென்றுதுணிவு—எ-று. (௧௩)

ஆழிகாட்டியென்னுருயிர்காட்டினுய்க்
கூழிகாட்டுவனென்றுரைத்தேனது
வாழிகாட்டுமென்றுண்டுன்வரைப்புயப்
பாழிகாட்டியருபழிகாட்டினுய்.

இ-ள். ஆழிகாட்டி – பெருமாள்மோதிரத்தை நான்காணக்கொடுத்து, என் ஆருயிர் – எனதருமையானவுயிரை, காட்டினுய்க்கு – என்னுடலிலே நிலைபெறச்செய்தவுனக்கு, ஊழிகாட்டுவென் – சிரஞ்சீவியான நிலைதந்தேன், என்றுரைத்தேன்-என்றுவாழ்த்தினேன், அது-அப்படிநான்வாழ்த்தினது, வாழிகாட்டுமென்று-உனக்குச்சாவாத நிலையையே தருமென்பது, உண்டு – தவருகாது ஆனுல், உன்வரை-உனது மலைபோன்ற, புயப்பாழி – புஜபலத்தை யாவரும், காட்டி – தெரியச்செய்து, அரும்பழி – முடிவிலே அரிதான பழிப்பை, காட்டினுய் – அடைதலானுய்—எ-று. இதற்கென்செய்கேன். (௧௪)

கண்டுபோயினைநீணெறிகாட்டிட
மண்டுபோரினரக்கனைமாய்த்தெனைக்
கொண்டுமன்னவன்போமெனுங்கொள்கையைத்
தண்டினுயெனக்காருயிர்தந்தநீ.

இ-ள். நீள்நெறி – இப்போதுநீண்ட வீதிமார்க்கத்தை, காட்டிட – நீகாணக்கட்டி யிழுத்துக்கொண்டுபோக, கண்டுபோயினை – நீபார்த்துக்கொண்டே போவதானுய் ஆதலால், அரக்கனை – இந்தராவணனை, மண்டுபோரில் – நெருங்கினசண்டைசெய்கிறதினுலே, மாய்த்து – அழித்துக்கொன்று, எனைக்கொண்டு – என்னைக்கூட்டிக்கொண்டு, மன்னவன் – சக்ரவர்த்தித்திருமகன், போமெனுங்கொள்கையை-போ

வாரென்று நான் திடங்கொண்டிருப்பதை, தண்டினய் - நீபிடிபடுதலாலே தடைசெய்தாயானுய், எனக்கு — தனியே யிருக்கிற எனக்கு, ஆருயிர் — அருமையானபிராணவுதவி, தந்தநீ — செய்த நீராமனிடம்போகாமல் தண்டினு யென்றுகருத்து—எ-று.

ஏயப்பன்னினளின்னனதன்னுயிர்
தேயக்கன்றுபிடியுறத்தீங்குறு
தாயைப்போலத்தளர்ந்துமயர்ந்தனள்
தீயைச்சுட்டதொர்கற்பெனுந்தீயினுள்.

இ-ள். இன்னன - இப்படிப்பட்டவைகளைச்சொல்லி, ஏயப்பன்னினள்-அதிகமாகப்புலம்பினுள், தன் உயிர் - தன்பிராணன், தேய — குறைவுபாடாகப்பன்னினள், கன்று — தன்கன்ருனது, பிடியுற - ஒருவன்கையிலகப்படுதலாகவே அதனுலே, தீங்கு உறு — துன்பமிகுதியாகுகின்ற, தாயைப்போல — தாய்ப்பசுவைப்போல்,தளர்ந்தும் — தளர்ச்சியானதேயன்றி, அயர்ந்தனள் — மூர்ச்சையுமாயினுள், தீயை — நெருப்பையும், சுட்டது — சுடலர்னதான, ஓர் — ஒரு, கற்பெனும் - பதிவிரதாநிலையென்கிற, தீயினுள் - நெருப்பையுடையவள்—எ-று. (௩௬)

பெருந்தகைப்பெரியோனைப்பிணித்தபோர்
முருந்தன்மற்றையுலகொருமூன்றையும்
அருந்தவப்பயனுலரசாள்கின்ருன்
இருந்தவப்பெருங்கோயில்சென்றெய்தினுன்.

இ-ள். பெருந்தகைப்பெரியோனை — பெரியதகுதியுள்ள அனுமாரை, பிணித்த — கட்டின, போர்முருந்தன - சமர்த்தினுலே பிரசித்தனுன இந்திரசித்து, மற்றையுலகொரு மூன்றையும் — திரிலோகத்தையும், அருந்தவப்பயனுல் — அரிதானதபோபலத்தினுலே, அரசாள்கின்ருன் — அரசாளுகிறராவணன், இருந்த — கொலுவிருக்கிற, அப்பெருங்கோயில் — அந்தப்பெரிய சபாமண்டபத்தை, சென்றெய்தினுன் - போய்ச்சேர்ந்தான், முருந்து வெண்மை — புகழ்—எ-று. (௩௭)

வேறு.

தலங்கண்மூன்றிற்கும்பிறிதொருமதிதழைத்தென்ன
அலங்கல்வெண்குடைதண்ணிழலவிரொளிபரப்ப
வலங்கொடோளினுன்மண்ணின்றுவானுறவெடுத்த
பொலன்கொண்மாமணிவெள்ளியங்குன்றெனப்பொலிய.

இ-ள். தலங்கள்மூன்றிற்கும் — ஒருதிரிலோகத்திற்கும், பிறிதுஒருமதி-வேறேஒருசந்திரன், தழைத்தென்ன - உதயமானுற்போல், அலங்கல்-முத்துக்குஞ்சங்களசைகிற, வெண்குடை — வெள்ளைக்குடையானது, தண்நிழல் — குளிர்ந்த காந்தியாகிய, அவிரொளி - விளங்குமொளியை, பரப்ப — விரிக்கவும், வலங்கொள் — பலங்கொண்ட, தோளினுன் - புஜங்களையுடைய அந்தராவணன், மண்ணின்று - பூமியிலிருந்து, வான்உற — ஆகாயத்தைப்பொருந்த, எடுத்த-தூக்கின, பொலங்கொள்-பொன்னிலேகொண்ட, மாமணி — பெரியரத்நங்களையுடைய, வெள்ளியங்குன்றென-வெள்ளிமலைபோல் வெள்ளையாகவும், பொலிய — அவன்தலைக்குமேலே பூரணச்சந்திரன்போல் வட்டமாகவும் விளங்க—எ-று. மலையிலும் குடையிலும் பொன்னும் மணியும் உண்டெண்பதுகொள்க. (௩௮)

புள்ளுயர்த்தவன்றிகிரியும்புரந்தரனயிலும்
தள்ளின்முக்கணன்கணிச்சியுந்தாக்கியதழும்பும்
கள்ளுயிர்க்குமென்குழலியர்முகிழ்விரற்கதிர்வாழ்
வள்ளுகிர்ப்பெருங்குறிகளும்புயங்களின்வயங்க.

இ-ள். புள் உயர்த்தவன் - கருடக்கொடியையுடைய விஷ்ணுவின், திகிரியும்- சக்கரமும், புரந்தரன் - இந்திரனுடைய, அயிலும் - வச்சிராயுதமும், தள்ளில் - யாதொன்றாலும் தள்ளப்படாத, முக்கணன் - சிவனுடைய, கணிச்சியும் - சூலாயுதமும், தாக்கிய - பட்டதனாலான, தழும்பும் - காயங்களும், கள் உயிர்க்கும் - தேனைப் பெறுவதான, மென் - மிருதுவான, குழலியர் - கூந்தலையுடைய பெண்களின், முகிழ் - தாமரை அரும்புபோன்ற, விரல் - விரல்களிலுள்ள, கதிர்வாள் - ஒளியுள்ள கத்திபோன்ற, வள் - கூரியதான, உகிர் - நகங்களாலாகிய, பெருங்குறிகளும் - பெரிய சின்னங்களும், புயங்களில் - தோள்களிலே, வயங்க - விளங்க—எ-று. (௩௯)

துன்றுசெம்மயிர்ச்சுடர்நெடுங்கற்றைகள்சுற்றி
நின்றுதிக்குறநிரல்படக்கதிர்க்குழாநிமிர
ஒன்றுசீற்றத்தினுயிர்ப்பெனும்பெரும்புகையுயிர்ப்பத்
தென்றிசைக்குமோர்வடவனறிருத்தியதென்ன.

இ-ள். துன்று - நெருங்கின, செம்மயிர் - சிவந்தரோமங்களின், சுடர் - பிரகாசமான, நெடுங்கற்றைகள் - நீண்டதிரட்சிகள், சுற்றி - சூழ்ந்து, நின்று-நிலைகொண்டு, திக்கு உற - திசைகளெல்லாந்தெரிய, நிரல்பட - வரிசைவரிசையாய், கதிர்க்குழாம் - சிவந்த ஒளிப்பிழம்பு, நிமிர - அவன்கருமேனிமேல் நிமிர்தலாக, ஒன்று- அவைகளுடனே கூடின, சீற்றத்தின் - கோபத்தினாலாகிய, உயிர்ப்பெனும் - சுவாசமென்கிற, பெரும்புகை - மிகுந்தபுகைகள், உயிர்ப்ப - உண்டாக, மயிராலும்-சுவாசத்தாலும், தென்திசைக்கும் - தெற்குக்கடலுள்ளும், ஓர்வடவனல் - ஒருவடவாக்கினியை, திருத்தியதென்ன - சிருஷ்டித்துவைத்தாற்போல்விளங்க—எ-று. (௪0)

மரகதக்கொழுங்கதிரொடுமாணிக்கநெடுவாள்
நரகதேயத்துணடுக்குறுவிருளையுநக்கச்
சிரமனைத்தையுந்திசைதொறுந்திசைதொறுஞ்செலுத்தி
உரகர்கோனினிதரசுவீற்றிருந்தனனொப்ப.

இ-ள். மரகதக்கொழுங்கதிரொடு - மரகதமணியினது செழுமையானசோதியுடனே, மாணிக்கநெடுவாள் - மாணிக்கமணியினது நீண்டசோதியானது, நரகதேயத்துள் - நரகலோகத்திலே, நடுக்குறு - அஞ்சாதிருக்கின்ற, இருளையும் - இருட்டையும், நக்க - கபளீகரிக்கும்படி, சிரமனைத்தையும் - தலைகளையெல்லாம், திசைதொறுந் திசைதொறும் - நான்குதிக்குகளிலும், செலுத்தி - ஒளிகள்செல்லவிட்டு, உரகர்கோன் - சர்ப்பராஜன், இனிது - சந்தோஷமாக, அரசு - ராஜாங்கத்துடன், வீற்றிருந்தனன் - கொலுவிருப்பதை, ஒப்ப - சரியாகவிளங்க—எ-று. (௪௧)

குவித்தபன்மணிக்குப்பைகள்கலையொடுங்கொழிப்பச்
சவிச்சுடர்க்கலனணிந்தபொற்றேளொடுதயங்கப்
புவித்தடம்படர்மேருவைப்பொன்முடியென்னக்
கவித்துமாவிருங்கருங்கடலிருந்ததுகடுப்ப

இ-ள். குவித்த – கூட்டியமைத்திருக்கிற, பல்மணி - பலவித ரத்நங்களின், குப்பைகள் – கூட்டங்கள், கலையொடும் - பொன்னாலான அங்கவஸ்திரத்துடனேகூடி, கொழிப்ப – ஒளிவீச, சவிச்சுடர் – சூரியப்பிரகாசமான, கலன் அணிந்த - ஆபரணங்களைக்கொண்ட, பொற்றோளொடு – அழகான தோள்களோடுகூடி, தயங்க-விளங்க, புவி – பூமிமேலே, தடம்படர் - நெடிதாகப்பரவின, மேருவை - மேருமலையை, பொன்முடியென்ன – சுவர்ணகிரீடமாக, கவித்து - சூட்டிக்கொண்டு, மால் இரும்-மிகப்பெரிதான, கருங்கடல் – கரியகடலானது, இருந்தது – கொலுவிருப்பதை, கடுப்ப – ஒப்பதாக—எ-று. (௪௨)

சிந்துராகத்தின்செறிதுகில்கச்சொடுசெறியப்
பந்திவெண்முத்தினணிகலன்முழுநிலாப்பரப்ப
இந்துவெண்குடைநீழலிற்றாரகையினம்பூண்
டந்திவானுடுத்தல்லுவீற்றிருந்ததாமென்ன.

இ-ள். சிந்து - புள்ளிபுள்ளிகளாகச்சிதறுதலுள்ள, ராகத்தின் – சிவப்புநிறத்தை, செறி – பொருந்தின, துகில் - அரைவஸ்திரமானது, கச்சொடு – அரைக்கச்சுடனே, செறிய - கூடிவிளங்க, பந்தி - வரிசைவரிசையாக, வெண்முத்தின் – வெள்ளைமுத்துகளை, அணி – அலங்கரித்துள்ள, கலன் – ஆபரணமானது, முழுநிலா-பூரணச்சந்திரோதயம்போல், பரப்ப – விரிய, இந்து - சந்திரனாகிய, வெண்குடை - வெள்ளைக்குடையின், நீழலில் – நிழலிலே, தாரகையினம் – நக்ஷத்திரக்கூட்டங்களை, பூண்டு – ஆபரணமாகக்கொண்டு, அந்திவான் – செவ்வானமாகிய வஸ்திரத்தை, உடுத்து – கட்டிக்கொண்டு, அல்லு - இருளானது, வீற்றிருந்தது - கொலுவிருப்பதை, ஆமென்ன – நிகரென்ன—எ-று. (௪௩)

வண்மைக்குந்திருமறைகட்கும்வானினும்பெரிய
திண்மைக்குந்தனியுறையுளாமுழுமுகந்திசையிற்
கண்வைக்குந்தொறுங்களிற்றொடுமாதிரங்காக்கும்
எண்மர்க்கும்மற்றையிருவர்க்கும்பெரும்பயமியற்ற.

இ-ள். வண்மைக்கும் - அவன்புகழுக்கும் அழகுக்கும், திருமறைகட்கும்-சிறந்தவேதங்களுக்கும், வானினும் - ஆகாயத்திலும், பெரிய – பெரிதான, திண்மைக்கும் – பலத்துக்கும், தனி – ஒப்பில்லாத, உறையுளாம் – இருப்பிடமான, முழுமுகம்-நிறைவுள்ளமுகங்கொண்டு, திசையில் - ஒருதிக்கைகுறித்து, கண்வைக்குந்தொறும்-பார்க்கும்போதெல்லாம், களிற்றொடு – திக்கியானைகளுடனே, மாதிரம் - அந்தத்திக்கை, காக்கும் - பரிபாலனஞ்செய்கிற, எண்மர்க்கும் - எட்டுப்பேருக்கும், மற்றையிருவர்க்கும் - கீழுமேலும் பரிபாலிக்கிறசேடன் துருவனென்கிற இருவர்க்கும், பெரும்பயம் – பெரியபயமானது, இயற்ற - உளதாக—எ-று. (௪௪)

ஏகநாயகன்றேவியையெதிர்ந்ததற்பின்னை
நாகர்வாழ்விடமுதலெனநான்முகன்வைகும்
மாகமால்விசும்பீறெனநடுவணவரைப்பில்
தோகைமாதர்கண்மைந்தரிற்றோன்றினர்சுற்ற.

இ-ள். ஏகநாயகன் – ஒன்றான ஸ்ரீராமனுடைய, தேவியை – தேவியானபிராட்டியை, எதிர்ந்ததன்பின்னை – கண்டபின்பு, நாகர் - சர்ப்பங்கள், வாழ்விடம் – வாழ்தலான இடமும், முதலென – முதலாக, நான்முகன்-பிரமதேவன், வைகும்-இரு

ப்பதான, மாகமால் — மிகவுமுயரமுள்ள, விசும்பு - ஆகாயமே, ஈறென - முடிவாக, நடுவண — நடுவிலுள்ள, வரைப்பில்-பூமண்டலத்திலுமுளராகிய, தோகைமாதர்கள்-மயில்போலும் அழகுள்ளபெண்களானவர்கள், மைந்தரில் — புருஷர்கள்போல், தோன்றினர் — அவன்கண்களுக்கு விருப்பமில்லாதவர்களாகத்தோன்றி, சுற்ற - சூழ எ-று. ஏகநாயகன்-ஒன்றானகடவுள். (சரு)

வானரங்களும்வானவரிருவருமனிதர்
ஆனபுன்றொழிலோரெனவிகழ்கின்றவவரும்
ஏனைநின்றவரிருடியர்சிலரொழிந்தியாரும்
தூநவின்றவேலரக்கர்தங்குழூவொடுசுற்ற.

இ-ள். வானரங்களும் — குரங்குகளோ, வானவர் — தமக்குத்தோற்றதேவர்களே, இருவருமனிதர் — மனிதரிருவரோ, ஆன - தமக்கிழிவான, புன் தொழிலோரென — அல்பச்செய்கையுள்ளவர்களென்று, இகழ்கின்ற — இகழ்ச்சிபண்ணிக்கொண்டிருக்கிற, அவரும் — அந்தமந்திரிபிரதானிகளும், ஏனை — மற்றும், நின்றவர் - இருக்கிறவர்களில், இருடியர்சிலர்ஒழிந்து - சிலமகருஷிகள்தவிர, யாரும் — எல்லாம், தூநவின்ற புலால்நாறுகிற, வேல் — வேலகளையுடைய, அரக்கர்தம் - ராக்ஷதர்கள்,குழுவொடு — கூட்டத்துடனே, சுற்ற - சூழ—எ-று. (சசு)

நரம்புகண்ணகத்துள்ளுறைநறைநிறைபாண்டில்
நிரம்புசில்லரிப்பாணியுங்குறடுநின்றிசைப்ப
அரம்பைமங்கையரமிழ்துகுத்தாலன்னபாடல்
வரம்பிலின்னிசைசெவிதொறுஞ்செவிதொறும்வழங்க.

இ-ள். நரம்பு - தந்தியை, கண் - கருதியழுத்துகிற, அகத்துள் - இடத்திலே, உறை - இருப்பதான, நறை - இசைத்தேனை, நிறை - நிறுத்துக்காட்டுகிற, பாண்டில் - பெரியவட்டமானதாளமு, நிரம்பு - அவ்வோசையைநிரப்புகின்ற, சில்லரி-சிறித்துவாரங்களில்வருகிற, பாணியும் - பாட்டும், குறடும் - இந்தவாத்தியமும், நின்று — நிலைகொண்டு, இசைப்ப - சத்திக்க, அரம்பைமங்கையர் - ரம்பாஸ்திரீகள், அமிழ்து - அமிர்தத்தை, உகுத்தாலன்ன — சிந்தினாற்போன்ற, பாடல் — வாய்ப்பாடலிலுள்ள, வரம்பில் — ருசியாலளவில்லாத, இன்னிசை - இனியராகமும், செவிதொறுஞ்செவிதொறும் - அவனிருபதுகாதுகளிலும், வழங்க — கேட்கச்செய்ய—எ-று. ()

கூடுபாணியினிசையொடுமுழவொடுங்கூடத்
தோடுசீறடிவிழிமனங்கையொடுதொடரும்
ஆடனோக்குறினருந்தவமுனிவர்க்குமமைந்த
வீடுமீட்குருமேனகைமேனகைவிளங்க.

இ-ள். கூடு — கூடின, பாணியின் - பாட்டினது, இசையொடு - இராகத்துடனே, முழவொடும் - மத்தளத்துவனியொடு, கூட - சேர, தோடு — தாமரையிதழையும், சீறு - கோபிப்பதான, அடி - கால்களும், விழி — கண்களும், மனம் - மனதும், கையொடு — கைகளுடனே, தொடரும் — சேர்வதான, ஆடல் - ஆட்டத்தை, நோக்குறின் - பார்த்தால், அருந்தவம் — அரியதவஞ்செய்கிற, முனிவர்க்கும் — ருஷிகளுக்கும், அமைந்த - உளதாகுகின்ற, வீடு — வீட்டின்பத்தையும் விட்டு, மீட்குறும் - தன்மேல்திரும்பப்பண்ணுகிற, மேனகைமேல் - மேனகையென்பவள்மேலே, நகைவிளங்க - சிரிப்புத்தோன்ற—எ-று. (சஅ)

ஊடினார்முகத்துறுநறையொருமுகமுண்ணக்
கூடினார்முகக்களிநறையொருமுகங்குடிப்பப்
பாடினார்முகத்தாரமுதொருமுகம்பருக
ஆடினார்முகத்தணியமுதொருமுகமருந்த.

இ-ள். ஊடினார்முகத்து - பிணங்கின பெண்கள்முகத்திலே, உறுநறை - உளதாகியகாமரசமானதேனை, ஒருமுகம் - ஒருமுகமானது, உண்ண - அனுபவிக்க, கூடினார்முகம் - கூடினபெண்களின்முகத்திலேயுள்ள, களிநறை-மயக்கத்தைத்தருகிறதேனை, ஒருமுகம் - ஒருமுகமானது, குடிப்ப - அனுபவிக்க, பாடினார்முகத்து-பாடினபெண்கள்முகத்து, ஆர் - நிரம்பின, அமுது - இங்கிதரசமான அமிர்தத்தை, ஒருமுகம் - ஒருமுகமானது, பயில - அனுபவிக்க, ஆடினார்முகத்து - ஆடினபெண்கள்முகத்திலேயுள்ள, அணியமுது - அபிநயமான அழகிய அமிர்தத்தை, ஒருமுகம்-ஒருமுகமானது, அருந்த - அனுபவிக்க—எ-று. (௪௯)

தேவரோடிருந்தரசியலொருமுகஞ்செலுத்த
மூவரோடுமாமந்திரமொருமுகமுயலப்
பாவகாரிதன்பாவகமொருமுகம்பயிலப்
பூவைசானகியுருவொடுமொருமுகம்பொருந்த.

இ-ள். தேவரோடு - தேவர்களுடனே, இருந்து - கூடிஇருப்பதாய், அரசியல் - ராஜாங்கத்தை, ஒருமுகம் - ஒருமுகமானது, செலுத்த - நடத்த, மூவரோடு-ஆசாரியன் புரோகிதன் மந்திரிகளுடனே, மாமந்திரம் - பெரிய ஆலோசனையை, ஒருமுகம் - ஒருமுகமானது, முயல - முயற்சிக்க, பாவகாரிதன் - பாவியானதனது, பாவகம் - நினைவுக்ளை, ஒருமுகம் - ஒருமுகமானது, பயில - செய்ய, பூவை - பெண்களிற்சிறந்த, சானகி - சீதாபிராட்டியினுடைய, உருவொடும் - உருவெளியுடனே, ஒருமுகம் - ஒருமுகமானது, பொருந்த - கூட—எ-று. பூவை - நாகணவாய்ப்புள் சொல்லுக்குவமை. (௫0)

காந்தண்மெல்விரற்சனகிதன்கற்பெனுங்கடலை
நீந்தியேறுவதெங்ஙனென்றொருமுகனினைய
சாந்தளாவியகொங்கைநன்மகளிர்தற்சூழ்ந்தார்
ஏந்துமாடியினொருமுகமியல்புடனிலங்க.

இ-ள். காந்தள் - செங்காந்தளிதழ்போன்ற, மெல்விரல் - மெல்லியவிரல்களையுடைய, சனகிதன் - சீதையினது, கற்பெனுங்கடலை - பதிவிரதாநிலையானகடலை, நீந்தியேறுவது - கடந்துகரையேறுகிறது, எங்ஙனென்று - எப்படியென்று, ஒருமுகநினைய - ஒருமுகமெண்ண, சாந்துஅளாவிய - சந்தனம்பூசின, கொங்கை-தனங்களையுடைய, நன்மகளிர் - அழகுள்ளபெண்கள், தற்சூழ்ந்தார் - தன்னைச்சூழ்ந்தவர்களாக, ஏந்தும் - கொண்டுகாட்டுகிற, ஆடியின் - கண்ணாடியிலே, ஒருமுகம்-ஒருமுகமானது, இயல்புடன் - அழகுகாணுதலுடனே, இலங்க - விளங்க—எ-று. கற்பெனுங் கடலைநீந்துதல் அவள்மனவுறுதியை மாற்றிக்கூடவெண்ணுதல். (௫௧)

பொதும்பர்வைகுதேன்புக்கருந்துதற்ககம்புலரும்
மதம்பெய்வண்டெனச்சனகிமேன்மனஞ்செலமறுகி
வெதும்புவாரகம்வெந்தழிவார்கணில்விழிநீர்
ததும்புவார்விழித்தாரைவேறொடொறுந்தாக்க.

இ-ள். பொதும்பர் – மரச்செறிவிலே, வைகு – இருப்பதான, தேன் – தேனை, புக்கு – போய், அருந்துதற்கு – சாப்பிடுதற்கு, அகம்புலரும் – மனம்வருந்துகிற, மதம்பெய் – தேனைக்கக்கிக்கொண்டிருக்கிற, வண்டென – வண்டுபோல, சனகிமேல் – சீதைமேலே, மனஞ்செல – மனம்போக அதுகண்டு, மறுகி – மயங்கி, வெதும்புவார் – உடம்பு வெப்பங்கொள்ளுகிறவர்களும், மனம்வெந்து – மனம் வேவதாகி, அழிவார் – கரைகிறவர்களும், நகில் – தனங்களிலே, விழிநீர் – கண்ணீர், ததும்புவார்-பெருக விடுகிறவர்களும் ஆகியபெண்களுடைய, விழி – கண்களான, தாரைவேல்-கூரியவேல்கள், தோள்தொறும் தாக்க – அவன் தோளெல்லாம் படவும், மது – வாய்வழி ஒழுகும்போதும் பொதும்பர்வைகு தேனைவிரும்புகிற வண்டுபோல் – தான் கூடுதற்குவேண்டிய பெண்களிருந்தும் சீதைமேல் மனம் செலுத்துகிறானென்பது கருத்து. (௫௨)

மாறளாவியமகரந்தநறவுண்டுமகளிர்
வீறளாவியமுகிழ்முலைமெழுகியசாந்தின்
சேறளாவியசிறுநறுஞ்சீரகத்தென்றல்
ஊறளாவியகடுவெனவுடலிடைநுழைய.

இ-ள். மாறு அளாவிய – ராவணனுக்கு விரோதமுண்டாகுதற்கு, மகரந்த நறவு – மிகுந்ததேனில், உண்டு – படிந்து, மகளிர் – பெண்களுடைய, வீறளாவிய-வெவ்வேறாயிருக்கிற, முகிழ் முலை – தாமரையரும்புபோன்ற தனங்களிலே, மெழுகிய – பூசின, சாந்தின்சேறு – சந்தனச்சேற்றிலே, அளாவிய – கூடிக்கலந்த, சிறுநறும் – மெதுவும்மணமுமுள்ள, சீகரம் – குளிர்ச்சிமிகுந்த, தென்றல் – தென்றற்காற்றானது, ஊறளாவிய – கொல்லுதலைப்பொருந்தின, கடுவென – விஷம்போல, உடலிடை – அவன்தேகத்திலே, நுழைய – மோத—எ-று. மகரந்த நறவு – வாசனையுள்ள கள்ளை உண்டு என்க, கட் குடித்தலாலே தெரியாமல் அவனுக்கு விரோதஞ்செய்வதாயிற்று. (௫௩)

திங்கள்வாணுதன்மடந்தையர்சேயரிக்கிடந்த
அங்கயற்றடந்தாமரைக்கலரியோனாகி
வெங்கண்வானவர்தானவரென்றிவர்விரியாப்
பொங்குகைகளாந்தாமரைக்கிந்துவேபோன்று.

இ-ள். திங்கள் – பாதிசந்திரன்போன்ற, வாள்நுதல் – ஒளிபொருந்தின நெற்றியையுடைய, மடந்தையர் – பெண்களினது, சேயரிக் கிடந்த – செவ்வரிகள் தங்கின, அங்கயல் – அழகிய கயல்களுள்ள முகமாகிய, தடம் – பெருமைகொண்ட, தாமரைக்கு – தாமரைமலர்களுக்கு, அலரியோனாகி – சூரியன்போலாய், வெங்கண் – இவன்மேற்கொடுமையுள்ள, வானவர் – தேவர்களும், தானவர் – அசுரர்களும், என்று-என்றுசொல்லப்படுகிற, இவர் – இவர்களுடைய, விரியா – குவிந்துகொண்டிருக்கிற, பொங்கு – மிகுதியையுடைய, கைகளாம் – கைகளாகிய, தாமரைக்கு – தாமரைமலர்களுக்கு, இந்துவேபோன்று – சந்திரன்போலாய், இருந்த எண்டிசைக்கிழவனை எனத்தொடர்கூட்டி தலங்கள்மூன்றென்னும் பாட்டுமுதலிப்பாட்டளவும் ஒரேதொடராகுதல்காண்க, கயல்போலுங் – கண்ணைக்கயலென்றதுருவகம்—எ-று. (௫௪)

இருந்தவெண்டிசைக்கிழவனைமாருதியெதிர்ந்தான்
கருந்திணுகத்தைநோக்கியகலுழனிற்கனன்றான்
திருந்துதோளிடைவீக்கியபாசத்தைச்சிந்தி
உருந்துநஞ்சுபோல்பவன்வயிற்பாய்வெனென்றுடன்றான்.

இ-ள். இருந்த — அப்படிக்கிருந்த, எண்திசை - அஷ்டதிக்குகளுக்கும், கிழவனை — அதிபனுனராவணனை, மாருதி — அனுமாரானவர், எதிர்ந்தான் — கண்டார், கரும்திண் — கறுத்துப்பலமுள்ளதான, நாகத்தை — சர்ப்பத்தை, நோக்கிய - கண்ட, கலுழனில் - கருடன்போல், கனன்றான் - கொதிப்புக்கொண்டாராய், திருந்து - தமதுதிருத்தமுள்ள, தோளிடை — தோள்களிலே, வீக்கிய — கட்டியிருக்கிற, பாசத்தை — கயிற்றை, சிந்தி - அறப்பண்ணி, உருத்து — கோபங்கொண்டு, நஞ்சுபோல்பவன்வயின் - விஷம்போன்றவன்மேலே, பாய்வெனென்று - பாய்கிறேனென்று, உடன்றான் - கோபங்கொண்டார் ஆக்கிரமித்தார்—எ-று. (௫௫)

உறங்குகின்றபோதுயிருண்டல்குற்றமென்றொழிந்தேன்
பிறங்குபொன்மணியாசனத்திருக்கவும்பெற்றேன்
திறங்களென்பலசிந்திப்பதிவன்றலைசிதறி
அறங்கொள்கொம்பினைமீட்டுடனகல்வனென்றமைந்தான்.

இ-ள். உறங்குகின்றபோது — இவன் தூங்குகிறபோது, உயிருண்டல் — இவனைக்கொல்லுதல், குற்றமென்று — தோஷமென்று, ஒழிந்தேன் — விட்டுவிட்டேன், பிறங்கு — விளங்காநின்ற, பொன்மணி — பொன்னாலுமணியாலும் அமைந்த, ஆசனத்து — சிங்காசனத்தின்மேல், இருக்கவும் — விழித்துக்கொண்டிருக்கவும், பெற்றேன் - பெறுவதானேன் இப்படிநேர்கிடைத்த லரிதென்பதுதோன்ற இருக்கவுமென்றது, பலதிறங்கள் - பலவிதங்களாக, என்சிந்திப்பது — யாதுகாரணமாக ஆலோசிக்கிறதுவேண்டா, இவன்தலைசிதறி - இனி இவன்தலையை உடைத்து, அறங்கொள்- பதிவிரதாதருமத்தையேநிலையாகக்கொண்டிருக்கிற, கொம்பினை — கொம்புபோன்றபிராட்டியை அறமாகியகொடி பற்றிக்கொள்வதான கொம்புபோல்வாளெனவுமாம், மீட்டு — சிறைமீட்டுக்கொண்டு, உடன் — இப்போதே, அகல்வெனென்று — போகிறேனென்று, அமைந்தான் — உத்தேசித்தார்—எ-று. (௫௬)

தேவர்தானவர்முதலினர்சேவகன்றேவி
காவல்கண்டிவணிருந்தவர்கட்புலன்கதுவப்
பாவகாரிதன்முடித்தலைபறித்திலெனென்றால்
ஏவதியானினிமேற்செயுமாள்வினையென்றான்.

இ-ள். தேவர் — தேவரும், தானவர் — அசுரரும், முதலினர் — முதலானவர்களும், சேவகன் - ஸ்ரீராமனுடைய, தேவி — தேவியானபிராட்டி, காவல் — சிறையிலிருப்பதை, கண்டு — பார்த்துக்கொண்டே, இவணிருந்தவர் — இங்கிருப்பவர்களும், கட்புலன் — தங்கள்கண்களான அறிவாலே, கதுவ — தெரிய, பாவகாரிதன் — இந்தப்பாவியினுடைய, முடித்தலை — கிரீடமணிந்ததலைகளை, பறித்திலேன் - கிள்ளியெறியேன், என்றால் - ஆனால், யான் — நான், இனிமேற்செயும் — இனிமேற்செய்யப்போகிற, ஆள்வினை — அடிமைத்தொழில், ஏவது — யாதிருக்கின்றது, என்றான் — என்றெண்ணினர்—எ-று. (௫௭)

மாடிருந்தமற்றிவன்புணர்மங்கையர்மயங்கி
ஊடிரிந்திடமுடித்தலைதிசைதொறுமுருட்டி
ஆடல்கொண்டுநின்றார்க்கின்றததுகொடிதம்மா
தேடிவந்ததோர்குரங்கெனும்வாசகஞ்சிறிதோ.

இ-ள். மாடிருந்த - இவன்பக்கத்திலேயிருப்பதான, மற்றிவன்புணர் - இவன் கூடத்தக்க, மங்கையர் — பெண்களெல்லாம், மயங்கி - மயங்குதலாகி, ஊடு - உட்

புரத்துக்கு, இரிந்திட – ஓட, முடித்தலை – இவனதுமுடிகளையுடையதலைகளை, திசைதோறும் – எந்தத்திக்குகளிலும், உருட்டி – உருளப்பண்ணி, ஆடல்கொண்டு-ஜயம்கொண்டு, நின்று – நிலைபெற்று, ஆர்க்கின்றது – ஆரவாரிக்கிறது, அது-ஆகியஅது, கொடிது – தகாது ஆகாதுஏனென்றால், ஓர்குரங்கு – ஒருகுரங்கல்லவோ, தேடிவந்தது – தேடிவரலானது, எனும்வாசகம் – என்னும்வார்த்தை, சிறிதோ – சிறிதன்று பிரபல்லியந்தானே அதனால், தேடிவந்த – ஒருகுரங்கு இவ்வளவுசெய்வது தகாது என்று கொள்ளுகிறார், குரங்கென்பது லோகப்பிரசித்தமாதலால் ஸ்ரீராமனே இது செய்யத்தக்கதென்கிறார் பின்னும்—எ-று. (௫அ)

நீண்டவாளெயிற்றரக்கனைக்கண்களினேரே
காண்டல்வேண்டியிவ்வுயிர்சுமந்தெதிர்சிலகழறி
மீண்டபோதுண்டுவசைப்பொருள்வென்றிலேனெனினும்
மாண்டபோதினும்புகழன்றிமற்றுமொன்றுண்டோ.

இ-ள். நீண்ட – நெடிதான, வாள் – வாள்போன்ற, எயிற்று – பற்களைக்கொண்ட, அரக்கனை – ராட்சதனை, கண்களில் – நம்கண்களுக்கு, நேரே – நேராக, காண்டல் – பார்ப்பதையும், வேண்டி – விரும்பி, இவ்வுயிர் – இந்தஎன்னுயிரையும், சுமந்து – உடலிலேபொறுத்து, எதிர் – இவனுக்குமுன்னே, சிலகழறி – சிலபேசி, மீண்டபோது – திரும்பினால், உண்டுவசைப்பொருள் – வசையானபொருளே சித்திப்பதாம், வென்றிலேன் – இவனைவெல்லவல்லேனல்லேன், எனிலும் – என்றாலும், மாண்டபோதினும் – நான்இறந்தாலும், புகழன்றி – எனக்குக்கீர்த்திவருமேயல்லது, மற்றுமொன்றுண்டோ – வேறொன்றுசித்திக்குமோ—எ-று. இவனைவெல்லமாட்டாமல் திரும்பிப்போனாலும் புகழுண்டென்கிறார் ஆதலாலவன்மேற்பாயவெண்ணுகிறாரென்பதிதன்கருத்து. (௫௯)

என்றுதோளிடையிறுக்கியபாசமிற்றேகக்
குன்றின்மேலெழுகோளரியேறெனக்குதியிற்
சென்றுகூடுவலென்பதுசிந்தனைசெய்யா
நின்றுகாரியமன்றெனநீதியினினைந்தான்.

இ-ள். என்று – என்றெண்ணி, தோளிடை – தமதுதோளிலே, இறுக்கிய-இறுகக்கட்டியிருக்கிற, பாசமிற்று – பாசமறுபட்டு, ஏக – போக, குன்றின்மேல்-மலைமேலே, எழு – பாயஎழுகிற, கோளரியேறென – ஆண்சிங்கம்போல, குதியிற்சென்று – ஒருபாய்ச்சலிலேபோய் அவனிடம், கூடுவல் – சேருவேன், என்பது – என்பதை, சிந்தனைசெய்யாநின்று – ஆலோசித்து, காரியம்அன்றென – பின்னுமிதுகாரியமல்லவென்று, நீதியின் – தமதுபுத்திசாதுரியத்தினாலே முறையாக, நினைந்தான்- எண்ணுகிறார்—எ-று. (௬௦)

வேறு.

கொல்லலாம்வலத்தனுமல்லன்கொற்றமும்
வெல்லலாந்தரத்தனுமல்லன்மேலைநாள்
அல்லெலாந்திரண்டனநிறத்தனாற்றலை
வெல்லலாமிராமனாற்பிறரும்வெல்வரோ.

இ-ள். கொல்லலாம் – என்னாலேகொல்லலாகிய, வலத்தனும்-இடத்திலிருக்கிறவனும், அல்லன் – அல்லனாயிருக்கிறான், கொற்றமும் – இவன்துணைவலியும்,வெ

ல்லலாம் - வெல்லுவதான, தரத்தனும் - தகுதியுள்ளவனும், அல்லன் - அல்லனுயிருக்கிறுன், மேலேநாள் - இனிவருங்காலத்திலே, அல்லெலலாம் - இருள்முழுதும், திரண்டன - திரண்டாற்போன்ற, நிறத்தன - நிறமுள்ளஇவனுடைய, ஆற்றலே-பலத்தை, இராமனுல் - ஸ்ரீராமனுலே, வெல்லலாம் - வெல்லக்கூடும், பிறரும் - ஸ்ரீராமனேயல்லாத மற்றையோரும், வெல்வரோ - வெல்லவல்லாரோ மாட்டார்—எ-று. கொற்றம் அரசியலாகலால் அவ்வரசியலுக்குள்ள துணைவலியைக் கொற்றமென்றதாகுபெயர் தனியாகவுங்கிடைத்திலன் துணைவலியோமிருந்திருக்கின்ற தென்று கருத்து - வலம்இடம், தரத்தனுமென்றது அதனெடுசொர்த்தினத் திணைமுடி யென்பதனுற்கொள்க. (கூக)

என்னையும்வெலற்கரிதிவனுக்கீண்டிவன்
தன்னையும்வெலற்கரிதெனக்குத்தாக்கினுல்
அன்னவேகாலங்கள்கழியுமாதலால்
துன்னருஞ்செருத்தொழிற்றெடங்கறுாயதோ.

இ-ள். தாக்கினுல் - சண்டைசெய்தால், இவனுக்கு - இந்தராவணனுலே, என்னையும் - என்னே, வெலற்கு - வெல்லுதற்கு, அரிது - முடியாது, ஈண்டு - இவ்வளவுதுணைவலியோடுகூடின, இவன்றன்னையும் - இவனே, எனக்கு - என்னுலே, வெலற்கு - வெல்லுதற்கு, அரிது - முடியாது, அன்னவே - அசோகவனத்திலேநடந்ததுபோலவே இங்கும், காலங்கள் - அதிகநாள்கள், கழியும் - சென்றுபோம், ஆதலால் - ஆகையாலே, துன்னரும் - நெருங்குதற்கரிதான, செருத்தொழில் - சண்டையானசெய்கையை, தொடங்கல் - ஆரம்பித்துநடத்துகிறது, தூயதோ - நல்லதோ நன்றன்று—எ-று. துணைவலி - மந்திரிபிரதானி முதலாயினேர்கள். (கூஉ)

ஏழுயருலகங்கள்யாவுமின்புறப்
பாழிவன்புயங்களோடரக்கன்பஃறலைப்
பூழியிற்புரட்டலென்பூணிப்பாமென
ஊழியான்விளம்பியவுரையுமொன்றுண்டால்.

இ-ள். ஏழுயர் - ஏழாகவுயர்ந்த, உலகங்கள்யாவும்-லோகங்களெல்லாம், இன்புற - சந்தோஷிக்க, பாழி - பெருமையுள்ள, வன்புயங்களோடு - தோள்களுடனே, அரக்கன் - இந்தராவணனுடைய, பஃறலே - பலதலேகளேயும், பூழியில்-மண்தூளியிலே, புரட்டல் - புரளப்பண்ணுகிறது, என்பூணிப்பு - எனக்குவிரதம், ஆமென-ஆமென்று, ஊழியான் - ஜயத்தாற் குறைவுபடாத ஸ்ரீராமன், விளம்பிய - சொன்ன, உரையும் - சொல்லும், ஒன்றுண்டு - ஒன்றுளதாயிருக்கின்றது, ஆகலாலும்—எ-று.

இங்கொருதிங்களேயிருப்பல்யானென
அங்கணுயகன்றனதாணைகூறிய
மங்கையுமின்னுயிர்துறத்தல்வாய்மையால்
பொங்குவெஞ்செருவிடைப்பொழுதுபோக்கினுல்.

இ-ள். இங்கு - இந்தஇலங்கையிலே, ஒருதிங்களே - ஒருமாதஅளவே, இருப்பல்யானென - நானிருப்பேனென்று, அங்கண் - அப்போது, நாயகன்றனது - ஸ்ரீராமனுடைய, ஆணை - நியமமாக, கூறிய - சொன்ன, மங்கையும் - சீதாபிராட்டியும், இன்னுயிர் - தமதினிதானஉயிரை, துறத்தல் - ஒருமாதத்துக்குமேல்விடுகிறது, வாய்மையால் - மெய்யாயிருத்தலாலும், பொங்கு - மிகுந்த, வெஞ்செருவிடை - வெவ்வியசண்டையிலே, பொழுதுபோக்கினுல் - காலத்தைக்கழித்தால், இன்னுயிர்-துறத்தல்மெய்—எ-று. அங்கண் அழகியகண்களேயுடைய எனவுமாம். (கூச)

ஆதலானமர்த்தொழிலழகிற்றன்றருந்
தூதனுந்தன்மையேதூய்தென்றுன்னினான்
வேதநாயகன்றனித்துணைவன்வென்றிசால்
ஏதில்வாளரக்கனதிருக்கையெய்தினான்.

இ-ள். ஆதலான் – மெய்யாகையாலே, அமர்த்தொழில் – சண்டைசெய்யகினைத்தல், அழகிற்று அன்று – நன்மையுடையதல்ல, அரும் – அருமையாகவந்த, தூதனும் தன்மையே – தூதனுகிறகாரியமே, தூய்தென்று – நல்லதென்று, உன்னினான் – எண்ணினராகி, வேதநாயகன் – ஸ்ரீராமனுக்கு, தனிஒருதுவணைன்-சகாயரான அனுமார், வென்றிசால் – ஜயமிகுந்த, ஏதில் – தமக்கன்னியனான, வாள் – வாளையுடைய, அரக்கனது – ராவணனது, இருக்கை – கொலுவிருப்பை, எய்தினான் - போய்க்கண்டார்—எ-று. (௬௫)

தீட்டியவாளெனத்தெறுகட்டேவியர்
ஈட்டியகுழுவிடையிருந்தவேந்தற்குக்
காட்டினனநுமனைக்கடலினாரமு
தூட்டியவும்பரையுலையவோட்டினான்.

இ-ள். தீட்டிய – கூராகத்தீட்டின, வாளென – வாள்போல், தெறுகண்-வெட்டுங்கண்களையுடைய, தேவியர் – தேவிமார்களுடனே, ஈட்டிய – கூடியிருக்கிற, குழுவிடை – கூட்டத்திலே, இருந்த – இருக்கிற, வேந்தற்கு – இராவணனுக்கு, அனுமனை – அனுமாரைக்கொண்டுபோய், காட்டினன் – காண்பித்தான், கடலின்-கடலிலுண்டான, ஆரமுது – அரிய அமிர்தத்தை, ஊட்டிய – உண்டலாலே சாவாதிருக்கிற, உம்பரை – தேவரை, உலைய – வருந்த, ஓட்டினான் – ஓடவென்ற இந்திரசித்து—எ-று. (௬௬)

புவனமெத்தனையவையனைத்தும்போர்கடந்
தவனையுற்றரியுருவானவாண்டகை
சிவனெனச்செங்கணனென்னச்சேவகன்
இவனெனக்கூறிநின்றிருகைகூப்பினான்.

இ-ள். புவனமெத்தனை – உலகமெவ்வளவோ, அவையனைத்தும் – அவ்வளவும், போர்கடந்தவனை – போரில்வென்ற ராவணனை, உற்று-கண்டு, அரியுருவான-குரங்குவடிவாயிருக்கிற, ஆண்தகை – ஆண்மையிற்சிறந்தவனே, சிவனென – கண்டோர் சிவன் என்னவும், செங்கணனென்ன – திருமாலென்னவும், சேவகன் – வீரத்தன்மையுள்ளவனான, இவனென – இவன் என்று, கூறிநின்று – சொல்லிநின்றுகொண்டு, இருகை – தனதிரண்டுகைகளையும், கூப்பினான் – குவித்தான்—எ-று. ()

நோக்கியகட்பொறிநுவன்றவாய்களில்
தூக்கியபொறியொடுமயிர்சுறுக்கொளத்
தாக்கியவுயிர்ப்பொடுந்தவழ்வெம்புகை
வீக்கினனவ்வுடல்விசித்தபாம்பினே.

இ-ள். நோக்கிய – அனுமாரைப்பார்த்த, கட்பொறி – இருபதுகண்களான பொறிகள், நுவன்ற – பொறியென்றுசொன்ன, வாய்களில் – இடங்களிலே, தூக்கிய் – கொண்டுளவாகிய, பொறியொடு – நெருப்புப் பொறிகளுடனேபோய், மயிர்-

அனுமாருரோமமெல்லாம், சுறுக்கொள - சுறீரென்ன, தாக்கிய - மோதினவாகி அவன், உயிர்ப்பொடு - சுவாசத்துடனே, தவழ் - படர்தலாக, வெம்புகை - அதுடனே வெவ்வியபுகையினாலும், அவ்வுடல் - அனுமாருடம்பை, விசித்த - கட்டியிருக்கிற, பாம்பின் - பாம்பைப்போல், வீக்கினன் - கட்டினான் — எ-று. கட்பொறிகளும் அவற்றிலுண்டான நெருப்புப்பொறிகளும் பெரிய சுவாசமும் புகையும் அனுமார்மேலே படுதலாயின என்பதுகருத்து கட்பொறி கண்ணாகிய அறிவு புகையு நெருப்புந் தோன்ற நெடுமூச்செறிந்து இருபதுகண்களாலும் அனுமாரைப்பார்த்தான் என்க. ()

அன்னவோர்வெகுளியனமரராதியர்
துன்னியதுன்னலர்த்துணுக்கஞ்சுற்றுற
என்னிவண்வரவுநீயாரையென்றவன்
தன்மையைவினாயினான்கூற்றின்றன்மையான்.

இ-ள். அன்ன - அப்படிப்பட்ட, ஓர்வெகுளியன - ஒருகோபமுள்ளராவணன், அமரர் - தேவர்கள், ஆதியோர் - முதலினராக, துன்னிய - கூடியிருக்கிற, துன்னலர் - உட்பகைவரை, துணுக்கம் - பயம், சுற்றுற - சூழ்வதாக, இவண்வரவு - நீ இவிடம்வந்தது, என் - யாதுகாரணம், நீயாரை - நீயாவன், என்று - என்பதாக, அவன்தன்மையை - அவர்சுவபாவத்தை, வினாயினான் - விசாரித்தான், கூற்றின்தன்மையான் - யமன்போலுஞ் செய்கையுள்ளவன் — எ-று. (௬௯)

நேமியோகுலிசியோநெடுங்கணிச்சியோ
தாமரைக்கிழவனோதறுகட்பஃறலைப்
பூமிதாங்கொருவனோபொருதுமுற்றுற
நாமமுமுருவமுங்கரந்துநண்ணினாய்.

இ-ள். நேமியோ - சக்கராயுதமுள்ளவனா, குலிசியோ - வச்சிராயுதமுள்ளவனா, நெடு - நீண்ட, கணிச்சியோ - சூலாயுதமுள்ளவனா, தாமரைக்கிழவனோ - பிரமதேவனா, தறுகண் - கொடுங்கண்களும், பஃறலை - பலதலைகளுமுள்ளவனாகி, பூமிதாங்கு - உலகைச்சுமக்கிற, ஒருவனோ - ஒருசேடனா, பொருது - இங்கேவந்துசண்டைசெய்து, முற்றுற - சாவ, நாமமும் - பெயரும், உருவமும் - உருவும், கரந்து - மறைத்து, நண்ணினாய் - வந்தநீ — எ-று. (௭௦)

நின்றிசைத்துயிர்கவர்நீலக்காலனோ
குன்றிசைத்தயிலுறவெறிந்தகொற்றனோ
தென்றிசைக்கிழவனோதிசைநின்றாட்சியர்
என்றிசைக்கின்றவர்யாருள்யாவனீ.

இ-ள். நின்றிசைந்து - நிலைகொண்டிருந்து, உயிர் - யாவருயிரையும், கவர் - பிடிக்கிற, நீலக்காலனோ - கருநிறமுள்ளகாலனா, குன்றிசைந்து - மலைமேலேபட்டு, அயிலுற - வேல்புகுத, எறிந்த - குத்தின, கொற்றனோ - வெற்றிமுருகனா, தென்றிசைக்கிழவனோ - யமனா, திசைநின்று - திக்குகளிலேயிருந்து, ஆட்சியரென்று - ஆள்கிறவர்களென்று, இசைக்கின்றவர் - சொல்லப்படுகிறவர்கள், யாருள் - எண்மரிலும், யாவன்நீ - நீஎவன் — எ-று. (௭௧)

அந்தணர்வேள்வியினாக்கியாணையின்
வந்துறவிடுத்ததோர்வயவெம்பூதமோ

முந்தொருமலருளோனிலங்கைமுற்றுறச்
சிந்தெனத்திருத்தியதறுகட்டெய்வமோ.

இ-ள். அந்தணர் – பிராமணர்கள், வேள்வியின் – யாகத்திலே, ஆக்கி – உண்பெண்ணி, ஆணையின் – அவர்கள்மந்திரசக்தியினாலே, வந்துற – இங்கே வந்து புகுத, விடுத்தது – அனுப்பினதான, வயவெம் – வீரமும் வெம்மையுமுள்ள, ஓர் பூதமோ – ஒருபூதமா, முந்து – முன்னே, ஒருமலருளோன் – ஒருபூமேலிருப்பவனானபிரமன், இலங்கைமுற்றுற – இந்த இலங்கைமுழுதும், சிந்தென – அழித்துவிடென்று, திருத்திய – செய்தனுப்பின, தறுகண் – அஞ்சாத, தெய்வமோ – ஒருதேவனா—எ-று. ()

ஆரைநீயென்னையிங்கெய்துகாரணம்
ஆருனைவிடுத்தவரறியவாணையால்
சோர்விலைசொல்லுதியென்னச்சொல்லினான்
வேரொடுமமரர்தம்புகழ்விழுங்கினான்.

இ-ள். ஆரைநீ – இவர்களில்யாவன்நீ, இங்கெய்து காரணம் – இங்கேவந்த நிமித்தம், என்னை – யாது, ஆர் உனை விடுத்தவர் – உன்னை அனுப்பினவனெவன், அறிய – நான்தெரிய, ஆணையால் – என் உத்தரவினாலே, சோர்விலை – தளர்வில்லாதவனாக, சொல்லுதியென்ன – சொல்லென்று, சொல்லினான் – கேட்டான், வேரொடும் – வேருடனே, அமரர்தம் – தேவர்களுடைய, புகழ் – கீர்த்தியை, விழுங்கினான் – கபளீகரித்தராவணன்—எ-று. (௭௩)

சொல்லியவனைவருமல்லென்சொன்னவப்
புல்லியவலியினோரேவல்பூண்டிலென்
அல்லியங்கமலமேயனையசெங்கணோர்
வில்லிதன்றூதன்யானிலங்கைமேயினேன்.

இ-ள். சொல்லிய – நீசொன்ன, அனைவரும் – எல்லாரும் யாவரும், அல்லென் – நானல்லேன், சொன்ன – நீசொன்னவர்களான, அப்புல்லிய வலியினோர் – அந்த அல்பபலமுள்ளவர்கள், ஏவல் – ஏவுதலை, பூண்டிலேன் – கொண்டுவந்தேனல்லேன், அல்லியம் – அகவிதழும் அழகுமுள்ள, கமலமே – தாமரைப்புஷ்பமே, அனைய – ஒப்பான, செங்கண் – சிவந்தகண்களுள்ள, ஓர்வில்லிதன் – ஒருவில்லிதன் ஒருவில்வீரனுடைய, தூதன்யான் – தூதுவனேநான், இலங்கைமேவினேன் – இந்த இலங்கைக்குவந்தேன்—எ-று. (௭௪)

அனையவன்யாரெனவறிதியாதியேல்
முனைவருமமரருமூவர்தேவரும்
எனையவரெனையவர்யாவர்யாவையும்
நினைவருமிருவினைமுடிக்கநின்றுளோன்.

இ-ள். அனையவன் – அந்தவில்வீரன், யாரென – இன்னானென்று, அறிதியாதியேல் – அறியவேண்டுவாயேயானால், முனைவரும் – ருஷிகளும், அமரரும் – தேவர்களும், மூவர்தேவரும் – மும்மூர்த்திகளும், எனையவர் – இன்னும்எவ்வளவுமேம்பாடுள்ளவர்கள், எனையவர் – எவ்வளவினர், யாவர் – அவ்வளவினரும், யாவையும் – எல்லாப்பொருள்களும், நினைவு அரும் – நினைக்க அரிதான, இருவினை – பெரியகாரியத்தை, முடிக்க – முடிவுபண்ண, நின்றுளோன் – அவதரித்துவந்தவன்—எ-று. (௭௫)

வேறு.

ஈட்டியவலியுமேனாளியற்றியதவமும்யாணர்
கூட்டியபடையுந்தேவர்கொடுத்தநல்வரமுங்கோட்பும்
தீட்டியபிறவுமெய்தித்திருத்தியவாழ்வுமெல்லாம்
நீட்டியபகழியொன்றான்முதலொடுநீக்கநின்றான்.

இ-ள். ஈட்டிய – நீசம்பாதித்துள்ள, வலியும் – பலமானவைகளும், மேனாள்- முன்னாளிலே, இயற்றிய - நீசெய்திருக்கிற, தவமும் - தபோபலமும், யாணர் – புதிதாக, கூட்டிய – நீசேர்த்திருக்கிற, படையும் - சேனைகளும், தேவர் – தேவர்கள், கொடுத்த – கொடுத்திருக்கிற, நல்வரமும் - நல்லவரங்களும், கோட்பும் - இன்னம் நீகொண்டுள்ளவைகளும், தீட்டிய - நீ எங்கும் எழுதிவைத்திருக்கிற, பிறவும் – கீர்த்திமுதலானமற்றவைகளும், எய்தி - அடைந்து, திருத்திய – பின்புசெய்துகொண்ட, வாழ்வும் - சம்பத்தும், எல்லாம் - சமஸ்தமும், நீட்டிய – நீளவிடலான, பகழியொன்றால் - ஒருஅம்பினாலே, முதலொடு - அடியோடே, நீக்க - போக்கடிக்க, நின்றான்- நிலைபெற்றுவந்தவன், அவன்யாரென்றால்—எ-று. (௭௬)

தேவரும்பிறருமல்லன்றிசைக்களிறல்லன்றிக்கிற்
காவலரல்லனீசன்கைலையங்கிரியுமல்லன்
மூவருமல்லன்மற்றைமுனிவருமல்லனெல்லைப்
பூவலயத்தையாண்டபுரவலன்புதல்வன்போலாம்.

இ-ள். தேவரும் - தேவர்களும், பிறரும்-அசுரரும் முனிவர்களும், அல்லன்- அல்லாதவன், திசைக்களிறு - திக்கியானைகளும், அல்லன் – அல்லாதவன், திக்கிற்காவலர் - திக்குப்பாலகர்களும், அல்லன் - அல்லாதவன், ஈசன் – சிவனுடைய, கைலையங்கிரியும் – வெள்ளிமலையும், அல்லன் - அல்லாதவன், மூவரும் – மும் மூர்த்திகளும், அல்லன் - அல்லாதவன், மற்றைமுனிவரும் - மற்றச் சனகாதிமுனிவர்களும், அல்லன் - அல்லாதவன், எல்லை - தன் ஊரளவாக, பூவலயத்தை - பூமண்டல முழுதும், ஆண்ட – ஆண்டுகொண்டிருந்த, புரவலன் - தசரதமகாராஜனுடைய, புதல்வன் - புத்திரன் ஆம்—எ-று. (௭௭)

போதமும்பொருந்துகேள்விப்புரையறுபயனும்பொய்தீர்
மாதவஞ்சார்ந்ததீராவரங்களுமற்றுமுற்றும்
யாதவனினைந்தானன்னபயத்தனவேதுவேண்டின்
வேதமுமறனுஞ்சொல்லுமெய்யறமூர்த்திவில்லோன்.

இ-ள். போதமும் - ஞானமும், பொருந்து - ஞானத்தாலடைகிற, கேள்வி- கேள்விகளாலே, புரையறு - குற்றந்தீர்ந்த, பயனும் - பிரயோசனமும், பொய்தீர்- பொய்யில்லாத, மாதவம் - பெரியதவத்தை, சார்ந்த - கூடின, தீரா – நீங்காத, வரங்களும் – வேண்டியசித்திகளும், மற்றும் - இன்னம்வேண்டுமேவைகளான, முற்றும்- எல்லாம் ஆகியவைகளில், யாது – எதை, அவன் – அந்த வில்வீரன், நினைந்தான் – எண்ணினானோ அதை, அன்ன – அவைகளையெல்லாம்அவனுக்கு, பயத்தன – பிரயோசனப்படுத்துமவைகளே, ஏதுவேண்டின் – அப்படிப்போதமுதலியவைகள் பிரயோசனப்படுத்துதற்குக்காரணம்வேண்டினால், வேதமும் - வேதங்களும், அறனும் – தருமங்களும், சொல்லும் – சொல்வதான, மெய் - மெய்யாகிய, அறமூர்த்தி - தருமசொரூபியே, வில்லோன் – அந்தவில்வீரன்—எ-று. (௭௮)

காரணங்கேட்டியாயிற்கடையிலாமறையின்கண்ணும்
ஆரணங்காட்டமாட்டாவறிவினுக்கறிவுமன்னோன்
போரணங்கிடங்கர்கவ்வப்பொதுநின்றுமுதலேயென்ற
வாரணங்காக்கவந்தானமரரைக்காக்கவந்தான்.

இ-ள். காரணம்கேட்டியாயில் — இதற்குமூலம் விசாரிப்பையேயானால், கடையிலா — முடிவுபடாத, மறையின்கண்ணும் — வேதங்களிலும், ஆரணம் — அங்குள்ள சாகைகளேனும், காட்டமாட்டா — தெரியச்சொல்லமாட்டாத, அறிவினுக்கு — ஞானத்துக்கு, அறிவும் — ஞானமானவனும், அன்னோன் — அவனே அவனோ, போர்-தனதுபலத்தாலே, அணங்கு — வருத்தஞ்செய்வதான, இடங்கர் — முதலையானது, கவ்வ — பற்றிக்கொள்ள அதனாலே, பொதுநின்று — தேவர்கள்நடுவேநின்று, முதலேயென்ற — ஒருமூலமேயென்றுகூப்பிட்ட, வாரணம் — யானையை, காக்க — ரக்ஷிக்க, வந்தான் — அக்காலத்துவந்தவனே, அமரரை-இக்காலத்திலேதேவரை, காக்க-ரக்ஷிக்க, வந்தான் — அவதாரஞ்செய்தருளினான் — எ-று. (௭௯)

மூலமுநடுவுமீறுமில்லதோர்மும்மைத்தாய
காலமுங்கணக்குநீத்தகாரணன்கைவிலேந்திச்
சூலமுந்திகிரிசங்குங்கரகமுந்துறந்துதொல்லை
ஆலமுமலரும்வெள்ளிப்பொருப்பும்விட்டயோத்திவந்தான்.

இ-ள். மூலமும் — ஆதியும், நடுவும் — மத்தியமும், ஈறும் — அந்தமும், இல்லது — இலதாகி, ஓர் — ஒரு, மும்மைத்தாய — மூவகையான, காலமும் — காலங்களும், கணக்கும் — எவ்வளவுகளும், நீத்த — கடந்துநிற்கிற, காரணன் — ஜகத்காரண பூதன் அவனோ, கை — தன்கையிலே, வில்ஏந்தி — ஒருவில்லைக்கொண்டு, சூலமும் — சூலத்தையும், திகிரிசங்கும் — சக்கரசங்குகளையும், கரகமும்-கமண்டலத்தையும், துறந்து-கைகளிலேகொள்ளாமல்விட்டு, தொல்லை — பழையதான, ஆலமும் — ஆலிலையையும், மலரும் — தாமரைமலரையும், வெள்ளிப்பொருப்பும்-கைலைமலையையும், விட்டு-நீங்கி, அயோத்தி — இவ்வூரேதனக்குப் பிறப்பிடமாக, வந்தான் — அவதாரஞ் செய்தருளினான் — எ-று. (௮௰)

அறந்தலைநிறுத்திவேதமருள்சுரந்தறைந்தநீதித்
திறந்தெரிந்துலகம்பூணச்செந்நெறிசெலுத்தித்தீயோர்
இறந்துகநூறித்தக்கோரிடர்துடைத்தேகவிண்டு
பிறந்தனன்றன்பொற்பாதமேத்துவார்பிறப்பறுப்பான்.

இ-ள். அறம் — தருமங்களையே, தலைநிறுத்தி — பிரதானமாகக்கொண்டு, வேதம் — வேதங்கள், அருள்சுரந்து — இரக்கமுள்ளவைகளாய், அறைந்த-சொன்ன, நீதித்திறம் — நீதிவகைகளை, தெரிந்து — விவேகித்து, உலகம் — உலகத்தார், பூண-அனுசரித்துநடக்க, செந்நெறி — செவ்வையான வழியிலே, செலுத்தி — போகவிட்டு, தீயோர் — நல்வழியிலேபோகாதவர்கள், இறந்து உக — அழிந்துவிழ, நூறி — அழித்து, தக்கோர் — நல்லோர்களுடைய, இடர் — துன்பங்களை, துடைத்து — போக்கி, ஏக-தன்னுடைச் சோதிக்கெழுந்தருள, விண்டு — திருமாலே, பிறந்தனன் — அவதரித்தான் இன்னமும், தன்பொற்பாதம் — தனதுபொன்னடிகளை, ஏத்துவார் — துதிப்பவர்களுடைய, பிறப்பு — பிறவிநோயையும், அறுப்பான்-போக்கியருளுவான் — எ-று. ஈண்டுப்பிறந்தனனென்றால் இவ்வுலகத்தவதரித்தான தன்பொற்பாதமேத்துவார் பிறப்பறுக்கவல்லவன் என்க. (௮௧)

அன்னவற்கடிமைசெய்வேனாமமுமநுமனென்பேன்
நன்னுதறன்னைத்தேடிநாற்பெருந்திசையும்போந்த
மன்னரிற்றென்பால்வந்ததானைக்குமன்னன்வாலி
தன்மகனவன்றன்றூதன்வந்தனென்றனியேனென்றான்.

இ-ள். அன்னவற்கு - அப்படிப்பட்டஒருவனுக்கு, அடிமைசெய்வேன்-நான் அடிமைசெய்கிறவன், நாமமும் - என்பெயரோ, அனுமனென்பேன்-அனுமானென்றுசொல்லப்படுவேன், நன்னுதல்தன்னை - சீதாபிராட்டியை, தேடி-தேடிக்கொண்டு, நாற்பெருந்திசையும் - நான்கானபெரியதிக்குகளெல்லாம், போந்த - போன, மன்னரில் - தலைவர்களிலே, தென்பால்வந்த - தெற்குத்திசைக்குவந்த, தானைக்கு - சேனைகளுக்கு, மன்னன் - அரசனான, வாலிதன்மகன்-அங்கதனாகிய, அவன்றன்-அவனுடைய, தூதன் - தூதுவன்யான், வந்தனென் - இங்குவந்தேன், தனியேன்நானொருவனே, என்றான் - என்றுசொன்னார் அனுமார்—எ-று. (௮௨)

என்றலுமிலங்கைவேந்தனெயிற்றினமெழிலிநாப்பண்
மின்றிரிந்தன்னநக்குவாலிசேய்விடுத்ததூத
வன்றிறலாயவாலிவலியன்கொலரசின்வாழ்க்கை
நன்றுகோலென்னலோடுநாயகன்றூதனக்கான்.

இ-ள். என்றலும் - என்றுசொன்னவுடனே, இலங்கைவேந்தன்-இராவணன், எயிற்றினம் - தன்பல்வரிசைகள், எழிலிநாப்பண் - மேகத்தினடுவே, மின்-மின்னலானது, திரிந்தன்ன - உலாவினாற்போலவிளங்க, நக்கு - சிரித்து, வாலிசேய்-வாலிபுத்திரன், விடுத்த - அனுப்பின, தூத - தூதனே, வன்திறலாய-மிகவும்பலமுள்ளவனான, வாலி - வாலியானவன், வலியன்கொல் - சுகமேயிருக்கிறானோ, அரசின் வாழ்க்கை - அவனதுராசாங்கம், நன்றுகொல் - நன்றாயிருக்கிறதோ, என்னலோடும் - என்றுகேட்டவுடனே, நாயகன் தூதன் - ஸ்ரீராமதூதனான அனுமார், நக்கான்-சிரித்தார்—எ-று. (௮௩)

அஞ்சலையரக்கபார்விட்டந்தரமடைந்தானன்றே
வெஞ்சினவாலிமீளான்வாலும்போய்விளிந்ததன்றே
அஞ்சனமேனியான்றனடுகணையொன்றான்மாழ்கித்
துஞ்சினனெங்கள்வேந்தன்சூரியன்றோன்றலென்றான்.

இ-ள். அரக்க - ஓராக்ஷதா, அஞ்சலை - பயப்படாதை, பார்விட்டு-இந்தவுலகத்தைவிட்டு, அந்தரம் - சுவர்க்கலோகம்போய், அடைந்தான் - சேர்ந்தான், அன்றே - சிலநாளுக்குமுன்னே, வெஞ்சினவாலி - வெவ்வியகோபமுள்ளவாலி, மீளான்-இனிவருவானல்லன் அவன்போனபோதே, வாலும்போய்-அவன்வாலும் அவன்கூடவேபோய், விளிந்தது - அழிந்தது, அன்றே - அல்லவோ, அஞ்சனம் - அஞ்சனம்போற்கரிய, மேனியான்றன்-நிறத்தையுடைய ஸ்ரீராமனது, அடுகணை ஒன்றால்-உன்னையுங்கொல்லவல்ல ஓரம்பினாலே, மாழ்கி - வருந்தி, துஞ்சினன் - முடிந்தான், எங்கள் - இப்போதெங்களுக்கு, கோமான் - அரசனானவன், சூரியன்தோன்றல் - சூரியன்குமாரனான சுக்கிரீவன், என்றான் - என்றுசொன்னார்—எ-று. (௮௪)

என்னுடையிட்டினாலவ்வாலியையெறுழ்வாயம்பால்
இன்னுயிருண்டிப்போதியாண்டையானிராமனென்பான்

அன்னவன்றேவிதன்னையங்கதனுடலுற்ற
தன்மையையுரைசெய்கென்னச்சமிரணன்றனயன்சொல்வான்.

இ-ள். அவ்வாலியை – அந்தவாலியை, என்னுடை – யாதினுடைய, ஈட்டினால் – நிமித்தத்தால், எறுழ்வாய் – மிகவலிமைகொண்ட, அம்பால் – அம்பினாலே, இன்உயிர் – அவனதினியஉயிரை, உண்டது – வாங்கியது, இப்போது – இக்காலத்தில், இராமனென்பான் – இராமனென்பவன், யாண்டையான் – எங்கிருக்கிறான், அன்னவன் – அந்தராமனுடைய, தேவிதன்னை – மனைவியை, அங்கதன் – அந்தவாலிபுத்திரன், நாடலுற்ற – தேடலாகிய, தன்மையை – வகையை, உரைசெய்க – சொல்லு, என்றான் – என்றுகேட்டான்ராவணன், சமீரணன்-வாயுவினுடைய, தநயன்-புத்திரனானவர், சொல்வான் – சொல்லலானார்—எ-று. (௮௫)

தேவியைநாடிவந்தசெங்கணாற்கெங்கள்கோமான்
ஆவியொன்றாகநட்டானருந்துயர்துடைத்தியென்ன
ஓவியர்க்கெழுதவொண்ணாவுருவத்தனுருமையோடும்
கோவியற்செல்வமுன்னேகொடுத்துவாலியையுங்கொன்றான்.

இ-ள். தேவியை – தனதுநாயகியை, நாடிவந்த – தேடிக்கொண்டுவந்த, செங்கணாற்கு – சிவந்தகண்களுள்ள ஸ்ரீராமனுடனே, எங்கள்கோமான் – எங்களரசனான சுக்கிரீவன், ஆவி – இருவருக்குமுயிர், ஒன்றாக – ஒன்றேயென்னும்படி, நட்டான் – உறவாயினான், அருந்துயர் – எனதரிதானதுன்பத்தை, துடைத்தியென்ன-போக்கென்று சுக்கிரீவன்கேட்டுக்கொண்டதனாலே, ஓவியர்க்கு – சித்திரமெழுதவல்லாராலும், எழுதஒண்ணா – எழுதப்படாத, உருவத்தின் – அழகுள்ளஸ்ரீராமன், உருமையோடும் – உருமையென்னு மவன்மனைவியுடனே, கோஇயல் – ராஜாங்கமாகப்பெற்ற, செல்வம் – செல்வத்தையும், முன்னேகொடுத்து – முன்பேபெறக்கொடுத்து, வாலியையும் – பின்புவாலியையும், கொன்றான் – வதைத்தார் ஸ்ரீராமன்—எ-று.

ஆயவன்றன்னொடாண்டோர்திங்களோர்நான்கும்வைகி
மேயவெஞ்சேனைசூழவீற்றினிதிருந்தவீரன்
போயினிநாடுமென்னப்போந்தனம்புகுந்ததீதென்
றேயவன்றூதன்சொன்னானிராவணனிதனைச்சொன்னான்.

இ-ள். ஆயவன்றன்னொடு – அந்தச்சுக்கிரீவனுடனே, ஆண்டு – அங்கே, ஓர்திங்கள் – ஒருமாதம்போல், ஓர்நான்கும் – ஒருநாலுமாத அளவும், வைகி – இருந்து, மேய – பின்புகூடத்தக்க, வெஞ்சேனை – வெவ்வியசேனைகள், சூழ் – சூழ்வதாக, வீற்று – அவைகள்கூடுமளவும், தனியேவேறாக இனிது இருந்த – நன்றாகப்பொறுத்திருந்த, வீரன் – ஸ்ரீராமன், போய்இனி – இனிநீங்கள்போய், நாடுமென்ன – தேடுங்களென்றுசொல்ல, போந்தனம் – நாங்கள்தேடிவந்தோம், புகுந்தது – சீதைபிரிந்தபின்பு நடந்தகாரியம், ஈதென்று – இவ்வளவுதானென்று, ஏயவன்-ஏவியஅங்கதனுக்கு, தூதன் – தாம்தூதனாக, சொன்னான் – சொன்னார், இராவணன் – அதற்குத்தசக்கிரீவன், இதனைச்சொன்னான் – இந்தவார்த்தையைச் சொல்லலானான்—எ-று.()

உங்குலத்தலைவன்றன்னோடொப்பிலாவுயர்ச்சியோனை
வெங்கொலையம்பிற்கொன்றாற்காட்டொழின்மேற்கொண்டீரேல்
எங்குலப்புலநுஞ்சீர்த்திநும்மொடுமியைந்ததென்றால்
மங்குலிற்பொலிந்தஞாலமாதுமையுடைத்துமாதோ.

இ-ள். உங்குலத்தலைவன் றன்னோடு – இப்போது உங்கள்குலத்துக்கரசனான சுக்கிரீவனுடனே, ஒப்பிலா – யாதொரொப்புமில்லாத, உயர்ச்சியோனை – உயர்வுள்ளவாலியை, வெங்கொலை – வெவ்வியகொலைசெய்வதான, அம்பில்-அம்பினாலே, கொன்றாற்கு – கொன்றராமனுக்கு, ஆள்தொழில் – அடிமைத்தனஞ்செய்ய, மேற்கொண்டீரேல் – உங்குலத்தலைவனோடு நீங்களொப்புக்கொள்வீர்களேயானால், நுஞ்சீர்த்தி – உங்கள்பெருமை, எங்குஉலப்புறும் – எப்படிச்சொல்ல முடிவுபெறும் முழுதும் பழிப்பன்றோ முடிவுபெறும், நும்மொடும்-உங்களிடத்தே உங்களோடே, இயைந்ததென்றால் – இச்செய்கைகூடிவதேயானால், மங்குலில் – மேகவளத்தினாலே, பொலிந்த – நிறைவுபெறுகிற, ஞாலம் – இந்தவுலகமானது, மாதுமை-பெண்களிடத்துள்ள அறியாமையையே, உடைத்து – உடையதாயிற்று—எ-று. இந்த அறியாமையாலே ராஜத்துரோகம் உள்ளதானால் இனிமழையும் பெய்யுமாவென்பது கருத்து. (அஅ)

தம்முனைக்கொல்வித்தன்னார்கொன்றவற்கன்புசான்ற
உம்மினத்தலைவனேவயாதெனக்குணர்த்தலுற்ற
தெம்முனைத்தூதுவந்தாயிகல்புரிதன்மையென்னை
நும்முனைக்கொல்லாநெஞ்சமஞ்சலைநுவதியென்றான்.

இ-ள். தம்முனை – தனக்குமூத்தவனை, கொல்வித்து – கொல்லப்பண்ணி, அன்னான் – அந்தத்தமையனை, கொன்றவற்கு – கொன்றஒருவனுக்கு, அன்புசான்ற – அன்பமைந்த, உம்மினம் – உங்கள்கூட்டத்துக்கு, தலைவன் – தலைவனான ஒருவன், ஏவ – அனுப்ப, எனக்குஉணர்த்தலாவது – எனக்குநீசொல்லவந்தது, யாது-என்ன, எம்முனை – எங்களுக்குமுன்னே, தூதுவந்தாய் – தூதுவந்தவனானநீ, இகல்புரி-சண்டைசெய்த, தன்மையென்னை – காரியமென்ன, நும்முனை – உங்களிலேதூதென்றுவந்த உன்னை, கொல்லாம் – கொல்லமாட்டோம், நெஞ்சம் – உன்மனத்திலே, அஞ்சலை – பயப்படாதவனாகி, நுவல்தியென்றான் – சொல்லென்றுகேட்டான் ராவணன்—எ-று. (அகூ)

வேறு.

துணர்த்ததாரவன்சொல்லியசொற்களைப்
புணர்த்துநோக்கிப்பொதுநின்றநீதியை
உணர்த்தினாலதுறுமெனவுன்னருங்
குணத்தினானுமினையனகூறினான்.

இ-ள். துணர்த்த – பூங்கொத்துகளாலான, தாரவன் – மாலையணிந்தராவணன், சொல்லிய – சொன்ன, சொற்களை – வார்த்தைகளையெல்லாம், புணர்த்து-ஒன்றுசேர்த்து, நோக்கி – பார்த்து, பொதுநின்ற – யார்க்கும்பொதுவான, நீதியை-நியாயத்தை, உணர்த்தினால் – சொன்னால், அதுஉறும்என – அதுதக்கதேயாமென்று, உன்னரும் – நினைத்துச்சொல்லஅரிதான, குணத்தினானும் – குணங்களுள்ள அனுமாரானவர், இனையன – இவ்வார்த்தைகளை, கூறினான் – சொல்லலானார்—எ-று.

தூதுவந்ததுசூரியன்கான்முளை
ஏதுவொன்றியநீதியியைந்தன
சாதுவென்றுணர்கிற்றியேற்றரக்கன
கோதிறந்தனநின்வயிற்கூறுவாம்.

இ-ள். தூதுவந்தது – நான்தூதுசொல்லவந்தது, சூரியன்கான்முளை – சூரியன்குமாரனான சுக்கிரீவனுடைய, ஏதுவொன்றிய – நிமித்தத்தினாலானவையாம்,

நீதி - அவையோ நீதியோடு, இயைந்தன - கூடியவைகளாம், சாதுவென்று - நல்லவைகளென்று, உணர்கிற்றியேல் - நினைப்பாயேயானால், தக்கன - அவைகள்தகுதியானவைகளே, கோது - தோஷங்கள், இறந்தன - நீங்கினநன்மார்க்கங்களே, நின்வயின் - உனக்குமுன்னே, கூறுவாம் - யாம்சொல்லக்கடவோம், ஆம்என்னும்உளப்பாட்டுத் தன்மைப்பன்மை அந்தச்சுக்கிரீவனுடன் யானும் என்பதுபோதருதல் காண்க—எ-று. (௯௧)

வறிதுவீழ்த்தனைவாழ்க்கையைமன்னறம்
சிறிதுநோக்கலைதீமைதிருத்தினாய்
இறுதியுற்றளதாயினுமின்னுமோர்
உறுதிகேட்டியுயிர்நெடிதோம்புவாய்.

இ-ள். வாழ்க்கையை - உன்வாழ்வை, வறிது - வீணாக, வீழ்த்தனை - போகச்செய்தாய், மன் அறம் - ராஜதருமத்தை, சிறிதும் - கொஞ்சமேனும், நோக்கலை- நீபாராதிருக்கிறாய், தீமை - கெடுதியையே, திருத்தினாய் - செய்தாய் அதனால், இறுதி - உனக்குமுடிவு, உற்றுளது - வந்திருக்கின்றது, ஆயினும் - ஆனாலும், இன்னும் - இன்னமும், ஒருறுதி - நாம்சொல்லுவதான நன்மையை, கேட்டி - கேட்கக்கடவை கேட்டாயானால், உயிர் - உன்உயிரை, நெடிது - நெடுங்காலமும் - ஓம்புவாய் - உள்ளதாகக் காத்துக்கொள்வாய்—எ-று. (௯௨)

போயிற்றீர்நும்புலன்வென்றுபோற்றிய
ஆயிற்றீர்வரிதாகியமாதவம்
காயிற்றீர்வருங்கேடறுங்கற்பினாள்
தீயிற்றூயவளைத்துயர்செய்ததால்.

இ-ள். நும்புலன் - உமதுவிஷயவாசனைகளை, வென்று - ஜயித்து, போற்றிய - பாதுகாத்த, தீர்வு - நீங்குதல், அரிதாகிய - இல்லாத, மாதவம் - பெரியதவமெல்லாம், போய் - உங்களைவிட்டுநீங்குதலாக, இற்றீர் - அழிந்தீர்கள், ஆயில்- ஆராய்ந்துபார்க்குமிடத்தில், காயில்-உயிரேபோகிறதாகவருத்தினாலும், தீர்வுஅறும்- நீங்குதலில்லாத, கேடு அறும் - அழிவுபடாத, கற்பினாள் - பதிவிரதையாகிய சீதாபிராட்டியான, தீயில் - நெருப்பைப்போல், தூயவளை - பரிசுத்தமானவளை, துயர்- துன்பப்படும்படி, செய்ததால் - நீவிர் பண்ணினதினாலே—எ-று. (௯௩)

இன்றுவீந்ததுநாளைச்சிறிதிறை
நின்றுவீந்ததலானிறைநிற்குமோ
ஒன்றுவீந்ததுநல்லுணர்நும்பரை
வென்றுவீங்கியவீக்கமிகுத்ததால்.

இ-ள். இன்று - இன்றைத்தினமும், வீந்தது - கழிந்தது, நாளை - நாளைத்தினமும், சிறிது இறை - கொஞ்சநேரம், நின்று - நிற்பதாகி, வீந்தது - கழிந்ததே, அலால் - அல்லாமல், நிறை - முழுதும், நிற்குமோ - காலம் நிலைகொள்ளுவதாமோ, நல்லுணர் - நல்லவுணர்வாகிய, ஒன்று - ஒருபொருள், வீந்தது-உங்களிடத்தில்லாமற்போயிற்று ஏன், உம்பரை - தேவர்களை, வென்று - ஜயங்கொண்டு, வீங்கிய- அதிகமான, வீக்கம் - பெருமை, மிகுத்ததால் - உங்களிடத்தில் அதிகமானதினாலே நல்லுணர்வு வீந்தது—எ-று. (௯௪)

தீமைநன்மையைத்தீர்த்தலொல்லாதெனும்
வாய்மைநீக்கினைமாதவத்தால்வந்த
தூய்மைதூயவடன்மையிற்றோன்றிய
நோய்மையாற்றுடைக்கின்றனைநோக்கலாய்.

இ-ள். தீமை - பாவமானது, நன்மையை - புண்ணியத்தை, தீர்த்தல் - வெல்லுதற்கு, ஒல்லாது - கூடாது, எனும் - என்பதான, வாய்மை - மெய்யை, தீர்த்தனை - எண்ணாமல்விட்டாய், மாதவத்தால் - உனது பெரியதவத்தினாலே, வந்த-வருதலான, தூய்மை - யோக்கியதையை, தூயவள் - நல்லவளான பிராட்டி, தன்மையில்-விஷயத்தினாலே, தோன்றிய - உண்டான, நோய்மையால் - காமநோயாலே, துடைக்கின்றனை - போக்கிக்கொள்ளுகிறாய், நோக்கலாய் - ஒன்றும் ஆலோசியாதவனாகி எ-று. (௬௫)

திறந்திறம்பியகாமச்செருக்கினால்
மறந்துதத்தமதியின்மயங்கினார்
இறந்திறந்திழிந்தேறுவதேயலால்
அறந்திறம்பினராருளராயினர்.

இ-ள். திறம் - நல்வகைகளிலே, திறம்பிய - தப்புதலான, காமச்செருக்கினால் - காமமயக்கத்தினாலே, மறந்து - நன்மைகளைமறந்து, தத்தம் - தங்கள் - தங்களுடைய, மதியின் - புத்திவிசேஷத்தினாலே, மயங்கினார் - தப்பிப்போனவர்கள், இறந்து இறந்து - செத்துச்செத்து, இழிந்து - தாழ்ந்து, ஏறுவதே-அத்தாழ்விலுயர்கிறதே, அல்லால் - அல்லாமல், அறந்திறம்பினர் - தருமநிலையைத் தப்பிநடந்தவர்களில், உளராயினர் - புகழுள்ளவர்களே யானவர்கள், ஆர் - எவர்கள், அறந்திறம்பாதவர்களே புகழுள்ளவராவாரென்று கருத்து—எ-று. (௬௬)

நாமத்தாழ்கடன்ஞாலத்தவிந்தவர்
ஈமத்தான்மறைந்தாரிளமாதர்பால்
காமத்தாலிறந்தார்களிவண்டுறை
தாமத்தாரினரெண்ணினுஞ்சால்வரோ.

இ-ள். நாமத்து - பயப்படும்படியாக, ஆழ் - ஆழத்தையுடைய, கடல் - கடல்சூழ்ந்த, ஞாலத்து - உலகத்திலே, அவிந்தவர் - இறந்துபோனவர்கள்எல்லாம், ஈமத்தால் - சுடுகாடுபோய்ச் சேர்வதனாலே, மறைந்தார் - மறைவாயினார்கள், இளமாதர்பால் - யௌவநமுள்ளபெண்கள் விஷயமான, காமத்தால் - ஆசையினால்,இறந்தார்-செத்துப்போனவர்கள் அதிகமானவர்கள், களிவண்டு - மயக்கத்தையுடைய வண்டுகள், உறை - சஞ்சரிப்பதான, தாமம் - ஒளியுள்ள, தாரினர் - மாலைகளையுடைய வீரர்கள், எண்ணினும் - கணக்கிலே, சால்வரோ - அமைவார்களோ அமையார்கள் பழியையடைவார்கள்—எ-று. (௬௭)

பொருளுங்காமமுமென்றிவைபோக்கிவே
றிருளுண்டாமெனவெண்ணலரீதலும்
அருளும்காதலிற்றீர்தறுமல்லதோர்
தெருளுண்டாமெனவெண்ணலர்சீரியோர்.

இ-ள். பொருளும் - திரவிய ஆசையும், காமமும் - பெண்களாசையும், என்றிவை - என்னுமிரண்டை, போக்கி - அல்லாமல், வேறு - வேறே, இருள் - நரகம்,

உண்டாமெ௭ன - உளதென்று, எண்ணலர் - நினையார்கள்சீரியோர்கள், ஈதலும்-வறியோர்க்குக்கொடுப்பதும், அருளும் - இரக்கமும், காதலில் - பொருளாசைபெண்ணாசையில், தீர்தலும் - நீங்கியிருத்தலும், அல்லது - அல்லாமல், ஓர்தெருளுண்டாமென - வேறே ஒருசுவர்க்கமுண்டென்று, எண்ணலர் - நினையார்கள், சீரியோர் - நல்லோர்கள், தெருள் - சுவர்க்கம் சுகம்—எ-று. ஈதலும் அருளும் காதலிற்றீர்தலுமே சுவர்க்க சுகமென்று சிரியோர் கொள்வரென்று கருத்து. (௯அ)

இச்சைத்தன்மையினிற்பிறரில்லினை
நச்சிநாளுநகையுறநாணிலன்
பச்சைமேனிபுலர்ந்துபழிபடூஉம்
கொச்சையாண்மையுஞ்சீர்மையிற்கூடுமோ.

இ-ள். இச்சைத்தன்மையினில் - இச்சாகுணத்தினாலே, பிறரில்லினை - பிறர்மனைவியை, நச்சி - விரும்பி, நாளும் - எப்போதும், நகையுற - பிறருக்குச் சிரிப்புத்தோன்ற, நாண் இலன் - வெட்கமில்லாதவனாகி, பச்சைமேனி - பசுமையானசரீரம், புலர்ந்து - வற்றுதலாகி, பழிபடூஉம் - பழிப்பையடைகிற, கொச்சை - அறிவில்லாத ஆண்மையும் - ஆண்மைத்தனமும், சீர்மையில் - யோக்கியமானவைகளிலே, கூடுமோ - சேருமோசேராது—எ-று. (௯௯)

ஓதநீருலகாண்டவருன்றனைப்
போதநீதியராருளர்போயினர்
வேதநீதிவிதிவழிச்செல்வரும்
காதனீயறத்தெல்லைகடத்தியோ.

இ-ள். ஓதநீர் - கடல்சூழ்ந்த, உலகாண்டவர் - உலகத்தையாண்டவர்களில், உன்றனை - உன்னளவு, போதம் - ஞானமுள்ள, நீதியர் - நீதி தெரிந்தவர்கள், ஆருளர் - யாரிருக்கிறார்கள், போயினர் - எல்லாருமிறந்துபோனார்களே அல்லாதிருந்தவர்களில்லை, வேத நீதி - வேத நீதிதெரிந்து, விதிவழி - அது விதித்தபடியே, செல்வரும் - செல்லவல்லவர்களும், காதல் - விரும்பும்படி ஆயிரம்வேதந்தெரிந்த, நீ-தசக்கிரீவனேநீ, அறத்தெல்லை - தருமத்தினளவை, கடத்தியோ - கடந்து நடக்கலாமா—எ-று. (௧௦௦)

வெறுப்புண்டாயவொருத்தியைவேண்டினால்
மறுப்புண்டாயபின்வாழ்கின்றவாழ்வினின்
உறுப்புண்டாய்நடுவோங்கியநாசியை
அறுப்புண்டாலதழகெனலாகுமே.

இ-ள். வெறுப்பு - தன்மேல்பிரியமில்லாமையை, உண்டாய - உள்ளவளான ஒருத்தியை - ஒருபெண்ணை, வேண்டினால் - விரும்பினால், மறுப்பு - அவள்வேண்டாவென்றுதள்ளுதல், உண்டாயபின் - உண்டானபின்பு, வாழ்கின்ற - அவளைப் பலாத்கரித்துக்கூடிவாழ்கிற, வாழ்வினில் - சுகத்தைப்பார்க்கிலும், உறுப்புண்டாய்-ஓரவயவமாகி, நடு - முகத்தினடுவே, ஓங்கிய - உயர்ந்திருக்கிற, நாசியை - மூக்கை ஒருவரால், அறுப்புண்டால் - அறுபடலானால், அது - அப்படி அறுபடுதலே, அழகெனலாகுமே - அழகென்றுசொல்லப்படும், வாழ்வினில் - மூக்கறுபடுதலழகென்று சொல்லலாகும், என்றால் - மூக்கறுபடுதல் அழகன்று அதிலும்வேண்டாளைக்கூடுதலழகன்று என்றாயிற்று—எ-று. (௧௦௧)

பாரைஞ்ஞூறுவபற்பலபொற்புயம்
ஈரைஞ்ஞூறுதலையுளவென்னினும்
ஊரைஞ்ஞூறுங்கடுங்கனலுட்பொதி
சீரைஞ்ஞூறவைசேமஞ்செலுத்துமோ.

இ-ள். பாரை - உலகமெல்லாம், ஞூறுவ - அழிப்பனவாகிய, பற்பல - அநேகம், பொற்புயம் - அழகுள்ளதோள்களும், ஈரைஞ்ஞூறு - ஆயிரம், தலை - தலைகள், உளவென்னினும் - உண்டாயிருக்கின்றன ஆனாலும்சேமஞ்செலுத்தா, ஊரை - ஊர்முழுதும், ஞூறும் - அழிப்பதான, கடுங்கனல் - கடுமையாகியநெருப்பை, உட்பொதி - உள்ளேகொண்டுள்ள, சீரைஞூறு - நூறுபுடவையானாலும், அவை - அந்தநூறுபுடவையும், சேமம்செலுத்துமோ - தாம் வெந்துபோகிறதையன்றிப் பிறருக்குபத்திரத்தையுண்டுபண்ணுமா—எ-று. நெருப்புச்சிறிதானாலும் அழிக்கும். (௧௦௨)

புரம்பிழைப்பருந்தீப்புகப்பொங்கியோன்
நரம்பிழைத்தனபாடலினல்கிய
வரம்பிழைக்குமறைபிழையாதவன்
சரம்பிழைக்குமென்றெண்ணுதல்சாலுமோ.

இ-ள். புரம் - திரிபுரத்திலும், பிழைப்பு அரும் - தப்புதற்குக்கூடாத, தீப்புக - நெருப்புவிழ, பொங்கியோன் - கோபங்கொண்ட சிவனாலே, நரம்பு இழைத்தன - உன்கைநரம்பே தந்தியாகக்கொண்டு நீபாடின, பாடலின் - பாட்டுக்காக, நல்கிய - கொடுக்கப்பட்ட, வரம் - வரபலமும் நீமறைநெறிதப்புதலாலே, பிழைக்கும்-தப்பிப்போகும், மறை பிழையாதவன் - மறைநெறிதப்பாத ஸ்ரீராமனுடைய, சரம்-அம்பு, பிழைக்குமென்று - தப்பிப்போமென்று, எண்ணுதல் - நீ எண்ணியிருத்தல், சாலுமோ - கூடுமோகூடாதே—எ-று. (௧௦௩)

ஈறினாணுகவெஞ்சலினற்றிரு
நூறிநொய்தினையாகிநுழைதியோ
வேறுமின்னுநகையாம்வினைத்தொழில்
தேறினர்பலர்காமிக்குஞ்செவ்வியோய்.

இ-ள். ஈறு இல் - ஒருவனுக்குக் கெடாதிருக்கவேண்டிய, நாண் உக - வெட்கம்கெடுதலாக, எஞ்சல் இல் - குறைதலில்லாத, நல்திரு - நல்ல செல்வத்தையும், நூறி - அழித்துக்கொண்டு, நொய்தினையாகி - எளியவனாகி, நுழைதியோ - வலியாரிடத்திலே செல்லக்கடவையோ, வேறும் - அதையல்லாமல், இன்னும் - இன்னமும், நகையாம் - பிறராலேபழிக்கப்படுதலாம், வினைத்தொழில் - தாம் செய்யுஞ்செய்கைகள், தேறினர்பலர் - இன்னவையாமென்று தெரிந்துள்ள பலராலும், காமிக்கும் - உன் தவச்செய்கையைக்கண்டு வேண்டுவதான, செவ்வியோய் - செவ்வையுள்ளவனே—எ-று. (௧௦௪)

பிறந்துளார்பிறவாதபெரும்பதம்
சிறந்துளார்மற்றுந்தேவர்க்குந்தேவராய்
இறந்துளார்பிறர்யாருமிராமனை
மறந்துளாருளராகிலர்வாய்மையால்.

இ-ள். பிறந்துளார் - உலகத்திலே பிறந்தவர்கள், பிறவாத - இனிப்பிறவாதிருக்கிற, பெரும்பதம் - பெரியபதவியடைதலிலே, சிறந்துளார் - சிறப்புள்ளவர்

களும், மற்றும் – இன்னமும், தேவர்க்கும் – தேவர்களுக்கும், தேவராய்-தேவராகி, இறந்துளார் – மேலானவர்களும், பிறர்யாரும் – உன்னையல்லாத மற்றெல்லோரும், இராமனை – ஸ்ரீராமனை, மறந்துளார் – மறந்தவர்களாய், உளராகிலர் – இருக்கின்றிலர்கள், வாய்மை – இதுமெய்யே—எ-று. (௧0௫)

ஆதலாற்றனரும்பெறற்செல்வமும்
ஓதுபல்கிளையும்முயிரும்பெறச்
சீதையைத்தருகென்றெனச்செப்பினான்
சோதியான்மகனிற்கெனச்சொல்லினான்.

இ-ள். ஆதலால் – ஆகையாலே, தன் – தனது, அரும்பெறல் – பெறுதற்கரிதான, செல்வமும் – பாக்கியமும், ஓது – இன்னஞ்சொல்வதான, பல்கிளையும் – பல உறவும், உயிரும் – பிராணனும், பெற – இழவாமலினிப்பெறும்படி, சீதையை – சீதாபிராட்டியை, தருகென்று – விட்டுவிடுகவென்று, என – நான்சொல்லும்படி, செப்பினான் – சொன்னான், சோதியான்மகன் – சுக்கிரீவன், நிற்கென – உனக்கென்று, சொல்லினான் – சொன்னானனுமார், உனக்குநான் சொல்லும்படி சோதியான் மகன் செப்பினானென்று அனுமார்சொன்னாரெனக்கூட்டுக—எ-று. (௧0௬)

என்றலும்மிவைசொல்லியதெற்கொரு
குன்றில்வாழுங்குரங்குகொலாமிது
நன்றுநன்றெனமாநகைசெய்தனன்
வென்றியென்றொன்றுதானன்றிவேறிலான்.

இ-ள். என்றலும் – என்றுசொன்னவுடனே, இவை – இவ்வார்த்தைகள், சொல்லியது – சொன்னது, எற்கு – எனக்கு, ஒருகுன்றின் – ஒருமலையிலே, வாழும் – வாழ்வதான, குரங்குகொல் – குரங்கோ, ஆம் இது – ஆகிய இவ்வார்த்தை, நன்று – நன்றென, மாநகைசெய்தனன் – மிகவுநன்றாயிருந்ததென்று மிகவும் சிரித்தானாகி, வென்றியென்றொன்று – ஜயமென்பதொன்றே, தானன்றி – அல்லாமல், வேறிலான் – எவ்விடத்தும்வேறொருதோல்வியை அடையாதராவணன்—எ-று. (௧0௭)

குரக்குவார்த்தையுமானிடர்கொற்றமும்
இருக்கநிற்கநீயென்கொலடாவிரும்
புரத்தினுட்டருந்தூதுபுகுந்தபின்
அரக்கரைக்கொன்றதஃதுரையாயென்றான்.

இ-ள். குரக்கு – குரங்கினுடைய, வார்த்தையும் – சொல்லும், மானிடர் – மனிதருடைய, கொற்றமும் – வெற்றியும், இருக்கநிற்க – அவைகளிருக்கநீசொல்லவேண்டா, நீஎன்கொலடா – நீ யாதுகாரணத்தினாலேயடா, இரும்புரத்தினுள் – இந்த பெரியவூர்க்குள்ளே, தரும் – ஒருவர்சொல்லிவிடுவதான, தூதுபுகுந்தபின் – தூதுவந்தபின்பு, அரக்கரைக்கொன்றது – ராக்ஷதர்களைக் கொல்லலானது ஆன, அஃது- அதை, உரையாய் – சொல்லு, என்றான் – என்றுகேட்டான்ராவணன்—எ-று. குரக்கு – வார்த்தை இருக்க – மானிடர், கொற்றம் நிற்க – எனக் கூட்டுக. (௧0அ)

காட்டுவாரின்மையாற்கடிகாவினை
வாட்டினேனென்னைக்கொல்லவந்தார்களை
வீட்டினேன்பின்னுமென்மையினாலுன்றன்
மாட்டுவந்ததுகாணுமதியினால்.

இ-ள். காட்டுவோர் — உன்னை எனக்குக் காட்டுகிறவர்கள், இன்மையால் - ஒருவரும் அகப்படாததினாலே, கடிகாவினை-பரிமளமுள்ளசோலையை, வாட்டினேன் - அழித்தேன், என்னை — அதுநிமித்தமாக என்னை, கொல்லவந்தார்களை - கொல்லவந்தவர்களையெல்லாம், வீட்டினேன் - கொன்றேன், பின்னும் — பின்பும், மென்மையினால் - நான் தூதுவந்தவனென்கிற எளிமையினாலே, உன்றன்மாட்டு — உன்னிடத்துக்கு, வந்தது - நான்வரலானது, காணுமதியினால் — உன்னைக்கண்டு பேசவேணுமென்கிற கருத்தைக்கொண்டு—எ-று. (௧௦௯)

என்னுமாத்திரத்தீண்டெரிநீண்டுக
மின்னும்வாளெயிற்றன்சினம்வீங்கினான்
கொன்மினென்றனன்கொல்லியர்சேர்தலும்
நின்மினென்றனன்வீடணனீதியான்.

இ-ள். என்னுமாத்திரத்து - என்றுசொல்லுமுன்னே, ஈண்டு - மூளுகிற, எரிநீண்டு - கோபாக்கினிஅதிகமாய், உக — பொறிகள்சிந்த, மின்னும் — மின்னுகின்ற, வாள் — கத்திபோலிருக்கிற, எயிற்றன் - பற்களுள்ளவன், சினம்வீங்கினான்-கோபமிக்கவனாகி, கொன்மினென்றனன் — இவனைக்கொல்லுங்களென்று உத்தரவுபண்ணினான், கொல்லியர் — கொல்லவல்லவர்கள், சேர்தலும் - அனுமாரைக்கிட்டும்போது, நீதியான் - நியாயந்தெரிந்தவனான, வீடணன் - விபீடணனானவன், நின்மினென்றனன் - அக்கொலைசெய்யப்போனவர்களை நில்லுங்களென்று தடுத்தான்—எ-று.

ஆண்டெழுந்துநின்றண்ணலரக்கனை
நீண்டகையன்வணங்கினனீதியான்
மூண்டகோபமுறையதன்றாமென
வேண்டுமெய்யுரைபையவிளம்பினான்.

இ-ள். ஆண்டு - அப்போதங்கே, எழுந்துநின்று - எழுந்திருந்துநின்று, அண்ணல் - மிகப்பெருமையுள்ள, அரக்கனை — ராவணனைப்பார்த்து, நீண்டகையன்-நீட்டினகையையுடையவனாகி, வணங்கினன் — வந்தனைசெய்து, நீதியான் — நியாயந்தெரிந்த விபீடணன், மூண்ட — உமக்கிப்போதுண்டான, கோபம் — கோபமானது, முறையதன்று — நீதியுள்ளதல்ல, ஆமென — ஆமென்று, வேண்டும் — அவன்விரும்பலாகிய, மெய் உரை - மெய்யானவார்த்தைகள், பைய - அவன்கோபமடங்கும்படிமெள்ள, விளம்பினான் - சொல்லலானான்—எ-று. (௧௧௧)

வேறு.

அந்தணனுலகமூன்றுமாதியினறத்தினாற்றல்
தந்தவனன்புக்கான்றதவநெறியுணர்ந்துதக்கோய்
இந்திரன்கருமமாற்றுமிறைவனீயியம்புதூது
வந்தனெனென்றபின்புங்கொல்லியோமறைகள்வல்லோய்.

இ-ள். அந்தணன் — பிராமணனாகி, உலகமூன்று-இந்தத்திரிலோகத்தையும், ஆதியின் — முன்னேதனது, அறத்தினாற்றல் - தருமபலத்தினாலே, தந்தவன்-சிருட்டித்தவன் உன்மேல், அன்புக்கு — பிரீதிகொள்வதாக, ஆன்ற — அமைவதான, தவநெறி - தபோமார்க்கங்களெல்லாம், உணர்ந்து - தெரிந்துசெய்து, தக்கோய் - தகுந்தவனாகி, இந்திரன்கருமம் — இந்திராதிபத்தியத்தையும், ஆற்றும்இறைவன் - செய்யவல்ல அரசன், நீ - நீயானால், இயம்புதூது-ஒருவர்சொல்லச் சொன்னதைச்சொல்ல

வந்தனென் – நான்வந்தேன், என்றபின்பும் – என்றுசொன்னதைக் கேட்டும், மறைகள்வல்லோய் – வேதங்களில்வல்ல ராட்சதேந்திரா, கொல்லியோ – கொல்லுவது தகுமோ—எ-று. (௧௧௨)

பூதலப்பரப்பினண்டப்பொகுட்டினுட்புறத்துட்பொய்தீர்
வேதமுற்றியங்குவைப்பின்வேறுவேறிடத்துவேந்தர்
மாதரைக்கொலைசெய்தார்களுளரெனவரினும்வந்த
தூதரைக்கொன்றுளார்கள்யாவரேதொல்லைநல்லோர்.

இ-ள். பூதலப்பரப்பின் – இந்தப்பூமண்டலத்தளவிலும், அண்டப்பொகுட்டினுள் – அண்டமுடிவிலும், புறத்துள் – மற்றையிடங்களிலும், பொய்தீர்-மெய்யான, வேதமுற்று – வேதங்கள்நின்று, இயங்கு – வழங்குவனவான, வைப்பின் – இடங்களிலும், வேறுவேறு – இன்னம்வெவ்வேறான, இடத்து – இடங்களிலுமுள்ள, வேந்தர்-அரசர்கள், மாதரை – பெண்களை, கொலைசெய்தார்கள் – கொன்றவர்கள், உளரென – உண்டென்று, வரினும் – சொல்வருவதானாலும், வந்த – ஒருவரனுப்பவந்த, தூதரை – தூதனை, கொன்றுளார்கள் – கொன்றவர்கள், தொல்லைநல்லோர்-முன்னுள்ள நீதிமான்களில்யாவர் – யாருண்டு ஒருவருமில்லை—எ-று. (௧௧௩)

பகைப்புலனணுகியுய்த்தார்பகர்ந்ததுபகர்ந்துபற்றார்
மிகைப்புலனடக்கிமெய்ம்மைவிளம்புதல்விரதம்பூண்ட
தகைப்புலக்கருமத்தோரைக்கோறலிற்றக்கார்யார்க்கும்
நகைப்புலன்பிறிதுண்டாமேநங்குலநவையுண்டாமே.

இ-ள். பகைப்புலன் – சத்துருக்ஷேத்திரத்துக்கு, நணுகி – வந்து, உய்த்தார்-தம்மைஅனுப்பினவர்கள், பகர்ந்தது – சொன்னதை, பகர்ந்து – சொல்லி, பற்றார்-சத்துருக்கள், மிகைப்புலன் – அதிகமானபோது, அடக்கி – அவர்களை அடங்கப்பண்ணி, மெய்ம்மை – உள்ளகாரியத்தை, விளம்புதல் – சொல்லுகிறதையே, விரதம் பூண்ட – தமக்கு உறுதிப்பொருளாகக்கொண்டுள்ள, தகைப்புலம் – பிறரிரங்குதற்குத்தகுதியான, கருமத்தோரை – காரியக்காரரான தூதரை, கோறலில் – கொல்லுதலைவிட, தக்கார் – நல்லோர்கள், யார்க்கும் – எல்லாருக்கும், நகைப்புலன் – சிரித்தற்கிடம், பிறிது – வேறே, உண்டாமே – உள்ளதுண்டா, நங்குலம் – அப்படிக்கொல்லநமதுகுலம், நவையிற்று – தோஷமுள்ளது, ஆமே – ஆகுமா, தோஷமில்லாத நாம் தோஷஞ்செய்யலாகாதென்கிறான் செய்தால் தோஷமுள்ளதாம் நமதுகுலமெனவுமாம்—எ-று. (௧௧௪)

முத்தலையெஃகன்மற்றைமுராந்தகன்முனிவன்முன்னா
அத்தலைநம்மைநோனுவமரர்க்குநகையுற்றாமால்
எத்தலையுலகங்காக்கும்வேந்தநீவேற்றோரேவ
இத்தலையெய்தினானைக்கொல்லுதலிழுக்கமின்னும்.

இ-ள். முத்தலை – மூன்றுதலையையுடைய, எஃகன்-சூலாயுதமுள்ளசிவனும், மற்றைமுராந்தகன் – மற்றொருவிஷ்ணுவும், முனிவன் – பிரமனும், முன்னா – முதலாக, அத்தலை – அந்தக்கட்சியில், நம்மை – நம்முடையசெல்வத்தைக்கண்டு, நோனு-பொறாமைகொள்ளுகிற, அமரர்க்கும் – தேவர்களுக்கும், நகையிற்றாம்-சிரித்தற்கிடமாம், எத்தலை – எவ்விடத்துமுள்ள, உலகை – உலகங்களையெல்லாம், காக்கும்-ஆளவல்ல, இறைவனீ – அரசனனநீ, வேற்றோர் – நமக்கன்னியரானவர்கள், ஏவ – அனு

ப்ப, இத்தலை - இந்தநம்மிடத்துக்கு, எய்தினானை - வந்தவொருவனை, கொல்லுதல்- கொல்லுகிறது, இழுக்கம் - தவறும், இன்னும் - இன்னமும்—எ-று. (௧௧௫)

இளையவடன்னைக்கொல்லாதிருசெவிமூக்கொடீர்ந்து
விளைவுரையென்றுவிட்டார்வீரராய்மெய்ம்மையோர்வார்
களைதியேலாவிநம்பாலிவன்வந்துகண்ணிற்கண்ட
அளவுரையாமற்செய்தியாதியென்றமையச்சொன்னான்.

இ-ள். இளையவடன்னை - உன்தங்கையை, கொல்லாது - கொல்லாமல், இருசெவி - இரண்டுகாதுகளையும், மூக்கொடு - மூக்குடனே, ஈர்ந்து-அறுத்து, விளைவு-எங்களாலானதை, உரையென்று - சொல்லென்று, விட்டார் - அனுப்பினார்கள், வீரராய் - வீரத்தன்மையுள்ளவர்களாய், மெய்ம்மை - மேலுளதாவதை, ஓர்வார்-தெரியவேண்டின அவ்விருவர், ஆவி - இவனுயிரை, களைதியேல்-வாங்குவையேயானால், நம்பால் - நம்மிடத்தில், இவன்வந்து - இவனொருவனும்வந்து, கண்ணிற்கண்ட-கண்ணாலேகண்ட, அளவு - அளவை, உரையாமல் - இவன்போய்ச் சொல்லாமல், செய்தியாதி - செய்தாயாகிறாய், என்றமைய - என்றவன்கோபமடங்க, சொன்னான்-சொல்லினான்—எ-று. (௧௧௬)

வேறு.

நல்லதுரைத்தாய்நம்பியிவனவைசெய்தானேயானாலும்
கொல்லல்பழுதேபோயிடைநீகூறிக்கொணர்திகடிதென்னாத்
தொல்லைவாலைமூலமறச்சுட்டுநகரைச்சூழ்போக்கி
எல்லைகடக்கவிடுமின்களென்றானின்றாரிரைத்தெழுந்தார்.

இ-ள். நல்லது - நல்லகாரியமே, உரைத்தாய் - சொன்னாய், நம்பி - உத்தமகுணமுள்ளவனே, இவன் - இந்தக்குரங்கானவன், நவைசெய்தானே - குற்றஞ்செய்தவனே, ஆனாலும் - ஆயினும், கொல்லல்பழுதே - கொல்லுகிறதுதோஷமே, போயிடைநீ - குரங்கேநீஉன்னிடத்துக்குப்போய், கூறி - அவ்விருவருக்குஞ்சொல்லி, கொணர்தி - கூட்டிக்கொண்டுவா, கடிது - விரைவில், என்னா - என்று, தொல்லை-இதனதுபழையதான, வாலை - வாலானதை, மூலமற-அடியோடுபோக, சுட்டு - நெருப்பாலேசுட்டு, நகரை - நம்மூரை, சூழ்போக்கி - சுற்றிவந்து, எல்லைகடக்க - நம்மூரளவுநீங்க, விடுமின்கள் - விடுங்கள், என்றான் - என்றுவிடைகொடுத்தானிராவணன், நின்றார் - அங்குநின்ற ஊழியக்காரர்கள், இரைத்து - ஆரவாரித்து, எழுந்தார் - எழுந்திருந்தார்கள்—எ-று. (௧௧௭)

ஆயகாலத்தயன்படையோடிருப்பவாகாதனலிடுதல்
தூயபாசமெனப்பலவுங்கொணர்ந்துபிணிமின்றோளென்ன
மேயதெய்வப்படைக்கலத்தைவிட்டானமரர்போர்வென்றான்
ஏயெனுமுன்னிடைபுக்குத்தொடைவன்கயிற்றாற்பிணித்தீர்த்தார்.

இ-ள். ஆயகாலத்து - அப்போது, அயன்படையோடிருப்ப - பிரமாஸ்திரக்கட்டோடிருக்கச்செய்தே, அனலிடுதலாகாது - நெருப்பாற்சுடலாகாது, தூயபாசமென - நல்லகெட்டிக்கயிறென்று, பலவும் - கட்டத்தக்கவைகளெல்லாம், கொணர்ந்து-கொண்டுவந்து, தோள்பிணிமினென்ன - இதன்தோள்களைக் கட்டுங்களென்று, மேய - அதைக்கட்டியிருக்கிற, தெய்வப்படைக்கலத்தை - பிரமாஸ்திரத்தை, விட்டான் - அவிழ்த்துக்கொண்டான், அமரர்போர் - தேவர்கள்பலத்தை, வென்றான்-

வென்றுவந்த இந்திரசித்து, ஏயெனுமுன் – உம்மென்னுமளவில், இடைபுக்கு – அனுமாரிடத்தில்வந்து, தொடைவன் கயிற்றால் – ஒன்றோடொன்றுமுடிந்த அநேகம் வலியகயிற்றினாலே, பிணித்து – கட்டி, ஈர்த்தார் – இழுத்தார்கள்—எ-று. (௧௧௮)

நாட்டினகரினடுவுள்ளகயிறுநவிலுந்தகைமையவே
வீட்டினூசனெடும்பாசமற்றதேரும்விசிதுறந்த
மாட்டும்புரவியாயமெலாமருவிவாங்குந்தொடையழிந்த
பூட்டும்வல்லிமூட்டோடும்புரசையிழந்தபோர்யானை.

இ-ள். நாட்டில் – வெளிப்புறங்களிலும், நகரில் – உள்ளூரிலும், நடுவுள்ள-இன்னம் நடுயிடங்களிலுமுள்ள, கயிறு – கயிறுகளெல்லாம்முடிந்தாயிற்றென்று, நவிலும் – தகைமையவேசொல்லத்தக்கதும்வேணுமோ, வீட்டின் – வீடுகளிலுள்ள, ஊசனெடும்பாசம் – நீண்ட ஊசற்கயிறுகளெல்லாம், அற்ற – முடிந்தாயின, தேரும்-தேர்களும் அவற்றின், விசி – கட்டுக்கயிறுகள், துறந்த – முடிந்துஇல்லாமையாயின, மாட்டும் – கட்டத்தக்க, புரவியாயமெல்லாம் – குதிரைப்பந்திகள்முழுதும், மருவிவாங்கும் – அவைகளைக்கட்டி அவிழ்க்கத்தக்க, தொடை – கயிறுகள், அழிந்த – முடிந்து இல்லையாயின, பூட்டும் – காலிலேபூட்டுகிற, வல்லி – கயிறும், மூட்டோடும் – விரியைச்சேர்த்து மூட்டுகிறகயிற்றுடனே, புரசை – கழுத்திலுள்ளகயிறுகளும், இழந்த-போதாமல்முடிதலாலே இழந்ததாயின, போர்யானை – வலியயானைகள்—எ-று. ()

மண்ணிற்கண்டவானவரைவலியிற்கவர்ந்தவரம்பெற்ற
எண்ணற்கரியவேனையரையிகலிற்பறித்ததமக்கியைந்த
பெண்ணிற்கிசையுமங்கலத்திற்பிணித்தகயிறேயிடைபிழைத்த
கண்ணிற்கண்டவன்பாசமெல்லாமிட்டுக்கட்டினார்.

இ-ள். மண்ணிற்கண்ட – மண்ணுலகிலேகண்டுபெறித்த கயிறுகளும், வானவரை – தேவர்களிடத்திலே, வலியில் – பலாத்கரித்து, கவர்ந்த – கொண்டைகயிறுகளும், வரம்பெற்ற – தாங்கள் வரத்தாலேபெற்ற கயிறுகளும், எண்ணற்கரிய – எண்ணுதற்குக்கூடாத, ஏனையரை – மற்றுமுள்ள அசுரர்கள்முதலியோர்கள், இகலில்-சண்டையிலே, பறித்த – பிடுங்கிக்கொண்டுவெந்தகயிறுகளும், தமக்கு இயைந்த – தங்களுக்குநேரான, பெண்ணிற்கு – பெண்களுக்கு, இசையும் – தகுதியான, மங்கலத்தில் – நன்மைக்காக, பிணித்த – கட்டின, கயிறே – தாலிக்கயிறே, இடைபிழைத்த-அப்போதுதப்பினவை, கண்ணிற்கண்ட – தங்கள்கண்களிலேகண்ட, வன்பாசமெல்லாம் – வலிய கயிறுகள்முழுதும், இட்டு – சேர்த்து, கட்டினார் – அனுமாரைக்கட்டினார்கள்—எ-று. தாலிக்கயிறுதவிர முன்சொன்ன கயிறுகளெல்லாங்கொண்டு கட்டினார்களென்க. (௧௨௦)

கடவுட்படையைக்கடந்தறத்தினுணைகடந்தேனாகாமே
விடுவித்தளித்தார்தெவ்வரேவென்றேனன்றோவிவர்வென்றி
சுடுவிக்கின்றதிவ்வூரைச்சுடுகென்றுரைத்ததுணிவென்று
நடுவுற்றமையவுறநோக்கிமுற்றுமுவந்தானவையற்றான்.

இ-ள். கடவுட்படையை – திவ்வியாஸ்திரத்தை, கடந்து – அவமதித்து, அறத்தினுணை – தருமநிலையை, கடந்தேன் – தப்பிநடந்தேன், ஆகாமே – ஆகாமல், தெவ்வரே – பகைவர்தாமே, விடுவித்து – விடுதல்செய்து, அளித்தார் – எனக்குப் பலங்கொடுத்தார்கள், வென்றேனன்றோ – ஆகையால் நானே ஜெயங்கொண்டேனல்ல

வோ, இவர்வென்றி – இவர்கள் ஜெயங்கொண்டதாயென்னை, சுடுவிக்கின்றது – சுடும்படியெண்ணுகிறது, இவ்வூரை – இந்தவூர்முழுதும், சுடுகென்று-நீயேசுட்டுப்போவென்று, உரைத்த – எனக்குச்சொன்ன, துணிவென்று – தெளிவுபொருளென்று, நடுவுற்று – அவர்கள்நடுவேநின்று, அமைய – பொருந்த, உற – நன்றாக, நோக்கி – ஆலோசித்து, முற்றுமுவந்தான் – முழுதுஞ்சந்தோஷமாயினார், நவையற்றான் – ஒரு தோஷமுமில்லாத அனுமார்—எ-று. (௧௨௧)

நொய்யபாசம்புறம்பிணிப்பநோன்மையிலன்போலுடனுணங்கி
வெவ்யவரக்கர்புறத்தலைப்பவீடுமுணர்ந்தேவிரைவில்லா
ஐயன்விஞ்சைதனையறிந்துமறியாதான்போலவிஞ்சையெனும்
பொய்யைமெய்போனடிக்கின்றயோகிபோன்றான்போகின்றான்.

இ-ள். நொய்ய – மிகவும் அல்பமான, பாசம் – கயிறுகளான ஆசாபாசம், புறம்பிணிப்ப – வெளியேசூழ, நோன்மையிலன்போல் – அப்பாசங்களை அறுத்துக்கொள்ளப்பலமில்லாதவன்போல், உடல்நுணங்கி – உடம்பு துவண்டு, வெய்ய அரக்கர்-கொடியராக்ஷதர்கள், புறத்தலைப்ப – வெளியேநின்று இவருடம்பெல்லாம் வருத்த, வீடும் – அவைகளைவிடுவித்துக்கொள்ளவும், உணர்ந்தே – தெரிந்து, விரைவில்லா-அவசரப்படாமல், ஐயன் – அனுமாரானவர், விஞ்சைதனை – வித்தைகளையெல்லாம், அறிந்தும் – தெரிந்தவனாகியும், அறியாதான்போல் – தெரியாதவன்போல், அவிஞ்சையெனும் – அஞ்ஞானமென்கிற, பொய்யை – அநித்தியப்பொருளை, மெய்போல்-நித்தியப்பொருள்போலெண்ணி, நடிக்கின்ற – கூத்தாடுகிற, யோகிபோன்றான்-ஞானியேபோலாகி, போகின்றான் – இழுக்கிறவர்கள்பின்போகிறார்—எ-று. விஞ்சை-ஞானம். (௧௨௨)

வேந்தன்கோயில்வாயிலொடுவிரைவிற்கடந்துவெள்ளிடையிற்
போந்துபுறநின்றிரைக்கின்றபொறைதீர்மறவர்புறஞ்சுற்ற
ஏந்துநெடுவால்கிழிசுற்றிமுற்றுந்தோய்த்தாரிழுதெண்ணெய்
காந்துகடுந்தீக்கொளுத்தினாரார்த்தாரண்டங்கடிகலங்க.

இ-ள். வேந்தன் – இராவணனுடைய, கோயில்வாயிலொடு – அரண்மனைவாசலும், விரைவில் – அதிசீக்கிரத்திலே, கடந்து – தாண்டி, வெள்ளிடையில் – வெறுவெளியிடத்திலே, போந்து – வந்து, புறநின்று – வெளியேநின்று, இரைக்கின்ற-சத்திக்கிற, பொறைதீர் – பொறுமையில்லாத, மறவர் – வீரர்கள், புறஞ்சுற்ற – பக்கமெல்லாஞ்சூழ, ஏந்து – கயிறுசுற்றித் தூக்கிக்கொண்டுவருகிற, நெடுவால் – நீண்டவாலிலே, கிழிசுற்றி – சீலைகளைக்கிழித்துக்கயிற்றின்மேலேசுற்றி, இழுது – விளக்குநெய்யும், எண்ணெய் – எள்ளுநெய்யும், முற்றும் – வால்முழுதும், தோய்த்தார் – துவைத்தார்கள்பின்பு, காந்து – கொதிப்பதான, கடுந்தீ – கடியநெருப்பை, கொளுத்தினார் – பத்தவைத்தார்கள், அண்டம் – அண்டமுழுதும், கடிகலங்க – தமது நிலைகுலைவதாக, ஆர்த்தார் – கெர்ச்சித்தார்கள்—எ-று. (௧௨௩)

ஒக்கவொக்கவுடன்விசித்தவுலப்பிலாதவுரப்பாசம்
பக்கம்பக்கமிருகூறாய்நூறாயிரவர்பற்றினார்
புக்கபடைஞர்புடைகாப்போர்புணரிக்கணக்கர்புறஞ்செல்வோர்
திக்கினளவாலபனின்றுகாண்போர்க்கெல்லைதெரிவரிதால்.

இ-ள். ஒக்க ஒக்க – கூடக்கூட, உடன்விசித்த – சேர்த்துக்கட்டின, உலப்பிலாத – அறாத, உரம் – பலமுள்ள, பாசம்-கயிற்றினை, பக்கம்பக்கம்-இரண்டுபக்கமு

ம், இருகூறுய் — இரண்டுபிரிவாக, நூறுயிரவர்கள் — லட்சம்பேர்கள், பற்றினுர் — பிடித்திழுத்தார்கள், புக்க — அவர்களோடுகூடவந்த, படைஞர்-ஆயுதமுள்ளவர்களாக, புடை — அருகேநின்று, காப்போர் — காத்துவருகிறவர்கள், புணரிக்கணக்கர் — சமுத்திரமென்னும் ஓரளவுள்ளவர்கள், புறஞ்செல்வோர் — அவர்களைச்சூழ்ந்துவருகிறவர்கள், திக்கினளவு — அந்தவீதியினீளத்தளவு, அயல்நின்று — தூரநின்று, காண்போர்க்கு — பார்ப்பவர்களுக்கு, எல்லை — அளவு, தெரிவுஅரிது — தெரிந்துசொல்லமுடியாது—எ-று. சமுத்திரம் — பத்துலக்ஷங்கோடி. (கஉச)

அந்தநகருங்கடிகாவுமழிவித்தக்கன்முதலாயோர்
சிந்தநூறிச்சீதையொடும்பேசிமனிதர்திறஞ்செப்ப
வந்தகுரங்கிற்குற்றதனைவம்மின்காணவம்மென்று
தந்தந்தெருவும்வாயிற்றேறும்யாருமறியச்சாற்றினுர்.

இ-ள். அந்தநகரும் — அந்தவூரையும், கடிகாவும் — காவலுள்ளசோலையையும், அழிவித்து — அழியச்செய்து, அக்கன் — அக்ஷன், முதலாயோர் — முதலானவர்களெல்லாம், சிந்த — அழிய, நூறி — அழித்து, சீதையொடும் — சீதையுடனும், பேசி — பேச்சாடி, மனிதர்திறம் — மனிதர்வல்லமையை, செப்பவந்த — சொல்லவந்த, குரங்கிற்கு — குரங்கானதுக்கு, உற்றதனை — உண்டானபடியை, காணவம்மின் — பார்க்கவாருங்கள், வம்மென்று — பார்க்கவாருங்களென்று, தந்தந்தெருவும் — தங்கள்தங்கள்வீதிகளிலும், வாயில்தொறும் — வாசல்களிலும்நின்று, யாருமறிய — எல்லாருமறிவதாக, சாற்றினுர் — பறையறைந்தார்கள்—எ-று. (கஉரு)

ஆர்த்தாரண்டத்தப்புறத்துமறிவிப்பார்போலங்கோடிங்
கீர்த்தார்முரசமெற்றினுரிடித்தார்தெழித்தாரெம்மருங்கும்
பார்த்தாரோடிச்சானகிக்கும்பகர்ந்தாரவளுமுயிர்பதைத்தாள்
வேர்த்தாளுலந்தாள்விம்மினுள்விழுந்தாளழுதாள்வெய்துயிர்த்தாள்.

இ-ள். ஆர்த்தார் — கெர்ச்சித்தார்கள், அண்டத்தப்புறத்தும் — இந்த அண்டத்துக்கப்பாலிலும், அறிவிப்பார்போல் — தெரியச்செய்வாரைப்போல், அங்கொடு-அந்தவீதியுடனே, இங்கு — இந்தவீதியிலும், ஈர்த்தார் — இழுத்தார்கள், முரசமெற்றினுர் — பேரிகையடித்தார்கள், இடித்தார் — இடிபோலமுழங்கினுர்கள், தெழித்தார்-அதட்டினுர்கள், எம்மருங்கும் — எந்தப்பக்கங்களும், பார்த்தார் — அனுமாரைக்கண்டவர்கள், ஓடி — ஓடிப்போய், ஜானகிக்கும் — சீதைக்கும், பகர்ந்தார் — தெரியச்சொன்னுர்கள், அவளும் — அந்தச்சீதையும், உயிர்பதைத்தாள் — ஆவிதுள்ளினவளாகி, வேர்த்தாள் — உடம்பெல்லாம்வேர்த்தாள், உலந்தாள் — கொதித்தாள், விம்மினுள் — துக்கித்தாள், விழுந்தாள் — கீழேவிழுந்தாள், அழுதாள் — அழுதவளாகி, வெய்து — வெப்பங்கொண்டு, உயிர்த்தாள் — சுவாசம்விட்டாள்—எ-று. (கஉசு)

தாயேயனையகருணையான்றுணையேயேதுந்தகவில்லா
நாயேயனையவல்லரக்கர்நலியக்கண்டானல்காயோ
நீயேயுலகுக்கொருசான்றுநிற்கேதெரியுங்கற்பதனில்
தூயேனென்னிற்றெழுகின்றேனெரியேயவனைச்சுடலென்றுள்.

இ-ள். தாயேஅனைய — தாய்க்கேஒப்பாக என்விஷயத்திலே, கருணையான் — இரக்கமுள்ளஅனுமானுக்கு, துணையே — சகாயமானவனே, ஏதும் — எவ்வளவேனும், தகவில்லா — யோக்கியதையில்லாத, நாயேஅனைய-நாய்க்கேஒப்பான, வல்லரக்க

ர் — வலியராட்சதர்கள், நலிய — உன் துணைவன் பிள்ளையைவருத்தஞ்செய்ய, கண்டால் — நீகண்கொண்டுபார்த்தால், நல்காயோ — இரக்கஞ்செய்யமாட்டாயா, உலகுக்கு- இந்தஉலகத்துக்கு, ஒருசான்று — ஒருசாக்ஷி, நீயே — நீதானே, நிற்கே — உனக்கே, தெரியும் — என்னைத்தெரிவதாம் ஆகையால், கற்பதனில் — மனவுறுதியினாலே, தூயேனென்னில் — நான்பரிசுத்தையேயானால், தொழுகின்றேன் — இதோஉனக்கொருவணக்கஞ்செய்கிறேன், எரியே — ஓ அக்கினிதேவனே, அவனை — அந்த அனுமானை, சுடல் — சுடாதை, என்றாள் — என்றுநியமித்தாள், அக்கினிக்குச்சகாயன் வாயுவாகலாலே வாயுபுத்திரனுக்கு நீதுணையாகவேண்டுமென்று துணையேயென்றாள் என்க—எ-று. (கஉஎ)

வேறு.

வெளுத்தமென்னகையவள்விளம்புமேல்வையின்
ஒளித்தவெங்கனலவனுள்ளமுட்கினன்
தளிர்த்தனமயிர்புறஞ்சிலிர்ப்பத்தண்மையால்
குளிர்த்தவக்குரிசில்வாலென்புகூரவே.

இ-ள். வெளுத்த — வெள்ளையாய், மென் — மிருதுவான, நகையவள் — பல்வரிசைகளுள்ள சீதாபிராட்டி, விளம்பும் — அப்படிச்சொல்லுகிற, எல்வையின் — சமயத்திலே, ஒளித்த — ஒளியோடுகூடின, வெங்கனலவன் — வெவ்விய அக்கினிதேவன், உள்ளம் — தன்மனது, உட்கினன் — அஞ்சினனாக, தளிர்த்தனமயிர்-அனுமாருரோமங்கள் கூச்சமுள்ளனவாகி, புறம் — உடம்பெல்லாம், சிலிர்ப்ப - சிலிர்த்தலுண்டாக, தண்மையால் - அந்தமிகுந்தசீதளத்தினாலே, அக்குரிசில் - அந்தஅனுமாருடைய, வால் - வால்முழுதும், குளிர்த்த - குளிர்ந்ததாயின, என்பு - எலும்பளவும், கூர- அதிகமானகுளிருண்டாயினது—எ-று. (கஉஅ)

வேறு.

மற்றினிப்பலவென்வேலைவடவனல்புவியளாய
கற்றையங்கனலிமற்றைக்காயத்தீமுனிவர்காக்கும்
முற்றுறுமும்மைச்செந்தீமுப்புரமுருங்கச்சுட்ட
கொற்றவனெற்றிக்கண்ணின்வன்னியுங்குளிர்ந்தவன்றே.

இ-ள். மற்றினிப்பலஎன் - இன்னமுமினிப்பல சொல்லவேண்டுவதென்னவிருக்கின்றது, வேலை - கடலின்மேலுள்ள, வடவனல் - வடவாக்கினியும், புவியளாய - பூமியிலேகூடின, கற்றையங்கனலி - பௌமமென்னும் சுவாலாக்கினியும், மற்றை - அதையல்லாத, காயத்தீ - ஔதரியமென்னுமக்கினியும், முனிவர் - ருஷிகள், காக்கும் - பரிபாலிக்கின்ற, முற்றுறு - முடிவுபெற்றுள்ள, மும்மைச்செந்தீ-காருகபத்தியம் ஆகவநீயம் தெக்ஷிணாக்கினியென்னுமூன்றக்கினியும், முப்புரம் - திரிபுரங்களும், முருங்க - வேவ, சுட்ட - தகித்த, கொற்றவன் - சிவனுடைய, நெற்றிக்கண்ணின் - நெற்றிக்கண்ணிலேயுள்ள, வன்னியும் - அக்கினியும், குளிர்ந்த - குளிர்ந்துபோயின—எ-று. (கஉகூ)

அண்டமுங்கடந்தானங்கையனலியுங்குளிர்ந்ததங்கிக்
குண்டமுங்குளிர்ந்தமேகத்துருமெலாங்குளிர்ந்தகொற்றச்
சண்டவெங்கதிரவாகித்தழங்கிருள்விழுங்குந்தாவில்
மண்டலங்குளிர்ந்தமீளாநரகமுங்குளிர்ந்தமாதோ.

இ-ள். அண்டமும் - ஆகாயத்தையும், கடந்தான் — வென்றசிவனுடைய, அங்கை - அழகியகையிலுள்ள, அனலியும் - நெருப்பானமழுவும், குளிர்ந்தது-குளிர்ந்துபோயிற்று, அங்கிக்குண்டமும் - யக்கியகுண்டங்களெல்லாம், குளிர்ந்த — குளிர்ச்சியாயின, மேகத்து - மேகங்களிலுள்ள, உருமெலாம் - இடிகள்முழுதும், குளிர்ந்த-குளிர்ச்சியாயின, கொற்றம் — வெற்றியும், சண்டம் - வேகமுமுள்ள, வெங்கதிரவாகி- வெவ்வியகிரணமுடையதாகி, தழங்கு — சத்திக்கின்ற, இருள் — இருட்டை - விழுங்கும் - கபளீகரிக்கின்ற, தாவில் - அழிவில்லாத, மண்டலம்-சூரியமண்டலமும், குளிர்ந்த - குளிர்ந்ததாயிற்று, மீளா — ஆறாத, நரகமும் — நரகமுங்கூட, குளிர்ந்த-குளிர்ச்சியாயின—எ-று. கடத்தல் எட்டாதுநீளுதல் தழங்கல் மொய்த்தல். (௧௯௦)

வெற்பினாலியன்றதன்னமேனியைவிழுங்கிவெந்தீ
நிற்பினுஞ்சுடாதுநின்றநீர்மையைநினைவினோக்கி
அற்பினாறாதசிந்தையநுமனுஞ்சனகன்பாவை
கற்பினாலியன்றதென்பான்பெரியதோர்களிப்பனானான்.

இ-ள். வெற்பினால் - மலையினாலே, இயன்றது - செய்ததை, அன்ன — ஒப்பான, மேனியை — அனுமாருடம்புமுழுதும், விழுங்கி — மறையமூடி, வெந்தீ — அந்த வெவ்வியநெருப்பு, நிற்பினும் — நின்றாலும், சுடாது - தம்மைச்சுடாமல், நின்ற-இருக்கிற, நீர்மையை - தன்மையை படியை, நினைவில் — தமதெண்ணத்திலே, நோக்கி- தெரிந்து, அற்பின் — அன்பாகிய, நார் - கயிறு, அறாத - அறுபடாத, சிந்தை — மனமுள்ள, அனுமனும் - அனுமார், சனகன்பாவை — சனககுமாரியானபிராட்டியினது, கற்பினால் - பதிவிரதாநிலையினாலே, இயன்றது - இப்படிச் சுடாதிருக்கலாயிற்று, என்பான் — என்றெண்ணினாராகி, பெரியதோர் — பெரிதான ஒப்பற்ற, களிப்பன்- சந்தோஷமுள்ளவர், ஆனான் - ஆயினான்—எ-று. (௧௯௧)

அற்றையவ்விரவிற்றான்றனறிவினான்முழுதுமுன்னப்
பெற்றிலனெனினுமாண்டொன்றுள்ளதுபிழையுறாமே
மற்றுறுபொறிமுன்செல்லமறைந்துசெல்லறிவுமானக்
கற்றிலாவரக்கர்தாமேகாட்டவிற்றெரியக்கண்டான்.

இ-ள். அற்றை அவ்விரவில் - அன்று அந்தராத்திரியிலே, தான் - தாமே, தன் அறிவினால் - தமது புத்தியினாலே, முழுதும் - அந்த ஊர் முழுதும், உண்ணப் பெற்றிலன் — நிதானிக்கப்பெறுதலில்லாதவரே, எனினும்-என்றாலும், ஆண்டு-அவ்வூரிலப்போது, ஒன்றுள்ளது - ஒன்றுளதானது, பிழையுறாமே - தப்பாமல், மற்று உறு - வேறுபாடுள்ள, பொறி — இந்திரியங்கள், முன்செல்ல — முன்னேபோக, மறைந்து — பின்னேமறைவாகி, செல - போகின்ற, அறிவுமான - அறிவுக்குநேராக, கற்றிலா - மூடர்களான, அரக்கர் — ராக்ஷதர்கள், தாமே - தாங்களே, காட்டலில்- ஊர்முழுதுங்காட்டுகிறதினாலே, தெரிய - நன்றாக, கண்டான் - பார்த்தார்—எ-று.

முழுவதுந்தெரியநோக்கிமுற்றுமூர்முடிவிற்சென்றான்
வழுவுறுகாலமீதென்றெண்ணினன்வலிதிற்பற்றித்
தழுவினனிரண்டுநூறாயிரம்புயந்தடக்கைதாம்போ
டெழுவெனநாலவண்மேலெழுந்தனன்விழுந்தவெல்லாம்.

இ-ள். முழுவதும் — அப்படி அந்த ஊர் முழுதும், தெரிய — தமக்குத்தெரிவதாக, நோக்கி - பார்த்து, முற்றும் — இனித்தம்மை விடுகிறதை முடிக்கின்ற, ஊர்

முடிவில் – அந்தவூர்க்கடையிடத்திலே, சென்றான் – போயின அனுமார், வழுவுறு காலம் - இனி நீங்கிப்போங்காலம், ஈதென்று – இதுதானென்று, எண்ணினன்-தெரிந்தவராய், வலிதில் – தமது பலாத்காரத்தினாலே, பற்றி – இருபுறத்துக் கயிற்றையும் பிடித்து, தழுவினன்-இருபுற விலாவிலுஞ் சேரக்கொண்டு,இரண்டுநூறாயிரம்-இரண்டுபிரிவானலட்சம், புயம் - அரக்கர்கள்தோள்களும், தடக்கை - நீண்டகைகளும், தாம்போடு - இருபுறத்துக்கயிற்றுடனே, எழுவென - எழுத்தடிபோல, நால தொங்க, விண்மேலெழுந்தனன்-ஆகாயத்திலே உயரக்கிளம்பினார், விழுந்தஎல்லாம் அப்படி எழுந்தவுடனே எல்லாம் கீழேவிழுந்தன—எ-று. (௧௩௩)

இற்றவாளரக்கர்நூறாயிரவருமிழந்ததோளார்
முற்றினாருலந்தாரையின்மொய்ம்பினோடுடலைமூழ்கச்
சுற்றியகயிற்றினோடுந்தோன்றுவானரவின்சுற்றம்
பற்றியகலுழனென்னப்பொலிந்தனன்விசும்பின்பாலான்.

இ-ள். இற்ற – இறந்துமுடிந்த, வாள் – கத்திகள்பிடிக்கிற, அரக்கர் - ராக்ஷதர்கள், நூறாயிரவரும் – லட்சம்பேரும், இழந்த - ஒடிந்த, தோளார் – தோள்களையுடையராய், முற்றினார் – முடிந்து, உலந்தார் - போனார்கள்,ஐயன்-அனுமாருடைய, மொய்ம்பினோடு - தோள்களுடனே, உடலை - சரீரத்தையும், மூழ்க-நிரம்ப, சுற்றிய-சூழ்ந்துள்ள, கயிற்றினோடும் – கயிற்றுடனே, தோன்றுவான் - பிறருக்குக்காணப்படுகிறதெப்படியென்றால், அரவின் சுற்றம் – பாம்பி னினங்களெல்லாங் கூடி, பற்றிய - பிடித்துச்சூழ்ந்த, கலுழனென்ன - கருடன்போல், பொலிந்தனன் - விளங்கினான், விசும்பின்பாலான் – ஆகாயத்திலேதோன்றுகிறதினாலே—எ-று. (௧௩௪)

துன்னலர்புரத்தைமுற்றுஞ்சுடுதொழிற்றொல்லையோனும்
பன்னினபொருளுநாணப்பாதகரிருக்கைபற்ற
மன்னனைவாழ்த்திப்பின்னைவயங்கெரிமடுப்பனென்னாப்
பொன்னகர்மீதேதன்போர்வாலினைப்போகவிட்டான்.

இ-ள். துன்னலர்புரத்தை – பகைவர்திரிபுரத்தை, முற்றும்-முழுதும், சுடுதொழில் – எரிக்குஞ்செய்கையையுடைய, தொல்லையோனும் - பழையபரமசிவனும், பன்னின - அச்சிவனாலே எரிக்கப்பட்டதென்றுசொல்லலான, பொருளும்-திரிபுரமும், நாண – வெட்கத்தையடையும்படி, பாதகர் - அந்தப் பாவிகளான ராக்ஷதர், இருக்கை – இருக்குமூரிலே, பற்ற – நெருப்புப்பிடிக்க, மன்னனை – ஸ்ரீராமனை,வாழ்த்தி – தோத்திரஞ்செய்துகொண்டு, பின்னை - பின்பு, வயங்கு – எரிகிற, எரி-நெருப்பை, மடுப்பெனென்னா – மூட்டுகிறேனென்று, பொன்னகர்மீதே-அந்தப் பொன்மயமான ஊர்மேலே, தன்போர்வாலினை – தமது பலமானவாலை, போகவிட்டான்-நீளநீட்டினார்—எ-று. (௧௩௫)

தன்னிறைக்குறுகண்வெய்யோர்தாமியற்றலுங்கேட்டின்னே
அன்னவர்க்கிறுதியாகவணிநகரழிப்பலென்னாச்
செந்நிறச்சிகையவெம்போர்மழுப்பின்னர்ச்சேறலொக்கும்
அந்நிறத்தண்ணறாதனனல்கெழுகொற்றநீள்வால்.

இ-ள். தன்னிறைக்கு – தன்னை ஆளுகிறசிவனுக்கு, உறுகண் - மலையைப் பிடுங்குதல் முதலான துன்பங்கள், வெய்யோர்தாம் - ராக்ஷதரானவர்கள், இயற்றலும் - செய்துள்ளது முதலியவைகளை, கேட்டு – தெரிந்து, இன்னே - இப்போதே,

அன்னவர்க்கு - அந்தராக்ஷதர்களுக்கு, இறுதியாக - முடிவுண்டாக, அணிநகர் - அழகிதான அவ்வூரை, அழிப்பல் என்னு - அழித்துவிடுகிறேனென்று, செந்நிறம் - சிவந்தநிறமுள்ள, சிகைய - சுவாலையையுடைய, வெம்போர் - வெப்பத்திலதிகபலமுள்ள, மழு - மழுவானது, பின்னர் - அனுமார்பின்தொடர்ந்து, சேறல் - செல்லுதலை, ஒக்கும் - ஒப்பென்னலாம், அல் - இருண்டமேகம்போன்ற, நிறத்து - நிறத்தையுடைய, அண்ணல் - ஸ்ரீராமனது, தூதன் - தூதனுன அனுமாருடைய, அனல்கெழு - நெருப்புப்பற்றியிருக்கிற, கொற்றம் - வெற்றிச்செய்யவல்ல, நீள்வால் - நீண்டவால், மழுச்சேறலொக்கும்—எ-று. (கசு)

அப்புறழ்வேலைகாறுமலங்குபேரிலங்கைதன்னை
எப்புறத்தளவுந்தியவொருகணத்தெரித்தகோட்பால்
துப்புறழ்மேனியண்ணன்மேருவிற்குழையத்தோளால்
முப்புறத்தெய்தகோலேயொத்ததம்மூரிப்போர்வால்.

இ-ள். அப்பு - ஜலரூபமாக, உறழ் - முழுதுமொத்த, வேலைகாறும் - கடலளவும், அலங்கு - விளங்குவதான, பேர் இலங்கைதன்னை - பெரிய இலங்காபுரியை, எப்புறத்தளவும் - எந்தெந்த இட அளவும், தீய - எரிந்துகெட, ஒருகணத்து - ஒருக்ஷணப்பொழுதிலே, எரித்த - தகித்த, கோட்பால் - சூழ்வினலே, துப்பு உறழ் - பவளத்தை ஒப்பான, மேனி - நிறத்தையுடைய, அண்ணல் - சிவனுனவர், மேரு - மேருமலையான, வில்குழைய - வில்வளைய, தோளால் - தோள்கொண்டுவாங்கி, முப்புரத்து - திரிபுரத்தின்மேலே, எய்த - பிரயோகித்த, கோலே - அம்பே, ஒத்தது - ஒப்பாயிற்று, அ - அந்த, மூரி - பெரிதாய்நீண்ட, போர்வால் - பலமுள்ளவால் கோலொத்தது—எ-று. (கஎ)

உகக்கடையுலகம்யாவுமுணங்குறவொருதன்னுட்டம்
சிகைக்கொழுங்கனலைவீசுஞ்செயன்முனம்பயில்வான்போல
மிகைத்தெழுதீயராயோர்விரிநகர்வீயப்போர்வால்
தகைத்தலினேன்மைசாலுந்தனிவீரன்சேணிலுய்த்தான்.

இ-ள். உகக்கடை - யுகமுடிவிலே, உலகம்யாவும் - உலகமுழுதும், உணங்குற - எரிந்துபோக, ஒருதன் நாட்டம் - ஒருதமது நெற்றிக்கண்ணுனது, சிகை - சுவாலையுள்ள, கொழுங்கனலை - செழியநெருப்பை, வீசுஞ்செயல் - மூளவிடுகிறசெய்கையை, முனம் - முன்னே ஒருதரம் சிவனுனவர், பயில்வான்போல - பழகிக்கொள்ளுகிறதுபோல், மிகைத்து - அதிகரித்து, எழு - வருகிற, தீயராயோர் - கெட்டராக்ஷதர், விரி - மிகுந்துள்ள, நகர்வீய - ஊரழிய, போர்வால் - பலங்கொண்டவாலை, தகைத்தலில் - யாராலுந்தடுத்தல்கூடாத, நோன்மைசாலும் - சாமர்த்தியம் அமைந்த, தனிவீரன் - ஏகவீரனுன அனுமார், சேணில் - தூரத்திலேசெல்ல, உய்த்தான் - நீட்டினுர்—எ-று. (கஅ)

வெள்ளியிற்பொன்னினுனுவிளங்குபொன்மணியின்விஞ்சை
தெள்ளியகடவுட்டச்சன்கைமுயன் றரிதிற்செய்த
தள்ளருமனேகமாடோறுமுறைமுறைதாவிச்சென்றுன்
ஒள்ளரியோங்குன்றத்தூழிவீழுருமொடொப்பான்.

இ-ள். வெள்ளியில் - வெள்ளியாலும், பொன்னில் - பொன்னுலும், நானுபலநிறங்களாக, விளங்கு - பிரகாசிக்கின்ற, பொன் - அழகுள்ள, மணியில் - ரத்நங்க

ளாலும், விஞ்சை — சிருட்டிக்கிறசெய்கையிலே, தெள்ளிய — தெளிந்தவனுன, கடவுள்தச்சன் — தெய்வத்தச்சனுனவன், கைமுயன்று — தன்கையால்வருந்தி, அரிதிற் செய்த — அருமையாகப்பண்ணின, தள்ளரு — அழித்தற்குக்கூடாத,மனைகடோறும்- வீடுகளெல்லாம், முறைமுறை — ஒவ்வொன்ருக, தாவிச்சென்ருன் — குதித்துக்குதித்துப்போனுர், ஒள் — ஒளிதங்கின, அரியோடும் — நெருப்புடனே, குன்றத்து — மலைமேலே, ஊழிவீழ் — முடிவுகாலத்திலேவிழுகிற, உருமொடு — இடியொடு, ஒப்பான்- சரியான அனுமார்—எ-று. (௧௩௧)

நீனிறநிருதரீண்டுநெய்பொழிவேள்விநீங்கிப்
பால்வருபசியனென்பான்மாருதிவாலேப்பற்றி
ஆலமுண்டவனன்றாட்டவுலகெலாமழிவினுண்ணும்
காலமேயென்னமன்ஞேகனலியுங்கடிதினுண்டான்.

இ-ள். நீல்நிறம் — கறுத்தநிறமுள்ள, நிருதர் — ராக்ஷதர்களாலே, ஈண்டு — கூட்டப்படுகிற, நெய்பொழி — நெய்வாக்குகின்ற, வேள்வி — யாகங்களேயும், நீங்கி — விட்டுவிடுதலாய், பால்வரு — முறையேயுண்டான, பசியனென்பான் — மிகவும்பசியுள்ளவனுகி, மாருதிவாலே — அனுமாருடையவாலே, பற்றி — தனக்காதரவாகக்கொண்டு, ஆலமுண்டவன் — விடமுண்டசிவன், அன்று — முடிவுகாலமான அப்போது, ஊட்டதன்னேயுண்ணச்செய்ய, உலகெலாம் — உலகமுழுதும், அழிவின் — அழிந்துபோங்காலத்திலே, உண்ணுங்காலமே — உண்கிறநாளே, என்ன — என்றுசொல்லும்படி, கனலியும் — அக்கினிதேவனும், கடிதினுண்டான் — பசியனுண்டதுபோனுண்டான்எரித்தான், ராட்சதர்களாலே ஒருவரும்யாகஞ்செய்வதில்லையாகலால் அக்கினிக்குப் பசியுண்டாயிற்றென்க—எ-று. (௧௪0)

பிணிவீட்டுபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ௧௩ - க்கு திருவிருத்தம் - ௧௧அ௯.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

பதிநான்காவது,

இலங்கையெரியூட்டுபடலம்.

கொடியைப்பற்றிவிதானங்கொளுத்தித்தான்
நெடியதூணைத்தழுவிநெடுஞ்சுவர்
முடியசுற்றிமுழுதுமுருக்கிற்ருல்
கடியமாமணேதோறுங்கடுங்கனல்.

இ-ள். கொடியை — முன்னேகொடிமரங்களிலே, பற்றி — பிடித்து, விதானம் — மேற்கட்டிகளே, கொளுத்தி — எரித்து வேவச்செய்து, நெடியதூணே — பின்பு நீண்டதூண்களிலே, தழுவி — சேர்ந்துபிடித்து, நெடுஞ்சுவர் — நீண்டசுவர்கள், முடியமுழுதும், சுற்றிமுழுதும் — சூழ்ந்த எல்லாம், முருக்கிற்று — எரித்தழித்தது, கடியசுற்றுச்சுவர்களேக்காவலாகவுடைய, மாமனேதோறும் — பெரிய வீடுகளெல்லாம், கடுங்கனல் — கடிதானநெருப்பு, கடியமாமனேதோறுங் கடுங்கனல்கொடியைப் பற்றியெனக்கூட்டுக—எ-று. (௧)

வாசலிட்டவெரிமணிமாளிகை
மூசமுட்டிமுழுதுமுருக்கலால்
ஊசலிட்டனவோடியுலைந்துளைப்
பூசலிட்டவிரியற்புரமெலாம்.

இ-ள். வாசலிட்ட – வாசல்களைக்கொண்ட, எரிமணி – நெருப்புநிறமான ரத்நங்கள்பதித்த, மாளிகை – வீடுகளில், மூச – நெருங்க, முட்டி – இந்த நெருப்புப்பட்டு, முழுதும் – எல்லாம், முருக்கலால் – எரித்தழிக்கிறதினலே, ஊசலிட்டுஅன - ஊசலாடுகிறதுபோல, ஓடி – போகிறதும் வருகிறதுமாகவோடி, உலைந்து – வருந்தி, உளைப்பூசல் – கத்துகிற கூக்குரல், இட்ட – இடலாயின, இரியல் – ஓடுதலையுடைய, புரமெலாம் – அந்த ஊரரரெல்லாம்—எ-று. நெருப்புக்குப்பயந்து வெளியேபோகிறதும்பிள்ளைமுதலியவைகளை நினைந்துதிரும்பவருகிறதுமாயின என்க. (௨)

மணியினுயவயங்கொளிமாளிகை
பிணியிற்செஞ்சுடர்க்கற்றைபெருக்கலால்
திணிகொடீயுற்றதுற்றிலதேர்கிலார்
அணிவளைக்கைநல்லாரலமந்துளார்.

இ-ள். மணியினுய – ரத்நங்கள்பதித்துள்ளதான, வயங்கு ஒளி – மிகுந்தபிரகாசமுள்ள, மாளிகை – வீடுகளின், பிணியில் – கட்டுப்பாடுகளெல்லாம், செஞ்சுடர் - சிவந்தநெருப்பினது, கற்றை – சுவாலைகள், பெருக்கலால் – அதிகமாயெரிதலாலே, திணிகொள் – திரண்டதிண்மையைக்கொண்ட, தீ உற்றது – நெருப்புப்பிடித்தெரிகிறதும், உற்றில – நெருப்புப்பிடியாததும், தேர்கிலர் – தெரியாதவர்களாய், அணிவளை – வளையல்களணிந்த, கை – கைகளையுடைய, நல்லார் – பெண்கள், அலமந்துளார் – மிகவுந்துன்பமுறுதலானுர்கள்—எ-று. நெருப்புநிறம்போல் ரத்நநிறமிருப்பதனுலே நெருப்புப்பற்றினதென்றும் பற்றிலதென்றுந் தெரிகிலரென்க. (௩)

வானகத்தைநெடும்புகைமாய்த்தலால்
போனதிக்கறியாதுபுலம்பினர்
தேனகத்தமலர்பலசிந்திய
கானகத்துமயிலன்னகாட்சியார்.

இ-ள். வானகத்தை – ஆகாயத்தையெல்லாம், நெடும்புகை – நீண்டபுகைகள் கம்மி, மாய்த்தலால் – மறைத்ததினலே, போனதிக்கு – தாங்கள்வந்ததிசை, அறியாது – தெரியாமல், புலம்பினர் – பிரலாபித்தார்கள், தேன் அகத்த-தேனை உள்ளேயுடைய, மலர்பல – பலவானபுட்பங்களை, சிந்திய – உதிர்த்துக்கொண்டுநிற்கிற,கானகத்து – செம்முருக்கமரங்களுள்ளகாட்டிலகப்பட்ட, மயிலன்ன – மயில்போன்றவர்களாய், காட்சியார் – தோற்றப்படுகிறுர்கள்—எ-று. நெருப்புநிறமுள்ளது செம்முருக்கமலர் – காட்சியார் புலம்பினரெனக்கூட்டுக. (௪)

கூய்க்கொழுங்கனல்குஞ்சியுற்கூந்தலில்
மீச்சொரிந்தனமாதரும்வீரரும்
ஏய்த்ததன்மையினுலெரியின்மையும்
தீக்கொளுந்தினவுந்தெரிகின்றிலர்.

இ-ள். கூய் – ஒருவருக்கொருவர் கூப்பிட்டுக்கொண்டு, கொழுங்கனல் – செழியநெருப்பு, மீச்சொரிந்தன – மேலேகொட்டினுற்போன்ற, குஞ்சியின்-குமிகளை

யும், கூந்தலின் — கூந்தல்களையுமுள்ள, வீரரும் - புருடர்களும், மாதரும் — பெண்களும், எய்த்த - மயிரும்நெருப்புமொத்திருக்கிற, தன்மையினுல் — படியினுலே, எரியின்மையும் — நெருப்புப்பிடியாததலையென் றும், தீக்கொளுந்தினவும்-நெருப்புப்பிடித்ததலையென்றும், தெரிகின்றிலர் — தெரியாமல்கூவிக்கொண்டலைகிருர்களென்க, எனவேசுடுகிறதினுலே, தெரிகிருர்களென்பதுபோதரும்—எ-று. (௫)

இல்லிற்றங்குவயங்கெரியாவையும்
சொல்லிற்றீர்ந்தனபோல்வனதொல்லுருப்
புல்லுக்கொண்டனமாயைப்புணர்ப்பறக்
கல்வித்தம்மியல்பெய்துங்கருத்தர்போல்.

இ-ள். இல்லில் - அவரவர்வீடுகளிலே, தங்கு - தங்கின, வயங்குஎரி — எரிகிறநெருப்புகள், யாவையும் — எல்லாம், சொல்லில் — இராவணன்ஆக்கினையிலே நின்றும், தீர்ந்தனபோல்வன — கடந்தனபோலாயின, தொல்லுரு — பழையதம்முருவை, புல்லுக்கொண்டன - கூடிக்கொண்டதாயின, மாயைப்புணர்ப்பு - மாயாசம்பந்தம், அற — தீர, கல்வி — தாமுணர்ந்தஞானத்தினுலே, தம்இயல்பு - தமதுசொரூபசுவபாவத்தை, எய்தும் - அடைகிற, கருத்தர்போல் — மனோவிருத்திஞானமுள்ளவர்கள் போல்—எ-று. அக்கினிகட்டுக்கடங்காததாய் வீட்டுநெருப்பும் அனுமார்வாலினெருப்போடு கூடிக்கொண்டது எப்படியென்னில் சிதாபாசநீங்கித்ததாகாரமான ஆத்மசுவரூபமானற்போல் என்க. (சு)

ஆயதங்கோர்குறளுருவாயடித்
தாயளந்துலகங்கடரக்கொள்வான்
மீயெழுந்தகரியவன்மேனியில்
போயெழுந்துபரந்ததுவெம்புகை.

இ-ள். வெம்புகையாயது - வெவ்வியபுகையானது, அங்கு — மாபலிகாலமான அப்போது, ஓர்குறளுருவாய் - ஒருவாமனவடிவாகி, அடி - தமதுகாலாலே, தாய்- தாவி, அளந்து — அளவிட்டு, உலகங்கள் — உலகமுழுதும், தர — மஹாபலிகொடுக்க, கொள்வான் — கொண்டதிரிவிக்கிரமனுய், மீயெழுந்த — மேலேஉயர்ந்த, கரியவன்- நீனிறநெமோல், மேனியில் — உருப்போல், போய் — நீண்டு, எழுந்து — உயர்ந்து, பரந்தது - பரவலாயிற்றுவெம்புகை எனவே, அவ்வூரினின்றும் — உயர்ந்து, ஓங்கியது புகையென்க—எ-று. (எ)

நீலநின்றநிறத்தனகீழ்நிலை
மாலின்வெஞ்சினயானையைமானுவ
மேல்விழுந்தெரிமுற்றும்விழுங்கலால்
தோலுரிந்துகழன்றனதோலெலாம்.

இ-ள். கீழ்நிலை - கிழக்குத்திக்கிலேயுள்ள, மாலின் — இந்திரனுடைய, வெஞ்சினம் — வெவ்வியகோபமுள்ள, யானையை — ஐராவதத்தை, மானுவ-ஒப்பாயின, மேல்விழுந்து - உடம்பின்மேலேவிழலாகி, எரி — அனுமார் வாலினெருப்பானது, முற்றும் - யானைஉடம்புமுழுதும், விழுங்கலால் — பிடித்துஎரித்ததனுலே, தோல்-மேற்றோலெல்லாம், உரிந்து — உரிதலாகி, கழன்றன-நீங்குதலான அவ்வூரிலுள்ள, தோலெலாம் — யானைகளெல்லாம், நீலநின்ற — முன்னேகருமைதங்கின, நிறத்தன - நிறமுள்ளவைகள், இப்போது - தோலுரிந்துகழன்று, வெளுப்பாயின - ஆதலாலே, இந்திரன் — வெள்ளானைபோலாயினவென்றூர்—எ-று. (அ)

மீதிமங்கலந்தாலன்னவெம்புகை
சோதிமங்கலத்தீயொடுசுற்றலால்
மேதிமங்குழலின்வீழ்புனல்வீழ்மட
வோதிமங்களின்மாதரொதுங்கினர்.

இ-ள். மீது – மேலே, இமங்கலந்தாலன – பனிமொய்த்தாற்போல், வெம்புகை – வெவ்வியபுகையானது, சோதி – ஒளியுள்ள, மங்கலத்தீயொடு – அவரவர்வீட்டிலே நன்மைசெய்கிறநெருப்புடனேகூடி, சுற்றலால் – சூழ்ந்துகொள்ளுதலாலே அந்தப்புகையையும் நெருப்பையுமஞ்சி, மங்குலின் – மேகங்களாலே, வீழ் – விழுதலான, புனல் – கடலிலேபோய், வீழ் – நன்னீரிலேவிழுகிற, மடவோதிமங்களின் – இளமையான அன்னங்கள்விழுகிறதுபோல், மேதி – எருமைமாடுகள்போல், மாதர் – ராக்ஷதப்பெண்கள், ஒதுங்கினர் – விழுந்தார்கள், அன்னங்கள் விழுவதாற்றிலே எருமைகள்போன்ற ராக்ஷதிகள்விழுவது கடலிலே எனக்கொள்க—எ-று. (கூ)

பொடித்தெழுந்துபெரும்பொறிபோவன
இடிக்குலங்களின்வீழ்தலுமெங்கணும்
வெடித்தவேலைவெதும்பிடமீன்குலம்
துடித்துவெந்துபுலர்ந்துயிர்சோர்ந்தவால்.

இ-ள். பொடித்து – பொடிப்பொடியாய், எழுந்து – உண்டாகி, போவன – போவனவாகிய, பெரும்பொறி – பெரியநெருப்புப்பொறிகள், இடிக்குலங்களின் – இடிக்கூட்டங்கள்போல், எங்கணும் – எவ்விடத்தும், வீழ்தலும் – விழும்போது, வேலை வெதும்பிட – கடல்கொதிப்பாக, வெடித்த – விழுந்தஇடங்களில் வெடிப்பதாயின, மீன்குலம் – அக்கடலிலுள்ளசலசரங்களெல்லாம், துடித்து – துள்ளுதலாகி, வெந்து – எரிந்து, புலர்ந்து – காய்ந்து, உயிர்சோர்ந்த – உயிர்கள்போயின—எ-று. (கo)

பருகுதீமடுத்துள்ளுறப்பற்றலால்
அருகுநீடியவாடகத்தாரைகள்
உருகிவேலையினூடுபுக்குற்றன
திருகுபொன்னெடுந்தண்டிற்றிரண்டவால்.

இ-ள். பருகு – நீரையுறுஞ்சுகிற, தீமடுத்து – நெருப்புவிழுந்து, உள்உற – வீடுகளுக்குள்ளேஅதிகமாக, பற்றலால் – பிடித்துக்கொள்ளுதலாலே, அருகு – பக்கத்திலே, நீடிய – அந்தப்பொன்வீடுகள் வெந்துநீளுவதான, ஆடகத்தாரைகள் – பொன் ஒழுகுதல், உருகி – உருகுதலாகி, வேலையினூடு – கடலுக்குள்ளே, புக்குற்றன – போய்ச்சேர்ந்தவைகள் நீரினுலேகூடுதெணிந்து, திருகு – பின்பு, பொன் – உருகிவந்த அந்தப்பொன்ஒழுங்கு, நெடுந்தண்டில் – நீண்டதடிபோல, திரண்ட – திரளலாயின—எ-று. (கக)

உரையின்முந்துலகுண்ணுமெரியதால்
வரைநிவந்தனபன்மணிமாளிகை
நிரையினீணெடுஞ்சோலையினிற்குமோ
தரையும்வெந்ததுபொன்னெனுந்தன்மையால்.

இ-ள். உரையின்முந்து – சொல்லுமுன்னே, உலகு – உலகமெல்லாம், உண்ணும் – எரிப்பதான எரிநெருப்பு, அதால் – அதுவானதினலே, வரை – மலைகள்போ

ல், நிவந்தன — உயர்வுள்ளனவான, பல் — அநேகமாகிய, மணிமாளிகை — அழகியவீடுகளின், நிரையின் — வரிசைகளிலும், நீள்நெடும்-நீண்டநெடிதான, சோலையின்-சோலைகளிலும், நிற்குமோ — அந்தநெருப்பு அடங்குவதாமோ, பொன்னெனும் — இலங்கைபொன்னென்கிற, தன்மையால் — படியினலே, தரையும் — அந்தநிலமுங்கூட, வெந்தது — வேவுதலாயிற்று, சோலைகள் — வீடுகள்எல்லாம் வேகின்றனவெனக்கொள்க—எ-று. (கஉ)

கல்லினும்வலிதாம்புகைக்கற்றையால்
எல்லிபெற்றதிமையவர்நாடியல்
வல்லிகோலிநிவந்தனமாமணிச்
சில்லியோடுந்திரண்டனதேரெலாம்.

இ-ள். கல்லினும் — கல்லைக்காட்டிலும், வலிதாம் — கெட்டியானதான, புகைக்கற்றையால் — புகையினதுதிரட்சியினலே, இமையவர்நாடு — தேவருலகமெல்லாம், எல்லிபெற்றது — இருளாயிருண்டது, இயல் — பொருந்தத்தக்க, வல்லிகோலி - அளவுபடச்செய்து, நிவந்தன — உயர்ந்துள்ளதான, மா — பெரிய, மணி — அழகிதான, சில்லியொடும் — உருளைகளுடனேசேர்ந்து, தேரெலாம் — இரதங்கள்முழுதும்வெந்து, திரண்டன — ஒரேதிரள்வாய்க்கட்டியாயின—எ-று. (கந)

பேயமன்றினினின்றுபிறங்கெரி
மாயருண்டநறவுமடுத்ததால்
தூயரென்றவர்வைகிடந்துன்னினல்
தீயரன்றியுந்தீமையுஞ்செய்வரால்.

இ-ள். பேய — பசாசுகள்சூழ்ந்துள்ள, மன்றினில் — பொதுவிடங்களிலே, நின்று — நிலைகொண்டு, பிறங்கு — விளங்குகின்ற, எரி — நெருப்பானது, மாயர் - அந்தமாயைசெய்பவர்களான ராக்ஷதர்கள், உண்ட — சாப்பிடலான, நறவும் — கள்ளையும், மடுத்தது — சாப்பிடலாயிற்று, தூயரென்றவர் — நல்லோரென்பவர்கள், வைகிடம் — தீயவரிருக்குமிடத்தை, துன்னினல் — சேரலானல், தீயர் — அந்தத் தீயவராகுதலே, அன்றியும் — அல்லாமலும், தீமையும் — தீயபாபங்களையும், செய்வர் — செய்வார்கள், ஆல் — இது ஆச்சரியம்—எ-று. (கச)

தழுவிலங்கைதழங்கெரிதாய்ச்செலீஇ
வழுவில்வேலையுலையின்மறுகின
எழுமெழுஞ்சுடர்க்கற்றைசென்றெய்தலால்
குழுவுதண்புனன்மேகங்கொதித்தவே.

இ-ள். தழுவுஇலங்கை — அந்தஇலங்கையிலேபற்றின, தழங்கு — கொதிப்பதான, எரி — நெருப்பானது, தாய் — தாவி, செலீஇ — சென்றுபற்றுதலாலே, வழுஇல் — குறைவுபடுதலில்லாத, வேலை — கடலானது, உலையின் — உலைநீர்போல், மறுகின — கொதிப்பதாயின, எழும்எழும் — அடிக்கடிமேலேகிளம்புகிற, சுடர்க்கற்றை- நெருப்புச்சுவாலையானது, சென்றுஎய்தலால் — போய்க்கூடுகிறதினலே, குழுவு - ஆகாயத்திலேகூடின, தண்புனல் — குளிர்ந்தநீர்பொருந்தின, மேகம் — மேகங்களும், கொதித்த — கொதிப்பனவாயின—எ-று. (கரு)

ஊனிலோடுமெரியொடுபங்குவார்
கானிலோடுநெடும்புனல்காணு

வானிலோடுமகளிர்மயங்கினர்
வேனிலோடருந்தேரிடைவீழ்ந்தனர்.

இ-ள். ஊனில் – உடம்பிலே, ஓம் – தாவுவதான, எரியொடு – நெருப்புடனே, உயங்குவார் – வருந்துவாராகி, வானில் – ஆகாயத்திலே, ஓம் – தாவிப்போகிற, மகளிர் – பெண்கள், மயங்கினர் – மயங்கினராக்ஷதிகள், கானில் – காட்டிலே, ஓடும் – ஓடுவதான, நெடும்புனல்எனா – நீண்டஜலமென்று, வேனில் – வெப்பத்துடனே, ஓடு – நீண்டுதோற்றுகிற, அருந்தேரிடை – ஜலமல்லாததாயும் ஜலமாகத்தோற்றுகிறபேய்த்தேராகியநீரிலே, வீழ்ந்தனர் – விழுந்தார்கள்—எ-று. கான் முன்னிலையசை. (கசு)

தேனவாம்பொழிறீப்படச்சிந்திய
சோனைமாமலர்த்தும்பிதொடர்ந்தயல்
போனதீச்சுடர்புண்டரிகத்தடங்
கானமாமெனவீழ்ந்துகரிந்தவே.

இ-ள். தேன் – தேனைக்கண்டு, அவாம் – விரும்பத்தக்க, பொழில் – சோலைகளிலே, தீப்பட – நெருப்புவிழ அதனாலே, சிந்திய – அழிந்த, சோனை – விடாமல்தேனைப்பெய்கிற, மா – மிகுதியுள்ள, மலர் – பூக்களிலேமொய்த்த, தும்பி – வண்டுகள், தொடர்ந்து – அந்தச்சோலைகளைத்தொடர்ந்து, அயல் – அப்பாலும், போன-வேவச்செய்துகொண்டுபோன, தீச்சுடர் – நெருப்புச்சுவாலையைக்கண்டு, புண்டரிகம்-தாமரைகள்பூத்த, தடங்கானம் – பெரியகாடுகளே, ஆமென – ஆகுமென்று, வீழ்ந்து – அந்தத்தீச்சுடரிலேவிழுந்து, கரிந்த – தீந்துபோயின—எ-று. (கஎ)

நற்கடனிதுநம்முயிர்நாயகன்
மற்கடந்தெறமாண்டனன்வாள்விலம்
இற்கடந்தினியேகலம்யாமெனா
விற்கடந்தநுதற்சிலர்வீடினர்.

இ-ள். நற்கடனிது – இதுவேநல்லகாரியமென்று, நம்முயிர் – நமதுயிர்போன்ற, நாயகன் – புருஷன், மற்கடம் – ஒருகுரங்கு, தெற – கொல்ல, மாண்டனன்-இறந்துபோனான், வாழ்வுஇலம் – ஆகையாலினிச்சுகம் அனுபவித்தல்செய்யேம், இற்கடந்து – நமதுவீடுவிட்டு, இனியேகலம் – இனிவெளியேபோகுதல்செய்யேம், யாமெனா – நாமென்று, விற்கடந்த – வில்லுருவைவெல்லலான, நுதல் – நெற்றியுள்ள பெண்களிலே, சிலர்வீடினர் – சிலரிப்படியெண்ணிவீடுகளிலே இறந்தார்கள்-எ-று.

பூக்கரிந்துமுறிபொறியாயடை
நாக்கரிந்துசினைநறுஞ்சாம்பராய்
மீக்கரிந்துநெடும்பணைவேருறக்
காக்கரிந்துகருங்கரியானவே.

இ-ள். பூக்கரிந்து – மலரெல்லாந்தீந்து, முறி – தளிரெல்லாம், பொறியாய்-பொறிப்பொறியாய், அடை – இலைகளும், நா – அதனடுவுள்ளவைகளும், கரிந்து-தீந்து, சினை – கிளைகள்எல்லாம், நறுஞ்சாம்பராய் – நல்லசாம்பலாய்வெந்து, மீக்கரிந்து-அதன்மேலுள்ளவைகளுந்தீந்து, நெடும்பணை – நீண்டகிளைகளும், வேர் – வேர்களும், உற – அதிகமாக, கா – சோலைகளெல்லாம், கரிந்து – தீந்து, கருங்கரி – மிகவுங்கரிகளே, ஆன – ஆயின—எ-று. (கக)

கார்முழுக்கவெங்கனற்கற்றைபோய்
ஊர்முழுக்கவெதுப்பவுருகின
சோரொழுக்கமருமையிற்றுன்றுபொன்
வேர்விடுப்பதுபோன்றனவிண்ணெலாம்.

இ-ள். கார்முழுக்க - மேகங்களுமுழுகும்படி, எழும் - மேலேகிளருகின்ற, கனற்கற்றை - நெருப்புச்சுவாலைகள், போய் - நீண்டுசென்று, ஊர்முழுக்க - பொன்னுலகமுழுவதையும், வெதுப்ப - சுட்டெரிக்கஅதனால், உருகின - உருகலானதாய், சோர் - ஒழுகுகின்ற, ஒழுக்கம் - ஓட்டமானது, அருமையில் - நீங்காமையினாலே, துன்று - வேவுதலான, பொன் - பொன்னானது, வேர்விடுப்பது-வேரைத்தொங்கவிடுகிறது, போன்றன - ஒப்பாயின, விண்ணெலாம் - ஆகாயமுழுதும்—எ-று.()

நெருக்கமீமிசைபொக்கநெருப்பெழச்
செருக்கும்வெண்கதிர்த்திங்களைச்சென்றுற
உருக்குமெய்யினமுதமுகுத்தலால்
அரக்கருஞ்சிலராவிபெற்றாரரோ.

இ-ள். நெருக்கம் - நெருங்குதலுள்ள, மீமிசை - மிகவுமேலே, ஒக்க - ஒருசேர, நெருப்பெழ - நெருப்புச்சுவாலை உண்டாக, செருக்கும்-ஒளியால்மிகுதியான, வெணகதிர் - வெள்ளைநிலவுள்ள, திங்களை - சந்திரனை, சென்று - கிட்டி, உற உருக்கும் - மிகவுமுருகச்செய்கிற, மெய்யின் - அச்சந்திரனுடம்பினின்றும், அமுதம்-அமிர்தம், உகுத்தலால் - சிந்துகிறதினாலே, அரக்கரும் சிலர் - சிலராட்சதர்கள், ஆவிபெற்றார் - சாவாமலுயிருள்ளவர்களானார்கள்—எ-று. அரோ - அசை. (உக)

பரிதிபற்றிநிமிர்ந்தெழுபைங்கனல்
கருகிமுற்றுமெரிந்தெழுகார்மழை
அருகுசுற்றுமிருந்தையதாயதின்
உருகுபொற்றிரளொத்தனனொண்கதிர்.

இ-ள். பரிதிபற்றி - சூரியனைப்பிடித்து, நிமிர்ந்து - உயர்ந்து, எழு - எழுகிற, பைங்கனல் - சுவாலைவிரிதலானநெருப்பினாலே, கருகி - தீந்து, முற்றும் - முழுதும், எரிந்து - வெந்து, எழு - போகிற, கார்மழை - கரியமேகங்கள், அருகு - பக்கமெல்லாம், சுற்றும் - சூழ்ந்திருக்கிற, இருந்தையதாய் - கரிகளாக, அதின் - அக்கரிக்குள்ளே, உருகு - இளகுகின்ற, பொற்றிரள் - பொன்னினதுதிரட்சி, ஒத்தனன்-ஒப்பதானான், ஒண்கதிர் - ஒளிமிகுந்த சூரியன்—எ-று. (உஉ)

தலைகொளுத்தியதாவெரிதாமணி
முளைகொளுத்திமுகத்திடைமொய்த்தபேர்
உளைகொளுத்தவுலந்துலைவுற்றன
வளைகுளப்பின்மணிநிறவாசியே.

இ-ள். தளை - பின் கால் கயிற்றை, கொளுத்திய - பிடித்து வேவச்செய்த, தா - பின்பு சுவாலைதாவுகிற, எரி - நெருப்பானது, தாமணி - கழுத்திற் கயிற்றுடனே, முளை - கட்டுமுளையையும், கொளுத்தி - வேவப்பண்ணி, முகத்திடை - முகத்திலே, மொய்த்த - நெருங்கியுள்ள, பேர் உளை - அதிகமான முன்மயிரை, கொளுத்த - வேவச்செய்ய, உலந்து - செத்து உயிர்போய், உலைவுற்றன - வருந்தலாயின,

வளை — வளைந்த, குளப்பின் — குளம்புகளைக் கால்களிலேகொண்ட, மணிநிறம் — நல்ல நிறமுள்ள, வாசி — குதிரைகள்—எ-று. (உரு)

எழுந்துபொற்றலத்தேறலினீள்புகைக்
கொழுந்துசுற்றவுயிர்ப்பிலர்கோளுழுற்
றழுந்துபட்டுளரொத்தயர்ந்தாரழல்
விழுந்துமுற்றினர்கூற்றைவிழுங்குவார்.

இ-ள். எழுந்து — மேலே உயர்ந்து, பொற்றலத்து — பொன்னுலகத்தைநோக்கி, ஏறலின் — செல்லும்போது, நீள் — மேலே உயருகின்ற, புகைக்கொழுந்து-புகைத்திரட்சி, சுற்ற — சூழ அதனாலே, உயிர்ப்பிலர் — மூச்சுவிடமாட்டாமல், கோளுழுற்று — அப்புகையை வாயால் விழுங்கலாகி, அழுந்துபட்டுளர் — புகைக்குள் அழுந்தினவர்களாய், ஒத்து — அப்புகையேயாக, அயர்ந்தார் — சோர்தலானூர்கள் பின்பு, அழல் விழுந்து — நெருப்பிலே விழுந்து, முற்றினர் — முடிந்தார்கள், கூற்றைவிழுங்குவார்-யமனையும் விழுங்கவல்லராட்சதர்கள்—எ-று. (உச)

கோசிகத்துகிலுற்றகொழுங்கனல்
தூசினுத்தரிகத்தொடுசுற்றுரு
வாசமைக்குழல்பற்றிமயங்கினர்
பாசிழைப்பரவைப்படரல்குலார்.

இ-ள். கோசிகத் துகில் — பட்டுச் சீலையிலே, உற்ற-பிடித்த, கொழுங்கனல்-அவியாதநெருப்பு, தூசின் — இடைவஸ்திரமும், உத்தரிகத்தொடு — மார்புச்சீலையும், சுற்றுரு — சூழ்ந்து, வாசம் — பரிமளமுள்ள, மைக்குழல் — கரியகூந்தலினும், பற்ற-பிடித்துக்கொள்ள, மயங்கினர் — மயங்கியிறந்தார்கள், பாசு இழைய — பசுமையான ஆபரணங்களுள்ள, பரவை — விரிதலாக, படர் — கீழ்மேலு நீண்டுதோற்றுகிற, அல்குலார் — குறியுள்ளபெண்கள்—எ-று. (உரு)

வேறு.

நிலவிளங்கியதுகிலினைநெருப்புணநிருதர்
இலவினுஞ்சிலமுத்துளவெனுநகையனையார்
புலவியின்கரைகண்டவரமுதுகப்புணரும்
கலவியின்கரைகண்டிலர்மண்டினர்கடன்மேல்.

இ-ள். நிலவு — சந்திரிகைபோல்வெண்மையாய், இலங்கிய — விளங்குகின்ற, துகிலினை — வஸ்திரத்தை, நெருப்புண — நெருப்பு வேவச்செய்யவே, நிருதர் — அரக்கர்கள், எழு இலவினும் — இலவிதழிலும், சிலமுத்துள எனும் — சில முத்துகளுண்டென்னும்படியான, நகை — பலவரிசைகளுள்ள, அனையார் — அப்பெண்களுடைய, புலவியின்கரை — பிணக்கின் அளவை, கண்டவர் — தெரிந்தவராகி, அமுது உக — அமுதமொழுக, புணரும் — கூடுகின்ற, கலவியின்கரை — சுகத்தினளவை, கண்டிலர்-காணுதவர்களாய், கடல்மேல்மண்டினர் — கடலிலேபோய்விழுந்தார்கள், பய—எ-று.

பஞ்சரத்தொடுபசுநிறக்கிளிவெந்துபதைப்ப
அஞ்சனக்கணினருவிநீர்முலைமுன்றிலலைப்பக்
குஞ்சரத்தனகொழுநரைத்தழுவுறுங்கொதிப்பால்
மஞ்சுறப்புகுமின்னெனப்புகையிடைமறைந்தார்.

இ-ள். பஞ்சரத்தொடு - கூட்டுடனே, பசுநிறக்கிளி - பசியநிறமுள்ள கிளிப்பிள்ளை, வெந்துபதைப்ப - வெந்துதுடிக்க அதுகண்டு, அஞ்சனக்கணின்-மையிட்ட கண்களிலே, அருவிநீர் - ஓடிவருகிற ஜலம், முலைமுன்றில் - முலைமுகட்டிலே, அலைப்ப - பெருகுதலாக, குஞ்சரத்து - யானையை, அன - ஒப்பான, கொழுநரை-நாயகரிடம்போய், தழுவுறும் - கூடவேண்டின, கொதிப்பால் - ஆத்திரத்துடனே, மஞ்சு-மேகத்துக்குள்ளே, உறப்புகும் - மிகவுமறைகிற, மின்னென - மின்போல், புகையிடை - புகைக்குள்ளே, மறைந்தார் - மூழ்கினார்கள்—எ-று. (உஎ)

வரையினைப்புரைமாடங்களெரிபுகமகளிர்
புரையில்பொற்கலன்விசும்பிடைவில்லிடப்போவார்
கரையினுட்புகைப்படலையிற்கறிந்தனர்கலங்கித்
திரையினுட்பொலிசித்திரப்பாவையின்செயலார்.

இ-ள். வரையினைப்புரை - மேகத்தை ஒப்பான, மாடங்கள் - வீடுகளிலே, எரிபுக - நெருப்புப்பட, மகளிர்-பெண்கள் தம்முடைய, புரையில்-தோஷமில்லாத, பொற்கலன் - பொன்னாபரணங்கள், விசும்பிடை - ஆகாயத்திலே, வில்லிட - ஒளிவீச, போவார் - செல்லும்போது அவர்கள், கரையினுள் - அளவிலே கவிந்த, புகைப்படலையில் - புகைமூட்டத்தினாலே, கரிந்தனர் - தீந்தாராகி, கலங்கிக்கரிந்தனர்-கலங்குதலாய்த் தீய்ந்தார்கள், திரையினுள் - திரைமறைவுக்குள்ளே, பொலி-தோற்றுகின்ற, சித்திரப்பாவையின் - சித்திரப்பதுமைகளினது, செயலார் - செய்கைபோல் காணப்படுகிறார்கள்—எ-று. (உஅ)

அகருமஞ்ஞுறுஞ்சாந்தமுமுதலியவநேகம்
புகரினன்மரத்துறுவெறியுலகெலாம்போர்ப்பப்
பகருமூழியிற்காலவெங்கடுங்கனல்பருகும்
மகரவேலையில்வெந்தனநந்தனவனங்கள்.

இ-ள். அகரும் - அகில்விருட்சங்களும், அஞ்ஞறும்-அந்த நல்லபரிமளமுள்ள, சாந்தமும் - சந்தனவிருட்சங்களும், முதலிய - முதலான, அநேகம் - பலவகைகளுள்ள, புகர் இல் - தோஷமில்லாத, நன்மரத்து - நல்ல விருக்ஷங்களிலே, உறு-பொருந்தின, வெறி - பரிமளமானவை, உலகெலாம் - உலகமுழுதும், போர்ப்ப - கவிய, பகரும் - எல்லாருஞ் சொல்லப்படுகிற, ஊழியில் - யுகமுடிவிலே, காலவெங்கடுங்கனல் - வெவ்விய காலாக்கினியாலே, பருகும் - குடிக்கப்படுகிற, மகரவேலையில்-மகரமீன்களுள்ள கடல்போல், நந்தனவனங்கள் - சோலைகளெல்லாம், வெந்தன-வேவலாயின—எ-று. (உகூ)

மினைப்பரந்தெழுகொழுஞ்சுடருலகெலாம்விழுங்க
நினைப்பரும்பெருந்திசையுறவிரிகின்றநிலையால்
சினைப்பரந்தெரிசேர்ந்திலநின்றவுஞ்சிலவும்
கனற்பரந்தவுந்தெரிகிலகற்பகக்கானம்.

இ-ள். மினைப்பரந்து - ஒளியைவிரித்துக்கொண்டு, எழு - கிளருகிற, கொழுங்கனல் - செழிய நெருப்பு, உலகெலாம் - உலகமுழுதும் அந்த ஊர்முழுதும், விழுங்க - கபளீகரிக்கலாய், நினைப்ப அரும் - எண்ணமுடியாத, பெருந்திசையுற-பெரிய திக்குகள்முழுதும், விரிகின்ற நிலையால் - பரவுகிறபடியினாலே, சினைப்பரந்து-கிளைகளிலேபிடித்து, எரிசேர்ந்தில - நெருப்புக்கூடாதவைகளாய், நின்றவும் - நிற்பவை

களும், சிலவும் – கொஞ்சம்பற்றியெரிய நிற்பவைகளும், கனல்பரந்தவும் – முழுது நெருப்புப்பிடித்து வேவனவும், கற்பகக்கானம் – அதுசெம்பொன்மயமான கற்பகக் காடாகலாலே, தெரிந்தில – தோற்றாது நிற்கின்றன—எ-று. (௯௦)

மூளும்வெம்புகைவிழுங்கலிற்சுற்றுறமுழுநீர்
மாளும்வண்ணமாமலைநெடுந்தலைதொறுமயங்கிப்
பூளைவீயன்னபோவனபுணரியிற்புனன்மீன்
மீளயாவையுந்தெரிந்திலமுகிற்கணமிசைய.

இ-ள். முழுநீர் – கடலினீரெல்லாம், மாளும்வண்ணம்-வற்றும்படி, சுற்றுற-அவ்வூரைச்சூழ்வதாய், மூளும் – மூளுவதான, வெம்புகை – வெவ்வியபுகையானது, விழுங்கலில் – கடலைக்கவிந்து கொண்டதனாலே, மீன்யாவையுமீள – மீன்களெல்லா மோடுவனவாக, புணரியிற்புனல் – கடலினீரை, முகிற்கணம்-மேககூட்டங்கள் எழு, மிசைய – குடிக்க நீர்நிறம், தெரிந்தில – தெரியாமல், மாமலை – பெரியமலைகளின், நெடும் – நீண்ட, தலைதொறும் – சிகரங்களெல்லாம், மயங்கி – ஒருசேர்க்கையாய், பூளைவீ – பூளைப்பூவை, அன்ன – ஒப்பானவைகளாய், போவன – செல்வனவாயின, பய—எ-று. (௯௧)

மிக்கவெம்புகைவிழுங்கலின்வெள்ளியங்கிரியும்
ஒக்கவெற்பினோடன்னமுங்காக்கையினுருவ
பக்கவேலையின்படியதுபாற்கடன்முடிவி
றிக்கயங்களுங்கயங்களும்வேற்றுமைதெரியா.

இ-ள். மிக்க – மிகுதியான, வெம்புகை – வெவ்விய புகைகள்போய், விழுங்கலின் – கவிந்துகொண்டதனாலே, வெள்ளியங்கிரியும் – கைலைமலையும், வெற்பினோடு – மற்றமலைகளுடனே, ஒக்க – ஒப்பாவும், அன்னமும் – வெண்ணிறமான அன்னங்களும், காக்கையினுருவ – காகவடிவாயின, பாற்கடல் – திருப்பாற்கடலும், பக்கம்-அதன்பக்கவிலேயுள்ள, வேலையின்படியது – கடல்களின்வடிவாயிற்று, முடிவில்-நிறம் அழிதலில்லாத, திக்கயங்களும் – ஐராவதமுதலான திக்கியானைகளும், கயங்களும் – மற்றயானைகளும், வேற்றுமை – நிறவேறுபாடு, தெரியா – தெரிந்துசொல்லக்கூடாவாயின—எ-று.. (௯௨)

கரிந்துசிந்திடக்கடுங்கனறொடர்ந்துடல்கதுவ
உரிந்தமெய்யினரோடினர்நீரிடையொளிப்பார்
விரிந்தகூந்தலுங்குஞ்சியுமிடைதலிற்றூமும்
எரிந்துவேகின்றவொத்தனவெறிதிரைப்பரவை.

இ-ள். கடுங்கனல் – கடிதானநெருப்பு, தொடர்ந்து – கூடி, உடல் கதுவ-தேகத்திலேபொருந்த அதனாலே, கரிந்துசிந்திட – தீந்துகழல, உரிந்த – தோலுரிதலான, மெய்யினர் – சரீரமுள்ளவர்களாய், ஓடினர் – ஓடிப்போய், நீரிடை – சமுத்திரத்திலே முழுகி, ஒளிப்பார் – மறைகிறவர்கள், விரிந்த – விரிதலான, கூந்தலும்-பெண்கள்மயிரும், குஞ்சியும் – புருடர்கள்மயிரும், மிடைதலில் – நீர்மேலேபரவித் தோற்றுகிறதினாலே, பரவைதாமும் – கடல்களும், எரிந்துவேகின்றது – எரிந்துவேவுகிறதை, ஒத்தன – ஒப்பாயின, எறிதிரை – அலைகளைவீசுகிற, பரவை – கடல்கள் எ-று. (௯௩)

மருங்கின்மேலொருமகவுகொண்டொருதனிமகவை
அருங்கையாற்பற்றிமற்றொருமகவுபின்னரற்ற

நெருங்கினுரொடுநெறீகுழல்சுறுக்கொளநீக்கிக்
கருங்கடற்றலைவீழ்ந்தனரரக்கியர்கதறி.

இ-ள். மருங்கின்மேல் - இடையிலே, ஒருமகவுகொண்டு — ஒருபிள்ளையையிடுக்கி, ஒருதனிமகவை - இன்னமொருபிள்ளையை, அருங்கையாற்பற்றி - தமதருமையுள்ளகையாலேபிடித்து, மற்றொருமகவு — இன்னமொருபிள்ளை, பின் அரற்ற - பின்தொடர்ந்துஅழ, நெருங்கினுரொடு - கூடிப்போகிற பெண்களுடனேகூடி, நெறிகுழல் - நவோகுள்ளகூந்தலிலே, சுறுக்கொள - சுறீரென்ன நெருப்புப்பிடிக்க, நீக்கி - அதைத்துடைத்தவித்துக்கொண்டு, கருங்கடற்றலை - கரியகடலிலேபோய், அரக்கியர் - ராட்சதப்பெண்கள், கதறிவீழ்ந்தனர் - கத்திக்கொண்டு விழுந்தார்கள் எ-று. தனி கைப்பிள்ளையைநேராகாத. (௩௪)

வில்லும்வேலும்வெங்குந்தமுமுதலியவிறகாய்
எல்லுடைச்சுடரெனப்புகரெஃகெலாமுருகித்
தொல்லைநன்னிலைதொடர்ந்துபேருணர்வன்னதொழிலாற்
சல்லியுண்டையிற்றிரண்டனபடைக்கலச்சாலை.

இ-ள். வில்லும் - விற்களும், வேலும் - வேல்களும், வெங்குந்தமும் - வெவ்விய எறியீட்டிகளும், முதலிய - முதலான ஆயுதங்களே, விறகாய் - விறகாக, எல்லுடை - ஒளியையுடைய, சுடர்என - சூரியனென்னும்படி, புகர்-காந்தியுள்ள, எஃகெலாம் - ஆயுதவகைகளெல்லாம், உருகி - இளகி, தொல்லை - பழைய, நன்னிலை - தமதுஇரும்புவடிவானவற்றை, தொடர்ந்து - கொண்டு, பேருணர்வு - ஒருபேரறிவை, அன்ன - ஒப்பான, தொழிலால் - யோகமுயற்சியினுலே, சல்லியுண்டையில்-இரும்புப்பாளங்களாக, திரண்டன - கட்டியாயின, படைக்கலச்சாலை-ஆயுதச்சாலைகளில், சிதாபாசநீங்கி யோகமுயற்சினுலே கூடஸ்தனுற்போல் ஆயுதவடிவுபோய் இரும்புக்கட்டிவடிவாயின என்க ஆயுதங்களோடுகூடின மரவடிவுகள் விறகாகஎன்க-எ-று.

செய்தொடர்க்கழல்வல்லியும்புரசையுஞ்சிந்தி
நொய்தினிட்டவன்றறிபறித்துடலெரிநுழைய
மொய்தடச்செவிநிறுத்திவான்முதுகினின்முறுக்கிக்
கையெடுத்தழைத்தோடினவோடைவெங்களிமா.

இ-ள். கழல் - கால்களிலே, தொடர்செய் - பூட்டுதல்செய்த, வல்லியும்-தளையாகியகயிறுகளும், புரசையும் - கழுத்திற்கயிறுகளும், சிந்தி - வெந்தழிந்து, நொய்தின் - விரைவிலே சிந்துதலாகி, இட்டவன் — கட்டியிருக்கிறவலிய, தறிபறித்து - தூணைப்பிடுங்கிக்கொண்டு, உடல் - உடம்பிலே, எரிநுழைய - நெருப்புப்பிடிக்கவே, மொய் - உரோமங்கள்மொய்த்த, தடச்செவி - பெரியகாதுகளை, நிறுத்தி - அசையாமற்கொண்டு, வால் - வாலை, முதுகினில் - முதுகின்மேலே, முறுக்கி - முறுக்கிநீட்டி, கையெடுத்து - கையைத்தூக்கிக்கொண்டு, அழைத்து - கூப்பிட்டுக்கத்தி, ஓடை - முகபடாமணிகிற, வெங்களிமா - வெவ்வியமதச்செருக்குள்ள யானைகள், ஓடின-ஓடலாயின —எ-று. (௩௬)

வெருளும்வெம்புகைப்படலையின்மேற்செலவெருவி
இருளும்வெங்கடல்விழுந்தனவிழுந்திலபறவை
மருளின்மீன்கணம்விழுங்கிடவுலந்தனமனத்தோர்
அருளில்வஞ்சரைத்தஞ்சமென்றடைந்தவரணைய.

இ-ள். வெருளும் - பயங்கொள்ளத்தக்க, வெம்புகைப்படலையின் - வெவ்விய புகைப்படர்ச்சியினாலே, மேற்செல - ஆகாயத்திலேபோக, வெருவி - பயந்து, இருளும் - இருண்டிருக்கிற, வெங்கடல் - வெப்பமானகடலிலேபோய், பறவை - பட்சிகள், விழுந்தன - விழலாயின, எழுந்தில - பின்பெழாதிருக்கின்றன, மருளில் - அப்பறவைகளைமயக்கங்கொள்ளாதிருக்கிற, மீன்கணம் - மீனினங்கள், விழுங்கிட - பற்றிமொய்த்துத்தின்ன, உலந்தன - இறந்துபோகலாயின, மனத்து - மனத்திலே, ஓர் அருளில் - ஒருவகையிரக்கமுமில்லாத, வஞ்சரை - கபடிகளை, தஞ்சமென்று - தமக்காதாரமாகக்கொண்டு, அடைந்தவர் - சேர்ந்தவர்களை, அனைய - ஒப்பாக உலந்தன, மருளின் - மயங்குதலையுடைய—எ-று. (௩எ)

நீரைவற்றிடப்பருகிமாநெடுநிலந்தடவித்
தாருவைச்சுட்டுமலைகளைத்தழற்செய்துதனிமா
மேருவைப்பற்றியெரிகின்றகாலவெங்கனல்போல்
ஊரைமுற்றுவித்திராவணன்மனைபுக்கதுயர்தீ.

இ-ள். நீரைவற்றிட - நீரைவற்றும்படி, பருகி - குடித்து, மாநெடுநிலம் - பெரிதாய்நீண்டுள்ள இடங்களெல்லாம், தடவி - உலாவி, தாருவை - மரங்களையெல்லாம், சுட்டு - வேவச்செய்து, மலைகளை - மலைகளையெல்லாம், தழற்செய்து - கொதிக்கப்பண்ணி, தனிமாமேருவை - ஒப்பில்லாத பெரியமேருமலையை, பற்றி - பிடித்து, எரிகின்ற - எரிகிற, காலவெங்கனல்போல் - வெவ்விய காலாக்கினியைப்போல், ஊரைமுற்றுவித்து - ஊர்முழுதும்வேவ எரித்து, இராவணன் - தசக்கிரீவனுடைய, மனை - வீட்டிலே, புக்கது - புகுந்தது, உயர்தீ - உயர்ந்துதாவுகிறநெருப்பு—எ-று.()

வானமாதருமற்றுளமகளிருமறுகிப்
போனபோனதிக்கறிகிலரனைவரும்போனார்
ஏனைநின்றவரெங்கணுமிரிந்தனரிலங்கைக்
கோனவானவர்பதிகொண்டநாளெனக்குலைந்தார்.

இ-ள். வானமாதரும் - ஆகாயத்துப்பெண்களும், மற்றுளமகளிரும் - இன்னமுள்ளபெண்களும், மறுகி - மயங்கி, போனபோன - போயினபோயின, திக்கறிகிலர் - திசைதெரியாதவர்களாய், அனைவரும் - எல்லாரும், போனார் - ஓடிப்போயினார்கள், ஏனை நின்றவர் - மற்றுமுள்ளவர்கள் எல்லாம், எங்கணும் - எவ்விடங்களிலும், இரிந்தனர் - ஓடினார்கள், இலங்கைக்கோன் - இலங்கேசனானராவணன், அவ்வானவர்பதி - அந்தத் தேவருலகை, கொண்ட நாளென - தன் வசமாகக்கொண்ட காலம்போல், குலைந்தார் - நிலை கெட்டார்கள்—எ-று. போனபோன ஒவ்வொருத்தியும் ஒவ்வொருதிசைகளிலேபோய்ப் புகைக்கம்மலாலே இன்னதிசைவந்தோமென் றறிந்திலரென்க. (௩௯)

நாவியுந்நறுங்கலவையுங்கற்பகநக்க
பூவுமாரமுமகிலுமென்றினையனபுகையத்
தேவுதேன்மழைசெறிபெருங்குலமெனத்திசையிற்
பாவைமார்நறுங்குழல்களும்பரிமளங்கமழ்ந்த.

இ-ள். நாவியும் - மான்மதமும், நறுங்கலவையும் - நல்லகூட்டுவர்க்கங்களும், கற்பகம் - கற்பகமரத்திலே, நக்க - விளங்கின, பூவும் - புஷ்பங்களும், ஆரமும் - சந்தனவகைகளும், அகிலும் - அகிற்சந்தனமும், என்றுஇனையன - என்றுசொல்லலா

ன இவைகளெல்லாம், புகைய - நெருப்புப்பிடித்துப்புகைகிறதினாலே, தேவு – தெய்வீகமான, தேன் – அத்தராகியவற்றைப்பெய்கிற, மழை – மேகமான, செறி – நெருங்கின, பெருங்குலமென – பெரிய கூட்டமென்று சொல்லும்படி, திசையிற்பாவைமார் – திக்குப்பாலகருடையமனைவிகள், நறுங் குழல்களும் – விசேஷவகையான கூந்தல்களெல்லாம், பரிமளம் – அவ்வகைப்புகைவாசமே, கமழ்ந்த – பரிமளிக்கலாயின, எனவேபுகை – திசைகளெல்லாம்போய் மண்டினவென்றாயிற்று—எ-று. நறுங்குழல் இயற்கைமணமுள்ளகூந்தல். (௬௦)

சூழும்வெஞ்சுடர்தொடர்ந்திடயாவருந்தொடரா
வாழிவெஞ்சினத்தாண்டொழிலிராவணன்மனையின்
ஊழிவெங்கனலுண்டிடவுலகமென்றுயர்ந்த
ஏழும்வெந்தனவெரிந்தனநெடுநிலையேழும்.

இ-ள். சூழும் – எங்குஞ் சூழ்ந்தெரிக்கிற, வெஞ்சுடர் – வெவ்விய நெருப்பு, தொடர்ந்திட – போய்த்தாவுதலாலே, யாவரும் – எவரும், தொடரா – கிட்டக்கூடாத, வாழி – மாறுபடாத, வெஞ்சினத்து – வெவ்வியகோபத்தையுடைய, ஆண்தொழில் – ஆண்மைத்தொழிலிற்சிறந்த, இராவணன் – இராவணனுடைய, மனையின் – வீட்டிலே, ஊழி – ஊழிகாலத்துண்டாகிற, வெங்கனல் – வெவ்வியநெருப்பு, உண்டிட – எரிப்பதுபோலெரிக்க உலகமென்று, உயர்ந்த – உயர்வுள்ள, ஏழும் – ஓரேழும், வெந்தன – வெந்தாற்போல, நெடு – நீண்ட, நிலையேழும் – ஏழடுக்குமெத்தையும், வெந்தன – எரிதலாயின—எ-று. (௬௧)

பொன்திருத்தியதாயதாலிராவணன்புரைதீர்
குன்றமொத்துயர்தடநெடுமாநிலைக்கோயில்
நின்றதூற்றெரிபருகிடநெரிவுறவுருகித்
தென்றிசைக்குமோர்மேருவுண்டாமெனத்தெரிந்த.

இ-ள். பொன் – பொன்னாலே, திருத்தியது – செய்திருப்பது, ஆயதால் – ஆனபடியினாலே, இராவணன் – இராவணனுடைய, புரைதீர் – குற்றமில்லாத, குன்றம் – மலையை, ஒத்து – ஒப்பாய், உயர் – உயர்ந்த, தடநெடுமா – விசாலமாய்நீண்டுபெரிதான, நிலை – ஏழடுக்குள்ள, கோயில் – வீடானது, நின்றது – நிற்பதன்மேல், உற்று – பொருந்தி, எரிபருகிட – நெருப்புப்பிடித்துக்கொள்ள, நெரிவுற – அந்தஅடுக்குகள்நெரிந்தழுந்த, உருகி – வெந்து இளகி, தென்றிசைக்கும் – தெற்குத்திக்கிலும், ஓர்மேருவுண்டாமென – ஓர் மேருமலையுண்டென்னும்படி, தெரிந்த – தோற்றலாயின—எ-று. (௬௨)

அனையகாலையினரக்கனுமரிவையர்குழுவும்
புனைமணிப்பொலிபுட்பகவிமானத்துப்போனார்
நினையுமாத்திரையாவருநீங்கினர்நினையும்
வினையிலாமையில்வெந்ததவ்விலங்கல்மேலிலங்கை.

இ-ள். அனையகாலையின் – அப்படிவேகிறபோது, அரக்கனும் – இராவணனும், அவனுடைய அரிவையர்குழுவும் – பெண்கள்கூட்டமும், புனைமணி – ரத்நங்களிழைத்ததுடனே, பொலி – விளங்குகின்ற, புட்பகவிமானத்து – புட்பகவிமானத்தின்மேலேறிக்கொண்டு, போனார்- தூரப்போய்விட்டார்கள், நினையுமாத்திரை – எண்ணுமளவில், யாவருநீங்கினர் – மற்றெல்லாரும்ஓடிப்போனார்கள், நினையும்வினையிலாமையின் – ஆலோசிக்கலாவதொன்றுமில்லாததினாலே, வெந்தது – வேவலாயிற்று, அவ்

விலங்கல்மேல் - அந்தமலைமேலுள்ள, இலங்கை - இலங்காபுரியானதுதானே அவிப்போருமில்லையாகவெந்தது—எ-று. (௪௩)

ஆழித்தேரவனரக்கரையழலெழநோக்கி
ஏழுக்கேழெனவடுக்கியவுலகங்களெரியும்
ஊழிக்காலம்வந்துற்றதோபிறிதுவேறுண்டோ
பாழித்தீச்சுடவந்ததென்னகரெனப்பகர்ந்தான்.

இ-ள். ஆழி - உருளையையுடைய, தேரவன் - தேருள்ளசூரியன்போல் மேலே புட்பகவிமானத்தினின்றும் இராவணனனவன், அரக்கரை - தன்கண்ணுக்குத் தோற்றின ராட்சதர்களை, அழலெழ - நெருப்புத்தோன்ற, நோக்கி - பார்த்து, ஏழுக்கு - மேலுலகங்களேழுக்கு நிகராக, ஏழென - இதுவுமோரேழென்றுசொல்ல, அடுக்கிய - அடுக்குள்ளதானஎன்வீடும், உலகங்கள் - அந்தவுலகங்களேழும், எரியும்- எரிந்துபோவதான, ஊழிக்காலம் - முடிவுகாலம், வந்துற்றதோ - வந்துகூடிற்றோ, பிறிதுவேறு - வேறேயாதேனும், உண்டோ - உண்டாயிற்றோ, பாழித்தீ-இப்படிப் பெருநெருப்பு, நகர் - நமதூரை, சுடவந்தது - சுடலாகியது, என் என-யாதுகாரணமென்று, பகர்ந்தான் - கேட்டான்—எ-று. (௪௪)

கரங்கள்கூப்பினர்தங்களைதிருவொடுங்காணார்
இரங்குகின்றவல்லரக்கரீதியம்பினரிறையோய்
தரங்கவேலையினெடியதன்வாலிட்டதழலால்
குரங்குசுட்டதீதென்றலுமிராவணன்கொதித்தான்.

இ-ள். கரங்கள் - கைகளை, கூப்பினர் - குவித்துக்கொண்டவர்களாகி, தங்களை - தமதுறவினரை, திருவொடும் - சம்பத்துடனேகூட, காணார் - ஒன்றும்போனவகைதெரியாமல், இரங்குகின்ற - அழுதுகொண்டுதிரிகிற, வல்லரக்கர் - வலிய ராட்சதர்கள், ஈது - இப்படி, இயம்பினர் - சொன்னார்கள், இறையோய் - ஓ அரசனே, தரங்கம் - அலைகளையுடைய, வேலையின் - கடலினும், நெடிய - நீண்ட, தன்வாலிட்ட - தனதுவாலிலேகொளுத்தின, தழலால் - நெருப்பினாலே, குரங்கு - குரங்கானது, சுட்டதுஈது - இப்படிச்சுடலாயிற்று, என்றலும்-என்றுசொன்னவுடனே, இராவணன் - தசக்கிரீவன், கொதித்தான் - கொதிப்புக்கொண்டான்—எ-று. நெடியவு நீண்டதுவான குரங்கெனவுமாம். (௪௫)

என்றுகொல்குரங்கன்னதிவ்வலியுளதிலங்கை
நின்றுவெந்துமாநீறெழுகின்றதுநெருப்புத்
தின்றுதேக்கிடுகின்றதுதேவர்கள்சிரிப்பார்
நன்றுநன்றுபோர்வலியெனவிராவணனக்கான்.

இ-ள். என்றுகொல் - எப்போதிலோ, குரங்கு அன்னது - ஒருகுரங்குபோல்வது, இவ்வலியுளது - இப்படிச் சாமர்த்தியமுள்ளதாக, என்றேனுங் கண்டதுண்டா, இலங்கை - இந்த இலங்காபுரியில், நின்று-நெருப்புநிலைகொண்டு, வெந்து-வேவுதலாகி, மாநீறு - பெரிதானசாம்பலாய், எழுகின்றது-பறக்கின்றது இப்படிஎன்றுகொல், நெருப்பு - அக்கினியும், தின்று - எரித்துச்சாப்பிட்டு, தேக்கிடுகின்றது, ஏப்பமிடுகிறது, தேவர்கள் - இதுகண்டாலோ தேவர்கள், சிரிப்பார் - நகைப்பார்கள், போர்வலி - அந்தக்குரங்கினதுமிக்கபலம், நன்றுநன்று-மிகவுநன்றாயிருந்தது, என-என்று, இராவணன் - தசக்கிரீவனனவன், நக்கான் - சிரித்தான்—எ-று. (௪௬)

வேறு.

உண்டநெருப்பைக்
கண்டனர்பற்றிக்
கொண்டணைகென்றான்
அண்டரைவென்றான்.

இ-ள். உண்ட - இப்படி எரித்த, நெருப்பை - அக்கினியை - கண்டனர் பற்றி - கண்டுபிடித்து, கொண்டு அணைகென்றான் - கொண்டுவாருங்களென்று சொன்னான், அண்டரைவென்றான் - தேவரைவென்ற ராவணன் —எ-று. (௪௭)

உற்றகலாமுன்
கற்றகுரங்கைப்
பற்றுமினென்றான்
முற்றுமுனிந்தான்.

இ-ள். உற்று - நீங்கள்போய், அகலாமுன் - அது ஓடிப்போமுன்னே, கற்ற- இவ்வளவுவலியுள்ள, குரங்கை - அந்தக் குரங்கையும், பற்றுமின் - பிடியுங்கள், என்றான் - என்றுசொன்னான், முற்றும் - மேன்மேலும், முனிந்தான் - கோபங்கொண்டவனாகி—எ-று. (௪௮)

சாரயனின்றார்
வீரர்விரைந்தார்
நேருதுமென்றார்
தேரினர்சென்றார்.

இ-ள். சார் அயல் - அவனைச்சார்ந்தபக்கத்திலே, நின்றார் - நின்றமெய்காப்பாளரான, வீரர் - வீரர்கள், விரைந்தார் - விரைவுகொண்டாராகி, நேருதும் - அப்படியேபிடித்து வருகிறோம், என்றார் - என்று, தேரினர் - தேர்களின்மேலேறிக்கொண்டு, சென்றார் - போயினார்கள்—எ-று. (௪௯)

எல்லையிகந்தார்
வில்லார்வெகுண்டார்
பல்லதிகாரத்
தொல்லர்தொடர்ந்தார்.

இ-ள். எல்லையிகந்தார் - அளவற்றபேர்கள், வில்லர் - வில்லாளிகளாய்,வெகுண்டார் - கோபங்கொண்டு, பல் அதிகாரம் - பலவித உத்தியோகஸ்தர்களான,தொல்லர் - பழையோர்களெல்லாம், தொடர்ந்தார் - அந்தத்தேர்வீரரைப் பின்பற்றிப்போனார்கள்—எ-று. (௫0)

வேறு.

நீர்கெழுவேலைநிமிர்ந்தார்
தார்கெழுதானைசமைந்தார்
போர்கெழுமாலைபுனைந்தார்
ஓரெழுவீரருயர்ந்தார்.

இ-ள். நீர்கெழு - ஜலரூபமான, வேலை - கடல்போல், நிமிர்ந்தார் - பொங்கினவர்களாய், தார்கெழு - தும்பைமாலையணிந்த, தானை - சேனைகளுடனே, சமைந்தார் - போர்க்கோலமாகி, போர்கெழு - போருக்குரிய, மாலைபுனைந்தார்-மாலையணி

ந்துகொண்டு, ஒரெழு வீரர் - ஒரு ஏழுவீரர்கள், உயர்ந்தார் — மேலே யெழுந்தார்கள் எ-று. (௫௧)

விண்ணினைவேலைவிளிம்பார்
மண்ணினையோடிவளைந்தார்
அண்ணலைநாடியணைந்தார்
கண்ணினின்வேறயல்கண்டார்.

இ-ள். விண்ணினை — ஆகாயத்தையும், வேலை — கடலானது, விளிம்பு — ஓரத்திலே, ஆர் - பொருந்துவதான, மண்ணினை - பூமியையும், ஓடி - விரைந்துவந்துசேனைவீரர்கள், வளைந்தார் - சூழ்ந்தவர்களாய், அண்ணலை - அனுமாரை, நாடி — தேடி, அணைந்தார் - வந்தவர்கள், கண்ணினின் - தங்கள்கண்களாலே, வேறயல் - வேறே ஒருபுறத்தில், கண்டார் - பார்த்தார்கள்—எ-று. (௫௨)

பற்றுதிர்பற்றுதிரென்பார்
எற்றுதிரெற்றுதிரென்பார்
முற்றினர்முற்றுமுனிந்தார்
கற்றுணர்மாருதிகண்டான்.

இ-ள். பற்றுதிர் - பிடியுங்கள், பற்றுதிர் - பிடியுங்கள், என்பார் - என்பார்கள்சிலர், எற்றுதிர் - அடியுங்கள், எற்றுதிர் - அடியுங்கள், என்பார் — என்பார்கள் சிலர், முற்றினர் - இப்படிச் சூழ்ந்தவர்களாய், முற்றும் - முழுதும், முனிந்தார்- கோபங்கொண்டவர்களை, கற்றுணர் - கற்றறிந்த, மாருதிகண்டான் — அனுமாரும் பார்த்தார்—எ-று. (௫௩)

ஏல்கொடுவஞ்சரெதிர்ந்தார்
கார்கொடுகைகொடுகார்போல்
வேல்கொடுகோலினர்வெந்தீ
வால்கொடுதானும்வளைந்தான்.

இ-ள். ஏல்கொடு - அப்படிச் சூழ்ந்த கொடுமையுள்ள, வஞ்சர் - வஞ்சகரான ராட்சதர்கள், எதிர்ந்தார் - அனுமாருக்குமுன்னேவந்தார்கள், கால்கொடு- அவர்கள் அனுமாரைக்காலாலும், கைகொடு - கையாலும், வேல்கொடு - வேலாலும், கார்போல், மேகம்போல், கோலினர் - சூழ்ந்தார்கள் அவர்களை, வெந்தீ — வெவ்விய நெருப்பு மூளுகிற, வால்கொடு — தமதுவாலாலே, தாமும் — தாமுமவரைப்போல், வளைந்தான் - சூழ்ந்தார்—எ-று. (௫௪)

பாதவமொன்றுபகுத்தான்
மாதிரம்வாலின்வளைத்தான்
மோதினன்மோதமுனிந்தார்
ஏதியுநாளுமிழந்தார்.

இ-ள். பாதவமொன்று — ஒருமரத்தை, பகுத்தான் — பிடிங்கிக்கொண்டு, மாதிரம் - அவர்கள்சூழ்ந்த திசையெல்லாம், வாலின் - தமதுவாலினலே, வளைத்தான்- வளைத்துக்கொண்டு, மோதினன் — அந்தமரத்தாலடித்தார் அப்படி, மோத - அடிக்கிறதினலே, முனிந்தார் - கோபங்கொண்டுவந்த அரக்கர்கள், ஏதியும் - தங்களாயுதங்களும், நாளும் - ஆயுளும், இழந்தார் - போனர்கள்—எ-று. (௫௫)

நூறிடமாருதிநொந்தார்
ஊறிடவூனிடுபுண்ணீர்
சேறிடவூரடுசெந்தீ
ஆறிடவோடினதாறய்.

இ-ள். மாருதிநூறிட - அனுமார் அப்படி அடிக்க, நொந்தார் - நொந்தவர்களாய், ஊறிட - காயங்களும் புண்களுமாக, ஊனிடு - அவர்களுடம்பிலிருந்தொழுகுகிற, புண்ணீர் - ரக்தஜலமான துபெருகி, சேறிட - மண்ணெல்லாஞ்சேறாக அதனாலே, ஊர் - அந்த ஊரை, அடு - சுடுகிற, செந்தீ - சிவந்தநெருப்பு, ஆறிட - தணிவதாக, ஆறய் - ஆறாகி, ஓடினது - ஓடலாயிற்று—எ-று. (ருசு)

தோற்றினர்துஞ்சினரல்லார்
ஏற்றிகல்வீரரெதிர்ந்தார்
காற்றின்மகன்கலைகற்றான்
கூற்றினுமும்மடிகொன்றான்.

இ-ள். தோற்றினர் - அனுமார் கண்முன்னே காணலானவர்களிலே, துஞ்சினர் - இறந்தவர்களை, அல்லார் - அல்லாத ராட்சதர்கள், ஏற்று - ஆண்சிங்கங்கள்போல், இகல் - பலமுள்ள, வீரர் - சிலவீரர்கள், எதிர்ந்தார் - முன்வந்தார்கள், காற்றின்மகன் - வாயுபுத்திரனான, கலைகற்றான் - நவவியாகரணபண்டிதர், கூற்றிலும்-யமனிலும், மும்மடி - மூன்றுபங்கதிகமாக, கொன்றான்-அவர்களை வதைசெய்தார்-எ-று. (ருஎ)

மஞ்சுறழ்மேனியர்வன்றாள்
மொய்ம்பினவீரர்முடிந்தார்
ஐம்பதினாயிரரல்லார்
பைம்புனல்வேலைபடிந்தார்.

இ-ள். மஞ்சுறழ் - மேகத்தையொத்த, மேனியர் - நிறமுள்ளவர்களாய், வன்றாள் - வலியனவானகால்களும், மொய்ம்பின் - தோள்களுமுள்ள, ஐம்பதினாயிரம்வீரர் - இவ்வளவுவீரர்களும், முடிந்தார் - இறந்தார்கள், அல்லார் - சாவாதவர்களெல்லாம், பைம்புனல் - பசியநிறமுள்ள நீர்மயமான, வேலை - கடலிலே, படிந்தார் - முழுகிப்போனார்கள்—எ-று. (ருஅ)

தோய்ச்சினன்வாலதிதோயாக்
காய்ச்சினவேலைகலந்தார்
போய்ச்சிலர்பொன்றினர்போனார்
ஏச்செனமைந்தரெதிர்ந்தார்.

இ-ள். தோய்ச்சினன்வாலதி - அப்போதனுமார் தமதுவாலைக்கடலிலேநனைத்தார், தோயா - அப்படிநனைத்ததினாலே, காய்ச்சின - கொதிப்புண்டான, வேலை-கடலிலே, கலந்தார்போய் - முன்னேபோய் விழுந்தவர்களில், சிலர் பொன்றினர்-சிலரிறந்தார்கள், போனார் - கூடப்போனவர்களான, மைந்தர் - ஏழுவீரர்களும், எச்சென - இது நமக்கு மிகவும் இகழ்வென்று, எதிர்ந்தார் - அனுமாருக்குமுன்னேவந்தார்கள்—எ-று. (ருகூ)

சுற்றினதேரினர்தோலா
விற்றொழில்வீரம்விளைந்தார்
எற்றினன்மாருதியெற்ற
உற்றெழுவோருமுலந்தார்.

இ-ள். சுற்றின — அனுமாரைச்சூழ்ந்த, தேரினர் — தேர்களுள்ளவர்களாய், தோலா — தோற்பாகாத, விற்றொழில் - வில்லினதுவித்தையாகிய, வீரம் — சாமர்த்தியங்களை, விளைத்தார் — செய்தார்கள், மாருதி எற்றினன் - அவர்களையும் அனுமாரடித்தார், எற்ற உற்று - அடிக்க அடிபட்டு, எழுவோரும் — அந்த ஏழுபேர்களும், உலந்தார் — இறந்தார்கள்—எ-று. (௬0)

விட்டுயர்விஞ்சையர்வெந்தீ
வட்டமுலைத்திருவைகும்
புட்டிரள்சோலைபுறத்தும்
சுட்டிலதென்பதுசொன்னார்.

இ-ள். விட்டு — ஆகாயத்திலே, உயர் — உயர்ந்துபோகிற, விஞ்சையர்-வித்தியாதரர்கள் அனுமாரைப்பார்த்து, வெந்தீ - உமதுவாலினெருப்பானது,வட்டமுலை-வட்டமான தனங்களுள்ள, திரு - லட்சுமியானபிராட்டி, வைகும் — இருப்பதான, புள்திரள் — பட்சிகள்கூடுகிற, சோலை — சோலையையல்லது, புறத்தும்-அதன்பக்கங்களிலுங்கூட, சுட்டிலது — சுடாமல்விட்டது, என்பது — என்னுமதிசயத்தை, சொன்னார் - சொல்லினார்கள்—எ-று. விண்டு விட்டு எனவலித்தல். (௬௧)

வந்தவர்சொல்லமகிழ்ந்தான்
வெந்திறல்வீரன்வியந்தான்
உய்ந்தனெனென்னவுயர்ந்தான்
பைந்தொடிதாள்கள்பணிந்தான்.

இ-ள். வந்தவர் - ஆகாயத்திலேவந்த விஞ்சையர்கள், சொல்ல - சொல்லக்கேட்டு, மகிழ்ந்தான் - சந்தோஷித்தாராய், வெந்திறல்-வெவ்வியசாமர்த்தியமுள்ள, வீரன் - மகாவீரனான அனுமார், வியந்தான் — அதிசயித்து, உய்ந்தனன் - நன்றாயினேன், என்ன உயர்ந்தான் — என்றுமேலேகிளர்ந்துநோக்கி, பைந்தொடி-பிராட்டியினுடைய, தாள்கள் — பாதங்களை, பணிந்தான் - வணங்கினார்—எ-று. (௬௨)

பார்த்தனள்சானகிபாரா
வேர்த்தெரிமேனிகுளிர்ந்தாள்
வார்த்தையென்வந்தனையென்னாப்
போர்த்தொழில்மாருதிபோனான்.

இ-ள். பார்த்தனள்சானகி - பிராட்டியுங்கண்டு, பாரா - அனுமாரைக்கண்டவுடனே, வேர்த்து — முன்னேவேர்வைகொண்டு, எரி-எரிகின்றகொதிக்கிற,மேனி-சரீரமெல்லாம், குளிர்ந்தாள் - குளிர்ச்சியையடைந்தாள், வார்த்தையென் — தாயே உன் சொற்படியேபோய்ச் சொல்லவேண்டின எனது, வந்தனை என்னா - கும்பிடுதலைக் கண்டுகொளென்று, போர்த்தொழில் — சண்டைசெய்கையி லுத்தியோகித்திருந்த, மாருதி - அனுமார், போனான் — போயினார்—எ-று. (௬௩)

தெள்ளியமாருதிசென்றான்
கள்ளவரக்கர்கள்கண்டால்
எள்ளுவர்பற்றுவரென்னா
ஒள்ளெரியோனுமொளித்தான்.

இ-ள். தெள்ளிய – அப்படித்தெளிவுகொண்ட, மாருதி – அனுமாரானவர், சென்றான் – போனார் ஆகலாலே, கள்ளம் – வஞ்சனைசெய்கிற, அரக்கர்கள் - ராட்சதர்கள், கண்டால் – பார்த்தால், எள்ளுவர் – நம்மையிகழ்ந்து, பற்றுவரென்று-பிடித்துக்கொள்ளுவார்களென்று, ஒள் – ஒளிபொருந்தின, எரியோனும் – அக்கினிதேவனும், ஒளித்தான் – மறைந்துபோனான் —எ-று. (௬௪)

இலங்கைபெரியூட்டுபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ௧௪ - க்கு திருவிருத்தம் - ௧௨௰.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

பதினைந்தாவது,

திருவடிதொழுதபடலம்.

நீங்குவென்விரைவினென்னுநினைவினன்மருங்குநின்ற
தாங்கொருகுடுமிக்குன்றையருக்கனினணைந்தவையன்
வீங்கினனுலகையெல்லாம்விழுங்கினனென்னவீரன்
பூங்கழறொழுதுவாழ்த்திவிசும்பிடைக்கடிதுபோனான்.

இ-ள். நீங்குவென்விரைவின் – சீக்கிரத்திலே இவ்வூரைவிட்டுப் போவேன் போகவேண்டும், என்னு நினைவினன் – என்கிறஎண்ணமுடையராய், மருங்குநின்றது-பக்கத்தேநிற்பதான, ஆங்குஒரு – அங்கேஒரு, குடுமிக்குன்றை – சிகரமுள்ள மலையை, அருக்கனின் – சூரியன்போல், அணைந்தஐயன் – போய்க்குதித்தஅனுமார், வீங்கினன் – தமதுபெரியவடிவைக்கொண்டவராய், உலகையெல்லாம் – அந்தஊர் முழுதும், விழுங்கினனென்ன – மறைத்தாரென்னும்படிபருத்து, வீரன் – ஸ்ரீராமனுடைய, பூங்கழல் – அழகியதிருவடிகளை, தொழுது – கும்பிட்டு, வாழ்த்தி – துதித்து, விசும்பிடை – ஆகாயமார்க்கத்திலே, கடிதுபோனான் – விரைவிலே சென்றார் எ-று. (௧)

மைந்நாகமென்னநின்றகுன்றையுமரபினெய்திக்
கைந்நாகமனையோனுற்றதுணர்த்தினன்கணத்தின்காலைப்
பைந்நாகநிற்கும்வீரர்தன்னெடுவரவுபார்க்கும்
கொய்ந்நாகநறுந்தேன்சிந்துங்குன்றிடைக்குதியுங்கொண்டான்.

இ-ள். மைந்நாகமென்னநின்ற – இப்பெயர்கொண்டதாய் வழியிலேநிற்பதான, குன்றையும் – மலையையும், மரபின் – தாம்அம்மலைக்குமுன் சொன்னபடியே அதனிடத்தில், எய்தி – வந்து, கை – துதிக்கையையுடைய, நாகம்அனையோன் – யானையேநேரான அனுமார், உற்றது – தாம்போய்ச் சீதாபிராட்டியைக்கண்டுவந்ததை, உணர்த்தினன் – சொல்லி ஆனபின்பு, கணத்தின்காலை – ஒருக்ஷணப்பொழுதிலே, நிற்கும்பைந்நாகம் – படமெடுத்துக்கொண்டு நிற்கும்பாம்புகள்போல், வீரர் – அங்கதன் முதலானோர்கள், தன்நெடு – தாம்நீளவுருவாக, வரவு – வருகிறதை, பார்க்கும்–பார்த்துக்கொண்டேநிற்பதான, கொய்-மலர்கள்பறிக்கத்தக்க, நாகம் – புன்னைமரங்

கள், நறுந்தேன் – நல்லதேனை, சிந்தும் – வழியவிடுகிற, குன்றிடை – மயேந்திரமலைமேலே, குதியுங்கொண்டான் – குதித்தார், உம் – அசை—எ-று. (௨)

போய்வருங்கருமமுற்றிற்றென்பதோர்பொம்மல்பொங்க
வாய்வெரீஇநின்றவென்றிவானரவீரர்மன்னோ
பாய்வருநீளத்தாங்கணிருந்தனபறவைப்பார்ப்புத்
தாய்வரக்கண்டதன்னவுவகையிற்றளிர்த்தாரம்மா.

இ-ள். போய்வரும் – அனுமார்போய்வருவதான, கருமம் – காரியம், முற்றிற்று – முடிவுபெற்றது, என்பது – என்பதான, ஓர்பொம்மல் – ஒப்பில்லாதமகிழ்வு, பொங்க – அதிகமாக, வாய்வெரீஇ – வாய்குழறி, நின்ற – நிற்றலான, வென்றி – ஜயம்பெறவல்ல, வானரவீரர் – வானரத்தலைவர்கள், பாயவரு – தாங்கள் பரவியுலாவுவதான, நீளத்து – கூட்டிலே, ஆங்கண்பாய்வருநீளத்து – அங்கேபரவியுலாவுவதான கூட்டிலே, இருந்தன – இருந்த, பறவைப்பார்ப்பு – பட்சிக்குஞ்சுகள், தாய் – தாய்ப்பட்சி, வரக்கண்டது – இரைமேய்ந்துவரக்கண்டதை, அன்ன – ஒப்பான, உவகையில் – மகிழ்விலே, தளிர்த்தார் – அதிகரானார்கள்—எ-று. (௩)

அழுதனர்சிலவர்முன்னின்றார்த்தனர்சிலவரண்மித்
தொழுதனர்சிலவராடித்துள்ளினர்சிலவரள்ளி
முழுதுறவிழுங்குவார்போன்மொய்த்தனர்சிலவர்சுற்றும்
தழுவினர்சிலவர்கொண்டுசுமந்தனர்சில்வர்தாங்கி.

இ-ள். அழுதனர்சிலவர் – சிலவீரர்களழுதார்கள், முன்னின்று – அனுமார் முன்னேநின்று, ஆர்த்தனர்சிலவர் – சிலவீரர்கள்கெர்ச்சித்தார்கள், அண்மி – கிட்டவந்து, தொழுதனர்சிலவர் – சிலவீரர்கள்வணங்கினார்கள், ஆடி – கூத்தாடி, துள்ளினர்சிலவர் – சிலவீரர்கள்துள்ளினார்கள், அள்ளி – தங்கள்கையாலெடுத்து, முழுதுஉற – அனுமாரைமுழுதும்சேர, விழுங்குவார்போல் – பொசிப்பவர்களைப்போல், மொய்த்தனர்சிலவர் – சிலவீரர்கள்மொய்த்துச்சூழ்ந்துகொண்டார்கள், சுற்றும் – சுற்றிலும்வந்து, தழுவினர்சிலவர் – ஆலிங்கனம்பண்ணினார்கள்சிலவீரர்கள், சிலவர்தாங்கி – சிலவீரர்களெடுத்து, சுமந்தனர் – சுமந்துகொண்டுவந்தார்கள்—எ-று. கொண்டு – கூட்டிக்கொண்டுவந்துதழுவினர். (௪)

தேனொடுகிழங்குங்காயுநறியனவரிதிற்றேடி
மேன்முறைவைத்தேமண்ணனுகர்ந்தனைமெலிவுதீர்தி
மானவாண்முகமேநங்கட்குரைத்ததுமாற்றமென்று
தானுயர்சாகமெல்லாமுறைமுறைசிலவர்தந்தார்.

இ-ள். தேனொடு – தேனுடனே, கிழங்கும் – கிழங்குகளும், காயும் – காய்கனிகளும், நறியன – இன்னம் நல்லவுணவுகளை, அரிதில் – வருத்தப்பட்டு, தேடி – சம்பாதித்துவந்து, மேல் – முன்னேதானே, முறை – உமக்குத்தகுதியாக, வைத்தேம்-வைத்திருக்கிறோம், அண்ணல் – ஓபெருமையிற்சிறந்தவரே, நுகர்ந்தனை – சாப்பிட்டீராகி, மெலிவுதீர்தி – உமதிளைப்புத்தீரும், மானம் – பெருமையுள்ள, வாள் – ஒளிகொண்ட, முகமே – உமதுமுகந்தானே, நங்கட்கு – எங்களுக்கு, உரைத்தது – சொல்லியது, மாற்றம் – நீர் எங்களுக்குச்சொல்வதை, என்று-என்றுகொண்டாடி, தான்உயர் – தானேதானே உயர்வுகொண்ட, சாகம் – தேக்கிலைகளிலே, எல்லாம் – முன்சொன்னவைகளையெல்லாம், முறைமுறை – வரிசைவரிசையாக, சிலவர் – சிலவான

ரங்கள், தந்தார் — கொண்டுவந்து வைத்தார்கள்—எ-று. சாகம் - இலக்காகலால் முதலாகுபெயரென்க. (ரு)

தாள்களின்மார்பிற்றோளிற்றலைகளிற்றடக்கைதம்மின்
வாள்களின்வேலிற்கோலின்மழையினின்வகுத்தபுண்கள்
நாள்கண்மேலுலகிற்சென்றவெண்ணனநம்பிக்கண்ண
ஊழ்கொளநோக்கிநோக்கியுயிருகவுளைந்துயிர்த்தார்.

இ-ள். தாள்களில் — கால்களிலும், மார்பில் — மார்பிலும், தோளில் — தோள்களிலும், தலைகளில் — தலையினிடங்களிலும், தடக்கைதம்மில் — நீண்டகைகளிலும், வாள்களில் - கத்திகளாலும், வேலில் - வேல்களாலும், கோலில் - அம்புகளாலும், மழையினில் - மழைத்தாரைகள்பட்டாற்போல், வகுத்த — பட்டிருக்கிற, புண்கள்- காயங்களானவை, மேலுலகில் - ஆகாயத்திலேதோன்றுகிற, நாள்கள் - நக்ஷத்திரங்களுக்கும், சென்ற — அதிகமான, எண்ணன - கணக்குள்ளவைகளாக, நம்பிகண்ண — வானரசிரேஷ்டருடைய உடம்பிலுள்ளவைகளை, ஊழ்கொள - ஒவ்வொன்றாக, நோக்கிநோக்கி — பார்த்துப்பார்த்து, உயிர் — தங்களுயிர், உக - போவனவாக, உளைந்து - வருந்தி, உயிர்த்தார் - நெடுமூச்சுவிட்டார்கள்—எ-று. (சு)

வாலிகாதலனைமுந்தைவணங்கினனெண்கின்வேந்தைக்
காலுறப்பணிந்துபின்னைக்கடன்முறைகடவோர்க்கெல்லாம்
மேலுறவியற்றியாங்கணிருந்திவணிருந்தோர்க்கெல்லாம்
ஞாலநாயகன்றன்றேவிசொல்லினணன்மையென்றான்.

இ-ள். வாலிகாதலனை - அங்கதனை, முந்தி - முன்னே, வணங்கினன்-தொழுதுகொண்டு, எண்கின்வேந்தை — சாம்பனை, காலுற-அவர்காலிலேவிழுந்து, பணிந்து - சேவித்துக்கொண்டு, பின்னை — பின்பு, கடன்முறை — செய்யும்உபசாரப்படி, கடவோர்க்கெல்லாம் — செய்யத்தக்கவர்களுக்கெல்லாம், மேலுற-அவரவர்களும்கொண்டாடிக்கொள்ள, இயற்றி - செய்து உபசரித்து, அங்கண் - அவ்விடத்திலே, இருந்து — தாமொருபுறத்திலிருந்து, இவண் - இங்கே, இருந்தோர்க்கெல்லாம் — இருந்தவுங்களுக்கெல்லாம், ஞாலநாயகன் — ஜகநாதனான ஸ்ரீராமனுக்கு, தன்தேவி - உரிய பத்தினியார், நன்மைசொல்லினள் — மங்களஞ்சொன்னார், என்றான் — என்றுசொன்னானுமார்—எ-று. (எ)

என்றலுங்கரங்கள்கூப்பியெழுந்தனரிறைஞ்சித்தாழா
நின்றனருவகைபொங்கவிம்மலானிமிர்ந்தநெஞ்சர்
சென்றதுமுதலாவந்ததிறுதியாச்செப்பற்பாலை
வன்றிரலுரவோயென்னச்சொல்லினன்மருத்தின்மைந்தன்.

இ-ள். என்றலும் - என்றுசொன்னவுடனே, கரங்கள்கூப்பி — கைகள்குவித்து, எழுந்தனர் - எழுந்து, இறைஞ்சி - குனிந்து, தாழாநின்றனர் - வணங்குகின்றவானரவீரர்கள், உவகைபொங்க — சந்தோஷம்அதிகமாக, விம்மலால் - பெருகுதலினாலே, நிமிர்ந்தநெஞ்சர் - நிறைவுகொண்டமனமுள்ளவர்கள், சென்றதுமுதலா-நீர் போனதுமுதலாக, வந்தது - திரும்பிவந்தது, இறுதியா — முடிவாக, செப்பற்பாலை- நீர்சொல்லவேண்டும், வன்திறல் - வலியசாமர்த்தியமுள்ள, உரவோய் - திடசித்தரே, என்ன — என்றுகேட்க, சொல்லினன் — சொன்னார், மருத்தின்மைந்தன்-வாயுபுத்திரனான அனுமார்—எ-று. (அ)

ஆண்டகைதேவியுள்ளத்தருந்தவமமையச்சொல்லிப்
பூண்டபேரடையாளங்கைக்கொண்டதும்புகன்றுபோரில்
நீண்டவாளரக்கரோடுநிகழ்ந்ததுநெருப்புச்சிந்தி
மீண்டதும்விளம்பான்றன்றன்வென்றியையுரைப்பவெள்கி.

இ-ள். ஆண்தகை — புருஷசிரேஷ்டரான ஸ்ரீராமனுடைய, தேவி — மனைவியானபிராட்டியின், உள்ளத்து — மனத்திலுள்ள, அருந்தவம் — அரிதான தவமுழுதும், அமைய — தெரிய, சொல்லி — சொன்னாராகி, பூண்ட — பிராட்டி அணிந்திருந்த, பேர் அடையாளம் — பெரிய அடையாளத்தை, கைக்கொண்டதும் — தாம் கையிலே பெற்றுவந்ததையும், புகன்று — சொல்லி, போரில் — சண்டையிலே, நீண்ட — அதிகமான, வாள் — கத்திகள்கொண்ட, அரக்கரோடு — ராட்சதர்களுடனே, நிகழ்ந்ததும் — தாம்சண்டைசெய்ததும், நெருப்புச்சிந்தி — அவ்வூரிலேநெருப்புவைத்துத்தாம், மீண்டதும் — திரும்பினதும், உரையான் — சொல்லாதொழிந்தார், தான்தன் — தாமேதமது, வென்றியை — ஜயத்தை, உரைப்ப — சொல்ல, வெள்கி — நாணி உரையார்-எ-று.

பொருதமைபுண்ணேசொல்லவென்றமைபோந்ததன்மை
உரைசெயவூர்தீயிட்டதோங்கிரும்புகையேயோதக்
கருதலர்பெருமைதேவிமீண்டிலாச்செயலேகாட்டத்
தெரிதரவுணர்ந்தேம்பின்னரென்னினிச்செய்துமென்றார்.

இ-ள். பொருதமை — நீர் அங்கேசண்டைபண்ணினதை, புண்ணே — உம்முடம்பிற்காயங்களே, சொல்ல — தெரியச்சொல்லுதலாலும், வென்றவை — நீர்வென்றீரென்பதை, போந்ததன்மை — மீண்டுவந்ததே, உரைசெய் — எமக்குச் சொல்லுதலாலும், ஊர் — அந்த ஊரிலேநீர், தீயிட்டது — நெருப்பைவைத்துவந்தது, ஓங்கு — உயர்ந்தெழுந்த, இரும்புகையே — புகைக்கம்மலே, ஓத — சொல்லுதலாலும், கருதலர்- அந்தப்பகைவரது, பெருமை — அதிகமானதை, தேவி — சீதாபிராட்டி, மீண்டிலா- திரும்பாதிருக்கிற, செயலே — செய்கையே, காட்ட — தெரியச்செய்தலாலும், தெரிதர — நீர்போய்வந்ததெல்லாம் எங்களுக்குத்தெரியும்படி, உணர்ந்தேம் — தெரிந்துகொண்டோம், பின்னர் — இனிமேல், என் இனி — யாதுகாரியம் இங்கிருந்து, செய்தும் — செய்யக்கடவோம், என்றார் — என்றுயூகித்தார்கள்—எ-று. (௪௦)

யாவையுமினிவேறெண்ணல்வேண்டுவதிறையுமில்லைச்
சேவகன்றேவிதன்னைக்கண்டமைவிரைவிற்செப்பி
ஆவதவ்வண்ணலுள்ளத்தருந்துயராற்றலேயாம்
போவதுபுலமையென்னுப்பொருக்கெனவெழுந்துபோனார்.

இ-ள். இனியாவையும் — இனியெல்லாம், வேறு — வெவ்வேறான யோசனைகள், எண்ணல்வேண்டுவது — ஆலோசிக்கவேண்டுவது, இறையுமில்லை — கொஞ்சமேனும் இல்லை, சேவகன் — ஸ்ரீராமனுடைய, தேவிதன்னை — மனைவியானபிராட்டியை, கண்டமை — கண்டுவந்ததை, விரைவில் — சீக்கிரத்திலேபோய், செப்பி — சொல்லி, ஆவது — நாம்செய்யவேண்டுவது, அவ்வண்ணல் — அந்த ஸ்ரீராமனுடைய, உள்ளத்து- மனத்திலுள்ள, அருந்துயர் — அரிதான துக்கத்தை, ஆற்றலே — தீரச்செய்தலே, ஆம் நாம்செய்யவேண்டுவது, போவது — இனிப்போகிறதே, புலமையென்னு — அறிவுடைமையென்று, பொருக்கென — திடீரென்றுவிரைவிலே, எழுந்துபோனார் — அவிடம்விட்டுப்பெயர்ந்துபோயினார்கள், யாவையும் — இனிச்செய்யவேண்டுமவைகளெல்லாம் எண்ணல்வேண்டுவதிறையுமில்லையெனக்கூட்டுக—எ-று. (௪௧)

போயினர்களிப்பினோடும்புங்கவன்சிலையினின்றும்
ஏயினபகழியன்னவெழுந்துவிண்படர்ந்துதாவிக்
காய்கதிர்க்கடவுள்வானத்துச்சிசென்றிருக்குங்காலத்
தாயனவீரரும்போய்மதுவனமதிலிருத்தார்.

இ-ள். களிப்பினோடும் – சந்தோஷத்துடனே, போயினர் – போனார்கள், புங்கவன் – ஸ்ரீராமனுடைய, சிலையினின்றும் – வில்லிலிருந்து, ஏயின – தொடுத்துவிட்ட, பகழி அன்ன – அம்புபோல், எழுந்து – மேலேகிளர்ந்து, விண்படர்ந்து – ஆகாயமார்க்கமாகச்சென்று, தாவி – பாய்ந்து, காய் – சுடுகிற, கதிர்க்கடவுள் – சூரியபகவான், வானத்து - ஆகாயத்தின், உச்சிசென்று – உச்சியிலேவந்து, இறுக்குங்காலத்து - சேரும்போது, ஆயன் - அப்படிப்பட்ட, வீரரும் - மகாவீரர்களெல்லாம், போய் – விரைவிலேபோய், மதுவனமதில் – மதுவனத்திலே, இறுத்தார் – போய்ச்சேர்ந்தார்கள், ஆயனவீரர் – ஆகாசமார்க்கமாகப் போகத்தக்கவீரர்கள் என்க—எ-று. (௧௨)

ஏதுநாளிறந்தசாலவென்பதோர்வருத்தநெஞ்சத்
தாதலாலுணர்வுதீர்ந்துவருந்தினமளியமெம்மைச்
சாதறீர்த்தளித்தவீரதந்தருளுணவுமென்னப்
போதுநாம்வாலிசேய்பாலென்றுடனெழுந்துபோனார்.

இ-ள். ஏது – இனி எப்படி, நாள் இறந்தசால – கெடுவுள்ளகாலம் மிகவுங் கழிந்துபோயின, என்பது - என்பதான, ஓர் – ஒரு, வருத்தம் – துன்பம், நெஞ்சத்து - மனத்திலே, ஆதலான் – எங்களுக்கு உண்டானதினாலே, உணர்வுதீர்ந்து – புத்திமயங்கி, வருந்தினம் – வருத்தப்பட்டோம், அளியம் – உம்முடையதயவுக்குப் பாத்திரரானநாங்கள் ஆகலால், எம்மை – எங்களையெல்லாம், சாதல் – சீதையைக்காணாமையாலேநாமெல்லாமறிந்துபோகலாமென்பதை, தீர்த்து – நீர்போய்க்கண்டு அவ்விறந்துபோவதைநீக்கி, அளித்த – ரட்சித்தருளின, வீர - மகாவீரனான அனுமாரே, உணவும் – எங்களுக்குவேண்டினபொசிப்பையும், தந்தருள் - நீரேகொடுத்தருளவேணும், என்ன - என்றுவானரவீரர்கள்கேட்க அதற்கு, நாம்போதும் – நாம்போய்க்கேட்போம், வாலிசேய்பால் - வாலிபுத்திரனிடத்தே, என்றுடன் – என்றுயோசித்துடனே, எழுந்துபோனார் - எழுந்திருந்துபோயினார்கள், உணர்வுதீர்ந்தென்றால் – பொசிப்பில்லாமலென்க—எ-று. (௧௩)

அங்கதன்றன்னையண்மியனைவருமிருகைகூப்பிக்
கொங்குதங்கலங்கன்மார்பநின்னுடைக்குரக்குச்சேனை
வெங்கதமொழிந்துசாலவருந்தினவேடையோடி
இங்கிதற்களித்தல்வேண்டுமிறாலுமிழ்பிரசமென்றான்.

இ-ள். அங்கதன் றன்னை – வாலிகுமாரனை, அண்மி – அடுத்து, அனைவரும் - எல்லாரும், இருகைகூப்பி – தம் இரண்டுகைகளுங்குவித்து, கொங்குதங்கு – மணந்தங்கின, அலங்கல் – மாலையணிந்த, மார்ப – மார்பையுடையவனே, நின்னுடை - உன்னுடைய, குரக்குச்சேனை – வானரச்சேனைகள், வெங்கதம் – தங்கள் வெவ்விய ஆணவச்செய்கைகளெல்லாம், ஒழிந்து – தீர்ந்து, சால வருந்தின – மிகவும் வருத்தத்தையடைதலாயின, வேடையோடி - சூடுமிகுந்துவருந்தின அதனாலே, இங்கிதற்கு - இங்கேவந்துசேர்ந்த இந்தவானரங்களுக்கு, இறால் உமிழ் – தேன்கூட்டிலிருந்து தானே ஒழுகிப்போகிற, பிரசம் - மதுவை, அளித்தல்வேண்டும் – நீர் உண்ணும்படிஉத்

தரவுசெய்தருளவேணும், என்ருன் — என் று அனுமார்சொன்ஞர்—எ-று. உண்பாரில்லாமையாலே ஒழுகிக்கொண்டிருக்கிறது மதுவனம் என்க. (௧௪)

நன்றெனவவனுநேர்ந்தானரலையுநடுங்கவார்த்துச்
சென்றுறுபிரசந்தூங்குஞ்செழுவனமதனினூடே
ஒன்றின்முன்றொன்றுபாயுமொடிக்குமென்பிரசமெல்லாம்
தின்றுதின்றுவகைகூருந்தேனுகரளியின்மொய்த்தே.

இ-ள். நன்றென — இது நல்லகாரியந்தானென்று, அவனும் — அனுமார்போலவே அங்கதனும், நேர்ந்தான் — உடன்பாடாயினுன், நரலையும் — அப்போதுகடலும், நடுங்க — கலங்கும்படி, ஆர்த்து — வானரங்கள்கர்ச்சித்து, சென்று உறு—அந்தமதுவனத்துக்குப்போய் அங்கே அதிகமான, பிரசம் — தேனுகியமது, தூங்கும் — தங்கிக்கிடக்கிற, செழுவனமதனினூடே — செழித்த அந்த மதுவனத்துக்குள்ளே, ஒன்றின்முன் — ஒருவானரத்துக்குமுன்னே, ஒன்றுபாயும் — மற்றொரு வானரந்தாவும், மென்பிரசமெல்லாம் — மெல்லிதானமதுவின் கூடுகளெல்லாம், ஒடிக்கும்-கொம்புகளோடொடிக்கும், தின்றுதின்று — அம்மதுவைப்பருகிப்பருகி, உவகைகூறும் — சந்தோஷமிகுதிகொள்ளும், தேன் — தேனை, நுகர் — பருகுகிற, அளியின் — வண்டுகள்போல், மொய்த்து — நெருங்கின—எ-று. (௧௫)

ஒருவர்வாய்க்கொள்ளுந்தேனையொருவருண்டெளிதிற்போவார்
ஒருவர்கைக்கொள்ளுந்தேனையொருவர்கொண்டோடிப்போவார்
ஒருவரோடொருவரொன்றத்தழுவுவர்விழுவரோடி
ஒருவர்மேலொருவரேறியோகையென்றுவகைகூர்வார்.

இ-ள். ஒருவர் — ஒருவானரம், வாய்க்கொள்ளும் — வாயிலேகொண்டிருக்கிற, தேனை — மதுவை, ஒருவர் — மற்றொருவானரம், கொண்டு — பறித்துக்கொண்டு, ஓடிப்போவர் — ஓடிப்போம், ஒருவரோடொருவர் — ஒருவானரத்துடனேமற்றொருவானரம், ஒன்ற — சந்தோஷ ஒருமையினலே, தழுவுவர் — கட்டிக்கொள்ளும், விழுவர்-கீழேவிழுந்துபுரளும், ஓடி — ஓட்டங்கொண்டு, ஒருவர்மேல் — ஒருவானரத்தின்மேலே, ஒருவர் — மற்றொருவானரம், ஏறி — ஏறிக்கொண்டு, ஓகையென்று — இப்படியேறுதலே சந்தோஷமென்று, உவகைகூர்வார் — களிப்பிலே அதிகமாகும்—எ-று. ()

இன்னனநிகழுங்காலையெரிவிழித்தெழுந்துசீறி
அந்நெடுஞ்சோலைகாக்கும்வானரரவரைநோக்கி
மன்னெடுங்கதிரோன்மைந்தனுணையைமறுத்துநீவிர்
என்னினைந்தென்செய்தீர்மன்னுமுயிர்க்கிறுதியென்ன.

இ-ள். இன்னன — இவ்வகைகள், நிகழுங்காலை — நடக்கும்போது, எரிவிழித்து — நெருப்புப்போல் கண்களைத்திறந்து, எழுந்துசீறி — மேலெழுந்து கோபங்கொண்டு, அந்நெடுஞ்சோலை — அந்தநெடிதான மதுவனத்தை, காக்கும்வானரர் — காக்கின்றவானரவீரர்கள், அவரைநோக்கி — அவ்வானரங்களை யெல்லாங்கண்டு, மன் நெடும் — நிலையான ஆதிக்கியத்திலேநெடிதான, கதிரோன்மைந்தன் — சூரியகுமாரனான சுக்கிரீவனுடைய, ஆணையைமறுத்து — ஆக்ஞையைக்கடந்து, நீவிர் — நீங்களெல்லாம், என் — யாதுபயனை, நினைந்து — எண்ணி, என்செய்தீர் — என்னகாரியஞ்செய்யலானீர்கள், மன் — மிகவும், நும் உயிர்க்கு — உங்களுயிர்களுக்கு, இறுதி — முடிவேயாம், என்ன — என் றுவனங்காக்கும் வானரங்கள்சொல்லி—எ-று. (௧௭)

முனியுமாலெம்மையெங்கோனென்றவர்மொழிந்துபோந்து
கனியுமாமதுவனத்தைக்கட்டழித்திட்டதின்று
நனிதருகவியின்றானைநண்ணலார்செய்கைநாண
இனியெம்மாற்செயலின்றென்னுத்ததிமுகற்கியம்பினாரே.

இ-ள். எம்மை – எங்களை, எங்கோன் – எங்களுக்குத்தலைவனானவன், முனியும் – கோபிப்பான் ஆகலால், என்று அவர் – என்று அந்தவானரங்கள், மொழிந்துபோந்து – சொல்லிவிட்டுப்போய், கனியும் – மிகவும்பழுத்து முதிர்ந்த, மாமதுவனத்தை – பெரியமதுவனமெல்லாம், கட்டழித்திட்டது – கட்டுக்குலையப்பண்ணிவிட்டது, இன்று – இப்போது, நனிதரு – மிகவுமதிகமான, கவியின்றானை – வானரசேனைகள்கட்டழித்திட்டது, நண்ணலார் – நமக்குப்பகைவர்கள், செய்கை - செய்கிறதுகூட, நாண – இப்படிச்செய்யார்களென்ன கட்டழித்திட்டது, இனி – இனிமேல், எம்மால் – எங்களாலே, செயல் – செய்யத்தக்கது, இன்றென்று-வேறே ஒன்றுமில்லையென்று, ததிமுகற்கு – ததிமுகனான தலைவனுக்கு, இயம்பினார் – சொன்னார்கள்.

கேட்டவன்யாவரேயம்மதுவனங்கேடுசூழ்ந்தார்
காட்டிரென்றெழுந்தானன்னார்வாலிசேய்முதலகற்றோர்
ஈட்டம்வந்திறுத்ததாகவங்கதனேவறன்னால்
மாட்டினகவியின்றானைமதுவளருலவைவீட்டம்.

இ-ள். கேட்டவன் – அப்படிச்சொல்லக்கேட்ட ததிமுகனானவன், அம்மதுவனம் – அந்தமதுவனத்தை, கேடுசூழ்ந்தார் – கெடுத்தழித்தவர்கள், யாவரே – யார், காட்டிரென்று – காட்டுங்களென்று, எழுந்தான் அன்னான் – எழுந்துவந்தான் அந்தத்ததிமுகன், வாலிசேய்முதல் – அங்கதன்முதலான, கற்றோர்ஈட்டம் – தெரிந்தஅதிவீரர்கள்கூட்டமே, வந்திறுத்தது – வந்திறங்கியது, ஆக – இறங்குதல் ஆகவே, அங்கதன் – வாலிபுத்திரனுடைய, ஏவல்தன்னால் – உத்தரவினாலே, மதுவளர் – மதுக்கட்டியிருக்கிற, உலவைவீட்டம் – மரங்களின்கூட்டமெல்லாம், கவியின்றானை – வானரசேனைகள், மாட்டின – ஒடித்தழித்தன அதுகண்டு நாங்கள்—எ-று. (கக)

உரங்கிளர்மதுகையான்றனாணையாலுறுதிகொண்டே
குரங்கினந்தம்மையெல்லாம்விலக்கினங்கொடுமைகூறிக்
கரங்களாலெற்றநொந்தேங்காவலோயென்னலோடும்
தரங்கிளர்தாதைபட்டதறிந்திலன்றனயன்போலும்.

இ-ள். உரங்கிளர் – பலமிகுதியான, மதுகையான்றன் – சுக்கிரீவனுடைய, ஆணையால் உறுதிகொண்டு – உத்தரவின்பலங்கொண்டு, குரங்கினந்தம்மையெல்லாம் – வானரங்களையெல்லாம், விலக்கினம் – நாங்கள் தடைசெய்தோம், கொடுமைகூறி – அவ்வானரங்கள் கொடுஞ்சொற்கள்சொல்லி, கரங்களால் – தங்கள்கைகளாலே, எற்ற – எங்களை அடிக்க, நொந்தேம் – மிகவும் வருந்தினோம், காவலோய் – எங்களைக்காக்குந்ததிமுகனே, என்னலோடும் – என்றுசொன்ன அளவிலே, தரம்கிளர்-மலைபோல்விளங்கின, தாதை – இந்த அங்கதனுடைய தந்தையான அந்தவாலி, பட்டது-பட்டுமுடிந்ததை, தநயன் – புத்திரனான அங்கதன், அறிந்திலன் – தெரிந்துகொள்ளாதவனானான், போலும் – என்பதுசரியே—எ-று. (உO)

எனவுரைத்தனலிற்பொங்கியெழுந்திரைத்திரண்டுகோடி
கனைகழற்கவியின்சேனைகல்லெனக்கலந்துபுல்லப்

புனமதுச்சோலைபுக்கான்மதுநுகர்புனிதச்சேனை
அனகனைவாழ்த்தியோடியங்கதனடியின்வீழ்ந்த.

இ-ள். என உரைத்து – என்றுசொல்லி, அனலில்-நெருப்பைப்போல்,பொங்கி – சுவாலித்து, எழுந்து – மூண்டு, இரைத்து – சத்தித்து, இரண்டுகோடி – இரண்டுகோடி அளவுள்ள, கனைகழல் – சத்திக்கும்வீரக்கழலையுடைய, கவியின்சேனை-வானரசேனைகள், கல்லென – கல்லென்றொலித்து, கலந்து – கூடி, புல்ல-தன்னொடு கூட, புனமது – தேனைக்கொண்டுள்ள, சோலை – தென்னஞ்சோலை பனஞ்சோலையாயவைக்குள்ளே, புக்கான் – வந்தான் அவன்வந்த அளவிலே, மதுநுகர் – மதுவைக்குடித்துக்கொண்டிருக்கிற, புனிதம் – நல்லகளிப்புள்ள, சேனை – வானரசேனைகள், அனகனை – ஸ்ரீராமனை, வாழ்த்தி – வாழ்த்திக்கொண்டு, ஓடி – ஓடிப்போய், அங்கதன் – வாலிபுத்திரனுடைய, அடியில்-பாதத்திலே, வீழ்ந்த-விழுதலாயின-எ-று.

இந்திரன்வாலிக்கீந்தவின்சுவைமதுவின்கானம்
அந்தரத்தவர்க்குநோக்கற்கரியவென்னாணைதன்னைச்
சிந்தினைகதிரோன்மைந்தன்றிறலினையறிதியன்றே
மந்தரமனையதோளாயிற்றதுன்வாழ்க்கையின்றே.

இ-ள். இந்திரன் – தேவேந்திரனானவன், வாலிக்கு – வாலியென்பவனுக்கு, ஈந்த – கொடுத்த, இன்சுவை – இனியசுவையையுடைய, மதுவின்கானம் - இந்தமதுவனமானது, அந்தரத்தவர்க்கும் – ஆகாசவாசிகளுக்கும், நோக்கற்கு – பார்த்தற்கு, அரிய – கூடாததான, என் ஆணைதன்னை – எனதாக்ஞையை, சிந்தினை – அவமதித்தாய், கதிரோன்மைந்தன் – சுக்கிரீவனுடைய, திறலினை – சாமர்த்தியத்தை, அறிதியன்றே – நீஅறிந்ததுதானல்லவோ, மந்தரம் – மந்தரகிரியை, அனைய – ஒப்பான, தோளாய் – தோள்களுள்ள அங்கதா, உன்வாழ்க்கை – உனதுவாழ்நாள், இற்றது-முடிவாயிற்று, இன்றே – இன்றைத்தினமே—எ-று. (௨௨)

மதுவனந்தன்னையின்னேமாட்டுவித்தனைநீயென்றுக்
கதுமெனவாலிசேய்மேலெறிந்தனன்கருங்கற்பாறை
அதுதனைப்புறங்கையாலேயகற்றியங்கதனுஞ்சீறித்
ததிமுகன்றன்னைப்பற்றிக்குத்தினன்றடக்கைதன்னால்.

இ-ள். மதுவனந்தன்னை – இந்தமதுவனத்தை, இன்னே – இன்றொருபொழுதிலே, மாட்டுவித்தனை – அழிவுபடச்செய்தாய், நீயென்று – நீயேயென்று, கதுமென – சீக்கிரமாக, வாலிசேய்மேல் – அங்கதன்மேலே, கருங்கற்பாறை - ஒருகறுத்தகல்லுப்பாறையை, எறிந்தனன் – எடுத்தூவீசினான், அதுதனை – அந்தக்கல்லுப்பாறையை, புறங்கையாலே – தன்புறங்கையினாலே, அகற்றி – நீங்கவிலக்கி, அங்கதனும் – அங்கதனானவன், சீறி – கோபங்கொண்டு, ததிமுகன்றன்னை – அந்தத்ததிமுகனானவனை, பற்றி – பிடித்து, தடக்கைதன்னால் – தனதுநீண்டகையினாலே, குத்தினன் – குத்தினானென்க—எ-று. (௨௩)

வாய்வழிகுருதிசோரமணிக்கையான்மலங்கமோதிப்
போய்மொழிகதிரோன்மைந்தற்கென்றவன்றன்னைப்போக்கித்
தீயெழும்வெகுளிபொங்கமற்றவன்சேனைதன்னைக்
காய்கனல்பொழியுங்கையாற்குத்துதிர்கட்டியென்றான்.

இ-ள். வாய்வழி – ததிமுகன்வாயிலே, குருதிசோர – ரக்தமொழுக, மணிக்கையால் – தனதுஅழகியகையினாலே, மலங்க – அவன்வருந்த, மோதி – அடித்து,

கதிரோன்மைந்தற்கு – சுக்கிரீவனுக்கு, போய்மொழி – நீயேபோய்ச்சொல்லு, என்று – என்றுசொல்லி, அவன்றன்னை – அந்தத்ததிமுகனை, போக்கி – போகவிட்டு, தீயெழும் – நெருப்புப்பறப்பதான, வெகுளிபொங்க - கோபமதிகமாக, மற்றவன்சேனைதன்னை - அந்தத்ததிமுகனுடையசேனைகளையெல்லாம், கட்டி - கொடிகளாலே பிணித்து, காய்கனல் - சுடுகிறநெருப்பு, பொழியும் - சிந்துகின்ற, கையால் - உங்கள்கைகளாலே, குத்துதிரென்றான் - குத்துங்களென்று சொன்னான்—எ-று. (௨௪)

பிடித்தனர்கொடிகடம்மாற்பிணித்தனர்பின்னுமுன்னும்
இடித்தனரசனியஞ்சவெறுழ்வலிக்கரங்களோச்சித்
துடித்தனருடலஞ்சோர்ந்தார்சொல்லும்போய்நீருமென்னப்
படித்தனன்வாலின்மைந்தன்பயத்துடனவரும்போனார்.

இ-ள். கொடிகள்தம்மால் - நீண்டகொடிகளாலே, பிடித்தனர் - அவர்களைப்பிடித்து, பிணித்தனர் - கட்டினார்கள், பின்னுமுன்னும் - நெஞ்சிலுமுதுகிலும், இடித்தனர் - இடித்தார்கள், அசனியஞ்ச - இடியும்பயப்பட, எறுழ்வலி - மிகுந்த பலமுள்ள, கரங்கள் - கைகளை, ஓச்சி - ஓங்கியிடித்தனர், துடித்தனர் - அந்தத்ததிமுகன்சேனைகள் துடித்தார்கள், உடலம்சோர்ந்தார் - உடம்பெல்லாமிளைத்தாராகித்துடித்தனர், நீரும் - இப்போதுநீங்களும், போய் - சென்று, சொல்லும் - சொல்லுங்கள், என்ன - என்று, படித்தனன் - சொன்னான், வாலிமைந்தன் - அங்கதன்- அவரும் - அவர்களும், பயத்துடன்-அச்சத்துடனே, போனார்-போயினார்கள்-எ-று.

அலைபுனல்குடையுமாபோன்மதுக்குடைந்தாடித்தத்தம்
தலைவர்கட்கினியதேனுங்கனிகளும்பிறவுந்தந்தே
உலைவுறுவருத்தந்தீர்ந்திட்டுபவனத்திருந்தாரப்பால்
சிலைவளைத்துலவுந்தேரோன்றெறும்வெயிறணிவுபார்த்தே.

இ-ள். அலைபுனல் - அலையையுடையநீரிலே, குடையுமாபோல் - முழுகுகிறதுபோல், மதுக்குடைந்து - மதுபானத்திலேமுழுகி, ஆடி - உண்டாடி, தத்தம்-தங்கள்தங்களுடைய, தலைவர்கட்கு - எஜமான்களுக்கு, இனிய - நன்றான, தேனும் - ரசமும், கனிகளும் - பழங்களும், பிறவும் - மற்றும் வேண்டியவைகளெல்லாம், தந்து - கொண்டுவந்துகொடுத்து, உலைவுறு - தாங்கள்வருந்தலான, வருத்தம்-இளைப்பெல்லாம், தீர்ந்திட்டு - ஆறிக்கொண்டு, உபவனத்திருந்தார் - மற்றொருசோலையிலேகூடியிருந்தார்கள், அப்பால் - அதற்குமேல், சிலை - மகாமேருவானமலையை, வளைத்து - சூழ்ந்து, உலவும் - சஞ்சரிப்பதான, தேரோன் - தேரையுடையசூரியன், தெறும்வெயில் - சுடுஞ்சூடு, தணிவுபார்த்து - குறையுமளவு பார்த்துக்கொண்டிருந்தார்களப்பால்—எ-று. (௨௬)

முத்தலையெஃகினாற்குமுடிப்பருங்கருமமுற்றி
வித்தகன்றாதுமீண்டதிறுதியாய்விளைந்ததன்மை
அத்தலையறிந்தவெல்லாமறைந்தனமாழியான்மாட்
டித்தலைநிகழ்ந்தவெல்லாமியம்புவானெடுத்துக்கொண்டாம்.

இ-ள். முத்தலை - மூன்றுதலைகவருள்ள, எஃகினாற்கும் - சூலபாணியனான சிவனாலும், முடிப்பரும் - முடிக்கஅரிதான, கருமம் - காரியத்தை, முற்றி - முடித்து, வித்தகன்றாதன் - அனுமார், மீண்டது - திரும்பினது, இறுதியாய் - முடிவாக, விளைந்ததன்மை - நடந்தவைகளையெல்லாம், அத்தலை - முன்னே, அறிந்தவெல்லாம்-

எம்மாற்றெரிந்தவரையும், அறைந்தனம் – சொன்னோம், ஆழியின்மாட்டு – ஸ்ரீராமனிடமான, இத்தலை – இங்கே, நிகழ்ந்தவெல்லாம் – நடந்தவைகளையெல்லாம், இயம்புவான் – சொல்லுதற்கு, எடுத்துக்கொண்டாம் – ஆரம்பித்தோம்—எ-று. அத்தலை அவ்விடத்திலே இலங்கையிலே. (உஎ)

வே று.

சேற்றிளமரைமலர்த்திருவைத்தேர்கெனக்
காற்றின்மாமகன்முதற்கவியின்சேனையை
நாற்றிசைமருங்கினுமேவிநாயகற்
றேற்றினனிருந்தனன்கதிரின்செம்மலே.

இ-ள். சேற்று – சேற்றிலேபிறக்கிற, இளம் – இளையதான, மரைமலர் – தாமரைமலரைஇடமாகவுடைய, திருவை – லட்சுமியானசீதையை, தேர்கென – தெரிந்துவாருங்களென்று, காற்றின்மாமகன் – அனுமாரே, முதல் – முதலாக, கவியின்சேனையை – வானரசேனைகளை, நாற்றிசை – நான்குதிக்கின், மருங்கினும் – இடங்களிலும், ஏவி – போகவிட்டு, நாயகன் – ஸ்ரீராமனை, தேற்றினன் – தேறுதல்செய்துகொண்டு, கதிரின்செம்மல் – சுக்கிரீவன், இருந்தனன் – இருந்தான்—எ-று. (உஅ)

கார்வரையிருந்தனன்கதிரின்காதலன்
சீரியசொற்களிற்றெருட்டச்செங்கணன்
ஆருயிராயிரமுடையனுமெனச்
சோர்தொறுஞ்சோர்தொறுமுயிர்த்துத்தோன்றினன்.

இ-ள். கதிரின்காதலன் – சுக்கிரீவன், கார்வரை – அந்தநீலநிறமான மலைமேலே, இருந்தனன் – இருந்துகொண்டு, சீரிய – சிறந்த, சொற்களில் – சொற்களைக்கொண்டு, தெருட்ட – தெளிவுசெய்துகொண்டிருக்கச்செய்தே, செங்கணன் – சிவந்தகண்களுள்ள ஸ்ரீராமனானவர், ஆருயிர் – அருமையானஉயிர்கள், ஆயிரம் – பத்துநூறு, உடையன் – உடையவன், ஆமெனு – ஆமென்னும்படி, சோர்தொறும் சோர்தொறும் – மயங்கமயங்க, உயிர்த்து – பின்னுமுயிருள்ளவனாகி, தோன்றினன்-இருக்கலானார்—எ-று. (உகூ)

தண்டலினெடுந்திசைமூன்றுந்தாயினர்
கண்டிலர்மடந்தையையென்னுங்கட்டுரை
உண்டுயிரகத்தெனவொறுக்கவும்முளன்
திண்டிறலநுமனைநினையுஞ்சிந்தையான்.

இ-ள். தண்டலில் – தடையில்லாமல், நெடுந்திசை – நீண்டதிக்குகள், மூன்றும் – மூன்றுக்கும்தேட, தாயினர் – போனவர்கள், மடந்தையை – பிராட்டியை, கண்டிலர் – காணாதவர்களானார், என்னுங்கட்டுரை – என்பதான மெய்மொழியானது, உண்டுஉயிர் – உயிருமுள்ளது, அகத்துஎன – உள்ளேயென்னும்படி, ஒறுக்கவும் – வருத்தப்படுத்தவும், உளன் – உயிருள்ளவனாகஇருக்கிறார் ஸ்ரீராமன், திண்திறல் – மிக்கசாமர்த்தியமுள்ள, அநுமனை – அநுமாரை, நினையும் – எண்ணுகிற, சிந்தையான் – மனமுடையவராய்—எ-று. (கூO)

ஆரியனருந்துயர்க்கடலிளுழ்பவன்
சீரியதன்றுணைஞ்செய்கைதீர்வரும்
பூரியவெம்பழிபொடித்ததாமெனச்
சூரியன்சிறுவனைநோக்கிச்சொல்லினான்.

இ-ள். அருந்துயர் - நீங்குதற்கரிதான துன்பமென்னும், கடலின்-கடலிலே, ஆழ்பவன் - முழுகுமவரான, ஆரியன் - ஸ்ரீராமனானவர், நஞ்செய்கை - நமதுசெய்வினை, சீரியதன்று - சிறந்ததாயிருக்கவில்லை, தீர்வுஅரும் - நீங்குதலில்லாத, பூரிய-இழிவுள்ள, வெம்பழி - வெவ்வியநிந்தையானது, பொடித்தது - கொஞ்சங்கொஞ்சமாய்வளர்ந்தது, ஆமென - மெய்யேயென்று, சூரியன்-சூரியனுடைய, சிறுவனை-புத்திரனை சுக்கிரீவனை, நோக்கி - பார்த்து, சொல்லினன் - சொல்லலானார்—எ-று.

குறித்தநாளிகந்தனகுன்றத்தென்றிசை
வெறிக்கருங்குழலியைநாடன்மேயினர்
மறித்திவண்வந்திலர்மாண்டுளார்கொலோ
பிறித்தவர்க்குற்றுளதென்னைபெற்றியோ.

இ-ள். குறித்தநாள் - நாம்கெடுப்பண்ணி அனுப்பினநாளும், இகந்தன - கழிந்துபோயின, குன்றம் - நாமிருக்குமலைக்கு, தென்றிசை-தெற்குமுகத்திலே,வெறி-வாசனையுள்ள, கருங்குழலியை - கரியகூந்தலுள்ளசீதையை, நாடல்மேயினர்-தேடப்போனவர்கள், மறித்து - மீண்டு, இவண் - இவ்விடம், வந்திலர் - இன்னம்வராதிருக்கிறார்கள், பிறிது - வேறே, அவர்க்கு - அவர்களுக்கு, உற்றுளது - வந்தது, என்னை - யாது, பெற்றியோ - பெறுதலாயிற்றோ, மாண்டுளார்கொலோ - இறந்துபோனார்களோவேறேயாதோ—எ-று. (௱௨)

மாண்டனளவளிவண்மாண்டவார்த்தையை
மீண்டவர்க்குரைத்தலின்விளிதனன்றெனப்
பூண்டதோர்துயர்கொடுபொன்றினார்கொலோ
தேண்டினரின்னமுந்திரிகின்றார்கொலோ.

இ-ள். அவள்மாண்டனள் - அந்தச்சீதையிறந்துபோயினாள், இவண் - ஆகையாலிங்கே, மாண்ட - அவளிறந்த, வார்த்தையை - சொல்லை, மீண்டு - திரும்பிப்போய், அவர்க்கு - அந்தராமனுக்கும் லட்சுமணனுக்கும், உரைத்தலின் - சொல்லுகிறதைப்பார்க்கிலும், விளிதல் - நாமிறந்துபோகிறதே, நன்றென - நல்லதென்று, பூண்டது - தங்களைச்சேர்ந்ததான, ஓர்துயர்கொடு - ஒருதுன்பத்தையேகருதி, பொன்றினார்கொலோ-இறந்துபோனார்களோ சுக்கிரீவனே உன்கருத்தென்ன, தேண்டினர் - தேடினவர்களாகவே, இன்னமுந்திரிகின்றார்கொலோ-இன்னம்அலைகிறார்களோசொல்—எ-று. (௱௩)

கண்டனரரக்கரைக்கருவுகைமிக
மண்டமர்தொடங்கினார்வஞ்சர்மாயையால்
விண்டலமதனின்மேயினர்கொல்வேறிலாத்
தண்டலினெடுஞ்சிறைத்தளைப்பட்டார்கொலோ.

இ-ள். கண்டனர் அரக்கரை - அந்தராட்சதர்களைக்கண்டு, கறுவு - மனவிரோதம், கைமிக - அதிகமாக, மண்டுஅமர் - மிகுந்த சண்டைகளை, தொடங்கினார்-செய்து, வஞ்சர்மாயையால் - அந்தவஞ்சகரானராட்சதர்கள் மயக்கஞ்செய்வதனாலே, விண்டலமதனின் - இறந்துசுவர்க்கலோகம், மேயினர்கொல் - போனார்களோ, வேறிலா - வேறொன்றுமில்லாமல், தண்டலில் - தடையில்லாது, நெடுஞ்சிறை-நீளமாகச்சிறையிற்கிடத்தலான, தளைப்பட்டார்கொல் - விலங்கிலகப்பட்டார்களோ பெற்றியென்னை—எ-று. (௱௪)

கூறினநாளவரிருக்கைகூடலம்
ஏறலஞ்சுதுமெனவின்பதுன்பங்கள்
ஆறினரருந்தவமயர்கின்றார்கொலோ
வேறவர்க்குற்றதென்விளம்புவாயென்றான்.

இ-ள். கூறினநாள் - கெடுவைத்தனுப்பினநாளுக்குள்ளே, அவர் - அந்தராமன் முதலியோர், இருக்கை - இருக்குமிடத்தை, கூடலம்-சேராதேபோனேம், ஏறல்-இனிஅங்குப்போகிறதற்கு, அஞ்சுதுமென - பயப்படுதலானேமென்று, இன்பதுன்பங்கள் - சுகதுக்கங்களை, ஆறினர் - தணிந்தார்களாகி, அருந்தவம் - அரிதான தவத்தை, அயர்கின்றார்கொலோ - செய்யப்போயினர்களோ, வேறு - இன்னம்வேறே, அவர்க்கு - தென்றிசைக்குப்போனவர்களுக்கு, உற்றது - வந்துள்ளது, என் - யாதாயிருக்கும், விளம்புவாய் - உன்யோசனைக்குத் தோன்றினதைச் சொல்லவேண்டும், என்றான் - என்று ஸ்ரீராமன்சொன்னர்—எ-று. (௩௫)

என்றுரைத்திடருழந்திருக்கும்வேலையில்
வன்றிறற்றதிமுகன்வானரேசன்முன்
தன்றலைப்பொழிதருகுருதிதன்னெடும்
குன்றெனப்பணிந்தனனிருகைகூப்பியே.

இ-ள். என்றுரைத்து - என்றுசொல்லி, இடர் - துன்பத்தினலே, உழந்து-வருந்திக்கொண்டு, இருக்கும்வேலையில் - இருக்கும்போது, வன்திறல் - துக்கவலிமையுள்ள, ததிமுகன் - ததிமுகனனவன், வானரேசன்முன் - சுக்கிரீவனுக்குமுன்னே, தன்தலை - தனது தலையிலேநின்றும், பொழிதரு - சிந்துவதான, குருதிதன்னெடும் - ரத்தப்பிரவாகத்துடனே, இருகை கூப்பி - இரண்டுகைகளுங் குவித்துக்கொண்டு, குன்றென - ஒருமலைபோல்வந்துவிழுந்து, பணிந்தனன் - தண்டம்பண்ணினன் சுக்கிரீவனுக்கு—எ-று. (௩௬)

எழுந்துநின்றையகேளின்றுநாளையோ
டழிந்ததுமதுவனமடையவென்றலும்
வழிந்திடுகுருதியின்வதனநோக்கியே
மொழிந்திடங்கியாரதுமுடித்துளோரென.

இ-ள். எழுந்துநின்று - பின்னுமெழுந்திருந்துநின்று, ஐயகேள் - அரசனே கேளும், இன்று - இன்றைத்தினமே அல்லது, நாளையோடு - நாளையத்தினமேமுடிவாக, மதுவனமழிந்தது - உமதுமதுவனம் அழிந்தேபோகும், அடைய - முழுதும், என்றலும் - என்றவுடனே, வழிந்திடு - ஒழுகுகிற, குருதியின் - ரத்தத்தையுடைய, வதனம் - அவன் முகத்தை, நோக்கியே - பார்த்து, மொழிந்திடு - உள்ளதுசொல், அங்கு - அங்கே, யாவர் - எவர், அது - அந்தமதுவனத்தை, முடித்துளோர் - அழித்தவர்கள், என - என்றுகேட்க—எ-று. (௩௭)

நீலனுங்குமுதனுநெடியகுன்றமே
போலுயர்சாம்பனும்புணரிபோர்த்தென
மேலெழுசேனையும்விரைவின்வந்துறச்
சால்புடைமதுவனந்தனையழிப்பவே.

இ-ள். நீலனும் குமுதனும் - இவ்விருவருடனே, நெடிய - நீண்ட, குன்றமே-மலையே, போல் உயர் - போல் உயர்ந்த, சாம்பனும் - இவனும், புணரி - கடல்வந்து,

போர்த்தென — கவிந்தாற்போல், மேல் - மேன்மேலாகி, எழு — வருகிற, சேனையும்- சேனைகளுமாகி, விரைவின் — அதிசீக்கிரத்திலே, வந்துரு — வந்துகூடி, சால்புடை- உமதுபெருமையை உடையதான, மதுவனந்தனை - மதுவனத்தை, அழிப்ப-குலைத் தழிவுசெய்ய அதுகண்டு—எ-று. (௩அ)

தகைந்தவச்சேனையைத்தள்ளிநின்னையும்
இகழ்ந்துரைத்தியைந்தனன்வாலிசேயெமக்
குகந்தனபுகன்றவவ்வுரைபொருமையே
புகைந்தொருபாறையின்புணர்ப்புநீக்கியே.

இ-ள். தகைந்த - தடுத்த, அச்சேனையை - அந்தச்சேனைகளையெல்லாம், தள் ளி - அடித்துத்துரத்தி, நின்னையும் - உம்மையும், இகழ்ந்து - அசட்டைபண்ணி, உரைத்து - அவமதித்துப்பேசி, வாலிசேய் - அங்கதனனவன், இயைந்தனன்-வன மழிக்கச்சம்மதித்தானாகி, எமக்கு — எங்களைநோக்கி, உகந்தன - மனோரதமானவைக ளாக, புகன்ற — அவன்சொன்ன, அவ்வுரை - அந்தவார்த்தை, பொருமையே-நான் பொருமல், புகைந்து — கோபங்கொண்டு, ஒருபாறையின்புணர்ப்பு — ஒருகற்பாறை யின்கீழ்வேரை, நீக்கி - அசைத்துப்பிடுங்கி—எ-று. உகந்தனபுகலல் - தனது, களிப் புத்தோன்றச்சொல்லுதல் - களிப்பு, அவன்செய்கைக்கஞ்சாமை. (௩௯)

இமைத்தன்முன்வாலிசேயெழில்கொள்யாக்கையைச்
சமைத்தியென்றெறிதரப்புறங்கையாற்றகைந்
தமைத்தருகனலெனவழன்றெற்பற்றியே
குமைத்துயிர்பதைப்பநீகூறுபோயென்றான்.

இ-ள். இமைத்தல்முன் - ஒருமாத்திரையளவிலே, வாலிசேய் - அங்கதனு டைய, எழில்கொள் - அழகுகொண்ட, யாக்கையை-தேகத்தை, சமைத்தியென்று- அழித்துவிடென்று, எறிதர - நான்வீச அவன், புறங்கையால் — தன்புறங்கையாலே, தகைந்து — தட்டிவிட்டு, அமைத்தரு - மூங்கிலிலேயுண்டான மூங்கிலானதுதருகிற, கனலென — நெருப்புப்போல், அழன்று — கோபங்கொண்டு, எற்பற்றி — என்னைப் பிடித்து, குமைத்து — அடித்துக்குத்தி, உயிர்பதைப்ப - என்னுயிர் 'துள்ளக்குமைத் து, நீபோய்க்கூறு - நீபோய்ச்சொல்லு, என்றான் - என்றுசொன்னான்—எ-று. ()

எம்பலொடெழுந்துநின்றிரவிகான்முளை
பாம்பணையமலனைவணங்கிப்பைந்தொடி
மேம்படுகற்பினளென்னுமெய்ம்மையைத்
தாம்புகன்றிட்டதிச்சலமென்றோதினான்.

இ-ள். எம்பலோடு - அச்சொற்கேட்டுச்சந்தோஷத்துடனே, எழுந்துநின்று- எழுந்திருந்துநின்று, இரவிகான்முளை - சூரியகுமாரனான சுக்கிரீவன், பாம்புஅணை- சேஷசயனத்தையுடைய, அமலனை — தோஷரகிதனான ராமனை, வணங்கி-பணிந்து, பைந்தொடி - சீதாபிராட்டி, மேம்படு - மேலான, கற்பினள் — கற்புடையளாயிருக்கி றார், என்னும் - என்பதான, மெய்ம்மையை - உண்மையை, புகன்றிட்டது-சொல்லு தலாயிருக்கிறது, இச்சலம் - இந்த அங்கதன்கோபம், என்றோதினான் — என்றுசொ ன்னான் சுக்கிரீவன், தாம் சாரியை—எ-று. (௪க)

பண்டருகிளவியாடன்னைப்பாங்குறக்
கண்டனரன்னதோர்களிப்பினலவர்

வண்டுறைமதுவனமழித்துமாந்திய
தண்டநாயகவினியவலந்தீர்கென.

இ-ள். பண்தரு — இராகத்தைநேரான, கிளவியாள்தன்னை — சொற்களையுடைய பிராட்டியை, பாங்குற — நன்றாக, கண்டனர் — கண்டார்களே ஆகையால், அன்னது — அப்படிப்பட்டதான, ஓர்களிப்பினால் — ஒருசந்தோஷத்தினாலே, அவர் — பிராட்டியைக்கண்ட அவர்கள், வண்டுறை — வண்டுகள்தங்கின, மதுவனம் — மதுவனத்தை, அழித்து — கெடுத்து, மாந்தியது — மதுவுண்ணலானது ஆதலால், அண்டநாயக — ஓ ஜகதீசா, இனி — இனிமேல், அவலம் — உமதுதுன்பத்தை, தீர்கென — விடக்கடவீரென்றுசொல்ல—எ-று. (௬௨)

வந்தனர்தென்றிசைவாவினரெனப்
புந்திநொந்தென்னைகொல்புகலற்பாலரென்
றெந்தையுமிருந்தனனிரவிகான்முளை
நொந்தவத்ததிமுகன்றன்னைநோக்கியே.

இ-ள். தென்றிசைவாவினர் — தெற்குத்திசைக்குப் போனவர்கள், வந்தனரென — வந்தார்களென்று சுக்கிரீவன்சொல்லவே, புந்திநொந்து — வந்தவர்கள் மனம் வருந்தி, என்னைகொல் — யாதோ, புகலற்பாலரென்று — சொல்லுவார்களென்று, எந்தையும் — எமதாண்டவனான ஸ்ரீராமன், இருந்தனன் — ஒன்றுஞ்சொல்லாதிருந்தார் அப்போது, இரவிகான்முளை — சுக்கிரீவன், நொந்த — மனம்வருந்திவந்த, அத்ததிமுகன்றன்னை — அந்தத்ததிமுகனை, நோக்கி — பார்த்து—எ-று. (௬௩)

யாரவணிறுத்தவரியம்புவாயென
மாருதிவாலிசேய்மயிந்தன்சாம்பவன்
சோர்வறுபதினெழுவோர்கடுன்னினர்
ஆர்கலிநாணவந்தார்க்குஞ்சேனையார்.

இ-ள். அவண்யார் — அங்கேயாரார், இறுத்தவர் — வந்திறங்கினவர்கள், இயம்புவாயென — சொல்லென்றுகேட்க அதற்கு, மாருதி — அனுமார், வாலிசேய் — அங்கதன், மயிந்தன் — மயிந்தன், சாம்பவன் — சாம்பன்முதலான, சோர்வு அறு — தளர்ச்சியற்ற, பதினெழுவோர்கள் — பதினேழுபடைத்தலைவர்களும், துன்னினர் — வந்திறங்கினார்கள், ஆர்கலி — கடலும், நாண — வெட்கியஞ்ச, வந்து — கிட்டிவந்து, ஆர்க்கும் — கெர்ச்சிப்பதான, சேனையார் — சேனைகளோடுகூடித்துன்னினர்—எ-று. (௬௪)

என்றவனுரைத்தபோதிரவிகாதலன்
வன்றிறற்றதிமுகன்வதனநோக்கியே
ஒன்றுனக்குணர்த்துவதுளதுவாலிசேய்
புன்றொழிற்செய்கைசேர்புணர்ப்பனல்லனால்.

இ-ள். என்று அவன் — என்று அந்தத்ததிமுகன், உரைத்தபோது — சொன்ன அளவிலே, இரவிகாதலன் — சூரியகுமாரனான சுக்கிரீவன், வன்திறல் — வலியதிடமுள்ள, ததிமுகன் — ததிமுகனுடைய, வதனநோக்கி — முகத்தைப்பார்த்து, ஒன்று உனக்கு — உனக்கு ஒன்று, உணர்த்துவது — நான்சொல்லத்தக்கது, உளது — உண்டு, வாலிசேய் — அங்கதனானவன், புன் தொழில் — அல்ப காரியங்களை, செய்கை-செய்வதில், சேர் — கூடின, புணர்ப்பன் — சேர்க்கையுள்ளவன், அல்லன் — அல்லாதவனாகையாலே—எ-று. (௬௫)

கொற்றவன்பணிதலைக்கொண்டுதெண்டிரை
சுற்றியதிசையெலாந்துருவித்தோகையைப்
பற்றியபகைஞரைக்கடிந்துபாங்கர்வந்
துற்றனரவரையாமுரைப்பதென்னையே.

இ-ள். கொற்றவன் - ஸ்ரீராமனுடைய, பணி - காரியத்தை, தலைக்கொண்டு- சிரசாவகித்து, தெண்டிரை - தெளிந்த அலைகளுள்ளகடல், சுற்றிய - சூழ்ந்த, திசையெல்லாம் - திக்குகள்முழுதும், துருவி - தேடி, தோகையை - சீதாபிராட்டியை, பற்றிய - கொண்டுபோன, பகைஞரை - சத்துருக்களை, கடிந்து - கொன்று, பாங்கர்வந்து - நமதுசமீபத்திலேவந்து, உற்றனர் - சேர்ந்தார்கள், அவரை - அப்படிவந்தவர்களை, யாம் உரைப்பது - நாம்கடிந்துபேசுவது, என்னை - எப்படி—எ-று. (சசு)

அன்றியும்வாவிசேயரசதாதலின்
பின்றுதறீதரோபிணங்குஞ்சிந்தையாய்
ஒன்றுநீயுணரலையுறுதிவேண்டுமேல்
சென்றவன்றனைச்சரண்சேர்திஈண்டென.

இ-ள். அன்றியும் - அதையல்லாமலும், வாவிசேய் - அங்கதனைவன், அரசுஅது - ஆளுகையையுடையது அந்தமதுவனம், ஆதலின் - ஆனபடியினலே, பின்றுதல் - அவன் சொல்லுக்குப் பின் சொல்லுகிறது, தீது - குற்றமேயாம், பிணங்கும்- அவனேடுமொறுபாடுகொண்ட, சிந்தையாய் - மனமுள்ளததிமுகனே, ஒன்றுநீ - நீ ஒருகாரியமும், உணரலை - ஆலோசிக்கிறாயில்லை, உறுதிவேண்டுமேல் - உனக்கு நன்மைவேணுமேயானல், சென்று - நீபோய், அவன்றனை - அந்த அங்கதனுடைய, சரண்சேர்தி - பாதத்தை அடைதி, ஈண்டு - இப்போதே, என - என்று சுக்கிரீவன் சொல்ல—எ-று. (சஎ)

வணங்கியசென்னியன்மறைத்தவாயினன்
உணங்கியசிந்தையனொடுங்குமேனியன்
கணங்களோடேகியக்கானநண்ணினன்
மணங்கிளர்தாரினன்மறித்தும்வந்தரோ.

இ-ள். வணங்கிய - வளைந்த குனிந்த, சென்னியன் - தலையையும், மறைத்த- ஒருகையால்மூடின, வாயினன் - வாயையும், உணங்கிய - வருந்தின, சிந்தையன் - மனத்தையும், ஒடுங்கும் - அடங்கின, மேனியன் - சரீரத்தையும் உடையவனாய், கணங்களோடு - தன்கூட்டங்களுடனே, ஏகி - போய், அக்கானம் - அந்தக் காடானமதுவனத்துக்கு, நண்ணினன் - வந்துசேர்ந்தான், ஏகிநண்ணினன் -போய்ச்சேர்ந்தான், மணங்கிளர் - வாசனைபரிமளிக்கிற, தாரினன் - மாலையையணிந்த ததிமுகன், மறித்தும்வந்து - மீண்டுவந்துகானநண்ணினனென்க—எ-று. (சஅ)

கண்டனன்வாலிசேய்கறுவுகைமிக
விண்டவனம்மெதிர்மீண்டுளானெனின்
உண்டிடுகுதுமுயிரென்னவுன்னினன்
தொண்டெனத்ததிமுகன்றொழுதுதோன்றினன்.

இ-ள். கண்டனன்வாலிசேய் - அதை அங்கதன்கண்டு, கறுவுகைமிக - கோபம்மேன்மேலாக, விண்டவன் - வனத்தைவிட்டோடிப்போனவன், நம் எதிர் - நமக்குமுன்னே, மீண்டுளானெனில் - திரும்பியும்வருவானேயானபோதும், உயிர் - அவனுயிரை, உண்டிடுகுதும் - வாங்கிவதைப்போம், என்ன உன்னினன் -என்றெண்ணி

ஞன் அப்போது, ததிமுகன் - ததிமுகனுனவன், தொண்டென - உனக்கடிமையென்று, தொழுது - கும்பிட்டுக்கொண்டு, தோன்றினுன் - வந்தான்—எ-று. (சுகூ)

போழ்ந்தனயான்செய்தகுறைபொறுக்கெனு
வீழ்ந்தனனடிமிசைவீழவாலிசேய்
தாழ்ந்துகைபற்றிமெய்தழீஇக்கொண்டும்மையான்
சூழ்ந்ததும்பொறுக்கெனுமுதன்மைசொல்லினுன்.

இ-ள். போழ்ந்தன - கத்திவெட்டுப்போல், யான்செய்த - நான்பண்ணின, குறை - குற்றத்தை, பொறுக்கெனு - பொறுத்துக்கொள்ளென்று, அடிமிசை-அங்கதன்கால்மேலே, வீழ்ந்தனன் - விழுந்தான், வீழ - அப்படியவன்விழுமளவில்,வாலிசேய் - அங்கதனுனவன், தாழ்ந்து - குனிந்து, கைபற்றி - அவன்கையைப்பிடித்துத்தூக்கி, மெய் - அவனுடம்பை, தழீஇக்கொண்டு - ஆலிங்கனஞ்செய்துகொண்டு, உம்மை - உங்களையான் சூழ்ந்ததும் நான் பண்ணினதையும், பொறுக்கெனு-பொறுங்களென்று, முதன்மை சொல்லினுன் - அவனுக்கே பிராதானிய முண்டாகச்சொன்னுன்—எ-று. (ரு0)

யாமுதற்குறித்தநாளிறத்தலெண்ணியே
ஏமுறத்துயர்துடைத்தளித்தவேற்றம்போல்
தாமரைக்கண்ணவன்றுயரந்தள்ளநீர்
போமெனத்தொழுதுமுன்னநுமன்போயினுன்.

இ-ள். யாம் - பின்புநாங்கள், முதல் - முன்னே, குறித்தநாள் - கெடுப்பண்ணிவிட்டநாளளவு, இறத்தல் - கடந்துபோனதைக்குறித்து, எண்ணி - ஆலோசித்து, ஏமுற - நாங்கள்கவலைப்பட, துயர்துடைத்து - அத்துன்பத்தைப்போக்கி, அளித்த - எங்களைக்காத்த, ஏற்றம்போல் - உயர்வைப்போலவே, தாமரைக்கண்ணவன்-ஸ்ரீராமனுடைய, வன் துயரம் - வலியதுன்பத்தை, தள்ள - போக்க, நீர்போமென-நீரேமுன்னேபோமென்று அங்கதன்சொல்ல, தொழுது - அங்கதனைவணங்கிக்கொண்டு, முன் - முன்னே, அனுமன்போயினுன் - அனுமாரானவர்போனுர்—எ-று. ()

வன்றிறற்குரிசிலுமுனிவுமாறினுன்
வென்றிகொள்கதிருந்தனவெம்மையாறினுன்
என்றுகொண்டியாவருமெழுந்துபோதலே
நன்றெனவேகினுர்நவைக்கணீங்கினுர்.

இ-ள். வன்திறல் - மிகவும்வலிமையுள்ள, குரிசிலும் - அங்கதனும், முனிவும் - கோபமும், ஆறினுன் - தணிந்தான், வென்றிகொள் - இருளைவெற்றிகொள்ளத்தக்க, கதிரும் - சூரியனும், தன்வெம்மை - தனதுவெப்பம், ஆறினுன் - தணிந்தான், என்றுகொண்டு - என்றுநினைத்து, யாவரும்-எல்லாரும், எழுந்துபோதலே-இனியெழுந்துசெல்லுதலே, நன்றென - நல்லகாரியமென்று, நவைக்கண்-தோஷங்களினின்றும், நீங்கினுர் - தீர்ந்தவானரவீரர்கள், ஏகினுர் - போனுர்கள்—எ-று. ()

இப்புறத்திராமனுமிரவிசேயினை
ஒப்புறநோக்கிவந்துற்றதாயணையர்
தப்புறக்கண்டனமென்பரோதகா
தப்புறத்தென்பரோவறைதியாலென்றுன்.

இ-ள். இப்புறத்து - இங்கே, இராமனும் - ஸ்ரீராமனுனவர், இரவிசேயினை-சுக்கிரீவனை, ஒப்புற - சரியாக நேராக, நோக்கி - பார்த்து, வந்துற்ற-வந்துகூடின,

தானையர் - சேனாபதிகள், தப்புஅற - குற்றமில்லாமல் சந்தேகந்தீர, கண்டனம்-பார்த்தோம், என்பரோ - என்றுசொல்வார்களே, தகாது - அப்படிச்சொல்லமாட்டாமல், அப்புறத்து - இதற்கப்பாலுள்ளஅண்டத்தில், என்பரோ-போய்த்தேடவேணுமென்பார்களோ, அறைதியென்றான் - சொல்லென்றுகேட்டார்—எ-று. (ருங)

என்புழியனுமனுமிரவியென்பவன்
தென்புறத்துளனெனத்தெரிவதாயினான்
பொன்பொழிதடக்கையைப்பொருவில்வீரனும்
அன்புறுசிந்தையனமையநோக்கினான்.

இ-ள். என்புழி - என்றுசொல்லுமிடத்தில், அனுமனும் - அனுமாரானவர், இரவியென்பவன் - சூரியனானவன், தென்புறத்து - தெற்குத்திசையிலும், உளனென - உண்டென்னும்படி, தெரிவது - தோன்றுவது, ஆயினான்-ஆனார், பொன்பொழி - அழகொழுகுகின்ற, தடக்கை - நீண்டகைகளையுடைய, அ - அந்த, பொருவில்-ஒப்பில்லாத, வீரனும் - ஸ்ரீராமனானவர், அன்புஉறு - அன்புமிகுதியான, சிந்தையன் - மனமுள்ளவராகி, அமைய-அனுமார்வருவதைப்பொருந்த, நோக்கினான்-பார்த்தார்—எ-று. அமையஎன்பது குறிப்புத்தோன்றஎனக்கொள்க. (ருச)

எய்தினனநுமனுமெய்தியேந்தறன்
மொய்கழறொழுகிலன்முளரிநீங்கிய
தையலைநோக்கியதலையின்கையினன்
வையகந்தழீஇநெடிதிறைஞ்சிவாழ்த்தினான்.

இ-ள். எய்தினன் - வந்துசேர்ந்தார், அனுமனும் - அனுமார், எய்தி - வந்து, ஏந்தல்தன் - ஸ்ரீராமனுடைய, மொய்கழல்-விரல்கள்மொய்த்த திருவடிகளை, தொழுகிலன் - தொழாதவராய், முளரிநீங்கிய - தாமரைமலரினின்றுநீங்கின, தையலை-சீதாபிராட்டியை, நோக்கிய - இருக்கும்திசையைக்குறித்த, தலையன் - முகமுடையராகி, கையினன் - தலைமேற்கைகுவித்து, வையகந்தழீஇ - பூமியிலேபடிந்து, நெடிது இறைஞ்சி - நீண்டுவிழுந்துவணங்கி, வாழ்த்தினான் - வடிவாய் நின்வலமார்பினில்வாழ்கின்றமங்கையும் பல்லாண்டென்றுசொன்னார் அனுமார்—எ-று. (ருரு)

திண்டிறலவன்செயறெரியநோக்கினான்
வண்டிறலோதியும்வலியண்மற்றிவன்
கண்டதுமுண்டவள்கற்புநன்றனக்
கொண்டனன்குறிப்பினாலுணருங்கொள்கையான்.

இ-ள். திண்டிறல் - மிக்கசாமர்த்தியமுள்ள, அவன்செயல் - அந்தஅனுமாருடையசெய்கையை, தெரிய - விளங்க, நோக்கினான் - பார்த்த ஸ்ரீராமனானவர், வண்டு - வண்டுகள், இறல் - தங்குதலுள்ள, ஓதியும் - கூந்தலையுடையசீதை, வலியள்-சுகமேயிருக்கிறாள் அவளை, மற்றிவன் - இந்த அனுமன், கண்டதுமுண்டு - பார்த்ததுமுண்டு, அவள் - அந்தச்சீதையினுடைய, கற்பும் - பதிவிரதாநிலையும், நன்றுஎன - கலங்கவில்லையென்று, கொண்டனன்-தெரிந்தார், குறிப்பினால்-அனுமார்செய்கையினாலே, உணரும்கொள்கையான் - தெரிந்துகொள்ளத்தக்கவர்—எ-று. (ருசு)

ஆங்கவன்செய்கையையளவையாமெனா
ஒங்கியவுணர்வினால்விளைந்ததுன்னினான்
வீங்கினன்றோள்புனல்கண்கள்விம்மினன்
நீங்கியதருந்துயர்காதனீண்டதே.

இ-ள். ஆங்கவள் - அந்தஅனுமார், செய்கையை - சீதையிருக்கிறதிக்குநோக்கிவந்தனஞ்செயத்தையே, அளவையாமென - கண்டதுண்டென்பதற்குப் பிரமாணமானதென்று, ஓங்கிய - உயர்வுள்ள, உணர்வினல் - தமதுபுத்தியினலே, விளைந்தது - அனுமார்கண்டுவந்ததை, உன்னினன் - தெரிந்துகொண்டு, தோள்வீங்கினன் - புஜங்கள்பூரித்தார், கண்கள் - இரண்டுகண்களிலும், புனல்விம்மினன் - நீர்பெருகுதலாய், அருந்துயர் - நீங்க அரிதான துன்பம், நீங்கியது - நீங்கிப்போயிற்று, காதல் - சீதைமேலாசை, நீண்டது - அதிகமாயிற்று அப்போது—எ-று. (௫எ)

கண்டனென்கற்பினுக்கணியைக்கண்களால்
தெண்டிரையலைகடலிலங்கைத்தென்னகர்
அண்டர்நாயகவினிததுறத்தியையமும்
பண்டுளதுயருமென்றநுமன்பன்னுவான்.

இ-ள். கற்பினுக்கு - பதிவிரதாநிலைக்கு, அணியை - ஆபரணமானபிராட்டியை, கண்களால் - என்கண்களாலே, கண்டனென் - பார்த்தேன், தெண் - தெளிந்த, திரை அலை - அலைகளையுடையதாயலைகின்ற, கடல் - தென்கடலினடுவேயிருக்கிறது, இலங்கை - இலங்கையென்கிற, தென்நகர் - அழகானபட்டணம், அண்டர் நாயக - ஓதெய்வநாயகனே, இனி - இனிமேல், ஐயமும் - சீதாபிராட்டிக் குயிருண்டோ இல்லையோவென்கிறசந்தேகத்தையும், பண்டுஉள - முன்னேநீருடையதான, துயரும் - துன்பத்தையும், துறத்தி - விட்டுவிடும், என்று - முன்னேசொல்லி, அநுமன்பன்னுவான் - அனுமார்பின்னும்சொல்லலானர்—எ-று. (௫அ)

வேறு.

உன்பெருந்தேவியென்னுமுரிமைக்குமுன்னைப்பெற்ற
மன்பெருமருகியென்னும்வாய்மைக்குமிதிலைமன்னன்
தன்பெருந்தனையையென்னுந்தகைமைக்குந்தலைமைசான்றாள்
என்பெருந்தெய்வமையாவின்னமுங்கேட்டியென்பான்.

இ-ள். உன் - உமது, பெருந்தேவியென்னும் - பெருமைக்கேற்றதேவியென்கிற, உரிமைக்கும் - பாத்தியதைக்கும், உன்னைப்பெற்ற - உம்மைஈன்ற, மன் - அரசனான சக்கரவர்த்திக்கு, பெருமருகியென்னும் - முதல்மருமகளென்கிற, வாய்மைக்கும் - மெய்க்கும்சொல்லுக்கும், மிதிலைமன்னன் தன் - ஜனகமகாராஜனுடைய, பெருந்தனையையென்னும் - பிரதானபுத்திரியென்கிற, தகைமைக்கும்-பெருமைக்கும், தலைமைசான்றாள் - யோக்கியதையமைந்திருக்கிறார், என்பெருந்தெய்வம் - எனது பெரியதெய்வமானபிராட்டியார், ஐயா - சுவாமி, இன்னமும்கேட்டி - இன்னம்நான் சொல்வதெல்லாங் கேட்டருளவேணும், என்பான் - என்றுசொல்வாரானர்—எ-று.

பொன்னலதில்லைப்பொன்னையொப்பெனப்பொறையினின்றாள்
தன்னலதில்லைத்தன்னையொப்பெனத்தனக்குவந்த
நின்னலதில்லைநின்னையொப்பெனநினக்குநேர்ந்தாள்
என்னலதில்லையென்னையொப்பெனவெனக்குமீந்தாள்.

இ-ள். பொன்னை - சுவர்ணத்தை, ஒப்பென - நிகரென்றுசொல்ல, பொன் அலது - அந்தச்சுவர்ணமேஅல்லாமல், இல்லை - வேறேஇல்லை, பொறையின் - பொறுமைக்குணத்திலே, நின்றான் தன்னை - நிலைபெற்றுள்ளபிராட்டியாரை, ஒப்பென - நிகரென்றுசொல்ல, தன் அலது - அந்தப்பிராட்டியாரைஅல்லாமல், இல்லை-வேறே ஒருவருமில்லை, தனக்குவந்த - அந்தப்பிராட்டியாருக்குப்பிரியமான, நின்னை - உம்

மை, ஒப்பென – நிகரென்றுசொல்ல, நின் அலது – உம்மையல்லாமல், இல்லை – வேறேஒருவருமில்லை, நினக்கு – உமக்கு, நேர்ந்தான் – அடிமையாகவுடன்பாடானவனுகிய, என்னை – அடியேனை, ஒப்பென – நிகரென்றுசொல்ல, என் அலது – என்னையல்லாமல், இல்லை – வேறேஒருவருமில்லை, எனக்கும் - இப்படிப்பட்டயோக்கியதையை எனக்கும், ஈந்தாள் – கொடுத்தருளினர்—எ-று. (௬௦)

உன்குலமுன்னதாக்கியுயர்புகழ்க்கொருத்தியாய
தன்குலந்தன்னதாக்கிதன்னையித்தனிமைசெய்தான்
வன்குலங்கூற்றுக்கீந்தவ்வானவர்குலத்தைவாழ்வித்
தென்குலமெனக்குத்தந்தாளென்னினிச்செய்வதெம்மோய்.

இ-ள். உன்குலம் – உமதுகுலத்தை, உன்னதாக்கி – உமக்கேஉரியதாகச்செய்து, உயர்புகழ்க்கு – உயர்ந்தகீர்த்திக்கு, ஒருத்தியாய – தாமொருதாயே ஒப்பில்லாதவரென்னலான, தன்குலம் – தமதுகுலத்தை, தன்னதாக்கி – தமக்கேஉரியதாகச்செய்து, தன்னை - ஜெகன்மாதாவானதம்மை, இத்தனிமைசெய்தான் – இப்படித்தனியாகும்படிபிரித்தராவணனுடைய, வன்குலம் – வலியகுலத்தை, கூற்றுக்கு… னுக்கு, ஈந்து – கொடுத்து, அவ்வானவர்குலத்தை – அந்தத்தேவர்கூட்டத்தை… வித்து - வாழச்செய்து, என்குலம் – எனதுகுலத்தையும், எனக்குத்தந்தாள் – … கே உரியதாகச்செய்தார், எம்மோய் - எமதுதாயானபிராட்டி, இனிச்செய்வதுஎன்… ன்னஞ்செய்யவேண்டுவதென்னிருக்கின்றது—எ-று. என்றால், பிராட்டியினு… ய கலங்காநிலையினாலே ராட்சதர்களுக்கழிவும் மற்றெல்லாருக்கு நன்மையுமே… டாயிற்றென்று கருத்து.

விற்பெருந்தடந்தோள்வீரவீங்குநீரிலங்கைவெற்பின்
நற்பெருந்தவத்தளாயநங்கையைக்கண்டேனல்லேன்
இற்பிறப்பென்பதொன்றுமிரும்பொறையென்பதொன்றும்
கற்பெனும்பெயரதொன்றுங்களிநடம்புரியக்கண்டேன்.

இ-ள். வில் – வில்லேந்தின, பெருந்தடந்தோள்-மிகவும் பெரிதானபுய… யுடைய, வீர – மகாவீரரான சுவாமி, வீங்குநீர் – பெருகிறநீர்சூழ்ந்த, இலங்கை… ங்கையாகிய, வெற்பின் – மலையிலே, நற்பெரு - நல்லபெரிதான, தவத்தளாய… துதவபத்தினியான, நங்கையை – பதிவிரதாநிலையிற் சிறந்ததாயைமாத்திரம்… டேனல்லேன் – நான்பார்த்திலேன், இற்பிறப்பென்பதொன்றும் – குடிப்பிற… ன்கிற ஒருகுணமும், இரும்பொறை - பெரிதானபொறுமை, என்பதொன்று… ன்கிறகுணமும், கற்பெனும் - பதிவிரதையென்கிற, பெயரது – பெயருள்ள… ஒன்றும் – ஒருகுணமும்கூடி, களிநடம் – சந்தோஷமானநடனத்தை, புரிய – … துகொண்டிருக்க, கண்டேன் - பார்த்தேன்—எ-று.

கண்ணினுமுளைநீதையல்கருத்தினுமுளைநீவாயின்
எண்ணினுமுளைநீகொங்கையிணைக்குவைதன்னினெவ்வா
தண்ணலவெங்காமனெய்தவலரம்புதொளைத்தவாருப்
புண்ணினுமுளைநீநின்னைப்பிரிந்தமைபொருந்திற்றுமோ.

இ-ள். தையல் – அந்தப்பிராட்டியாருடைய, கண்ணினும் – நேத்திரங்களிலும், உளைநீ – நீரிருக்கிறீர், கருத்தினும் – உள்ளத்திலும், உளைநீ – நீரிருக்கிறீர், வாயின் - வாயினாலே, எண்ணினும் – பேசுமிடத்திலும், உளைநீ - நீரிருக்கிறீர், கொங்கை-தனங்களான, இணைக்குவைதன்னின் – இரண்டுகுவியல்களிலும், ஒவ்வாது – மனத்

திலேசம்மதியில்லாமல், அண்ணல் – பெருமையுடைய, வெம்காமன் – விருப்பத்தையுண்பெண்ணுகிறமன்மதன், எய்த – பிரயோகித்த, அலர்அம்பு – புட்பபாணங்கள், தொளைத்த – துவாரஞ்செய்த, ஆருப்புண்ணினும் – உலராதபுன்களிலும், உளைநீ–நீரிருக்கிறீர்ஆனல், நின்னை – உம்மைபிரிந்தது பிரிந்திருக்கிறதென்பது, பொருந்திற்று – சரியானது, ஆமோ – ஆகுமோஆகாது—எ-று. பிராட்டி உம்மைப்பிரியவில்லையென்கிருர். (௬௩)

வேலையுளிலங்கையென்னும்விரிநகரொருசார்விண்டோய்
காலையுமாலைதானுமில்லதோர்கனகக்கற்பச்
சோலையங்கதனினும்பிபுல்லினற்றொடுத்ததூய
சாலையினிருந்தாளையதவஞ்செய்ததவமாந்தையல்.

இ-ள். வேலையுள் – கடலில், ஒருசார் – ஒருபுறத்திலே, இலங்கையென்னும்–இப்பெயருள்ளதாய், விரிநகர் – விசாலமானபட்டணம்அதில், விண்தோய் - ஆகாயத்தையளாவுவதான, காலையும் – பகலும், மாலைதானும் – இராவும், இல்லது – தெரியாதிருப்பதான, ஓர் – ஒரு, கனகம் – சுவர்ணமயமுள்ள, கற்பச்சோலை – விண்தோய்கற்பகச்சோலையென்பதொன்றிருக்கிறது, அங்கதனின் – அங்குள்ள அந்தச்சோலையிலே, உம்பி – உமதிளவலானவர், புல்லினல் – புல்லாலே, தொடுத்த - வேய்ந்தமைத்த, தூயசாலையில் – சுத்தமானபன்னசாலைக்குள்ளேதான், இருந்தாள் – இருப்பதாளுர், ஐய – சுவாமி, தவஞ்செய்த – தவமேநோற்றுப்பெற்ற, தவமாம் – தவவடிவான, தையல் – உமக்குமனேரம்மியமான எங்கள்பிராட்டி—எ-று. (௬௪)

மண்ணொடுங்கொண்டுபோனன்வானுயர்கற்பினுடன்
புண்ணியமேனிதீண்டவஞ்சுவானுலகம்பூத்த
கண்ணகன்கமலத்தண்ணல்கருத்திலாட்டொடுதல்கண்ணின்
எண்ணருங்கூருய்மாய்தியென்றதோர்மொழியுண்டென்பான்.

இ-ள். மண்ணொடும் – மண்ணுடனே, கொண்டுபோனன் - எடுத்துக்கொண்டுபோனன், வான்உயர் – மிகப்பெரிய, கற்பினள்தன் – மகாபதிவிரதையானபிராட்டியுடைய, புண்ணியமேனி - பரிசுத்தசரீரத்தை, தீண்ட – தொட, அஞ்சுவான்-பயந்தவனகி ஏனென்ருல், உலகம்பூத்த – உலகமெல்லாம்சிருஷ்டித்த, கண்அகன்-இடமகன்ற, கமலத்து – தாமரைமலரின்மேலிருக்கிற, அண்ணல்-பிரமதேவனனவர், கருத்து – கூடுகிறஎண்ணம், இலாள் – இல்லாதயாரேனும் ஒருத்தியை, தொடுதல் கண்ணில் – தொடுதற்குநீஎண்ணினல், எண்அரும் – எண்ணுதற்கரிதான, கூருய்–துள்களாகி, மாய்தி – அழிந்துபோவாய், என்றது – என்றிட்டசாபமாகிய, ஓர்மொழியுண்டு – ஒருசொல்லுண்டு, என்பான்-என்றுபின்னுஞ்சொல்லுவார்அனுமார்-எ-று.

தீண்டிலனென்னும்வாய்மைதிசைமுகன்செய்தமுட்டை
கீண்டிலதநந்தனுச்சிகிழிந்திலதெழுந்துவேலை
மீண்டிலசுடர்கள்யாவுமவிழ்ந்திலவ்வதஞ்செய்கை
மாண்டிலதென்னுந்தன்மைவாய்மையானுணர்திமன்னே.

இ-ள். தீண்டிலன் – அவன்தொடாதிருக்கிருன், என்னும்-என்பதான, வாய்மை – எனதுசொல்லினை, திசைமுகன் – பிரமாவினலே, செய்த-சிருஷ்டிக்கப்பட்ட, முட்டை – இந்தஅண்டமானது, கீண்டிலது – கிழியாதிருக்கிறதும், அநந்தன்–ஆதிசேடனுடைய, உச்சி – தலையானது, கிழிந்திலது – பிளவாதிருக்கிறதும், எழுந்து – பொங்கி, வேலை – கடல்கள், மீண்டில - வராதிருக்கிறதும், சுடர்கள்யாவும்–

சூரியசந்திரர்முதலான தேஜோராசிகளெல்லாம், விழுந்தில - கவிழ்ந்துவிழாதிருக்கிறதும், வேதம் - வேதங்களை, செய்கை - அப்பியசித்தல், மாண்டிலது - போகாதிருக்கிறதும், என்னுந்தன்மை - என்பதான இப்படிகள், வாய்மையான் - மெய்யாயிருத்தல்கண்டு, உணர்தி - நம்பக்கடவீர்—எ-று. (சுசு)

சோகத்தாளாயநங்கைகற்பினாற்றொழுதற்கொத்த
மாகத்தார்தேவிமாரும்வான்சிறப்புற்றார்மற்றைப்
பாகத்தாளிப்போதீசன்மகுடத்தாள்பதுமத்தாளும்
ஆகத்தாளல்லளமாயனாயிரமௌலிமேலாள்.

இ-ள். சோகத்தாள்ஆய் - துக்கமுள்ளவளான, நங்கை - குணபூர்ணையானபிராட்டியின், கற்பினால் - பதிவிரதாநிலையைக்கண்டு, தொழுதற்கு - வணங்குதற்கு, ஒத்த - உடன்பாடான, மாகத்தார் - ஆகாசவாசிகளுடைய, தேவிமாரும் - மனைவியர்களெல்லாம், வான்சிறப்பு - இப்போதுபெருஞ்சிறப்பை, உற்றார் - தந்தம்புருஷர்களாலேஅடைவதானார்கள், மற்றைப்பாகத்தாள் - இடப்புறத்துள்ள பார்வதிதேவி, இப்போது - பிராட்டிமகிமைவிளங்குகிற இக்காலத்திலே, ஈசன் - பரமசிவனாலே மகுடத்தாள் - சிரசாவகிக்கலானாள் சிவன்தலைமேலிருக்கலானாள், பதுமத்தாளும்- பூமகளானஇலட்சுமிதேவியும், ஆகத்தாள் - திருமால்மார்பிலுள்ளவள், அல்லள்-அல்லளாகி, மாயன் - அந்தஆச்சரியகுண சேஷ்டிதனுடைய, ஆயிரமௌலிமேலாள்- ஆயிரந்தலைகள்மேலுமிருப்பதானாள்—எ-று. (சுஎ)

இலங்கையைமுழுதுநாடியிராவணனிருக்கையெய்திப்
பொலங்குழையவரையெல்லாம்பொதுவுறநோக்கிப்போந்தேன்
அலங்குதண்சோலைபுக்கேனவ்வழியணங்கனாளைக்
கலங்குதெண்டிரையிற்றூயகண்ணீர்க்கடலிற்கண்டேன்.

இ-ள். இலங்கையை - இலங்காபுரியை, முழுதுநாடி - முழுதுஞ்சுற்றிப்பார்த்து, இராவணன் - பின்பிராவணனுடைய, இருக்கையெய்தி - வீட்டிற்குப்போய், பொலங்குழையவரையெல்லாம் - அவன்மனைவிகளையெல்லாம், பொதுவுற - சமதிருஷ்டியாக, நோக்கி - பார்த்துக்கொண்டு, போந்தேன் - போயினேன்பின்பு, அலங்கு - ஒளிஅசைதலான, தண்சோலை - குளிர்ந்தசோலைக்குள்ளே, புக்கேன் - போயினேன், அவ்வழி - அவ்விடத்திலே, அணங்குஅனாளை - எனதுகுலதெய்வம் போல்வாளை, கலங்கு - காற்றாலேகலங்குதலாகி, தெண்திரையில் - தெளிந்தஅலைகள்போல், தூய - மோதிவழிகிற, கண்ணீர் - கண்களினீர்ப்பிரவாகமான, கடலில் - கடலுக்குள்ளேமுழுகியிருக்கக்கண்டேன் தரிசித்தேன்—எ-று. (சுஅ)

அரக்கியரளவற்றாருமலகையின்குழுவுமஞ்சச்
செருக்கினல்கண்டுசெய்யமெய்க்கனறீக்கச்சேர்த்த
இரக்கமென்றொன்றுதானேயேந்திழைவடிவமெய்தித்
தருக்கியசிறையுற்றன்னதகையளத்தம்பியளம்மா.

இ-ள். அரக்கியர் - ராட்சதிகள், அளவற்றாரும் - அளவில்லாத பேர்களும், அலகையின்குழுவும் - பசாசுக்கூட்டங்களும், அஞ்ச - பயப்படும்படி, செருக்கு - கர்வித்துச்செய்கிற, இனல் - துன்பங்களையெல்லாம், கண்டு-பார்த்துப்பொறுமையுடனே, செய்ய - தமதுசிவந்த, மெய்க்கனல் - சரீரத்துள்ளபதிவிரதாக்கினி, தீக்க-அவர்களைச்சுட, சேர்த்த-உமதுபெருமைக்கேற்றதான, இரக்கமென்றொன்றுதானே-இரக்கமென்கிறஒருபொருளே, ஏந்திழைவடிவமெய்தி-ஒருபெண்வடிவுகொண்டு, தருக்

கிய - ஒளிவரு - முழுநலமென்றாற்போல் உமது காருண்ணியமொளியுறுதற்குகளித் திருத்தற்கு, சிறை - ஒருவன்காவலிலே, உற்றன்ன - அகப்பட்டிருந்தாற்போலும், தகையள் - தகுதியுள்ளவர், அத்தமியள் - அங்குப்பிரிந்தொருவராயிருக்கிற ஜகன்மாதா—எ-று. (சுக)

மாண்பிறந்தமைந்தகற்பின்வா ணுதனின்பால்வைத்த
சேண்பிறந்தமைந்தகாதல்கண்களிற்றெவிட்டித்தீராக்
காண்பிறந்தமையாளீயேகண்ணகன்ஞாலந்தன்னுள்
ஆண்பிறந்தமைந்தசெல்வமுண்டனையாதியன்றே.

இ-ள். மாண்பிறந்து - நாண்முதலியபெருமைகளுளவாகி, அமைந்த - உமக்குப்பாரியையான, கற்பின் - கலங்காநிலையுள்ள, வாணுதல் - சீதாபிராட்டியானவர், நின்பால்வைத்த - உம்மிடத்திலேகொண்டுள்ள, சேண்பிறந்து - உயர்வுள்ளதாய், அமைந்த - இருக்கிற, காதல் - பிரேமத்தை ஆசையை, கண்களில்-உம்முடையகண்களாலே, தெவிட்டி - முழுதுங்கண்டனுபவித்தும், தீரா - போதாமல், காண்-இன்னமுங் கண்டுகொண்டிருக்கவே, பிறந்தமையால் - நீரவதரித்தருளினதினாலே,நீயே நீர்தாமே நீரொருவரே, கண்அகன் - இடமகன்ற, ஞாலந்தன்னுள் - இந்தவுலகத்திலே, ஆண்பிறந்து - ஆண்மகனாக அவதரித்து, அமைந்த - இருப்பதான, செல்வம்-பாக்கியத்தை, உண்டனையாதி - அனுபவித்தவராகிறீர்—எ-று. மாண்பு மாண் காணகாண் - தொகுத்தலெனக்கொள்க. (எ0)

அயிர்ப்பிலர்காண்பார்முன்னுமறிந்திலரெனினுமைய
வெயிற்புனையிலங்கைமூதூரிந்திரன்யாக்கைக்கேற்ற
மயிற்புனையியலினருமைந்தருநாளுமங்கே
உயிர்ப்பொடுமுயிரினோடுமூசனின்றுடுவாரும்.

இ-ள். ஐய - சுவாமி, எயில்புனை - மதிலாலேசூழப்பட்டிருக்கிற, இலங்கை மூதூர் - இலங்காபுரியிலே, இந்திரன் - தேவேந்திரனுடைய, யாக்கைக்கு - சரீரத்துள்ள ஆயிரங்கண்களுக்கும் - ஆயிரங்கண்களாலும், எற்ற - பார்க்கத்தகுதியான, மயில்புனை - மயில்போலுஞ்சாயலைக்கொண்ட, இயல்பினரும் - அழகுள்ளபெண்களும், மைந்தரும் - இந்திரன் முதலானபுருஷர்களும், ஆங்கே - அவ்வூரிலே, உயிர்ப்பொடும் - சுவாசம்விடுதலுடனே, உயிரின் - காற்றைப்போல்வேகமாக, ஓடும்-ஓடப்பட்ட, ஊசல் - ஊழியஞ்செய்தற்கு ஊசலைப்போல், நின்று -நிலைகொண்டு, ஆடுவாரும் - போகிறதும் வருகிறதுமாயிருக்கிறயாவரும், எனினும் - யான்கண்டறிந்ததிலும், அயிர்ப்புஇலர் - சந்தேகமில்லாதவர்களாய், காண்பார் - கண்டுகொண்டிருக்கிறார்கள், முன்னும் - முற்காலத்திலும், அறிந்திலர் - பிராட்டி தவநிலையைப்போலுள்ள வேறொருவரையுங் கண்டறியார்கள்—எ-று. இந்திரனியற்கைக்கென்று பாடமானால் அவன்பெருமைக்கேற்ற என்க. (எக)

தையலைவணங்கற்கொத்தவிடைபெறுந்தன்மைநோக்கி
ஐயயானிருந்தகாலையலங்கல்வேலிலங்கைவேந்தன்
எய்தினனிரந்துகூறியிறைஞ்சினனிருந்துநங்கை
வெய்துரைசொல்லச்சீறிக்கோறன்மேற்கொண்டுவிட்டான்.

இ-ள். தையலை - பிராட்டியை, வணங்கற்கு - கண்டுவணங்குதற்கு, ஒத்த-நேரான, இடைபெறும் - சமயம்பெறுவதான, தன்மைநோக்கி-காலம்பார்த்து, ஐய-சுவாமி, யானிருந்தகாலை - நான்காத்திருக்கிறபோது, அலங்கல் - வெற்றிமாலையணிந்த, வேல் - வேலாயுதத்தையுடைய, இலங்கைவேந்தன் - இராவணன், எய்தினன்-

அங்குவந்தான்வந்து, இரந்து – பிராட்டிக்கிதமானவார்த்தைகளை, கூறி - சொல்லி, இறைஞ்சினன் - வணங்கினான், இருந்து - அதுகேட்டிருந்துகொண்டுதிடமாக, நங்கை - பிராட்டியாரானவர், வெய்துரை – கொடுஞ்சொற்கள், சொல்ல-சொல்லக்கேட்டு, சீறி – கோபங்கொண்டு, கோறல் – கொல்லுதற்கு, மேற்கொண்டு – உடன்பாடாகி, விட்டான் – விட்டுப்போயினான்—எ-று. (எஉ)

ஆயிடையணங்கின்கற்புமையநின்னருளுஞ்செய்ய
தூயநல்லறனுமென்றிங்கிணையனதொடர்ந்துகாப்பப்
போயினனரக்கிமாரைச்சொல்லுமின்பொதுவினென்றாங்
கேயினனவரெலாமென்மந்திரத்துறங்கியிற்றார்.

இ-ள். ஆயிடை - அப்போது, அணங்கின் - தெய்வமாதாவான பிராட்டியினது, கற்பும் – பதிவிரதாநிலையும், ஐய – சுவாமி, நின்னருளும் – உமதுகிருபையும், செய்ய – செவ்வையாகிய, தூய - பரிசுத்தமுள்ள, நல் அறனும்-நல்லதருமமும், என்று-இங்கு என்று இவ்வுலகிலே சொல்லலான, இணையன – இவைகளெல்லாம், தொடர்ந்து – என்னை அனுசரித்து, காப்ப – பிராட்டிக்குக்காவலாகநிற்க, அரக்கிமாரை-ராட்சதிகளைப்பார்த்து, பொதுவிற்சொல்லுமினென்று-நடுநிலையாகச்சொல்லுங்களென்று, ஏயினன் - விடைகொடுத்தவனாகி, போயினன் - போய்விட்டான், அவரெல்லாம் - அந்தராட்சதிகளெல்லாம், என்மந்திரத்து – எனதுமந்திரபலத்தினாலே, உறங்கியிற்றார் – தூங்கிப்போனார்கள்—எ-று. தனக்கும் பிராட்டிக்கும் நடுநிலையென்றது மத்தியஸ்தராக என்க. (எங)

அன்னதோர்பொழுதினங்கையாருயிர்துறப்பதாக
உன்னினள்கொடியொன்றேந்திக்கொம்பொடுமுறைப்பச்சுற்றித்
தண்மணிக்கழுத்திற்சார்த்துமளவையிற்றடுத்துநாயேன்
பொன்னடிவணங்கிநின்றுநின்பெயர்புகன்றபோதில்.

இ-ள். அன்னது – அப்படியாகிய, ஓர்பொழுதில் - ஒருகாலத்திலே, நங்கை-பிராட்டியானவர், ஆர் உயிர் - தமதரியவுயிரை, துறப்பதாக - விடுகிறதாக, உன்னினள் – எண்ணி, கொடியொன்று - ஒருகொடியை, ஏந்தி-கையிலேகொண்டு, கொம்பொடும் – ஒருமரக்கொம்பிலே, உறைப்ப - அழுத்தமாக, சுற்றி - சூழக்கட்டி, தன்மணி – தனதழகிதான, கழுத்தில் – கழுத்திலே, சார்த்தும் - சேரப்பூட்டுகிற, அளவையில் – சமயத்திலே, நாயேன் தடுத்து - நான்போய்த்தடைசெய்து, பொன்னடி-தேவியதுபொன்னடிகளை, வணங்கிநின்று – கும்பிட்டு நின்றுகொண்டு, நின்பெயர்-உமதுதிருநாமத்தை, புகன்றபோதில் - சொன்ன அளவிலே—எ-று. (எச)

வஞ்சனையரக்கர்செய்கையிதுவெனமனக்கொண்டேயும்
அஞ்சனவண்ணத்தான்றன்பெயருரைத்தளியையென்பால்
துஞ்சுறுபொழுதிற்றந்தாய்துறக்கலென்றுவந்துசொன்னாள்
மஞ்செனவணமென்கொங்கைவழிகின்றமழைக்கணீராள்.

இ-ள். வஞ்சனை – கபடரான, அரக்கர் – ராட்சதர்களுடைய, செய்கை – மாயாகாரியமே, இதுவென – இவன்சொல்லுகிறதென்று, மனக்கொண்டேயும் - திருவுள்ளத்திலேதெரிந்தும், அஞ்சனம் – மைபோலும், வண்ணத்தான்றன்-நிறமுள்ள ராமபிரானுடைய, பெயர் உரைத்து - திருநாமத்தைச்சொல்லி, என்பால்-என்னிடத்திலே, அளியை - இரங்கத்தக்கநீ, துஞ்சுறுபொழுதில் - நான்சாமளவில், துறக்கல் தந்தாய் – அச்சாதலை விடுதல்செய்தாய், என்று உவந்து - என்றுமகிழ்ந்து, சொன்

ஞள் – சொல்லிஞள், மஞ்சென – மலேமேற்பெய்கிறமேகமென்ஞும்படி, வனம் – அழகுள்ள, மென்கொங்கை – மெல்லியதனங்களிலே, வழிகின்ற – சிந்துகிற, மழை-குளிர்ச்சியுள்ள, கண் – கண்களிலே, நீராள் – ஜலப்பிரவாகமுள்ளவள்—எ-று. ()

அறிவினிற்றேறிச்சொன்னபேரடையாளம்யாவும்
செறிவுறநோக்கிநாயேன்சிந்தையிற்றிருக்கமின்மை
முறிவறவெண்ணிவண்ணமோதிரங்காட்டக்கண்டாள்
இறுதியினுயிர்தந்தீயுமருந்தொத்ததனையதெந்தாய்.

இ-ள். அறிவினில் – தமது புத்திக்குள்ளே, தேறி – என்னை நம்புதலால், சொன்ன – நான்சொன்ன, பேர் அடையாளம் – பெரிதான அடையாளங்களை, யாவும் – எல்லாம், செறிவுற – தமதுமனத்துக்குப்பொருந்த, நோக்கி – பார்த்து, நாயேன் – நாய்போன்ற எனது, சிந்தையில் – மனத்திலே, திருக்கமின்மை – தோஷமில்லாமையை, முறிவு அற – ஒடிதலில்லாமல், எண்ணி – ஆலோசித்து, வண்ணம் – அழகுள்ள, மோதிரம் – மோதிரத்தையும், காட்ட – நான்காணச்செய்ய, கண்டாள்-பார்த்தாள், இறுதியின் – உயிர்போங்காலத்திலே, உயிர்தந்து – உயிரைப்போகாமல் நிலைநிறுத்தி, ஈயும் – ரட்சிப்பதான, மருந்து – அவிழ்தத்தை, ஒத்தது – ஒப்பாயிற்று, அனையது – அந்தமோதிரம், எந்தாய் – என்சுவாமி—எ-று. (௭௬)

ஒருகணத்திரண்டுகண்டேனொளிமணியாழியான்ற
திருமுலேத்தடத்துவைத்தாள்வைத்தலுஞ்செல்வநின்பால்
விரகமென்பதனின்வந்தவெங்கொழுந்தீயினுல்வெந்
துருகியதுடனேயாறிவலித்ததுகுளிர்ப்புள்ளூற.

இ-ள். ஒருகணத்து – ஒருக்ஷணப்பொழுதிலே, இரண்டு – இரண்டுசெய்கையை, கண்டேன் – நான்பார்த்தேன், ஒளி – காந்தியுள்ள, மணியாழி – ரத்நமோதிரத்தை, ஆன்ற – அமைந்துள்ள, திருமுலேத் தடத்து – அழகான முலேமுகட்டின் மேலே, வைத்தாள் – சேர்த்திஞள், வைத்தலும் – சேர்த்தவுடனே, செல்வ – ஒமஹாப்பிரபு, நின்பால் – உமதிடத்துள்ள, விரகமென்பதனின் – ஆசையென்பதஞலே, வந்த – உண்டான, வெம் – வெப்பமுள்ள, கொழும் – செழிய, தீயினுல் – நெருப்பிஞலே, வெந்து – வேவுதலாகி, உருகியது – அம்மோதிரம் உருகலாயிற்று, உடனே-அப்போதே, ஆறி – அச்சூடுதணிந்து, வலித்தது – கெட்டியாயிற்று, குளிர்ப்பு – சந்தோஷமான குளிர்ச்சி, உள்ளூற – உள்ளேபெருகலால்—எ-று. (௭௭)

வாங்கியவாழிதன்னைவஞ்சரூர்வந்ததாமென்
றுங்குயர்மழைக்கணீராலாயிரங்கலசமாட்டி
ஏங்கினளிருந்ததல்லாலியம்பலளெய்த்தமேனி
வீங்கினள்வியந்ததல்லாலிமைத்திலளுயிர்ப்புவிண்டாள்.

இ-ள். வாங்கிய – என்கையிலிருந்துகொண்ட, ஆழிதன்னை – அந்தமோதிரத்தை, வஞ்சரூர் – வஞ்சகரான ஈனர்களுடைய ஊரிலே, வந்தது ஆமென்று – வரலாயிற்றேயென்று, ஆங்கு – அப்போது, உயர் – உயர்ந்துள்ளமிகுந்த, மழைக்கண்-குளுந்தகண்களின், நீரால் – ஜலத்திஞலே, ஆயிரம் – ஆயிரமளவுள்ள, கலசம் – கலசநீரால், ஆட்டி – அதை ஆடச்செய்து, ஏங்கினள் – அழுதாளாகி, இருந்தது – பேசாதிருந்ததை, அல்லால் – அல்லாமல், இயம்பலள் – ஒன்றும்பேசாதவளாகி, எய்த்த-முன் இளைத்திருந்த, மேனி – சரீரமானது, வீங்கினள் – பூரித்தாள், வியந்தது – பி

ன்னும்அதிசயித்திருந்ததை, அல்லால் - அல்லாமல், இமைத்திலள் - கண்சிமிட்டாதவளாய், உயிர்ப்பு - சுவாசமும், விண்டாள் - நீங்கியிருந்தாள்—எ-று. (எஅ)

அன்னவர்க்கடியனேனிற்பிரிந்தபினடுத்தவெல்லாம்
சொன்முறையறியச்சொல்லித்தோகைநீயிருந்தசூழல்
இன்னதென்றறிகிலாமேயித்தனைதாழ்த்ததென்றே
மன்னநின்வருத்தப்பாடுமுணர்த்தினெனுயிர்ப்புவந்தாள்.

இ-ள். அன்னவர்க்கு - அப்படியிருந்த ஜகன்மாதாவுக்கு, அடியனேன் - அடியேனானநான், நிற்பிரிந்தபின் - உம்மை அந்தமாதாபிரிந்தபின்பு, அடுத்த எல்லாம்- நடந்தவைகள்முழுதும், சொன்முறை - நான்சொல்லும்படியே, அறிய - அவர்தெரிந்துகொள்ள, சொல்லி - சொல்லியானபின், தோகை - தாயே, நீயிருந்தசூழல் - நீர்பிரிந்திருக்குமிடம், இன்னதென்று - இவ்விடமென்று, அறிகிலாமே - தெரியாமல், இத்தனை - இவ்வளவுகாலம், தாழ்த்தது - தாமதமாயிற்று, என்றே - என்பதாகவேசொல்லி, மன்ன - ஒசக்கிரவர்த்தித்திருமகனே, நின்வருத்தப்பாடும் - நீர்வருத்தப்படுகிறதெல்லாம், உணர்த்தினென் - தெரியச்சொன்னேன், உயிர்ப்பு - அப்படிநான்சொல்லக்கேட்டபின்புதான் சுவாசம், வந்தாள் - உண்டாயினாள்—எ-று. (எகூ)

இங்குளதன்மையெல்லாமியைபுளியியையக்கேட்டாள்
அங்குளதன்மையெல்லாமடியனுக்கறியச்சொன்னாள்
திங்களொன்றிருப்பெனின்னேதிருவுளந்தீர்ந்தபின்னை
மங்குவெனுயிரோடென்றுன்குரைகழற்றலைக்கண்வைத்தாள்.

இ-ள். இங்குள - இங்கேயுண்டான, தன்மையெல்லாம் - செய்கைகளெல்லாம், இயைபுளி - கிரமப்படியே, இயைய - நான்பொருந்தச்சொல்ல, கேட்டாள்- கேள்விகொண்டு, அங்குள - அங்கேயிருக்கிற, தன்மையெல்லாம் - செய்கைகளெல்லாம், அடியனுக்கு - அடியேனுக்கு, அறிய - தெரிவதாக, சொன்னாள் - சொல்லினார், திங்களொன்று - ஒருமாதஅளவுதான், இருப்பென் - உயிரோடிருப்பேன், இன்னே - இப்போதே, திருவுள்ளம் - உமக்குத்தயவு, தீர்ந்தபின்னை - என்மேலில்லாதபோது, உயிரொடமங்குவென - இந்தவுடம்புடனேகரைந்துபோவேன், என்று- என்றுசொல்லி, உன்குரைகழல் - உமதுதிருவடியைக்குறித்துவணங்கி, தலைக்கண்- தமதுதலைமேல், வைத்தாள் - மானசீகமாகக்கொண்டருளினார்—எ-று. (அ௦)

வைத்தபின்றுகிலின்வைத்தமாமணிக்கரசைவாங்கிக்
கைத்தலத்தினிதினீந்தாடாமரைக்கண்களார
வித்தககாண்டியென்றுகொடுத்தனன்வேதநன்னூல்
உய்த்துளகாலமெல்லாம்புகழொடுமொக்கநிற்பான்.

இ-ள். வைத்தபின்-அப்படித்தலைமேற்கொண்டபின்பு, துகிலின் - தமதுமுன்றானையிலே, வைத்த - முடிந்திருந்த, மா - பெருமையுள்ள, மணிக்கரசை - சூடாமணியை, வாங்கி - அவிழ்த்தெடுத்து, கைத்தலத்து - என்கையிலே, இனிதின் - உமக்குச்சந்தோஷமாக, ஈந்தார் - கொடுத்தருளினார், தாமரை - தாமரைமலர்போலும், கண்கள் - உம்முடையநேத்திரங்கள், ஆர - நிரம்ப, வித்தக - ஒ ஞானசுவரூபி, காண்டியென்று - பாருமென்று, கொடுத்தனன் - கொடுத்தானுமார், வேதநன்னூல்-நல்லவேதசாஸ்திரங்கள், உய்த்துள - வழங்குதலான, காலமெல்லாம் - காலதத்துவமுள்ளஅளவும், புகழொடும் - ஸ்ரீராமனுடைய கீர்த்தியுடனே, ஒக்க - சேர்ந்தவராக, நிற்பான் - நிலைபெறலானவர் - எ-று. (அக)

பையப்பயந்தகாமம்பரிணமித்துயர்ந்துபொங்கி
மெய்யுறவெதும்பியுள்ளமெலிவுறுநிலையைவிட்டான்
ஐயனுக்கங்கிமுன்னரங்கையாற்பற்றுநங்கை
கையெனலாயிற்றன்றேகைபுக்கமணியின்காட்சி.

இ-ள். பையைய-மெள்ளமெள்ள, பயந்த-உண்டான, காமம்-ஆசையானது, பரிணமித்து-வளர்ந்து, உயர்ந்து-உயர்ச்சியாய், பொங்கி-மேன்மேலாகி, மெய்உற-தேகமுழுதும்அதிகமாக, வெதும்பி-வெப்பங்கொண்டு, உள்ளம்-மனசு, மெலிவுறு-இளைக்கிற, நிலையை-சுவபாவத்தை, விட்டான்-ஸ்ரீராமன்நீங்கினாராகி, ஐயனுக்கு - அந்த ஸ்ரீராமனுக்கு, அங்கிமுன்னர்-அக்கினிசாட்சியாக, அங்கையால்-தமதழகியகையினாலே, பற்றும்-பிடித்ததான, நங்கை-சீதாபிராட்டியினுடைய, கையெனல்-கையேயென்றுசொல்லுதற்கு, ஆயிற்று-சரியாயிருந்தது, அன்றே - அல்லவோ, அக்கை-அவர்கையிலே, புக்க-புகுதலான, மணியின்-சூடாமணியினது, காட்சி-தோற்றம்—எ-று.

பொடித்தனவுரோமம்போந்துபொழிந்தனகண்ணீர்பொங்கித்
துடித்தனமார்புந்தோளுந்தோன்றினவியர்வின்றுள்ளி
மடித்ததுமணிவாயாவிவருவதுபோவதாகித்
தடித்ததுமேனியென்னேயாருளர்தன்மைதேர்வார்.

இ-ள். பொடித்தனஉரோமம்-மயிர்சிலிர்த்தலாயின, போந்து-வழிந்து, பொழிந்தனகண்ணீர்-கண்களினீரானவைசிந்தலாயின, பொங்கி-பூரித்து, மார்பும்-நெஞ்சும், தோளும்-புஜங்களும், துடித்தன-துள்ளலாயின, வியர்வின் துள்ளி – வேர்வைகளின்றுளிகள், தோன்றின-மிகவுந்தோன்றலாயின, மணிவாய் - அழகியவாயானது, மடித்தது-தானேமடிப்பதாயிற்று, ஆவி-உயிரானது, வருவது-வெளியேவருகிறதும், போவது-உள்ளேபோகிறதும், ஆகி-உள்ளதாய், மேனி-உடம்பெல்லாம், தடித்தது-விம்முவதாயிற்று, என்னே-இப்படியாகிறது என்னஆச்சரியம், தன்மை-அவ்விதசுவபாவங்களை, தேர்வார் - தெரிந்துசொல்லவல்லவர்கள், யாருளர் – யாரிருக்கிறார்கள் எ-று. (௮௩)

ஆயிடைக்கவிகளோடுமங்கதன்முதலினோயோர்
மேயினர்வணங்கிப்புக்கார்வீரனைக்கவியின்வேந்தைப்
போயினகருமமுற்றிப்புகுந்ததோர்பொம்மறன்னால்
சேயிருமதியமென்னத்திகழ்தருமுகத்தரானார்.

இ-ள். ஆயிடை – அப்போது, கவிகளோடும் – வானரவீரர்களுடனே, அங்கதன் – வாலிகுமாரனே, முதலினோயோர் – முதலானவானரங்கள், மேயினர் – வந்துகூடி, வீரனை – ஸ்ரீராமனையும், வணங்கிப்புக்கார் – வணங்கிக்கொண்டுபோய் பின்பு, கவியின்வேந்தை – சுக்கிரீவனையும், போயின – தாங்கள்போன, கருமம் – காரியம், முற்றிற்று – முடிந்தது, என்பது – என்பதான, ஓர்பொம்மல்தன்னால் – ஒருசந்தோஷத்தினாலே, சேயிரு – மிகப்பெரியதான, மதியமென்ன – சந்திரன்போல், திகழ்தரு – விளங்குகின்ற, முகத்தரானார் – முகமுள்ளவர்களானார்கள்—எ-று. (௮௪)

ஆண்டையினருக்கன்மைந்தனையகேளரிவைநம்பால்
காண்டலுக்கெளியளானாளென்றலுங்காலந்தாழ
ஈண்டினுமிருத்திபோலாமென்றனனென்றலோடும்
தூண்டிரண்டனையதோளான்பொருக்கெனவெழுந்துசொன்னான்.

இ-ள். ஆண்டையின் - அப்போது, அருக்கன்மைந்தன், சுக்கிரீவனானவன், ஐயகேள் - சுவாமிகேட்பீராக, அரிவை - பிராட்டியாரானவர், நம்பால் - நம்மாலே, காண்டலுக்கு - காணுதற்கு, எளியளானாள் - சுலபையாயினார், என்றலும் - என்று சொன்னஅளவில் ஸ்ரீராமனானவர், காலந்தாழ - காலவிளம்பமாக, ஈண்டு - இங்கே தானே, இனும் - இன்னமும், இருத்திபோலாம்-இருக்கிறதாகாரியம், என்றனன் - என்றுசொன்னார், என்றலோடும் - அவரப்படிச்சொன்னஅளவிலே, தூண் - தூணானது, திரண்டனைய - திரண்டிருப்பதுபோலான, தோளான் - தோள்களையுடைய சுக்கிரீவன், பொருக்கென - திடீரென்று, எழுந்துசொன்னான் - எழுந்திருந்து உத்தரவுபண்ணினான்—எ-று. (அடு)

எழுகவெம்படைகளென்றானேயெனுமளவினெங்கும்
முழுமுறைசொற்றக்கொற்றவள்ளுவர்முடுகமுந்திப்
பொழிதிரையன்னவேலைபுடைபரந்தென்னப்பொங்கி
வழுவலில்வெள்ளத்தானைதென்றிசைவளர்ந்ததன்றே.

இ-ள். ஏயெனுமளவில் - உம்மென்னுமளவிலே, எம்படைகள்-எமது சேனைகள் எல்லாம், எழுகஎன்றான் - எழுந்துசெல்லக்கடவதென்றுசொன்னான் அப்போது, கொற்றவள்ளுவர் - வெற்றிவேண்டிப்பறையறைவோர், முந்தி - முன்னே, முடுக - விரைந்துசெல்லுவதாக, முழுமுறை - பூரணமாகவ்ரிசைப்படியே, எங்கும் - எங்குமுலாவி, சொற்ற - பறையறைந்துசொல்லஉடனே, பொழிதிரை - அலைகளைவீசுகிற, அன்னவேலை - அந்தக்கடலானது, புடை - தானிருக்குநிலையைவிட்டு, பரந்தென்ன - வெளியேபரவினாற்போல், பொங்கி - எழுந்து, வழுவல்இல் - தவருதலாகாத, வெள்ளத்தானை - இருபதுவெள்ளஞ்சேனையும், தென்றிசை - தெற்குத்திசையைநோக்கி, வளர்ந்தது - செல்லலாயிற்று—எ-று. (அசு)

வையகமதனின்மாக்கண்மயங்குவர்வயவெஞ்சேனை
எய்திடினென்பதுன்னியிராகவனினிதினேவப்
பெய்கனிகிழங்குதேனென்றினையனபெறுதற்கொத்த
செய்யமால்வரையேயாறுச்சென்றனதகைப்பில்சேனை.

இ-ள். வையகமதனின் - உலகத்துள்ள, மாக்கள் - மனிதர்கள்கண்டால்,மயங்குவார் - இதுயாதென்றுதிகைப்பார்கள், வயவெம் - வீரமும்வெப்பமுமுள்ள, சேனை - சேனைகள், எய்திடின் - செல்லக்கண்டால் மயங்குவார், என்பது - என்னுமதை, உன்னி - நினைத்து, இராகவன் - ஸ்ரீராமனானவர், இனிதின் - சந்தோஷமாக, ஏவ - உத்தரவுசெய்ய, பெய் - ரசம்சிந்துவதான, கனி - கனிகளும், கிழங்கு - கிழங்குகளும், தேன் - தேனும், என்று - என்றுசொல்லுகிற, இனையன - இவைகள்,பெறுதற்கு - கிடைப்பதற்கு, ஒத்த - சரியான, செய்ய - செவ்வையுள்ள, மால்வரையே - உயர்ந்தமலைகளே, ஆறு - வழியாக, சென்றன - செல்லலாயின, தகைப்புஇல்- ஒருவராலும் தடுத்தல்கூடாத, சேனை - சேனைகள்—எ-று. (அஎ)

வீரரும்விரைவிற்போனார்விலங்கன்மேலிலங்கைவெய்யோர்
சோர்விலாக்காவற்பாடும்பெருமையுமரணுஞ்சொற்ற
கார்நிறத்தரக்கரென்போர்முதலியகணிப்பிலாத
வார்கழலநுமன்சொல்லவழிநெடிதெளிதிற்போனார்.

இ-ள். வீரரும் - வானரவீரர்களும், விரைவில்-அதிசீக்கிரத்திலே,போனார்-சென்றார்கள், விலங்கன்மேல்-அந்தமலைமேலுள்ள, இலங்கை-இலங்காபுரியிலிருக்கி

ற, வெய்யோர் – பொல்லாத அரக்கர்கள், சோர்விலா – தளராமல், காவற்பாடும்-காத்துக்கொண்டிருப்பதும், பெருமையும் – அதிகமாயிருப்பதும், அரணும் – மதில்கள் சூழ்ந்திருப்பதும், சொற்ற – முன்சொன்ன, கார்நிறத்து – கருநிறத்தையுடைய, அரக்கரென்பேர் – ராட்சதரென்னலானவர்கள், முதலிய – முதலாக, கணிப்பிலாத-அளவுசெய்யப்படாதவைகளும் எல்லாம், வார் – நீண்ட, கழல் – கால்களையுடைய, அனுமன் – அனுமாரானவர், சொல்ல – தெரியச்சொல்லக்கேட்டுக்கொண்டு, வழி நெடிது – நெடிதானவழியெல்லாம், எளிதில் – சுலபமாக, போனார் – சென்றார்கள் எ-று. (அஅ)

அந்நெறிநெடிதுசெல்லவரிக்குலத்தரசனோடு
நன்னெறிக்குமரர்போகநயந்துடன்புணர்ந்தசேனை
இந்நெடும்பழுவக்குன்றிற்பகலெலாமிறுத்தபின்னர்
பன்னிருபகலிற்சென்றுதென்றிசைப்பரவைகண்டார்.

இ-ள். அந்நெறி – அந்தமலைவழியே, நெடிது – முழுதும்சேனைகள், செல்ல-செல்லுவதாக, அரிக்குலத்துஅரசனோடு – சுக்கிரீவனுடனே, நன்னெறி – நல்லவழியைப்பற்றி, குமரர் – இராமலட்சுமணர்கள், போக – செல்லசுவாமிகாரியத்திலே, நயந்து – விரும்புதலாகி, உடன் – சுக்கிரீவனுடனேகூடி, சேனை – சேனைகளெல்லாம், இந்நெடும் – இந்தநெடிதான, பழுவக்குன்றில் – சோலைகள்சூழ்ந்த தங்கள்மலைபோல் வழிநடையிலுள்ள பழுவக்குன்றுகளிலும் பெய்கனிகிழங்கு தேனென்றினையன பெற்றுநடந்து, பகலெலாம் – பதினொருநாளும், இறுத்தபின்னர்-கழிந்தபின்பு, பன்னிருபகலில் – பன்னிரண்டாநாள், தென்றிசைப்பரவை – தெற்குத்திசையிலுள்ளகடலை, சென்றுகண்டார் – போய்ச்சேர்ந்தார்கள்—எ-று. (அகூ)

திருவடிதொழுதபடலம் முற்றிற்று.

ஆக படலம் - கறு - க்கு திருவிருத்தம் - கரு௩௯.

சுந்தரகாண்டம் முற்றிற்று.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

படல அட்டவணை.

		படலம்.	பாடற்றொகை.
1	வது.	கடல்தாவுபடலம்.	95
2	வது.	ஊர்தேடுபடலம்.	234
3	வது.	காட்சிப்படலம்.	77
4	வது.	நிந்தனைப்படலம்.	82
5	வது.	உருக்காட்டுபடலம்.	117
6	வது.	சூடாமணிப்படலம்.	89
7	வது.	பொழிலிறுத்தபடலம்.	60
8	வது.	கிங்கரர்வதைப்படலம்.	61
9	வது.	சம்புமாலிவதைப்படலம்.	51
10	வது.	பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்.	67
11	வது.	அட்சகுமாரன்வதைப்படலம்.	50
12	வது.	பாசப்படலம்.	63
13	வது.	பிணிவீட்டுபடலம்.	140
14	வது.	இலங்கையெரியூட்டுபடலம்.	64
15	வது.	திருவடிதொழுதபடலம்.	89

ஆக-திருவிருத்தம்-௧௩௩௯.

படல அட்டவணை முற்றிற்று.